Koviloor Digital Library

உயிர் காக்கும் சித்தமருத்துவம்

ஆத்மரட்சாமிதம் வைத்திய சாரசங்கிரகம்

ACC.NO. 44963
R689

தாமரை நூலகம், சென்னை – 26.

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44963

உயிர் காக்கும் சித்த மருத்துவம்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தால்

ஆத்மரட்சாமிர்தம்

எனும்

வைத்திய சார சங்கிரகம்

என்ற பெயரிலும்

பழனி தண்டபாணி தேவஸ்தானத்தால்

ஆவியளிக்கும் அமுத முறைச் சுருக்கம்

என்ற பெயரிலும் வெளியிடப்பட்ட நூல்

சித்த மருத்துவம பற்றிய முறையான முழுமையான நூல்

Koviloor Digital Library

Koviloor Digital Library

91/4

உயிர் காக்கும்
சித்த மருத்துவம்

பதிப்பாசிரியர்
எஸ். பி. இராமச்சந்திரன்

தொலைபேசி எண் : 480 02 49

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ .காலனி
வடபழனி, சென்னை - 600 026,
website : www.intamm.Com/nool/thamarai
email : thamarai@intamm.com

Koviloor Digital Library

தாமரை வெளியீடு எண் : 264
முதல் பதிப்பு : அக்டோபர் 2000
இரண்டாம் பதிப்பு : July 2010
மூன்றாம் பதிப்பு : டிசம்பர் 2020

நூலைப் பற்றி

உரிமை பெற்றது.

நூலின் பெயர்	:	உயிர் காக்கும் சித்தமருத்துவம்
பதிப்பாசிரியர்	:	எஸ்.பி. இராமச்சந்திரன்
நூலின் தன்மை	:	சித்தமருத்துவம்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, என்.ஜி.ஓ.காலனி, வடபழனி, சென்னை - 600 026.
பதிப்பு ஆண்டு	:	டிசம்பர் 2020
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	டெமி 1 X 8
தாளின் தன்மை	:	16 வெள்ளைத் தாள்
எழுத்தின் அளவு	:	11 புள்ளி,
மொத்த பக்கங்கள்	:	640 + 44
பிரதிகள்	:	1000
பைண்டிங்	:	அட்டை பைண்டு.
நூலின் விலை	:	ரூ- 350/-
கணிப்பொறி	:	காத்தி கிராபிக்ஸ், சென்னை- 26
அச்சிட்டோர்	:	கிரியேடிவ் ஆப்செட், சென்னை- 34.

Koviloor Digital Library

பதிப்புரை

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பணிகளைப் பற்றி இன்று நம் தமிழ் மக்களுக்கு அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை என்பது ஒரு பெருங்குறையே ஆகும்.

ஏனென்றால் மதுரைத் தமிழ்ச்சங்கம்தான் ஆத்ம ரட்சாமிர்தம் என்ற இந்த முழுமையான மருத்துவ நூலை எழுதவும் பின் புத்தகமாக வெளியிடவும் முழுமுயற்சி எடுத்துக் கொண்டு அரும் பாடு பட்டு உழைத்திருக்கிறது, என்பது எடுத்துக் காட்டப்பட வேண்டியுள்ளது.

எமக்கு கிடைத்த பழைய நூற் பிரதி ஒன்றின் முகவுரையில், பொ. பாண்டித்துரைத் தேவர் அவர்கள் கூறியுள்ள விஷயத்தைப் படித்த பொழுது நம்மையுமறியாமல் ஒரு கணம் மெய்மறக்க நேர்ந்தது. சுய விளம்பரத்தை விரும்பாமல் பெரியோர்கள் தன்னடக்கத்தோடு செய்த காரியங்களை அறிந்து உலகிற்கு அதை உணர்த்துவதும் மேன்மக்கள் கடனாகும். ஏனென்றால் அப் பொழுதுதான் தமிழ் வளரப் பாடுபட்ட நெஞ்சங்கள் குளிரும். தமிழும் வளரும். ஏறிக் கொண்டவுடன் ஏணியை எட்டி உதைத்த கதையாய் தங்களை வளர்த்து விட்டவர்களை மறப்பவர்கள் ஒருக்காலும் நன்மையடைவதில்லை.

தமிழ் மருத்துவம் பற்றி முறையாகவும் முழுமையாகவும் எழுதப்பட்ட நூல், இது போன்ற ஒன்று இன்றுவரை வெளி வந்துள்ளதா என்று கேட்டால் இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கும். இந்த நூல் அவ்வளவு அருமையாகத் தயாரிக்கப்பட்டடுள்ளது.

கர்ப்பகாலத்தில் பெண்களுக்கு ஏற்படும் பிணிகள், கர்ப்பத்தில் இருக்கும் சிசு - ஆளாக நேரும் நோய்கள் முதலாக வயோதிகர்களுக்கு வரும் நோய்கள் வரை- இடையில் கண நோய்கள், காது நோய்கள், பல் நோய்கள், வயிற்று நோய்கள் என்று ஒவ்வொரு வகைக்கும்- குறி, குணம், மருந்துகள் கூறப்பட்டுள்ளன.

பொ. பாண்டித்துரை அவர்கள் தாம் சிறந்த மருத்துவர் எனக் கருதிய முத்துக்கருப்ப பிள்ளையவர்களை அழைத்து அவருக்குப்

Koviloor Digital Library

பொருள் உதவி செய்து மருந்துகளைத் தயாரிக்கச் செய்து நோயாளிகளுக்கு அந்த மருந்துகளைக் கொடுத்துக் குணம்குறை கண்ட பிறகே அவற்றைப் பற்றி நூலில் எழுதச் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்

அதனால் இந்த நூலில் இடம் பெற்றுள்ள மருந்துகள் சரியான படி தயார் செய்யப்பட்டால் கைமேல் பலன் கொடுக்கும் என்பதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை.

இந்த நூலின் அருமை கருதியே முன்பு பழனி தண்டபாணி தேவஸ்தானம் தமிழக அரசுக்காகச் சித்த மருத்துவ நூல்களை வெளியிட்ட காலத்தில் இந்த நூலையும் ஆவியளிக்கும் அமுத முறைச் சுருக்கம் என்ற பெயரில் வெளியிட்டது. ஆயினும் பழைய பதிப்பே முழுமையாகவும் சிறப்பாகவும் இருந்ததால் அதைப் பின்பற்றியே இந்தநூல் தாரிக்கப்பட்டுள்ளது

மருத்துவர்கள் இரவும் பகலும் வைத்துக் காப்பாற்ற வேண்டிய கருத்துக் கருவூலமாக விளங்கும் இந்த நூலை வெளியிடுவதில் பெருமையடைகிறோம்.

வணக்கம்
எஸ்.பி. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்

Koviloor Digital Library

91/4

பொருளடக்கம்

கடவுள் வணக்கம் 1
பிரணவவிலக்கணம். "
சிவயோக நிஷ்டை. 3
பஞ்சாக்ஷரவிலக்கணம். 4

பஞ்சபூத விபரம்

பஞ்சபூத உடற்சக்கரம். "
பஞ்சபூத நிறம், பஞ்சபூத உயிரெழுத்து, பஞ்சபூத பீஜாட்சரம். 5
பஞ்சபூதஇலக்கம், பஞ்சசத்திகளின் மகிமை, "
ஐந்து முகம் ஐந்தெழுத்தின் மகிமை "
சிவபஞ்சாட்சரம்,சௌமிய பஞ்சாட்சரம், ஆயிபஞ்சாட்சரம். 6
அமுதபஞ்சாட்சரம், பிரமரிஷி பஞ்சாக்ஷரம். 7
சமுத்திர பஞ்சாக்ஷரம். 8
வாமதேவ முகத்தில்வரும் நல்வினை தீவினை "
சத்தியோசாத முகத்தில்வரும் நல்வினை தீவினை. 9
ஈசான முகத்தில்வரும் நல்வினை தீவினை. "
சத்திசிவதீட்சை விவரம் 10
சிவசத்தி தீட்சை விவரம். 11
பஞ்சபூததேவதைகளின் மந்திரத்தியானசித்து பிரம தியானம். 12
விஷ்ணுதியானம், உருத்திரதியானம், மகேசுவரதியானம். 13
சதாசிவதியானம். "

அட்டகருமம்

அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை. தம்பனம். 14
மோகனம், வசியம், மாரணம், உச்சாடனம், ஆகருஷணம். "
வித்துவேடணம், பேதனம். 15
வேறுவகை அஷ்டகரும மந்திரச்சித்து. தம்பனம். "
மோகனம், மாரணம், உச்சாடனம், வசியம், ஆகருடணம். "
பேதனம். வித்துவேடணம். 16
வேறு அஷ்டகருமச் சித்துமகிமை. "
வேறுவகை அஷ்டகணபதி அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை.
ஆதிகணபதி மூலமந்திரம் வசியம் "
மகாகணபதி மூலமந்திரம் மோகனம். 17
நடனகணபதி மூலமந்திரம் தம்பனம். "
சத்திகணபதி மூலமந்திரம் உச்சாடனம். "
பாலகணபதி மூலமந்திரம் ஆகருஷணம். "
உச்சிட்ட கணபதி மூலமந்திரம் வித்துவேடணம். "

Koviloor Digital Library

உக்கிரகணபதி மூலமந்திரம் மாரணம். 17
மூலகணபதி மூலமந்திரம் பேதனம். "
அஷ்டகணபதியுமொன்றாய் நின்றாடும் மூலமந்திரம். "
தம்பனம், மோகனம். "
வேறுவகை நீண்ட அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை 18
ஆகருஷணம், வசியம், வித்துவேடணம், உச்சாடனம். "
ஆகாய ஆகருஷணம், நீலகண்ட மந்திர மகிமை. 19
கணபதி தியானம். 20
சுப்பிரமணியர் தியானம், வைரவதியானம், நந்திசர் தியானம். 21
அகத்திசர் தியானம். "
வேல்முருகர் சருவசங்கார திரிஅக்கர மந்திரவிஞ்சை. "
உருத்திராக்ஷமகிமை. 23
அவைகளுக்கு அதிதேவதைகள், விபூதி நீற்றும்வகை. "
விபூதிமகிமை, பதியிலக்கணம். 24
பசு இலக்கணம், பாச இலக்கணம். 27

உடற்கூறு

அங்க உறுப்புக்களின் இலக்கணம். 30
எலும்புகளின் விவரம். "
பேசிகளின் விவரம். 32
பற்களின் விவரம். "
ஜீரண உறுப்புக்களின் விவரம். 33
இரத்தவுறுப்புக்களின் விவரம். 35
இரத்தச்சுற்றோட்டத்தின் விவரமாவது. "
சோஷணக்குழல்களின் விவரம். 36
விசர்க்க உறுப்புக்களின் விவரம். "
போஷண உறுப்புக்களின் விவரம். "
சுவாச உறுப்புக்களின் விவரம். 37
குரலுறுப்புக்களின் விவரம். 38
தோல்விவரம். 39
நரம்புமண்டல விவரம். "
புலன்கள் பொறிகள் இவைகளின் விவரம். 42
பிண்ட உற்பத்தி. 45

தேகர்களின் முக்குணங்கள்

தேகக்கட்டளை விவரம், வாததேகக்குறிகள், பித்ததேகக்குறிகள் 46
சிலேத்துமதேகக்குறிகள், நாடி நூல். நாடி விளக்கம். "
வாத பித்த சிலேத்தும நிலை. 47
வாத பித்த சிலேத்துமத்தி னியல்பு. "

நாடி

வாத பித்த சிலேத்தும காலம் 48
நாடி நடப்பதற்குக் காரணம். "

Koviloor Digital Library

ஒரு நிமிஷத்தில் நாடி நடக்குமிலக்கம். 48
நாடி பேதாபேதம். 49
நாடி பார்க்கும் மாதவகை, நாடி ஸ்தானங்கள். "
நாடியைப்பிடித்துப் பரீட்சிக்கும் விதம், நாடி நிதானம் "
புருஷருக்கு நாடி நடக்கும் விதம். "
பெண்களுக்கு நாடி நடக்கும் விதம். "
பஞ்சபூத நாடிகளிருக்கு மிடம். 50
குருநாடி இருக்குமிடம், குருநாடிக்குணம். "
நாடிகள் கீழு மேலு மீறியோடும் விதம். "
வாதக்கூறு, பித்தக்கூறு, சிலேத்துமக்கூறு, நாடித்தொந்திப்பு. 51

மரணக்குறிகள்

ரோகஸ்தர்களின் தேகமுதலான குறிகள், மணிக்கடை நூல் 55
மரணநாளறிய, கவனிப்பு. 56
வறட்சிமலட்டுக்குணம், நிவிர்த்தி, வாயுமலட்டுக்குணம். 57
நிவிர்த்தி. "

கர்ப்ப ரோகங்கள்

மாதமுழுக்கில்லாதபேர்களுக்கு. 58
புழுமேல் மலட்டுக்குணம் அடிவயிற்றிற் சுருக்குச்சுருக்கென்று வலிக்கு நிவிர்த்தி. "
கெர்ப்பப் புழுக்குணம், நிவிர்த்தி. "
கெர்ப்பப் புழுக்குணம், நிவிர்த்தி. 59
மேற்படி கிருமிகட்குப் பொதுப்பிரயோகம். "
பெரும்பாட்டின் குணம், நிவிர்த்தி. 60
கெர்ப்பசூலைக்குணம். 61
நிவிர்த்தி, கற்சூலைக்குணம்., நிவிர்த்தி. "
இரத்தசூலைக்குணம்., நிவிர்த்தி. 62
கெர்ப்பவிப்புருதிக்குணம், நிவிர்த்தி. "
சூதகவாயு (சூசிகவாயு)வின் குணம், நிவிர்த்தி. 63
நிதம்பச்சூலைக்குணம், நிவிர்த்தி, சூதகவலிக்கு. 64
கெர்ப்பரோகங்களுக்குப் பொதுப்பிரயோகம். 65
சூலுற்ற பெண்களுக்குப் பத்து மாதத்திற்கு வரும்நோயும் அதற்கு மருந்தும் விளம்பல் 68
கருவளர்க்கும் எண்ணெய். 70
செங்கரப்பன் கொள்ளிக்கரப்பனுக்கு மருந்து. "
கருப்பைக் கிரந்திக்கு மருந்து. 71
கிரந்திப்புண், செவ்வாப்புக்கு மருந்து. "
கருப்பைக் கிரந்திக்கு மருந்து. "
சூலுற்ற காலத்தில் காணும் துவாலைக்கு மருந்து. 72
மேற்படி நோயால் தாகமூர்ச்சை கண்டால். "
கருவுற்ற காலத்தில் வரும் சுரத்திற்கு மருந்து. "

Koviloor Digital Library

சூலுற்றவளுக்கு நீரடைத்தால்.	73
கெர்ப்பவதிக்குக் கல்லடைத்தால்.	"
வயிற்றிலிறந்த பிள்ளை விழ.	"
பிள்ளை பெற வருத்தப்பட்டால்.	74
நஞ்சுக்கொடி விழ.	"
பிள்ளை பெற்றதில் வயிறு பழுத்தால்.	"
பச்சையுடம்பில் வயிறுபொருமி வலித்தால்.	"
பச்சையுடம்பிலெடுத்த சுவாசகாசத்தின் குணம்.	75
நிவிர்த்தி, பத்தியத்துக்கான பதார்த்தங்கள்.	"
மருந்திற்கு முறிவான உணவுப் பண்டங்கள்.	"

பாலவாகடம்

செங்கிரந்தி நோயின் இயல்பு.	76
செங்கிரந்தி நோய் (வேறு)	"
கிரந்தி 18-க்கும் சூலை 18-க்கும் மருந்து	77
அறைவீட்டில் குழந்தைக்குக் கழுத்துவீங்கி முழங்கால், முழங்கை குளிர்ந்து, வயிற்றுவலி காணலுக்கு மருந்து.	"
குழந்தை வயிற்றுவலிக்கு, மலங்கட்டலுக்கு மருந்து.	"
குழந்தையின் சிறுநீர்கட்டுக்கு மருந்து.	78
பிள்ளைகளுக்கு உரம் (வர்மம்) விழுதலுக்கு மருந்து.	"
பிள்ளை சீறி அழுதல், விக்கல் எடுத்தல், வயிறுபொருமலுக்கு மருந்து.	"
பிள்ளையின் வயிறு வீங்குதல், குடித்த பால் வாந்தி எடுத்தல், அடிக்கடி கொட்டாவி விடுதலுக்கு மருந்து.	"
தாய்க்குப் பால்சுரக்க மருந்து.	"

தோஷங்கள்

பட்சி தோட இயல்.	79
பறவைத் தோட இயல்பு, எட்சிதோட இயல்பு.	"
வீங்குபுள் தோட இயல்பு, தூங்குபுள் தோட இயல்பு.	80
விளக்கொளிக்கண்புள் தோட இயல்பு.	"
வெங்கண்புள்ளின் தோடகுணம்.	80
கருடக் கண்புள்ளின் தோட இயல்பு.	"
செங்கண்புள் தோட இயல்பு.	81
அந்திப்புள் தோட இயல்பு, நீர்ப்புள் தோட இயல்பு.	"
புள் தோட இயல்பு, முட்டுத்தோட இயல்பு,குழித் தோட இயல்பு	82
கருப்பம் சிதைந்த தோட இயல்பு அல்லது கருச்சிதைவு கண்ட பெண்ணால் ஏற்பட்ட தோட இயல்பு.	"
தேரைத் தோட இயல்பு.	"
அனைத்துத் தோடங்களுக்கும் பொதுமருந்து.	83
அனைத்துத்தோடமும் தீர்க்கும் மூலமந்திரம்.	"

Koviloor Digital Library

மாந்த ரோகங்கள்

மாந்தநோய் காணும் பொதுக்காரணமும் மாந்த வகையும்.	83
மாந்த நோயின் இயல்பு.	84
வர்தமாந்த நோயின் இயல்பு.	"
பித்தமாந்த நோயின் இயல்பு.	85
சிலேத்தும மாந்தநோயின் இயல்பு.	"
மாந்த நோய்க்குப் பொது மருத்துவம்.	"
ஊதுமாந்த நோயின் இயல்பு.	87
நீர்மாந்த நோயின் இயல்பு.	"
விட மாந்த நோயின் இயல்பு.	88
போர்மாந்த நோயின் இயல்பு.	89
பால்மாந்த நோயின் இயல்பு.	"
செரியாமாந்த நோயின் இயல்பு.	90
கட்டுமாந்த நோயின் இயல்பு.	"
தலைமாந்த நோயின் இயல்பு.	91
துலைமாந்த நோயின் இயல்பு.	"
சுழிமாந்த நோயின் இயல்பு.	"
வீக்க மாந்த நோயின் இயல்பு.	92
முக்குமாந்த நோயின் இயல்பு.	"
வறள்மாந்த நோயின் இயல்பு.	"
உளைமாந்த நோயின் இயல்பு.	"
அச்சரமாந்த நோயின் இயல்பு.	93
தோடமாந்த நோய்க்கு மருந்து.	"
மாந்ததோடம், வலிப்பு, மலட்டுக்கு மருந்து.	94
மாந்தம் பாலர் இசிவுக்கு மருந்து.	"
மாந்தம் வயிற்றுப் பொருமலுக்கு மருந்து.	"
மாந்தம், பொருமல், வாந்தி, செரியாமாந்தத்திற்கு மருந்து.	"
மாந்தங்களுக்குப் பொது மருந்து.	"

கணரோகங்கள்

வாத கணத்தின் இயல்பு.	97
பித்த கணத்தின் இயல்பு, சேத்தும கணத்தின் இயல்பு.	"
இவைகளுக்கு மருத்துவம்.	"
கணமாந்த நோயின் இயல்பு, ஊதுமாந்த கணத்தின் இயல்பு.	98
நீர்க்கண மாந்த குணம்.	100
சிங்கி மாந்தக்கணம் (இதுவே நச்சு மாந்தக்கணம்)	"
நீர்க்கணத்தின் இயல்பு, சுழி கணத்தின் இயல்பு.	101
சுழி மாந்த கணத்தின் இயல்பு (வேறு)	"
சூலைகண இயல்பு.	102
மகாகணத்தின் இயல்பு, பிரளிக்கணத்தின் இயல்பு.	"
பிறக் கணத்தின் இயல்பு, வறட்சிக் கணத்தின் இயல்பு.	103
கொதிப்புக் கணத்தின் இயல்பு	"

[illegible] கணத்தின் இயல்பு.	104
[illegible] த்தின் இயல்பு, எரிகணத்தின் இயல்பு.	"
ஆமக்கணத்தின் இயல்பு (இதுவே சீதகணம்).	"
நீராமக் கணத்தின் இயல்பு.	105
பேராமக்கண நோயின் இயல்பு.	"
முக்குக் கணத்தின் இயல்பு.	"
மூலக் கணத்தின் இயல்பு.	106
கணங்களுக்குப் பொது மருந்து.	"
கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு மருந்து.	108
கணச்சூடு தணிய மருந்து.	109
கணஇருமல், வாய்நாற்றத்திற்கு மருந்து.	"
மாந்தகணம் பொருமல், இருமல் கபத்திற்கு மருந்து.	"
பொருமல், மாந்த கணத்திற்கு மருந்து.	"
கணமாந்தம், வயிற்றுளைவு, பொருமலுக்குப் பாலசஞ்சீவி மாத்திரை.	"
தொக்கத்துக் கணமாந்தம், பேர் மாந்தத்திற்கு மருந்து	"
வீக்ககணத்துக்கு மருந்து.	110
கணகடுப்புக்கு மருந்து.	"
இரத்தக்கடுப்பு அடிபுறப்பட்டதற்கு மருந்து.	"
இரத்தம், சீதக்கடுப்பு, பலவிதக்கழிச்சலுக்கு மருந்து.	110
இரத்தம், சீதக்கடுப்பு, நீர்ச்சுருக்குக்கு மருந்து.	"
கிராணிக் கடுப்புக்கு மருந்து.	"
ஆமக்கடுப்புக்கு மருந்து.	111
இரத்தக்கடுப்புக்கு மருந்து.	"
சீழ்மூலத்திற்கு மருந்து.	"
இரத்தமூலம் வறட்கண ஊதுமாந்தத்திற்கு மருந்து.	"
அடித் தள்ளினதற்கு மருந்து.	"
முக்கல் வயிற்றுக்கடுப்பின் இயல்பு.	112
மூலரத்தகணம், நச்சுக்கணம், மாந்தத்திற்கு எண்ணெய்.	"
இரத்த கணத்தின் இயல்பு.	113
சுழிகணம், வறட்கணம், ஊதுமாந்தகணம், இரத்தகணம் ஆகிய நோய்க்கு எண்ணெய்.	"
சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவி எண்ணெய்.	114
சுழிக் கணத்திற்குக் குடிநீர்.	"

கரப்பான் நோய்கள்

விடவாத கரப்பன் இயல்பு.	"
வாத கரப்பன் இயல்பு, பித்த கரப்பன் இயல்பு.	115
வளி அழல் ஐயக் கரப்பன் 18-க்கும் எண்ணெய்.	116
செங்கரப்பன் இயல்பு.	117
கருங்கரப்பன் இயல்பு, சூலைகரப்பன் இயல்பு.	"
ஊது கரப்பன் இயல்பு	"

Koviloor Digital Library

பால் கரப்பன் இயல்பு 118
அரிகரப்பன் இயல்பு, வறட்சிக் கரப்பன் இயல்பு. "
சொறிசிரங்குக்கு மருத்துவம், பேய்ச்சொறிக்கு மருந்து 119
சகல கரப்பன், சிரங்கு முதலியவற்றிற்கு மேல்பூச்சுத் தைலம். 120
சிரங்கு புண்ணுக்குக் களிம்பு. "
வாதகரப்பன் வீக்கத்துக்கு மருந்து. "
மாந்தம், செவ்வாப்பு கரப்பனுக்கு மருந்து. "
சிறுசிரங்கு சொரி சிரங்கு இவைகட்கு மருந்து. 121
காற்கடுவன், மண்டைக்கடுவனுக்கு மருந்து. "
சிரங்கு, சொரிகரப்பன், ஆறாப்புண்களுக்கு மருந்து. "
கரப்பனுக்கு எண்ணெய். "
கபால கரப்பனுக்குத் தைலம். "
கரப்பனுக்கு மேற்பூச்சுத் தைலம். 122
கொள்ளிக் கரப்பனுக்குக் குடித் தைலம். 122

சுர ரோகங்கள் (குழந்தைகள்- பகுதி)

கணக்காய்ச்சலின் இயல்பு. 123
உடம்பு நோய், காய்ச்சலின் இயல்பு. 124
உட்காய்ச்சலின் இயல்பு, ஆமசுரத்தின் இயல்பு. "
இரத்த சுரத்தின் இயல்பு. 125
அன்னபானாதி சுரத்தின் இயல்பு. "
மாங்கிசச் சுரத்தின் இயல்பு. 126
என்பு(அஸ்தி) சுரத்தின் இயல்பு. "
வாதபித்த சிலேத்தும சுரத்துக்கு மருந்து. "
மாந்த சுரத்திற்கு மருந்து. "
வறட்சுரம், மாந்தசுரத்திற்கு மருந்து. 127
மாந்த கணசுரம், வயிற்றுப் பொருமல், வாந்திக்கு மருந்து. "
மாந்தசுர தோடத்திற்கு மருந்து. 128
கணசுரம், தோடம், வயிற்றுக் கழிச்சல், பித்தம், இருமல்,
வாந்திக்கு மருந்து. "
இரத்தகண மூலத்திற்கு மருந்து, குளிர் சுரத்திற்கு மருந்து. "
கணக்காய்ச்சல் மாறல் சுரத்துக்கு மருந்து. "
கணக்காய்ச்சல் மயக்கத்திற்கு மருந்து. "
கணபாண்டு, கணசுரம், என்புவெட்டை, இருமல், இரத்த
வெட்டை இவைகட்கு மருந்து. 129
கழிச்சல் தோடத்திற்கு மருந்து. "
காய்ச்சல், பெருங்கழிச்சல், சுரத்திற்கு மருந்து. "
விக்கல், கக்கல், சுரம், இருமலுக்கு மருந்து. "
சீதள சுரத்திற்கு மருந்து. "
சுரம், இருமல், சீதள சுரத்திற்கு மருந்து. 130
சீதளம், விடசுரத்திற்கு மருந்து. "
சுரத்திற்கு ஏலாதி மாத்திரை. "

Koviloor Digital Library

சுரம், வறட்சுகாசம், இரத்தகாசம், குழி்தோடம், சவலைக்கு மருந்து. 130
பழஞ்சுரத்திற்கு மருந்து. ..
பழஞ்சுரம், விடாச்சுரம், நஞ்சுவீறு, சன்னிக்கு மருந்து.
கழிச்சல் சுரம், காய்ச்சல், இரைப்பு, சுக்கல், சுரதாபம், விக்கல் தாபத்திற்கு மருந்து. 131
பித்தசுரம், தாபசுரம், பாதவெடிப்புக்கு மேல்பூச எண்ணெய். ..
கணைக் காய்ச்சலுக்குக் குடிநீர். ..
சகல காய்ச்சலுக்கும் பச்சைக்கற்பூர மாத்திரை. ..
குளிர் காய்ச்சலுக்கு மருந்து. ..
சகல காய்ச்சலுக்கு மருந்து. ..
காய்ச்சலுக்கு ஆகாத உணவுப் பண்டங்கள். 132

சன்னி ரோகங்கள்

சன்னி வகுப்பு (கலப்பு நோய்), மாந்தசன்னி நோயின் இயல்பு. ..
ஆம சன்னியின் இயல்பு. 133
கோராம சன்னியின் இயல்பு, தாந்திரிக சன்னியின் இயல்பு. ..
நீங்காச் சன்னியின் இயல்பு, சகல மாந்த சன்னிக்கு மருந்து. 134
தோடசன்னி, மாந்தசன்னி, பித்தசுரம், வாந்திக்கு மருந்து. ..
மாந்தகண சன்னிக்கு மருந்து, சன்னிசுரம், கபத்திற்கு மருந்து. ..
நச்சுசன்னி, குளிர்சன்னி, சுரம், விக்கலுக்கு மருந்து. 135
வலிப்புநோய் வகுப்பு. ..
மாந்த வலிப்பு, காக்கை வலிப்புகளுக்கு மருந்து. ..
காக்கை வலிப்புக்கு மருந்து. ..
சளி, இருமல், சுக்கல், காய்ச்சல், நச்சு, சுரம், விக்கல், வலிப்பு, சன்னிதோடம், வயிற்றுப் பொருமலுக்கு மருந்து. 136
புற இசிவுக்கு மருந்து. ..

கழிச்சல் ரோகங்கள்

கழிச்சல் தோடத்திற்கு மருந்து. ..
மாந்தக் கழிச்சல், மாந்த சன்னிக்கு மருந்து. 137
கழிச்சலுக்கு மருந்து, பால்போல் கழிவதற்கு மருந்து. ..
கழிச்சல் சுரத்திற்கு மருந்து ..
சுழிகாசம், சுரம், வறட்சிக்கு மருந்து 138
கழிச்சல் இருமலுக்கு மருந்து. ..
சுக்கல், கழிச்சலுக்கு (வாந்திபேதி) மருந்து. ..
கழிச்சல், இருமல், வாந்திக்கு மருந்து, மாந்தக் கழிச்சலின் இயல்பு. ..
கணைக் கழிச்சலின் இயல்பு, ஆமக் கழிச்சலின் இயல்பு. ..
சலக்கழிச்சலுக்கு மருந்து. 139
வெதுப்புக் கழிச்சலுக்கு மருந்து. இரத்தக் கழிச்சலுக்கு மருந்து
பெருமல், கழிச்சலுக்கு மருந்து.
பெருங்கழிச்சலுக்கு மருந்து (அதிசாரம்)

Koviloor Digital Library

வயிற்றிறைச்சல், நஞ்சு, மூலக்கடுப்புக் கழிச்சல், சூலைத்திற்கு மருந்து. 139
சீத ரத்தக்கடுப்பு கழிச்சலுக்கு மருந்து. 140
பச்சிலைபோல் கழிவதற்கு மருந்து. "
முட்டை உடைத்தாற் போலும் கெட்டபால் போலும் கழிதலுக்கு மருந்து. "
விடாக்கழிச்சலுக்கு மருந்து, சகல கழிச்சலுக்கு மருந்து. "

அச்சர நோய்கள்

1. சூலி அச்சரத்தின் இயல்பு, 2. நீலி அச்சரத்தின் இயல்பு. 141
3. சோதி அச்சரத்தின் இயல்பு, 4. வீமி அச்சரத்தின் இயல்பு. "
5. குண்டி அச்சரத்தின் இயல்பு, 6. கபாலி அச்சரத்தின் இயல்பு. "
7. குமரி அட்சரத்தின் இயல்பு, அச்சரத்தின் பொது இயல்பு. "
குண்டியச்சரத்தின் இயல்பு, உள் அச்சரத்தின் இயல்பு. 142
சோகை வகுப்பு; வாத சோகை இயல்பு. "
பித்தசோகை, காமாலையின் இயல்பு. "
ஊதுகாமாலை நோயின் இயல்பு. 143
மஞ்சட்காமாலை நோயின் இயல்பு. "
வறட்காமாலை நோயின் இயல்பு. "
பாண்டு காமாலை சோகை விஷபாக வீக்கத்திற்கு. "
வீக்கத்திற்கு மருந்து. 144

பற்பல நோய்கள்

பற்பல நோய்களின் பகுப்பு. வயிற்றுநோய், சீதக்கடுப்பு, தாகம், செரியாமை, சன்னி, (கலப்பு நோய்), சயித்தியம், கக்கல் பிராந்திகளுக்கு மருந்து. "
நடுக்கல், கக்கல், செரியாமைக்கு மருந்து, விக்கலுக்கு மருந்து. "
கக்கலுக்கு மருந்து. 145
வாந்தி ஒக்காளத்திற்கு மருந்து, கக்கல் விக்கலுக்கு மருந்து. "
வெள்ளோக்காளம், பித்தம், விக்கல், கக்கலுக்கு மருந்து. "
மார்புச்சளி, கோழைகட்டுக்கு மருந்து, கண் அமரத்திற்கு மருந்து. "
கண்ணோய்க்கு மருந்து, செவி நோயின் இயல்பு. "
செவியில் சீழ் ஒழுகலுக்கு மருந்து. 146
காதில் ஈ புகுந்தால் பரிகாரம். "
பல்லீற்றில் இரத்தம் வடிதலுக்கு மருந்து. 146
முடிசாய்ந்துபோனதற்குக் குளிசமும் மருந்தும். "
நாமுள் தோட நோயின் இயல்பு. "
கெந்தகதாளி நோயின் இயல்பு. 147
பால் உண்ணாக் குழந்தைகளுக்கு மருந்து. "
இளைப்பு, இருமலுக்கு மருந்து. "
இளைப்பு, இருமல், சுழிகண வலிப்புக்கு மருந்து. 148
உண்ணாக்கு வளர்ந்தது சுருங்க மருந்து "

Koviloor Digital Library

கக்குவான் நோய்க்கு மருந்து 148
மயக்கம், சோகம், நாவரட்சிக்குக் குடிநீர். "
தாகத்துக்கு மருந்து. 149
வண்டுகடிக்கு மருந்து. "
கணையசதி, கழிச்சல், இருமல், பிணி, தாகம், வறட்சிக்கு மருந்து "
குழந்தைகட்கு மேலில் வெள்ளைக்கொப்பளம் வெடித்தலுக்கு மருந்து. "
வயிற்றுப் பொருமல் வலிமாந்தத்திற்கு மருந்து. "
சாம்பல், மண் தின்றதற்கு மருத்துவம். "
தொங்கல், ஆமம், மாந்தக் கழிச்சலுக்கு மருந்து. 150
எண்ணெய் தொங்கலுக்கு மருந்து. "
கக்குவானுக்கு(வேறு)பொதுமருந்து. "
குழந்தைகளின் விதைவாதத்திற்கு மருந்து. "
மசரைப்புழு நோயின் இயல்பு. 151
வயிற்று நுண்புழு விழுதலுக்கு மருந்து. "
மலம், சிறுநீர்க்கட்டுக்கு மருந்து. 152
கழிச்சல் வகுப்பு. பூபதி மாத்திரை. "
அமிர்த சஞ்சீவி இலிங்கக் குழம்பு. "
வேறுவகைக் கழிச்சலுக்கு மருந்து, சண்பகப்பூ மாத்திரை. "
இனிப்புள்ள சுகக்கழிச்சல் குழம்பு. "
சுகக் கழிச்சல் எண்ணெய். 153

வைசூரி நோய்கள்

பனைமுகரி அம்மையின் இயல்பு, பாலம்மை நோயின் இயல்பு. "
வர்குதிரி அம்மையின் இயல்பு, கொள்ளம்மையின் இயல்பு. "
கல்லுதிரி அம்மையின் இயல்பு. 154
கடுகம்மையின் இயல்பு. "
மெழுக்கன் அம்மையின் இயல்பு. "
உப்புதிரி அம்மையின் இயல்பு. 154
கரும்பனசை அம்மையின் இயல்பு. "
விச்சிரிப்பன் அம்மையின் இயல்பு. "
நீர்க்குளுவான் அம்மையின் இயல்பு. 155
தவளை அம்மையின் இயல்பு. "
அம்மை நோய் அதிகப்படாதிருக்க மருத்துவம் "
வைசூரியுடன் உள்ள கிரந்தியானால் மருந்து. "
வைசூரியின் பேரில் பெருங்கழிச்சல் கண்டால் பரிகாரம். 156
வைசூரியின்பேரில் கடுப்பு, சீதம், இரத்தம் கண்டால் மருத்துவம். 156
வைசூரியின்பேரில் தொடர்கழிச்சல் கண்டால் மருந்து. 157
வைசூரியில் கபம் நெஞ்சில்கட்டித் தொண்டை கம்மினால் மருந்து. "
வைசூரியின்பேரில் சுரம் கண்டால் மருந்து. "

Koviloor Digital Library

வைசூரியினால் மலம், சிறுநீர் கட்டி வயிறு உப்புசங் கண்டால் மருந்து. 158
தாகத்திற்குக் கலைக்கொம்புத் தண்ணீர்செய்யும் முறை. "
வைசூரியினால் கண்ணில் நோவு கண்டால் பரிகாரம். "
விழியில் வைசூரி வராதிருக்க மருத்துவம். "
வைசூரியில் வாயால் இரத்தம் கக்குவதற்கும், நீர்த்தாரையில் இரத்தம் காணுவதற்கும் மருந்து. "
வைசூரியினால் நேரிடும் சூலைகட்கு மருந்து. "
ஆறாத வைசூரி புண்ணுக்கு மருந்து. 159
வைசூரி இறங்கினபின் நடப்பிக்கும் விதிமுறை. "
மறுமுள்ளின் இயல்பு. "
வைசூரியினால் கண்ணில் பூ விழுந்தால் மருத்துவம். "
பத்தியத்திற்கு ஆகாத உணவுப் பண்டங்கள். 160
பாலவாகடப்படலம் முற்றிற்று.

நயன ரோகங்கள்

மேற்படி நோய்கள் தோன்றும் இடம். 161
அவை வருவதற்குக் காரணம், வாத காசத்தின் இயல்பு. "
பித்த காசத்தின் இயல்பு. 162
குழரி காசத்தின் இயல்பு, நீல காசத்தின் இயல்பு. "
நீர் ஒளி காசத்தின் இயல்பு. 163
நீர்ப்பாய்ச்சலின் இயல்பு. 163
அன்னகோபமென்னும் அனல்கோபத்தின் இயல்பு. "
பிரிதல் நேத்திரத்தின் இயல்பு, கண் மயக்கத்துக்கு மருந்து. 164
புகைச்சலின் இயல்பு. 165
மதிமந்த நோயின் இயல்பு. "
கண் மந்தம், பித்தம், நீர்ப் பாய்ச்சலுக்கு மருந்து. 166
பற்ப நோயின் இயல்பு, சலகும்ப நோயின் இயல்பு. "
பில்ல நோயின் இயல்பு. "
செவ்வேர்க்குந்த நோய்க்கு மருந்து. 167
பருவநிகை நோயின் இயல்பு, படலத்தின் இயல்பு. "
வெண்மாசுப் படலத்தின் இயல்பு. "
மாலைக் கண்ணின் இயல்பு. 168
விழி விழுங்கி நோயின் இயல்பு. "
மாலைக் காச நோயின் இயல்பு. 169
மணிவளர்த்தி நோயின் இயல்பு. "
மாந்தார காசத்தின் இயல்பு. 170
உளைவு கண்ணின் இயல்பு. "
கண்ணுளைவு, கண் சுருங்கல், ஒட்டுக் கண், மலங்கு கண் முதலான நோய்களுக்கு மாத்திரை. "
விரணசுக்கிலம் உளைவிற்கு மருத்துவம். "

Koviloor Digital Library

சுருங்கு கண்ணின் இயல்பு. 171
ஒட்டுக் கண்ணின் இயல்பு. "
மலங்கு விழியின் இய்ல்பு. "
கண் மந்தம், நீர்ப்பாய்ச்சல், மலங்கல் பித்தத்திற்கு மருத்துவம். "
கண் கட்டிக்கு மருந்து. "
இருண்ட விழிக்கு மருந்து. 172
இரத்தப் பாய்ச்சலுக்கு மருந்து. "
கண்ணொிவிற்கு மருந்து. "
கொம்மட்டிபட்ட கண்வேதனைக்கும் கோரைப்பட்டதற்கும் மருந்து. "
கண் புழுவெட்டுப் புண்ணுக்கு மருந்து. 173
கண் பூவுக்கு மருந்து. 174
பூ, வெள்ளெழுத்திற்கு மருந்து. "
ஆணிப் பூவுக்கு மருத்துவம். 175
பூ, படலம் அதிமாங்கிச வளர்ச்சிக்கு மருந்து. "
முளை ஆணிப் பூவுக்கு மருந்து. "
பூ, படலம், காசத்திற்கு மருந்து. 175
குந்தத்திற்கு மருந்து. "
குந்தம் அமரத்திற்கு மருந்து. 176
குந்தம் பூவிற்கு மருந்து. "
அழிகண்ணிற்கு மருந்து. "
கண் புண்ணுக்கு மருந்து. "
நேத்திர வாயுவுக்கு மருந்து. 177
நேத்திரவாயு, மண்டையிடிக்குத் தைலம். "
ஒளிமயக்கம், வெளிமயக்கத்திற்கு மருந்து. "
கண்ணில் நீரேத்தத்திற்கு மருந்து. "
சூடு வளர்த்திக்கு மருந்து. "
கண் கூச்சத்திற்கு மருந்து. 178
இமைத் தடிப்புக்குக் களிம்பு. "
கண் சிவப்பு, கடுப்பு, படலத்திற்கு மருந்து. "
விழிகண் குருடுக்கு மருந்து. 178
கண்வலி, மணிவளர்த்தி பூவிற்கு மருந்து. "
விழிக்கடுப்பு, குத்தல், அமரம், கண்வலிக்கு மருந்து. 179
கண்வலிக்கு மருத்துவம். "
சுக்கிரப்படுவனுக்கு மருந்து. "
இழிகண்ணுக்கு புழுவெட்டுக்கும் மருந்து. 180
கண்ணில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு மருத்துவம். "
அக்கரம் புழுவெட்டிற்கு மருந்து. "
கண்பிரிதல், புழுவெட்டு, பூவிற்கு மருந்து. "
நீர்வடிதலுக்கு மருந்து. "
அந்தகக் (குருடு) கண்ணிற்கு மருந்து "

Koviloor Digital Library

அமரம், பிரிதல் கண்ணிற்கு மருந்து. 180
வெளிறுக்கு மருத்துவம். 181
வரணம், சுக்கிலப்படலம், குந்தம், இரத்த செம்மைக்கு மருந்து. "
வெள்ளெழுத்திற்கு வெண்ணெய். "
வெள்ளெழுத்து, குருட்டுக்கண் முதலான
கண்ணோய்களுக்கும் உடம்புவலிக்கும் தைலம். "
மாலைக்கண், வெள்ளெழுத்து புகைச்சலுக்கு மருந்து. "
நீலகாசம், பித்தகாசம், மந்தகாசப் படலம், பில்லம்,
முடிக்குத்தல் புழுவெட்டு, மாலைக்கண், நீர்வடிதல்,
குந்தம், நேத்திரவாயு முதலியவற்றிற்கு மருந்து. "
மேற்படி நோய்களுக்குத் தைலம். 183
கண்வலி, சிவப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு மருந்து. "
கண்வலியைக் கடுப்பு நேத்திரவாயுவிற்கு மருந்து. 184
விழிவேதனை படலத்துக்குப் புறவளையம். "
விழிவீக்கம், எரிவு, தினவு, படல்சிவப்பு, கடுப்பு,
நீர்வடிதலுக்கு புறவளையம். 184
மேற்படி நோய்களுக்கு ஒற்றடம். 185
மேற்படி நோய்களுக்கு இமையின் மேலிடும் பஞ்சு. "
மேற்படி நோய்களுக்கு தாரைபுறவ்ளையம். "
கண்ணில் சதை வளர்ச்சிக்கு மருந்து. "
கண் நோய்களுக்கு மாத்திரை. "
கண் நோய்களுக்குப் பொடி. 187
கண் நோய்களுக்கு இளநீர்க் குழம்பு. 188
கண் நோய்களுக்கு மை. "
கண் நோய்களுக்கு விழியில்கட்ட நெய். 189
கண்நோய் உடையவர்களுக்குத் தலைக்குப் பற்றிட குங்குமப்
பூத்தைலம் 191
கண் நோய் உடையவர்களுக்குக் காலில் தேய்க்கத் தைலம். "
விழியில் நோய் வராதிருப்பதற்கும் குளிர்ச்சிக்கும்
வெண்ணெய். "
விழிநோய்களுக்கு மருந்தரைக்கும் பாண்டம். "
கண்ணில் மருந்திடப் பொருந்தாக் காலம். 191
கண்ணில் மருந்திட்டபின் நடக்கவேண்டிய ஒழுக்கமுறை. "
பல் தூய்மை. 192
தைலம் (தலைமுழுக்கு நெய்) தேய்த்துக்கொள்ளும் முறை "
கண் நோய்களுக்குத் தைலம். "
உடல் உள்ளுறுப்பு எரிவு, பித்தத்திற்குத் தைலம். 197
விழிகடுப்பு, தலைவலிக்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்) "
விழிநோய்களுக்கும் கபால குட்டத்திற்கும் குமரித் தைலம். "
கபால வலி, கபால சன்னி, கண்ணோய்களுக்குச் சம்பீரத்
தைலம். 198

Koviloor Digital Library

கண்ணோய், செவிநோய், தலை நோய்களுக்குத் தைலம். 198
விழிநோய், தலைநோய்க்கு கற்பூரச் சந்தனாதித் தைலம். "
பித்தம், விழிகாசம், காதடைப்பு, மந்தத்திற்கு தைலம். "
கண் நோய் தொண்ணூற்றாறுக்குத் தைலம். "
விழிநோய், தலைநோய்க்குத் தைலம். 199

பீனிச ரோகங்கள்

பீனிசநோய் பொது இயல்பு, வாதப்பீனிச இயல்பு 200
பித்தப்பீனிச இயல்பு மூக்குவழி மஞ்சள் நிறமாய் சளி வடியும் சிலேத்துமப்பீனிச இயல்பு. "
நீர்ப்பீனிச இயல்பு, இரத்தப்பீனிச இயல்பு. "
சீழ்ப்பீனிச இயல்பு, சிராய்ப்பீனிச இயல்பு. "
மூலப் பீனிசத்தின் இயல்பு. 202
கண்டப் பீனிசத்தின் இயல்பு, நீர்ப்பீனிசத்திற்குத் தைலம். "
பீனிசம், நீர்வடிதல், எரிப்பு, தும்மலுக்குத் தைலம். 203
இரத்தப்பீனிசம், சிராய்ப் பீனிசத்திற்குத் தைலம். "
பீனிசம், மண்டையிடி, கபாலச் சூட்டுக்குத் தைலம். 204
பீனிசம், மண்டையிடி, வாதம், கடுப்புக்குத் தைலம். "
பீனிசம், மண்டையிடி, நாசிகாபீடம், வறட்சிக்குத் தைலம். "
பீனிசம், விடாத்தலைவலி, கபாலசூலை, நேத்திரவாய்வுக்குத் தைலம். 205
கபால வலி, பீனிசத்திற்குத் தைலம். "
மண்டையிடி, கபாலசூலை, பீனிசம், நாசி புண்ணுக்குத் தைலம். "
கபாலவலி, குத்துசூலை, பீனிசம், நேத்திர நீர்க்கடுப்பு, மேகச் சூட்டுக்குத் தைலம். "
பீனிசம், மண்டையிடி, தலைபாரத்திற்குத் தைலம். "
பீனிசம். இரத்தப்பீனிசம், சிராய். அழுகல்பீனிசம், பித்தப் பீனிசத்திற்கு நசியம் (மூக்குறிஞ்சல்) 206
பீனிசம், நச்சுத்தலைஇடிக்குப் பற்று. 206
தலைநோய்ப் படலம். 207
தலையில் நீரேற்றம் மண்டை இடிக்கும் மருந்து. "
மேற்படி நோய்க்கு ஆவி பிடித்தல். "
மேற்படி நோய்களுக்கு ஒற்றடம். "
மேற்படி நோய்க்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்). "
மேற்கண்ட நோய்களுக்குப் புகை. "
ஒருதலைவலி, மண்டைவலி, கபாலவாயுவுக்குத் தைலம். 208
மேற்படி நோய்கட்கு நசியம் (மூக்குறிஞ்சல்). "
மேற்படி நோய்கட்குப் பற்று. 209

சுரரோகங்கள் (பொது)

வாதசுரத்தின் இயல்பு. 210
பித்த சுரத்தின் இயல்பு. 211

Koviloor Digital Library

சிலேத்தும (ஐய) சுரத்தின் இயல்பு.	213
வாத சிலேத்தும (வளி ஐய)ச் சுரத்தின் இயல்பு.	214
சன்னிவாத சுரத்தின் இயல்பு.	"
உட்சுரத்தின் இயல்பு.	215
மந்தசுரத்தின் இயல்பு.	"
செரியாமைக் காய்ச்சலின் இயல்பு.	"
எலும்பைப் பற்றின காய்ச்சலின் இயல்பு.	216
இரத்தத்தைப் பற்றின சுரத்தின் இயல்பு.	216
மாமிசத்தைப் பற்றிய சுரத்தின் இயல்பு.	"
சகல முறைச் சுரத்திற்கும் மருந்து.	"
விடாச் சுரத்திற்கு மருந்து.	217
மூன்றாம்முறைக் குளிர்சுரத்திற்கு மருந்து.	"
ஒன்று விட்டொருநாள் வரும் மாறல் சுரத்திற்கு மருந்து.	"
தாபசுரம் நாவறட்சிக்கு மருந்து.	"
விஷபாக சுரத்திற்கு மருந்து.	218
சுரத்தின்பேரில் உடல் வீக்கம் கண்டால் மருந்து.	"
இரவில் காணும் சுரத்திற்கு மருந்து.	"
நளிர்க் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு மருந்து.	"
சத்திக் காய்ச்சல், நடுக்கல் கனத்திற்கு மருந்து.	219
சளி, காய்ச்சல், மந்தத்திற்கு மருந்து.	"
காய்ச்சலுக்குக் கொடுக்கும் கழிச்சல் மருந்து.	"
சுளுக்குக் காய்ச்சலுக்கு மருந்து.	"
பெருங்கழிச்சலோடு காய்ச்சலுக்கு மருந்து.	"
அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை.	220
அசாத்தியக் காய்ச்சலுக்கு மருந்து.	"
திராக் காய்ச்சலுக்கும் மாறல் காய்ச்சலுக்கும் மருந்து.	"
நச்சுக் காய்ச்சலின் இயல்பு.	221
கெர்ப்பகாலத்திற் காணுஞ் சுரத்திற்கு, குளிர் சுரத்திற்கு.	"
விடாக் குளிர்சுரத்திற்கு மருந்து.	222
திரிதோட (முப்பிணி) சுரத்திற்கு மருந்து.	223
சன்னி சுரத்திற்கு மருந்து.	"
சன்னிதோட சுரத்திற்கு மருந்து.	224
சகல சுரத்திற்கும் பொதுமருந்து.	"
சகல பழஞ்சுரத்திற்கும் நெய்.	"
விடாச்சுரம், வயிற்றெரிவு, இருமல், சொரி, சிரங்குக்கு நெய்.	225
சுரம், விக்கல், தாகம், சுவையின்மை, தலைநோய், பிரமேகத்திற்கு நெய்.	"
சகல சுரத்திற்கும் கண் குளிர்ச்சிக்கும் நெய்.	"
மாந்த சுரம்; முறைக் காய்ச்சல், கடுங்காய்ச்சல், பெருங்கழிச்சல் (அதிசார சுரம்), செரியாமைச் சுரம் (அசீரண சுரம்), பூதச் சுரம் முதலானவைக்கு எண்ணெய்	"

Koviloor Digital Library

சீதசுரம். குளிர் காய்ச்சலுக்கு உட்கொள்ளும் எண்ணெய். 226
சுரங்கட்கு முடித் தைலம். "
உட்காய்ச்சல் கால் எரிவிற்குத் தைலம். 228
சுரத்திற்கு மேல்பூச்சுத் தைலம். 230
காய்ச்சலுக்கு நசியம் (மூக்குறிஞ்சல்) 230
காய்ச்சல் முதலியவற்றிக்கு ஏலாதி மாத்திரை. "
உட்டிணக் காய்ச்சலுக்குச் சீரக மாத்திரை. "
காய்ச்சலுக்குத் குங்குமக் குளிகை. "
காய்ச்சலுக்குக் கோரோசனைக் குளிகை. 231
காய்ச்சலுக்குச் சஞ்சீவி மாத்திரை. "
காய்ச்சலுக்கு இரசகற்பூர மாத்திரை. "
காய்ச்சலுக்கு இரசபற்ப மாத்திரை. "
காய்ச்சலுக்கு இலிங்க மாத்திரை. 232
அருத்த நாரீசுவரம், தாளக மாத்திரை, சுரக் கோடாலி. 233
நான்காம் முறை சுரத்திற்கு மனோசிலை மாத்திரை. "
சுரத்திற்குப் பச்சைக் கற்பூர உருண்டை "
இரண்டாம் முறை, மூன்றாம் முறை, குளிர்ச் சுரம், முதலான சகல சுரத்திற்கும் கண்மை (அஞ்சனம்). 234
சுரம், குளிர்ச்சுரம், வயிற்றுவலி, பொருமல், முதலான நோய்களுக்குக் கழிச்சல் மாத்திரை. "
சுரநோயின் நட்சத்திரப் பலனறிய விவரம். "

சன்னி ரோகங்கள் (பொது)

சன்னி (முக்குற்றம்) பதின்மூன்றின் பெயர்கள். "
நலமாகா சன்னிகள். 235
அந்தக சன்னியின் இயல்பு. "
சீதாங்க சன்னியின் இயல்பு. 235
கண்டகுச்ச சன்னியின் இயல்பு. 236
பொக்கநேத்திர சன்னியின் இயல்பு. "
அபினியாசச் சன்னியின் இயல்பு. 237
உருத்திராங்கச் சன்னியின் இயல்பு. "
பீர்த்தட்டிச் சன்னியின் இயல்பு. "
தாந்திரிக சன்னியின் இயல்பு. 238
சித்தவிப்பிரம சன்னியின் இயல்பு. "
தாந்திரீக சன்னிக்குணம். 239
பிரலாப சன்னியின் இயல்பு. "
கருநியாச் சன்னியின் இயல்பு. 240
சிங்கிச்சன்னியின் இயல்பு. "
விக்கநாத சன்னியின் இயல்பு. "
வாத சன்னியின் இயல்பு. 241
வாதத்தில் எடுத்த சகல சன்னி தோடத்திற்கும் வாதம் எண்பதுக்கும் தைலம். "

Koviloor Digital Library

பித்த சன்னியின் இயல்பு.	241
பயித்திய சன்னியின் இயல்பு, சுக சன்னியின் இயல்பு.	242
பித்த பயித்திய, சுகசன்னி, பித்தம் எண்பதிற்கும், சுரம், வலி, பிடிப்புகட்கு முசுமுசுக்கை நெய்.	"
சிலேத்துமசன்னியின் இயல்பு, சகல சன்னிக்கும் பொதுமருந்து.	"
சன்னி 13-க்கும் தைலம்.	"
சந்தி சன்னியின் இயல்பு.	243
மந்த சன்னியின் இயல்பு, முகவாத சன்னியின் இயல்பு.	"
வெடி சன்னியின் இயல்பு.	244
சுன சன்னியின் இயல்பு.	"
கபால சன்னியின் இயல்பு.	"
புறவீச்சு நோயின் இயல்பு.	245
சன்னி 13-க்கும், வலிப்பு, உட்குத்து, புறவீச்சுக்குத் தைலம்.	"
உட்குத்து, புறவீச்சு, உடற்குத்து உடம்புக் கடுப்புக்கும் சர்வாங்க வாதத்திற்கும் தைலம்.	246
சன்னி தோடம் வாதத்திற்குக் குடிநீர்.	"
தனுர்வாதம், புறவீச்சு, இசிவுவாதம், பல்கிட்டல், சன்னிக்கு மேல்பூசும் தைலம்.	"
பிடரிவலி புறவீச்சு நோயின் இயல்பு.	"
உட்குத்துநோயின் இயல்பு.	247
உட்குத்து புறவீச்சுக்கு	"
மேற்படி நோய்களுக்கு மேல்பூச்சுத் தைலம்.	"
உட்குத்து, புறவீச்சு, அடைப்பு, இருமல், இளைப்புக்கு மருந்து.	"
சன்னிவலிப்பு, இழுப்புக்குத் தைலம்.	248
சன்னிக்கு மேல்பூச்சு மருந்து.	"
சன்னி13-க்கும், வாதம்70-க்கும் மேல்தடவ விடமுட்டித் தைலம் (பிடிநெய்).	"
சன்னி, வலிப்பு, சயித்தியம், வாதசூலைக்கு ஐந்தெண்ணெய்த் தைலம்.	"
சன்னி, வலிப்புதோடம், பக்கவாதம், நரம்புத் திமிர்வாதம், வாயுவுக்கு விடமுட்டித் தைலம் (பிடிநெய்).	249
சன்னி புறவீச்சுக்குத் தைலம்.	"
சன்னி சுரத்திற்கு மதுராதித் தைலம்.	"
சன்னி நோய்கட்கு கண்ணிலிடும் மருந்துகள்.	250
சன்னி வலிப்புக்கு மூக்குறிஞ்சல் மருந்து (ஆக்கிராணம்)	251
சன்னி வாதத்திற்கு ஒற்றடம்.	251
சன்னிக்குப் புகை.	"
சன்னி தலைவலிக்குப் புகை.	"
சன்னி பதின்மூன்றுக்கும், புறவீச்சு, உள் வீச்சுக்கும் இலிங்க மாத்திரை.	"
13-வித சன்னிகளுக்கும், நச்சு சன்னிக்கும், தோடத்திற்கும் கௌரி மாத்திரை.	252

சீத சன்னிக்கு அறிவானந்த வயிரவ மாத்திரை. 252
கம்படகச் சன்னிக்கு மாத்திரை. "
சன்னி முதலானதற்கு ஆனந்த வயிரவன். "
சன்னி தலைவலிக்கு மாத்திரை. "
மிருத்துவாத சன்னி முதலான வாத சன்னிகளுக்கு மாத்திரை. 253
13 வித சன்னிகளுக்கும் காலாந்த வயிரவன். "
13 வித சன்னிகளுக்கு மாத்திரை. "
சன்னி சுரதோடத்திற்கு இரச செந்தூரம். "
சகல சன்னி சுரம், தோடம், வலிப்பு, இளைப்பு, சூலைக்கு பூபதி மாத்திரை. "
காக்கை வலிப்பு நோயின் இயல்பு. 254
குதிரை வலிப்பின் இயல்பு. "
குமரகண்ட வலிப்பின் இயல்பு. "
முயல்கண்ட வலிப்பின் இயல்பு. "
உட்குத்து, புறவீச்சு, காக்கை வலிப்பு, குமரகண்டம், முயல்கண்டன், குதிரைவலிப்பு முதலான வலிப்புகளுக்கும் சன்னிகட்கும் தைலம். 256
மேற்படி நோய்கட்கு நசியம். "
முயல்கண்ட வலிப்பு, காக்கை வலிப்பு, குமரகண்ட வலிப்புக்கு மருந்து. "
காக்கை வலிப்பு, முயல்வலிப்பு, குமரகண்ட வலிப்பு, முகவாத சன்னி, சன்னி தோடம், உட்குத்து, புறவீச்சு வாதம், வாயு, பாரிச வாயு, பக்க வாதம், இளம்பிள்ளை வாதம், அண்ட வாதம், மண்டைக்குத்து வலி பீனிசத்திற்கு மருந்து. "
குழந்தைகளுக்குக்காணும் வாயு, குமரகண்ட வலிப்புக்கு எண்ணெய். 257

ஆசன ரோகங்கள்

எருவாய் நோய்ப் படலம். "
எருவாய் நோய் வரும் (மூலம்) காரணம். "
எருவாய் நோயின் விவரம். "
உள்எருவாய் நோயின் இயல்பு (உள்மூலம்) 258
புற எருவாய் நோயின் இயல்பு (புறமூலம்) "
சீழ் எருவாய் நோயின் இயல்பு (சீழ்மூலம்) 259
இரத்த மூலக் குணம். "
எருவாய்ப்பாண்டு (மூலப்பாண்டு) நோய் இயல்பு. "
எருவாய்முளை நோய்க்கு மருந்து (மூலமுளை) 261
சகல எருவாய் நோய்க்கும் பொதுமருந்து (மூலம்) 263
மூலமுளை அபானக்கடுப்புக்குப் புகையும் ஒற்றடமும். 267
அபானவேருக்கும், அபான கடுப்புக்கும் மருந்து. "
இரத்த அபானத்திற்கும் அபானவேருக்கும் எண்ணெய். "
உள் அபானம். இரத்த அபானம். நிணக்கழிச்சலுக்கு மருந்து. "

Koviloor Digital Library

அபான நோய், மேற்படி முளைக்கு மருந்து. 268
உள் எருவாய் நோய், புற எருவாய் நோய்க்கு மருந்து "
(உள், புறமூலம்) மூலக்கடுப்பு, இரத்த மூலத்திற்கு மருந்து "
உள்மூலம், புறமூலம் விஷபாண்டு காமாலை வீக்கங்களுக்கு மருந்து. "
உள்மூலம், புறமூலம் வெப்புப்பாவை முதலான நோய்களுக்குச் சூரணம் (கலப்புத் தூள்) "
எருவாய்ப் பாண்டு மந்தாக்கினிக்கு மருந்து. 269
மூலவாயுநோயின் இயல்பு, மேற்படி நோயால் நீர் அடைத்தல். "
மேற்படி நோய்க்குத் தலை முழுகத் தைலம். 270
மூலவாயு அக்கினிமந்தம் பயித்தியவாயு ஆனந்தவாயுவுக்கு மருந்து. "
மூலவாயு, மூலம், செரியாமை, தொடர் கழிச்சலுக்கு இளகம். "
மூலவாயு, எருவாய்நோய், உதரநோய், இழுப்பு, குன்மம், பயித்தியம், சன்னிவாயு, உடம்புவியர்வை, பசிமந்தத்திற்கு மருந்து. 271

அதிசார ரோகங்கள்

அதிசார நோய்ப் படலம், வாத அதிசாரத்தின் இயல்பு. "
பித்த அதிசாரத்தின் இயல்பு. 272
சிலேத்தும அதிசாரத்தின் இயல்பு, அதிசார தோடத்தின் இயல்பு. "
சுர அதிசாரத்தின் இயல்பு. 272
அசாத்திய அதிசாரத்தின் இயல்பு. "
கிராணி நோய்ப் படலம். 274
மூலக்கிராணி, சீழ்க்கிராணி, நீர்க்கிராணி, வாயுக்கிராணி, சூசிகாகிராணி, அசீரணக்கிராணி ஆகியவற்றின் இயல்பு. "
வாதமூலக் கிராணியின் இயல்பு, பித்தமூலக் கிராணியின் இயல்பு. "
சிலேத்தும மூலக்கிராணியின் இயல்பு. 274
மூலக்கிராணி, அதிசாரத்திற்கு மருந்து. 276
வாயு கிராணியின் இயல்பு. "
வாயுகிராணி, சூட்டுக் கழிச்சலுக்கு மருந்து. 277
சங்கிரகிராணியின் இயல்பு "
இரத்தக்கிராணியின் இயல்பு. 278
கிராணியின்பேரில் காணும் பாண்டு விடபாக வீக்கத்திற்கு மருந்து. "
செரியாமைக் கிராணிக்கு மருந்து. "
சீதம் விழுவது நிற்க மருந்து. 279
இரத்த கிராணி, நீர்க்கிராணி, அடி த்தள்ளல், மூலச்சூடு, வயிறு இரைதல், வாயு, அன்னம் செரியாமை, பொருமல், நச்சுநீர், தொப்புள்சுற்றி வலித்தலுக்கும் மருந்து. "
சகலக்கிராணி, கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, உளைவு, செரியாமை, பித்தம், நீர்ச்சுருக்கு, பிரமேகத்திற்கு மருந்து. "
கிராணிக் கழிச்சல், அபானக் கடுப்பு, எரிப்பு, உறுப்பு, ஈளை, காசம், பிரமியம், எலும்புருக்கி, உள்ளுருக்கி, தாதுபுஷ்டி இவைகளுக்கு மருந்து. "

Koviloor Digital Library

வெள்ளைக் கழிச்சலுக்கு மருந்து. 281
நீர்க் கழிச்சலுக்கு மருந்து, சல கழிச்சலுக்கு மருந்து. "
வயிறு இரைந்து கழிதலுக்கு மருந்து, மூலக் கழிச்சலுக்கு மருந்து. "
கழிச்சல் சுரத்திற்கு அபின் மாத்திரை. 282
கழிச்சலுக்கு மருந்து, மந்தம், அதிசாரம், கிராணிக்கு மருந்து. "
சகல கழிச்சலுக்கும் காந்தச் செந்தூரம். "
வயிற்றுக்கடுப்பின் இயல்பு. "
வயிற்றுக் கடுப்பு, மூலமுளை, குன்மம், கை, கால் ஊறலுக்கு நாகபற்பம். 285
வயிற்றுக்கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து. "
வயிற்றுக்கடுப்பு வாயுவுக்கு மருந்து. "
ஆசனக்கடுப்புக்கு மருந்து. 286
சுரத்தில் காணும் கடுப்புக்கு மருந்து. "
சகல கிராணி, அதிசாரம், வயிற்று இறைச்சல், கழிச்சல், சீதம், இரத்தம் விழுதல், மூலக்கடுப்பு, வயிற்றுக்கடுப்புக்கு மருந்து. "

வாயு ரோகங்கள்

அண்டவாயுவின் இயல்பு. 289
அண்டவாதத்திற்கு மருந்து. 291
மந்தாக்கினி வாய்வு குணம். "
அக்கினி மாந்தம், வாயு பொருமலுக்கு மருந்து. 292
பித்தவாயு, உஷ்ணவாயு, மந்தத்திற்கு மருந்து. 293
வாயுத்திரட்சி, அரோசிகம், மலக்கட்டுக்கு மருந்து. "
பித்தவாயு, அரோசியம், அக்கினி மந்தம், வயிற்றெரிவுக்கு மருந்து. "
புளித்த ஏப்பத்திற்கு மருந்து. "
உஷ்ணவாயுவுக்கு "
அசீரணவாயுவுக்கு மருந்து. "
மந்தவாயுவுக்கு மருந்து. 294
பித்தவாயுவுக்கு மருந்து. "
வாயுச்சூலைக்கு மருந்து. "
வாயுக் குத்துக்கு மருந்து. 295
வாயுப் பொருமலின் இயல்பு, குண்டல வாயுவின் இயல்பு. "
குடகரி வாயுவின் இயல்பு. 296
அனாகத வாயுவின் இயல்பு அனாகநோய். "
அந்தரா வாயுவின் இயல்பு, துடி வாயுவின் இயல்பு. "
குடல்வாயுவின் இயல்பு, சகலவாயுவுக்கும் பொதுமருந்து. "
வாயுவுக்குக் கழிச்சல் மருந்து. 297

குன்ம ரோகங்கள்

வாத குன்மத்தின் இயல்பு. 298
பித்த குன்மத்தின் இயல்பு. 300

Koviloor Digital Library

சிலேத்தும குன்மத்தின் இயல்பு, வலிகுன்மத்தின் இயல்பு. 300
சத்திகுன்மத்தின் இயல்பு, எரிகுன்மத்தின் இயல்பு. 301
குன்மசூலையின் இயல்பு. 302
குன்மம், எருவாய்நோய், இடுப்புக் குடைச்சல்
வாயுவுக்கு மருந்து ..
குன்ம வலிக்கு (வயிற்றுப்புண்) மருந்து. ..
பித்தகுன்மம், சித்திகுன்மம், எரிகுன்மம், கிருமிக்கு மருந்து. ..
குன்மம், அக்கினி மந்தத்திற்கு மருந்து. 303
வெட்டையைப்பற்றின பித்தகுன்மம், எரிகுன்மம், ஈரல்வலி,
வாயு, மலச்சிக்கலுக்கு மருந்து. ..
சகல குன்ம வாயுவுக்கும் மருந்து. ..
பைத்தியவாயு, அக்கினிமந்தம், மலக்கட்டு, உணவு
செரியாமைக்கு மருந்து. 303
அஷ்டகுன்மம் வாயு அக்கினி மந்தத்திற்கு ..
குன்மம், வாயு, கெண்டை வீக்கத்திறகுக் காந்தச் செந்தூரம். ..
குன்மம், மூலவாயு, பாரிசவாயு, வயிற்று வலிக்கு மருந்து. ..
வயிற்றுப்புண் (குன்மம்), சூதகவாயுத்திரட்சிக்கு மருந்து. ..
சகலகுன்மம் வாயுவிற்குத் தாம்பிரபஸ்மம் 305
சகல குன்மத்திற்கும் (வயிற்றுப்புண்) மருந்நு. ..

வாத ரோகங்கள்

பக்கவாதம், தனுர்வாதம் முதலிய சகலவாதத்திற்கும் மருந்து. 307
பட்சவாதம் முதலான வாதம் (வளி) 80 க்கும் மற்ற கொடிய
நோய்களுக்கும் கெந்திமெழுகு. 310
செரியாமைவாதம், சுரோணிதவாதம், கபாலவாதம்,
முதலானவைகட்கு மருந்து. 311
கை கால் முடக்கு முதலான வாதத்திற்கும் சிதசன்னிக்கும்
மருந்து. ..
திமிர்வாதம், தனுர்வாதம், சுரோணிதவாதம் முதலானதற்கு
மருந்து. ..
அண்டவாதம், நடுக்குவாதம், சந்துவாதம், முகவாதத்திற்கு
மருந்து. 312
அளைவாதம், கழல்வாதத்திற்கும் மருந்து. ..
வாதக்கடுப்பு, குத்து, கைகால் முடக்கு, திமிர்வாதத்திற்கு
மருந்து ..
பக்கவாதம், முகவாதம், திமிர்வாதம், நடுக்குவாதம்
உட்குத்து, புறவீச்சுக்கும் தலைவலிக்கும் மேற்பூச்சு மருந்து ..
வாதக் கடுப்புக்கு மேற் பூச்சு மருந்து ..
வாதத்திற்கு உட்கொள்ளும் எண்ணெய். 313

Koviloor Digital Library

முழங்கால் வாதத்திற்கு மருந்து. 314
வாதக் கடுப்பு வாயுவுக்கு மருந்து. "
வாதக்கடுப்பு, முடக்குவாதம், மேகவாயுவிற்கு மருந்து. "
அண்ட வாதத்திற்கு மருந்து. "
தண்டு வாதத்திற்கு மருந்து. 315
தோள்வாதத்திற்கு மருந்து. "
நடுக்கு வாதத்திற்று மருந்து. "
குடல்வாதத்திற்கு மருந்து. "
கெண்டைக்கால் வாதத்திற்கு மருந்து. 316
இடுப்பு வலி, மேக நீர்க்கட்டுக்கு, சூலைகளுக்கு மருந்து. "
சூலைகடுப்பு, வாயு, உட்குடைச்சல், வாதக்கடுப்புக்கு மருந்து. "
இடுப்புவலி, கால் அசதிக்கு மருந்து. 316
மொழி வீக்கத்திற்கு மருந்து. "
திமிருக்கு மருந்து. 317
அலகுப்பூட்டுக்கு மருந்து (முக்குத்துளி) "
எரிவாதத்திற்கு மருந்து. "
தோள் கடுப்புக்கு மருந்து. "
நெஞ்சுக்குத்து விலாக்குத்துக்கு மருந்து. "
மூச்சுக்குத்து, முலைக்குத்துக்கு மருந்து. 318
நரம்புப்பிடிக்கு மருந்து. "
உள்ளங்கால் குத்துக்கு மருந்து. "
வாதத்திற்குத் தைலம் (தலை முழுக்கு நெய்). "

பித்த ரோகங்கள்

பித்த (அழல்) வறட்சியின் இயல்பு. 320
இரத்த பித்தத்தின் இயல்பு. "
பித்த வெறிக்குணம். "
பித்தவெறி நோய்க்கு மருந்து. 321
பித்த எரிச்சலுக்கு (அழலெரிவு) மருந்து. 322
பித்த மயக்கத்திற்கு மருந்து. "
பித்தத்தில் தோன்றி சகல நோய்க்கும் மருந்து. "
சித்தப் பிரமை பித்தக் கிறுகிறுப்பு, வாய்நீர், சுழற்றல்,
அராசியம், வாந்தி இவைகளுக்கு "
பித்தக் காங்கை, கக்கல், கிறுகிறுப்பு, தாகத்திற்கு மருந்து. 323
பித்த காங்கை, எரிவு, வறட்சிக்கு மருந்து. "
பித்த மயக்கம் மீறல், கிறுகிறுப்பு, காங்கை, கக்கல், சோகை
மற்ற பித்தத்தில் எடுத்த நோய்கட்கு மருந்து. "
பித்தமீறல், கிறுகிறுப்பு, பித்தவெட்டை, உடம்பெரிவிற்கு
மருந்து. "
பித்த வாயுவுக்கு (அழல் வாயு) மருந்து. 324
பித்தத்தை வாந்தி (கக்கல்) செய்ய மருந்து.

Koviloor Digital Library

பித்தம் 40-க்கும் கை கால் எரிவு உடம்பெரிவு, வறட்சி, தாகம், பித்தசுரத்திற்கு மருந்து. "
பித்தசுரம், பித்தகாங்கை, பிதற்றல், பித்தத்தின்பேரில் தோன்றிய இரைப்பிருமல், மேகவெட்டை, வறட்சிக்கு மருந்து. "
சுவையின்மை, உணவேலாமை முதலியவைகட்கு மருந்து. 325
பித்தத்திற்கு (அழல்) மருந்து. "
பித்த (அழல்) நோய்க்குத் தைலம். 326

கபரோகங்கள்

சிலேத்தும நோய்ப் படலம். 327
சிலேத்தும (ஐய) நோயின் இயல்பு. "
ஈளை, இருமலுக்கு மருந்து. 329
சய நோயின் (இளைப்பு) இயல்பு. 331
பித்த சய நோயின் இயல்பு. 332
காச நோயின் இயல்பு. 333
மந்தார காசத்தின் இயல்பு. "
நச்சு பித்த காசத்தின் இயல்பு. 335
இரத்தகாச நோயின் இயல்பு. "
உளைமாந்தையின் இயல்பு. 336
சுரமாந்தை நோயின் இயல்பு. 337
சுவாசத்தின் இயல்பு. "
சுவாசகாசம், சயம், காசம், உளமாந்தை முதலான சிலேத்தும (ஐய) நோய்களுக்கு மருந்து. "
சிலேத்தும (ஐய) நோய்களுக்குத் தைலம். 338
கப நோய்கள் 96, வறட்சி, பீனிசம், நீர்ப்பாய்தல், கண்ணோய், காங்கைக்குத் தலை முழுக்கு நெய். "

பல், செவி, ரோகங்கள்

செவி நோய்ப் படலம். 342
காதில் சீழ்மாறலுக்கு மருந்து (தொளை நெய்). "
காது இரைச்சலுக்கு மருந்து. "
காது எழுச்சிக்கு மருந்து. "
காதிரைச்சல், வலிக்கு மருந்து. 343
காதில் புழுவிழுதலுக்கு மருத்துவம். "
காது மந்தத்திற்கு மருந்து. "
காது இரைச்சல், குத்தல், மந்தம், எழுச்சி முதலான காது நோய்களுக்கு மருந்து. 344
காதில் ஈ புகுதலுக்கு மருத்துவம். 345

ஒழுக்கு ரோகங்கள்

ஒழுக்கு நோய்ப் படலம். "
ஒழுக்கு நோய் வருவதற்குக் காரணம்.

Koviloor Digital Library

இரத்த ஒழுக்கு நோய் இயல்பு (இ)ரத்தப் பிரமியம்). 345
விந்து ஒழுக்கு நோயின் (சுக்கிலப் பிரமியம்) இயல்பு. 346
சீழ் ஒழுக்கு நோயின் இயல்பு. "
ஒழுக்கு (பிரமியம்) நோய்க்குப் பொது மருந்துகள். 348
நீர் கடுத்து துளித் துளியாய் விழுந்து இரத்தம் காணுவதற்கு மருந்து. 349
சீழ் ஒழுக்கு, இரத்த ஒழுக்கு, நீர்க் கட்டு, கடுப்பு, மூத்திரக் கிரிச்சரத்துக்கு மருந்து. 350
இரத்த ஒழுக்கு, கல்லடைப்புக்கு மருந்து. "
இரத்த ஒழுக்கு, சீழ் ஒழுக்கு, விந்து ஒழுக்கு, மூத்திரக் கிரிச்சாரம், நீர்க் கட்டுக்கு மருந்து. "
ஒழுக்கு நோய், பெரும்பாடு, சூலைகளுக்கு மருந்து. "
குருதி ஒழுக்கு, சீழ் ஒழுக்கு, உட்டிணத்திற்கு மருந்து. 351
இரத்த ஒழுக்கு, உடம்பெரிவு, நல்லெரிப்பனுக்கு மருந்து. "
ஒழுக்கு, எலும்புருக்கி, காமாலை, மூத்திரக் கிரிச்சரம், முதலான உட்டிண நோய்களுக்கு மருந்து. "
மூத்திரப்பாலை, கிரிச்சனம், நீர்ச்சுருக்கு, எரிவு, இரத்த ஒழுக்கு முதலியவற்றிற்கு மருந்து "
இரத்தம்போல் நீர் இறங்குவதற்கு மருந்து. 352
நீர்க்கடுப்பு எரிவுக்கு மருந்து. "
நீர்த்தாரையெரிவு, கடுப்பு, சதை வளர்ச்சிக்கு மருந்து. "
கல்லடைப்புக்கு மருந்து. "
சதை அடைப்புக்கு மருந்து. 354
நீர் அடைப்புக்கு மருந்து. "
நீர்ச்சுருக்கின் இயல்பு (கிருச்சரம்) 355
வெள்ளை வெட்டையின் இயல்பு. 356
ஒழுக்கு, வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, கடுப்பு, கிருச்சரம், மேககாங்கை ஆகியவற்றிற்கு மருந்து. 358
மேற்படி நோய்களுக்குத் தைலம் (தலைமுழுக்குக்கு நெய்) 359

நீரிழிவு ரோகங்கள்

மேக நோய்ப் படலம். 360
நீரிழிவு (பிரமேகம்) வருவதற்குக் காரணம். "
நீரிழிவின் இயல்பு. "
வாத ஒழுக்கு நீர் நான்கின் இயல்பு. 361
அழல் பிரமேக நீர் ஆறின் இயல்பு. "
ஐய பிரமேக நீர் பத்தின் இயல்பு. "
காலப் பிரமேக நீரின் இயல்பு, சுப்பிரமேக நீரின் இயல்பு. "
மதுப் பிரமேக நீரின் இயல்பு, மலப் பிரமேக நீரின் இயல்பு. "
சுக்கிலப் பிரமேக நீரின் இயல்பு. "
மருந்தீட்டின் பேரில் காணும் நீரின் இயல்பு. 362

Koviloor Digital Library

சீயக்காய்ப் பிரமேக நீரின் இயல்பு. 362
நீரிழிவு நோய் வகை. "
வாத நீரிழிவு மூன்றின் இயல்பு. "
வாத பித்த நீரிழிவு நான்கின் இயல்பு. "
பித்த நீரிழிவு மூன்றின் இயல்பு. "
பித்த வாத நீரிழிவு இரண்டின் இயல்பு. "
சிலேத்தும நீரிழிவு நான்கின் இயல்பு. "
சிலேத்தும பித்த நீரிழிவு மூன்றின் இயல்பு. "
சிலேத்தும வாத நீரிழிவு ஐந்தின் இயல்பு. 363
வாதப் பிரமேகத்திற்கு மருந்து. 366
பித்த பிரமேகத்திற்கு மருந்து. "
சிலேத்தும பிரமேகத்திற்கு மருந்து. 367

மேக ரோகங்கள்

மேக நோயாளிகளுக்குக் காணும் தாகத்திற்கு மருந்து. 371
நீரிழிவு, ஒழுக்கு, எலும்புருக்கி, கடுப்பு, பெரும்பாட்டுக்கு மருந்து. "
விந்துமேகம், குருதிமேகம், சீழ்மேகம், மூத்திரப்பாளை, கிருச்சரம் (நீர்ச்சுருக்கு) இவைகளுக்கு மருந்து. "
சகல மேகத்திற்கும் எண்ணெய் (குடிநெய்) "
கெந்தித் தைலம் (குடிநெய்) 373
மேக ஊறலுக்கு மருந்து. 374
மேகவெட்டைப் பிடிப்பு, மேகச் சிரங்குகளுக்கு மருந்து. "
மேகத்தால் காணும், வாய்ப்புண், இரணங்கள், வெள்ளைப்புள்ளி, தடிப்பு, சிரங்கு, சூலைகட்டுக்கு மருந்து. 375
ஒழுக்கு, வெட்டை, மேகத்தால்காணும் தடிப்பு, இரணம், கையில் ஊறல், வெளுப்பு, சிரங்கு, அல்குல் புற்றுக்கு மருந்து. "
மேககரப்பன், இரணம், சூலைக்கட்டு, மேகவாயுவுக்கு மருந்து. "
மேககாங்கை, அலுப்புக்கு மருந்து. 376
மேகத்தில் வெடித்த சகல சூலைக்கடுப்பு வாயுவுக்கு மருந்து. "
மேகம், மேககாங்கையினால் உடல் எரிச்சல், தாகம், கண்புகைதல், பித்தக்கிறுகிறுப்பு, மயக்கம், சோம்பல், தலையில் மயிர் உதிர்தல், உடல் மெலிவுக்குத் தைலம். "
மேகப்புற்று, மேகச்சொறிக்கு மருந்து. 377
மேகவாதம், கிரந்திக்கு மருந்து. "
மேகக்கரப்பான், கிரந்திக்கு எண்ணெய் (குடிநெய்) "
மேகசூலை வீக்கத்திற்கு மருந்து. 378
மேகவெட்டை, நீரிழிவு, நீரடைப்பு, கல்லடைப்பு, கடுப்பு, கிருச்சரம், மேககாந்தல், பித்தம், கண் புகைச்சலுக்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்). 379

Koviloor Digital Library

பவுத்திர ரோகங்கள்

பவுத்திர நோயின் இயல்பு.	381
மேற்படி நோய்க்குக் கந்தக வடகம்.	382
பவுத்திரம், பிளவை, சூலை, குட்டம், கிரந்தி, அரையாப்பு, வாதம், மேகச்சொரி, கண்டமாலை, படர்தாமரை, பறங்கிப்புண், உருத்திரவாயு, குலைமுட்டி முதலான, மேக நோய்களுக்குத் சேங்கொட்டை மருந்துகள்.	"
பவுத்திரம், கண்ட மாலை, கிரந்தி முதலானவைக்குப் புகை.	384
பவுத்திர இரணங்களுக்குக் களிம்பு.	"
உருத்திரம், கண்ட மாலை, விப்புருதி, பிளவை, அரையாப்பு, முதலான வீக்கத்திற்குமேல் பூச்சு மருந்து.	"
கிரந்தி நோய்ப் படலம், பேய்ச் சொரியின் இயல்பு.	388
கிரந்திப் புண், சிரங்குக்கு மேல் பூசும் தைலம்.	389

அரையாப்பு நோய்கள்

அரையாப்பு நோய்க்கு எண்ணெய் (குடிநெய்)	"
அரையாப்பு முதலிய இரணங்களுக்குத் களிம்பு.	390
அரையாப்பு முதலிய இரணங்களுக்குத் துவர்ச்சிலை	391
சூலை நோய்ப் படலம்.	"

சூலை நோய்கள்

வாதசூலை, முடக்கு, வீக்கங்கடுப்பு, உளைவிற்கு மருந்து.	393
கை கால், முடக்கு முதலான சூலை பதினெட்டு, மேக ஊறல், தடிப்பு, சொரி, நீர்க்கடுப்பு, வெள்ளை விழுதல், குட்டம் (பெருநோய்), கிரந்தி, அரையாப்பு, படர்த் தாமரை, தொடை வாழை, ரணம், கண்டமாலை, இலிங்கப்புற்று, அல்குல் புற்றுக்கு மருந்து.	396
வாதசூலை சுரோணித சூலைக்கு.	399
வாதசூலை, நடுக்கு சன்னிக்கு மருந்து.	"
வாயு சூலைக்கு மருந்து.	"
வாதசூலை, மேகசூலை, கிரந்தி, வண்டுகடிக்கு மருந்து.	"
சூலைகடுப்பு, வீக்கத்திற்கு மருந்து.	"
நச்சுப்பாண்டு, மூலப்பாண்டு, சூலைக்கு மருந்து.	400
வாதபாண்டு சூலைக்கு, வெடிச் சூலைக்கும் மருந்து.	"
பிரமேகச்சூலை, இலிங்கச்சூலைக்கு மருந்து.	"
எலும்புச் சூலை, வெடிசூலை, பறங்கிப்புண், கிரந்திக்கு மருந்து	"
சுர சூலைகளுக்கு மருந்து.	401
வாயில் ஏற்படும் சூலைப் புண்களுக்கு மருந்து.	"
பித்தப் பாண்டுச் சூலைக்கு மருந்து.	402
பித்த சூலைக்கு	"

Koviloor Digital Library

கபால சூலையின் இயல்பு, சூலைப் புண்ணுக்கு மருந்து.	402
சூலைக்கட்டு, வீக்கம், கடுப்பு, பிடிப்பு, குத்துக்கு மருந்து.	"
மேற்படி நோய்களுக்குத் தைலம்.	403

குட்ட ரோகங்கள்

வயிற்று நோய்கள்

வயிற்று நோய்களின் இயல்பு.	"
பதண்டுரோகம் மேற்படி வியாதியின் குணம், நிவர்த்தி	412
அதிசாரத்தின்மேல் காணும் வீக்கம், சோகைக்கு மருந்து.	415
மஞ்சள் நோய்ப் படலம், மஞ்சள் நோயின் இயல்பு.	"

சோகை நோய்கள்

வாத சோகையின் இயல்பு, பித்த சோகையின் இயல்பு.	418

கண்டமாலை நோய்கள்

கண்டமாலை நோயின் இயல்பு.	"
கண்டமாலை முதலிய இரணங்களுக்குக் களிம்பு.	420
மேற்படி இரணங்களுக்குத் துவர்ச்சீலை.	"
கண்டமாலை, விப்புருதி, அரையாப்பு, முலைக்குத்து கட்டிகளுக்கு மேல் பூச்சு.	"
பிளவை நோய்ப் படலம்.	421
மேற்படி நோயின் இயல்பு.	"
வயிற்றுவலி நோய்ப் படலம்.	422
வயிற்றுவலி முதலியவைகளுக்கு மருந்து	423
வயிற்றுவலி, செரியாமைக்கு வச்சிரவல்லி இளகம்.	"
வயிற்றுவலிக்குப் பேய்க்குமட்டி எண்ணெய் (குடிநெய்)	"
இரத்த சத்துக்கு மருந்து.	"
வாயாலும் மூக்காலும் இரத்தம் விழுதலுக்கு மருந்து.	424
விக்கலுக்கு மருந்து.	"
கக்கல் (வாந்தி) விக்கலுக்கு மருந்து.	425
வாந்தியை நிறுத்த மருந்து.	427
நாவறட்சிக்கு, தாகத்திற்கு	"
சுவையின்மைக்கு மருந்து.	428

சூரணங்கள்

தாளிசப்பத்திரி சூரணம்.	430
மேகராசாங்கக் கலப்புத் தூள்.	"
கரந்தைச் சூரணம், முந்திரிகைச் (திராட்சை) சூரணம்.	431
பூசணிச் சூரணம், இங்குலாதிச் சூரணம், அக்கினிச் சூரணம்.	432
மேகக் கலப்புத்தூள்.	"
சீதக் கலப்புத்தூள்.	

Koviloor Digital Library

நிலவாகைக் கலப்புத் தூள். 432
இராச அமிர்தாதித் தூள். 433
பஞ்சலவணக் கலப்புத்தூள். „
சித்திரமூலாதித் தூள். „
அசுவகெந்திக் கலப்புத் தூள். 433
கரிசாலைக் கலப்புத்தூள். 434
வல்லாரைச் சூரணம். „
சந்தனச் சூரணம். „
கற்பூரக் கலப்புத்தூள். „
அமிர்தசஞ்சீவிச் சூரணம். 435
கொடிவேலிச் சூரணம். „
அதிமதுராதிச் சூரணம். „
வச்சிரவல்லித் தூள். 436

நெய்கள்

சகல மேக நெய். „
கந்தக நெய். 437
கதலி நெய். 438
இஞ்சி நெய். „
பறங்கிப்பட்டை நெய். 439

இளகங்கள்

இளகப் படலம். „
அமிர்த சஞ்சீவி இளகம். „
குண்டலாதி இளகம். 440
கூழ்ப்பாண்ட இளகம். „
வில்லாதி இளகம். 441
நெல்லிக்காய் இளகம். 443
தான்றிக்காய் இளகம். 444
கடுக்காய் இளகம் „
சுக்கு இளகம். „
மிளகு இளகம். 445
திப்பிலி இளகம். „
வெள்ளைப் பூண்டு இளகம். „
கடுகு லேகியம். „
வெந்தய இளகம். 446
ஓம இளகம். „
பெருங்காய இளகம். „
இஞ்சி இளகம். „
கண்டங்கத்தரி இளகம். „
அட்ட குன்ம இளகம். 447

Koviloor Digital Library

நாரத்தங்காய் இளகம்.	477
சிவதை லேகியம்.	488
பஞ்ச தீபாக்கினி இளகம்.	"
முடக்கொத்தான் இளகம்.	"
சண்டமாருத இளகம்.	499
மிக்குலாந்தக (இஞ்சி) இளகம்.	499
கலிங்காதி இளகம்.	"
தூதுவளை இளகம்.	"
சிந்தாதி இளகம்.	450
சித்திரவல்லாதி இளகம்.	"
தாது விருத்தி இளகம்.	"
மதனகாமேசுர இளகம்.	452
மதனகாமேசுரக் குளிகை	453
மதனகாமேசுர நெய்	455
மதனபூரண வல்லாதி.	"
மதனசஞ்சீவி.	"
விந்துவிருத்திக்கு மருந்து.	"
தம்பன வெண்ணெய்.	456
கந்தாதி இளகம்.	"
மன்மத சிந்தாமணி.	457
சித்திரமூல இளகம்.	"
சிறு கூழ்ப்பாண்ட இளகம்.	458

நெய் வகை

நெய்ப் படலம்.	"
சந்தன நெய்.	"
புளியாரை நெய்.	"
கூழ்ப்பாண்ட நெய்.	459
பெரும்பூசணி நெய்.	460
ஆவாரை நெய்.	461
கொன்றை நெய்.	"
நாவல் நெய்.	"
பொன்னாங்காணி நெய்.	"
வல்லாரை நெய்.	462
கடுக்காய் நெய்.	"
வில்வ நெய்.	463
அவுரி நெய்.	"
அருகன்வேர் நெய் (கிருதம்)	"
கண்டங்கத்திரி நெய்.	"
தூதுவளை நெய்.	464
விஷ்ணுகிராந்தித் நெய்.	

Koviloor Digital Library

சதாவேரி நெய்.	464
கதலிகெந்தக நெய்.	465
தாய்ப்பால் நெய்.	"
கடுக்காய் நெய்.	"
சுக்கு நெய் (கிருதம்).	"
பிரமி நெய்.	466

மணப்பலகு (சர் பத்துகள்)

நன்னாரி மணப்பாகு (சர்பத்து)	466
சந்தன மணப்பாகு.	"
ரோஜாப்பு, தாமரைப்பூ, வல்லாரை மணப்பாகு.	"
கொடிமுந்திரிகைப்பழ மணப்பாகு.	467
எலுமிச்சம் பழ மணப்பாகு	"
நாரத்தம் மணப்பாகு.	"
கொம்மட்டி மாதுளம் பழம் மணப்பாகு.	"
மாதுளைப்பழம் மணப்பாகு.	"
இஞ்சி மணப்பாகு.	"
காடி மணப்பாகு.	468

எண்ணெய் வகை

(இவை குடித்தைல வகையாம்) செங்கத்தாரி எண்ணெய்.	"
கொம்மட்டிக்காய் எண்ணெய்.	"
உள்ளி ஆமணக்கு எண்ணெய்.	"
முடக்கொத்தான் எண்ணெய்.	469
கொடிவேலி எண்ணெய்.	"
மேக ராசாங்க எண்ணெய்.	"
ஐந்தெண்ணெய்த் தைலம்.	470
சுத்தவல்லாதி எண்ணெய்.	"
முடக்கொத்தான் எண்ணெய்.	"
விப்புருதி எண்ணெய்.	471
நீரடைப்புக்கு எண்ணெய்.	472
சாதிக்காய் எண்ணெய்.	"
இலவங்காதி எண்ணெய்.	"
சந்தன எண்ணெய்.	"
மதனகாமேசுரப் பூ எண்ணெய்.	"

வடகங்கள்

தாளிசப்பத்திரி வடகம்.	"
நெல்லி வடகம்.	473
கெந்தக வடகம்.	"
இலவங்காதி வடகம்.	"
காந்தரச வடகம்.	"

Koviloor Digital Library

[illegible]ல்லாதி வடகம்.	473
[illegible]விய வடகம்.	475
சுக்கு வடகம்.	"
கடுக்காய் வடகம்.	"
மேகாதி வடகம்.	"
உலோகாதி வடகம்.	476
சவுபாக்கியசுண்டி வடகம்.	476

கட்டுகள்

சாதிலிங்கக் கட்டு.	"
இலிங்க ரசகற்பூரக் கட்டு.	479
ரசகற்பூரக்கட்டு.	"
தாளகக்கட்டு.	480
சாரக்கட்டு.	481
பாடாணக்கட்டு.	"
சலமஞ்சரி.	482
வெடிப்புக்கட்டு.	"
லவணக்கட்டு.	"
வீரக்கட்டு.	483

மெழுகுகள்

இலிங்க மெழுகு.	"
வீர மெழுகு.	484
இரச மெழுகு.	"
இலிங்க ரசகற்பூர மெழுகு.	485
பாடாண மெழுகு.	"

செந்தூரங்கள்

அயச்செந்தூரம்.	"
அயகாந்தச் செந்தூரம்.	487
மண்டூரச் செந்தூரம்.	488
உருக்குச் செந்தூரம்.	489
திரிலோகச் செந்தூரம்.	"
பஞ்சலோகச் செந்தூரம்.	490
அப்பிரகச் செந்தூரம்.	"
கருவங்கச் செந்தூரம்.	491
தாமிரச் செந்தூரம்.	493
நாகச் செந்தூரம்.	494
காளமேக நாராயண செந்தூரம்.	495
ஈசுர சிந்தாமணி செந்தூரம்.	496
இரசச் செந்தூரம்.	"

Koviloor Digital Library

சந்திரோதயச் செந்தூரம்.	499
சடாட்சர அக்கினி குமாரன் (ஆறுமுகச் செந்தூரம்)	"
சுயமக்கினிச் செந்தூரம்.	"
பஞ்சபாடாணச் செந்தூரம்.	500
உலோகச் செந்தூரம்.	501
கரியுப்புச் செந்தூரம்.	"
இலிங்கச் செந்தூரம்.	"
தாளக செந்தூரம்.	"

பற்பங்கள்

இரச பற்பம்	502
கெந்தக பற்பம்.	"
வீர பற்பம்.	503
தாளக பற்பம்.	"
துருச பற்பம்.	504
தாமிர பற்பம்.	"
வெள்ளி பற்பம்.	505
பவழ பற்பம்.	"
நாக பற்பம்.	506
கெருடக்கல் பற்பம்.	"
வெள்வங்க பற்பம்.	507
கருவங்க பற்பம்.	"
கற்பூரசலாசத்து பற்பம்.	"
சொர்ண பற்பம்.	508
முத்து பற்பம்.	"
அய பற்பம்.	509
மான்கொம்பு பற்பம்.	"
கல்நார் பற்பம்.	"
பஞ்சலவண பற்பம்.	"

திராவகங்கள்

மகா திராவகம் (தீநீர்)	510
சங்குத் திராவகம் (தீநீர்)	511
சீனத் திராவகம்.	"
கெந்தகத் திராவகம்.	"
பஞ்சலவ்ணத் திராவகம்.	512
மெழுகுத் திராவகம்.	"
கறியுப்புத் திராவகம்.	"
வெடியுப்புத் திராவகம்	"
[illegible]ழிச்சல் படலம்.	513
துடிநீர்.	"
கல்ப்புத்தூள் (கு[illegible]	514

நிணப்பூடு கழிச்சலுக்கு மருந்து. 515
[illegible] நோய். ..
உட்பு. 516
நாபிக் கழிச்சல் மருந்து. ..
பூ கழிச்சல் மருந்து. ..
மாத்திரை. 517
உதர நோய்ப் படலம். 519
பேய்க்குமட்டி நெய். 519
சாரணை மெழுகு. ..
குமட்டி மெழுகு. 520
குமட்டி மெழுகு (வேறு) ..
இலுப்பைப்பூ மெழுகு. ..
பேய்ப்பீர்க்கு மெழுகு. ..
தேங்காய் மெழுகு. ..
கொல்லங்கோவைத் தைலம். 521
கெந்திவெடி மெழுகு. ..
ஐந்துப்பு மெழுகு. ..
வெள்ளுள்ளித் தைலம். ..
பெருங்காய இளகம். ..
சிவதைச் சூரணம். 522
சித்தாதி நெய். ..

பாண்டு ரோகங்கள்

பாண்டு நோயின் இயல்பு. ..
கரிச்சாலை இளகம். 523
தேசி நெய். 524

குழம்புகள்

பேய்க்குமட்டிக் குழம்பு. ..
நாரத்தங்காய்க் குழம்பு. ..
நவச்சாரக் குழம்பு. 526
இலிங்கக் குழம்பு. ..
இலிங்கக் குழம்பு (வேறு) ..
இலிங்கக் குழம்பு (வேறு) ..
அகத்தியர் குழம்பு 527

தைலங்கள்

சந்தனாதித் தைலம். 530
செம்புள்ளித் தைலம். 531
கொடுவேலித் தைலம். ..
நந்தி[illegible]த் தைலம்.

Koviloor Digital Library

கீழ்க்காய்நெல்லித் தைலம்.	532
அகில்கட்டைத் தைலம்.	"
வெட்டிவேர்த் தைலம்.	"
விலாமிச்ச வேர்த்தைலம்.	532
அறுகம்வேர்த் தைலம்.	"
பொன்னாங்காணித் தைலம்.	533
வில்வாதித் தைலம்.	"
குமரித் தைலம்.	534
சகாதேவித் தைலம்.	535
கொம்பரக்குத் தைலம்.	"
சிறுகொம்பரக்குத் தைலம்	536
நெல்லிக்காய்த் தைலம்.	537
கீழ்க்காய் நெல்லித் தைலம்.	"
ஆதண்டைத் தைலம்.	"
சிறுசந்தனாதித் தைலம்.	538
சங்கன்வேர் தைலம்.	"
அறுகன்வேர்த் தைலம்.	"
துளசித் தைலம்.	539
வேங்கை வில்வாதித் தைலம்.	540
சுரநாசத்தைலம்.	"
கரிப்பான் தைலம்.	"
சம்பீரத் தைலம்.	"
கஞ்சாத் தைலம்.	541
எட்டி மிளகுத் தைலம்.	"
மிதிபாகல் தைலம்.	"
கருந்தொட்டித் தைலம்	"
யானைக் கொம்புத் தைலம்.	"
சவுரித் தைலம்.	542
வேங்கைத் தைலம்.	"
வேப்பம்பட்டைத் தைலம்.	"
குருந்தொட்டித் தைலம்.	"
ஊழிக்காற்றுப் படலம்.	"
மருந்துவீறு முறிவுப் படலம்.	545
பலவகை நோய்களுக்கு மருத்துவம்.	546
நெஞ்சுத் தடுமனுக்கு மருந்து.	"
செறியாமல் சோறு சோறாய் மலம் கழிவதற்கு மருந்து.	547
அறைவீட்டில் வயிற்றில் சீழ்கட்டி வறட்சி, தோடம் ஆகியவற்றிற்கு மருந்து.	"
தலைப்பேனுக்கு மருந்து	"
மேகப்புண் முதலான இரணங்களுக்குத் தைலம்	"
நாக்கிலும் உதட்டிலும் உண்டாகும் புண்ணுக்கு மருந்து.	"

Koviloor Digital Library

எச்சில் தழும்பு படர்தாமரை படர்வதற்குப் பற்று 547
மருந்துசீலைப் படலம். 548
அக்கிக்கு மருந்து. 549
காதுப்புண் மருந்து. ,,
மயிர்க் கூருக்கு மருந்து. ,,
தீச்சுட்ட புண்ணுக்கு மருந்து. ,,
நரம்புச் சிலந்திக்கு மருந்து ,,
பித்தவெடிப்புக்கு மருந்து. ,,
கன்னவீக்கத்திற்கு மருந்து. 550
கருவங்கு, பரு, படுவனுக்கு மருந்து. 550
குத்துவெட்டு, வில்லுண்டை, கல்லெறி காயத்திற்கு மருந்து. ,,
வெட்டுக்காயத்துக்கு ,,
அரையாப்பு பிளவை சூலைவீக்கம் சூலைக்கட்டு
பவுந்திரத்துக்கு மேற்பூச்சுகள். ,,
இரணங்களுக்குப்போடும் தைலம். 551
இரணங்களுக்குக் களிம்புகள். ,,
இரணங்களின்பேரில் போடும் காரச்சீலைகள். 552
இரணங்களிற்போடும் நீர். 553
இரணங்களுக்குத் திரி. ,,
சகலமேகங்களுக்கும் இரசகெந்தி மெழுகு. ,,
வேறு இரசகெந்திமெழுகு. 554
அண்டத்தைலத்தில் வீரமெழுகு. ,,
காமகேசரி லேகியம். ,,
மேகநீரிழிவு இருபத்தொன்றுக்கும் லேகியம். 556
நீரிழிவுக்கு சஞ்சீவிக்குளிகை. ,,

மாத்திரைகள்

வாதராக்ஷதன் மாத்திரை. ,,
அஷ்டவயிரவன் மாத்திரை. ,,
வாலைசிந்தாமணி மாத்திரை. ,,
ஸ்ரீபஞ்சகாவிய மாத்திரை. 557
பூபதிமாத்திரை. ,,
சிந்தாமணிமாத்திரை. ,,
இராமபாணக்குளிகை. ,,
இராஜசேகர வடிதமாத்திரை. ,,
வசந்தகுஸுமாகரக்குளிகை. 558
செய்முறை வகை. முப்பூ முறை. ,,
உருக்கினவகை. 559
அயச்சத்து காந்தச்சத்து முறைகள். 560
லோகத்தில் பஞ்சபூத விவரம். ,,
பாஷாணத்தில் பஞ்சபூத விவரம். 561

Koviloor Digital Library

காரசாரத்தில் பஞ்சபூதம்.	561
உபரசத்தில் பஞ்சபூதம்.	"
வைப்புப்பாஷாணத்தில் பஞ்சபூதம்.	"
சத்துரு மித்துரு விவரம்.	"
உப்புப் புளிச் சரக்கு விவரம்.	563
நாதவிந்துச் சரக்கு விவரம்.	"
கட்டுவகைகளின் பரீட்சை.	"
அஷ்ட லோகமாரணம்.	"
வேறு.	"
சிங்கிச்சுண்ணம்.	564
எரிப்புத்திட்டம்.	564
ஊதுதிட்டம்.	"
சரக்குகளின் சுத்திமுறைகள்.	"
பாஷாணச்சரக்குகளுக்குப் பொதுச்சுத்தி.	566
32-வகைப்பாஷாணங்களின் பெயரும் சத்தும்.	"
நவலோக நவபாஷாண மாரணிகள்.	"
சொறிசுணங்கிக்கு மண்டூரம் பற்பமாகும்; பாண்டுவகைகள் தீரும்.	570
நவலோக மாரணம்.	572
உலோகச்சத்துள்ள மூலிகைகளின் விவரம்.	"
சேர்க்கைப் பதார்த்தங்களின் விவரம்.	573
ஜெயநீர் முறைகள். முப்பூ ஜெயநீர்.	574
எழுவகை ஜெயநீர்.	575
வெடியுப்பு ஜெயநீர்.	"

ரோக நிவாரணிகளின் தொகுதி

வாதம் வாயு நிவாரணிகள்.	"
விரைவாத நிவாரணிகள்.	576
குடல்வாத நிவாரணிகள்.	"
குன்மவாயு நிவாரணிகள்.	"
பித்தநிவாரணிகள்.	"
கபநிவாரணிகள்.	577
சுரம் தோஷம் சன்னி நிவாரணிகள்.	"
சிரசுநோய் பீனசம் நீரேற்ற நிவாரணிகள்.	578
செவிநோய் நிவாரணிகள்.	.
தந்தநோய் நிவாரணிகள்.	"
கண்டமாலை நிவாரணிகள்.	"
நெஞ்செரிவு நிவாரணிகள்.	"
மார்புநோய் நிவாரணிகள்.	"
மெய்க்கடுப்பு உளைவுபலி நிவாரணிகள்	"
அருசி வாய்நீரூறல் வாந்தி நிவாரணிகள்	579

Koviloor Digital Library

விக்கல் நிவாரணிகள்.	579
பாண்டு சோகை வீக்க நிவாரணிகள்.	"
நீரழிவுநிவாரணிகள்.	"
கிரிச்சரம், நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சிறுப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு நிவாரணிகள்.	580
நீரெரிவு நிவாரணிகள்.	"
மேகம் பிரமியம் வெட்டை வெள்ளை நிவாரணிகள்.	"
மேககாங்கை எரிவு மெய்வெளுப்பு நீக்கி உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் பதார்த்தங்கள்.	581
தேகபலம் தாதுபுஷ்டி வீரியவிருத்தி உண்டாக்கும் பதார்த்தங்கள்.	"
கண்ணோய் நிவாரணிகள்.	582
காமாலை நிவாரணிகள்.	"
விரோசன பதார்த்தங்கள்.	"
கிருமிச்சத்துருக்கள்.	"
கிராணி அதிசாரம் மலக்கழிச்சல் நிவாரணிகள்.	"
இரத்தக்கடுப்பு சீதக்கடுப்பு நிவாரணிகள்.	583
இரத்தமூல சீமூல நிவாரணிகள்.	"
மூலமுளை நிவாரணிகள்.	"
சூலை கிரந்தி நிவாரணிகள்.	"
சூலை சூலைப்பிடிப்பு கடுப்பு நிவாரணிகள்.	584
அரையாப்பு நிவாரணிகள்.	"
கரப்பன் சொறி சிரங்கு நிவாரணிகள்.	"
புண் புரை வீக்கம் சிலந்தி நிவாரணிகள்.	585
கை காலில்விழும் கறுப்பைநீக்கும் பதார்த்தங்கள்.	"
கைகால் முகத்திலுண்டாகும் வெள்ளைக்கு.	"
குஷ்டம் குறைநோய் நிவாரணிகள்.	"
ஜடராக்கினியை விருத்திசெய்யும் பதார்த்தங்கள்.	"
மருந்தீடு நிவாரணிகள்.	586
தழுதணை நிவாரணிகள்.	"
உன்மத்த நிவாரணிகள்.	"
தலைவலி நிவாரணிகள்.	"
தேமல் நிவாரணிகள்.	"
மாந்தம் கணம் பிரளி நிவாரணிகள்.	"
பருப்படுவன் நிவாரணிகள்.	"
பிளவை நிவாரணிகள்	587
சிலந்தியிலுள்ள பூச்சிக்கடி நிவாரணிகள்.	"
பித்தவிரிவு நிவாரணிகள்.	"
எலும்புருக்கி நிவாரணிகள்.	"
தாகம் நாவறட்சி நிவாரணிகள்.	587
அடி பட்டவீக்க நிவாரணிகள்.	"

சிலந்திவீக்க நிவாரணிகள்.	587
மேகக்கட்டி நிவாரணிகள்.	588
தாபசோபம் நாவறட்சி நிவாரணிகள்.	"
மயக்க நிவாரணிகள்.	"
பீலிகை நிவாரணிகள்.	"
உதரநோய் நிவாரணிகள்.	"
கெர்ப்பநோய் நிவாரணிகள்.	"
சூதகக்கட்டி சூதகவாயு நிவாரணிகள்.	"
ஜலத்தைக்கட்டும் பதார்த்தங்கள்.	"
சலக்கழிச்சல் நிவாரணிகள்.	"
இரத்தக்கழிச்சல் நிவாரணிகள்.	589
பால்ஊறும் பதார்த்தங்கள்.	"
விரண நிவாரணிகள்.	"
விக்கல் நிவாரணிகள்.	"
ஜலதோஷ நிவாரணிகள்.	"
தொண்டைக்கட்டு கம்மலுக்கு.	"
உந்திப்புண் நிவாரணிகள்.	"
வலிப்பு இசிவு நிவாரணிகள்.	590
கருப்பத்தையழிக்கும் பதார்த்தங்கள்.	"
வாந்தியையுண்டாக்கும் பதார்த்தங்கள்.	"
வாத பித்த சிலேத்துமத்தைச் சமம் செய்யும் பதார்த்தங்கள்.	"
விந்தூறும் புஷ்பங்கள்.	591
வியாதிகட்கு மூலிகைப் பிரயோகம்.	592

விஷ வைத்தியம்

அஷ்டநாகங்களின் விவரமுதலியன.	607
இன்னாரை இன்னநேரத்தில் இன்னபக்கத்தில் அரவு தீண்டுமென்பது.	608
அஷ்டநாகங்களின் விஷவேகக்குறிகள்.	609
உயிர் அடக்கக்குறிகள்.	"
மரணக்குறிகள்.	610
அடங்கின உயிர் திரும்புமென்பதற்குச் சோதனை.	"
அஷ்டநாக முதலாயுள்ள சகல விஷத்துக்கும் மூலிகைப்பிரயோகம்.	"
சருவ விஷத்திற்கும் பரஞ்சோதிக்குழம்பு.	611
மஹாசிந்தாமணிக்குழம்பு.	"
சஞ்சீவிக்குழம்பு.	"
சஞ்சீவகாணித் தைலம்.	612
இராமபாணத் தைலம்.	"
சஞ்சீவி மை.	612
பரஞ்சோதி மை.	613

Koviloor Digital Library

சூரன்மை.	613
பரஞ்சோதி மாத்திரை.	"
சூடாமணி மாத்திரை.	"
கடிவாயிற் கட்டு மாத்திரை.	614
அடக்கம், எழுப்ப அஞ்சனம்.	"
கெருட அஞ்சனம்.	"
அடக்கம் எழுப்ப ஆக்கிராணம்.	"
சகல விஷத்துக்கும் நசியம்.	615
விரியன் பாம்புகளின் கடிக்குறியும் அவைகளுக்குச் சிகிச்சையும்	"
கடிவாயிற் பூசும் மருந்து	616
சகலவிரியன் விஷகடி வீக்கத்திற்கும் புண்ணுக்கும் போடத்தைலம்.	617
கருவழலை முதலிய மற்ற சில்லரைப்பாம்புகளின் கடிவிஷக்குறியும் அவைகட்குச் சிகிச்சையும்.	617
எலிகளின்கடி விஷக்குறிகளும் அவைகட்கு நிவிர்த்திகளும்.	622
விஷத்தால் மரித்தவனை எழுப்ப ஆக்கிராணப்பொடியும் மந்திரமும்.	624
வேறு ஆக்கிராணமும் மந்திரமும்.	"
விஷத்தை ஏற்றி இறக்க மாத்திரைக்கோல்.	"
அரவு கடியாதிருக்கக் கடகம்.	625
தேளுக்குப் பாச்சுவித்தை.	"
அரவுமுதலிய விஷங்களை நிவிர்த்திக்கக் கருட பஞ்சாக்ஷரவிஞ்சை மந்திரங்கள்.	626
கருடன் மூலமந்திரம்.	627
தூதுலக்ஷணம்.	628
முப்புப் படலம்.	631
கிண்ணிச் சுண்ணம்.	632

பொது விபரங்கள்

லோக மரணம்.	"
எரிப்புத் திட்டம்.	"
புடத் திட்டம்.	"
ஊதுத் திட்டம்.	633
கல்வங்களின் குணம் கருப்புக்கல்.	"
சிவப்புக்கல்.	"
பச்சைக்கல்.	"
மஞ்சள்நிறக்கல்.	"
வெள்ளைக்கல்.	"
கல்வம் சுரண்டியின் குணம்.	633
குப்பி.	634

Koviloor Digital Library

மூசை. 634
எரு. "
இயற்கை எரு. "
செயற்கை எரு. "
நாட்டு எரு நான்கு வகைப்படும். "
விறகின் வகைகள். ஆவாரை, சிற்றாமுட்டி. 635
உசில், இலந்தை. "
இலுப்பை, புளி. "
வேம்பு, பூவரசு, அரசு. "
நுணா, வன்னி, மாவிலிங்கம். "
நெல்லி, வேம்பு, விலா. "
உசில், வேல், கொன்றை, வேங்கை. "
வேல், வேங்கை. "
தீயினளவு. 636
தீபாக்கினி. 636
கமலாக்கினி. "
கதலியாக்கினி. "
காடாக்கினி. "
புடம். "
ஊது முறைக்கு துருத்தி வகை. 637
நிறைகள் - நிறுத்தலளவை. "
முகத்தலளவை 638
வேறு முகத்தலளவை. "
பழங்கால வழக்கிலிருந்த மருத்துவ அளவைகள். "
மருந்து அளவு அட்டவணை. 639
வயது. "

முற்றும்

Koviloor Digital Library

உ 1

ஓம்.

உயிர் காக்கும் சித்த மருத்துவம்

கடவுள் வணக்கம்.

கஙகைசடைக் கணிந்தபர னீன்ற தந்திக்
கணபதியின் றாள்வணங்கிக் கருத்துள்வைத்தே
யெங்கள்பிரான் வேல்முருகன் பாதம் போற்றி
யெனையாளும் பராசத்தி யிருதாள் போற்றி
மங்களமாந் தத்துவநூ லாயுள் வேத
மாமூலி வாகடங்க ளாய்ந்து நோககி
யங்கமுறு மிந்நூலை வசன மாக
வனைவர்களு மனமகிழ வறைகு வேனே.

பிரணவவிலக்கணம்.

கைலையங்கிரியிற் பேரொளியாய், அகண்டபரிபூரணமாய், எங்குந்தானாய் விளங்குவது பிரணவசொரூபியாகிய பரமசிவமேயாம்.

இவ்வாறு ஞானசோதியாய் விளங்கிநின்ற பரமசிவம் பரகுடிலை. பரநாதம், பரவிந்து எனவும்படும்.

மேற்கூறிய கைலைக்கு தற்பரம், சிற்பரம், பரம், பராபரம், பரவெளி, பரலோகம், நாதாந்தம் என்றும் பெயர்.

பராசத்தி முதலிய பஞ்ச சத்திகளாகிய அருள், சூரியனுங் கிரணமுமபோல அச்சிவத்தோடு பிரியாமலிருக்கும்.

சிவம சத்தியைக கூடினாற் பிரபஞ்சந் தோன்றும; சததி சிவத்தைக்கூடினால் பிரபஞ்சமொடுங்கும்.

படைப்பாதியான ஐந்தொழிற்படுத்தும் பரமசிவன், பராசத்தியினின்று சிற்பரமென்ற அகண்ட ஆகாயவெளியையும், அதிற்றோன்றுதலு மொடுங்குதலுமாயிருக்கிற மூர்த்தமெட்டையும், கணபதி வல்லபையையும், பஞ்சகருத்தாக்களையும், அவர்களுக்குரிமையான சத்திகளைநதையும, அண்டபிண்ட சராசரங்களையும் சிருட்டிததுச் சாக்ஷாதகாரமாய் விளங்காநிற்கும்.

Koviloor Digital Library

பஞ்சகருத்தாக்கள், பரமசிவத்தைக் கருதி ஆதியிலே ஓம் என்றார்கள். ஓம் என்பது சூக்குமபஞ்சாட்சரமாம். இதன் பதப்பொருள் பரமசிவமேயாம்.

அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து ஆக இவ்வைந்தும் வியஷ்டிப்பிரணவமாம். இவ்வைந்திலுமிருந்து பிறந்த சமஷ்டிப்பிரணவமே ஓங்காரமாம்.

அகாரம் சிவமூலம்; உகாரம் சத்திமூலம்; மகாரம் சிவசத்திமூலம்; விந்து, நாதம் ஏகவஸ்துவாம்.

அவ்வென்பது அநாகதம், உவ்வென்னுமிடத்திலே நாதமிழிந்தது, மவ்வென்னுமிடத்திலே விந்திழிந்தது.

அகார, உகார, மகாரங்களுக்கு நாதவிந்துக்களே ஆதாரம்; அந்த நாதவிந்துக்களுக்குப் பிரகிருதியே ஆதாரம்; அந்தப்பிரகிருதிக்குப் பிராணனே ஆதாரம்; அந்தப் பிராணனுக்கு லிங்கமே ஆதாரம்.

ஆதலா லிவைகளெல்லாம், பிண்டாகார சிவசத்திவடிவமாகி ஓங்காரமாயிற்று.

மேற்சொல்லிய வியஷ்டிப்பிரணவத்தினுள் அகாரப்பிரணவத்தில், அக்கினி இருக்குவேத முற்பத்தி; அதிதேவதை உருத்திரன். இவையெல்லாம் அகாரத்தில் லயமாம்.

இரண்டாவதுமாத்திரையான உகாரப்பிரணவத்தில், அந்தரவாயு, எசுர்வேத முற்பத்தி; அதிதேவதை மகேசுவரன். இவையெல்லாம் உகாரத்தில் லயமாம்.

மூன்றாமாத்திரையான மகாரப்பிரணவத்தில் ஆகாயம், சூரியன், சாமவேதம் உற்பத்தி; இவையெல்லாம் மகாரத்தில் லயமாம்.

சோதி சொரூபமாய் விளங்காநின்ற இந்த அகார உகார மகாரப்பிரணவத்திலிருந்து இருக்கு, எசுர், சாமமென்ற மூன்று வேதங்களும், மற்ற உபவேதங்களும் பிறந்தபடியால் பரமசிவமும், பரம்பதமும், சுருவமந்திரலோகமும், அண்டபிண்ட சராசரமும் ஓங்காரமே.

பஞ்சமகாபூதங்களும், இருசுடரும், ஆன்மாவும், மனுஷ்யாதி ஜீவஜெந்துக்களும் ஓங்காரத்திலிருந்து தோன்றி விளங்குகின்றன.

புருவமத்தியில் அகாரமும், கண்டத்தின் உகாரமும், இதயத்தில் மகாரமும் பொருந்தியிருப்பதால் அம்மூன்று தானங்களும் ஜீவநிலையாயும், பிரமநிலையாயுமிருக்கின்றன. ஆதலால், தூலசூட்சுமசரீரம் பிரணவப்பிண்டமெனக்கூறப்படும்.

இந்தச் சரீரத்தில் ஓங்காரமூலவட்டக் குண்டலியிலிருந்து உதிக்கின்ற ஆவியே பிராணவாயு. அதற்கு ரவி, மதி, சுடர், இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்றும் பெயர்.

Koviloor Digital Library

சூக்குமமானது மயில்முட்டையிற் காணும் வண்ணம்போலத் தூலத்தில் துலங்கிக் கொண்டிருக்கும். இதுவே லிங்கசரீரம் புரியட்டதேகமாம்.

இந்தச் சூக்குமசரீரத்தில், விஞ்ஞானமயமாயும், பரிதி, மதி, தீபச்சுடர், ஜீவரத்தினம் போலும் பிரகாசித்துக்கொண்டு முற்கூறிய மூன்று நிலைகளிலும் போக்குவரவாயிருக்கின்ற வியாபியாகிய ஆன்மாவிடத்தில், பிரணவக்கடவுள் எள்ளினிடத்து எண்ணெய்போலும், தண்ணீரினிடத்து உப்புப்போலும், பாலினிடத்து நெய்போலும் வியாபித்திருப்பார்.

ஆன்மாவானது அசித்தைப்போல், உற்பத்தி விநாசமின்றி, ஓரேவிதமாயுளதாய், தேகம் நீங்கும்போது சூக்கும சரீரத்துடன் புறப்பட்டு லோகாந்தரத்திற்குப் போக்குவரவுடைத்தாய், பாவபுண்ணியத்துக்குத் தக்க பயனை அடையும்.

அது அநாதிமாயையிலே அநாதிகாலமேதொடங்கி அஞ்ஞானத்தாலே செய்யும் கருமங்களுக்குத் தக்கதாக விசித்திரமாய் நானாவிதமா யிருக்கின்ற எண்பத்துநாலு லட்சம் யோனிபேதத்தில் அனந்த ஜென்மமெடுத்து, அனந்த ஜென்மத்திலே கருமானு குணமாய்வருகிற சுக, துக்க, போக, போக்கியங்களை, ஞானேந்திரிய கன்மேந்திரிய வழியாய் அனுபவிக்கும்.

ஜீவர்களுடைய உயிருக்குளுயிராயும், அறிவுக்குளறிவாயும் வியாபித்து அவரவர்களுடைய கன்மத்துக்குத்தக்க பயனை ஈட்டி, அவர்களை அனுபவிக்கச்செய்து, சாட்சிமாத்திரமாயிருக்கின்ற சிவபெருமான் அநுக்கிரகஞ் சிந்திக்குங்காலை, அவர்கள் ஜெனன மரண துக்கசாகரத்தி லுழலாது பரமபதமடைவார்கள்.

சாட்சாத்காரமாய் விளங்காநின்ற பரமசிவபதமடைதலே முத்தி: ஆணவமேலீட்டால் சிவனை மறந்து மோட்ச சாம்பிராச்சியத்தில் மனஞ்செல்லாதவர்களுக்கு அந்தப் பதங் கிட்டாது.

பிரபஞ்சமாயையிற் சென்று, அதிலே அழுந்திக்கொண்டிருக்கிற மனமான மத்யானையைச் சிவபெருமானிடத்துக்குத்திருப்பி, அந்தத்துறையிலே நிற்கும்படி அதைச்சுருக்கிட்டுச் சிக்கெனக் கட்டி ஓம்சிவாயநமவென்று, சிவத்தியானதாரணையைக் கைவிடாது சாதித்து, வியோமபரிபூரணத்தில் மேவிநின்றால், அபரோட்சஞானமுண்டாம்; பிரபஞ்சகோஷ்டி விட்டுப்போம்.

சிவயோக நிஷ்டை

சிவவேடம்பூண்டு, சுக ஆதனத்தில் மனமொன்றி ஏகாந்தமாயிருந்து புருவத்தடி முனைக்கீழ் அண்ணாக்கென்னும் பவளநிறம்போன்றிருக்கும் திரிகோண இரந்திரத்திற்கு நேரே மனதைநிறுத்திப் புருவநடுச்சுழியை மனக்கண்ணால் நோக்கி அங்கென்று ரேசித்து வங்கென்று கும்பித்து சிங்சிவாயநமவென்று பூரித்துப் பிராணாயாமஞ்செய்து மௌனமுற்று நிஷ்டைபுரிந்தால் மூலகுண்டலியிலிருந்து உதிக்கின்ற பிராணவாயுவானது வெளியிற்பாயாது பிரமரந்திரத்திற்கேகிப் பிடரிவழித் தண்டுலத்தமர்க்கூடே

Koviloor Digital Library

சென்று தன்னுள்ளே போக்குவரவாயிருக்கும். மதியெனுமவாயுவே அமுதமாகி அது உடலுக்குத் தாரகமாம். இருகதிருமொன்றான சுழிமுனைத் திரிகோண நடுவட்டத்தில் குண்டலிசத்தி விசுவரூபமாய்ப் பரிதிமதியுதயம்போற் பிரகாசித்துக்கொண்டிருக்கும்; இதற்கு ஜீவான்மாவென்றும் பெயர். காயசித்தி, யோகசித்தி, ஞானசித்தி, அஷ்டமாசித்தியுமுண்டாம்.

இப்படிப்பட்ட மூத்தான்மா தான் கூடியிருந்தனுபவித்த உடல் தனக்குத்தானே ஒரு சிறைமனையாகத் தோன்றி ஒரு பரமஆசாரியனைத் தேடுங்கால் தான் செய்த தவபலத்தால் சிவபுண்ணியம் வந்தெய்தப் பரமசிவன் மானைக்காட்டி மானைப்பிடிப்பது போல ஞானாசாரிய மூர்த்தமாய்க் காளகண்ட திரிநேத்திரமொழித்து மானிடச்சட்டை சாத்தி எழுந்தருளி அந்த அன்பனிருக்கும் ஊரையும் அவன் பெயரையும் விசாரித்து அவனைத் தேடிக் கூடி அவனுக்குச் சத்தியோ நிர்வாணதீட்சையும் சாம்பவதீட்சையும் செய்வித்து ஞானத்தைப் பதிப்பித்து இனி ஜெனனமெடாதபடி அருட்கண்சாத்துவர். தாம்பிரத்தின் காளிதமானது இரதகுளிகைபட்டமாத்திரத்தில் நீங்கத் தாம்பிரம் கனகமாய் விளங்குவது போல் ஆன்மாவானது பரமசிவத்தின் அநுக்கிரகத்தாற் பாசத்தினீங்கிச் சின்மயமாய்ப் பரமபதமடையும்.

இவ்வாறு பரமபதமடையக் கருதாமல் பிரபஞ்சமாயையில் அழுந்தும் ஆன்மாக்கள் பிராரத்த கன்ம சஞ்சிதத்துக்கீடாகப் பஞ்சபூத விஷய உபாதிகளை மேவிக் கொண்டு லிங்கசரீரத்தோடொத்து மோட்சத்துக்கும் நரகத்துக்கும் நடுவாயுள்ள பூமியின்கண் அனந்த ஜென்மமெடுத்துப் பிறந்து இறந்து உழலும்.

பிரணவ இலக்கணம் முற்றிற்று.

பஞ்சாக்ஷரவிலக்கணம்

பஞ்சாக்கரமானது ஓம் என்னும் பதத்துடன் பொருந்திய சிவாயநம என்னும் ஐந்தக்கரங்களாம்.

இந்த ஓமென்னும் பதத்தின்பொருள் பரமசிவமேயாம். மற்றைய வைந்தெழுத்தின் பொருள் அந்தச்சிவத்தின் ஈசானமுதலிய சத்திகளைந்துமாம். இந்தச் சத்திகளைந்துஞ் சிவனுடைய பஞ்சமுகமெனவும் கூறப்படும். இந்தப் பதங்களாலே அந்தப்பொருளைக் கருதி உச்சரிக்கில் ஆன்மாக்கள் போகமோட்சமிரண்டையும் அடைவார்கள்.

நகாரம் பிருதிவி பிரமபீஜமாகவும், மகாரம் அப்பு மாலின்பீஜமாகவும், சிகாரம் தேயு உருத்திரபீஜமாகவும், வகாரம் வாயு மகேசுவரபீஜமாகவும், யகாரம் ஆகாயம் சதாசிவபீஜமாகவும் விளங்கும்.

பஞ்சபூத உடற்சக்கரம்

பிருதிவிக்கு நாற்கோணம், அப்புவுக்கு மூன்றாம்பிறைக்கோணம், தேயுவுக்கு முக்கோணம், வாயுவுக்கு அறுகோணம், ஆகாயத்துக்கு வட்டமாம்.

Koviloor Digital Library

பஞ்சபூத நிறம்.

பிருதிவி பொன்மை, அப்பு வெண்மை, தேயு செம்மை, வாயு நீலம், ஆகாயம் புகைநிறமாம்.

பஞ்சபூத உயிரெழுத்து.

பிருதிவிக்கு அகாரம், அப்புவுக்கு இகாரம், தேயுவுக்கு உகாரம், வாயுவுக்கு எகாரம், ஆகாயத்துக்கு ஒகாரம்.

பஞ்சபூத பீஜாட்சரம்.

பிருதிவிக்கு லம், அப்புவுக்கு வம், தேயுவுக்கு ரம், வாயுவுக்கு யம், ஆகாயத்துக்கு ஹம்.

பஞ்சபூதஇலக்கம்.

பிருதிவிக்கு (11) அப்புவுக்கு (10) தேயுவுக்கு (8) வாயுவுக்கு (19) ஆகாயத்துக்கு (3) ஆக இலக்கம் (51).

பஞ்சசத்திகளின் மகிமை.

இந்தச் சத்திகளைந்தும் எழுத்தைந்தாகி, கலைக்கியான விஞ்சையாகி, இதமகிதமிரண்டுக்கும் முன்னேயாகி, ஒடுக்கம் எழுவகைத் தோற்றமாகி, பூதமைந்து பொறி புலனுமாகிப் பிஞ்சு, காய், பழமுமாகிப் பல்லாயிரங்கோடி அண்டங்களாகியும் நிற்கும்.

ஐந்து முகம் ஐந்தெழுத்தின் மகிமை.

ஐந்தெழுத்தும் ஒவ்வொன்றிற்கு இருபத்தைந்தாக நூற்றிருபத்தைந்து அக்கரமாய் விரிந்து கலைக்கியான விஞ்சையாகும்.

நமசிவயவென்னும் பதத்தின் நடுவெழுத்தைப்பிடித்து மாற, சிவயநம வென்ற பதமாகும், அந்தப் பதத்தின் நடுவெழுத்தைப் பிடித்துமாற, யநமசிவவென்ற பதமாகும், அதின் நடுவெழுத்தைப் பிடித்துமாற, மசிவயநவென்ற பதமாகும், அதின் நடுவெழுத்தைப்பிடித்து மாற, வயநமசியென்ற பதமாகும்.

இவ்வாறே மசிவயநவென்னும் பதத்தையும், சிவயநமவென்னும் பதத்தையும் வயநமசியென்னும் பதத்தையும், யநமசிவவென்னும் பதத்தையும், அந்தந்தப்பதத்தின் நடுவெழுத்தைப் பிடித்துமாற, ஒவ்வொன்றிற்கும் (25) அக (125) மந்திரங்களாகும்.

ஆறுவரை நேரேகீறி ஆறுவரை குறுக்கேகீறி (25) வீடுகளுள்ள ஐந்து சக்கரங்களமைத்து ஒவ்வொன்றிலும் மேற்சொல்லிய பஞ்சாக்கரத்தையும் உயிரெழுத்தையும் பீஜாட்சரத்தையும் லக்கம் (51)யும் அடைக்கவும். இந்த ஐந்தும் பஞ்சபூதச் சக்கரங்களாகவும், அஷ்டகருமச் சக்கரங்களாகவும், சிதம்பர சக்கரங்களாகவும் விளங்கும்.

Koviloor Digital Library

ஓம், ஆம், ஊம், ஸ்ரீம், ரீம், அங், ரீங், ஸ்ரீங், சிவாய்நமவென்று சிவத்தியானஞ்செய்து நிஷ்டைகூடும் பெரியோர்கள் தன்னையுந் தலைவனையுங் கண்டு மகிழ்வுற்றுப் பரமபதமடைவார்கள்.

வேறு.

சுத்தகுண நிர்க்குணப் பொருளாயிருக்கின்ற பஞ்சாக்கரத்தைப் பிரணவத்துடன் கூட்டித் தியானித்து மௌனமுற்று மனதை ஒருநிலைப்படுத்தி நிஷ்டைகூடினால் இருகதிரும் ஒன்றான முச்சுடர் முனைப்புருவ நடுச்சுழியில் ஜோதி பிரகாசிக்கும்; ஆத்மதரிசனமும் பதிதரிசனமும் உண்டாகும். அப்போது ஜீவசைதன்னியம் பாசஇருளிலிருந்து நீங்கிப் பஞ்சமுகங் கலந்திருக்குஞ் சிவனைக்கூடிச் சிவானந்தத்தை அனுபவிக்கும்; சூரியனுங் கிரணமும் போலச் சிவத்தைவிட்டு நீங்காதிருக்கின்ற பஞ்சசத்தி (தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், ஈசானங்)களும் அந்தச் சிவத்துக்குத் திருமுகங்களாம். இந்தத்திருமுகங்களிற் செபிக்கும் மந்திரங்களை ஒவ்வொரு முகத்துக்கு (25) ஆக மேலோர் உரைத்திருப்பதை இதனடியில் விவரிக்கலாகும்.

தற்புருஷமுகத்தில் (25) மந்திரத்தில் வரும் நல்வினை தீவினை.

சிவபஞ்சாட்சரம்.

யநவசிமவென்று செபிக்கில் அகோரமாகும் உற்பனமாம்.

சௌமிய பஞ்சாட்சரம்.

அங், சிவாயநமவெனில் காதலிக்கப் புத்திரசந்தானமுண்டாம்.
அரி, ஓம், நமசிவாயவெனில் தேகத்தில் நோயணுகாது.
அம், கிலி, சிவாயநமவென்றால் யோகசித்தியுண்டாம்.
லங், சிவாயநமவென்றால் ஆயுள் விருத்தியுண்டாம்.
இம், ஏ, சிவாயநமவென்றால் ஓடாத பூதங்கள் ஓடும்.
ஓம், கிலியும், நமச்சிவாயவென்றால் அரசர்கள் வசியமாவார்கள்.

ஆயிபஞ்சாட்சரம்.

மிரீயும், ஓம், நமசிவாயவென்று செபிக்கில் சிவாகமமிருபதெட்டின் பயனைச் சொல்லக் கடாட்சமுண்டாம்.
ஐயும், நமசிவாயவெனில் புத்திவித்தையுண்டாம்.

அமுதபஞ்சாட்சரம்.

சிவநமசிவாயவென்பதே அமுதபஞ்சாட்சரமாம்.
நமசிவாயவெனில் நினைத்தவண்ணம் சித்தியாகும்.
நமசிவாயஊம், நமசிவாயவெனில் குளிர்தோஷம் நாசமாகும்.
நமசிவாய, சூலிங, நமசிவாயமெனில் நாட்டில் விள்ளூமி நல்லபலனைத் தரும்.

Koviloor Digital Library

நமசிவாயமவ்வும், நமசிவாயவெனில் அஷ்டநாகமுதலிய பாம்புகளின்விஷந் தீரும்.
ஓம், குசம், பிரேம், சிவாயநமவெனில் பசு பாக்கியமுண்டாம்.
கண், சி, மிரி, சிவாயநமவென்றால் பந்தனம் கள்ளர்வாரார்.
ஓம், ஆம், ராம், சிவாயநமவெனில் மோட்சமெய்தும்.
அரிகா, நமசிவாய, ஓமெனில் தேகசித்தியாம்.
அவ்வும், நமசிவாயவென்றால் கயிலைவாழ் காயசித்தியுண்டாம்.
ஓம், நமசிவாயவெனில் சத்துருவின் காசினியை வெல்லலாம் புகழுண்டாம்.
லங், கிரியும், சிவாயநமவென்றால் தொல்லுலகிலே தானியங்கள் பெருகவுண்டாம்.
ஓம், சிரியும், ஓம், நமசிவாயநமவெனில் கொடுத்தவரம் பலிக்கும்.
ஓம், ஊம், சிவாயநமவெனில் குஷ்டம் பதினெட்டுந் தீரும்.
கிலீயும், சிவாயநமவெனில் இலட்சுமிகளெல்லாம் வசியமாம்.
லிங், நமசிவாயவெனில் மெலிந்த தேகம் பாரிக்கும்.
ஓம், அங்கிஷ சிவாயநமவெனில் தழல்வளர்த்துப் பிரவேசமாடலாம்.

தற்புருஷ முற்றிற்று.

அகோரமுகத்தில் வரும் நல்வினை தீவினை.

துந்தும், மவயநசியென்றால் வித்துவேடணையாகும்.
ஓங், கங், மவயநசியென்றால் பூதலத்தில் அஷ்டசித்தியுண்டாம்.
ஓம், மங், சங், சிவநமவென்றால் அன்னசித்தியுண்டாம்.
கிலிங், வங், சிவாயநமவென்றால் ஜலஸ்தம்பமாகும்.
பரப்பிரம, ஓங், யங், சிவாயநமவெனில் தரணிதனில் ரவிகண்டந்தோற்றும்.
சர்வ, சர்வ, நமசிவாயவென்றால் வருணஞ்சலம் செல்வமிகும்.
ஓம், மங், சிவாயநமவென்றால் சமுத்திரங்கள் நதிகள் வற்றும்.
செங், செங், செங், செங், சிவாயவென்றால் தரணியில் எல்லோரும் வசியமாவார்.
ஓங், மங், செங், சிவாயநமவெனில் விஷங்கள் தம்பித்துக்கொள்ளும்.

பிரமரிஷி பஞ்சாக்ஷரம்.

ஓங், அங் சிவாயநமவென்றோதக் கடல்களைக் கடக்கலாகும்.
அங்கிஷ, ஒ, சிவாயநமவெனில் வானிலுள்ளதெலாங் காணும்.
ஓங், சங், சிவாயநமவெனில் தேவகன்னிகள் வலியவந்து சேருவார்கள்.
லம், அங்கிஷ, சிவாயநமவென்றால் முக்குணத்தை வெல்லலாம்.
டங், சிவச்சனாயு, சிவாயநமவென்று தியானிக்கில் பாதாளகெவுனமாகும்.
ஒங், ஐயும், சிவாயநமவெனில் நால்வேதம் ஆறுசாஸ்திரமறியலாம்.
லிங்க, லிங்க, ஓம் சிவாயநமவெனில் பொன்னுலகங் காணலாம்.
சங், வங், சிவாயநமவெனில் ஜலஸ்தம்ப மெழுப்பலாகும். நினைத்ததெல்லாம் உருவாய்நின்று ஏவல்கேட்கும்.
ஓம், சிவாயநமவெனில் அஷ்டகருமம் சித்தியாகும்.
சிரியும், சிரியும், சிவ, சிவா, ஓமெனில், மேதினியிற் கேட்டதெல்லாங் கொடுக்கும்.

Koviloor Digital Library

பிரங், பிரங், குசாப, சிங், சிவாயநமவெனில் காய்கனிகள் பறிக்கும்படி மரங்களெல்லாம் வளைந்துகொடுக்கும்.
மங், மங், நங், சிவாயநமவெனில் நாளிலே பொசிப்பதனை வெறுக்கலாகும்.
வங், லங், வங், லங், சிவாயநமவெனில் மழையில் நனையாமல் நடக்கலாம்.
அகார, ஓம், ஙங், ங், ஙங், சிரியுஞ், சிவாயநமவெனில் தேவனைக்காணலாம்.
இரிங், சிறிங், சிவாயநமவெனில் ஆறுண்டாம் பிரவாகமோடும்.

சமுத்திர பஞ்சாக்ஷரம்.

சி, யம், சிவசிவா, உங், உங், சிவாயநமவெனில் கடலிலுருவோடும்; நிறுத்தினாலங்கே நிற்கும்.
சங், சங், யவசிநமவெனில் ஜலத்தில் நடக்கலாம்.

அகோர முற்றிற்று.

வாமதேவ முகத்தில்வரும் நல்வினை தீவினை.

பிலையும், பிலையும், சிவாயநமவெனில் அடங்காத இயக்கி வந்தடிக்கீழ் வீழ்வாள்.
றுங், ரவ்வுஞ், சிவாயமெனில் வாமத்தைப் பூசிக்கலாம்.
ஓங், கங், கங், ஐயும், சிவாயநமவெனில் தேவர்களைக் காணலாம்.
ஐயும், சிவாயநமவெனில் தேவவிமானம் வந்துநிற்கும்.
உங், தெங், கெங், ஓங், சிவாயநமவெனில் தருக்கள் வந்துதவியாகும்.
கங், கங், ஊங், கங், நசி, ஓங், என்றால் காமதேனு உதவிசெய்யும்.
செங், செங், சிவாய, வசங், நமவெனில் தேவசபை காணலாம்.
ங், ஙுங், சிங், ஓநமவென்றால் சத்தி முன்வந்துநின்று இடர்தீர்த்துக் காப்பாள்.
ரவிகோடிகிரியும், சிவாயசிவா எனில் விஷ்ணுவின் மாயைகாணும்.
சங், கிரியும், தங், சிவா, நமவென்றால் ஆதித்தன் ரதங்காணும்.
உங், கங், சவ்வும், சிவாய, ஓங், ஓங், எனில் ஆத்மாவின் ஒடுக்கங்காணும்.
டெங், டெங், ஓங், சிவாயசுவாகா, சுவாகாவெனில் பூமிக்குள் அடக்கங்காணும்.
ங், ங், ங், சிங், சிவாயநமவென்றால் இருண்டகடல் வெளியாய்க்காணும்.
சிரியுஞ், சிரியும், ஊங், சிவாயநமவென்றால் தேகத்தில் நடனஞ்செய்யும் நாயகனைக் கருவிக்குட் கண்ணாற்காணலாம்.
கெங், கெங், அவ்வுஞ்சிவாயநமவென்றால் ஆகாசக மனமாகும்.
சிரியும், கோஷயு, கோஷயு, சங், சதாசிவாயநமவெனில் வேதமதைக்காணலாம்.
லங், அங்கிஷெ, ஊங், சிவாயநமவெனில் நினைத்தவிடத்துக்குச் செல்லலாம்.
ஓங், நங், நமசிவாயநமவெனில் சித்தாந்தந் தெளிவாய்த்தோன்றும்.
கிலியும், சிங், சிங், சிவாயநமவெனில் அடுக்குகள் ஒடுக்கங்காணும்.
கங், ஊங், சிஷ சிவா்கர, மம், சிவாநந்த, சிவசிவாயநமவெனில் அரவு கடித்தால் விஷமில்லை; விஷமிறங்கும்.
சவ்வும், ஓம், சிவாயசுந்தராயி, என்று சாற்றச் சிறுபெண்கள் பெரியோராவார்கள்.
சிவ, ஓம், ரெயும், சிவாய, ஓம்நமவெனில் சமர்த்தரெல்லாம் ஊமையாவார்.
கிலியும், மங், பங், சிவாயவென்று நோக்கினால் இந்திரனை யழைக்கலாம்.

வாமதேவ முற்றிற்று.

Koviloor Digital Library

சத்தியோசாத முகத்தில்வரும் நல்வினை தீவினை.

பிறங், பிறங், சிவாய, ஓங்: பிரசுவாகாவெனில் எழுவகைப்பிறவி நீங்கும் பிரேதத்தை எழுப்பலாம்.
சிவாய, பேதனமெனில் சத்துருக்கள் எடுபட்டோடுவார்கள்.
உங், உங், சிவாயநமவெனில் காயசித்தியாகும்.
இருட்டின்ன, ஓம், சிவா, நமவெனில் அண்ணல் முன் வரையை யெடுத்ததுபோல் பெலமுடைத்தாய் வாழலாம்.
எங், இங், ஓங், சிவாயநமவெனில் கண்ணோய்தீரும்.
யங், வங், யவசிமவெனில் வரைகளைச் சிருட்டிக்கலாம்.
சிவாயநமவெனில் அரனுடனே போர்வெல்லும்.
அங், இங், சிவாயஓமெனில் தேவேந்திரன் ரதம்வந்து முன்னே நிற்கும்.
ஓங், ஓங், சிவாயஓங் எனில் வன்னியின் நாக்குத் தோற்றும்.
சியும், சியும், சிவாயசி, ஓம்கிலியுமெனில் விடத்தை வெல்லும்.
ஏங், நங், அங், சிவாயநமவென்றால் மாற்றான் அஞ்சியோடுவான்.
ஓங், சிங், சங், சிவ, சிவ, சிவாயநமவெனில் மேகமண்டலத்துக்குச் செல்லலாம்.
ஓங், இங், சங், சிவ, சிவா எனில் தென்றலென்ற மாருதந் தெளிந்துகாணும்.
இங், குருங், கிலியும், சிவாய ஓமெனில் தேவேந்திரன் ஏவல்கேட்பான்.
ஓங், நங், சிவாயநமவெனில் இறந்தவர்கள் எழுந்திருப்பார்கள்.
ஸ்ரீயும், உங், சிவாயநம, வென்று தியானித்தோர்கட்கு மோட்சவீடெய்தும்.
அங், ஊங், சிவாயமென்றால் பரிமளங்கள் எங்கும் வீசும்.
இஷங், இஷங், சிவாய, ஓங், எனில் எங்கும் மங்களத்தோற்றமாயிருக்கும்.
யங், கிலியும், சிவ, ஓம், நமவென்று தியானிக்கில் வெய்யோன் திக்கென்ற தோற்றங்காணும்.

நங், மங், அங், சிங், வங், எங், சிவாயநமவெனில் ஒளிநயனத்தோற்றத்திலுண்மை காணும்.

சியுங், உங், உங், சிவ, சிவா, சி, யோவென்று தியானிக்கில் புகழோசைநிற்குமிடங் காணலாகும்.

ஓங், சிங், சிவாயசிங், சிங், ஓமெனில் அறுசுவையைக்காணலாம்.

கிலாங், கிலியும், கிலிவுங், கிலிவும், கீலரா, சிவாயநமவென் றுருச்செபிக்கச் சிதம்பர சொரூபமாகும்.

சத்தியோசாத முற்றிற்று.

ஈசான முகத்தில்வரும் நல்வினை தீவினை.

இரி, யங், நவு, ஓநமசிவாயவெனில் ஆளழைப்புவருவார்.
சங், சியும், சிவமயநமவெனில் ஆத்மதெரிசனமுண்டாம்.
ஆங், சிவ, சிவாய, அவ்வுமெனில் சந்திராதி நல்கும்.
சியுங், உங்சிவாய, ஊங், யம், நம், என்று ஓத, தத்துவத்தின் தோற்றமெல்லாங் காணும்.
நமசிவாயநமா, ஓங், சி, ஓமென்றால் மூலாதாரங்காணும்.

Koviloor Digital Library

யங், சிங், சிவாயநமாவெனில் சுவாதிட்டானந்தோன்றும்.
சிங், ஐயுஞ், சுவாகாவெனில் பூரகத்தின் உறவுகாணும்.
லங், லங், வங், சிவாயவென்று துதிக்கில் அநாகதத்தின் உண்மைகாணும்.
வங், சிங், சிவாயநமவெனில் அநாகதத்தை மகிழ்ந்துகாட்டும்.
ஊங், ஒங், சிவாயநமவென்றால் விசுத்தியைக்காணலாம்.
சிங், சிங், சிவாயவென்றால் பேரின்ப ஆக்கினையைக் காணலாம்.
மங், வங், சிங், ஓமென்றால் அண்டவடுக்கறியலாம்.
ஐயும், கிலியும், சவ்வுமென்றால் மேலான முனிவருடையதோற்றங்காணும்.
கிலியும், சிரியும், சிவாயவென்றால் பிரமாவைக் காணலாம்.
மங், நங், சிவ, செய, ஒங், எனில் குருபாதம் சித்திக்கும்.
வங், வங், சிங், ஒங், சிவாயவென்றால் சினத்ததொருகாடு கடுந்தீயாய்வேகும்.
நங், மங், சிங், வங், யங் என்று விதையை மண்ணிற்புரட்ட உடனே முளைத்துத் தானேகாய்க்கும்.
சிங், சிங், சிவாயவெனில் திரிகால ஞானமுண்டாம்.
இங், எங், உங், சிவாயவெனில் பலவிதமாய்த்தோற்றுகிற மாயைபோம்.
சிவாயநம, ஓமென்றால் வரைகளையெல்லாந் தூளாகப் பொடிக்கலாம்.
நமசிவ, ஓமென்றால் ரவியும் சோமனும் ஒன்றாகும்.
வயசிநம, ஓமென்றால் மறலிவந்து முன்னின்று வார்த்தை கேட்பான்.
சிவாயநம, ஓமெனில் மனோன்மணி லாசிலில்வந்து காப்பாள்.
நயவசிமாசுவாகா என்று ஓதிட இலட்சுமிவந்து குளிகையீவாள்.
வங், சிங், யங், சிவாயவென்றால் அறுபத்துநாலு சித்துமெய்தும்.
வங், சிங், யங், சுவாகாவென்றால் பூலோகத்தரசர் வந்து போற்றிநிற்பார்.
யங், சங், சிங், ஓம்சிவாயநமாவெனில் கனதன ராசர்கள்வந்து வணங்குவார்கள்.

ஈசான முற்றிற்று.

சத்திசிவதீட்சை விவரம்.

முதற்றீட்சையாவது அவ்–சிவயநமாவென்று மனதொருமையுடன் மௌனமாய்த் தியானிக்கில் சிவசத்தி கருணையுண்டாம.

இரண்டாந்தீட்சை உவ்–வயநமசி, என்றால் இதயகமலத்தில் உலகெலாம்நிறைந்த ஜோதிகாணும்.

மூன்றாந்தீட்சை, லம்–யநமசிவ என்றால் இரவியும், மதியுமொன்றாகிப் புருவநடுச்சுழியில் கற்பூரதீபம்போல ஜோதிபிரகாசிக்கும்.

நான்காந்தீட்சை, சும்நமசிவய, வென்று இரேசித்துப்பூரித்து வாசிஏறி விண்ணொளியை நோக்கித் தியானித்தால் மெய்ஞ்ஞான சிவசொருபந் தானாயாவன்.

ஐந்தாந்தீட்சை, டம்–மசிவயந, வென்று மௌனமாயுன்னி வாசிச்சமரசப்படுத்தி, தியானித்து உருச்செய்தால் பஞ்சகருத்தா தரிசனமாகும்.

ஆறாந்தீட்சை, ரம்–சிம்–சிவயசிம், என்று முறையே இரேசித்துக் கும்பித்துப் பூரித்துத்தியானித்தால். மெய்ஞ்ஞானதீபம் பிரகாசிக்கும்; ஆறாதாரந்தோன்றும்; அமுதம் பாயும்; தேகசுத்தி, யோகசித்தியுண்டாம்.

Koviloor Digital Library

ஏழாந்தீட்சை, ஓம்நமசிவயவென்று மனங்குவிந்து வாசிபூண்டு புருவநடுச்சுழியை நோக்கித்தியானித்தால் அம்பலவர் அருளுண்டாம்.

எட்டாந்தீட்சை, தம், அம், ரங், ரீங், என்று மனதறிவாலுருச்செய்யத் தத்துவஞ் சுத்தமாகி அஷ்டசித்துண்டாம்; அடிநடுமுடியாய்நின்ற அம்பலவர் அருள்பெருகும்.

ஒன்பதாந்தீட்சை, கம், ரீங், சிம், சிவ என்று அந்திசந்தி பத்தியுடன் ஒருமனதாய்த் தியானிக்கில் நவக்கிரகஞ் சுத்தமாகி வேதாகமப்பொருள் விளக்கமாகும்.

பத்தாந்தீட்சை, அம், உம், சிவ, சிவ என்று தியானித்தால் கண்ணிறைந்த காட்சிகளெல்லாம் கண்ணிற்காணும்; 1008 இதழ்க்கமலத்திலிருந்தமுதம் பாயும்; அதையருந்தப் போதமாகும்.

பதினொன்றாந்தீட்சை, சிம், சிரீங், சிம் என்று புருவநடுச்சுழியை நோக்கி மனக்கண்ணாற் பார்த்து உருச்செய்யப் பஞ்சபூதம் நிலைதவறாமல் நிற்கும்; மதிபெருகி ரவியிற்கூடும்; சிவயோகியாவன்.

சத்திசிவதீட்சை முற்றிற்று.

சிவசத்தி தீட்சை விவரம்.

முதல் தீட்சையாவது அங், அங், அம், சிவ, என்று சுழுனையில் மனக்கண்ணை நாட்டித் தியானஞ்செய்தால் இருகதிரும் ஒன்றாகித் தன்னகத்தில், திருமாது விண்ணொளிபோலத் தோன்றிக் கண்ணிற்காணாத காட்சிகளைத் தோற்றிவைத்துப் பரமபதம் நல்குவள்.

இரண்டாந்தீட்சை, ரங், லிங், உம், சிவ என்று உருச்செய்தா ஆத்மதரிசனமாம்.

மூன்றாந்தீட்சை சிங், சிங், ரீங், சிங், என்று புருவநடுச்சுழியை மனக்கண்ணால் நோக்கித் தியானித்தால் சோதிபிரகாசமாகிக் கீழ்ஆறாதாரம், மேல்ஆறாதாரம், கண்ணுக்குத் தோற்றும்.

நான்காந்தீட்சை உங், ரீங், ரும், ரும் என்று உருவேற்றினால், பரிதிமதியொன்றாகி அக்கினிச்சுடர்போலப் புருவமத்தியிற் பிரகாசிக்கும்; தேகசித்தி, யோகசித்தி, ஞான சித்தியுண்டாம்; கணங்கள்முதல் தேவதைகள் வசியமாகும்; உலகத்தில் நடப்பவைகளுந் தன் அகத்திற்றோற்றும்.

ஐந்தாந்தீட்சை, லங், லங், நம், சம், ரீங், என்று ஒருமனதாயொருமையுடன் புருவநடுச்சுழியை நோக்கி வாசிகூடி உருச்செய்ய, அந்தச்சுழுனையிலே முக்கோணச்சுடர் நின்றிலங்கும்; திசைநாதங் காதிற்கேட்கும்; 1008 இதழ்க்கமலநடுத் திருநடனஞ் செய்யும்; சிவசத்தி கருணையுண்டாம்; மோட்சமெய்தும்.

ஆறாந்தீட்சை, கம், கம், கிலி, சிங் என்று ஏகநிராமயமாயிருந்து வாசியடங்கு நிலையறிந்து அண்டத்தேகினால் அங்கே ஜோதிமயமாயிருக்கும்;

Koviloor Digital Library

அந்தச் சோதியானது தூரதிஷ்டிக் காரியங்களைத் தன்னகத்தில் விளங்கச்செய்யும்.

ஏழாந்தீட்சை, சிங், சிம், சிம், ரீங், என்று மனங்குவிந்து புருவநடு மனக்கண்சாற்றி ஆதாரபூசைபண்ணி, பூரணமா யுருச்செய்தால் உச்சிமீதில் நிறைந்த ஞானசோதி பிரகாசிக்கும். அதிலிருந்து விளையாடும் வாலைபதங் கிட்டும்.

எட்டாந்தீட்சை, சிங், சிரீங், சிம், ரீங், என்று புருவநடுச்சுழியை நோக்கி உருவேற்றத் திருவேறிக்களையுண்டாம்; சிவசத்திகடாட்சமுண்டாம்; நினைத்தபடி சித்திக்கும்.

ஒன்பதாந்தீட்சை ரங், ரங், நம், ரீங், என்று புருவநடுச்சுழியை நோக்கி உருச்செய்ய, கிரகதோஷம் விலகிப் பரிதிமதியொன்றாகிச் சுழுனைக்குட் பாய்ந்து ஞானதீபம் பூரணமாய்விளங்கும்; அஷ்டமாசித்து விளையாடச் சிவசத்தியருளுண்டாம்.

பத்தாந்தீட்சை அங், சிரீங், வங், சிங் என்று தியானித்து, சிவயோகத்திருந்தால், இருகதிருமொன்றாகி, புருவநடுச்சுழியிற் காந்திமீறும், திசைநாதங் காதிற்கேட்கும். அந்தச்சுழுனைநடு அண்டகேசரியாள் சோதிபோலநின்று மாயையை நீக்கி இல்லகத்தைச் சுத்திசெய்து அமுதரசப்பானமீந்து பரமபதம் நல்குவள்.

சிவசத்திதீட்சை முற்றிற்று.

பஞ்சபூததேவதைகளின் மந்திரத்தியானசித்து
பிரம தியானம்.

நாற்கோணத்துள் விந்து, விந்துநடு ஓங்காரம், ஓங்காரத்தடி, நம், நங், கிலி, ரீங், என்றெழுதி அந்த மந்திரத்தால் உருச்செய்ய, பிரமா சரசுவதி தரிசனமாம்; சகலசித்துமுண்டாம்; சகலபிணிகளுந் தீரும்; புத்திரசந்தானமுண்டாம்.

விஷ்ணுதியானம்.

மூன்றாம்பிறைக்கோணநடு விந்துவிட்டு ஓங்காரக் கவசஞ்சாற்றி விந்துநடு மங், மங், சிரீங், ரீங், சிம் என்று வரைந்து நடுவெழுத்தைப் பிடித்துத்தியானிக்க விஷ்ணு லட்சுமி கடாட்சமுண்டாம்; சகலமும் வசியமாம்.

உருத்திரதியானம்.

முக்கோணநடு விந்து, வீந்துநடு சிரீ, சிம், கிலி எழுதி அந்த மந்திரத்தைத் தானே கடைதலையாய் மாறிச்செபிக்க மூலஅனல் மேலேசாடி, சுழுனைக்கேகிச் சோதிபோற் பிரகாசிக்கும்; சகலபீடைகளும் விலகும்; எதிரியைநோக்கிச் சினந்தாலவன் மாண்டுபோவான்.

Koviloor Digital Library

வேறு.

முக்கோணத்துள், சிம், அங், ரீங், என்று விபூதியில் வரைந்து மானதமாய்ப் பூசித்து அந்த விபூதியைக் கடாட்சித்தாலும், அல்லது எந்திரமெழுதிக் கட்டினாலும் சுரம் வயிற்றிலுள்ள கட்டி மற்றப் பீடைகளும் விலகும்.

வேறு.

விபூதியில் அம், சிங், கிலி, என்று எழுதித் தியானித்து அந்த விபூதியைக் கடாட்சிக்கப் பிசாசு, பித்தம் நீங்கும்.

மகேசுவரதியானம்.

அறுகோணத்தில் ஓம்—சிவயநம என்றும் அதனடுவில் வங், ரீங், சிம், என்றும் வரைந்து, ஓம்சிவாயநமவென்று தியானித்து விபூதிபோடச் சகலபீடைகளும் விலகும்.

மேற்கூறிய கோணத்தில் சடாட்சரத்தையும் அதனடுவில் ஐம், கிலி, சவ் என்றும் பதிந்து கோணமுனைகளில் சூலமிட்டு மேற்கூறிய மந்திரத்தாலேயே மானதமாய்த் தியானித்து எந்திரத்தைக் கையிற்கட்டி விபூதிகடாட்சிக்க, உடலிலுள்ள நீரிழிவு வெக்கைமுதலான வியாதிகள் விலகும்.

சதாசிவதியானம்.

விந்துநடு, பிரணவம் பிரணவநடு, யங், யங், சிம், சிவ, என்று வரைந்து வாசிகூடி உருவேற்றி விபூதிபோடச் சகலபீடைகளும் விலகும்.

வேறு.

விபூதியில் விந்துநடு அங், கிலி, சங் என்று வரைந்து மானதமாய்ப் பூசித்து விபூதிகடாட்சித்தாலும், எந்திரமெழுதிக் கையிற்கட்டினாலும் வியாதிகள் விலகும்.

வேறு.

பிரணவத்தின் நடுவே விந்துவும், விந்துநடுவே அங், ரங், நங், சிங், என்றும் வரைந்து (500) உருச்செய்து எந்திரம் கையிற்கட்டப் பிசாசு பிரமராட்சதன் விலகும்.

வேறு.

விபூதியில் விந்து அதனடுவில் அம், சிங், கிலி, மனக்கண்ணால் எழுதி மானதமாய்த் தியானித்து விபூதிகடாட்சிக்கப் பிசாசு, பித்துப்பிணிகள் தீரும்.

பஞ்சபூததேவதைகள் தியான முற்றிற்று.

Koviloor Digital Library

அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை.

தம்பனம்.

தேகசுத்திபண்ணி, விபூதி உத்தூளிதமாய்ப் பூசி இந்திரன் திசையைநோக்கிப் புலித்தோல் ஆசனத்திலிருந்து புருவநடுச் சோதியை மனக்கண்ணால் நோக்கிக்க மலமணியால் (நமசிவய) வென்று மாறித்தியானித்து உருவேற்ற, கொடியமிருகங்கள் அஷ்டநாகங்கள் வியாதிகள் தம்பித்து விலகும்; தம்பனத்துக்குத் தகடு தாம்பிரம்.

மோகனம்.

அக்கினி திசையை நோக்கிக் கலைத்தோல் ஆசனத்திலிருந்து (சிவயநம) வென்று மாறி, பவளம் அல்லது மிளகுமணியால் உருவேற்றச் சகலமும் மோகிக்கும்; திருமாது அகலாதிருப்பள்; இதற்குத் தகடு தங்கம்.

வசியம்.

வடகிழக்குமுகமாய்ப் பங்கயாசனத்தின்மீதிருந்து பூரணத்தில் மனதை நாட்டி உருத்திராக்ஷமணியைக் கையில்வாங்கி (நயமவசி) யென்றுமாறி உருவேற்ற உலகத்தில் மனுமுதலாகிய ஜீவஜெந்துக்கள் வசியமாகும்; இதற்குத் தகடு காரீயம்.

மாரணம்.

தென்முகமாய் அத்திப்பலகைமீதிருந்து நாவிமணியால் சுழுனையில் நாட்டமுற்று (நசிமயவ) என்று மாறி உருச்செபிக்க வல்வினையும் வியாதிகளும் அகலும்; சத்துருக்கள் எடுபட்டோடி நசித்துப் போவார்கள்; இதற்குத் தகடு வெள்ளி.

உச்சாடனம்.

நிருதிமுகமாய் மானறோல் ஆசனமீதிருந்து துளசிமணியால் (மசிவயந) வென்று மாறி, சுழுனை நடுக் கற்பூரதீபம் பார்த்துச் சேவித்து விபூதி கடாட்சித்தால், தீமை செய்யும் பாவிகளும் வியாதிகளும் மாரணமாம்; கண்டபொருள்களையெல்லாம் உச்சாடிக்கும்; இதற்குத் தகடு வெள்ளீயம்.

ஆகருஷணம்.

மேற்குமுகமாய்த் தெற்பையாசனமீதிருந்து சோதியைப் போற்றிச் சங்குமணியால் (நசிவயம) என்று மாறி உருச்செய்ய நினைத்தவண்ணம் ஆகருஷணமாம்; இதற்குத் தகடு குடவன்.

வித்துவேடணம்.

வடமேற்குமுகமாய் ஆசினிப்பலகைமீதிருந்து எட்டிமணியால் (மயவநசி) என்று மாறித்தியானிக்க, பிரமை, பில்லி, சூனியம், விலகும், குருத்தோலையில் மாறி எழுதிக்கட்டவும்; வித்தெடுத்துப் பூமியில் ஊன்ற உடனேமுளைத்துச் செடியாகிப் பூத்துக்காய்க்கும்.

Koviloor Digital Library

பேதனம்.

குபேரன்திசையை நோக்கி, தேவதாரப் பலகைமீதிருந்து முத்துமணியால் (நயவமசி) யென்று மாறிச்செபிக்கச் சகலமும் பேதனமாம்; வியாதிகள் விலகும்; பாரிலுள்ளோர்கள் பணிவார்கள். இதற்குத் தகடு இரும்பு

தசதீட்சை அறிந்து சித்திபண்ணிக்கொண்ட பெரியோர்களிடத்திலும் அஷ்ட கருமச்சிலையை வைத்திருப்பவர்களிடத்திலும் அஷ்டசித்தாடும்.

வேறுவகை அஷ்டகரும மந்திரச்சித்து தம்பனம்.

விபூதியை உடம்புமுற்றுமணிந்து ஆலம்பலகைமீது புலித்தோல்விரித்துக் கன்னி முகமாயிருந்து புருவநடுச்சுழியைநோக்கி வாசிகூடிப் பரமசிவத்தை நினைந்து (ஓம்–கிலி–நமசிவய) வென்று மௌனமாய்த் தாமரைமணியால் உருச்செய்ய, தம்பனம் சித்தியாகும்; விஷம், வியாதி, மிருகங்கள் விலகும்.

மோகனம்.

மாம்பலகைமீது கலைத்தோல்போட்டு வடமுகமாயிருந்து துளசிமணியால் (ஓம்–சவ்–மசிவநய) வென்று உருவேற்றச் சகல ஜீவஜெந்துக்களும் மோகித்து வணங்கும்.

மாரணம்.

அத்திப்பலகைமீது மாந்தோலாசனம் விரித்து வாயுமுகமாயிருந்து நாவிமணியால் (ஓம்–ஐயும்–சிவயநம) வென்று தியானிக்க மாரணம் சித்திக்கும்; தீங்குகள் விலகும்.

உச்சாடனம்.

பலாப்பலகைமீது பத்மாசனம்விரித்து வாயுமுகமாயிருந்து மதியை ரவியிற் சேர்த்துச் சுழுனைக்கேற்றினா லங்கே சோதி பிரகாசிக்கும் அந்தச்சோதியை மனக்கண்ணாற் பார்த்து (ஓங்–யங்–வயநமசி) யென்று பவளமணியால் உருவேற்ற உச்சாடனம் சித்தியாகும்; வன்பிணிகள் விலகும்; நினைத்தபடி உச்சாடிக்கும்.

வசியம்.

வில்வப்பலகைமீது புல்வாய் ஆசனம் விரித்து, கிழக்குமுகமாயிருந்து உருத்திராக்ஷமணியால் ஓம்–யங்–யநமசிவ–என்று செபிக்க வசியம் சித்தியாகும்; சகல ஜீவஜெந்துக்களும் வசியமாகும்; வணங்கும்.

ஆகருடணம்.

தேவதாரப்பலகைமேல், மான்தோல்போட்டு, ஈசானமுகமாய் இருந்து பளிங்கு மணியால் (ரங், நசியமவ) என்று தியானிக்க அழைப்புச்சித்தியாகும்; லட்சுமி கடாட்சமுண்டாம்; நினைத்ததை யழைக்கலாம்.

பேதனம்.

தில்லைப்பலகைமீது, கருப்புக்கம்பளம் விரித்துத் தென்முகமாயிருந்து முத்து மணியால் (ஓம்–உங்–வநசியம) என்று உருச்செய்யப் பேதனஞ்சித்தியாகும்; காலன் அஞ்சிவிலகுவன்; சகலமும் பேதனமாம்.

Koviloor Digital Library

வித்துவேடணம்.

பாதிரிப்பலகைமீது புலித்தோல்விரித்து, சங்குமணியால் ஓம், டம்–மசியநவ, என்று உருச்செய்யப் பூலோகத்தரசர் வணங்குவார்கள்; போட்டவித்துக்கள் நன்றாய் முளைத்து நல்லபலன் கொடுக்கும்.

வேறு அஷ்டகருமச் சித்துமகிமை.

கிழக்குமுகமாய்த் தனக்குவேண்டிய ஆசனத்திருந்து இரேசித்துக் கும்பித்து, மனதை யொருநிலைப்படுத்தி (மசி,மசி) என்று லெட்சம் உருச்செய்யப் புருவநடுஜோதி பிரகாசிக்கும்; அவமிருத்து விலகும்.

தென்கிழக்கு முகமாயிருந்து (வசிவசி) என்று முன்போல உருச்செபிக்க வாசிவலஞ்சென்று, முடிமேலேகிச் சோதிபிரகாசிக்கும்; கூற்றுவன் விலகுவன்.

தென்திசை முகமாயிருந்து (நசி–நசி) யென்று முன்போல உருவேற்ற வாசி அண்டத்தேகி அக்கினிச்சுடர்போலச் சுழுனையில் பிரகாசிக்கும்; தீங்குசெய்யும்பாவிகள் மதிகுலைந்து தீராத வல்பிணியால் திகைத்து நிற்பார்கள்.

கன்னிமுகமாயிருந்து புருவநடுவில் மனக்கண்ணாட்டி வங்–சிங்–என்று உருவேற்றச் சுழுனையில் சத்திருபமாய் மரகதம்போற் பிரகாசிக்கும்; பஞ்சசத்திகளின் கடாட்சமுண்டாம்.

மேற்குமுகமாய்க் கும்பகத்திலிருந்து அவ்–அவ் என்று உருவேற்றக் கண்ணுக்கு அனேகங் காட்சிகள் தோன்றும்.

வடமேற்கு முகமாயிருந்து, (சிவ–சிவ) என்று உருச்செய்ய அரன்கிருபையுண்டாம்; கன்மவினைகள்தீரும்.

வடதிசையைநோக்கி (மங்–மங்)என்று உருவேற்ற உலகெல்லாம் நிறைந்த சோதி காணும்; விந்துகட்டி மணிபோற் றிரளும்; கவுனசித்தியுண்டாகும்.

வடகிழக்குத்திசையைநோக்கி, நங் மங் என்று உருச்செய்யச் சுழுமுனையில், தீபங்காணும்; நோய்களெல்லாம் பரிதிகண்ட பனிபோல விலகும்.

வேறுவகை அஷ்டகணபதி அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை ஆதிகணபதி மூலமந்திரம் வசியம்.

விபூதியை உத்தூளிதமாய் அணிந்து கலை ஆசனத்தின்மீது வடமுகமாயிருந்து வாசிகூடிப் புருவநடுவில் கற்பூரதீபம் பார்த்து உருத்திராக்ஷமணியால் (சிவ சிவா, ஓம், ரீங், அங்) என்று தினந்தோறும் (1008) உருச்செய்துவர நினைத்த காரியமெல்லாம் சித்தியாகும்; அண்டரண்டங்களும், தேவர்கள், முனிவர்கள், அடங்காத பேய்பூதங்கள், மிருகங்கள், பட்சிகள், அஷ்டநாகங்களும் வசியமாகும்.

Koviloor Digital Library

மகாகணபதி மூலமந்திரம் மோகனம்.

கிழக்குமுகமாய் வெண்புலித்தோ லாசனத்திலிருந்து துளசிமணியால், ஓம், கிலி, சிங், என்று தினந்தோறும் (1008) உருச்செய்துவர மகாகணபதி பிரசன்னமாவர்; சகலநோய், விஷம், காடடேரி, பிசாசு, கணங்கள், தேவதைகள், நதிகள், உன் சமுகம் கண்டால் வீறடங்கி மோகிக்கும்.

நடனகணபதி மூலமந்திரம் தம்பனம்.

மேற்குமுகமாய்த்தருப்பை ஆசனமீதிருந்து தாமரைமணியால் (ஓம்–ஸ்ரீ–கிலி) என்று தினந்தோறும் (1008) உருச்செய்துவரத் துஷ்டமிருகங்கள், காற்று, நெருப்பு, தண்ணீர் தம்பித்து நின்றுவிடும்.

சத்திகணபதி மூலமந்திரம் உச்சாடனம்

படந்தாளாசனமேறகொணடு சங்குமணியால் (ஓம்–கிலி–சவ்) என்று நாள்தோறும் (1008) உருச்செபித்துவர, கண்டதெல்லாம் உச்சாடிக்கும்; நோய், விடம், பில்லி, சூனியம், காணாதோடும்; சகலசித்தும் விளையாடலாம்.

பாலகணபதி மூலமந்திரம் ஆகருஷணம்.

பட்டுவஸ் திரந்தரிந்து வடகிழக்குமுகமாயிருந்து, படிகமணியால் (ஓம்–ரீங்–கிலி) என்று நாடோறும் (1008) உருச்செபித்துவரச் சகலவினைகளும், அடங்காத சகல விஷங்களும் நீங்கும்.

உச்சிட்ட கணபதி மூலமந்திரம் வித்துவேடணம்.

வெள்ளைவஸ்திரந்தரித்து, தென்மேற்கு முகமாயிருந்து, பவளமணியால் (ஓம்–ஸ்ரீ–ரீம்) என்று நாள்தோறும் (1008) உருச்செபித்துவரில், சகல காரியங்களுஞ் சித்தியாகும்; பெணகளுக்கு விபூதிகடாட்சித்துவரக் கருப்பமுண்டாம்; தொட்டதெல்லாம் ஒன்றுபத்தாய் விளையும், வளரும்.

உக்கிரகணபதி மூலமந்திரம் மாரணம்.

தென்கிழக்குமுகமாய் வேங்கைத்தோலாசனமீதிருந்து எட்டிமணியால் ஓம்–ரீங்–நசி என்று தினந்தோறும் (1008) உருச்செபித்துவரச் சகல பிணியும் தீரும், சத்துருவின்பேரை நினைத்து உருச்செபித்துவர அவன்தேகத்தில் அக்கினி மீறி மாண்டுவிடுவான்.

மூலகணபதி மூலமந்திரம் பேதனம்.

வடமேற்குமுகமாய்க் கிருஷ்ணாசனம் (மான்றோல்) மீதிருந்து மிளகுமணியால் ஓம், ரீங், அம், என்று (1008) உரு தினந்தோறுஞ் செய்துவந்தால் மந்திரஞ் சித்தியாகும்; பிணியாளர்க்கு விபூதிகடாட்சிக்கப் பிணிகள்தீரும்; சுரம் தோஷம், வீக்கம் நீங்கும்; உருவம் பலவிதமாய்த் தோற்றும்.

அஷ்டகணபதியுமொன்றாய் நின்றாடும் மூலமந்திரம்.

ஓம்–கிலி–அங்–உங்–என்று (1008) உருவேற்றி விபூதிபோட, சுரம், சன்னி, குன்மம், காசம், வஞ்சனை, ஏவல், பில்லி, சூனியம், விஷம், தோஷம், கரப்பன், கருப்பரோகம், வயிற்றுத்திரட்சி, கட்டி நீங்கும்.

Koviloor Digital Library

மேற்கூறிய அஷ்டகணபதி மூலமந்திரங்களை ஒருலட்சம் உருவேற்றிக்கொண்டால் அவை சித்தியாகும்.

வேறுவகை நீலகண்ட அஷ்டகரும மந்திரச்சித்து மகிமை.

புரோம், நிரீம், டம், சிம் என்ற நான்கும் நீலகண்டமந்திரமாம். இவற்றுள்முதல் மூன்றுபதங்களும் நீலகண்டத்துக்கு (மாலா) மந்திரமென்றும், கடைசிப்பதம் மூலத்தியானமென்றும் சொல்லப்படும். நீராடிப் பட்டுவஸ்திரம் தரித்து உத்தூளனமாய் விபூதியணிந்து மேற்படி மந்திரத்தால் கரநியாசம் அங்கநியாசம் செய்து, புரோம் ஆத்மதத்துவ தூலசரீரயாமி சுவாகா, நிரீம் சூட்சும சரீரயாமி சுவாகா, டம் காரணசரீரயாமி சுவாகாவென்று தியானித்துச் சதா பதியக்ஷரமாகிய நாலாம்பாகத்தில் நாட்டம்வைத்து நித்தியகரும அனுஷ்டானம் முடித்துக் கொள்ளவும்.

தம்பனம், மோகனம்.

நீலகண்ட மூர்த்தியையும் தன்னையும் பொன்னிறமாகப் பாவித்து இடதுகையில் விபூதியைப்பரப்பி அதில் பிருதிவிசக்கரத்தையும், அதனடு விந்துவும், விந்துநடு லம், புரோம், என்ற பதத்தையும் எழுதி அந்த மந்திரத்தால் தியானித்து விபூதிகடாட்சிக்க, விஷம், பூதம், வியாதிகள் தம்பித்து விலகிப்போம்.

எதிரிமுகத்தில், மனக்கண்ணால், மேற்கூறிய சக்கரத்தையும் அதன்நடு (லம்–டம்)என்ற அட்சரங்களையும் ஒட்டிச்செபிக்க அவனுடையநாக்குத் தம்பித்துப்போம்.

ஆகருஷணம்.

சுவாமியையும், தன்னையும் வெண்ணிறமாகப்பாவித்து, விபூதியில் அப்புசக்கரத்தையும் அதனடுவில் (வம், புரோம்) என்ற அக்கரங்களையும் வரைந்து செபித்து விபூதிபோடப் பூதம், பிசாசு, விஷம் விலகும்.

வசியம்.

சுவாமியையும், தன்னையும், சிவந்தவண்ணமாகப் பாவித்து விபூதியில் தேயு சக்கரத்தையும் அதனடு (கிலிம்புரோம்) என்ற அட்சரங்களையும் நாட்டித் தியானிக்கச் சகலமும் வசியம்.

வித்துவேடணம்.

சுவாமியையும், தன்னையும் காளகண்டராய்ப்பாவித்து, விபூதியில் பிருதிவிசக்கரத்தையும் அதனடு (ரம்–யம், புரோம்) என்ற அக்கரங்களையும் நாட்டித் தியானிக்க வித்துவேடணமாம்.

உச்சாடனம்.

சுவாமியையும், தன்னையும் புகைநிறமாகப்பாவித்து விபூதியில் வாயுசக்கரமும் அதனடு (யம்–புரோம்) என்ற அக்கரங்களையும் வரைந்து தியானிக்க உச்சாடனமாம்.

Koviloor Digital Library

ஆகாய ஆகருஷணம்.

சுவாமியையும், தன்னையும் நீலநிறமாகப்பாவித்து விபூதியில் ஆகாயசக்கரத்தையும் அதனடு (ஹம்-புரோம்) என்ற அக்கரங்களையும் நாட்டிச் செபிக்க, சகல பூதம், பேய், பிணிகள் விலகிப்போம்.

அஷ்டகருமவகை முற்றிற்று.

நீலகண்ட மந்திர மகிமை.

நீலகண்ட அஷ்டகருமாரம்பத்திற் சொல்லிய நியமத்துடன் தன்னைப் பால் வண்ணமாய், காளகண்டமாய், சதுர்ப்புயமாய்ப் பாவித்து, (புரோம்-நிரீம்-டம்) என்று ஒருலட்சம் உருச்செபித்துக்கொள்ள அந்தமந்திரஞ் சித்தியாகும்.

மேற்கூறிய மந்திரத்தை விபூதியில்நாட்டி (108) உருச்செபித்து அந்த விபூதியைக் கடாட்சிக்கச் சுரந்தீரும்.

மேற்கூறிய மந்திரத்தை வேப்பிலையில் மனக்கண்ணால் ஒட்டி (108) உருச்செபித்து அந்தக்குழையினால் மந்திரிக்க, வீக்கந்தீரும்.

மேற்கூறிய தழை, விபூதி, மண், தண்ணீர் இவைகளிலெதிலாவது மேற்கூறிய மந்திரத்தில் முதல்பதத்தைக் கண்ணால் வரைந்து அதைச்சிரசுமுதல் பாதம்வரை தடவச் சுரந்தீரும்.

மேற்கூறிய முதல்பதத்தை எண்ணெயிலாவது, விபூதியிலாவது எழுதி உருச்செபித்து வீக்கம், கட்டி, சிலந்தி முதலான வியாதிகளுக்குத் தடவத் தீரும்.

சுரமுடையவன் சிரசில் மேற்கூறிய முதல்பதத்தை மனக்கண்ணால் வரைந்து தியானித்து அவனைத்தடவி, மரம், மனிதர், மிருகங்கள், மற்றெவைகளின் பேரிலாவது தடவ அங்கே பாயும்.

மேற்படி மூன்று பதத்தையும், ஆவினெய், பால், நீர், நல்லெண்ணெய் இவைகளில் எதிலாவது நாட்டி (300) உருச்செபித்து ஒரு மண்டலம் சாப்பிட்டுவரும்படிசெய்தால் மலடிக்குக் கருப்பமுண்டாகி ஆயுளுடன் குழுந்தைபிறக்கும்.

ஆவினெய், பால், தேன் இம்மூன்றையும் சமன் கலந்து அதிலாவது, பசுவின் பாலில் சந்தனத்தைக்கலந்து அதிலாவது, தண்ணீரிலாவது, அன்னத்திலாவது மேற்படி மந்திரத்தை எழுதி, தினம் (300) உருச்செபித்து நீலகண்ட மூர்த்தியைச் சிந்தித்து, ஒருமண்டலம் இரண்டுமண்டலம் வரை கொடுத்துவர, பிள்ளை இடையிலே விழுதலும், சாப்பிள்ளையே பெறுதலும் நீங்கப் பூரணகருப்பமாகி ஆயுளுடன் குழந்தை பிறக்கும்.

புரசபத்திரத்தில் பிருதிவிசக்கரத்தையும், அதனடுவில் மூன்றாம் அக்கரத்தையும் நாட்டி, பொன், வெள்ளி, தங்கத்தகட்டில் அந்தப்பத்திரத்தை

Koviloor Digital Library

வைத்துப்பொதித்து கன்னிநூற் கயிற்றினால் கழுத்திலாவது, கையிலாவது கட்டினால் சுகப்பிரசவமுண்டாம்; உலர்ந்த தேகம் பூரிக்கும்; தன்னியம் பெருக்கும்; கருப்பமுண்டாம்; மூலமந்திரத்தைத் தியானித்துத் தினம் விபூதி தரித்துக்கொள்ளவும்.

விபூதியில் இரண்டாம் அட்சரத்தை வரைந்து அந்த விபூதியைத் தினம் அந்திசந்தி மூன்றுமாதம் வரை மெய்யிற்றரித்துவரப் புத்திரசந்தான முண்டாம்

விபூதியில் பிருதிவி சக்கரமெழுதி அதினடுப் பிரணவத்தை நாட்டி அந்தப்பிரணவத்தினடு இரண்டாமட்சரத்தை வரைந்து, அந்தமந்திரத்தால் (1008) உருச்செபித்து அந்த விபூதியைத் தினந்தோறும் ஒரு மண்டலம் பூசிக்கொள்ள, புத்திர சந்தானமும் செல்வமுமுண்டாம்; பலவிதமாய்க் கனாக்காண்பதும் நீங்கும்.

புரசிலையில், பிருதிவிசக்கரமும் அதனடு இரண்டாம் மூன்றாம் அக்கரங்களையும் நாட்டி, பிரணவத்தைச் சுற்றிக்கட்டி, அதற்குக் கந்த, புஷ்பம் சாற்றி, சோடச உபசாரஞ்செய்து பூசைபண்ணி (1008) உரு அந்தமந்திரத்தால் செபித்து அதைக் கன்னிநூலால் குளிசமாடிப் பெண்கள் கழுத்தில் கையில் கட்ட, உடல்வெக்கை நீங்கிப்பூரித்துப் புத்திரசந்தான முண்டாம்.

பச்சைமஞ்சளை அரைத்து அதில் பிருதிவி சக்கரத்தையும் அதினடு விந்துவையும் அந்த விந்துநடு இரண்டாம் அக்கரத்தையும் எழுதி அந்த மந்திரத்தால் (1008) உருச்செபித்து அந்தமஞ்சளை ஒரு மண்டலம் வரை மலடிகள் குளித்து வந்தால் புத்திரர்களைப்பெறுவார்கள்.

ஆவின்வெண்ணெயில் இந்தச்சக்கரத்தையும், மந்திரத்தையும் எழுதி இந்த மந்திரத்தால் (1008) உருவேற்றி அந்தவெண்ணெயை ஒருமாதம்வரை அந்திசந்தி சாப்பிடும்படி மலடிகளுக்குக் கொடுக்க நல்ல புத்திரர்களைப்பெற்று இன்பத்தை அனுபவிப்பார்கள்.

புரசிலையில்சந்தனம்பூசி ஓங்காரமெழுதி அதினடு மூன்றாம் அக்கரத்தைநாட்டி அந்தமந்திரத்தால் (1008) உருவேற்றிப் பூசித்து, வெள்ளி, தங்கத்தகட்டில், அந்தப் பத்திரத்தைப் பொதிந்து குளிசமாடி, கையில் கழுத்தில், கட்டிக்கொள்ளத் தாது வருத்தனையும் சரீரகாந்தியும், ஆரோக்கியமுமுண்டாம்.

நீலகண்ட மந்திரம் முற்றிற்று.

கணபதி தியானம்.

ஓங்காரநடு உம்–ரீங்–கங்–கங், என்று விபூதியிலாவது, தங்கமுதலிய தகட்டிலாவது எழுதி, புருவமேவி, உம்–ரங்–ஓம்–ஸ்ரீ, கங், கங், கணபதியே நமா, வென்று தியானிக்கில், தீட்சைமுதலிய மந்திரங்களுஞ் சித்தியாகும்; வன்பிணிகள் நீங்கும்; சகல ஜீவசெந்துக்களும் வசியமாகும்; ஏவல்கேட்கும்.

Koviloor Digital Library

சுப்பிரமணியர் தியானம்.

புருவநடுச்சுழியை நோக்கி ஓம், கிலி, சிம் என்று தியானிக்க, சுப்பிரமணியர் வடிவேலுடன் சோதிமயமாய்ப் பிரசன்னமாவர்; நினைத்தவரமளிப்பர்; கன்மவினைகளை விலக்குவிப்பர்.

வைரவதியானம்.

புருவநடுச்சுடரை நோக்கி, கிலி, அங், என்று தியானிக்க அந்தச்சுடரொளியில், கனவடிவாய்ச் சிறுகுழந்தையைப்போல் அவர் தோன்றிக் கேட்ட வரமீவர்.

நந்தீசர் தியானம்.

பரமகுருவாகிய நந்தீசர் தியானம் அங்–ரீங், சிங்–சிம்–சிவா, என்று புருவநடுத்தீபம்பார்த்துத் தியானித்தால் அந்தப்பரமகுருவின் அருளுண்டாகி, தேகம் தங்கம் போற் பிரகாசிக்கும், யோகசித்தி, ஞானசித்தியுண்டாகும்.

அகத்தீசர் தியானம்.

அம், உம், ஓம், வம், மம், மகத்தான அகத்தீசுராயநம; என்று தியானித்தால் கற்பயோக ஞானசித்திகளும் ஆசுமதுர முதலான தமிழ்க் கவிபாடும் வல்லமையும் உண்டாகும்.

வேல்முருகர் சருவசங்கார திரிஅக்கர மந்திரவிஞ்சை.

ஆகாயச்சக்கரமென்னும் விந்துவெழுதி அதற்குத் திக்குக்கு ஒன்றாக நாலுசூலமிட்டுச் சூலத்தின் நுனியில் பிரணவமும் சக்கரத்தினடிநடுமுடி மூவிடங்களிலும் தனித்தனிப்பிரணவமுமிட்டு அதனடுவில் உச்சத்தில் மகாரமும், நடுவில்சிகாரமும், பிச்சத்தில் நகாரமும் நாட்டி, மசிநசி, நசிமசி, என்று ஒருலட்சம் உருவேற்ற வினையகலும்; காலவிடமகலும்.

மேற்படி மந்திரத்தைப் பிரம்பிற் றாக்கி உருவேற்றிக்கொண்டு மௌனமாயுன்னி விபூதியணிந்து சத்துருக்கள் முன்சென்று அந்தப்பிரம்பைவீச அவர்கள் ஓடிப்போவார்கள். விஷந்தீண்டினவனுடைய இருதோளிலும், சிரசிலும் மேற்படி பிரம்பால் மேற்படி மந்திரத்தை எழுதித்தட்ட ஆலகாலவிஷமானாலும் இறங்கிவிடும்.

மேற்படி மந்திரத்தை, தங்கத்தகட்டில்வரைந்து ஒருலட்சம் உருவேற்றிக் குளிசமாடிச் சிரசிலிருக்க விஷசெந்துக்கள் விலகிப்போம்.

மேற்படி மூன்று அட்சரத்தையும் முகத்தில்ஒட்டி நித்திரைசெய்யக் கனவுகாணாது; இரவில் விஷதிஷ்டியில்லை.

எண்ணெயில் அருகம்புல் முனையால் மேற்படி மந்திரத்தைச் செபித்து வயிற்றில், சிரசில்தடவ, வயிற்றில் மரித்தபிள்ளை விழும்; அது சாகாதிருந்தால் சுகமாய் வெளிப்படும்.

Koviloor Digital Library

சுண்டைக்காய் பருமனாயிருக்கிற கல்லுகளில் மேற்படி மந்திரத்தைச் செபித்து எறிய, எதிரிகள், திருடர்கள் ஓடிப்போவார்கள். மேற்படி கல்லைப் பாகையில் முடிந்து அதைச்சிரசிற் கட்டிக்கொண்டு வழிநடந்தால் விடசெந்துக்கள் காலிற்சுற்றிக்கொண்டாலும், மிதிபட்டாலும் விஷமில்லை. கடியாது.

மேற்படி மந்திரத்தை நினைவிலுன்னிக் கோடியுருச் செய்தவர்களிருக்குமிடத்தில் விஷதிஷ்டியில்லை, கடித்தாலும்விஷமில்லை.

மேற்படி சக்கரமும் மந்திரமும் வரைந்த யந்திரம் சிரசிலிருந்தால், பில்லிசூனியம் விலகும்.

மேற்படி மந்திரத்தை எண்ணெய், தண்ணீர், பிரம்பில் ஓதி அவைகளிலெதினாலாவது தடவப் பிளவை, பரு, படுவன், வீக்கம், குஷ்டம், பெருவியாதி, சுரம் தீரும். கழுத்து, வாய், செவி, கண், நெஞ்சு, குய்யம், கடிதடம், முதலான இடங்களிலும் உண்டாகும் வியாதிகளும் கண்டமாலையும் மேற்படி பிரம்பால் தடவத்தீரும்.

மேற்படி மந்திரத்தை விபூதி ஜலத்தில் பிரம்பில் உருவேற்றி அதை அந்திசந்தி உட்கொள்ளப் பாவவினைகள் நீங்கும்; மேற்படி ஜலத்தைச் சிரசில்கொட்டிப் பிரம்பால் தட்டப் பேய்பிசாசு பிரமராக்ஷதன் முதலான துட்டதேவதைகள் ஓடிவிடும். விபூதியை எறிந்தால் தீப்பந்தத்தினாற் சுட்டதுபோலத் தேகத்தில் காந்தலும், எரிச்சலுமுண்டாகிப் பேய்பிசாசுகள் அலறியோடும். அதற்கடையாளமாக ஒரு மரக்கொம்பை ஒடித்துத்தள்ளும்; ஒரு பருங்கல்லைத் தூக்கிக்கொண்டோடிப் போடச் சொன்ன விடத்திற் போடும்; இதோ போகிறேனென்று சற்குருமேலாணையிடும்.

பஞ்சகவியத்தில் மேற்படி மந்திரத்தைச் செபித்து அதை மூன்றுநாட் சாப்பிடச் செய்தால், குமரகண்டன் முயல்கண்டன், காக்கைவலிப்பு, குதிரைவலிப்பு முதலான வலிப்புக்களும் நீங்கும், அப்படி நீங்காவிட்டால், உருத்திரகோலமாய்ப் பரமசிவத்தை நினைந்து புருவநடுத்தீபம்பார்த்து வாசியினால் மேற்படி மந்திரத்தை உருச்செய்து பிரம்பால், சிரசில் அடிக்க மேற்படி வியாதிகள் தீர்ந்துபோம்.

முறத்தின் பின்புறத்தில், விபூதியைப் பரப்பி மேற்படி மந்திரத்தை நாட்டி (1000) உருவேற்றி அந்த விபூதியை உட்கொள்ளச் செய்து பிரம்பாலடிக்க, விடாச்சுரம் விட்டுப்போம்.

காராவின்பால் நெய் தேன் இம்மூன்றையும் ஒன்றாய்க் கலந்து அதில் மேற்படி மந்திரத்தை (1008) உருச்செபித்துக் கொடுக்க உன்மாதந்தீரும்; தேகலந்தப்படி உருவேற்றிக்கொடுக்கத் தாந்திரிகள் முதலிய (18) வகைச்சன்னிகள் தீரும். ஆவினெய்யில் அந்தப்படி உருவேற்றி மூன்றுதிங்கள் கொடுத்தாலும் பஞ்சகவியத்தில் ஒரு மண்டலங்கொடுத்தாலும் கருப்பமுண்டாம். பச்சைமஞ்சளில் அந்தப்படி உருவேற்றி அந்தமஞ்சளை இரண்டுதிங்கள் குளிக்கச்செய்தால் கருப்பமுண்டாம்.

[illegible]

Koviloor Digital Library

உருத்திராக்ஷமகிமை.

மேற்கூரிய செபமாலைமணிகளில், உருத்திராக்ஷமணிகள் உருத்திரமூர்த்தியின் இருகண்களிலுமிருந்து சிந்திய தண்ணீரிலிருந்து தோன்றிய விருட்சங்களின் கனிகளின் வித்துக்களாயிருக்கின்றன.

அந்த வித்துக்கள் கபிலம், கறுமை, செம்மை, பொன்மை, வெண்மை நிறமாயும், ஒன்றுமுதற் பதினாறு முகங்கள் பொருந்தியனவாயும், மானிடதேகத்திற் றரித்துக் கொள்ளத் தகுதியுள்ள விசேட மகத்துவமுள்ளனவாயுமிருக்கின்றன.

அவைகளுக்கு அதிதேவதைகள்.

ஒரு முகத்துக்குச் சிவன், இருமுகத்துக்குச் சிவசத்தி, மூன்று முகத்துக்குத் திரிமூர்த்தி அக்கினிபகவான், நான்கு முகத்துக்குப் பிரமா, ஐந்துமுகத்துக்குச் சதாசிவன், ஆறுமுகத்துக்கு ஆறுமுகக்கடவுள், ஏழுமுகத்துக்குச் சத்தமாதர்கள், ஆதிசேடன், எட்டுமுகத்துக்கு விநாயகக்கடவுள், அஷ்டவித்தியேசுரர்கள், ஒன்பது முகத்துக்கு வைரவன், பத்துமுகத்துக்கு விஷ்ணுமூர்த்தி, திக்குப்பாலகர்கள் பதினொரு முகத்துக்குப் பதினோரு ருத்திரர்கள், ஆதித்தர்கள் பன்னிரண்டுமுகத்துக்கு வாசுதேவர் முதலிய பன்னிருவர்கள், பதின்மூன்று முகத்துக்குச் சதஉருத்திரர்கள், சுப்பிரமணியர் பதினான்குமுதல் பதினாறுவரையுள்ள முகங்களையுடைய உருத்திராட்சங்களுக்கு முப்பத்துமுக்கோடி தேவர்களாம்.

மேற்படி (16) வகையில், அகப்பட்டதைத் தரித்துக்கொள்பவரிடத்தில், அந்தந்தத் தேவதைகளுடைய அருளும், பிரமகத்தி கோகத்தி, சிசுகத்தி, குருபத்தினியைப் புணர்தல் முதலிய அறிந்தும் அறியாமலும் செய்தபாவங்களும், பூதப்பிசாசுகளினாலுண்டாகும் விக்கினங்களும், வியாதி, பீடைகளும் விலகும்.

ஒருமுக உருத்திராக்ஷத்துக்கு வயிரவன் சிவன் அருளும், கங்கை முதலிய நவதீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்த பலன்களும் கிடைக்கும்; பொன்னிறமும் வெண்ணிறமுமுள்ள உருத்திராக்ஷங்கள் மகாவிசேடமாம்.

16, 32, 102–உருத்திராக்ஷங்களை வெண்பட்டுக்கயிற்றிலாவது, தாமரைநூற் கயிற்றிலாவது, தங்கச்சரட்டிலாவது கோத்து ஜபமாலையாய் வைத்துக்கொள்ளலாம்.

ஆறுமுக உருத்திராக்ஷத்தை வலப்புயத்திலும் ஒன்பது முகத்தை இடப்புயத்திலும், பதினொரு முகத்தைச் சிகையிலும் பன்னிரண்டுமுகத்தைக் காதுகளிலும், பதினாலுமுகத்தைச் சிரசிலுந் தரிப்பது விசேடம்.

விபூதி நீற்றும்வகை.

கன்றீன்றதுமுதல் பதினைந்து நாளைக்குள்ளான பசு, ஈனாப்பசு, வியாதியுள்ள பசு, சாவுகன்றீனும்பசு, மலந்தின்னும்பசு, இவைகளில்லாத மற்றப்பசுக்களின் சாணத்தைப் பூமியில் விழாமலெடுத்து விபூதியாக நீற்றவும்;

Koviloor Digital Library

அந்தப்பசுக்கள் விடும் நீர் உட்கொள்ளவும், அவுடதங்களுக்கும், மற்றக் கிரியைகளுக்கும் உபயோகமாம்.

விபூதிமகிமை.

இப்படிக் குற்றமற்ற சாணத்தில் சமைந்த விபூதியின்மேல், கற்பூரத்தைக் கொளுத்திவைத்து, அந்தச் சோதியைப் பரஞானசோதியென அருட்கண்சாத்தி ஓம் சிவாயநமவென்று, பரமசிவத்தைத் தியானித்து அத்தீபம்பார்த்து, அந்த விபூதியை, தினந்தோறும் மெய்யில் அணிந்துவந்தால் சிவபூசை, சிவசத்தி பூசை செய்தால் எந்தப்பலனோ அந்தப்பலன் நல்கும்.

பஞ்சாட்சர விலக்கணம் முற்றிற்று.

பதியிலக்கணம்.

பதி, பசு, பாசம், இம்மூன்றும் அனாதி நித்தியம்; இதிற்பதியானது ஒன்று தானே சொரூபமென்றும், தடத்தமென்றும் இருவகையாயிருக்கும்.

சொரூபமாவது, மாசிலாப்பரிசுத்தமாய், ஞானானந்தாதீதமாய், சருவவியாபியாய், சருவாந்தரியாமியாய், அருவமாய், குறியுங் குணமுமில்லாததாய், வடிவுந்தொழிலும் ஒன்றுமில்லாததாய், நித்தியானந்த நிறைவாய், உயிர்க்குயிராய் அறிவிற்கு அறிவாய், பிறப்பும் இறப்புமில்லாததாய், சத்து, சித்து, ஆனந்தமாய், அதிகோசரமாய், சூக்குமச்சித்தாய், அறிவரிதாய், பக்குவ ஆன்மாக்களாலறியப்படுவதாய், அகண்டிதமாய், அமலமாய், அனாதிபரிசுத்தமுத்தனாய், சருவகாரணனாய், அசஞ்சலனாய், பஞ்சபூதம் இருசுடர் இயமானன் (உயிர்) ஆகிய எண்குணமாய், முழுதுமுணர்தல், முழுதுஞ்செய்தல், சித்தமகிழ்ச்சி, அனாதியாகிய சுதந்தரத்தன்மை, கெடாதசக்தியுடைமை, அளவிறந்தசக்தியுடைமை ஆகிய அறுகுணமாய் இருப்பதே சொரூபமாம், இந்தச் சொரூபத்துக்குச் சிவமென்று பேர். இது தன்னியல்பு.

தடத்தமாவது, இந்தத் தன்னியல்பில் பசு பாசங்களைப் பிரேரிப்பிக்கும்பொழுது இயல்பினின்று உயிர்களை இரட்சிக்குந்தன்மையில், இந்தச் சொரூபந்தானே, ஆன்மாக்கள், மலகன்ம மாயாதிதுன்பம் நீங்கிப் பேரின்பம் உறும்பொருட்டு, பெருங்கருணையாய்த் தியானமுதலியவற்றால் வழிபடுவதற்குப்போகமாய், அறிவுக்கு எட்டும்படி கிருதாகாருண்ணியமாய், அருவமாயும் அருவஉருவமாயும் உருவாயும் அனேகந்திருமேனிகொண்டு, அவ்வடிவுகளை, ஆன்மாக்கள் பக்குவதாரதம்மியத்துக்குத் தக்கதாய்த் தியானித்தும், பூசித்தும், தெரிசித்தும், சிவபுண்ணிய மேறி, ஆணவாதி மயக்கறிவுநீங்கிச் சிவஞானமுண்டாய் உய்தற்பொருட்டு, சிவபேதம் ஏழும், சத்தி பேதம் ஏழும், சோமாஸ்கந்தர் முதலிய மூர்த்தபேதம் இருபத்தைந்துமாகியும், தலந்தீர்த்த மூர்த்திகளாகியும், குரு, லிங்க, சங்கமங்களாகியும் இவ்வாறு அனேகந் திருமேனிகொண்டு, சிவபுண்ணியம் வரும்படிசெய்து, பஞ்சகிருத்தியப்படுத்திப் பருவமுதிர்ப்பித்துச் சிவஞானத்தைப்பதிப்பித்துத் தன்னியல்பை நிறுத்தியருளுவதே தடத்தமாம். தடத்தமென்பது பாரபட்சமில்லாத தன்மையாம்.

Koviloor Digital Library

இவ்விரண்டு இலட்சணங்களும் பொருந்தியது பதியாம்.

இப்பதியும், பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என்னும் பஞ்சசத்திகளுடைய அருளும், பின்னமின்றிச் சூரியனும் கிரணமும்போல ஒன்றாயிருக்கும்.

இந்தப்பதியாகிய கடவுளுக்குரிய தொழில்கள், படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல், அழித்தல் என ஐந்தாம்.

படைத்தலென்பது பசுவாகிய ஆன்மாக்களுக்கும் மற்றச் சீவசெந்துக்களுக்கும் தனுகரண புவனபோகங்களை முதற்காரணத்தினின்று கொடுப்பதாம்.

காத்தலாவது இப்படித்தோற்றிவைத்த அந்தந்தத் தனுகரண புவனபோகங்களை நிறுத்துதலாம்.

அருளலாவது ஆன்மாக்களுக்குப்பாசத்தைநீக்கி, சிவதத்துவத்தை விளக்குதலாம்.

மறைத்தலாவது ஆன்மாக்களை இருவினையாகிய புண்ணிய பாவங்களில் அமிழ்த்துதலாம்.

அழித்தலாவது அந்நான்கையும் முதற்கரணத்தில் ஒடுக்குதலாம்.

தனுகரண புவனபோகமாவது தனு–உடம்பு; கரணம்–மனமுதலியகருவி; புவனம்–உடம்புக்கு ஆதாரமான உலகம்; போகம்– அனுபவிக்கப்படும் பொருளாம்.

இந்தத் தனு கரண புவன போக மெனப்படும், பிரபஞ்சமான காரியமானது, முதற்காரணம் துணைக்காரணம், நிமித்தகாரணமென மூன்றினையுடையதாயிருக்கின்றது.

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி, இம்மூன்றும் முதற்காரணமாம்; சிவசத்தி துணைக்காரணமாம்; கடவுள் நிமித்தகாரணமாம்.

இவ்வைந்து தொழில்களையும் கடவுள் தாமே சுத்தமாயையை அதிட்டித்துக் கொண்டு செய்வார்.

அசுத்தமாயை, பிரகிருதி, என்ற இவ்விரண்டையும் அதிட்டித்துக்கொண்டு படைப்பாதி தொழில்களைப் பரமசிவத்தின் அனுக்கிரகத்தாற் செய்யும் அதிகாரகருத்தாக்கள் யாவரெனின்? பரமசிவன் சுத்தமாயையினின்று சிருஷ்டிக்கப்பட்ட அனுசதாசிவர், அட்ட வித்தியேசுவரர், சத்தகோடி மகாமந்திரர்களேயாவர்.

இவர்கள் மலாதிகளால் தடுக்கப்பட்ட ஞானக்கிரியை உடையவர்களாவர்.

இவர்களிருந்து சஞ்சரிக்கும் அண்டபுவன போக தத்துவங்களும், சுத்தமாயையினின்று தோன்றியனவாயிருக்கின்றன.

Koviloor Digital Library

மேற்படி மூவகை ஆன்மாக்களும், விஞ்ஞானகலர்களென்று கூறப்படும்.

இந்த விஞ்ஞானகலர் அனந்ததேவநாயனாரை அதிட்டித்துக்கொண்டு அவரால் அசுத்தமாயையிலிருந்து தோன்றும் தனுவாதிகளையும் அவர்களிருந்து சஞ்சரிக்கும் உலக, புவன, போக, தத்துவங்களையுமுண்டாக்குவர்.

அந்த அனந்த தேவநாயனார் ஸ்ரீகண்ட பரமேசுவரனை அதிட்டித்துக்கொண்டு அவரால் பிரகிருதியிலிருந்து உதிக்கின்ற சிருஷ்டியாகி கிருத்தியங்களைச்செய்விப்பர்.

அந்த ஸ்ரீகண்ட பரமேசுவரர் பிரமாவை அதிட்டித்துக்கொண்டு பஞ்சபூத பௌதிகத்தால் தூலகாரிய சிருஷ்டியைச் செய்துவைத்து அதில் மிதுன சிருஷ்டியால் பிருதிவி முதல் ஆகாயமீறாக, அண்டங்கள், புவனங்கள், சகலருடைய தூலசரீரங்களையும் நின்மலனருளால் உண்டாக்குவார். மேலும் அந்த ஸ்ரீகண்ட பரமேசுவரர் விஷ்ணுவை அதிட்டித்துக் காத்தலையும், உருத்திரரை அதிட்டித்து அழித்தலையும் செய்வார்.

பதி இலக்கணம் முற்றிற்று.

பசு இலக்கணம்.

பசு என்பது ஆன்மா. இந்த ஆன்மாவானது குன்றிமணி ஒருபொருளாயிருந்தும், மூவகைப்பேதங்காட்டுவதுபோல, விஞ்ஞானகலர், பிரளையாகலர், சகலரென மூவகையாயிருக்கின்றது.

ஆன்மாவின் பரியாயநாமங்கள்—இயமானன், அணு, உயிர், ஜீவன், புமான், தேகி, கிஞ்சிக்ஞன், சுதந்திரகீனன், அகர்த்தா, அறியாதவன், உள்ளம், பஞ்சகஞ்சுகன், சைதன்னியன், பிரகிருதி, புத்தி பிராணன், சதசத்து, புட்கலன், சேத்திரகன், ஞாதுரு, பரதந்திரன், சேதனன் இவைமுதலான பெயர்களாம்.

ஆன்மாவின் தன்னியல்பாவது, அனாதியே குற்றமுடைய இச்சாஞானக்கிரியையுடையதாய், அனாதிபெத்தமாய், இருண்மலத்துள் அழுந்தி மலத்தால் மறைக்கப்பட்டிருப்பதாய், பாசத்திற் கட்டுண்டிருப்பதாய், சத்துச்சித்தாய், தூலச்சித்தாய், சாந்ததன்வண்ணமாய், தானாக ஒன்றையும் அறியமாட்டாததாய், மாயாகருவிகூடியறிவித்தால் மாயாகாரியங்களில் ஒவ்வொன்றாய் அறிவதாய், அறிவித்தாலுஞ் சிவத்தை அறிவதரிதாய், அதையும் அது அறிவித்தால் அறிவதாய், அறிந்ததையும் மறந்து மறந்து நினைப்பதாய், கேவலமாய், நித்தியமாய், வியாபகமாய், சரீரங்கடோறும் வெவ்வேறு வினைகளைச் செய்து வினைப்பயனை அனுபவிப்பதாய், மாயை என்னுந் துணைக்காரணத்தையுடையதாய், அந்தத்தனுவுக்கேற்ற சிற்றறிவுஞ் சிறியதொழிலுமுடையதாய், நுண்மையாயிருக்கின்ற தத்துவங்களாகிற சூட்சம தேகங்களுக்குக் காரண வியாபியாய், முத்திதெசையில் அசுத்தமாயை, சுத்தமாயைகளுக்கும் மேற்பட்ட வியாபகமுடையதாய், சுத்தமென்ற அவத்தையில், மலபரிபாகத்தை யடைந்து, பரமாசாரியனுடைய

Koviloor Digital Library

உபதேசத்தாற்கூடும் மேலான ஜாக்கிரம், மேலான கனவு, மேலான சுழுத்தி, மேலானதுரியம், துரியாதீதம் என்ற இவ்வவத்தைகளில் கூடியிருந்து சிவதரிசனஞ்செய்து சிவாநந்தத்தை அனுபவிப்பதாயுமிருக்கின்றது.

மேற்சொல்லிய மூவகை ஆன்மாக்களில் விஞ்ஞானகலர்களாவார் அட்டவித்தி யேசுவரர்களாகவும், சத்தகோடி மகாமந்திரர்களாகவும், ஆணவமலமொன்றையுடையவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இவர்கட்குச் சுத்தமாயாதத்துவமே, தனு கரண புவன போகமாயிருக்கும். இவர்களில், பக்குவர்கட்கு, பரமசிவன் அனுக்கிரகிக்கும் முறைமையாவது அறிவினின்று திருவருள் உதிப்பித்து, ஆணவமலத்தைப்போக்கி இரக்ஷிப்பர்.

பிரளையாகலர்கள் நூற்றுப்பதினெட்டு உருத்திரர்களாகவும், புவனகருத்தாக்களாகவுமே இருக்கிறார்கள். இந்தப் பிரளையாகலர்கள் ஆணவம், கன்மம் ஆகிய இருமலமுடையவர்கள். இவர்களுக்கு வித்தியாதத்துவம் தனுகரணபுவனபோகமாயிருக்கும்; இவர்கட்கு மாயை இருந்தும் அதனால் மயக்கமில்லை. இவர்களில் பக்குவர்கட்குப் பரமசிவம் அனுக்கிரகிக்கும் முறைமையாவது அந்தச் சிவன் மான், மழு, சதுர்ப்புயம், காளகண்டம், திரிநேத்திரங்களோடு திருமேனிகொண்டெழுந்தருளி இருமலத்தைப் போக்கி இரக்ஷிப்பர்.

சகலராவார் தேவர்முதல் கிருமியீறாகவுள்ள ஜீவசெந்துக்களாயிருக்கின்றார்கள்.

இவர்கள் ஆணவம், கன்மம், மாயை, என்னும் மும்மலத்தையுடையவர்கள்; இவர்களுக்குப் பிரகிருதிதத்துவம், தனு, கரண, புவன போகமாயிருக்கிறது.

மனுக்களில் பக்குவர்கட்கு, பரமசிவம் அனுக்கிரஞ்செய்யுமுறைமை எங்ஙனமெனின் பரமசிவன் ஞானாசாரியமூர்த்தமாய் மானிடச்சட்டைசாத்தி எழுந்தருளி, சிவதீக்கை செய்து ஞானத்தை அனுக்கிரகித்து மலமாயாதி கன்மத்தை நீக்கி மோட்சத்தைக் கொடுப்பர்.

பசு இலக்கணம் முற்றிற்று.

பாச இலக்கணம்.

செம்பினிற் காளிதம்போல அனாதியே ஆன்மாக்களுடன் கலந்திராநின்ற மலத்துக்குப் பாசமென்று பெயர்.

அம்மலம் ஆணவமலம், கன்மமலம், மாயாமலம், மாயேயம், திரோதாயி என ஐவகைப்படும்.

அவற்றுள் ஆணவமலமானது ஒருபொருளாய் எங்கும் வியாபியாய், அநேகஞ்சத்திகளையுடையதாய், அந்தச்சத்திகளைக் கொண்டு ஆன்மாக்களை அனந்தவிதமாய் நடத்தத்தக்க எண்ணிறந்த சாமர்த்தியமுடையதாய், நற்கருமங்களைச் செய்யவொட்டாமற் றடுப்பதாய்,

Koviloor Digital Library

பாவபுண்ணியமின்னதெனத் தெரியவொட்டாமற் செய்வதாய், மூலமலமாய், பரிபாகத்தில்மட்டும் நீங்குவதாயிருக்கின்றது.

மேலுமிந்த ஆணவமலமானது மெய்யைப் பொய்யாகவும், பொய்யை மெய்யாகவும், இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவும், ஞானத்தை அஞ்ஞானமாகவும், அஞ்ஞானத்தை ஞானமாகவும், ஆன்மாக்களின் நெஞ்சத்திற் பதித்துத் தீவினையைச்செய்வித்து அதற்கீடாகப் பலவகைப்பிறப்பில் அவர்களை யழுந்தச்செய்யும்.

கன்ம மலமானது வியாபகமாய், தனுக்கள்தோறும் வெவ்வேறாய், மனவாக்குக் காயங்களினாலறிந்தும் அறியாமலுமியற்றுவதினால் வந்தேறுகிற புண்ணிய பாவங்களாய், சுகதுக்கங்களைப்பண்ணுவதாய், அனுபவித்தாலன்றி நீங்காததாய், விதிப்படி பரிகாரஞ்செய்யின் நீங்குவதாய், நெல்லுக்குள்முளைபோல ஆன்மாவைப் பற்றியிருப்பதாய், சங்கிலிபோலத்தொடர்ச்சியுள்ளதாய், பிரவாகத்து அலைபோல அழிந்தும் ஆகியும் வருவதாய், சிருஷ்டிகாலத்திற் காரியப்படுவதாயிருக்கின்றது.

இந்தக் கன்மமானது சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியமென மூவகையாய் விரியும்.

இவற்றுள் சஞ்சிதமானது அனாதிதொட்டு ஜனனங்கடோறும் ஆர்ச்சித்த வினையிற், புசித்து மிஞ்சியதாகி ஆறத்துவாக்களிலுங் கட்டுப்பட்டுவருகிற புண்ணிய பாவங்களாம். ஆறத்துவாக்களாவன மந்திராத்துவா, பதாத்துவா, வருணாத்துவா, புவனாத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம். இவற்றில், மந்திராத்துவா சத்தகோடி மகாமந்திரம்; பதாத்துவா எண்பத்தொரு பதங்கள்; வருணாத்துவா ஐம்பத்தொரு அக்கரங்கள்; புவனாத்துவா இருநூற்றிருபத்துநான்கு புவனங்கள்; தத்துவாத்துவா முப்பத்தாறு தத்துவங்கள்; கலாத்துவா நிவர்த்தி, பிரதிஷ்டை, சாந்தி, அதீதை என நான்குமாம்.

பிராரத்தமானது, எடுத்துக்கொண்ட சென்மத்தில் அனுபவித்தற்குரிய இன்பதுன்பங்களைக் கொடுத்தற்கு முற்சென்மத்தில் ஈட்டப்பட்ட வினையினின்றும் எடுத்துக்கொண்ட வினையாம்.

ஆகாமியமாவது பிராரத்தம்புசிக்குமிடத்து அறிந்தும் அறியாமலுஞ் செய்கின்ற செய்கையால் வந்தேறுகிற புண்ணிய பாவங்களாயிருக்கின்றது.

மாயாமலமானது சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூவகைப்படும். இவற்றுள் சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டும் நித்தியம், அசுத்த மாயையிலிருந்து தோன்றிய பிரகிருதிமாயை அநித்தியம்.

சுத்தமாயையாவது நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சொல்வடிவமும் சுத்தமாகிய பொருள்வடிவமும் தோன்றுதற்கு முதற்காரணமாய், மயக்கஞ் செய்யாததாய் இருப்பது.

அசுத்தமாயையானது நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய், பிரளயகாலத்தில் ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய்,

Koviloor Digital Library

ஆன்மாக்களுக்குச் சுத்தாசுத்தமும், அசுத்தமுமாகிய தனுகரண புவனபோகங்களைத் தோற்றுவிப்பதற்கு முதற்காரணமாய், மயக்கஞ் செய்வதாய் இருப்பது.

பிரகிருதி மாயையென்பது அவ்வியக்தமான மூலப்பிரகிருதியாய் முக்குணங்களைத் தோற்றுவிக்கும்.

மாயேயமாவது மாயையிலுண்டாகிற தத்துவங்களும், அவைகளாலாகிய தனுகரண புவனபோகங்களுமாம்.

திரோதாயியாவது மேற்கூறிய ஆணவ கன்ம மாயையென்னும் மும்மலங்களையும் தொழிற்படுத்திப் பாகம் வருவிக்கும் சிவசத்தியாம். இது மலததைச் செலுத்துவதினாலே மலமென உபசரிக்கப்பட்டது.

மேலே விவரித்திருக்கிறபடி அனாதியே ஆன்மாக்களைப் பந்தித்திராநின்ற மலமானது, ஆன்மாக்களுக் கொரு பெரிதான பிணியாம். அப்பிணிக்கு மருந்து தானேவந்தடையாது. அவர்கள் தாமே தம் பெரும்பிணியைத் தீர்த்துக்கொள்ள வல்ல மருந்தறியார்கள். அம்மருந்திணையுதவிப் பிணிதீர்க்கும் பண்டிதன் சருவஆன்மாக்களிடத்திலுங் கலந்திருக்கின்ற நின்மலனாகிய சிவபெருமானேயாம். அப்பிணியாய ஆணவமலத்தை நீக்குதற்பொருட்டு மாயாமலகாரியமாய் தனுகரண புவனபோகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கூட்டுவிப்பன்.

ஆணவமலமாகிய அழுக்கை, மாயாமலமாகிய அழுக்கினா லெப்படிப் போக்கலாமெனின்? வண்ணான் கோடிப்புடவையிலே சாணியையும் உவாமண்ணையும் இட்டு மிகக்கருத்ததென்றெண்ணும்படி செய்து, முன்னையதாகிய அழுக்கோடு பின்னையதாகிய அழுக்கையும் போக்கி அந்தப்புடவையை மிக வெண்மையாகச் செய்வன்; அதுபோல சிவபெருமான் ஆன்மாவிடத்தே மாயாமலத்தைக்கூட்டி அதனாலேயே பந்தமாகிய ஆணவமலத்தோடு கன்மமலத்தையும் போக்கி அவ்வான்மாவை இரட்சிப்பன்.

சிவனும் அவருடைய ஞானசத்தியும், உயிர்களிடத்துக் கலந்துநிற்க, இருளாகிய ஆணவமலம் எப்படிப் பொருந்துமோவெனின், வெண்மையுடைய நெருப்பானது பசுமையுடைய மரத்தின்கண் அடிதொடுத்து முடியளவாய் வியாபித்திருப்பினும், அப்பசுமரம் வெந்தனவல்லவே, அம்மரமுதிர்ந்து பக்குவம் வந்தவிடத்து அதனிடத்துண்டாகிய தழலையுதிப்பிக்கும். அதுபோல் பரமசிவத்தினுடைய பராசத்தியானது மலபரிபாகம் வாராத ஆன்மாக்களிடத்து, பசுமரத்து அக்கினிபோல வியாபித்திருக்கும். மலபரிபாகம் வந்த ஆன்மாக்களிடத்துத் தமது பிரகாசத்தைச் சொலிப்பித்து, மலங்களைக்கெடுத்து இரட்சிக்குமென்க.

சரீரத்தில் ஆன்மா வியாபித்திருப்பதுபோல ஆன்மாவிடத்தில் சிவன் வியாபித்து நிற்பர். இங்ஙனம் வியாபித்திருக்குஞ் சிவனருளால், கிஞ்சிக்ஞரானவர்கள் அனாதியான மும்மலங்களைப் போக்கித் தங்களுள்ளத்தே அந்த நின்மலனைத் தரிசிக்கமாட்டாமல், தற்போதத்தால் இறந்து பிறந்துழலுவார்கள். பக்குவர்க்குப் பரமசிவன் ஆணவமலசத்தியைக்

Koviloor Digital Library

கெடுத்துத்தா னிரண்டறநிற்குமதனைத் தரிசிப்பிப்பன். இப்படித்தரிசனப்பட்ட பிரகாசத்தையுடைய அறிவை அவர்கள் பொருந்தினார்களென்பது, முன்னில்லாததை இப்போது சென்று கூடினார்களென்றதன்று. கண்ணிற் காசம் போனவளவே மிகுந்தபிரகாசமுண்டானாற்போல, இவர்களும் சிவனது பிரகாசத்தைக் கூடினார்களென்பதே.

இருட்டறையில் விழித்திருக்கின்றவனுடைய, கண்ணின்பிரகாசமானது பதார்த்தங்களுடனே சம்பந்தித்திருக்கையிலும் அவ்விடத்திலிருக்கும் பதார்த்தங்களையறியாது பின்பு தீபம் வந்து அந்தகாரத்தைப் போக்க, அப்போது தன்னுடைய சரீரத்தையும் மற்றப்பதார்த்தங்களையு மறியும். அதுபோல ஆன்மாவினுடைய சத்தியைத் தடைப்படுத்தின மலமானது சிவசத்தியினாலே நீங்க ஆன்மதரிசனமுண்டாம்; அதற்குமேற் பதிதரிசனமுண்டாம்.

மேகத்தில் மறைந்த ஆதித்தகிரணமானது அம்மேகம் நீங்கக் கண்ணுக்குத் தோன்றுமாறுபோல ஆன்மசத்தியைத் தடைபண்ணும் மலமானது நீங்க, தற்சொரூபமும் அதற்கு மேலாகிய பதிசொரூபமும் விளங்கும்.

யாவையும் கொல்லத்தக்க தன்மையையுடைய ஆலகாலவிஷமானது சிவனுடைய கண்டத்திலேவந்து பொருந்தியிருக்கவும், அந்தச்சிவனை வாதியா தெப்படிப் தன் வலிமைகெட்டு நிற்கின்றதோ, அப்படிப்போலச் சிவனுடையதிருவடியை அடைந்த முத்தான்மாக்களை மலசத்தி வாதைபண்ணாமல் தானுங்கெடாமல் நிற்கும்.

ஆன்மாவின் அறிவையும், இச்சாஞானக்கிரியையையுந் தடுத்து மறைக்கின்ற ஆணவமலமாகிய அழுக்கை எப்படிப்போக்கலாமெனின்? வேதாகமங்களில் விதித்தபடி ஒழுகி, இருவினை இன்பதுன்பமொழிந்து, உண்மைச் சிவஞானிகள் செய்யுமுபதேசத்தையுந் திருவருளையும் பெற்றகாலத்துச் செம்பினதுகளிம்பு இரதகுளிகை பட்டமாத்திரத்திற் கனகமாய் விளங்குமாறுபோலச் சற்குருவின் தீக்ஷை முதலியவற்றால் முந்தினமயக்கவறிவுநீங்கித் தெளிந்து, மூடபொருளினது தன்னியல்புண்டு, பொதுவியல்பு நீங்கிப், பந்தத்தில் ஆணவமலத்தோடு கூடி யதுவாய் நின்றதுபோல, ஆன்மா முத்தியிற் சிவத்தோடு கூடிச் சிவமாய் நிற்கும்.

அங்க உறுப்புக்களின் இலக்கணம்.

அதாவது ஜீவான்மாவுக்கும், தத்துவம் தொண்ணூற்றாறுக்கும் உறைவிடமாயிருக்கிற மனித சரீர உறுப்புக்களையும், அவைகளின் தொழில்களையுங் கட்டுப்பாடுகளையும் பற்றிப் பகுத்துச் சொல்வதாம்.

எலும்புகளின் விவரம்.

எலும்புகள் ஏறக்குறைய (208). தசைகள் நீங்கிய எலும்புக்கோவைக்குக் கங்காள மென்று பேர். அது வெண்ணிறமுள்ளதாய், உறுதியான சவ்வினால் மூடப்பட்டதாய், அதற்கு அதிக உறுதியைத் தருகின்ற சுண்ணாம்பும் ஒருவிதப்பசையுமுள்ளதாய், மெதுவுள்ளதாய், நடுவயதுவரை

Koviloor Digital Library

வளருவதாய், முதுமையில் இலேசாகத் தெறிக்கத்தக்க வயிரமுள்ளதாயிருக்கின்றது.

அவ்வெலும்புகளில் நெஞ்செலும்பு குழந்தையில் எட்டுத்துண்டாகவும், வாலிபத்தில் மூன்று துண்டாகவும், முதுமையில் ஒரே துண்டாகவுமாறும். கபாலத்தில் கருக்கு விளிம்புகளால் இசைக்கப்பட்டிருக்கிற எலும்புத்துண்டுகள் (8) செவிகளிரண்டிலும் சிறு எலும்புத்துண்டுகள் (8) முகத்தில் எலும்புத் துண்டுகள் (14) நாவடியில் தனு எலும்பு (1) நெஞ்செலும்பு (1) ஆசன எலும்புகள் (4) பெருந்துவாரத்தின் வழியாய் ஒரு நரம்புக்கொடியினால் கோக்கப்பட்ட முள்ளந்தண்டின் முள்ளெலும்புகள் (24) அந்த முள்ளந்தண்டுடன் இடப்பக்கத்தில் (12) வலப்பக்கத்தில் (12) ஆக இசைக்கப்பட்டிருக்கிற பழு எலும்புகள் (24) தோட்பட்டைகளிரண்டிலும் பக்கத்துக்கு ஒவ்வொன்றாக நெஞ்சறையின் பின்பக்கமாக இருக்கின்ற முக்கோணவடிவமுள்ள பட்டை எழும்புகள் (2) காறை எழும்புத்துண்டுகள் (2) இவ்விரண்டில் ஒரு துண்டின் ஒரு தலைப்பு வலப்புயத்திலும் அதின் மற்றொரு தலைப்பு அந்த நெஞ்செலும்பிலும் பொருந்தி ஒன்றாக இருக்கிறது. நெஞ்சறைக்கு மேலே பின்பக்கமாக இருக்கிற முக்கோணவடிவமான தோட்பட்டை எலும்புகள் (2) புயங்களிரண்டிலும் புயத்துக்கு ஒவ்வொன்றாக இருக்கிற புயஎழும்புகள் (2) முன்கைகளிரண்டிலும் ஒவ்வொன்றிற்கு இரண்டாக எலும்புகள் (4) கைக்குளசிகளிரண்டிலும் ஒவ்வொன்றுக்கும் இரண்டு நிரையாயிருக்கும் விகற்பமான சிற்றெலும்புகள் (8) ஆக, சிற்றெலும்புகள் (19) உள்ளங்கைகளிரண்டிலும் ஒவ்வொன்றுக்கு (5) ஆக எலும்புகள் (10) நீளபேதமான கைவிரல்கள் பத்தில் எட்டுவிரல்களில் விரல் ஒவ்வொன்றுக்கு மும்மூன்று எலும்புகளாக எலும்புகள் (24) பெருவிரல்களிரண்டில் ஒவ்வொன்றுக்கும் இரண்டாக எலும்புகள் (4) தொடைகளிரண்டில் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொன்றாக இருக்கின்ற எலும்புகள் (2) அந்தத் துடை எலும்புகள் தேகத்திலுள்ள எலும்புகள் எல்லாவற்றிலும் நீளமாயும் பெரிதாயு மிருக்கின்றன. அதன் குமிழ் பந்து வடிவமுள்ளது. முழந்தாட் சில்லெலும்புகள் (2) கால்களிரண்டிலும் ஒவ்வொன்றுக்கு இரண்டாக எலும்புகள் (4) அவைகளிலொன்று பெரிதாயும் மற்றொன்று சிறிதாயுமிருக்கின்றது. பாதத்தில் எலும்புகள் (29) அவைகளில் பின்பாதத்தில் (7) நடுப்பாதத்தில் (5) நுனிப்பாதத்திலுள்ள விரலெலும்புகள் (14) ஆம். இதுபோல மற்றொரு பாதத்திலும் எலும்புகள் (29) ஆம்.

மேற்சொல்லிய முள்ளந்தண்டின் முள்ளெலும்புகளை வெண்மையான குருத்தெலும்புகளால் இணைக்கப்பட்டிருப்பதனாலே அந்த முள்ளந்தண்டு எப்பக்கத்திலும்சவண்டு அசைந்துகொடுக்கும். அந்தத்தண்டின் மேற்பக்கத்தில் பொருந்தியிருகின்ற தலையின் மூளை குலுங்காதபடி கழுத்திலும் முதுகிலும் இடுப்பிலும் முன்குவிவு பின்குவிவுமாக மூன்றுவளைவுக ளிருக்கின்றனவாம். அந்தத் தண்டின் அடிப்பக்க ஆசனக்கூட்டில் பொருத்தப்பட்டிருக்கிறது. அந்த ஆசனத்தின் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலுமிருக்கிற குழியில் தொடை எலும்புகளிரண்டின் குமிழ்கள் பொருந்தி தலைமுண்டத்தைக் தாங்கிக்கொண்டிருக்கிறது.

Koviloor Digital Library

நெஞ்செலும்பு, பழுவென்பு, முள்ளந்தண்டு என்பு இவைகள் கூடுதலினாலாகி நெஞ்சறைக்குள் இரத்தாசயம், சுவாசப்பை, இரத்தமோடுகிற பெரிய நாடி நாளங்களுமிருக்கின்றனவாம். தலை நீங்கலாகக் கழுத்துமுதல் இடுப்புவரையுள்ள உடல் முண்டமெனக் கூறப்படும்.

ஒரு எலும்பு முறிந்துபோனால் அதின் தலைப்புக்கள் மொக்குவைத்து பொருந்தும். முறிந்த எலும்பு ஒரு கிழமைக்குள் ஊறத்தொடங்கும். அதுமுறிந்தபின்பு கொஞ்சவேளையில் அதற்கயலான தசை வீங்கும். அம்முறிவு பொருந்த அச்சுவைத்துக்கட்டினால் வீக்கத்துக்கு இடமிருக்கத்தக்கதாக நுகைவாகக்கட்ட வேண்டும். அப்படிச்செய்யாமல் இறுக்கிக்கட்டினால் நோயாளிக்கு அதிக உபாதையுண்டாவதுமன்றிச் சதையும் அழுகி அவயவக்குறைவும் நேரிடும். முறிந்த எலும்பு ஊறியபின்பு அந்த இடத்தில் விறைப்பும் நோவுங் கொஞ்சக்காலத்துக்கிருக்கும் நாட் செல்லச் செல்ல அவை நீங்கிவிடும். முழங்கைப் பொருத்தி லிப்படி நேரிட்டால் உள்ளங்கைமேலே நிறகத்தக்கதாய் அதை மார்போடே வளைத்துவைக்கவேண்டும். முழந்தாட்பொருத்தில் இப்படி நேர்ந்தால் அதைக் கொஞ்சங்குறைய நேராய்வைக்க வேண்டும்; விறைப்பு நீங்கிவிடும்.

பேசிகளின் விவரம்.

பேசிகளென்பவை மிகவும் மெதுவான சிவந்த நிறமுள்ள தசை இழைகளாம் அவைகளை எண்ணில், 600–ஆம். இந்த இழைகள் தலை, கழுத்து, முண்ட முதலில் அவயங்களிலும், குடல்முதலிய உள்ளுறுப்புக்களிலும், சில நேராகவும், சில இறகில் மயிர்களைப்போலச் சாய்வாகவும் சென்று தசையிலும் பொருந்தும். பின்னும் இந்த இழைகள் சில இடங்களில் எலும்பின் பேரில் ஒன்று அல்லது இரண்டடுக்காகவும் மற்ற இடங்களில் ஒன்றின்மேலொன்றாக ஐந்து ஆறு அடுக்காகவும் மெல்லிய வெள்ளைச்சவ்வினாற் பிரிக்கப்பட்டுத் தோலை அடுத்திருக்கின்றது. தசை இழைகளைச் சூழவும் அவைகளுக்கு இடைவெளிகளிலும் மஞ்சள் நிறமான கொழுப்பு இருக்கின்றது.

குழந்தைகள் வாலிபர்கள் இவர்களுடைய உடம்பில் இந்தக் கொழுப்பு அதிகமாயிருக்கின்றது. அதனால் அவர்களுடைய உடம்பு திரண்டு புஷ்டியாயிருக்கிறது. முதிர்ந்தவர்களில் இந்தக்கொழுப்புக் குறைவாயிருக்கிறது. வியாதியினால் போசனம் குறைவு நேர்ந்தால் அந்தக்காலத்தில் சரீரம் அந்தக்கொழுப்பினால் போஷிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட தருணங்களில் கொழுப்பு இரத்தமாய் மாறும். இப்படி மாறுவதினால் முகம் சுரித்து, கண் தாழ்ந்து எலும்புகள் வெளிப்படையாய்த் தோன்றும். தேகத்திலுள்ள சகல அவயவங்களின் இயக்கங்கள் யாவும் தசை இழைகள் சுருங்குவதினாலும் நீளுவதினாலும் உண்டாகின்றனவாம்.

பற்களின் விவரம்.

பற்கள்–32–அவைகளில் கீழ்த்தாடை எலும்புக்குழிகளில் 16–ம் மேற்றாடை எலும்புக்குழிகளில் 16–ம் முளைத்திருக்கின்றன. பாலர்களுக்கு ஒவ்வொரு தாடையிலும் பத்துப்பல்லு முளைத்து ஆறுவயதுமுதல்

Koviloor Digital Library

டந்நாலுவயதுக்குள்ளாக அவைகள் விழுந்து ஒவ்வொருதாடையிலும் பதினாறு பதினாறாக வேறே நிலையான பறகள் முளைக்கும். மேற்றாடைவாய்ப் பறகளாறுக்கும் மும்மூன்று வேர்களும், கீழ்த்தாடைவாய்ப் பல்லுகளாறுக்கும் இரண்டிரண்டு வேர்களும், மறறப் பல்லுகளுக்கு ஒவ்வொரு வேருமுண்டு. ஒவவொரு வேரிலிருக்குந் துவாரத்தில் சிறுநரம்புகள் ஓடியிருக்கும்.

இரைப்பையிலே இலேசாய்ச் சமிக்கத்தக்கதாய்ப் போசன பதார்த்தங்களை நசுக்கி அரைத்துவிடுவதும், பேசும்பொழுது, சொற்களையும் எழுத்துக்களையுந் தெளிவாய் உச்சரிக்கப்பண்ணுவதும் பல்லுகளின் தொழிலாம். அவைகளில் வியாதி நேரிடாமல் அவைகளைச் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். பல்லுகளிலுண்டாகுஞ் சிலந்தி முதலான விரணங்களினாலும், அவைகளுக்குச்செல்லும் நரம்புகளிலுண்டாகும் வியாதிகளினாலும் பல்லுவலியுண்டாகிறது.

ஜீரண உறுப்புக்களின் விவரம்.

வாய், பல், உமிழ்நீர்க்கோளம், மிடறு, இரைக்குழல், இரைப்பை, துணைக்குக்கி, குடல்கள், இரசாயனி, இரசதாரை, ஈரல், கணையம் இவைகள் ஜீரண உறுப்புக்களாம்.

இவைகளில், வாய்என்பது பற்களும் சுவைக்குரிய கருவிகளுமிருக்கும் ஓர் உறுப்பாம்.

நாவுக்கு அடியிலும் தாடையுள்ளும் காதுக்கு அடுக்கவும் பக்கத்துக்கு இரண்டாக இருக்கும் உமிழ்நீர்க்கோளங்கள் (6) ஆம்.

மிடறு என்பது அடி நாவிலிருந்து இரைக்குழல்மட்டும் ஓடியிருக்கிற ஓர் குழல். அது சவ்வு இளைகளாலுண்டாக்கபபட்டதாய் மூன்று அங்குல நீளமுள்ளதாய் விசாலமுள்ளதாயிருக்கிறது.

இரைக்குழல் என்பது ஒரு அடி நீளமுள்ள தடித்த சவ்வுக்குழலாம். அதின் வழியாய்ப் போசனபானங்கள் இரைப்பையினுட் செல்லும்.

இரைப்பை என்பது மெல்லிய இசிவுள்ள மூன்று சவ்வுப்படலங்களால் ஆகியது. அது நெஞ்சுக்குக் கீழே அடிவயிற்றிலே உடம்புக்கு நடுவாய்ச் சற்று இடப்பாகத்தில் இருக்கிறது. அம்மூன்று படலங்களில் வெளிப்படலம் ஒத்த செப்பமுள்ளதாய் மிகவும் அழுத்தமுள்ளதாயிருக்கிறது. நடுப்படலம் நுண்ணிய இழைகளால் ஆகிய இரண்டு அடுக்குள்ளது. உட்படலம் அதிக விசாலமுள்ளதாய், மெதுவானதாய், வெகுமடிப்புக்களுள்ளதாய் இருக்கிறது. அம்மடிப்புக்களில் சளிபரவியிருக்கிறது. அந்தமடிப்பு, சிறுகுடல் பெருங்குடல்களுக்கு உள்ளுறையாய் அவைகளின் தொடர்முழுதும் ஏகமாய்ப் பரந்திருக்கிறது. பின்னொரு சலப்பை குண்டிக்காய் முதலியவைகளுக்கு உள்ளுறையாயிருக்கிறது.

இரசாயனி என்பது சிறுகுடலின் உடபக்கத்திலிருந்து கிளம்பிய சிறுகுழல்களாம். அவைகள் மணிக்குடலுக்கு ஊடாகச்சென்று இரசதாரையிலே பொருந்துகின்றது.

Koviloor Digital Library

குடல்கள் சிறுகுடல் பெருங்குடல் என இருவகைப்படும். அவைகள் குழலாயுள்ளன. சிறுகுடல் ஏறக்குறைய (25) அடி நீளமுள்ளதாயும், பெருங்குடல் ஏறக்குறைய (5) அடி நீளமுள்ளதாயும் இருக்கின்றன. அதில் நீண்ட பகுதி மலரந்திரம் கடைப்பகுதி மலவாசியாம்.

துணைக்குக்கி என்பது சிறுகுடலிலே மிகவும் விசேஷமான ஒரு பாகம்; அது ஏறக்குறைய, பன்னிரண்டங்குல நீளமுள்ளது; அது இரைப்பையின் கீழ்த்துவாரத்திலே தொடுத்து இருக்கின்றது. அதற்குள்ளே ஈரலிலிருந்து வருகிற பித்தநீர்க் குழலும், கணையத்திலிருந்துவருகிற கணையநீர்க்குழலும் பொருந்துகின்றன.

இரசதாரை என்பது ஒரு குழலாம். அது ஈரலுக்குப்பின்னாகத் தொடங்கி முள்ளந்தண்டின் முற்பக்கத்தின்வழியாய் ஏறி அடிக்கழுத்தில் கீழ்நோக்கி முன்பக்கமாக மடங்கித் தனக்குள்ளிருக்கும் இரசத்தை இடதுகாறைஎன்புக்குப்பின்னால் இருக்கும் நாளத்துட் செலுத்தும்.

ஈரல் என்பது ஒரு அடி நீளம் குறுக்களவும் நாலு இறாத்தல்நிறையுமுள்ள கருஞ்சிவப்பான ஒரு உறுப்பாம். அது வலப்பக்க விலாவுக்குள் வலச்சுவாசப்பைக்குக் கீழே இருக்கின்றது. இதிலிருந்து பித்தநீர் பிறக்கிறது. இதன் கீழ்பக்கத்திலே மஞ்சள் நிறமான கசப்புள்ள பித்தநீர் இருக்கும் சிறு பை ஒன்று இருக்கிறது. இந்தப்பைக்குப் பிளிகை என்றுபேர். இந்தப் பித்தநீரானது சரீரம் சுகமாயிருக்கும்போது இரைப்பைக்குட் போகாமல் துணைக்குக்கிக்குட் செல்லும். கணையம் என்பது இரைப்பைக்குப்பின் சற்றுக்கீழாக இருக்கின்ற நீண்டஒடுங்கிய சப்பையான ஒரு உறுப்பாம். அதிலிருந்து கணையநீர் துணைக்குக்கிக்குட் செல்லும்.

பிளிகை என்பது சற்றே வட்டித்த சப்பையான கருமை நிறமுள்ள ஒரு உறுப்பாம். அது இடதுபக்கத்திலே இரைப்பையோடும், கணையத்தோடும் அடுத்திருக்கின்றது. அது காச்சல்வந்த காலத்தில் ஒருவேளை மிகப்பருப்பதுமுண்டு அதைக் காச்சற்கட்டி என்பார்கள்.

அவளிகை என்பது நாலுமடிப்புள்ள ஒரு சவ்வாம்; அது முன்தானையை போலக் குடல்களுக்குமுன்னே தொங்கிக்கொண்டிருக்கும்.

குண்டிக்காய் என்பது இடுப்பில் முள்ளந்தண்டுக்கு அருகே இருபக்கத்திலும் இருக்கும் நாலைந்து அங்குல நீளமுள்ள இரண்டு உறுப்புக்களாம். இவைகள் இரதத்திலிருந்து அமுரியைப் ஒவ்வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடிவயிற்றுக்குள் நடுவே கிடக்கும் ஜலப்பையை நாடியோடி அதினுடனே பொருந்துகின்றன. அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டுச்சொட்டாய இறங்கிச் சலப்பையைநிரப்பும்.

மேலே சொல்லிய ஜீரண உறுப்புக்களின் தொழிலாவது, உடலை வளர்ப்பதற்குத் தின்னப்படும் போசன பதார்த்தங்கள் பல்லுகளால் மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்து விழுங்க அப்போது மிடற்றுக் குழல்வழியாய் இரைப்பைக்குட் செல்லும். அந்தப் பையில் அவைகள் நசுக்கப்பட்டுத் திரண்டு வரவர அந்தப்பையின் உட்பக்கத்திலிருந்துண்டாகும்

Koviloor Digital Library

புளிப்புள்ள நீருடன் கலந்து, நரைநிறமான பாகாகச்சமைத்து, துணைக்குக்கிக்குட்சென்று, பித்தநீருடனேயும் கணையநீருடனேயும் கலந்து, பால்நிறமாகவும் மலமாகவும் மாறுதல் அடைந்து, சிறுகுடலுக்குட் செல்லும். அதிலுண்டாயிருக்கின்ற சிறு குழல்கள் அந்த ரசத்தை மட்டும் உறிஞ்சி, இதைக் காறைஎன்புக்குப் பின்னாலிருக்கிற ஒரு நாளத்துட் செலுத்தும். அந்த நாளத்தின்வழி சுவாசப்பை நாளத்துட்செல்லும். இங்ஙனம் சுவாசக்காற்றுப்பட்டு இரத்தமாக மாறிவிடும். மலமானது பெருங்குடலுக்குட்சென்று மலவாயில்வழி வெளியிற் கழிந்துவிடும்.

இரத்தவுறுப்புக்களின் விவரம்.

இரத்தாசயம் நாடி நாளம் தந்துகி என்பன இரத்தவுறுப்பாம். இவைகளில் இரத்தாசயமாவது அவரவருடைய பொத்திய கைப்பருமனில் கொட்டைப்பாக்கு வடிவமாய் இரட்டை உறுப்பாய் இரத்தச் சவ்வினாற் சூழப்பட்டதாயிருக்கின்றது. அவ்வரண்டிற்கும் கீழும் மேலுமாய் இரண்டிரண்டு அறைகள் இருக்கின்றன. வலப்பக்கமாயிருக்கும் அந்த உறுப்பின் மேலறைக்கும் கீழறைக்கும் மூன்று சவ்வுக் கபாடங்களும் இடப்பக்கமாயிருக்கும் அந்த உறுப்பின் மேலறைக்கும் கீழறைக்கும் இரண்டு சவ்வுக்கபாடங்களு மிருக்கின்றன. அந்த வலஉறுப்பின் கீழறையிலிருந்து ஒரு நாடியும், அந்த இடஉறுப்பின் கீழறையிலிருந்து வளைவான ஒரு நாடியும் கிளம்பும். அவ்விரண்டு நாடிகளில் வலஉறுப்புநாடியானது இடஉறுப்புநாடி வளைவுக்குள்ளாகச்சென்று, அங்கே இரண்டாய்ப்பிரிந்து, ஒன்று வலச்சுவாசப்பைக்கும் மற்றொன்று இடச்சுவாசப் பைக்கும் செல்லும்.

தந்துகி என்பது நுண்ணிய குழல்களாம். அவைகள் மற்றநாடி நாளங்களுக்கு இடையேநின்று அவைகளுடன் சம்பந்தப்படும்.

இரத்தச்சுற்றோட்டத்தின் விரமாவது.

கருமையான அசுத்த இரத்தமானது இரத்தாசயத்தின் வலப்பக்கத்தின் மேலறையிலிருந்து அதின் கீழறைக்குட்செல்ல அதன் கிளைகள் அந்த இரத்தத்தை வலச்சுவாசப்பைக்கும் இடச்சுவாசப்பைக்கும் கொண்டுபோகின்றன. அதற்குப் பின்பு அந்த இரத்தமானது சுவாசப்பையிலுள்ள சிறுகுழல்களிலே செவ்விரத்தமாகி அவைகளின் வழியாய்ச் சுவாசப்பை நாளங்களிலே சேர்ந்து இவைகளின்வழியாக இரத்தாசயத்திலுள்ள இடது மேலறைக்குள்ளும், அதன் கீழறைக்குள்ளும் செல்லுகிறது. இதிலிருந்து சுத்த இரத்தம் கண்டறைநாடிக்குள்ளே தள்ளுண்டு அதன் கிளைகள் வழியாய் சரீரமெங்கும் பின்னியிருக்கும் தந்துகி என்னும் சிறுகுழல்களைப் பொருந்தி முடிகின்றனவாம்.

இரத்தாசயத்தின் மேலறைகள் இரண்டும் ஒரே சமயத்தில் விரிவதனாலும், கீழறைகளிரண்டும் ஒரே சமயத்தில் சுருங்குவதினாலும், இரத்தம் சரீரமெங்குமோடி மீளவும் இரத்தாசயத்தில் வந்துசேருகிறது. இப்படி இரத்தாசயம் ஒவ்வொருக்காற் சுருங்க நாடியும் ஒவ்வொருக்காற் சுருங்கும்.

Koviloor Digital Library

சரீராப்பியாசத்தால் இரத்தம் தாராளமாய் ஓடும். அசுத்தக் காற்றினால் இரத்தம் கெட்டு அதின்கதி மட்டிடும்.

சோஷணக்குழல்களின் விவரம்.

சோஷணக்குழலென்பவை சிறுகுடலிலிருந்து கிளம்புகின்ற குழல்களாம். அவைகள் இரசாயனி, மாசனி என இருவகையாய் நாளங்களுடனே பொருந்தியதாய் இருக்கின்றனவாம்.

தின்ற பதார்த்தங்கள் குடலிலே சமியாதிருக்கையில் அதன் சாரத்தை உறிஞ்சிப்புது இரத்தமாக்கி அந்த இரத்தத்தை நாளத்துட் செலுத்துதல் இரசாயனிகளின் தொழிலாம்.

குடலில் பழுதுபட்டுக் கஞ்சலான பகுதிகளையும், அதில் சமியாமலும் சுகவீனத்தையுண்டுபண்ணும் வைரமானவைகளையும் அணுஅணுவாய் உறிஞ்சி விசர்க்கம் வழியாய்க் கழியும்படி நாளங்களுட் செலுத்துதல் மாசனிகளின் தொழிலாம்.

இவைகளைவிட நாளங்களின் நுனிகளிலிருந்து உதிக்கின்ற மகா நுண்ணிய குழல்கள் சரீரத்தில் எப்பகுதிகளிலுமுண்டு. அவைகள் வரவர ஒன்றுடனே ஒன்று கூடித் திரட்சிதிரட்சியாய்ப் பருத்திருப்பதினாலே கழுத்து, கமுக்கட்டு முதலாகிய இடங்களில் சிலந்தி முதலான வியாதிகள் வந்தால் அவைகள் புடைத்துவீங்கும். அதை நெறிகட்டியிருக்கின்றதென்க் கூறுவர். உடம்பிலே புண்ணுண்டாகியிருக்கும் போது நஞ்சுப்பதார்த்தங்களை அதிலே உபயோகிக்கக்கூடாது. அப்படி உபயோகித்தால் அந்தக் குழல்களின்வழியாய்த் தேகத்துட்சென்று அதற்குக் கெடுதியுண்டாம்.

விசர்க்க உறுப்புக்களின் விவரம்.

உடம்பின் எல்லாப்பகுதிகளிலும் பின்னலாய்ச் செறிந்திருக்கிற நுண்ணிய குழல்களின் தலைப்புக்களாயும், உடலிலும் உட்டோலிலும் குடலின் உட்சவ்விலும் இருக்கும் சிறு சிறு பைகளாயும், தோலிலே காணப்படும் சிறு கண்ணறைகளாயும் இருக்கின்றனவாம்.

மேற்படி உறுப்புக்களின்வழியாய் இரத்தத்திலிருந்து கழிக்கவேண்டிய நீரைக்கழித்துவிடப்படும். அப்படியே உமிழ்நீர்க்கோளங்கள் உமிழ்நீரையும், ஈரல் மஞ்சள் நிறமான கசப்புநீரையும், குண்டிக்காய் உவர்ப்புள்ள அமுரியையும் கழிக்கின்றன. இப்படி மேற்படி விசர்க்க உறுப்புவழி கழியவேண்டியவைகள் கழியாவிட்டால் வியாதியுண்டாகும். தோலின்வழியாய் நித்தமும் கழியவேண்டியவைகள் தடைபட்டால் சுரம் சலதோஷ முதலானவையுண்டாம். ஈரலிலிருந்து பாயவேண்டிய பித்தநீர் தடைப்பட்டால் அஜீரணமுண்டாம். வியர்வை கழியாவிட்டால் உடல்கனக்கும்; இரத்தக்கெடுதி, வயிற்றுக்கழிச்சல், வயிற்றுளைவு உண்டாம்.

போஷண உறுப்புக்களின் விவரம்.

போஷண உறுப்புக்களென்பவை கூந்தலான சிறுகுழல்களாம், சரீரத்திலுள்ள பல பகுதிகளைப் புதிப்பிக்கிறது அவைகளின் தொழிலாம்.

Koviloor Digital Library

அந்தத் தொழிலினால் சரீரம் வளருகிறது. இரத்தம் உடம்பிலே சுற்றி ஓடுகையில் அங்கங்கேயுள்ள போஷணக்குழல்கள் அந்தந்த உறுப்புக்கொத்த அணுக்களை இரத்தத்திலிருந்து பகுத்தெடுத்து அங்கங்கே பிரித்துவிடுகின்றன. இவ்விதமாகத் தேகமடங்கலும் இரத்தம்ஓட அதிலுள்ள உறுப்புக்களெல்லாம் தங்கள் தங்கள் வளர்ச்சிக்கான அணுக்களை வாங்கிக்கொள்ளுகின்றன. போஷணம் சோஷணம் என்னும் உறுப்புகளின் முயற்சியால் ஏழு வருடத்திற்கு ஒருதரம் சரீரம்முழுவதும் மாறுதலடைகின்றது.

சுவாச உறுப்புக்களின் விவரம்.

சுவாசப்பை, சுவாசக்குழல்கள், கிளைச்சுவாசக்குழல்கள், வாயுக்கண்ணறைகள் விதானம், நாசி, வாய் என்பவை சுவாசவுறுப்புக்களாம்.

சுவாசப்பை என்பது பொகுட்டுவடிவமாய் இரட்டைஉறுப்பாய், வெண்சிவப்பு நிறமுள்ளதாய், கரும்புள்ளி அடைசினதாய், இரத்தாசயத்தைத் தழுவிக்கொண்டிருப்பதாய் இருக்கின்றது. அந்த இரட்டை உறுப்பானது நெஞ்சறையில் பக்கத்துக்கு ஒவ்வொன்றாய்நிற்கும்படி ஒரு சவ்வினால் ஒன்றைவிட்டு ஒன்று பிரிக்கப்பட்டிருக்கின்றது.

சுவாசக்குழலென்பது மிகவும் இசிவுள்ள குருத்தென்பு வளையங்களால் அமைக்கப்பட்டு, அது கழுத்தின் முன்பக்கத்தில் தொண்டையிலிருந்து சுவாசப்பைவரை நீண்டு அதனுடன் பொருந்தியிருக்கிறது.

கிளைச்சுவாசக்குழல்கள் இரத்தாசயத்துக்குமேலே சுற்றுப்பின்னாக சுவாசக் குழலின் தலைப்பிலே வலம் இடமாக இரண்டுகவர்விட்டெழும்பி சுவாசப்பைக்குட் சென்று பலகிளையாய்க் கிளைத்திருக்கின்றன.

வாயுக்கண்ணறைகளானவை மேற்படி கிளைச்சுவாசக்குழல்களின் நுனிகளாயும், அந்நுனிகள் வித்தியாசமான பருமன் உள்ளவைகளாயும் இருக்கின்றன.

விதானமென்பது சுவாச உறுப்புக்களையும், வயிற்றிலுள்ள ஜீரண உறுப்புக்களையும் இரண்டாய்ப்பிரித்து அவைகளுக்கிடையே பரந்து கிடக்கும் வளையத்தக்க ஒரு சவ்வாயும், அது முள்ளந்தண்டிலும் நெஞ்செலும்பிலும் பழுவெலும்புகளின் குருத்திலும் தொடுத்திருப்பதாயும், அதின் மையம் இயல்பாய் நெஞ்சிலே வில்வளைவாய் எழும்புவதாயும், உன்னி மூச்சை வெளியில் விடும்போது அதின் நடுவளைவு நாலாம் பழுவரைக்கும் எழும்புவதாயும், உன்னி மூச்சை உள்ளுக்கிழுக்க அதின் மையம் ஏழாம்பழுவரைக்கும் இறங்குவதாயு மிருக்கின்றது.

நாசியானது மூக்கிலிருந்து அண்ணத்துக்குமேலே வலமிடமாய்த் தொண்டை வரைக்கும் செல்லும் இரண்டு உள்விரிந்த குழல்களாம்.

சுவாசக் குழல்களிலுள்ள பெருங்கிளைகளில் சிலவற்றிலுள்ள சளியூறுஞ் சவ்வுகளில் கொஞ்சம் வெப்புக்கொண்டால் தடிமனாம். வெப்புமிஞ்சி அங்குள்ள சிறுகண்ணறைகளையும் பற்றினால் பெருந்தடிமன் என்பதாம்.

Koviloor Digital Library

சுவாச உறுப்புக்களின் தொழிலாவது அவ்வுறுப்பிலிருக்கும் சுவாசக்குழல்களுக்கு இரத்தாசயத்திலிருக்கும் அசுத்தமான காரிரத்தம் செல்லும்பொழுது அங்ஙனம் அதிலுள்ள அசுத்தம் நீங்கி செவ்விரத்தமாகி மற்ற எல்லா உறுப்புக்களுக்கும் சென்று அவைகளை உயிர்ப்பிக்கும்.

நாம் உள்ளே வாங்குவதும் வெளியில் விடுவதுமாயிருக்கிற சுவாச இயக்கத்தால் இப்படிப்பட்ட மாறுதல் உண்டாகிறது. அஃதெங்ஙனமெனின் சுவாசப்பை விதானமென்ற சவ்வு நெஞ்சறையின் பழுக்கள் சுருங்குவதினாலே சுவாசவாயுவானது நாசிவாய் வழியாக வெளியிற்செல்லும். அம்மூன்றும் விரிகிறதினாலே அவ்விரண்டின் வழியாக அந்த சுவாசமானது திரும்பி உள்ளே புகும்.

காரிரத்தம் செவ்விரத்தமாகும் வகையாவது சுவாசப்பையிலுள்ள வாயுக்கண்ணறைகளை நிரப்பும் சுவாசவாயுவிலே அமிலதம், உருசதகம் என்னும் இரண்டுவிதவாயு இருக்கின்றது. அவ்விரண்டில் அமிலதம் ஜீவனைக்காக்குந் தன்மையுள்ளது. மற்றது அப்படிக்கன்று. அமிலதமானது மேற்படி சுவாசக்கண்ணறைகளுக்குள்ளும் அவைகளிலேயுள்ள சிறிய இரத்தக் குழல்களுக்குள்ளும் இருக்கின்ற மெல்லியசவ்வின் வழியாகச் செல்லுகையில் காரிரத்தத்திலுள்ள இருந்தாமிலம் என்னும் வாயுவும் நீர் அணுக்களும் பிரிந்து சுவாசவாயுவுடன் கலக்கின்றது. அவைகள் நாம் மூச்சை வெளியில் விடும்போது அக்காற்றுடனே அள்ளுண்டுபோவதினாலே காரிரத்தம் செவ்விரத்தமாகின்றது. நாம் உள்ளே வாங்கும் காற்றுமூலம் இப்படிப்பட்ட மாறுதல் உண்டாவதால் அக்காற்றுச் சுத்தமாக இருக்கவேண்டும். ஜீவசெந்துக்கள்விடும் சுவாசத்திலுள்ள அசுத்தக்காற்றை மரம் செடிகளிலுள்ள இலைகள் உறிஞ்சி எடுப்பதினாலே அக்காற்று சுத்தியாக்கப்பட்டு வருகின்றது. நாம் வசிக்கும் இடம் எப்போதும் சுத்தக்காற்றுள்ளதாயிருக்கவேண்டும். அசுத்தக்காற்றை நாம் சுவாசித்தால் இரத்தங்கெட்டு வியாதியுண்டாம்.

குரலுறுப்புக்களின் விவரம்.

முடிச்சானது வெண்குருத்து எலும்புத்துண்டுகளால் அமைந்த செப்புப்போன்ற ஒரு விரல் செல்லக்கூடிய ஒரு குழலாம். அதின் மேற்றுவாரம் முக்கோணவடிவாய், அதின் கீழ்த்துவாரம் சிறுத்த வட்டமாய், அந்தத் துவாரத்துக்கு, இடையே பக்கத்துக்கு இரண்டாக நாலு சவ்வு மடிப்புகளுள்ளதாய், நாக்கு, கீழ்த்தாடை, சுவாசக்குழல் இவைகளுடன் பொருந்தி இருக்கின்றது. அந்தச் சவ்வுகளுக்கு குரல் நாண் என்று பேர்.

இந்த நாண்களுக்கு இடையிலிருக்கின்ற வெடிப்புக்கு முடிச்சுவாயில் என்றும், அந்த நாண்களுக்கு இடையே வலமிடமாக கீழும் மேலும்இருக்கும் இரண்டு பதிவாகிய இடைவெளிகளுக்கு முடிச்சுக்குழிகளென்றும், பண்ணையிலைபோல அடிநாவில் மிதந்து கொண்டிருக்கும் உறுப்புக்கு முடிச்சுக் கபாடமென்றும் பேர்.

ஆகாரங்களை விழுங்குகையில் சுவாசக் குழலைக்கடந்து இரைக்குழலிலே செல்லும் போது ஒரு அணுவளவாகுதல்

Koviloor Digital Library

சுவாசக்குழலுக்குள்ளே போகாதபடி காவல்பண்ணுவதே அந்த முடிச்சின் தொழிலாம். இக்காவலைத்தப்பி சுவாசக்குழலுக்குள்ளே சென்றால் புரை ஏறிவிடும். முடிச்சும் அதனுடன் சேர்ந்த உறுப்புக்களுங்கூடி இயங்குவதினால் குரலாகிய சத்தம் பிறக்கிறது.

தோல்விவரம்.

தோலானது வெளித்தோல் உட்தோல் என இருபகுப்பாயிருக்கின்றது. வெளித்தோலானது உட்தோலிலுள்ள சிறுகுழல்களால் மேனி எங்குங் கக்கிவிட்ட நீரால் அமைந்ததாம். இப்படி ஆகிய வெளித்தோல் உட்டோல் அடங்கலும் அனேகம் படைகளுண்டு. அப்படைகளில் உட்படை நீராயிருக்க வெளிப்படைகள் காய்ந்து செதிகளாகிறதினாலே வெளித்தோல் பெலனாயிருக்கிறது. உதாரணமாக சரீரத்தில் கொப்புளங்கட்டும்பொழுது மிதந்து உரிகிற பொருள்தானே மேற்றோற்படைகளில் ஒரு பாகமாம்.

வெளித்தோலில் மயிர்களும் நகங்களும் முளைத்திருக்கின்றன. அவைகளில் வேக்காடுகண்டு தோல்கழன்றால் அவைகளும் கழன்றுவிடும். உட்தோலில் நாடிகளும் நாளங்களும் ஒன்றுடனே ஒன்று பொருந்தி வலைபோற் கிடப்பதால் எந்த இடத்தில் குத்தினாலும் இரத்தம் வெளிப்படும். மேனி எங்கும் வெளித்தோலுக்குள்ளே மெல்லிய குழல்களிருப்பதினாலே அவைகளின்வழியாய் உடம்பிலே பூசுந் தயிலங்கள் வசூரிப்பால் முதலியவைகள் இரத்தத்திலே சேருகின்றன. கடுகளவாயுள்ள வேர்வைக்கோளங்களும், நிணக்கோளங்களும் மேல்தோலிலிருக்கின்றன. அக்கோளங்களிலுள்ள சிறுதுவாரங்கள் வெளித்தோலுக்கூடாகச்சென்று உட்டோலுக்குள்ளே இருக்கும் கண்ணறைகளிலே முடிகின்றன.

வெளித்தோலின் தொழிலாவது அது தேகத்திலுள்ள எல்லாப்பகுதிகளையும் மூடிக்கொள்ளுவதும், நச்சுக்காற்றுகள் இரத்தத்தில் கலவாமல் தடுத்துக்கொள்ளுவதும், அந்த மேற்றோலிலுள்ள பரிசத்துக்குரிய கருவிகளின்வழியாய் உணரவேண்டியவைகளை உணர்ந்து இன்ப துன்பங்களை அனுபவிப்பதுமாம். மேற்றோலிலுள்ள நிணக்கோளங்களின் வழியாய் நிணமும் வேர்வைக்கோளங்கள்வழியாய் வேர்வையும் கழிகின்றன. இவ்விரண்டும் இரத்தத்திலிருந்து பிரிவதால் அது சுத்தமாகின்றது.

தோலைப்பேணு முறைமையாவது ஏற்றபடி உடுப்பதும் நீராடுவதும் அளவான வெளிச்சத்திலும் சுத்தமான காற்றிலும் நடப்பதும் வேர்வை பிறக்கும்படி சரீர அப்பியாசம் செய்வதுமாம். நீராடுவது உடம்பிலுள்ள துவாரங்களின் வழியாய்க்கழியும் கழிவுகள் திட்டமாய் வெளிப்படும்படி அத்துவாரங்களைச் சுத்தம்செய்யும். குளிர்காலத்தில் ஆட்டுமயிராற் செய்த கம்பளிப்புடவை உடுப்பு உடுத்துக்கொள்ளுவது தோலிலுள்ள சூடு வெளிப்படாமலும் குளிர்காற்று மேலேபடாமலும் தடுத்துக்கொள்ளும்.

நரம்புமண்டல விவரம்.

மூளை, துணைமூளை, சிரநரம்புகள், முள்ளந்தண்டுக்கொடி, முள்ளந்தண்டுநரம்புகள், ஐக்கநரம்புகள் என்பவை நரம்புமண்டலங்களாம்.

Koviloor Digital Library

இவைகளில் மூளை என்பது தலை ஓட்டுக்குள்ளிருக்கும் அறைகள் நிறைந்த குழைவான உறுப்பாம். அதில் வெண்ணிறமுள்ளதாய் அதின் வெளிப்படை நரைநிறமுள்ளதாய் நெற்றிக்குநேரே பிடரிவரைக்கும் வலமிடமாக இரண்டு சமபாகமாகப் பிரிக்கப்பட்டதாய் இருக்கின்றது. துணைமூளை என்பது மூளையில் அரைக்கால் பங்கு கொண்ட அளவில் தலையின்பக்கத்தில் கீழ்ப்பிடரியைப்பற்றிப் பந்து வடிவமாயிருக்கின்றது. இந்தத் துணைமூளையில் நரைநிறப்பாகம் அதிகமாயும் வெண்ணிறப்பாகம் குறைவாயும் இருக்கிறது. இவற்றில் நரைநிறப்பாகமானது வெண்ணிறப்பாகத்துக்கு ஊடாக, மரம் கொம்புவிட்டுப்படர்ந்தது போற்றோற்றும் மூன்று சவ்வுகள் மூளையைச்சுற்றிக்கொண்டிருக்கின்றன. அவற்றில் வெளிச்சவ்வு மிகத்தடிப்பும் பெலவீனமுமுள்ளது. இடைச்சவ்வு மிக மெல்லியதாயும் உரு ஒளியுள்ளதாயும் இருக்கின்றது. உட்சவ்வோ மகா நுண்ணிய இரத்தக்குழல்களாற் பின்னப்பட்ட வலைக்கொப்பாய் இருக்கின்றது.

முள்ளந்தண்டுக்கொடி என்பது மூளையைப்போல வெண்மைநிறமான ஒரு பதார்த்தமாயிருக்கிறது. அதற்கு உறையாக ஒரு சவ்வு சுற்றிக்கொண்டிருக்கிறது. இக்கொடி கைவிரற் பருமன் உள்ளதாய் மூளையிலிருந்து முள்ளந் தண்டுக்கு ஓடுவதாய் இருக்கிறது. அக்கொடியின் மேற்றலைப்பு குமிழ்வடிவமாயிருக்கிறது.

சிரநரம்புகள் முளையிலும் மூள்ளந்தண்டுக்கொடியிலும் தொடுத்துச்செல்லுகின்ற பலங்கொண்ட சிறிய வெள்ளைக்கொடிகளாம். அவைகள் தேகத்தின் எப்பகுதிகளுக்கும் கொப்புக் கொப்பாக கூந்தல்விட்டுச்செல்லும். அவைகளில் அடிமூளையிலே சேர்ந்திருக்கும் நரம்புகள் அந்த மூளையிலிருந்து கிளம்பிப் பன்னிரண்டுசோடுகளாய்ப் பிரிந்து முகத்தின் எப்பகுதிகளுக்கும் செல்லும். அஃதாவது காது கண் நா மூக்கு இவைகளுக்குச்சென்று அவைகளின் தொழிலுக்குக்காரணமாம்.

முள்ளந்தண்டு நரம்புகள் அத்தண்டுக்குள் இருக்குங் கொடியிலிருந்து கிளம்பி முப்பத்திரண்டுசோடுகளாகப்பிரியும். அவைகளில் ஒவ்வொன்றுக்கும் இரண்டுமூலங்கள் உண்டு. அவைகளில் முன்மூலம் இயக்கத்தையும், பின்மூலம் உணர்ச்சியையுங் கொடுக்கும். அவைகளின் கிளைநரம்புகளிலும் அவ்விரண்டு மூலங்களிருப்பதால் தேகமெங்கும் உணர்ச்சியும் அசைவு முண்டாகின்றன.

ஐக்க நரம்பானது சரீரமெங்கும் ஓடி முள்ளந்தண்டை அணைந்து இடுப்பிலும், இரைப்பைக்குப்பின்னும், அடிக்கழுத்திலும் இருக்கின்றது. இதனை இன்னும் விவரிக்கில் அது முள்ளந்தண்டுக்கு வலமிடமாகவும் முள்ளெலும்புகளுக்கு இடையிலும் திரட்சிதிரட்சியாய்த்திரண்டு சங்கிலிக்கோவைபோலச் செல்லும். அப்பால் உடம்பிலுள்ள எல்லாப்பிரதான பகுதிகளுக்கும் பரந்துபோய் மூளையிலும் முள்ளந்தண்டுக்கொடியிலு மிகுந்து கிளம்புகின்ற நரம்புகளெல்லாவற்றோடும் பொருந்துகின்றது.

மேற்படி நரம்பு மண்டலத்தில் மூளையின் தொழிலாவது:— புத்தி ஞானம் இவைகள் தோன்றுமிடமான மனதுக்கும், சகல உணர்வுகளுக்கும்

Koviloor Digital Library

மூளையானது இருப்பிடமாம். மூளையிலிருந்து உடம்பு முழுமைக்குஞ்செல்லும் உணர்நரம்புகளின்வழியாய் அந்த உடம்பின் எப்பகுதிகளிலுமுண்டாகும் உணர்ச்சிகளை மனம் அறிகிறது. இங்ஙனஞ் சொல்லியபடி உணர்ச்சி பிறக்கின்ற மேற்படி உணர்நரம்புகளின் வழியாய்மட்டும் உடம்பிலுள்ள உணர்ச்சிகளை மூளை அறியக்கூடிய தன்மையுடையதாயிருப்பதேயன்றித் தனக்குத்தானே அறியக்கூடிய சக்தி அதற்கில்லை. துணைமூளை அடக்கிய குமிளமானது இப்படிச் சுரணையற்றதன்று; அதிற் சற்றே மெல்லக் குற்ற வலிப்பு இசிவு உண்டாகும். அதற்கு அதிக மோசம்வந்தால் மூச்சுத் தடைப்படும்.

சிரநரம்புகளின் தொழிலாவது மூளையிலிருக்கும் இயக்க நரம்புகளின்மூலமாய் மூளையானது பேசிநரம்புகளை இயக்க அவைகள் உடனே இயங்கும், இவ்வித இயக்கத்தால் அவைகள் தொடுத்திருக்கும் அவயவங்கள் இயங்குதலாம்.

ஐக்க நரம்புகளின் தொழிலாவது சரீரத்திலிருக்கும் விசேஷமான பகுதிகளுக்கு ஜீவதத்துவத்தைக்கொடுக்கும். அதிலுள்ள கூந்தல் நரம்புகள் இரத்தக்குழல்களுடனேகூடி இவைகளைப்போலவே தேகமெங்கும் செல்லுகின்றதினாலே அதின் எப்பகுதிகளையும் ஒருமித்திருக்கச்செய்யும். நரம்பு மூளைக்கும் இரைப்பைக்கும் சம்பந்தப்பட்டிருப்பதினாலே அதிலே அழற்சியுண்டாகத்தக்க உணவுகளைப் புசித்தால் தலைநோவுகாணும்.

நரம்புமண்டலத்துக்கும் மனதுக்கும் உள்ள சம்மந்தம் மிக நெருங்கியதாய் இருப்பதால் நரம்புமண்டலத்தின் எப்பகுதிகளிலும் நோய்கண்டால் அது மனசில்தாக்கிப் புத்திமாறாட்டம் பயித்தியம் முதலிய குணங்கள் உண்டாம். மனதிலுண்டாகும் பயம் கிலேசம் கோபமுதலியவற்றால் வியாதியுண்டாகும்.

நரம்புமண்டலம் சுகமான நிலைமையிலிருக்கும்படி சரீரமுயற்சிசெய்தலும் சுத்தமான காற்றைச்சுவாசிப்பதும் அவசியமாம். இரத்தாசயத்திலிருக்கும் இரத்தத்தில் பத்திலொருபாகம் மூளைக்குச்செல்லுகிறது. ஆதலால் அதற்குச்செல்லும் இரத்தமானது சுத்தமுள்ள செவ்விரத்தமாயிருக்கவேண்டும். நாம் சுவாசிக்கும் சுத்தமான காற்றே இம்மாறுதலுக்குக் காரணமாம்.

சரீர அப்பியாசத்தினாலே இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் வியர்வைமூலமாய் வெளியிற் கழிந்துவிடும். நரம்புகள் பேசிகளாகிய சதை இலைகள் இவைகளின் இயக்கத்தால் சுத்த ரத்தவோட்டம் சரியாய் நடக்கும் இப்படி நடப்பதற்குச் சரீர முயற்சியே காரணமாம்.

அசுத்தக்காற்றைச் சுவாசிப்பதினாலே மூளைகள் அவைகளின் தொழிலைவிட்டு ஓய்ந்துவிடும்; அறிவுங்கெடும். தலைவலியுண்டாகும். பேசிகளையும் நரம்புகளையும் மூளைகளையும் வேலைகொள்ளப்பண்ணி மறுபடியும் ஆறியிருக்கவிடவேண்டும். ஓயாத மனமுயற்சியினாலே மூளைக்குக் கெடுதியுண்டாம். படிப்பு முதலிய மனமுயற்சிகள் மட்டுக்குமட்டாய்த் திட்டமாய்க் காலக்கிரமமாய் இருக்கவேண்டும்.

Koviloor Digital Library

புலன்கள் பொறிகள் இவைகளின் விவரம்.

புலன் என்பது பொறிகளின்வழியே மனதிலுண்டாகும் உணர்ச்சிவிடயமாம். புலன் ஐந்து; அவையாவன, பரிசம் இரசம் கந்தம் உருவம் சத்தம் என்பவைகளாம்.

இவைகளில் பரிசம் அல்லது ஊறு என்பது நாம் தொடும், அல்லது நம் மேலேபடும் பொருள்கள் இன்னதெனப் பகுத்தறியப்பண்ணும் புலனாம். தோலில் இருக்கும் நரம்புகள்தானே இப்புலனுக்கு ஆதாரமாம். அந்த நரம்புகள் முள்ளந்தண்டுக் கொடி நெடுக அதின் பிற்பாதியிலிருந்து கிளம்புகின்றன. உணர்ச்சி எவ்விடத்தில் அதிகமாயிருக்கின்றதோ அவ்விடத்தில் மற்ற இடங்களைப் பார்க்க, அதிகத் தொகையான நரம்புக்கூந்தல்கள் ஓடியிருக்கின்றன. உதாரணமாக விரல்களின் நுனிகளிலும், உதடுகளின் விளிம்புகளிலும் நரம்புக்கூந்தல்கள் அதிகமாகவும், உணர்ச்சி கூர்மையாகவும் இருக்கின்றன.

இரசம் அல்லது சுவை என்பது பொருள்களின் உருசியை அறியப்பண்ணும் புலனாம், நாக்கே அதற்குப் பிரதானமான உறுப்பாம். இந்த உறுப்பானது நீர் ஊறும் சவ்வினால் மூடப்பட்ட தசை இலைகளின் கூட்டமாம். நாவின் மேற்பக்கம் நாக்கடுவென்னும் சிறு கூர்மையான முனைகளினாலே மூடப்பட்டிருக்கிறது. அந்நாக்கடுக்களிலே சுவைநரம்புகள் கூந்தலாய்ச்சென்று மூடுகின்றனவாம். கடும்புளிப்புகளை நாவில் தடவ அந்த நாக்கடுக்கள் நீண்டு காட்டும். இந்தச் சுவைப்புலனானது மனிதர் முதலான ஜீவசெந்துக்களுக்கு இணக்கமான உணவுகளைத் தெரிந்துகொண்டு இணங்காததைத் தள்ளுவதற்கு உதவுகின்றது.

கந்தம் அல்லது நாற்றமென்பது, பொருள்களுள் மணங்களை அறியப்பண்ணும் புலனாம். அப்புலன் மூக்கின் இடமாகச் சுவாசக்காற்றுச் செல்லுவதாகிய நாசித்துவாரங்களிலே நிலைபெற்றிருக்கின்றது. நாசித்துவாரங்களை மூடிக்கொண்டிருக்கும் சளியூறும் சவ்விலே நாற்ற நரம்புகளின் கூந்தல்கள் வந்து அடைகின்றன. இந்தச் சவ்விலே சுரப்பும் கொதிப்பும் கொள்ளுவதினாலே அதிலிருந்து நீர் சொரியும்; அது தடிமனெனப்படும். காற்றும், காரமுள்ள நாற்றமும்பட்டு நாற்றநரம்பின் நொய்மையான நரம்புக்கூந்தல்கள் சேதமடையாதபடி அதில் மூடியிருக்கும் சவ்விலே எப்பொழுதும் சளி ஊறிக்கொண்டிருக்கிறது. பொருள்களை மணக்கும்பொழுது அக கூந்தல்கள்வழியாய் நாற்றமானது மூளைக்குச்செல்ல அங்கே மனமானது உணர்ந்து கொள்ளுகிறது. இப்புலனானது நல்லவாசனைகளை மோந்து அனுபவிக்கும் இன்பத்தைத்தருகிந்னறது. புகையிலைப்பொடி அங்குள்ள நரம்புக்கூந்தல்களை மழுக்குவது மாத்திரமல்ல, அவைகளில் இருக்குஞ் சவ்வையுந் தடிக்கப்பண்ணுகிறதினாலே மூச்சுத்தடைபட்டு நாசிவழி செல்லாமல் வாய்வழி செல்லுகிறது.

சத்தம் அல்லது ஓசையாவது மன ஆறுதலுக்கும் சந்தோஷத்துக்கும் அறிவுத்தோற்றத்துக்கும் உதவியாயிருப்பதாம். அவ்வோசைகளைக் கேட்கும்

Koviloor Digital Library

கருவி காதினிடமாயிருக்கின்றது. அது வெளிக்காது நடுக்காது உட்காது என மூன்று பகுப்பாயிருக்கின்றது.

இவற்றில் வெளிக்காது தலைக்குப் புறம்பே சில புருவங்களையுடையதாய், சற்றுவளைவு உள்ளதாய், துவாரமுள்ளதாய், தோலினால் மூடப்பட்டதாயிருக்கிறது. அத்துவாரத்துக்குள்ளே இருக்கும் குரும்பியும் மயிர்களும் பூச்சி புழு அதற்குட்செல்லாமற் றடுக்கும். காதின் வெளித்துவாரத்தின் உள்ளிறுதியில், வெளிக்காதுக்கும், நடுக்காதுக்கும் இடையிலே அரைத்திட்டமளவுக்கு உருவெளியான ஒரு சவ்வு இருக்கிறது. மகாநுண்ணிய நாலு எலும்புகள் ஒரே கோவையாய் நடுக்காதில் கிடக்கின்றன. அக்கோவையின் ஒருதலைப்பு தம்பட்டத்திலும், மற்றொரு தலைப்பு வெளிக்காதிலும் தொடுத்திருக்கின்றன.

நடுக்காதிலிருந்து பின்தொண்டை அருகுவரை ஒரு சிறுகுழல் ஓடியிருக்கின்றது. அக்குழல்வழியாய்க் காற்று போக்குவரத்தாய் இருக்கின்றது. எக்காரணத்தினாலாவது அந்தக்குழல் அடைபட்டாலும் தொண்டைவீங்கினாலும் கேள்வி குறைந்துவிடும்.

உட்காது எலும்பினாலாகிய மூன்று அறைகளுள்ளதாயும், சிக்கும் முக்கும் சுத்தும் சுழற்றலுமுள்ள குடைவாயும் இருக்கிறது. மேற்படி காதின் பகுதிகள் மூன்றில் கேள்விக்கு வேண்டியது உட்காதுப்பகுதிமட்டுந்தான். கேள்விநரம்பானது மூளையிலிருந்து கிளம்பி, உட்காதுக்கு உள்ளுறையாயிருக்கும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே மிதந்துகொண்டிருக்கும். இந்தச்சவ்வே காதுத் தம்பட்டமாம்.

வெளிக்காதானது தன்னில்மோதும் ஒலிகளை ஒன்றாய்த்திரட்டி அதை நடுக்காதுக்குள்ளே செலுத்தும்போது அதற்கும் நடுக்காதுக்கும் இடையிலிருக்கிற சவ்வுத்தம்பட்டம் அதிர்ந்து உட்காதோடே தொடுத்திருக்கும் எலும்புக்கோவை வழியாய் அந்த அதிர்ச்சியைச் சேர்த்துவிடும். இப்படிவந்த ஒலியின் அதிர்ச்சி கேள்விநரம்பின் கூந்தலிலேபட்டு அந்த நரம்பின்வழியாய் மூளைக்குச்செல்லுவதினாலே கேள்வியுண்டாகிறது.

பழக்கத்தினாலே பொருள்களிலிருந்து உண்டாகும் சத்தங்களை இன்ன இன்னதென்றும் அது இவ்வளவு தூரத்திலிருந்து வருகிறதென்றும் நிதானிக்கலாம்.

மேற்படி காது சவ்வு தடித்தல் வெடித்தல், காதுநரம்புக்குழல் தடைபடுதல், அது தூம்புதல், மூளை வியாதிப்படுதல், முதலிய காரணங்களால், காது மந்தம், செவிட்டூமை ஆகின்றன.

காதில் குரும்பி அதிகமாயிருந்தாலும், பூச்சி புழுச் சென்றிருந்தாலும், நல்லெண்ணெய்யைச் சற்று வெதுப்பிக் காதில் அடைத்துவைத்திருந்து அப்பால் சோப்புத் தண்ணீராற் சுத்தப்படுத்தக் காது சுகமடையும்.

உருவம் அல்லது ஒளியாவது கண் உறுப்பின் வழியாய் மனதுக்குச் சந்தோஷத்தையும் விசனத்தையும் அருவருப்பையும் கொடுக்கும்

Koviloor Digital Library

காட்சிப்பொருள்களின் தன்மையையும் உருவத்தையும் நிறத்தையும் பருமனையும் நிலையையும் தோற்றுவிக்கும் புலனாம்.

இந்தக்கண்ணானது உண்டைவடிவமாய், தலையோட்டின் முற்பக்கத்திலிருக்கும் குழியிலே பதிக்கப்பட்டதாய் உருவொளியுள்ள (3) சவ்வுக் கவசங்களுள்ளதாய் இருக்கின்றது. அக்கவசங்கள் நீர் நிறைந்ததாயிருக்கின்றது.

கண் உண்டையின் முன்பக்கத்தில் வெண்மையாயிருக்கும் சவ்வை வெள்ளைவிழி எனலாம். இந்தச் சவ்வானது இரட்டையாய், அதிக பரப்புள்ளதாய், கண்ணாடியைப் போல உருவொளியுள்ளதாய், பளபளவென்று மினுமினுப்புள்ளதாய் இருக்கின்றது.

அவ்விரட்டைச் சவ்வுக்குப்பின்னால், கருமைநிறமான ஒரு சவ்விருக்கின்றது. இந்தச்சவ்வானது மகாநுண்ணிய இரத்தக்குழல்களினால் வலைபோற் பின்னப்பட்டிருக்கிறது. அது கண்ணிலுள்ள எப்பகுதியையும் போஷிக்கத்தக்க தன்மையுடையது. அதற்குப்பின்னாகக் கொஞ்சத்தூரத்தில் கண்கள் வித்தியாசமாகக்காணும் படி நிறத்தைக்கொடுப்பதாயிருக்கிற, ஒரு சவ்வு இருக்கிறது. இவ்விரண்டு சவ்வுகளுக்கும் மத்தியில் ஒரு கரும்புள்ளியிருக்கிறது.

இந்தக் கரும்புள்ளியானது கண்ணிற்படும் வெளிச்சத்துக்குத்தக்கதாய்க் கொஞ்சவெளிச்சத்தில் விரிவதும் அதிக வெளிச்சத்திற் சுருங்குவதுமாயிருக்கிறது. அந்தத்துவாரத்தின் சுற்று விளிம்பிலிருந்து கருமைகுறைந்த ஏறக்குறைய அறுபதுவரிகள் பரந்துபோகின்றவைகளாகவும், இவைகள் ஒன்றோடொன்று அடுத்திருப்பதும் ஆகிய ஒருவட்டமிருக்கிறது. இதற்குப் பரிதிகமென்று பேர்.

மேற்படி கருமைநிறச்சவ்வுக்கு அப்பால் அதையடுக்க உள்ளே மெத்த மெல்லிய வெள்ளைச்சவ்வு ஒன்றிருக்கின்றது. இந்தச்சவ்வானது பார்வைநரம்புக்கு உள்ளுறையாயிருக்கின்றது. இந்தப் பார்வைநரம்பானது மூளையிலிருந்து கிளம்பிக் கண்ணின் பிற்பகுதிமட்டுக்கும் ஓடிக் கண்ணுக்குள்ளே விரிந்துகிடக்கும். இதுவே காட்சிப்புலன் நுகருமிடமாம். இதற்குத் தரிசியமென்று பெயர்.

கண்களை மூடித்திறக்கத்தக்கனவாய், ஆறு சதை நரம்பு இழைகள், கண்மடலில் இருக்கின்றன; அவைகளின் ஒரு தலைப்பு, கட்குழி எலும்புகளிலும் மற்றத்தலைப்பு, கண்விழிகளிலும் தொடுத்திருக்கின்றன. கட்குழிக்குள்ளே சூழ நிணம் நிரம்பியிருப்பதால் கண் அங்கே யாதொரு சேதமும் அடையாமல் தாராளமாய் எப்பாகத்திலும் சுழலும்.

கட்புலனுக்கு வெளிச்சம் அவசியம். ஒரு வஸ்துவிலிருந்து கிரணங்கள் கண்ணுக்குள்ளே செல்லும்பொழுது, ஒன்றுக்கொன்று கத்தரிக்கோல்போலக் குறுக்கிட்டுச்செல்லும். இதனாலே அவ்வஸ்துவின் உருவம் அடி தலை மாறிக் கண்ணின் பிற்பக்கத்திலுள்ள தரிசியச்சவ்விலே விழுகின்றது.

Koviloor Digital Library

கண்ணிலுள்ள மூன்றுகவசங்களாகிய சவ்வுகள் அந்தக்கண்ணுக்கு ஆதாரமாகி, அதற்குள்ளிருக்கும் மகா நுண்ணிய பதார்த்தங்கள் சேதப்படாமல் காக்கின்றன. கண்ணிலே மட்டுக்குவிஞ்சின வெளிச்சம், கஞ்சல், தூசி, வேர்வை விழாதபடி கட்புருவங்களும், கண்மடல்களும் காக்கின்றன.

கட்குழியின் மேல்விளிம்புக்குள்ளே கடைக்கண்பக்கமாயிருக்கும் கண்ணீர்க்கோளத்திலிருந்து கண்ணீர் பொசிகின்றது. இந்த நீர் கண்ணிற் பரந்து பாயும் வேளையில் இமை வெட்டுவதினால் அங்கிருக்கும் தூசிகள் கண்ணீருடன் அள்ளுண்டு மூக்குக்கடுத்த கண்மடலின் உட்கோளத்திலிருக்கும் இரண்டு குழல்களின் வழியாய் மூக்கிலே செல்லுகின்றன.

கண்ணிலே அழற்சிகாணும்பொழுதும் மனதிலே சஞ்சலம் உண்டானபொழுதும் கண்ணீரானது, அவ்விரண்டு குழல்களிலே செல்லக்கூடியதற்கு மிஞ்சி ஊறுவதினால், அதிகமாய்த்ததும்பி வடிகின்றது.

கண்ணைப்பேணுமுறையாவது, ஒருபொருளை வெகுநேரம் வரை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தால் கண்ணானது இளைத்துப் பூத்துப்போவதால் அதற்கு அதிகவேலை கொடுக்கக்கூடாது. அதற்குக் கொடுக்கும்வேலை எவ்வளவோ அவ்வளவாக ஆறுதலும் வேண்டும். தீபம் சூரியன் மின்னல் இவைகளினுடைய அதிக ஒளி கண்ணிற்படுதல் அதற்குக் கெடுதியாம். வாரத்துக்கு இரண்டுமுறை தைலம் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ்செய்வது கண்ணுக்குச் சுகமாம். பச்சைக் கண்ணாடி கண்ணிற்றாவுஞ் சூட்டைத்தடுக்கும்.

அங்க உறுப்புக்களின் இலக்கணம் முற்றிற்று.

பிண்ட உற்பத்தி.

மங்கையர்கள் பூத்ததுமுதற் சிலநாள்வரை கருக்குழி மலர்ந்திருக்கும்; அக்காலத்தில் சுக்கிலந்தரித்தால் வாயு வன்னியினால் சுக்கிலசுரோணிதம் சம்பந்தப்பட்டுக் கடுகுபோலும் நீர்க்குமிழிபோலும் முட்டைபோலுமாம். திங்களொன்றில் வாழைப்பூப்போற்றிரண்டு, பிண்டமாகி, தலை உடல் என்ற விகற்பந்தோன்றும். இரண்டாந்திங்களில் உடலினின்று கைகால்களரும்பிக் கால்களுக்கிடையில் முள்ளந்தண்டு வால்போல நீண்டிருக்கும். முகம் இரத்தாசயம் சுவாசப்பை இரைப்பை முதலிய குடல்கள் முகைக்கும் கண்களும், பின்பு வாய் நாசி காதுத்துவாரங்களுந் தோன்றும். மூன்றாம் நாலாந் திங்களில் மூக்கு உதடு கண்மடல் காது உண்டாகிக் கை கால் மரக்கொம்புபோல் வளர அவற்றினுனிகளிலே விரல்கள் தோன்றும். ஐந்தாமாதம் இறுதியில் சிசு சற்றே பூரணரூபமாய்விடும். ஆறாமதிமுதல் மேற்படி உறுப்புக்களும், எலும்பு தலைமயிர் நாடிநரம்பும், ஏனைய அங்கங்களும், பிராணாதி பஞ்சவாயுக்களும் தீர்க்கமாகிப் பத்திற் செனனமாம்.

வயது நூறில் 30–க்குள் உடல்வளரும். அதற்குமேல் முகத்தின் ஒளிகுன்றும். 40–க்கு மேல் தேசஸ் கெடும். 50–க்கு மேல் உடல்தளரும், உரோமம் வெளுக்கும். 60–க்குமேற் கண்ணொளி மங்கும், நடக்கிற

Koviloor Digital Library

றிகைப்புண்டாகும், 70–க்குமேல் அறிவு குறையும். 80–க்குமேல் சுவாசம் மேல்நோக்கி வெளியிற்பாயும். 90–க்குமேல் ஐம்பொறியும் புலனும் ஒடுங்கி இந்திரியமற்று நூறில் மரணமாம். ஆனால் இடையிலவமிருந்து, தொத்துப்பிணி முதலானவைகளாலும் மரணமுண்டு.

தேகக்கட்டளை விவரம்

பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களும் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வாதம் வாயுவின் தன்மையையொத்தும், பித்தம் தேயுவின் றன்மையையொத்தும், சிலேத்துமம் அப்புவின்றன்மையையொத்து மிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ் சேரும்போது வாதபித்த சிலேத்துமங்களில் எது மிகுந்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாததேகம், பித்ததேகம், சிலேத்துமதேகமென்று மூவகைத்தேகக்கட்டளை யுண்டாயிருக்கின்றன.

வாததேகக்குறிகள்.

நாடி மெதுவாய்நடக்கும். தேகம் மெத்த அசதியுள்ளதாயும் புத்திமந்தமாயுமிருக்கும். உற்றகாரியத்தை மெத்தனவாயெண்ணும். சற்றுஞ்சலியாமல் உரைப்பதெல்லாம் உழல்வாயிருக்கும். வெற்றியும் புகழுமுண்டாகவேண்டிய பொய்யை மெய்யாகப் பேசும். உடல்குளிர்ந்து பருத்திருக்கும்.

பித்ததேகக்குறிகள்.

நாடி விரைவாய் நடக்கும். திடமுந் தீர்க்கமுங் கடினமுமான காரியங்களைச் சாதிக்குஞ்சக்தியு முண்டாகும். இளமையில் நரைக்கும். கடைக்கண் சிவப்பாயிருக்கும். சொற்கள் அமிர்தமாயிருக்கும். காமக்குரோதாதிகள் மிகுத்திருக்கும், உடல் உஷ்ணமாயிருக்கும். மெய் பொய் அறியும்படி பல நூல்களை ஆராயும்.

சிலேத்துமதேகக்குறிகள்.

நாடி அதிக மிரட்சியும் துாப்பெலமாயுமிருக்கும். உடல் வியர்க்கும். சன்மார்க்கத்தி லிச்சையுண்டாகும். தோகையரின்பமும் பொய்களவும் விலகியிருக்கும். தலைமயிர் நீண்டுகாட்டும். பகிடிகூறும். திருமாதணைந்து வாழ்வள்.

நாடி நூல்.

நாடிவிளக்கம்.

மானிடர் தேகத்தில் 72000 நாடிநரம்புகள் உந்திச்சுழியிலிருந்தெழுந்து கீழ்மேலாய்ப் பேய்ப்பீர்க்கங்கூடுபோல் ஆக்கையெல்லாம்பற்றி நிற்கும். இவைகளில் இடைகலை, பிங்கலை, சுழிமுனை, அலம்புடை, காந்தாரி, அத்தி, சிகுவை, சங்கினி இயல்புருடன், குகுவென்ற தசநாடி 10. இடைகலை வலதுகாற்பெருவிரலிலிருந்து இடதுநாசிவரையிலும், பிங்கலை

Koviloor Digital Library

இடதுகாற்பெருவிரலிலிருந்து வலதுநாசிவரையிலுங் கத்தரிக்கோன்மாறலாக ஓடிநிற்கும். சுழுமுனை மூலாதாரத்திலிருந்து ஆக்கினைவரையோடி யுச்சியில் அச்சுருவாணியாய் நிற்கும்; அலம்புடையும் இயல்புருடனும் இரு செவிகளையும்பற்றி நிற்கும். அத்தியுஞ் சிகுவையும் இருகண்களையும்பற்றிநிற்கும். காந்தாரி நாபியிற்றோன்றி, சுரமேழிற்கும் ஏழுநாடியாய்க் கண்டத்துற்றிருக்கும். சங்கினி, குகு குய்யத்தைப்பற்றி நிற்கும். தேகத்தில் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயனென்ற பத்துவாயுவும் இயங்கும்.

மேற்கண்ட தசநாடிகளில் ஏழுநீக்கி இடைகலை பிங்கலை சுழிமுனை யென்ற மூன்றுநாடியும் ஒரேநாடியாயமைந்து இடைகலை வாதநாடியாகவும் பிங்கலை பித்தநாடியாகவுஞ் சுழுமுனை சிலேத்துமநாடியாகவும் நடக்கும். வாதம் மலத்திலும், பித்தம் நீரிலுஞ், சிலேத்மம் விந்துவிலும் அடங்கும்.

தசவாயுக்களில் அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும், சமானன் சிலேத்துமத்திலுமிருக்கும்.

பிராணன் மூலாதாரத்திலிருந்து இருதயகமலத்தின்வழி யூடுறுவிக்கொண்டு இடைகலை பிங்கலைக்கு நடுவாய்க் கபாலவரையோடி முட்டி நாசியின் வழியாய் வெளியிற்பாய்ந்து போகும்போது கழிந்தது 4–அங்குலங்கள் போக மற்றவை திரும்பி யுள்ளேபுகும்.

நாழிகையொன்றுக்கு 360 சுவாசமாக நாளொன்றுக்கு 21600 சுவாசமும் இரேசக பூரக கும்பகமாகும். நாடிமூன்றும் இடைகலை பிங்கலை சுழிமுனையாகிய வாதபித்தசிலேத்துமமென்பவைகளே. இடைகலை 16 அங்குலப்பிரமாணமோடும். இதுவே வாதநாடி மாத்திரை–1 பிங்கலை 12 அங்குலப்பிரமாணமோடும். இதுவே பித்தநாடி மாத்திரை–ணீ சுழுமுனை இரண்டு நாசியினும் உபயமாகப் பகிர்ந்தோடும். அக்கினி அலியெனப்படும். அதுவே சிலேத்துமநாடி மாத்திரை–1/4 இவ்விதமாக நாடியோடிற் றேகத்திற் பிணியில்லை.

வாத பித்த சிலேத்தும நிலை.

அபானமுத லுந்திவரை வாதநிலை. உந்தியின்மேல் மார்புமட்டும் பித்தநிலை. மார்புமுத லுச்சிவரை ஐயநிலை.

வாத பித்த சிலேத்துமத்தி னியல்பு.

வாதம் வாயு; குணம் புளிப்பு, குளிர்ச்சி; நிறம் கருமை நீலம். பித்தம் வன்னி; குணம் கசப்பு, வெதுப்பு; நிறம் பசுமை, பச்சை. ஐயம் அப்பு; தித்திப்பு; வியர்வை; நிறம் வெண்மை.

வாதம் எழும்பிடில் புளிப்பு நாவிலேறும். பித்தம் எழும்பிடில் கசப்பு நாவிலேறும். சிலேத்துமம் எழும்பிடில் இனிப்பு நாவிலேறும்.

தேகங் குளிர்ந்தால் வாதம். தேகம் சுட்டால் பித்தம். தேகம் வியர்த்தால் சிலேத்துமம்.

Koviloor Digital Library

வாத பித்த சிலேத்தும காலம்.

உதயத்தில் 10–கடிகைவரை வாதமும்பித்தமும், மாலையில் 10–கடிகைவர சிலேத்துமமும் நடக்கும்.

மனிதர்களுக்கு வயசு 120–ல் 40–வயசு வரை வாதகாலம். 40–முதல் 80–வரை பித்தகாலம். 80–க்கு மேல் 120–வரை சிலேத்துமகாலம்.

நாடியுண்டாவதற்குக் காரணம்.

இருதயத்தின் இடதுசடரங்குவியும்போது இரத்தம் கண்டரையின் வழியாகச் சென்று சகல நாடிகளுக்கும் பரவும். அப்போது நாடிகள்விரியும். மறுபடியும் இடதுசடரம் விரியும்போது நாடிநரம்பிலிருக்கும் இரத்தங் குறைந்து நாடி சுருங்கும். இவ்விதமாக இருதயங் குவியவுஞ் சுருங்கவுமாக இருப்பதால் அதனுடன் சேர்ந்த நாடிநரம்புகளுக்கும் விரிந்து சுருங்குந் தன்மையுண்டு. இந்தச்செய்கையைத்தான் நாடிநடையென்று சொல்லப்படும்.

நாடிநடையின் குணமானது இருதயத்தின் நடைக்கு ஒத்திருக்கும்.

இருதயத்தினுடைய நடையின் பேதாபேதங்களை நாடி நமக்குத் தெரிவிக்கின்றது. தேகத்திலிருக்கும் உறுப்புக்களில் இருதயம் ஓர்பிரதான உறுப்பு. அதினுடைய நடை தேகஸ்திதிக்கு ஒத்திருக்கும். தேகத்தில் நோய்கண்டால் இருதயத்தினுடைய சுபாவநடை இழந்துபோகும். தேகத்திலிருக்கும் நோயை இருதயந் தெரிந்து கொண்டு நாடிமூலமாக நமக்கு அறிவிக்கின்றது. ஆகையால் நாடி நடையின் பேதாபேதங்கள் நன்றாகத்தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் வியாதியின் கூறு செவ்வையாகத்தோன்றாது.

ஒரு நிமிஷத்தில் நாடி நடக்குமிலக்கம்.

குழந்தைபிறந்தவுடன் 140. பாலியத்தில் 120 முதல் 130. குழந்தையில் 100. யௌவனபருவத்தில் 60. சம்பூரணபருவபுருஷனில் 70–முதல் 75. சம்பூரணபருவஸ்தீரீகளில் 75–முதல் 80. க்ஷீண்ப்பருவத்தில் 70. விருத்தாப்பியத்தில் 75 முதல் 80. உட்கார்ந்திருக்கும்போது 40. நிற்கும்போது 76. படுத்திருக்கும் போது 67. இவ்விதமாய் நாடி நடக்கும்.

நோயாளியைப் படுக்கவைத்தாவது உட்காரவைத்தாவது நாடி பரீக்ஷிக்கலாம்.

நாடி பேதாபேதம்.

நடந்து தேகம் அருண்டிருந்தாலும், சாப்பாடு, சுடுபதார்த்தங்கள், சாராய முதலிய லாகிரிவஸ்துக்கள், புகையிலை, வெயில், சுரம், நித்திரைபங்கம், மனச்சஞ்சலம், அதிகபலவீனம், இரத்தம்வடிதல், முதலானவைகளினாலும் நாடிநடை தீவிரமாயும் படபடவென்று மோடும்.

Koviloor Digital Library

பசி விசனம் குளிர் அதிகநித்திரை முதலானவைகளினால் நாடிநடை குறையும். விருத்தர், பாலர், க்ஷயரோகி, தரித்திரர், சிற்றின்பஞ்செய்தபேர்கள், தண்ணீரில் மூழ்கினபேர்கள் இவர்களின் தாதின் உண்மை தெரியாது.

நாடிபார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும் பூமியிற் கரத்தை யூன்றிக்கொண்டிருந்தாலும் காலைக்கட்டிக்கொண்டிருந்தாலும் நாடிநடை தோற்றாது.

நாடி பார்க்கும் மாதவக்கை.

சித்திரை வைகாசிக்கு உதயத்திலும், ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கு மத்தியானத்திலும், மார்கழி தை மாசிக்கு மாலைப்பொழுதிலும், பங்குனி ஆவணி புரட்டாசிக்கு இராத்திரியிலும் பார்க்க நாடி தெளிவாய்த் தோற்றும்.

நாடி ஸ்தானங்கள்.

கைகளிலும் கன்னச்சுழிகளிலும் காற்பெருவிரல்களுக்குமேலாகக் கணுக்காலினுட்புறத்திலும் நாடிபரீக்ஷிக்கலாம். ஆனால் கைநாடிப்பரீக்ஷையே சகலத்திலும் உத்தமம்.

நாடியைப்பிடித்துப் பரீக்ஷிக்கும் விதம்.

கையைப்பிடித்து நெட்டை வாங்கி அனல்பிறக்கத்தேய்த்துப் பெருவிரற்பக்கமாகவிருக்கும் ஆரையென்பின்பேரிலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குலமேலாக மூன்று விரல்களாற் சமமாக மெதுவாயழுத்தி நாடியைப்பரீக்ஷித்த பின்பு விரல்களை மாறிமாறியழுத்தியுந் தளர்த்தியும் பார்த்தால் நாடிநடையைத் தெரிந்து கொள்ளலாம்.

வலதுகையிலும் இடதுகையிலும் நாடி பரீக்ஷிக்கலாம்; ஆனால் புருஷருக்கு வலதுகையிலும் பெண்களுக்கு இடதுகையிலும் நாடி பரீக்ஷிப்பது கிரமம்.

நாடி நிதானம்.

மேற்சொல்லிய கிரமத்துடன் நாடியைப் பரீக்ஷிப்பதில் முதல்விரற்கீழ் வாதநாடியும் நடுவிரற்கீழ்ப் பித்தநாடியும் கடைவிரற்கீழ்ச் சிலேத்மநாடியும் தோன்றும்.

புருஷருக்கு நாடி நடக்கும் விதம்.

வாதநாடி மயில்போலும் அன்னம்போலும் கோழிபோலும், பித்தநாடி ஆமை போலும் அட்டைபோலும், சிலேத்துமநாடி பாம்புபோலும் தவளைபோலும் நடக்கும்.

பெண்களுக்கு நாடி நடக்கும் விதம்.

வாதம் சர்ப்பம்போலும்; பித்தம் தவளைபோலும், சிலேத்துமம் அன்னம் போலும் நடக்கும்.

Koviloor Digital Library

பஞ்சபூத நாடிகளிருக்கு மிடம்.

பெருவிரல் பூதநாடி, ஆள் தூண்டிவிரல் வாதநாடி, நடுவிரல் பித்தநாடி, பவித்திரவிரல் சிலேத்துமநாடி, சிறுவிரல் பூதநாடி, குருநாடி ஐந்துட்சேர்ந்து நிற்கும்.

குருநாடி இருக்குமிடம்.

குருநாடி எப்போதும் பித்தத்தின் முன்னே நிற்கும். அது தசநாடிகளுக்குந்திறமாய் நிற்கும். உடற்குயிராய் நின்ற குருநாடி வாதபித்தத்திற்கு நடுவிலிருப்பதைப் பார்க்கில் அது மூவிரலுந்தாண்டி மூலமுதலுருவிப்பாய்ந்து விசைநரம்பூடே சேர்ந்து சந்திரமண்டலம்போய்ச் சார்ந்து பின்பு பம்பரம்போற் கிறுகிறென்று வாதம் பித்தம் ஐயமென்ற நாடி முத லாடியோடி மண்டலங்கள் மூன்றுஞ் சுற்றிக் கத்தரிக்கோல்மாறலெனக் கட்டிச்சேர்ந்து வாதபித்த நடுவிலிருந்து வாதத்தில் கோழி அன்னம் மயில்போலும் நடக்கும். பித்தத்தில் ஆமைபோலும் அட்டைபோலும் நடக்கும். சிலேத்துமத்தில் பாம்புபோலும் தவளைபோலும் இயல்பாய் நாடி நடக்கும்.

குருநாடிக்குணம்.

குருநாடி வாதத்தில் அட்டைபோற் புரண்டுவரில் வாயு மிகும். இருமல் தினவுசொரி மிகுதியுண்டாகும், தேகம் வாடும், குருநாடி பித்தத்திலாமைபோல் நடக்கிற்சுரங்காயும், வாய்நீர் சுழற்றும், வியர்க்கும். சிலேத்துமத்திற் குருநாடி சிங்கம்போற் சீறிநிற்கில் சன்னிதோன்றும். குருநாடி சிலேத்துமத்தையூடுருவி அமருமாகில் அசாத்திய மரணக்குறிகளுண்டாகும். குருநாடி குன்றிப்போகில் வயிறு கழியும், கடுப்பெடுக்கும், கைகால் வீங்கும். குருநாடி பக்கம்பாயிற் சிலேத்துமமெதிரேமோதும். குருநாடி நேரேநிற்கில் வாதபித்தமிரண்டுஞ் சேரும். குருநாடி பின்வாங்கில் அசாத்தியங்களுண்டாகும். குருநாடி ஐயத்தில் விட்டிலைப்போற் றுடிக்கில் மரணம்.

நாடிகள் கீழு மேலு மீறியோடும் விதம்.

சந்திரன் வாதநாடி, சூரியன் பித்தநாடி. சுழிமுனை சிலேத்துமநாடி.

வியாழத்திற் சிலேத்துமநாடியும், சனி செவ்வாய் ஞாயிறு இந்தக் கிழமைகளிற் பித்தநாடியும், திங்கள் புதன் வெள்ளி இந்தக்கிழமைகளில் வாதநாடியும் மீறியோடும்.

ஞாயிற்றில் வாதமோடில் சளி யிருமலிரைப்புண்டாகும். செவ்வாயில் வாதமோடில் சுரமுண்டாகும். சனியில் வாதமோடில் சீதளமுஞ் சன்னியு முண்டாகும் வியாழத்தில் வாதமோடில் விலாமுதல் தேகமெல்லாம் வலியுண்டாகும். திங்களில் பித்தமீறல் ஜலதோஷ முடனே காணும். புதனில் பித்தமோடில் நீரேற்றம் தலைக்குத்துண்டாகும். வெள்ளியிற் பித்தமோடில் கண்ணோய் காதுநோயாம். வியாழத்திற் பித்தமோடில் தாபசுரம் தலைவலியுங்காணும்.

Koviloor Digital Library

வாதக்கூறு.

வாதமீறினால் வாயுவினால் தேகமெல்லாங் குத்தும். கைகால் சந்து பொருத்துக்கள் உளையும். கால் கை பொருபக்கத்தில் முடங்கும். குனிந்தால் நிமிரவொட்டாது. திமிருண்டாகும். உடல் பொருமும். குடல் புரட்டும். அன்னஞ் சுருங்கும். வயிறு மந்திக்கும், பொருமும். மலசலங்கட்டும். அபானஞ் சுருங்கும். நாவு புளிக்கும், தாது நஷ்டமாகும். கழிச்சலுண்டாகும்.

பித்தக்கூறு.

பித்தமீறினால் உடலிற் காந்தலும், வரட்சியு மெரிவும் நடுக்கமுமுண்டாகும். மண்டைக்குத்து நாவறட்சி கசப்பு அரோசியம் தாகம் வாந்தி விக்கல் மூர்ச்சை கிறுகிறுப்பு காதடைப்பு அயர்வு சோபம் வயிற்றுக்காந்தல் நெஞ்செரிவு அக்கினி மந்தம் குளிர்காலம் விடாச்சுரம் அஸ்திசுரம் பாண்டு காமாலை சோகை மயக்கம் பிரமேகம் பித்தவெட்டை இவையுண்டாகும். விழிசுழன்று குழிவிழுந்து இருண்டுவரும். நீர் மஞ்சளாயும் சிவப்பாயு மிறங்கும்.

சிலேத்துமக்கூறு.

சிலேத்துமமீறினால் உடல் காயும். வற்றும். வெளுக்கும். குளிர்ந்துநடுங்கும். அன்னஞ்செல்லாது. விக்கல், சத்தியிருமல், மேல்மூச்சு, திகைப்பு, வியர்வை, க்ஷயம், ஈளையுண்டாகும். நெஞ்சும் விலாவும் நோகும். இரத்தங் கக்கும். நாவு வழுவழுத்தினிக்கும். வாய்நீரூறும். நீர் சிறுத்திறங்கும்.

வாத மொருபங்கு, பித்த மரைப்பங்கு, ஐயங் காற்பங்கு அல்லது வாத மொருமாத்திரை, பித்தம் அரைமாத்திரை, ஐயங் கால்மாத்திரையுமாக ஓடினால் தேகத்திற்பிணியில்லை.

நாடித்தொந்திப்பு.

வாதத்தில் வாதமாகில் உடல்நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருங்கும். வாங்கும், உடல்பதறும், அன்னஞ்செல்லாது, வாதத்திற் பித்தமாகில் வாய் குழறிப்பேசும். கால்குளிரும். வீக்கமுண்டாம். வாதத்திற் சிலேத்துமமாகில் உடல் வீங்கும், வலிக்கும், தலையிடிக்கும். குணங்கள் வெவ்வேறாத் தோற்றும். மெய்வெளுக்கும். அன்னஞ் செல்லாது. நாளுக்குநாள் வீக்கம் அதிகப்படும். பித்தத்திற் பித்தமாகில் பிதற்றும். கிறுகிறுக்கும். சத்திக்கும், இளைக்கும். மேனி அத்திபோல் உலர்ந்து வற்றி வெளுக்கும். பின்பு வீக்கமுண்டாம். பித்தத்தில் வாதமாகில் பிடரி கால்கையில் குத்தும். மெய் குறுகும். பதறும். அத்திபோலுலரும். சுரங்காயும். புத்திமடியும், பொறுமை நீங்கிக் கோபமுண்டாம். பித்தத்திற் சிலேத்துமமாகில் வாய்குழறும். பிதற்றும். சத்திக்கும். வாய்நீரொழுகும். தலைசுற்றும். வயிறுநோம்.பித்தமெடுக்கும். பிடரி வலிக்கும். சிலேத்துமத்தில் வாதமாகில் நரம்பெல்லாம் வலித்துநிற்கும். பிடரி குன்றவலிக்கும். விழி மேலாடும். வாய்குழறும். சிலேத்துமத்திற் பித்தமாகில் உண்பது கசப்புண்டாகும். நாவு கசக்கும். இனிக்கும். பேச்சுத்தடுமாறும். கபங்கட்டும். குரல் வேறுபடும். கண்ணிற் பீளைசாடும். சிலேத்துமத்திற்

Koviloor Digital Library

சிலேத்துமமாகில் விழி வட்டங்கொள்ளும். உயிர்போம். வாதத்தில் ஐயஞ்சேரில் சன்னிதோஷம் மெய்ம்மயக்கம் சோபம் மூர்ச்சை சோகை பாண்டு உண்டாகும். பித்தத்தில் வாதஞ்சேரிற் பீனிசம் மண்டைக்குத்து வலி பவுந்திரம் அரையாப்பு நவமூலங்களுண்டாகும். பித்தம் வாதத்தேறில் பாண்டு காமாலை நீராம்பல் மகோதரம் கவுசி மகவை வெப்புப்பாவையுண்டாகும். ஐயம் பித்தஞ்சேரில் வாயூறல் சுரம் பேதி வாந்தியுண்டாகும். வாத மிரண்டுபங்கும், பித்த மொருபங்குமோடில் வாதபித்த தொந்தரோகம். வாயுமிகுந்து உதரம் விம்மும். வலிக்கும். மாதரையிச்சிக்கும். சிந்தைமிகும். பித்த மிரண்டுபங்கும் வாத மொருபங்குமோடில் பித்தவாத தொந்த ரோகம். உஷ்ணமிகுத்து உடல் கண்ணெரியும். பசி தாகமுண்டாகும். வாய்கசக்கும். நீராகாரம் விரும்பும். வாத மிரண்டுபங்குஞ் சிலேத்தும மொருபங்குமாகில் வாத சிலேத்தும தொந்தரோகம். வயிறு பொருமி வலிக்கும். பசியாது. பித்த மிரண்டு பங்கும் சிலேத்தும மொருபங்குமோடிற் பித்தலேத்தும தொந்தரோகம். தலைவண்டு பிடரிநோகும். உடம்பெல்லாந் தினவுண்டாகும். வயிறெரியும், மந்தித்துப் பொருமும். சிலேத்தும மிரண்டுபங்கும் வாத மொருபங்குமோடினாற் சிலேத்துமவாததொந்தரோகம். சன்னியுண்டாகும். தலைநோகும். வாய்தித்திக்கும், அன்னஞ்சமியாது. சிலேத்தும மிரண்டுபங்கும் பித்த மொருபங்குமோடினாற் சிலேத்தும பித்த தொந்தரோகம். உடல் குளிர்ந்து கூசும். தாகிக்கும். வாத மிரண்டுமாத்திரையும் பித்த மொருமாத்திரையுமாகிற் கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு தாளுறநடப்பது போல நாடி நடக்கும். வாத பித்த தொந்தரோகம். உதிரம் நொந்து தாகிக்கும். உணவு செல்லாது. பித்த மிரண்டுமாத்திரையும் சிலேத்தும மொருமாத்திரையுமாகில் பிள்ளைத்தொட்டி நடுவிலசைவதுபோல நாடி நடக்கும். பித்த சிலேத்தும தொந்தரோகம். பசியிராது. அடிக்கடி உதிரம் விம்மும்; பிதற்றும்; நயனம் எரியும்; மஞ்சட்போலிருக்கும்; சிலேத்தும மிரண்டுமாத்திரையும். வாத மொருமாத்திரையுமாகிற் புணர்ச்சிபோல் நாடி நடக்கும். சிலேத்தும வாததொந்தரோகம். கபமேலாடும். இனிப்பைவிரும்பும். பசிதாபமதிகரிக்கும். வாத மிரண்டுமாத்திரையும் சிலேத்துமமொருமாத்திரையுமாகில் அரணைவால் வெட்டுண்டு துடிப்பதுபோல நாடி துடிக்கும். வாதசிலேத்தும தொந்தரோகம். உடல்வலிக்கும். கைகால் திமிராயிருக்கும் வயிறு பொருமும். பித்த மிரண்டுமாத்திரையும் வாத மொருமாத்திரையுமாகில் வீணையடித்தாற்போல நாடியடிக்கும். பித்த வாத தொந்தரோகம். உடல் வலிக்கும். எரியும். நெஞ்சும் நாவும் வறளும். நீர் சிறுத்திறங்கும். சிலேத்தும மிரண்டுமாத்திரையும் பித்த மொருமாத்திரையுமாகில் வண்டிச்சக்கரம்போல நாடி சுழலும். சிலேத்தும பித்த தொந்தரோகம். சன்னியுண்டாகும். உச்சிவலிக்கும். செவிகேளாது. நாவு இனிக்கும். வயிறு மந்திக்கும்.

வாயுவுக்கும் மந்தத்திற்கும் மூன்று நாடியும் அமர்ந்து தளர்வாயோடும். பசித்திருக்கும்போது மூன்றுநாடியுந் தூங்கியோடும். பாம்புவிஷத்திற்கு மூன்றுநாடியும் அடங்கிநிற்கும். வயிற்றுவலிக்கு மூன்றுநாடியும் உள்ளுறவாய் வாங்கியோடும். கிரந்திநோய்க்குக் கரையுடைந்த அருவியைப்போலோடும். புண்புரைக்கு வாதமும், பித்தமும், பீனசத்துக்குப் பித்தமுஞ் சிலேத்துமமும், சூ லக்குச் சிலேத்துமமும், பித்தமுஞ் சுழன்று காணும். கருப்பவதிக்கு

Koviloor Digital Library

வாதமும் பித்தமுங் கலங்கிக் காணும். கிராணி யதிசாரத்துக்கு வாதமும் பித்தமுந் தளர்ந்து காணும். நீர்மேகத்துக்கு நாடியெல்லாம் பலங்குறைந்து ஏரியின்மேற்பரண்டுவிழும் புழுப்போற் புரட்டிக் காணும். குருநாடி சீறிநிற்கும். மேகமதிகப்பட்டால் வாதமும் பித்தமும் பின்னித் துடிக்கும். சன்னிக்கு மூன்றுநாடியும் படபடத்தோடும். விக்கலுக்குச் சிலேத்துமமும் வாதமுஞ் சுரத்துக்கு வாதமும் பித்தமுங் கணைக்காச்சலுக்குப் பித்தமும் வாதமுங் கலங்கிக் காணும். விஷநீர் சோகை பாண்டுக்கு மூன்றுநாடியு முகவீணைபோல் மீட்டும். தலையிடிக்கும். க்ஷயரோகத்திற்குப் பித்தங் கலங்கிக் காணும். இளநீர் நெய் பால் இறைச்சி கனிகளுக்கு வாதங் கதிக்கும். கோழிமாமிசத்திற்குங் கோபத்திற்கும் புணர்ச்சிக்கும் பித்தங் கதிக்கும். சுரதோஷத்திற்குப் பித்தம் வாதத்தைத் தாண்டும். சீதருட்சைக்குப் பித்தத்திற் சிலேத்துமஞ் சேரும். புணர்ச்சிக்கு நாடி புழுப்போல் நிமிர்ந்து வலித்து நின்று வாங்கும். பித்தசன்னிக்கு வாதமுஞ் சிலேத்துமமும் அமர்ந்து பித்தம் வெடு வெடுத்து மீறி நிற்கும். மரணசன்னி உட்குத்து புறவீச்சு இசிவுக்கு வாதமுஞ் சிலேத்துமமும் அழுந்திக்காணும்.

மரணக்குறிகள்.

இரண்டு தினம் பிங்கலைபாயில் மூவாண்டிலும், மூன்றுதின மிடகலைபாயில் இரண்டு பருவத்திலும், பத்துத்தினம் உபயத்திற் பாயில் திங்களொன்றிலும், மூக்கு விட்டு வாய்வழி சுவாசம் பாயில் மூன்றுதினத்திலும், ஐயரோகத்தாலிளைத்தவுடல் வீங்கிடில் திங்களொன்றிலும், பித்தரோகத்திலிளைத்தவுடல் வீங்கிடில் மதி ஆறிலும், சிலேத்துமம் வெள்ளம்போல் மடமடவெனச் சுறுக்காயோடிடில் மறுநாளிலும், பித்தஞ்சிதறியோடில் மூன்றுதினத்திலும், வாதஞ் சிதறியோடில் எட்டுத்தினத்திலும், வாத பித்த மிரண்டுங்கூடி நிலைதப்பிச் சிதறில் ஐந்து தினத்திலும், வாத பித்த சிலேத்தும மூன்றுங்கூடி நிலைதப்பிச் சிதறியோடினால் மண்டலத்திலும் மூன்றுமொன்றாய்க்கூடி அரணைவால்துடி காணில் ஒருதினத்திலும், வாதமித்த சிலேத்தும மொன்றாய்க் கூடித் தேட்கொடுக்குப்போலாடி ஓடம்போல்நடந்தால் திங்களொன்றிலும், நாடி போத்துப் போற் புறந்துடித்திடில் திங்களொன்றிற் பிணி நீங்காவிட்டால் திங்கள் பத்திலும், சிலேத்துமநாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால் திங்களொன்றிலும், காலையில் சிலேத்துமநாடியும், உச்சியிற் பித்தநாடியும், மாலையில் வாதநாடியும் வகைதப்பி யோடிடில் நாலைந்துதினத்திலும், சிலேத்துமநாடி மயில்போலும் அட்டைபோலும் பதறிநின்றிடில் ஏழுதினத்திலும், ரோகஸ்தன் உமிழ்நீர் சமீபத்தில் விழுந்திடினும் மரணம்.

பாளச்சீலையை நெய்யில்நனைத்து மணிக்கடையிற் சுற்றி மூன்றேமுக்கால் நாழிகைசென் றவிழ்த்துப்பார்க்கில் வாதநாடி குதித்துவாங்கினா லப்பொழுதிலும், நல்லரவுபோல் நெளிந்தோடினால் இருபத்திரண்டுநாளிலும், உதைத்து வாங்கினால் ஒன்பதுநாளிலும், அட்டைபோல் நடந்தால் மூன்றுதினத்திலும், தந்திபோற் சுண்டினால் அன்று பொழுதிலும், பக்கஞ்சென் றெதிர்த்து வாங்கினால் முப்பதுநாளிலும் மரணம்.

Koviloor Digital Library

நாடி புழுப்போல் நெளிந்தாலும் சூடுகொண்டாலும், பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும், அன்னம்போல் நடந்தாலும் பிணி நீங்கும்.

இடதுள்ளங்கால் குளிர்ந்து வலதுள்ளங்கால் சுட்டுக் குழைச்சுக் குளிர்ந்திடில் பத்துத்தினத்திலும், குழைச்சுக்களிரண்டும் குளிர்ந்து உச்சி வியர்த்து மூக்கு விறைத்து இளைப்பு விக்கல் தோன்றி உடம்பெல்லாம் குளிர்ந்து விழியிருண்டால் மூன்று தினத்திலும், பிடரி நெற்றி கழுத்தினுட்புறம் குளிர்ந்து விழி நீலநிறமாகி நெஞ்சிற் கபங்கட்டிடில் மூன்று தினத்திலும், ஒரு நாசியும் முழங்கைப் பள்ளமுங் குளிர்ந்து இடதுள்ளங்கால் சூடாய்த் தொண்டை கரகரத்தால் ஐந்து தினத்திலும், அடித்துடையும் இரண்டுள்ளங்காலுங் குளிர்ந்து இரு செவியும் விறைத்து நின்றா லிரண்டுதினத்திலும் மரணம்.

வலதுள்ளங்கால் சுட்டு, இடதுள்ளங்கால் குளிர்ந்து, உச்சி வியர்த்து உடம்பெல்லாங் கனலாயிருந்தாலும், புருவம் நெற்றி இடதுள்ளங்கை சுட்டு உச்சி குளிர்ந்தாலும், வலது நாசியும் வலது உள்ளங்காலும் வெதும்பி இடதுநாசியைத் தேய்க்கும் போது சிவந்தாலும், உடல் ஆதியந்தமுஞ் சூடேறினாலும் பிணிநீங்கும்.

விழி மூக்குக் காது உச்சி உந்தி உள்ளங்கால் கைகள் வெளுத்துப் பாதங்குளிர்ந்தால் ஐந்து நாழிகையிலும், வாதமும் பித்தமும் அடங்கிச் சிலேத்துமங் குதித்து உடல்வெளுத்து மார்பு குளிர்ந்திடிற் றொண்ணூறுகடிகையிலும், சிலேத்துமநாடியெழுந்து வீழ்ந்திடி லிரண்டுகடிகையிலும், பித்தமடங்கி வாதமுஞ் சிலேத்துமமுமேலிட்டுக் கண்டத்திற் கபமடைந்து இளைத்து விழிமயங்கிச் சுழன்று கண்ணில் நீர்வடிந்தால் ஐந்துநாழிகையிலும், முகம் நீண்டு உடம்பெல்லாம் நரம்புதோன்றிப் பாசிபோல் கண் பஞ்சடைந்து இருள்மூடினும், விசைநரம்பு குளிர்ந்து தளர்ந்து விறைத்து வாங்கிப் பொறிகளும் மிகுதியாய்த் தளர்ந்து நெறுநெறெனப் பற்கடித்து நடுக்கமுண்டாய் வாத பித்த சிலேத்துமம் விட்டிலைப் போற் றுடித்திடினும் மரணம்.

வாத பித்த சிலேத்தும மூன்றும் வெட்டுப்பட்ட அரணைவால்போற்றுடிக்கும்; உடல்வேறுபட்டுக் குளிர்ச்சிகாணும்; கையால் முகத்தைத்தடவும்; மனிதரை ஆவலாய் நோக்கிப் பார்க்கும்; ஏங்கிப் பெருமூச்செய்தும்; இரண்டு விலாவும் இளைக்கும்; தொண்டையிற் கபங்கட்டி யிரையும்; கண்ணில் நீர்வடியும்; எடுபிடி யென்றெழுந்து விழும்; உடல்மயங்கும்; மூக்குநீளும்; வியர்வைகாணும்; விழியும் பல்லும் கறுக்கும்; கபமேலாடி முடிச்சுவிழும்; கண்சுழன்று பலபேச்சாகும்; ஜீவன்மயங்கும்.

முதலாவது அவத்தை, பிணவெடிநாறும்; இரண்டாவது அவத்தை நலம்பேசும்; வேற்றுமைகூறும்; மூன்றாவது அவத்தை சித்தங்கலங்கும்; நான்காவது இளைத்து மேன்மூச்சு வாங்கும்; ஐந்தாவது முகடுபார்க்கும்; ஆறாவது உடல்குளிரும்; ஏழாவது அன்னம் விரும்பும்; எட்டாவது கண்பஞ்சடையும்; ஒன்பதாவது உடல்வெளுக்கும்; பத்தில் மரணம்.

Koviloor Digital Library

ரோகஸ்தர்களின் தேகமுதலான குறிகள்.

வாதரோகியுடல் குளிரும்; முகம், விழி, பல், மலம் கருத்திருக்கும்; சிறுநீர் பொருமிக் கருமையாய்க் கடுத்துச் சிறுத்திறங்கும்.

பித்தரோகியுடல் சூடாயும், முகம் விழி நாக்குப் பல் மலம் மஞ்சளாயுமிருக்கும்; நீர் மஞ்சளாயுஞ் சிவப்பாயுமிறங்கும்.

சிலேத்மரோகியுடல் வியர்க்கும்; முகம் விழி பல் நாக்கு மலம் நீர் வெளுப்பாயிருக்கும்; கண்ணிற் பீளைகட்டும்.

தொந்தரோகியுடல் முகம், விழி, பல், நாக்கு, நீர், மலம் பலவிதம்.

நாடிநூல் முற்றிற்று.

மணிக்கடை நூல்.

மணிக்கடைக்குமேல் நான்குவிரல்தள்ளிக் கைச்சுற்றளவைக் கயிற்றினாலளந்து கண்டநீளம் அவரவர் கையினால் பத்துவிரற்கடையிருந்தா லுடல்வெதும்பும்; வாயுவினால் நெஞ்சு கால் கையிற் குத்தும், உளையும்; வயிற்றில் வாயுத்திரட்சியுங் குன்மமு முண்டாகும்.

ஒன்பதேமுக்காலுக்கு அரையாப்பு பிளவை வறட்சி இருமலுண்டாகும்; ஒன்பதரைக்கு உடல்வெம்பி வீங்கும்; சூடுண்டாகும்; விழிகாந்தும்; உட்சுரம் மேகமுண்டாகும்; அன்னத்தைத் தள்ளும். ஒன்பதேகாலுக்கு விழிகாந்தும்; நீர் கடுத்துச் சிறுத்திறங்கும்; நித்திரைவராது; பீனிசமுண்டாம் ஒன்பதுக்குச் செவிமந்தமாயுங் கண் புகைச்சலாயு மிருக்கும்; குறுக்கில் வாயு இறங்கி வலிக்கும்; இருதுடையும் அயரும்; நடக்கவொட்டாது. எட்டேமுக்காலுக்கு உடல்காயும்; சில் விஷத்தால் குட்டம்போலுண்டாகும்; மூலவாயுவினால் வயிறுபொருமும்; கண்காசமும் பீனிசமு முண்டாம். எட்டரைக்குத் தேகவெதுப்பு வெட்டை கிரந்தி குஷ்டம் சொரி குடல் வாதந் தாதுநஷ்ட முண்டாம். எட்டேகாலுக்கு உடல், பொருத்து வலித்துளையும், தலை வறட்சி வலி பீனிசம் வியர்வை விஷத்தினால் இளைப்பிருமலுண்டாகும். எட்டுக்குமேகக்காங்கை வயிற்றில்மந்தம் பொருமல் வாயுத்திரட்சி யுண்டாகும்; அன்னத்தை ஒறுக்கும்; சுகமிராது; வேற்றுடற்படும். ஏழேமுக்காலுக்கு மூலமெழும்பிக் கைகால்காந்தும்; தலையிடிக்கும்; மதத்திருக்கும்; இரண்டு வருடத்திற் கண்டமாலையும் நாட் செல்லச்செல்ல நாசியிலிரத்தமு முண்டாம். ஏழரைக்கு எலும்புருக்கி மேகம் வயிற்றுப் பொருமல் கண்ணொிவு ஆறுநாளில் உடம்பிற் காந்தல் கால்கை சந்துளைவு விப்புருதியுண்டாம். ஏழேகாலுக்கு இடுப்பில் வாயுக்குத்து வலி பிடிப்பு சிரசிற் பித்தங்கண்வலி பாண்டு சோகை கைகால் காந்தல் அதிகநித்திரையுண்டாம். ஏழுக்கு பித்தஞ் சிரசிலேறும்; வாயினா லிரத்தம் விழும்; க்ஷயங் கால் கை காந்தல் சிலந்தி புண்ணுண்டாம்; உஷ்ணமிகுக்கும்; மலந்தீயும். ஆறேமுக்காலுக்கு அண்டவாயு கண்வலி மயக்கம் மூன்றுவருடத்தில் நீரடைப்பு கல்லடைப்பு கைகால் காந்தல் வலியுளைவு முகத்தில் வியர்வை யுண்டாம். ஆறரைக்கு உடலில் வெதுப்பு

Koviloor Digital Library

குத்தல் தாகம் அன்னத்துவேஷம் சூடு வாதமுண்டாம். ஆறேகாலுக்கு மூலக்கிராணி புளித்தேப்பம் சத்தி துடைவாழையுண்டாம்; அரை சோறுபோற் கழியும். ஆறுக்கு இளைப்பும் நெஞ்சிற் கபமு முண்டாய் இருபதுநாளில் மரணம். ஐந்தேமுக்கால்முதல் நான்கு விரற்கடைவரை தேகத்திற்கண்ட பிணிகள்மீறி ஜீவன் பிரியும்.

மணிக்கடைநூல் முற்றிற்று.

வைத்திய முறை.

ஔஷதஞ் செய்யவும் உண்ணவும் உரிய கிழமை.

சனி புதன் திங்கள் இந்த வாரங்களில் மருந்து கருதிடிற் றீதாம். வெள்ளியில் நோய்மிகும்; அருக்கனில் மருந்துசெய்து, செவ்வாய் வியாழனி லுட்கொள்ளப் பிணிதீரும்.

மரணநாளறிய.

அருக்கனிற் பரணியும், திங்களிற் சித்திரையும், செவ்வாயி லுத்திராடமும், புதனில் அஸ்தமும், வியாழனிற் கேட்டையும், வெள்ளியிற் பூராடமும், சனியில் இரேவதியும் கூடின தினங்களிற் பிணிகண்டால் தீராது.

கவனிப்பு.

ஒரு நோயாளிக்கு மருந்துகொடுக்குமுன் அவன் வயதையும், வாத பித்த சிலேத்தும மென்னுஞ் சரீரகுணத்தையும், பெலத்தையும், அப்பியாசத்தையும், தொழிலையும், நோயுண்டாகிய காலத்தையும், தீபனசக்தியையும், மலபாதையின் கிரமத்தையும், சரீரக்கூறுகளையும், நாடிஸ்திதியையுங் கவனிக்கவேண்டும்.

வயதுக்குத்தக்கபடி மருந்தினளவை விகற்பித்துக் கொடுக்கவேண்டியது. வாலிபர்களைப்பார்க்கிலும் பிள்ளைகளில் மருந்து அதிக துரிதத்திற் பிடிப்பதால் பிள்ளைகளுக்குக் குறைந்த அளவிற் கொடுக்கவும்.

வாத பித்த சிலேத்தும குணங்களாற் சரீரக்கட்டளை வேறுபடுவதுபோல் மருந்துகளு மந்தச் சரீரக் கட்டளைக்குத்தக்கபடி வித்தியாச குணங்களைக் காட்டும். ஆதலா லந்தந்தச் சரீர சுபாவத்துக்குத் தக்கபடி மருந்துகளை உபயோகிக்கவும். பெண்களுக்கு மாதவிடாய் சிரமமாய்க் காணுகிறதுங் காணாததுந் தெரிந்துகொள்ளவும். கெர்ப்பவதிகளுக்கும் பிள்ளைகளுக்கும் பால்கொடுக்குந் தாய்களுக்கும் மாதவிடாயாகுங்காலத்துப்பெண்களுக்கும் நேர்வாளமுதலிய வெப்புடைய பேதிமருந்துகளைக் கொடுக்கலாகாது. இரத்தத்திற் கலந்து தூர்க்குணங்களையுண்டாக்கும்.

கடினவேலைசெய்து பக்குவமில்லாத புசிப்பையுடையவர்கள் வலிய மருந்துகளைச் சகிப்பார்கள். அதிக செல்வத்துடன் சரீரப்பிரயாசையில்லாமற்

Koviloor Digital Library

காலத்தைக் கழிக்குஞ் சோம்பர்களுக் கனேக நோய்கள் சம்பவிக்கும். அவர்கள் வலிய மருந்துகளைத் தாங்கமாட்டார்கள். ஒருமருந்தை விடாமல் நாட்படச் சாப்பிடவேண்டிய விஷயத்தில் படிப்படியா யதின் பிரமாணத்தை யதிகப்படுத்தினாலொழியக் குணத்தைத் தரமாட்டாது. ஆனா லிக்கிரமம் சிலமருந்துகளில் வேறுபடும். இரசம் அயம்பாஷாண முதலியவைசேர்ந்த சிலமருந்துகள் சாப்பிட்டுவரவரக் குணத்திலதிகமாகும்.

வறட்சிமலட்டுக்குணம்.

எவ்வளவு அசனஞ்செய்தாலுஞ் சரீர முலர்ந்துபோம்; அடிக்கடி கொட்டாவியுண்டாகும்; சொப்பனம் பலகாற் காண்பிக்கும்.

நிவிர்த்தி.

பெரும்பூசணிப் பழத்தைத் தலையிற்றேய்த்து (3) நாள் ஸ்நானஞ்செய்வித்துக் காற்படி யாவின்பாலிற் சிறு எலுமிச்சம்பழம் பிழிந்து, அம்மான்பச்சரிசிச் சமூலமரைத்துக் கொட்டைப்பாக்களவு போட்டுக் கலக்கிக் காலையில் (3) நாளுங்கொடுத்து, அப்பால், மேற்படி எண்ணெய் செய்து 4, 5 நாள்வரை சாப்பிடவும். பத்தியமாயிருக்கத் தீரும்.

வாயுமலட்டுக்குணம்.

கெர்ப்பக் குழியைச் சுற்றி வாயு நிற்கும்; உண்ட அசனம் நன்றாய்ச்சமியாது; பொருமும், ஏப்பம் வரும்.

நிவிர்த்தி.

மந்திஷ்டிக்கிழங்கு திரிபலை கீழ்க்காய்நெல்லி அசமதாகம் பெருங்காயம் மஞ்சள், மரமஞ்சள் கடுகுரோகணி கரிப்பாலைவேர் திரிநாமப்பாலைவேர் தேட்கொடுக்குவேர் [illegible]கிராக்கிழங்கு நீர்வள்ளிக்கிழங்கு வகைக்கு வராகனெடை (21½). ஆவின்பாலிலரைத்து இருபோதும் ஒருபடி நெய்யிற்போட்டு நாலுபடி பால்விட்டுத் தீபம்போல் மூன்றுநாளெரிந்து நாலாநாள் பதமாய்க் காய்ச்சிக் கரண்டிவீதம் சூதகமான நாள்முதல் (15) நாள்வரை இருபோதும் கொள்ளவும்; பத்தியமாயிருக்கவும்; வாயு மலடு தீரும். பேய்க்குமட்டிக்காய்ச்சாறு பால் வகைக்குப்படி (4) தேங்காய்ப்பால்படி (1) சிற்றாமணக்கெண்ணெய் ஈருள்ளிச்சாறு வகைக்குப்படி (3) கடுகு வெள்ளுள்ளி மஞ்சள் இந்துப்பு கடுக்காய் கடுகுரோகணி மதுரம் திரிகடுகு ஓமம் வாய்விளங்கம் சீரகம் அரத்தை கோஷ்டம் சிறுநாகப்பூ சன்னலவங்கப்பட்டை வகைக்குக் கழஞ்சு (3) அரைத்து எண்ணெயிற் கரைத்துக் காய்ச்சி அந்திசந்தி கரண்டிவீதங்கொண்டுவரக்கெர்ப்பவாயு கிருமி நீர்க்கட்டு உதரரோகம் பெருவயிறு கெண்டை தீரும். சிற்றாமணக்கெண்ணெய் ஆவினெய் வீழிச்சாறு வகைக்குப்படி (1) ஈருள்ளி திரிகடுகு வசம்பு கோஷ்டம் இலவங்கம் ஏலம் வெள்ளுள்ளி வகைக்குப் பலங் கால் ஆவின்பாலிலாட்டிக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையிற் காற்சேர்வீதம் மூன்றுநாட்சாப்பிட்டு ஆறுநாள் பத்தியமாயிருக்கக் கெர்ப்பவாயு கிருமி முதலானவை தீரும்; தேகங்குளிரும்.

Koviloor Digital Library

மாதமுழுக்கில்லாதபேர்களுக்கு.

வேலிப்பருத்திச்சாறருந்தினாலும், தூதுளை குப்பைமேனி உருண்டையாய்க்கிடக்கிற குளத்துப்பாசி வகைக்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணமரைத்துச் சர்க்கரை கலந்து மூன்றுநாளருந்தினாலும், காட்டுக்கருணைக்கிழங்கு அரைத்துப் பாலிற்கலக்கி (3) நாளருந்தினாலும், பேய்க்குமட்டிவேர் புகையூரல் கார்கோலரிசி சமனிறையாயரைத்துக் கண்டங்கத்திரிப்பழச் சாற்றிலருந்தினாலும், நிலப்பனைக்கிழங்கு பரங்கிப்பட்டை வகைக்குப்பலம் (1) சூரணித்து ஒருபடி கொள்ளில் (4) படி தண்ணீர் விட்டு எட்டொன்றாய் வற்றவைத்திருத்ததிற் சூரணத்தைப்போட்டுக் கிண்டியெடுத்து அந்திசந்தி சாப்பிட்டுவந்தாலும், மாவிலிங்கப்பட்டைச் சூரணஞ்செய்து தினைத் தவிடு கலந்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் மூன்றுநாளருந்தினாலும், எள்ளைக்கழுவின தண்ணீர் படி (½) யில் ஒருபல ஓமத்தைப் போட்டுக் கொடுத்தாலும், கொடுவேலிவேர் எலுமிச்சங்காய்ப் பிரமாணமரைத்துக் கொள்ளவித்த தண்ணீரில் மூன்றுநாளருந்தினாலும், குருஞ்சாச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி மாகாணி யொன்றாய்க்கலந்து மூன்றுபோது கொண்டாலும், சிவந்த நாயுருவியும் சிறுவிளாவுமரைத்து நீரில் கலக்கிக்கொடுத்தாலும், புளியமடற் கிழங்கரைத்துப் பாலில் மூன்றுநாட் கொடுத்தாலும் சூதகக்கட்டு நீங்கி மாதமுழுக்குண்டாகும்.

புழுமேல் மலட்டுக்குணம்.

அடிவயிற்றிற் சுருக்குச்சுருக்கென்று வலிக்கும்.

நிவிர்த்தி.

எள்ளெண்ணெய் படி (¾) முத்தக்காசு கழஞ்சு (2) வரப்பூலாங்கொழுந்து சராணைக்கொழுந்து வகைக்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணமரைத்து எண்ணெயிற் போட்டுக் காய்ச்சிவைத்துக்கொண்டு சூதகமானநாள்முதல் பதினைந்து நாள்வரை ஒரு கரண்டி வீதம் உண்டுவரத் தீரும். பத்தியமாயிருக்கவும். வறட்சி மலடு தீரும்.

கெர்ப்பப் புழுக்குணம்.

வாந்திபண்ணும், வயிறுநோகும், இரண்டுமாதம் மூன்றுமாதம் முழுக்கு நின்று நின்றுண்டாகும், உடல் வெளுக்கும், தினவுண்டாகும்.

நிவிர்த்தி.

ஆதொண்டையிலைச்சாறு கரும்பிண்ணாக்கிலைச்சாறு சிற்றாமணகெண்ணெய் கருப்புக்கட்டி இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்றுநாளுங் கொள்ளப் புழு விலகும்; கருத்தரிக்கும். பாகலிலைச்சாறு குமட்டிக்காய்ச்சாறு எருக்கிலைச்சாறு வீழியிலைச்சாறு வகைக்குப் படி (1) வேப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் ஒன்றாய்விட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சிக் காசெடைகொள்ள மலஜலக்கட்டு, கெர்ப்பப்புழு, கிருமி, வாயுத் தீரும்.

Koviloor Digital Library

கெர்ப்பப் புழுக்குணம்.

மாதவிடாய்க் காலத்தில் அடிவயிற்றிற் சுருக்கென்று வலித்துச் சூதகம், இறைச்சி கழுவின தண்ணீர்போலக் காணும். புருஷனுடன் கூடுங்காலத்தில் அதுபோலவே யோனிவழி நீர் பொசிந்து சீலையிற் கறைபடும்.

நிவிர்த்தி.

சீந்தில்வேர் இலைக்கள்ளிவேர் கியாழம்வடித்து ஆவினெய்விட்டுக் குளித்ததுமுதல் மூன்றுநாள் உண்ணத் தீரும். பத்தியம் பாலும் அன்னமுங் கொள்ளவும்.

மேற்படி கிருமிகட்குப் பொதுப்பிரயோகம்.

சித்திரமூலம் சாரணைவேர் பொன்னாங்காணிவேர் சமனாயரைத்துத் தேங்காய்ப் பாலிற் குளித்தது முதல் மூன்றுநாள் அருந்தக் கெர்ப்பப்புழு விழும். விப்புருதி தீரும். முன்போற் பத்தியம், நந்தியாவட்டைவேர்ச் சூரணம்பண்ணிச் சூதகமாயிருக்கும் போது வெருகடிப்பிரமாணம் ஆவின்பாலிற்கொள்ள. குறட்டைக்கிழங்கு பலம் (2) ஆடுதீண்டாப்பாளைவேர் பலம் (¾) வெள்ளுள்ளி பலம் முக்கால் வசம்பு பலம் (¼) சிற்றாமணக்கெண்ணெயிற் பதமாய்க்காய்ச்சி வடித்துச் சூதகமாக (4) நாளைக்குமுன் கொடுக்க வயிறுகழியும். மோருஞ்சாதமுமுண்ண. தகர விதையை அரைத்து அறுபதுநாழிகை சென்ற மோரில் சூதகமாயிருக்கிற மூன்றுநாளுங்கொள்ள. குருஞ்சாவேர் பாலில் அரைத்து இளவெந்நீரில்கொள்ள. ஆண் வசம்பு வெள்ளுள்ளி வகைக்குப் பலம் (1) பூநீற்றுச்சுண்ணாங் கழஞ்சு அரைத்து அரைப்படி தேசிநீரிற்கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி எலுமிச்சங்காய்ப் பிரமாணம் மாதவிடாய்க் காலத்தில் மூன்றுநாட்கொடுத்து வாழையிலையைவிரித்து அதிற் குந்தியிருக்கச்செய்தால் கிருமிகள் கொழுந்துபோல் விழும்; இந்தப்படி மூன்றுமாதம் மூன்றுமுறைசெய்யக் கெர்ப்பமுண்டாம். பச்சைக் கற்பூரம் மிருதாரசிங்கி செண்பகப்பூ மாசக்காய் வெள்ளெருக்குவேர் சிறுகுருஞ்சாவேர் சாரணைவேர் வண்டோதரிவேர் கருப்புக்கட்டி வகைக்குப்பலம் (2) தண்ணீர்விட்டரைத்து (14) உண்டைசெய்து ஏழுநாளுண்டு எட்டாநாள் அகத்திச்சாறாகிலுந் தும்பைச்சாறாகிலும் காற்படிசாறு குடிக்கக் கூட்டோடே புழுவிழும். சூதகமாயிருக்கும்போது சீனி பலம் (1) அரைப்படி ஆவின் பாலிற்போட்டுக் கரைத்துக்கொடுத்து மறுதினத்திலும் அப்படியே செய்து மூன்றுநாள் புரசம்விதையை எருமைச்சாணியிற் புதைத்து மறுநாளெடுத்துத் தோல்நீக்கிப் பெலமறிந்து இரண்டு மூன்று விதையை அரைத்துக் காற்படி ஆவின்பாலிற்கொடுக்கக் கெர்ப்பப்புழுவும் வயிற்றிலுள்ள மற்றப் புழுக்களுஞ் செத்துவிழும்.

பெரும்பாட்டின் குணம்.

புணர்ச்சியினா லக்கினிமீறி வெட்டையுண்டாகி அது மிகுத்துக் கருக்குழியும் உந்தியும் புண்ணாய்ப் பெரும்பாடு தோன்றும்; செவ்விளநீர்போ லுதிரம் வடிந்து கொண்டிருக்கும், வயிற்றுவலி சோபதாபமுண்டாம்.

Koviloor Digital Library

நிவிர்த்தி.

நாவற்பட்டையைப் புளித்த எருமைமோரிற் றுவைத்திடித்துப் பிழிந்து அதிலைந்துவராகனெடை சந்தனங்கலக்கி மூன்றுநாட்கொள்ளத் தீரும். நெல்லிக்காய்ச் சாறு எலுமிச்சம்பழச்சாறு கருப்பஞ்சாறு ஆவினெய் வகைக்குப்படி (¾) தாளிசபத்திரி பலம் (¾) சாதிக்காய் ஏலம் கிராம்பு அரத்தை அதிமதுரம் நிலப்பனைக் கிழங்கு வகைக்குப்பலம் (1) தேங்காய்ப்பாலிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக் கரண்டிவீதங்கொள்ளப் பெரும்பாடு, வெள்ளை, நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, சதையடைப்பு நீங்கும். நீர்வள்ளிக்கிழங்குச்சாறு துத்திவேர்ப்பட்டை முசுமுசுக்கை நன்னாரிவேர் பூமிசர்க்கரைக்கிழங்கு நிலப்பனைக்கிழங்கு பாலிலரைத்து நெய்விட்டு லேகியமாய்க் கிண்டியருந்தத் தீரும். கஞ்சாஇலை ஏலம் ஆவினெய்யிலரைத்துச் சாளைமீனிற்பூசி ஆவரைவேர்க் கியாழஞ்செய்து ஒரு சட்டியிலிட்டு வாயிற் சீலை வேடுகட்டி அதின்மேற் மீனைவைத்து இரண்டு நாழிகை பிட்டவியலாய் வெந்ததின்பினெடுத்துக் கவசம்சிலாம்பு முள்நீக்கிப் பத்துநாட்சாப்பிட்டு அந்திசந்தி ஆவரை வேர்க்கியாழங் குடித்து வரத் தீராப் பெரும்பாடுந்தீரும். ஏலம் சன்னலவங்கப்பட்டை ஆவரம்பூ நெல்லிமுள்ளி கற்கண்டு வகைக்கு வராகனெடை (3) பொடித்து வடிகட்டி மூன்றுபங்கு செய்து மூன்று இளநீரை மேற்றோல்சீவிக் கண்திறந்து ஒவ்வொன்றிலுமொவ்வொரு பங்கிட்டடைத்து ஜலத்திலறுபதுநாழிகை வைத்திருந்தெடுத்து இளநீரையூற்றி அதிற் கொஞ்சந் தேன்விட்டருந்த; இப்படி மூன்றுநாட் செய்யத்தீரும். தேங்காய்ப்பால் உதியின்பட்டைச்சாறு பசுவின்பால் வகைக்குப்படி (¼) முருங்கைப்பிஞ்சு உதியின் விதை நெல்லிக்காய்ப்பிரமாணமரைத்து அதிற்கலக்கிக் குடிக்கத் தீரும். முருங்கைப் பூவையரைத்துத் தேங்காய்ப்பாலிலாவது வெல்லங்கூட்டிச் சாப்பிடத்தீரும். கருங்குருவையரிசிமாவில் கௌதும்பைச்சாறிட்டுக் களிக்கிண்டிச் சாப்பிடவும். வாலுளுவையரிசிமாவில் பிரண்டைச்சாறிட்டுப் பிசரிப் பிட்டுச் சுட்டு எருமைநெய் கருப்புக்கட்டி கூட்டியுண்ணத்தீரும். அதிமதுரம் கெந்தி வகைக்கு வராகனெடை (4) ஆடாதோடைச் சாற்றாலாட்டி நெய்யில் வேகவைத்து மூன்றுநாளுண்ணத்தீரும். சுடலையில் வெந்த அஸ்தியையிடித்துச் சூரணித்தது வராகனெடை (30) அபின் வராகனெடை (6) சாதிக்காய் வராகனெடை (10) சாதிபத்திரி வராகனெடை (6) இவைகளைக் கல்லுரலிலிட்டுக் கடப்பாரையாலிடித்து வெள்ளாட்டு நெய்யில் வெருகடிச் சூரணம் அந்திசந்திகொள்ளத் தீரும். சிறுசெருப்படிச்சாறு ஆவின்பால் சமன்கலந்து காலமே நாலுநாட்கொள்ளத் தீரும். சிவந்த புதுச்செங்கல் பொடித்து வடிகட்டி அதற்கு நிகர் சீனிகூட்டி வெருகடித்தூள் ஐந்துநா ளந்தி சந்தி கொள்ளத்தீரும். புளி, புகை தள்ள. தேங்காய்ப்பால் ஆவின்பால் வகைக்குப்படி (½) முருங்கைப்பூ அரைத்து ஒரு தேங்காயளவு பனைவெல்லம் பலமூன்றுங்கூட்டி லேகியஞ்செய்து நேரமொன்றுக்கு எலுமிச்சங்காயளவு கால்மண்டலங்கொள்ளப் பெரும்பாடு தீரும். ஆயில்பட்டை நீர்விட்டரைத்து எலுமிச்சங்காயளவெடுத்துப் பச்சரிசிமாவிற் பிசைந்துருட்டிக் கருகாம லடைசுட்டு மூன்றுநாள் ஆறுபொழுதுண்ணத் தீரும்.

Koviloor Digital Library

கெர்ப்பசூலைக்குணம்.

உடம்பிற் கனலேறிக் கருக்குழியில் வாயு அனுசரித்துச் சூதகங்கட்டித் திரண்டு உதரமெங்கும் சிசுப்போற் புரண்டு, வயிறுவலிக்கும், தேகம்வற்றும், பலங் கெடும், சோபதாபமுண்டாகும்.

நிவிர்த்தி.

பேய்க்குமட்டி ஆடாதோடை அவுரி திருகுகள்ளி வீழி கரிசாலை கழற்சி முடக்கொத்தான் வேப்பம்பட்டை இந்தச்சாறுகள் சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி (1) வெள்ளாட்டுநீர் எருக்கிலைப் பழுப்புச்சாறு சதுரக்கள்ளிச்சாறு வகைக்குப்படி (½) திரிகடுகு திரிபலை வெண்காரம் பஞ்சலவணம் நவச்சாரம் சத்திசாரம் எவச்சாரம் வாய்விளங்கம் கடுகு கடுகுரோகணி ஆனைத்திப்பலி திப்பலிமூலம் மரமஞ்சள் கருஞ்சீரம் வகைக்குப் பலம் (1) அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் கலசத்தில் வடித்து மூடி ஒருமண்டலந் தானியபுடம் வைத்தெடுத்து ஒரு கரண்டி வீதம் மூன்றுநாட் சாப்பிட்டு ஐந்துநாள் தலைமுழுகவும். கெர்ப்பசூலை வாயு விப்புருதி கற்சூலைமுதலான கெர்ப்பரோகங்கள் தீரும். கொல்லங்கோவைக்கிழங்கு குறட்டைக் கிழங்கு மறற்கிழங்கு வெருகங்கிழங்கு புளியமடற்கிழங்கு வகைக்குப் பலம் (10) இடித்துப் பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் சிற்றாமணக்கெண்ணெய்படி (2) ஆவின்பால் படி (1) கடுக்காய் சிவதை பஞ்சலவணம் ஓமம் திரிகடுகு வெள்ளுள்ளி சீரகம் வகைக்குப்பலம் (¼) கண்டங்கத்திரிப்பழச் சாறுவிட்டரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்றுநாளும் புளிதள்ளிச் சாப்பிட்டுத் தினைக்கஞ்சி கொள்ளவும்; கெர்ப்பசூலை முதலான சகல கெர்ப்பரோகங்களும், வாதத்திரட்சியுந் தீரும். பொரிகாரம் காயம் காந்தம் பஞ்சலவணம் தேங்காய்ப்பருப்பு வகைக்கு வராகனெடை (3) தோல் முளை நீக்கி வறுத்த வாளம் வராகனெடை (12) எலுமிச்சம்பழச்சாற்றால் மூன்றுசாமமரைத்து பணவெடை வெல்லத்திற் கொடுக்கப் பேதியாகும். மோரசனங்கொள்ள மேற்படி ரோகங்கள் தீரும்.

கற்சூலைக்குணம்.

அடிவயிற்றில் உதிரந்திரண்டு வளையம்போற்கிடக்கும், வலித்துப் பரந்து பொருமும், முதுகைப்பற்றி நோகும்.

நிவிர்த்தி.

கண்டங்கத்திரிப் பழச்சாறு படி (2) சுக்கு மிளகு திப்பலி தேசாவரம் வகைக்கு வராகனெடை (5) ஓமம் பலம் (1) பூடுபலம் (2) பெருங்காயம் கடுகுரோகணி இந்துப்பு வெடியுப்பு வளையலுப்பு கல்லுப்பு வகைக்கு வராகனெடை (3) மேற்படி சாற்றாலரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்துக் குறுகிவரும் சமயத்தில் ஐம்பது வராகனெடை கருப்புக் கட்டியும் காற்படி நல்லெண்ணெயும்விட்டு லேகியஞ் செய்துகொண்டு எலுமிச்சங்காயளவு ஏழுதினம் பத்தியமாய்ச்சாப்பிட்டுத் தலைக்குத் தண்ணீர்வார்த்ததின்பின்

Koviloor Digital Library

மீதமருந்தை இச்சாபத்தியமாய்ச் சாப்பிட்டுவரக் கற்சூலை, கெர்ப்பசூலை, இரத்தக்கட்டி, சூதகவாயுமுதலான கெர்ப்பரோகங்கள் தீரும். வேம்பு வீழி நிலவாகை கள்ளி பொற்கொன்றை வேளை உள்ளி பூவரசு வாகை சங்கு வெள்ளறுகு ஆவின்சாணி இவைகளின் சாறு வகைக்குப்படி (¼) ஆவின்பால் ஆமணக்கெண்ணெய் வகைக்குப்படி (1) திரிகடுகு திரிபலை வல்லாரை தண்ணீர்விட்டான்கிழங்கு கொடுவேலி வால்மிளகு கோரோசனை இந்துப்பு கிராம்பு கருஞ்சீரகம் மஞ்சள் நேர்வாளம் வெண்காரம் அரத்தை கார்கோலரிசி கோழியெச்சம் கெந்தகம் லிங்கம் பிரப்பங்கிழங்கு பரங்கிப்பட்டை வகைக்குக் கழஞ்சு (1) மேற்படி சாறுகளிலரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் குளித்தது முதல் ஒரு கரண்டிவீதஞ் சாப்பிட்டுவரத்தீரும். உப்புப் புளி நீக்கிச் சுடுகஞ்சி கொள்ளக் கெர்ப்பசூலை முதலான கெர்ப்பரோகங்கள் தீரும்.

இரத்தசூலைக்குணம்.

அடிவயிற்றில் நாள்வழியாய் உதிரந்திரண்டு மாதவிடாய்க்காலத்தில் புரண்டு வலிக்கும்; சூதகமிகுந்துகாணும்; கருவழியும்; இடுப்பும் துடையும் உளையும்.

நிவிர்த்தி.

வெள்ளாட்டுநீர் துாணி பேய்க்குமட்டிக்காய்ச்சாறு படி (2) கரியுப்பு சவுக்காரம் இந்துப்பு வளையலுப்பு பாரையுப்பு வெடியுப்பு சீனிக்காரம் நாயுருவியுப்பு அமுரியுப்பு நவச்சாரம் எவச்சாரம் வெண்காரம் அன்னபேதி வகைக்குப்பலம் (1) கடுக்காய்ப்பொடி மிளகுபொடி வகைக்குப்படி (½) இவையெல்லாம் ஒரு பாண்டத்தில் விட்டுக் கிண்டி மூடி ஏழுசீலைமண்செய்து நாலுஜாமம் சிறுதீயாயெரித்துக் கருகினவாசங் கண்டவுடன் பாளையையிறக்கிக் கல்வத்தில் மெழுகுபோல் அரைத்துச் சுண்டைக்காய்ப் பிரமாணம் கொள்ள இரத்தசூலை, கற்சூலை, கெர்ப்பசூலை, கெண்டை, வாயுத்திரட்சி, பெருவயிறு, விஷநீர், வீக்கம், மகோதரம், குன்மந்தீரும். முருங்கைவேர்ச்சாறு விளக்கெண்ணெய் வகைக்குப்படி (1) ஆவின்பால் படி (2) அதிமதுரம் கொல்லங் கோவைக்கிழங்கு வகைக்குப் பலம் (1) கடுக்காய் பலம் (½) பால்விட்டரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்துக் காசெடை சாப்பிட்டுவர ஆறுவகைக் கெர்ப்பசூலைகளுந் தீரும்.

கெர்ப்பவிப்புருதிக்குணம்.

வயிற்றில் சூதகங்கட்டி வலியுண்டாகும்; தலைவலிக்கும்; வீட்டுக்குவிலக்கமானால் வயிற்றுவலி நீங்கும். இருதுடையும் உலையும்; மல மிறுகித் திரண்டு புழுக்கைபோல் விழும்; கர்ப்பந் தரியாது உடல்மெலியும்.

நிவிர்த்தி.

சிற்றாமணக்கெண்ணெய் படி (1) தைவேளையிலை சிற்றாமணக்கிலை வீழியிலை நிலவாகையிலை மஞ்சள் கடுக்காய் இந்துப்பு வெண்காரம் வெள்ளைப்பூடு கடுகு வகைக்குப் பலம் (3) மைபோல் ஆட்டி

Koviloor Digital Library

எண்ணெயிற்கலக்கிப் பதமாய்க்காய்ச்சி அதிலொரு கழஞ்சு கள்ளிப்பால் விட்டு வடித்துச் சூதகமான நாலாநாள் முதற்கொண்டு மூன்று நாள்வரை ஒருகரண்டிவீதஞ் சாப்பிடவும். இப்படி மூன்றுமுறை கொள்ளக் கெர்ப்ப விப்புருதி வாயுத்தீரும். பத்தியம் சுடுகஞ்சி கொள்ளவும். நீர்வற்றின தேங்காயைக் கண்திறந்து அதற்குள் ஒருபடி தூதுவளைப்பழத்தைப் போட்டு எருக்கம்பாலும் கள்ளிப்பாலும் சமன்கலந்து நிறையவிட்டுமூடிக் கருகாமற்சுட்டு ஓடுநீக்கி மைபோலரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் குளித்ததுமுதல் ஐந்துதினங்கொள்ளக் கெர்ப்பவிப்புருதி தீரும். பேதியதிகப்பட்டால் குளிர்ந்ததண்ணீர் குடிக்கவும்; பத்தியம் மோரசனங்கொள்ளவும்.

சூதகவாயு (சூசிகவாயு)வின் குணம்.

சூதகத்தில் வாயுவும் அக்கினியுஞ்சேர்த்து மாதவிடாய் கட்டிக் கருக்குழி தூர்ந்து தேகத்தில் உதிரநீரும் அடிமூலத்தில் வாயுவுஞ்சேர்த்து சூதகவாயுதோன்றிச் சூதகமாகும்போது அடிவயிறுவலிக்கும்; சூதகந்தங்கிக்காணும்; தலைவலிக்கும்; வயிறும் உடலும் பெருக்கும்.

நிவிர்த்தி.

சுக்கு, தோல்நீக்கிப் பலம் (20) வில்லைவில்லையாய்வெட்டி அதைக்கண்டங்கத்திரி துளசி தூதுவளை நுணா நொச்சி எருக்கு கையாந்தகரை மூக்கரைச்சாரணை நிலவாகை இவைகளின் இலைச்சாற்றிலும் முருங்கைப்பட்டைச்சாற்றிலும் புங்கின் வேர்ப்பாலிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் வகையொன்றுக்கொவ்வொருநாள் ஊறப்போட்டுக் காயவைத்திடித்துச் சூரணித்துக்கொண்டு வாய்விளங்கம் திப்பலி திப்பலிமூலம் திரிகடுகு ஏலம் ஓமம் இலவங்கப்பத்திரி அதன்பட்டை தாளிசபத்திரி திரிபலை இருசீரகம் வகைக்குப் பலம் (1) வெதுப்பிச் சூரணித்துக்கொண்டு இருவகைச் சூரணத்தையு மொன்றாய்க்கலந்து அதுகண்ட எடைக்குப் பாதி சர்க்கரை கூட்டித் திரிகடிப்பிரமாணம் பத்தியமாய்ப் பத்துநாள் உண்ணச் சூதகவாயுத் தீரும். குப்பைமேனி கரிப்பான் சிறுசெருப்படி நிலவாகை சமூலமுந் தனித்தனியிடித்துச் சூரணஞ்செய்து ஓர்நிறையாய்க் கலந்து திரிகடிப்பிரமாணந் தேனில் (20) நாட்கொள்ளத் தீரும். கடுக்காய்ப்பொடி மிளகு கடுகுரோகணி இந்துப்பு கரியுப்பு வெடியுப்பு கல்லுப்பு வளையலுப்பு வகைக்குப் பலம் (5) சீனிக்காரம் நவச்சாரம் சத்திசாரம் வகைக்குப் பலம் (3) பெருங்காயம் வால்மிளகு வாய்விளங்கம் கோஷ்டம் கருஞ்சீரகம் வகைக்குப் பலம் (1) இவைகளைப் பொடித்து நீர்வற்றின கொப்பரைத்தேங்காய்க்குள் அடைத்துப் பூமியிற்புதைத்து ஏழாநாளெடுத்து ஓடுநீக்கி மெழுகுபோலாட்டிச் சிமிழிலடைத்துக்கொண்டு இச்சாபத்தியமாய்க் கழற்காய்ப்பிரமாணம் இருபோது சாப்பிட்டுவந்தால் சூதகவாயு வாயுக்கட்டி குன்மந் தீரும். வெள்ளைப்பூடு (தோல்நீக்கிப்) பலம் (6) செவியம் மல்லி வாய்விளங்கம் ஓமம் திப்பலி திப்பலிமூலம் வெப்பாலையரிசி வசம்பு நற்சீரகம் கருஞ்சீரகம் சித்திரமூலம் அதிமதுரம் திரிகடுகு கோஷ்டம் திரிபலை அட்டுப்பு இந்துப்பு சிறுதேக்கு சிவதை பெருங்காயம் கடுகுரோகணி

Koviloor Digital Library

கழற்பருப்பு வகைக்கு வராகனெடை (3) ரவியுலர்த்திச் சூரணஞ்செய்து சிற்றாமணக்கெண்ணெய் கருப்புக்கட்டி சேர்த்துலேகியஞ்செய்து அந்திசந்தி புன்னைக்காய்ப் பிரமாணம் இருபதுநாட் கரப்பான் பதார்த்தந் தள்ளிச் சாப்பிட்டுவரச் சூசிக வாயு கொப்பவாயு சூலை தீரும்.

நிதம்பச்சூலைக்குணம்.

போர்காலத்தில் யோனிமலரும்போது அதில் வாயுவடங்கி அதனால் இரத்தமுஞ் சலமுந் தடைப்பட்டுடலில் அடைபட்டு மூடிச் சவ்வுமுற்றி முளைத்தேங்காய்போல் யோனியிற்றோன்றி நீர்பொசித்து கொண்டிருக்கும்; இடுப்புந் துடையும் உளையும்.

நிவிர்த்தி.

வெள்ளைப்பூடு பலம் (20) பதக்குத்தண்ணீர்விட்டு இரண்டுபடியாய்க் கஷாயஞ்செய்துவடித்துத் தேவதாரம் இந்துப்பு கடுநெல்லி தான்றி கொடுவேலி பெருங்காயம் திப்பிலி சிவதைவேர் வகைக்கு ஒருகழஞ்சு கஷாயம்விட்டரைத்துச் சிற்றாமணக்கெண்ணெய்படி (2) வெள்ளாட்டுப்பால்படி (1) கள்ளிப்பால் படி (¼) ஒன்றாய்க்கலந்து காய்ச்சித் தினம் மூன்றுகழஞ்சு சாப்பிட்டுவரத் தீரும்.

முடக்கொத்தான் சாறுபடி (½) நல்லெண்ணெய் படி (½) வசம்பு பூடு பெருங்காயம் திரிகடுகு இந்துப்பு சீரகம் சதகுப்பை பரங்கிப்பட்டை தேவதாரம் வகைக்குக் கழஞ்சு (1) அரைத்து விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சித் தினமொரு காசளவு கொள்ளத் தீரும். முடக்கொத்தான் குருஞ்சா வகைக்குச் சாறுபடி (1) சீரகம் கார்கோலரிசி ஏலம் மஞ்சள் பரங்கிப்பட்டை இந்துப்பு பெருங்காயம் பூடு திரிகடுகு வசம்பு வகைக்கு வராகனெடை (5) பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக்கொள்ளத் தீரும். ஓமம் வெள்ளுள்ளி பாம்புக்கண்டம் சுக்கு மிளகு சோமனுப்பு வசம்பு குங்கிலியம் ஓர்நிறையாய்ப் பொடித்துத் துணியில்வைத்துருட்டி அதை வேப்பெண்ணெயிற் றுவைத்துத் தீயிற்கொளுத்தி யோனியிற் புகையூட்டிப் புளியமடற் கிழங்கைக் கருங்குருவைமாவுடன் சேர்த்திடித்து மோர்விட்டுக் கூழாய்க் காய்ச்சி மூன்றுநாளுண்ணத் தீரும்.

சூதகவலிக்கு.

அகஸ்தியர் குழம்பிற் பணஎடை எலுமிச்சம்பழச் சாற்றிற்கொடுக்கப் பேதியாகும்; அதிகப்பட்டால் வசம்பைக்கருக்கி அதி லொருபடி தண்ணீர்விட்டு எட்டொன்றாய் வற்றவைத்துக்கொடுக்க நிற்கும்; உப்புப்புளிதள்ளிப் பத்தியங்கொள்ளவும்; மற்றாநாள் கரியுப்பைக் கொட்டைக்கரந்தைச்சாற்றா லாட்டிக் காயவைத்து ஐந்துபுடமும், சிறு செருப்படைச்சாற்றில் ஐந்துபுடமும் போட்டாற் செந்தூரமாகும்; அதில் நாளொன்றுக்கு ஒருவராகனெடைவீதம் வெள்ளுள்ளித் தயிலத்தில் மூன்றுநாட்கொள்ளத்தீரும். கல்லுப்பு பலம் (4) சூதம் பலம் (1) வில்வஇலைச்சாற்றால் இரண்டு சாமமரைத்துக் குகையில்வைத்தூத உருகி

Koviloor Digital Library

மணிபோலாகும். அதை அந்தரத்தாமரைச் சாற்றில் நாலுசாமமரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முழப்புடம்போட்டு ஒரு பண்வெடைவீதம் மூன்றுதினந் தேனிற் கொள்ளச் சூதகவலி நெஞ்செரிவு சூலைரோகம் சூதகவாயுத் தீரும். துத்தியிலை வெள்ளுள்ளி வகைக்குப் பலம் (1) வசம்பு வராகனெடை (1) அரைத்துச் சூதகமாயிருக்கிற மூன்றுநாளுங் கொள்ளச் சூதகவலி தீரும்.

இந்துப்பு திப்பலி பெருங்காயம் இளவறுப்பாய் வறுத்துச் சூரணித்து வெந்நீரில் மூன்றுநாட்கொள்ளத் தீரும். திரிகடுகு கழற்பருப்பு ஓமம் இந்துப்பு ஓர் நிறையாய் வறுத்துப் பொடித்து நல்லெண்ணெயில் மத்தித்துக்கொள்ளத் தீரும். நிலவாகைச் சமூலமுஞ் சுக்குந் தனித்தனியே இடித்துச் சூரணித்துச் சமனாய்க்கலந்து திரிகடிவீதம் 3–நாட் சாப்பிட்டு 6–நாட் பத்தியமாயிருக்க நீங்கும்.

கெர்ப்பரோகங்களுக்குப் பொதுப்பிரயோகம்.

ஆடாதோடை-பிரமி சிவனார்வேம்பு சீந்தி வகைக்குச் சாறுபடி (1) பசுவினெய் படி (1) மரமஞ்சட்பொடி பலம் (1) ஒன்றாய்க்கலக்கிக்காய்ச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்று நாளும் ஒருகரண்டிவீதஞ் சாப்பிட்டுந் தலைமுழுகினதின்பேரில் இதனடியில் வருகிற லேகியஞ் சுண்டைக்காய்ப் பிரமாணங்கொள்ளக் கெர்ப்பரோகங்கள் நீங்கும்; உப்புப் புளி தள்ளிப் பத்தியங்கொள்ளவும். நாயுருவிச்சாம்பலுப்பு எள்ளுச்செடிச்சாம்பலுப்பு வகைக்குப் பலங்கால், திருகுகள்ளி இலைக்கள்ளி சித்திரமூலம் சாரணை தைவேளை நொச்சி குருஞ்சா குப்பைமேனி முடக்கொத்தான் இஞ்சி வீழி தேவதாளி வெள்ளறுகு தும்பை சங்கங்குப்பி வெண்ணொச்சி வகைக்குச்சாறு படி (1) மஞ்சள் மரமஞ்சள் ஓமம் காயம் இந்துப்பு வளையலுப்பு நவச்சாரம் சத்திசாரம் எவச்சாரம் சீனிக்காரம் சவுக்காரம் கருஞ்சீரகம் சுக்கு மிளகு வசம்பு வெந்தயம் ஏலம் வாள்மிளகு கடுகு கிராம்பு வகைக்குப் பலங்கால் இளவறுப்புச்செய்து சூரணித்து மேற்படி சாறுகளிற் கரைத்து அதில் குமட்டிக்காய்ச்சாறு வெள்ளுள்ளித்தைலம் வகைக்குப் படி (1) கூடவிட்டு, சிவதை பலம் (1) அரைத்துப்போட்டு லேகியஞ்செய்துகொள்ள அறுவகைக் கெர்ப்பசூலைகளும் மற்றக்கெர்ப்பப்பிணிகளுந் தீரும். சிற்றாமணக்கெண்ணெய் பேய்க்குமட்டி வேப்பம்பட்டை கழற்சி ஐவிரலி முடக்கொத்தான் காட்டுள்ளி உழலாத்தி பிரமி வகைக்குச்சாறு படி (2) கொடுவேலி பங்கம்பாளை கிளுவை நிலையாவாரை குருந்து சங்கு தலைசுருளி காக்கணத்தி குமரி வெள்ளைச்சாரடை இவைகளின்வேர் வகைக்குப் பலம் (1) மூங்கிலிலை கஸ்தூரிப்பட்டை வெள்ளறுகு வகைக்குப்பலம் (1) இவைகளைக் கொடிக்கள்ளி வாட்டிப் பிழிந்த சாற்றாலும் கடுகு திப்பிலி கடுக்காய் வால்மிளகு குரோசாணி கடுகுரோகணி கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் அரத்தை சுக்கு சிறுநாகப்பூ இந்துப்பு ஆனைத்திப்பலி பெருங்காயம் சாதிக்காய் தாளிசபத்திரி சேங்கொட்டை ரசகற்பூரம் இஞ்சி நவச்சாரம் வகைக்குக் கழஞ்சு (4) இவைகளைக் காட்டாமணக்கின்சாற்றாலும், வெள்ளாட்டுநீராலு மரைத்துக் கலக்கிப்பதமாய்க் காய்ச்சிப் புகையூரல் வெண்காரம் வகைக்குக் கழஞ்சி (2) பொடித்துக்

Koviloor Digital Library

கலசத்திற்போட்டு அதில் வடித்துக்கொண்டு வீட்டுக்கு விலக்கமானநாள்முதல் மூன்று நாளும் உதயத்தில் ஒரு கரண்டிவீதங் கொடுக்க அறுவகைக் கெர்ப்பசூலையுங் கெர்ப்பரோகங்களும் வாயுத்திரட்சியுங் குன்மமும் கெர்ப்பக்கிராணியுந் தீரும்; பத்தியம் வெள்ளாட்டுப்பாலன்னங் கொடுக்கவும்; நாலாநாள் தலைக்கு வெந்நீர்விட்டு அதுமுதல் மூன்றுநாள் ஆரையிலை கிளுவையிலை ஐவிரலியிலை சமனாய்ப் பசுவின் பாலிலரைத்துக் கலக்கிக்கொள்ளவும்; ஏழாநாள் எண்ணெய் முழுகவும்; பிள்ளையுண்டாகும். சிவதைவேர், நிலவாகைவேர் தனித்தனியே பாலில் அரைத்து உலர்த்தி இடித்துச் சலித்துக்கொண்ட பொடி வகைக்கு 150 வராகன் எடை (525 கிராம்); கோரைக்கிழங்கு மேல்தோல் நீக்கி நிழலில் உலர்த்திய பொடித்தூள் 2 முதல் 3 வராகன் எடை, திரிகடுகு, திரிபலை, கண்டந்திப்பிலி, இந்துப்பு, ஓமம், குரோசாணி, ஓமம் வாய்விளங்கம், அதிவிடயம், மாசிக்காய் வகைக்கு 1 கழஞ்சு (3 5/8 கிராம்); தூள்செய்த கிராம்பு, சர்க்கரை 5 பலம், ஒரு படி தண்ணீரில் கரைத்து வடிகட்டிப் பாகுசெய்து அதில் தூள்களைப்போட்டு நன்றாய் ரேசித்து சிற்றாமணக்கெண்ணெய் 2 படி விட்டுக் கிளறி, மெழுகுபதத்தில் எடுத்துக் கொட்டைப்பாக்களவு உட்கொள்ள சூதகவாயுத் திரட்சி, கர்ப்ப வாயு, வயிற்றுவலி, சூலை முதலானவைகள் தீரும். கரப்பான் உணவுகளைத் தள்ளவும்.

20 பேய்க்குமட்டிக் காயை விதை நீக்கி ஒவ்வொன்றிலும் ஒரு பலம் இந்துப்பைப் பொடித்துக் கொஞ்சம் கொஞ்சமாய் வைத்து ஒரு பாண்டத்தில் இட்டு மூடி, ஏழு சீலை மண்செய்து பூமியில் புதைத்து ஆறு நாட்கள் சென்றெடுத்துப் பிழிந்த சாறுடன் சித்திர மூலம், மாவிலிங்குக்காய், திருகுகள்ளி, தைவேளை, அழிஞ்சில் இவைகளின் வேரும், காட்டுத்திப்பிலியும் வகைக்கு 5 பலம் (175 கிராம்); இடித்து 4 மரக்கால் தண்ணீரில்போட்டு குருணியாய் (4 படி) காய்ச்சி சேர்த்து அதில் அரைப்படி கள்ளிப்பால்விட்டு, சுக்கு 1 பலம் (35 கிராம்), திப்பிலி, வெள்ளுள்ளி, இலுப்பைக் கட்டி, சவுக்காரம், கடுகு, கருத்த இந்துப்பு, நவாச்சாரம் வகைக்கு 2 பலம் (70 கிராம்), கடுக்காய், பெருங்காயம், பொரித்த வெங்காரம் வகைக்கு 1/2 பலம், சீரகம், வாலுளுவையரிசி வகைக்கு 1/4 படி, ஓமம், கடுகுரோகணி, வெண்மையாய் வறுத்த துருசு வகைக்கு 1 பலம், அரப்பொடி, 1 1/8 படி கருப்புக்கட்டி 11 பலம் இவையெல்லாம் இடித்து வடிகட்டிப்போட்டு இளகஞ் செய்து கலசத்தில் வேடுகட்டி நெல்லுக்குள் புதைத்துப் பத்து நாட்கள் சென்றெடுத்து வைத்து தேற்றான்விதை அளவு கொடுக்க வயிற்றுப்போக்கு அதிகரித்தால் மோர் சாதம் உண்டு, கோழிச்சாற்றில் மஞ்சள் பொடித்துப் போட்டுக்கொடுக்க நிற்கும். இம் மருந்தை உடல் வலுவறிந்து ஒன்று விட்டு ஒரு நாளாக பத்திருபது நாட்கள் புளி, புகை, கரப்பன் உணவுகள் தள்ளிக்கொடுக்க, குன்மம் எட்டும், கருப்ப விப்புருதி, கெண்டை, கௌசி, மலட்டுப்புழு, ஊதுகாமாலை, பித்தபாண்டு, நச்சுப்பாண்டு, கருப்பைச் சூலைகளும் தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய், கருநொச்சி, கையாந்தகரை வகைக்குச் சாறு 1 படி, எலுமிச்சம்பழச் சாறு, நல்லெண்ணெய், பசுவின் நெய் வகைக்கு 1/2

Koviloor Digital Library

படி, மிளகு 1/4 படி, காயம், குழிமிட்டான், (நத்தைச்சூரி) செப்பு நெரிஞ்சி வகைக்கு 1 பலம் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துக்கொண்டு குளித்தது முதல் மூன்று நாட்கள் ஒரு கரண்டிவீதம் நாலு முறை உட்கொள்ள கருப்பை வாயு, புழுகிரந்தி தீரும்; இச்சாபத்தியம்.

விளக்கெண்ணெய் 8 படி, தும்பை, பொடுதலை, கற்றாழை வகைக்கு 1 பலம், (35 கிராம்) திரிகடுகு, திரிபலை, கோட்டம், ஏலம், கிராம்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்) அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துக்கொண்டு ஒரு நாள் விட்டு ஒரு நாள் ஒரு கரண்டி வீதம் 40 நாட்கள் உட்கொள்ள கருப்பை விப்புருதி, வயிற்றுக் கட்டி, நீராமை, கருப்பைச் சூலை, சூதகக்கட்டி, கிருமி தீரும்.

பேய்க்குமட்டி விதை, தூய்மை செய்த நேர்வாளம் சமன்கூட்டிக் குழித்தைலமிரக்கி ஒரு காசு எடை தைலத்தில் ஒரு காசு எடை மஞ்சள் பொடியைக் குழைத்துக் குளித்தது முதல் மூன்று நாள்கள் உட்கொள்ள கழிச்சலாகும்.

மருத்துணவு:– நீர்க்கஞ்சி உட்கொள்ள சகல கருப்பை நோய்களும் தீரும்.

பூண்டு 1 பலம் (35 கிராம்), கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, நவாச்சாரம், சவர்க்காரம், வெண்காரம், பெருங்காயம் வகைக்கு 3 வராகன் எடை (10 ½ கிராம்); தூய்மைசெய்த வாளம் 10 வராகன் எடை (35 கிராம்). இவைகளெல்லாவற்றையும் தூள் செய்து மூன்று முத்தின தேங்காய்ப்பூவின் மத்தியில் வைத்துப் பிட்டவியலாய் அவித்துப் பால்பிழிந்து அதில் வெந்தமருந்துகளும் அரைத்துப் போட்டுக் காய்ச்சி, ஒரு காசு எடை நெய் உட்கொள்ளக் கழிச்சலாகும்.

மருத்துணவு:– மோர்ச்சோறு உட்கொள்ள எல்லாவித கருப்பைப் பிணிகளும் தீரும்.

பேய்க்குமட்டிப் பழம் முப்பதைத் தண்ணீர் விடாமலிடித்துப் பிழிந்து வடித்துக்கொண்டு இந்துப்பு, நேர்வாளம் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்), பெருங்காயம் ¼ பலம் (8 ¾ கிராம்), பசுவின் வெண்ணெய், புளி வகைக்கு நாரத்தங்காய் அளவு. இவை எல்லாம் அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி கண்ணாடி பாத்திரத்தில் அடைத்துக்கொண்டு ஒரு பாக்கு அளவு மூன்று முறை கொடுக்க வயிறு கழிச்சலாகும். அதிகப்பட்டால் குளிர்ந்த தண்ணீரில் குளித்துப் பால்சோறு உண்ண கருப்பைவிப்புருதி கிருமியும், சூதகக்கட்டியும், மேற்சொல்லிய கருப்பை நோய்களும் தீரும்.

தேங்காய்ப்பால், மஞ்சள்பால், சிற்றாமணக்கெண்ணெய், தை வேளைச்சாறு, நிலவாகைச்சாறு வகைக்கு 3 படி, திரிகடுகு, திரிபலை, காயம் வகைக்கு ½ பலம் (17 ½ கிராம்), இந்துப்பு 1 பலம் (35 கிராம்). இவை எல்லாம் அரைத்துக் கலக்கி மிதமாய்காய்ச்சி அதில் பூநீர்ச் சுண்ணங் குழைத்துச் சேர்த்து வடித்து அரைக்காற்படி வீதம், விலக்கமாயிருக்கிற மூன்று நாள்களும் உட்கொள்ள சீதம், மலக்கட்டு, சூதகவலி, வாயு முதலான கருக்கோள்கள் நீங்கி கருப்பமுண்டாகும்.

Koviloor Digital Library

அவுரி இலைச்சாறு 1 படி, சிவதை, கடுகுரோகணி, வசம்பு, உள்ளி, அக்கிராகாரம், இந்துப்பு, காரம் வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்) ஏரண்டத்தெண்ணெய் 2 படி. பதமாய்க் காய்ச்சி வடித்துக் குளித்ததுமுதல் ஒரு துட்டெடை பத்துநாள் சாப்பிடக் கருப்பை நோய்கள் நீங்கும். கடும் பத்தியம் அவசியம்.

சூலுற்ற பெண்களுக்குப் பத்து மாதத்திற்கு வரும்நோயும் அதற்கு மருந்தும் விளம்பல்.

அத்தியுரித் தோனிடத்தில் அமர்ந்தஉமை யாளீன்ற
சத்திக்க ணைபதியின்தாள் போற்றி—எத்திசையுங்

கொர்ப்பமின் னாருக்கி ளைத்தபிணி தான்றீர
கற்பமதாங் கிரியைக்கண் டுரைப்பேன்—உற்பத்தி

திங்கள் முதல் கற்பஞ்சிறு வலியாய்தான் வலிக்கில்
எங்கள் மரைப்பூவிந் திலாமிச்சு—மங்கைநந்நீர்

வார்த்தரைத்து ஆப்பாலில் வாகாக வேகொடுக்க
சேர்த்திரண் டாமாதஞ் சிறுகினால்—மாற்றிக்கொள்

தக்கோலந் தாமரையின் தான்பூவும் நீரரைத்து
அக்கால மேகொடுநீ ஆவின்பாலில்—எக்காலம்

மூணாந்திங் கள்தன்னில் முறுக்கிவயி றுளைக்கில்
வாணிமலர் செங்கழுநீர் வனகிழங்கு—பேணி

பாலிலரைத் தேகொடுக்கப் பாவையற்குக் கொர்ப்பம்
நாலில்வ லித்துரத்தம் நாடினால்—சூரியற்கு

நெய்தல்கி ழங்குநொச்சில் நீர்வார்த்த ரைத்ததனை
உய்தபசுப் பாலில் உண்ணவே—ஐந்தாம்

மாதம் வலிக்கில் வரும்ஆம்ப லின்பூவும்
வேதமசை விலாமிச்சம் வேரும்—போதம்

நீர்வார்த் தரைத்துநிச் சயம்பாலிற் கொடுக்க
கூர்ஆறில் கெற்பக்கு டலழன்று—நேரே

சுற்றிக்கு டல்வலித்துச் சுழன்றுமே நீர்சுருக்கில்
பற்றியிதற் கிம்மருந்து பகரக்கேள்—உற்ற

திப்பிலியு முந்திரியுகை சேர்ந்தநெய்தற் கிழங்கு
அப்பிலிகைத் தும்பாலி லேயருந்த—ஒப்பில்லா

ஏழில்வ லிக்கில்இ லாமிச்சச் சந்தனமும்
வாழுந்தக் கோலம்வ கைமூன்றும்—தூழும்

Koviloor Digital Library

கோவின்று பாலிற்கொ டுக்களட்டா மாதம்
பாவகைக்கால் அயரும் பசிக்கன்னந்– தேவை

இல்லைதான் இன்மை இதற்குமாப் பூவும்
தொல்லைநெய் தற்கிழங்குந் தொந்தித்து– நல்லாவின்

பாலிலதைக் கொடுக்க பாவை மாதம்
சூலின்வ லிகாணில் அரசந்தோலும்–கோலி

மருதந்தோல் நீரில்வா காகவே யரைத்து
கருத்தாய் ஆவின்பாலிற் கண்டுகொடு–பருகப்

பத்தாகு மாதத்தில் பாவைவயி றுளைக்கில்
எத்தாகுஞ் சர்க்கரை யிலுப்பைப்பூ–சித்தாக

நீரில்அரைத்துப்பாலில் நினைவாகத் தானருந்த
பேருமத்தித் தோர்க்குப் பேசுவேன்–கூறும்.

வயிற்றில்பிள் ளைமத்தித்துப் போனால்வீ ழம்ருந்து
அறிந்துநிலக் குமிழ்வேர் அரைத்துக் கரைத்து
விரைந்துகுடிக் கப்பிள்ளை வீழுமே–தரையில்

அரனார்உ ரைத்தத றிந்துமுனி தானுமிந்த
திரமா கும்என் றிதனைச் செப்பு.

சூலுற்ற பெண்களுக்கு முதல் திங்களில்: கருப்பஞ் சிறுவலியாய் வலிக்கில் தாமரைப்பூ, சந்தனம், விலாமிச்சம்வேர் இவற்றை எல்லாம் நீர்விட்டு அரைத்துப் பாலில் கொடுத்தால் வலி தீரும்.

இரண்டாம் திங்களில்: வலித்தால், தக்கோலமும் தாமரைப்பூவும் கரைத்து பசுவின் கொடுத்தால் வலி தீரும்.

மூன்றாவது திங்களில்: வயிறு உளைந்தால், வெண்தாமரை மலரும் செங்கழுநீர்க் கிழங்கும் சேர்த்து அரைத்துப் பாலில் கொடுத்தால் வலி தீரும்.

ஐந்தாம் திங்களில்: வயிறு வலித்தால்: ஆம்பற்பூவும் விலாமிச்சம் வேரும் அரைத்துப்! பாலில் கொடுக்க வலி நீங்கும்.

ஆறாம் திங்களில்: கருப்பை அகன்று சுற்றி வலித்துச் சுழன்று நீர்ச்சுருக்கில் திப்பிலி, முந்திரிப்பழம், நெய்தற்கிழங்கு இவற்றை எல்லாம் அரைத்துப் பாலில் கொடுக்க வலி போகும்.

ஏழாம் திங்களில்: வயிறு வலித்தால்; விலாமிச்சம்வேர், சந்தனம், தக்கோலமும் சேர்த்தரைத்துப் பாலில் கொடுக்க வலி தீரும்.

எட்டாம் திங்களில்: கை, கால் ஓய்ந்து பசி எடுக்காமல் இருந்தால், தாமரைப்பூவும், நெய்தற் கிழங்கும் அரைத்துப்பாலில் கொடுக்க வலி தீரும்.

Koviloor Digital Library

ஒன்பதாம் திங்களில்: சூல்வலிக்கு; அரசந்தோலும் மருதத்தோலும் அரைத்துப் பாலில் கொடுக்க வலி போகும்.

பத்தாம் திங்களில்: வயிறு உளைந்தால்: சர்க்கரையும், இலுப்பைப் பூவும் அரைத்துப் பாலில் கொடுக்க வலி நீங்கும்.

கருவளர்க்கும் எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் அரைப்படி. பசுவின்பால் 1/2 படி. தோல நீக்கி அரிந்த ஈருள்ளி 1 1/4 படி, கருஞ்சீரகம் 2 வராகன் எடை, கழுதைப்பால் 1/4 படி ஒன்றாய்க் கலந்து சிறு தீயில் எரித்து மெழுகு பதமாகும்போது அதில் கை வைத்தால் இளவெந்நீர் போலிருக்கும் அந்தப் பதத்தில் இறக்கி வடித்துக் கருப்பவதிகள் ஐந்தாம் மாதத்தில் 5 நாள் காலை, மாலை, சந்தி இரு கழஞ்சு 8 3/4 கிராம் வீதம் சாப்பிட்டு மறுபத்தியம் ஐந்து நாளிருக்கவும். இப்படி ஏழு திங்களிலும் சாப்பிட்டு உப்பு புளி கடும் பத்தியமாய், இருந்தால் கருவை அழிக்கும் கிரந்தி, சூலை முதலான நோய்கள் நீங்கி குழந்தை நீண்ட ஆயுளுடன் பிறக்கும். இச்சாபத்தியம்.

செங்கரப்பன் கொள்ளிக்கரப்பனுக்கு மருந்து.

மணத்தக்காளி, கருப்பூரவல்லி, பொடுதலை, கிரந்திநாயகம், கோழியவரை, சிறுசெருப்படை, துளசி, சங்கங்குப்பி, வல்லாரை இவைகளின் இலைச்சாறு வகைக்கு முக்கால்படி ஆகாயக்கருடன் கிழங்கு, வெருகங்கிழங்கு இவை வகைக்கு 3 பலம் (105 கிராம்); பூதகரப்பன்பட்டை, செங்கத்தாரிப்பட்டை இவை வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்) செம்புளியம் பிரண்டைவேர் 1 பலம் (35 கிராம்). இவற்றைப் பால் விட்டு அரைத்துக் கற்றாழஞ்சோறு 8 பலம் (280 கிராம்), 40 கடுக்காய், சிற்றாமணக்கெண்ணெய் 3 படி, வெங்காயச்சாறு 1 படி; இவை எல்லாம் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடிகட்டி மேற்சொல்லிய முறையுடன் கருவுற்றவர்கள் பத்தியமாய்ச் சாப்பிட்டால் 3 முதல் 4 மாதங்களில் கருப்பத்தை அழிக்கும் கிரந்திசூலையும் நீங்கிக் குழந்தை ஆயுளுடன் பிறக்கும். உடல் குளிரும்; கருப்பத்தில் கூடிய மற்றநோய்களும் குழந்தைக்கு நேரிடாது; பிள்ளை பிறந்தவுடன் நேரிடும் செங்கரப்பன் கொள்ளி கரப்பனுந் தீரும். இச்சாபத்தியம்.

விஷ்ணுகிரந்தி, செப்புநெரிஞ்சி, குழிமிட்டான், முருக்கிலை, சங்கிலை, சிறுசெருப்படி, வில்வபத்திரி, கருநொச்சி இலை இவைகளின் சாறு வகைக்கு 2 படி, ஈருள்ளிச்சாறு 2 படி, ஏரண்டத்தெண்ணெய் 1 படி, கருஞ்சீரகம் ஒரு கை அளவு, அதிமதுரம், திப்பிலி வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்) அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து ஐந்தாம் திங்கள் முதல் கொண்டு கரப்பான் உணவுகளை நீக்கிக் கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால், மேற்சொல்லிய நோய்கள் நீங்கி குழந்தைகட்கு நேரிடும் செங்கரப்பன், கொள்ளிக்கரப்பன் முதலிய கரப்பனுந் தீரும். இச்சாபத்தியம்.

பற்பாடகம், கரிப்பான் வகைக்கு ஒருஎலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் நெய்யில் கலக்கிச் சிவக்க வெந்த பதத்தில் இறக்கி கருப்பம்

Koviloor Digital Library

தங்கின ஐந்தாம் மாதம் முதற்கொண்டு சிறு கரண்டி அளவாய் நெய் முழுமையும் சாப்பிட்டால் மேற்சொல்லிய பிணிகள் நீங்கிக் குழந்தை ஆயுளுடன் பிறக்கும்; பத்தியமில்லை.

கருப்பைக் கிரந்திக்கு மருந்து

ஆடுதீண்டாப்பாளை, அவுரி, தூதுளை, கருஞ்சூரை, சங்கு சுண்டை இவைகளின்வேர் மூவிலை, மின்னிலை, அப்பைக்கிழங்கு, சுண்டையிலை, வெளிச்சிப்பிசின், சென்னகரப்பழம், சாதிக்காய், செஞ்சந்தனம், திப்பிலி, பீநாறிப்பட்டை, கடுக்காய், வெள்ளுள்ளி, தேற்றான்விதை, கருஞ்சீரகம், களிப்பாக்கு, வேம்பாடம்பட்டை, ஓமம் இவையெல்லாவற்றையும் மோர் விட்டு அரைத்து நல்லெண்ணெயில் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர கருப்பக்கிரந்தி தீரும்; பத்தியமில்லை.

கிரந்திப்புண், செவ்வாப்புக்கு மருந்து.

கழற்கொடி, பிரமி, கரிசாலை, கிரந்திநாயகம், தூதுவளை, கோழியவரை, செம்முள்ளி, வெண்ணொச்சி, கருநொச்சி, வெதுப்படக்கி, சிறுபுள்ளடி, செப்புநெருஞ்சில், சீந்தில், வல்லாரை, மிளகுதக்காளி, குருஞ்சா, பேய்மிரட்டி, சங்கு, தழுதாழை, முடக்கத்தான், பொடுதலை, பெரியசெருப்படை வகைக்கு அரைப் படி சாறு; பசுவின் பால் 2 படி, விளக்கெண்ணெய் 4 படி ஒன்றாய்க் கலந்து கடுக்காய் 3 பலம் (105 கிராம்), கடுகு ரோகணி 2 பலம் (70 கிராம்), செங்கத்தாரிப்பட்டை, நல்ல சீரகம், கருஞ்சீரகம், பூதக்கரப்பன் பட்டை, திரிகடுகு, வெட்பாலையரிசி, தான்றிக்காய், நெல்லி, அரத்தை, அமுக்கறாங்கிழங்கு, பூவரசம் பட்டை, நன்னாரி, கோட்டம், பட்டை, கோட்டம், சிறுதேக்கு வகைக்கு 1/4 பலம் (8 3/4 கிராம்), பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி 1 கழஞ்சி வீதம் 8 நாள்கள் சாப்பிட்டுப் பத்தியம் உப்பு, புளி நீக்கி நீர்க்கஞ்சி உட்கொள்ளவும். கருப்பவதிகளுக்குக் காணும் கிரந்திப்புண் தீரும். குழந்தைக்குக் காணும் செவ்வாப்பு முதலான பிணிகளும் இந்த எண்ணெயால் தீரும்; பத்தியமில்லை.

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, சிறுசின்னி, சங்கங்குப்பி, சங்கு, பிரமி, கருநொச்சி, சிருசெறுப்படை, ஆடாதோடை, வெதுப்படக்கி, கழற்கொடி, நிலவாகை, வெள்ளறுகு வகைக்கு 1 1/8 படி சாறு, மிளகு, திப்பிலி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், ஓமம், கோட்டம், அதிமதுரம், வால்மிளகு, மல்லி, ஏலம், இலவங்கப்பட்டை, குரோசணிஓமம் வகைக்கு 1 வராகன் எடை; சாதிக்காய் 1 வராகன் எடை, கிராம்பு 2 வராகன் எடை, பூண்டு, கடுக்காய் வகைக்கு 1 பலம் (35 கிராம்), பறங்கிப்பட்டை 2 பலம் (70 கிராம்). இவையெல்லாம் இடித்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து சிறு கரண்டி வீதம் 7 நாள்கள் காலையில் ஒருபொழுது உட்கொள்ள முந்தின பிரயோகத்திற்குச் சொல்லிய நோய்கள் நீங்கும்.

கருப்பைக் கிரந்திக்கு மருந்து.

பாதாளமூலி, (ஆடுதீண்டாப்பாளை), நொச்சி, சங்கங்குப்பி, தேசிப்பால் இவைகளின் சாறு சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுக்காய், பறங்கிப்பட்டை, கார்போகஅ்ரிசி,

Koviloor Digital Library

செங்கத்தாரிப்பட்டை வகைக்கு 2 கழஞ்சி கெந்தகம், இலிங்கம், தாரம் வகைக்கு 1 கழஞ்சி பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உட்கொள்ள கருப்பைக் கிரந்தி தீரும்; இச்சாபத்தியம்.

சூலுற்ற காலத்தில் காணும் துவாலைக்கு மருந்து.

1. அதிமதுரம், மஞ்சிட்டிக் கிழங்கு, செங்கிழங்கு, காட்டாத்திப் பூ வகைக்கு ஒரு காசெடை அளவு அரைத்துப் பாலில் கலக்கிசர்க்கரை கலந்து மூன்று நாள் கொடுக்க வலி தீரும்; இச்சாபத்தியம்.

2. நெய்தற்கிழங்கு, அதிமதுரம், வெள்ளிலோத்திரம், சந்தனம், நன்னாரிவேர் சமமாக எடுத்து அரைத்து பச்சரிசியை கழுவின நீரில் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

3. பற்பாடகமும் நெல்லிச்சாம்பலும் அரைத்துப் பாலில் கலந்து குடித்தால் வலி தீரும்; பத்தியம் புளி தள்ளவும்.

மேற்படி நோயால் தாகமூர்ச்சை கண்டால்

1. அத்தி, ஆல், மா, அரசு இவைகளின் கொழுந்தைச் சமமாக எடுத்துக் கியாழஞ்செய்து கொடுத்தால் வலி தீரும்.

2. குதிரை எலும்பு, பசுவின் பால் விட்டு அரைத்து கொட்டைப் பாக்கு அளவு எடுத்துக் கால் படி பாலில் கரைத்து 3 நாள்கள் உட்கொள்ளவும். 6 நாள்கள் வரை உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருந்தால் வலி தீரும்.

3. காராகரந்தையிலை ஒரு தேங்காய் அளவு தோல் நீக்கி அரிந்து ஈருள்ளி 1/4 படி ஒன்றாய்ச் சேர்த்து இடித்துப் பிழிந்த சாற்றில் ஒரு காசு எடை எடுத்து நல்லெண்ணெய் விட்டு மூன்று நாள்கள் உட்கொண்டால் வலி தீரும்.

கருவுற்ற காலத்தில் வரும் சுரத்திற்கு மருந்து.

பாருஞ் சிற்றா முட்டிவேர் பகருஞ் சீந்திற் கொடியுடனே
சேருஞ் சுக்கு திப்பிலியுஞ் சிறந்த பேரா முட்டியுடன்
நீரும் வேம்புளி லவேம்பு நோ்ப்பாய் கியாழந் தானருந்த
தீருங் கெற்பசு ரந்தானுந் திகைத்தே யோடுங் கண்டீரே.

சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், சீந்திற்கொடி, நிலவேம்பு, சுக்கு, திப்பிலி இவைகளை இடித்துக் குடிநீரிட்டுக் கொடுத்தால் வலி தீரும்; பத்தியம் இல்லை.

கருவுற்றவர்களுக்குக் காணும் நீர்ச்சுருக்கு நீர்ப்பணைப்பிற்கு மருந்து.

நீர் முள்ளியிலை, பசலையிலை, குப்பைமுள்ளியிலை இவைகளில் ஒன்றை அவித்துத் தின்றாலும், அல்லது நன்னாரி வேராவது, உலர்ந்த ரோஜாப் பூவையாவது குடிநீர் செய்து சாப்பிட்டால் நீர் சுரப்பு நீங்கும்; பத்தியமில்லை.

Koviloor Digital Library

சூலுற்றவளுக்கு நீரடைத்தால்

மங்காத குழன்மடவீர் சொல்லக் கேளீர்
மாகெற்ப வதியாட்கு நீர டைத்தால்
தங்கிநின்ற இருவாயுங் கட்டிக் கொள்ளுந்
தாரணியில் மங்கையர்கள் சகிக்க மாட்டார்.

வெங்காரம் சவர்க்காரஞ் சீனக் காரம்
வெண்மதியாம் இந்துப்பு வெதுப்பிக் கொண்டு
சிங்கார யிளநீரிற் கொள்ளும் போது
சிக்காது மலசலங்கள் திண்ணந் தானே.

1. பூரணச்சந்திரனைப்போல் முகத்தை உடையவளே! சூலுற்ற பெண்களுக்கு நீர் தங்கினால் வெண்காரம், சவர்க்காரம், படிகாரம், இந்துப்பு, வெடியுப்பு இவைகளைப் பொரித்து இளநீரில் அருந்த மலஞ்சிறுநீர் பிரியும் என்பதாம்; பத்தியமில்லை.

2. பொரித்த வெண்காரம் 2 வராகன் எடை, சங்கம் வேர்ப்பட்டை, இலவங்கப்பத்திரி, முள்ளிக்கீரைவேர், பொன்னாங்கண்ணி, சந்தனம் வகைக்கு 1 வராகன் எடை காடி விட்டு அரைத்துக் கொடுத்தால் வலி தீரும்.

கெர்ப்பவதிக்குக் கல்லடைத்தால்.

மாதுளம்பழத்தரிசியை ஆவின்பாலிலரைத்துக்கொள்ளத் தீரும். செந்தொட்டி வேரரைத்துக் கொப்புளைச்சுற்றித்தடவத் தீரும். செப்புநெரிஞ்சியை முலைப்பாலிலரைத்துக்கொடுக்கத் தீரும்.

வயிற்றிலிறந்த பிள்ளை விழ.

உகாயிலையைக் கருகவறுத்து அதில் நாழித்தண்ணீர்விட்டு (1/4) படியாய் வற்றினதின்பேரில் மிளகு பூடு பெருங்காயம் ஓமம் பொடித்துப்போட்டுக் காய்ச்சி அரைக்காற்படி தண்ணீர்கொடுக்க விழும். சணம்பு விதையையரைத்து உள்ளுக்குக் கொடுக்க விழும்; அதைக் கீழ்வயிற்றிற்பூசப் பிள்ளை பிறவி நோக்கும். நிலக்குமிழம்வேரரைத்துக்கொடுக்க விழும். இந்துப்பும் சங்கவேரும் அரைத்துக் காடித்தெளிவிற் கொடுக்க விழும். உத்தமதாளிவேரரைத்துப் பசுவின்பாலிற் கொடுக்க விழும். கள்ளி வேலா மருக்காரை இவைகளின் வேரைக் காடித்தண்ணீரிலரைத்துக்கொடுக்க விழும். பிரண்டைவேருங் குருஞ்சாவேரும் அரைத்து வயிற்றிற் பூச விழும். பெருங்காயமும் உப்பும் பழங்காடியிலரைத்துக்கொடுக்க விழும். வெந்தோன்றிக் கிழங்கும் காட்டுமுல்லைவேரும் காடியிலரைத்து அடிவயிற்றிற் றடவ விழும். துளசிச்சாறுபடி அரைக்கால் நல்லெண்ணெய் படி மாகாணி ஒன்றாய்க் கலந்து கொடுத்தாலும், நல்லெண்ணெய்படி அரைக்காலிற் புகையூறல் பலம் அரை கூடப்போட்டுக் கொடுத்தாலும் வயிற்றில் மரித்தபிள்ளை விழும்.

Koviloor Digital Library

பிள்ளை பெற வருத்தப்பட்டால்.

நாய்மண்டையோடு கொஞ்சமெடுத்துப் பொடிசெய்து ஆமணக்கெண்ணெயிற்குழப்பி உள்ளுக்குக்கொடுத்து வயிற்றிலும் பூசப் பிள்ளைபிறக்கும். பசலியிலைச்சாறு படி அரைக்கால் நல்லெண்ணெய் படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து கொடுக்கப் பிள்ளை பிறக்கும்; நஞ்சுக்கொடிவிழும். சிவனார்வேம்பை முலைப்பாலிலரைத்துக் தொப்புளின் கீழ்த்தடவப் பிறக்கும். கௌதும்பை வடவேரைப் பிடுங்கிக் குளிசமாடி நெற்றிக்கு நேரே மயிரிற்கட்டி அதைப் பார்க்கப் பிறக்கும்.

பிள்ளை பெற வருத்தப்பட்டுத் தாகமெடுத்தால் வயிற்றில் ஆவின்வெண்ணெயைப் பூசி அது உருகினால் பிள்ளை பிறக்குமென்றும், உருகாவிட்டால் வயிற்றிற் பிள்ளை செத்ததென்றும் அறியலாம்; பச்சைப் புனுகுங் கோரோசனையு மத்தித்து வருத்தப்பட்டுப் பிறந்த குழந்தை நாக்கிற்றடவ மயக்கம் நீங்கும்.

நஞ்சுக்கொடிவிழ.

குழப்பாலை வேர் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் வெந்நீர்விட்டரைத்து எருமை வெண்ணெயிற் குழப்பிக் கொடுக்க விழும். வட்டத்துத்திவேர் சீரகம் பழம்புளி சமமாய்க் கஷாயஞ்செய்து கொடுக்க விழும்; கருவேப்பிலைக்கொழுந்து வேப்பங்கொழுந்து முருங்கைக்கொழுந்து வகைக்கு ஒரு பிடி, கடுக்காயொன்று இவையெல்லாம் நறுக்கி ஒருபடி தண்ணீரிற் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொடுக்க விழும்.

பிள்ளை பெற்றதில் வயிறு பழுத்தால்.

வேலிப்பருத்தியிலை சுக்கு மிளகு வெள்ளைப்பூடு வகைக்கு வராகனெடை (20) தட்டிப் போட்டுக் கஷாயஞ்செய்து மூன்றுநாட் கொடுக்கத் தீரும், மாவிலிங்கம்பட்டை சிற்றரத்தை அரிசித்திப்பிலி மஞ்சள் வகைக்குப் பலம் (1/4) கருப்புக்கட்டி பலம்(1) கஷாயஞ் செய்து மூன்றுநாட்கொடுக்கத் தீரும். கோவைத்தண்டிடித்துக் காடியிலூறப்போட்டு இறுத்து அதில் சுக்கு மிளகு வெள்ளுள்ளி அடுப்புக்கரி வகைக்குப்பலம் (1) அரைத்துக்கலக்கிக் காய்ச்சி அதில் நல்லெண்ணெய் படி அரைக்கால் கூடவிட்டு வெள்ளுள்ளி தட்டிப்போட்டு வெதுப்பித் தாளித்துக் கொடுக்கவும்; எள்ளுப்பொரியும் கருப்புக்கட்டியும் சமன் இடித்துக்கொடுக்கவும் தீரும்.

பச்சையுடம்பில் வயிறுபொருமி வலித்தால்.

பெருங்காயம் வராகனெடை (1) வசம்பு வராகனெடை (2) கொடுவேலிவேர்ப்பட்டை வராகனெடை (3) சுக்கு வராகனெடை (4) ஓமம் வராகனெடை (5) கடுக்காய்ப் பொடி வராகனெடை (6) திப்பலி வராகனெடை (7) கோஷ்டம் வராகனெடை (8) சிவதை வராகனெடை (9) இவைகளை வறுத்துச் சூரணித்துத் திரிகடிப் பிரமாணம் பசுவினெய்யிற் கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

பச்சையுடம்பிலெடுத்த சுவாசகாசத்தின் குணம்.

சுரங்காயும், தலைவலிக்கும், வியர்க்கும், தாகிக்கும், வயிறு பொருமி இரைந்து கழியும், இளைப்பு பெருமூச்சு மயக்கங் காணும் (5–7–9) அல்லது (18) நாளில் மரணம்; இந்தக் கெடுதப்பினால் வியாதி நீங்கும்.

நிவிர்த்தி.

கழற்பருப்பும் பனைவெல்லமும் அரைத்துக் கொடுக்கவும். வேங்கை உப்புக் கண்டத்தையாவது அதன் றோலையாவது சாராயத்தில் அல்லது இள வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும். முருங்கைப்பட்டை கழற்பருப்பு பனைவெல்லமுஞ் சமனாயரைத்துக் கொடுக்கவும். சந்தனம் கோஷ்டம் அதிமதுரம் சாத்திரபேதி தக்கோலம் முல்லைவேர் கோரங்கிழங்கு விலாமிச்சைவேர் வெட்டிவேர் நெல்லிப்பருப்பு சமமாய் இளநீரிலரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் உண்டைசெய்த உலர்த்திக்கொண்டு (10) நாள் இளவெந்நீரிற் கொடுக்கவும். முத்தக்காசு திப்பலி மிளகு சுக்கு கடுகுரோகணி சீரகம் ஏலம் வெட்டிவேர் விலாமிச்சைவேர் தக்கோலம் இலவங்கம் மல்லி மயிரோசனை கோஷ்டம் சமனாய் இளநீரிலரைத்து மிளகுபோ லுருட்டிக்கொண்டு இளவெந்நீரில் (10) நாட்கொடுக்கவும். மல்லி மதூரம் ஏலம் இலவங்கம் கோஷ்டம் சண்பகப்பூ கோரோசனை முத்தக்காசு மிளகு இருவேலி முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் சமனாய் இளநீரிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் உண்டை செய்து உலர்த்திக் கொண்டு இளவெந்நீரிற் கொடுக்கவும். வியாதி தீரும்.

பத்தியத்துக்கான பதார்த்தங்கள்.

கட்டினஉப்பு புளியாரை சீயக்கொழுந்து நெல்லிக்காய் அருநெல்லிக்காய் வெள்ளாடு முதல் ஊர்க்குருவி, காடை, மான், மரை, சுறாமீன், மயரை, குரவை, வரால், தேளி, கெளிறு, மிளகு, சருக்கரை, தேன், சிறுகீரை, ஆவின்பால், நெய், சிறுபயறு, துவரை, பொன்னாங்காணி, அவரைப்பிஞ்சு, புடலம்பிஞ்சு, கதலி, வாழைப்பழம், கொதிக்கும் நீர், அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, பரட்டைக்கீரை, முள்ளிப்பிஞ்சு, தூதுவளை சமூலம், வழுதுளம்பிஞ்சு, கண்டங்கத்திரிப்பிஞ்சு முதலான வகைகள் நோய்களைப் போக்கும்.

மருந்திற்கு முறிவான உணவுப் பண்டங்கள்.

கொள்ளுநாடி, கொம்மட்டி, கோழி, பன்றி, கொக்கு, செவ்வாடு, சோம்பு சீனி அவரை, கொத்தவரங்காய், சுரைக்காய், பாகற்காய், பழுபாகற்காய், மாங்காய், புளி, கடுகு, தேங்காய், மேதிப்பால், நெய் சாராயம், தென்னங்கள்ளு, உளுவைமீன், விலாங்கூனி மீன், கொடைகள், கயல்மீன், முதலான கரப்பான் உணவு பண்டங்களை எள்ளளவு தின்றாலும் மருந்து முறிந்து உடலில் உள்ள பிணியை வலுக்கச் செய்யும்.

கருக்கோள் இலக்கணப் பாடலம் முற்றும்.

Koviloor Digital Library

பாலவாகடப் படலம்.

குழந்தைகளுக்குவரும் நோயின் விவரமும் அதற்கு மருந்துகளும் சாற்றுதல்.

பாரே குழந்தைப் பிணிகுறிப்பும் பகரும் பட்சி தோடமுடன்
நேரே மாந்தம் பதினெட்டும் நேருங் கிரந்தி தன்குணமும்
சீரே புணர்ச்சி கரந்தலதுஞ் சிறந்த கருப்பஞ் சூடுமுதல்
நேரே மாந்தர றிபவென்று நிரையா யுரைத்த திதுவாமே.

கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, பறவைத்தோடம், மாந்தகணம், பீளி, கரப்பான், செவ்வாப்பு, தொண்டைக்கட்டு, அட்சரம், வைசூரி முதலான அநேக நோய்கள் ஏற்படுகின்றன. மாந்தத்தாலும், தாய்ப்பாலாலும், கணம், கருப்பச் சூட்டினாலும், மற்ற பிணிகள், தாய்தந்தையின் புணர்ச்சியினால் ஏற்படும் சூட்டினாலும் குழந்தைகளுக்கு நோய் உண்டாகிறது.

செங்கிரந்தி நோயின் இயல்பு

பிறந்த பிள்ளை பெறுவயி றூதீடும்
சிறந்த காளைக் குரல்போ லழுதிடும்
திறந்த நீரும் மலசலங் கட்டிடும்
தறந்த தொண்டை கட்டிக்கால் சிவப்பதே.

பிள்ளை பிறந்தவுடன், தொண்டைகட்டிப் பூனைக்குரல் போல் அழும். மலமும் கட்டி வயிறு ஊதும்; கால் கை சிவப்பேறும்.

மருத்துவம் 1. கோரோசனையைத் தாய்ப்பாலில் அரைத்துக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

2. கற்பூரவள்ளியிலை, குன்றிமணியிலை, ஈருள்ளி சம நிறையாய்த் தட்டிச் சாறு பிழிந்து முறித்துக் கொடுத்தால் நோய் தீரும்; இச்சாபத்தியம்.

3. முருங்கையிலைச் சாற்றை முறித்துக் கொடுத்தால் நோய் தீரும்.

4. செம்முள்ளி இலையை நீரில் போட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்டி வந்தால் தீரும்.

செங்கிரந்தி நோய் (வேறு)

பால னலறியழும் பாலுணாக்கு ரல்கம்மும்
சீல முடல்வெதும்பு மூர்ச் சை ஞாலமதில்
நாவரட்சி காணும் நவில்வயிற்று நோகறுப்பாம்
கால விழிதிறவா காண்.

குழந்தை அலறி அழும்; குரல் கம்மலாகும்; தாய்ப்பால் குடிக்காது; மூர்ச்சை அடையும்; உடல் வெதும்பும்; கண் திறவாது; நாவரட்சி ஏற்படும்; கீழ்உதடு, கை. கால் கறுப்பேறும்; வயிறு ஊதி; வலி ஏற்படும்

Koviloor Digital Library

மருத்துவம்1. கழுதைப்பாலில் ஒரு காசு எடை எடுத்து, ஓணானின் ரத்தம் விட்டுக் கொடுத்தால் குழந்தைக்கு நல்லது; கடும் பத்தியம்.

2. கருங்கழுதை லத்திச்சாறு, அவுரியிலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய் சமமாய்க் கலந்து அதில் வசம்பு, உள்ளி தட்டிப்போட்டுக் காய்ச்சிச் சங்களவு கொடுத்தால் தீரும்; பத்தியமில்லை (சங்களவு ஒரு பாலாடை என்பர் அது சுமார் 1/2 அவுன்ஸ் ஆகும்.)

3. பசுவின் நெய், சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், சங்கிலைச்சாறு சமமாக எடுத்து; மிளகு, சுக்கு, திப்பிலி, அரைத்துப்போட்டு; சூரிய புடம்வைத்து, அந்தத் தைலத்தைத் தேய்த்துச் செம்முள்ளி, கிரந்திநாயகம் ஆகியவற்றை நீரில் போட்டுக் காய்ச்சி அந்த வெந்நீரில் குளிப்பாட்டி வந்தால் நல்லது; பத்தியமில்லை.

4. மூக்கரைச்சாரணை, முடக்கத்தான், செப்புநெருஞ்சில், முத்தெருக்கஞ்செவி, ஓரிதழ்த்தாமரை, வெங்காயம், மயிலிறகு இவை எல்லாம் ஒரே சமமாகத் தட்டி எடுத்துக் கொண்டு; சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி குழந்தைக்கு உள்ளுக்குக் கொடுத்துத் தாய்க்கு மேலே பூசினால் குழந்தைக்கு நோய் தீரும்; தாய் பத்தியமாய் இருக்க வேண்டும்.

கிரந்தி 18–க்கும் சூலை 18–க்கும் மருந்து.

ஆமணக்கெண்ணெய், தேங்காய்ப்பால், செம்பருத்தி இலைச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய் விட்டுக் காய்ச்சி வடித்து எடுத்துக் கொண்டு அதில் சுக்கு, கிராம்பு, ஏலம், திப்பிலி, பூரம், மிளகு, ஆகிய ஒவ்வொன்றும் வகைக்கு 1 வராகன் எடை (3 1/2 கிராம்). அளவு பொடித்துப் போட்டுக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் நோய் தீரும்; பத்தியமில்லை.

அறைவீட்டில் குழந்தைக்குக் கழுத்துவீங்கி முழங்கால், முழங்கை குளிர்ந்து, வயிற்றுவலி காணலுக்கு மருந்து.

1. மேற்படி பிணிகண்டவுடன் கஸ்தூரி, திப்பிலி இரண்டையும் பொடி செய்து கால் காசு எடை அளவு எடுத்து வெற்றிலைச் சாற்றில் கொடுத்தால் பிணி தீரும்.

2. கஸ்தூரியை கால் காசு எடை வெற்றிலைச் சாற்றில் கொடுத்தாலும் பிணி தீரும்; இச்சாபத்தியம்.

குழந்தை வயிற்றுவலிக்கு, மலங்கட்டலுக்கு மருந்து.

புன்னை, சிறுதேக்கு, கோட்டம் ஒரே சமமாய் அரைத்துக் குழம்புபோல் காய்ச்சி குழந்தையின் வயிற்றில் பூச வயிற்றுவலி தீரும்.

மேற்படிவேறு:– அதிமதுரம், வேப்பங்கொழுந்து, சர்க்கரை இம்மூன்றும் அரைத்து நெய்யில் வேகவைத்துக் கொடுக்க மலக்கட்டால் வயிறு வலித்து அழுதலும் மலக்கட்டும் நீங்கும்.

Koviloor Digital Library

குழந்தையின் சிறுநீர்கட்டுக்கு மருந்து.

எலிபுழுக்கையும், வெள்ளரி விதையும் சமமாக அரைத்து; அடி வயிற்றில் பூசி; வெங்காரம் பொரித்துத் தாய்ப்பாலில் கரைத்துக் குழந்தைக்குப் புகட்டினால் நீர் இறங்கும்; பத்தியமில்லை

பிள்ளைகளுக்கு உரம் (வர்மம்) விழுதலுக்கு மருந்து.

வெள்ளைப்பூண்டு 10 பலம் (350 கிராம்). கடுகு 10 பலம் (350 கிராம்) ஒன்றாய்க் கலந்து குழித்தயிலமிறக்கி உடம்பில்பூச குடல்வாதம், உரம் தீரும்; பத்தியமில்லை.

பிள்ளை சீறி அழுதல், விக்கல் எடுத்தல், வயிறுபொருமலுக்கு மருந்து.

சிறுதேக்கும், திப்பிலியும் பொடி செய்து கொண்டாவது, அல்லது திப்பிலியும் கடுகுரோகிணியும் பொடி செய்து கொண்டு தேன் அல்லது பசுவின் நெய்யிலாவது கலந்து மார்பாகங்களில் (நகில்) பூசிப் பிள்ளைக்குப் பால்கொடுத்தால் குழந்தைக்கு மேற்கூறிய பிணிகள் நீங்கும்; பத்தியமில்லை.

பிள்ளையின் வயிறு வீங்குதல், குடித்த பால் வாந்தி எடுத்தல், அடிக்கடி கொட்டாவி விடுதலுக்கு மருந்து.

1. அதிமதுரத்தைக் காடியில் அரைத்து வயிற்றில் பூச, வயிறு வீக்கம் தீரும்.

2. வெள்ளுள்ளியும் ஓமமும் வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுத்தால் பால் வாந்தி எடுப்பதும் கொட்டாவியும் நீங்கும்.

3. அதிமதுரத்தைத் தாய்ப் பாலில் அரைத்துக் கொடுக்கவும், மார்பாகங்களில் (நகில்) பூசிக் குழந்தைக்குப் பால் கொடுக்கவும்; பத்தியம் இல்லை.

தாய்க்குப் பால்சுரக்க மருந்து.

1. பூனாகத்தைப் பாலிற்போட்டு மண்களைந்து எலுமிச்சங்காயளவு அரைத்துப் பசுவின் பாலில் 3 நாள் கொடுக்கவும்.

2. கற்றாழையிலை இள வெந்நீரில் போட்டுப் பிசைந்து மூன்று நாள் கொடுக்கவும்.

3. பாதிரி வேரையாவது கீழ்க்காய் நெல்லி வேரையாவது அரைத்துப் பாலில் கொடுக்கவும்; பால் சுரக்கும்.

தோட வகுப்பு.

பணிந்திட்ட பிள்ளையது பாலுண் ணாது
பகர்சலமாய் வயிறுளையும் வாந்தி பண்ணும்
வணிந்திட்ட கண்குழியுந் தலையெ டாது
வார்பீருளை சாருமுடன் பேதி யாகும்.

Koviloor Digital Library

அணிந்திட்டச் சீறியழு முடல்வெ துப்பும்
அலறியே கண்டமுகஞ் சிறுசி றுக்குந்,
துணிந்திட்ட பட்சிதோடக் குணத்தி னோர்மை
கூறினார் கும்பமுனி கூறி னாரே.

பட்சி தோட இயல்.

அ.பொ:- வயிறுளையும்=வயிற்றில் வலியுண்டாகும்;
வெதுப்பு=வெம்மை (சுரம்) உண்டாம்
கண்டம்=கழுத்து; கும்பமுனி=அகத்தியர்.

குழந்தை முலையுண்ணாது; நீராக வயிறுகழியும்; வாந்தி பண்ணும்; தலையெடாது; கண்குழியும்; பீளைசாறும்; உடல் பேதப்படும்; வெதுப்பும் அழும் சீறிப் புலம்பும், கண்டமும் முகமும் சிறுக்கும்.

மருத்துவம்:- மணத்தக்காளிவேர், பிச்சிவேர், ஈருள்ளி இவைகளை நறுக்கி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு வெய்யிலில் வைத்து குழந்தைக்குக் கொடுத்து உச்சியிலுந்தேய்க்க நீங்கும்.

பறவைத் தோட இயல்பு.

தலையில் கனலேறி உடல்நொந்து வெதும்பும்; நாவுலரும், கக்கல் செய்யும்; நெஞ்சை சுழிவாங்கும்; வலிப்புங்காணும், இளைக்கும்; உச்சியுங்கண்ணுங்குழியும்; குழந்தை அடிக்கடி திடுக்கிட்டெழுந்து சீறியழும்; வயிறு போகும். (கழிச்சலாகும்)

மருத்துவம்:- சீரகம், ஈருள்ளி, வரப்பூலாவேர் இவைகளைச் சமமாய் எடுத்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

எட்சிதோட இயல்பு.

குருதியில் கனலேறி உடம்பு தேயும்; நாறும், கண்ணிற்பீளை கட்டும்; சற்றேவயிறு கழியும்; குழந்தை முலையுண்ணாது; பதறியழும்; கண்ணைப் பிசையும்; மயங்கிப்புரளும்.

மருத்துவம்:- வில்வயிலையுஞ் சீரகமும் குடிநீர் செய்து கொடுத்து மேற்படி இலையையாவது நிலவிளா இலையையாவது அரைத்து வெந்நீரில் கரைத்துக் குளிப்பாட்டத் தீரும்.

வீங்குபுள் தோட இயல்பு.

குழந்தை வாந்தி பண்ணும்; பசுமையாயும் பால் போலுங் கழியும்; பின்கையால் முகத்தைத் துடைக்கும்; உச்சிகுழியும்; நாவுலரும்.

மருத்துவம்:- மதுரம், முத்தக்காசு, அதிவிடயம், கடுக்காய் வசம்பு, தேவதாரம், மஞ்சள் இவைகளை சமநிறையாய் எடுத்துப் பொடுதலைச் சாற்றாலரைத்து உருண்டை செய்து தாய்ப்பாலி லிட்டுக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

தூங்குபுள்ளி தோட இயல்பு.

மங்கையே வயிறுகழியும் வாந்தி பண்ணும்
மயக்கமாம் நித்திரையு மதிக மாகும்.
அங்கமாய் வீறிட்டு எழுத்தி ருக்கும்
அன்னையின் முகம்பார்த்து தண்ணீர் கேட்கும்.

துங்கமுகம் வேறுபட்டுக் கண்கள் சோரும்
துடிதுடித்து நெறுநெறெனப் பறக டிக்கும்
புங்கமாயுச் சிபள்ளம் விழுகும் பாரு
புத்திரற்குத் தூங்குபுள்ளின் தோட மாமே.

(அ.பொ.):– நித்திரை=உறக்கம்; வீறிட்டு=அச்சத்தால் உரத்த குரலில் திடீரென்று அழுதல்; சோரும்=அயரும்; புங்கமாய்=மிகுதியாக.

வயிறுகழியும்; வாந்திபண்ணும்; மயக்கமாய்த் தூங்கிக் குழந்தை வீறிட்டலறி எழுந்திருக்கும்; முகத்தைப் பார்க்கும், அடிக்கடி தாகித்துத் தண்ணீர் விரும்பும்; முகம் வேறுபடும்; கண்களிரண்டுஞ் சோரும்; நெறுநெறெனப் பல் கடிக்கும்; உச்சிபள்ளம் விழும்.

மருத்துவம்; மஞ்சள், வசம்பு, ஏலம், வேப்பீர்க்கு, ஓமம், குட்டிவிளா இவையெல்லாம் நறுக்கி வெதுப்பிக் குடிநீர் செய்து, அதில் கோரோசனையையும் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து மேற்படி மருந்துகளை அரைத்து மேலிலும் பூசிக் குளிப்பாட்டத் தீரும்; பத்தியமில்லை.

விளக்கொளிக்கண்புள் தோட இயல்பு,

பாலெதிரெடுக்கும்; உடலடிக்கடி சாயும்; குழந்தை முலையுண்ணாது; பெருவிடாய் கொண்டு சோரும்.

மருத்துவம்:– சின்னி, வசம்பு, குட்டிவிளா இவையெல்லாம் அரைத்துக் குழந்தைக்கு மேலிற்றேய்த்து, தலைமுழுக்காட்டி, அதுகளைத் துணியில் முடிந்து கழுத்திலுங், கையிலுங்கட்டத் தீரும்; பத்தியமில்லை.

வெங்கண்புள்ளின் தோடகுணம்

பால்போல் கழியும் , மேனிகாயும், வெளுக்கும், வயிற்றிரைச்சல் வலிகாணும்

மருத்துவம்: கற்றாழஞ் சோற்றில் கடுக்கால் பொடி தூவிப்பிசைந்து வைகக நீருலும் அதில் திப்பிலிபை வறுத்துப் பொடித்து தூவிக்கொடுக்க தீரும்.

கருடக்கண்புள்ளின் தோட இயல்பு.

வாய்நீர் வடியும்; வாந்தி (கக்கல்) பண்ணும்; உருவழியும், அழும்; பீளைகட்டும்.

மருத்துவம்:– கோரோசனை, அதிமதூரம், திப்பிலி இவைகளை சமமாக எடுத்து தாய்ப்பாலில் அரைத்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

செங்கண்புள் தோட இயல்பு

குழந்தை கண்சிவந்து நீர்வடியும்: தலை குளிரும்; குழந்தை தவழ்ந்து போய் நிலத்தில் விழும்; கையால் முகத்தைத் துடைக்கும்; சீறியழும்; வெப்பு காணும்; நீராய்க் கழியும்.

மருத்துவம்:– அதிமதுரம், சீரகம் முத்தக்காசு ஏலம், பத்திரி, சாதிக்காய், கிராம்பு; செண்பகப்பூ, இலவங்கப்பட்டை வகைக்கு 1 வராகனெடை (3 ½ கிராம்). முசுமுசுக்கையிலை, பொன்னாங்காணி, சிறுகீரை, சீந்தில் வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஈருள்ளிச் சாறு கால்படி; ஆவாரை வேர் 1 பலம் இவைகளை அரைத்து இரண்டு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; பத்தியமில்லை.

அந்திப்புள் தோட இயல்பு.

மேனிவெளுக்கும், காயும்; அதில் நரம்புதோன்றும்; கால் கை குளிரும்; பாலெதிரெடுக்கும்.

மருத்துவம்:– சின்னி, குட்டிவிளா, நொச்சி சீந்தில், வேம்பு, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்து மேலெங்கும் பூசி, மேற்படி மருந்துகளைத் தட்டி நசுக்கிச் சிறுபொட்டணமாய்க் கண்டத்திலுங் காலிலுங்கட்டத் தீரும்.

நீர்ப்புள் தோட இயல்பு

நெஞ்சு வறளும் குளிர்ந்து நெடுமூச் செய்தும் பாலுண்ணாது
துஞ்சா திரவும் பகலுமழுந் துய்ய பாலன் முகம்வெளுக்கும்
மிஞ்சவு டலுந்தான் வெயர்க்கும் மீறி யழுகுந் தோடமதால்
கஞ்ச மலராள் சூழலாணை கழல்நீர்ப் புள்ளின் தோடமிதே.

(அ.பொ):– துஞ்சாது=தூங்காது; மீறி=அளவுக்கு மிஞ்சி கஞ்சமலராள்=இலக்குமி.

நெஞ்சுவறண்டிடும்; கண்குளிர்ந்து வெளுக்கும்; குழந்தை பெருமூச்சிடும்; பாலுண்ணாது; இரவும்பகலும் அலறியழும்; உடல் வியர்க்கும்.

மருத்துவம்:– விஷ்ணுகரந்தையும், சீரகமும் கூட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்; பத்தியமில்லை.

புள் தோட இயல்பு

உச்சியுங்கண்ணுங் குழியும்; குடித்த பால் தங்காது; பச்சையாய் வயிறு கழியும்; பறவைக் குரல்போல் குழந்தை சீறியழும்; இளைக்கும், தண்ணீரை விரும்பும்; மெய்மறக்கும்.

மருத்துவம்:– ஓரிதழ்த் தாமரை, வெந்தயம், விடத்தலைவேர்; வால்மிளகு, ஓர் அளவாய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

முட்டுத்தோட இயல்பு

மாதவிடாயானவர்கள் குழந்தையை எடுத்தால் மேனிவாடி வேறுபடும்; கக்கல் பண்ணும்; உச்சியுங் கண்ணுங்குழியும்; நாக்கு வாய் கருக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்;– கோரோசனை, திரிகடுகு, சீரகம் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

குழித் தோட இயல்பு

உச்சியுங் கண்ணுங் குழியும்; வாந்தி, வியர்வைமிகும்; பலவண்ணமாய்க் கழியும்; உடல் தணல்போற் காய்ந்து வற்றும்; நெஞ்சுலர்ந்து தாகிக்கும்; கண்ணில் நீர் சொரியும்; கால் வீங்கும்; குய்யம் புண்ணாகும்.

மருத்துவம்:– குட்டிவிளா, வேம்பு, சோம்பு, மஞ்சள், வசம்பு இவையெல்லாம் அரைத்துத் தாய்க்கும் பிள்ளைக்கும் உடம்பில் தேய்த்து, நீரில் வாகையிலையைப் போட்டுக் காய்ச்சி நீராட்டி அப்பால், பசும் நெய் அரைபடி நல்லெண்ணை கால்படி நன்னாரி, தண்ணீர் விட்டான், கரந்தை, பொன்னாங்காணி வகைக்கு 1 பலம் (35 கிராம்), ஏலரிசி, சீரகம், வகைக்கு 3 கழஞ்சு இவைகளை எல்லாம் பால் விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறு கரண்டி வீதம் கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; இச்சாபத்தியம்.

வேப்பங்கொழுந்து ஒரு பிடி மிளகு, வசம்பு, சுக்கு, மலைதாங்கிவேர் வகைக்கு 1 வராகனெடை (3 ணீ கிராம்), விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

கருப்பம் சிதைந்த தோட இயல்பு அல்லது கருச்சிதைவு கண்ட பெண்ணால் ஏற்பட்ட தோட இயல்பு.

உடம்பு நொந்து தான்சிவக்கு முறையு மேனி தானாறும்
திடமா மசதி நெஞ்சுலருந் தேகமி ளைக்குங் கால்பின்னும்
படமாய்க் கழியும் விழிசொருகும் பாங்காய்க் கைகா லமுக்கேறும்
சடமாம் புத்தி தான்மயங்குஞ் சாற்றுங் கருப்ப நோயுகமிதே.
உடம்பு நொந்து சிவக்கும்; இளைக்கும், நாறும் நெஞ்சுலரும்.
கைகால் அமுக்கேறும்; கால்பின்னும்; கழியும் விழிசொருகி மயங்கும்.

மருத்துவம்:– 1. கமுதைலத்தியின் சாற்றில், பருத்தி வேரை உரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

2. பனைவெல்லத்தை மேற்படி சாற்றில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

தேரைத் தோட இயல்பு

பாரப்பா வதிப்புலர்ந்து தேகம் வற்றும்
பதிவாக நெஞ்சுலர்ந்து கண்சி றுக்கும்,
நேரப்பா கைகால்கள் வற்றிப் போகும்
நேர்மையாய் நரம்பொடுங்கி வயிர் பொருமும்,
நீரப்பா மலந்தீயு நாவு லரும்
நெடுந்தாக மொடுவாடும் மேனி வெண்மை,

Koviloor Digital Library

ஆரட்பா செவிதாழு மூச்சு வாங்கும்
மருங்குரற் படும்பிள்ளை தேறா தென்னே.

உடம்புலர்ந்து வற்றும்; வெளுக்கும், நெஞ்சுலர்ந்து கூடும்; கண் பொடித்திருக்கும்; கை கால்வற்றிச் சுருக்கி முடங்கும்; வயிறு பொருமும்; மலம் தீயும்; நாவுலரும்; தாகிக்கும்; முகம் வாடும்; செவிதாழும்; மூச்சு வாங்கும்; நெரிகுரற்படும்; பிள்ளை சற்றும் தேறாது.

மருத்துவம்:– சிறுபுள்ளடி, செருப்படி, சிறுகீரை, நீர் ஆரை, பொன்னாங்காணி, நீர்முள்ளி இவைகளின் சமூலங்கள்; காட்டுமல்லி, அவுரி, கரிசலாங்கண்ணி, நிலக்குமிழ், முடக்கொத்தான் இவைகளின் வேர் சம நிறையாக இடித்து மூன்றுபடி நீரிற் போட்டு, நாலிலொன்றாய் வற்றவைத்தக் குடிநீரில், அதிமதுரம், திப்பிலி, ஏலம், மிளகு வகைக்கு கால் பலம் போட்டுப் பசுவின் பால் விட்டரைத்துப் பசுவின்நெய் இரு நாழி விட்டுப் பதமாய்க் காய்ச்சிச் சிறு கரண்டி வீதம் கொடுக்கத் தேரைத் தோடம் குழிதோடம் தீரும்; இச்சாபத்தியம்.

அனைத்துத் தோடங்களுக்கும் பொதுமருந்து.

1. அதிமதுரம், மஞ்சள், முத்தக்காசு, அதிவிடயம், வசம்பு , கடுக்காய், தேவதாரம் சம நிறையாய்ச் சேர்த்துப் பொடுதலைச் சாறுவிட்டரைத்துக் குன்றிபோலுருண்டை செய்து முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்க அனைத்துத் தோடமுந் தீரும்; இச்சாபத்தியம்.

2. சின்னி, விளா, நொச்சி, சீந்தில், வேம்பு, வசம்பு, உள்ளி, இவைகளை அரைத்து உடல்மேல் தேய்த்து அவைகளைத் தட்டித் துணியில் முடிந்து கால்கையிற் கட்டி வைக்க அனைத்துத் தோடமும் தீரும்.

3. கீழ்க்காய்நெல்லி, முடக்கொத்தான், நாயுருவி, கஞ்சா, கோரை, விடத்தலை, நிலக்கடம்பு, சிறுபுள்ளடி, பேய்ச்சுரை இவைகளின் வேர்களைக் குளிசமாடித் தாய்க்கும் பிள்ளைக்குங் கட்டச் சகல தோடமுந் தீரும்.

அனைத்துத்தோடமும் தீர்க்கும் மூலமந்திரம்.

வ–ந–சி–ம–ய வங்–சிங்–சிவய–ந–ம– என்ற இவ்வட்சரத்தைத் தியானித்து விபூதி, தண்ணீர், மருந்து, குளிச முதலான பரிகாரம் செய்ய அனைத்துத் தோடமும் தீரும்.

மாந்தநோய் காணும் பொதுக்காரணமும் மாந்த வகையும்.

மேதிப்பால், நெய், கதலிப்பழம், தேங்காய், இளநீர், கடலை, வெல்லம், புளித்த மோர், மாமிசம், கனிகள், மலைத்துவரை, உளுந்து, மொச்சை, புளியங்கொட்டை, உளுவை, வாளை, கெண்டை மீன், பாகல், சுரை, முதலான வாயுப் பண்டங்களைக் குழந்தைக்கட்கு, பால்கொடுக்கும் மாதாக்கள் மிதமியாக அவைகளை உண்டால் அல்லது அவைகளைக் குழந்தைகள் தின்றாலும், வாதமாந்தம், பித்தமாந்தம், தலைமாந்தம், கணமாந்தம், வலியுப் மாந்தம்,

Koviloor Digital Library

சுழிமாந்தம், முக்குமாந்தம், சன்னிமாந்தம், ஊது மாந்தம், வீக்கமாந்தமென்று 20 வகை மாந்த நோய்கள் குழந்தைகட்கு நேரிடும்.

மாந்த நோயின் இயல்பு.

சார்ந்திடவே பாலனுடல் வெதும்பி வேர்க்குஞ்
சற்றுமுலை யுண்ணாது வாந்தி பண்ணும்
கூர்ந்திடவே மதிமயங்குஞ் சீதம் விழும்
குணங்கெட்டு மலவாயுங் கெட்ட பால்போல்
தேர்ந்திடவே தெளிந்துதண் ணீர்போல் கழியும்
தேகம்வெப்ப நாற்றமுங் கால்கை குளிர்ப்பாம்.
ஆர்ந்திடவே நாவுலருங் குரலுங் கம்மும்
அப்பனே கண்குளிர்ந்து சுழலு மாமே.

(அ.பொ) :- வெதும்பி வேர்க்கும்=வெம்மையுள்ள போதே வியர்வை வரும்; சீதம்=மலம் சீழ்போல வருதல், வெப்பு நாற்றம்=ஓர் வகைக்கும்பி வாசனை, கை கால் குளிர்ப்பாம்=உடல் காயும் போது உள்ளங்காலும் உள்ளங்கையும் சில்லென்று காணும்.

ஆமே சுழன்ற கண்சிவக்கும் அடவாய்க் காலும் பின்னலுண்டாம்
தாமே முகமும் பளிங்காகுந் தங்கம் போல மேனிமின்னும்
போமே மாந்தத் தோடகுணம் பொருதும் பாலர் பிணிநோக்கி
நாமே சொன்னோ மிந்தமுறை நவின்றார் முனிவர் நவின்றாரே.

(அ.பொ).:- பளிங்கு=படிகம் போல் வெளிறும்; தங்கம் போல் மேனி மின்னும்=இயல்பான நிறம் போய் உடல் மஞ்சளித்து மினுமினுப்புக் காணும்; பொருதும்=தாங்கும், நலிவு செய்யும்; பாலர்=குழந்தைகள்.

குழந்தையுடல் வெதும்பி வியர்க்கும்; முலையுண்ணாது; வாந்தி பண்ணி மயக்கும்; சீதமும் மலமுமாயுங் கெட்ட பால் பாலுந்தெளிந்த தண்ணீர் போலுங் கழியும்; வெப்பும், நாறும் கை கால் குளிரும்; நாவுலரும்; குரல் கம்மும்; கண்குழிந்து சுழன்று சிவக்கும்; கால் பின்னும்; முகம் பளிங்குபோல் மின்னும்.

வாதமாந்த நோயின் இயல்பு.

பாலன் வயிறு பொருமியழும் பாங்கா முடலந் தான்வியர்க்கும்
கோல முடனே பலவிதமாய்க் குழியும் வலிக்குந் தான்றுடிக்குஞ்
சீல முடனே நாசிபுண்ணாஞ் சீறுங் கெட்டா வித்தானாகும்
ஆல விடமுண் டோன்றன்னாணை யறைந்த தோட மிதே.

(அ.பொ).:- பொருமும்=காற்றுச் செறிந்து வயிறு ஊதும், துடிக்கும்=வலிதாங்காது அங்கமெல்லாம் பதறும்; நாசி=மூக்கு; சீறும்=சீறி வெறுப்புடன் அழும், ஆலவிடமுண்டோன்=சிவபெருமான்.

குழந்தை வயிறு பொருமியழும், உடல் வியர்க்கும் பல விதமாய்க் குழியும் வலிக்கும் துடிக்கும், கொட்டாவி விடும். நாசி புண்ணாகும்.

Koviloor Digital Library

பித்தமாந்த நோயின் இயல்பு.

துடியாய் வாந்தி பேதிவரில் தூறு மூச்சை தான்காணும்
அடியக் குரலும் கம்மிவிடும் மழகாய் மேனி சஞ்சலிக்கும்
படிய வியர்த்துத் தான்குளிரும் பகரும் பித்த மாந்தகுணம்
நெடிய மாந்தர் தானறிய நேரா யுரைத்தோஞ் செந்திருவே.

(அ.பொ.):– துடியாய்=விரைவாய்; தூறும்=அடைக்கும்; மூர்ச்சை=வலியுடன் உணர்விழத்தல்; சஞ்சலிக்கும்=நிலை கொள்ளாது புரளும்.

வாந்திபேதி, வலிப்பு, மூச்சை காணும்; குரல்கம்மும்; மேனி மஞ்சளித்து வியர்த்துக் குளிரும்.

சிலேத்தும மாந்தநோயின் இயல்பு.

உடம்பு சிலிர்த்துத் தான்குளிரும் உலர்ந்த நாவு தான்வெளுக்கும்
மடர்ந்த நெஞ்சிற் கபங்கட்டு மலரும் வயிறு தான்பொங்கும்
சடமாங் குழந்தை தான்மயங்குஞ் சலமாய்க் கழியு மெந்நேரம்
திடமாஞ் சிலேத்தும மாந்தகுணந் தெளிந்தார் முனிவர் தெளிந்தாரே.

(அ.பொ.):– சிலிர்த்து=மயிர்க் கூச்செறிந்து, பொங்கும்=உப்பும் எந்நேரமும்=எந்த நேரத்திலும்.

உடம்புசிலிர்த்துநளிரும்; நாவெளுக்கும்; நெஞ்சிற் கபங்கட்டும்; வயிறு பொருமிக் கழியும்; குழந்தை மயக்கும்.

மாந்த நோய்க்குப் பொது மருத்துவம்.

1. நொச்சி, பொடுதலை, நுணா, வேலிப்பருத்தி இவைகளின் இலை வகைக்கு ஒருபிடி நறுக்கி வெதுப்பிச்சாறு பிழிந்து கொடுக்கத் தீரும்.

2. வேலிப்பருத்தி, பெருந்தும்பை, சாணாக்கியிலை, வெதுப்படக்கி, வேளை, நொச்சி வகைக்கு ஒருபிடி இலையைவதக்கிச் சாறு பிழிந்து அதிற் சுட்டவசம்பு, சிறுதேக்கு ஆமையோடு, சுட்டக்கரி சம நிறையாய் அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

3. பொடுதலை, கரியுப்பு வகைக்கு ஒருபிடி நன்றாயிடித்துப் பிழிந்து கொடுக்கத் தீரும்.

4. வெற்றிலைக்காம்பு, வசம்பு, உள்ளி, திப்பிலி சம நிறையாய் வெதுப்பு வெந்நீரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

5. ஓமம், வெள்ளுள்ளி, மிளகு, திப்பிலி, சுக்கு இவைகளைத் துணியில் முடிந்து ஒரு படி தண்ணியில் போட்டு எட்டொன்றாய் வற்ற வைத்துக் கொடுக்க நீங்கும்.

6. விளா இலையை வதக்கிச் சாறு பிழிந்ததில் ஆமையோடு, வசம்பு, வட்டத்திருப்பி, திப்பிலி இவைகளை வெதும்பி அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

7. வேலிப்பருத்தி. மேனி, வேளைஇரண்டு, பொடுதலை, அகத்தி ஆகிய இவைகளின் இலைகளை வதக்கிச் சாறுபிழிந்து அதில் வசம்பு, ஆமையோடு, ஓமம், வெதுப்பியரைத்துக் கலக்கி உள்ளுக்கு கொடுத்து மேலிலும் துவாலையிடத்தீரும். வேளைவேர், சுக்கு, வெந்தயம், பூண்டு, வசம்பு, ஓமம் ஆகியஇவைகளை ஒரு அளவால் வறுத்துக் குடிநீர் செய்து கொடுக்க நோய் தீரும். நுணா, நொச்சி, கழற்கொடி இவைகளின் இலைகளை ஒவ்வொன்றையும் ஒரு பிடியைச் சட்டியிலிட்டுக் கருக வறுத்து எடுத்து ஒருபடி நீர்விட்டு அதில் ஓமம், வசம்பு, சுக்கு, மிளகு, பொடுதலைக்காய், திப்பிலி இவைகளை நல்லெண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்துத் துணியில் முடிந்துபோட்டு வற்றவைத்து ஒரு பாலாடை கொடுத்தால் நோய் தீரும்.

8. வேலிப்பருத்தியிலை, வேளைவேர், நொச்சி, பொடுதலை, நுணா, முருங்கை, இவைகளின் ஈர்க்கைச் சமமாய் ஒருபிடி எடுத்து கருக வறுத்து ஒருபடி நீர் விட்டு ஓமம், வசம்பு, சுக்கு மிளகு, பொடுதலைக்காய், திப்பிலி இவைகளை நல்லெண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்துத் துணியில் முடிந்து போட்டு வற்றவைத்து ஒரு பாலாடை கொடுத்தால் நோய் தீரும்.

9. வேலிப்பருத்தியிலை, வேளைவேர், நொச்சி, பொடுதலை, நுணா, முருங்கை இவைகளின் சமமாக ஒருபிடி எடுத்து வறுத்துத் தண்ணீர் விட்டு ஓமம், திரிகடுகு, வசம்பு, வெதுப்பித் துணியில் முடிந்து போட்டு வற்றக் காய்ச்சிக் கொடுத்தால் நோய் தீரும்.

10. மாசிப்பத்திரி, பற்பாடகம், நாயுருவி, முக்காவேளை, கருஞ்சீரகம், கோழியெச்சம், இவையெல்லாம் சட்டியிலிட்டு மோர் நிறையவிட்டு பற்பித்து வெட்டிவேர், சங்கம்வேர், ஏலம், கடுகுரோகணி, பறங்கிப்பட்டை, கடுக்காய், மாசிக்காய், வசம்பு, முத்தக்காசு, வகைக்கொரு வராகனெடை (3 ½ கிராம்) தட்டிப்போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு வற்றக்காய்ச்சிக் கொடுக்க மாந்தம், சுழிமாந்தம், கழிச்சல்மாந்தம் தீரும்.

11. ஓமம், திப்பிலி, சுக்கு, நற்சீரகம், கருஞ்சீரகம், கொத்துமல்லி, ஆமைஓடு, குரோசாணிஓமம் வகைக்கு 1 வராகன் எடை, வெந்நீரில் மூன்று நாள் கொடுத்தால் தீரும்.

12. வாய்விளங்கம், ஆமையோடு, மிளகு, பொடுதலைக்காய், வசம்பு திப்பிலி, கழற்சிப்பருப்பு ஆகியவற்றைச் சரிசமமாய்க்கூட்டி பொடுதலைச் சாற்றாலாட்டிச் சூரைக்காய்போல் உருண்டைசெய்து நிழலில் உலர்த்திக் கொண்டு வழுதலைக்கு குடிநீரில் கொடுக்க வாந்தி, பொருமல் நீங்கும், ஓமக்குடிநீரில் கொடுக்க வெகுவாய்ப் போகிற மாந்தக்கழிச்சல் தீரும்.

13. திரிகடுகு, உள்ளி, ஓமம், பெருங்காயம், கருஞ்சீரகம் வகைக்கு 4 வராகன்எடை, வசம்பு 3 வராகனெடை, கடுக்காய் 19 வராகனெடை, சாரணைவேர் 5 வராகனெடை, பொடுதலைக்கொழுந்து, பெருந்தும்பைக் கொழுந்து, உத்தாமணியிலை வகைக்கு ஒருபிடி இவையெல்லாம் வெதுப்பிக்கொண்டு பெருந்தும்பைச் சாற்றால் அரைத்துச் சுண்டக்காய் அளவு உருண்டை செய்து உலர்த்திப் பிள்ளைகளின் வயதுக்குத் தக்கபடி

Koviloor Digital Library

கால், அரை, முக்கால், ஒரு குளிகையை வெந்நீரில் கொடுக்க மாந்தம், கட்டுமாந்தம், மாந்தக் கழிச்சல் வலிப்புத் தீரும்.

14. சண்பகப்பூ, விலாமிச்சவேர், கோட்டம், ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, அதிமதுரம், வெட்டிவேர் வகைக்கு 1 கழஞ்சு வெட்டிவேர்த்தண்டு சாற்றில் 6 நாழிகை ஆட்டிக் குன்றிமணிபோல் உருண்டை செய்து உலர்த்தி தாய்ப்பாலில் அல்லது வெந்நீரிலாவது கலந்து கொடுத்தால் மாந்தங்கள் தீரும்.

15. தூய்மை செய்த பூரம் ½ பலம் (17 ½ கிராம்), இலவங்கம், ஏலம், வசம்பு, சீரகம், அதிமதுரம், விஷ்ணுகரந்தைச்சாற்றால் ஒரு சாமம் அரைத்து கொத்துமல்லிபோல் உருண்டை செய்து உலர்த்தி மேற்கூறிய குடிநீர்களில் எதிலாவது ஒரு உருண்டை அரைத்துக் கொடுக்க அனைத்து மாந்தங்களும் தீரும். இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

ஊதுமாந்த நோயின் இயல்பு.

குழந்தை உடல் ஊதிக்காணும்; வயிறு இரையும்; கழிச்சல், கடுப்பு, வாந்தி, தொண்டைவலி சுரந்தோன்றும்.

மருத்துவம்:– 1. வெண்காரம் அரை வராகனெடை, கடுகுரோகணி, கருஞ்சீரகம் வகைக்கு அரை வராகனெடை, தாய்ப்பாலில் அரைத்து மாத்திரை செய்து கொண்டு வெந்நீரில் கரைத்துக் கொடுக்க நீங்கும்.

2. பொடுதலை வேம்பு, மா, புளி, நுணா, நொச்சி, வேலிப்பருத்தி இவைகளின் ஈர்க்கையும் ஓமம், உள்ளி, திப்பிலி இவைகளையும் சமமாக இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் குடிநீர் செய்து பாலாடை அளவு கொடுக்க ஊதுமாந்தம். கக்கல் மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், ஆகியவை தீரும். இச்சாபத்தியம்.

3. கோரோசனை, உள்ளி, (வெள்ளைப்பூண்டு) திப்பிலி, அதிமதுரம் வகைக்கு ஒரு கழஞ்சு; சிற்றண்டத்தின் கோழிமுட்டையின் வெண்கருவால் அரைத்துத் தாய்ப்பாலில் மூன்று நாள் கொடுக்க ஏழுவகை ஊதுமாந்தமும் தீரும்.

4. வேலிப்பருத்தி இலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் சீரகமும், கடுகுரோகணியும் சமமாய் தாய்ப்பாலில் அரைத்துக் கலக்கி பாலாடை அளவு கொடுக்க ஊதுமாந்தமும், மயக்கமும் தீரும்.

நீர்மாந்த நோயின் இயல்பு.

பாரப்பா உடல்மெலிந்து குளிர்ந்து வாய்நீர்
பக்குவமாய் சுழற்றிசிசு வாந்தி பண்ணும்
நேரப்பா சிலிர்த்துவரு முலையுண் ணாது
நேர்பாகத் தூங்கிவிழித் துச்சி ரிக்கும்
பாரப்பா உடம்புகைகால் தினவெ டுக்கும்
சார்பாக வயிறுகழியும் வாந்தி பண்ணும்

Koviloor Digital Library

நீரப்பா முகமினுககுந் தலைவ லிக்கும்
நீர்க்கடுத்து மலஞ்சிறுத்து இறங்கும் பாரே.

(அ.பொ.):– சிசு=குழந்தை; சிலிர்த்து=மயிர்க்கூச்செறிந்து; நீர்கடுத்து=நீர் இறங்கும்போது வலியுண்டாகி ; சிறுத்து=குறைந்து.

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும்; வாய்நீர் சுழற்றிக் குழந்தை வாந்தி எடுக்கும்; தாய்ப்பால் குடிக்காது; தூங்கி விழித்துச் சிரிக்கும்; வயிறு பொருமிக் கழியும்; உடம்பு கைகாலில் தினவெடுக்கும்; வீங்கும் தலைவலிக்கும்; முகமினுக்கும்; மலஞ்சிறுத்து நீர் கடுத்திறங்கும்.

மருத்துவம்:– 1. ஈருள்ளி, மூக்குரட்டை வகைக்குச் சாறு அரை படி– விளக்கெண்ணெய் கால் படி – ஒன்றாய்க் கரைத்துக் காய்ச்சி கொடுத்தால் நோய் தீரும்.

2. நொச்சி, வேளை, மேனி, நுணா பெருந்தும்பை இவைகளின் இலையை வெதுப்பிச் சாறு பிழிந்ததில் மிளகு, உள்ளி (வெள்ளைப் பூண்டு) வசம்பு, ஓமம் இவைகளை வறுத்து அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

3. நீலிவேரும், செவ்வியம் சம நிறையாய்க் கட்டிப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

4. வெதுப்படக்கி, அம்மான்பச்சரிசி, சங்கங்குப்பி, நுணா, சாணாக்கி வகைக்குச் சாறு கால் படி, விளக்கெண்ணெய் ஒரு படி, வசம்பு, உள்ளி, மஞ்சள் வகைக்கு அரைப்பலம் பொடித்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

5. சிற்றாமணக்கெண்ணெய் 10 பலம், அதிற் பூரம் 1 வராகன் எடை, வாளம், மிளகு, இலவங்கம், வகைக்கு 2 வராகன் எடை இவைகளை மைபோல அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு வராகன் எடை மூன்று நாள் கொடுத்துப் பத்தியம் பெரியமிளகுநீருஞ் சாதமுங் கொடுக்கத் தீரும்.

விட மாந்த நோயின் இயல்பு.

மலமுஞ் சிக்கி வயிறு வாகாய் இரைத்துத் தான்கழியும்
பலமாய் நின்று சுரங்காயும் பாங்கா யரையின் கீழ்க்குளிரும்
சலமா யுடலந் தான்வியர்க்குந் தங்காப் பிள்ளை வாந்திபண்ணும்
நலமா மேனி வாடிவரும் நவின்றார் விடமாந்தமிதே.

(அ.பொ.):– இரைந்து=(அபான வாயு) மிக்க ஒலியுடன்; பலமாய் நின்று சுரங்காயும்=பலமான காய்ச்சல் நின்று நின்று மீண்டும் மீண்டும் காயும்; (இதுவே விஷமம் விடமம் எனப்படும்).

தங்கா=அமைதியாய் இராது; விடமம்=மாறி மாறி இருத்தல்; (சமம்=ஒரே நிறையால் இருத்தல்; விஷமம்=மாறி மாறி இருத்தல்)

மலம்சிக்கி வயிறு வலித்திரைந்து கழியும்; நின்று நின்று சுரங்காயும்; மேனி வாடும்; அரையின் கீழ் குளிர்ந்திருக்கும்; உடல் வியர்க்கும்; கையிற் பிள்ளை தங்காது; அடிக்கடி வாந்தி (கக்கல்) பண்ணும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– நுணா, நொச்சி, வேளை இவைகளின் வேர், ஓமம், பொடுதலை, உள்ளி, வசம்பு, இவைகளைச் சமமாய் கூட்டி வெதுப்பிக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

போர்மாந்த நோயின் இயல்பு.

பாலன் பாலுண்ணாது பண்பாய் மயங்கும் வாந்தி பண்ணும்
சீல நரம்புதான் புடைக்குஞ் சிரசை யசைக்குமார் துடிக்கும்
கோல மேனிவா டிவிழும் குறிப்பாய்த் தாகமிக வெடுக்கும்
மேலாய் நெஞ்சுதரு மேவும் விழியுங் குழைந் திடுமே.

(அ.பொ.):– பாலன்=குழந்தை; புடைக்கும்=வீங்கும்; தாகம்=நீர்வேட்கை; குழைந்திடும்=சுழலும்.

குழந்தை பாலுண்ணாது; கக்கல் பண்ணும்; மயங்கும் தலையை அசைக்கும்; மார்புதுடிக்கும்; மேனிவாடும்; நெற்றி நரம்பு புடைக்கும்; கண் குழியும்; தாகமிகும்; வாயும் நெஞ்சும் உலரும்.

மருத்துவம்:– 1. ஓமத்தை வறுத்துப் பொடித்து வெந்நீரிலாவது தாய்ப்பாலிலாவது கொடுக்கத் தீரும்.

2. கோழியின் கல்லீரலில் இருக்கும் கல், நற்சீரகம், இலவங்கம் இவைகளைச் சமநிறையாய் அரைத்துத் தாய்ப்பாலில் கொடுக்கத் தீரும்.

3. உப்பைச் சட்டியில் வறுத்துக் கொட்டிப்போட்டு, அதில் வேலிப்பருத்தி, தும்பை, வெற்றிலை இவைகளைச் சமமாய் வெதுப்பிச் சாறுபிழிந்து அதில் ஆமையோடும், சுட்ட வசம்பும், உரைத்துக் கொடுக்கத் தீரும்.

4. சத்திச்சாரணைவேர், ஆமையோடு, பூண்டு, சுட்ட வசம்பு வகைக்கு 1 வராகனெடை அரைத்து அரைக்காற் படி விளக்கெண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

5. நுணா, வேலிப்பருத்தி, பொடுதலை, வெற்றிலை, ஆமை ஓடு, சுட்ட வசம்பு, பூண்டு, ஓமம், கிராம்பு ஆகியவை வகைக்கு 1 வராகன் எடை எடுத்து வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

6. மயிலிறகு சுட்டசாம்பல், கிராம்பு, சீரகம், நிம்பவிதை (வேம்பின் வித்து), பேய்பீர்க்கம் வேர் இவைகளைச் சமமாய் தாய்ப்பால் விட்டரைத்து தாய்ப்பாலில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

பால்மாந்த நோயின் இயல்பு.

அறைகிறேன் பால்மாந்தம் வயிறும் ஊதும்
அப்பனே புண்போல நொந்து நாற்றம்
நிறைப்புளிப்பாம் வயிறுபோகும் செவியுந் தாழும்
நேர்விழியுங் குளிர்ந்துவிடும் தொண்டைக் கோழை

Koviloor Digital Library

திறைக்கரடூங் கால்வெதுப்புங் குளிருங் காணுந்
திகைத்துமே குழந்தையது பரத விக்கும்.
முறைமையால் பால்மாந்தத் தோடந் தன்னை
மொழிந்திட்டால் கமலமுனி மொழிந்திட் டாரே. 147

(அ.பொ.):- நாற்றம் நிறைப்புளிப்பாம்=நிறைப் புளிப்பு நாற்றமாம் என்று மாற்றிப் பொருள் கொள்க. மிகுந்த புளிப்பு கணம் (மலத்தில்) காணும்; வயிறுபோகும்=பேதியாகும்; செவி=காது; தாழும்=தளர்ந்து தொஞ்சும்; பரதவிக்கும்=நோய்தாளாமல் துடிக்கும்.

குழந்தை வயிறூதிப் புண்போல் நொந்து புளித்த நாற்றமாய் வயிறு கழியும்; கண்குழியும்; செவிதாழும்; தொண்டையில் கோழை கட்டும்; கை கால் வெதுப்பும்; குளிரும்; குழந்தை வாந்தி பண்ணும்; பரதவிக்கும்.

ஓதும் பொடுதலைக் காய்வசம்பு ஓங்கும் பூண்டு தன்னுடனே
மேது மிந்துப் போர்சமமாய் மேத வெதுப்பி யோர்நிறையாய்க்
கோதில் குடிநீர் செய்தேதான் கொடுக்கப் பிணிகள் தான்தீரும்
நீது வயித்திய சாரமீது நிறையாம் உரைத்தேன் மடமயிலே. 148

(அ.பொ.):- மேத வெதுப்பி=மேன்மையுற வெம்மை அடையச்செய்து.

மருத்துவம்:- பொடுதலைக்காய், இந்துப்பு, பூண்டு, மிளகு, இவைகளைச் சம நிறையாய் வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

செரியாமாந்த நோயின் இயல்பு.

சுரங்காயும்; தலைவலிக்கும்; வயிறு நொந்து குழந்தைசீறி அழும்; மாவு கரைத்ததுபோல் கழியும்; அரைக்கண்ணித் திரையாய்த் தூங்கல்; கீரைத் தண்டு போறசோரும்.

மருத்துவம்:- 1. வசம்பு, சடாமாஞ்சில், உள்ளி, திரிகடுகு, ஓமம், கருஞ்சீரகம், ஆமையோடு இவைகளைப் பொடித்துக் குடிநீர் செய்துக் கொடுக்கத் தீரும்.

2. வேலிப்பருத்தி இலையை வதக்கிப் பிழிந்த சாற்றில் நெய் ஒரு துளிவிட்டுக் கொடுக்கத் தீரும்.

3. இஞ்சியும் பெருந்தும்பையும் தட்டி எருமைவெண்ணெய்யில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும்.

4. ஓமம், கோட்டம், வசம்பு, வகைக்கு 1 வராகன் எடை குடிநீர் செய்துகொடுக்கத் தீரும்.

கட்டுமாந்த நோயின் இயல்பு.

மந்தித்திரைத்து வலித்துக் குழந்தை அடிக்கடி அழும்; மலஞ்சிக்கி வயிறு கழியும்; சற்றே பாலுண்ணும்; திகைத்திருக்கும்; தூக்கம்போல் சோர்ந்து விழும்; சற்றிருமல், சுரம், கோட்டாவி, தலைவலி, வியர்வையுண்டாகும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– 1. சீந்தில்பூண்டு, களிப்பாக்கு, சிவதைவேர், கடுக்காய், கடுகுரோகணி இவையெல்லாம் சம நிறையாய்த் தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

2. சிற்றாமணக்கெண்ணெய் கால் படி, சிற்றகத்தி, துளசி, தகரை, கழற்கொடி, நொச்சி, செம்முள்ளி, மணித்தக்காளி இவைகளை இடித்துப் பிழிந்த சாறு கால்படி, சதுரக்கள்ளிப்பால் ஒரு கரண்டி, கடுகுரோகணி, கடுக்காய், இருசீரகம், உள்ளி, (வெள்ளைப்பூண்டு) வசம்பு, பூதகரப்பன்பட்டை, தைவேளை வகைக்கு 3 வராகன் எடை இடித்து ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு காசெடை கொடுத்து மாலையில் மிளகுசாம்பலுடன் சுக்குக் குடிநீர் செய்து ஒரு சங்களவு, கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

3. சதுரகள்ளிப்பால், வெள்ளாட்டுப் பால் வகைக்கு கால் படி, விளக்கெண்ணை 1 படி, திரிபலை வெள்ளுள்ளி வகைக்கு இரண்டு வராகன் எடை பொடித்துப் போட்டுக்காய்ச்சி ஒரு காசெடை கொடுத்து விலாவிலும் பூசத் தீரும். இச்சாபத்தியம்.

தலைமாந்த நோயின் இயல்பு.

உடல் ஊதிபுண் போல் நோகும்; வயிறுபொருமி வலித்துக் குழந்தை துள்ளிவிழும்; ஏப்பம், கொட்டாவி விடும்; கை கால் குளிரும்; முகம் வியர்க்கும்; தலைகனத்து வலிக்கும்; நாசியில் நீர் வடியும்; குளிர்சுரம் காணும்.

மருத்துவம்:– வெதுப்படக்கி, பெருந்தும்பை, வேலிப்பருத்தி, வெள்ளறுகு இவைகளின் இலையை வதக்கிச் சாறு பிழிந்து அதில் பூண்டு, தேவதாரம், சதகுப்பை, திப்பிலி, சுட்ட வசம்பு இவைகளைச் சம நிறையாய் வறுத்து அரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்; பத்தியமில்லை.

துலைமாந்த நோயின் இயல்பு.

அதிகமாய்க் குழந்தை வாந்தி பண்ணும்; அடிக்கடி முறுக்கிக் கொட்டாவிவிடும்; உடம்பு வியர்க்கும்; முகங்கடுப்பாயிருக்கும்; வலிப்பு கொண்டு கால்கை விறைக்கும்.

மருத்துவம்:– 1. வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டையைப் பாக்களவு அரைத்துத் தாய்ப்பாலில் கலந்து கொடுக்கத் தீரும்.

2. வசம்பு, தைவேளை, முடக்கொத்தான், திரிகடுகு, திரிபலை, அழிஞ்சில் வேர் இவையெல்லாம் சம நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு துட்டெடை உள்ளுக்குக் கொடுத்து உடல் மேலும் பூசத் தீரும். இச்சாபத்தியம்.

சுழிமாந்த நோயின் இயல்பு.

சுரங்காயும்; இரைப்பு; சுவாசம், விக்கல், கக்கல் காணும்; குழந்தை முலையுண்ணாது; நித்திரை செய்யாது.

Koviloor Digital Library

மருத்துவம்:- கோடகசாலை, துழாய் (துளசி), ஆடாதோடை, தும்பை, முதியார்கூந்தல், சங்கிலை, சீந்தில், சிற்றிலைச்செடி, நறுந்தாளி இவைகளின் இலைச் சாறும். விளக்கெண்ணெய்யும் சமன் கலந்து அதில் சாதிக்காய், திப்பிலி, காயம், கடுகுரோகணி, கோரோசனை, உள்ளி வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சி ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.

வீக்க மாந்த நோயின் இயல்பு

சுரங்காயும்; காதுங் கண்ணும் வீங்கிவற்றும்; நாக்குப் புண்ணாகும்; கை கால் நோவும்; அன்னஞ் செல்லாது.

மருத்துவம்:- பூவரசம்பழுப்பு, சங்கன்பட்டை, சீந்திற்கொடி, துழாய் (துளசி), சுக்கு ஓமம், குப்பைமேனி, முள்ளி, முருங்கை ஈர்க்கு, நீர்முள்ளிசமூலம், வேளைவேர், பிரமியிலை, மருட்கிழங்கு, தூதுவளை, சிறுகுறிஞ்சா, சத்திச்சாரணைவேர், கருஞ்சீரகம் இவை எல்லாம் சம நிறையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

முக்குமாந்த நோயின் இயல்பு.

குழந்தை முக்கிமுக்கிச் சீதமும் மலமுமாய்க் கழியும்; உடல் உருகி மெலியும்; சுரங்காயும்; தாகங்காணும்; பின் கால் வீங்கும்.

மருத்துவம்:- 1. ஓமம், திப்பிலி, மிளகு, ஆமையோடு, இவைகளை ஓர் எடையாய்ச் சீலையில் முடிந்து ஒரு படி நீரிற்போட்டு வற்றக்காய்ச்சி அதிலந்த மருந்தையரைத்து கலக்கி சங்களவு மூன்று வேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

2. இந்த நோய்க்குக் கஸ்தூரி எண்ணெய் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வறள்மாந்த நோயின் இயல்பு.

உடல் திரைந்து வெளுத்துவற்றிக் குழந்தை உருக்கெடும்; கடுப்பு, வலிப்பு, முதலான பல குணங்கள் காணும்.

மருத்துவம்:- ஆடுதீண்டாப்பாளைச் சாறு, வேளை, மணத்தக்காளி, கழற்சி, கரிசாலை, துளசி, நீலி இவைகளின் இலைகளை ஓர் எடையாய் ஒன்றாய்ச் சேர்த்திடித்துப் பிழிந்த சாறு, ஆவின் நெய் இவை வகைக்கு 1/8 படி ஒன்றாய்க்கூட்டி அதில் கஸ்தூரிமஞ்சள், கோட்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வகைக்கு ணீ வராகன் எடை பொடித்துப் போட்டுக் கலந்து பதமாய்க் காய்ச்சி காலை மாலை துட்டெடை கொடுத்தால் பிணி நீங்கிப் பிள்ளையுடல் பருக்கும்.

உளைமாந்த நோயின் இயல்பு.

மலஞ் சிறுநீர் கட்டி வயிறுவலித்துக் குழந்தை அலறியழும்; பாலுண்ணாது; மிரண்டு பார்க்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– 1. நாக்குப்பூச்சி (மண்புழு), வசம்பு, நிம்பவேர் உள்ளி, காயம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்து ஒரு படி சிற்றாமணக்கு எண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு காசெடை கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

2. நாக்குப்பூச்சி, ஈசுரமூலி, வசம்பு, இருசீரகம், நாரத்தம் வேர், பூண்டு, காயம், வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்), மணத்தக்காளிச் சாறு விட்டாட்டி ஒருபடி விளக்கெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி ஒரு சிறு கரண்டியளவு மூன்று நாள் கொடுக்கத் தீரும். உப்பு, புளி தள்ளவும்.

3. சங்கு, கொடிவேலி, ஆடாதோடை, கொன்றை, இவைகளின் வேர், இந்துப்பு, காயம், பரங்கிப்பட்டை ஓர் எடையாய் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

4. புல்லூரி (புல்லுருவி), கருப்புக்கட்டி (பனைவெல்லம்) ஓர் எடையாயரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க உளைமாந்தை, உட்சுரம், எலும்புருக்கி தீரும்.

அச்சரமாந்த நோயின் இயல்பு.

எலும்பில் கனலேரி குளிர்ச்சுரம்; கழிச்சல் காணும்; உதடும் வாயும் வெடித்துப் புண்ணாகும்; குழந்தையுடல் மெலியும்.

மருத்துவம்:– 1. மணத்தக்காளி, அகத்தி, கற்றாழை, ஈருள்ளி இவைகளின் சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி காரை, பூலா, துத்தி இவைகளின் வேர்த்தோல், வறுத்தவெந்தயம், வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து வாய்ப்புண்ணிலும், பூசத்தீரும்; இச்சாபத்தியம்.

2. துத்தியிலை, வெந்தயம், ஆடாதோடை, நுணா ஈர்க்கு குடிநீர் செய்து உட்கொள்ளவும்.

3. நுணா இலை, வில்வஇலை, தைவேளை, பொடுதலை, செம்முள்ளி ஆடாதோடை வகைக்குச் சாறு 1 படி, அவுரிச்சாறு 1/8 படி, அரத்தை, கடுகுரோகணி, வகைக்கு 1 வராகன் எடை, கடுக்காய் 5 வராகன் எடை, அக்கிராகாரம் வெளிச்சிப்பிசின், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், வகைக்கு 2 வராகன் எடை; பேய்க்குமட்டிச் சாறு அரைக்கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி ஒரு சிறுகரண்டி வீதம் மூன்று நாள் உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

தோடமாந்த நோய்க்கு மருந்து.

1. முருங்கைப்பட்டை, கோழிமுட்டைவெள்ளைக்கரு, வெள்ளுள்ளி, வேப்பெண்ணெய் ஓர் எடை, ஒன்றாய்க் கலந்து காய்ச்சி உடம்பிலும் நாவிலும் தடவத் தீரும்; இச்சாபத்தியம்.

2. ஈருள்ளியும் முடக்கொத்தானும், வெதுப்பிப் பிழிந்த சாறு மூன்று காசெடை கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

மாந்ததோடம், வலிப்பு, மலட்டுக்கு மருந்து.

முடக்கொத்தானிலை, மூக்கரச்சாரணைவேர், மேற்படி இலைக்கொழுந்து, குப்பைமேனியிலை இவைகளைச் சமமாயரைத்து விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி பிள்ளையின் வயதுக்குத் தகுந்தபடி கொடுக்கத் தீரும்.

மாந்தம் பாலர் இசிவுக்கு மருந்து.

வேலிப்பருத்தி, ஒருபிடி, சுக்கு, சடாமாஞ்சில், விளாக்கொழுந்து, மிளகு, ஆமையோடு, ஓமம், சீரகம், சம நிறையாக ஒரு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாக்கி ஒரு சங்களவு கொடுக்க மாந்தமும், சிறுவர்களுக்குக் காணும் இசிவும் தீரும்.

மாந்தம் வயிற்றுப் பொருமலுக்கு மருந்து.

1. வேலிப்பருத்தி இலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் ஓமம், வசம்பு, சம நிறையாய் வெதுப்பிப் பொடித்துப் போட்டு ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

2. வறுத்த பலம் 1 வராகன் எடை (3 ½ கிராம்), குப்பைமேனி, வேர்ப்பட்டை 2 பலம் (70 கிராம்), அரைப்படி தண்ணீரில்போட்டு நான்கில் ஒன்றாய் வற்றக்காய்ச்சி ஒரு சங்கு கொடுக்கத்தீரும்.

மாந்தம், பொருமல், வாந்தி, செரியாமாந்தத்திற்கு மருந்து.

1. வேலிப்பருத்தியிலைச் சாறு 1/8 படி, வசம்பு, திரிகடுகு, கோரோசனை, வகைக்கு 2 வராகன் எடை, வேலிப்பருத்திக் கொழுந்து 4 வராகன் எடை இவைகளையரைத்துச் சாற்றில் கலக்கி முறித்துக் கொடுக்கத் தீரும்.

2. பெருந்தும்பை, வெதுப்படக்கி, பொடுதலை, வேலிப்பருத்தி, துளசி, துத்தி, அகத்தி, இவைகளின் இவைகளை சமஎடையாக இடித்துப் பிழிந்தசாறு ¼ படி, பச்சை மஞ்சள்சாறு 1/16 படி (மாகாணி), விளக்கெண்ணெய் ½ படி ஒன்றாய் விட்டு அதில் ஓமம், ஆமையோடு சுட்டசாம்பல், (பற்பம்), உள்ளி, வசம்பு, வகைக்கு ¼ வராகன் எடை போட்டு பதமாய்க் காய்ச்சி மேற்படி எண்ணெய் ஒரு துட்டெடையில் பொரித்த வெங்காரம், பெருங்காயம் வகைக்கொரு பணவெடை மத்தித்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

மாந்தங்களுக்குப் பொது மருந்து.

1. சிறுதேக்கு, வாய் விளங்கம், வால்மிளகு, கடுகுரோகணி, சுக்கு, ஏலம், திப்பிலி, இலவங்கம், தான்றிக்காய்த் தோல், தக்கோலம், பொஸ்தக்காய்த் தோல், வகைக்கு ¼ பலம் இடித்து இரண்டு படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி மூன்று தினங்கொடுக்க கிராணி மாந்தம், சுரக்கட்டி, நஞ்சு தோடங்கள், இசிவுமாந்தம், சோகை, காமாலை, சுரம், கோழை, கொட்டாவி, பொருமல், தும்மல், பித்தகணம், பாண்டு தீரும்; இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

2. அவித்துற்றின விளக்கெண்ணெய் தகரைச்சாறு வகைக்கு 1 படி நாயுருவி, தைவேளை, நாய்வேளை, கொழிஞ்சி (கொள்ளுக்காய் வேளை), மூக்கரைச்சாரணை இவைகளின் வேர் இவைகளை அரைத்த விழுது வகைக்குக்கொரு எலுமிச்சங்காய் அளவு; வசம்பு, ஓமம், கஸ்தூரி மஞ்சள், வாய்விளங்கம், கடுகுரோகணி வகைக்கு 1 பலம் இவையெல்லாம் அரைத்துக் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக்கொண்டு பிள்ளையின் வயதுக்குத் தக்க கொடுக்கக் கட்டு மாந்தம், கிருமி, கழிகணம், வாயு, காய்ச்சல், நளிர்மாந்தம், பிரளித் தீரும், உப்பு, புளி, தள்ளிப் பத்தியமாயிருக்கவும்.

3. கோரோசனை, கோட்டம், அதிமதுரம், சீரகம், திப்பிலி, தேவதாரம், சந்தனம், ஏலம், மாசிக்காய், வெந்தயம், சுக்கு, வெள்ளுள்ளி, கஸ்தூரி, வசம்பு ரோகணி, பச்சை மூங்கிற்றோல் வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்), வெதுப்பிப் பொடித்துச் சங்கங்குப்பிச் சாற்றில் அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் கலக்கி மெழுகுபதமாய்க் காய்ச்சிக்கொடுக்க மாந்தம், வயிற்றுப்பிசம், சுழி மாந்தம், நாவறட்சி, கணம், குளிர்காய்ச்சல் முதலானவைகள் நீங்கும்; இச்சாபத்தியம்.

4. நன்னாரி, பழம்பாசி, சிறுபுள்ளடி, சிற்றாமுட்டி, சிற்றாமணக்கு, துத்தி, வட்டக்கிலுகிலுப்பை, கண்டங்கத்திரி, கண்ணுப்பீளை இவைகளின்வேரும், கோவைத்தண்டும் தனித்தனி அரைத்து வகைக்கு ஒரு பெருவிளாங்காய் அளவு; விளக்கெண்ணெய் 3 படி; கழுவி எடுத்த கற்றாழஞ்சோறு இரண்டு தேங்காய் அளவு, சாதிக்காய் சாதிபத்திரி, ஏலம், மதுரம், வெந்தயம், வகைக்கு 5 கழஞ்சு (6 ¼ வராகன் எடை), கோரோசனை, வெள்ளுள்ளி, வகைக்கு 2 கழஞ்சு (8 ¾ கிராம்). இவைகளையிடித்துப் போட்டொன்றாய்க் கலந்து காய்ச்சிக் கற்றாழஞ்சோறு மோறுமொறு என்கிற பதத்தில் இறக்கி வடிகட்டி அளவுப்படிக் கொடுக்க கணமாந்தம், கணக்கழிச்சல், ஊதுகணம், காமாலை, சோகைநீங்கும்; இச்சாபத்தியம்.

5. பொடுதலை, மா, புளி, வேம்பு, நுணா, வேலிப்பருத்தி, நொச்சி இவைகளின் ஈர்க்கு வகைக்கு 1 பலம் வெள்ளுள்ளி திப்பிலி, ஓமம் வகைக்கு 1 கழஞ்சு (4.37 கிராம்) இடித்து ஒரு படி தண்ணீரில்போட்டு கியாழஞ் செய்து 3 நாள் கொடுக்க ஊது மாந்தம், செரியாமாந்தம், கட்டுமாந்தம், கக்கல்மாந்தம், தீரும்; இச்சாபத்தியம்.

6. இஞ்சி, சங்கு, சின்னி, பொன்னாங்காணி, கரந்தை வகைக்குச்சாறு ¼ படி; சிற்றாமணக்கெண்ணெய் ¼ படி ஒன்றாய்க் கலந்து அதில் கடுகுரோகணி ¼ வராகன் எடை (1கிராம்). வறுத்து பொடித்துப் போட்டு ஒரு கரண்டி வீதம் கொடுக்க மாந்தம், உட்காய்ச்சல், கணக்காய்ச்சல், வாய்ப்புண், மூலச்சூடு, பலவகைக் கழிச்சல் தீரும்; இச்சாபத்தியம்.

7. கஞ்சாங்கோரை, பிரமதுளசி, பழம்பாசி, குட்டிவிளா, வல்லாரை, சீந்தில்தண்டு, வசம்பு, கடுகுரோகணி, வெள்ளுள்ளி வகைக்கு 1 வராகன் எடை இவையெல்லாம் தட்டி அரைக்கால் படி விளக்கெண்ணெயில் போட்டுப் பாதமாய்க்காய்ச்சிக் கொடுக்க அனைத்து மாந்தங்களும் தீரும்; இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

8. மணத்தக்காளி, ஓரிலைத்தாமரை, அவுரி, புங்கு இவைகளின் இலைச்சாறு, சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்தது அதில் சங்கு, சிற்றாமணக்கு, நாவல், நன்னாரி, கருந்துளசி, சின்னி, பாற்பாடகம், மேனி, கவுதும்பை இவைகளின் வேர் வகைக்கொருபிடி (ஒரு பிடி=1 பலம்) கடுக்காய்ப்பூ, அதிமதுரம், சடாமாஞ்சி, செண்பகப்பூ, இலவங்கம், செவ்வியம், கடுக்காய், வால்மிளகு, கண்டுபரங்கி, இலிங்கம், மனோசிலை, வாளம், பூரம், கெந்தி வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) இவையெல்லாம் இடித்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடிக்கும்போது அதில் புனுகும் கஸ்தூரியும் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு இரு கழஞ்சு (8 ¾ கிராம்) வீதம் குழந்தைக்கு ஏழு நாள் கொடுக்கவும்.

குறிப்பு: தாய், உப்பு, புளி தள்ளிப் பத்தியமாயிருந்தபின்பு ஏழுநாள் தள்ளி பிள்ளைக்கும் தாய்க்கும் ஓமந்தேய்த்துத் தலைக்கு நீர்வார்க்க அனைத்து மாந்தங்களும் நீங்கும். அதிகக் கழிச்சல் கண்டு மூர்ச்சையானால் சுக்கைத் தட்டிப்போட்டுக் கியாழஞ் செய்து கொடுக்க நிற்கும்.

9. மணத்தக்காளி, தளசி, துத்தி, பிரமி, வில்வம், வல்லாரை, கையாந்தகரை, பொடுதலை, நுணா, புங்கு, சங்கு இவைகளின் இலைச்சாறு விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கடுக்காய் தான்றிக்காய், சுக்கு, திப்பிலி, ஆமையோடு, அரத்தை, ஓமம், வசம்பு, கஸ்தூரிமஞ்சள் வகைக்கு ½ பலம், சாதிக்காய் 1 வராகன் எடை இவைகளைப் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வயதுக்குத் தக்கபடி கொடுக்க மாந்தம், அச்சரம், கணம், மேகம், வெட்டை தீரும்.

கணவகுப்பு.

பாரப்பா கணவகுப்பு பதினெட் டாகும்
பாடினார் வாதகணம் பித்த கணமும்
நேரப்பா சேத்மகணம் நீர்க்க ணமாம்
பிரளிகணம் சூலைக் கணந் தான்
சாரப்பா ஊதுகணம் சுழிக ணந்தான்
சார்வான மகாகணம் வறட்சி கணந்தான்
கூரப்பா கொதிப்புகணம் பிறக ணந்தான்
குறிப்பான ஆமகணம் வீக்ககணந் தானே. 149

(அ.பொ.):– கொதிப்புக்கணம்=சுரத்துடன்கூடிய கணம்: ஆமம்=செரியாமல் உண்டது உண்டபடி நிற்றல்.

தானான தேரைகணம் முக்குக ணந்தான்
தனியான மூலகணம் போர்க்க ணந்தான்
ஊனான ரத்தகணம் விடமாந் தகணமும்
ஊதுமாந்தக் கணமாம் மாந்தக ணந்தானுங்
கோனான மந்தார கணமுந் தானும்
கூரான எரிகணமா மிருபத்து மூன்றும்

Koviloor Digital Library

பானான கணங்கள் பன்னிரண்டு மட்டும்
பாலகர்க்கு நேருமென்று பகர்ந்த தாமே. 150

(அ.பொ.):- மந்தார கணம்=கார் காலத்தில் மட்டும் தோன்றி பிறகாலங்களில் இயல்பாக இருப்பது போலக் காணும் ஒருவகைக் கணம். (மந்தாரம்=சஞ்சரிக்கும் மேகக் கூட்டம்.)

மாந்தம் முதிர்ந்து வாதகணம், பித்தகணம், சிலேத்துமகணம், மாந்தகணம், நீர்க்கணம், பிரளிக்கணம், தூலைக்கணம், சுழிகணம், மகாகணம், ஊதுகணம், வறட்சிகணம், கொதிப்புகணம், வீக்கணம், பிறக்கணம், ஆமகணம், தேரைக்கணம், முக்குகணம், மூலக்கணம் போர்க்கணம், இரத்தகணம், நச்சு மாந்தக்கணம், ஊதுமாந்தக்கணம், அந்தகக்கணம், மந்தாரகணம், எரிகணம், என இருபத்து மூன்று கணங்கள் வயது பன்னிரண்டாகும் மட்டும் குழந்தைகளுக்கு வரும்.

குறிப்பு:- கணங்கள் பதினெட்டு என்று முதல் பாடலில் கூறி இரண்டாம் பாடலில் கணங்கள் இருபத்து மூன்று என்கிறார். தனியாகக்கணம் என்ற பாகுபாட்டில் உள்ளவை 18 என்றும் வேறு நோய் கலப்பு கொண்ட கணம் ஐந்து ஆக மொத்தம் 23 என்று அறியக்கிடக்கின்றது.

வாத கணத்தின் இயல்பு.

உடல்கனத்து குழந்தை புகைந்து இருமும்; இரைப்பு, நாவறட்சி, தாகம், சுரம், பசிமந்தம், நீர்சுருக்குக் காணும்; மலங்கருகும்.

பித்த கணத்தின் இயல்பு.

குழந்தை மஞ்சள் போல் கழியும்; நாக்கும் கடைவாயும் புண்ணாகும்; உடலெரிச்சல், சுரம், தலை கிறுகிறுப்பு, மயக்கம் காணும்.

சேத்தும கணத்தின் இயல்பு.

உடம்பில் தினவு, சொரி, கைகால் வீக்கம், வாய் நாற்றம், வெப்பு, இருமல், கோழை, ஆராட்டங்காணும்; கீழ்வாயும் மேல் வாயும் வெடித்துப் புண்ணாகும்.

இவைகளுக்கு மருத்துவம்.

1. ஈருள்ளி, எலுமிச்சம்பழம், கோவை, வல்லாரை, மாசிப்பத்திரி, வில்வம், குட்டிவிளா இவைகளின் சாறு; அத்திப்பால், ஆலம்பால், முலைப்பால், பசுவின்பால், வெள்ளாட்டின் பால், பசுவின் நெய், கொம்புத்தேன் வகைக்கு ½ படி; தேங்காய் பால் 1 படி; சந்தனம், அறுகங் கட்டை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், வகைக்கு 1 பலம் இடித்துக் காற்படி தண்ணீரிற் போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்து வடித்து ஒன்றாய்க்கலந்து நெய்ப்பதமாய்க் காய்ச்சி அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, திரிகடுகு, திரிபலா, சடாமாஞ்சில், அதிவிடயம், மாசிக்காய் வகைக்கு 1 பலம் இடித்து வடிகட்டின தூளைப் போட்டுக் கிண்டிப்பதமாய்க் காய்ச்சி

Koviloor Digital Library

ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் கொள்ள : வகைக் கணங்களுந் தீரும். உடல் குளிர்ந்து பொன் போலாகும். புளி, உப்புத் தள்ளி தாயார் பத்தியம் காக்கவேண்டும்.

2. சீரகம், வில்வப்பத்திரி, வெங்காயம், வெந்தயம், இவைகளை சம நிறையாய் வெதுப்பிக் கியாழஞ் செய்து கொடுக்கக் கணங்கள் தீரும்; இச்சாபத்தியம்.

3. சிறுபுள்ளடி, கழற்கொழுந்து, அவுரி, சாணாக்கி, பொடுதலை வகைக்கு ஒருபிடியை நையநறுக்கி நல்லெண்ணையிற் போட்டு வெய்யிலில் வைத்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

4. வில்வம், அவுரி, ஈருள்ளி, கடுக்காய் இவைகளைத் தட்டி விளக்கெண்ணையிற் போட்டுக் காய்ச்சி கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

5. பொன்னாங்காணிவேர், புளியீர்க்கு வேப்பீர்க்கு வகைக்கு ஒருபிடி, கோழியவரை வேர் அரைப்பலம் நறுக்கி விளக்கெண்ணெய்யில் போட்டு சூரியபுடம் வைத்துக் கொடுக்கத் தீரும்; மேற்படி பத்தியம்.

குறிப்பு:– திரிபலா என்பது கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய், இதனை முக்காய், முப்பலை, முத்துவர் என்றும் வழங்குவர்.

6. கடுக்காய், கருஞ்சீரகம், கடுகுரோகணி, காட்டுமல்லி இண்டிலை, ஈருள்ளி, உசிலிலை இவைகளைத் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி தாய்ப்பாலில் கலந்து கொடுக்கத் தீரும்.

7. கோட்டம், சண்பகப்பூ, வெண்காயம், அவுரி, நிலகுமிழ், கடுகுரோகணி, விலாமிச்சு, கிராம்பு இவைகளை ஓர் எடையாய்த் தட்டி நல்லெண்ணெயும், நெய்யும் ஒன்றாய்க் கலந்து அதில் போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

கணமாந்த நோயின் இயல்பு.

சிறுவர் உடல் இளைக்கும்; பொருமல், கக்கல், வாய்நீர், தலைசுழற்றல், சோபதாபம், அசதி காணும்; வயிறு இரைந்து பாசிபோல் கழியும்; விழிசுழலும்; நாவுலரும்.

மருத்துவம்:– நொச்சி, துளசி, முசுமுசுக்கை வகைக்கு ஒரு பிடி இலையைப் பிட்டவித்துச் சாறு பிழிந்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்; பத்தியமில்லை.

1. புங்கு, புளி, நொச்சி, மா, வேம்பு, வேலிப்பருத்தி, பொடுதலை, கருவேப்பிலை, நாரத்தை, சங்கு அவுரி, பொன்னாவரை இவைகளின் இலை ஈர்க்கு வகைக்கு ஒருபிடி சட்டியில் போட்டு கடுகுரோகணி, இந்துப்பு, ஓமம் இவைகளைத் துணியில் முடிந்து போட்டு ஒருபடி தண்ணீர் விட்டு வற்றக் காய்ச்சி வடித்து அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

2. [illegible]ள்ளாடி, பொடுதலை, தகரை, மிளகு தக்காளி, கருநொச்சி, பழம்பாசி, ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய், பூண்டு, வசம்பு வகைக்கு ஓர் எடையாகக் கலந்து காய்ச்சி காலையில் கொடுத்து மாலையில் சுக்கு, ஓமம், பொன்முசுட்டை, வேளை, ஏலம், திப்பிலிமூலஞ் சமனெடையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

3. வல்லாரை, பிரமி, செருப்படை, நீர்முள்ளி, மணத்தக்காளி, முசுமுசுக்கை, துளசி, கோழியவரை, நெய்ச்சட்டி இவைகளின் இலை வகைக்கு ஒருபிடி இடித்துப் பிழிந்தசாறு வகைக்கு ஒரு சிரங்கை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கடுகு பதத்தில் கார்கோலரிசி, பூண்டு, வசம்பு, கருஞ்சீரகம், வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்; இந்நான்குக்கும் இச்சாபத்தியம்.

4. வேலிப்பருத்தி, வெள்ளைச்சாரணை, குமட்டி, விளாவேர், வசம்பு பூண்டு, இவைகளைத்தட்டி எருமை வெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தாய்ப்பாலில் சேர்த்துக் கொடுக்கத் தீரும். பத்தியமில்லை.

5. விளக்கெண்ணெய், நுணாயிலைச் சாறு, ஈருள்ளிச் சாறு வகைக்கு 1 படி வில்வக்கொழுந்து இரண்டு பலம் கருஞ்சீரகம் பொரித்த வெண்காரம், வகை 2 வராகன் எடை, கடுக்காய் 4 வராகன் எடை பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கடும் பத்தியமாய்க் கொடுக்கத் தீரும்.

6. வெள்ளாட்டின் பால் 2 படி, விளக்கெண்ணெய் 1 படி, திருகுகள்ளிப் பால் 1 பலம் இரண்டங் கொழுந்து 1 படி செண்பகப்பூ, அதிமதுரம், சாதிக்காய், இலவங்கம், ஏலம், வெள்ளுள்ளி, சாதிபத்திரி, ஈருள்ளி, சீரகம், கருஞ்சீரகம், வசமபு, விலாமிச்சு, வெட்டிவேர், நன்னாரி, சிறுநாகப்பூ, பூலாக்கிழங்கு, கோரோசனை, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், பச்சை நாகேசுரம் வகைக்கு அரை வராகன் எடை இவைகளைப் பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி, வடித்துக் கொண்டு எண்ணெயையும் தாய்ப்பாலையும் கலந்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

7. வால்மிளகு, பூண்டு, ஓமம், கிராம்பு, செண்பகப்பூ சம நிறையாய்த் தூக்கி பொடுதலைச் சாற்றால் நாலு சாமமரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரை செய்துக் கொண்டு மேற்படி சாற்றில் மூன்று நாள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

ஊதுமாந்த கணத்தின் இயல்பு.

குழந்தை உடல், கணுக்கால் வீங்கும்; நாவு புண்ணாகும்; சுரங்காயும்; அன்னம் தண்ணீர் செல்லாது; கால், கை சோரும்; சுவாசம் மிகுதியாகும்.

மருத்துவம்:– குப்பை (குப்பைமேனி), முள்ளி (முள்ளிக்கீரை), நீர்முள்ளி, கரிப்பான், கரந்தை, மாதுளம்பழம், வல்லாரை, வட்டத்திருப்பி, பற்பாடகம், ஓரிலைத்தாமரைக் கிழங்கு, செந்தாமரை, கண்டங்கத்திரி, செங்கழுநீர்க்கிழங்கு, நீர்க்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, தூரத்தாவரை (தூரத்து நிலாவாரை), முருக்கு இவைகளின் சாறு தேங்காய்ப்பால் வகைக்கு

Koviloor Digital Library

டபடி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் இண்டம் வேர், காயம் வசம்பு, ஏலம், வெட்பாலையரிசி, முத்தக்காசு, விளாம்பிசின், வாகைப்பிசின், மதுக்காரைப்பிசின், இலவம்பிஞ்சின் செங்கத்தாரிப் பட்டை, மாசிக்காய், அதிவிடையம், வால்மிளகு, சாதிப்பத்திரி வகைக்கு ¼ பலம் இடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொண்டு ஒரு துட்டெடையாய் மூன்று வேளை உப்பு புளி தள்ளிக் கொடுக்கத்தீரும்.

நாய் வேளை வேரைக் கரிப்பான் சாற்றிலரைத்து தாய்ப்பாலில் கலக்கிக் கொடுத்து நீர்முள்ளி, சுட்டசாம்பலை கரிப்பான் சாற்றில் கரைத்து மேலில் பூசி வைத்திருந்து மாலையில் வெந்நீரில் தலைமுழுக்குச் செய்விக்கத் தீரும். இச்சாபத்தியம்.

நீர்க்கண மாந்த குணம்

குழந்தை இருமும்; மூக்கில் நீர்வடியும்; இடையில் சுரம் காயும்; வயிறு பொருமி இரைந்து பலவிதமாய்க் கழிச்சலும், தலைபுரட்டல், மயக்கங் காணும்; உடம்பு முகம், கண் சோரும்.

மருத்துவம்:– அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம் கோரோசனை, சாத்திரபேதி, வெட்டிவேர், கோட்டம், மாசிப் பச்சை, விலாமிச்சம் வேர் சமன் கூட்டி ஆதண்டைச் சாற்றால் ஒரு சாமம் அரைத்துக் குன்றியளவு உருண்டை செய்துகொண்டு ஒரு உருண்டையை தாய்ப்பாலில் கொடுக்க மாந்தமெட்டு, கடற்படுவன், நீர்ப்பாடு, கருப்பாடு, நாவறட்சி, சுரம், குலையெரிவு, வெப்புகோட்டம் தீரும்; (சன்னிபாத சுரம்).

சிங்கி மாந்தக்கணம் (இதுவே நச்சு மாந்தக்கணம்)

உந்தியில் கனலேறி, ஈரல் வெந்துபுண்ணாகி, உடலாதியந்தமும், தீப்போல் காயும்; மூச்சு மேல் நோக்கி இளைக்கும்; குழந்தை திக்கு முக்காடி மயங்கும்.

மருத்துவம்:– அதிமதுரம், கோட்டம், ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, சண்பகப்பூ, மாசிக்காய், இலவங்கப்பூ, வகைக்கு ¼ பலம் கல்வத்திலிட்டு வெட்டி வேர், மாசிப்பத்திரி, கருந்துளசி, விலாமிச்சு இந்த நால் வகை மூலிகைச் சாற்றால் இரண்டு சாமம் அரைத்துக் குன்றிமணி போல் உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொண்டு மாசிப்பத்திரிக் குடிநீரில் ஓர் உருண்டை கொடுக்கச் சிங்கிமாந்த கணம் தீரும்.

இலவங்கப்பூக் குடிநீரிலிட மாந்த சுரம், கக்கல், மந்தம் தீரும். தாய்ப்பாலிலிட குடற்படுவண், நீர்ப்பாடு, மாந்தம், கரப்பன், நாவறட்சி, வயிற்றெரிவு, அன்னவிடாய், சுரமாந்தம் உப்புசம், இருமல் தீரும்.

நீர்க்கணத்தின் இயல்பு

சுரம் விட்டு விட்டுக் காயும்; மிகுந்ததாகம்; வியர்வை காணும்; கண் குழியும்; நாக்கு வாய் வெடித்துப் புண்ணாகி வறளும்; தண்ணீர்போல் கழியும்; தலை சுழலும்; வயிறு நோகும்; கைகால் சோர்த்து குளிரும்; முகம், கால், புற கை மினுமினுப்பாயிருக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்;– சாரணைக்காய், மூக்குரட்டைக்காய், பொடுதலைக்காய், திரிகடுகு, துளசி, சீரகம் ஒரு நிறையாய்த் தட்டிப் போட்டுக் குடிநீர் செய்துகொடுக்கத் தீரும்.

சுழி கணத்தின் இயல்பு

நளிர்சுரம், சுவாசங்காணும், கண் பஞ்சடையும், உச்சிகுழியும், நெஞ்சு எரியும்; உடல் நொந்து குழந்தை அலரும்.

சுழி மாந்த கணத்தின் இயல்பு (வேறு)

1. சுவாசம், இருமல் காணும்; முகம், மார்பு புடைத்துக் காணும்; வயிறு, ஈரல், நெஞ்சு, தொண்டை, நாவு வெந்து புண்ணாகும்; குழந்தை தாய்ப்பால் உண்ணாது, அலறியலறியழும்; கால், கை குளிரும்; வயிறு பொருமும்; சுரங்காயும்; கண் சொருகும்; நாவறளும்.

2. நெஞ்சில் கபங்கட்டி இருமல், இளைப்பு, மயக்கம் காணும்; மார்புகழியாய் வாங்கும்; வாயில் நுரை தள்ளும்; வாந்தி பண்ணும், சுரங்காயும்; குழியும்; முகம் மஞ்சள் போலிருக்கும்; நாவறளும்.

மருத்துவம்:– 1. செண்பகப்பூ, ஒரு வராகன் எடை, சாதிப்பத்திரி கோரோசனை வகைக்கு அரை வராகன் எடை பொடித்து ஒரு படி விளக்கெண்ணெய்யில் போட்டு கொதிக்க வைத்து முறையாக அளவுப்படி ஒரு காசு எடை கொடுக்கத் தீரும்.

2. உள்ளி, வசம்பு, உசிலம் பட்டை ஓர் நிறையாய்த் தட்டி நீரில் போட்டுக் குடிநீரில் செய்து கொடுக்கத் தீரும்.

3. இண்டு, கண்டங்கத்திரி, இம்பூரல், இவைகளின் வேர், கடுக்காய் (கொட்டை நீக்கியது) ஒரு நிறையாய்த் தட்டி காறபடி விளக்கெண்ணெய்யில் போட்டுச் சூரிய புடம் வைத்துக் கொடுக்க நீங்கும்.

4. குன்றிமணி, கிலுகிலுப்பை, முசுமுசுக்கை, துளசி, கூவிளை, (வில்வம்) இவைகளின் வேரைத் தட்டி விளக்கெண்ணெய்யில் போட்டுச் சூரிய புடம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

5. ஈருள்ளியும் சிவக்க வறுத்த தூரிசும் ஓர் எடையாய்த் தட்டிக் குடிநீர் செய்து வடித்ததில் இலுப்பைப் புண்ணாக்கைப் பொடித்துப் போட்டு வடிகட்டிக் கொடுக்கப்போகும்.

6. தூதுவேளை, துளசி, நுணா, சங்கு இண்டு, பொடுதலை, செம்முள்ளி, சீரகம், ஒரு நிறையாய் பசுவின் நெய்யில் வேகவைத்துக் கொடுக்கத் தீரும். குப்பை மேனிச் சாறும், உப்பும் கலந்து வேப்பெண்ணெய்யில் மத்தித்து மூன்று நாட்கள் கொடுக்கவும்.

7. கடுக்காய், காட்டு மல்லிகை, கற்றாழை, வெந்தயம், சீரசம், சாரணை, ஈருள்ளி, ஒரு நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

8. நுணா, சங்கு, இண்டு, பூண்டு, பொடுதலை, செய்முள்ளி இவைகளின் சாறும் நெய்யும் ஒன்றாய்க் கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்க நீங்கும்.

9. நந்தியாவட்டம், நாய்த்துளசி, சிவதை, காட்டு மல்லிகை, தூதுவேளை, இவைகளின் வேரை அரைத்து வகைக்குப் புன்னைக் காயளவு கண்டங்கத்திரி, தூதுவேளை, சின்னி மணத்தக்காளி, கொட்டைக்கரந்தை, குப்பைமேனி, கோழியவரை, சமனாயிடித்து பிழிந்தசாறு அரைப்படி ஒருபடி விளக்கெண்ணெயிற் கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒரு துட்டெடை கொடுக்கத் தீரும்.

10. கற்கடகசிங்கி, சீந்தில், சீரகம், வில்வஓடு, அதிவிடயம், கடுகுரோகணி, கண்டங்கத்திரி, முசுமுசுக்கை, முள்ளி, தூதுவேளை, திப்பிலி ஒருநிறையாய்த்தட்டித் தண்ணீரில்போட்டு, குடிநீர்செய்து கொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

குறிப்பு:– கோரோசனை, கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், குங்குமப் பூ, என்னும் சரக்குகளும் அதைப் போன்றவைகளும் தைலம், கிருதம், முதலானவைகளில் சேருமானால் தனியாய்ப் பொடித்து வடிகலத்தில் இட்டுக் கொள்க.

சூலைகண இயல்பு.

நெஞ்சு, வாய், தொண்டை, நாவுவெந்து புண்ணாகி, இருமல், சுவாசம், வயிற்றுப் பொருமல்கண்டு குழந்தை முலையுண்ணாது; முகம் நாறும்.

மருத்துவம்:– துளசி, நிலத்துளசி, கஞ்சாங்கோரை, மாசிப்பத்திரி, வில்வம், உள்ளி, இவைகளின் சாறு வகைக்கு அரைக்கால் படி, விளக்கெண்ணெய் ட படி, திரிகடுகு 2 வராகன் எடை அரைத்துப்போட்டு காய்ச்சிவடித்து வேளைக்கு இரண்டு வராகன் எடை வீதம் கொடுக்கத் தீரும்.

மகாகணத்தின் இயல்பு.

முகம், புறங்கால், புறங்கை மினுமினுக்கும்; விழிவெளுக்கும்; உடல் வெதும்பும்; நா, உதடு புண்ணாகும்; குழந்தை மயங்கும்.

மருத்துவம்:– சிறுகீரைவேர், விஷ்ணுகிரந்தி, கீழ்க்காய் நெல்லி, சிறுபீளை, வெதுப்படக்கி, சீந்தில், ஆடாதோடை, இவைகள் ஒருநிறையாய் நறுக்கிச் சட்டியில்போட்டு இளவறுப்பாய் வறுத்துத் தண்ணீர்விட்டுக் குடிநீர்செய்து கொடுக்கத்தீரும்.

பிரளிக்கணத்தின் இயல்பு.

வயிறு பொருமி ஏப்பமுண்டாகும்; உடல் புண்போல்நொந்து குழந்தை துடித்து ஏங்கி அழுது அலறும்; மாப்போல் மலங்கழியும்.

Koviloor Digital Library

மேற்படி வேறு:– மலங்கட்டி வயிறு பொருமி அடிக்கடி முக்கும்; குடலைப்பிரட்டி வலிக்கும்; முலையுண்ணாது; நாவுலரும்; மேல் மூச்சும் இளைப்பும் காணும்; முத்துப்போல மூக்கில் நீர் வடியும்; முகத்தில் மஞ்சள் மணக்கும்.

மருத்துவம்:– அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய் படி ஒன்றில் 4 பேய்த்துமட்டிக்காயும் 2 பிடி வெங்காயமும் அறிந்து போட்டுக் கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு 1/16 பலம் (மாகாணி), குரோசாணி ஓமம் 1/8 பலம் இவைகளைப் பொடித்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி ஒரு துட்டெடைகொடுக்கவும். பத்தியம்; நீர்க்கஞ்சி உட்கொள்ளவும்.

பிறக் கணத்தின் இயல்பு.

வயிறு பொருமும்; பசுமையாயும், தோய்ந்த தயிர்போலும் கழியும்; தூக்கமிகும்; பாலருந்தி கக்கல் (வாந்தி) பண்ணும்; சுரம் காயும்; விழி சொருகும்; குழந்தை கை, கால் சில்லென்றிருக்கும்; தலையைப் புரட்டும்.

மருத்துவம்:– வல்லாரை, கோழியவரை, கஞ்சாங்கோரை, சனகிப்பூடு (சீரா செங்கழுநீர்), வேளை, ஒற்றைப்பேய்மிரட்டி, இரட்டைப்பேய்மிரட்டி, தொடரி (புலித்தொடரி), சிறுபுள்ளடி இவைகளை ஓரளவாய் இடித்துப்பிழிந்தசாறு 1 படி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் காயம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், வசம்பு வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து மூன்று நாள் கொள்ளவும்.

வறட்சிக் கணத்தின் இயல்பு.

உடலெல்லாம் வெம்பும்; நெஞ்சு துடிக்கும்; குழந்தை புகைந்திருமும்; நாவு கருக்கும்; வயிறு எரியும்.

மேற்படி வேறு:– மூன்று வெடிப்பும் தோன்றும்; இருமல் சளியும் மிகுந்து தூக்க மயக்கம் காணும்; முகம் மஞ்சள் பூத்திருக்கும்; உடல் வற்றும்.

மருத்துவம்:– ஆமணக்கெண்ணெய் ஆவின் பால் வகைக்கு 1 படி, கீழ்க்காய் நெல்லிச்சாறு அரைக்கால் படி, அதிமதூரம், கடுக்காய், தான்றி, சுக்கு, விஷ்ணுகரந்தை, வோ்துளசி, தூதுவேளை வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்), இளநீர் விட்டரைத்துச் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சி இரவில் சோறுண்டபின் ஒரு கரண்டி எண்ணெய்உண்டு உறங்கக் காலையில் வயிறு கழியும். அதுபோல் மேற்படி எண்ணெயைக் காசெடைவீதம் இரவில்மட்டும் சாப்பிட்டுவர வறட்கணம் நீங்கும்.

முள்ளிவோ், செவ்வள்ளிக்கிழங்கு, தண்ணீர்விட்டான், முசுமுசுக்கை, தூதுவேளை, கண்டங்கத்திரி, கருஞ்சீரகம், திருகுக் கள்ளிவோ், மணத்தக்காளி, பூண்டு, வசம்பு வகைக்கு 1 வராகன் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச மேற்படி நோய் தீரும்.

கொதிப்புக் கணத்தின் இயல்பு

நெஞ்சும் விலாவும் கொதிக்கும்; நெற்றி வியர்க்கும்; பஞ்சுபோல் கண் வெளுக்கும்; இருமல், தலைவலி காணும்; குழந்தை குரல் கம்மும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– ஆமணக்கெண்ணெய், எலுமிச்சம்பழம், இலந்தை, ஈருள்ளி வகைக்குச்சாறு ¼ படி, கருஞ்சீரகம் ¼ பலம், கற்றாழஞ்சாறு 1 பலம் யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கற்றாழஞ்சோறு 1 பலம் யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கற்றாஞ்சோறு சிவந்த பதத்தில் வடித்துக் காலை மாலை கால் கரண்டிவீதம் கொள்ளவும், பதினெண்வகை என்புசுரம், என்பவெட்டை, மேகசுரம், பித்தவெட்டை தீரும். சிறுவர்க்கும் பெரியோருக்கும் உபயோகப்படும்.

அந்தகக் கணத்தின் இயல்பு.

மூளையில் கனலேறி உடல் வெதும்பும்; நாவுலரும்; விழிவெளுக்கும்; முகம் மஞ்சள் நிறமாய் மினுக்கும்.

மருத்துவம்:– சிறுகீரை, நாணி (நாணாங்கள்ளி), பூலா (வறள் பூலா), அவுரி இவைகளின்வேர், தேற்றான்விதை, கடுக்காய் வகைக்கு 1 பலம் (35 கிராம்) அரைத்து ஆவின் வெண்ணெயில் வேகவைத்து வடித்து மூன்றுநாள் கொடுத்து மேற்படி மருந்துகளை தாய்ப்பாலில் அரைத்துத் தலையில் பூசிவரத் தீரும்.

மந்தாரக் கணத்தின் இயல்பு

வயிறு ஊதி, சுரம், மயக்கம், மூச்சுவாங்கல் காணும்.

மருத்துவம்:– நாயுருவி, கரிசலாங்கண்ணி, வல்லாரை, கவுதும்பை, கண்டங்கத்திரி, நொச்சி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, விளக்கெண்ணெய், 1 படி, வெள்ளுள்ளி, திரிகடுகு, திரிபலை, வகைக்கு 1 பலம், இலவங்கப்பூ, வசம்பு வகைக்கு 2 வராகன் எடை பொடித்துப்போட்டுச் சிவந்தபதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

எரிகணத்தின் இயல்பு

உடலாதியந்தமும் எரியும்; வாய்வழி சுவாசம் போகும்; வாய் நீர் வடியும்; குழந்தை அலறி அழும்; உறக்கம் கொள்ளாது.

மருத்துவம்:– தென்னங்குரும்பை, தகரை, வகைக்குச் சாறு ¼ படி, பழம்பாசி, குமரி, மஞ்சணத்தி (நுணா), ஈருள்ளி இவைகளின் சாறு விளக்கெண்ணெய் வகைக்கு அரைப்படி, இலவங்கப்பட்டை கோட்டம், நற்சீரகம், சந்தனம், அதிமதுரம் வகைக்கு அரைக்கழஞ்சு பொடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சி ஒரு காசெடை கொள்ளத்தீரும். மற்ற கணங்களும் தீரும். இச்சாபத்தியம்.

ஆமக்கணத்தின் இயல்பு (இதுவே சீதகணம்)

சாமந்தோறும் உடல் வெதுப்பி நாளுக்குநாள் தேகம் வற்றும்; தாகம் மிகும்; பசி மந்திக்கும்; வயிறு பொருமி இரைந்து கழியும், சுவாசம் மிகும்; கால் குளிரும்; குழந்தை கண்விழியாது; அலறித் திடுக்கிட்டெழுந்து சீறி அழும்; மூக்கு உயரும்; புருவம் சுழிக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– 1. இண்டம் வேர்த்தண்டுச்சாறு 1 படி; குமிழ், மாசிப்பத்திரி, புங்கு நிலத்துளசி, உள்ளி, முடக்கொத்தான், தூதுளை, நுணா, வல்லாரை, கஞ்சாங்கோரை இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி ஒன்றாய் கலந்து அதில் சாதிக்காய், ஏலம், கிராம்பு, கடுகுரோகணி, கடுக்காய், வால்மிளகு, ஓமம், வசம்பு, சுக்கு வகைக்கு 1 பலம் வறுத்துப் பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் ஐந்து நாள் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

2. வேலிப்பருத்தி, கோழியவரை, கிளுவை, பொடுதலை கள்ளி, சிவதை இவைகளின் வேர் வெளிச்சிப்பிசின், (விளாம்பிசின்) வசம்பு, உள்ளி, கடுகுரோகணி, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கொரு கழஞ்சுதட்டி ஆமணக்கெண்ணெயும் வெள்ளாட்டுப் பாலும் வகைக்கு ½ படி வீதம் ஒன்றாய்க்கலந்து அதில் போட்டுக் காய்ச்சி வடித்து முலைக்காம்பில் தடவிக் குழந்தைக்குப் பால் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

நீராமக் கணத்தின் இயல்பு

தண்ணீரும் சீதமுமாய்ப் பச்சை மஞ்சள்போலக் குழந்தை கழியும்; கண்ணில் நீரும் பீளையும் வடியும்; மயக்கமும் கடுப்பும் காணும்.

மருத்துவம்:– எலுமிச்சங்காய் அளவு ஆவின் நெய்யைச் சட்டியில் உருக்கி மணத்தக்காளியைக் கொட்டைப் பாக்களவு அரைத்துப் போட்டெரித்துப் பதத்தில் இறக்கி ஒரு காசளவு ஐந்துநாள் கொடுக்கத்தீரும். பெரிய பிள்ளைகட்கொரு துட்டெடை கொடுக்கவும்.

பேராமக்கண நோயின் இயல்பு.

கை, கால் குளிரும்; வளையமாகும்; சுரங்காயும்; குழந்தை வாந்தி பண்ணும்; திடுக்கிட்டு ஏங்கும்; வயிறு பொருமிகழியும்; சோரும், முலையுண்ணாது; சீறி வெருவிப்பாயும். (வெருவி=அஞ்சி)

மருத்துவம்:– தும்பை, பொடுதலை, கொழுஞ்சி, இவைகளின் வேர், திப்பிலி, சீரகம், ஓமம், இந்துப்பு ஒருநிறையாய் ஒரு படி பசும் மோரில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சிக்கொடுக்க வாயு பேராமக் கணம் தீரும்.

முக்குக் கணத்தின் இயல்பு.

குழந்தை அடிக்கடி வாந்திபண்ணும்; முலை உண்ணாது; சோரும்; மலத்தில் இரத்தமும் விழும்; நாக்கு வேகும்; சுரம், தலைவலி, நடுக்கம், கக்கல், நாவறட்சி, தாகம் காணும்; சந்துப் பொருத்துகள் உளையும்; முக்கில் சீதமும் மலமுமாய்க் கழியும்; ஆசனவாய் கடுத்துத் தீப்போலெரியும்; அடிதள்ளும்; மேனி கறுத்துவற்றும்.

மருத்துவம்:– 1 குமரிச்சாறு, முலைப்பால் வகைக்கு ¼ படி, எலுமிச்சம் பழச்சாறு அரைக்கால் படி, விளக்கெண்ணெய் 1 படி, வில்வம், விலாமிச்சு, விஷ்ணுகாந்தி, முத்தக்காசு, ஓரிலைத்தாமரை, முருங்கைவித்து, துளசிவித்து, கோங்கிலவம் பிசின், ஆவாரைப் பிசின், கோட்டம், அதிமதூரம்.

Koviloor Digital Library

அக்கிராகாரம், தாளிசப்பத்திரி வகைக்கொரு பலம் வறுத்திடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு துட்டெடைவீதம் மூன்றுநாள் காலையில் கொடுத்து மாலையில் இண்டந்தண்டைக் கண்டங்கண்டமாய் நறுக்கி ஊதிக் கால்படி தண்ணீர்வாங்கி அதில் சீரகத்தைப்பொடித்துப் போட்டு வற்றவைத்து மூன்றுநாள் கொடுக்கத்தீரும். இச்சாபத்தியம்.

2. ஏழு தடவை கழுவின கற்றாழஞ்சோறு, வெந்தயம், எலுமிச்சம்பழச்சாறு ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கொடுக்கத்தீரும்.

மூலக் கணத்தின் இயல்பு.

வாதபித்தம் அதிகரித்து குழந்தை சீத இரத்தமாய்க் கழியும்; ஆசனம் கடுத்து உளையும்; காய்ச்சல், வயிற்றிரைச்சல், விடாத் தலைவலி காணும்; முகம் கருகும்; சிவக்கும், அடிதள்ளும்.

மருத்துவம்:– 1. சீரகம், அதிவிடையம், கடுக்காய், சுக்கு, பறங்கிப்பட்டை, கசகசா, சந்தனத்தூள், சாதிப்பத்திரி, நெல்லி வற்றல், சிற்றாமுட்டி, செம்பருத்தி, வில்வம், விலாமிச்சு இவைகளின் வேர் வகைக்கு 1 பலம், கற்கண்டு 2 பலம் பொடித்து 5 பலம் பசும் நெய்யில்போட்டு இளகஞ்செய்து பாக்களவு ஏழு நாள் கொடுக்க நீங்கும்.

2. பழம்பாசி சமூலம், வெள்ளாட்டுப் பாலில் போட்டுக் காய்ச்சி வெந்தபின்வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கத் தீரும்.

3. அதிமதுரம், சீரகம், ஏலம், பெருமரத்துப்பட்டை இவைகளைச் சமநிறையாய்க் கருவேலம்பட்டை கியாழத்தில் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொடுக்கத் தீரும். இம் மூன்றுக்கும் இச்சாபத்தியம்.

கணங்களுக்குப் பொது மருந்து.

1. கல்நார், கிராம்பு, இலவங்கப்பத்திரி, செவ்வியம், (மிளகு வேர், மிளகுக்கொடி என்பர்) திப்பிலி, அதிவிடையம், தாளிசபத்திரி, கருஞ்சீரகம், அக்கிராகாரம், கடுகுரோகணி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கற்கடகசிங்கி (கடுக்காய்ப்பூ), குரோசாணி ஓமம், கஸ்தூரி, பூரம், சீரகம், கோரோசனை, குங்குமப்பூ இவைகளை ஒரு நிறையாய்க் கல்வத்திலிட்டு இஞ்சி, கையாந்தகரை இவைகளின் சாற்றால் வகைக்கொரு சாமமும் நாரத்தங்கனிச் சாற்றால் மூன்று சாமமும் அரைத்து பயறளவாய் உருண்டைசெய்து தாய்ப்பாலில் கொடுக்க எட்டு வகை நீர்ப்புகள், பறவைத் தோடம், நளிர்சுரம், கழிச்சல், இருமல், ஈளை, காசம் எட்டும், கண மாந்தமும் நீங்கும்.

2. சாத்திரபேதி, கோட்டம், ஏலம், இலவங்கம், சந்தனம், கடுகுரோகணி, இலுப்பைப்பூ, நன்னாரி, விலாமிச்சு, வெட்டி வேர், திப்பிலி, அதிமதுரம், முத்தக்காசு, கொடிமுந்திரிப்பழம், பேரிச்சம்பழம் ஒரு நிறையாய் கரிப்பான் சாற்றாலரைத்துக் கடலை அளவு உருண்டைசெய்து முலைப்பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்க எண்வகை கணங்கள், மாந்தசுரம், தாகம் தீரும்.

3. சந்தனம், நன்னாரி, புளியவிதைத்தோல், சாத்திரபேதி, கோரைக்கிழங்கு, ஓரிலைத்தாமரை, சிறுகீரை, நாயுருவி, வல்லாரை, சாதிக்காய்,

Koviloor Digital Library

சாதிப்பத்திரி, சண்பகப்பூ, கல்நார், திப்பிலி, இருவாட்சி, கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை உத்திராட்சம், கோரோசனை, பொன்னாங்காணி, குப்பைமேனி, கலைக்கொம்பு (மான்கொம்பு); இவைகளின் மூலிகைகளுடைய வேர்த்தோல்களும் கடைச்சரக்குகளும் ஒரு நிறையாய்க் கல்வத்தில் இட்டு வல்லாரைச் சாற்றாலும், பொன்னாங்காணிச் சாற்றாலும் மைபோலாட்டி தேற்றான்விதையளவு உருண்டைசெய்து முலைப்பாலிலாவது வெந்நீரிலாவது கொடுக்க எண்வகை கணங்களும் தீரும்.

4. விளக்கெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கிளுவைப்பட்டை, கருவேலம்பட்டை, ஈருள்ளி, இண்டங்கொழுந்து வகைக்கொருபடி, சீரகம் 1 பலம், காசுக்கட்டி 1 பலம் தட்டிப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி ஒரு கரண்டிவீதம் கொடுக்க எண்வகை கணமாந்த தோடம் தீரும்.

5. வல்லாரை 9 பலம், எட்டுப்படி தண்ணீரில்போட்டு ஒரு படியாய் வற்றவைத்து சுக்கு, ஏலம், கலைக்கொம்பு, சாதிக்காய், தாளிசப்பத்திரி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நற்சீரகம், தான்றி, தக்கோலம், பொரிகாரம், (பொரித்த வெங்காரம்) சண்பகப்பூ, குங்குமப்பூ, கத்தூரி மஞ்சள், இம்பூரல்வேர், தக்கோலம், மல்லி, கடுகுரோகணி வகைக்கு 1 வராகன் எடை, ஆவின் பாலில் ஆட்டிக் கியாழத்தில் கரைத்து ஆவின் நெய் 1 படி கூடவிட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கரண்டிநிறை கொடுத்துவர மாந்தம், போர்மாந்தம், மேகம், சுவாசம், நச்சுநோய், ஈளை, இருமல், சுவாசகாசம், இளைப்பு, மூலகண்டம், உட்சுரம், அட்டகணம் தீரும்.

6. ஏழுமுறை கழுவின கற்றாழஞ்சோறு ஒரு தேங்காய் அளவு வெந்தயம் ஒரு துட்டெடை, ஈருள்ளி, 1 பலம் இவைகளை ஒரு படி விளக்கெண்ணெயில்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டிவீதம் கொடுக்க 18 வகை கணம், வெட்டைச் சுரம் தீரும்.

7. இண்டு தூதுவேளை, சங்கங்குப்பி, வேலிப்பருத்தி, பூவரசு, குப்பைமேனி, ஆடாதோடை, சாரணை, பூலா, நரிப்பயற்றங்கொடி, பிரமி, தைவேளை, கற்றாழை இவைகளின் வேர்களை இடித்து பிழிந்தசாறு 1 படி, விளக்கெண்ணெய் 2 படி, கருஞ்சீரகம், ஓமம், பூண்டு, கோரோசனை, செண்பகப்பூ, வசம்பு, சாதிக்காய், தான்றிக்காய் வகைக்கு அரைப் பலம் அரைத்துக் கலந்து பதமாய்க்காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொடுக்க மாந்தம், தோடகணம், தேகத்துக் கணமும் தீரும்.

8. இம்பூரல், சிறுகீரை, முசுமுசுக்கை, கோவை, எலிச்செவி (எலிக்காதிலை), குரும்பை, காணி, இண்டு, குப்பைமேனி, அவுரி, பொடுதலை, ஆடாதோடா, வல்லாரை, துளசி, குதிரைவாலி, தூது வேளை, கோழியவரை, கொன்றை, கரிப்பான், முருங்கையிலை, மேற்படிபட்டை, விஷ்ணுகரந்தை, ஓரிலைத்தாமரை, பற்பாடகம், நிம்பவேம்பு, ஆனைநெரிஞ்சி, நரிப்பயறு, ஈருள்ளி, நறுவிலியிலை இவைகளின் சாறு வகைக்கு 1/16 படி (மாகாணி), விளக்கெண்ணெய் 1 படி, சுக்கு, செவ்வியம், பேரரத்தை, சித்திரமூலம், சிறுதேக்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கருஞ்சீரகம், ஏலம், சண்பகப்பூ, சீரகம்,

Koviloor Digital Library

கிராம்பு, கோட்டம், உள்ளி, கோரோசனை, காசுக்கட்டி, தம்பிப் பிசின் (வேலன்பிசின்) வகைக்கு 1 கழஞ்சு (1 ¼ வராகன் எடை) இவைகளை அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சிப் பத்தியமாய்க் கொள்ள அச்சரங்கள், சுரம், கணம் 18–ம் நீங்கும்.

9. மாதுளம் சமூலம் அரைத்தது ஒரு எலுமிச்சங்காய் அளவு, சீந்தில் சர்க்கரை ஒரு எலுமிச்சங்காய் அளவு, ஆவின் வெண்ணெய் நாலு எலுமிச்சங்காய் அளவு; சாதிக்காய், சாபத்திரி, ஏலம் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப்போட்டு மெழுகுப்பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கச் சகல கணங்கள், தோடம் வயிற்றிரைச்சல் தீரும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

10. பொன்னாங்காணி, துளசி, தகரை, கீழ்க்காய்நெல்லி, வெண்ணொச்சி, நாயுருவி, அம்மான்பச்சரிசி, கருநொச்சி இவைகளின் இலை, ஓரிலைத்தாமரை, புளியாரை, வல்லாரை, சிறுபுள்ளடி, நரிபயற்றங்கொடி, இண்டந்தண்டு, முசுமுசுக்கை, அகத்திப் பழுப்பு சீந்திற்கொடி, ஆடாதோடை, ஆடுதின்னாப்பாளை, விஷ்ணுகரந்தை, முட்காவேளை இவைகளின் கொழுந்து; ஆவாரை, விடத்தலை, நிலக்குமிழ், சிறுகீரை, வில்வம், உத்தாமணி, மிளகுதக்காளி, தைவேளை, சங்கு, கண்டங்கத்திரி, நாய்வேளை, குட்டிவிளா, சங்கங்குப்பி இவைகளின்வேர் வகைக்கொரு பிடி; வேர் வகைகளை நறுக்கிக் குடிநீர்செய்து கொண்டு கொழுந்து வகைகளைச் சாறுவாங்கி ஒரு படி விளக்கெண்ணெயில் கலந்து அதில் ஆமையோடு, ஓமம், கடல்நுரை, சீரகம், திப்பிலி, கடுகுரோகணி, கிராம்பு, கருஞ்சீரகம், பற்பாடகம், பூவந்திப்பழம், வசம்பு, பெருங்காயம், கத்தரிப்பட்டை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை மைபோலரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் காலை மாலை துட்டெடை பத்து நாளைக்கு ஒவ்வொரு வேளை புளி, இறைச்சி, கரப்பான் பண்டங்களைத் தள்ளிக்கொடுக்க சகல கணங்களும் தீரும்.

11. நீர்முள்ளி, ஈருள்ளி, திரிபலை, சங்கம்வேர், ஒரு நிறையாய் ஒரு படி மோரில்போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து இரும்புப் பாத்திரத்தில் ஊற்றி வைத்துக் கொண்டு ஒரு சங்கு இரண்டு தினங்கள் கொடுக்கத் தீராத கணமும் தீரும்.

12. செப்புநெருஞ்சில், சிறுபுள்ளடி, சிறுஅம்மான் பச்சரிசி, தகரைவேர், நரிப்பயற்றங்கொடி, அகத்திப்பட்டை, வெங்காயம் வகைக்குக் கழற்சிக்காய் அளவு அரைத்து அரைக்காற்படி விளக்கெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து ஒரு துட்டெடைகொடுக்கச் சகல கணங்களும்தீரும்.

கணத்தினால் இரத்தம் விழுதலுக்கு மருந்து.

நிலக்குமிழ், எருக்கு, விஷ்ணுகரந்தை, ஆவாரை, கொன்றை, இவைகளின் வேர்ப்பட்டை, கணப்பூண்டு, அம்மான் பச்சரிசி, வகைக்கு 1 பலம் மெழுகு போலரைத்து ஒருபடி விளக்கெண்ணெயில்கலந்து பதமாய்க்காய்ச்சி வடித்ததில் ஏலம், அதிமதுரம், சீரகம் வகைக்கு 1 பலம் வறுத்துப்பொடித்துப்போட்டு வேளைக்கு ஒரு காசெடை முலைப்பாலில் கலந்து மூன்று நாள் கொடுக்கத் தீரும் இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

கணச்சூடு தணிய மருந்து.

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, வல்லாரைச்சாறு அரைப்படி, வெந்தயம் 2 பலம், பசுவின் பால் விட்டரைத்துக் கலக்கி பதமாய்க் காய்ச்சி வடித்துச் சர்க்கரை கலந்து கொடுக்கத் தீரும்.

கணஇருமல், வாய்நாற்றத்திற்கு மருந்து.

மணத்தக்காளி ஒரு பிடி, வெந்தயம் 1 பலம், ஈருள்ளி மூன்று, ஏலம் ஒரு துட்டெடை, பொன்னிறமாய் வறுத்து இரண்டு படி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி மூன்று வேளைகொடுக்கத் தீரும்.

மாந்தகணம் பொருமல், இருமல் கபத்திற்கு மருந்து.

தூதுவேளை, நாயுருவி கரிப்பான், (கரிசலாங்கண்ணி) வல்லாரை, தும்பை, நொச்சி, கண்டங்கத்திரி வகைக்கு ¼ படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகு, திரிபலை, வெள்ளுள்ளி, வசம்பு வகைக்கு 2 வராகன் எடைவீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி கொடுக்கத் தீரும்.

பொருமல், மாந்த கணத்திற்கு மருந்து.

1. துளசி, செம்முள்ளி, தும்பை, கஞ்சாங்கோரை, தைவேளை இவைகளின் இலை, நற்சீரகம் ஒரு நிறையாய் வெதுப்பிச்சாறுபிழிந்து கொடுக்கத்தீரும்.

2. சாரணை வேர்ப்பட்டை, தேசாவரம் (கண்டந்திப்பிலி) ஒரு நிறையாய்க் குடிநீர் செய்துகொடுக்கத் தீரும்.

கணமாந்தம், வயிற்றுளைவு, பொருமலுக்குப் பாலசஞ்சீவி மாத்திரை.

வெள்ளைத் துத்தம், வெண்காரம், கோரோசனை, கொழிஞ்சி, கடுகுரோகணி, வகைக்கு 3 கழஞ்சு; அகத்தியிலைச் சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்துச் சிறுபயறு போலுருண்டை செய்து வெந்நீரிலாவதுக் முலைப்பாலிலாவது ஒரு உருண்டை கொடுக்கத் தீரும்.

தொக்கத்துக் கணமாந்தம், போர் மாந்தத்திற்கு மருந்து.

1. வசம்பு, ஓமம், வெள்ளுள்ளி, காயம், வகைக்கு ¼ பலம் தூள்செய்து அரைப்படி வேப்பெண்ணெயில் போட்டு ஒரு நாழிகை கொதிக்க வைத்து ஆறு நாள் பரிதிப்புடம் (ரவிப்புடம்) வைத்துக் குழந்தைகள் நிதானங்கண்டு கொடுக்கத் தீரும்.

2. வேப்பெண்ணெய் அரைப் படி, வேலிப்பருத்தி, குப்பைமேனி, வெள்ளெருக்கம் பழுப்பு இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, வெள்ளெருக்கு,

Koviloor Digital Library

நொச்சி, முருங்கை, இவைகளின் பட்டை வகைக்கொருபிடி, ஒருதலைப்பூண்டு 1 பலம், வசம்பு, அரத்தை 1 வராகன் எடை இவைகளைத் தட்டி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கரண்டி வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

வீக்ககணத்துக்கு மருந்து.

உள்ளி, வசம்பு, ஓமம், அதிமதுரம், கோட்டம், கிராம்பு, சுக்கு, மிளகு, ஏலம், கூத்தங்குதம்பைவேர் வகைக்கு 1 வராகன் எடை பொடித்து விளக்கெண்ணெயில் போட்டுப் பரிதிப் புடம் வைத்துச் சிறு கரண்டி வீதம் கொள்ளத் தீரும்.

கணகடுப்புக்கு மருந்து.

ஆமணக்கெண்ணெயும் நிம்பச்சாறும் சமன்கலந்து அதில் வெந்தயத்தை அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

இரத்தக்கடுப்பு, அடிபுறப்பட்டதற்கு மருந்து.

1. கச்சந்திறாய்வேர், பொன்னாங்காணிவேர், சாரணைவேர், துத்திவேர், வகைக்கு 1 வராகன் எடை பூண்டுத் தைலம் விட்டரைத்துக் கொட்டைப் பாக்களவு கொடுக்கத் தீரும்.

2. ஒரு படி ஆவின் பாலில் ஒரு பலம் வெந்தயம் போட்டு வேகவைத்திறக்கி வெல்லமும் நெய்யும் விட்டுக்கிண்டி காலை மாலை கொடுக்க நீங்கும்.

இரத்தம், சீதக்கடுப்பு, பலவிதக்கழிச்சலுக்கு மருந்து.

எருக்கம்பட்டை, ஈருள்ளி, பருத்திப்பிஞ்சு இவைகளை ஓரளவாய்ச் சாறுப்பிழிந்து அதிமதுரம், குப்பைக்கீரைவேர், வெள்ளைக் கருடன்கிழங்கு, மாதுளைப்பிஞ்சு, சீரகம், இவைகளைச் சமனாய் அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

இரத்தம், சீதக்கடுப்பு, நீர்ச்சுருக்குக்கு மருந்து.

இளந்தென்னம் பூவை இடித்துப் பிழிந்தசாறு, தயிர் வகைக்கு 1/8 படி, எலுமிச்சம் பழச்சாறு ஒரு பலம் ஒன்றாய்க் கலந்து புளி தள்ளி மூன்று நாள் காலை மாலை உட்கொள்ள நீங்கும்.

கிராணிக் கடுப்புக்கு மருந்து.

1. எலுமிச்சம் பழச்சாற்றில் வெந்தயத்தை வேகவைத்து உண்ண நீங்கும்.

2. கோரோசனை, சண்பகப்பூ, கோட்டம், வெட்டிவேர், ஏலம், அதிமதுரம், சாத்திரபேதி, மாசிப்பச்சை, தான்றிக்காய், வகைக்கு ¼ வராகன் எடை வெட்டிவேர்கியாழத்திலும் முலைப்பாலிலும் அரைத்து உருண்டை செய்து

Koviloor Digital Library

மேற்படி பாலில் கொடுக்க மேற்படி கடுப்புமாந்தம், சன்னிக்கழிச்சல், பிரளி, குடற்புரட்டடல், வாதபித்தசுரம், உட்டிணம் நீங்கும். இதன் பேர் அமிர்தாதியுருண்டை.

ஆமக்கடுப்புக்கு மருந்து.

பருத்திவிரைப்பருப்பு, சாதிக்காய், நன்னாரிவேர், வட்டத்திருப்பி, சீரகம், கிராம்பு, ஒரு நிறையாய் அரைத்துச் சிறுபுள்ளடிச் சாற்றில் கலக்கிக் கொதிக்க வைத்துக் கொடுக்கத் தீரும்.

இரத்தக்கடுப்புக்கு மருந்து.

விளாம்பிசினும் உள்ளியும், அரைத்துத் தயிரில் கொடுக்க நீங்கும்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, கிராம்பு, மல்லி, கோட்டம், கோரோசனை, சண்பகப்பூ, கார்கோலரிசி, அதிமதுரம், சீரகம், இலவங்கப்பத்திரி, செங்கழுநீர்க்கிழங்கு, ஏலம், வகைக்கு ¼ பலம், விளக்கெண்ணெய் 18 பலம், ஆவின் நெய் 10 பலம், நல்லெண்ணெய் 3 பலம் முருங்கையிலைச் சாறு 16 பலம் மேற்படி மருந்துகளை அரைத்து ஒன்றாய்க் கலந்துக் காய்ச்சி வடித்து ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்க உதிரகணமும் இரத்தக்கடுப்பும் தீரும்.

சீழ்மூலத்திற்கு மருந்து.

செந்நாயுருவியிலை ஒரு பிடி, நல்லெண்ணை ¼ படி கற்றாழஞ்சோறு, சருக்கரை இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் கொடுக்க நிற்கும்.

இரத்தமூலம் வறட்கண ஊதுமாந்தத்திற்கு மருந்து.

சாதிக்காய், மாசிக்காய், கிராம்பு, கோரோசனை, சீரகம், பூதிக்காய், (பூந்திக்கொட்டை) திப்பிலி இவைகளை ஒரு நிறையாய் முலைப்பால் விட்டரைத்து மிளகு அளவு உருண்டை செய்து உலர்த்தி மேற்படி பாலில் கொடுக்க நீங்கும்.

அடித் தள்ளினதற்கு மருந்து.

1. கரிசலாங்கண்ணியும் பழம் புளியும் ஓர் எடையாய் அரைத்துப் புன்னைக்காய் அளவு எட்டு நாள் கொடுக்கத் தீரும்.

2. தூய்மைசெய்த கெஞ்சா 1 துட்டெடை (21 மிளகு), 21 பூண்டு அரைத்துக் குன்றிபோல் உருட்டிப் பருத்தியிலைச்சாற்றிலாவது மாதுளம்பிஞ்சுச் சாற்றிலாவது இடத்தீரும்.

3. ஒருதலை வெள்ளைப்பூண்டு, வசம்பு, வகைக்கு 3 வராகன் எடை வீழி, பொடுதலை, சிறுபுள்ளடி, வகைக்கொருபிடிதட்டிக் கால்படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மூன்று போது கரண்டி வீதம்கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

4. இஞ்சியை மேற்றோல் சீவித் துவாரமிட்டு அதில் ஒரு வராகன் எடை பெருங்காயத்தைப் பொதிந்து மூடி நூல்கட்டித் தயிரில் வேகவைத்து எடுத்தரைத்து வேறே தயிரில் கொடுக்கத் தீரும்; இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

முக்கல் வயிற்றுக்கடுப்பின் இயல்பு.

முக்கலுடன் அபானங்கடுத்து சீதரத்தமும்விழும்; தாதுவற்றும் தாகங்காணும்; அனனம் செல்லாது.

மருததுவம்:– பருத்திப்பிஞசு, சாதிககாய், கிராமபு, அதிவிடையம், அரத்தை, அசமதாகம், இலந்தை, தமபலம் ஒரு நிறையாய் அரைத்துக் கட்டித் தயிரில் கலந்துண்ணத் தீரும்.

2. ஒரு படி விளக்கெண்ணெயில் வெந்தயம், நிலக்குமிழ், வேப்பட்டை வகைக்கு ஓர் பலம் அரைத்துபபோட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க உறுப்பு மூலக்கடுப்பு நீங்கும்.

3. புழுங்கலரிசி, வெல்லம், கவுதும்பை, வகைககொரு நாரததங்காய் அளவு அரைத்து நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்று நாள் சாப்பிட கடுப்புக் கிராணி, முக்கல் நீங்கும்.

4. ஒரு சிரங்கை எருமைத்தயிரில் ஒருகாசெடை வருடம் சென்ற அவரையிலைச்சாறாவது அல்லது மிளகு தக்காளியிலைச் சாறாவது பிழிந்துகொடுக்க நீங்கும்.

5. பசுவின்பாலில் பருத்திப் பிஞ்சும் சீரகமும் அரைத்துக் கொடுக்க நீங்கும்.

6. ஒதியம்பட்டையைப் பசும்பாலில் அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

7. ஆல், அத்தி, ஆவாரை, விடத்தலை, கருவேல், நாவல் இவைகளின் பட்டையும் கொழுநதும் தென்னமொககும் ஒருநிறையாயக் கியாழம் வைத்துச் சீரகம், அதிவிடையம், மாசிக்காய், கிராமபு, சாதிக்காய், இவைகளை இளவறுப்புச்செய்து விளாம்பிசினில் கூட்டிப்பொடித்துக் கியாழத்தில் போட்டுக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபததியம்.

மூலரத்தகணம், நச்சுக்கணம், மாந்தத்திற்கு எண்ணெய்.

விளக்கெணணெய் 1 படி, கறறாழை, எலுமிச்சம்பழம் ஈருள்ளி இவைகளின சாறு வகைககு ¼ படி, ஆவின் நெய் அரைப்படி, ஒனறாயக் கலநததில் கோட்டம், அதிமதுரம், சணபகப்பூ, ஏலம, சன்னலவங்கப்பட்டை வகைக்கு ¼ பலம், வெந்தயம் 1 பலம் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி நிறையக் கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

இரத்த கணத்தின் இயல்பு.

குழந்தை அடிக்கடி இருமும்; கழிச்சல், இரத்தக்கடுப்புக் காணும்; இடுப்பும் தொடையும் உளையும்; சுரம் காயும்; தாகிக்கும்; நாடியயரும்; உடல் வாடும்; அன்னம் செல்லாது.

மருத்துவம்:– 1. வில்வவேர், கருவேலங்கொழுந்து, கிராம்பு, நிம்பவிதை, நற்சீரகம்பூ, ஆவாரம், ஏலரிசி, சாதிப்பத்திரி, சாதிக்காய், ஓரளவாய்க்கூட்டி அரைத்துச் சிறு கொட்டைப் பாக்களவு தாய்ப்பாலில் கொடுக்க இரத்தகணம் மூலகணம், பெருங்கழிச்சல் நீங்கும்.

2. செங்கழுநீர்க்கிழங்கு, சீரகம், ஏலம், சண்பகப்பூ, அதிமதுரம் கோட்டம், கோரோசனை, செண்பகப்பூ, கார்கோலரிசி, அதிமதுரம் இலவங்கப்பத்திரி, சீரகம் செங்கழுநீர், ஏலம் வகைக்கு ¼ பலம் பசுவின் வெண்ணெய் 3 பலம், நல்லெண்ணெய் 3 பலம், முருங்கையிலைச்சாறு 16 பலம் இவைகளை ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய் வடித்து ஒரு பலம் வீதம் மூன்று நாள் கொள்ள நீங்கும்.

3. விளக்கெண்ணெய் ¼ படி, கழுவினகற்றாழஞ்சோறு ஒரு விளாங்காய் அளவு, 2 பேய்க்குமட்டிக்காய், ஈருள்ளி 2 பலம் இவைகளைத் தட்டிப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து வாரத்தில் இரண்டு விசை ஒரு துட்டெடை கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

சுழிகணம், வறட்கணம், ஊதுமாந்தகணம், இரத்தகணம் ஆகிய நோய்க்கு எண்ணெய்.

செப்புநெருஞ்சில், தகரை, பழம்பாசி (நிலத்துத்தி), ஓரிலைத்தாமரை, நன்னாரி, சங்கு, நொச்சி, சாரணை, ஆடாதோடை, சிறுவழுதலை, இம்பூரல், பற்பாடகம், கற்றாழை, நாயுருவி, சங்கங்குப்பி வேலிப்பருத்தி, சீரகம், செங்கழு நீர், மூக்குரட்டி, சிற்றாமுட்டி, தூதுவேளை, கண்டங்கத்திரி, மிளகுதக்காளி இவைகளின் வேர் வகைக்கு ¼ பலம்; மிளகுதக்காளி, வல்லாரை, கரிப்பான், துளசி, செம்முள்ளி, வில்வப்பத்திரி, அகத்தி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கு, விஷ்ணுகரந்தை, கருவேல், தகரை, வெதுப்படக்கி, பேய்மருட்டி இவைகளின் சாறு வகைக்கு 1/16 படி (மாகாணி), திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகணி, வசம்பு, சீரகம், மாசிக்காய், அரத்தை வகைக்கு 3 வராகன் எடை; திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், தேசாவரம் (கண்டந்திப்பிலி), ஓமம், கருஞ்சீரகம், கடுக்காய், கிராம்பு, சாதிக்காய், வகைக்கு ஒரு வராகன் எடை, பூண்டு 5 வராகன் எடை, ஈருள்ளி 2 பலம், இவைகளை எல்லாம் அரைத்து ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு மேற்படி சாறு வகைகளையும் கலந்து பதமாய்க் காய்ச்சிக் கொண்டு மாதமொன்றுக்கு மூன்று வேளை கொடுத்து உப்பு, புளி தள்ளிக் கடும் பத்தியமாயிருக்க நீங்கும்.

Koviloor Digital Library

சகலகணம் பிரளிக்குச் சஞ்சீவி எண்ணெய்.

விளக்கெண்ணெய் 1 படி, அவுரி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான், தும்பை, கவுதும்பை, சடைச்சி, பெருந்தம்பை, கிரந்தி நாயகம், செம்முள்ளி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி; புளியம் பிரண்டைக்கிழங்கு, கொல்லன்கோவைக் கிழங்கு (கருடன் கிழங்கு), பலபிள்ளைக்கிழங்கு (துண்ணீர் விட்டான்கிழங்கு), பூண்டு, ஈருள்ளி, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், சீரகம், வசம்பு இவைகளை வகைக்கொரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்கு கொடுக்க சகல பிரளிக்கணமும் நீங்கும். இச்சாபத்தியம்.

சுழிக் கணத்திற்குக் குடிநீர்.

கற்கடகசிங்கி, சீந்திற்கொடி, நற்சீரகம், வில்வவேர், அதிவிடயம், கடுகுரோகணி, கண்டங்கத்திரிவேர், முசுமுசுக்கை, செம்முள்ளிவேர், தூதுவேளைவேர், திப்பிலி வகைக்கு ¼ பலம் இடித்துப் போட்டுக் குடிநீர் செய்துகொடுக்க நீங்கும்.

கரப்பன் வகுப்பு.

வாதபித்தசிலேத்தும கரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன், மண்டைக் கரப்பன், அரி கரப்பன், பொரிகரப்பன், கிரந்திச்சூலைக் கரப்பன், வால கரப்பன் ஊது கரப்பன், செவ்வாப்பு, கொள்ளிக் கரப்பன், கண்டியொடுவீங்கு கரப்பன், உதிர்கரப்பன், சட்டைதடி வெடி கரப்பான், சிங்கமுக எரிகரப்பன் ஆக கரப்பன் 18 வகையாம்.

விடவாத கரப்பன் இயல்பு.

உடல் வெதும்பும்; உளையும், பரபரென ஊரும்; கை, கால், அரை வயிறு வீங்கி வறண்டு வெடித்துப் புண்ணாகும்.

உத்தமதாளி, தழுதாழை, ஓரிலைத்தகரை, வெள்ளறுகு, நத்தைச் சூரி, நாயுருவி, நாய்க்கடுகு, நன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறியாநங்கை, தும்பை, வெள்ளெருக்கு, மாவிலிங்கு இவைகளின் வேர் வகைக்கு 5 பலம் (175 கிராம்) வீதம் இடித்துப் பத்துப் படி தண்ணீரில்போட்டு எட்டுக் கொன்றாய் வற்றவைத்ததில் தேங்காய்ப்பால், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி விட்டு கோரோசனை, பஞ்சலவணம், திரிகடுகு, திரிபலை, முத்தக்காசு, பேரீச்சங்காய்கொடி, முந்திரிப்பழம், கற்கண்டுவகைக்கு 3 வராகன் எடை (10 ½ கிராம்) பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து வேளைக்கொரு கரண்டிவீதம் கடும்பத்தியமாய் உட்கொள்ள நீங்கும்.

மேல்பூச்சுத் தைலம்:– மிளகு பூண்டு, வசம்பு வகைக்கு 2 வராகன் எடை, ஈருள்ளி ½ பலம், நெல்லிமுள்ளி, பூவரசம்பட்டை வகைக்கொருபிடி இவைகளை எல்லாம் ஆடுதீண்டாப்பாளைச் சாற்றிலாட்டி ¼ படி நல்லெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துப் புண்ணில்போட நீங்கும்.

Koviloor Digital Library

வாத கரப்பன் இயல்பு.

உடல்கனத்து வெளுத்துப் பிரண்டைபோல் தடித்துக்காட்டும்; கண் சிவக்கும்.

மருத்துவம்:— 1. பூதகரப்பன்பட்டை, பூவரசம்பட்டை, நுணாவேர்ப்பட்டை, இலுப்பைக்கட்டி இவைகளை ஒரு நிறையாய்ச் சுட்டுச் சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்துத் தடிப்பின்மேல் தடவ மாறும்.

2. கொன்றைக் கொழுந்தை அரைத்துத் தடவ மாறும்.

3. புங்கு, ஆடாதோடா, நாய்வேளை, சங்கு, இவைகளின் வேர் வகைக்கு ஒரு பிடி, வசம்பு உள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், வெளிச்சிப்பிசின் (விளாம்பிசின்), கடுக்காய், பொடுதலைக்காய், கஸ்தூரி மஞ்சள் வகைக்கு வராகன் எடை, ஈருள்ளி 10 பலம் இவைகளைப் பொடித்து ஒரு படி விளக்கெண்ணெயில்போட்டுச் சங்கங்குப்பிச் சாறு 1 படி கூடவிட்டுப் பரிதிப்புடம் (ரவிப்புடம்) வைத்து ஒரு காசளவாய்க்கொடுக்கக் கரப்பன், கர்ப்பத்தில் ஒட்டிய கருங்கிரந்தி, செங்கிரந்தி நீங்கும்.

விளக்கெண்ணெய், பூவரசம்பூ, வெங்காயம் இடித்துப் பிழிந்த சாறு, மணத்தக்காளிச்சாறு வகைக்கு ¼ படி; குமரிச்சாறு 1/8 படி இவைகளைக் கலந்ததில் கருவாய்பட்டை, ஏலம், சிவதைவேர், பூதகரப்பன் பட்டை வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) அரைத்துப் போட்டுக் கடுகு பதமாய்க் காய்ச்சி ஒரு துட்டெடை மூன்று வேளை கொடுத்து மேலெங்கும் கடுகைப்பூசிவர நீங்கும்; கரப்பன் பண்டந்தள்ளி இச்சாபத்தியம்.

பித்த கரப்பன் இயல்பு.

உடம்பிற்றினவு; காய்ச்சல், தலைவலி, வாந்தி காணும்; நீர் சிவந்திறங்கும், மலம் சிக்கும்.

மருத்துவம்:— கொடிவேலி, குறிஞ்சா, குளப்பாலை, சிவனார்வேம்பு இவைகளின் வேர், பெருமரத்துப்பட்டை, வெள்ளறுகு. மிளகு, கருவேப்பீக்கு, செங்கத்தாரிப்பட்டை இவைகளை ஒரு நிறையாய் இடித்துத் தண்ணீரில் போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்.

மேற்படி மருந்துகளை இடித்து வடிகட்டி சூரணஞ் செய்து திரிகடி அளவு வெந்நீரில் கொடுக்கத் தீரும்.

கருநொச்சியிலை, ஏரழிஞ்சிப்பட்டை, விஷ்ணுகரந்தை, சிறு சின்னியிலை, சாணாக்கிக்கீரை, சிற் ாமணக்கின்வேர், ஈருள்ளி, சுட்டவசம்பு கடுகுரோகணி, இவைகளை சம எடையாகத் தட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

செங்கத்தாரிப்பட்டை, சின்னியிலை, சிறு குறிஞ்சாவேர், மிளகு இவைகளை ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

வளி அழல் ஐயக் கரப்பன் 18--க்கும் எண்ணெய்.

குமரி, கண்டங்கத்திரி, தூதுவேளை, செந்தொட்டி, செம்முள்ளி, கருநொச்சி, இரண்டு குட்டித்தக்காளி, நிலவாகை, கழற்சி, சங்கக்குப்பி, வில்வம், ஈருள்ளி இவைகளின்சாறு வகைக்கு 1,4 படி, சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, செங்கத்தாரிப்பட்டை, வாதமடக்கி வேர், கடுக்காய் வகைக்கு 2 பலம் கருஞ்சீரகம் 2 வராகன் எடை இவைகளை அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

சிறுகுறிஞ்சா, மிளகரணை, காட்டுமல்லி, கொடிப்பாலை, நிலவிளா இவைகளின்வேர்; வசம்பு, ஆகாசக்கருடன் கிழங்கு சமன் கூட்டித் தட்டி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சியருந்த சகல கரப்பான்களும் தீரும்.

கரிசாலை, சச்சந்திரா வேர், கருடக்கொடி, பொரிகாரம், பூதகரப்பன்பட்டை, வசம்பு, உள்ளி ஒரு நிறையாய்த்தட்டி விளக்கெண்ணெயில் போட்டுக்காய்ச்சி அருந்த சகல கரப்பான்களும் தீரும்.

பூவரசு, செங்கத்தாரி, பூதகரப்பான்பட்டை, கண்டங்கத்திரி, நிலவாகை வகைக்கு 12 பலம் நறுக்கிக் கியாழம் இட்டி இறுத்ததில் ஆட்டுப்பால் 1 படி, சிற்றாமணக்கெண்ணெய், 1 படி (8 3,4 கிராம்), விட்டு மிளகு, சதகுப்பை, வசம்பு, வலம்புரிக்காய், வெள்ளுள்ளி, பறங்கிப்பட்டை, கார்க்கோலரிசி, சீரகம் வகைக்கு 2 கழஞ்சு தாய்ப்பாலில் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துப் பிள்ளைகட்கு உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் பூசிப்பத்தியமாயிருக்கச் சகலகரப்பனும் தீரும்.

வெள்ளைக்காக்கணான், பூதக்கரப்பன்பட்டை, வட்டக் கிலுகிலுப்பை, காட்டுப்பாகல், சங்கு, வெள்ளறுகு இவைகளின் வேர், கருஞ்சீரகம், ஈருள்ளி, சதகுப்பை, தேவதாரம், வசம்பு, சீனப்பட்டை (பறங்கிப்பட்டை) வகைக்கு 1,4 பலம்; 200 நேர்வாளவிதை இவைகளை நன்றாய் அரைத்து ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு அதில் ஒருபடி சங்கங்குப்பிச்சாறு விட்டுப் பாகமாகக் காய்ச்சி ஒரு காசெடை உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும் பூசிவரச் சகல கரப்பனும் நீங்கும்.

சிற்றாமணக்கெண்ணெய் முக்கால் படி, சிறுசின்னி, முதியார் கூந்தல், சவுரிக்கொடி, சிறுசெருப்படை, நொச்சி, கிரந்தி நாயகம், சங்கு, மூக்கரைச்சாரடை, வெள்ளறுகு இவைகளின் சாறுவகைக்கு ¼ படி வீதம் கலந்ததில் இருசீரகம், கடுகுரோகணி, பூதகரப்பன்பட்டை, கண்டங்கத்திரி, கஞ்சாங்கோரை, வேம்பாடம்பட்டை, அரத்தை, சுக்கு, பறங்கிப்பட்டை, குமிழ்வேர், வாளம் வகைக்கு அரை பலம் வீதம் அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி சிறு கரண்டி வீரம் கொடுக்க நீங்கும்.

புங்கம்பூ, புளியமடல்கிழங்கு, நற்சீரகம், வசம்பு, உள்ளி, பாலை, நன்னாரி, இவைகளை ஒரு நிறையாய் ஆவின் பாலில் அரைத்து

Koviloor Digital Library

விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

செங்கரப்பன் இயல்பு.

தேகம் மெலியும், சிவக்கும், வெடித்து நீரோடும்; தலைவலி காணும்; நீர் கட்டும்; மரணக்குறிகள் காணும்.

மருத்துவம்:– பசுவின் நெய் ¼ படி; ஆதண்டை, முதியார் கூந்தல், முருக்கிலை, நெருஞ்சில், முடக்கொத்தான், பூவரசம்பட்டை, ஈருள்ளி வகைக்கு 1,4 பலம் தட்டிப்போட்டுக் காய்ச்சிச் சிவந்த பதத்தில் வடித்து ஒரு கரண்டிவீதம் கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

கருங்கரப்பன் இயல்பு

உடல் வெதும்பும்; பசுநரம்பு தோன்றி நிறம் பேதப்படும், தேகம் பரபரத்து முறுக்கிக் குழந்தை துள்ளி அழும்; தாய்ப்பால் உண்ணாது, முகம், கால் ஊறும்.

மருத்துவம்:– மிளகு, துருசு, கடுக்காய், கோட்டம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கஞ்சாங்கோரை, நத்தைசூரி, சிறு அவரை, பெரிய அவரை, சிவனார்வேம்பு, வேலிப்பருத்தி இவற்றின் வேரை ஒரு நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுத்தால் 18 கரப்பன்களும் நீங்கும்.

சூலைகரப்பன் இயல்பு.

உடலெல்லாம் வெடித்து, முழங்கால் முழங்கையில் சூலைகட்டும்; முகம் வாடும்.

மருத்துவம்:– புங்கு, சங்கு, ஆதண்டை இவைகளின் வேர் அரைத்து வகைக்கொரு எலுமிச்சங்காய் அளவு எடுத்து ஈருள்ளி உழக்கு, கடுகுரோகணி ¼ பலம் முடக்கொத்தான் 1/8 பலம் இவைகளைத்தட்டி ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பரிதிப்புடம் (சூரியபுடம்) வைத்துண்ண முடக்குச் சூலையும் கரப்பன், சொரி, சிரங்கு நீங்கும், இச்சாபத்தியம்.

ஊது கரப்பன் இயல்பு.

குளிர்காய்ச்சல், கழலைக்கட்டி காணும்; நாள்தோறும் பூதம் போல் உடல் வீங்கும்; புண்ணாகும், முகங்கரிக்கும்.

மருத்துவம்:– அகத்தி, கருப்பூரவல்லி, அவுரி, வெள்ளறுகு, ஆடாதோடை, மணித்தக்காளி, ஆவாரை, சங்கங்குப்பி, நிலக்கடம்பு, கிரந்திநாயகம், நொச்சி முருக்கு, ஈருள்ளி வகைக்குச் சாறு ¼ படி, விளக்கெண்ணெய் 1 படி, மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சிவதை, கடுகுரோகணி, கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபலை வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) அரைத்து, கரைத்துப் பதமாய்க் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் மூன்று நாள் கொள்ள ஊதுகரப்பன் முதல் 18 கரப்பனும் தீரும்.

Koviloor Digital Library

பால் கரப்பன் இயல்பு.

உடல் மெலியும்; சந்து கால்கடுக்கும்; கண்டம் வெடித்துப் புண்ணாகிக் கடி நஞ்சு போல் நீர்பாய்ந்து நாறும்.

வேறு: உடல்மெலியும்; பரபரத்துச் சொரிமேலாகிச் சாரை உடல்போல் காணும்; புண்ணில் நச்சுநீர் உதிரம் (இரத்தம்) போல் வடியும்; குலை வற்றித் திருவழியும்.

மருத்துவம்:– பூவரசம்பட்டைச்சாறு, விளக்கெண்ணெய், பசுவின் பால், வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கடுகு பதத்தில் கருஞ்சீரகம், நற்சீரகம், கார்க்கோலரிசி, இலவங்கம், சடாமாஞ்சில், கரிசாலை, நுணாவேர் வகைக்கு ¼ பங்கு நிழலில் உலர்த்திப் பொடித்துப் போட்டுக்கிண்டி நெய் பதமாக்கி இறக்கி வடித்து ஒரு கரண்டி வீதம் கொடுத்துக் கடுகை மேலில்பூசத் தீரும். கரப்பன் பண்டம் தள்ளிப் பத்தியங்கொள்ளவும்.

அரிகரப்பன் இயல்பு

அல்குல், லிங்க முதலான உறுப்புகளில் பதைப்பாகி (வேக்காடு) புண்படரும்; ஆறாமல் தசையை அறுத்து உருவை அழிக்கும்.

மருத்துவம்: ஆரை, கொட்டைக்கரந்தை, செருப்படை, கரிசாலை, பொன்னாங்காணி, பேய்மிரட்டி, சிறுகீரை, வட்டத்திருப்பி, தொடரி (இண்டங்கொழுந்து) இவைகளின் வேர், நீலி, கோடக சாலை, மிளகீரை, வேலிப்பருத்தி, பெருங்கிளா இவைகளின் வேர்ப்பட்டை, வசம்பு, பசரியிலை வகைக்கு ½ பலம் இவைகளை இடித்துக் கால்படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் ஏழுநாள் கொள்ள அரிகரப்பன், செங்கரப்பன், கருங்கரப்பன் முதலான 12 வகைக் கரப்பனும் தீரும்.

எருக்கு, மருக்கு (மருக்கொழுந்து), மருக்காரை, வட்டக்கிலுகிலுப்பை, வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப்பட்டை; கடுக்காய், பூண்டு வகைக்குப் ஒரு பலம் நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் புண்ணின்மேல் தடவத் தீரும். இச்சாபத்தியம். (மருக்கு என்பதை மிளகு என்பாரும் உண்டு.)

வறட்சிக் கரப்பன் இயல்பு.

உச்சி முதல் உள்ளங்கால் வரையில், சிரங்கு மிகுந்தும் வெடித்துத் தினவும் சொரியும் காணும்; நித்திரை வராது.

மருத்துவம்:– 1. தூதுளைவேர், இலைத்தாமரை (ஆகாசத்தாமரை), வெள்ளெருக்கு, கொடிவேலி, நீலி இவைகளின் வேர்; கருஞ்சீரகம், கந்தகம், கார்க்கோலரிசி, ஓமம், சீரகம், வகைக்கு கால் பலம் அரைத்து ஆமணக்கெண்ணெய் அரைப் படியில் கலக்கிக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.

Koviloor Digital Library

2. புங்கங்கொட்டை, மரமஞ்சள், வேம்பாடம்பட்டை, அரிவு வேர், துருசு, கந்தகம், தாளகம், வகைக்கு கால் பலமாகப் பொடித்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உடம்பில் காலையில் தடவி, மாலையில் அரைப்பிட்டுக் குளிக்கத் தீரும்.

3. சிறுசின்னிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, ஒன்றாய்க் கலந்ததில் மிளகு, செங்கத்தாரிப்பட்டை, சிறுகுரிஞ்சான்வேர்ப்பட்டை வகைக்கு 5 வராகன் எடை (17 ½ கிராம்) அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்கு ½ தேக்கரண்டி அளவு கொடுக்கத் தீரும்.

4. அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, கருப்பூரவல்லி, சிறுசெருப்படை, நரிமிரட்டி, வெங்காயம், இவைகளின் சாறு வகைக்கு 1 படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து ஒரு சங்கு வீதம் குழந்தைகளுக்கு உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசிவரத் தீரும்.

சொரிசிரங்குக்கு மருத்துவம்.

பூவரசம்பட்டையில் நீராகாரத் தண்ணீர் விட்டு இடித்துச் சாறு பிழிந்து அதில் அரைக்கால்படி வீதம் காலையில் மட்டும் 3 நாள்கள் உப்பு, புளி நீக்கிச் சாப்பிட்டுக் கந்தகம், சித்திரமூல வேர்பட்டை வகைக்கு கால் பலம் வீதம் அரைத்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டு வேகவைத்துக் காலையில் உடம்பில் தடவி மாலையில் அரைப்புத் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

ஏலம், மிளகு, கார்க்கோலரிசி, கெந்தகம், சூடன், பிராய்ப்பட்டை வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் பொடித்து அரைக்கால்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உடம்பில் காலையில் தடவி மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

பேய்ச்சொரிக்கு மருந்து.

இந்துப்பைப் பொடித்து நெய்யில் போட்டு வெய்யிலில் வைத்து உடம்பில் பூசிவைத்திருந்து மாறுநாள் முழுக நீங்கும்.

சீந்தில்கொடி, வேப்பம்பட்டை, பேய்ப்புடல் வகைக்கு 10 பலம் இடித்து தூணி (எட்டுபடி), நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் பசுவின் நெய் 1 படி கூடவிட்டுத் திரிபலை, செஞ்சந்தனம், மரமஞ்சள், விலாமிச்சம்வேர், தக்கோலம், கோட்டம், தேவதாரம், மஞ்சள் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப் போட்டு மூன்றுநாள் வரை உமிக்காந்தலில் வைத்து உமிக்காந்தலில் வைத்து நான்காம் நாள் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு இரண்டு காசெடை நெய் வீதம் உட்கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

காட்டுச்சீரகம், கார்க்கோலரிசி, கத்தூரிமஞ்சள், ஏலம், கடுக்காய், நீரடிமுத்து சமனெடையாய்ப் பொடித்து அதற்குச் சமன் மிளகுத்தூள் கூட்டி ஊமத்தங்காய்க்குள் அடைத்து ஒன்றரை எருமுட்டையில் புடம்போட்டெடுத்து

Koviloor Digital Library

ஒரு படி தேங்காய் எண்ணெயில் அரைத்துப் போட்டு மூன்றுநாள் சூரியபுடம் வைத்துச் சிரங்கின் மேல் தடவத் தினவு (நமைச்சல்) நீங்கும்.

நீர்வெட்டிமுத்தும், சந்தனமும் ஒரு நிறையாய் அரைத்துச் சிரங்கில் தடவ உதிர்ந்துவிடும்.

வெண்தோன்றிக் கிழங்கும் கெந்தகமும் வகைக்குக் காற்பலம் விகிதம் அரைத்துக் கால்படி நல்லெண்ணெயில் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் சிரங்கில் பூசிவைத்திருந்து மாலையில் இலுப்பை அரைப்பும் வேப்பிலையும் சமனாய் அரைத்து உடம்பில் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

காத்தொட்டி (ஆதண்டை) இலைச்சாறும் நல்லெண்ணெயும் வகைக்குக் காற்படி வீதம்கலந்து அதில் தூய்மை செய்த கெவுரி 1 வராகன் எடை பொடித்துப் போட்டுத் தலைமுழுக்குச் செய்ய நீங்கும்.

சகல கரப்பன், சிரங்கு முதலியவற்றிற்கு மேல்பூச்சுத் தைலம்.

விடத்தலை, (விடத்தேர்), இலைக்கள்ளி திருகுக்கள்ளி சதுரகள்ளி, மாவிலங்கு, சங்கு, தாழை, கொம்மட்டி, குப்பைமேனி, அவுரிபொடுதலை, நிலக்கடம்பு, ஆமணக்கு, இண்டு, எருமையின் ஆட்டாக் கொடி, நோச்சி இவைகளின் சாறு நல்லெண்ணெய் வகைக்கு ¼ படி வீதம், கலந்ததில் சீரகம் 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூச நீங்கும்.

சிரங்கு புண்ணுக்குக் களிம்பு.

துருசு, கெந்தகம், குங்கிலியம் இவைகளை ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில் அரைத்துப் போட நீங்கும்.

வாதகரப்பன் வீக்கத்துக்கு மருந்து.

மூக்கரைச்சாரணைவேர், இந்துப்பு, கடுக்காய், மாச்சுக்கு ஒரு நிறையாய்த் தட்டிப்போட்டுக் குடிநீர் செய்து சங்களவு குடிக்க நீங்கும்.

தூதுளை, சங்கு, சுரைக்கொடி, சிறுநெரிஞ்சில், நீர்முள்ளி, ஈருள்ளி இவைகளை ஒரு நிறையாய்க் கியாழஞ்செய்து அதில் வெண்காரத்தைப் பொரித்துப் போட்டுக் கொடுக்க நீங்கும்.

ஈருள்ளியை இடித்துச் சாறுபிழிந்து அதில் நவாச்சாரம், இந்துப்பு, சீரகம், வெண்காரம் இவைகளைப் பொடித்துப்போட்டுக் கொடுக்க நீங்கும். மலசலம் வெளிப்பட்டு வீக்கம் வற்றும்.

மேற்படி மூவகை உப்பையும் (நவாச்சாரம், வெங்காரம், இந்துப்பு) பொடித்துக் கோசலத்தில் கலக்கி வடிகட்டிக் கொடுக்க நீங்கும்.

மாந்தம், செவ்வாப்பு கரப்பனுக்கு மருந்து.

சாதிலிங்கம், கற்பூரம், ஏலம், பூங்காவி வகைக்கு ¼ பலம் கோதுமைக் கஞ்சிவார்த்து இரண்டுசாமம் மைபோலாட்டிப் பயறு போல் உருண்டை

Koviloor Digital Library

செய்துகொண்டு இரண்டு வயதுப் பிள்ளைக்குச் சோற்றிலும் அதற்குட்பட்ட குழந்தைகட்கு மாசிப்பத்திரிக் கியாழத்திலும் கொடுக்க நீங்கும்.

சிறுசிரங்கு சொரி சிரங்கு இவைகட்கு மருந்து.

1. கொடிக்கள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து வயதுக்கும் பலத்துக்கும் தக்கபடி கொடுக்க நீங்கும்.

2. ஒரு படி தேங்காய்ப்பாலில் துருசு, அரிதாரம், கெந்தி வகைக்கு இரு கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி நெய்வடித்துக் காலையில் உடம்பில் பூசி மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

காற்கடுவன், மண்டைக்கடுவனுக்கு மருந்து.

1. மேற்படி வியாதி காலிலும் தலையிலும் கண்டிருந்தால் அதை முறையே காறகடுவன், மண்டைக்கடுவன் என்பர். ஆமணக்கு இலையை இரவில் கட்டிக் காலையில் அவிழ்த்துச் சலத்தால் கழுவியபின் அப் புண்ணில் தேங்காய் எண்ணெயைத் தடவி அதன்மேல் சங்கிலையை (உலர்ந்தது) நசுக்கிப் பொடித்து இடத் தீரும்.

2. இலுப்பைப்பட்டை, பாவட்டை, சதுரக் கள்ளிப்பட்டை வெங்காயம், வசம்பு நறுக்கி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி உட்கொள்ள நீங்கும்.

சிரங்கு, சொரிகரப்பன், ஆறாப்புண்களுக்கு மருந்து.

1. அரிதாரம் ¼ பலம், 20 சேங்கொட்டை இவைகளை நறுக்கி ஒரு படி நல்லெண்ணெயில்போட்டுக் காய்ச்சிச் சேங்கொட்டைவெடிக்கும் பதத்தில் இறக்கி வடித்து உடம்பில்தேய்த்து மாலையில் அரைப்பிட்டுக் குளிக்க நீங்கும்.

2. கல்லுப்பு இருமஞ்சள், மிளகு, கருஞ்சீரகம் வகைக்கு ¼ பலம் விகிதம்பொடித்து 2 படி தேங்காய்ப் பாலில்போட்டுக் காய்ச்சி நெய் வடித்து உடம்பில்பூசி மாலையில் அரைப்பிட்டுத் தலைமுழுக்கு செய்துவர நீங்கும்.

கரப்பனுக்கு எண்ணெய்.

செங்கத்தாரி, கருநொச்சி, முடக்கொத்தான், கழற்சி, புங்கு, சங்கங்குப்பி, கிரந்திநாயகம், சிறுசெருப்படை, சிறுசின்னி, முதியார்கூந்தல், உத்தாமணி, கொடிவேலி, வெள்ளறுகு, வேம்பாடம்பட்டை, சிவனார்வேம்பு, சிவதை, கண்டங்கத்திரி, பூதகரப்பன்பட்டை, சீரகம், கருஞ்சீரகம் இவையெல்லாம் ஒரு நிறையாய் விளக்கெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் கொடுக்க படை, கரப்பன், கொள்ளிக்கரப்பன், வீங்குகரப்பன், அரிகரப்பன் நீங்கும்.

கபால கரப்பனுக்குத் தைலம்.

முத்தக்காசு, தூதுளை, காணி, சீராசெங்கழுநீர், ஓரிலைத்தாமரை, சிவனார்வேம்பு, நிலவேம்பு, குப்பைமேனி, சங்கு, மலை தாங்கி, கொன்றை

Koviloor Digital Library

இவைகளின் வேர் வகைக்கு 1 பலம்; சுக்கு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கருஞ்சீரகம், வசம்பு, உள்ளி, சென்னகாப்பழம், கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின், அதிமதுரம் வகைக்கு 1 கழஞ்சு இவைகளை ஆவின் பாலில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து உள்ளுக்குச் சாப்பிட்டுத் தலையில் பதமிட்டு முழுகிவர நீங்கும்.

தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 4 படி, குமரிச்சாறு 1 படி, தூதுளைவேர் 4 பலம், இடித்து 2 படி தண்ணீரில்போட்டு காய்ச்சிவடித்த க்ியாழம் ¼ படி, நல்லெண்ணெய் 1 படி இவைகளைக் கலந்து அதில் கொடிவேலி வேர்ப்பட்டை, கருஞ்சீரகம், வேம்பாடம்பட்டை வகைக்குக் கழஞ்சு ஒன்றுவீதம் அரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு முழுகிவர நீங்கும்.

கரப்பனுக்கு மேற்பூச்சுத் தைலம்.

வெற்றிலை, மிளகுத்தக்காளி வகைக்குச்சாறு 1 படி; எருக்கிலை பழுப்பு, வேளை வகைக்குச் சாறு அரைப்படி, நல்லெண்ணெய் 1 படி இவைகளைக் கலந்ததில் சுக்கு, மிளகு, வசம்பு, திப்பிலி வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டு காய்ச்சிக் கரப்பன்பேரில் தடவிவரச் சகல கரப்பனும் நீங்கும்.

முருங்கைப்பூ, எருக்கம்பூ, முத்தெருக்கஞ்செவி, கார்த்திகைக் கிழங்கு தனித்தனி இரண்டு கழஞ்சு அரைத்து அரைப்படி ஆவின் நெய்யில்போட்டுச் சிவந்த பதத்தில் காய்ச்சி வடித்துக் கண்டத்திற்குக் கீழ்ப்பூசி மாலையில் அரைப்பிட்டுத் தலைமுழுக்குச்செய்ய எல்லாவகைக் கரப்பானும் நீங்கும்.

கொள்ளிக் கரப்பனுக்குக் குடித் தைலம்

வெள்ளறுகு, சிவனார்வேம்பு, சங்கங்குப்பி, பொடுதலை, (வீழி), கோழியவரை, கரிப்பான், கருநொச்சி, கழற்சி, மஞ்சணாத்தி (நுணா), சிறுசெந்தொட்டி, சடை சடாமாஞ்சி), தூதுவேளை இவைகளின் சாறு வகைக்கு 1 படி; விளக்கெண்ணெய் 1 நாழி ஒன்றாய்க் கலந்ததில் கருஞ்சீரகம், பலமரை, ஈருள்ளி 1 பலம்; அரைத்துப் போட்டுக் காய்ச்சிக்கொடுக்க நீங்கும். பத்தியமாய் இருக்க வேண்டும்.

சுர வகுப்பு
சுரங்களின் பெயர்கள்

உரைத்தோமே பாலருக்குச் சுரவ குப்பு
உடல்காயும் ஆமசுரம் உறுதி மெத்த,
நிறைந்ததொரு ரத்தசுரம் அன்ப னாகி
நேரான மாங்கிசச் சுரமு மாகும்.
திரைத்துமே அத்திசுரம் வாத பித்தஞ்
சிலேத்தும சுரமென்று செப்ப லாகும.

Koviloor Digital Library

மறைத்ததொரு மாந்தசுர முட்சு ரந்தான்
மகாதோட மாந்தசுர மென்ன லாமே.
ஆமேதானி ரத்தகண சுரமு மாகும்
அறைத்தகணக் காய்ச்சல்குளிர் சுரமு மந்தம்,
சாமேதான் மால்சுரங் கணக்காச் சலாகுஞ்
சார்வான வாதசுரப் பழஞ்சுர முமாகும்,
தாமேதான் அதிசாரச் சுரமு மாகுங்
கழறினார் வாந்திசுரம் விக்கல் தாகம்,
நாமேதான் சுரவகுப்பு சொன்னோ மப்பா
நவின்றிட்டார் கும்பமுனி நவின்றிட் டாரே.

கணக்காய்ச்சலின் இயல்பு.

பாரு முந்தி பகருமா திமுதல்
சாரு மீரல் சதுர்வரைப் புண்ணாகி
ஊரு மேசுர மோங்கித் திகைத்துமே
நேரும் மயக்கம் நிலையா யுரைத்ததே.

(அ.பொ.):– உந்தி=நாபி (கொப்பூழ்) ; ஈரல்=கல்லீரல் (வலப்புரம்) ; மண்ணீரல் (இடப்புறம்) ; ஓங்கி=மிகுத்து.

உந்தி முதல் ஈரல்வரை புண்ணாகிச் சுரங்காயும் திகைத்து மயக்க முண்டாக்கும்.

மருத்துவம்:– (வெண்) பூசணிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு இவற்றின்சாறு, இளநீர், பசும் நெய், பால் வகைக்கு கால் படி; கடுகுரோகணி, சண்பகப்பூ, வெட்டிவேர், பச்சை அதிமதுரம், இலவங்கம், சிற்றாமுட்டி, பேராமுட்டி, திப்பிலி, சந்தனம், ஏலம், விலாமிச்சுவேர், மாம்பருப்பு, கோட்டம், விளாம்பிசின், பொன்முசுட்டை வகைக்கொரு காசெடைவீதம் அரைத்துக் கலந்து பதமாய்க்காய்ச்சிக் கொடுக்கக் கணக்காய்ச்சல், உட்சுரம், தடுமன், இருமல் தீரும், உடல் பூரிக்கும்.

புள்ளடி (சிறுசெருப்படி), செப்புநெரிஞ்சில், வல்லாரை, பூலா, கோழியவுரை, இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி; ஆமணக்கெண்ணெய் 1 படி; குரோசாணி, கடுகுரோகணி, வெளிச்சிப்பிசின் மாவிலி, புல்லூர் (புல்லாஞ்சி), சடாமாஞ்சில் வகைக்குப் பணவெடை பொடித்துக் கலந்து காய்ச்சி ஒரு துட்டெடை கொடுக்கத் தீரும்.

மாசிக்காய், திப்பிலி, ஏலம், கோரோசனை, கோட்டம், சடாமாஞ்சில், கருஞ்சீரகம், அக்ராகாரம் வகைக்கு ¼ பலம்; தாய்ப்பாலால் இருசாமம் அரைத்துக் கடலை அளவு உருட்டி மேற்படி பாலில் ஒரு மாத்திரை வீதம் கொடுக்கத் தீரும்.

சங்கு, செருப்படை, துளசி, வறட்பூலா, கழல் (கஜ்ஜக்காய்த் தழை), நரிப்பயறு இவைகளின் சாறு; பசுநெய் வகைக்கு 1 படி; அகப்பைக் கொவ்வை (அப்பக்கோவை), நெருஞ்சில், தூதுளை இவைகளைச் சம எடையாக எடுத்து

Koviloor Digital Library

முறைப்படி கியாழம் செய்து வடிகட்டி ½ படி மேற்படி கலவையில் கூட்டிக் கிராம்பு, திப்பிலி, சாதிக்காய், இம்பூரல், வசம்பு, உள்ளி, சுக்கு, கடுக்காய், சிறுதேக்கு வகைக்கு அரைக்கால் பலம் தட்டிப்போட்டுக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

நாய்த்துளசி, பழம்பாசி, கணைப்பூண்டு, பேய்மிரட்டி, வல்லாரை, தகரை வகைக்கொருபிடி குடிநீர் செய்து வடித்ததில் கருஞ்சீரகம், நற்சீரகம், கோரோசனை வகைக்குக் கால் வராகன் எடை பொடித்துப் போட்டு சங்களவு கொடுக்கக் கணவெப்புத் தீரும்.

உடம்பு நோய், காய்ச்சலின் இயல்பு.

உடம்பு நொந்து காயும்; குழந்தை உதட்டைக் கடிக்கும்; கை முட்டியைப் உரக்கப்பிடிக்கும்; நட்டகண்ணாய் விழிக்கும்; பதட்டமுடன் கொங்கையைக் கடித்திழுக்கும்.

மருத்துவம்:– சீதேவிப் பூண்டை இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் கடுகுரோகணியை அரைத்துக் கலக்கி வெள்ளாட்டுப் பாலில் கடிகை அளவு கலந்துகொடுக்கத் தீரும்.

உட்காய்ச்சலின் இயல்பு

உட்சுரங்காயும்; வயிறு அபானம் எரியும்; மயக்கம் காணும் மலசலம் தீயும்.

மருத்துவம்:– இளநீரில் அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, பசுவின் பால் 2 படி, குமரிச்சாறு ½ படி ஒன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து அதனுடன் சீரகம், மாசிக்காய், கோட்டம், அதிமதூரம், கிராம்பு, ஏலம், சுக்கு வகைக்கு 1 வராகன் எடை, வெந்தயம் 1 பலம் இவைகளை வறுத்துக் கலந்து சூரியபுடம் வைத்து கடிகையளவு தூள் கொடுக்கக் காய்ச்சல், உட்காய்ச்சல், மாந்தம், உடம்புவற்றல், நாவறட்சி, நடுக்கல், இருமல் தீரும்.

கற்றாழஞ்சாறு, இளநீர், பசுவின்பால் வகைக்கு 1 படி, சிற்றாமணக்கெண்ணெய் 3 படி கலந்து காய்ச்சி கணைப்பூண்டு, மான்கொம்பு, சந்தனம், ஆமையோடு வகைக்கு 1 பலம் இளநீரால் அரைத்துச் செண்பகப்பூ, சாதிக்காய், நற்சீரகம், அதிமதூரம், சிறுநாகப்பூ, கருஞ்சீரகம், வகைக்கு ½ பலம் இவைகளை பசுவின் பாலில் அரைத்து ஒன்றாய்க் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி காலை மாலை ஒரு துட்டெடை வீதம் ஏழுநாள் கொடுக்க மாந்தகணம், தோடகணம், வறட்கணம், உடம்புமெலிவு, உட்சுரத்தின் காய்ச்சல், உட்சுரம் நீங்கும்.

ஆமசுரத்தின் இயல்பு.

சாமந்தோறும் மட்டாய்ச் சுரங்காயும்; குழந்தை சீறியழும்; பால் உண்ணாது; உடல் சுருங்கும்; இளைக்கும்; கடுக்கும், தண்ணீர்த்தாகம், தலைவலி காணும்; கை கால் குளிர்ந்திருக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– உத்தாமணி, பாவட்டை, சங்கு, நாவெட்டை, முருங்கை, நுணா பொடுதலை இவைகளின் ஈர்க்கு ஒருபிடி நறுக்கிச் சட்டியில் போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு ஓமம், திப்பிலி, வசம்பு, ஆமையோடு, கருஞ்சீரகம், ஒரு நிறையாயரைத்துத் துணியில் முடிந்து கூடப்போட்டு வற்றக் காய்ச்சியதில் மேற்படி மருந்துகளை அரைத்துக் கழற்சிக்காய் அளவு மூன்றுவேளை கொடுக்கத் தீரும்.

விளாங்காய் அளவு பசுவெண்ணெயில் உத்தாமணிக்கொழுந்து, வசம்பு, உள்ளி, விளாவோடு, ஓமம், ஆமையோடு வகைக்கு 1 கழஞ்சு வறுத்துப் பொடித்துப்போட்டுக் காய்ச்சிக் கரண்டிநிறை கொடுக்கத் தீரும்.

உத்தாமணி, சங்கு, தூதுவளை, கொடுப்பை (பொன்னாங்காணி) இவைகளின் வேர் வகைக்கொருபிடி நறுக்கி ஒரு படி நீரில்போட்டு பொடுதலை, ஓமம், திப்பிலி, மிளகு, வசம்பு, உள்ளி, ஆமையோடு வகைக்கு 1 வராகன் எடை சீலையில் முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சி அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, வேலிப்பருத்தி இவைகளின் வேர்; மிளகு வகைக்கு ½ பலம் தட்டிப்போட்டுக் கியாழஞ் செய்து சங்களவு கொடுக்கத் தீரும். இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

இரத்த சுரத்தின் இயல்பு

வயிற்றுவலி, தாகம்; கழிச்சல்; தலைசுற்றல் காணும்; சுரம் விட்டு விட்டுக்காயும்; கண்தாழும்; நாவுலரும்; கை கால் சோர்ந்து தண்ணீர் போலிருக்கும்.

மருத்துவம்:– நாபிக்கிழங்கு, திப்பிலி, வெண்காரம், வகைக்கு 15 வராகன் எடை, சாதிலிங்கம் 10 வராகன் எடை, நிம்பப்பழத்தின் (வேம்பின்பழம்) சாற்றால் இரு சாமமரைத்துக் கடலை அளவு உருண்டை செய்து சுக்குக் குடிநீரில் உட்கொள்ள வெதுப்புத் தீரும். சீரகம், கிராம்புக் கியாழத்தில் கலந்துகொடுக்க தலைச்சுற்றல், சுரம் நீங்கும், ஆல்விழுதின் குடிநீரில் கொள்ளப் பழைய சுரம் நீங்கும்.

அன்னபானாதி சுரத்தின் இயல்பு.

வேர்க்கும், வெதுப்பும், கண்சிவக்கும், பலகாலும் வெந்நீர் வேண்டும்; பார்க்கப் பயமாயிருக்குதெனப் பதறி அலறிக் குழந்தை அழும்; வயிறு சிக்கிவிடும்; தெருவில் புறப்பட்டோடும்.

மருத்துவம்:– கோரோசனை, அதிமதூரம், கோட்டம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், ஏலம், சண்பகப்பூ, மாசிப்பச்சை, சாத்திரபேதி இவைகளை ஒரு நிறையாய் தாய்ப் பாலிலாவது வெட்டிவேர்த் தண்டுச் சாற்றிலாவது மைபோலரைத்துக் குன்றி போல் உருண்டைசெய்து மேற்படி பாலில் உரைத்துக் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

2. கற்றாழஞ்சோறு, கடுக்காய், களிப்பாக்கு, கருவேல், பிரமி, சுக்கு, ஒரு படி தண்ணீர்விட்டு நாலிலொன்றாகக்காய்ச்சி அதை ஒரு கரண்டி வீதம் விளக்கெண்ணெயில் கலந்து கொடுக்கச் சீதம், குன்மம், இருமல், நிணக்கழிச்சல் முதலானவைகளுடன் கண்ட சுரங்கள் நீங்கும்.

மாங்கிசச் சுரத்தின் இயல்பு

அதிகமாய்ச் சுரங்காயும்; உடல் நடுங்கும்; மூச்சு மெத்தவோடும்; உதிரம்வற்றி உடல் வெளுத்துருகிக் கருகும்; மூர்ச்சை காணும்; உரோமங்கள் (மயிர்) சிலிர்க்கும்.

மருத்துவம்:– பச்சைச்சூடன், கெந்தி, இந்துப்பு, இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கொரு கழஞ்சு; தேசிப்பழச் (எலுமிச்சை) சாற்றில் ஒரு சாமமரைத்து உளுந்தளவு உருண்டை மூன்றே இஞ்சி, சர்க்கரை கடிகை அளவு சுக்கில்ஊட்ட எச்சுரமும் மூன்றே முக்கால் நாழிகையில் ஓடும்.

என்பு (அஸ்தி) சுரத்தின் இயல்பு.

அனல்போல வெதும்பும்; முலையுண்ணாது; புத்தி கலங்கும்; உள்ளுளையும்; வெள்ளோக்காளமிடும்; சத்திக்கும் (வாந்தி எடுக்கும்) ; நீர்சிவக்கும்; சாமத்திற் சுரங்காயும்; உடல் வற்றி ஊதும்; இருமல் சோகை கடுப்புக் காணும்.

மருத்துவம்:– சாத்திரபேதி, கோட்டம், மதுரம், சந்தனம், ஏலம், சீரகம், கொன்றைப்பிசின், உருத்திராட்சம், கலைக்கொம்பு, நெல்லி, செண்பகம், கொத்தமல்லி, விலாமிச்சை வகைக்கொரு காசளவு அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுப் பருத்திக் காய், காணி (பொன்னாங்காணி), வகைக்கு ¼ படி சாறு விட்டுப் பதமாய்க் காய்ச்சி அதில் கால் பலம் சர்க்கரை சேர்த்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட என்பு சுரம் (அஸ்தி), வாதகணம் நீங்கும்.

*காணி என்ற விடத்து பொன்னாங்காணி, கரிசலாங்காணி, என்ற இரு மூலிகைகளையும் சேர்ப்பது சிலருடைய கருத்தாம், -அதிகஸ்த அதிகம் பலம்– என்ற பழமொழிக் கெற்ப அதுவும் மிக்க பலனைத் தரத்தக்கதேயாம்.

வாதபித்த சிலேத்தும சுரத்துக்கு மருந்து.

கோரோசனை 2 வராகன் எடை, கடுகுரோகணி, நேர்வாளம், வகைக்கு 1 வராகன் எடை, தாய்ப்பாலில் மைபோலரைத்தும் பயறுபோல் உருண்டை செய்து வாத (வளி) சுரத்திற்கு இஞ்சிச்சாற்றில்; பித்த (அழல்) சுரத்திற்கு தாய்ப்பாலில், சிலேத்தும (ஐய) சுரத்திற்கும்; ஆடாதோடா, கண்டங்கத்திரி தூதுவளை இடித்துப்பிட்டவித்துப் பிழிந்த சாற்றிலிடத் தீரும். (வளி, அழல். ஐயச், சார்பான) மூவகைச்சன்னியும் நீங்கும்.

மாந்த சுரத்திற்கு மருந்து.

1. சீந்திற்தண்டு, களிப்பாக்கு, பாலில் 10 முறை தூய்மை செய்த சிவதைவேர், கடுக்காய், சுக்கு, கடுகுரோகணி, ஒரு எடை யாய்த் தட்டி ஒரு

Koviloor Digital Library

படி நீரிற்போட்டு அரைக்கால் படியாய் வற்ற வைத்துச் சங்களவு கொடுக்கத் தீரும்.

2. விதைநீக்கிய 16 கடுக்காய், இந்த எடை, கஸ்தூரிமஞ்சள், மருட்கிழங்கு இவைகளைப் பொடித்து ஒரு படி ஆமணக்கெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்து உள்ளுக்குக் கொடுத்து உச்சியிலும் தடவத் தீரும்.

3. சீரகம், கிராம்பு, திப்பிலி, நெல்லி, வேம்பு, புளி, விஷ்ணுகரந்தை, பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஓரிலைத் தாமரை, ஓர் உடையாய்க் கூட்டிக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

4. உள்ளி, அவுரி, குட்டிவிளா இவைகளை ஒரு எடையாய்ச் சிவக்க வறுத்துக் குடிநீர்செய்து சங்களவு கொடுக்கத் தீரும்.

5. புளி, நுணா, நெல்லி, வேம்பு, ஓதி, தகரை, பொடுதலை, அம்மான்பச்சரிசி இவைகளின் ஈர்க்கு, வில்வம், சிறுபுள்ளடி, கோழியவரை, நிலவிளா, பழம்பாசி, (நிலத்துத்தி), இவைகளின் இலை, நரிப்பயற்றங்கொடி, விஷ்ணுகரந்தை, நன்னாரி, கோரைக்கிழங்கு, செருப்படை, மணத்தக்காளி, வல்லாரை, சீந்தில், பேய்ப்புடல், வில்வ ஓடு, வகைக்கு ஒரு பிடி அரிந்து பொன்னிறமாய் வறுத்து ஒரு படி தண்ணீரில்போட்டுக் கால் படியாய் வற்றவைத்து அதில் கோட்டம், விளாம்பிசின், இலவம்பிசின், மாசிக்காய், சாதிக்காய், வெந்தயம், வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டு மூன்று நாள்கள் இரண்டு வேளையும் கொடுக்க நாட்பட்ட மாந்தசுரம், வாத, பித்த, சிலேத்தும சுரம் நீங்கும்.

பச்சைக்கற்பூரம், இலவங்கம், வால்மிளகு, சிறுநாகப்பூ, கடுகுரோகணி, ஏலம், சடாமாஞ்சில், சுக்கு, சீரகம் வகைக்கு ¼ வராகன் எடை, நேர்வாளம் 2 ¼ வராகன் எடை, பொற்றலைக்கரிப்பான் சாற்றால் ஒன்பது நாட்களாட்டி மிளகு அளவு உருண்டை செய்து இஞ்சி, தேன், தாய்ப்பால் இவைகளில் கொடுக்க மாந்த சுரம் முதலான சகல சுரமும் நீங்கும்.

வறட்சுரம், மாந்தசுரத்திற்கு மருந்து.

பூவரசிலை, கற்பூரம், சமனாயரைத்து 1 பலம் அடைபோல் தட்டி நாழி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வெந்த பதத்தில் அடையை எடுத்துப்போட்டு ஏலம், சாதிக்காய், சாதிப். பத்திரி, வகைக்கு அரை வராகன் எடை பொடிசெய்து மேற்படி ஆழாக்க எண்ணெயில் கலந்து ஒரு துட்டெடைவீதம் கொடுக்க நீங்கும்.

மாந்த கணசுரம், வயிற்றுப் பொருமல், வாந்திக்கு மருந்து.

இரசச்செந்தூரம், திரிபலை, குங்குமப்பூ, கஸ்தூரி, ஏலம், திரிகடுகு, கோரோசனை வகைக்கு ¼ பலம், கிராம்பு, (இலவங்கம்) 1 வராகன் எடை கருநொச்சி சாற்றால் அரைத்துச் சிறுபயறுபோல் உருண்டைசெய்து துளசிச் சாற்றில் கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

மாந்தசுர தோடத்திற்கு மருந்து.

ஆமணக்கெண்ணெய் 1 படி, நுணாஇலைச்சாறு அரைப்படி, ஈருள்ளிச்சாறு 1/4 படி, வெந்தயம் ½ பலம் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

கணசுரம், தோடம், வயிற்றுக் கழிச்சல், பித்தம், இருமல், வாந்திக்கு மருந்து.

கடையில் விற்கும் இரசசெந்தூரத்தைச் சம்பழச் சாற்றால் 1 சாமமரைத்துச் சிறுபயறுபோல் உருண்டைசெய்து துளசி, செம்முள்ளி, ஆடாதோடை, தூதுவேளை, விஷ்ணுகரந்தை, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கு, நொச்சி இவைகளின் இலைகளை இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததில் மேற்படி, உருண்டையையும் கோரோசனையையும் அரைத்துத் திரிகடுகு வெதுப்பிய பொடித்த தூளும் கலந்து கடிகை (வெருகடி) அளவு கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம்.

இரத்தகண மூலத்திற்கு மருந்து.

திரிகடுகு, வெண்காரம், சாதிலிங்கம் வகைக்கு 1 பலம், எலுமிச்சங்காய், சாதிக்காயும், புளியம்வித்தின் மேற்றோலும் மேற்படி உருண்டையும் சம எடையாய்ப் பொடித்து வில்வப்பழச்சதைக்குள் வைத்து மூன்று நாட்கள் உட்கொள்ள நீங்கும்.

கணக்காய்ச்சலுக்கு மருந்து.

தூதுவேளை, கண்டங்கத்திரி, ஆடாதோடை, செம்முள்ளி விஷ்ணுகரந்தை, சங்கு, இண்டு, சடைச்சி, துளசி இவைகளின் இலைகளை வகைக்கு ஒருபிடி வீதம் இடித்ததற்குள் ஒரு வராகன் எடை ஓமத்தை முடித்து வைத்துப் பிட்டவியலாய் அவித்துச் சாறுபிழிந்து அதில் ஓமத்தைக் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

குளிர் சுரத்திற்கு மருந்து.

அரசிலையையும் அதன் பட்டையையும் கற்றாழஞ் சோறும் தட்டிச் சாறுபிழிந்து ஒரு கரண்டி வீதம் கொடுக்க நீங்கும்.

கணக்காய்ச்சல் மாறல் சுரத்துக்கு மருந்து.

அதிமதுரம், இலவங்கம், ஏலம், சண்பகமொக்கு, கோட்டம், சுக்கு, சீரகம், முத்தக்காசு, வறுத்திடித்து வடிகட்டிச் சர்க்கரை கலந்து கடிகை அளவு அருந்த கணசுரம், மாறல் சுரம் தீரும்.

கணக்காய்ச்சல் மயக்கத்திற்கு மருந்து

புளி, வேம்பு, மா, நெல்லி, நாரத்தை, நுணா, தகரை, நிம்பன் இவைகளின் ஈர்க்கு, வல்லாரை, பழம்பாசி, (நிலத்துத்தி), சிறுபுள்ளடி, முத்தக்காசு, ஈருள்ளி, அத்தி, சிற்றாமுட்டி, மிளகு தக்காளி, முசுமுசுக்கை, விஷ்ணுகரந்தை, நரிப்பயற்றங்கொடி, பற்படாகம், மூக்குரட்டி, அம்மான்பச்சரிசி,

Koviloor Digital Library

சீந்தில், நற்சீரகம், சுக்கு, வெந்தயம் வகைக்கு அரைப்பலம் வறுத்துக் குடிநீர் செய்து அதில் கோரோசனை, அக்கிராகாரம், அதிமதுரம், கலைக்கொம்பு, கோட்டம் வகைக்கு ஒரு பணவெடை அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும்.

கணபாண்டு, கணசுரம், என்புவெட்டை, இருமல், இரத்தவெட்டை இவைகட்கு மருந்து.

ஆவாரை, சரக்கொன்றை, விஷ்ணுகரந்தை, நிலக்குமிழ், இவைகளின் வேர்; சிறு அம்மான்பச்சரிசி, ஏலம், நற்சீரகம், நெருஞ்சில் வகைக்கு 1 ½ பலம் இடித்து அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க்காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

கழிச்சல் தோடத்திற்கு மருந்து.

உப்பிலிப்பூண்டை (உப்பிலாங்கொடி) நறுக்கி, பசுவின் நெய்யில் போட்டு வெய்யிலில் நாலுசாமம் வைத்துப் பின்பு குழந்தைகட்குக் கரண்டி (தேக்கரண்டி) நிறை கொடுக்க நீங்கும்.

காய்ச்சல், பெருங்கழிச்சல், சுரத்திற்கு மருந்து.

அவுரிவேர், நெற்பொரி, சடாமாஞ்சில், அதிமதுரம், சமனாய்ப் பொடித்துக் கடிகை அளவு சர்க்கரை, தேன் விட்டுக் கலந்து கொடுக்கக் காய்ச்சல் நீங்கும்.

அதிவிடயத்தைப் பொடித்துத் தேனில் கொடுக்க பெருங்கழிச்சல் இருமல் நீங்கும்.

1. வேம்பு, இலுப்பை, மாவிலிங்கு, பாவட்டை, முருங்கை, நுணா, இவைகளின் ஈர்க்கு; வேலிப்பருத்தி, தைவேளை, சாரணை இவைகளின் வேர்; பேய்ப்பாகல் வகைக்கொருபிடி வறுத்து இருநாழி நீரில் போட்டுத் திப்பிலி, மிளகு, ஆமையோடு, சுக்கு, வசம்பு, ஓமம், வகைக்கு கால் பலம் முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சி அதில் மேற்படி மருந்தை அரைத்துக் கலக்கிச் சங்களவு கொடுக்க நீங்கும்.

2. கச்சந்தராய் (துரா இலை), பொன்னாங்காணி, சாரணை இவைகளின் வேர்களை ஒரு நிறையாய் உள்ளித் தைலத்தால் அரைத்து ஒரு கழஞ்சு வீதம் கொடுக்க நீங்கும்.

விக்கல், கக்கல், சுரம், இருமலுக்கு மருந்து.

கண்டங்கத்திரிவித்து, அமுக்கரா, திப்பிலி இவை சமன்பொடித்துக் கடிகை (வெருகடி) அளவு கொடுக்க நீங்கும்.

சீதள சுரத்திற்கு மருந்து.

1. கண்டங்கத்திரி, சீந்தில், தாமரைவளையம் இவைகளைக் குடிநீர் செய்து அதில் முத்தக்காசு ¼ பலம் பொடித்துத் தூவி சங்களவு கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

சுரம், இருமல், சீதள சுரத்திற்கு மருந்து.

சித்திரமூலம், தூதுளை, கண்டங்கத்திரிவேர், கோட்டம், கற்கடக சிங்கி, முசுமுசுக்கை, முள்ளி, அரத்தை, திரிகடுகு வகைக்கு 1 பலம் குடிநீர் வைத்து ஆறு முறை சங்களவு கொடுக்க நீங்கும்.

சீதளம், விடசுரத்திற்கு மருந்து.

சுக்கு, மிளகு, திப்பிலி, வசம்பு ¼ பலம் வீதம் தட்டி ஒரு படி நீரில்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துத் தேன்விட்டு உட்கொள்ள நீங்கும்.

சுரத்திற்கு ஏலாதி மாத்திரை.

ஏலரிசி கால் பலம் (8 3,4 கிராம்), கோரோசனை 3 வராகன் எடை, அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, இலுப்பைக்கொட்டை, சாத்திரபேதி, பெருஞ்சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு 1 வராகன் எடை குமரிச்சாற்றிலும், தாய்ப்பாலிலும் மைபோலாட்டிக் குன்றிபோலுருண்டை செய்து தாய்பாலில் கொடுக்க சுரம் நீங்கும்.

சுரம், வறட்கணம், இரத்தகணம், குழிதோடம், சவலைக்கு மருந்து.

கற்றாழைச்சாறு, விஷ்ணுகரந்தைச்சாறு, இளநீர், பசுவின் பால் வகைக்கு 1 படி, நிம்பச்சாறு அரைப்படி, சிற்றாமணக்கெண்ணெய் 3 படி ஒன்றாய்க் கலந்து சந்தனம், கணப்பூண்டு, சிங்கி வகைக்கு 1 பலம், சண்பகப்பூ அரைப்பலம் சாதிப்பச்சை, பூலாக்கிழங்கு, ஏலம், விலாமிச்சு, வெட்டிவேர், நன்னாரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், கடுகுரோகணி, கிராம்பு, முத்தக்காசு, சன்னலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ வகைக்கு 1 வராகன் எடை அரைத்து எண்ணெயில் கலந்து பதமாய்க் காய்ச்சி காசெடை இருவேளை கொடுத்துவர நீங்கும்.

பழஞ்சுரத்திற்கு மருந்து.

தூதுவேளை, காஞ்சொரிவேர், சீந்தில், பற்படாகம், நொச்சி, பேராமுட்டி, சிற்றாமுட்டி, கடுக்காய் வகைக்கு கால் பலம் நறுக்கிப் போட்டுக் குடிநீர் வைத்துத் திப்பிலியைப் பொடித்துத்தூவி சங்களவு கொடுக்கத் தீரும்.

பழஞ்சுரம், விடாச்சுரம், நஞ்சுவீறு, சன்னிக்கு மருந்து

ஏலம், கிராம்பு, முத்தக்காசு, அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கடுகு, சுக்கு, கொடிமுந்திரிகைப்பழம் (திராட்சை), கோரோசனை, நன்னாரி, நிலப்பனைக்கிழங்கு, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், சந்தனம், இலுப்பைப்பூ, தேவதாரம், திப்பிலி, கடுகுரோகணி, வகைக்கு கால் கழஞ்சு கல்வத்தில் பொடித்துச் செவ்விளநீரிலும் முலைப்பாலிலும் நாலு சாமம் அரைத்துக் குன்றிபோலுண்டை செய்து நிழலில் உலர்த்தி முலைப்பாலில் கொடுக்கப்

Koviloor Digital Library

பழஞ்சுரம், விடாச்சுரம் நீங்கும், முதியார் கூந்தல் குடிநீரில் கொடுக்க சன்னிதோடம் நஞ்சு, ஆமசுரம் கணச்சுரம் நீங்கும், இச்சாபத்தியம்.

கழிச்சல் சுரம், காய்ச்சல், இரைப்பு, கக்கல், சுரதாபம், விக்கல் தாபத்திற்கு மருந்து.

1. மான்கொம்பு, திப்பிலி, அதிவிடயம், சமனாய்ப்பொடித்து கடிகை அளவு தேனிற்கொடுக்க சுரம் கக்கல் தீரும்.

2. ஆல், மா, நாவல், இவைகளின் தளிரை நறுக்கிக் குடிநீர் செய்து கொடுக்கச் சுரதாபம், விக்கல், பெருங்கழிச்சல் நீங்கும்.

பித்தசுரம், தாபசுரம், பாதவெடிப்புக்கு மேல்பூச எண்ணெய்.

பசுவின் நெய் 1 படி, பசுவின் பால் 3 படி, நல்லெண்ணெய் 6 படி, பெருங்குரும்பை, அதிமதுரம், நன்னாரி, கருவேலிஇலை, கடுகுரோகணி, செவ்வள்ளிக்கொடி, அமுக்கறாவேர், மரமஞ்சள், சந்தனம், சுக்கு, காசிக்கட்டி, அரக்கு, கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்து ஒன்றாய்க் கலந்து காய்ச்சி தலையிலும் உடம்பிலும் பூச -சூரியனைக்கண்டபனிபோல் பறந்திடும்.

கணக் காய்ச்சலுக்குக் குடிநீர்.

வெட்பூலா, வில்வம், சிற்றாமுட்டி, விஷ்ணுகாந்தி, நன்னாரி இவைகளின்வேர் வகைக்கு 5 பலம்; மிளகு அரைப்பலம், இருபங்கு செய்து இரண்டு படி தண்ணீரில் ஒருபங்குதூள் போட்டு வற்ற வைத்து ஐந்து பொழுது கொடுக்க நீங்கும்.

சகல காய்ச்சலுக்கும் பச்சைக்கற்பூர மாத்திரை.

பச்சைக்கற்பூரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய் வகைக்கு 2 கழஞ்சு, வாளம், ஆறு கழஞ்சு, குமரிச்சாற்றால் அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து உலர்த்தி சர்க்கரையில் ஒரு குளிகையிட மூன்றே முக்கால் நாழிகையில் கழிச்சலாகி (பேதி). காய்ச்சல் தீரும்.

குளிர் காய்ச்சலுக்கு மருந்து.

மேற்படி மாத்திரையை முன்னால்கொடுத்து அப்பால் குப்பமேனியிலை, கொடிவேலியிலை, மிளகு சமனாய் நிறுத்து விழுதுபட அரைத்துக் கொடுக்க நீங்கும்.

சகல காய்ச்சலுக்கு மருந்து.

1. ஆடுதின்னாப்பாளை வேர்ப்பட்டையை நிழலில் உலர்த்தி கருவாப்பட்டை (இலவங்கப் பட்டை) யைச் சமன் கூட்டிப் பொடித்துத் துணியில் சல்லித்து எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஆட்டி பருத்திக் கொட்டை அளவு உருண்டை செய்து தக்க துணைமருந்தில் கொடுக்க சகலகாய்ச்சலும் நஞ்சும் நீங்கும்.

Koviloor Digital Library

2. விஷ்ணுகாந்தி, சுக்கு, கடுக்காய், இண்டு, வாலுழுவை ஒரு நிறையாய்க் குடிநீர் செய்தாவது சூரணித்தாவது அதில் யேற்படி மாத்திரையைக் கொடுக்கச் சகல காய்ச்சலுக்கு தீரும்.

காய்ச்சலுக்கு ஆகாத உணவுப் பண்டங்கள்.

பாரும் பாலர் காய்ச்சலுக்குப் பகரும் பதார்த்தந் தள்ளுவகை
நேரு மிளநீர் நெய்பாலாம் நிறைந்த கடுகு தயிர்புளிப்பு
சாரும் பச்சை மீனிறைச்சி சாற்றுங் கோழி தேங்காயாம்
சோ௱ரு மாம்ப ருப்பண்டம் சொன்னார் புனுகு பருப்பாமே. 153

(அ.பொ.):– தள்ளும் வகை=நீக்கும் விவரம்;
மாம்பருப்பு=மாங்கொட்டைப்பருப்பு;
அண்டம்=கோழிமுட்டை முதலானஎல்லா முட்டைகளும்;
புளிப்பு=புளி முதலான புளிப்புச் சுவையுள்ள பண்டங்கள்.

ஆமே சந்தம் பயறளவாம் அரிய மஞ்சள் பொரிகடலை
காமே யிரவுப் பழங்கறிகள் கழறும் முன்னாட் சோறு
சாமே புணர்ச்சி யிவைகொள்ளில் சாற்றுஞ் சன்னி தோடமதாம்
நாமே சொன்னோம் மரணமப்பா நலமா யுரைத்து வரவாமே. 154

(அ.பொ.):– புணர்ச்சி=உடலுறவு.

பால், நெய், இளநீர், தயிர், புளிப்பு, கடுகு, பச்சைமீன், இறைச்சி, கோழி, தேங்காய், மாங்காய், பருப்பு, முட்டை, சந்தனம், புனுகு, பயறு, புணர்ச்சி இவைகளை அனுசரித்தால் சன்னிதோன்றி மரணம் சம்பவிக்கும்.

சன்னி வகுப்பு (கலப்பு நோய்)

தூறும் நாவது தூரட்டு முட்போலா
ஆறு மஞ்சதும் மாய்ந்து கலங்குமே. 155

(அ.பொ.):– தூறும்=(மொழியைச்) சொரிந்திடும்; தூரட்டுமுள்=வளைந்த முட்கள்; ஆறு=சுவையாறு அறிதல்; அஞ்சு=ஐந்து இந்திரியங்களின் தொழில்கள்; மாய்ந்து=ஒழிந்து.

மாந்தசன்னி நோயின் இயல்பு.

1. மாந்தத்தின் பேரில் சன்னி தோன்றிடில், சுரம், மயக்கம் தாகம் காணும்; நாவு முள்ளுபோலிருக்கும்; கண்தாழும்; புத்தி கலங்கும்.

2. குழந்தை ஓயாது அலரும்; ஒரு கண்திறந்து ஒரு கண்ணை உருட்டி விழித்துப் பார்த்தழும்; ஊசிபோலக் கழுத்து நேர்ந்து உடம்பெல்லாம் நரம்பு தோன்றும்; பாசிபோல் விழிபசக்கும்.

மருத்துவம்:– 1. கஞ்சா, ஊமத்தை, கச்சந்திராய் இவற்றின் வேர் கோரைக்கிழங்கு சமனாய் வேப்பெண்ணெய் விட்டு வறுத்துப் பொடித்து நெருப்பில் போட்டு, புகைகாட்டத் தீரும்.

Koviloor Digital Library

2. வெள்ளைகாக்கணவேர், உத்தாமணியின்வேர், மாவிலிங்கப் பட்டை, முருங்கைப்பட்டை வகைக்கொரு பலம் ஒன்றாய் இடித்துச் சாறு பிழிந்து முறித்துச் சூடாற்றி அதில் திப்பிலி, மிளகு, சுக்கு, பொடித்துப் போட்டு நவலோகபூபதி மாத்திரையை இழைத்துக் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

ஆம சன்னியின் இயல்பு

குழந்தை முலைஉண்ணாது அழும்; கண்விழியாது மயங்கும்; முகம் வேறுபடும்; பற்பல வலி உண்டாகும்; குரல்கம்மும்; மலங்கட்டி சுரங்காயும்; தாகிக்கும்; வயிறு ஊதும்; நெற்றி சுழிக்கும்; மயக்கங் காணும்.

மருத்துவம்:– 1. கடுக்காய், கடுகுரோகணி, சிவதை, திரிகடுகு ஒரு நிறையாய் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

2. கன்னிக்கோழிமுட்டைத் தைலம், வேப்பெண்ணெய் சமன் கலந்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

3. சாரணை, மூக்குரட்டை, பொடுதலை, திரிகடுகு, நாய்த்துளசி, சீரகம், சமனாய் நறுக்கிப்போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

4. ஆமணக்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் சமனாய்க் கலந்து அதில் கொடிவேலி (சித்திரமூலம்), சங்கு, எருக்கு, முடக்கொத்தான் இவைகளின் வேர்ப்பட்டைகளை ஒரு நிறையாய் நறுக்கிப்போட்டுக் காய்ச்சி அதற்கு நிகர் வெள்ளுள்ளித் தைலமும் கலந்து மேலே துவாலையிடத் தீரும்.

கோராம சன்னியின் இயல்பு

வாயு மிகும்; உடம்பு தீப்போற் காயும்; சதை குலுங்கி வலிக்கும்; கால் கைகள் பதைக்கும்; வாதநீர் காலில் இறங்கும்.

மருத்துவம்:– குமட்டிக்காய்ச் சாறு, நூறாண்டு சென்ற வேப்பம்பட்டைக் குடிநீர், விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் வெண்தோன்றிக்கிழங்கு, கருடன் கிழங்கு, நீர்முள்ளி, சிவனார்வேம்பு, தவசுமுருங்கை, வெள்ளைச்சாரணை, முடக்கொத்தான் இவைகளின் வேர்; ஏலம், சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, பெருங்காயம் வகைக்கு 2 பலம், தட்டிப்போட்டுக் கோழிமுட்டைத் தயிலம், முசுறுமுட்டை வகைக்கு 2 பலம் கூடச்சேர்த்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துக் காசு எடை மூன்று நாள் பத்தியமாய்க்கொடுக்கத் தீரும்.

தாந்திரிக சன்னியின் இயல்பு.

குழந்தை தாய்ப்பால் உண்ணாது; காய்ச்சல் காயும்; தாகம் காணும்; மேனி பதைக்கும்; அரைகுளிர்ந்து இருக்கும்; மூர்ச்சை காணும்.

மருத்துவம்:– வேளை, ஊமத்தை, கஞ்சா, முருங்கை, சீந்தில், இவைகளின் வேர், வெள்ளுள்ளி, வசம்பு, மயிலிறகு ஒரு நிறையாய் தட்டிக்

Koviloor Digital Library

கம்பளியில் கட்டி வேப்பெண்ணெயில் நனைத்துத் தீயில் கொளுத்தி அவித்துப் புகைகாட்டத் தீரும்.

நீங்காச் சன்னியின் இயல்பு.

உடல் மஞ்சளிக்கும்; குழந்தை தாய்ப்பால் உண்ணாது; பெருமூச்சு விடும்; கண், நாக்கு, புருவம், கை, கால் கோணி வலிக்கும்; விழி மேல்நோக்கும்.

சகல மாந்த சன்னிக்கு மருந்து.

1. சின்னி இலை, கிளாயிலை, வெள்ளைப்பூண்டு, வசம்பு, ஓமம், சமனாக இடித்துச் சாறு பிழிந்து மூன்றுநாள் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச நீங்கும்.

2. நல்லெண்ணெய் அரைப் படி, முருங்கைப்பட்டைச் சாறு 1 படி இவைகளைக் கலந்ததில் வெள்ளைப்பூண்டு 1 பலம், வசம்பு, கொளுத்திய கரி கால்பலம் கூடப்போட்டுக் காய்ச்சிக் கொடுக்க நீங்கும்.

தோடசன்னி, மாந்தசன்னி, பித்தசுரம், வாந்திக்கு மருந்து.

கஸ்தூரி 1 வராகன் எடை (3 ½ கிராம்), குங்குமப்பூ 1 வராகன் எடை, கோரோசனை 3 வராகன் எடை (10½ கிராம்) தாய்ப்பால் விட்டரைத்துக் குன்றி எடை அளவு உருண்டை செய்துகொடுக்க நீங்கும்.

மாந்தகண சன்னிக்கு மருந்து.

1. மாசிக்காய், திப்பிலி, கோரோசனை, கோட்டம், கருஞ்சீரகம், அக்ராகாரம் சமனாய் தாய்ப்பால் விட்டரைத்துக் குன்றி போல் உருண்டை செய்து தாய்ப்பாலில் கொடுக்க நீங்கும்.

2. ஏலம், இலவங்கம், அதிமதூரம், வெட்டிவேர், சுக்கு, நன்னாரி, முந்திரிப்பழம், (திராட்சை), பேரீச்சம்பழம், விலாமிச்சவேர், கோரோசனை, தாளிசப்பத்திரி, நிலப்பனைக்கிழங்கு, சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி வகைக்கு 1 வராகன் எடை (3 ½ கிராம்) தண்ணீர் விட்டு நன்றாய் அரைத்துக் குன்றி அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி தாய்ப்பாலில் கொடுக்க மாந்தகணம் தீரும்.

சன்னிசுரம், கபத்திற்கு மருந்து.

1. வேப்பெண்ணெய் ½ படி, சங்கிலைச்சாறு, கருவாப்பட்டைச் சாறு, முசுறுமுட்டை வகைக்கு 1/8 படி ஒன்றாய்க்கலந்து அதில் சுக்கு, திப்பிலி, வசம்பு, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், பூண்டு வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) நறுக்கிப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொள்ள நீங்கும்.

Koviloor Digital Library

2. வேப்பெண்ணெய் ½ படி, குட்டிவிளா, தூதுவேளை, நாய்வேளை இவைகளின் சாறு வகைக்கு ஒரு சேர், சீரகம், கஸ்தூரி மஞ்சள், வெங்காயம், சிற்றரத்தை, மரமஞ்சள் வகைக்கு 2 வராகன் எடை (7 கிராம்) நறுக்கிப்போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொள்ள நீங்கும்.

நச்சுசன்னி, குளிர்சன்னி, சுரம், விக்கலுக்கு மருந்து

மஞ்சள், சாதிக்காய், திரிகடுகு, கிராம்பு, கடுகுரோகணி, ஏலம், நாபிக்கிழங்கு வகைக்கு 1 வராகன் எடை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு சாமம் அரைத்துப் பயறுபோல் உருண்டைசெய்து அரை ஆழாக்கு மாசிப்பத்திரிக் குடிநீரில் ஒருமாத்திரையிடத் தீரும்.

வலிப்புநோய் வகுப்பு

அருந்தும் பண்டந் தன்னாலே யரியா மந்தம் பற்றியேதான்
திருந்தும் வலிப்பு மயக்கமுந்தான் தீரா யிசிவு பற்கடிப்பாம்
குருந்து மன்னந் தண்ணீருங் குளிரச் சுத்தி செல்லாது
பருந்துஞ் சன்னி பற்கிட்டும் பகர்ந்தார் முனிவர் பகர்ந்தாரே. 156

(அ.பொ):– இசிவு=வலிப்பு; அன்னம்=சோறு (உணவு) ; பற்கிட்டும்=பல்லைக் கடித்துக்கொள்ளும்.

தின்பண்டங்களினால், மந்தம் பற்றிப் பலவித வலிப்பு, மயக்கம், இசிவு, பற்கடிப்பு, பற்கிட்டல் காணும்; அன்னந் தண்ணீர் செல்லாது.

மருத்துவம்:– 1. குதிரை நகம், மயிலிறகு, மிளகு, வசம்பு, சுக்கு, பேயத்தி, அழிஞ்சில், செம்மறியாட்டுக் கொம்பு சமனாய்ப் பொடித்துக் கம்பளியாற் சுற்றி வேப்பநெய்யிற் தோய்த்துக் கொளுத்திப் புகைக்கத் தீரும்.

2. குதிரைக்குளம்பு, கொடிவேலி, மூலம், சிறுபுள்ளடி, சமூலம், தைவேளைச் சமூலம், வெள்வேல், விடத்தேர் இலை, முருங்கை இவைகளின் பட்டை வகைக்கு 2 பலம், ஆமையோடு, பூண்டு வசம்பு 1 பலம் இவைகளை நறுக்கி ஒரு படி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி ஒரு துட்டெடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசத் தீரும்.

மாந்த வலிப்பு, காக்கை வலிப்புகளுக்கு மருந்து.

கொடிவேலி, சங்கு, எருக்கு, இவைகளின் வேர்ப்பட்டை, குங்குமப்பூ வகைக்கு 1 வராகனெடை மைபோலரைத்து வெந்நீரில் கலக்கி வடிகட்டிக் கொடுக்கத்தீரும்.

காக்கை வலிப்புக்கு மருந்து.

கொழிஞ்சி, தழுதாழை, நிலவேம்பு, மிளகரணை இவைகளின் வேர், வசம்பு, திப்பிலி மூலம், காக்கையின் பித்து, கொழுப்பு முட்டை இவைகளைப் பொடித்து விளக்கெண்ணெயிற் போட்டுக் காய்ச்சி வறுத்துப் பொடித்த ஓமம், வெண்காரம் உள்ளி வகைக்கு ¼, பலம் நறுக்கிப் போட்டிறக்கி ஒரு கரண்டி வீதம் ஆறு வேளை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

சளி, இருமல், கக்கல், காய்ச்சல், நச்சு, சுரம், விக்கல், வலிப்பு, சன்னிதோடம், வயிற்றுப் பொருமலுக்கு மருந்து.

சாதிக்காய், கிராம்பு, ஓமம், கருஞ்சீரகம், சுக்கு, திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், வசம்பு, காயம், வெள்ளைக் காக்கணான் வேர்ப்பட்டை சமன் கூட்டி வெந்நீராலரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்துலர்த்தி மேற்படி நீரில் குழந்தைகட்கு மூன்று நாள் கொடுக்கத் தீரும். கழிச்சல் அதிகப்பட்டால் வசம்பைச் சுட்டு நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

புற இசிவுக்கு மருந்து.

தும்பை, துளசி, இஞ்சி, இவைகளின் இலைகளைச் சரியெடையாய் நிறுத்து அரைத்துக் கழற்சிக்காயளவு சிற்றாமணக்கிலையில் வைத்துச் சுருட்டி அதை வெதுப்பிச் சாறு பிழிந்து "காசளவாய்" மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

கழிச்சல்நோய் வகுப்பு

சொல்லுகிறேன் கழிச்சல்வகை தோடந் தன்னைச்
சுழிமந்தக் கழிச்சலெனச் செப்ப லாகும்
வெல்லுகிறேன் பாற்கழிச்சல் வறட்க ழிச்சல்
வீறான வாந்தியின்றன் கழிச்ச லரகும்
புல்லுகிறேன் கணக்கழிச்சல் மாந்தக் கழிச்சல்
புகழான ஆமத்தின் கழிச்ச லாகும்
கொல்லுகின்ற சலக்கழிச்சல் வெதுப்புக் கழிச்சல்
கூறான ரத்தத்தின் கழிச்ச லாமே.
ஆமேதான் அதிசாரக் கழிச்ச லாகும்
அப்பனே பொருமலின் கழிச்ச லாகும்
போமேதான் சீதரத்தக் கடுப்பு மாகும்
பொல்லாத கழிச்சலென்று நாம மெய்தும்
தாமேதான் பச்சிலைக் கழிச்ச லாகும்
சார்வான விடாக்கழிச் சல்சாற் றலாகும்
நாமேதான் சொன்னோமே கழிச்சல் மார்க்கம்
நவின்றிட்டார் பாலருக்கு நவின்றிட் டாரே. 157

சுழிமாந்தக் கழிச்சல், பால் கழிச்சல், வறள் கழிச்சல், வாந்திக் கழிச்சல், கணக் கழிச்சல், மாந்தக் கழிச்சல், ஆமக் கழிச்சல், வெதுப்புக் கழிச்சல், இரத்தக் கழிச்சல், அதிசாரக் கழிச்சல், பொருமல் கழிச்சல், சீதரத்தக் கடுப்பு, பச்சிலைக் கழிச்சல், விடாக் கழிச்சல் என்பன கழிச்சலின் வகைகளாம்.

கழிச்சல் தோடத்திற்கு மருந்து.

உப்பிலியின் பூண்டை நறுக்கி ஆவின் நெய்யிற்போட்டு நாலுசாமம் வெய்யிலில் வைத்துக் கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

மாந்தக் கழிச்சல், மாந்த சன்னிக்கு மருந்து.

கனலில் சட்டியைக் காயவைத்து ஒரு சிரங்கை உப்பைப் போட்டுச் சாம்பலாக்கிக் கொட்டித் துடைத்துப் போட்டு ஒரு சேர்வசம்பைப் போட்டுக் கருக்கித் தீப்பற்றி வேகும்போது ஒரு பிடி வேளையை மூன்று அறுப்பாகச் செய்து போட்டுப் பொன்னிறமாய் வறுத்துப் பின்பு அரைச்சிறங்கை நீர் தெளித்துச் சுண்டு மட்டும் வறுத்துப் பின்னும் இந்தப்படி இரண்டுமுறை நீர் தெளித்து சுண்ட வறுத்ததின்பேரில் ஒரு படி நீர்விட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி இறக்கி ஒரு சங்குகொடுக்க நீங்கும்.

கழிச்சலுக்கு மருந்து.

1. கோரோசனை, களிப்பாக்கு, சீரகம், காசுக்கட்டி, இவைகளைச் சமமாய் எடுத்து எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்துப் பாக்கு அளவு தாய்ப்பாலில் கரைத்துக் கொடுக்கக் கழிச்சல் உடனே நிற்கும்.

2. தைவேளையிலை, வசம்பு பூண்டு இவைகளைத் தட்டி வெதுப்பிச் சாறு பிழிந்து கொடுக்க நீங்கும்.

3. ஈருள்ளி, வேலிப்பருத்தியிலை, முடக்கொத்தானிலை இவைகளைச் சமமாய் வெதுப்பிச் சாறு பிழிந்து ஒரு துட்டெடை கொடுக்க நீங்கும். இச்சாபத்தியம்.

4. மாவிலிங்கு, சங்கு, செம்முள்ளி, வேலிப்பருத்தி, பொடுதலை, வேளை இவற்றை ஒரு நிறையாய் எடுத்து அரைத்து எலுமிச்சங்காய் அளவு எருமைவெண்ணெயில் வேகவைத்துக் கொடுக்க நீங்கும்.

5. கீழக்காய்நெல்லிவேரை ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்துத் தாய்ப்பாலிற் கொடுக்க நீங்கும்.

பால்போல் கழிவதற்கு மருந்து

பிரண்டையிலே, பெருந்தும்பையிலை, இவைகளைக் கரண்டியில் வெதுப்பி தாய்ப்பால் விட்டுத் தட்டிச் சாறு பிழிந்து அதில் கோரோசனை, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், வகைக்கிரண்டு நெல்லெடை பொடித்துப் போட்டு மூன்றுபோது கொடுக்க நீங்கும்.

கழிச்சல் சுரத்திற்கு மருந்து

அதிவிடயம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அபினி, கடுக்காய், தான்றிக்காய், மிளகு, நற்சீரகம். கருஞ்சீரகம் வகைக்கு அரைவராகனெடை, ஏலம் 1 வராகன் எடை, மாதுளந்தளிரும் அத்திப்பட்டையும் குடிநீர் செய்து அதனாலே மேற்படி மருந்துகளை அரைத்து அடைபோல்தட்டி அரசிலையிற்கட்டி சட்டியில் வைத்து மேற்படி குடிநீரைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டு வேகவைத்து அப்பால் இந்தப்படியே பத்து முறை மேற்படி மருந்தை வேகவைத்துப்பின் மைபோலரைத்துக் குன்றியளவு உருண்டை செய்து வடிகட்டின எருமைத்தயிரில் கொடுக்கக் கழிச்சல் தீரும்; வெந்நீரில் கொடுக்கச்சுரம் தீரும்.

Koviloor Digital Library

சுழிகணம், சுரம், வறட்சிக்கு மருந்து.

இலந்தை, நாரத்தை, புளி, கணைப்பூண்டு, இவைகளின் ஈர்க்குகளைச் சமனாய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

கழிச்சல் இருமலுக்கு மருந்து.

ஆடுதின்னாப்பாளை சமூலம், சிறுதேக்கு (கண்டுபாரங்கி) அகிமதுரம், வசம்பு, சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய் தான்றிக்காய், அதிவிடயம், கோட்டம், முத்தக்காசு வகைக்கு 1 கழஞ்சு நறுக்கி இம்பூரல்சாறு, பசுவின் நெய் வகைக்கு 1 படி; ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

கக்கல், கழிச்சலுக்கு (வாந்திபேதி) மருந்து,

நெல்லி, மா, அத்தி, அரசு, இவைகளின் பட்டை, பருத்திப் பருப்பு காற்படி பிஞ்சு அத்தித்தளிர் வகைக்கு 1 வராகன் எடை நறுக்கி குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

கழிச்சல், இருமல், வாந்திக்கு மருந்து.

வேலிப்பருத்திச்சாறு, எருமை வெண்ணெய் வகைக்கு ¼ படி, கருஞ்சீரகம் 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மாந்தக் கழிச்சலின் இயல்பு.

வாந்தி, கிரந்தி, மூர்ச்சை, மேனியில்வெதுப்பு, கால்கையில் குளிர்ச்சி, பலவிதமாய் மலங்கழியும்; வாயு, இருமல், குரல் கம்மல் தோன்றும்.

மருத்துவம்:– வேளை, நாய்வேளை, வேலிப்பருத்தி, குப்பை மேனி, இவைகளின்இலை, அகத்திப்பழுப்பு, வசம்பு, வெள்ளுள்ளி, இவைகளைத் தட்டிச்சாறு வாங்கி துட்டெடை உள்ளுக் கொடுத்து மேலுக்குத் துவாலையிடத் தீரும்.

கணக் கழிச்சலின் இயல்பு

சீதமாயும் மலமாயும் கெட்டப்பாலுங் கறித்தண்ணீர் போல் பிறவிர்த்தி (பேதி) யாகும். கைகால் குளிரும்; காதடைக்கும் உடல் வெதும்பும்.

மருத்துவம்:– 1. ஈருள்ளி 10, கருவேல் ஈர்க்கு ஒரு பிடி, சீரகம் 1 வராகன் எடை, வெந்தயம் 2 வராகன் எடை இவைகளை வறுத்துக் குடிநீர் வைத்துக் கொடுக்கத் தீரும்.

2. மூக்குரட்டை, சாரணை, முடக்கொத்தான் முத்தெருக்கஞ்செவி, ஓரிதழ்தாமரை இவைகளின் சாறு 1 படி, செப்பு நெருஞ்சிச்சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, மயிலிறகு சுட்டசாம்பல் 1 பலம் இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

ஆமக் கழிச்சலின் இயல்பு.

பாலெதிரெடுக்கும்; வயிறிரையும்; இரத்தம்விழும்; கரங்காயும்; குரல்கம்மும்; கைகால் குளிர்ந்திருக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– சோற்றில் அவித்துத் தூய்மை செய்த 1 சாதிக்காய், பூரம் 1 வராகன் எடை இவைகளை ஒரு பலம் சிற்றாமணக்கெண்ணெயில் அரைத்துக் கலக்கிக்கொண்டு வேளைக்கொரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

சலக்கழிச்சலுக்கு மருந்து.

வெண்குன்றிப்பருப்பு, புளியன்விதைத்தோல், அத்திப்பால், எருமைவெண்ணெய் வகைக்கு 1 கழஞ்சு மைபோலரைத்துக் கொடுக்கத் தீரும்.

வெதுப்புக் கழிச்சலுக்கு மருந்து.

அதிமதூரம், அதிவிடயம், சாதிக்காய், மாதளம்பூ, சீரகம் வகைக்குக் கழஞ்சு கூட்டிப் புளியாரைச் சாற்றிலரைத்துத் தூதுளங்காய்ப் போல் உருண்டைசெய்து மாதுளம்பழச் சாற்றிற் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

இரத்தக் கழிச்சலுக்கு மருந்து

1. தாழைவிழுதின் சாறும், இளநீரும், எலுமிச்சம்பழச் சாறும் சமன்கலந்து அதில் சுக்கு, சீரகம், வெதுப்பிப் பொடித்த தூள் கலந்துகொடுக்கத் தீரும்.

2. சீரகம், கொத்தமல்லி, மாதுளையின் பிஞ்சு, கீழ்க்காய்நெல்லி வேர் சமனாய் வெந்நீர் விட்டரைத்துக் காலையில் கழஞ்சு அளவு கொடுத்துப் பத்தியம் தயிருஞ்சோறும் உண்ணத் தீரும்.

பொருமல், கழிச்சலுக்கு மருந்து.

ஆமையோடு, அதிவிடயம், அசமதாகம் (ஓமம்), வட்டத்திருப்பி பாவட்டை, மிளகு, சுக்கு, சமனாய் வெந்நீர்விட்டரைத்துக் குன்றிபோல் உருண்டைசெய்து கொதித்த தண்ணீரிலாவது தாய்ப்பாலிலாவது கொடுக்கத் தீரும்.

பெருங்கழிச்சலுக்கு மருந்து (அதிசாரம்)

1. கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வில்வவேர், திப்பிலி, வில்வப்பட்டை, சிறுநாகப்பூ சமனாய் நறுக்கிக் குடிநீர் வைத்துத் தேன்விட்டுக் கொடுக்கத் தீரும்.

2. காட்டாத்திப்பூ, கருங்காலிவேர்த் தோல், திப்பிலி, வில்வம், சமனாய்க் குடிநீர் வைத்துத் தேன் விட்டு சங்களவு, கொடுக்கத் தீரும்.

3. அத்திக்காயின் சாற்றால் ஓமத்தை அரைத்துத் தயிரிற் கலந்து கழற்சியளவு கொடுக்க தீரும்.

வயிற்றிரைச்சல், நஞ்சு, மூலக்கடுப்புக் கழிச்சல், கணத்திற்கு மருந்து.

அதிவிடயம், கோட்டம், கிராம்பு, மதூரம், இலவம் பிசின், விளாம்பிசின், சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், சன்ன இலவங்கப்பட்டை, ஒரு

Koviloor Digital Library

நிறையாய் மாதுளம்பழத்தினுள் வைத்துத் துணி சுற்றி மேற் சாணம் பூசிக் காயவைத்துக் கருகாமற் புடமிட்டெடுத்து அதைக் கஞ்சா சாற்றாலரைத்துக் குன்றிபோலுருண்டை செய்துலர்த்தி, கஞ்சா தென்னங்குரும்பை, தென்னம்பூ, வாழைப்பூ இவைகளின் சாற்றிலாவது தேன்,தயிரிலாவது கொடுக்கத் தீரும்.

சீத ரத்தக்கடுப்பு கழிச்சலுக்கு மருந்து.

புனல்தண்டு வேர், சீரகம், ஆவாரைப் பஞ்சாங்கம் வகைக்கு ஒரு பிடி இடித்துத் தண்ணீரில் போட்டுக் குடிநீர்செய்து குங்குமப்பூவும் கோரோசனையும் அரைத்துக் கலக்கி, ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

பச்சிலைபோல் கழிவதற்கு மருந்து.

ஏலம், சாத்திரபேதி, மதுரம் வகைக்கு ½ வராகனெடை, நீராகாரத்தண்ணீர்விட்டரைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

முட்டை உடைத்தாற் போலும் கெட்டபால் போலும் கழிதலுக்கு மருந்து.

உத்தாமணியிலை 100, சிற்றவரை இலை 5, உள்ளிப்பூண்டு 1, எருமை வெண்ணெய் இவைகளை இலைமுறியக்காய்ச்சி இறுத்துத் தாய்ப்பாலோடு குலுக்கி மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

விடாக்கழிச்சலுக்கு மருந்து.

சாதிக்காய், அதிவிடயம், சாதிப்பத்திரி, அபினி சமனாய் நல்லெண்ணெய் விட்டரைத்து நாளுக்கு ஒரு பணவெடை தாய்ப்பாலில் கொடுக்க நீங்கும்.

சகல கழிச்சலுக்கு மருந்து.

1. சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், ஏலம், அதிமதுரம், அதிவிடயம், அபின், கஞ்சா, குரோசாணி, முத்தக்காசு, வெந்தயம், சீரகம் சிறுநாகப்பூ, புளியாரை, காட்டாத்திப்பூ, மாதுளம்பிஞ்சு, வாழைப்பூ இகைளை சமனாய் கூட்டி இடித்து ஆவின் பாலில் பிட்டவியணப் அவித்தெடுத்து வாழைப்பூச் சாற்றிலாவது மாதுளம் பூச்சாற்திலாவது அரைத்து மிளகு போல் உருண்டை செய்து சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

2. புளியாரை, வாழைப்பூ சமனாய் இடித்துப் பிட்டவியலாக அவித்துச் சாறுபிழிந்து தேன் ஒருதுளி விட்டுக் கொடுக்கத் தீரும்.

அச்சரநோய் வகுப்பு

சொன்னா ரட்சர வகுப்புதன்னைச் சூட்டும் நீதி சூலியென
மன்னே சோதி வீமியென வகுத்த சூலிக பாலியெனப்
பொன்னே குமரி யுள்ளட்சரம் போற்றுந் தொகைய தெட் டாமே
அன்னே வகுப்பு நாமுரைத்தோ மறைந்தோ மாந்தற் கிதுவாமே.

Koviloor Digital Library

நீதி, சூலி, சோதி, வீமி, குண்டி, கபாலி, குமரி, உள்அச்சரங்கள் என எண்வகையாம்.

1. சூலி அச்சரத்தின் இயல்பு

சுரங்காயும்; இடைநடுக்கும்; நாவு வெளுத்து வெந்து புண்ணாகி வெள்ளாவிபோல் நாறும்; வாய்நீர் மிகவொழுகும்; வாந்தி வெள்ளோக்காளங் காணும்; உடல் கறுக்கும்.

2. நீலி அச்சரத்தின் இயல்பு

உடல் குளிரும்; தலைவலிக்கும்; சுரங்காயும்; வாய் கசக்கும்; நா வரளும்; நாவு வெந்து மாப்போலிருக்கும்; நெஞ்சு கரிக்கும்.

3. சோதி அச்சரத்தின் இயல்பு

முதுகும் வயிறுமெரியும்; தலையிடிக்கும்; கணைக்கால் நோவும்; உடலும் நாக்கும் பல்லும் அழுக்கு நிறமாயிருக்கும்; வயிறு கழியும்; வாந்தி பண்ணும்;

4. வீமி அச்சரத்தின் இயல்பு

ஈரல் நொந்து காய்ச்சல், மயக்கம், குளிர், தலைவலி, தாகங்காணும்; உடல் கறுக்கும்.

5. குண்டி அச்சரத்தின் இயல்பு

உடல் நொந்து நடுங்கும்; வாய் கூசும்; நாவுநொந்துசிவக்கும்; வயிறு கழியும்; நெஞ்சுகரித்து வாந்தி பண்ணும்; இருமல், தாகம்; மிகும்; ஈரல் விலா நோகும்.

6. கபாலி அச்சரத்தின் இயல்பு

உடல் கனக்கும்; வலிப்பெடுக்கும்; காச்சல்காயும்; நெஞ்சும் தலையும் வலிக்கும்; நாவு, தொண்டை, குடல், ஈரல் புண்ணாகும்.

7. குமரி அட்சரத்திண் இயல்பு

நாவு கசக்கும், கூசுந்தடிக்கும்; அழன்றுவெடித்து விதனமுறும்; சுரங்காயும்; இரத்தமாய் வயிறுபோகும்; இருகண்ணும் நொந்துவிடும், வாந்தியெடுக்கும்; உண்ணாக்கு வளரும்; பால் பசுமையாயிருக்கும்; மூக்கில் இரத்தம் வடியும்.

அச்சரத்தின் பொது இயல்பு

உடல்குளிரும்; தலைவலிக்கும்; தாது மிகத்துடித்து நிற்கும்; குலையும் நாவும் தொடையும் வெந்து புண்ணாகும்; நாவு வெளுக்கும்; நாசியில் நீர்வடியும்.

மருத்துவம்:– கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுக்காய், காட்டு மல்லிவேர், வகைக்கு 1 வராகன் எடை இண்டங்கொழுந்து ஒரு படி உள்ளி 2 பலம் தாய்ப்பால் 1/8 படி (மாகாணி), விளக்கெண்ணை 1/8 படி இவைகளை நறுக்கி எண்ணையில் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து அதில்

Koviloor Digital Library

கோரோசனை 2 வராகன் எடை பொடித்து போட்டுக் கடும்பத்தியமாய் கரண்டி நிறைய கொடுக்கத் தீரும்.

குண்டியச்சரத்தின் இயல்பு

அரைக்குமேல் சுரங்காயும்; மீன்போல் தேகம் வெளுக்கும்; மஞ்சள் நிறமாய் நீர்விழும்; ஆசனவாயில் சுருக்கென்று வலிக்கும்; உடம்பு இளைத்துக்கடுப்பாகும் தொண்டை வலிக்கும்.

மருத்துவம்:– சுண்டைவேர், நிம்பக்காய், (வேம்பு) சமனாய் அரைத்து பசும் வெண்ணையில் கலந்து கொடுத்தாலும் கறிப்பானும் சீரகமும் அரைத்துப் பாக்களவு கொடுத்தாலும் தீரும்.

உள் அச்சரத்தின் இயல்பு.

மூக்கில் நீர்வடியும்; முகமும், நாக்கும் வெளுக்கும்; நாக்கில் ஆவி தோன்றும்; தூக்கம் சுரம் தண்ணீர் தாகமிகுந்து காணும்.

மருத்துவம்:– அதிமதுரம், பூவந்திப்பழம், வகைக்கு 1 வராகன் எடை, தாய்ப்பால் வார்த்தரைத்து ¼ படி பசுவின் நெய் கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சி ஒரு வராகன்எடை நெய் கொடுக்கத் தீரும்; இச்சாபத்தியம்.

சோகை வகுப்பு; வாத சோகை இயல்பு

சோகையணுகும் போது சுரங்காயும்; தாகம் அதிகப்படும்; சிரசில் நீர் கொண்டு தலைவலி, களைப்பு, சோபம், கைகால், அசதி காணும். தேகம் தடிக்கும்; உதடு வெளுத்து வெடிக்கும்; முகம் வேறுபடும்; பசிமந்திக்கும்; மூலத்திற கடுப்புக் காணும்.

மருத்துவம்:– விளக்கெண்ணெய் 1 படி ஈருள்ளிச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு, கழுதைலத்திச்சாறு, கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு வகைக்கு ½ படி ஒன்றாய்க்கலந்து அதில் வசம்பு, கருஞ்சீரகம், ஓமம், கஸ்தூரிமஞ்சள், கடுக்காய், கடுகுரோகணி, அரத்தை, சோமநாதப்பெருங்காயம், மிளகு, சிப்பி, வகைக்கு 1 வராகன் எடை இவைகளை இடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் கொடுக்க நீங்கும்.

2. அரப்பொடி, காந்தம் வகைக்கு 10 வராகன்எடை சாதிலிங்கம் 1¼ வராகன் எடை 1 ¼ எலுமிச்சம் பழச்சாற்றாலும் நாவற்பட்டைச் சாற்றிலும் தனியே மூன்று நாளாட்டிக் கயறு செய்துக் கொண்டு இரண்டு பணவிடை நல்லெண்ணெயில் அரைத்து உண்ணத் தீரும்.

பித்தசோகை, காமாலையின் இயல்பு.

பித்தநீர் அதிகரித்து உடல் ஊதும் கண்வெளுக்கும் களைப்பு அசதிகாணும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– கையாந்தகரை, நீர்முள்ளி, நாயுருவி, இவைகளின் இலைவேர், சுக்கு மிளகு, சீரகம், சமமாய்கியாழஞ் செய்து காலை மாலை அரையாழாக்கு கொடுக்கத்தீரும்.

வேறு:– ஓமம் அரைப்படி, ஒரு நிறையாய்க் கரிப்பான் சாற்றில் மூன்று நாளரைத்துத் தேற்றாவிரை அளவு உருண்டை செய்து மேற்படி கியாழத்திலாவது எலுமிச்சம்பழ சாற்றிலாவது ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

ஊதுகாமாலை நோயின் இயல்பு.

முழங்கால் அசைக்கும்; பசித்தவுடன்மந்திக்கும்; சுரம் காதடைப்பு இளைப்புக்காணும்; நாவு புண்ணாகும்; கை கால் சோரும்.

மருத்துவம்:– கிட்டம் அரப்பொடி, வெள்ளைப்பூண்டு, முருங்கை இலை, கரிப்பான், முற்றினதேங்காய்பருப்பு இவைகளைச் சமமாய் இளநீரில் அரைத்து அரைக்கழஞ்சு வீதம் இரண்டுநேரம் ½ ஆழரக்கு நீர்முள்ளிக் கியாழத்திலிடத் தீரும்.

மஞ்சட்காமாலை நோயின் இயல்பு.

உடலில் இரத்தம் வற்றி வெதுப்புக்குட்பாய்ந்து முகம் கால் வீங்கும்; மலஞ்சிக்கும்; மஞ்சள்போல் நீரிறங்கும்; கண் வெளுத்திருக்கும்.

மருத்துவம்:– அதிமதுரம், சங்கம்வேர்ப்பட்டை ஒரு நிறையாய் எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாளாட்டித் தேற்றாவிதை அளவு உருண்டைசெய்து தாய்ப்பாலிலாவது பசுவின் பாலிலாவது மூன்று நாட்கள் கொடுக்கத் தீரும்.

வறட்காமாலை நோயின் இயல்பு.

கண் பசந்திருக்கும்; காலோயும்; உடல்புலரும்; தாகம்மிகும்.

மருத்துவம்:– 1. மணத்தக்காளி, கீழ்க்காய்நெல்லி சமூலம் சமனாய் எலுமிச்சங்காய் அளவு அரைத்து அரை ஆழாக்கு எருமைத்தயிரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

பாண்டு காமாலை சோகை விஷபாக வீக்கத்திற்கு

2. தூய்மை செய்த மண்டூரம் 8 பலம், மாவிவிங்கிலை, நீர்முள்ளி, கீழ்க்காய்நெல்லி, கரிப்பான் வகைக்கு 5 பலம், சீரகம் எட்டுபடி, தண்ணீர் விட்டுக் காய்ச்சி அடைகியாழம் வைத்துக் கொண்டு கால் ஆழாக்கு காலை மாலை கொடுக்க நீங்கும்.

3. குப்பை, முள்ளி, நீர்முள்ளி, தூதுவளை, நாரத்தை, கொச்சி, குட்டிவிளா, பிரமி, சிறுசின்னி, கழற்சி, இவைகளின்இலை; நன்னாரிவேர், வாழைக்கிழங்கு, கடுக்காய், சுக்கு இவையெல்லாம் பலம் நிறையாய்க் கியாழஞ் செய்து கால் ஆழாக்கு வீதம் மூன்று நாட்கள் கொடுக்கத்தீரும்.

Koviloor Digital Library

4. கடுக்காய் 4, மிளகு ¼ பலம், மாவிலிங்கப்பட்டை, கற்றாழஞ்சருகு அமுக்குறா வகைக்கு ½ பலம் இவைகளைச் சூரணித்து திரிகடி அளவு ½ ஆழாக்கு வீதம் ஆணுக்குப் பெண்ணீரிலும் பெண்ணுக்கு ஆணீரிலுங் கொடுக்க நீங்கும்.

5. நீர்முள்ளியைச் சுட்டு சாம்பலாக்கி நீரில் குழைத்து வீக்கத்தில் பூசத்தீரும்.

வீக்கத்திற்கு மருந்து.

1. தாளி, சங்கு, சுரை, சிறுநெருஞ்சி, குறிஞ்சா, நீர்முள்ளி, வெண்காரம் சமனாய்பொடித்துக் கியாழம் வைத்து ஒயின்கிளாசு அளவு கொடுக்க நீங்கும்.

2. சங்கு, நொச்சி, சாரணை, கோதை, நீர்முள்ளிஇலை, நெல்லிராக்கு, வேப்பந்தோல், சிட்டம், கடுக்காய் அரப்பொடி மஞ்சள், நன்னாரி, வழுதலை, கொன்றை, விழுதி, குமரி, மணலி, சுரைக்கொடி, புங்கம், பாலை, செங்கத்தாரி, பாதிரி, குறிஞ்சா பலவீதம் இடித்து மருந்துக்குத் தக்க கோநீரும் காடியும் விட்டுக்கியாழஞ் செய்து ¼ ஆழாக்குப் பெரியோர்க்கும், சிறுவர்க்கும் கொடுக்கத்தீரும்.

பற்பல நோங்களின் வகுப்பு
வயிற்றுநோய், சீதக்கடுப்பு, தாகம், செரியாமைசன்னி, (கலப்பு நோய்), சயித்தியம், கக்கல் பிராந்திகளுக்கு மருந்து.

வெற்றிலையில் நரம்பெடுத்து சுண்ணாம்புபூசி மடித்துச்சட்டியில் போட்டு நன்றாய் வறுத்து படி நீர்வார்த்து எட்டொன்றாக்கி சங்களவு கொடுக்க தீரும்.

நடுக்கல், கக்கல், செரியாமைக்கு மருந்து.

அசமதாகம், காடிச்சோறு, வசம்பு, நுணாஇலை, மிளகு பலம் வீதம் பொடித்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி சங்களவு கொடுக்கத் தீரும்.

விக்கலுக்கு மருந்து.

1. தேற்றான்விதை, சந்தனம், கலைமான்கொம்பு, இம்மூன்றையும் தாய்ப்பாலில் அரைத்துக் கொட்டைபாக்களவு எடுத்து இளநீரில் கரைத்துப்பொரித்த வெண்காரமும் வெல்லமும் ½ வராகன் எடை சேர்த்துக் கொடுக்கத்தீரும்.

2. திப்பிலி 8 வராகன் எடை, சீரகம் 10 வராகன்எடை வெதுப்பில்பொடித்து அதனுடன் மயிலிறகு சுட்டசாம்பலும் சமன்கலந்து தேன் விட்டுக் குழைத்து கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

3. திப்பிலி, கடுகுரோகணி, சமனாய் வறுத்து மயிலிறகு சுட்ட சாம்பற் கலந்து தேன் விட்டு மத்தித்து கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

4. மாதுள்ளை, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி பொடித்து கடிகை (வெருகடி) அளவு தேனில் குழைத்துக் கொடுக்க தீரும்.

கக்கலுக்கு மருந்து.

கலைமான்கொம்பு, திப்பிலி, அதிவிடயம் சமனாய்ப் பொடித்து கடிகை அளவு தேனில் குழைத்துக் கொடுக்க தீரும்.

வாந்தி ஒக்காளத்திற்கு மருந்து.

வசம்பு, மிளகும் பறபஞ்செய்து காடிச்சோறு கூட்டிக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்கத் தீரும். மீறினால் நன்னாரி வேர்ப்பட்டையைக் கொட்டைப்பாக்கு அளவு மேற்படி குடிநீரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

கக்கல் விக்கலுக்கு மருந்து.

கிராம்பு, ஏலம், சீரகம், வெதுப்பிய மயிலிறகுச்சாம்பல் சமன் கூட்டிப்பொடித்துக் கடிகை அளவு தேனில் கொடுக்கத்தீரும்.

வெள்ளோக்காளம், பித்தம், விக்கல், கக்கலுக்கு மருந்து.

ஏலம், திப்பிலி, நெற்பொரி, பருத்தி விதை பருப்பு சமனாய்ப் பொடித்துக் கடிகை அளவு சர்க்கரையிற் கலந்து கொடுக்கத் தீரும்.

மார்புச்சளி, கோழைகட்டுக்கு மருந்து.

பிரண்டையை வெதுப்பிச் சாறு பிழிந்து ஐந்துநாள் சங்களவு இருபோதும் கொடுக்கத் தீரும்.

கண் அமரத்திற்கு மருந்து.

கடுக்காயைத் தட்டித் துணியில் முடிந்து ஆமணக்கெண்ணையிற் போட்டுச் சூரியபுடம் வைத்து கண்ணிற் பிழியத் தீரும்.

கண்ணோய்க்கு மருந்து.

கற்கண்டைப்பொடித்துத் துணியில்முடிந்து புளிப்புமாதுளம் பழச் சாற்றில் ஊறவைத்துக் கண்ணில் பிழியத் தீரும்.

செவி நோயின் இயல்பு.

குழந்தை கண்ணிற் பீளை சாறும்; கையினால் தலையைத் தேய்க்கும்; குரல் தாழும்; உடல் நொந்து வாடும்; புரண்டழுகும்.

மருத்துவம்:- 1. சீதேவிசெங்கழுநீர்க்கிழங்கு, உள்ளி, வசம்பு சமனாய்த் தட்டி வேப்பெண்ணெயில் போட்டுக் கொதிக்க வைத்துக் காதிலடைக்க காது நோயெல்லாந் தீரும்.

Koviloor Digital Library

2. சதுரக்கள்ளியை அனலில்வெதுப்பிச் சாறுபிழிந்து காதில் அடைக்கச் செவிநோய் தீரும்.

செவியில் சீழ் ஒழுகலுக்கு மருந்து.

1. சுக்கு, திப்பிலி, கோட்டம், சயிந்தலவணம், முத்தக்காசு, உள்ளி, கதூர்க்காய், வசம்பு வகைக்கு ஒரு உளுந்தெடை எருக்கிலைச் சாற்றால் அரைத்து வேப்பெண்ணையில் கலந்து காய்ச்சி காதில் திரியடைக்கத் தீரும்.

2. முருங்கைவேர், முத்தெருக்கஞ்செவியில், பூண்டு, வசம்பு இவைகளைச் சமநிறையாய்த் தக்காளியிலை பழுப்புச் சாற்றில் அரைத்து நல்லெண்ணெயில் எரித்துக் காதில் விட்டு அடைக்க மாறும்.

காதில் ஈ புகுந்தால் பரிகாரம்.

1. குப்பைமேனியிலையைச் சிறுநீர்விட்டு இடித்துக் காதிற் பிழிய ஈ செத்துவிழும்.

2. குப்பைமேனிச் சாறும் கோழியவரைச்சாறும் சமனாய்க் கலந்து காதில் விடில் ஈ சாகும்.

பல்லீற்றில் இரத்தம் வடிதலுக்கு மருந்து.

பச்சைநன்னாரிவேரை வெந்நீர் விட்டுக் கொட்டைப்பாக்கு அளவு அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்க தீரும்.

முடிசாய்ந்துபோனதற்குக் குளிசமும் மருந்தும்.

செவ்வலரிவேர் பிடுங்கிக் குளிசமாடி, ஆண்பிள்ளைக்கு வலது கையிலும் பெண்குழந்தைக்கு இடதுகையிலும் கட்டிப் பொன்னாங்கண்ணிச் சார் நல்லெண்ணெயில் கலந்து ஒரு சங்களவு கொடுக்க நீங்கும்.

நாமுள் தோட நோயின் இயல்பு.

குழந்தை தாய்ப்பாலை உண்ணாது; சீரியழும்; அனல்போல் சுரங்காயும்; இருமல், கபம், தலைவலி, பொறிகலக்கம், தலைநடுக்கம், வாந்தி, வாயில்நாமுள் தோன்றும்; இருவிலாவும் இழுக்கும்; கண்மிரளவிழித்து நீர்வடியும், வேப்பம்பூப் போல் கழியும்.

மருத்துவம்:– 1. கடுக்காய், சீரகம் 1 வராகன் எடை பொடித்துக் கற்றாழஞ் சாற்றில் கலக்கி ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்க நீங்கும்.

2. சங்கங்கொழுந்து, நெருஞ்சிக்காய், மிளகுதக்காளியிலை, மிளகு, மஞ்சள், ஈருள்ளி சமனாய்த்தட்டிச் சாறுவாங்கி ஒரு சங்கு அளவு கொடுக்க நீங்கும். மணத்தக்காளிச்சாறு, அத்திப்பால், ஆலம் பால் சமன்கலந்து துட்டெடை கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

கெந்தககதாளி நோயின் இயல்பு.

வாயும் தொண்டையும் புண்ணாகி நாறும்; உடல் வெதும்பி நீர் வெந்நீர் போலிருக்கும்; மலந்தீயும்; நித்திரைமிகும்.

மருத்துவம்:– பழம்பாசி, வல்லாரை, ஈருள்ளி சமனாயிடித்துச் சாறுவாங்கி சுரசஞ்செய்து வெள்ளாட்டுப்பாலில் கலந்து சீரகத்தை வெதுப்பிப் பொடித்துத் தூவி சங்களவு கொடுக்கத் தீரும்.

பால் உண்ணாக் குழந்தைகளுக்கு மருந்து.

மூக்குரட்டை, அவுரி, சத்திச்சாரணை, அமுக்கறா, நிலப்பனை இவைகளின் வேர், கருங்காலியிலை, கஞ்சாங்கோரை, மிளகரணைப்பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி, பரங்கிப்பட்டை, பேரரத்தை கடுகு, சீரகம் வகைக்கு 1 வராகன் எடை பசுவின் பால் விட்டு அரைத்து வடிகட்டி ஒரு சங்கு புகட்டக் குழந்தை பால்உண்ணும். மேற்படி மருந்தைச் சிற்றாமணக்கெண்ணெயில் போட்டு எரித்துப் பதத்தில் வடித்துக் குழந்தையின் வயதுக்குத் தக்கபடி கொடுக்கப் பால் உண்ணும்.

இளைப்பு, இருமலுக்கு மருந்து.

1. இண்டு தூதுவளை, கண்டங்கத்திரி வகைக்கு ஒரு பிடி இலை திப்பிலி, வெள்ளைப்பூண்டு வகைக்கு ஒரு துட்டெடை ஒருபடி நீரில் தட்டிப்போட்டுக் காய்ச்சி சங்களவு காலை, மாலை பத்துநாள்கள் கொடுக்கத் தீரும்.

2. தூதுவளை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, ஆடாதொடை, சங்கு இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடிவீதம் இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்து அதில் கடுகு, மிளகு, இந்துப்பு, சிறுதிப்பிலி வகைக்கு கால் பலம் வெதுப்பிப் பொடித்துத் தூவி கொஞ்சம் தேன்விட்டு சங்களவு கொடுக்கத் தீரும்.

3. பெருந்தும்பைக் கொழுந்து, சுக்கு, வெண்காரம், ஓமம், மிளகு, வசம்பு, சுட்டசாம்பல் இவைகளை ஒருநிறையாய் எருமைமோரில் அரைத்துச் சங்களவு கொடுக்கத் தீரும்.

4. அதிமதூரம், கோட்டம், திரிகடுகு, இந்துப்பு, திரிசாதம், கடுகுரோகணி, அரத்தை, அக்கிராகாரம், தேற்றான்விதை, வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு, ஆடாதோடைச் சாற்றில் 3 சாமம் அரைத்துத் தூதுளங்காய் அளவு உருட்டி உலர்த்திக்கொண்டு தேனில் கொடுக்கத் தீரும். (திரிசாதம்=சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம்.)

5. திப்பிலி 1 வராகன் எடை, வெளிச்சிப்பிசின், கஸ்தூரிமஞ்சள், களிப்பாக்கு வகைக்கு அரைக்கால் வராகன் எடை, 1 தூதுளம்பழம், இண்டங்கொழுந்து எலுமிச்சங்காய் அளவு இவைகளை அரைத்து உழக்கு நெய்யில் வேகவைத்து கரண்டி நிறை இரண்டு நேரங்கொடுக்க நீங்கும். இருமல் உண்டாகும். வாந்தியும் தீரும்.

Koviloor Digital Library

6. காற்படி ஆடாதோடை இலைசாற்றில், சுக்கு, திப்பிலி வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கி முரித்துத் துட்டெடை தேனில் கொடுக்க தீரும்.

7. கற்கடகச்சிங்கி, சிறுதேக்கு, திரிபலை, திரிகடுகு, சீதேவி செங்கழுநீர், கோட்டம், மரமஞ்சள், சிறுவழுதலைவேர் வகைக்கு 1 பலம் பொடித்துத் திரிகடி அளவு தேனிலாவது வெந்நீரிலாவது கொள்ள நீங்கும்.

8. வெளிச்சிப்பிசின், மிளகு, முத்தக்காசு, திப்பிலி, கருஞ்சீரகம் வகைக்கு 2 கழஞ்சு இவைகளை இளவறுப்பாய்த் தூள் செய்து திரிகடுகுத் தூளில் கடிகையள்வும் துட்டெடை தேனும் வெள்ளுள்ளித் தைலமும் சமனாய் விட்டு கலந்து மூன்றுநாள் கொடுக்கத் தீரும்.

9. இண்டு, தூதுவளை இவைகளின் வேர் வகைக்கு 1 பலம் சுக்கு, திப்பிலி, வெந்தயம் ½ வராகன் எடை தட்டி ஒருபடி நீரில் போட்டுக் குடிநீர் செய்து 2 அவுன்ஸ் அளவு கொடுக்கத் தீரும்.

10. தேன், இஞ்சி, மாதுளம்பழம் இவைகளின் சாறுகளைச் சமமாகக் கலந்து துட்டெடை கொடுக்க நீங்கும்.

இளைப்பு, இருமல், சுழிகண வலிப்புக்கு மருந்து.

அக்கிராகாரம், சிற்றரத்தை, கற்கடகச்சிங்கி, சடாமாஞ்சில், சிவதை, கஸ்தூரிமஞ்சள், சாதிக்காய், திப்பிலி, கிராம்பு, ஏலம், மாசிக்காய் வகைக்கு 1 வராகன் எடை; தூதுவளை, செம்முள்ளி, வீழி இவைகளின் வேர் வகைக்கு ½ பலம்; துளசிஇலை, தேள் கொடுக்கிலை, சிறுகீரை வேர், வில்வவேர் வகைக்கு ¼ பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்து, ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காசெடை கொடுக்கத் தீரும்.

உண்ணாக்கு வளர்ந்தது சுருங்க மருந்து

நவாச்சாரம், கற்சுண்ணம் இரண்டும் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்து உண்ணாக்கில் தடவ நீங்கும்.

கக்குவான் நோய்க்கு மருந்து.

1. தூதுவளைச் சாறும், பசுவின் நெய்யும் சமனாகக் கலந்து கோட்டம் 1 வராகன் எடை தட்டிப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி ஆழாக்கு வீதம் கொடுக்கத் தீரும்.

2. மயிலிறகுச் சாம்பலும் மிளகு சாம்பலும் சமனாய்ப் பொடித்து பசுவின் நெய்யில் கலந்து கழற்சிக்காயளவு கொடுக்கத் தீரும்.

மயக்கம், சோகம், நாவரட்சிக்குக் குடிநீர்.

கோட்டம், சீரகம், ஏலம், சுக்கு, வில்வவேர், அதிமதூரம், ஆமையோடு, சந்தனம், கலைக்கொம்பு, வரட்பூலாவேர், நெற்பொரி ஆகியவை வகைக்கு ஒரு பலம் அளவு எடுத்துக் குடிநீர் செய்து காலாழாக்கு வீதம் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

தாகத்துக்கு மருந்து.

1. ஏலம், அதிமதுரம், பற்படாகம், சீந்தில், அறுகுவேர், சந்தனம், வில்வப்பழம், விலாமிச்சம், வேப்பீர்க்கு இவைகளைக் சமனாய் நறுக்கி இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் காற்படியாய் வற்ற வைத்துச் சிறுவர்க்கும் பெரியோர்க்கும் கொடுக்கத் தீரும்.

2. புளியம்பட்டை, மிளகு, புங்கு, வேலிப் பருத்தி, நாயுருவி, இவைகளின் இலைச்சாம்பல் சமனாய் கூட்டி ஓமம் ½ வராகன் எடை பொரித்து நீர்விட்டுக் காய்ச்சி இடித்து கால் ஆழாக்குக் கொடுக்கத் தீரும். இவைகளெல்லாம் இச்சாபத்தியம்.

வண்டுகடிக்கு மருந்து.

கம்பிளி சுட்ட சாம்பலையும், புகையூரலையும் வேப்பெண்ணெயில் குழைத்து அபானத்தில் வைக்கத் தீரும்.

கணையசதி, கழிச்சல், இருமல் பிணி, தாகம், வறட்சிக்கு மருந்து.

அதிமதுரம், கோட்டம், திப்பிலி, திரிசாதம், சந்தனம், சாத்திரபேதி, இலவங்கம், இலவங்கப்பத்திரி, பற்பாடகம், வசுவாசி 1 வராகன் எடை, கோரோசனை 4 வராகன் எடை இளநீரில் அரைத்துக் குன்றிபோல் உருட்டிக்கொண்டு சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

குழந்தைகட்கு மேலில் வெள்ளைக்கொப்பளம் வெடித்தலுக்கு மருந்து.

1. விலாமிச்சம் வேர், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் இவைகளைச் சமமாய் அரைத்துப் பூசத் தீரும்.

2. ஆவாரை இலையும், அல்லி இலையும் செங்கழுநீர்கட்டியில் அரைத்துப் பூச நீங்கும்.

வயிற்றுப் பொருமல் வலிமாந்தத்திற்கு மருந்து.

ஒரு வசம்பைச் சட்டியிலிட்டுக் கருக்கி அதில் கோட்டம் 2 வராகன் எடை, ஓமம் 2 வராகன் எடை கூடப்போட்டு ஓமம் பொரியும்போது ஒரு ப்டி தண்ணீர்விட்டு அரைத்துக் கால்படியாய் வற்றவைத்து கொடுக்கத்தீரும்.

சாம்பல், மண் தின்றதற்கு மருத்துவம்.

கீழ்க்காய் நெல்லிவேர் 1 வராகன் எடை, கடுக்காய்த்தோல் 2 வராகன் எடை, மிளகு 3 வராகன் எடை புளித்த மோரில் அரைத்துக் கலக்கி சங்களவு மூன்று நாள் கொடுக்க தீரும்.

Koviloor Digital Library

தொங்கல், ஆமம், மாந்தக் கழிச்சலுக்கு மருந்து.

வெள்ளாட்டுப் புழுக்கை, முச்சந்திமண், ஆவாரங்கொழுந்து, வகைக்கு ஒரு பிடி; வசம்பு 1 வராகன் எடை இவைகளைச் சட்டியில் போட்டுத் தீப்பிடித்து வெந்தபின் வெந்தயம், ஓமம் வகைக்கு 4 வராகன் எடை போட்டு ஓமம் எரியும்போது இரண்டுபடி தண்ணீர் விட்டுக் கால்படியாய் வற்றவைத்து சங்களவு மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

எண்ணெய் தொங்கலுக்கு மருந்து.

1. மண்ணாங்கட்டியைச் சட்டியில் போட்டுப் பழுக்க வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து 3 வேளை கொடுக்க தீரும்.

2. ஒரு பலம் சிகைக்காயைத் தட்டித் தண்ணீரில் ஊற வைத்து ஒரு சங்கு தண்ணீரில் கொடுக்கத் தீரும்.

கக்குவானுக்கு வேறு பொதுமருந்து.

வௌவாலையாவது வெள்ளெலியையாவது புலி உப்புக்கண்டத்தையாவது அதன் தோலையாவது நந்தைச் சதையாவது பசும்நெய்யில் வேகவைத்துக் கழற்சி அளவு கொடுக்கத் தீரும்.

குழந்தைகளின் விதைவாதத்திற்கு மருந்து.

1. குழந்தைகட்கு விதையைப்பற்றிப் பக்கத்தில் உப்பிசமாய்க் கண்டதானால் அடித்தொடையைச் கையினால் நிமிட்டி நரம்புத் தடிப்பைப் பார்த்துக் கதிரை வெதுப்பிக்கொண்டு விதைக்கு 8 விறற்கடைக்குக்கீழ் சுட்டித்துப் பணவெடை பெருங்காயத்தை வெள்ளைப் பூண்டில் வைத்துச் சுட்டு மூன்றுநாள் கொடுத்து விளக்கெண்ணெயில் மஞ்சள் பொடியைப் போட்டு கலந்து புண்ணில் போட்டுப் பொங்கிப் புண்ணாகி ஆறும்போது விதைவீக்கம், அண்டவாயு வாதம் தீரும்.

2. முடக்கொத்தான் சாறு, விளக்கெண்ணெய், வகைக்குப் படி; அதில் ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கருவை ஒன்றாய்க் கலந்து அரிந்த ஈருள்ளி ஒரு சிரங்கை, ஒரு கழற் பருப்பு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி மூன்று நாள் கழற்சிக்காய் அளவு கடுகையும், கரண்டி அளவு எண்ணெயும் குடிக்கத் தீரும்.

3. சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, ஓமம், வெள்ளுள்ளி, கழற்பருப்பு, வேப்பங்கொழுந்து வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சிறு கரண்டி வீதம் இரு நேரம் உட்கொள்ளத் தீரும்.

4. சாரணைவேர், முடக்கொத்தான் வேர், சுக்கு, கழற்பருப்பு வகைக்கு 1 பலம் தட்டிப்போடடுக் குடிநீர் செய்து சங்களவு கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

5. சுக்கு, மிளகு வகைக்கு 1/8 பலம், நொச்சி இலை ¼ பலம், பூண்டு ½ பலம், கழற்சிப் பருப்பு 2 பலம், இவைகளை அரைத்து அரைப்படி சிற்றாமணக்கெண்ணெயில் சிவக்கக்காய்ச்சி ஒரு சங்கு வீதம் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

6. வசம்பு, கழற்சி இலை, உள்ளி, வகைக்கு 1 பலம் தட்டி வெதுப்பி ஒற்றடமிடவும். குட்டித்தக்காளி இலையும், தைவேளை இலையும் வெதுப்பித் தட்டிக் கட்டத் தீரும்.

7. கோழிமுட்டை வெள்ளைக்கருவில், கழற்சிப்பருப்பு 1 வராகன் எடை, சிற்றாமுட்டி இலையும் அரைத்துப் போட்டுப் பொரித்து மூன்று நாள் உட்கொள்ள நீங்கும்.

8. தைவேளை, முடக்கொத்தான், மேனி, மூக்கரைச்சாரணை வேர், சவுரி வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்ற வைத்து இறுத்து அதில் இரண்டு முற்றினதேங்காயைத் திருகிப்போட்டுப் பால் பிழிந்து ஒரு படி விளக்கெண்ணெயில் கலந்து திரிகடுகு, வெள்ளுள்ளி, ஓமம், கழற்சிப்பருப்பு வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சிறு கரண்டி வீதம் பத்தியமாய் மூன்று நாள் உட்கொள்ள நீங்கும். இச்சாபத்தியம்.

மசரைப்புழு நோயின் இயல்பு.

1. சீதளமாகி தண்ணீர் போலும், கருத்த நிறமாயும், கத்தரிக்காயை கசக்கிப் பிழிந்த சாறு போலும் பிரவிர்த்தி (கழிச்சல்) ஆகும்.

2. மலம் கருகி நின்று எருவாயில் குத்திக் குமுறிக் கருகி விழும். மலத்துடன் சீதஞ்சிதறிக் காணும். உதப்பைத் தள்ளும். கீழ் வயிறு உளைந்து காணும்.

மருத்துவம்:– 1. மஞ்சள், ஈருள்ளி, திரிகடுகு, வசம்பு, ஏலம், சிறுபீளைவேர், சுரைமீன் தலைக்கல் வகைக்கு ஒரு பலம் வீதம் தூக்கிச் சிறுபீளை சாற்றாலாட்டி உழக்குமேதி நெய்யில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி மெழுகு பதமாய் வடித்து ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.

2. உழக்கு பசுவின் நெய்யில் நாயுருவி, மேனி, கொழிஞ்சி தூதுவளை, சுட்ட வசம்பு, சுக்கு, மஞ்சள் வகைக்கொரு பாக்களவு அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி கரண்டி நிறை கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வயிற்று நுண்புழு விழுதலுக்கு மருந்து.

1. எலிச்செவிபச்சிலையும், முருங்கை வேரும், திரிபலையும் நறுக்கிக் குடிநீர்ச் செய்து, சங்களவு கொடுக்க நாக்குப் பூச்சி விழும்.

2. பாகற் சாறு, கழற்சிச் சாறு, விளக்கெண்ணெய் வகைக்கு உழக்கு; ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, கரந்தை, இரசகற்பூரம், உள்ளி, வசம்பு வகைக்கு ஒரு வராகன் எடை அரைத்துப் போட்டு, எரித்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு சங்கு கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

3. ஓமம், புரசவிதை, பேய்ப் பீர்க்கு, பிரண்டை வகைக்கு 1 பலம் இடித்து அரைப்படி நீரில் போட்டு நாலில் ஒன்றாய் வற்றவைத்து மூன்று நாள் கொடுக்கப் பூச்சிகள் பந்து பந்தாய் விழும். இச்சாபத்தியம்.

மலம், சிறுநீர்க்கட்டுக்கு மருந்து

இலைக்கள்ளி வேர்ப்பட்டை 5 பலம்; மிளகு, உள்ளி, சுக்கு, கடுக்காய் வகைக்கு 1 ¼ பலம் வெய்யிலில் காயவைத்துப் பொடித்துத் துணியில் வடிகட்டி குழந்தைகளின் வலிமையறிந்து தாய்ப்பாலில் அல்லது வெந்நீரில் ஒரு காசெடை கொடுக்கத் தீரும்.

கழிச்சல் வகுப்பு

பூபதி மாத்திரை.

தூய்மை செய்த இரசம், சுக்கு, பொரித்த வெண்காரம், கெந்தகம் வகைக்கு 1 வராகன் எடை; நேர்வாளம் 4 வராகன் எடை இவைகளைக் கற்றாழைச் சாற்றில் 3 சாமமும், நெல்லிக்காய்ச் சாற்றில் ஒரு சாமமும் அரைத்துப் பயறளவு மாத்திரை (உருண்டை) செய்து ஒரு உருண்டை தண்ணீரில் கொடுக்க ஊதுமாந்தம், பொருமல், வாதம் நீங்கும். பத்தியமில்லை.

அமிர்த சஞ்சீவி இலிங்கக் குழம்பு

சாதிலிங்கம் ஒரு பங்கு, வெண்காரம் இரண்டு பங்கு, ஆமணக்கின் பருப்பு நாலுபங்கு, வாளம் எட்டு பங்கு இவைகளைத் தூய்மை செய்து அரைத்துக் குன்றி அளவு கொடுத்துக் குளிர்ந்த தண்ணீர் கொடுக்கக் கழிச்சலாகும். வெந்நீர் கொடுக்கக் கழிச்சல் கட்டும்.

வேறுவகைக் கழிச்சலுக்கு மருந்து.

வெள்ளைக்காக்கணான் வேர், திப்பிலி, வகைக்கு 1 வராகன் எடை, மிளகு 2 வராகன் எடை தண்ணீர் விட்டரைத்து ஒரு வராகன் எடை மருந்தைக் குளிர்ந்த தண்ணீரில் கலந்து கொடுக்க வயிறு போகும். இச்சாபத்தியம்.

சண்பகப்பூ மாத்திரை.

சண்பகப்பூ, ஏலம், இலவங்கம், கோட்டம், கடுகுரோகணி வகைக்கு 1 வராகன் எடை; தூய்மை செய்த வாளம் 5 வராகன் எடை; வெந்நீர்விட்டு அரைத்துக் கால் கழஞ்சு நிறையாய் உருண்டைசெய்து தேனிலாவது, சுக்குக் குடிநீரிலாவது கொடுக்கக் கழிச்சலாகும்.

இனிப்புள்ள சுகக்கழிச்சல் குழம்பு,

2 ரஸ்தாளி வாழைப்பழம், திராட்சைப்பழம் 5 பலம், ஓமம், சுக்கு, மிளகு வகைக்கு 1 வராகன் எடை கடுகுரோகணி 3 பலம், தூய்மை செய்த வாளம் 5 பலம் இவைகளைக் கல்வத்திலிட்டு நான்கு சாமம் ஆட்டி வழித்தெடுத்துக் கல்சாடியில் காற்றுப்போகாமல் அடைத்துக்கொண்டு

Koviloor Digital Library

காசளவு ஆப்பத்தில் தடவி அழுகிற குழந்தைக்குக் கொடுக்கத் சப்பித்தின்னும். நல்ல சுகக்கழிச்சலாகும். கழிச்சல் அதிகமானால் வசம்பைச் சுட்டு இளவெந்நீரில் உரைத்துக் கொடுக்க கழிச்சல் நிற்கும். இச்சாபத்தியம்.

சுகக் கழிச்சல் எண்ணெய்.

முருங்கைப்பட்டை, மூக்கரைச்சாரணைவேர், ஈருள்ளி இவைகளைச் சமமாய்த் தட்டி சாறு பிழிந்து அதற்கு நிகர் விளக்கெண்ணெய் விட்டு எரித்து கரண்டிக் கொடுக்க மலபந்தம், கரப்பன், சிரங்கு தீரும். இச்சாபத்தியம்.

வைசூரி நூல் – வைசூரி விவரம்.

பார்த்து வைசூரி நூல்தொகுப்பைப் பண்பாய் மாந்தர் தானறிய
கோர்த்து தீபச் சூடனைத்துங் குறிப்புங் குணமும் சாத்தியமும்
தீர்த்துப் போக பண்டிதற்குத் திறமா யெடுத்த அட்டவணை
சேர்த்துப் பிணியுந் தானகலச் சிறக்க வறிந்து வுரைத்தோமே.159

பனைமுகரி, பாலம்மை, வரகுதிரி, கொள்ளம்மை, கல்லுதிரி, கடுகம்மை, மெழுக்கன், உப்புதிரி, கரும்பனிச்சை, வெந்தயம்மை, பாசிப்பயறம்மை, விச்சிரிப்பன் நீர்க்குளுவான், தவளை என வைசூரி பதினான்காம்.

உடம்பில் வெம்மை மிஞ்சி, மூலத்தில் சூடுகொண்டு மூளையில் அதிகக் கொதிப்புண்டாகி, எலும்பில் கனலேறி மேற்படி நோய்த் தோன்றுகிறது. மேற்படி நோய் கண்டபேரைக் கண்டு பயந்து இதயங் கலங்கினாலும் மேற்படி நோய் உண்டாகுமெனச் சொல்லப்படுகிறது.

பனைமுகரி அம்மையின் இயல்பு.

காய்ச்சல் மிதமாய்க் காய்ந்து உடல் கடுக்கும்; கண்டதுண்டம் வீங்கும்; பெரும்பாடு, பிதற்றல், சன்னி தோன்றும்.

பாலம்மை நோயின் இயல்பு.

அகோரமாய் காய்ச்சலடிக்கும்; மூன்று நாளில் இரவில் தலையில் குரு தோன்றி உடம்பு கடுக்கும்; 8 ஆம் நாள் நீர்கோர்த்து 9 ஆம் நாள் இறங்கும். பதினைந்தாம் நாளில் தலைமுழுக்குச் செய்யவும்.

வரகுதிரி அம்மையின் இயல்பு.

காய்ச்சல் அதிகமாய்க் காய்ந்து மூன்று நாளில் தலையில் குரு தோன்றும்; வாயால் இரத்தம் விழும்; 7 ஆம் நாளில் நீர்கட்டி 11 ஆம் நாளில் இறங்கும்; நீர்த்தாரையில் புண் காணும்.

கொள்ளம்மையின் இயல்பு.

காய்ச்சல், பிதற்றல், சுரசன்னி வலிப்புத் தோன்றி, மூன்று நாளில் தலையில் குரு தோன்றி, பதிமூன்றாம் நாளில் இறங்கும்.

Koviloor Digital Library

கல்லுதிரி அம்மையின் இயல்பு.

அகோர காய்ச்சல், கழிச்சல், வாந்தி கண்டு மூன்றுநாளில் தலையில் குரு தோன்றி 7 ஆம் நாளில் சங்கங்கனிபோல் நீர்கட்டி 10 ஆம் நாளில் இறங்கும். 11 ஆம் நாள் தலைமுழுக்குச் செய்விக்கவும்.

கடுகம்மையின் இயல்பு.

காய்ச்சலடித்த மூன்று நாளில் தலையில் கடுகுபோல் குரு தோன்றி, உடம்பெல்லாம் அதிகமாய் தடிக்கும்; மண்ணை கட்டும்; குரல் கம்மும்; கழிச்சல் காணும்.

மெழுக்கன் அம்மையின் இயல்பு.

காய்ச்சல் மட்டாய்க் காயும்; உடலெல்லாம் கடுக்கும்; இடுப்பு, முழங்கால், உடல் வீங்கும், காந்தல் காணும்; 7 ஆம் நாளில் குரு தோன்றும். மருந்து செய்யக் குணமாகும்.

உப்புதிரி அம்மையின் இயல்பு.

காய்ச்சல் கண்டு மூன்று நாளில் தலையில் குரு தோன்றி உடம்பெல்லாம் உப்பு போலிருக்கும்; ஐந்து நாளில் நீர்கட்டி 7–ஆம் நாள் இறங்கும். 11 ஆம் நாளில் தலைமுழுகச்செய்து அவிழ்தங் கொடுக்கத் தீரும்.

கரும்பனசை அம்மையின் இயல்பு.

1. காய்ச்சலடித்து 4 ஆம் நாளில் தலையில் குரு தோன்றும்; உடம்பெல்லாம் குத்தும்; கருக்கும், வைசூரியுள்ளே வாங்கும்; கழிச்சல் மூர்ச்சை காணும்; மலம் கட்டினால் பதின்மூன்று நாளில் இறங்கும்; உடம்பெல்லாம் விரிந்து கணமாகிக் கிருமி உண்டாக்கும்; நினைவற்று சுவாசம் மேல் நோக்கும்; 21 ஆம் நாள் சென்றால் தலைமுழுக்குச் செய்து அவிழ்தம் கொள்ளவும். இந்த நோய் கண்டவர்கள் பிழைப்பதரிது.

வெந்தய அம்மைக் குணம்

2. காய்ச்சல் அடித்த; மூன்றாம் நாளில் தலையில் குரு தோன்றி 7 ஆம் நாளில் நீர்த்தல் காட்டி 9 ஆம் நாள் இறங்கும்; பதினைந்தாம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்.

பாசிப்பயற்றம்மைக்குணம்

3. காய்ச்சலும் பிதற்றலுமுண்டாகி, 3 ஆம் நாள் தலையில் குரு தோன்றும்; 7 ஆம் நாள் நீர்கட்டி 9 ஆம் நாள் இறங்கும்; பதினேழாம் நாள் தலைமுழுக்குச் செய்து உடல் வலிமைபெற நீர்மோர் உணவு உட்கொள்ளவும்.

விச்சிரிப்பன் அம்மையின் இயல்பு.

காய்ச்சலடிக்கும்; கண்சிவக்கும்; வாந்தி (கக்கல்) யும் கழிச்சலும் காணும்; மூன்றாம் நாள் தலையில் தோன்றி உடலெல்லாம் உமிபோல்

Koviloor Digital Library

வாரியிட்டு மறையும்; 8 ஆம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்; வயிற்று உளைவு காணும்.

நீர்க்குளுவான் அம்மையின் இயல்பு.

காய்ச்சலடித்து மூன்றாம் நாள் சங்கன் கூழ்போல் தோன்றி 7–ஆம் நாள் இறங்கும்; 9–ஆம் நாள் தலைமுழுக்கு செய்து உடலைத்தணியச் செய்யவும்.

தவளை அம்மையின் இயல்பு.

காய்ச்சல் கண்டு நடக்க வொட்டாது; சூலையைப்போல் வலிக்கும்; உணவு செல்லாது; 3 ஆம் நாள் தலையில் குரு தோன்றி 9 ஆம் நாள் இறங்கும். 11 ஆம் நாள் தலைமுழுக்குச் செய்யவும்.

அம்மை நோய் அதிகப்படாதிருக்க மருத்துவம்.

1. நஞ்சறப்பறிச்சான் வேரை நரம்பு நீக்கி அரைத்துப் புன்னைக்காய் அளவு வெந்நீரில் கலக்கிக் கொடுக்க கக்கலும், கழிச்சலும் காணும்; பத்தியத்திற்குச் சுடுகஞ்சி கொடுக்க அம்மை (வைசூரி) அதிகப்படாது.

2. விளாயிலை, தூரா இலை, மூக்கிரட்டை வேர், தவசிமுருங்கைச் சமூலம், ஈருள்ளி இவைகளை நீராகாரத் தண்ணீர் விட்டு இடித்துப் பிழிந்து சீரகம் ஒரு வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கால்படி வீதம் மூன்று நேரம் கொடுத்தால் வைசூரி வேகம் தணியும்.

3. புளியிலை, கோழியவரைஇலை, ஈருள்ளி இவைகளை ஓர் எடையாய் இடித்து நீராகாரத் தண்ணீர் விட்டுப் பிழிந்து வடிகட்டிக் கால்படி வீதம் மூன்று நேரம் கொடுத்தால் வைசூரியின் அளவு மட்டுப்படும்.

4. வெள்ளைக் குங்கிலியத்தை அவுரி இலைச்சாற்றால் 4 சாமம் அரைத்துச் சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து உலர்த்தி அதில் ஓர் உருண்டையை வெந்நீரில் கொடுத்தால் அல்லது அந்த உருண்டையை வைசூரி கண்டபின்பு கொடுத்தாலும் வைசூரி அதிகப்படாது.

5. ஆள்காட்டிக் குருவிமுட்டை பத்தெட்டு உடைத்துவிட்டு அதில் கொஞ்சம் புழுங்கலரிசியை நனையத்தக்க அளவுபோட்டுக் கருக்காமல் பதமாய் பொரித்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு காய்ச்சல் கண்டவுடனே அந்த அரிசியை இடது கையில் கொட்டி வலது கையால் திரிகடி ஒருபொழுது கொடுத்தால் வைசூரி அம்மை நோய்க் கட்டுப்படும்.

6. பழைய தோல்செருப்பைச் சுட்டுப் சாம்பலாக்கி அந்த நீற்றை திரிகடி அளவு வெந்நீரில் மூன்றுபொழுது கொடுத்தால் வைசூரி மட்டுப்படும். மேற்கொள்ளாது.

வைசூரியுடன் உள்ள கிரந்தியானால் மருந்து.

1. இளநீரை மேற்பட்டைச்சீவி வெந்நீரில் அவித்துக் கண்திறந்து அந்த நீரில் தேற்றான் விதை, முத்தக்காசு வகைக்கு 5 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கொடுக்க வைசூரி பூரிக்கும்.

Koviloor Digital Library

2. சீரகத்தை மட்டும் அரைத்து இளநீரில் கலக்கி மூன்று வேளை கொடுத்தால் அம்மை பூரிக்கும்.

3. மேக்கிடாரிச் சாணிப் பாலில் பூநாகம், நற்சீரகம், வகைக்கு 5 வராகன் எடை அரைத்து 3 பொழுது கொடுத்தால் அம்மை நோய் பூரிப்படையும்.

4. பளிங்காயிருக்கிற கருடப்பட்சி, கலைமான்கொம்பு, காண்டாமிருகத்தின் கொம்பு இம்மூன்றையும் வகைக்கு 5 வராகன் எடை அரைத்து மான்கொம்பு ஊறின தண்ணீரில் கரைத்துக் கால் படி வீதம் கொடுத்தால் பூரிப்புநிலை எய்தும்.

5. பிராய் மரத்தின் இலையைப் (குட்டிப்பலா), புதுச்சட்டியிலிட்டு நீராகாரத் தண்ணீர் விட்டு நன்றாய் அலசி அரைக்கால்படி வீதம் 3 வேளை கொடுத்தாலும் வைசூரி பூரிக்கும்.

வைசூரியின் பேரில் பெருங்கழிச்சல் கண்டால் பரிகாரம்.

1. பிச்சி இலையைப் புதுச்சட்டியில் இட்டு நீராகாரத் தண்ணீர் விட்டு நன்றாய்க் கழுவி அரைக்கால்படி நீர் வீதம் மூன்று வேளை கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

2. சுக்கு, வேப்பீர்க்கு, எலுமிச்சம் வேர், கோரைக்கிழங்கு ஆகியவைகளை இள வறுப்பாய் வறுத்துக் குடிநீர் செய்து அரைக்கால்படி வீதம் கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

3. ஆல், அத்தி, இத்தி, அரசு, மாம்பிஞ்சு, உதி, பிச்சி, துத்தி, கசகசா, இவ்வகைச் சருகுகளைச் சேர்த்துக் குடிநீர் செய்து கொடுத்தால் கழிச்சல் நிற்கும்.

4. பொன்முசுட்டை, கிராம்பு, வேப்பீர்க்கு இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர்ச் செய்து கொடுத்தாலும் பெருங்கழிச்சல் நிற்கும்.

வைசூரியின்பேரில் கடுப்பு, சீதம், இரத்தம் கண்டால் மருத்துவம்.

1. முற்றின நாவற்பட்டையை பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்து வடிகட்டி அரைக்கால்படி வீதம் 3 வேளை கொடுத்தால் கடுப்பு, சீதம், இரத்தம் நிற்கும்.

2. ஆவாரைப் பஞ்சாங்கத்தை ஓர் எடையாய்ச் சட்டியிலிட்டு வறுத்து நீர்விட்டுக் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுக்க வைசூரியில் தோன்றும் மேற்கண்ட பிணிகள் தீரும். பழைய மாங்கொட்டையைத் தட்டி இளவறுப்புச் செய்து அரைத்து நீராகார நீரிலாவது, தயிரிலாவது அரைத்துக் கொடுக்க மேற்கண்ட பிணிகள் தீரும்.

Koviloor Digital Library

3. முற்றின கல்லத்திவேப்பட்டை, ஈருள்ளி, சீரகம், வகைக்கு 5 வராகன் எடை, வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் கலக்கி அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுக்க குறிப்பிட்ட பிணிகள் தீரும்.

4. நீர்க்குடங்களிலிருக்கும் அடிமண்டியைத் தேற்றான்விதையாற்றேற்றித் தெளிவாய் இறுத்து அதில் கருவேப்பிலை ஈர்க்கு, கிராம்பு, மிளகு, வகைக்கு 1 கழஞ்சு சேர்த்து வறுத்தரைத்துக் கொடுத்தால் தீரும்.

5. ஈருள்ளியைப் பசும் நெய்யில் வேகவைத்துக் கொடுத்தால் தீரும்.

6. இரண்டு வில்வப்பழத்தைச் சிதைத்து வறுத்து ஒரு படி நீர் விட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி அதில் அதிவிடயம் கிராம்பு வகைக்கு ஒரு காசெடை வறுத்துப் பொடித்துப் போட்டு மூன்று நாள்கள் உட்கொண்டால் மேற்படி பிணிகள் அகலும். ஈருள்ளிச்சாறு, பசும்நெய் இரண்டையும் சமமாகக் கலந்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது உட்கொள்ளக் கடுப்பு, இரத்தம், சீதம் நிற்கும்.

வைசூரியின்பேரில் தொடர்கழிச்சல் கண்டால் மருந்து.

1. சீந்தில், கோரைக்கிழங்கு, மேல்தோல் நீக்கிய சுக்கு வகைக்கு 5 வராகன் எடை வெதுப்பிக் குடிநீர் செய்து கொடுத்தால் வைசூரி நோயில் தோன்றும் தொடர்கழிச்சல் தீரும்.

2. மான் கொம்பைக் கோவையிலைச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசம் செய்து 21 நாள் எருவில் புடம் போட பற்பமாகும். அந்த பற்பம் 1 வராகன் எடை, மான் கொம்பு ஊறின நீரில் கலக்கிக் கொடுத்தாலும் தீரும்.

வைசூரியில் கபம் நெஞ்சில்கட்டித் தொண்டை கம்மினால் மருந்து.

1. கற்பூரவல்லிச் சாறு அரைக்கால் படியில், கோரோசனை, 1 ¼ வராகன் எடையை உரைத்து உள்ளுக்குக் கொடுக்க கபம்நீங்கும்.

2. மாதுளம் பூவைக் குடிநீர் செய்து அதில் கொஞ்சம் தேனும், எலுமிச்சஞ் சாறும் கலந்து கொப்பளிக்கத் தொண்டை கம்மல் உடனே தீரும். இதை உட்கொள்ளலாகாது.

வைசூரியின்பேரில் சுரம் கண்டால் மருந்து.

1. எலுமிச்சம் வேர்ப்பட்டை, ஏலம், சீந்தில், விலாமிச்சு, பற்படாகம், சந்தனம், கோரைக்கிழங்கு வகைக்கு 5 வராகன் எடை நறுக்கிப்போட்டுக் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுத்தால் வெப்பு நீங்கும்.

2. மகரப்பூ 5 வராகன் எடை குடிநீர் செய்து அதில் கோரோசனை ¼ வராகன் எடையை உரைத்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுக்க சுரம் நீங்கும்.

Koviloor Digital Library

வைசூரியினால் மலம், சிறுநீர் கட்டி வயிறு உப்புசங் கண்டால் மருந்து.

ஈருள்ளி, கற்கண்டு வகைக்கு 5 வராகன் எடை, அரைத்து ஆமணக்கெண்ணெய் 1/8 படியில் கலக்கி உட்கொள்ள மலம், சிறுநீர் வெளியாகி உப்புசமுந் தீரும்.

தாகத்திற்குக் கலைக்கொம்புத் தண்ணீர்செய்யும் முறை,

கலைமான் கொம்பை ஊறவைத்து நன்றாய்க் கழுவி உராவின தூள் 2 பலம் சுடுநீரில் போட்டு ஊறவைத்துக்கொண்டு அந்தத் தண்ணீரைத் தாகத்துக்கு வைசூரி கண்டிருக்கும்போது கொடுத்துவர உடலுக்கு ஆரோக்கியமும், சுகத்தையும் தரும். சில மருந்து முறைகளில் கலைக்கொம்புகளைச் சேர்த்துக்கொள்ளும்படி சொல்லி இருப்பதால் அதற்கு இந்த முறைப்படி செய்து உபயோகப்படுத்தவும்.

வைசூரியினால் கண்ணில் நோவு கண்டால் பரிகாரம்.

1. சீரகத்தைத் துணியில் பொட்டலம் கட்டி தாய்ப்பாலில் ஊறவைத்து நீரில் ஒற்றடம் செய்தால் கண்ணில் தோன்றிய வேதனை தீரும்.

2. சுடுசோற்றில் வெண்ணை கலந்து சீலையில் பொட்டலம் கட்டி நீராகார நீரில் தோய்த்துக் கண்ணில் ஒற்றடம் செய்ய கண்விதன நோய் தீரும்.

விழியில் வைசூரி வராதிருக்க மருத்துவம்.

வைசூரிக் காய்ச்சலடிக்கும்போது ஈருள்ளியை வறுத்து மனிதன் வாயில் மென்று கண்ணில் ஊத வைசூரி கண்ணில்வராது.

வைசூரியில் வாயால் இரத்தம் கக்குவதற்கும், நீர்த்தாமரையில் இரத்தம் காணுவதற்கும் மருந்து.

நன்னாரி வேர்த் தோல் கலைக்கொம்பு வகைக்கு 2 வராகன் எடை, பூநாகம் (மண்புழு) ஐந்தெடுத்து நன்றாய்க் கழுவி அவைகளுடன் சேர்த்துச் சாந்துபோல் அரைத்துக் கொம்பு ஊறின தண்ணீரில் கரைத்து அரைக்கால்படி விகிதம் மூன்று பொழுது உட்கொள்ள வாயில் இரத்தம் கக்குவதும், நீர்த்தாரையில் இரத்தம் கசிவதும், நீர்த்தாரையில் இரத்தம் விழுவதும் நிற்கும் சன்னி தோடம் வைசூரி உள்வாங்குதலும் தீரும்.

வைசூரியினால் நேரிடும் சூலைகட்கு மருந்து.

பழங்கூரை வைக்கோலும், வேப்பிலையும் சேர்த்து அவித்து 3 நாள் வரை வேதுவிட்டு ஒற்றடம் இட்டுக் கட்ட சூலை நீங்கும்.

Koviloor Digital Library

ஆறாத வைசூரி புண்ணுக்கு மருந்து.

முற்றின தேங்காயைத் திருகி அதில் புளிய விதையின் மேல் தோலைப் பொடித்துப் போட்டு பிசைந்து பிழியத் தைலம் வரும்; அதைப் புண்ணில் போட ஆறும்; வீக்கத்தில் தடவ வற்றும்.

வைசூரி இறங்கினபின் நடப்பிக்கும் விதிமுறை

பருத்திப்பிஞ்சு, அத்திப்பிஞ்சு, சாதிக்காய், நற்சீரகம் இவை ஓர் எடையாய் மோரில் அரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும், அப்பால் வேப்பிலையும், மஞ்சளும், அறுகும் ஓர் எடையாய் அரைத்து உச்சி முதல் பாதம்வரை தேய்த்துக் குளிர்ந்த காலத்தில் ஒன்று விட்டொரு நாளாக மூன்று முறை தலைமுழுக்குச் செய்விக்க வேப்பிலையும், மஞ்சளும் அரைத்துப் புண்ணில் பூசிய பின் தயிரைத் தேய்த்துக் குளிர்ந்த நீரில் முன்போல் மூன்று முறை தலைமுழுக்குச் செய்வித்து அதன் பேரில் அவரை, இலையை மோரில் அரைத்துத் தலையில் உடலிலும் தேய்த்துக் குளிர்ந்தநீரில் மூன்று முறை தலைமுழுக்குச் செய்வித்து அப்பால் ஆமணகெண்ணெயைத் தேய்த்து உசிலிலை அரைப்பிட்டுத் தலைமுழுக்கு செய்வித்து நீர் மோர் சோறும், ஈருள்ளியும் உண்பிக்கச் செய்தால் உடல் குளிர்ந்து வலுவடையும். மேற்படி நோய் கண்டவர்களுக்கு உடலிலுள்ள உள்ளுறுப்புகள் வலிமை கெட்டிருப்பதால் ஆறுதிங்கள் செல்லும் வரை காரமான மருந்துகள் கொடுக்கலாகாது. கொடுத்தால் நோயை விளைவிக்கும்.

மறுமுள்ளின் இயல்பு.

வைசூரி இறங்கு முன் தலைமுழுக்குச் செய்வித்தால் சுரம் காய்ந்து மறுமுள் புடைத்து இரணங் காணும்.

மருந்துவம்:- சாதிக்காய், நறுக்கு மூலம், கிராம்பு, சீரகம் வகைக்கு 5 வராகன் எடை பொடித்துக் குடிநீர் செய்து அதற்குச் சமன் நிம்பச்சாறும், ஈருள்ளிச் சாறும் சேர்த்து முறித்துக் கொஞ்சம் தேன்விட்டு மத்தித்து அரைக்கால் படி வீதம் மூன்று பொழுது கொடுத்து வட்டத்துத்தி இலையும் சூடனும் சமன் சேர்த்து அரைத்து ஆமணக்கெண்ணெயால் குழைத்து மறுமுள் உள்ள இரணத்தின் பேரில் பூச ஆறும்.

வைசூரியினால் கண்ணில் பூ விழுந்தால் மருத்துவம்.

1. பனங்குருத்தைத் தட்டிக் கண்ணில் பிழிந்தால் வைசூரியினால் உண்டான கண்பூ மாறும்.

2. முருங்கைப்பூ, நெருஞ்சிப்பூ, நந்தியாவட்டப்பூ, சீரகம் ஒன்றாய்ச் சேர்த்துத் தட்டிக் கண்ணில் பிழிந்தாலும் கண்பூ மாறும்.

மருத்துணவு (பத்தியஉணவு):- எலுமிச்சம்பழம், பழம்புளி, நெல்லிக்காய், பனங்கற்கண்டு, கெளுத்திக் கருவாடு, பாசிப்பயறு, குறவைக் கருவாடு, வெள்ளாட்டு உப்புக்கண்டம், காடை, வெள்ளெலி, உடும்பு ஊர்க்குருவி, வாழைக்கச்சல், அத்திப்பிஞ்சு, நீர்மோர், ஈருள்ளி, முதலியன.

Koviloor Digital Library

பத்தியத்திற்கு ஆகாத உணவுப் பண்டங்கள்

மருத்துணவு அல்லாத உணவுகள்:- மாங்காய், தேங்காய், இலுப்பை எண்ணெய், நல்லெண்ணெய், சோற்றாவி, நெல்லாவி கொட்டை, முத்தாவி, தாளிதவாடை இந்த வாடைகள் உடலில் பட்டால் கடுஞ்சூலை, கடுப்பு கைகால் முடக்கல் உண்டாகும்.

பாலவாகடப்படலம் முற்றிற்று.

கண் மருத்துவப் படலம்

கண்களில் தோன்றுகிற பலவித நோய்களும் அவைகளுக்கான மருத்துவமும் கூறுதலாம் நயனநோய் விவரம்.

சொல்லு மனித ரானவர்க்குத் தொகுத்த ரோக நயனவிதி
புல்லுந் தொண்ணூற் றாறுவிதம் புகன்றார் முனிவ ரானவர்கள்
அல்லும் வியாதி தானகல அறைந்தார் மருந்து பலவிதமாய்
வல்ல வாயுள் மறைகண்டு வகுத்துச் செய்வோர் பண்டிதரே. 159

பாரும் வாதக் காசமெனப் பகர்ந்த பித்த காசமுமாம்
சேருஞ் சிலேத்ம வதிகாசஞ் சிவந்த நீல காசமுமாம்
தீருங் குமரி காசமுடன் திரைநீ ரோடி காசமுமாம்
காரு மந்தார காசமுடன் கழறு மிரத்த காசமுமே. 160

மேவு முடஞ்ச லகும்பம் விளங்கும் படலம் பில்லமுடன்
நாவு மாலைக் கண்விழுங்கி தனியாம் வெண்மா சுப்படலம்
பாவு மணியா மளர்த்தியுடன் பகரு மந்த மதிமந்தம்
ஆவும் பருவணி சுற்றுங்கண் அறையிஞ் சுருங்கு கண்ணாமே. 161

ஆமே விளைவு காசலெறி யன்ன கோபம னல்கோபம்
தாமே புகைச்சல் பற்பரோகம் சாற்றும் ஓட்டுக் கண்பிணியாம்
போமே நேத்திர மலங்களுடன் புகலு பாய்ச்சல் நீரருகல்
நாமே சொன்னோங் கண்பிரிவு நவின்றார் செவ்வேர்க் குந்தமுமே. 162

குந்த மசுகர நமரமுடன் கூறு மரக்கம் கண்கட்டி
சந்தம் மிருகண் செவ்வலரி சாருங் கூச்சம் ஆணிப்பூ
பந்தம் நேத்திர வாயுவுடன் பகரும் புழுவெட்ட டாணியென
தந்தம் வலிப்பு வெள்ளெழுத்து சாரும் நேத்திர ரவிபாரே. 163

பாரே யழற்சி விழிநேத்ரப் பகருங் குருடு செஞ்சுடராம்
நேரே யெழுச்சி புளிச்சக்கண் ணிறைந்த யீளிகண் ணழிகண்ணாம்
கூரே முடமயிர்க் கண்ணிறைச்சி குறிக்குந் தொண்ணூற் றாறுபிணி
பாரே முனிவர் மாந்தர்கட்கு பகுத்தார் வியாதி தொகுத்தாரே. 164

Koviloor Digital Library

(அ.பொ.):– புல்லும்=அணையும்; அல்லும் வியாதி=கண்களை இருட்டவைக்கும் நோய்கள்; அகல்=நீங்க, தீர; ஒட்டுக் கண்பிணி=ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றிக் கொள்ளும் கண்ணோய் வகைகள்; பகுத்தார்=பிரிவுகாண்பித்தார்.

வாதகாசம், பித்தகாசம், சிலேத்துமகாசம், நீலகாசம், நீரொளிகாசம், குமரிகாசம், மந்தாரகாசம், இரத்தகாசம், சலகும்பம், பில்லம், படலம், வெண்மாசுப்படலம், மாலைக்கண் விழிவிழுங்கி, மணிவளர்த்தி, மதிமந்தம், பருவணிகை, சுற்றுக்கண், சுருங்கண், உளைவு காசவெரி அன்னகோபம், அனல்கோபம், புகைச்சல், பற்பல நோய், ஒட்டுக்கண், கண்மலங்கள், கண்பிரிவு, நீர்ப்பாய்ச்சல், செவ்வோக்குந்தம், சுக்கிரன், அமரம், அக்கரம், கண்கட்டி, இருட் கண், செவ்வரிப்படலம், கூச்சப்பூ, ஆணிப்பூ, புழுவெட்டு, நேத்திரவாயு, வெள்ளெழுத்து, கண்வலி, அழற்சிவிழி, கண்குருடு, செஞ்சுடர் எழுச்சி, புளித்தகண், இளிகண், அழிகண், முடமயிர், கண்ணிறைச்சி முதலான கண்நோய்கள் 96 ஆகும்.

மேற்படி நோய்கள் தோன்றும் இடம்.

வாதகோபத்தால் கருவிழியினில் நாற்பத்தைந்தும், ஐயகோபத்தால் வெள்ளை விழியினிடத்து 20, பித்தகோபத்தால் இமையோரத்தில் பதினாறும், கடைக்கண்ணில் பதினைந்தும் பிறக்கின்றன.

அவை வருவதற்குக் காரணம்.

மாதர் மயக்கத்தாலும், மூலத்தில் அக்கினி அதிகரிப்பதாலும், மேகநீராலும், மலக்கட்டினாலும், தலைவறட்சியினாலும், எண்ணெய் முழுக்குத் தவறினாலும், அதிகக் கவலையினாலும், கடுவெய்யிலில் ஓயாது நடக்கிறதாலும், அதிக சுமையெடுக்கிறதாலும், மழையிலும் காற்றிலும் அவதிப்படுவதாலும், தாம்பூலம் அடக்கி உறக்கம் செய்வதாலும், ஆழ்ந்த பார்வையினாலும் மேற்படி நோய்கள் தோன்றும்.

வாத காசத்தின் இயல்பு.

வாத காசத்தில் கருவிழியின் நடுவிலுள்ள பாவையில் நீலநிறமாகத் தோன்றி கண்பார்வையை நாளுக்கு நாள் மறைத்து வந்து பின்னர் பார்வைகெடும். வாத காசம் அசாத்தியமென்பர் நாகமுனிவர்.

மருத்துவம்:– 1. ஒரு படி பசுவின் நெய்யில் நற்சீரகம் ஒரு சிரங்கை, அரிந்த ஈருள்ளி ¼ படி, நத்தைச் சதை ஒரு எலுமிச்சங்காய் அளவு இவைகளைச் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு சிறு பீளைச்சாற்றை முன்னதாகக் கண்ணில் பிழிந்து பிறகு மேற்படி நெய்யைக் கண்ணில் கட்டிவர வாதகாசம் தீரும்.

2. முள்ளி, ஆரை, அல்லி, நீலி, முருங்கை இவைகளின் பூவை ஓர் அளவாய் பசும் பால் விட்டரைத்து அப்பால் மேற்படி நெய்யும் தேனும் கூட்டிக் களிம்புசெய்து விழியில் தீட்டிவரக் கண்ணின் வாதகாசம் கரையும்.

Koviloor Digital Library

3. நல்லெண்ணெய் 2படி, நெருஞ்சிச் சாறு, தாய்ப்பால், பசும் பால் வகைக்கு ½ படி வீதம் இவைகளை ஓர் எடையாய்க் கலந்ததில் கல்நார், சிற்றாமுட்டி வேர், கொன்றைப்பிசின், அதிமதுரம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், கொத்தமல்லி, சிறுகீரைவேர், செஞ்சந்தனம், கோட்டம், ஏலம் வகைக்கு 1 பலம் இடித்து எட்டுபடி தண்ணீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்துக் கூடவிட்டுச் சடாமாஞ்சில், சாத்திரபேதி வகைக்கு 1 பலம் பசும்நெய்யில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

குறிப்பு:– எல்லாக் கண்காச நோய்களுக்கும் கண்ணுக்கு மருந்திடுவதுடன் தலைக்கும் தைலம் தேய்த்து முழுகிவருதல் மிகமிக முக்கியமென்பது கருத்து.

பித்த காசத்தின் இயல்பு.

வெள்விழியில் வெண்சீரகம் போல் நீர்படர்ந்து, கருவிழியில் பாதி உளுந்து அளவு வெண்மையாய்த் தோன்றும்.

மருத்துவம்:– 1. சங்கு, திரிகடுகு, அரிதாரம், அதிமதுரம், புங்கவித்து, பீதரோகணி, துத்தம், மனோசிலை இவைகளை ஓர் எடையாய் நந்தியா வட்டப் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தேனில் உரைத்துக் கண்ணில் போடவும்.

2. சிற்றாமுட்டி, முசுமுசுக்கை, குரும்பை, சீந்திற்கொடி, உத்தாமணி, தாமரைவளையம் வகைக்குப் பத்துப்பிடி இடித்துப் பத்துபடி நீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து இறுத்து அதில் அதிமதுரம், சண்பகப்பூ, செவ்வியம், கோட்டம், மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம், வகைக்கு 3 வராகன் எடை பசுவின் பாலில் அரைத்துப் போட்டு ஒரு படி நல்லெண்ணெய் விட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலை முழுகிவரத் தீரும்.

குமரி காசத்தின் இயல்பு.

கண்வீங்கிக் கடுப்பும், வலியும் காணும்; பீளை கட்டும், இதனை வலியுங் காசம் என்று கூறுவர்.

மருத்துவம்:– 1. துருசு, துத்தம், புங்கம்வித்து, இந்துப்பு, சங்கு, மிளகு, மஞ்சள் இவைகளை ஓர் எடையாய் பசுவின் பால் விட்டு அரைத்து மேற்படி நெய்யில் போட்டுக்காய்ச்சி வடித்துக்கொண்டு விழியில் இடவும்.

2. பசும் நெய், ஈருள்ளிச்சாறு வகைக்கு 1 படி நன்றாய்க் கலந்து அதில் செங்கழுநீர்க்கிழங்கு, சீந்தில் தண்டு, ஏலம், மல்லி, விலாமிச்சு, வெட்டிவேர், சண்பகப்பூ, நெல்லிமுள்ளி வகைக்கு ¼ பலம் பசும் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலை முழுகிவரத் தீரும்.

நீல காசத்தின் இயல்பு.

கண்சோதியை யடுத்துச் சற்று சுணங்குபோல் வெளிறிக்காணும்; பாசி போல் நீர் படர்ந்து ஒளிமங்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– 1. வெண்காரம், சூதம், துருசு, சாரணை வேர், பவழம், பீங்கானோடு, பச்சைக் கற்பூரம், சாத்திரபேதி இவைகளை ஓர் எடையாய் மாதுளம் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து விழியில் போட்டுவரவும்.

2. பாதிரி, முசுமுசுக்கை, பருத்தி, கருங்குன்றி, முடக்கொத்தான் இவைகளின் சாறு வகைக்கு ¼ பலம், நல்லெண்ணெய் 1 படி, ஒன்றாய்க் கலந்து அதில் தகரம், சடாமாஞ்சில், ஏலம், மல்லி, தான்றி, கோட்டம் வகைக்கு ¼ பலம் வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

நீர் ஒளி காசத்தின் இயல்பு.

விழியில் நீர்க்கோர்த்துப் பிரண்டு ஒளி விழியிடையில் தீப்போல் தோன்றி அது தீப்பொறிபோல் ஒளி விடும்.

மருத்துவம்:– 1. குங்குமப்பூவும், பச்சைக் கற்பூரமும் சமனாய் எலுமிச்சம்பழச் சாற்றிலும் தேனிலும் குழம்புபோல் அரைத்துக் கொண்டு விழியில் போட்டு வரவும்.

2. ஆனைத்திப்பிலி, அதிமதுரம், தக்கோலம், வெள்ளிலோத்தரம், சுக்கு, திரிபலை, வகைக்கு ஒருபலம் வீதம் பசும்பாலில் அரைத்து ஒரு படி நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்.

நீர்ப்பாய்ச்சலின் இயல்பு

விழி நொந்து சிவந்து அனல்போல் எரியும்; அருவிபோல் நீர் வடியும்; தினவெடுக்கும்.

மருத்துவம்:– குதிரைப்பல்லு, துருசு, துத்தம், குமரிவேர், சங்கு இவைகளை ஓர் எடையாய் தேனும் தாய்ப்பாலும் விட்டுக் குழம்புபோல் அரைத்துக் கொண்டு விழியில் தீட்டி வரவும்.

கையாந்தகரை, கருவாழைக்கிழங்கு கம்மந்திராய், திராய் உத்தமதாளி தைவேளை, மணத்தக்காளி, நந்தியாவட்டம் இவைகள் சாறு வகைக்கு ¼ படி, நல்லெண்ணெய் 1படி, பசும் நெய் 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் வெட்டிவேர் வகைக்கு 1 பலம் அதிமதுரம், கோட்டம், சந்தனம், மஞ்சிட்டி, குரும்பை, சதகுப்பை கண்டில் (கண்டில் வெண்ணெய்). சடாமாஞ்சில் கச்சோலம், வசுவாசி (சாதிப்பத்திரி), இந்துப்பு, தான்றிக்காய் வகைக்கு 2 கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

அன்னகோபமென்னும் அனல்கோபத்தின் இயல்பு

கண் நொந்து சிவந்து வற்றிப்புடைத்துத் தீப்போல் எரிந்து நீர்வடியும்.

மருத்துவம்:– 1. மாதுளம் பூவும், காயும், பச்சைக் கற்பூரமும் ஓர் எடையாய்க் கல்வத்திலிட்டு தாய்ப்பால் விட்டுச் சிதைத்துச் சீலையில்

Koviloor Digital Library

முடிந்து கண்ணில் பிழிந்து இதனடியல் வருகிற தயிலங்களில் ஒன்றைத் தலை முழுகிவரத் தீரும்.

2. தாய்ப்பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 பலம் வீதம் கலந்து அதில் கோட்டம், சண்பகப்பூ, ஏலம், அதிமதுரம், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), விலாமிச்சம் வேர், வெட்டிவேர், சந்தனம் வகைக்கு ¼ பலம் வீதம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.

3. கற்றாழஞ்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் குறுகி வருகையில் பச்சைக்கற்பூரம், புனுகுசட்டம், சந்தனம், சாதிக்காய் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு வடித்து தலை முழுகிவரத் தீரும்.

பிரிதல் நேத்திரத்தின் இயல்பு.

எழுத்தைப்பார்த்து பின் மனிதரைப் பார்த்தால் இருள் போல் தோன்றும்.

மருத்துவம்:– 1. கருவளையல், காந்தம், செவ்வியம், வெள்ளைக் காக்கணான்வேர், துத்தம், துருசு, வெண்கலம், இவையெல்லாம் ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து பசும் நெய்யாலும் தாய்ப்பாலாலும் அரைத்துக் கண்ணில் போட்டு வரத் தீரும்.

2. துத்தம், துருசு, கம்பிளிச் சுட்டசாம்பல், தலைமயிர் சுட்ட சாம்பல் வகைக்கு 1 வராகன் எடை வீதம் கல்வத்தில் இட்டுக் கழற்கொடிச் சாற்றில் 4 சாமம் அரைத்து உலர்த்திய பின்பு பசும் வெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

3. பசும்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கு ஒரு படி வீதம் கலந்ததில் திரிகடுகு, காந்தம், தென்னைவேர், அதிமதுரம், மட்டிப்பால், கோட்டம், சந்தனம், ஏலம், குதிரைவாலிவேர், கல்மதம், சண்பகப்பூ, தகரம், சடாமாஞ்சில் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இளநீரிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படி மருந்துகளில் ஒன்றைக் கண்ணில் போட்டும் இந்த எண்ணெயைத் தேய்த்துத் தலைமுழுகிவரத் தீரும்.

கண் மயக்கத்துக்கு மருந்து

வாலுளுவையரிசி, குங்குமப்பூ, கிராம்பு, பச்சைக் கற்பூரம், சந்தனம், சண்பகப்பூ, பீதரோகணி, இலவங்கப்பத்திரி, வெள்ளைச்சாரணைவேர் வகைக்கு 1 கழஞ்சி, வெள்ளிப்பொடி கால் கழஞ்சு இவைகளைக் கல்வத்தில் நாலு சாமமாட்டி 4 படி தண்ணீரில் போட்டு நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 4 படி கலந்து அதில் சந்தனம், தேவதாரம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், காட்டெருமைப்போல், தாமரைப்பூ, ஏலம், இலவங்கப்பத்திரி, மல்லி, நெல்லிமுள்ளி வகைக்கு 8 பலம் இவைகளை மேற்படி பாலிலாட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரக் காசவெறி, கண்மயக்கம், பித்தநீர், தலையிடி நீங்கும்.

Koviloor Digital Library

புகைச்சலின் இயல்பு.

கண் மங்கலாயும் உருவம் பலவாகவும் தோன்றும்.

மருத்துவம்:– 1. தலையோடு 4 கழஞ்சு, துத்தம் 2 கழஞ்சு, இந்துப்பு 1 கழஞ்சு இவைகளை பனைமட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றில் இழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

2. கடுக்காய்ப் பருப்பு 12, திப்பிலி 5, மிளகு 3 இவைகளை நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றிலாவது மேற்படி வற்றல் ஊறின தண்ணீரிலாவது இழைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

3. பலகறை 5 வராகன் எடை, துத்தம், துருசு வகைக்கு கால் வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு செய்து தாய்பாலில் இழைத்துக் கண்ணில் போட்டுவர நீங்கும்.

4. கடம்ப விதையை பசும் பாலில் அரைத்து உலர்த்திக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில்போட்டுவர நீங்கும்.

5. வெள்ளைச்சாரணைவேர், மிளகு, சிறுதிப்பிலி இவைகளை ஓர் எடையாய் உத்தாமணிச் சாற்றிலும், சிறு குறிஞ்சான் சாற்றிலும், நந்தியாவட்டைப் பூச் சாற்றிலும் அரைத்துக் கயிறு செய்து நீரில் உரைத்துக் கண்ணில் போடத் தீரும்.

6. நல்லெண்ணெய் கால்படி, தாய்ப்பால் கால் படி ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம், நற்சீரகம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை, கற்றாழஞ் சோறு பாக்களவு அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் தலைக்கிட்டு உசிலம் பொடியாவது பாசிப்பயறாவது அரைப்பிட்டுத் தேய்த்துச் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

7. நல்லெண்ணெய் 2 படி, மிளகு, அதிமதுரம், வகைக்கு 1 பலம் இவைகளைப் பசும் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

மதிமந்த நோயின் இயல்பு.

கண் சிவந்து உறுத்தி வலிக்கும்; பீளைசாறும்; நீர்வடியும்; பார்வை மந்தமாயிருக்கும்.

மருத்துவம்:– 1. கடல்நுரையும் கற்கண்டும் ஓர் எடையாய் தேனில் குழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

2. இதில் மாறாவிடில், இந்துப்பு, மரமஞ்சள், மனோசிலை, திரிகடுகு இவைகளைச் சமமாய்ப் பசுவின் பாலில் அரைத்துக் கயிறுசெய்து மேற்படி நீரிலுரைத்துக் கண்ணில் இட்டுவரத் தீரும்.

Koviloor Digital Library

முடிந்து கண்ணில் பிழிந்து இதனடியல் வருகிற தயிலங்களில் ஒன்றைத் தலை முழுகிவரத் தீரும்.

2. தாய்ப்பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 பலம் வீதம் கலந்து அதில் கோட்டம், சண்பகப்பூ, ஏலம், அதிமதுரம், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), விலாமிச்சம் வேர், வெட்டிவேர், சந்தனம் வகைக்கு ¼ பலம் வீதம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரத் தீரும்.

3. கற்றாழஞ்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக் குறுகி வருகையில் பச்சைக்கற்பூரம், புனுகுசட்டம், சந்தனம், சாதிக்காய் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு வடித்து தலை முழுகிவரத் தீரும்.

பிரிதல் நேத்திரத்தின் இயல்பு.

எழுத்தைப்பார்த்து பின் மனிதரைப் பார்த்தால் இருள் போல் தோன்றும்.

மருத்துவம்:– 1. கருவளையல், காந்தம், செவ்வியம், வெள்ளைக் காக்கணான்வேர், துத்தம், துருசு, வெண்கலம், இவையெல்லாம் ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து பசும் நெய்யாலும் தாய்ப்பாலாலும் அரைத்துக் கண்ணில் போட்டு வரத் தீரும்.

2. துத்தம், துருசு, கம்பிளிச் சுட்டசாம்பல், தலைமயிர் சுட்ட சாம்பல் வகைக்கு 1 வராகன் எடை வீதம் கல்வத்தில் இட்டுக் கழற்கொடிச் சாற்றில் 4 சாமம் அரைத்து உலர்த்திய பின்பு பசும் வெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

3. பசும்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கு ஒரு படி வீதம் கலந்ததில் திரிகடுகு, காந்தம், தென்னைவேர், அதிமதுரம், மட்டிப்பால், கோட்டம், சந்தனம், ஏலம், குதிரைவாலிவேர், கல்மதம், சண்பகப்பூ, தகரம், சடாமாஞ்சில் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இளநீரிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படி மருந்துகளில் ஒன்றைக் கண்ணில் போட்டும் இந்த எண்ணெயைத் தேய்த்துத் தலைமுழுகிவரத் தீரும்.

கண் மயக்கத்துக்கு மருந்து

வாலுளுவையரிசி, குங்குமப்பூ, கிராம்பு, பச்சைக் கற்பூரம், சந்தனம், சண்பகப்பூ, பீதரோகணி, இலவங்கப்பத்திரி, வெள்ளைச்சாரணைவேர் வகைக்கு 1 கழஞ்சி, வெள்ளிப்பொடி கால் கழஞ்சு இவைகளைக் கல்வத்தில் நாலு சாமமாட்டி 4 படி தண்ணீரில் போட்டு நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 4 படி கலந்து அதில் சந்தனம், தேவதாரம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், காட்டெருமைப்போல், தாமரைப்பூ, ஏலம், இலவங்கப்பத்திரி, மல்லி, நெல்லிமுள்ளி வகைக்கு 8 பலம் இவைகளை மேற்படி பாலிலாட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரக் காசவெறி, கண்மயக்கம், பித்தநீர், தலையிடி நீங்கும்.

Koviloor Digital Library

புகைச்சலின் இயல்பு.

கண் மங்கலாயும் உருவம் பலவாகவும் தோன்றும்.

மருத்துவம்:— 1. தலையோடு 4 கழஞ்சு, துத்தம் 2 கழஞ்சு, இந்துப்பு 1 கழஞ்சு இவைகளை பனைமட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றில் இழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

2. கடுக்காய்ப் பருப்பு 12, திப்பிலி 5, மிளகு 3 இவைகளை நெல்லிக்காய்ச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றிலாவது மேற்படி வற்றல் ஊறின தண்ணீரிலாவது இழைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

3. பலகறை 5 வராகன் எடை, துத்தம், துருசு வகைக்கு கால் வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு செய்து தாய்பாலில் இழைத்துக் கண்ணில் போட்டுவர நீங்கும்.

4. கடம்ப விதையை பசும் பாலில் அரைத்து உலர்த்திக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில்போட்டுவர நீங்கும்.

5. வெள்ளைச்சாரணைவேர், மிளகு, சிறுதிப்பிலி இவைகளை ஓர் எடையாய் உத்தாமணிச் சாற்றிலும், சிறு குறிஞ்சான் சாற்றிலும், நந்தியாவட்டைப் பூச் சாற்றிலும் அரைத்துக் கயிறு செய்து நீரில் உரைத்துக் கண்ணில் போடத் தீரும்.

6. நல்லெண்ணெய் கால்படி, தாய்ப்பால் கால் படி ஒன்றாய்க் கலந்ததில் அதிமதூரம், நற்சீரகம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை, கற்றாழஞ் சோறு பாக்களவு அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் தலைக்கிட்டு உசிலம் பொடியாவது பாசிப்பயறாவது அரைப்பிட்டுத் தேய்த்துச் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

7. நல்லெண்ணெய் 2 படி, மிளகு, அதிமதூரம், வகைக்கு 1 பலம் இவைகளைப் பசும் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

மதிமந்த நோயின் இயல்பு.

கண் சிவந்து உறுத்தி வலிக்கும்; பீளைசாறும்; நீர்வடியும்; பார்வை மந்தமாயிருக்கும்.

மருத்துவம்:— 1. கடல்நுரையும் கற்கண்டும் ஓர் எடையாய் தேனில் குழைத்துக் கண்ணிலிடத் தீரும்.

2. இதில் மாறாவிடில், இந்துப்பு, மரமஞ்சள், மனோசிலை, திரிகடுகு இவைகளைச் சமமாய்ப் பசுவின் பாலில் அரைத்துக் கயிறுசெய்து மேற்படி நீரிலுரைத்துக் கண்ணில் இட்டுவரத் தீரும்.

Koviloor Digital Library

3. இந்துப்பு, சதகுப்பை, சங்கு, மனோசிலை, கடல்நுரை, மிளகு, செங்கற்பொடி ஓரளவாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து பசும் நெய்யில் உரைத்துப் போட்டுவரத் தீரும்.

4. இதிலும் நீங்காவிட்டால், நெற்றியில் படர்ந்திருக்கும் நரம்பிலொன்றை ஊசியினால் குத்தி இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி, இவைகளை ஓர் எடையாய் நந்தியாவட்டம் பூச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்துகொண்டு மேற்படி சாற்றில் உரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

குறிப்பு:- மேற்படி மருத்துவங்களைச் செய்யும்போது இதனடியிற் சொல்லியிருக்கிற மருந்தைத் தலையில்தேய்த்து அன்றாடம் தலைமுழுக்குச்செய்து வந்தால் பகலில் அருந்ததி தோன்றும்.

கண் மந்தம், பித்தம், நீர்ப் பாய்ச்சலுக்கு மருந்து.

சந்தனம், அதிமதுரம், வகைக்கு 1 பலம், குமரிச்சோறு ஒருபிடி இவைகளைப் பசுவின் பால் விட்டரைத்துக் கொதிக்கவைத்துத் தலையில் தளமாய்ப் போட்டு அமுக்கித் தேய்த்தும் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

பற்ப நோயின் இயல்பு.

விழியின் இமையுள் இரத்தம்கட்டித் திரண்டு இள மாமிசம் போலிருக்கும்.

மருத்துவம்:- விழியின் இமையைப் பிதுக்கிக்கொண்டு அதில் சீரகப் பொடியைத் தூவிப் பேய்ப்பீர்க்கிலையால் தேய்த்து இரத்தம் போக்கி, புளியிலையை இடித்துச் சாறு பிழிந்துக் குழம்பாய்க் காய்ச்சி மூன்றுநாள் கண்ணில் புறவளையமிட்டுத் துத்தம், துருசு, இந்துப்பு இவைகளை ஓர் எடையாய் உப்பிலிச் சாற்றில் மைபோல் உலர்த்தி அப்பால் நெய்யும் தேனும்விட்டு களிம்புபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் போட்டுவரத் தீரும்.

சலகும்ப நோயின் இயல்பு

வெள்விழியில் நீர்கோர்த்து, இமை வீங்கிக் கடுத்து வலிக்கும்; பீளை கட்டும்.

மருத்துவம்:- 1. வெண்குன்றிப் பருப்பும், அதன் வேரும், வெள்ளைக்காக்கணான் பூவும், அதன் விதையும், தாய்ப்பால் வார்த்து உருட்டிக் கயிறுசெய்து நீரில் உரைத்து கண்ணில் போட்டுவரவும்.

2. ஆடுதின்னாப்பாளை, ஆவாரை, மணித்தக்காளி, வரிக்கற்றாழை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, கோட்டம், மட்டிப்பால், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர் வகைக்கு 1 பலம், வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

பில்ல நோயின் இயல்பு

விழியின் இமை, புருவம் முழுமையும் நீர்கட்டித்திரண்டு புடைத்து விம்மியிருக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:- விழியின் இமைமயை உறுத்திப் பிடித்து, ஊசியால் குத்தி உரித்துப்போட்டு பசும்பால், நெய், நல்லெண்ணெய் மூன்றும் ஒன்றாய்க் கலந்து நெற்றி, புருவம், கன்னம் இவைகளில் ஒற்றடம் செய்து பச்சைக்கற்பூரத்தை நெய்யில் பொடித்துப் போட்டுச் சற்றுக் கொதிக்கவைத்து அதில் சீலையை நனைத்து இமையின் பேரில்போட்டுப் பெருங்காயமும் சீரகமும் பொடித்துத் தணலில் தூவிப் புகை காட்டிவரத் தீரும்.

செவ்வேர்க்குந்த நோய்க்கு மருந்து.

கடைக்கண்ணிலிருந்து வெள்ளை விழிமுழுவதுஞ் சிவப்பு நூல்போல் செவ்வரி யோடிப் படர்ந்திருக்கும்.

மருத்துவம்–மேல் மடிமாசை ஊசியால் திரட்டி, உரித்துவிட்டு, வெட்பூலாவேரை தாய்ப்பால் விட்டுத்தட்டி கண்ணில் பிழியத் தீரும்.

பருவநிகை நோயின் இயல்பு.

கடைக்கண்ணில் சதை வளர்ந்து படர்ந்து உறுத்தி வலிக்கும்.

மருத்துவம்:- 1. ஊசியினால் சதையைத் திரட்டி உரித்து விட்டு அதிமதூரத்தைத் தட்டிப் பசும் நெய்யில் போட்டுச் சிவக்கக் காய்ச்சி விழியில் கட்டிவந்தால் தீரும்.

2. வெங்கலப் பொடுதரையோடு வெள்ளைக் கற்பொடி, துத்தம், இந்துப்பு இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்து உலர்த்திப் பின்பு வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் பருவநிகை சதை வளர்ச்சி நீங்கும்.

படலத்தின் இயல்பு

வெள்விழியிற் பாலாடைபோல் மாசு படர்ந்திருக்கும்.

மருத்துவம்:- மேற்படி மாசை ஊசியினால் திரட்டி, உரித்துப் போட்டு மேற்படி அதிமதுர நெய்யைக் கண்ணில் இடத் தீரும்.

2. திரிகடுகு, துத்தம், செஞ்சந்தனம், வெள்ளைச்சாரணைவேர், தாமரைக்கிழங்கு, பச்சைக்கற்பூரம் இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பால் விட்டரைத்துக் கயிறு செய்து மேற்படி பாலில் உறைத்துக் கண்ணில் தீட்டிவந்தால் படலம் யாவும் தீரும்.

3. அஞ்சனக்கல், முட்டைத்தோல், சங்கு, திப்பிலி, சந்தனம், தலைஓடு இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்து கண்ணில் தீட்டிவந்தாலும் சகல படலமும் நீங்கிக் குணமாகும்.

வெண்மாசுப் படலத்தின் இயல்பு.

விழியில் வெண்மாசுப் படர்ந்து கரகரத்துக் குத்தலெடுக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– 1. பீதரோகணி, துத்தம், துருசு, பச்சைக்கற்பூரம், திரிகடுகு, நெல்லிப்பருப்பு, செம்புப்பொடி, பளிங்குக்கல், இரும்புப் பொடி, தலைஓடு, கடுக்காய், சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், வெண்பூலா வேர், ஓரிலைத்தாமரை வேர் வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலும், காணிச்சாற்றிலும் மும்மூன்று நாள்கள் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் நீங்கும்.

2. சுக்கு, திப்பிலி, மிளகு, சங்கு, அரிதாரம், புங்கம்பருப்பு, அதிமதுரம், துத்தம், பீரரோகணி, மனோசிலை, பன்றிக்கொம்பு, ஆமையோடு, புலிநகம், வெள்ளைச்சேவல் நெஞ்செலும்பு, இந்துப்பு இவைகளை ஓர் எடையாய் நந்தியாவட்டப்பூச் சாற்றில் மூன்று நாள் அரைத்துக் கண்ணில் இட வெண்மாகப் படலம், ஆணிப்பூ நீங்கும்.

மாலைக் கண்ணின் இயல்பு.

மாலை நேரத்தில் இருள் பிடித்ததுபோல் காணும்.

மருத்துவம்:– 1. புளியம்பூ, கிராம்பு, வெள்ளைக்காக்கணான் வேர், அதிமதுரம், துத்தம், துருசு, நீலரத்தினம், முத்து, பவழம், சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறு செய்துகொண்டு மேற்படி சாற்றில் உரைத்துக் கண்ணில் தீட்ட மாறும்.

2. வேப்பிலையை மயனம்போல் அரைத்துக் கோழிப்பித்திற்குக் கவசஞ்செய்து உமிக்காந்தலில் சுட்டுக் கவசம் நீக்கி உள்ளுக்குக் கொடுத்தாலும் அல்லது மேற்படி பித்தை முன்போல் வெதுப்பிப் பொடித்து மூன்று நாள் விழியில் பிழிந்தாலும் தீரும்.

3. மருதம்பட்டை, நற்சீரகம், ஈருள்ளி இவைகளைச் சிதைத்துப் பிழிந்தாலும் தீரும்.

4. இலுப்பை நெய்யாவது, மகிழம் விழுதையாவது அல்லது காட்டாமணக்கின் முத்தையாவது தாய்ப்பாலில் உரைத்துப் போடத் தீரும்.

5. பொன்னாவரை விதையை வெள்ளாட்டுப் பிச்சில் உரைத்துப் போட்டால் தீரும்.

6. வெள்ளைச்சாரணை வேரைத் தாய்ப்பாலில் உரைத்துப் போட்டால் தீரும்.

7. மின்மினிப்பூச்சி, மயில்துத்தம், வெள்ளைச்சாரணைவேர் ஆகியவை ஓர் எடையாய் அரைத்துச் சிறுபீளைச்சாறு விட்டரைத்து கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்திட்டாலும் தீரும்.

விழி விழுங்கி நோயின் இயல்பு.

ஒரு நேரம் காலை முதல் மதியம் வரை தலை மிகுதியாய் அதிர்ந்துக் குடைந்து இடிபோல், ஒரு நேரம் உச்சிமயிரைப் பிடிப்பது போலிருக்கும், அப்பால் நாள்செல்ல விழியிற் சதை ஓங்கி மூடும்.

Koviloor Digital Library

மருத்துவம்:— 1. மேற்படிகுணம் கண்டவுடன் மிளகு ஒரு வராகன் எடை, உப்புக்கல் ஒன்று, தவசுமுருங்கைஇலை ஒரு கொட்டைப்பாக்கு அளவு இவைகளைச் சிதைத்து துணியில் முடிந்து தாய்ப்பாலில் ஊறவைத்து இரு சாமத்திற்கு ஒரு முறை விழியில் பிழிந்து வந்தாலும் தீரும்.

2. பனைமட்டைச்சாறு, பசும்பால் வகைக்கு 1/8 படி வீதம் கலந்து அதில் சிறுகீரை வேரை ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சிக் காலையில் தலையில் தளமிட்டு மாலையில் தலைமுழுக்குச் செய்தும் காலையில் பசும்பாலில் சர்க்கரை கலந்து குடிக்கவும். பசுவின் பாலும் தயிரும் சேர்த்து இச்சாபத்தியமாய் உணவு உட்கொண்டுவரத் தீரும்.

மாலைக் காச நோயின் இயல்பு.

கண்ணுறுத்தி வலித்தெரியும்; கருவிழி சற்றே கலங்கியிருக்கும்; தீபம் வேறாய்க்காட்டும்.

மருத்துவம்:— இந்துப்பு, மஞ்சள், சாரணைவேர், துத்தம் இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

மணிவளர்த்தி நோயின் இயல்பு.

கடைக்கண்ணில் பலகாலும் மணிபோல் எழும்புவதும் உடைவதுமாக இருக்கும்.

மருத்துவம்:— 1. மிளகு, செம்புப்பொடி, ஓரிலைத்தாமரை வேர், மண்டை ஓடு, பளிங்குக்கல் வகைக்கு கால் வராகன்எடை, வறுத்த துருசு 2 வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்து 15 நாள் செப்புச் சிமிழில் அடைத்த மருந்தை மறுபடியும் மேற்படி சாற்றாலரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத்து நேரத்தில் தீட்டி வந்தாலும் தீரும்.

2. சூதம் 1 வராகன் எடை, காரீயம் 2 வராகன் எடை, துத்தம் 4 வராகன் எடை, சங்கு வராகன் எடை 8 தாம்பிரம் வராகன் எடை 16 எடை இவைகளைப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து பசும் நெய்யில் உரைத்துக் கண்ணில் போட்டுவந்தாலும் தீரும்.

3. ஒரு பலம் சிற்றாமணக்கின் வேர்ப்பட்டையை இடித்து இரண்டு படி நீரில் போட்டு வற்ற வைத்திறுத்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சி கல்வத்திலிட்டுக் கடுக்காய்த்தூளும் சர்க்கரையும் சமமாய்ச் சேர்த்து மைபோலரைத்துப் பின்பு தேன்விட்டுக் களிம்பு போல் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டி வந்தாலும் தீரும்.

4. துத்தத்தை (பால்துத்தம்) எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலிலுரைத்து விழியில் தீட்டி வந்தால் தீரும்.

Koviloor Digital Library

மேற்படி மருந்து செய்யும் போது காலையில் தாய்ப்பாலில் புளியைக் கரைத்துக் கொதிக்க வைத்துச் சீலையில் தீட்டி கண்களை மூடிக் கொண்டு இரப்பையின் மேல் ஒற்றடம் செய்து வரவும்.

மந்தார காசத்தின் இயல்பு.

கண் சுற்றெல்லாம் வரையுண்டாகி அரிப்பெடுக்கும்; கண்சிவந்து வலிக்கும்; விழி சிறுக்கும்.

மருத்துவம்:– துத்தம், துருசு, வகைக்கு 1 வராகன் எடை, சிறுகீரை, பொன்னாங்காணி, ஓரிலைத் தாமரை இவைகளின் வேர் வகைக்கு ஒரு பாக்களவு, எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோல் அரைத்துக் காசுபோல் வில்லை தட்டிக் காயவைத்துப் புதுச்சட்டியில் பரப்பி மறுசட்டி கொண்டு மூடி நான்கு நாழிகை எரித்துப் பற்பமாக்கிச் சிமிழியில் அடைத்துக்கொண்டு எள்ளின் அளவு விழியிலிட்டு குமரிமணி (மணித்தக்காளி) வேலிப்பருத்தி, பொன்முசுட்டை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 2 படி, வெட்பூலா, நெருஞ்சில், விஷ்ணுகரந்தை, விலாமிச்சு வேர், வெட்டிவேர், கொத்தமல்லி, கோட்டம் வகைக்கு ஒரு பலம் வீதம் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலைமுழுகத் தீரும்.

உளைவு கண்ணின் இயல்பு.

கண்மணியினுள் எப்போதும் உளைந்து வலிக்கும்.

மருத்துவம்:– வெள்ளைக் காக்கணான் வேர் 1 வராகன் எடை, வெண்குன்றி வேர் 7 வராகன் எடை, வெள்ளைச்சாரணை வேர் 3 வராகன் ஏடை, மஞ்சள் 4 வராகன் எடை, துத்தம் 5 வராகன் எடை, துருசு, 6 வராகன் எடை இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்து விழியிலிடத் தீரும். (வேர்ப் பட்டையைக் கொள்க)

கண்ணுளைவு, கண் சுருங்கல், ஒட்டுக் கண், மலங்கு கண் முதலான நோய்களுக்கு மாத்திரை.

துத்தம், இரும்புப்பொடி, முத்து (நல்முத்து). முட்டைத்தோல், பச்சைக் கற்பூரம் வகைக்கு 1 கழஞ்சு, செம்புப்பொடி கழஞ்சு, பொன்மஞ்சாடி, 1 கழஞ்சு நற்பவழம், வெள்ளி வகைக்கு அரை கழஞ்சு பொடித்துப் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றிலும், முருங்கைப்பூச் சாற்றிலும், காடி நீரிலும் தனித்தனியே அரைத்துக் கயிறு செய்து தேனிலாவது, கோசலம், நெய், தாய்ப்பால் வகைக்கு 1/8 படி, நன்றாய்க் கலந்து நீர் வற்றக் காய்ச்சி வடித்த நெய்யிலாவது உரைத்துப் போடத்தீரும்.

வரணசுக்கிலம், உளைவிற்கு மருத்துவம்.

திரிபலை, தேற்றான் விதை, தாமரைமணி ஓர் எடையாய்க் குமரிச் சாற்றிலரைத்துத் தாய்ப்பாலில் உரைத்து 21 நாள்கள் கண்ணில் போட்டு வரத் தீரும்.

Koviloor Digital Library

சுருங்கு கண்ணின் இயல்பு.

குவளை புண்ணாகி நாளுக்கு நாள் கண் சுருங்கும்.

மருத்துவம்:– சங்கு, காந்தம், கடல்நுரை, நன்றாய்ச் சுட்ட செங்கல் பொடி, இந்துப்பு, மனோசிலை, கற்கண்டு, பீதரோகணி, பச்சைக் கற்பூரம் சமமாய் நந்தியாவட்டைப் பூச்சாற்றில் அரைத்து, உலர்த்தி பின்பு வெண்ணெயைக் கூட்டி மைபோல் அரைத்து விழியில் தீட்டிவரச் சுருங்கு கண் முதலான விழி நோய்களும் தீரும்.

ஒட்டுக் கண்ணின் இயல்பு.

கண்ணில் எப்பொழுதும் பீளையும் நீரும் சொரியும்; இமைகள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளும்.

மருத்துவம்:– துத்தம், துருசு, புளியம்பொருக்குச் சுட்ட சாம்பல், கடுக்காய்க்கரி இவைகளை ஓர் எடையாய் பசுவின் வெண்ணையில் அரைத்துக் கண்ணில் போட நீங்கும்.

மலங்கு விழியின் இயல்பு.

இராக்காலத்தில் விழியில் நீர் மல்கி செம்பி சிவந்துப் பகலில் மயங்கும்.

மருத்துவம்:– சமுத்திரப் பழத்தைத் தூய்மைசெய்து கல்வத்தில் இட்டு பசுவின் வெண்ணெயைக் கூட்டிக் களிம்புபோல் அரைத்து விழியில் தீட்டி இதன் அடியில் கண்டிருக்கும் பக்குவத்தைச் செய்துவர நீங்கும்.

கண் மந்தம், நீர்ப்பாய்ச்சல், மலங்கல் பித்தத்திற்கு மருத்துவம்.

1. சந்தனம், குமரிமணி, அதிமதுரம் வகைக்கு 1 பலம், இவைகளைக் கால்படி பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி தலையில் தளமிட்டு மாலையில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.

2. இமை குழிந்து நீர் வடித்துப் பரபரத்து வேதனை கண்டால் கதிரைக் காய்ச்சி நெற்றியில் சுட நீங்கும்.

கண் கட்டிக்கு மருந்து.

1. நன்னாரி, விளா, சங்கு இவைகளின் வேரும் அதிமதுரமும் ஓர் எடையாய் மைபோல் அரைத்துக் காடியில் கலக்கிக் கரண்டியில் கொதிக்க வைத்து இரும்புத் தடியால் களிம்புபோல் தேய்த்து விழியில் கொஞ்சம் போட்டுக் கட்டியிலும் பூச நீங்கும்.

2. செண்பகப்பூ, சந்தனம், சிறுநாகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கற்கண்டு, சாதிக்காய், தக்கோலம், சீந்தில்தண்டு வகைக்கொரு கழஞ்சு வீதம் அரைத்து எட்டுப் படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதைப் பீச்சாங்குழலினால் விழியில் அடித்து மயிரை உதிர்த்து அரிதாரம்,

Koviloor Digital Library

இந்துப்பு, செப்புப் பொடி இவைகளை ஓர் எடையாய் துளசிச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்து விழியிலிட்டு வரத் தீரும்.

3. சீனக்காரம், துத்தம், துருசு, மயில்முட்டைத்தோல், கோழி முட்டைத்தோல் வகைக்கொரு கழஞ்சு வீதம் பொடித்துக்கொண்டு எள்ளளவு விழியில் போட்டு வந்தாலும் தீரும்.

இருண்ட விழிக்கு மருந்து.

1. நெல்லிமுள்ளி, புங்கவிதை, வெள்ளுள்ளி, சிறுகீரை, இவற்றைச் சமமாய் மெழுகுபோல் அரைத்து உருண்டைசெய்து தாய்ப்பாலில் உரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

2. ஆவாரங்கரி, கடுக்காய்கரி, சவுக்காரம், வகைக்கு 1 வராகன் எடை, துருசு கால் வராகன் எடை, பன்றி எலும்பு 4 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் இட்டு மைபோல் அரைத்துக் குளிகை செய்து தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் தீரும்.

3. துத்தம், துருசு, வெண்சாரணைவேர், சோகி வகைக்கு 1 கழஞ்சு வீதம் எலுமிச்சம்பழச் சாற்றில் ஆட்டிக் கயிறுசெய்து கொண்டு புளி இலைச்சாற்றிலாவது அவுரி இலைச் சாற்றிலாவது அரைத்துக் கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

இரத்தப் பாய்ச்சலுக்கு மருந்து.

தேள் கொடுக்கிலையைக் கசக்கிக் கண்ணில் இட்டுவர நீங்கும்.

கண்ணெரிவிற்கு மருந்து.

1. மாதுளம்பூ, நற்சீரகம், நெருஞ்சிக்காய், இவற்றை ஓர் எடையாய் பனைமட்டைச் சாற்றில் ஆட்டிக் கயிறாக்கிக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் தீட்டி வந்தால் தீரும்.

2. செஞ்சந்தனம், சாத்திரபேதி, தேற்றான்மை இட்டு வந்தால் கண்ணெரிவு தீரும்.

3. ஒரு படி பசுவின் பால், ஒரு பலம் பொன்னாங்கண்ணி வேரை ஆட்டிக் கலக்கிக் காய்ச்சி புறக்குத்திக் கடைந்த வெண்ணை திரட்டி கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

கொம்மட்டிபட்ட கண்வேதனைக்கும் கோரைப்பட்டதற்கும் மருந்து.

1. மண்சட்டிக் காய்ந்தபின் அதில் முருக்கந் தழைச்சாறு (முள்முருக்கன்) விட்டு விழியில் ஆவி பிடித்து புளியந்தழை, துளசித் தழை வகைக்கொருபிடி, 10 கடுக்காய், ஆகியவைகளை நறுக்கியிட்டு சுட்டு ஓட்டில் தட்டி ஒரு சொட்டுச் சாறு கண்ணில் வார்த்து வெதுப்பத்துடன் ஒற்றடம்

Koviloor Digital Library

செய்து அப்பால் அந்தச் சாற்றில் எலுமிச்சம் பழத்தோடு சுட்டதை அரைத்துக் கொதிக்க வைத்துப் புறவளையமிடத் தீரும்.

2. அண்டத்தோல், வெண்ணொச்சிஇலை, திப்பிலி, தேற்றான்விதை, மிளகு, இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துக் கொதிக்க வைத்துப் புறவளையமிடத் தீரும்.

3. கஞ்சாங் கோரை வேரை மேற்படிச் சாற்றில் அரைத்துப் புறவளையமிடத் தீரும்.

4. மண்ணாங்கட்டியைப் பழுக்கக் காய்ச்சி அதில் தாய்ப்பாலாவது முருங்கை இலைச்சாறாவது விட்டு ஆவிபிடித்து மேற்படி கட்டியை அரைத்துக் கண்ணில் புறவளையமிடத் தீரும்.

5. பசுவின்நெய், சிற்றாமணக்கெண்ணெய், பொன்னாங்காணிச் சாறு இவைகளை ஓர் அளவாய்க் காய்ச்சித் தலையில் பதமிட்டு பொன்னாங்காணி, ஓரிலைத்தாமரை, வெள்ளைக்காக்கணான், சிறு கீரை, இவைகளின் வேரைச் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மைபோல் ஆட்டி உலர்த்தி பின்பு பசுவின் வெண்ணெய் கூட்டி களிம்புபோல் அரைத்துக் கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

6. கீழ்க்காயநெல்லிச் சமூலம், ஈருள்ளி ஓர் எடையாய்ச் சிதைத்துச் சீலையில் முடிந்து கண்ணில் விட்டு வந்தாலும் தீரும்.

கண் புழுவெட்டுப் புண்ணுக்கு மருந்து.

1. துத்தம், துருசு, வெள்ளைப்பாடணம் இவைகள் வகைக்கு 1 வராகன் எடை நிறையாய் பொன்னாங்காணி இலைச்சாற்றிலும் சிறுகீரைச் சாற்றிலும் ஒரு நாள் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து மேற்படி மூலிகையின் வேர்களை விளாங்காய் அளவு அரைத்துக் குகைபிடித்து அதன் மேற்படி வில்லைகளை வைத்துப் பொதிந்து புளியம்பரணைக்குள் வைத்துப் புடம்போட்டு, பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்பாக்கிக்கொண்டு புருவத்திலிட்டுவரப் புழுசெத்து புண் ஆறி முடி வளரும்.

2. வெளுத்த சீலையில் எருககம்பால் ஊட்டி நிழலில் உலர்த்தித் திரியுருட்டி விளக்கில் பசுவின் நெய் விட்டுத் தீபமேற்றிப் புதிய சட்டிமேல் ஊமத்தஞ்சாறுபூசி மைப்பற்றவைத்து உதிர்த்து விளக்கெண்ணெயில் கலந்துகொண்டு கண் புருவத்தில் போட்டு வரத் தீரும்.

3. விரால் மீன், குடல் சிலாம்பு நீக்கிக் காயபபோட்டு மைபோல் பொடித்துக்கொண்டு கண் இமையில் பனைவெல்லத்தைப்பூசி அதன்மேல் மெல்லிய வெளுத்த துணியில் வெண்ணெயைத் தடவி மூடி அதன்மேல் பொடியைப் பரப்பி ஓரிரவு மல்லாக்கப் படுத்திருக்கப் புழுவெல்லாம் துணியில் வந்து ஒட்டி இருக்கும். அப்புறம் மேற்படி துணியைத் தண்ணீரில் போட்டுப் பார்த்தால் புழுவெல்லாம் தண்ணீரில் மிதக்கும். இப்படி மூன்று நாள்கள் செய்ய அப்பால், புற்றில் ஒட்டியிருக்கிற நாள்பட்ட எறும்பைத் தேனிலாகிலும்

Koviloor Digital Library

தாய்ப் பாலிலாகிலும் உரைத்துப் புருவத்தில் போட்டுவரப் புழுவெட்டு மாறிப் புண் ஆறி முடி வளரும்.

4. முத்தெருக்கஞ்செவி வேரைத் தாய்ப்பாலில் காய்ச்சிப் புருவத்தில் தடவிவரப் புழுவெட்டுமாறி முடி வளரும்.

கண் பூவுக்கு மருந்து.

1. தேள் கொடுக்குப் பூ, நந்தியாவட்டப் பூ ஓர் எடையாய் எடுத்துக் கலக்கிக் கண்ணில்விடத் தீரும்.

2. சிறுகிளாவேர், கடுக்காய், இந்துப்பு, பழம்புளி இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பால் விட்டுத் தட்டி துணியில் கட்டி நாளொன்றுக்கு மூன்று வேளை மூன்று நாள்கள் கண்ணில் பிழிய நீங்கும்.

3. முசுமுசுக்கை இதழும், நற்சீரகமும் ஓர் எடையாய் தாய்ப்பால் விட்டு இடித்து வார்க்க நீங்கும்.

4. உத்தமதாளிநெருஞ்சில், முருங்கை இவைகளின் பூவும், வெள்ளைச் சாரணைக் கொழுந்தும், நாய்வேளைக் கொழுந்தும், ஈருள்ளியும் நற்சீரகமும் வகைக்கு ¼ வராகன் எடை வீதம் தாய்ப்பால் விட்டுச் சிதைத்துக் கண்ணில் பிழியத் தீரும்.

5. பூநாகம், வெள்ளைக்காக்கணான் வேர், வெள்ளைச்சாரணைவேர், துருசு, துத்தம், பவழம், முத்து, கொம்புப்பொடி, பொன் ஓர் எடையாக ஊமத்தைச் சாற்றிலரைத்து கயிறு செய்து முலைப்பாலில் உரைத்து விழியில் போடத் தீரும். ஆணிப்பூவும் ஆறும்.

6. கணவாயோடு, துத்தம், துருசு ஓர் எடையாய், குப்பைமேனிச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து தேனில் அரைத்துப் போட்டு வந்தாலும் தீரும்.

7. வரட்பூலா, அந்திமல்லிகை (பத்திராட்சி), ஓரிலைத்தாமரை, நந்தியாவட்டம் இவைகளின் மலர், துத்தம், துருசு, ஆமையோடு, வெந்தத்தலையோடு, பலகறை இவைகளை ஓர் எடையாக்கிப் பனைமட்டைச் சாற்றிலரைத்துக் கயிறு செய்துகொண்டு மேற்படி சாற்றிலுரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

8. சீனக்காரத்தைப் பீங்கானிலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றில் இட்டுக் காயவைத்து அந்தச் சீனக்காரமும் பச்சைக்கற்பூரமும் ஓர் எடையாய் தாய்ப்பாலில் அரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

9. பூவிழுந்த கண்புறத்தின் காற்பெருவிரலைக் கயிற்றினால் கட்டி 7 உத்தாமணிப் பூவைக்கசக்கி விழியில் பிழிந்தாலும் தீரும்.

பூ, வெள்ளெழுத்திற்கு மருந்து.

பீதரோகணி, நற்பவழம், சாரணைவேர், இவைகளைச் சமமாய்த் தண்ணீரில் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் அரைத்துப்போட பூ மாறும். தண்ணீரில் உரைத்துப்போட வெள்ளெழுத்து நீங்கும்.

Koviloor Digital Library

ஆணிப் பூவுக்கு மருத்துவம்.

1. துத்தம், பலகறை, தேற்றாங்கொட்டை, மனோசிலை, தலையோடு, மிளகு, திப்பிலி, சேவல் நெஞ்செலும்பு வகைக்கு அரை கழஞ்சு வீதம் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்து காடியிலுரைத்து விழியில் போட்டுவந்தால் தீரும்.

2. கடல்நுரை, மிளகு, சீனக்காரம், அதிமதுரம், வெண்காரம், கடுக்காய், துருசு, துத்தம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி, செம்புப்பொடி ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் இழைத்துப் போட்டுவந்தாலும் தீரும்.

3. நத்தைக்கூடு, மிளகு, ஆமையோடு, முதலைப் பல், பன்றிக் கொம்பு சேவல்நெஞ்செலும்பு, வெள்ளி, புலிநகம், இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பாலில் விட்டு மைபோலரைத்துக் கயிறு செய்துகொண்டு தேனில் உரைத்து விழியிலிட ஆணிப்பூ முளைமாறும்.

பூ, படலம் அதிமாங்கிச வளர்ச்சிக்கு மருந்து.

1. ஆமையோடு, முதலைப்பல், யானைத்தந்தம், தேற்றான்விதை, துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்க் காடியிலரைத்துக் கயிறுசெய்து மேற்படி நீரில் உரைத்தப் போட்டுவர நீங்கும்.

2, கடுக்காய், திப்பிலி, வெண்காரம், சந்தனம், கடல்நுரை, வெள்ளிலோத்திரம் வகைக்கு ஒரு கழஞ்சு, சங்கு, பவழம், துருசு, வகைக்கு 4 கழஞ்சு இவைகளை மருங்கைப்பூ சாற்றிலரைத்துக் கயிறு செய்து விழியில் போட்டுவரத் தீரும்.

முளை ஆணிப் பூவுக்கு மருந்து.

1. துத்தம், துருசு, சீனக்காரம், வெள்ளைக்காக்கணான்வேர், வளையலுப்பு இவைகளை ஓர் எடையாய்ப் பனைமட்டைச் சாற்றில் அரைத்துக் கயிறுசெய்துகொண்டு தாய்ப்பாலில் உரைத்து கண்ணிலிட்டுவரத் தீரும்.

2. புளியிலையை எலுமிச்சம்பழச்சாறு விட்டுச் சிதைத்துப் பிழிந்து அதில் தேற்றான்விதையும் பச்சைக்கற்பூரமும் உரைத்துப் போட நீங்கும்.

பூ, படலம், காசத்திற்கு மருந்து.

முத்து, பவழம், துத்தம், துருசு, பளிங்குக்கல், பீங்கானோடு, காரீயம், இரசம், சீனக்காரம், வெண்காரம், வெந்தயம், மண்டை ஓடு வகைக்கு 1 வராகன் எடை வீதம் எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில்உரைத்தக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

குந்தத்திற்கு மருந்து.

1. பச்சைக்கற்பூரம், காரீயம், இரசம், மஞ்சள், திப்பிலி, மிளகு இவைகளை ஓர் எடையாய் நந்தியாவட்டப் பூச்சாற்றிலரைத்துக் கயிறு செய்துகொண்டு தாய்ப்பாலில் உரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

Koviloor Digital Library

2. புளியங்கொழுந்தை இடித்துச் சாறுபிழிந்து குழம்பாய்க் காய்ச்சி கல்வத்திலிட்டு இந்தப்பு, துத்தம், துருசு வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் இவைகளைப் பொடித்துப்போட்டு அரைத்து உலர்த்திப் பின்பு தேன்விட்டுக் குழம்புபோல் அரைத்து விழியில் போட்டு வந்தால் தீரும்.

3. இலுப்பைப் புண்ணாக்கு 3 வராகன் எடை, துத்தம், துருசு, வகைக்கு 2 வராகன் எடை வீதம் இவைகளைக் காடியில் அரைத்துக் கயிறு செய்துகொண்டு காடியில் உரைத்துப்போட்டு வந்தாலும் தீரும்.

குந்தம் அமரத்திற்கு மருந்து.

1. சங்கு, இந்துப்பு, பளிங்குக்கல், மஞ்சள், சந்தனம், மனோசிலை, மிளகு இவைகளை ஓர் எடையாய் பசும்பால் விட்டரைத்துக் கயிறு செய்துகொண்டு தேனிலுரைத்து விழியில் தீட்டிவரத் தீரும்.

2. வெண்காரமும், மயிர்ச்சுட்ட சாம்பலும் ஓர் எடையாய் நெய்யில் அரைத்துக் களிம்புசெய்து விழியில் போட்டுவந்தால் தீரும்.

3. கல்வத்தில் சங்கிலைச்சாறு பிழிந்து குழவியால் களிம்புபோல் அரைத்து விழியில் போட்டுவந்தால் தீரும்.

4. சேராங்கொட்டைச் சுட்டகரியும், துருசும் ஓர் நிறையாய்ப் பொடித்துப் பசுவின் வெண்ணெய் கூட்டிக் களிம்பு போலரைத்து இமையின் பேரில் போட்டுவந்தால் இழிகண் மாறி உதிர்ந்து முடி வளரும்.

குந்தம் பூவிற்கு மருந்து.

சிறுகீரை, பொன்னாங்காணி, வெள்ளைச்சாரணை வெள்றைகாக்கணான் இவைகளின் வேர், தேற்றான்விதை, மண்டைஓடு, நாய்ப்பால், சேவல் மார்பெலும்பு, முத்து, பவழம் இவைகளை நந்தியாவட்டம் பூச்சாற்றில் மைபோல் அரைத்து உலர்த்தி விழியில் தீட்டிவர நீங்கும்.

அழிகண்ணிற்கு மருந்து.

1. இந்துப்பு, கடுக்காய் விதை ஓர் எடையாய் வெண்ணெய் போல் அரைத்துச் செம்புப் பாண்டத்தில் அப்பி வைத்திருந்து களிம்பு ஊறிப் பசுமையான பின்பு எடுத்துக்கொண்டு கண்ணில் போட்டு வந்தாலும் தீரும்.

2. பூநாகத்தைச் சீலையில் முடிந்து உமிக்காந்தலில் புதைத்து எடுத்து அதற்குநிகர் நாவற்கொழுந்து சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உலர்த்தி வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர அழிகண், இரணம், சுக்கிரன் தீரும்.

கண் புண்ணுக்கு மருந்து.

1. துத்தம், துருசு வகைக்கு 1 வராகன் எடை மிளகு கால் வராகன் எடை வெற்றிலைச் சாற்றால் மைபோல் அரைத்து உலர்த்திய பால் வெண்ணெய் கூட்டி மைபோல் அரைத்துக் கொண்டு கண் புண்ணில் போடத் தீரும்.

Koviloor Digital Library

2. சேவல் பூவை (கோழிக்கொண்டை) அறுத்து அதில் வருகிற இரத்தத்தை மூன்றுநாள் இருபோது போடத் தீரும்.

நேத்திர வாயுவுக்கு மருந்து.

துத்தம், (பால்துத்தம்) துருசு வகைக்கு 1 வராகன் எடை, படிகாரம் 2 வராகன் எடை, இரண்டு சேங்கொட்டையைச் சுட்டகரி இவைகளைப் பசுவின் வெண்ணெயால் அரைத்துக் களிம்பு செய்து கண்ணில் போட்டும், தாமரைக்கிழங்கு, நெல்லிக்காய், பொன்னாங்காணி இவைகளின் சாறு, சிற்றாமணக்கெண்ணெய், இளநீர் வகைக்கு அரைப்படி, நல்லெண்ணெய் 2 படி, இவைகளைக் கலந்ததில் விலாமிச்சம் வேர், தாளிசப்பத்திரி, சண்பகப்பூ, சிறுநாகப்பூ, சந்தனம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு 1 பலம் இவைகளை பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

நேத்திரவாயு, மண்டையிடிக்குத் தைலம்.

1. பொன்னாங்காணி, கையாந்தகரை, காத்தொட்டி, கற்பூர வெற்றிலை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், பசுவின் நெய், வகைக்கு அரைப்படி, மேற்படி பால் 3 படி இவைகளைக் கலந்ததில் மிளகு, கத்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், நற்சீரகம், உள்ளி, ஏலம், கிராம்பு, சந்தனம், வாய் விளங்கம் வகைக்கு 4 வராகன் எடை மேற்படிச் சாற்றில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

2. நல்லெண்ணெய் கால்படி, சீரா செங்கழுநீர்ச் சாறு கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் பூண்டு கால் பலம், மிளகு 1 பலம், வெந்தயம் 1 பலம் இடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடிகட்டித் தலைமுழுகிவரத் தீரும்.

ஒளிமயக்கம், வெளிமயக்கத்திற்கு மருந்து.

முயலின் புழுக்கையைச் சுட்ட சாம்பலைப் பசுவின் நெய் விட்டு மைபோல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர நீங்கும்.

கண்ணில் நீரேத்தத்திற்கு மருந்து.

பச்சைக் கற்பூரத்தை பொன்னாங்காணி சாற்றில் அரைத்து நாசியில் நசியஞ் செய்து, ஆவாரங் கொட்டையைச் சட்டியில்வறுத்து பசுவின் பால் தெளித்து விழியில் ஆவி பிடித்து, அகிற்கட்டை, ஆயில் பட்டை, கருங் குங்கிலியம், சதகுப்பை, ஓமம், சுக்கு, மிளகு, வசம்பு, மஞ்சள் இவைகளை சம எடையாய்ப் பொடித்து துணியில் பாய்ச்சி உருட்டித் தீயில் கொளுத்தி நாசியில் புகை பிடிக்கச் சகல நீரேத்தமும் நீங்கும்.

சூடு வளர்த்திக்கு மருந்து.

துத்தம், துருசு, சிவந்த செங்கல் பொடி இவைகளை ஓர் எடையாய் மருடகிழங்கை வாட்டி இந்தச் சாற்றில் மைபோல் அரைத்து உலந்த பின்பு

Koviloor Digital Library

பசுவின் வெண்ணெய் கூட்டி மைபோல் ஆட்டி சூட்டின் மேல் போட நீங்கும்.

கண் கூச்சத்திற்கு மருந்து.

வேப்பங் கொழுந்து, கற்றாழை மடல், கடுக்காய், தேற்றான் விதை இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பாலில் ஆட்டிக் கொதிக்க வைத்துப் புற வளையமிட்டு பொன்னாங்காணிவேர், அதிமதூரம், இவைகளைத் தாய்ப்பால் விட்டு நசுக்கி துணியில் கட்டி தாய்ப்பாலில் ஊற வைத்து, கண்ணில் நாளொன்றுக்கு 4 முறை விட்டு கரண்டியில் நெய்யை வெதுப்பி அதில் மேற்படி பொட்டணத்தை நனைத்து வெதுப்பி ஒற்றடம் போட்டுவர நீங்கும்.

இமைத் தடிப்புக்குக் களிம்பு.

அரப்பொடியைச் சங்கிலைச் சாற்றிலும், குமரிச் சாற்றிலும், சங்கம்பழச் சாற்றிலும் பதமாய் அரைத்து உலர்த்தி நல்லெண்ணெய் விட்டுக் களிம்புபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீங்கும்.

கண் சிவப்பு, நீர்வடிதல் கடுப்பு, படலத்திற்கு மருந்து.

1. பருத்திவிதைப் பருப்பு, மரமஞ்சள், திரிபாலாதி இவைகளை ஓர் எடையாய் மைபோல் பொடித்துக் கண்ணில் இட்டு வரத் தீரும்.

2. நந்தியாவட்டச்சாறு, சிப்பிநீர், பனைமட்டைச் சாறு, முருங்கைப்பட்டைச் சாறு, தாய்ப்பால், பசுவின் நெய் வகைக்கு கால்படி வீதம் ஒன்றாய்க் கலந்த அதில் சந்தனம், மரமஞ்சள், பனங்குருத்து வகைக்கு கால் கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து கண்ணில் விட்டுத் தலையில் காலையில் 4 முறை தேய்த்து மாலையில் தலைமுழுக்குச் செய்து வரத் தீரும்.

3. தேற்றான் விதை, கடுக்காய்த் தோல், புளியன்விதைத் தோல் இவைகளை மைபோல் பொடித்துத் துணியில் வடிகட்டி தாய்ப்பாலில் ஊறினபின் கண்ணிலிட நீங்கும்.

விழிகண் குருடுக்கு மருந்து.

நன்றாய் வெந்த செங்கல்லைப் பொடித்து வடிகட்டிக் கல்வத்திலிட்டுப் பசுவின் வெண்ணெய், தேன், நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு ஒரு சாமம் அரைத்துக் களிம்பாகச் செய்து விழியிலிட்டாலும் தீரும்.

2. பேய்ப்புல் (சுணங்கன்புல்) என்ற ஒட்டுப் புல்லில் திணையைப்போல் கதிருண்டாகி இருக்கும். அதைக் கசக்கித் துணியில் வைத்துக் கண்ணில் பிழிய விழிக்கண் குருடு தீரும்.

கண்வலி, மணிவளர்த்தி பூவிற்கு மருந்து

சண்பகப்பூ 60, காரெள்ளுப்பூ 100, நந்தியாவட்டப்பூ 100, துளசி வேர், சங்கு, மண்டை ஓடு வகைக்கு 1 கழஞ்சு, முத்தக்காசு 2 கழஞ்சு இவைகளைப்

Koviloor Digital Library

புளியம்பூ சாற்றிலும், எலுமிச்சை பழச்சாற்றிலும் அரைத்துக் கயிறாக்கி தாய்ப்பாலில் உரைத்து விழியில் இட்டுவர நீங்கும்.

விழிக்கடுப்பு, குத்தல், அமரம், கண்வலிக்கு மருந்து.

1. கழுவின கற்றாழஞ்சோறு விளாங்காய் அளவு, சீனிக்காரம் ½ வராகன் எடை, ஈருள்ளி 3 வராகன் எடை, இருப்புச் சிட்டம் 6 வராகன் எடை இவைகளைச் சிதைத்து துணியில் முடிந்து கொஞ்சம் புளியை நீரில் கலக்கி அதை அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து அதில் மேற்படி முடிச்சை நனைத்து கண்ணில் விட்டு மேலுக்கும் ஒற்றடமிடத் தீரும். மேற்படி பொட்டணத்தைக் கொடுத்தவித்துச் சூட்டுடன் கண்ணில் ஒற்றடம் செய்து ஒரு துளி கண்ணில் பிழிந்து வந்தால் தீரும்.

2. சந்தனம், ஏலம், நெல்லிமுள்ளி, மிளகு, பொன்னாங்காணி, கழுவின கற்றாழஞ்சோறு இவற்றைச் சமன் கூட்டிப் பசும்வெண்ணெயில் அரைத்துச் சிரசில் தளமிட்டு, உள்ளங்காலில் தீப்பறக்கத் தேய்த்து மாலையில் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்து வந்தால் தீரும்.

3. எலுமிச்சம்பழத்தைப் பொந்து செய்து அதில் அரப்பொடியும், சீனிக்காரமும் ஓர் எடையாய் ஒன்றாய்ப் பொடித்துச் செலுத்தித் துணியில் பொட்டணமாய்க்கட்டி நெருப்பில் வாட்டி ஒரு சொட்டு விழியில் பிழிந்து ஒற்றடம் செய்து வந்தால் தீரும்.

4. சுவரில் வெண்ணெயை அப்பி, நீர்வாங்கினதில் பின்எடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாறும், கரிப்பான் சாறும் விட்டுக் களிம்புபோல் அரைத்துக் கண்ணில் தீட்டியும், கடுக்காயையாவது உப்பு மண்ணையாவது தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் புறவளையமிட்டு வர நீங்கும்.

கண்வலிக்கு மருத்துவம்.

கரியுப்பைப் பொரித்துப் பொட்டணங் கட்டி நீராகாரத்தில் தோய்த்து இரண்டு நாழிகைக்கு ஒரு முறை கண்ணில் பிழியக்கண்வலி உடனே தீரும்.

சுக்கிரப்படுவனுக்கு மருந்து.

1. நாவற்பட்டையை தாய்ப்பால் விட்டுச் சிதைத்துக் கண்ணில் வார்த்து அப்பால் நத்தைச் சதையையும், ஆனைநெருஞ்சில் காயையும் சிதைத்துப் பிழிந்து ஆவாரை அரிசியை கோழிமுட்டை வெள்ளைக் கருவிட்டு அரைத்துப் புறவளையமிட்டாவது அல்லது கோவையிலைச்சாறும் கரிப்பான் சாறும் ஒன்றாய்க் கலந்து அதில் தேற்றான் விதை, களிப்பாங்கு, மிளகு, இவைகளை ஓர் நிறையாய் வைத்துப் போட்டுக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது பொன்னாங்காணி, சிறுகீரை, ஆனை நெருஞ்சில், உத்தமதாளி, மயிர்மாணிக்கம், இவைகளின் சாறுகளைச் சமமாகக் கலந்து தலையில் உலர உலரத் தேய்த்துக் கொண்டிருந்து மாலையில் தலைமுழுக்குச் செய்து வந்தால் தீரும்.

Koviloor Digital Library

2. நல்லெண்ணெய் ½ படி, வெள்ளுள்ளி, முருங்கைப்பட்டை, குப்பைமேனி, தும்பை இவைகளின் சாறு வகைக்குக் கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம் 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூன்று நாள் காலையில் தலையில் தேய்த்து மாலையில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.

இழிகண்ணுக்கும் புழுவெட்டுக்கும் மருந்து.

குரவைமீன் முள், சிலாம்பு, குடல் நீக்கி அதன் பேரில் 7 விசை எருக்கம்பாலை உலர உலர ஊட்டிக் காயவைத்துப் பொடித்தும் துருசு, துத்தமும் ஓர் எடையாய்க் கூட்டி வேப்பெண்ணெய் விட்டு மைபோலரைத்துக் கொண்டு இமையில் போட்டுவர நீங்கும்.

கண்ணில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு மருத்துவம்.

பசும் நெய், மேற்படி இறைச்சி நீர், பனைமட்டைச் சாறு, நல்ல தண்ணீர் இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி விழியில் கட்டி வர நீங்கும்.

அக்கரம் புழுவெட்டிற்கு மருந்து.

வேப்பங்கொழுந்தைக் கல்வத்திலிட்டு நல்லெண்ணெய் வீட்டுக் களிம்புபோல் அரைத்துப் புருவத்திலிட்டுவர நீங்கும்.

கண்பிரிதல், புழுவெட்டு, பூவிற்கு மருந்து.

ஊமத்தங்காயை விதை நீக்கி அதற்குள் பாலில் தூய்மை செய்த பூநாகத்தை நிறையப்போட்டு மூடிச் சட்டியில் வைத்து எரித்துச் சாம்பலாக்கி அதற்கு நிகர் துத்தம், துருசு சேர்ந்து பசுவின் வெண்ணெயால் மைபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீங்கும்.

நீர்வடிதலுக்கு மருந்து.

வெள்ளைச்சாரணை வேரைத் தேனிலுரைத்து விழியில் தீட்டி வர நீங்கும்.

அந்தகக் (குருடு) கண்ணிற்கு மருந்து.

கெந்தகம், தங்கம் வகைக்கு 1 பலம், அஞ்சனக்கல், காரீயம் வகைக்கு 3 பலம், வெள்ளி, செம்பு வகைக்கு 2 பலம் இவைகளை ஒன்றாய்க் குகையிலுருக்கி மயனமாய்ப் பொடித்து விழியில் தூவி வர நீங்கும்.

அமரம், பிரிதல் கண்ணிற்கு மருந்து.

வேப்பங்கொழுந்தும், புளியங்கொழுந்தும் இடித்துக் குடிநீர்ச் செய்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சி அதில் துணியை இரண்டு மூன்று முறை நனைத்து உலர்த்தி திரித்து விளக்கில் பசும் நெய் விட்டுத் தீபமேற்றிச் சட்டியில் ஊமத்தையிலைச் சாறு பூசி மைப்பற்றவைத்து திப்பிலி, கடுக்காய், நெல்லிப்பருப்பு இவைகளை மேற்படி குடிநீரில் அரைத்துச் சீலையில் தடவி

Koviloor Digital Library

முன்போல் தீபமேற்றி மைட்டற்றவைத்து இருவகை நீரையும் ஒன்றாய்க் கலந்து பசுவின் வெண்ணெயைக் கூட்டியரைத்து கண்ணிலிட்டு வந்தால் தீரும்.

2. மேற்படி குடிநீரில் மிளகை அரைத்து உலர்த்தி பசும் வெண்ணெய் கூட்டி மைபோல் அரைத்துக் கண்ணில் தீட்டி வந்தாலும் தீரும்.

வெளிறுக்கு மருத்துவம்.

பலகரைசுட்ட சாம்பல், துத்தம், துருசு, மஞ்சள் இவைகளை ஓர் எடையாய் நல்லெண்ணெய் அரைத்துச் சீலையில் பூசிக் கட்ட அற்று விழும். மூல முளையில் கட்டினாலும் அதுவும் அற்று விழும்.

வரணம், சுக்கிலப்படலம், குந்தம், இரத்த செம்மைக்கு மருந்து.

1. நந்தியாவட்டப்பூ, இச்சிப்பூ, முருங்கைப்பூ, கொடுப்பை வேர், இலவங்கம், துத்தம், கடல்நுரை, பவளம், முத்து இவைகளை ஓர் எடையாய் வெள்ளாட்டுப் பித்தால் ஆட்டிக் கயிறு செய்து கொண்டு எலுமிச்சம் பழச்சாறும் பசுவின் நெய்யும் ஒன்றாய்க் கூட்டிக் காய்ச்சி அதில் உரைத்துக் கண்ணில் தீட்டிவரத் தீரும்.

கண்கரித்து குத்திகலங்கிப் பொங்கி நீர்படிந்தல்

2. சங்கு, புங்கவித்து, வெள்ளைக்காக்கணம்வித்து, துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறாக்கி தாய்ப்பாலில் உரைத்து நாள் ஒன்றுக்கு மூன்று நேரம் போட்டுவரத் தீரும்.

வெள்ளெழுத்திற்கு வெண்ணெய்.

1. கிராம்பு பழக்களிம்பு:- ஓர் எலுமிச்சம்பழத்தைக் கயிற்றில் கோத்து அதன்மேல் நூற்றெட்டு கிராம்பை ஊன்றி விளாங்காய் அளவு பசுவின் வெண்ணெய்க்குள் பொதிந்துமூடி அதைப் புதுச்சட்டி நீரில் அடியில் படாமல் தொங்கவிட்டு தினமும் வெவ்வேறு தூய நீர் விட்டு வந்து நாற்பதாம் நாள் எடுத்து இலவங்கத்தை நீக்கி வெண்ணெயை செப்புச் சிமிழில் அடைத்துக்கொண்டு சத்திச் சாரணைச் சாற்றில் கொஞ்சம் வெண்ணெயைக் கலந்து 40 நாள் வரை போட்டுவர வெள்ளெழுத்தும், மற்ற கண்நோய்களும் தீரும்.

2. மேற்படி வெண்ணெய் 1 பலம், பீதரோகணி கால் பலம் இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் ஒரு நாள் அரைத்துச் செப்பு சிமிழில் அடைத்துக் கொண்டு விழியில் போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண் நோய்கள் நீங்கும்.

3. மேற்படி வெண்ணெய் 1 பலம், மிளகு அரை வராகன் எடை இவைகளைக் கல்வத்திலிட்டு மைபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் தீட்டிவர வெள்ளெழுத்து முதலான கண்நோய்கள் நீங்கும். பின்பு பசும்பாலை 46 நாள் கண்ணில் போட்டுவரத் தீரும்.

Koviloor Digital Library

4. தும்பை, நந்தியாவட்டம், காரெள், புளி இவைகளின் பூவும் திப்பிலியும் தேன்விட்டு மைபோல் அரைத்துக் கொண்டு கண்ணில் போட்டு வந்தால் வெள்ளெழுத்துத் தீரும்.

5. ஓரிலைத்தாமரைபோல், சங்கு, தலைஓடு, துத்தம், துருசு, வெள்ளைக்கற்பொடி இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம் பழச்சாற்றிலும் முருக்கிலைச் சாற்றிலும் வகைக்கொரு நாள் அரைத்துக் கயிறுசெய்து தாய்ப்பாலில் உரைத்து கண்ணில் நாற்பது நாள் போட்டுவர நீங்கும்.

மேற்நாட்டின் மருந்துகளில் ஒன்றை உபயோகப்படுத்தி இதன் அடியில் வருகிற தைலத்தையும் முழுகிவரக் கண்ணைச் சார்ந்த பிணிகள் நீங்கும்.

வெள்ளெழுத்து, குருட்டுக்கண் முதலான கண்ணோய்களுக்கும் உடம்புவலிக்கும் தைலம்.

பொன்னாங்காணிச்சாறு, பொற்றலைக்கரிப்பான்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 10 படி, முசுமுசுக்கை, நெருஞ்சில், கண்டங்கத்திரிக்காய், முள்ளிக்கத்திரிக்காய், தென்னம் பூவம்வில் வாதநாரயண இலை இவைகளின்சாறு, இளநீர் வகைக்கு 1 படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நன்னாரிவேர் 40 பலம் தாமரைப்பூ, மிளகு, அதிமதுரம், சந்தனம், அன்னாசிமொக்கு வகைக்கு 2 பலம், சீரகம், கொத்தமல்லி வகைக்கு 2 பலம், கஸ்தூரி மஞ்சள், வெட்டிவேர், சோம்பு, கல்லுப்பு, விலாமிச்சம்வேர், மல்லிகைப்பூ வகைக்கு 1 பலம் இவைகளை எட்டுபடி பசுவின் பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து முழுகிவர நீங்கும்.

மாலைக்கண், வெள்ளெழுத்து புகைச்சலுக்கு மருந்து.

1. மிளகு, திப்பிலி வகைக்கு 5 அல்லது 6 கழஞ்சு, கடுக்காய் விதை 3 கழஞ்சு அவைகளைத் தனித்தனியே மூன்று வெள்ளாட்டு பித்துக்குள் அடைத்துப் புகைபடுகிற இடத்தில் ஒரு மண்டலம் கட்டி வைத்திருந்தெடுத்துப்புளியம் பூச்சாற்றிலும் பனைமட்டைச் சாற்றிலும் அரைத்துக் கயிறுசெய்து தாய்பாலில் அரைத்துக் கண்ணில் தீட்டி வர மாறும்.

2. சுழல்வண்டு சுட்டசாம்பல், வெள்ளுள்ளி, மிளகு ஓர் எடையாய் கல்வத்தில் இட்டு வெற்றிலைச்சாறும் நீர் முள்ளிச்சாறும் நல்லெண்யையும் விட்டு களிம்பு போல் அரைத்து காலை, மாலை மூன்று நாள் கண்ணில் தீட்டி விளக்கெண்ணெயைத் தேய்த்து நாலைந்து தலை முழுகினால் அருந்ததி கண்ணில் தோன்றும்.

நீலகாசம், பித்தகாசம், மந்தகாசப் படலம், பில்லம், முடிக்குத்தல் புழுவெட்டு, மாலைக்கண், நீர்வடிதல், குந்தம் நேத்திரவாயு முதலியவற்றிற்கு மருந்து.

முத்து, வெள்ளி, தாம்பரம், சங்கு, துருசு, துத்தம், வெண்கலம், தலையோடு, பொன், பீதரோகணி, புங்கவிதை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்

Koviloor Digital Library

சாற்றில் அரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலிலாவது நந்தியாவட்டம்பூச் சாற்றிலாவது உரைத்துக் கண்ணில் தீட்டி இதன் அடியில் சொல்லிய தைலத்தைத் தலைக்குத் தேய்த்து முழுகிவரத் தீரும்.

மேற்படி நோய்களுக்குத் தைலம்.

பொன்னாங்காணி, சிறுகீரை, சீந்தில்கொடி, எலுமிச்சம்பழம், நார்த்தம்பழம் இவைகளின்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி முத்தக்காசு, கோரைக்கிழங்கு, கோட்டம், அதிமதுரம், ஏலம், சண்பகப்பூ, இலவங்கம், வகைக்கு கால் பலம் வீதம் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர நீங்கும்.

கண்வலி, சிவப்பு, கடுப்பு, தினவு, நீர்வடிதலுக்கு மருந்து.

1. தான்றிக்காய், மாசிக்காய், கடுக்காய், காசிக்கட்டி வகைக்கு 1 வராகன் எடை, அபின், பொரித்த சீனாக்காரம் வகைக்கு கால் வராகன் எடை கரண்டியில் பொடித்துப் போட்டு அதில் வரட்பூலாவிலை, கருவேலிலை வகைக்கு ஒரு படி வீதம் இடித்து பிட்டவித்துச் சாறு பிழிந்து கொதிக்கவைத்து செப்புத் தடியால் மைபோல் அரைத்து விழியில் புறவளைமிட்டுப் புளிஇலையை வேகவைத்த தண்ணீரால் கண்ணைக்கழுவி 2–3 முறை போடத் தீரும்.

2. புளியைக் கரைத்து கண்ணில் ஒரு நாளைக்கு 4 முறை பிழிந்து துளசி, புண்ணாக்கிலை, புளியிலை இவைகளை ஓர் எடையாய் இடித்துச் சீலையில் கட்டி விழியில் ஒற்றடம் செய்து ஆவாரம் பூவை அரைத்துச் சிற்றளமிட தீரும்.

3. இரும்புத்தகட்டை நெருப்பில் சிவக்கக் காய்ச்சி எடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றையாவது புளியிலைச் சாற்றையாவது விட்டுக் கரியபவளம், கடுக்காய் தோலும் சீனிக்காரமும் பொடித்துப் போட்டு இரும்புக் குழவியால் களிம்புபோல் நன்றாய் அரைத்து புரவளையமிட்டுக் கருவேல், புண் ஓரிலைத் தாமரை, பொன்னாங்காணி, சிறுகீரை, பஞ்சதிரவியம், கம்பிப்பிசின், மிளகு, கத்தூரி மஞ்சள் இவைகளை ஓர் எடையாய்க் காடிவிட்டரைத்துக் குழம்பாய்க் காய்ச்சித் தளமிடத் தீரும்.

4. கருக்கின புழுங்கலரிசியும் அபினும் சமமாய் ஊமத்தம் சாற்றில் முன்போல் களிம்பாயரைத்து விழியில் புரவளையமிட்டுக் கொடுப்பை, சிறுகீரை, வெண்பூலா, மிளகு இவைகளை வகைக்கு எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கால்படி பசும் பாலில் கரைத்து குழம்பாய்க் காய்ச்சி தலையில் தளமிட்டுவரத் தீரும்.

5. கோழிமுட்டையை உடைத்து வெள்ளைக் கருவைப் பீங்கானில் விட்டு அதில் கொஞ்சம் சீனிக்காரத்தைப்போட்டு சிறுகீரை வேரால் கடைந்தால் வெண்ணெய் போல்வரும்; அதை விழியில் போட்டுக் கருவேலம் கொழுந்து, மாதுளங்கொழுந்து வகைக்கு ஒரு படி வீதம் குடித்துக் கால் படி

Koviloor Digital Library

பசும் பாலில் போட்டு வேகவைத்துப் பிழிந்து குழம்பாய்க் காய்ச்சி இரும்புத் தகட்டிலிருந்து இரும்புக் குழவியால் களிம்புபோல் அரைத்துக் கொண்டாவது அல்லது இருப்புத்தகட்டை நெருப்பில் காய்ச்சி அதில் சீனிக்காரம், துத்தம், துருசு இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துப் போட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட்டு மைபோலரைத்துக் கொண்டாவது விழியில் புரவளையமிட்டு மேற் சொல்லிய புகையைக் காட்டிவரத் தீரும்.

கண்வலியைக் கடுப்பு நேத்திரவாயுவிற்கு மருந்து.

1. களிம்புள்ள வெங்கலத் தகட்டில் தாய்ப்பாலாவது எருமைப்பாலாவது விட்டுச் செம்புக் குழவியாலரைத்துக் களிம்புண்டாக்கி அந்தக் களிம்பைப் பருத்திப் பஞ்சில் ஊட்டித் துட்டகலத்தில் மூன்று வில்லை செய்து ஒன்றின்மேல் ஒன்றை வைத்து ஓர் சட்டியில் புளியம்பொருக்குப் போட்டுத் தனலுண்டாக்கி அதில் அரைத்து வீசம்படி எள்ளைப் பொடித்தப் போட்டுப் புகைபஞ்சியேறும்படி வைத்து மூடிப் புகையடங்கினதின் பேரில் காலை, மாலை, மதியத்தில் ஒவ்வொரு வில்லையாக கண்ணில் பிழிந்து வரத் தீரும்.

2. கொடுப்பை, ஓரிலைத் தாமரை, வெள்ளைக்காக்கணான், சிறுகீரை, இவைகளின் வேர்களை ஓர் நிறையாக எலுமிச்சம்பழச் சாற்றில் நன்றாக அரைத்து உலர்த்தி பின்பு வெண்ணெய் கூட்டிக் களிம்புபோல் அரைத்து கண்ணில் தீட்டிவரத் தீரும்.

3. சங்கு, புளிவெள்ளைச்சாரணை, பொன்னாங்காணி, சிறுகீரை, கரிப்பான், இவைகளின் இலைச்சாற்றை ஓர் எடையாய்க் கலந்து அதில் சீலையை 6–7 முறை நனைத்து உலர்த்தி நண்டு கொழுப்பில் தோய்த்து தீயில் கொளுத்திச் சாம்பலாக்கி அதில் வெண்ணெயைக் கூட்டி களிம்பு போல் அரைத்து கண்ணில் வரத்தீரும்.

விழிவேதனை படலத்துக்குப் புறவளையம்.

சிற்றாமணக்கின் வேரும், ஆமணக்கின் வேரும் ஓர் எடையாய் வேலிப்பருத்திச் சாற்றில் மைபோலரைத்துக் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி விழியில் புறவளையமிட்டு உச்சியில் தளமிட்டுவர நீங்கும்.

விழிவீக்கம், எரிவு, தினவு, படல்சிவப்பு, கடுப்பு, நீர்வடிதலுக்கு புறவளையம்.

1. கடுக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அதிமதுரம், தேற்றான்விதை, கருவேலிஇலை, புளியங்கொழுந்து இவைகளை ஓர் எடையாய்க் கற்றாழை மடலுக்குள் பொதிந்து வெந்த பதத்தில் மருந்தை எடுத்து தாய்ப்பால் விட்டு களிப்பு, போல் அரைத்துக்கொண்டு கண்ணில் புறவளையமிட்டுவரத் தீரும்.

2. காயாவரட்பூலா, புளி இவைகளின் இலைச் சாறுவகைக்குக் காலபடி ஒன்றாய்கலந்து அதில்நெல்லி, முன்னி, சந்தனம், தேற்றான்விதை, ஆமைஓடு இவைகளை பசும் பாலில் மைபோல் அரைத்துப் போட்டுக்

Koviloor Digital Library

குழம்பாய்க் காய்ச்சி தலையில் காலையில் தளமிட்டு மாலையில் சுடுநீரில் தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்.

மேற்படி நோய்களுக்கு ஒற்றடம்.

1. காய்வேளை, கருவேலிலை, கடுக்காய், கற்றாழஞ்சோறு இவைகளை ஒன்றாய்ச் சிதைத்தாவது அல்லது மருதம்பட்டை, சீரகம், அதிமதுரம் இவைகளைச் சமமாய் சிதைத்து ஒற்றடமிடத் தீரும்.

2. சீலைகட்டி அதைக் கரண்டியில் நெய்விட்டு வெதுப்பியதில் வைத்து ஒற்றடம் செய்யத் தீரும். ஒரு படி பசும்பாலில் ஒரு படி புளியங்கொழுந்தும் நாலு கடுக்காயும் தட்டிப்போட்டு வேகவைத்து விழியிலாவி பிடித்து அதை சீலையில் முடிந்து ஒற்றடம் செய்து புறவளையம் தளமுதற் சலபிறையோகங்கள் செய்ய மிகுந்த நன்மை உண்டாகும்.

மேற்படி நோய்களுக்கு இமையின் மேலிடும் பஞ்சு.

பசும் பாலில் உத்தாமணிவேர் அரைத்து மேற்படி நெய்யில் போட்டு வேகவைத்து வடித்து இமையைச் சுற்றிப் பூசி உலர்ந்த பின் சந்தனத்தைப் புறவளையமிட்டு மேற்படி நெய்யில் பஞ்சை ஊட்டி இமையின் மேல் போட்டு நித்திரை செய்யவும்.

மேற்படி நோய்களுக்கு தாரைபுறவளையம்.

சிற்றாமணக்கின் வேர், கடுக்காய்த்தோல் வகைக்கு 6 கழஞ்சு இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து வடிகட்டி கண்ணில் அந்நீரை விட்டால் தீரும்.

முசுமுசுக்கை இலை ஒரு பிடி, அதிமதுரம், மஞ்சள் வகைக்கு 1 கழஞ்சு இவைகளைச் சிதைத்து பசும்பாலில் அரைத்து மேற்படி நெய்யில் போட்டு வேகவைத்து வடிகட்டி கண்ணில் தாரை இட்டு பொன்னாங்காணி வேர், சந்தனம், அதிமதுரம், இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பாலில் உரைத்துக் கலக்கி வெதுப்பி விழியில் புறவளையமிட்டு உச்சியல் தளமிட்டுவரத் தீரும்.

கண்ணில் சதை வளர்ச்சிக்கு மருந்து.

ஈருள்ளியும், குறிஞ்சாவும் ஓர் எடையாய்ச் சிதைத்து சாறு பிழிந்து மூன்று நாள் கண்ணில் இட நீங்கும்.

கண் நோய்களுக்கு மாத்திரை.

1. பச்சைக்கற்பூரம், இந்துப்பு, வகைக்கு 1/8 வராகன் எடை, இரசம் ¼ வராகன் எடை, திப்பிலி, மிளகு, காரீயம் வகைக்கு ½ வராகன் எடை, பூநாகச்சத்து, கடுக்காய்ப்பருப்பு வகைக்கு 1 வராகன் எடை, அரிதாரம் 2 வராகன் எடை எலுமிச்சம் பழச் சாற்றில் 3 நாள் அரைத்துக் கயிறு செய்துகொண்டு தாய்ப்பாலில் இழைத்து விழியில் போட்டுவரப் படலம், பில்லம், சிவப்பு, நீர்ப்பாய்ச்சல், திமிர் முதலான கண் நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

2. கடலாமையோடு, அஞ்சனக்கல், மனிதர் தலையோடு, கல்மதம், குதிரைப்பல், யானைத் தந்தம், பன்றிக் கொம்பு, சேவல் நெஞ்செலும்பு, தேற்றான் விதை, துத்தம், துருசு, சங்கு, முத்து, காவிக்கல், கடலாமையோடு, பீதரோகணி, வெள்ளி லோத்திரம் இவற்றை ஓர் எடையாய் எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கயிறாக்கித் தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டுவரப் படலம், பில்லம், கண் சிவப்பு, நீர்ப்பாய்ச்சல், திமிரம் முதலான கண் நோய்கள் தீரும்.

3. திரிகடுகு, திரிபலை, வாலுளுவையரிசி, வாய்விளங்கம், தாமரைக்கிழங்கு, அதிமதுரம், செம்புப்பொடி, இந்துப்பு, செஞ்சந்தனம், முந்திரிப்பழம், மஞ்சள், நன்னாரி வேர், வெள்ளி லோத்திரம், துத்தம், பீதரோகணி, காரீயம், வெண்காரம் இவற்றை ஓர் எடையாய் சங்கம்பழச் சாற்றில் அரைத்துக் கயிறாக்கிக் கொண்டு தாய்ப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டு வர திமிர் படலம், கண்ணில் நீர்வடிதல், கண்காசம் முதலானவைகள் நீங்கும்.

4. திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், பீதரோகணி, காரீயம், பொன் மெழுகு, வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை. இவற்றை ஓர் எடையாய்க் கழுதைப்பாலிலும், பசும்பாலிலும், தாய்ப்பாலிலும் வகைக்கு ஒரு சாமமரைத்துக் கயிறு செய்து தாய்ப்பாலில் உரைத்துப் போட்டு வந்தால் தீரும்.

5. பச்சைக் கற்பூரம், காரீயம், திப்பிலி, மிளகு வகைக்கு ¼ கழஞ்சு, இரசம், வெங்காய விதை, பூநாகம் வகைக்கு ½ கழஞ்சு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கயிறாக்கிச் சிறுநீரிலுரைத்துப் போட்டு வந்தால் திமிரம், படலம், காசம் முதலான நோய்கள் தீரும்.

6. தாமிரம், துருசு, துத்தம், முத்து, பவழம், நீலம், கருவளையல், வெண்காரம், கணவாயோடு இவற்றைச் சமமாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறு செய்துகொண்டு புழுவெட்டு, செவ்வேர், தசை வளர்ச்சிகளுக்கு பழச்சாற்றிலும், நீர்ப்பாய்ச்சல் கூச்சத்திற்குப் பனைமட்டைச் சாற்றிலும், பூச்சிக்கடிக்கு நெருஞ்சில்பூ சாற்றிலும் உரைத்துக் கண்ணில் போட்டுவரத் தீரும்.

7. செம்புப் பொடி, துத்தம், துருசு, வெண்கலம், வளையல், வெள்ளைக்கல், ஓரிலைத்தாமரை வேர், வெட்பூலா வேர் வகைக்கு ஒரு கழஞ்சு, இந்துப்பு கால் கழஞ்சு, எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துக் கயிறாக்கிக்கொண்டு தாய்ப்பாலில் உரைத்துப்போடச் சகல கண்நோய்களும் தீரும்.

8. வெள்ளைக்காக்கணான் வேர், துத்தம், துருசு, பளிங்குக்கல், சங்கு, மஞ்சள், திப்பிலி, சந்தனம், பச்சைக்கற்பூரம், செப்புப் பொடி இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் 5 நாள் மைபோல் அரைத்துக் கயிறு செய்து தாய்ப் பாலில் உரைத்துக் கண்ணில் இட்டுவரச் சகல காசமும் குத்துகுலைவு அழற்றி, உள்குத்து, உளைவு முதலான சகல கண் நோய்களும் தீரும்.

Koviloor Digital Library

9. வெண்காரம், வெட்டுப் பொடி, வெண்கலம், காரீயம், வளைபலோடு, வெட்பூலா, வேர்ப் பட்டை, ஓரிலைத்தாமரை வகைக்கு 1 வராகன் எடை, இந்துப்பு ¼ வராகன் எடை இவற்றை முருங்கை மலர்ச் சாற்றிலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்துக் கயிறாக்கிக் கொண்டு வரண சுக்கிரனுக்கு நாயுருவிச் சாற்றிலும், உத்தாமணிச் சாற்றிலும் கொடிய ஆணிப்பூ படலம், மந்தாரகாசம் நீர்ப்பாய்ச்சல், எழுச்சி வலி நெரிசிவப்பு அழிகண்ணுக்கு நீர்ப்பூலா வேந்தண்ணீரிலும் ஆகியவற்றிற்கு மேற்படி உருண்டையும் படிகாரமும், வெண்காரமும், உத்தாமணிச் சாற்றில் உரைத்துப்போட நீங்கும்.

10. பொன்னாங்காணி, சிறுகீரை, பூலா இவைகளின் வேர் திப்பிலி, துத்தம், துருசு, புளியம்பூ இவையெல்லாம் ஓர் எடையாய் எலுமிச்சம் பழச் சாற்றில் அரைத்துக் கயிறு செய்து மேற்படி சாற்றினால் உரைத்துப் போட சகல கண் நோய்களும் தீரும்.

கண் நோய்களுக்குப் பொடி.

1. வெண்காரம் 1 வராகன் எடை, துத்தம் 2 வராகன் எடை சீனக்காரம் 2 வராகன் எடை, முட்டைத்தோல் 4 வராகன்எடை பலகறை 8 வராகன் எடை இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றிலும் சிறுகீரை சாற்றிலும் மைபோலரைத்து உருட்டிக் காயவைத்து மேற்படி வேரை அரைத்துக் கவசம்செய்து சட்டியில் வைத்து எரித்துப் பற்பமாக்கிப் பொடித்துக்கொண்டு அரிசியளவு கண்ணில் போட ஆணிப்பூ, நீர்க்குமிழி, குந்தம், சதைவளர்ச்சி, அதிமாங்கிச வளர்ச்சி, உருத்தல், பில்லம் உத்துங்கம், நீர்ப்பாய்ச்சல், தூடுவளர்த்தி, அமரம் ஆகியவை நீங்கும்.

2. ஓரிலைத்தாமரைவேர், பொன்னாங்காணிவேர், துத்தம், துருசு, பவழம், முத்து, தலைஓடு, சங்கு இவைகளைச் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஒட்டில் வைத்து மூடி சீலைமண் செய்து புளியம்பொருக்கில் புடம் போட்டு எடுத்து எள் அளவு கண்ணில் தூவிவர பற்ப நோய் பூசுப்படலம், விரண, சுக்கிரன் முதலியவை நீங்கும்.

3. துருசு, சங்குப்பொடி, மண்டைஓடு, பூலாவேர், ஓரிலைத்தாமரைவேர், இவைகள் வகைக்கு 2 வராகன் எடை வீதம் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்று நாள் அரைத்து வில்லைதட்டி காயவைத்து ஒட்டிலிட்டுச் சீலைசெய்து முன்புபோல் புடமிட்டு அதை ஒரு கூறு செய்து ஒரு கூறுக்கு நாலில் ஒன்று பீதரோகணியும் ஒரு பணவிடை பச்சை கற்பூரமும் கூட்டிப் பொடித்து எள் அளவு கண்ணில் தூவி வர பற்ப நோய், நீர்ப்பாய்ச்சல் தீரும்.

4. மற்றொரு பங்கைத் தெள்ளிக்கொண்டு அரைப்பணவெடை வீதம் கண்ணில் தூவிவர கண்படுவன், விழி கண், குருடு, தீந்தசை வளர்ச்சி, நீர்முட்டல், தில்லைநேத்திரவாயு, பித்தகாசம், பத்திரி செவ்வேர், பொன்மணி, மந்தாரகாசம், இரத்தப்படலம், அடியினால் சம்பவிக்கும் கண் கலக்கம் தீரும்.

5. சீமைக் கல்நார், வெள்ளைக்கற்கண்டு, துருசு, வகைக்கு ஒரு வராகன் எடை, வெந்த தலையோடு 2 வராகன் எடை இவைகளை

Koviloor Digital Library

மயனமாய்ப் பொடித்துக் கொண்டு நெல்லெடை கண்ணில் தூவி வரப் படலம், காசம், பூ முதலான சகல கண் நோய்களும் நீங்கும்.

6. சந்தனம், துத்தம், துருசு, தாரம், பீதரோகணி, பச்சைக் கற்பூரம் இவைகளை ஓர் எடையாய் மைபோல் அரைத்து எள்ளளவு கண்ணில் தூவிவர சகல கண் நோய்களும் தீரும்.

7. மஞ்சள், சந்தனம், துத்தம், துருசு, பச்சைச் சூடம், மனோசிலை, இந்துப்பு, வெட்டிவேர், பூலாவேர், பீதரோகணி, வெள்ளிலோத்திரம் இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்று நாள் அரைத்து உலர்த்திப் பொடித்து எள் அளவு கண்ணில் தூவிவர சகல நோய்களும் தீரும்.

கண் நோய்களுக்கு இளநீர்க் குழம்பு.

1. குருணிச் செவ்விளநீரில் பொன்னாங்காணி, சிறுகீரை இவற்றின்வேர், திரிபலை வகைக்கு 1 பலம், கந்தம் (சந்தனம்), கோட்டம், இலவங்கம், மரமஞ்சள், ஏலம், அதிமதுரம், சீரகம், தேவதாரம், சண்பகப்பூ, செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளையம், விலாமிச்சவேர், வெட்டிவேர் வகைக்கு 3 பலம் இவைகளைப் பொடித்துப்போட்டுக் குழம்பாய்க்காய்ச்சி இறுத்துக் கல்வத்தில் இட்டு அதில் துத்தம், கடல் நுரை, அஞ்சனக்கல், பீதரோகணி, படிக்காரம் வகைக்கு 1 கழஞ்சு பொடித்து மைபோல் அரைத்து உலர்த்திப் பின்பு பச்சைச்சூடம் ஒரு பணவெடை கூட்டித் தேன் விட்டுக் குழம்புபோல் அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர நீர்ப்பாய்ச்சல், பில்லம், பற்பநோய், படலம், வாதகாசம், பித்தகாசம், கண்பிரிதல் தீரும்.

2. துத்தம், துருசு, வெங்காரம், மிளகு, இந்துப்பு, திப்பிலி, சுக்கு, பச்சைக்கற்பூரம் வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளைப் பொடித்துத் தேனும் வெண்ணெயும் சேர்த்துக் குழம்பு போல் அரைத்துக் கண்ணில் தீட்டிவர விரணசுக்கிரன், காசம், படலம், பூளை, தினவு, சொறி, அன்ன கோபம், அழிகண், அமரம், திமிர், நீர்ப்பாய்ச்சல் தீரும்.

கண் நோய்களுக்கு மை.

1. பீதரோகணி, மனோசிலை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பசுவின் நெய்யிலும், பாலிலும் அரைத்துப் புதுச் சட்டித் தூரிலப்பி சிற்றாமணக்கெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மைப்பற்றவைத்ததற்கு நிகர் துணி சுட்டக் கரிசேர்த்து வெண்ணெயில் குழைத்து கண்ணீல் தீட்ட சகல கண் நோய்களும் தீரும்.

2. வேம்பு, புளி, வெட்பூலா, முருக்கு, தேள்கொடுக்கு, கையாந்தகரை, வெள்ளைச்சாரணை, சங்கு இவைகளின் சாறுகளை ஓரளவாய்க்கலந்து துணியை 6–7 முறை நனைத்து உலர்ததித் திரிந்து விளக்கிட்டு நல்லெண்ணெய் விட்டுத் தீபமேற்றிப் புதுச்சட்டித்தூரில் மேற்படி சாறுகளைப்பூசி மை பற்றவைத்து அதற்கு நிகர் துத்தம், அஞ்சனக்கல், புளியம்பூ, கடுக்காய், அரிசி, அதிமதுரம், இந்துப்பு, இரும்புப் பொடியும் கூட்டி

Koviloor Digital Library

பசுவின் வெண்ணெயால் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர அழிகண், பில்லம், கடுப்பு, நீர்வடிதல், படலம் தீரும்.

3. வேம்பு, விளா, உப்பிலி, கையாந்தகரை, தேள்கொடுக்கு, சங்கு, இவைகளினிலைச் சாறு ஏரளவாய்க் கலந்து முன்போல் துணியில் ஊட்டி மைபற்ற வைத்து அதற்கு நிகர் துத்தம், துருசு, வெங்கலப்பொடி, திப்பிலி, இந்துப்பு கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உலர்த்திப் பின்பு பசுவின் வெண்ணெய் கூட்டி, அரைத்துக்கொண்டு கண்ணில் தீட்டிவர விழிசிவப்பு, படலம், எழுச்சி, கண் பிரிதல், புழுவெட்டு, புகைச்சல், இமைத்தடிப்பு, நீர் முட்டல் தீரும்.

4. சிறுகீரை, பொன்னாங்காணி, வேலிப்பருத்தி, கரிப்பான், மூவிலை, மின்னி (கருங்காக்கட்டான்), பாடாவன துளசி தூதுளை, புளியாரை, விஷ்ணுகாந்தி, இவைகளின் சாறுகளைப் புதுச்சட்டித் தூரில் பத்துமுறை உலர உலரப்பூசி மேற்படி சாறுகளில் துணியை நனைத்து உலர்த்தி திரித்து நெய்விட்டுத் தீருமேற்றிச் சட்டித்தூரில் மை பற்றவைத்து துத்தம், துருசு, குன்றி அளவு கூட்டி பசுவின் வெண்ணெயால் அரைத்துக்கொண்டு விழியில் தீட்டிவர சகலகண் நோய்களும் தீரும்.

5. பொன்னாங்காணி, சிறுகீரை, கரிப்பான், பொடுதலை, குப்பைமேனி, ஊமத்தை, முருங்கை, அகத்தி, புளி, கீழ்க்காய் நெல்லி, வேம்பு, எருக்கிலைப் பழுப்பு, நாயுருவி, வேலிப் பருத்தி, துளசி இவைகளின் சாறுகளை முன்போல் சட்டித்தூரிலும் துணியிலும் ஊட்டித் திரித்து நல்லெண்ணெய் விட்டுத் தீபமேற்றி மைபற்ற வைத்து துத்தம், துருசு, படிக்காரம் வகைக்கு 1 வராகன் எடை கூட்டி பொன்முசுட்டை, சென்னாயுருவி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றில் அரைத்து உலர்த்தி வெண்ணெய் சேர்த்து அரைத்துக் கொண்டு கண்ணில் விட்டுவரச் சகல கண் நோய்களும்.

கண் நோய்களுக்கு விழியில்கட்ட நெய்.

1. பசும் நெய், பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் முடக்கொத்தான், சந்தனம், பூமி சர்க்கரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், அலரி வேர், தாமரைக் கிழங்கு வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் போட்டு பாதமாய்க் காய்ச்சி வடித்து விழியில் கட்ட நீலகாசம், கண்வலி, வரணப் படலம் தீரும்.

2. நந்தியாவட்டைப் பூ, முருங்கைப் பூ, பனைமட்டை, பொன்னாங்காணி, சிறுகீரை, பச்சை மஞ்சள், எலுமிச்சம் பழம் இவற்றின் சாறும் கிளிஞ்சல் நீரும் வகைக்கு கால் படி, பசும் நெய் ½ படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து மூன்று துளி வீதம் விழியில் கட்டிவர பூ, இரத்தப்படுவன், சதைவளர்ச்சி தீரும்.

3. பசுவின் நெய்யில் பனைமட்டை, மருடகிழங்கு இவைகளின் சாறும், கிளிஞ்சல் நீரும் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம் 1 பலம்,

Koviloor Digital Library

பசும் பால் விட்டரைத்துக் காய்ச்சி வடித்து மூன்று துளிவீதம் விழியில் கட்டிவரக் கண்வேக்காடு, இரண, சுக்கிரன், கண்ணோயின் பேரில் கண்ட வெள்ளை இவை நீங்கும்.

4. பசுவின் நெய், தாய்ப்பால் வகைக்கு 1/8 படி கலந்து அதில் அதிமதூரம், பொன்னாங்காணிவேர், சிறுகீரை வேர் வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியிலிட்டுவரக் கண்ணெரிவு மாறிக் கண் குளிரும்.

5. நற்சீரகம், ஏலம், திப்பிலி, முத்து, பவழம், அதிமதூரம், அத்திப்பிஞ்சு இவைகளை ஓர் எடையாய் அரைத்துப் பசும் நெய்யில் போட்டுக் காய்ச்சி மூன்றுநாள் விழியில் கட்டி அப்பால் நெல்லிப் தாய்ப்பால் விட்டரைத்து புறவளையமிடக் கண் விதனம் மாறும்.

6. கிளிஞ்சில் நீர், பனைமட்டைச்சாறு, இளநீர், வகைக்கு மாகாணி, பசும் பால், நெய் வகைக்கு 1 ½ ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில் குங்குமப்பூ, தாமரைக்கிழங்கு, சந்தனம் வகைக்கு 2 பணவெடை, செங்கழுநீர்க் கிழங்கு 1 பணவெடை, நற்சீரகம் 3/8 பணவெடை, அதிமதூரம், கோரோசனை வகைக்கு ¼ பணவெடை இவற்றை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில் கட்டினால் பல கண் வியாதிகள் தீரும்.

7. பசும் நெய்யும், பாலும் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் சிறுகீரை வேர், அதிமதூரம், செஞ்சந்தனம், நெய்தற்கிழங்கு இவற்றை வகைக்கு 1 பலம் மேற்படி பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியில் கட்டினாலும் கண் சிவப்பு, காந்தல் முதலிய நோய்கள் தீரும்.

8. பசும்பால், நெய், முருங்கைப் பூச்சாறு, உத்தாமணிச் சாறு வகைக்கு ¼ படி, மஞ்சள், அதிமதூரம், சந்தனம், சீரகம், இவற்றை அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்து விழியில் கட்டிவர சுக்கிரன் தீரும்.

9. முடக்கொத்தான் சமூலத்தில் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு 1 படி, மேற்படி நெய் ¼ படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதூரம் 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில் கட்டிவர படலம், காசம், திமிரம், அத்தி கோபம் தீரும்.

10. இளநீர், பசும் நெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் நன்னாரி, இருவேலி, நெய்தற்கிழங்கு, சந்தனம், மஞ்சிட்டி, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கண்ணில் கட்டினால் சகல கண் நோய்களும் தீரும்.

11. முருங்கைப்பூ, பசுமஞ்சள், எலுமிச்சம்பழம், பனைமட்டை, கோவை இலை இவைகளின் சாறு, சிப்பி நீர் வகைக்கு கால் படி, பசும் நெய் 1 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் சிறுகீரை வேர், பொன்னாங்காணி வேர், நந்தியாவட்டை வேர் இவற்றை ஒரு கொட்டைப்பாக்களவு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து விழியில் கட்டிவரக் கண்ணில் சீழ்வடிதல் மாறும்.

Koviloor Digital Library

கண்நோய் உடையவர்களுக்குத் தலைக்குப் பற்றி. குங்குமப்பூத் தைலம்

குங்குமப்பூ, மஞ்சிட்டி, சந்தனம், அரத்தை, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், ஆலமுகிழ், அதிமதுரம், தாமரைக்கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கு, பாசை வகைக்கு 2 பலம் இவற்றை இடித்து 8 படி தண்ணீரில்போட்டுக் காய்ச்சி ஒரு படியாய் வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 1 படி விட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைக்குப் பதமிட்டுவர (பற்று) நலமுண்டாகும்.

கண் நோய் உடையவர்களுக்குக் காலில் தேய்க்கத் தைலம்.

சின்னிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் நாபிக்கிழங்கு 1 வராகன் எடை சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து காலில் தேய்த்துவர நலமுண்டாகும்.

விழியில் நோய் வராதிருப்பதற்கும் குளிர்ச்சிக்கும் வெண்ணெய்.

சிற்றாமணக்கின் வேரை அரைத்துப் பசுவின்பாலில் கலக்கிக் காய்ச்சிப் புரை குத்திக் கடைந்து வெண்ணெயெடுத்து விழியில் தீட்டிவர நலமுண்டாகும்.

விழிநோய்களுக்கு மருந்தரைக்கும் பாண்டம்.

வெங்கலக் கல்வமும், செப்புக் குழவியும் இருக்கவேண்டும் அதில் அரைத்தால் உத்தமம்.

குறிப்பு:– முன்கூறப்பெற்ற விழிநோய் மருந்துகள் அனைத்தும் இக் கல்வத்தில் அரைக்கவேண்டுமே யல்லாமல் மற்றொன்றிலும் அரைக்கலாகாது.

காலையில் போடவேண்டிய மருந்தை இரவிலும், மாலையில் போடவோண்டிய மருந்தை காலையிலும் அதற்குரிய துணைமருந்துகளில் வெள்ளிக் கிண்ணத்தில் உரைத்து விழியில் தீட்டவும்.

கண்ணில் மருந்திடப் பொருந்தாக் காலம்.

மேற்படி நோயாளிகள் நெடுந்தூரம் வெய்யிலில் நடந்து அலுத்திருக்கும்போதும், மது வகைகளைப் புசித்திருக்கும்போதும் தைலம் தலைமுழுக்குச் செய்துகொண்ட நாளிலும், கண் வலிக்கும் நாளிலும், இரவிலும் மருந்திடலாகாது.

கண்ணில் மருந்திட்டபின் நடக்கவேண்டிய ஒழுக்கமுறை.

காற்று, வெய்யில், போதைப் பொருள்கள் குளிர்ந்த தண்ணீரில் கை, கால கழுவல், நீராடல் முதலியன கைப்பு, புளிப்பு, கரப்பான் உணவுப்

Koviloor Digital Library

பண்டங்கள் நீக்கியும், வெந்நீர், பசும் பால், நெய், துவரை, பாசிப்பயறு, சிறுகீரை, பொன்னாங்காணி, முருங்கைக் கீரை, வாழைக்கச்சல் இவைகளை உட்கொண்டு வந்தால் நலமுண்டாகும்.

பல் தூய்மை.

ஆலின்விழுது, பூலாக்குச்சி, நாயுருவி, வெள்ளெருக்கு, உகா இவைகளின் வேர், வேம்பு, வேல் இக் குச்சிகளிலொன்றினால் பல்லைத் தூய்மை செய்து வெந்நீரில் முகம் கழுவிவந்தால் நன்று.

தைலம் (தலைமுழுக்கு நெய்) தேய்த்துக்கொள்ளும் முறை.

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணியில் சூரிய உதயத்துக்குப் பின் ஒரு கடிகைவரையிலும், மார்கழி, தையில் 2 கடிகை வரையிலும் மாசி, பங்குனி மற்ற மாதங்களில் 3 கடிகை வரையிலும் தலையில் தைலம் ஊறியபின் வெந்நீரில் உசில் இலை, சிகைக்காய் முதலான அரப்பிட்டுத் தலை முழுக்குச் செய்து வருவது முறைமையாகும்.

கண் நோய்களுக்குத் தைலம்.

1. சிறுகீரை, பொன்னாங்காணி, எலுமிச்சை, நன்னாரி, நந்தியாவட்டம், வாதமடக்கி, சங்கங்குப்பி, முடக்கொத்தான், பொன்முசுட்டை, நொச்சி, கறுத்த காக்கணான், அமுக்கறா, சீந்தில், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரை, நெய்தல், கரந்தை, சவுரி, பேராமுட்டி, ஆல், இவைகளின்வேர், வேப்பீர்க்கு அதிமதூரம், தேவதாரம், தான்றிக்காய், முத்தக்காசு வகைக்கு 3 பலம்; சந்தனம் 8 பலம், சிற்றாமுட்டி வேர் 15 பலம், மிளகு 5 பலம் இவற்றை இடித்து 12 படி தூயநீரில் போட்டு தீபம்போல் எரித்து எட்டில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 6 படி, பசும்பால் 4 படி, மேற்படி நெய் 2 படி, செவ்விளநீர், 1 படி, முடக்கொத்தான், பொன்முசுட்டை, நொச்சி, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி, சீந்திற்தண்டு, கற்றாழை, தண்ணீர்விட்டான், வாதமடக்கி இவைகளின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்விட்டுக் காக்கணம், பூலாக் கிழங்கு, இலவங்கப்பத்திரி, சந்தனம், தேவதாரம், மஞ்சிட்டி, வால் மிளகு, சடாமாஞ்சில், ஏலம், சாதிக்காய், கிராம்பு கோட்டம், வெட்டிவேர், அஞ்சனக்கல், விலாமிச்சம் வேர், மரமஞ்சள், கொத்தமல்லி, குக்கில், அதிமதுரம், செவ்வியம், சண்பகப்பூ, இலவங்கப்பட்டை, தக்கோலம், சதகுப்பை, நெல்லிமுள்ளி, திப்பிலி, கடுகுரோகணி, சிறுநாகப்பூ, தேசாவரம், பச்சை வகைக்கு 3 கழஞ்சு பசும் பாலில் அரைத்துப் போட்டுச் சிறு தீயாயெரித்து மெழுகு பதத்தில் வடித்து அதில் சூடாறுமுன் அபின், புனுகு, சவுக்காரம், கோரோசனை, கஸ்தூரி, பச்சை கற்பூரம் வகைக்கு 1 கழஞ்சு பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு ஒன்று விட்டொருநாள் தேய்த்து சிகைக்காய் அரப்பிட்டு முழுகிவர நயனகாசம், படலம், பில்லம், திமிரம், புழுவெட்டு, பித்தம் பூ, குருடு, நீர்ப்பாய்ச்சல், குந்தம் முதலான கண்ணோய் 96-ம் நீங்கும்.

Koviloor Digital Library

2. நெல்லிக்காய், கையாந்தகரை இவற்றின் சாறு, பசுவின் பால் வகைக்கு 3 படி, நல்லெண்ணெய் 4 படி, அதிமதுரம், கோட்டம், ஏலம், இலவங்கம், சண்பகமலர், சந்தனம், வெட்டி வேர், விலாமிச்சம் வேர் வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவரக் கண்காசம், படலம், புகைச்சல், பித்தம் தீரும்.

3. நெல்லிக்காய், கையாந்தகரை இவைகளின் சாறு வகைக்கு 2 படி, நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 1 படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலைமுழுகக் கண்படலம், கண்ணெரிவு, கபால வறட்சி நீங்கும்.

4. நல்லெண்ணெய், கருஞ்செம்பையிலைச் சாறு வகைக்கு 1 படி, தாய்ப்பால் ¼ படி, ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு 1 பலம், வால்மிளகு ¼ பலம், உள்ளி, வசம்பு வகைக்கு 1 பலம் இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி வடித்து தலைமுழுக நேத்திர வாயு நீங்கும்.

5. கையாந்தகரை, பொன்னாங்காணி, முசுமுசுக்கை, தாழைவிழுது இவற்றின் சாறு; நல்லெண்ணெய், தாய்ப்பால், செவ்விளநீர் வகைக்கு 1 படி, ஒன்றாய்க் கலந்த மூன்று நாள் வெய்யிலில் வைத்து அதில் சந்தனம், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டிவேர், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு, கிராம்பு 5 பணவெடை, குங்குமப்பூ 2 பணவெடை, இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சித் தலைமுழுகக் கண்புகைச்சல், பித்தகாசம், தலைமயக்கம் நீங்கும்.

6. சிறுகீரை, கரிப்பான் இவைகளின் சாறு; நல்லெண்ணெய், பசுவின் பால், வகைக்கு 1 படி, எலுமிச்சம்பழச்சாறு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம், நெல்லிமுள்ளி, அதிமதுரம், ஏலம், இலவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் காய்ச்சித் தலைமுழுகப் பித்தகாசம், வறட்சி முதலியவை நீங்கும்.

7. சிறுகீரை, பொன்னாங்காணி, வல்லாரை, முசுமுசுக்கை, நெல்லிக்காய் இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசும்பால் இளநீர் வகைக்கு 2 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் இஞ்சி 3 பலம், வெட்டிவேர், தண்ணீர் விட்டான் கிழங்கு வகைக்கு 1 பலம், தாமரைக்கிழங்கு 3 பலம், மல்லி 2 பலம், சீரகம், வாய்விளங்கம் தினுசுக்கு ¼ பலம் இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கலக்கிச் சூரியனில் இரண்டு நாள் வைத்துக்காய்ச்சி வடித்து அதில் பஞ்சதிரவியம் தினுசுக்கு 2 வராகன் எடை பொடித்துத் துணியில் முடிந்து போட்டுக் கொண்டு தலை முழுகிவர கண்குருடு, நீலகாசம், பித்தகாசம் நீங்கும்.

8. வெட்டிவேர், விலாமிச்சம் வேர், முத்தக்காசு, நன்னாரி வேர், நெல்லிமுள்ளி, மரமஞ்சள், சந்தனம், மகிழ்மலர் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்துப் பதக்குத் தண்ணீரில்போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி அதில் பச்சைக்கோலம், நன்னாரி, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், கோட்டம், சந்தனம், இலுப்பை மலர், சதகுப்பை, குங்குமப்பூ, சடாமாஞ்சில்,

Koviloor Digital Library

வெள்ளைக்குங்கிலியம், மகரமலர், புனுகு, நெய்தல்கிழங்கு, சாதிக்காய், ஏலம், முத்தக்காசு, அகில், விழலரிசி, தாமரைக்கிழங்கு, கடுகு, செவ்வியம், தான்றி, அஞ்சனக்கல், அதிவிடயம், அதிமதுரம், சண்பகப்பூ, மஞ்சிட்டி வகைக்கு 1 கழஞ்சு இவைகளை அரைத்துப்போட்டு நல்லெண்ணெய் நாழிக்கூடவிட்டுப் பதமாய்க் காய்ச்சி இறுத்து தலை முழுகிவர தலைமயக்கம், உடல் எரிவு, காமாலை, மதிமயக்கம், கண்திமிலம், எரிவுபடலம், காசம், இழிகண்பூ, சதைவளர்த்தி, நீலகாசம், நரை, திரை நீங்கும்.

9. சிற்றாமுட்டி வேர் 30 பலம், வில்வவேர், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், நன்னாரிவேர், சீந்தில்தண்டு, சந்தனம், அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 3 பலம் இவைகளை இடித்த 16 படி தண்ணீரில் போட்டு எட்டொன்றாய்க் குடிநீர் செய்து அதில் சிறுகீரை, கொடுப்பை, முசுமுசுக்கை, ஓரிலைத் தாமரை, தண்ணீர் விட்டான்கிழங்கு, வல்லாரை சீராசெங்கழுநீர், கற்றாழை, தாழை விழுது வகைக்கு ஒரு படிச் சாறு கூடவிட்டு பஞ்ச திரவியம், சிறு நாகமலர், சீரகம் கஸ்தூரிமஞ்சள், திரிகடுகு, திரிபலை, சடாமாஞ்சில், செவ்வள்ளிக்கொடி, வெட்பாலயரிசி, வாலுழுவையரிசி, பெருங்குரும்பை, மல்லி, கற்பூரம், தேவதாரம், பச்சைக் கிளியூரம் பட்டை, கிச்சிலிக்கிழங்கு, பூஞ்சாந்துப்பட்டை வகைக்கு 2 வராகன் எடை இவற்றைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி குங்குமப்பூ 1 வராகன் எடை வடிகலசத்தில் பொடித்துப் போட்டுத் தலை முழுகிவர கண் நோய் தீரும்.

10. நெல்லிக்காய், முசுமுசுக்கை, இளநீர், கரிசலாங்கண்ணி, கற்றாழை, சிறுகீரை, தண்ணீர்விட்டான் கிழங்கு, வல்லாரை, இவைகளின் சாறு வகைக்கு 4 படி, பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 8 படி, சிற்றாமணக்கெண்ணெய், பசு நெய் வகைக்கு 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் ஏலம், அதிமதுரம், கோட்டம், மஞ்சிட்டி, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, இலவங்கப்பூ, இலவங்கப்பத்திரி, சண்பகமலர், வகைக்கு ¼ பலம், தாளிசபத்திரி, 1 ¼ பலம், சந்தனம் 2 பலம், கோரோசனை ¼ பலம். பச்சைக் கற்பூரம் 1/8 பலம் இவற்றை இளநீர் விட்டரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்துத் தானியப்புடம் வைத்து தலை முழுகிவர உட்சுரம், பித்தம், தினவு, கடிகஞ்சு, கை காலெரிவு, திமிர், கண்காசம், படலம், நேத்திரவாயு முதலானவைகளும் தீரும்.

11. நெல்லிக்காய்ச்சாறு, பசுவின் பால், நல்லெண்ணெய், இளநீர் வகைக்கு 2 படி, நன்னாரி, சீந்தில், முத்தக்காசு, சிற்றாமுட்டி, பொன்னாங்காணி, பேராமுட்டி, சீராசெங்கழுநீர், இருவேலி, ஓரிலைத்தாமரை வகைக்கு 1 பலம் இவற்றை இடித்துப் பத்து படித் தண்ணீர் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி சேர்த்து அதில் நற்சீரகம், செஞ்சந்தனம், வசுவாசி (சாதிப்பத்திரி), திரிகடுகு, கிராம்பு, ஏலம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், கோட்டம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டு ஒன்றாய்ச் சேர்த்து காய்ச்சி முழுக பித்தவரட்சி, பிரமேகம், அவயங்களின் எரிவு, உட்டிணக் கண்ணீர் பாய்ச்சல், தலைவலி தீரும்.

Koviloor Digital Library

12. பத்து படித் தண்ணீரில் கால் வீசை சந்தனத் தூளைப் போட்டு ஐந்து நாள்கள் ஊறவைத்துக் காய்ச்சி இரண்டு படியாய் வற்றவைத்து விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நன்னாரி, பொன்னாங்காணி, சிற்றாமுட்டி, சீந்தில், வில்வம் இவற்றின் வேர் வகைக்கு ஒரு பலமாக இடித்து இரு தூணி நீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து இருவகைக் குடிநீர்களையும் ஒன்றாய்க் கலந்ததில் பசுவின் பால், நெய், நெல்லெண்ணெய், வகைக்கு 2 படி கலந்து மரமஞ்சள், மஞ்சிட்டி, சடாமாஞ்சில், மல்லி, செவ்வள்ளிக்கொடி, செவ்வியம், விழலரிசி, சதகுப்பை, வெட்பாலையரிசி, பச்சைத்திப்பிலி, கச்சோலம், தகரம், புனுகு, சந்தனம் வகைக்கு 4 கழஞ்சு இவற்றை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் சாப்பிட்டுத் தலைக்கும் தேய்த்து முழுகிவர மேற்சொல்லிய நோய்கள் தீரும்.

13. தாமரைக்கிழங்கு, நெல்லிமுள்ளி, ஆம்பல்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தல் கிழங்கு வகைக்கு 10 பலம் இவற்றை இடித்து உலர்த்திப் பத்துபடி தண்ணீரில் போட்டு நாலில் ஒன்றாய் வற்றவைத்து அதிலொருபடி நல்லெண்ணெய் விட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரக் கண்ணோய்கள் தீரும்.

14. நெல்லிக்காய், கரிப்பான், தாமரைக்கிழங்கு, பொன்னாங்காணி, பேய்ப்புடல், கோவையிலை, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு, பசுவின் பால் வகைக்கு அரைப்படி, நல்லெண்ணெய் 1 படி, அதிமதுரம், தேவதாரம், நாகணம், கோட்டம், ஏலம், முந்திரிப் பழம், பேரீச்சம்பழம், சந்தனம், சாதிக்காய் வகைக்கு 2 வராகன் எடை இவற்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து மூன்று நாழிகைவரை தலையில் தேய்த்து உசில் அரப்பிட்டுத் தலைமுழுக்குச்செய்துவர எட்டுவகை காசமும் தீரும்.

15. கருவேலம்பட்டை, 20 பலம், குமரி, சீந்தில், சிற்றாமுட்டி, சிறுகீரை, பொன்னாங்காணி, சீராசெங்கழுநீர், தாமரைக்கிழங்கு, நன்னாரி, விலாமிச்சம், சந்தனம் வகைக்கு 4 பலம், இவற்றை எல்லாம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 4 படி இளநீர் 2 படி விட்டுக் கலந்து அதிமதுரம், கோட்டம், சதகுப்பை, சன்ன லவங்கப்பட்டை, சந்தனம், பச்சிலை, சாதிக்காய், வள்ளிக்கொடி, ஏலம், பச்சைத்திப்பிலிமூலம், மல்லி, அகில், வாலுழுவை, செஞ்சந்தனம், முத்தக்காசு, சடாமாஞ்சில், கோரோசனை வகைக்கு 2 கழஞ்சு, இவற்றை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சித் தலை முழுகிவர நேத்திரநோய் 96–ம், தலைவலியும் தீரும்.

16. பேய்வாழைக் கிழங்கு, வெள்ளருகு, பிரம்மி, பொன்முசுட்டை, பாதிரி, நாய்வேளை, தகரை, நெல்லிமுள்ளி வகைக்கு 1 பலம் வீதம், இடித்து, எட்டுபிடி தண்ணீரில் போட்டு வற்ற வைத்திறுத்த குடிநீர் 1 படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் மிளகு, சுக்கு, அரத்தை, சிறுதேக்கு, மலைதாங்கிவேர், மரமஞ்சள், தான்றிக்காய், மதுரம், பூமிசர்க்கரைக்கிழங்கு வகைக்கு 9 வராகன் எடை பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவரத் தமிரம், காசம் தீரும்.

Koviloor Digital Library

17. காத்தொட்டி, வெற்றிலை, மரமஞ்சள், பச்சை கஞ்சா, இவற்றின்சாறு வகைக்கு கால் படி, பசுவின் பால், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி, மிளகு, கருஞ்சீரகம், கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து முழுகிவர விழியில் நீர் வடிதல், பில்லம், பீனிசம் தீரும்.

18. சிற்றாமணக்கெண்ணெய், குமரிச்சாறு வகைக்கு 1 படி, தேவதாரம், சந்தனம், பச்சைக்கற்பூரம், சாதிப்பத்திரி, அதிமதுரம், கடுகுரோகணி, தக்கோலம், மஞ்சள், சாதிக்காய், கிராம்பு, ஏலம், புனுகுச்சட்டம், முத்தக்காசு, சடாமாஞ்சில், விலாமிச்சம்வேர், இலவங்கம், மஞ்சிட்டி, நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, சிறுநாகப்பூ, திரிபலை வகைக்கு 9 கழஞ்சு மேற்படி சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி முழுகிவர கண் நோய்கள், தலை நோய்கள்யாவும் தீரும்.

19. கற்றாழஞ் சாறு 2 படி, இளநீர் 1 படி, நல்லெண்னை 3 படி, பசுவின் பால் 6 படி, இவற்றைக் கலந்து மூன்று நாள் இரவில் வைத்து நான்கில் ஒன்றாய்க் காய்ச்சி அதில் செங்கழுநீர்க் கிழங்கு, ஏலம், இலவங்கம், பச்சைச் சந்தனம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், இலுப்பைப்பூ, கோட்டம், வெள்ளைக் குங்கிலியம், சிறு நாகப்பூ, நறும்பிசின், மாஞ்சில், அதிமதுரம், அரேணுகம், மரமஞ்சள், தகரம், புன்னைத்தாது, தாமரைவளையம், ஞாழல்தாது, கொட்டிக்கிழங்கு, நன்னாரி, முத்தக்காசு வகைக்கு 3 கழஞ்சு இவற்றை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர கண்ணிழற்சி, நீர்ப்பாய்ச்சல், பற்ப நோய்களும் தீரும்.

20. சந்தனத்தூள் 6 பலம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முத்தக்காசு வகைக்கு 3 கழஞ்சு இவற்றை அரைத்து நல்லெண்ணெய் 1 படியில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர கண்ணில் சிவப்பு, நீர்ப் பாய்ச்சலும் பற்ப நோய்களும் தீரும்.

21. சந்தனத்தூள் 6 பலம், விலாமிச்சம்வேர், முத்தக்காசு, அதிமதுரம், ஏலம், இலவங்கம், இந்துப்பு, கார்கோலரிசி, அகில் வகைக்கு 1 பலம் இவற்றை இடித்து தூணிநீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 3 படி, பசுவின்பால் 6 படி, பச்சைக்கச்சோலம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அதிமதுரம், ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, அகில், சந்தனம், செவ்வள்ளிக்கொடி, கோட்டம் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டுத் தலைமுழுகிவர பன்னகாசம், படலம், பற்ப நோய், புகைச்சல், நீர்ப்பாய்ச்சல், கூச்சம், தலைநோய், கன்னச்சூலை ஆகியவை தீரும்.

22. ஏலம், இலவங்கம், சாதிக்காய், நெல்லி, தான்றி, கோட்டம், கஸ்தூரிமஞ்சள், கருவாப்பட்டை, செஞ்சந்தனம்பொடி, கடுகுரோகணி, சிறுநாகப்பூ, அதிமதுரம், கடுக்காய, சதகுப்பை, சண்பகப்பூ, பச்சை, வெள்ளைக்குங்கிலியம், குழித்தொட்டிவேர் வகைக்கு 3 பலம் இவற்றை எல்லாம் இடித்து 24 படி தண்ணீரில் போட்டு ஒன்றாய் வற்றவைத்து பொன்னாங்காணி வேர், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்கு 3 பலம்

Koviloor Digital Library

இவற்றை தனித்தனியே இடித்து 4 படி, தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்துவிட்டு இளநீர், தாழைவிழுதுச் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்து மேற்படி 4 வகை மருந்தும் வகைக்கு 2 பலம் மேற்படிபால் விட்டு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர விழிநீர்ப் பாய்ச்சல், இமைத் தடிப்பு, பற்ப நோய்கள் முதலான விழிநோய்கள் தீரும்.

23. நல்லெண்ணெய், இளநீர் பசுவின் பால் வகைக்கு 1 படி சிறுகீரை, கையாந்தகரை, பொன்னாங்காணி, நெல்லிக்காய், இவற்றின் சாறு வகைக்கு 1 படி, வெட்பாலைஅரிசி, கஸ்தூரிமஞ்சள் பஞ்சதிரவியம் வகைக்கு 1 பலம் இவற்றை அரைத்துக் காய்ச்சி தலைமுழுகிவர விழி எரிவு, இமைத்தடிப்பு, காசம் தீரும்.

உடல் உள்ளுறுப்பு எரிவு, பித்தத்திற்குத் தைலம்.

சிற்றாமுட்டி, நன்னாரி, இருவேலி, முன்னை, நெய்தல் இவற்றின் வேர், சீந்தில்தண்டு, சீராச்செங்கழுநீர், தாமரைக்கிழங்கு, தண்ணீர்விட்டான், சிறுகீரைவேர் வகைக்கு 1 பலம் இவற்றை இடித்து எட்டு படி தண்ணீரில் போட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்து அதில் தாழைவிழுது, தாமரைக்கிழங்கு, பொன்னாங்காணி, கையாந்தகரை, ஓரிலைத்தாமரை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், இவற்றின் சாறு வகைக்கு 2 படி, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 6 படி, இவற்றை எல்லாம் ஒன்றாய்க் கலந்து பஞ்சதிரவியம், பச்சிலை, கஸ்தூரிமஞ்சள், சிறுநாகப்பூ, செவ்வியம், சடா மாஞ்சில் வகைக்கு ஒரு பலம் இளநீர் விட்டரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து புனுகும் பச்சைக்கற்பூரமும் பொடித்துப் போட்டுவைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

விழிகடுப்பு, தலைவலிக்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்)

நல்லெண்ணெய் 1 படி, குப்பைமேனி, கையாந்தகரை, ஆதண்டை, நொச்சி, கழற்கொடி இவைகளின் சாறு வகைக்கு 1 படி, பின்னுங் கையாந்தகரைச் சாற்றில் சர்க்கரையைக் கரைத்து வெய்யிலில் வைத்து சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி அபின் 1 வராகன் எடை போட்டுக் கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

விழிநோய்களுக்கும் கபால குட்டத்திற்கும் குமரித் தைலம்.

எட்டுபடி குமரிச் சாற்றை ஒரு பாண்டத்தில் ஊற்றி ஒரு படியாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 1 படி, சிறுநாகப்பூ, செங்கழுநீர்க்கிழங்கு, அதிமதுரம், விலாமிச்சம்வேர், நன்னாரி, அஞ்சனக்கல், சந்தனம், வகைக்கு 3 கழஞ்சு பசுவின் பால் விட்டு அரைத்துப்போட்டுக் கலக்கிக் காய்ச்சி தலைமுழுகிவரத் தீரும்.

Koviloor Digital Library

கபால வலி, கபால சன்னி, கண்ணோய்களுக்குச் சம்பீரத் தைலம்.

தேங்காய்ப்பால், பசுவின் பால் வகைக்கு 2 படி, எலுமிச்சம், பழச்சாறு, தாய்ப் பால் வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்ததில் ஏலம், இலவங்கம், நற்சீரகம, சுக்கு, கோட்டம், சண்பகப்பூ வகைக்கு 1 கழஞ்சு அரைத்து மிளகு, அதிமதுரம், சதகுப்பை, மயிரோசனை, குருந்து, ஈசுரமூலி, முப்பூரமெரித்தான், பெருங்குரும்பை வகைக்கு 2 கழஞ்சு இவற்றை அரைத்துப் போட்டு ஊசி காந்தத்தில் மூன்று நாள் வைத்திருந்து காய்ச்சித் தலைமுழுகிவரத் தீரும்.

கண்ணோய், செவிநோய், தலை நோய்களுக்குத் தைலம்.

கையாந்தகரை, கற்றாழை, நெல்லிக்காய் இவற்றின் சாறு, தாய்ப்பால் வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் ½ படி, நன்னாரிவேர், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், கோட்டம், அதிமதுரம், சந்தனம் வகைக்கு அரைப்பலம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

விழிநோய், தலைநோய்க்கு, கற்பூரச் சந்தனாதித் தைலம்.

நல்லெண்ணெய், பசுவின் பால், இளநீர், கற்றாழை, தாழை விழுது, முசுமுசுக்கை, கற்பூரவல்லி, எலுமிச்சம்பழம் இவற்றின் சாறு வகைக்கு 1 படி, விலாமிச்சம் வேர், வெட்டிவேர், ஏலம், ஓமம், குங்குமப்பூ, கிராம்பு, சீரகம், மல்லி, தேவதாரம், அரத்தை, மரமஞ்சள், கிளியூரம்பட்டை, தான்றிக்காய், கற்கடக சிங்கி, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, கஸ்தூரிமஞ்சள், வெட்பாலைஅரிசி, விழலரிசி, சிறுதேக்கு பூலாங்கிழங்கு பச்சைவாளுலுவையரிசி, மிளகு வகைக்கு 1 கழஞ்சு இவற்றை எல்லாம் எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்து தலை முழுகிவர மூக்கில் நீர்பாய்ச்சல், சீழ்வடிதல், நாசிகனத்து மண்டையைக் குத்துதல், ஒற்றைத் தலைவலி, கபால இடி முதலான தலை நோய் 40–ம் கண்நோய் 96–ம் தீரும்.

பித்தம், விழிகாசம், காதடைப்பு, மந்தத்திற்கு தைலம்.

கையாந்தகரை, நெல்லிக்காய், நொச்சி, ஆதண்டை இவற்றின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 ½ படி, அதிமதுரம், ½ கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலை முழுகிவரத் தீரும்.

கண் நோய் தொண்ணூற்றாறுக்குத் தைலம்.

பொன்னாங்காணி, சிறுகீரை, ஆவாரை மொட்டுத்துளிர் இவற்றைப் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்தசாறு, சிற்றாமணக்கெண்ணெய், பசுவின் நெய், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, பசுவின் பால் 1 படி, ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், கிராம்பு, அதிமதுரம், கோட்டம், சண்பகப்பூ, சாதிக்காய்,

Koviloor Digital Library

மிளகு, ஏலச்காய், சந்தனம், செஞ்சந்தனம், மரமஞ்சள், அரத்தை, தேவதாரம், சாத்திரபேதி, வெட்டிவேர் வகைக்கு அரைக்கால் பலம் பொடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் போட்டுப் பதமாகக் காய்ச்சி வடித்து ஒன்றை விட்டொரு நாள் தலைக்குத் தேய்த்துச் சிகைக்காய் உசில் இலை அரப்பிட்டு தலை முழுக்குச் செய்துவர சகல கண் நோய்களும் தீரும்.

விழிநோய், தலைநோய்க்குத் தைலம்.

தாழைவிழுதுச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, கரிசலாங்கண்ணிச் சாறு, சீந்தில் சாறு வகைக்கு ஒரு படி, நல்லெண்ணெய் 16 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் இலுப்பைப்பூ, சந்தனம், அதிமதுரம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, நாகேசுரம் (சிறுநாகப்பூ), வெட்டிவேர், முத்தக்காசு, சாதிக்காய், பேரீச்சம், பழம், கொத்தமல்லி, தேவதாரம், விலாமிச்சுவேர், தாமரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, ஆலம்விழுது, வில்வவேர், கீழ்க்காய் நெல்லிவேர், மல்லி வகைக்கு 1 பலம் இவற்றையெல்லாம் இடித்துப் போட்டுப் பதமாகக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

கண் மருத்துவப்படலம் முற்றிற்று.

பீனிசப் படலம்.

அதாவது தலையில் அனலெழுந்து சூலையால் நோய் அதிகரித்து மூக்கிலிருந்து சீழ்போலும், சிராய்போலும், ஒழுகியும் காணப்படும்.

திரைக்கட லுலகி லுள்ள
　　திரண்டநூல் யாவும் பார்த்து
வரைதொறும் பிணியின் கோவை
　　வகைப்படி யாராய்ந் தேதான்

குறையினைத் தீர்ப்ப தற்குக்
　　குறித்தவயித் தியதி காரம்
அறைமுனி பாதம் போற்றி
　　வழுத்தினேன் காப்பு தானே.

காப்பான வாதபீனி சந்தா னாகும்
　　கருதியதோர் பித்தபீ னிசமு மாகும்
வாய்ப்பான சிலேத்ம பீனிச முமாகும்
　　வகுத்தநீர்ப் பீனிசமாம் சீழ்ப்பீ னீசம்

சேப்பான வுதிரபீ னிசமு மாகும்
　　செழிப்பான சிராப்பீனிச மூலபீ னிசமாம்
ஆப்பான சுண்டைப்பீனிச மூலபீ னிசமாம்
　　அப்பனே யெட்டுவிதந் திண்ணமாமே.

Koviloor Digital Library

வாதப்பீனிசம், பித்தப்பீனிசம், சிலேத்துமப்பீனிசம், நீர்பினிசம் இரத்தப் பீனிசம், சீழ்ப்பீனிசம், சிராய்ப்பீனிசம், கண்டப்பீனிசம், மூலப்பீனிசம் ஆக பீனிசவகை ஒன்பதாகும்.

பீனிசநோய் பொது இயல்பு.

மூலத்தில கனலேறி கபாலத்தில் நீரையேற்றி ஒரு மூக்கு அடைத்து ஒரு மூக்கில் நீர் வடியும்; அடிக்கடி தும்மல் வரும்; பிடரியும் தலையும் கனத்து வலிக்கும்; வாரந்தோறும் கபாலம் வரண்டு நீர்திரண்டு நாறும்; தேகத்தில் வெப்பு காணும்; நாவில் சுவையும் மூக்கில் மணமும் கெடும்; தலையின் நீர் நெஞ்சிலிறங்கிக் கட்டும்.

வாதப்பீனிச இயல்பு

மூக்கு வரளும்; நீர்வடியும்; நீர்பழுத்து சளிபோலத் திரண்டு நாற்றமின்றி விழும்.

பித்தப்பீனிச இயல்பு.

முக்குவழி மஞ்சள் நிறமாய் சளி வடியும்.

சிலேத்துமப்பீனிச இயல்பு.

மூக்கு மாறி மாறி அடைத்து முத்துப்போல் நீர் வடிந்து நாறும்; துணுக்குப்போல் சளி விழும்; மூக்கில் ஊசிபோல் குத்தும்; கண்ணில் பீளை சாரும்.

நீர்ப்பீனிச இயல்பு.

விடபித்தமும் வெட்டையும் அதிகரித்துத் தலையில் ஏறி மூக்கு வழி நீர் வடிந்துகொண்டு இருக்கும்; மழையில் நனைந்தால் நீர்மிகுந்து பிரியும்; முகமும் பரபரத்தூறும்; நாசியரிக்கும்; அடிக்கடி தும்மல் வரும்; தலைகனத்து வலிக்கும்.

இரத்தப்பீனிச இயல்பு.

வெட்டையின் பேரில் பித்தமிஞ்சிக் மிஞ்சி கபாலத்தில் ஏறி அதில் வட்டமாய்ப் புண்ணாகி மூக்கு வழி இரத்தம் விழும்; தலை வலிக்கும்.

சீழ்ப்பீனிச இயல்பு.

வெட்டையும் பித்தமும் கபாலத்தில் அதிகரித்துக் கபாலம் எரியும்; மூக்கு வரையில் புண்ணாகிச் சீழ்வடியும்; தலைவலிக்கும்.

சீராய்ப்பீனிச இயல்பு.

நாசிவழி சீராய்ப் போலும் ஈருள்ளி கூடுபோலும் சீழ்திரண்டு விழம்; பிணம் போல் நாறும்; மணம் தெரியாது; விடாமல் தலை வலிக்கும்.

இவைகட்கு மருத்துவம்:– கையாந்தகரை, ஆதண்டை, குரட்டைப் பழம், வெற்றிலை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், முசுமுசுக்கை, முடக்கொத்தான் இவற்றின் சாறு வகைக்கு கால்படி, நல்லெண்ணெய் 1 படி

Koviloor Digital Library

ஒன்றாய்ச் கலந்து அதில் மிளகு கால் பலம், அதிமதூரம், கோட்டம், சண்பகப்பூ, நற்சீரகம், வாய்விளங்கம், கொத்தமல்லி, வால்மிளகு, கஸ்தூரிமஞ்சள், ஏலம், இலவங்கம், தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை வகைக்கு 5 வராகன் எடை, கோரோசனை கால் வராகன் எடை இவற்றைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி பதமாயிறுத்து மூன்று நாளைக்கு ஒரு முறை முழுகியும் மிளகைக் கொட்டைப்பாக்கு அளவு வெற்றிலைச் சாற்றில் அரைத்து வெள்ளைத்துணியில் தடவி அப்பால் குரட்டைப்பழச் சாற்றில் 8 முறை நனைத்து நிழலில் உலர்த்தித் திரித்து நாசியில் புகை பிடித்துவரத் தீரும்.

2. நாரத்தம்பழம், எலுமிச்சம்பழம், புளியாரை, தண்ணீர் விட்டான்கிழங்கு, அறுகம்வேர், வல்லாரை, கரிப்பான், பொன்னாங்காணி, இவற்றின் சாறு வகைக்கு 1 படி, ஆவின்பால், சிற்றாமணக் கெண்ணெய் வகைக்கு 2 படி, சந்தனம், சதகுப்பை, மஞ்சிட்டி, யானைத்திப்பிலி, கிராம்பு, இலவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை, சண்பகப்பூ வகைக்கு 2 சீரகம், கிராம்பு அதிமதுரம் வகைக்கு பலம் அரை. நெல்லி முள்ளி பலம் 4 பலம், செங்கழுநீர்க் கிழங்கு 2 பலம் இவற்றைப் பசும்பாலில் அரைத்துப் போட்டுக் பதமாய்க் காய்ச்சி வடித்து மூன்று நாளைக்கு ஒரு முறை தலையில் தேய்த்து உசிலிலை, பாசிப்பயறு, மருக்காரைவேர்ப் பட்டை முதலியவைகளின் அரைப்பிட்டுத் தலைமுழுக்குச் செய்து சாதிலிங்கம், பறங்கிப்பட்டை, மிளகு, கருஞ்சீரகம், துருசு, இவற்றை ஓர் எடையாய்ப் பொடித்துக் காகிதத்தில் சுருட்டி தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடித்துவரத் தீரும்.

3. கரிசாலை, அவுரி, கஞ்சா, பொன்னாங்காணி, வெற்றிலை, முசுமுசுக்கை, ஆயிற்பட்டை, எலுமிச்சம்பழம், குரட்டைப்பழம், அத்திப்பட்டை இவற்றின் சாறு, ஆவின்பால் வகைக்கு ஒருபடி, ஆதண்டைச்சாறு, பிச்சியிலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், தான்றிக்காய், அதிவிடயம், அரத்தை, சுக்கு, கோட்டம், சதகுப்பை, குரோசாணி, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, திப்பிலிமூலம், சித்தரமூலம், பெருங்காயம், நெல்லிமுள்ளி, பிச்சிவேர்ப்பட்டை, மிளகரணைப்பட்டை, அழிஞ்சிப் பட்டை, கீழ்க்காவ் நெல்லிவேர், வகைக்கு ஒரு கழஞ்சு இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துச் சூட்டுடன் அதில் ஒரு பிடி முருங்கைப்பூவைப் போட்டுவைத்துக் கொண்டு தலைமுழுகிவரத் திரும்.

4. கடுகெள்ளெண்ணெய் 1 படி, குரட்டைப்பழம், வெற்றிலை, ஆதண்டை, உசிலம்பட்டை இவைகளின் சாறு வகைக்கு கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு, வால்மிளகு, சீரகம், சண்பகம் வகைக்கு 1 பலம் இவற்றைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

5. குப்பைமேனி, ஆடுதீண்டாப்பாளை, அழிஞ்சிவேர், முள்ளி இவைகளின் சாறு வகைக்கு ½ படி, நல்லெண்ணெய் 2 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி இறுத்துத் தலைமுழுகிவரத் தீரும்.

Koviloor Digital Library

6. நல்லெண்ணெய் 1 படி, கரிப்பான் சாறு, கருநொச்சிச் சாறு வகைக்கு ½ படி ஒன்றாய்க் கலந்ததில் மிளகு 1 ½ பலம், சாம்பிராணி 1 பலம் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு தலை முழுகிவரத் தீரும். அல்லது நல்ல அபின் கிடையாத பட்சத்தில் ½ பலம் சதகுப்பையை அரைத்து முன் மருந்துகளுடன் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும்.

7. வேங்கைக் கட்டை, சீந்தில் தண்டு, வில்வவேர், சிற்றாமுட்டிவேர் வகைக்கு 8 படி, இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு 12 நாளில் எட்டில் ஒன்றாக வற்றும்படி தீபம் போல் எரித்து வடித்து அதில் நல்லெண்ணெய் 1 படி விட்டு அமுக்குறா வேர்ப்பட்டை 3 பலம், சாதிக்காய், தக்கோலம், சண்பகப்பூ, விலாமிச்சம் வேர், வெட்டிவேர் வகைக்கு 1 வராகன் எடை பசுப் பாலில் அரைத்துப் போட்டு அன்றாடம் ஒவ்வொரு தாழம்பூ மடலையும் போட்டு 5 நாள் வரையில் மந்தாக்கினிபாய் காய்ச்சி வடித்து அதில் புனுகு, குங்குமப்பூ, பச்சைக் கற்புரம் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப்போட்டு வைத்துக் கொண்டு நாசியில் நசியம்செய்து தலையில் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

மூலப் பீனிசத்தின் இயல்பு.

மூக்கில் கோழிச் சதை போலும் அதன் கொண்டை போலும் வளரும்.

கண்டப் பீனிசத்தின் இயல்பு.

மூக்கில் சுண்டைக்காய் போல் சதை வளர்ந்து அடைக்கும்; தலை நீர் நெஞ்சில் இறங்கிக் கபம் கட்டும்.

மருத்துவம்:– ஆயில்மரப்பட்டை, மலாக்காச்சந்தனம் வகைக்கு 1 2 வராகன் எடை, மட்டிப்பால் சாம்பிராணி வகைக்கு வராகனெடை 1 ½ மிருதார்சிங்கி, சாதிலிங்கம், அரிதாரம் வகைக்கு 1 வராகன் எடை, இலுப்பைப் புண்ணாக்கு கால் வராகன் எடை, ஊமத்திலைச் சாற்றில் அரைத்து எருக்கம்பாலும், சதுரக்கள்ளிப்பாலும், ஒரு துணியில் ஊட்டி உலர்த்திய பாலில் மேற்படி மருந்தை அதில் பூசி ஒரு சாமம் வைத்துக் கொஞ்சம் கத்தரித்து சுங்கானில் வைத்துப் புகையை மூக்கில் ஏற்ற மூலப்பீனிசம், கண்டப், சிராய்ப்பீனிசம், கபாலசூலை, விரணம் முதலானவைகளும் தீரும்.

நீர்ப்பீனிசத்திற்குத் தைலம்.

1. நொச்சிச்சாறு, நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 1 படி, செவ்வியம், திரிகடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அரத்தை, கத்தூரி மஞ்சள், திப்பிலி மூலம், நொச்சிப் பட்டை வகைக்கு 1 பலம் இவைகளை மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

2. நொச்சி, கரிசாலை, வெற்றிலை, ஆதண்டை, பச்சை மஞ்சள் இவற்றின் சாறு வகைக்கு கால்படி; ஈருள்ளிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி; மிளகு கால் பலம் உடைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

Koviloor Digital Library

3. நல்லெண்ணெய், பசும்பால், இளநீர், கற்றாழை, முசுமுசுக்கை, கற்பூரவல்லி, எலுமிச்சம்பழம் இவற்றின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் நாயுருவி, சந்தனம், விலாமிச்சுவேர், வெட்டிவேர், ஏலம், ஓமம், அரத்தை, தேவதாரம், மஞ்சள், கிளியூரம்பட்டை, தான்றிக்காய், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, கத்தூரிமஞ்சள், மரமஞ்சள், விழலரிசி, சிறுதேக்கு, வாலுழுவையரிசி வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

4. பூவரசு, வெள்ளெருக்கு, மலைதாங்கி இவற்றின் வேர், கத்தூரி மஞ்சள், சிறுநாகப்பூ, வெடியுப்பு, புனுகு இவற்றை ஓர் எடையாய் துளசிச் சாற்றாலாட்டித் துணியில் ஊட்டித் திரித்துப் புகையை மூக்கிலேற்ற நீர்ப்பீனிசம் முதலானதும் தீரும்.

பீனிசம், நீர்வடிதல், எரிப்பு, தும்மலுக்குத் தைலம்.

ஆயில்மரப்பட்டை 40 பலம், சங்கம்வேர், அரத்தை, மிளகு வகைக்கு 10 பலம், மஞ்சள், 5 பலம் இவற்றை இடித்துப் பதக்கு (2 மரக்கால்) நீரில்போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்திறுத்து அதில் நல்லெண்ணெய் 4 படி, நொச்சி, முசுமுசுக்கை, ஆயில், கரிசாலை இவற்றின் சாறு வகைக்கு ½ படி, பசும்பால் 1 படி கூடவிட்டு அதிமதுரம், சதகுப்பை சதகுப்பை, அரத்தை கோஷ்டம், கருக்கால் சீரகம் வேலிப்படுத்தி வேர் வகைக்கு கால் பலம் இவற்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

இரத்தப்பீனிசம், சிராய்ப் பீனிசத்திற்குத் தைலம்.

1. ஆதண்டை, ஆடாதோடை, கையாந்தகரை, நொச்சி, பசுமஞ்சள், நாரத்தம்பழம் இவற்றின் சாறு வகைக்கு ½ படி நல்லெண்ணெய் 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் கொத்த மல்லி, மிளகு, சுக்கு, சூடாகக் காய்ச்சி வடித்து தலைமுழுகி வரத்தீரும்.

2. அறுகுவேர், நெல்லிக்காய், பொன்னாங்காணி, சிறுகீரை, தாழைவிழுது இவற்றின் சாறு, பசும்பால், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 1 படி, ஒன்றாய்க் கலந்ததில் மிளகு 1 பலம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலை முழுகிவரத் தீரும்.

3. பொன்னாங்காணி, கையாந்தகரை, முசுமுசுக்கை, வெற்றிலை, கஞ்சா, மிளகு, அதிமதுரம், நற்சீரகம், வால்மிளகு வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர சிராய்ப்பீனிசம், கபாலசூலை, ஒற்றைத் தலைவலி தீரும்.

4. கண்டங்கத்திரிப்பழம், துளசி, வெற்றிலை இவற்றின் சாறு, நல்லெண்ணெய் வகைக்குக் கால் படி விட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்து தலை முழுகி வர மேற்படி நோய்கள் தீரும்.

5. திரிகடுகு, மஞ்சள், வகைக்கு 5 கழஞ்சு. இந்துப்பு 1 கழஞ்சு இவைகளைக் கண்டங்கத்திரிப் பழச்சாற்றில் அரைத்து துணியில் தடவித்

Koviloor Digital Library

திரியூட்டித் தீயில்கொளுத்தி ஆற்றி மூக்கில் புகை பிடிக்கச் சிராய்ப்பீனிசம் தீரும்.

பீனிசம், மண்டைபிடி, கபாலச் சூட்டுக்குத் தைலம்.

முற்றின ஆயில் கட்டை 50 பலம், சிற்றரத்தை, 25 பலம், நிலக்குமிழ், வில்வம், தழுதாழை, காட்டாமணக்கு, பாதிரி, கோங்கிலவு, கூத்தன்குதம்பை, முன்னை, கண்டங்கத்திரி, நெருஞ்சி, நொச்சிக் கொடிவேலி, சங்கு, அழுக்குறா, சாரணை, முருங்கை, தூதுவளை, மூக்குரண்டி, வேலிப்பருத்தி, இவைகளின் வேர், சுக்கு, கருங்கொள்ளு, உளுந்து, கவதும்பை வகைக்கு 1 பலம் இடித்து ஒரு மரக்கால் நீரில்போட்டு நான்கில் ஒரு பாகமாக வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 8 படி, தண்ணீர் விட்டான்கிழங்குச் சாறு 1 படி, ஒன்றாய்விட்டு தேவதாரம், பொன்முசுட்டைவேர், இந்துப்பு, மாஞ்சில், அதிமதுரம், கோட்டம், நன்னாரிவேர், ஊமத்தம் வேர், மதானிக் கிழங்கு, சதகுப்பை, நெருஞ்சிவித்து மரமஞ்சள், மஞ்சள், குளப்பாலைவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு ½ பலம், குங்குமப்பூ ½ வராகன் எடை, கத்தூரி ½ வராகன் எடை, இவைகளை நாலுபடி பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர கண் தெளிவாகும். பித்தம்கீழ்நோக்கும்.

2. ஒரு துலாம் (100 பலம்) இஞ்சியை இடித்துச் சாறுபிழிந்து அதில் நல்லெண்ணெய் 1 படி, நொச்சிச்சாறு, பசுவின் பால் வகைக்கு ½ படியிட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

பீனிசம், மண்டையிடி, வாதம், கடுப்புக்குத் தைலம்.

ஆயில்பட்டை, புங்கம் பட்டை, சேவகன் கிழங்கு, செம்முள்ளி வேர் வகைக்கு 10 பலம் இடித்துப் பதக்கு (ஒரு மரக்கால்) நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாக வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 2 படி, செம்முள்ளிவேர், கொடிவேலிவேர், வாகைவேர், நிலக்குமிழ்வேர், கோட்டம், அதிமதுரம், வாய்விளங்கம், அரத்தை, இந்துப்பு, குங்கிலியம், சதகுப்பை வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போடக் காய்ச்சி மூக்கிலுறிஞ்சச் செய்து தலைக்கும் தேய்த்து முழுக்குச் செய்துவரத் தீரும். உள்ளுக்கும் கொள்ளலாம்.

பீனிசம், மண்டையிடி, நாசிகாபீடம், வறட்சிக்குத் தைலம்.

சீந்தில்கொடி, சிற்றாமுட்டிவேர், வகைக்கு 10 பலம் இவைகளை இடித்து நான்கு மரக்கால் தண்ணீரில் போட்டு குறுணியாய்க் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணெய் பசுவின் பால் வகைக்கு 1 படி கலந்து திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், கோட்டம், ஏலம், சன்ன இலவங்கப் பட்டை, சண்பகப்பூ, சிற்றரத்தை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சதகுப்பை, சடாமாஞ்சில், மரமஞ்சள், மஞ்சிட்டி, தேவதாரம், அகில், குங்கிலியம், சந்தனம், கொத்த மல்லி, வாய்விளங்கம், புனுகுச் சட்டம், நன்னாரி, முத்தக்காசு, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

Koviloor Digital Library

பீனிசம், விடாத்தலைவலி, கபாலசூலை, நேத்திரவாய்வுக்குத் தைலம்.

நொச்சிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் ஈருள்ளி இரண்டு சிரங்கை தட்டிப் போட்டுக் காய்ச்சி தலை முழுகிவரத் தீரும்.

கபால வலி, பீனிசத்திற்குத் தைலம்.

ஆதண்டை, செங்கொன்றை, சடைக்கஞ்சா, தை வேளை, வெற்றிலை, குரட்டைப்பழம், பச்சைமஞ்சள், இஞ்சி, முசுமுசுக்கை, சஞ்சாங்கோரை, இவற்றின் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்ததில் எட்டிக்கொழுந்து, சதகுப்பை, சுக்கு, வசம்பு, உள்ளி, தேவதாரம், அரத்தை, கடுக்காய் வகைக்கு 2 கழஞ்சு வீதம் நொச்சிச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரத் தீரும்.

மண்டையிடி, கபாலசூலை, பீனிசம், நாசி புண்ணுக்குத் தைலம்.

எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 பலம் நத்தைச்சூரிவேர் 1½ பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத்தீரும்.

கபாலவலி, குத்து சூலை, பீனிசம், நேத்திர நீர்க்கடுப்பு, மேகச் சூட்டுக்குத் தைலம்.

சவரிப்பழச்சாறு, நல்லெண்ணெய், பொடுதலைச்சாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் ஒரு பலம் மிளகை மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக்காய்ச்சி வடித்துத் தலை முழுக்குச் செய்யத் தீரும்.

பீனிசம், மண்டையிடி, தலைபாரத்திற்குத் தைலம்.

1. அமுக்கறாக்கிழங்கு 10 பலம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து அதில் பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, காடித்தண்ணீர், நொச்சிச்சாறு, எருக்கம்பூச்சாறு, வகைக்கு கால்படி கூடவிட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

2. தேங்காய்ப்பால், நல்லெண்ணெய், பசுவின் பால், எலுமிச்சம் பழச்சாறு வகைக்கு ¼ படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் கார்க்கோலரிசி, சிற்றரத்தை, வலம்புரிக்காய் வகைக்கு 3 வராகன் எடை இவற்றை பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சகல பீனிசமும் மண்டைக்குத்தும் நீங்கும்.

3. கையாந்தகரைச்சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, ஒன்றாய்க்கலந்து அதில் திரிகடுகு, இந்துப்பு, வசம்பு, வாய்விளங்கம்,

Koviloor Digital Library

அதிமதுரம் வகைக்கு 3 பலம் மேற்படி பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுகிவரத் தீரும்.

4. ஆடுதின்னாப்பாளைச் சாறு கால் படி, நல்லெண்ணெய் அரை படி ஒன்றாய்க் கலந்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வாரத்துக்கு இரண்டுமுறை தலையில் தேய்த்து மருக்காரைவேர் அரைப்பிட்டு தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

5. அரைக்கீரைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கத்தூரிமஞ்சள், மிளகு, கருஞ்சீரகம் வகைக்கு கால் பலம் மேற்படி சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி மேற்படி கடுகைப் புகைத் துணியில் வைத்துத் திரித்துப் புகை பிடித்துவரப் பீனிசம், மண்டை வலிக்குத்து, தலைபாரம் முதலியன நீங்கும்.

பீனிசம், இரத்தப்பீனிசம், சிராய், அழுகல்பீனிசம், பித்தப்பீனிசத்திற்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. பசுவின் நெய் அரை நாழி, அறுகம்வேர்ச் சாறு, தாய்ப்பால் வகைக்கு கால் நாழி இவைகளை ஒன்றாய்க் கலந்ததில் அதிமதுரம், கோட்டம், மஞ்சள், வாய்விளங்கம், குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு 1 வராகன் எடை, கத்தூரி, கிராம்பு, வகைக்கு கால் வராகன் எடை கரிசாலைச் சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மூக்கில் நசியம் செய்து உச்சியிலும் தேய்த்துவரத் தீரும்.

2. நான்கைந்து கொப்பரைத்தேங்காய்ப் பூவைச் சட்டியில் இட்டு அதில் புளியங்கொட்டை மேற்றோல் ஒரு சிறங்கைப் பொடித்துத் தூவிப் பிசைந்து வைத்து மூன்று நாழிகை சென்ற பின்பு பிழிந்தால் நெய் வரும், அதைச் சீசாவில் அடைத்துக்கொண்டு நாசியில் பத்துநாள் நசியமிடத் தீரும். அல்லது மேற்படி நெய்யில் கால் படி, துருசு, வெளிச்சிப்பிசின் வகைக்கு 2 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி நசியம் செய்துவரத் தீரும்.

3. பசுவின் நெய், மாதளம்பூச்சாறு வகைக்கு 1/8 படி ஒன்றாய்க் கலந்ததில் கோட்டம், ஏலம், குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, அதிமதுரம், கருஞ்சீரகம், இலவங்கப்பத்திரி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து நாசியில் நசியமிட (மூக்கிலுறுஞ்ச) சகல பீனிசமும் தீரும்.

பீனிசம், நச்சுத்தலைஇடிக்குப் பற்று.

அரத்தை மிளகு வகைக்கு கால் பலம், அபின் 1 வராகன் எடை இவைகளை கால் படி வெற்றிலைச்சாற்றில் அரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில் பற்றுப்போட்டு மறுநாள் சீயக்காய் அரைப்பிட்டு வெந்நீரில் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

பீனிசப்படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

தலைநோய்ப் படலம்.

அதாவது மூளையில் நீர் தங்கி தலைநோய் வருதலாம்.

சாருஞ் சிரநோய் மண்டையிடி சாற்றும் ஒத்தணம் பரிகாரம்
தேருந் தயிலங் கபாலவகை நிறைபுகையு மாக்கிராணம்
சேரு மூலி தனையறிந்து சிறக்கும் பாகம் வகுப்புடனே
பாருமுனிவர் பண்டிதர்க்குப் பகர்ந்தாராய்ந்து செந்தமிழில்.

தலையில் நீரேற்றம் மண்டை இடிக்கும் மருந்து.

அரத்தை, சதகுப்பை, திரிகடுகு வகைக்கு 3 வராகன் எடை அரைப்படி நொச்சிச்சாற்றில் கலக்கி முறித்து வடிகட்டிக் கொடுத்து அரத்தையைப் பொடித்து மூக்கில் நசியமிட்டு, மிளகு 1 ரூபாய் எடை, சாம்பிராணி ½ ரூபாய் எடை, கடுகு, புழுங்கல் அரிசி வகைக்குக் கால் ரூபாய் எடை இவைகளைத் தாய்ப்பால் விட்டு மைபோல் அரைத்து நெற்றியில் பற்று போடத் தீரும்.

மேற்படி நோய்க்கு ஆவி பிடித்தல்.

வேப்பீர்க்கு, நொச்சி; உத்தாமணி, பேய்ப்பீர்க்கு தும்பை இவைகளின் இலை, எருக்கம்பழுப்பு, சிறுகீரைவேர், இவைகளை ஓர் எடையாய் இடித்துத் தண்ணீரில் போட்டு வேகவைத்து இறக்கி தலையில் முக்காடிட்டு ஆவிபிடித்து ஆவி அடங்கின பின் ஒரு செங்கல்லைப் பழுக்கக் காய்ச்சி அதில் போட்டு மறுபடியும் முன்போல் ஆவிபிடித்தால் உடல் வியர்த்துத் தலைக்கனம் குறையும்.

மேற்படி நோய்களுக்கு ஒற்றடம்.

மாவிலங்கப் பட்டை 5 பலம், ஆயில்பட்டை 4 பலம், பெருமரத்துப் பட்டை 3 பலம், உகாய்ப்பட்டை 4 ½ பலம் இவைகளை இடித்து மூன்று பங்கு செய்து நாளொன்றுக்கு மூன்று வீசை வறுத்து தலையிலும், பிடரியிலும் ஒற்றடம் செய்ய மாறும்.

மேற்படி நோய்க்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்).

நல்லெண்ணெய் 1 படி, பசுமஞ்சட்சாறு, ஆதண்டைச் சாறு, பசுவின் தயிர், தண்ணீர் வகைக்குக் கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் குருந்தொட்டி, முள்ளி, சுண்டை, வேளை, கீழ்க்காய் நெல்லி இவைகளின் வேர், கோட்டம், தேவதாரம், மிளகு, சுக்கு வகைக்கு 2 கழஞ்சு, குக்கில் கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகி வரத் தீரும்.

மேற்கண்ட நோய்களுக்குப் புகை.

சுக்கு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், சதகுப்பை, மிளகு, சூடன் இவ்வகைளை ஓர் நிறையாய்க் குன்றிமணிச் சாற்றால் மைபோலரைத்துத் துணியில் தடவி உருட்டி தீயில் கொளுத்தி மூக்கில் புகைகொள்ள மாறும்.

Koviloor Digital Library

ஒருதலைவலி, மண்டைவலி, கபாலவாயுவுக்குத் தைலம்.

1. முலைவேம்பு, செவ்வலரி, ஆதண்டை, கருநொச்சி இவைகளின் சாறு வகைக்கு 1/8 நாழி, நல்லெண்ணெய் 1 நாழி இதை ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், வால்மிளகு, ஒருதலை வெள்ளைப்பூண்டு வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி இறுத்து தலைமுழுகிவரத் தீரும்.

2. பசும் பால், கரிப்பான் சாறு, இளநீர், நல்லெண்ணெய், வகைக்கு 1 படி, சந்தனம் 1 பலம், மிளகு 2 பலம், அதிமதுரம் ½ பலம் இவைகளை பசும் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி தலைமுழுகிவரத் தீரும்.

3. பொடுதலைச் சாறு, சவுரியிலைச் சாறு, பசும் பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க்கலந்து அதில் மிளகு 2 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

4. நல்லெண்ணெய், குப்பைமேனிச் சாறு வகைக்கு 1 படி இதைக் கலந்து காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

5. நான்கு பலம் பச்சைக் கொடிவேலிப் பட்டையை குமரிச் சாற்றில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

6, ஒரு படி நல்லெண்ணெய் அதிமதுரம், சுக்கு, வசம்பு, வகைக்கு 2 பலம் சிதைத்துப் போட்டு சிவக்கக் காய்ச்சி தலைமுழுகிவரத் தீரும்.

7. நல்லெண்ணெய் 1 படி, எருக்கம்பழுப்புச் சாறு 1/8 படி, சுக்கு, இந்துப்பு, அதிமதுரம், வசம்பு, திப்பிலிமூலம், வெள்ளுள்ளி, வகைக்கு 4 பலம் இடித்துப் போட்டுக்காய்ச்சி வடித்துத் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

8. கரிப்பான் சாறு, பசுவின் பால் நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, சிறு ஆமணக்கின் வேர், பெருஞ்சீரகம், பிட்சியிலை, விழலரிசி, அதிமதுரம், சுக்கு, இந்துப்பு வகைக்கு 1 பலம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்.

9. நல்லெண்ணெய், பசுவின் பால், வெற்றிலைச் சாறு, எலுமிச்சம்பழச்சாறு வகைக்கு ½ படி பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒன்றுவிட்டொருநாள் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

மேற்படி நோய்கட்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. ஒரு பலம் சுக்கை இடித்து எட்டுப் படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து அதில் தேங்காய் நெய் கால்படி, குங்குமப்பூ 1 வராகன் எடை பொடித்துப்போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி மூக்கில் நசியமிட நீங்கும்.

2. கடல் நுரை, மஞ்சள், வெங்காரம், திரிகடுகு, மரமஞ்சள், இலுப்பைப்புண்ணாக்கு வகைக்கு 1 வராகன் எடை கால் படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து மூக்கில் நசியமிட நீங்கும்.

Koviloor Digital Library

3. வாய்விளங்கம், மிளகு, செ ப்பியம், இந்துப்பு, அரேணுகம் (குப்பைமேனிவேர்), சுக்கு வகைக்கு 3 கழஞ்சு இவைகளை கையாந்தகரைச் சாற்றில் அரைத்து 1,8 படி பசுவின் நெய்யில் போட்டு காய்ச்சி வடித்து நசியமிட நீங்கும்.

4. குப்பைமேனிவேர், பூண்டு, வசம்பு, இவைகளை ஓர் எடையாய்த் தாய்ப்பால் விட்டு அரைத்து மூக்கில் நசியமிட்டால் நோய் தீரும்.

5. தைவேளைவேரும், வெள்ளைப் பூண்டும் சிதைத்துக் காதில் பிழிந்தால் நோய் தீரும்.

6. வெற்றிலையும், பெருங்காயமும், ஓர் எடையாய்ச் சிதைத்து வெதுப்பிக் காதில் பிழிந்தாலும் நீங்கும்.

7. ஈருள்ளியையும் முருங்கையிலையையும் சிதைத்து வலது பக்கத்தில் தலை இடித்தால் இடது மூக்கிலும் இடது பக்கம் இடித்தால் வலது மூக்கிலும் பிழியத்தீரும்.

8. சந்தனம், விலாமிச்சம்வேர், பெருங்காயம் இவைகளைத் தாய்ப்பாலில் அரைத்துச் சீலையில் ஊட்டித் திரித்து நல்லெண்ணெயில் தோய்த்து தீயில் கொளுத்தி ஆற்றி மூக்கில் புகை பிடிக்கவும்.

9. நெல்லிக்காய்க் கெந்தகம் அரை வராகன் எடை, கருங்குங் கிலியம், எருக்கங்கரி, கொடிவேலிவேர் வகைக்கு 1 வராகன் எடை கருஞ்சீரகம், அக்கிரகாரம், துத்தம் வகைக்கு கால் வராகன் எடை இவைகள் எருக்கம்பழுப்புச் சாற்றாலும் குப்பைமேனிச் சாற்றாலும் அரைத்துத் துணியில் ஊட்டி திரித்துத் தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கவும்.

10. மிளகும், தலைச்சுருளி (ஈச்சுரமூலி) வேரும் ஓர் எடையாய்ப் பொடித்து துணியில் வைத்துச் சுருட்டி அனலில் கொளுத்தி மூக்கில் புகை கொடுக்கவும்.

11. அரிதாரமும், எருக்கன்வேரும் சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துத் துணியில் தடவி திரியுருட்டிப் புகை பிடிக்கவும்.

12. செந்தொட்டிவேரைச் சீலையில் வைத்து சுருட்டி நெருப்பில் கொளுத்தி அவித்து மூக்கில் புகை பிடிக்கவும்.

13. கவுதும்பைவேரும், மஞ்சளும் சமமாகப் பொடி செய்து துணியில் சுருட்டிப் புகை கொடுக்கவும்.

14. கருஞ்சீரகம், கோழிமுட்டைத்தோல், கழற்சிப் பருப்பு சம அளவு எடுத்து நொச்சிச் சாற்றில் அரைத்துத் துணியில் தடவி திரியாக உருட்டிப் புகை கொடுக்க நீங்கும்.

மேற்படி நோய்கட்குப் பற்று.

1. எலுமிச்சம்பழச் சாற்றைப் பிழிந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி ஒர எடையாய் அரைத்து நெற்றியிலும் உச்சியிலும் பூசவும்.

Koviloor Digital Library

2. உளுந்து, கொள்ளு, சிவனார்வேம்பு, கற்பூரம், அதிமதுரம், நெற்பொரி, சந்தனம், வசம்பு, கோட்டம், முத்தக்காசு, இலவங்கப்பட்டை இவைகளை ஓர் எடையாய்ப் பச்சரிசிக்கழுநீரில் அரைத்துக் காய்ச்சி நெற்றியிலும் உச்சியிலும் பூச மாறும்.

தலைநோய்ப் படலம் முற்றிற்று.

சுரநோய்ப் படலம்.

சொன்னோ மாந்த சுரவகுப்புத் தோற்றுங் குறியுஞ் செய்கைமுதல்
இன்னுஞ் சாத்தியம சாத்தியமும் பகரு மால்நூ லாராய்ந்து
மன்னும் வயித்தியந் தானறிய மகிழ்வா யுரைத்த உண்மையிது
துன்னும் வயித்திய சாரமெனத் தொகுத்தார் முனிவர் வகுத்தாரே.

வாதசுரத்தின் இயல்பு.

உடல் கடுக்கும்; சந்து பொருத்துகளும், கீழ் முதுகும், இரு விலாவும் நோகும்; தலைவலிக்கும்; (இவை முற்குறிகள்), உடல் குளிர்ந்து நடுங்கி மயிர் சிலிர்த்து சுரந்தோன்றும்; (இவை சுரத்தின் குறிகள்) மலங்கட்டும்; பசிமந்திக்கும்; வாய் துவர்க்கும்; இளைக்கும்; இரண்டு காலும் குளிர்ந்திருக்கும்; முகம், வாய், கண், நாமலம் கறுக்கும்; இரவும் பகலும் நித்திரைவராது; தாகம் அசதி கொட்டாவி உண்டாகும். (இவை துணைக்குறி குணங்கள்).

மருத்துவம்;– சிற்றாமுட்டி, நாயுருவி, நொச்சி, விலாமிச்சு, முக்குரண்டி, தூதுவளை, கண்டங்கத்திரி, வில்வம், சிறுவழுதலை, சங்கு இவைகளின்வேர் வகைக்கு 2 பலம், நொச்சி, ஆடாதோடை பிரமி, நிலவாகை இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடி இடித்து ஒரு பாத்திரத்தில் போட்டு 14 படி தண்ணீர் விட்டு ஒரு படியாய் வற்ற வைத்து திப்பிலி, தேசாவரம் வகைக்கு 1 பலம் இடித்துத் துணியில் சல்லித்து ஒரு வேளைக்கு 1,8 படி குடிநீரில் மேற்படி தூள் அல்லது திரிகடுகு தூள் போட்டு நான்கு நாட்கள் உட்கொள்ள நோய் நீங்கும்.

2. குருந்தொட்டி, நொச்சி, சீந்தில், கூத்தன்குதம்பை, தூதுவளை, கண்டங்கத்திரி, பற்பாடகம், நிலவேம்பு, வாதமடக்கி, சிறுநெருஞ்சி கொடிவேலி இவைகளின்வேர்; ஆடாதொடை, நெல்லி, வேம்பு, மா, நாரத்தை இவைகளின் ஈர்க்கு, முத்தக்காசு, இவைக்ளை எல்லாம் ஒரு வேளைக்கு முக்கழஞ்சு வீதம் சிதைத்து இரண்டு படி நீரில் போட்டு கால் படியாய் வற்ற வைத்துத் தேன் விட்டு ஆறு நாள்கள் கொடுக்கத் தீரும்.

3. மேற்படி சுரம் கண்டவுடன் திரிகடுகு, வெள்ளுள்ளி, சீரகம் இவைகளைச் சமமாய் அரைத்து எலுமிச்சங்காய் அளவு மூன்று பொழுது வெந்நீரில் கொடுத்து அப்பால் கடுகுரோகணி, கடுக்காய், கச்சந்தறாய், சிவதை, கொன்றை வேர்ப்பட்டை வகைக்கு 3 வராகன் எடை இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காக வற்றவைத்து அதில்

Koviloor Digital Library

1,2 வராகன் எடை இந்துப்பைப் பொடித்துப் போட்டு மூன்று வேளைகொடுக்கத் தீரும்.

4. வாகை, குமிழ், பாதரி, சதாவேரி, (தண்ணீர் விட்டான் கிழங்கு) கூவிளை (வில்வம்), நன்னாரி, நெருஞ்சில், சீந்தில், பேராமுட்டி, சிற்றாமுட்டி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, விலாமிச்சு, அவுரி (நீலி), செங்கழுநீர், சிறுகுறிஞ்சா, சிறுகாஞ்சோறி, முக்காவேளை, சத்திச்சாரணை இவைகளின் வேர், பேய்ப்புடல், முத்தக் காசு, தேவதாரம், அரத்தை, வசம்பு, திரிகடுகு, கோட்டம் இவைகளை ஓர் எடையாய் இடித்து ஒரு வேளைக்கு அரையே அரைக்கால் பலம் வீதம் இரு நாழி போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 6 பொழுது கொடுக்கத் தீரும்.

5. பாவட்டை, கொன்றை, சிற்றாமுட்டி, வேலிப்பருத்தி, இவைகளில் ஓமம், மிளகு வகைக்குக் கால் பலம் இடித்து 2 படித்தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றவைத்து இந்தக் குடிநீரை 6 வேளை கொடுக்கத் தீரும்.

6. சிற்றரத்தை, பேரரத்தை, சதகுப்பை, சிறுதேக்கு, சுக்கு, திப்பிலி, செவ்வியம், கோட்டம், திப்பிலிமூலம், சங்கு, வெள்ளெருக்கு, திராய், அப்பைக்கோவை, நிலவேம்பு, முருக்கு, கழற்சி, கண்டங்கத்திரி, பேராமுட்டி, மாவிலிங்கு, சிறுகாஞ்சேரி, விஷ்ணு காந்தி, தூதுவளை இவைகளின் வேர் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து 2 பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு மூன்றுபடி தண்ணீரில் போட்டு 30 நாழிகை ஊறவைத்து கால்படியாக வற்றக் காய்ச்சி அதில் வாதராட்சதன் குளிகையில் இரண்டு பணவெடை உரைத்து தேன் ஒரு கழஞ்சுவிட்டு இரண்டுவேளை கொடுக்க நடுக்குவாரிக் காய்ச்சல் நான்கும், வாதசுரங்கள் முப்பத்திரண்டும் தீரும்.

7. பற்படாகம், சீந்தில், மலைதாங்கி, உருத்திரசடை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, முன்னை இவைகளின் வேர், முத்தக் காசு, சங்கு வகைக்கு 6 கழஞ்சு இடித்து நாழி நீரில் போட்டு 1 ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கவும். இவ்விதம் 6 வேளை கொடுக்கத் தீரும்.

8. முள்ளி, கண்டங்கத்திரி, பேராமல்லி, சிற்றாமல்லி இவைகளின் வேர், சுக்கு வகைக்கு 2 கழஞ்சு இடித்து 4 படி நீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் கால் படி அரிசியை போட்டுக் கஞ்சிகாய்ச்சி கொடுக்கத் தீரும்.

பித்த சுரத்தின் இயல்பு.

கொடூரமாய்ச் சுரம் காயும்; பிலப்பங்காணும்; பிதற்றும்; நெஞ்செரிக்கும்; கிறுகிறுக்கும்; சத்திக்கும்; அசதி ஆயாசம்காணும்; தேகம் புளகிக்கும்; வியாபிக்கும்; தலையசைக்கும்; தாகிக்கும்; முகம் நடுங்கும்; தொண்டை புண்ணாக்கும்; நாவுலரும்; கசக்கும்; முகம், கண்ணீர், மலம் மஞ்சளிக்கும்; கறுக்கும்; அடிக்கடி பசித்துத் துடிக்கும்; வயிற்றில் நின்ற பித்தம் வற்றிக் குலை குளிர்ந்தால் சுரம் விட்டு நாள் சென்றால் இரத்தம் வற்றி தேகமவளூத்து வீக்கங்கண்டு அடிக்கடி; குளிருண்டாய் மலங்கட்டி உயிர் பிரியும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– ஏலம், அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்ச வேர், கலைக்கொம்பு, இலுப்பைப்பூ, நன்னாரிவேர், ஆடாதோடையிலை, பேய்ப்புடல், கோரைக்கிழங்கு, சீந்தில்தண்டு, பற்படாகம், முன்னைவேர், வில்வவேர், மல்லி, நெல்லிமுள்ளி இவைகளை ஓர் எடையாய் இடித்துப் பொடிசெய்து ஒரு வேளைக்கு கால் பலத்தூளை இருநாழி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 வேளை கொடுக்கத் தீரும்.

2. நற்சீரகம், இந்துப்பு, திப்பிலி, அசமதாகம், கருஞ்சீரகம், சுக்கு இவைகளை ஓர் அளவாய் இடித்து வடிகட்டி காலை மாலை ஒன்றுக்குத் திரிகடி அளவு 6 பொழுது சாப்பிட்டு வெந்நீர் குடிக்கத் தீரும்.

3. பேய்ப்புடல், கோட்டம், மல்லி, சுக்கு, சீரகம், நெற்பொரி, வில்வவேர், சிற்றாமுட்டிவேர் இவைகளை ஓர் எடையாய் இடித்து ஒரு நாழிக்கு ஒரு பலம் தூள் இரண்டு நாழி தண்ணீரில் போட்டு கால் நாழியாய் வற்றவைத்து 6 வேளை கொடுக்கத் தீரும்.

4. விலாமிச்சு, சிறுகாஞ்சோரி, வில்வம், பாதிரி, தும்பை, செவ்வள்ளி, நன்னாரி இவைகளின் வேர், அதிமதுரம், கோட்டம், சீரகம், மல்லி, பேரீச்சங்காய், ஆனைதிப்பிலி, நெல்லிமுள்ளி, சுக்கு வகைக்கு 1 பலம் நசுக்கி அதை 12 பங்காகச் செய்து ஒரு பொழுதுக்கு ஒரு பங்கு வீதம் 3 நாழி தண்ணீர் விட்டுக் கால் படியாய் வற்றவைத்து அதில் கோரோசனைக் குளிகையொன்று உரைத்துத் தேன் ஒரு கழஞ்சுவிட்டு இருவேளை கொடுக்க பித்தசுரம் 21–ம் நீங்கும்.

5. சீந்தில், கொடிவேலி, சிறுகாஞ்சோரி இவைகளின் வோ, பறபடாகம், முத்தக்காசு, மல்லி, நிலவேம்பு இவைகளை ஓர் எடையாய் இடித்து 6 வேளை ஒரு பலம் பொடி வீதமாக இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

6. பங்கம் பாளை, சிறுகாஞ்சோரி இவைகளின் வேர், முத்தக்காசு, (கோரைக் கிழங்கு) இவைகளை ஓர் எடையாய் நசுக்கி முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

7. ஈச்சங்குருத்து, நெய்தற்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்ச வேர், அதிமதுரம், வில்வவேர், சிற்றாமுட்டிவேர், தாமரைக் கிழங்கு, சந்தனம், இலுப்பைப்பூ இவைகளைச் சரிபாகமாய் நசுக்கி முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

8. பேய்ப்புடல் 1 பலம், கிராம்பு, சுக்கு, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, மல்லி வகைக்கு கால் பலம் இவைகளை நசுக்கிக் குடிநீர் செய்து கொஞ்சம் தேன் விட்டுக் கொடுக்க நீங்கும்.

9. தூதுவளைவேர், சீந்தில், சுக்கு அதிமதுரம், சடாமாஞ்சில், பாசிப்பயறு, சிற்றாமுட்டி ,வகைக்கு 2 கழஞ்சு நசுக்கி ஒரு படித்தண்ணீர் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து இவ்விதம் 6 வேளை கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

10. வில்வவேர், அதிமதுரம், சுக்கு, இலுப்பைவேர், சிற்றாமுட்டி வகைக்கு 2 கழஞ்சு நான்குபடி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து இறுத்து இதில் பொரியரிசி கால் படி போட்டுக் கஞ்சிக் காய்ச்சி கொடுக்க நீங்கும்.

11. சிறுகாஞ்சோரி, வேலிப்பருத்தி, சீந்தில், ஆடாதோடை, வன்னி, சிறுவழுதலை, சுக்கு இவைகளின் வேர் ஒரு நாளைக்கு வகைக்கு கால் பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவிட்டு 6 வேளை இவ்விதம் கொடுக்க நீங்கும்.

12. கையாந்தகரை, துளசி, தூதுவளை, நொச்சி, ஆடாதோடை, வகைக்கு ஒரு படி இடித்துப் பிட்டவித்து அதில் 5 திப்பிலிகளை முடித்து வெந்தபின் சாற்றை இறுத்து அதில் மேற்படி திப்பிலியை அரைத்துக் கலக்கி இவ்விதம் 6 பொழுது கொடுக்க நீங்கும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம்.

சிலேத்தும (ஐய) சுரத்தின் இயல்பு.

உடலில் அனல் மிகுந்து திமிரேறி தலையில் நீர் கொண்டு தலை வலிக்கும்; உடம்பு களைத்து சலித்துச் சுரங்கையும்; மூக்கில் நீர் வடியும்; சத்தம் பிறக்க இருமல் உண்டாகும்; கோழை வரும்; நெஞ்சு வலிக்கும்; தலைமயக்கம் காணும்; கண்ணும், நாசியுங் காந்தும்; விட்டுவிட்டுச் சுரங்காயும்; தலையில் வியர்வை பொழியும்; காத்தபத்தின் (கழுதை) நீர் போலிறங்கும்; மலம் தீயும்; நாவு தடிக்கும்; வெளுக்கும்; இனிக்கும் கரிக்கும்; வாய் நீரூரும்; உடல், கண், மலம் வெளுக்கும்; மலம் வழுவழுத்திறங்கும்.

மருத்துவம்:– ஆடாதோடை, மலைதாங்கி, தூதுவளை, கண்டங்கத்திரி, நன்னாரி, சீந்தில், சிறுகாஞ்சோரி, சிறுவழுதலை இவைகளின் வேர், திரிபலை, சுக்கு, பேய்ப்புடல் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு மூன்று பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவிட்டு இறுத்து அதில் திரிகடுகு, இலவங்கப்பட்டை, அதிமதுரம், சிற்றரத்தை, மல்லி, திப்பிலிமூலம், சரிபாகமாய் வெதுப்பிப் பொடித்து வடிகட்டித் திரிகடி அளவு மேற்படி பொடியும் கொஞ்சம் தேனும் விட்டு 6 வேளை கொடுக்கத் தீரும்.

2. தூதுவளை, கண்டங்கத்திரி, துளசி, சிறுவழுதலை, முக்காவேளை, வில்வம், காஞ்சோரி, வேர்ப்பீர்க்கு, நெல்லியீர்க்கு, புளிஈர்க்கு வகைக்கு ஒரு பிடி இவைகளைச் சிதைத்து இரண்டு நாழி (1 படி) தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து இறுத்து அதில் திப்பிலி, தேசாவரம், வாய்விளங்கம், மல்லி, கடுகுரோகணி, அரத்தை வகைக்கு 3 வராகன் எடை, கடுக்காய், பேய்ப்புடல் வகைக்கு 2 பலம் இவைகளை இடித்து வடிகட்டித் திரிகடி அளவுப் போட்டு இவ்விதம் நான்கு நாள்கள் கொடுக்கத் தீரும்.

3. தூதுவளை, சிறுவழுதலை, சிறுகாஞ்சோரி, கண்டங்கத்திரி, ஆடாதோடை இவைகளின் வேர், கற்றாழஞ்சருகு, இம்பூரல், சுக்கு,

Koviloor Digital Library

முத்தக்காசு, இவைகளை ஒரு வேளைக்கு 5/8 பலம் வீதம் இடித்து 2 நாழி (1 படி) தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றச்செய்து திப்பிலி ஒரு வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் தேன் விட்டுக் கலந்து 6 வேளை கொடுக்க நீங்கும்.

4. பிரண்டை, கண்டங்கத்திரி, அரத்தை, சிறுகாஞ்சோரி, வெட்பூலா, பொன்முசுட்டை, முள்ளி இவைகளின் வேர், அரத்தை, சுக்கு இவைகளைச் சரிபாகமாய் ஒரு வேளைக்கு ½ பலம் வீதம் சிதைத்து இரண்டு படி தண்ணீரில் போட்டு முன்போல் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

5. சுக்கு, திப்பிலி, கிராம்பு, கடுக்காய்த் தோல், முந்திரிகை கச்சந்திராய், அப்பைக்கோவை, கரிமுள்ளி, கண்டங்கத்திரி, ஆடாதோடை, கருப்பூரவல்லி வகைக்கு 1 பலம் இடித்துத் தூள் செய்து 15 பங்கு செய்து ஒரு வேளைக்கு ஒரு பங்கு வீதம் இரண்டு படித்தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றவைத்து அதில் சந்திரோதய மாத்திரையும், கோரோசனைக் குளிகை ஒன்றையும் உரைத்துத் தேன் ஒரு கழஞ்சு விட்டுக்கொடுக்க சிலேத்தும சுரம், மயக்கம் தீரும்.

6. தூதுவளை, கண்டங்கத்திரி, செம்முள்ளி, சுண்டை இவைகளின் வேர், சுக்கு வகைக்கு 3 கழஞ்சு ஒரு நாழி தண்ணீரில் போட்டு அரைக்கால்படியாய் குடிநீர் செய்து திப்பிலிப் பொடிப் போட்டு ஆறுவேளை கொடுக்கத் தீரும்.

7. பாதிரி, வில்வம், பெருங்குமிழ்வேர் வகைக்கு இரண்டு கழஞ்சு, 4படி நீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து கால்படி பொரியரிசியைப் போட்டு கஞ்சிக் காய்ச்சி உட்கொள்ளத் தீரும்.

வாத சிலேத்தும (வளி ஐய)ச் சுரத்தின் இயல்பு.

1. சுரம் குளிர் காணும்; வாய்பிதற்றும்; பற்கடிக்கும்; காது அடைக்கும்; கண்ணொளி மங்கும்; நாவு தடிக்கும்; இருமல் எடுக்கும்; இரத்தம் விழும்; தொண்டை கம்மும்; மலங் கட்டும்; பசி மந்திக்கம்; மயக்கம், அசதி, இளைப்பு உண்டாகும்.

2. வெட்பாலையரிசி, விலாமிச்சம்வேர், வேம்பு, நெய்தல் கிழங்கு, பெருகுமிழ், அதிமதுரம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், கிராம்பு, வில்வப்பழத்தோடு, பொன்முசுட்டைவேர், நன்னாரிவேர், திரிகடுகு, அதிவிடயம், பற்பாடகம், முத்தக்காசு வகைக்கு 1 வராகன் எடை நசுக்கி இரண்டு நாழி நீரில் போட்டு கால்படியாய் வற்றக்காய்ச்சி திப்பிலித் தூள் 1 வராகன் எடை, கொஞ்சம் தேன் விட்டு கொடுக்கத் தீரும்.

சன்னிவாத சுரத்தின் இயல்பு.

மார்பு, கழுத்து, நெற்றி வியர்க்கும்; விக்கல் எடுக்கும்; பிதற்றும்; கண் பதைக்கும்; மேல் மூச்சுண்டாகும்; வயிறு வலிக்கும் கழிச்சல் காணும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– திப்பிலி, சிறுதேக்கு, முத்தக்காசு, பற்பாடகம், சுக்கு, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் ஆடாதோடை, பேய்ப்பீர்க்கு, சீந்தில்தண்டு, சிறுகாஞ்சோரி, நிலவேம்பு வகைக்கு கால் பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

உட்சுரத்தின் இயல்பு.

இரவும் பகலும் இடை விடாத சுரங்காயும்; உடல் வெளுத்து வற்றும்; பித்தத்தால் மயக்கம் தலைநோய் காணும்.

மருத்துவம்:– வெந்தியம், மிளகு, வகைக்கு கால் பலம் வீதம் இடித்து ஒரு நாழிகை 1 படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து 3 நாள் உட்கொள்ளத்தீரும். கால் நாழிகை காய்ச்சின் பசுவின் பாலில், சர்க்கரையும், சாத்திரபேதியும் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டு நான்கு நாள் உட்கொள்ளத் தீரும்.

2. பொன்னாங்காணி, முசுமுசுக்கை, பழம்பாசி, நீர்ப்பூலா சிற்றாமுட்டி, சீதேவியார் செங்கழுநீர், தாழைவிழுது இவைகளின் சாறு, இளநீர் வகைக்கு கால் படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் தான்றிக்காய், கோட்டம், அதிமதுரம், சீரகம், நெல்லிமுள்ளி, மல்லி, சண்பகப்பூ, சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், தேற்றான்விதை, நன்னாரி, முத்தக்காசு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர் வகைக்கு மூன்று கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் போட்டு சர்க்கரை 1 பலம் கலந்து காய்ச்சி வடித்துக் காலை மாலை சாப்பிட்டு வரத்தீரும்.

மந்தசுரத்தின் இயல்பு.

உடல்காயும்; வெளுக்கும்; நாவு வரண்டு தடித்து தித்திக்கும்; அடிக்கடி இருமல் காணும். வயிறு கழயும்.

மருத்துவம்:– போராமுட்டிவேரும், சுக்கும் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

2. சீந்தில்தண்டு, கடுக்காய், சிவதைவேர், களிப்பாக்கு, சுக்கு, கடுகுரோகணி, சிறுவழுதலை வேர் வகைக்கு கால் பலம் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காக வற்றச் செய்து உட்கொள்ளத் தீரும்.

3. சுக்கு, நறுக்குமூலம், (கண்டந்திப்பிலி), முசுமுசுக்கை வேர் வகைக்கு கால் பலம் இவைகளை இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டு வற்றச்செய்து மூன்றுநாள்கள் உட்கொள்ளத் தீரும்.

செரியாமைக் காய்ச்சலின் இயல்பு.

காய்ச்சல் காயும்; வயிறுபொருமிக் கழியும்; வலிக்கும்; வாயு மிக பிரியும்; அடிக்கடி புளித்தேப்பம், கொட்டாவி, விக்கல் காணும்; நாவு உலரும்; கைக்கும், உடல் நோவும்; வியர்க்கும்; குரல் கம்மும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– கற்றாழஞ்சருகு, ஆலம்சருகு, முக்காவேளை வேர், முருங்கை வேர்ப்பட்டை வகைக்கு 3 பலம், நொச்சிவேர் 4 பலம் இவைகளை இடித்து 4 நாழி தண்ணீரில் போட்டு ஒரு நாழியாய் வற்றச்செய்து வேளை ஒன்றுக்கு 1 ஆழாக்கு வீதம் மூன்று நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

2. திரிகடுகு, திரிபலை, திப்பிலி மூலம், சங்கம்வேர், சித்திர மூலம், வசம்பு, ஓமம் வகைக்கு கால் பலம் இவைகளை முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

3. திரிபலை, பேய்ப்பால், பேய்ச்சொற்றி, கடுகுரோகணி, சுக்கு, பேராமுட்டி, வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

எலும்பைப் பற்றின காய்ச்சலின் இயல்பு.

தாகம் மிகுந்துகாணும்; தேகம் வெளுக்கும்; குளிர்ச்சியாய் இருக்கும் ஒவ்வொரு நேரம் காய்ச்சல் அதிகமாய்க் காய்ந்து விட்டு விட்டு வரும்.

மருத்துவம்:– பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், பாடாவரை, கடுகுரோகணி, சுக்கு பேய்ப் பாச் சொற்றி வகைக்குக் கால்பலம் இவைகளை இடித்து ஒரு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம்.

இரத்தத்தைப் பற்றின சுரத்தின் இயல்பு.

காய்ச்சல் அதிகமாய் அடிக்கும்; தகிக்கும்; இளைப்பு, வியர்வை, மூர்ச்சை காணும்; சித்தப்பிரமை கொள்ளும்; உடம்பு நோகும்.

தாமரைவளையம், அமுக்கறாக்கிழங்கு, கொடிவேலி, பேராமுட்டி, வசம்பு சுக்கு வகைக்கு 1 பலம் இவைகளை நசுக்கி இரண்டு நாழி தண்ணீரில் போட்டுக் காய்ச்சிக் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

மாமிசத்தைப் பற்றிய சுரத்தின் இயல்பு.

அதிகமாய்ச் சுரமடிக்கும்; சுவாசங்காணும்; உடலெல்லாம் நமைச்சல் எடுக்கும்; நோவும்; ஆயாச மூர்ச்சை காணும்; மயிர்கூச்செறியும்.

மருத்துவம்:– பேராமுட்டி, நாகமல்லி, சுக்கு, திரிபலை, கடுகுரோகணி, மருட்கிழங்கு, சிற்றாமுட்டி, பாலைவேர், பேய்ப்பாகல் பேய்ப்பாச்சொற்றி வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

சகல முறைச் சுரத்திற்கும் மருந்து.

திப்பிலி, திப்பிலிமூலம் வகைக்கு 5 வராகன் எடை, செவியம், சுக்கு வாய்விளங்கம், மல்லி வகைக்கு 3 வராகன் எடை, கடுக்காய், பேய்ப்புடல், நெல்லிமுள்ளி வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து ஆறுபங்கு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால்

Koviloor Digital Library

படியாய் வற்றச் செய்து 6 நாள்கள் உட்கொள்ளத் தீரும். மணலை வறுத்து அதில் நொச்சிச்சாறு 1 ¼ படி விட்டு கொதிக்கும்போது வடித்து மேற்படி பொடியைப் போட்டாவது ஆறுவேளை கொடுக்க முறைச்சுர முதலான சகல சுரங்களும் நீங்கும்.

விடாச் சுரத்திற்கு மருந்து.

ஒரு சுண்டக்காய், அளவு அவுரிவேருடன் ஐந்து மிளகைக் கூட்டி வெந்நீரில் அரைத்துக் கலக்கி அதில் சுண்ணாம்பைக் குன்றிமணி அளவு கரைத்து 3 நாள்கள் உட்கொள்ள நோய் நீங்கும்.

மூன்றாம்முறைக் குளிர்சுரத்திற்கு மருந்து.

சிறு தேக்கு, பற்பாடகம், முத்தக்காசு, சீந்தில் தண்டு, நன்னாரி, சிறுகாஞ்சோரிவேர், தேவதாரம், கோட்டம், பேய்ப்புடல், சுக்கு வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு வற்றக் காய்ச்சி ஆறு வேளை உட்கொள்ள நோய் நீங்கும்.

ஒன்று விட்டொருநாள் வரும் மாறல் சுரத்திற்கு மருந்து.

1. பற்பாடகம், பேய்ப்புடல், அதிமதுரம், சீந்தில்தண்டு அதன்வேர், கொடுப்பைவேர், முத்தக்காசு, மல்லி, சுக்கு வகைக்கு 3 வராகன் எடை இவைகளை ஒரு படி தண்ணீரில் போட்டு 1 ஆழாக்காய் வற்றச்செய்து அதில் தேன் விட்டு ஆறு நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

2. பேராமுட்டி, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சொரி, நன்னாரி, சிறுகீரை, பொன்னாங்காணி, ஆவாரை, நிலவேம்பு, முத்தக்காசு, சிறுதேக்கு, மல்லி இவைகளை வகைக்கு கால் படி வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து பகலிலும் இரவிலும் உட்கொள்ளத் தீரும்.

3. முந்திரிப்பழம், சிறுநாகப்பூ, அதிமதுரம், செங்கழுநீர்க்கிழங்கு, நன்னாரிவேர், இவைகளை வகைக்கு 1 கழஞ்சு வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டுக் குடிநீர் செய்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

4. முத்தக்காசு, மாவீக்கு, மேற்படிவேர், விலாமிச்சுவேர், பற்பாடகம், நெல்பொரி, சிறுபயறு, வகைக்கு 2 கழஞ்சு நான்கு படி தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றச்செய்து அடையாளம் வைத்து கொண்டு ஒரு வேளைக்கு ஆழாக்கு வீதம் சந்தனம், பச்சை கற்பூரம், உருத்திராட்சம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்து கலக்கி ஒரு நாள் உட்கொள்ளத் தீரும்.

5. கோட்டம், அதிமதுரம், நெல்லிமுள்ளி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முத்தக்காசு, சந்தனம், நெல்பொரி வகைக்கு 2 கழஞ்சு நான்குபடி இளநீரில் போட்டு ஆழாக்காய் வற்றச்செய்து உட்கொள்ள நோய் தீரும்.

தாப சுரம், நாவரட்சிக்கு மருந்து.

வில்லவேர் விலாமிச்சைவேர் நெருஞ்சிவேர் நன்னரி மதுரம் சோம்பு விளாவரிசி, முத்தக்காசு, நெற்பொரி, முந்திரிப்பழம், நெல்லி முள்ளி இந்துப்பூ

Koviloor Digital Library

சுகசு, வகைக்கு 3 வராகனெடை இவற்றை சிணத்து கஷாயம் செய்து கொடுக்கதீரும்.

விஷபாக சுரத்திற்கு மருந்து

நெருஞ்சில், வீழி, குருந்தொட்டி, சிறுபீளை, அமுக்கறா, நன்னாரி, பெருங்குமிழில், சீந்தில், முன்னை, பாதிரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சோறி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, வெதுப்படக்கி, நீர்முள்ளி, இவைகளின்வேர், விலாமிச்சம்வேர், கற்றாழஞ்சோறு, பற்பாடகம் தாமரைவளையம், சன்ன இலவங்கப் பட்டை, அரத்தை, திரிகடுகு, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், கோட்டம், சிறுதேக்கு, கோரைக்கிழங்கு வகைக்கு இரண்டு கழஞ்சு வீதம் இடித்து மூன்று பங்கு செய்து ஒரு பங்கு, இரண்டுபடி நீரில் போட்டுக் கால்படியாக வற்றவைத்து அதில் ஒரு கழஞ்சு வெங்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கவும். இப்படி ஆறுவேளை உட்கொள்ளத் தீரும்.

சுரத்தின்பேரில் உடல் வீக்கம் கண்டால் மருந்து.

1. சங்கு, நன்னாரி, தூதுவளை, துளசி, கஞ்சாங்கோரை, நீர் முள்ளி, வெதுப்படக்கி இவைகளின் வேர் பிரமி, கையாந்தகரை வகைக்கு ஒரு பிடி, 2 சுக்குத்தோ், 10 கடுக்காய் இவைவளை இடித்து 2 படி தண்ணீரில் போட்டு குடிநீர் செய்து மூன்று வேளை உட்கொள்ளத் தீரும்.

2. சுரைக்கொடி, அதன் பழுப்பு, கீழ்க்காய் நெல்லிவேர் வகைக்கு 2 பலம் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

இரவில் காணும் சுரத்திற்கு மருந்து.

1. பேராமுட்டி, விஷ்ணுகரந்தை, பாலை, பேய்ப்பாகல், பேய்ச்சொற்றி, நாகமல்லிகை, சிற்றாமுட்டி, இவைகளின் வேர், கடுகுரோகணி, சுக்கு இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து 6 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

2. திப்பிலி, மருட்கிழங்கு, உலா்ந்த இஞ்சி, நிலவேம்பு, கடுகுரோகணி, நெல்லி, பேய்ப்புடல், பாவட்டைவேர் இவைகளை முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

நளிர்க் காய்ச்சல், நடுக்கல் காய்ச்சலுக்கு மருந்து.

1. மிளகைக் குடிநீர் செய்து சாப்பிட்டாலும் அல்லது தேவதாரம், பற்பாடகம், கடுக்காய், உலா்ந்த இஞ்சி, கண்டங்கத்திரி, கோட்டம், குமிழ்வேர், சிறுதேக்கு, வகைக்கு ஒரு பலம் வீதம் இரண்டு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி உட்கொள்ள நோய் தீரும்.

2. சீந்தில், சிறுவழுதலை, நிலவேம்பு குமிழ் இவைகளின்வேர், உலா்ந்த இஞ்சி, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், சிறுதேக்கு, தேவதாரம், பற்பாடகம், ஆடாதோடை வகைக்கு 1 பலம் இடித்து இரண்டுபடி தண்ணீரில்

Koviloor Digital Library

போட்டுஎட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வேளை ஒன்றுக்கு அரை ஆழாக்காய் தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

3. நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், முத்தக்காசு, திரிகடுகு, மல்லி, செந்தொட்டிவேர், பற்பாடகம், பேய்ப்புடல், வகைக்கு 2 கழஞ்சு இடித்து மூன்று பங்கு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டு வற்ற வைத்து இதில் தேனும் திப்பிலிப் பொடியும் போட்டு 6 பொழுது உட்கொள்ள நோய் தீரும்.

4. சிறுதேக்கு, சீந்தில்கொடி, பற்பாடகம், கோட்டம், திப்பிலி, நிலவேம்பு, உலர்ந்தஇஞ்சி (சுக்கு), சிறுகாஞ்சோரி, முத்தக்காசு, ஆடாதோடை வகைக்கு கால் பலம், வீதம் 2 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

சத்திக் காய்ச்சல், நடுக்கல் தனத்திற்கு மருந்து.

நெல்பொரி, வருத்தபாசிப்பயறு, பற்பாடகம், பெரும்பூசனி வேர் வகைக்கு 6 கழஞ்சு இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ளவும். தாகம் அதிகமாய் இருந்தால் கால் பலம் அதிமதுரத்தைக் கலந்து குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும். (சத்திக்காய்ச்சலென்பது வாந்தி(சர்த்தி)யுடன் கூடிய காய்ச்சலென்பது பொருள்).

சளி, காய்ச்சல், மந்தத்திற்கு மருந்து.

பேய்ப்புடல், கடுக்காய், நெல்லிமுள்ளி, ஆடாதோடை, கண்டங்கத்திரி, மஞ்சள், கடுகுரோகணி, செம்முள்ளிவேர், கட்டுக்கொடிவேர், சந்தனம், வேலிப்பருத்தி, திப்பிலி வகைக்கு 3 கழஞ்சு இடித்து மூன்றுபங்கு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள சளி, காய்ச்சல், மலபந்தம் நீங்கும்.

காய்ச்சலுக்குக் கொடுக்கும் கழிச்சல் மருந்து.

கற்றாழஞ்சருகு, கடுக்காய், கருவேம்பின் பட்டை, கார்க்கோலரிசி வகைக்கு கால் பலம் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்க கழிச்சலாகும் (பேதி). காய்ச்சல் மட்டுப்படும்.

சுளுக்குக் காய்ச்சலுக்கு மருந்து.

கொத்தமல்லி, திரிகடுகு, பேராமுட்டி, வகைக்கு 3 கழஞ்சு வீதம் இடித்து ஒரு நாழி நீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

பெருங்கழிச்சலோடு காய்ச்சலுக்கு மருந்து.

1. பங்கம்பாளை, உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு, சிறுகாஞ்சோரிவேர் இவைகளை சம எடையாய்க் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

2. மாம்பட்டை, அதிவிடயம், முதியார் கூந்தல், உலர்ந்த இஞ்சி, முத்தக்காசு, இவைகளை வேளை ஒன்றுக்கு கால் பலம் இடித்து ஒரு நாழி

Koviloor Digital Library

நீரில் போட்டு அரைக்கால் நாழியாய் வற்ற வைத்து இலவம் பிசின் தூள் கால் வராகன் எடை சேர்த்து உட்கொள்ள நோய் தீரும்.

3. மின்னிச்சமூலம், பொன்னாங்காணிவேர், நன்னாரிவேர், பற்பாடகம், கோரைக்கிழங்கு, கஞ்சாங்கோரை, வேட்டிவேர், விலா மிச்சம்வேர், மல்லி, சந்தனம், சுக்கு இவைகளைச் சம எடையாய்க் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

4. கோவைக்கிழங்கு மாம்பட்டை, வகைக்கு 2 பலம் தூள் செய்து பிட்டவித்து அரைக்கால் நாழி சாறு பிழிந்து அதில் இலவம் பிஞ்சு, அதிவிடயம், சுக்கு, முத்தக்காசு வகைக்கு கால் பலம் இடித்துக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

5. பெருமரத்துப்பட்டை, வில்வப்பிஞ்சு, செந்தொட்டி, மாதுளம்பிஞ்சு, அதிவிடயம், சுக்கு, முத்தக்காசு வகைக்கு கால் பலம், இடித்துக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

6. மாம்பட்டை, வில்வப்பழச்சதை, முத்தக்காசு, நிலவேம்பு, பெருமரத்துப்பட்டை, சுக்கு வகைக்குக் கால் பலம் இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

7. மலராத மாதுளம்பூ, அதிவிடயம், பிநாகப்பட்டை, மாதுளம் ஓடு, வில்வப்பழச்சதை, குடசப்பாலை, சுக்கு, முத்தக்காசு, ஆவாரம்பூ வகைக்குக் கால் பலம் இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

8. சிற்றாமுட்டிவேர், வில்வக்காய், சீந்தில்தண்டு, குடசப்பாலை, உலர்ந்தஇஞ்சி, முத்தக்காசு, நிலவேம்பு, கஞ்சாவிதை வகைக்கு கால் பலம் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

அதிசாரக் காய்ச்சலுக்குக் குளிகை.

திரிகடுகு, சாதிக்காய், கிராம்பு இலவம்பிசின், விளாம்பிசின், வில்வப்பிசின், அதிவிடயம், கழற்சிப்பருப்பு, சீரகம், ஓமம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, மாதுளம்பிஞ்சு, வில்வப்பழச்சதை, பொன்முசுட்டைவேர் இவைகளை ஓர் எடையாய் நல்லெண்ணெய் விட்டு இணக்க வறுத்துத் தயிர்த் தண்ணீரால் அரைத்து உருண்டைகள் செய்து வடித்த தயிரில் ஒரு உருண்டை கொடுக்க காய்ச்சல், கழிச்சல் முதலியவை தீரும். (ஒரு உருண்டை கழற்சிக்காய் அளவு இருக்க வேண்டும்.)

அசாத்தியக் காய்ச்சலுக்கு மருந்து.

உலர்ந்தஇஞ்சி (சுக்கு), கொத்துமல்லி, தேசாவரம் வகைக்கு கால் பலம் இடித்து ஒரு நாழி நீரில்போட்டுக் குடிநீர் செய்து தேன் கலந்து மூன்று நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

தீராக் காய்ச்சலுக்கும் மாறல் காய்சசலுக்கும் மருந்து.

பெருங்குமிழ்வேர், நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு; இலுப்பைப் பூ, முந்திரிகைப்பழம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கோரைக்கிழங்கு,

Koviloor Digital Library

உலர்ந்தஇஞ்சி, சிறுகாஞ்சொரிவேர், அதிமதுரம், நெல்லிப்பருப்பு வகைக்கு ஒரு கழஞ்சு இடித்துப் போட்டுக் குடிநீர் செய்து தேன் கலந்து மூன்று நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

நச்சுக் காய்ச்சலின் இயல்பு.

ஒரு புறங் குளிரும்; ஒரு புறங்காயும்; உடலில் நஞ்சு ஏறுவது போல் தோன்றும். (இதனை விஷச்சுரம் என்பர்).

மருத்துவம்:– நெல்லி, தான்றி, வேப்பீர்க்கு, சீந்தில்தண்டு, மல்லி, முத்தக்காசு, இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் பலம் இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

2. சிறுவழுதலை, சீந்தில், தாமரை இவைகளின் வேர், முத்தக்காசு, உலர்ந்த இஞ்சி இவை எல்லாம் வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு நாழி தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

3. கோழிஅவரைவேர், சித்திரமூலம், வேப்பீர்க்கு, சிறுபுள்ளடி, பற்பாடகம், உலர்ந்தஇஞ்சி, செவ்வியம் வகைக்கு கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

4. உலர்ந்தஇஞ்சி, கடுக்காய், நிலவேம்பு, சீந்தில், பேய்ப்புடல் வகைக்குக் கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

5. ஆடாதோடை, நிலவேம்பு, சீந்தில்தண்டு, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு வேர்ப்பட்டை, வெட்பாலைஅரிசி வகைக்கு கால் பலம் முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

கெர்ப்பகாலத்திற் காணுஞ் சுரத்திற்கு

சீராச் செங்கழுநீர் வேர் வேப்பீர்க்கு சிறுவழுதலைவேர் கோங்கிலவின் வேர், சுக்கு, அல்லி வகைக்கு கால்பலம் வீதங் கஷாயஞ் செய்து சர்க்கரை கலந்து கொடுக்கத் தீரும்,

குளிர் சுரத்திற்கு

1. கோட்டம், திப்பிலி, கண்டங்கத்திரி, சிறுதேக்கு, நிலக்குமிழ், உலர்ந்தஇஞ்சி, நிலவேம்பு, முத்தக்காசு, சிறுகாஞ்சோரி, சீந்தில், பற்பாடகம் வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 3 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. பெருந்தும்பையை இடித்துப்பிட்டவித்து மாகாணிப்படிச் சாறுபிழிந்து அதற்கு சமமாய் தேன் கலந்து மூன்று வேளை உட்கொள்ள நோய் தீரும். (மாகாணி என்பது 1/8 பாகம்)

3. ஆடாதோடை, தூதுவளை, முத்தக்காசு, சிறுவழுதலை, பற்பாடகம், பங்கம்பாளை, சுக்கு, சந்தனம், நன்னாரிவேர் வகைக்கு 1 பலம் இடித்து

Koviloor Digital Library

இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளத் தீரும். இவை எல்லாவற்றிற்கும் இச்சாபத்தியம்.

4. சீந்தில், நிலவேம்பு, சிறுகாஞ்சொரி, மல்லி, வட்டத்திருப்பி, விலாமிச்சம்வேர், பருத்தி, வெட்டிவேர், பற்பாடகம், சுக்கு, திப்பிலி வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

5. பேய்ப்புடல், முத்தக்காசு, பற்பாடகம், சீந்தில்தண்டு, வகைக்கு கால் பலம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

6. தூதுவளைச் சமூலம், நன்னாரிவேர், முத்தக்காசு, திரிபலை, வீழிப்பட்டை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரைக்கிழங்கு இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் வராகன் எடை வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளத் தீரும்.

7. சுக்கு, செவ்வியம், மல்லி, கண்டுபறங்கி, பறங்கிப்பட்டை, பேய்ப்புடல், திப்பிலிமூலம், இலவங்கம், அதிமதுரம், முத்தக்காசு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், கண்டங்கத்திரி, சீந்தில், பற்பாடகம், நன்னாரி, தூதுவளை, ஆடாதோடை இலை வகைக்கு 3 வராகன் எடை வீதம் இடித்துப் போட்டு முன்போல் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

8. சண்பகப்பூ, சாத்திரபேதி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தக்கோலம், நெல்பொரி, சுக்கு இவைகளை வகைக்கு 1 வராகன் எடை கால் படி மாதுளம்பழச் சாற்றில் அரைத்துக் கலந்து உட்கொள்ளத் தீரும்.

9. சீரகமும், குருந்தொட்டிவேரும், வகைக்கு 1 பலம் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

10. மிளகாய் இலை 9, மிளகு 7, வெள்ளைப் பூண்டு 1 இவைகளை அரைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

11. நாராக்கந்தை, துளசிவேர், சுக்கு வகைக்கு 1 பலம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 9 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

விடாக் குளிர்சுரத்திற்கு மருந்து.

கரிப்பான் ஒரு பிடி, வேப்பீர்க்கு ஒரு பிடி, மூன்றாய் நறுக்கிக் காய்ந்த சட்டியில் போட்டு, பொன்னிறமாய், வறுத்து, அதில் ஒரு பிடி மிளகாய் போட்டு வறுத்து வெள்ளுள்ளி, ஒரு பூண்டு கிள்ளிப்போட்டுக் கரிப்பான் இலை, நொச்சி இலை வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு அரைத்துப் போட்டு ஒரு படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி கால் படியாய் வற்றவைத்து மூன்று நாள் , இரண்டு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

திரிதோட (முப்பிணி) சுரத்திற்கு மருந்து.

1. சந்தனம், அதிமதூரம், இலவங்கம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மல்லி, சுக்கு, நிலவேம்பு பற்பாடகம், சீந்தில்தண்டு, செவ்வியம் இவைகளைச் சமமாய் இடித்து வேளை ஒன்றுக்கு ஒரு பலம் தூளை இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து 9 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. வட்டத்திருப்பி, தூதுளை, நன்னாரி, சிறுவழுதலை, சிறுகாஞ்சோரி கண்டங்கத்திவேர் ஆடாதோடை திரிபலை சுக்கு இவைகளை இடித்து 6 வேளை, ஒரு வேளைக்கு அரைப்பலம் தூள் ஒரு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து வடிகட்டியதில் திப்பிலி 4 வராகன் எடை வறுத்துப்பொடித்துப் போட்டுக் கொஞ்சம் தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

3. தூதுளம், கண்டங்கத்திரி, நிலவேம்பு, சீந்தில், சிறுகாஞ்சோரி, நன்னாரி, முள்ளி, ஆடாதோடை, விஷ்ணுகரந்தை இவைகளின்வேர், முத்தக்காசு, கொத்தமல்லி, சிற்றரத்தை, செவ்வியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கப்பட்டை வகைக்கு 6 கழஞ்சு இடித்து ஆறு பங்கு செய்து ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. கழற்சி, நன்னாரி, பேராமுட்டி, வில்வம் இவைகளின்வேர், முத்தக்காசு, பேய்ப்புடல், செவ்வல்லிக்கொடி, செங்கழுநீர்க்கிழங்கு இவற்றை ஒரு படிக்கு, அரைப்பலம் வீதம் இடித்து இரண்டு படி நீரில் போட்டு 1/8 படியாய் வற்றவைத்து அதற்குச் சமமாய் இஞ்சிச்சாறு கலந்து மூன்று வேளை உட்கொள்ள நோய் தீரும்.

5. சீந்தில், தூதுளை சிறுகாஞ்சோரி, நன்னாரி, ஆடாதோடை, விஷ்ணுகாந்தி இவைகளின் வேர், கண்டங்கத்திரி, நிலவேம்பு, முத்தக்காசு, மல்லி, அரத்தை, செவ்வியம், திரிகடுகு, திரிபலை, பேய்ப்புடல், கோட்டம், சன்னலவங்கப்பட்டை, வகைக்கு 3 வராகன் எடை இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

6. சந்தனம், பற்பாடகம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், சுக்கு சிறுகாஞ்சோரிவேர், இம்பூரல்வேர், இலவங்கம், நன்னாரிவேர் இவைகள் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து உட்கொள்ள நோய் தீரும். இவைகளுக்கு எல்லாம் இச்சாபத்தியம், புளியைச் சுட்டுக் கொஞ்சமாய்ச் சேர்க்கவும்.

சன்னி சுரத்திற்கு மருந்து.

தைவேளைச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு கால் படி தனித்தனியாய் முறித்து வடிகட்டி ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகுப் பொடி திரிகடி, ஒரு பண எடை தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

சன்னிதோட சுரதத்திற்கு மருந்து.

வாலுழுவையரிசி, சிவன்வேம்பு, கண்டங்கத்திரி, அரத்தை, அவுரிவேர், திரிகடுகு, வசம்பு, வெள்ளுள்ளி, கொடிவேலி, கஞ்சாங்கோரை, பொஸ்தக்காய் மாசக்காய், மஞ்சிட்டி, ஏலம், இலவங்கம், பறங்கிப்பட்டை, வால்மிளகு, சங்கம்வேர்ப்பட்டை, புளியம்பட்டை, தூதுளைவித்து, முக்கத்தாரி, பேய்ப்புடல், கூடவிளை வித்து ஓமம், கருஞ்சீரகம், மாவிலிங்கம்வேர், வகைக்கு கால்பலம் வீதம் இடித்து இரண்டு படி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் ஒரு பண எடை கழுதைப்பால் கலந்து மூன்று வேளை உட்கொள்ளத் தீரும்.

சகல சுரத்திற்கும் பொதுமருந்து.

1. முத்தெருக்கஞ்செவி, திரிபலை, கோரைக்கிழங்கு, சுக்கு, கடுகுரோகணி, நிலவேம்பு, சித்திரமூலம், செவ்வியம், மூக்குரண்டி சீந்தில், விஷ்ணுகாந்தி வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து 4 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. சிற்றாமுட்டி, பேராமுட்டி, நன்னாரி, விஷ்ணுகாந்தி, குழிமீட்டான், சிவதை இவைகளின் வேர், பற்பாடகம், கற்றாழஞ் சோறு, ஆடாதோடை, பேய்ப்பீர்க்கு, கண்டங்கத்திரி, சிறுசெருப்படை, வல்லாரை, வகைக்கு 1 பலம் மல்லி, நற்சீரகம், கடுகுரோகணி, திரிகடுகு, சிறுதேக்கு, திப்பிலிமூலம், செவ்வியம், கடுக்காய், தாளிசப்பத்திரி, நெல்லிப் பருப்பு வகைக்கு 2 எடை இவைகளை இடித்துப் பத்துப்படி தண்ணீரில் போட்டு 3 படியாய் வற்றவைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு கால் படி குடிநீராக 5 நாள்கள் கொடுத்து ஆறாம் நாள் தலைமுழுக்குச் செய்துவிட்டு புளி சேர்த்துக் கொள்ளவும்.

3. சித்திரமூலம், முத்தக்காசு, அக்கிராகாரம், அதிமதூரம், கோட்டம், ஏலம், இலவங்கம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, பொரித்தசீரகம், மிளகுபற்பம் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஒரு ஆழாக்காய் வற்றவைத்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. சிற்றாமுட்டி, கொழுஞ்சி, களா, நாயுருவி, மூக்குரண்டி, தூதுளை, கண்டங்கத்திரி, வில்வம், முள்ளி, கத்திரி, சங்கு இவைகளின் வேர் வகைக்கு இரண்டு பலம், நொச்சி, ஆடாதோடை, பிரமி, நிலவாகை இவைகளின் இலை வகைக்கு ஒரு பிடி இடித்து 6 படி தண்ணீரில் போட்டு மூன்று படியாய் வற்றவைத்துக் கொண்டு திப்பிலி, திப்பிலிமூலம், தேசாவரம், 1 பலம், இவைகளை இடித்துச் சூரணம் செய்து எட்டு வேளை உட்கொள்ள நோய் தீரும். (தேசாவரம் = மிளகுக்கொடி (செவ்வியம்) என்பாரும் உண்டு).

சகல பழஞ்சுரத்திற்கும் நெய்

வெள்வேல்வேர், கழற்சிவேர், நாயுருவிவேர், சிறுபூளைவேர், விஷ்ணுகாந்திவேர், வசம்பு, பூண்டு வகைக்கு 1 கழஞ்சி, இவைகளை

Koviloor Digital Library

அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுக் காயச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

விடாச்சுரம், வயிற்றெரிவு, இருமல், சொரி, சிரங்குக்கு நெய்

பசுவின் நெய், சுத்த நீர் இவை வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து முந்திரிகைப்பழம், வெட்பாலையரிசி, அரிசித் திப்பிலி, கெந்தகம், அதிவிடையம், நெல்லி, நிலவேம்பு, விலாமிச்சம்வேர், வில்வவேர் வகைக்கு 1 கழஞ்சு இவைகளைத் தண்ணீர் விட்டு அரைத்துக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு மூன்று கழஞ்சு வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

சுரம், விக்கல், தாகம், சுவையின்மை, தலைநோய், பிரமேகத்திற்கு நெய்.

பசுவின் நெய், தூய நீர் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் திப்பிலி, கடுகுரோகணி, வெட்பாலையரிசி, கீழ்க்காய்நெல்லி, வில்வவேர், வேப்பம்பட்டை, தான்றி, நெல்லிமுள்ளி, சந்தனம், ஆடாதோடை இலை, விலாமிச்சவேர், முந்திரிகைப்பழம், சிறுசண்பகப்பூ, அதிவிடயம் வகைக்கு 1 வராகன் எடை தண்ணீரில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு இரண்டு கழஞ்சு வீதம் தேன் கலந்து சாப்பிட்டுவர நோய் தீரும்.

சகல சுரத்திற்கும் கண் குளிர்ச்சிக்கும் நெய்.

சீராசெங்கழுநீர்ச்சாறு, 4 படி, நெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் மஞ்சிட்டி, தாம்பரக்கிழங்கு, ஏலம், இலவங்கம், கடுகுரோகணி, கோட்டம், நன்னாரிவேர், அதிமதுரம், சந்தனம், வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்து. நாள் ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு மேலிலும் பூச, சகல சுரமும், நீங்கும். கண் குளிரும்.

மாந்த சுரம், முறைக் காய்ச்சல், கடுங்காய்ச்சல், பெருங் கழிச்சல் (அதிசார சுரம்), செரியாமைச் சுரம் (அசீரண சுரம்), பூதச் சுரம், முதலானவைக்கு எண்ணெய்.

வெருகங்கிழங்கு, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சோரி, அவுரி, சீரா செங்கழுநீர், துளசி, நொச்சி, பெருகரந்தை வகைக்கு 5 பலம் தூள் செய்து ஆறு மரக்கால் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்ததில் கொம்பரக்கு 1 பலம், ஒரு படி நீரில் போட்டு அரைப்படியாய் வற்றவைத்து வடித்து நல்லெண்ணெய் 2 படி, மோர் கலக்கிக் கூட விட்டு அரத்தை, அதிமதுரம், முத்தக்காசு, வேட்பாலையரிசி, கோட்டம், வாய்விளங்கம், மஞ்சிட்டி, திரிகடுகு, கொடிவேலி, ஓமம், மரமஞ்சள், கருவேப்பீர்க்கு, கடுகுரோகணி, சந்தனம், வால்மிளகு, மஞ்சள், இலவங்கப்பட்டை, சதகுப்பை, செவ்வியம், தக்கோலம், வெள்ளுள்ளி, திப்பிலிமூலம், புகையூரல், தேக்கு வகைக்குக் கால் மைபோல்

Koviloor Digital Library

அரைத்த பின்பு நான்கு நாள்கள் சிறுதீயாயெரித்து 5 நாள்கள் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கழஞ்சு உள்ளுக்கு பருகச் செய்து உடம்பில் பூசி நசியமிடத் தீரும்.

சீதசுரம், குளிர் காய்ச்சலுக்கு உட்கொள்ளும் எண்ணெய்.

வெருகிலைத்தண்டின்கிழங்கு, வில்வவேர், சாரணைவேர், சிற்றாமுட்டி, வேராமுட்டி, அமுக்கரா, விஷ்ணுகாந்தி வகைக்கு 1 பலம் இடித்துப் பதக்கு (16 படி) நீரில் பொட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்ததில் எண்ணெய் 1 படி சேர்த்து, பசுவின் பால், மோர் வகைக்கு 2 படி, மரமஞ்சள், அதிமதுரம், மஞ்சிட்டி, விலாமிச்சம் வேர், நன்னாரிவேர், அரைத்த சந்தனம், வில்வப்பழம், கோட்டம் திரிகடுகு, திரிபலை, தேவதாரம், அகில், சந்தனம், வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு மேலுக்கும் பூசி நசியமிடத் தீரும்.

சுரங்கட்கு முடித் தைலம்.

1. வெருகங்கிழங்குசமூலம் வகைக்கு 10 பலம், குருந்தொட்டி, அமுக்கறா, சீந்தில், சத்திச்சாரணை இவைகளின்வேர் வகைக்கு 3 பலம் இடித்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் பால் வெள்ளாட்டுப் பால், நல்லெண்ணெய், வகைக்கு 2 படி கலந்து நன்னாரி, சீந்தில், சிறுகீரை, சிற்றாமுட்டி, வில்வவேர், அமுக்கார இவைகளின்வேர் சுக்கு, இலவங்கம், இந்துப்பு, அரத்தை, தேசாவரம்,மஞ்சள், திப்பிலி, சந்தனம், விலாமிச்சம்வேர், மிளகு, இலவங்கப்பத்திரி, வகைக்கு 1 கழஞ்சு வெள்ளாட்டுப் பாலில் அரைத்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒன்றுவிட்டு ஒரு நாள் தலைமுழுக்குச் செய்தவர விடாச்சுரம், வ ாதசுரம், பித்த சுரம், மூன்றாம் மாறல், இரண்டும் ஒன்றைவிட்டு மாறல் காயச்சலும் தீரும். (சமூலம் என்பது பஞ்சாங்கம் என்றுணர்க.)

2. வெருகங்கிழங்கு 64 பலம், அமுக்கறா வேர் 30 பலம், சீந்தில், சிற்றாமுட்டி வகைக்கு 10 பலம் இவைகளை இடித்து நான்கு மரக்கால் காடித் தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவிட்டு வடித்து இதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, சாதிக்காய், திப்பிலி சிறுதேக்கு, தேவதாரம், முத்தக்காசு, கோட்டம், அதிமதுரம், சிறுநாக சடாமாஞ்சில், சந்தனம், விலாமிச்சம் வேர், சன்னலவங்கப்பட்டை தாளிசப்பத்திரி, சீரகம் வகைக்கு கால் பலம் இவைகளைப் பசுவின் பால் அரைத்துப்போட்டு காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர என்புக் காய்ச்சல் மேகக் காய்ச்சல், பாண்டுக் காய்ச்சல் முதலியவை தீரும்.

3. வெருகங்கிழங்கு 20 வராகன் எடை, அதன் தண்டு 10 வராகன எடை இவைகளை இடித்து 5 படி காடித்தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்த நல்லெண்ணெய் அரைப்படி கலந்து கொம்பரக்கு, சதகுப்பை, சிற்றரத்தை வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காய்ச்சல் வருமுன் தைலத்தைத் தேய்த்துக் காய்ச்சல்

Koviloor Digital Library

வந்துவிட்டபின் அரைப்பிட்டு வெந்நீரில் தலைமுழுகத் தீரும். உப்பு, புளி, புகையிலை தள்ளவும்.

4. புளியின் இலைச்சாறும். நல்லெண்ணெயும், ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

5. கொம்பரக்கு 26 பலம் அமுக்கரா, வெண்தோன்றி, சிற்றாமுட்டி, நன்னாரி, வில்வம், வெருகங்கிழங்கு, விஷ்ணுகாந்தி, சீந்தில், செந்தொட்டி, தூதுளம் வகைக்கு 4 பலம் நசுக்கி தூணி (4 மரக்கால்) நீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 4 படி கலந்து முத்தக்காசு, சதகுப்பை, அரத்தை, சந்தனம், கடுகுரோகணி, மஞ்சள், பெருங்குரும்பை, தேவதாரம், சிறுநாகப்பூ, மஞ்சிட்டி, அதிமதூரம், கோட்டம், நன்னாரிவேர், விலாமிச்சம் வேர், சித்திரமூலம், கொன்றைப்பட்டை, முக்காவேளை வேர் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சுரம், வறட்சி தீரும்.

6. நல்லெண்ணெய், சீராசெங்கழுநீர்ச்சாறு வகைக்கு 3 படி ஒன்றாய்க்கலந்து அதில் அதி மதூரம், கோட்டம், இலவங்கப்பட்டை, ஏலம் மஞ்சிட்டி, கடுகுரோகணி, சண்பகப்பூ, சந்தனம், விலாமிச்சம் வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, முத்தக்காசு, தாமரைவளையம் கத்தூரி மஞ்சள், செங்கழுநீர்க்கிழங்கு, நன்னாரிவேர், வெட்டிவேர் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர விடாச்சுரம், வெப்பு, காசம் சண்டிக் காய்ச்சல் முதலான சகலசுரமும் தீரும்.

7. வெருகங்கிழங்கு, சிற்றாமுட்டிவேர், அசுவகெந்திக்கிழங்கு சுக்கு, வில்வவேர், செங்கழுநீர்க் கிழங்கு, தேவதாரம், சந்தனக் கட்டை, விஷ்ணுகரந்தைவேர் அதி மதுரம் வகைக்கு பலம் 10, கொம்பரக்கு பஞ்சலவணம், கொடுவேலி வேர் சிறுதேக்கு, நாவிக்கிழங்கு, மருட்கிழங்கு, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், கடல்நுரை, ஓமம், குரோசானி, சாதிப்பத்திரி, புளியம்பொருக்கு (விளாம்புறணி) இலுப்பைப் பொருக்கு (இலுப்பைப்புறணி), சிறுநாகப்பூ, சாதிக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிற்றாமணக்குவேர், செவ்வள்ளிக்கொடி, புளியமடற்கிழங்கு வகைக்கு காலபலம் இவைலெல்லாம் இடித்து பாண்டத்திலிட்டு, நல்லெண்ணெய் 5 படி கலந்து பதமாய்க் காய்ச்சி வடித்து அதில் பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, கத்தூரி, புனுகுசட்டம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டு வைத்துக்கொண்டு உள்ளுக்கு ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுத் தலை முழுகியும்வர என்பு, சீதம் சுடம் முதலிய சகல காய்ச்சல்களும் தீரும்.

8. பொற்சீந்தில் 20 பலம் இடித்து இருபது படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்ற வைத்து அதில் நல்லெண்ணெய், பசுவின்பால், வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து வெருகங்கிழங்கு, அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 1 பலம் அரைத்தப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவர சன்னி, வாதசுரம்; மாறல்சுரம்; நச்சுச்சுரம் முதலான காய்ச்சல்கள் தீரும்.

Koviloor Digital Library

உட்காய்ச்சல் கால் எரிவிற்குத் தைலம்.

கற்றாழஞ்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, முசுமுசுக்கன் சாறு, பசுவின் பால் வகைக்கு 1/8 படி, நல்லெண்ணெய் 2 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதூரம் 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தீரும்.

சுரத்திற்கு மேல்பூச்சுத் தைலம்

1. அமுக்கறா, சிற்றாமுட்டி, பேராமுட்டி இவைகளின் வேர்த் தூள், கொம்பரக்குத் தூள் வகைக்கு 1 படி, பதக்குநீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்ற வைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய், நல்லமோர் வகைக்கு 1 படி, நன்னாரி, முகிழ், அரத்தை, கோட்டம், அதிமதூரம், சதகுப்பை கடுகுகீராகணி, கச்சோலம், மதவதாரம், மஞ்சண், மரமஞ்சள், கஸ்தாரி மஞ்சள், பெருங்குரும்பை அமுக்கிரா மஞ்சிட்டி சந்தனம், சிறுநாகப்பூ, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டு மூன்று நாள்கள் சிறுதீயாக எரித்து நான்காம் நாள் காய்ச்சி இறுத்து உடம்பில் தேய்த்துப் பதம் இட்டுக் காது, மூக்கில் நசியம் செய்யத் தீராத காய்ச்சல் நோய்கள் எல்லாம் தீரும். உடல் முழுதும் பூசிக்கொள்ளவும். இச்சாபத்தியம். புளியை சுட்டுக் குறைவாகச் சேர்த்துக் கொள்ளவும்.

2. ஆடாதோடைச் சாறு, நல்லெண்ணெய், வகைக்கு 1 படி கலந்ததில் அதிமதூரம், வேப்பம் பட்டை, விராலித்தோல், வேப்பம் வித்து, பிராய் வேர், ஊமத்தம் வேர், குன்றி வேர், மேனி வேர், இந்துப்பு ஆகியவைகள் வகைக்கு 1 வராகன் எடை இவற்றை ஆடாதோடையிலைச் சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூச, சன்னி சுரம் தீரும்.

3. பசுவின் மோர் 4 படி, நல்லெண்ணெய் 1 படி, சிற்றாமுட்டி வேர்த்தோல், கோட்டம், சுக்கு பொன்மெழுகு, முசுக்கட்டை வேர், அதிமதூரம், இந்துப்பு, மஞ்சள், தேவதாரம், நன்னாரி, மாகாளிக் கிழங்கு, பெருங்குரும்பை, தக்கோலம், சீந்தில் கொடி, விலாமிச்சம் வேர், சிறுகீரை வேர், தகரம், தக்கோலம், ஏலம், சாதிக்காய், இலவங்கப் பத்திரி, சாரணை வேர், திப்பிலி, மூலம் வகைக்கு 1 வராகன் எடை மோரில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்துக் கழுத்திற்குக்கீழ் உடம்பில் தேய்க்கக் குளிர்க் காய்ச்சல், பித்தருட்சை, தாபசுரம், மந்தருட்சை, நச்சுச் சுரம் முதலிய பல சுரங்கள் தீரும்.

4. சீராசெங்கழுநீர்ச் சாறு, சீந்தில் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய், தேவதாரம், மதனகாமப்பூ, கோட்டம், சந்தனம், மஞ்சிட்டி, சதகுப்பை, வெட்டிவேர், காட்டாத்திப்பூ, சடாமாஞ்சில், அகில், கொம்பரக்கு, விலாமிச்சம் வேர், தாமரைக் கிழங்கு, அதன்அரும்பு, செஞ்சந்தனம், ஏலம், நன்னாரி, கச்சோலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, காக்கணான்வேர்ப்பட்டை, நெய்தற்கிழங்கு, சிற்றாமுட்டி, கடுகுரோகணி, பெருங்குரும்பை, அரத்தை, திப்பிலி, வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப்

Koviloor Digital Library

பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்க்கச் சகலசுரமும், மேல் எரிவும், தாகமும் தீரும்.

5. சீராசெங்கழுநீர்ச் சாறு 1 படி, பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து வெட்டிவேர், கடுகுரோகணி, சந்தனம், அதிமதுரம் வகைக்கு 3 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குக் கரண்டி நிறையக் கொடுத்து மேலிலும் பூசிவரக் கொடிய சுரம், நச்சுச் சுரம், நாட்பட்ட சுரம், வெட்டை ஆகியவை தீரும்.

6. மோர் 4 படி, பழங்காடி 1 படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்ததில் சிற்றாமுட்டி வேர் 4 பலம் இடித்து நான்குபடி தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்து விட்டு சத்திச்சாரணை, நன்னாரி, குருந்தொட்டி, பொன்முசுட்டை, முத்தக்காசு, சீந்தில், விலாமிச்சம் வேர், சிறுகீரை வேர், அமுக்கறா வேர், கோட்டம், மஞ்சள், இந்துப்பு, அதிமதுரம், சுக்கு, செவ்வள்ளிக் கொடி, பொன்மெழுகு, கச்சோலம், ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சிற்றரத்தை, கிராம்பு, தேவதாரம், திப்பிலிமூலம், முந்திரிப்பழம், கடல்நுரை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை மோரில் அரைத்துப் போட்டு மூன்று நாள் வரை சிறு கொதிப்பாய் வைத்து நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்த்து அரைக்கட்டி சென்றபின் தலையில் தேய்த்து சீயக்காய் அரைப்பிட்டுத் தண்ணீரில் தலைமுழுக்குச் செய்ய, நச்சுக் காய்ச்சல், மாறல் சுரம், வாத சுரம், வெட்டை, பித்தம், காந்தல், என்பு சுரம் முதலான பற்பல காய்ச்சலும் தீரும்.

7. குறுந்தொட்டி வேர் 1 பலம் இடித்து ஐந்து படி நீரில் போட்டு வற்றவைத்தக் குடிநீர், 12½ பலம் கொம்பரக்கு கிழிகட்டி மூன்றுபடி நீரில் போட்டு ½ படியாக வற்றவைத்தக் குடிநீர் அமுக்குரா வேர் 5 பலம் இடித்து, மூன்றுபடி நீரில் போட்டு வற்ற வைத்தக் குடிநீர் ½ படி; 5 பலம் அமுக்குரா வேரை இடித்து, மூன்று படி நீரில் போட்டு வற்றவைத்த குடிநீர் ½ படி, பழைய மோர், நல்லெண்ணெய், வகைக்கு 1 படி இவைகளை எல்லாம் ஒன்றாய்க் கலந்து அதில் முள்ளி வேர், விலாமிச்சம் வேர், சீந்தில் கொடி, பொன்முசுட்டைவேர், குருந்தொட்டிவேர், நன்னாரிவேர், முருங்கைப் பட்டை, சத்திச்சாரணை வேர், சிறுகீரை வேர், கோட்டம், அதிமதுரம், சுக்கு இந்துப்பு மஞ்சள், கச்சோலம், ஏலம், இலவங்கம், சிற்றரத்தை, திப்பிலிமூலம், சாதிக்காய், செவ்வள்ளிக் கொடி, தேவதாரம், இலவங்கப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு மோரில் அரைத்துப் போட்டு மூன்று நாள் சிறு தீயாய் எரித்து நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து நான்கு நாளைக்கு ஒரு முறை தலைமுழுகிவர பல சுரங்களும் வெட்டைச்சூடும் தீரும்.

8. கடல்நுரை, மஞ்சள், கோட்டம், சந்தனம், பொன்மெழுகு, விலாமிச்சம் வேர், சதகுப்பை, முத்தக்காசு, மஞ்சிட்டி, இலுப்பைப்பூ, கடுகுரோகணி, கம்பிப்பிசின், பெருங்குரும்பை, வெட்டி வேர், இந்துப்பு, சுக்கு வகைக்கு 1 கழஞ்சு மோரில் அரைத்து, ஒரு படி நல்லெண்ணெயில் போட்டு ஆறு படி தண்ணீரை விட்டுக் காய்ச்சி உடம்பில் தேய்க்கச் சுரம், காந்தல், வாய்நீர் ஊறல், வறட்சி தீரும்.

Koviloor Digital Library

9. வெருகங்கிழங்கு, தண்டு, இலை, சமூலம் 1 துலாம் (200 பலம்), சிற்றாமுட்டி, பேராமுட்டி, சீந்தில், வில்வவேர், அமுக்கராவேர், விஷ்ணுகரந்தை, சாரணைவேர் வகைக்கு 5 பலம் இவைகளை இடித்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டுக் குறுணியாய் வற்றவிட்டு, வடித்து அதில் குறுணி (8 படி), நல்லெண்ணெய் தயிர்த்தண்ணீர் 4 படி கூடவிட்டு வெட்டிவேர், சந்தனம், தேவதாரம், முத்தக்காசு, குங்கிலியம், பிராயவேர், குக்கில், மஞ்சிட்டி, திரிகடுகு, வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச சீதச்சுரம், பூதக்காய்ச்சல், ருட்சை நீங்கும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம், புளி சுட்டுக் குறை வாய்க் கூட்டவும்.

காய்ச்சலுக்கு நசியம் (மூக்குறிஞ்சல்)

1. குளிர்க் காய்ச்சல் அடிக்கும்போது சிறு தும்பையிலையையும் மிளகையும் ஒன்றாய்க் சிதைத்து மூக்கில் நசியம் செய்ய நீங்கும்.

2. திப்பிலியையும் வேலிப்பருத்தி இலையையும் ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியமிட்டாலும் அல்லது இந்துப்பூ, உள்ளி, கொம்புப் பாகலிலை இவைகளை ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியமிட்டாலும் காய்ச்சல், தோடம் நீங்கும்.

காய்ச்சல் முதலியவற்றிற்கு ஏலாதி மாத்திரை.

ஏலம் கிராம்பு, உலர்ந்தஇஞ்சி, திப்பிலி, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், தாளிசப்பத்திரி, அதிமதுரம், கோட்டம், கோட்டம், விலாமிச்சம்வேர், மலாயா சந்தனம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கோரோசனை, இலுப்பைப்பூ, ஓரிலைத்தாமரைவேர், வகைக்கு 1 வராகன் எடை இவற்றிற்குச் சமமாய் கடுகு ரோகணி கூட்டி செவ்விள நீரால் இரண்டு சாமம் அரைத்துப் பருத்தி விதை அளவு உருண்டை செய்து உட்காய்ச்சல்; அதிசாரக் காய்ச்சல், ஆமக்காய்ச்சல்; வெப்பக்காய்ச்சல்; இவைகளுக்குத் தாய்ப் பாலிலும் தோடக் காய்ச்சலுக்குக் குதிரைவாலிச் சாற்றிலும் அல்லது குடிநீரிலும் கொடுக்க நோய் தீரும். காசம் (இருமல்); மூச்சுகாசம்; இரத்தக் காசத்திற்குத் தேனிலும் கொடுக்க நோய் தீரும்.

உட்டிணக் காய்ச்சலுக்குச் சீரக மாத்திரை.

நற்சீரகம், பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம், செங்கழுநீர்க் கிழங்கு, திரிகடுகு, கோட்டம், அதிமதுரம், சந்தனம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், கல் நார் இரலம்பு கடுகுரோகணி சாத்திரபேதி முத்தக்காசு மல்லி சூடன் வகைக்கு 2 கழஞ்சு இளநீரில் அரைத்து தூதுளங்காய்ப்போல் உருட்டிக் கொண்டு தாய்ப் பாலில் உரைத்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

காய்ச்சலுக்குக் குங்குமக் குளிகை.

குங்குமப்பூ 1 பலம் திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், கிராம்பு, ஏலம், தேவதாரம் சந்தனம், கடுகுரோகணி வகைக்கு அரைப் பலம் ஆறு சாமம் எலுமிச்சம்பழச் சாற்றிலும், நான்கு சாமம் இஞ்சிச் சாற்றிலும், இரண்டு

Koviloor Digital Library

சாமம் கண்டங்கத்திரிப் பழச்சாற்றிலும், ஆட்டி, சிறுபயறு அளவு உருண்டை செய்துகொண்டு துணைமருந்துகளிலிடக் குளிர்க் காய்ச்சல் முதலான சன்னிக் காயச்சல் தீரும்.

காய்ச்சலுக்குக் கோரோசனைக் குளிகை.

கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், இரசச்செந்தூரம், ரசகருப்பூரம், ஏலம், அப்பிரகச் செந்தூரம், கிராம்பு, கோட்டம், சாதிக்காய், அக்கிராகாரம் வகைக்கு 3 கழஞ்சு, சந்தனக் குடிநீரில் 4 சாமமும், சண்பகப்பூ குடிநீரில் 2 சாமமும், குங்குமப்பூ குடிநீரில் 2 சாமமும் அரைத்து குன்றிமணிபோல் உருண்டை செய்து நிழலில் உலர்த்தி தாய்ப்பாலில் இடத் தொண்டைக்கட்டு; சிலேத்துமம் 96, சன்னி 13, மண்டைச்சூலை; நீர்க்குற்றம்; மயக்கம்; கபக்காயச்சல் வலிப்புகள் நீங்கும்.

காய்ச்சலுக்குச் சஞ்சீவி மாத்திரை.

இரசச்செந்தூரம், இலிங்கம், அரிதாரம், வீரம், கெந்தி, ரசபற்பம், நாவிக்கிழங்கு, கிராம்பு, இலவங்கப் பத்திரி, ஏலம், திரிகடுகு, திரிபலை வாளம் வகைக்கு அரைப் பலம் நிம்பக்காய்ச் சாற்றில் ஒரு சாமம் தாய்ப்பாலில் இரண்டு சாமம் குமரிச் சாற்றில் நான்கு சாமம், கொன்றைப்பூச் சாற்றில் நான்கு சாமம், ஆட்டிக் குன்றி மணி அளவு உருண்டை செய்து தாய்ப்பாலிலாவது, தேனிலாவது கொடுக்க சன்னி தோடக் காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்கு இரசகற்பூர மாத்திரை.

தூய்மை செய்த இரசகற்பூரம், கால் பலம், வாளம் 1 பலம் அழிஞ்சிவேர்ப் பட்டை, கொடிவேலிவேர்ப் பட்டை வகைக்கு 1 பலம், கையாந்தகரைச் சாற்றிலும், தாய்ப் பாலிலும் வகைக்கு 2 சாமம் ஆட்டித் துவரை அளவு மாத்திரை செய்துகொண்டு தேனில் உட்கொள்ள சகல காய்ச்சலும் தீரும்.

காய்ச்சலுக்கு இரசபற்ப மாத்திரை.

1. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், இந்துப்பு, கடுகுரோகணி, இரசபற்பம் வகைக்கு 1 கழஞ்சு, வாளம் 7 கழஞ்சி, இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து மிளகளவு உருண்டை செய்து ஒரு உருண்டையை துணை மருந்திலிட கழிச்சலாகிக் குளிர்க் காய்ச்சல் நீங்கும். கழிச்சல் அதிகமானால் குளிர்ந்தமணலும் கொள்ளவும். மீறினால் பாலில் அன்னமும் கொள்ள தீரும்.

2. வெள்ளைக்காக்கணான் விதை, திரிபலை, மிளகு, திப்பிலி, இரசம், கெந்தகம், வாய்விளங்கம், இவைகளைக் கரிப்பான் சாற்றில் ஒரு நாள் அரைத்து சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து இஞ்சிச் சாற்றில் இடக் காய்ச்சல் தீரும்.

3. கெந்தகமும், மிதிபாகலிலையும், ஒ: எடையாய் அரைத்து பாசிப்பயறு அளவு உருண்டை செய்து கால் பலம் மிளகை உடைத்துப் போட்டுக்

Koviloor Digital Library

குடிநீர் செய்து அதில் மேற்படி மாத்திரையை உரைத்துக் கொடுக்க குளிர்க் காய்ச்சல் தீரும்.

காய்ச்சலுக்கு இலிங்க மாத்திரை.

1. இலிங்கம், 1 கழஞ்சு, திப்பிலி 2 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் பயறு அளவு உருண்டை செய்துகொண்டு சுக்கு கஷாயத்திலிட சகல காய்ச்சலும் தீரும்.

2. சாதிலிங்கம், தாளகம், மனோசிலை வகைக்கு 1 வராகன் எடை, காட்டுக்கருணைக் கிழங்கிலாவது, கறிக்கருணைக் கிழங்கிலாவது பொதிந்து சீலைமண் செய்து இரண்டு படி உமிக்குள் புடம் போட்டு வேலிப்பருத்திச் சாற்றில் அரைத்துப் பாசிப்பயறு அளவு உருண்டை செய்து சுக்குக் குடிநீரில் ஒரு உருண்டை வீதம் ஐந்து வேளை உப்பு, புளி, தள்ளி, 9 நாள்கள் அல்லது அல்லது 7–ம் நாளில் தலைமுழுக்குச் செய்து உப்பு வறுத்துக் கலந்து 10–ம் நாள் தைலத் தலைமுழுக்குச் செய்து புளி கூட்டிக் கொள்ளவும். மருந்தின்வீறு அதிகரித்து நின்றால் சிறுகீரைவேரும், மிளகும் ஓர் எடையாய்க் குடிநீர் செய்து மூன்று வேளை கொடுக்க மாறும்.

அருத்த நாரீசுவரம்.

அப்பிரகம், நாகம், வெங்காரம், தாளகம், சாதிலிங்கம், கல்நார், பேரீச்சம்பழம் இவைகளை ஓர் எடையாய்க் கொம்புப்பாகல் இலைச்சாற்றில் ஒருநாள் ஆட்டி வில்லை தட்டியுலர்த்திக்குகையிலிட்டு சில்லுப்போட்டு மூடிச் சீலைமண்செய்து மணல்மறைவில் புடமிட்டுக் கள்ளிப்பாலிலும், எருக்கம்பாலிலும் அரைத்து உலர்த்திப் பொடித்துச் சிமிழிலடைத்துக்கொண்டு பணவெடை பற்பம் சுடு நீரில் கொடுக்க வலதுபுறத்துச் சுரம் விடும். குளிர்ந்த தண்ணீரில் கொடுக்க இடதுபுறத்துச் சுரம் விடும்.

தாளக மாத்திரை

தாளகத்தைச் சிறு துண்டுகளாய் வெட்டி சுண்ணாம்புக்குள் பத்துமுறை வைத்துத் தேசிநீர் (கழுதை மூத்திரம்) விட்டு நீற்றிய பின் துணியில் முடித்துச் சுண்ணாம்புத் தண்ணீருக்குள் தொங்க வைத்து இரண்டு சாமம் எரித்துத் தூய்மைசெய்த தாளகம் 3 வராகன் எடை இவைகளைத் தாய்ப்பாலில் இரண்டு சாமம் அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டையாக இரண்டுவேளை வெல்லத்தில் கொடுத்து ஆறு நாள் உப்பு, புளி தள்ளிப்பத்தியமாய் இருந்து எட்டாம் நாள் ஓமம், தேய்த்துத் தலைமுழுக்கு செய்து உப்பை வறுத்தக் கூட்டவும். 94 வகையான சுரங்களும் தீரும்.

தூய்மைசெய்த தாளகம், நேர்வாளம், காவிக்கல் வகைக்கு 1 பலம், இதை கவிழ்தும்பை, நல்லதும்பை, பெருந்தும்பை, இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு சாமம் ஆட்டி மிளகுபோல் உருண்டை செய்துகொண்டு, குளிர்சுரததிற்கு; அரைப்படி மோரை முறித்து அந்தத் தெளிவுத் தண்ணீரிலும்,

Koviloor Digital Library

அதிசார சுரத்திற்கு; சுக்குக் குடிநீரிலும், பழஞ்சுரத்திற்கு; பேய்ப்புடல், சுக்கு சேர்ந்த குடிநீரிலும், சிலேத்தும சுர இருமலுக்குத் தேனும், திப்பிலி பொடியும் சேர்த்து, அதிலும் தாபசுரத்திற்கு; வில்வவேறும், சுக்கும் சேர்ந்த குடிநீரிலும், அத்திசுரத்திற்கு; பசுவின் நெய்யிலும், வாதசுரத்திற்கு; வாதமடக்கிக் குடிநீரிலும் ஒரு குளிகை கொடுக்கத் தீரும். மூன்று நாளுக்கு உப்பு, புளி தள்ளவும். கழிச்சல் அதிகரித்தால் மா, ஆல், இலுப்பை இவைகளின் கொழுந்தை வகைக்கு ஒரு பிடி அரிந்து இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால்படியாய்க் காய்ச்சிக் கொடுக்க இதில் கண்ட கழிச்சல் நோய் நீங்கும்.

தாளகம், கெந்தி, இரசம், கருநாபிக்கிழங்கு, வெண்காரம், திப்பிலி, வாளம், சுக்கு, கடுக்காய் நெல்லிமுள்ளி, வெள்ளைப் பூண்டு இவைகளைக் கையாந்தகரைச் சாற்றில் 4 சாமம் அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து ஒரு நாளைக்கு மூன்று வேளை மூன்று உருண்டை பசு நெய்யில் உட்கொள்ள சுரம், காசம் நீங்கும்.

மேற்படி தாளகம், கருநாவிக்கிழங்கு, காந்தம், கடுகுரோகணி, இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து கற்றாழைமடல் சாற்றிலாவது தாய்ப் பாலிலாவது ஒரு உருண்டை உட்கொள்ள நான்கு நாழிகையில் சுரம் நீங்கும்.

சுரக் கோடாலி.

வெள்ளைப்பாடாணம், கௌரிப்பாடாணம், சூதம் வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் கிழி கட்டி மிளகுக் குடிநீரில் 2 சாமம் எரித்து ஊமத்தன் சாற்றிலும், கொம்புபாகல் சாற்றிலும் வகைக்கு இரண்டு சாமம் அரைத்து உளுந்து எடைக்குக் குளிகைக்கட்டி இளநீர், வெந்நீர், காடியில் போட்டு வேளைக்கு ஒரு உருண்டை வீதம் 9 வேளை உட்கொள்ளச் சகல சுரமும் நீங்கும். 9 நாள்கள் வரையிலும் புளி தள்ளி உப்பு வறுத்துக் கூட்டவும். 8–ம் நாளில் தலைக்குத் தண்ணீர் விட்டுப் புளி சுட்டுச் சேர்த்துக் கொள்ளவும்.

நான்காம் முறை சுரத்திற்கு மனோசிலை மாத்திரை.

மனோசிலை, மிளகு, திப்பிலிமூலம், வகைக்கு 1 பலம், துளசிச்சாறு, வெள்ளாட்டுக்கோமியம் இவைகளால் வகைக்கு ஒரு சாமம் அரைத்து மிளகுபோல் உருண்டை செய்து சுரத்திற்கு வெந்நீரிலும், சன்னிக்குக் குப்பைமேனிச் சாற்றிலும், வாயுவுக்கும், கடுப்புக்கும் குளிர்ந்த தண்ணீரிலும் உட்கொள்ள நோய் தீரும்.

சுரத்திற்குப் பச்சைக் கற்பூர உருண்டை.

இரசபற்பம், கெந்தகம், பச்சைக்கற்பூரம், இலவங்கம், சாதிக்காய், நேர்வாளம், இவைகளை ஓர் எடையாய்க் கற்றாழம்பால் விட்டு அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து ஒரு உருண்டையைச் சர்க்கரையில் கலந்து சாப்பிடச் சகல சுரமும் உடனே நீங்கும்.

Koviloor Digital Library

இரண்டாம் முறை, மூன்றாம் முறை, குளிர்ச் சுரம் முதலான சகல சுரத்திற்கும் கண்மை (அஞ்சனம்)

இரண்டு கழஞ்சு சீந்தில்பூவை, எலுமிச்சம்பழச் சாற்றினால் மைபோல் அரைத்து மண்வெட்டி பின்புறத்தில் அப்பி வைத்து விளக்கில் நல்லெண்ணெய் விட்டு தீபமேற்றி மைப்பற்ற வைத்து அதை வெங்கலத் தகட்டின் புறத்தில் இட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டு இரும்புக் குழவியால் களிம்புபோல் அரைத்துக் கொம்புச் சிமிழியில் அடைத்துக் கொண்டு பணவெடை கண்ணில் தீட்டத் தீரும்.

சுரம், குளிர்ச்சுரம், வயிற்றுவலி, பொருமல் முதலான நோய்களுக்குக் கழிச்சல் மாத்திரை.

திரிகடுகு, கடுக்காய், கடுகுரோகணி, இந்துப்பு, இரசபறபம் வகைக்கு ஒரு கழஞ்சு, தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 7 கழஞ்சு, எலுமிச்சம்பழச் சாற்றால் மைபோல் ஆட்டி சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து வெந்நீரில் உட்கொள்ளவும். கழிச்சல் அதிகரித்தால் சுரநோயாளர்களுக்கு வசம்பைச் சுட்டு தேனில் மத்தித்துக் கொடுக்கவும். மற்ற வியாதிக்காரார்களுக்குப் பாலும் அன்னமும் கொடுக்க கழிச்சல் நிற்கும்.

சுரநோயின் நட்சத்திரப் பலனறிய விவரம்.

ஆதிரையும் திங்கட்கிழமையும் கூடின நாளினாவது; திருவோணமும் அருக்கனும் (ஞாயிறு) கூடின தினத்திலாவது சனியும் கார்த்திகையும் கூடின தினத்திலாவது, விசாகமும் வெள்ளியும் கூடின தினத்திலாவது, ரேவதியும் புதனும் கூடிய தினத்திலாவது, செவ்வாயும் சித்திரையும் சேர்ந்த தினத்திலாவது சுரம் கண்டால் இறப்பு நேருமாம்.

சுரநோய்ப் படலம் முற்றிற்று.

சன்னிநோய்ப் படலம்.

அதாவது சீதளநோயை வருவித்தலாம்.

சன்னி (முக்குற்றம்) பதின்மூன்றின் பெயர்கள்.

கூறுகிறேன் தாந்திரிகன் அந்த கன்தான்
　　குணமான சீதாங்கன் உருத்தி ராங்கன்
தேறுவேன் சித்தவிப் பிரமை கண்டன்
　　தெளிவான கண்டகுச்சன் அபினி யாசன்
மீறுவேன் விக்கநாதன் பொகுக்க நேத்திரன்
　　மிதமான பீர்த்தட்டி முருக்கி தாபம்
ஆறுவேன் பிரலாப சன்னிபதின் மூன்றும்
　　அப்பனே அகத்தியனா ரருளி னாரே.

தாந்திரிகன், அந்தகன், சீதாங்கம், உருத்திராங்கம், சித்தவிப்பிரமை, கண்டகுச்சம், அபினியாசம், விக்கநாதம், பொக்கநேத்திரம், பீர்த்தட்டி, முருக்கிதாதம், பிரலாபம் முதலான சன்னிகள் உடலில் உற்பத்தியாகிறது.

Koviloor Digital Library

நலமாகா சன்னிகள்.

மேற்படி சன்னிகள் அந்தகன், சீதாங்கம், கண்டகுச்சம், பொக்க நேத்திரம், அபினியாசம், உருத்திராங்கம், பீர்த்தட்டி இவைகளை அசாத்தியமென்று சொல்லப்பட்டியிருக்கிறது.

அந்தக சன்னியின் இயல்பு.

அகோரமாய்ச் சுரங்காயும்; மெய்விரைக்கும்; வாயிநீர்வடியும்; விக்கல், கக்கல், இருமல், தாகம், பிரமை; பிரதாபம், வீக்கம்; நடுக்கல் மாராட்டங்காணும்; தலைநடுங்கும்; சிமிட்டும்; வயிறு எரியும், பிதற்றும், பல சிந்தை உண்டாகும்; பத்துத் தினத்தில் கொல்லும்.

மருந்துவம்:– கொடுவேலி வேர் ½ பலம், வாய்விளங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு வகைக்கு ½ பலம், இரண்டுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய்க் குடிநீர் செய்து மூன்று பொழுது கொடுக்க அந்தகச் சன்னி முதலான 13 சன்னிகளும் நீங்கும்.

2. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், கொத்தமல்லி, வாய்விளங்கம், குருந்தொட்டிவேர், முத்தக்காசு, தூதுவளை இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து இரண்டு படித்தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்துக்கொண்டு அடிக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால் தாகம், கக்கல், விக்கல் நீங்கும்.

3. நெரிஞ்சி, நொச்சி, சித்திரமூலம், சுக்கு, பேய்ப்புடல், மிளகு, திப்பிலிமூலம், செவ்வியம் வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

சீதாங்க சன்னியின் இயல்பு.

உடல் நொந்து குளிரும்; நடுங்கும், வியர்க்கும், வயிறுபொருமி இரைந்து கழியும்; தாகம், பிரதாபம், விக்கல், கக்கல், அயர்வு, சோபம், மூர்ச்சை, உண்டாகும்; வலிமை கெடும்; குரல் கம்மும்; இருமும், இளைக்கும், பெருமூச்சுக்காணும்; எங்கும் நெஞ்சில் கபம் அடைக்கும்; எழுந்து விழுந்து தள்ளாடும். 15 நாட்களில் இறப்பு உண்டாகும்.

மருந்துவம்:– திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், மிளகு, சுக்கு, இலவம் வேர், கடுகுரோகணி, அவரிவேர், பற்படாகம், சிறுதேக்கு, பேய்ப்புடல் வகைக்குக் கால்பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்தக் கொடுக்க நீங்கும்.

2. நன்னாரிவேர், வில்வவேர், முத்தக்காசு, கடலழிஞ்சில் பட்டை, பேய்ப்புடல், செங்கழுநீர்க் கிழங்கு, பற்படாகம், பேராமுட்டி, சிறுதேக்கு, செவ்வியம் வகைக்கு 1 பலம் நான்கு படித்தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து ஒரு வேளைக்கு ஆழாக்கு வீதம் 9 பொழுது கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

3. ஏலம், இலவங்கம், சந்தனம், பூசணித்தண்டு, கீரைத்தண்டு, தூதுவளைவேர், சுக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில்போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக்கொடுக்க நீங்கும்.

கண்டகுச்ச சன்னியின் இயல்பு.

சுரம் கொடூரமாய்க் காயும்; உடல் புண் போலுளையும்; நடுங்கும், தினவெடுக்கும்; தலை வலிக்கும்; நித்திரை கொள்ளும்; தொண்டை, நாவு உலர்ந்து முள்ளுண்டாகிப் புண்ணாகும்; பல்லீற்றில் இரத்தம் வடியும்; வயிறு கழிந்து பொருமும்; பொய்பிதற்றும்; தாபசோபம், பிரதாபம், கக்கல், விக்கல் சுரம், மூச்சு, இளைப்பும் காணும்; கண்ணுங் காதும் கம்மும் கபமும் எழுந்து அழுது களைத்து விழும். 13 நாளில் கொல்லும்.

மருத்துவம்:- திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, கடுகுரோகணி, ஆடாதோடைவேர், மஞ்சள், மரமஞ்சள், இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

2. கடுக்காய்ப்பூ, நாயுருவிவேர், முத்தக்காசு, நிலவேம்பு, சிறுதேக்கு, மஞ்சள், கடுகுரோகணி, கோட்டம், கொடிவேலி, செவ்வியம், திரிகடுகு, பெருங்குமிழ், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், தேவதாரம், பிரமி, வசம்பு இவைகளை முன்போல் குடிநீர் செய்து கொடுத்து திப்பிலியும், நாயுருவியிலையும் ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் நசியமிடத் தீரும்.

3. நொச்சியிலை, சந்தனம், பற்படாகம், கடுகுரோகணி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், மாசிப்பச்சை, நாராகரந்தை, பாவட்டை, நன்னாரி, கூவிளை, முன்னை இவைகளை ஒரு வேளைக்கு ½ பலம் வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

4. சித்திரமூலம், அவுரிவேர், இலவம்வேர், திப்பிலி, சுக்கு, குங்கிலியம், செவ்வியம், திப்பிலிமூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டு கொடுக்க நீங்கும்.

பொக்கநேத்திர சன்னியின் இயல்பு.

உடல்மிகக் காயும்; விழிபருத்துக் காணும்; அதில் பனித்துளி போல் நீர்வடியும்; பார்வை மயங்கும்; இரு காதும் அடைக்கும்; பொய் பிதற்றும்; பிரமை கொள்ளும்; விக்கல், தாகம், களைப்பு, உண்டாகும். 8 நாளில் கொன்றுவிடும்.

மருத்துவம்:- ஆடாதோடை, சந்தனம், தூதுவளை, சுக்கு, இலுப்பைப்பூ, சிற்றாமுட்டி, சிறுவழுதலை, முத்தக்காசு, பற்பாடகம், இவைகளை வகைக்கு ஒரு பலம் வீதம் இடித்து நான்கு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து ஒரு வேளைக்கு கால்படி வீதம் 6 பொழுதுகொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

2. பாதிரி, சுக்கு, எருக்கம் வேர், பற்படாகம், பேய்ப்புடல், சித்திரமூலம், திரிகடுகு, வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

அபினியாசச் சன்னியின் இயல்பு.

மூன்றுநாடியும் படபடத்து நிற்கும்; அகோரமாய்ச் சுரம் காயும்; முகம் தெளிவாயும், மினுமினுப்பாயும் இருக்கும்; உடல் நோகும்; நித்திரை, தாகம், வியர்வை, புலம்பல் காணும்; கன்னம் வீங்கும்; காதடைக்கும்; மூக்குக் கறுக்கும்; வாய் பேசாது; மேல் மூச்சுண்டாகும்; தொண்டை கட்டும்; 15 நாளில் கொல்லும்.

முருத்துவம்:– வாதமடக்கி, நிலவேம்பு, சுக்கு, வசம்பு, ஓமம், திப்பிலி, பேய்ப்புடல், பற்படாகம் இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து 1 படி நீரில் போட்டு ஆழாக்காய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

2. வாதமடக்கி வேர், கம்மந்திராய் வேர், தேசாவரம், கோட்டம், சடாமாஞ்சில், சீந்தில்கொடி, சிறுதேக்கு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர் இவைகளை முன்போல் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

உருத்திராங்கச் சன்னியின் இயல்பு.

சுரம் காயும்; உதடு உலரும்; நாக்கும் விரியும் கறுக்கும்; அதில் முள்ளு போலும் இருக்கும்; நெஞ்சில் கபம் கட்டி இருமும், இளைக்கும், தொண்டை வலிக்கும்; தேகம் நடுங்கும்; கழுத்தும், நெற்றியும் வியர்க்கும்; தாகம், விக்கல் காணும்; பிரமை கொள்ளும்; அபயமிடும்; சிரிப்புடன் போகம் செய்ய விரும்பும்; 10 நாள்களில் கொல்லும்.

மருத்துவம்:– இலந்தைஇலை, நன்னாரி, சீந்தில்தண்டு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பூநாகம், மூசுறுமுட்டை, ஆடாதோடை, முத்தக்காசு, சுக்கு, பேய்ப்புடல் இவைகளை முன்போல் குடிநீர் செய்துகொண்டு மேற்படி குடிநீரும், இஞ்சிச்சாறும் ஓரளவாய்க் கலந்து அதில் கொஞ்சம் தாய்ப்பாலில் திப்பிலிப் பொடியும் சேர்த்துக் கொடுக்கத் தீரும். இவைகளுக்கு இச்சாபத்தியம்.

பீர்த்தட்டிச் சன்னியின் இயல்பு.

அகோரமாய்ச் சுரங்காயும்; உடல் பசக்கும்; தலை சுற்றும்; மதுகுடித்தால்போல் பிதற்றும்; வயிறு கழியும்; உப்புசமாகும்; உதடு, நாக்கு, உலரும்; சுருக்கு விரியும்; இரத்தம் வரும்; முகத்தைப்பார்க்கும்; பெருமூச்சு இருமல், விக்கல், இளைப்பு, தாகம், கக்கலும் காணும்; 10 நாளில் கொல்லும்.

மருத்துவம்:– பூசணித்தண்டு, முத்தக்காசு, சுக்கு, கச்சந்திராய்வேர், தூதுளங்காய், கண்டங்கத்திரி, பற்பாடகம், மல்லி, சிறுவழுதலை இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டுக் குடிநீர் செய்து ஆறு வேளை கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

2. அழிஞ்சிவேர், சுக்கு, சித்திரமூலம், பேய்ப்புடல், மரமஞ்சள், சீந்தில்தண்டு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்க நீங்கும்.

தாந்திரிக சன்னியின் இயல்பு.

உடல் காயும்; பிதற்றும், தாகிக்கும், வாந்தியாகும்; உள் நாவு வறண்டு கறுத்திருக்கும்; வயிறு கழியும்; மிடறு தினவாகும்; காது கேளாது; கண்ணில் நீர் வடியும்; புகைத்து இருமும்; விழுந்தழுது சோரும்; 25 நாளில் தீரும்.

மருத்துவம்:- பிரமியிலை, முந்திரிகைப்பழம், முத்தக்காசு, வசம்பு, தண்ணீர்விட்டான் கிழங்கு, கொன்றைப்பட்டை, கடுக்காய், கடுகுரோகணி, நெல்லி, தான்றி, சிற்றாமுட்டி வேர்ப்பட்டை, பேய்ப்புடல், நிலவேம்பு, திரிகடுகு, கொடிவேலி, தேவதாரம் இவைகளை ஒரு படிக்குக் கால் பலம் வீதம் இடித்துப் படித்தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து ஆறு வேளை கொடுக்கத் தீரும்.

2. முத்தக்காசு, சந்தனம், உலர்ந்த இஞ்சி, பற்படாகம், விலாமிச்சு, இருவேலி இவை வகைக்குக் கால் பலம் இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து இறுத்து அதில் கால் படி பொரித்த அரிசி போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து அதில் சந்தனம், குங்கிலியம், சாம்பிராணி, தேற்றான் விதை, தேவராயகர்ப்பூரம், தகரவிதை தேன் இவைகளை ஓர் எடையாய் நெருப்பில் போட்டப் புகை பிடிக்கத் தீரும்.

3. நெல்லிப்பருப்பு, கடுக்காய், நிலவேம்பு, பற்பாடகம், கண்டங்கத்திரி, கடுகுரோகணி, கச்சோலம், உலர்ந்த இஞ்சி, திப்பிலி வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உட்கொள்ள நோய் தீரும்.

தீப்பிலி முத்தக்ராக பேய்ப்புல் சுக்கு, சீரகம் கொத்தமல்லி கூவிளவேர் கொட்டாங்கரந்தை சீந்தில் இவைகளை முண்பேண் கஷாயம் செய்து கொடுக்க தீரும்.

சித்தவிப்பிரம சன்னியின் இயல்பு.

உடம்புமிகநொந்து சுரங்காயும்; வாதபித்தம் கோபித்துப் பிதற்றும்; மதிமயங்கும்; அழுது விம்மும் மிகச் சிரிப்புண்டாகும்; ஆடும், கண்குழிக்கும்; அடிக்கடி எழுந்து விழும்; அழுதுபுரளும்; அயரும், விழிக்கும்; வந்தவர்களை வாஞ்சைபோல் தடவி மகிழும். நெடுமூச்செய்தும் 21 நாள்கள் சென்றால் தீரும்.

மருத்துவம்:- கடுக்காய், பற்பாடகம், கடுகுரோகணி, நிலவேம்பு, முந்திரிப்பழம், தேவதாரம், தண்ணீர்விட்டான் கிழங்கு, முத்தக்காசு, கொன்றைப்பட்டை, பேய்ப்பு , தேசாவரம் இவைகள் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

2. முந்திரிப்பழம், பற்பாடகம், நன்னாரிவேர், முன்னை வேர், வில்வவேர், சந்தனம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், பேரீச்சம்பழம், சுக்கு, திப்பிலி இவைகளை வேளை ஒன்றுக்குக் கால் பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து உட்கொள்ள நோய் தீரும்.

3. நொச்சி இலை, முள்ளி இலை, கஞ்சாகோரை இலை, வெள்ளுள்ளி, திரிகடுகு வகைக்குக் கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து உட்கொள்ள நோய் தீரும்.

தாந்திரீக சன்னிக் குணம்

உடல்சோர்ந்து நொந்து உளையும்; குத்தும், காயும் வியர்க்கும்; தாகிக்கும், தலைவலிக்கும்; வாயில் நீர்வடியும்; இருமல், கக்கல், மயக்கம், ஆராட்டம், உழத்திகாணும்; நித்திரை சற்றும் வராது; புத்திகலங்கும்; புலன் கெடும்; ஏழு நாளில் கொன்று விடும்.

மருத்துவம்:– பாதிரிவேர், அவுரிவேர், நொச்சிவேர், சித்திர மூலம், கரிப்பான், செந்தொட்டிவேர், பேய்ப்புடல் வகைக்கு கால் பலம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து உட்கொள்ள நோய் தீரும்.

பெருவாகை, பெருங்குமிழ், வில்வம், முன்னை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுவழுதலை, கண்டங்கத்திரி, நெருஞ்சி, பாதிரி இவைகளின் வேர், திப்பிலி, இந்துப்பு, அரத்தை, சுக்கு, தூதுவளை, சீந்தில் மஞ்சள், கோட்டம், தேவதாரம், தண்ணீர் விட்டான் கிழங்கு, குக்கில் வகைக்கு வேளை ஒன்றுக்கு கால் பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 6 வேளை உட்கொள்ளவும். நொச்சி, கருவேப்பிலை, குங்குலியம் இவைகளைப் பொடித்துத் திரியாகத் திரட்டி மூக்கில் புகை பிடிக்க நோய் தீரும்.

சிறுதேக்கு, கடுக்காய், கோட்டம், சிறுவழுதலை, தேவதாரம், சீந்தில், திப்பிலி இவைகளை ஒரு வேளைக்கு கால் பலம் வீதம் இடித்து ஒரு படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுத்துத் திப்பிலியை நொச்சிச் சாற்றில் உரைத்துக் கண்ணில் இட்டுத் திரிகடுகு, கோட்டம், சீரகம், மஞ்சள், மரமஞ்சள், வசம்பு இவைகளை ஓர் எடையாய் வெள்ளாட்டுச் சிறுநீர் விட்டுச் சிதைத்து மூக்கில் நசியமிடத் தீரும்.

சண்பகப்பூ, கடுகுரோகணி, சந்தனம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம், சுக்கு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நன்னாரிவேர், பற்பாடகம், மஞ்சிட்டி வகைக்குக் கால் பலம் ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உள்ளுக்குக் கொடுக்க நீங்கும்.

பிரலாப சன்னியின் இயல்பு.

உடல் நோகும்; சுரம் காயும்; குளிரும் நடுங்கும்; தாகிக்கும்; விக்கலெடுக்கும்; பிதற்றும்; பொய் பேசும்; நெஞ்சில் கபம்கட்டி இருமும்; இளைக்கும்; தலைசுழற்றும்; எழுந்துசோங்கி நிற்கும்; தள்ளாடும்; மாதர்மேல்

Koviloor Digital Library

ஆசை கொள்ளும் ஐயோவென்ற பயமிடும்; 14 நாள் சென்றால் குணமாகிவிடும்.

மருத்துவம்:– நிலவேம்பு, வட்டத்திருப்பி, முத்தக்காசு, சிறுவழுதலை, காஞ்சோரி, கண்டங்கத்திரிவேர், சிறுதேக்கு, திப்பிலி இவைகளை ஒரு வேளைக்கு கால் பலம் வீதம் இடித்து ஒரு படித்தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

2. கோங்கிலவம்பட்டை, சங்கம்வேர், பேராமுட்டி, சிற்றாமுட்டி, கொடிவேலிவேர், வெற்றிலைக் காம்பு, செவ்வியம், திப்பிலி மூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

கருநியாச் சன்னியின் இயல்பு.

உடல் நோகும்; வெதுப்பும்; தலைவலிக்கும்; தாகிக்கும்; பொய்பேசும்; தலைசுற்றும்; மூர்ச்சை, வாந்தி, விக்கல், இருமல் காணும்; நெறிபிறழும்; திடுக்கிடச் செய்யும்; நித்திரை கொள்ளாது; 90 நாள்களில் தீரும்.

மருத்துவம்:– அரத்தை, சிறுதேக்கு, சிறுவழுதலை, முத்தக்காசு, கடுக்காய், கடுகுரோகணி, கோட்டம், வசம்பு, கடுக்காய்ப்பூ, தான்றிக்காய், நெல்லிப்பருப்பு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டுக் கொடுக்கத் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

சிங்கிச்சன்னியின் இயல்பு.

உடல் வெதுப்பும்; நா வறளும், தாகிக்கும்; இருமும்; வயிறு பொருமும்; வாந்திபண்ணும்; விக்கல்எடுக்கும்; இருகாதடைக்கும்; என்ன சொன்னாலும் பேசாது; பிச்சுப் பிதற்றும்; நித்திரை கொள்ளும்; அச்சப்பட்டு எழுந்திருக்கும்; அழும்; காதல் மீறும்; கோபமாகும்; 16 நாள்களில் குணமாகும்.

மருத்துவம்:– நிலவேம்பு, வெள்ளுள்ளி, சுக்கு, ரோகணி, பற்பாடகம், கலைக்கொம்பு, கடுக்காய், நன்னாரிவேர், தேவதாரம், இவைகளை (ஒரு வேளைக்கு) வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவிட்டு இறுத்து அதில் இஞ்சிச் சுரசம், தாய்ப்பால், திப்பிலிப்பொடி கூட்டிக் கொடுக்கத் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

விந்நாத சன்னியின் இயல்பு

நாக்கு வெடிக்கும்; விக்கலெடுக்கும்; இருமும்; உடல் நடுங்கும்; பிதற்றும்; காதடி வீங்கும் காதலினால் அடிக்கடி எழுந்திருக்கும்; 12 நாள்கள் சென்றால் தீரும்.

மருத்துவம்:– நெருஞ்சிவேர், எருக்கம்வேர், பற்பாடகம், முத்தக்காசு, திப்பிலிமூலம், சுக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித்

Koviloor Digital Library

தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

வாத சன்னியின் இயல்பு

உடல்காயும்; வியர்க்கும்; புரளும்; பயம்தோன்றி வெருளும் இருமும்; இளைக்கும்; வயிறு பொருமும்; கண் சிவக்கும்; நாவு கறுக்கும்; விழிசொருகும்; நீர்கடுக்கும்; மலம் சிறுநீர் கட்டி உடல் வலிக்கும்; இடுப்புளையும்; குளிர்ச்சி பிறக்கும்.

வாதத்தில் எடுத்த சகல சன்னி தோடத்திற்கும் வாதம் எண்பதுக்கும் தைலம்.

1. நத்தைச்சூரி, கிலுகிலுப்பை, வட்டத்துத்தி, வேலிப் பருத்தி, கொடிவேலி, தைவேளை, குப்பைமேனி, மாவிலிங்கு, முருங்கை, உகாய் வாகை இவைகளின் வேர்ப்பட்டை, பூநாகம், முசுறுமுட்டை, முத்தின வேப்பம்பட்டை, வசம்பு வலம்புரிக்காய், காட்டுச் சீரகம், சிற்றரத்தை, இந்துப்பு மிருதார்சிங்கி, பெருங்காயம், பூண்டு, வாலுழுவை, சவ்வீரம், வெளிச்சிப்பிசின் வகைக்கு 1½ வராகன் எடை, மூன்று வருடம்சென்ற முற்றினக் கோழிக்குடல், தாமரங்காய் இரத்தம், இதெல்லாம் கூட்டி மைபோலரைத்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி சிவந்த பதத்தில் வடித்து உள்ளுக்கு ஒரு பணவெடை கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

2. நூறு வருடம் சென்ற வேப்பம்பட்டை, சிவன் வேம்பு, பிரமி, துளசி, ஆடாதோடை, நொச்சி, சங்கு, கிலுகிலுப்பை, சித்திரமூலம், வேலிப்பருத்தி, நத்தைச்சூரி, மஞ்சள், சந்தனம், நன்னாரி, அதிமதுரம், கோட்டம், இந்துப்பு, வசம்பு, கடுகுரோகணி, முசுறுமுட்டை, மரமஞ்சள், சிறுதேக்கு, நல்லபாம்பு சட்டை, பூநாகம், கடுக்காய்; திரிகடுகு வகைக்கு 1 கழஞ்சு இவைகளை இடித்து ஒரு படி நல்லெண்ணெய் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தேய்த்து மாலையில் வேப்பம்பட்டைக் கொதிநீரில் தலைமுழுக்குச் செய்யத் தீரும்.

3. வேப்பம்பட்டை, நொச்சி, ஆடாதோடை, துளசி, வேலிப்பருத்தி, பிரம்மி வகைக்கு 1 படிச்சாறு, பசுமூத்திரம் ½ படி, கோட்டம், அரத்தை, வசம்பு, இந்துப்பு, சிறுதேக்கு, மரமஞ்சள், திப்பிலி, கற்கடகசிங்கி, அதிமதுரம் கடுகு ரோகணி எசவியம் சிவன் வேம்பு தேவதாரம் வகைக்கு கழஞ்சு (1)இவைகளைத் தகரை இலைச்சாற்றில் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் கூட்டிக் காய்ச்சி வடித்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பில் பூசி, நசியமிட வாத சன்னி, மகாவாத சன்னி சன்னி தீரும்.

பித்த சன்னியின் இயல்பு.

ஐம்புலன்களும் நொந்து புண்போல் நோகும்; அபரும்; பதறி நடுங்கும்; மெய் சுழிக்கும்; புருவம் நெளிக்கும்; கண்ணும் வாயும் கோணும்; கண் சிறுத்து, மாதரை இச்சிக்கும்; பிதற்றும்; புலம்பும்; நகைக்கும்; வயிறெரியும்; வாயும் இடறும்; புண்ணாகும்; குரல் கம்மும்; இச்சாபத்தியம்.

Koviloor Digital Library

பயித்திய சன்னியின் இயல்பு

அடிக்கடி எழுந்து ஓடும்; உற்றுப் பார்க்கும்; தரையில் புரண்டு வாய்விட்டு அலறும், கொட்டாவி விடும்; சேலையை உரிந்து கிழித்து எறியும்; ஆடிப்பாடிக் கைகொட்டும்.

சுக சன்னியின் இயல்பு.

துணியைத் துணுக்குத் துணுக்காய்க் கிழித்து எறியும்; உலுக்கிக்கேட்டால் வசை பேசும்; எதிர்த்தார் முகத்தில் துப்பும்; நீரையும் மலத்தையும் உண்ணும்.

பித்த பயித்திய சுகசன்னி, பித்தம் எண்பதிற்கும், சுரம், வலி, பிடிப்புகட்கு முசுமுசுக்கை நெய்.

முசுமுசுக்கைச்சாறு ஒரு குறுணி, பசும் நெய் ஒரு படி, வேப்பெண்ணெய் கால் படி, முசுறுமுட்டை, குமரி, சீந்தில் தண்டு இவைகளின் சாறு தாய்ப்பால் வகைக்கு 1 படி, வாலுழுவையரிசி, அதிமதூரம், தேவதாரம், சிற்றரத்தை, வெட்பாலையரிசி, மரமஞ்சள், சிறுதேக்கு, கச்சோலம், மிளகு, பூநாகம், வெளிச்சிப்பிசின், கம்பிப்பிசின், சிற்றாமுட்டி, விலாமிச்சு, வெட்டிவேர், சுக்கு, திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு இவைகளை வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

சிலேத்துமசன்னியின் இயல்பு.

நெஞ்சில் கபம்கட்டி இரையும்; வியர்க்கும்; தோன்றாதது எல்லாம் தோன்றும்; துணை தேடும்; சகலத்தையும் வெறுக்கும்; வற்புறுத்தும்; சோறும் மயங்கிடும்; நாவழுக்கும்; மலசலம் வெளுப்பெய்தும்.

மருத்துவம்:– அழிஞ்சில்பட்டை, செவ்வியம், பேராமுட்டி, அரத்தை, சுக்கு, கொடுவேலி வேர், பூசணி வேர் இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

சகல சன்னிக்கும் பொதுமருந்து.

எருக்கன், சிறுகீரை, குப்பைமேனி, பிராய் இவைகளின் வேர், முருங்கைப்பட்டை, வெள்ளைப்பூண்டு, இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பாலில் அரைத்துக் குழப்பி வெய்யிலில் வைத்துச் சீலையில் ஊட்டிப் பிழிந்து உள்ளுக்குக் கொடுத்து மூக்கில் முகரத் தீரும்.

சன்னி 13–க்கும் தைலம்

வேப்பெண்ணெய் 1 படி, விளக்கெண்ணெய் ½ படி, நல்லெண்ணெய் கால் படி ஒன்றாய்க்கலந்து அதில் வெட்பூலா, துளசி, சன்னிநாயகம், வேலிப்பருத்தி, அமுக்கறா, நாய்க்கடுகு, தைவேளை, எருக்கு, சிவதை,

Koviloor Digital Library

நாரத்தை, ஆதண்டை, குப்பைமேனி, ஈசுரமூலி, பிரண்டை, நொச்சி, கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டையை அரைத்து வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரிதாரம், வெங்காரம், திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், கொத்துமல்லி, கடுகு, மிளகு, வெள்ளுள்ளி, கிராம்பு, சாதிக்காய், வசம்பு, வெளிச்சிப்பிசின், பெருங்காயம், துருசு, நேர்வாளம், அக்கிரகாரம், நீரடிமுத்து, பூநாகம் வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடல் முழுதும் பூசத் தீரும்.

சந்தி சன்னியின் இயல்பு.

உடல் வெம்பும்; தலைவலிக்கும்; மூர்ச்சை காணும்; அடிக்கடி எழுந்திருக்கும்; கண் சிவந்திருக்கும்; அறிவு மயங்கும்.

மருத்துவம்:- ஆடாதோடை இலை, சிறுவழுதலை, தூதுவளை, நன்னாரி வேர், சிற்றாமுட்டி, சுக்கு பற்பாடகம், முத்தக்காசு, சந்தனம், இலுப்பைப்பூ வகைக்கு அரை பலம் இடித்து ஒரு படி நீரில் போட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

மந்த சன்னியின் இயல்பு.

உடல் காயும்; கைகால், குளிர்ந்திருக்கும்; நாவு கறுத்திருக்கும்; மலம் கட்டும்; நீர் இறங்கும்; மயக்கம் காணும்; தலை, முகம் வலிக்கும்.

மருத்துவம்:- வெட்டிவேர், விலாமிச்சு, சுக்கு, பற்பாடகம், சிறுதேக்கு வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

முகவாத சன்னியின் இயல்பு.

கண்ணில், புருவத்தில் செவியில் குத்தலுண்டாகி முகத்தையும், வாயையும் ஒரு பக்கம் பற்றித் திருகிவிடும்.

மருத்துவம்:- நொச்சிச்சாறு 2 படி, தழுதாழை, கழற்கொடி, முடக்கொத்தான், வீழி, வெற்றிலை, வேலிப்பருத்தி, சங்கு, கரிசாலை, மேனிவேளை இவைகளின் சாறு, வேப்பெண்ணெய், ஆமணக் வகைக்கு கால் 1 படி, நல்லெண்ணெய் படி 2–சுக்கு மிளகு திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், சிறுதேக்கு, சிங்கி, அரத்தை, கச்சோலம், தேவதாரம், மாஞ்சில், சிறுநாகப்பூ, சதகுப்பை, கடுகுரோகணி, மஞ்சள், மஞ்சிட்டி, வசம்பு, இந்துப்பு, கடுக்காய், வெட்பாலையரிசி வகைக்கு 2 கழஞ்சு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து கழஞ்சு வீதம் உள்ளுக்கும் கொடுத்து உடம்பிலும் பூச முகவாத சன்னி, குடல்வாதம் தீரும்.

2. சந்தனம், மரமஞ்சள், நற்சீரகம், சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு மஞ்சள், இலுப்பைப் புண்ணாக்கு ஓர் எடையாய்ப் பொடித்து வெள்ளைத் துணியில் உருட்டித் திரித்து தீயில்கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கத் தீரும்.

Koviloor Digital Library

3. முற்றின தேங்காய்ப்பாலில் புளிய விதையின் மேற்றோலைப் பொடித்துப் போட்டுக் பிசைந்து ரவியில்வைத்துத் தைலத்தை பிழிந்து உள்ளுக்குக்கொடுத்து, மேலிலும் பூசத் தீரும் அல்லது மேற்படி நெய்யில் எருக்கம்பூவைப் போட்டுக்காய்ச்சி உள்ளுக்குங் கொடுத்து மேலிலும் பூசத்தீரம்.

வெடி சன்னியின் இயல்பு.

காதின் உள்ளே திரண்டெழுந்து கனத்துக் குத்தி வலியுண்டாகிச் சேதப்படும்படி முகத்தைத் திருப்பும்; நாக்கு தடுமாறும்.

மருத்துவம்:– கடுக்காய், இந்துப்பு, திப்பிலி ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்து திரிகடித் தூளைச் சதாவேரி கிழங்குச் சாற்றில் கொடுக்க மலம் கழியும்; அதன் பேரில் திப்பிலி, உள்ளி, அதிமதுரம், வெளிச்சிப்பிசின், செவ்வள்ளிக்கொடி, மால்தேவி, தூதுவளை வேர், நன்னாரி, நாயுருவி, நிலக்குமிழ் வேர் பொன்னாவரை, நிலவேம்பு, மிளகு வகைக்கு 1 பலம் அரைத்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொடுக்கத் தீரும்.

சுக சன்னியின் இயல்பு.

தைலம் தேய்த்து தலைமுழுகி தயிரும் அன்னமும் புசித்திருக்கும் போதும்; வயிறு மந்தமாயிருக்கும்போதும், உடல் அலுத்திருக்கும் போதும் பெண்களுடன் உடலுறவு கொண்டாலும், கடும் உடலுறவினாலும் சுக சன்னி பிறக்கும். பிறந்தால் உடம்பு நோகும், காயும், கண் சிவக்கும், வியர்க்கும், நடுங்கும், சுருட்டி எழுந்திருக்கும், பிரமை உண்டாகும்.

மருத்துவம்:– கால்படி இஞ்சிச் சாற்றை முறித்து வடிகட்டி அதற்குச் சமமாகத் தாய்ப்பால் கூட்டி அதில் முசுறுமுட்டை, பூநாகம், திப்பிலி இவைகளைத் தனித் தனியே வெதுப்பிப் பொடித்தத் தூள் வகைக்கு ஒரு வராகன் எடை போட்டுக் கொடுக்கவும். இவ்விதம் 6 வேளை கொடுக்கத் தீரும்.

2. பூநாகம் ஒரு எலுமிச்சங்காய் அளவு, சீரகம் ஒரு வராகன் எடை இவைகளை பசுவின் பாலில் அரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுக்கத் தீரும்.

3. பழம்புளி, மிளகு, சுக்கு, வெள்ளுள்ளி வகைக்கு 4 பலம் இவைகளை மைபோல் அரைத்து மூன்று உருண்டைசெய்து 3 வேளை கொடுக்கத் தீரும்.

கபால சன்னியின் இயல்பு.

பிடரியைத் திருப்பக்கூடாத வலிகாணும்; தலையிலும், காதிலும் ஈட்டியால் குத்தினாற்போல் குத்தும்; தினவெடுக்கும்; புத்தியைக் கெடுக்கும்; திமிரேறும்; முகம், மூக்கு, கண் சிறுத்துக் காட்டும்; வியர்வை, வெப்பு, அயர்வு சோர்வு, நடுக்கம், கைகளில் காந்தல காணும்.

Koviloor Digital Library

மருத்துவம்:– அரைப்படி வேப்பெண்ணெயில் வெள்ளுள்ளி, வசம்பு, திப்பிலி இவைகளை அரைத்து வகைக்கு ஒரு எலுமிச்சங் காய் அளவு; கருநொச்சி, நாய்வேளை, ஊமத்தை, துராய்ச் சமூலம் இவைகளை மாங்காய் அளவு அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்துக் காலையில் தலையிலும், உடம்பிலும், தேய்த்து மாலையில் அரைப்பிட்டு வெந்நீரில் தலைமுழுக்குச் செய்ய கபால சன்னி தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

புறவீச்சு நோயின் இயல்பு.

அடுத்தடுத்து எடுத்துக் குத்தும்; அதிகமாய் விரைக்கும்; வியர்க்கும்; நாவு தடுமாறும்; பல்கிட்டும்; நெஞ்சடைக்கும்; தேகத்தைப் பிறகே வளைத்துத் தள்ளும்.

மருத்துவம்:– இரசம், கெந்தகம், வெள்ளுள்ளி, மிளகு, சேராங்கொட்டை வகைக்குக் கால் பலம், பசுவின் வெண்ணெயில் பிசைந்துத் துணியில் ஊட்டித் திரித்துக் கதிரில் கோர்த்துத் தீயில் கொளுத்தத் தைலம் வடியும். அதில் ஒரு பணவெடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.

2. இஞ்சிச்சாறு, தாய்ப்பால், தேன் இவைகளைச் சமமாய்க் கலந்து மேற்படி நோய்கண்டவுடன் கொடுக்க நீங்கும். மிஞ்சினால் கொஞ்சம் வேப்பெண்ணெயாவது அல்லது மேற்படி தைலத்தை விட்டுக்கொடுக்க நீங்கும்.

3. கீழ்க்காய்நெல்லிச்சாறு, கிலுப்பைச்சாறு, தேன், தாய்ப்பால் இவைகள் வகைக்கு கால் ஆழாக்கு வீதம் கலந்து அதில் வெள்ளுள்ளி, காந்தம், சுக்கு, வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

4. அஞ்சிலை நொச்சிப்பட்டை 10 பலம், இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் கையாந்தகரைச் சாறு ஒரு படி, நல்லெண்ணெய் ஒரு படி கூட விட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் தடவ நீங்கும்.

சன்னி 13–க்கும், வலிப்பு, உட்குத்து, புறவீச்சுக்குத் தைலம்.

1. சுக்கு, மிளகு, ஓமம், வகைக்கு 1 பலம், வசம்பு ½ பலம், திப்பிலி, சேராங்கொட்டை, வெளிச்சிப்பிசின் வகைக்கு ¼ பலம், வெள்ளுள்ளி 4 பலம், மயிலிறகு 4 பலம், தேவதாரம் 3 கழஞ்சு இவைகளை நன்றாய்ப் பொடித்து 3 படி வேப்பெண்ணெயில் போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு கரண்டி அளவு புளிதள்ளிக்கொடுக்க நீங்கும்.

2. புங்கு, புன்னை, எள், வேம்பு, இலுப்பை இவைகளின் எண்ணெயை ஒன்றாய்க் கலந்து ரசம், கெந்தகம், மனோசில்லை, இலிங்கம், தாளகம் வகைக்கு

Koviloor Digital Library

2 கழஞ்சு, பழங்காடியில் அரைத்துத் துணியில் ஊட்டி உலர்த்தித் திரித்துக் கதிரில் கோத்து மேற்படி எண்ணெய்களை விட்டு சுடர்த் தைலமிறக்கிப் பண எடை உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் பூசத் தீரும்.

3. ஐம்பது கோழிமுட்டைத் தைலம், 10 பலம், வெள்ளுள்ளியில் எடுத்த தைலம், வேப்பெண்ணெய் 1 படி, பூநாகமும், சன்னிநாயகமும் சேர்த்து இறக்கின குழித் தைலம் ஆழாக்கு, முருங்கைப்பட்டை, சிவன்வேம்பு, எருக்கம்வேர் இம்மூன்றும் சேர்த்து இறக்கின குழித்தைலம் கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நல்லபாம்பு கண்டம், வசம்பு வகைக்கு 1 பலம் பொடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு பண எடை உள்ளுக்குக்கொடுத்து பதைப்புகளுக்கு மேலே பூசி ஒற்றடம் போட நீங்கும்.

உட்குத்து, புறவீச்சு, உடற்குத்து உடம்புக் கடுப்புக்கும் சர்வாங்க வாதத்திற்கும் தைலம்.

நல்லெண்ணெய், பசுவின் நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய் வகைக்கு 1 படி, பெருமரத்துவேர், நன்னாரிவேர், வெள்ளெருக்கும்வேர், அழிஞ்சில்வேர் இவைகளின் பட்டை, வெள்ளுள்ளி, வசம்பு, மிளகு, மஞ்சள் வகைக்கு 2 பலம் அரைத்துப்போட்டுப் பதத்தில் வடித்து ஒரு கரண்டி கொடுத்து மேற்படி கடுகைத் துணியில் சுருட்டிப் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி தோடம் வாதத்திற்குக் குடிநீர்.

குறுஞ்சாவேர், முருங்கைப்பட்டை, உகாய்ப்பட்டை, தழுதாழை, நொச்சி, பேய்ப்புடல், குப்பைமேனி, பெருமரத்துப் பட்டை, தைவேளை, கவுதும்பை, தகரைவேர், சிற்றரத்தை, சுக்கு, சதகுப்பை, அக்கிராகாரம் வாய்விளங்கம், திப்பிலி, வெவ்வியம், சிறுகாஞ்சோரி, வால்மிளகு, ஓமம் இவைகள் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து நான்கு படித் தண்ணீரில்போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து இறுத்து அதில் இலிங்க மாத்திரையை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

தனுர்வாதம், புறவீச்சு, இசிவுவாதம், பல்கிட்டல், சன்னிக்கு மேல்பூசும் தைலம்.

இரசம், அரிதாரம், எலிப்பல் பாடாணம், சாதிலிங்கம், சிங்கி, நாவிக்கிழங்கு, மனோசிலை, கெந்தகம் இவைகளை ஓர் எடையாய்க் காடியில் அரைத்துத் துணியில் ஊட்டி உலர்த்தி, வேப்பெண்ணெயில் சுடர்த்தைலமிறக்கி உடல்பில்பூசி, உள்ளுக்குச் சடாட்சரசெந்தூரம் கொடுக்கத் தீரும்.

பிடரிவலி புறவீச்சு நோயின் இயல்பு.

தலை கனக்கும்; பிடரி வலிக்கும்; உடலில் குத்தும்; திமிர் மயக்கம், உழலை காணும்.

மருத்துவம்:– நல்லெண்ணெய், பசும்நெய், வேப்பெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு அரைப்படி கலந்து இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நத்தைச்சூரி, நாயுருவி, சத்திச் சாரணை,

Koviloor Digital Library

கொடிவேலி, வீழி, தண்டை, வெள்வேல், எருக்கு, தூதுவளை, முல்லை, ஈசுரமூலி, வில்வம், சேவுகன், நன்னாரி, ஓரிலைத்தாமரை இவைகளின் வேர், புங்கம்கொட்டை, உள்ளி, முத்தக்காசு வகைக்கு 1 பலம், மஞ்சள், வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகுரோகணி, ஓமம், வெங்காரம், கெந்தகம், நேர்வாளம், கோட்டம், அதிமதுரம், சாக்கரைவள்ளி, வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூசி, மாலையில் வேப்பம்பட்டைக் கொதிநீர் வைத்து வேதுபிடிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

உட்குத்துநோயின் இயல்பு.

உடம்பு காயும்; வியர்க்கும்; பல்கிட்டும்; உடல் விரைக்கும்; உள்ளே குத்தும்; நாவறட்சி காணும்; தாகிக்கும்; வாயு கீழ் நோக்கிச் சத்தத்துடன் பரியும்; சாப்பாடு செல்லாது.

மருத்துவம்:– அரைப்படி கடுகை இடித்து ஒரு துணியில் கட்டி வேப்பெண்ணெயில் நனைத்து நெருப்பில் வெதுப்பித் தைலத்தைப் பிழிந்து உச்சி, பிடரி, கழுத்து, நாடி, பொருத்து முதலான இடங்களில் போட்டுக் காதிலும், மூக்கிலும் விட்டு மேற்படி பொட்டணத்தை மேற்படி உறுப்புகளில் ஒற்றடம் செய்யஉட்குத்து, புறவீச்சு, சுரம் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

உட்குத்து, புறவீச்சுக்கு

குப்பைமேனி, பொன்னாவரை, சிறுபுள்ளடி இவைகளை ஓர் எடையாய் வேப்பிலையில் உப்பு போட்டு இடித்துப் பிழிந்த சாற்றால் அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு ஒரு நாளைக்கு மூன்று முறை கொடுக்கத் தீரும்.

மேற்படி நோய்களுக்கு மேல்பூச்சுத் தைலம்.

நாயுருவி, பேராமுட்டி, தைவேளை, குப்பைமேனி, வேலிப்பருத்தி, நரியுடை, அவுரி, கொடுவேலி, புனல் முருங்கை, சத்திச் சாரணை, வீழி, சிவன்வேம்பு, வாதமடக்கி, நொச்சி இவைகளின் வேர் கரிப்பான், சன்னிநாயகம், முடக்கொத்தான் இவைகளின் சமூலம் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்து, அரைப்படி வேப்பெண்ணெயில் போட்டுச் சுக்கு, மிளகு, ஓமம், திப்பிலி, வெளிச்சிப்பிசின், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், தேவதாரம், வசம்பு, வலம்புரிக்காய், மனோசிலை, அரிதாரம், கெந்தகம், ஊசிக்காந்தம் வகைக்கு 1 வராகன் எடை, வெள்ளுள்ளி 1 பலம், பூநாகம் ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தடமிட்டுக் காதில் விட்டு பஞ்சால் அடைத்து வைக்கத் தீரும்.

உட்குத்து, புறவீச்சு, அடைப்பு, இருமல், இளைப்புக்கு மருந்து.

முருங்கைவேர்ப்பட்டைச் சாறு, உள்ளிச் சாறு, தேன் இவைகளை ஓர் எடையாய் ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலியும் இந்துப்பும் வெதுப்பி பொடித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை போட்டுக் கலந்துகொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

சன்னிவலிப்பு, இழுப்புக்குத் தைலம்.

1. தாளகம் 2 பலம், மனோசிலை, கௌரி வகைக்கு 1 பலம், வீரம் பூநீர் வெடியுப்பு, கல்லுப்பு, நவாச்சாரம் வகைக்கு அரைப் பலம் இவைகளைத் தூய்மைசெய்து முட்டை மஞ்சள் கருவாலாட்டி வில்லை தட்டி உலர்த்திக் கலசத்திலடைத்து குழித்தயில மிறக்கி பணவெடை வெற்றிலையில் கொடுக்க சன்னி வலிப்புத் தீரும்.

2. மாவிலிங்கக்காய், புனல்முருங்கைக்காய், விளாவேர், நொச்சிவேர், எருக்கம்வேர், சென்னகரப்பட்டை, வாதமடக்கி வேர், கருவாப்பட்டை வகைக்கு 1 பலம், மயில்பீலி 2 பலம், எட்டிப்பழம் குறுணி, இவைகளை எல்லாம் இடித்து ஒரு பாண்டத்தில் இட்டு அதில் வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், எள்ளெண்ணெய் வகைக்கு ½ படி விட்டு அரைத்துப் பிசறி மேல்மூடி வாயில் பத்துச் சீலைமண் செய்து பானைத்தூரில் 6, 7 தமரிட்டுக் கலசம் வைத்து புகை போகாமல் சந்துவாயில் முன்போல் சீலைமண்செய்து கனபுடமாய்க் குழித் தைலமிறக்கி உடம்பில் பூசிவரத் தீரும்.

சன்னிக்கு மேல்பூச்சு மருந்து.

1. வெள்ளைப்பூண்டு 2 பலம், வசம்பு 2 பலம், எலிப்பல் பாடாணம் 2 வராகன் எடை, கதிரிற் கோர்ந்து வேப்பெண்ணெயில் சுடர்த் தைலமிறக்கி உடலெங்கும் தடவத் தீரும்.

2. வசம்பு, உள்ளி, கடுக்காய், சாரணைவேர், பூநாகம், இவைகளை ஓர் எடையாய் வேப்பெண்ணெயில் காய்ச்சி கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் தடவத் தீரும்.

சன்னி 13-க்கும், வாதம் 70-க்கும் மேல்தடவ விடமுட்டித் தைலம் (பிடிநெய்)

எட்டிப்பழச்சாறு, நல்லெண்ணெய், பால், நெய், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு ஒரு பதக்கு, அமுக்கறா, நொச்சி, வாகை, புளி, மாவிலங்கு, தழுதாழை, குன்றிமணி, கழற்கொடி, முன்னை, சிற்றாமணக்கு இவைகளின் இலை, எருக்கம்பூ, இஞ்சி, எலுமிச்சம்பழம், முருங்கைப்பட்டை, கொடிக்கள்ளி இவைகளின் சாறு வகைக்கு ஒரு குறுணி பாண்டத்தில் இட்டு ஏலம், சந்தனம், சதகுப்பை, தகரம், மதூரம், இந்துப்பு, கொடிவேலி, திப்பிலி, அரத்தை, இலவங்கம், தேவதாரம், திப்பிலிமூலம், சடாமாஞ்சில் எட்டிவிதை, விராலிவேர் வகைக்கு 6 பலம் இடித்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில் தடவத் தீரும்.

சன்னி, வலிப்பு, சயித்தியம், வாதசூலைக்கு ஐந்தெண்ணெய்த் தைலம்.

வேப்பெண்ணெய் கால் படி, புங்கெண்ணெய், குருக்கெண்ணெய், புன்னையெண்ணெய், இலுப்பெண்ணெய், வகைக்கு ஆழாக்கு ஒன்றாய்க்

Koviloor Digital Library

கலந்து அதில், சவ்வீரம் 2 ½ வராகன் எடை, சூடன் 5 வராகன் எடை பொடித்துப் போட்டு ஒரு சாமம் மைபோல அரைத்துக் கொள்ளவும். 20 கோழிமுட்டை, வெந்நீரில் போட்டு அவித்துத் தோல் வெடித்தவுடன் எடுத்து மஞ்சள்கருவை ஒரு சட்டியில் போட்டுக் கருகும்படி இரும்புக்கரண்டியினால் கிண்டித் தைலத்தைப் பிழிந்துகொள்ளவும். அப்பால் மேற்படி கோழிமுட்டைத் தோல்களையும், ஒரு படி நீர் மேல்நெருப்புச் சமூலத்தையும் அரைத்து எண்ணெயில் காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும். பிறகு, இம் மூவகைகளையும் ஒன்றாகக்கலந்து பளிங்குக் குப்பியில் அடைத்துவைத்தக்கொண்டு ஒரு பணவெடை வீதம் ஆறு வேளை கொடுத்து மேற்படி எண்ணெயைக் கையில் தொட்டு நெருப்பில் வெதுப்பி உடம்பெங்கும் முறுக்கித் தடவிவரவும். புளி, புகையிலை, கரப்பான் உணவுப்பண்டங்களை நீக்கவும். மேலில் மட்டும் தடவினால் பத்தியமில்லை.

குறிப்பு:- குருக்கெண்ணெய் என்பது, குடியோட்டிப் பூண்டின் விதையிலிருந்து இறக்கும் எண்ணெயாகும்.

சன்னி, வலிப்புதோடம், பக்கவாதம், நரம்புத் திமிர்வாதம், வாயுவுக்கு விடமுட்டித் தைலம் (பிடிநெய்)

எட்டிப்பழச்சாறு 8 படி, முருங்கைவேர், வேலிப்பருத்தி, எலுமிச்சம், சிற்றாமணக்கிலை, வெதுப்படக்கிலை, புளியிலை, உகாயிலை, இஞ்சி, மருதோன்றி, சங்கங்குப்பி, வாதமடக்கி, முடக்கொத்தான் இவைகளின் சாறு வகைக்கு 4 படி, அதிமதுரம், கோட்டம், வெள்ளுள்ளி, தேவதாரம், வசம்பு, இந்துப்பு, கொடிவேலி வேர், சதகுப்பை, ஓமம், திரிகடுகு, கடுக்காய் வகைக்கு அரைப்பலம், இவைகளை மேற்படி சாற்றில் அரைத்துப்போட்டு 4 படி பசும்பால், 2 படி நெய், 4 படி சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் 8 படி ஒன்றாய்க் கலந்து எரித்துப் பதத்தில் வடித்து மேலில் பூசத்தீரும்.

சன்னி புறவீச்சுக்குத் தைலம்.

கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், வசம்பு, ஓமம், மனோசிலை, வெள்ளைப்பாடாணம், கெவுரிபாடாணம், கெந்தகம், வீரம் இவைகளை மடற்கள்ளிப்பால் விட்டு அரைத்துப் பின்பு வேப்பெண்ணெயில் அரைத்து வெள்ளைத் துணியில் ஊட்டிச் சுடாத் தைலம் இறக்கி ஒரு பண எடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத்தீரும். புளி புகையிலை தள்ளவும்.

சன்னி சுரத்திற்கு மதுராதித் தைலம்.

1. அதிமதுரம், வேப்பம்பட்டை, விராலித்தோல், வேப்பம்பிசின், திராய்வேர், ஊமத்தன்வேர், குன்றிவேர், மேனிவேர், இந்துப்பு வகைக்கு 1 வராகன் எடை, ஆடாதோடைச் சாற்றில் அரைத்து 1 படி நல்லெண்ணெயில்போட்டுப் பதமாய்க் காய்ச்சி இறுத்து உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

Koviloor Digital Library

சன்னி நோய்கட்கு கண்ணிலிடும் மருந்துகள்.

1. மருக்காரைப் பழத்தின் விதையில் இருக்கிற பிசின் ஒரு பயறு அளவு எடுத்து வெள்ளைச்சாரணை, வேளை, வெற்றிலை இவைகளை கசக்கிச் சாறு பிழிந்து இதில் அந்தப் பிசினை அரைத்துக் கண்ணில் போடத் தீரும்.

2. சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், பெருங்காயம், சமமாய்க் கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துக் கயிறுசெய்து வெந்நீரிலாவது நொச்சிச்சாற்றிலாவது உரைத்துக் கண்ணில் இடத் தீரும்.

3. இலிங்கம், பெருங்காயம், திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, இவைகளை ஓர் எடையாய் வெற்றிலைமேல் சத்திச்சாரணை, எலுமிச்சம்பழம் இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் கயிறுசெய்து சன்னி சுரதோடத்திற்குத் தாய்ப்பாலிலாவது மேற்படி சாறுகளில் எதிலாவது உரைத்துக் கண்ணில் போடத் தீரும்.

4. திரிகடுகு, வெள்ளைக்காக்காணான் வேர் இவைகளைச் சமமாய்த் தாய்ப்பாலில் அரைத்துக் கயிறுசெய்து வெற்றிலைச் சாற்றில் உரைத்துக் கண்ணில் தீட்ட சன்னிபோய் நஞ்சும் ஓடும்.

5. சுக்கு, கடுக்காய், திப்பிலி, சாதிக்காய், வாய்விளங்கம், சாரணைவேர், காசிக்கட்டி, மனோசிலை, துத்தம், மிளகு, தேற்றாவேர் வகைக்கு 2 வராகன் எடை, மேற்படி இருவகை வேர்களையும் பாலில் அவித்துத் தூய்மைசெய்து சேர்த்து எலுமிச்சம்பழம், குப்பைமேனி, கையாந்தகரை இவைகளின் சாற்றில் மைபோல்அரைத்துக் கயிறு செய்துகொண்டு சன்னிதோடம், நேத்திரவாயுவுக்கு எலுமிச்சம்பழச்சாற்றிலும், வெள்ளெழுத்திற்குத் தாய்ப்பாலில் உரைத்துப்போடத் தீரும்.

6. திப்பிலி, துருசு, துத்தம், கிராம்பு, சுக்கு, திப்பிலி மூலம், புறாவெச்சம், குக்கல் (நாய்) வெண்மலம், கோழிவெண்மலம், மேனி வேர், சாரடைவேர், சாதிலிங்கம் வகைக்கு 2 கழஞ்சு, தூய்மை செய்த செம்பு அரப்பொடி 12 கழஞ்சு இவைகளை எலுமிச்சம், மேனி, தும்பை, வெற்றிலை இவைகளின் சாற்றில் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் கயிறு செய்து 13 வித சன்னிக்கும், நஞ்சுகளுக்கும் மேனிச்சாற்றிலாவது, வெற்றிலைச் சாற்றிலாவது, முருங்கைப்பூச் சாற்றிலாவது, வலிப்புக்கு; இஞ்சிச் சாற்றிலாவது, பித்தப் பிதற்றலுக்கு; தும்பைச் சாற்றிலாவது, உரைத்துக் கண்ணில் தீட்டத் தீரும்.

7. புங்கு, சங்கு, புடல், அத்தி, அகத்தி, பேய்ப்பீர்க்கு, பேய்ச்சுரை, காரை, தில்லை, மகிழ், புல்லாமணக்கு, மிளகு, நேர்வாளம் இவைகளின் வித்துக்களை எலுமிச்சம்பழச் சாற்றிலும் வெள்ளாட்டுப் பாலிலும் ஆட்டிக் கயிறு செய்து வெற்றிலைச் சாற்றில் உரைத்துக் கண்ணிலிடச் சன்னி, குமரகண்டன்வலிப்பு, மயக்கம், நஞ்சு, பேய்ச்சுரம், பைத்தியம் நீங்கும்.

8. திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம் இவைகளைப் பசுவின் வெண்ணெயில் அரைத்துக் கண்ணிலிட நீங்கும்.

Koviloor Digital Library

9. மேற்சொல்லிய கலிக்கங்களினால் கண் சிவந்து கடுப்புககண்டால் சீரகத்தைப் பொடித்துக் கற்றாழஞ் சோற்றில் போட்டுப் பிசைந்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய நீங்கும். கண்ணில் வேதனையானால் தயிறுஞ் சோறும் வைத்துக் கட்டவும்.

சன்னி பலிப்புக்கு மூக்குறிஞ்சல் மருந்து (ஆக்கிராணம்)

எரு முடடைச் சாம்பலில் எருக்கம்பாலை ஏழு தடவை பிசறி உலர்த்தி அதற்கு நான்கில் ஒரு பங்கு மிளகை வறுத்துப் பொடித்துப் கூட்டி மூக்கில் உறிஞ்ச நீங்கும்.

குறிப்பு:- முட்டை ஓட்டை அவித்துச் சவ்வு நீக்கி எரித்துச் சாம்பலாக்கி அச்சாம்பலைச் சேர்த்துச் செய்ய மேலான பயனைத் தரும்.

சன்னி வாதத்திற்கு ஒற்றடம்.

மருத்துவம்:- கொப்பரைத்தேங்காய் 5, வெள்ளைப்பூண்டு, 2 பலம், வேப்பமுத்து அரைப்படி இவைகளை ஒன்றாய் இடித்து பொட்டலம் கட்டி வேப்பெண்ணெயை கொதிக்கவைத்து அதில் அந்தப் பொட்டலத்தைத் துவைத்து வெப்பத்துடன் உடல் முழுவதும் ஒற்றடம் செய்ய நீங்கும்.

2. இலுப்பைப் பிண்ணாக்கு, மஞ்சள், எருக்கம்பூ இவைகளை ஓர் எடையாய் வறுத்துத் துணியில் முடிந்த சூட்டுடன் ஒற்றடம் செய்ய நீங்கும்.

சன்னிக்குப் புகை.

அதிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவாச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார்கோலரிசி, சாம்பிராணி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் குப்பைமேனிச் சாற்றில் அரைத்துத் துணியில் ஊட்டித் திரித்து வேப்பெண்ணெயில் இறுத்து வைத்து தீயில் கொளுத்தி மூக்கில் புகை படிக்க நீங்கும்.

சன்னி தலைவலிக்குப் புகை.

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, காரம், சிற்றரத்தை, கழற்பருப்பு, சீரகம், இலிங்கம், இவைகளை ஓர் எடையாய் எருக்கம் பாலில் அரைத்துத் துணியில் தடவி திரியுருட்டி மூக்கில் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி பதின்மூன்றுக்கும், புறசீச்சு, உள்வீச்சுக்கு இலிங்க மாத்திரை.

துருசு, பொரிகாரம், துத்தம் வகைக்கு 3 வராகன் எடை, இவைகள் எருக்கம்பால் விட்டு அரைத்து எட்டு வராகன் எடை இலிங்கத்தைக் கவசஞ் செய்து அதின்மேல் கரியுப்பை மேற்படி பாலிலரைத்து கவசஞ்செய்து அப்பால் புற்றுமண்ணை அரைத்துக் கவசஞ் செய்து உலர்த்தி இரண்டு படி மணலுக்கு மத்தியில் வைத்து எட்டெருவில் புடம் போடவும். இவ்விதம் மூன்று முறையில் புடம் போட்டுக் கவசம் நீக்கி இலிங்கத்தைப் பசு

Koviloor Digital Library

9. மேற்சொல்லிய கலிக்கங்களினால் கண் சிவந்து கடுப்புககண்டால் சீரகத்தைப் பொடித்துக் கற்றாழஞ் சோற்றில் போட்டுப் பிசைந்து துணியில் முடிந்து கண்ணில் பிழிய நீங்கும். கண்ணில் வேதனையானால் தயிறுஞ் சோறும் வைத்துக் கட்டவும்.

சன்னி வலிப்புக்கு மூக்குறிஞ்சல் மருந்து (ஆக்கிராணம்)

எரு முட்டைச் சாம்பலில் எருக்கம்பாலை ஏழு தடவை பிசறி உலர்த்தி அதற்கு நான்கில் ஒரு பங்கு மிளகை வறுத்துப் பொடித்துப் கூட்டி மூக்கில் உறிஞ்ச நீங்கும்.

குறிப்பு:- முட்டை ஓட்டை அவித்துச் சவ்வு நீக்கி எரித்துச் சாம்பலாக்கி அச்சாம்பலைச் சேர்த்துச் செய்ய மேலான பயனைத் தரும்.

சன்னி வாதத்திற்கு ஒற்றடம்.

மருத்துவம்:- கொப்பரைத்தேங்காய் 5, வெள்ளைப்பூண்டு, 2 பலம், வேப்பமுத்து அரைப்படி இவைகளை ஒன்றாய் இடித்து பொட்டலம் கட்டி வேப்பெண்ணெயை கொதிக்கவைத்து அதில் அந்தப் பொட்டலத்தைத் துவைத்து வெப்பத்துடன் உடல் முழுவதும் ஒற்றடம் செய்ய நீங்கும்.

2. இலுப்பைப் பிண்ணாக்கு, மஞ்சள், எருக்கம்பூ இவைகளை ஓர் எடையாய் வறுத்துத் துணியில் முடிந்த சூட்டுடன் ஒற்றடம் செய்ய நீங்கும்.

சன்னிக்குப் புகை.

அதிதாரம், குங்கிலியம், சாதிலிங்கம், நவாச்சாரம், மிளகு, கருஞ்சீரகம், கார்க்கோலரிசி, சாம்பிராணி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் குப்பைமேனிச் சாற்றில் அரைத்துத் துணியில் ஊட்டித் திரித்து வேப்பெண்ணெயில் இறுத்து வைத்து தீயில் கொளுத்தி மூக்கில் புகை படிக்க நீங்கும்.

சன்னி தலைவலிக்குப் புகை.

பெருங்காயம், ஓமம், சுக்கு, சாம்பிராணி, மிளகு, காரம், சிற்றரத்தை, கழற்பருப்பு, சீரகம், இலிங்கம், இவைகளை ஓர் எடையாய் எருக்கம் பாலில் அரைத்துத் துணியில் தடவி திரியுருட்டி மூக்கில் புகை பிடிக்க நீங்கும்.

சன்னி பதின்மூன்றுக்கும், புறசீச்சு, உள்வீச்சுக்கு இலிங்க மாத்திரை.

துருசு, பொரிகாரம், துத்தம் வகைக்கு 3 வராகன் எடை, இவைகள் எருக்கம்பால் விட்டு அரைத்து எட்டு வராகன் எடை இலிங்கத்தைக் கவசஞ் செய்து அதின்மேல் கரியுப்பை மேற்படி பாலிலரைத்து கவசஞ்செய்து அப்பால் புற்றுமண்ணை அரைத்துக் கவசஞ் செய்து உலர்த்தி இரண்டு படி மணலுக்கு மத்தியில் வைத்து எட்டெருவில் புடம் போடவும். இவ்விதம் மூன்று முறையில் புடம் போட்டுக் கவசம் நீக்கி இலிங்கத்தைப் பசு

Koviloor Digital Library

மிருத்துவாத சன்னி முதலான வாத சன்னிகளுக்கு மாத்திரை.

முத்து, அதிமதுரம், பவழம், கலைக்கொம்பு, திரிகடுகு, முந்திரிப்பழம், தாம்பிரபற்பம், திரிபலை, வசம்பு, பூநாகம், லிங்கம், முசுறுமுட்டை, கோரோசனை, உருத்திராட்சம், நல்லபாம்பு கண்டம், இரசபற்பம், கருநாவிக் கிழங்கு, கருங்குங்கிலியம், வெள்ளைக்குங்கிலியம், சூடன், பூல்ஙேர்ப்பட்டை, செஞ்சந்தனம், வெளிச்சிப்பிசின் வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை முட்டைத் தைலத்திலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும் அரைத்துக் குன்றிமணி அளவு உருண்டை செய்து தாய்ப்பாலிலாவது, இஞ்சிச் சாற்றிலாவது ஓர் உருண்டையை உரைத்துக் கொடுக்கத் தீரும்.

13 வித சன்னிகளுக்கும் காலாந்த வயிரவன்.

இரசபற்பம், தங்கபற்பம் வகைக்கு 1 கழஞ்சு, சங்கு, கெந்தகம், முத்து வகைக்கு 2 கழஞ்சு, வெண்காரம் அரைக் கழஞ்சு கொடிவேலிவேர்க் குடிநீரில் இரண்டு நாள் விடாமல் அரைத்து உருண்டை செய்து நிழலில் உலர்த்தி ஒரு பாண்டத்தில் குறுணி உப்பிட்டு அதன் மத்தியில்வைத்து மேலும் குறுணி உப்புப்போட்டு நான்கு சாமம் எரித்து நன்றாய் ஆறின பின் எடுத்து நான்கு குன்றி எடை பற்பமும், பத்து மிளகையும் பத்து திப்பிலியையும் வெதுப்பிப் பொடித்துத் தூளும், ஆழாக்கு இஞ்சிச்சாற்றில் மூன்று நாள்கள் கொடுக்கத் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

13 வித சன்னிகளுக்கு மாத்திரை.

காந்தம், சூதம், கெந்தி, மனோசிலை, செம்பு பற்பம், லிங்கம், வகைக்கு 10 பலம், பெருங்காயம் 10 பலம், வெள்ளுள்ளி 1 பலம் இவைகளைக் குமரிச்சாற்றில் மூன்று நாள் ஆட்டி குப்பியில் அடைத்து வாயை மாக்கல்லால் மூடி வலுவாய்ச் சீலைமண் செய்து மணல்மேல் வைத்து முத்தீயும் மூன்று நாள் எரித்து ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாயிருக்கும். அதில் திப்பிலிமூலம், சாதிப்பத்திரி, கடுகுரோகணி வகைக்கு கால் பலம், சுத்தித்த வீரங்கூட்டி வெண் கருவாலாட்டிக் குன்றிபோல் குளிகை செய்து முள்ளிச் சாற்றில் கொடுக்க 13–வித சன்னிகளும் தீரும்.

சன்னி சுரதோடத்திற்கு இரச செந்தூரம்.

வாலைரசம் 7 கழஞ்சு, கெந்தகம் 10 கழஞ்சு ஒன்றாய்த் தொந்தித்து, குப்பியில் அடைத்து ஏழு சீலைமண் செய்து, ஒரு சட்டியில் 4 விரற்கடை மணல்கொட்டி, அதன் மேல் குப்பியை வைத்து, கழுத்துவரை மணல்கொட்டி மூடி முத்தீயும் 6 சாமம் எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதில் ஒரு பணி எடை இஞ்சிச் சாற்றில் இடத் தீரும்.

சகல சன்னி சுரம், தோடம், வலிப்பு, இளைப்பு, சூலைக்கு பூபதி மாத்திரை.

லோகம், காந்தம், தாம்பிரம், அப்பிரகம், வெள்ளி, சொர்ணம், வங்கம், வெண்கலம், பித்தளை இவைகளின் பற்பங்கள் ஓர் எடையாய குமரிச்

Koviloor Digital Library

சாற்றிலும் நான்கு சாமம் ஆட்டி நிழலில் உலர்த்தி முன்போல் குப்பிக்கேற்றி 12 சாமம் எரித்து தீயாற்றி எடுத்து வைத்துக்கொண்டு திரிகடுகுப் பொடியும், தேனும் கூட்டிக் கலந்து அதில் ஒரு பண எடை வைத்துக்கொடுக்கத் தீரும்.

மருத்துணவு:– கரும்பு, இளநீர், சர்க்கரை, பால், தயிர், மோர் கூட்டிப் பத்தியம் கொள்ளலாம். உப்பு, புளி தள்ளவும்.

காக்கை வலிப்பு நோயின் இயல்பு.

பித்தம் உடம்பெங்கும் பாய்ந்து, சித்தம் கலங்கி உணர்வற்று மயங்கி நாக்கை, உதட்டை, மூக்கை, கண்ணை, புருவத்தைச் சேர்த்திழுத்து வலிப்புக்கண்டு உறுப்புகள் உதறி அலமலைத்துக் கீழே தள்ளும்; வாயில் வெண்ணுரை தள்ளும்; மேல் சுவாசம் வாங்கும்.

மருத்துவம்:– காட்டாமணக்கு, பிரமி, நிலவாகை, நொச்சி, ஆடாதோடை, சங்கங்குப்பி, வெள்ளறுகு, அவுரி, சீந்தில், முடக்கொத்தான், முசுமுசுக்கை, பொடுதலை, புளியிலை, கருநொச்சி இவைகளின் இலைச்சாறு, நாரத்தம் பழம், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், இஞ்சி இவைகளின் சாறு வகைக்கு கால் படி, மிளகு, திப்பிலி, செவ்வியம், சித்திரமூலம், தேசாவரம், நற்சீரகம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, அதிமதுரம், கோட்டம், சுக்கு, காந்தம், கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள் வகைக்கு5 வராகன் எடை, கிட்டம், அரப்பொடி, பூண்டு, கடுக்காய் வகைக்கு 1 பலம், பேய்ப்புடல் 2 பலம், சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சிக் குறுகி வருகிற சமயத்தில் சர்க்கரை 30 வராகன் எடை, தேன் கால் படி கூடவிட்டுக் கிண்டி இளகம் செய்து கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் இருபொழுது தேனில் கலந்து கொடுக்க நீங்கும்.

2. நல்லெண்ணெய் 1 படி, எலுமிச்சம்பழச்சாறு 2 படி, ஒரு பாண்டத்தில் எரித்து நீர் வற்றி வரும்பொழுது பூநாகம் ஒரு தேங்காய் அளவு கூடப்போட்டு பதம் வரும்பொழுது வேப்பன் விதைப்பருப்பு, குங்கிலியம், மஞ்சள், கம்பிப்பிசின், கொன்றைப் பிசின் வகைக்கு 3 வராகன் எடை பொடித்துப் போட்டு உள்ளுக்கு ஒரு கரண்டி அளவு கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

3. தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, சிறுதேக்கு, கருஞ்சீரகம், கடுகுரோகணி, கடுகு, ஓமம், தேவதாரம், ஆனைத்திப்பிலி, அதிவிடயம் வகைக்கு 10 பலம் இவைகளைக் குழித்தைலம் இறக்கி உள்ளுக்கு ஒரு கரண்டி அளவுகொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

4. முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், பொன்முசுட்டை வேர், முசுமுசுக்கைவேர், பேய்ப்புடல், இலுப்பைப்பூ இவைகளை சமமாகக் கூட்டி இதற்கு நான்கில் ஒரு பாகம் நேர்வாளம் கெந்தகம், அரிதாரம் ஓர் எடையாய் சேர்த்து வலியன் பித்திலும், எலுமிச்சம்பழச் சாற்றிலும் அரைத்துக் குன்றி எடை உருண்டை செய்து ஒரு வேளைக்கு ஒரு உருண்டை தேனிலாவது சர்க்கரையிலாவது கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

5. காட்டுக் காகத்தை அறுத்து இறகு, ஈரல், குடல், தலை, கால் போக்கி வயிற்றைக் கீறி, சுக்கு, மிளகு, சீரகம், கல்லுப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு இவைகளை வகைக்கு 2 வராகன் எடை பொடித்து மேற்படி காகத்தின் வயிற்றில் வைத்து தைத்து ஒரு படி சாராயத்தில் போட்டு வெந்தபின்பு மருந்தை எடுத்து மைபோல் அரைத்துப் பாக்களவு தினமும் சாப்பிட்டுவந்தால் நோய் குணமடையும். உப்பு, புளி தள்ளவும்.

குதிரை வலிப்பின் இயல்பு.

கண்ணும், புருவமும், கதித்திருக்கும், காலும் கையும் ஒரு பக்கம் இழுத்து வலிப்பு காணும்; வாயில் வெண்மையான நுரை தள்ளும்; விழிகண்ணைப் பார்த்து நிற்கும்; உறுப்புகள் தீப்போற் காந்தும்; உடல் படபடத்து நடுங்கும்; நெஞ்சில் கபம் கட்டும்.

மருத்துவம்:– வெங்காரம், உள்ளி, நேர்வாளம், மிளகு, சுக்கு, திப்பிலி, கடுகு, பெருங்காயம், நற்சீரகம், வெந்தயம், கெந்தகம், வசம்பு, வெளிச்சிப்பிசின், படிக்காரம், ஓமம், துருசுச் செந்தூரம், குதிரவாலி, அவுரி குருந்து, நொச்சி, ஆடாதோடை, குருந்தொட்டி, முருங்கை, தூதுளை, வெள்வேல் சாரடை, கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு ¼ பலம் (8 ¾ கிராம்) வீதம் இடித்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டு வடித்து உள்ளுக்கு ஒரு காசெடை கொடுத்து மேலிலும் பூச குணமாகும்.

2. சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, வெள்ளுள்ளி, நேர்வாளப் பருப்பு, வசம்பு இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து அரைத்துக் கயிறுசெய்து மேற்படி சாற்றில் அரைத்துக் கண்ணில்விட குதிரைவலிப்பு, சன்னிவாத வலிப்பு குணமாகும்.

குமரகண்ட வலிப்பின் இயல்பு.

கண்ணும் வாயும் கோணும்; காலும்கையும் ஒருபக்கம் விட்டுவிட்டு வலிப்பெடுக்கும்; சுரங்காயும்; தலைவலிக்கும்; எமக்கோட்டாலை போல் வருத்தப்படுத்தும்; மூர்ச்சைகாணும்.

பொன்முசுட்டைவேர், தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு இரசம், கெந்தகம் இவைகளை ஒரு நிறையாய் வில்வ இலைச் சாற்றால் அரைத்து மிளகு அளவு உருட்டி நிழலில் உலர்த்திக்கொண்டு மிளகுதக்காளிச் சாற்றில் கொடுக்கத் தீரும்.

முயல்கண்ட வலிப்பின் இயல்பு.

வாயால் மண்ணைக்கவ்வும்; நுரைதள்ளும்; விழிவட்டஞ் சேர்ந்து நட்டமாய் நிற்கும்; துள்ளவலிக்கும்; தோள், மார்பு வலித்துக்கூட்டிச் சுருக்கு விக்கும்; கோபம் துயரம் மிகும்.

மருத்துவம்:– முயல் இரத்தம், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி, பெருங்காயம், ஆனைத்திப்பிலி, கல்மதம், குரோசனிஓமம், புனலித்தண்டு, அழிஞ்சிலைநொச்சிலி வேர், நித்தகத்திரிப்பழம் இவைகளை

Koviloor Digital Library

ஓர் எடையாய்ச் சிதைத்துப் போட்டுக் காய்சசி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

உட்குத்து, புறவீச்சு, காக்கை வலிப்பு, குமரகண்டம், முயல்கண்டன், குதிரைவலிப்பு முதலான வலிப்புகளுக்கும் சன்னிகட்கும் தைலம்.

1. சுக்கு 1 கழஞ்சு சிதைத்து நான்கு படித் தண்ணீரில் போட்டுக் கால்படியாய் வற்றவைத்து அதில் இஞ்சிச்சாறு அரைப்படி, அண்டத்தைலம் வெள்ளுள்ளித் தைலம், வேப்பெண்ணெய்வகைக்கு ¼ படி, மயிற்பீலி, ஆகாசத்தூள், பூநாகம், கீழ்க்காய் நெல்லிவேர் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் கொடுத்து, மேலிலும் பூசி, காதில் அடைத்து, மூக்கிலும் முகர மேற்படி நோய்கள் தீரும்.

2. காயம், உள்ளி, வசம்பு, தாரம், சௌக்காரம், கரியபோளம், மஞ்சள், சித்திரமூலம், மாவிலிங்கப்பட்டை, வாகைப்பட்டை, பெருமரத்துப்பட்டை, சிறுகுரிஞ்சாவேர், எருக்கம்வேர், புங்கம் வேர், மல்லிகைவேர், சதுரக்கள்ளிவேர், மரமஞ்சள், நெரியசிரிப்பால் வகைக்கு ¼ பலம் வீதம் இடித்து, 2 படி ஐந்து எண்ணெயில் போட்டு அண்டத்தைலம் அரைக்கால் படி கூடி விட்டுக் காய்ச்சி வடித்து உடம்பிற் பூச மேற்படி நோய்கள் தீரும்.

மேற்படி நோய்கட்கு நசியம்.

அவுரி, வசம்பு, உள்ளி இவைகளை ஒன்றாய்ச் சிதைத்து மூக்கில் முகரச் செய்ய மேற்படி நோய்கள் மாறும்.

முயல்கண்ட வலிப்பு, காக்கை வலிப்பு, குமரகண்ட வலிப்புக்கு மருந்து.

ஒட்டடை 2 பலம் (70 கிராம்), கழற்சிப்பருப்பு 1 பலம் (35 கிராம்), கடுக்காய் அரைப் பலம் (17 1⁄2 கிராம்), வெள்ளுள்ளி அரைப்பலம் (17 1⁄2 கிராம்) இவைகளை அரைத்துக் கழற்சி அளவு வேப்பெண்ணெயிலாவது விளக்கெண்ணெயிலாவது கொடுக்க, பத்தியம் வெந்நீரும் அன்னமும் கொடுக்கத் தீரும்.

காக்கை வலிப்பு, முயல்வலிப்பு, குமாகண்ட வலிப்பு, முகவாத சன்னி, சன்னி தோடம், உட்குத்து, புறவீச்சு வாதம், வாயு, பாரிச வாயு, பக்க வாதம், இளம்பிள்ளை வாதம், அண்ட வாதம், மண்டைக்குத்துவடி பீனிசத்திற்கு மருந்து.

நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், வகைக்கு 8 படி, தழுதாழை,

Koviloor Digital Library

காட்டாமணக்கு, நாயுருவி, தைவேளை, குப்பைமேனி, மாவிலங்கு, வேம்பு, புங்கு, வெண்ணொச்சி, தூதுவளை, கண்டங்கத்திரிக்காய், குருந்து, கருவாகை, சங்கு, கொடிவேலி, நிலக்கடம்பு, சடச்சி இண்டு, அவுரி, மருக்காரை, எருக்கு, புன்முருங்கை, வெள்ளைச்சாரடை, மருதோன்றி, காட்டுமல்லிகை, ஊமத்து, உத்தாமணி, கழற்கொடி, மிளகரணை, திரிகுகள்ளி, குமிழ், அமுக்கரா, பிரப்பங்கிழங்கு, குன்றி, எட்டி, வெட்பாலை, கடம்பு, சிறுசன்னி, இலுப்பைவேர், புல்லுருவி, ஆயில் இவைகளின் வேர் வகைக்கு 10 பலம் (350 கிராம்) இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு வற்றவைத்துக் குடிநீர் 6 படி, பெரும்பூசணிக்காய்ச் சாறு 6 படி ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, ஓமம், அரத்தை, தாளிசபத்திரி, சுக்கு, கண்டந்திப்பிலி, குரோசாணி ஓமம், கருஞ்சீரகம், கிராம்பு, குக்கில், சதகுப்பை, கடலிராஞ்சிப்பழம், சிறுநாகப்பூ, சடாமாஞ்சில் வகைக்கு அரைப் பலம் (17 ½ கிராம்) வீதம் வெள்ளாட்டு நீரில் அரைத்துப்போட்டு மயிலிறகு அரைப் பலம் (17 ½ கிராம்) கூடப்போட்டு எடுத்துப்பதத்தில் வடித்து அதில் சாதிலிங்கம், கஸ்தூரி, புகையூரல் வகைக்கு 2 கழஞ்சு எடுத்துப் பொடித்து அண்டத்தைலம், வெள்ளுள்ளித்தைலம், முசுருமுட்டைத் தைலம் வகைக்கு கால் படி விட்டு விரலில் ஒரு பண எடை வீதம் உள்ளுக்கும் கொடுத்து மேலிலும் பூச நோய் தீரும். புளி, புகையிலை தள்ளவும். உப்பை வறுத்துச் சேர்த்துக்கொள்ளவும்.

குழந்தைகளுக்குக்காணும் வாயு, குமரகண்ட வலிப்புக்கு எண்ணெய்.

ஒரு படி வேப்பெண்ணெயில் நெய்க்கொட்டான் பழம், மயிலிறகு, வெள்ளுள்ளி, வசம்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்) கட்டிப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்கும் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

சன்னிப் படலம் முற்றும்.

எருவாய் நோய்ப் படலம்.

அதாவது எருவாய் வழியால் கனலேறி துவாரப்பட்டு ஒன்பது விதமான மூலத்தையும் பற்பல நோயையும் பிறப்பித்தலாம்.

எருவாய் நோய் வரும் (மூலம்) காரணம்.

காயத்தில் மூலங்கண்ட விதங் கேளு
பாயொத்த தினமே பரிந்தே யடக்கினும்
மாயை மயக்க மலத்தை யடக்கினும்
ஓயிற்ற குண்டலிக்குட் புகும் வாயுவே.

எருவாய் நோயின் விவரம்.

உள்எருவாய்நோய் (உள்மூலம்), புறஎருவாய்நோய் (புறமூலம்), குருதிஎருவாய்நோய் (இரத்தமூலம்), சீழ் எருவாய்நோய் (சீழ்மூலம்),

Koviloor Digital Library

எருவாய்ப்பாண்டு (மூலப்பாண்டு), எருவாய்முளை (முளைமூலம்), வளி, அழல், ஐய எருவாய்நோய்கள் ஆகியனவாம்.

உள்எருவாய்நோயின் இயல்பு (உள்மூலம்)

அபானத்துள் தசைபோல் வளர்ந்திருக்கும்; மலத்தை இறுக்கும் மந்திக்கும்; இரத்தம் மலத்தில்விழும்; இடையில் வயிறு வலிக்கும்; பலங்கெடும்; உடல் வரளும்.

மருத்துவம்:– நன்னாரி, முக்காவேளை, சீராசெங்கழுநீர், ஓரிலைத்தாமரை, மருள், காட்டுக்கரணை, வெருகன்கிழங்கு இவைகளின் கிழங்கு வகைக்கு 3 பலம் (105 கிராம்), மிளகு, திப்பிலி, நற்சீரகம், அக்கிராகாரம், ஓமம், கருஞ்சீரகம், இலவங்கம், வாய்விளங்கம், கொத்தமல்லி, குரோசானி ஓமம், வகைக்கு 5 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 வராகன் எடை, இலவங்கப்பட்டை 1 பலம் (35 கிராம்) இவைகளை இடித்துத் தூள் செய்து கொண்டு வேளை ஒன்றிற்குத் திரிகடி அளவு இரண்டு வேளை, 12 நாள் உட்கொள்ள உள்மூலம், கிராணி, மூலக்கடுப்புத் தீரும். பத்தியம்; உப்பு, புளி தள்ளவும்.

2. திப்பிலி கால் பலம் (8¾ கிராம்), அரைத்து அரைக்கால் படி கோதுமைமாவில் கலந்து திருகுகள்ளியை நறுக்கி ஒரு பாத்திரத்தில் போட்டு இரண்டு படி தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன்மேல், மேற்படி மாவை வைத்துப் பிட்டவித்து நல்லெண்ணெயும் வெல்லமும் கலந்து 7 நாள் சாப்பிட நோய் தீரும்.

3. முள்ளிவேர், பிரண்டைவேர், கற்றாழைவேர், கடுக்காய், சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு இவைகளை ஓர் எடையாய் அரைத்துப் புளித்த மோரில் கரைத்துக் கொடுக்க நோய்த் தீரும்.

புற எருவாய் நோயின் இயல்பு (புறமூலம்)

எலும்பில் அனலேரி அபானவாயிற் கத்திபோல் சதை வளர்ந்து உள்ளும் புறமுமாயிருக்கும்; அபானங் கடுக்கும்; தினவெடுக்கும்; இரத்தம் விழும்.

மருத்துவம்:– காட்டுக்கருணை, நிலப்பனை, புளியமடல், வெருகன்கிழங்கு, மணிப்பிரண்டை, அப்பைக்கோவை, அமுக்கறா, மருள் இவைகளின் கிழங்கு வகைக்கு 5 பலம் (175 கிராம்), சித்திர மூலம் 2 பலம் (70 கிராம்), மிளகு, திப்பிலி; தேசாவரம், ஓமம், கடுகுரோகணி, இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, கருஞ்சீரகம், காந்தம், அதிமதூரம், கோஷ்டம், வசம்பு, ஓமம் ஒவ்வொன்றும் வகைக்கு 5 வராகன் எடை, வெள்ளைப் பெருங்காயம் 4 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, சாதிபத்திரி 1 வராகன் எடை, வெள்ளைப் பூண்டு 1 பலம் (35 கிராம்), இவைகளை இடித்துத் தூள் செய்துக்கொண்டு வேளையொன்றுக்குத் திரிகடி அளவு இருநேரமும் அரைமண்டலம்கொள்ளப் உட்புறமூலமுளை கரையும். சகல மூல வாயுவுத் தீரும். பத்தியம்; உப்பு புளியும் தள்ளவும்.

Koviloor Digital Library

சீழ் எருவாய் நோயின் இயல்பு (சீழ்மூலம்)

உடம்பில் வெப்பம் அதிகரித்ததால் அடிவயிறு வலித்து நொந்து புண்ணாகிச் சீழ் தோன்றி மலத்துடன் சிறுத்து இறங்கும். அபானங் கடுக்கும், மயக்கம் காணும், வாயு அதிகரிக்கும்.

வேறு:– மலம்கழியும்போது அபானமெரிந்து சீதமும், இரத்தமும் விழும். நாபியைச் சுற்றி வலிக்கும்.

மருத்துவம்:– பசுவின் நெய் கால்படி, தென்னம்பூச்சாறு அரைப்படி ஒன்றாய்க் கலந்து மாதுளம் பழ ஓடு, மருட்கிழங்கு, காட்டுக் கரணைகிழங்கு, காறாக்கருணைகிழங்கு, செங்கத்தாரிப்பட்டை, ஆவாரம் வேர்ப்பட்டை, புளியவிதைத்தோல், ஆவாரையரிசி, பாக்கு, ஒவ்வொன்றும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு, மிளகு, அதிமதுரம், கோட்டம், நற்சீரகம், விளாம்பிசின், காசுக்கட்டி, வாலிமிளகு வகைக்கு 6 வராகன் எடை, ஏலம் 1 வராகன் எடை, இலவங்கப்பட்டை 1 பலம் (35 கிராம்), கிராம்பு, சாதிக்காய் வகைக்கு 2 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுச் சர்க்கரை 1 பலம் (35 கிராம்), ஆகிய இவைகளை ஒன்றாய்க் கலந்து இளகம் செய்து நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு 28 நாள் உட்கொள்ள இரத்தமூலம், சீழ்மூலம், கடுப்புவாயு தீரும். பத்தியம்: உப்பு, புளிப்பு தள்ளவும்.

2. ஈருள்ளி 5 பலம் (175 கிராம்) சிறுகு அறிந்து பன்றி நெய்யில் பொரித்து 5 நாள் கொடுக்கச் சீழ் மூலம் தீரும்.

3. காரெள்ளு, கடுகு, திப்பிலி, சுக்கு ஒவ்வொன்றும் வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவைகளை வெதுப்பித் தூள்செய்து திரிகடி அளவு வெந்நீரில் 21 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

இரத்த மூலக்குணம்

கொப்பிளை சுற்றி வயிறு வலித்து நொஞ்சு இரத்தம்விழும் மூலம் வெளியிற்தள்ளும். மலஞ்சிக்கும் அடிவயிறு இரையும். கைப்பும் புளிப்பும் மிகவிரும்பும். அன்னம் செள்ளது. உடல் வெளுத்து வற்றும் அப்பானம் கடுக்கும். வெப்புத் தோன்றும்.

எருவாய்ப்பாண்டு (மூலப்பாண்டு)

1. பித்தம் உடம்பெங்கும் பாய்தலால் உடம்பு வெளுத்து ஊதும், அந்த இரத்தம் உருண்டு திரண்டு வயிற்றில் தங்கி பிதிர்போல் மிகவிழும்; தொப்புளைச்சுற்றி வலிகாணும்; மேல்மூச்சு, இளைப்பு தோன்றும்; அடிவயிறு இரையும்; மலம் சிக்கும், அன்னம் செல்லாது; உப்பையும் புளிப்பையும் மிக விரும்பும்; இதை இரத்த மூலபாண்டென்று சொல்லப்படும்.

மருத்துவம்:– கையாந்தகரை, பொடுதலை, புளியிலை, நீர்முள்ளி, நொச்சி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கங்குப்பி, பிரம்மி, நெல்லிக்காய்,

Koviloor Digital Library

காட்டுமல்லிகை, எலுமிச்சம்பழம், இஞ்சி இவைகளின் சாறு வகைக்கு கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வியம், தேவதாரம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, நற்சீரகம், காந்தம், அரத்தை வகைக்கு 5 வராகன் எடை, அரைப்படி, கிட்டம் வகைக்கு 1 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை, ஏலம், கோட்டம், குரோசாணி ஓமம், அதிமதுரம், வகைக்கு 3 வராகன் எடை, சாதிப்பத்திரி கால் வராகன் எடை, இலவங்கப்பட்டை, கடுக்காய்த் தோல் வகைக்கு 1 பலம், அரைத்துப் போட்டு, குருகிவரும்போது பசுவின் நெய், தேன் வகைக்கு கால் படி, சர்க்கரை 3 பலம் இவைகளைக் கூட்டி இளகம் செய்துகொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு இரண்டு வேளையும் தேனில் குழைத்து உட்கொள்ள இரத்தமூலப் பாண்டு, பித்தப்பாண்டு, விஷபாண்டு, காமாலை, சோகை, குன்மம், வாயு தீரும். கைப்பு, புளிப்பு தள்ளவும்.

2. ஈருள்ளிச்சாறு, பசுவின் பால் வகைக்கு அரைப் படி, பசுவின் நெய் கால் படி, அதிமதுரம் 1 பலம், இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் மேற்படி பால்விட்டு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி நாழியொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் இரண்டு வேளையும் 5– நாள் சாப்பிட சீழ்மூலம், இரத்தமூலம் தீரும். பத்தியம் உப்பு, புளி தள்ளவும்.

3. திரிகடுகு, கோட்டம் ஓர் எடையாய்த் தூள்செய்து அதற்கு நிகர் வெண்மைச் சக்கரையும், முந்திரிப் பழமும் கூட்டி பசுவின் நெய் விட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு இரண்டு நாள் கொடுக்கத்தீரும்.

4. நாயுருவி இலையைக் கொட்டைப் பாக்களவு அரைத்து நல்லெண்ணெய்யில் குழைத்து 7 நாட்களுக்கு இரண்டு வேளைக் கொடுத்தால் நோய் குணமாகும். இவ்விரண்டும் இச்சாபத்தியம்.

5. வாழைப்பூவைச் சிதைத்து கால் படி சாறுபிழிந்து அதில் சீரகம் பாக்களவு அரைத்துப் போட்டுக் கொடுக்க இரத்தக் கடுப்பு உடனே தீரும்.

6. ஒரு பீங்கான் பாத்திரத்தில் வெள்ளைசர்க்கரை அரைப்பலம், பசுவின் நெய் ஒரு படி (மாகாணி) எலுமிச்சம்பழச்சாறு அரை படி, வீதம் விட்டு மெழுகாகும் வரை பளிங்கு மத்தால் பிரண்டைக் கொழுந்தை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பியுண்ணத்தீரும். அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட இரத்தம் விழுதல் தீரும்.

7. சுக்கு, திப்பிலி, ஓமம், தேசாவரம், அதிவிடையம், காயம், பொரிகாரம், கோட்டம், சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, குரோசானி ஓமம், வெந்தயம், சீரகம், விலாமிச்சம், வசம்பு சுட்டசாம்பல், அபின் வகைக்கு 2 வராகன் எடை காட்டுக்கருணை, கறிக்கருணை, புளிக்கருணை, வெருகன்கிழங்கு, மருள், கொடிவேலி இவைகளின் கிழங்கு வகைக்கு 3 பலம், வெள்ளுள்ளி ஒரு பலம் இடித்துச் சூரணம் செய்து ஒரு சட்டியில் அரைப் படி பசுவின் பாலும், அரைப்படி ஈருள்ளிச் சாறும் கலந்து விட்டு வேடு கட்டி அதன் மேல்

Koviloor Digital Library

மேற்படி சூரணத்தை வைத்தப் பிட்டவித்து உலர்த்தி அதில் கருப்புக் கட்டி ஒரு பலம் கூட்டி வைத்துக் கொண்டு தேனில் திரிகடி அளவு சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

எருவாய்முளை நோய்க்கு மருந்து (மூலமுளை)

1. தூய்மைசெய்த கருவங்கம் கால் பலம், இரதம் 2 வராகன் எடை இவற்றை ஒன்றாய் உருக்கி குஞ்சு பொரித்த அண்டத்தோலை சவ்வு நீக்கி 7 வராகன் எடை கூடச் சேர்த்துப் பொடித்து ஒரு குகையில் இட்டுச் சில்லுபோட்டு மூடி, ஐந்து சீலைமண் செய்து உலையில் வைத்து பழக்க ஊதி, ஆறவிட்டு எடுத்தால் சுண்ணமாகும். அந்தச் சுண்ணத்துடன் 1 வராகன் எடை, வீரம் வராகனெடை ½, பூரம் துருசு வராகனெடை–1 எருமைப் பச்சைப்பால் புரை குத்திக் கடைந்த வெண்ணெய் 3 வராகன் எடை கூட்டிக் களிம்புபோல் அரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு புறமூலத்தின் முளையில் இரண்டு நாழிகைக்கு ஒரு முறைத் தடவிவர கரைந்துவிடும். உள் மூலத்தை வெளியில் இழுத்துச் சற்றுக்கீறி மேற்படி களிம்பைச் சாடையாய் தடவ, முளை அற்று விழும். பிறகு தயிரும் சோறும் கட்டவும்.

2. மிருதார்சிங்கி 20 வராகன் எடை, சீனாக்காரம் 10 வராகன் எடை இவற்றை ஒன்றாய்ப் பொடித்து ஒரு திராவகப் பானையில் போட்டு சீலைமண் வலுவாய்ச்செய்து திராவகம் இறக்கி, கோழிஇறகில் தொட்டு, மூல முளையில் தடவி எருமைத் தயிரும், சோறும் வைத்துக்கட்ட 3 அல்லது 7 நாள்களில் விழுந்து போகும்.

3. கழுதை நீரில் பூநீரைக் கரைத்து அதில் வெள்ளைப் பாடாணத்தைத் துலாந்திரங்கட்டி எரித்து எடுத்து, இரும்புக் கரண்டியில் வைத்து வெள்ளெருக்கம் பாலை சுருக்குக் கொடுத்து இரண்டு ஓலை கனம் மேற்படி சாற்றின் வண்டல் கட்டியின் பேரில் பிடித்தபின் எடுத்து பழுத்து உதிர்ந்த பின் சுட்ட கொடிக்கள்ளிச் சாம்பலை 2 படி ஒரு சட்டியில் கொட்டி அதன் மத்தியில் மேற்படி கட்டியைவைத்து மேல் சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து காடாக்கினியாய் 2 சாமம் எரித்து ஆறவிட்டு எடுக்கப் பற்பமாகும். அதை 2 பாசிப்பயறு எடை பசுவின் வெண்ணெயில் மூன்று பொழுது உட்கொள்ள மூலமுளை, பவுத்திரம் தீரும். இச்சாபத்தியம்.

4. பூரம், தாளகம், மனோசிலை, வெங்காரம், கல்நார் வகைக்கு 1 பலம் இவைகளைக் கொடிக்கள்ளிப் பாலால் ஒரு நாள் ஆட்டிக் குகையில் வைத்துச் சீலைமண்செய்து, குக்குடப்புடம் போட்டு, ஆறினபின் எடுத்துப் பசுவின்பால், கள்ளிப்பால், கற்றாழம்பால், எலுமிச்சம் பழச்சாறு, கரிசாலைச்சாறு இவைகளில் வகைக்கு ஒவ்வொரு சாமம் ஆட்டித் தூதுளங்காய்ப்போல் உருண்டை செய்து உலர்த்தி ஒரு நாழிகைக்கு ஓர் உருண்டை வீதம் சர்க்கரையில் வைத்த ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள சகல மூலமுளையும் அற்றுப் போகும்.

5. எருக்கம் பஞ்செடுத்துக் கயிறு திரித்து அதன் மேல் சேங்கொட்டைப் பாலைத் தடவி மூலமுளையில் கட்டிவைக்க வேர் அற்று விழும். விழுந்தவுடன்

Koviloor Digital Library

நொச்சி இலையை வதக்கி ஒற்றடம் செய்து தயிரும், சோறும் வைத்துக்கட்டத் தீரும்.

6. எருமைக்கொம்பைச் செதுக்கி, குகையிலிட்டு ஊதிக் கரியாக்கி பசுவின் வெண்ணையில் அரைத்து மூலமுளையில் 3 நாள் பூசிவைக்க வேரற்று விழும். பிரண்டையும், மாவிலிங்கிலையும் வெதுப்பி ஒற்றடம் செய்யத் தீரும்.

7. புரசு மேல் புல்லுருவியை உலர்த்தித் தூள்செய்து திரிகடி அளவு 3 நாள் உட்கொள்ள மூலமுளை வெளியில் வரும். வந்தவுடன் நீர்போக்கின எருமைத் தயிரை மூலத்தில் ஆறு நாள் கட்ட வேர் இற்றுபோகும்.

8. வேப்பமுத்தின் பருப்பு அரைத்தது ஒரு எலுமிச்சங்காய் அளவு சற்றே வெதுப்பி வில்லைகட்டி மூன்றுநாள் எருவாயில் வைத்துக் கட்ட புழு விழும். வேர் (மூலம்) கரையும்.

9. பேய்ப்பீர்க்கன் விதை, துருசு, கொடிவேலி வேர்ப்பட்டை வகைக்கு ஒரு பண எடை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து பசுவின் வெண்ணெயும் தேனும் சேர்த்துக் குழைத்து முலமூளையில் 3 நாள் தடவி, வெந்நீரில் தலைமுழுக்குச் செய்ய வேர் கரையும்.

10. செங்கொடிவேலிவேர், மஞ்சள், பொன்னரிதாரம், இவைகளைச் சமமாய்ப் பொடி செய்து வேரில் தடவக் கரையும்.

11. எருக்கம்பட்டை, வெள்ளுள்ளி வகைக்குக் கால் பலம் மைபோல அரைத்து ஒரு நாழிக்கு ஒரு பாக்களவு எருமைத் தயிரில் 5 நாள் கொடுக்க மூலவேர் அடியோடு அற்றுவிழும்.

12. வெடியுப்பு சுண்ணாம்பு, துருசு வகைக்கு 2 வராகன் எடை, இவற்றில் பசும் நெய் விட்டரைத்துத் தேனில் குழைத்து 3 நாள் தடவி 4 ஆம் நாள் ஆதண்டையிலையைக் காடியில் அவித்துக் கழுவத் தீரும்.

13. பொரிகாரம், வெங்காரம், சவுக்காரம் இவைகளைச் சமமாய் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து அபான வேரில் தடவக் கரைந்துபோகும். சாமைத் தவிட்டை அனலில் தூவிப் புகை பிடிக்கவும்.

14. முள்ளங்கி கிழங்கும், பிண்ணாக்குக் கீரையும் அவித்துத் தின்று வர அபானவேர் விழுந்து போகும்.

15. பழைய மாங்கொட்டைப் பருப்பு 4 பலம், மணத்தக்காளிச் சாற்றால் அரைத்து உலர்த்தித் தூள்செய்து பாக்களவு எருமைத் தயிர்த் தண்ணீரில் 6 நாள்கள் கொடுக்க அபானவேர் கரைந்து விழும். நீர்மேல் நெருப்பையும், பாம்புச் சட்டையையும் இடித்து நெருப்பில் தூவிப் புகை பிடிக்கவும்.

16. முத்தெருக்கஞ் செவி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், சீரகம் வகைக்கு 1 பலம் தூள்செய்து பாக்களவு இரண்டு வேளை 7 நாள்கள் வெந்நீரில்

Koviloor Digital Library

உள்ளுக்குக் கொடுத்து மேற்படி சரக்குகளை எருக்கம்பாலில் மைபோல் அரைத்து அபான வேரில் தடவ விழுந்துபோகும்.

17. கௌரி பாடாணத்தையும், சுண்ணாம்பையும் ஓர் எடையாய்க் கலந்து ஒரு நாளைக்கு மூன்று தடவை வேரில் பூச வேர் கரைந்து போகும். விளக்கெண்ணெயில் துணியை நனைத்துப் போட எரிச்சல், இரத்தம் வடிதல் மாறும். அதன் பேரில் வேப்பம்பட்டையையும், ஓதியம்பட்டையையும் தட்டி நல்லெண்ணெயில அரைத்துப் புண்ணின் மேல் போட்டுவர புண் ஆறும்.

18. பெருங்காயம், படிக்காரம், தேங்காய் கொட்டாங்கச்சிக் கரி ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மைபோல் அரைத்து உலர்த்தி அப்பால் மேற்படி கொட்டாங்கச்சித் தார் (கொட்டாங்குச்சிதார் = கொட்டாங்குச்சிக் குழித்தைலம் என்றறிக.) விட்டுக் குழம்புபோல் அரைத்து அபானவேரில் பூச 3 நாள்களில் கரைந்து போகும்.

19. மைக்கொன்றைக் கொழுந்தில் விளக்கெண்ணெய் தெளித்து வறுத்துத் துணியில்வைத்து ஒற்றடம்செய்து இளஞ்சூடாயிருக்கிற பதத்தில் வைத்துக்கட்ட வேர் கருக்கும்.

20. ஆவாரங்கொழுந்தையும் அதுபோல் செய்தாலும் வேர் கருகும். கடுப்பும் தீரும்.

21. ஆவாரங்கொழுந்து பூ, பட்டை, அறுகம்வேர் இவைகளை ஓர் எடையாய் நிழலில் உலர்த்தி, அதை இடித்துத் தூள் செய்துக் கொண்டு திரிகடி அளவு பசுவின் நெய்யில் ஒரு மண்டலம் உட்கொள்ள உள் அபானவேர் கரையும், இச்சாபத்தியம்.

22. ஆகாசத்தாமரை இலையை உலர்த்திப் பொடித்து வடிகட்டின தூளும், கருங்குருவையரிசி, மாவும் ஒன்றாய்க் கலந்து பிட்டவித்து நல்லெண்ணெய் விட்டுப் பிசைந்து உள்ளுக்குக் கொடுத்து மாதுளங்கொழுந்தை காடியில் அவித்துக் கட்டவேர் விழும்.

23. வட்டத் துத்தியிலையைத் தண்ணீர்விட்டு நன்றாய்ப் பிசைந்து பிழிந்து அதில் நல்லெண்ணெயாவது பசுவின் நெய்யாவது விட்டுக் கலக்கி மூன்று நாள் கொடுக்க வேர் விழும்.

24. எருமைத் தயிரில் நீர்ப்பூலா இலையை அரைத்துக் கலக்கி 6 நாள் கொடுக்க மூலமுளை கரைந்து விழும்.

25. புளியங்கொட்டையின் மேல்தோலை எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் பாலில் ஐந்து நாள் கொடுக்கத் தீரும்.

26. கல்மதத்தைப் பசுவின் வெண்ணெயில் அரைத்து விரலில் தடவி ஆசன வாயில் தடவ மூலமுளை நீராய் கரைந்துவிழும்.

சகல எருவாய் நோய்க்கும் பொதுமருந்து (மூலம்)

1. கொடுவேலி, மிளகரணை, கொழுஞ்சி சரக்கொன்றை, மா இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு முத்தக் காசு, கடுக்காய், கடுக்காய்ப்பூ,

Koviloor Digital Library

புளியாரை, சிற்றரத்தை, குங்குமப் பூ, சாதிக்காய் பிரண்டை இவை எல்லாவற்றையும் உலர்த்தி இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாய்ச் சர்க்கரை கூட்டி ஒரு மண்டலம் உட்கொள்ளத் தீரும்.

2. முப்பிரண்டை, கார்த்திகைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, காட்டுக் கருணைக்கிழங்கு, சித்திரமூலம், அமிர்த வள்ளிக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு மாதுளைவேர், அப்பைக்கிழங்கு இவைகளைப் பாலில் அவித்துச் சத்து வகைக்கு அரைப் பலம், கோவை, முசுமுசுக்கைஆல், அத்தி, அரசு, மணிப்பிரண்டை, அகத்தி, மணித்தக்காளி, மாதுளை இவைகளின் வித்து வகைக்கு அரைப் பலம், கிராம்பு, சாதிப்பத்திரி, காயம், தக்கோலம், மாசிக்காய், அதிவிடயம், ஓமம், திரிகடுகு, சீரகம், வாளுழுவையரிசி, அபின், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், அரத்தை வகைக்கு அரை வராகன் எடை இவைகளை வெதுப்பிப் பொடித்துக் கொண்டு ஒரு சட்டியில் இரண்டுபடி பால் விட்டு, சர்க்கரை, கற்கண்டு வகைக்கு 4 பலம் பொடித்துப் போட்டு பாகுசெய்து அதில் மேற்படி தூளைக் கிண்டி கால் படி நெய் விட்டுக் கிண்டி இளகம் செய்துக்கொண்டு கொட்டைப் பாக்கு அளவு இளகத்தில் ஒரு வராகன் எடை, பவழ பற்பம், வைத்துச் சாப்பிட்டு சுடுநீர் குடித்து வரவும், இவ்விதம் 14 நாள் சாப்பிடத் தீரும்.

3. கற்றாழஞ் சருகு, முத்தக்காசு, கருணைக்கிழங்கு, வெருகன் கிழங்கு, சுக்கு, சித்திரமூலம், மருட்கிழங்கு, கடுக்காய், பிரண்டை, கொன்றைப்பட்டை, புளியமடற் கிழங்கு, காட்டுக் கருணைக் கிழங்கு இவைகளை ஓர் எடையாய்ப் பாலில் அவித்து உலர்த்தி இடித்துத் தூள்செய்த சர்க்கரை கலந்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

4. கடம்பு, நொச்சி, பருத்தி, கள்ளி இவைகளின் இலைகளைச் சமமாய் இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு மூடி சீலைமண் செய்து மேல்சட்டியில் துவாரமிட்டுத் துணியால் அடைத்துப் பாதித் தண்ணீர் வற்றினபின் துவாரத்தின் அடைப்பை எடுத்து அதன் வழியாய் ஆவியை எருவாயில் பிடிக்க சகலமூலமும் தீரும்.

5. காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டை, கொடுவேலி, எருக்கு, புளியமடல், மருள் இவைகளின் கிழங்கு வகைக்கு 1 பலம் உலர்த்தித் தூள் செய்து தேனில் பாக்களவு இரண்டு வேளை 7 நாள்கள் கொடுக்கத் தீரும்.

6. கருப்புக்கள்ளியைச் சுட்ட சாம்பல் ஒரு எலுமிச்சங்காய் அளவு, பெருங்காயம் கொட்டைப்பாக்களவு, முடக்கொத்தான் விதை கால் பலம் இவைகளை மேற்படி சாற்றில் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து பழச்சாற்றிலாவது மிளகுக் குடிநீரிலாவது 7 நாள் கொடுக்கத் தீரும். காரமான பொருள்கள் கூட்டலாகாது.

7. சதுரக்கள்ளியை நறுக்கிப் பானையில் போட்டு 4 படித்தண்ணீரில் விட்டு வேடுகட்டி அதன் மேல் ஆழாக்குக் கருங்குருவை மாவைப் பிட்டவித்து 3 நாள் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

8. கொட்டைப்பாசி, ஆதண்டம்பட்டை, கடுக்காய், மிளகு வகைக்கு 1 பலம் தூள் செய்து தேனில் பாக்களவு குழைத்து இரண்டு நேரமும் 5 நாள் கொடுக்கச் சகலமூலமும் தீரும்.

9. அவித்து எடுத்த நத்தைச் சதை 10 பலம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு அரைப்பலம், அதிமதுரம்; ஏலம், சீரகம், மிளகு, வகைக்கு 1 பலம், 1 படி நெய்யில் போட்டுக் காய்ச்சி கடுகுடன் இரண்டு வேளை சிறு கரண்டி வீதம் பத்து நாள்கள் கொடுக்கத் தீரும். காரம் குறைவாகக் கூட்டவும்.

10. நாயுருவியிலை, கருவேப்பிலை, கருணைக்கிழங்கு, பசுவின் வெண்ணெய் வகைக்கு விறாங்காய் அளவு ஆமணக் கெண் ணெய் படிஅரைக்கால் ஒன்றாய்க் கலந்து இளகம் கிண்டிப் புன்னைக் காய் அளவு 5 நாள் சாப்பிடத் தீரும்.

11. சுக்கு, கடுக்காய் வகைக்கு 5 பலம், திப்பிலி, நற்சீரகம், மிளகு வகைக்கு 1 பலம், சித்திரமூலம் 10 பலம் செவ்வியம் 3 பலம், நவாச்சாரம், திப்பிலிமூலம் வகைக்கு 2 பலம், கருணைக்கிழங்கு வற்றல், கோட்டம் வகைக்கு 2 பலம் சூரணித்து பனைவெல்லம் 4 பலம் கூட்டி அரைத்து ஒரு வேளைக்குக் கடுக்காய் அளவு சாப்பிட்டு மோர் குடித்துவரத் தீரும்.

12. பிரண்டையை உலர்த்தித் தூள்செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் குழைத்து 45 நாள் உண்ணத் தீரும்.

13. கடுக்காய், கொடிவேலிவேர் வகைக்கு 5 பலம், திப்பிலி மூலம், நவாச்சாரம் வகைக்கு 2 பலம், மிளகு, சீரகம், திப்பிலி வகைக்கு 1 பலம், தூய்மைசெய்த சேங்கொட்டை, கருணைக் கிழங்கு வகைக்கு 8 பலம், வெல்லம் 4 பலம் இவைகளை உரலில் இட்டு மெழுகுபோல் இடித்துக்கொண்டு ஒரு நாளைக்கு தான்றிக் காய் அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

14. சிவந்தநாயுருவிச் சமூலம் 16 பலம் இடித்து 32 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து இறுத்து அதில் பசுவின் நெய் 1 படி, விட்டுக் கலந்து கொடுவேலி வேர்ப்பட்டை, நற்சீரகம், சிவதைவேர், சேங்கொட்டை, அவுரிப் பட்டை, திரிகடுகு, முன்னைவேர்ப்பட்டை, திரிபலை, பொன்முசுட்டைவேர், வெட்டிவேர், புங்கவேர்பட்டை, தூய்மைசெய்த வாளம், இந்துப்பு, பூண்டு, சிறுகாஞ்சோரிவேர், கத்தூரிமஞ்சள், புளிய மடற்கிழங்கு, பிரண்டைக்கிழங்கு, மருள்கிழங்கு காட்டுக்கருணை வகைக்கு 3 வராகன் எடை வீதம் மேற்படிச் சாற்றில் அரைத்துப் போட்டுச் சிறுதீயாய் நான்கு நாளெரித்து 5 ஆம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து திரிபலையை ஓர் எடையாய்ச் சுட்ட சாம்பல், திரிகடியில் இரண்டு பண எடை நெய்விட்டுக் கலந்து 10 நாள்கள் உதயத்தில் (அதிகாலையில்) கொடுக்கச் சகலமூலமும் தீரும்.

15. பெருந்தும்பை, நொச்சி, கருவேப்பீர்க்கு, முருங்கை ஈர்க்கு, சாரணைவேர், முத்தக்காசு, வகைக்கு ஒரு பலம், திப்பிலி, மலைதாங்கி வேர் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை ஓர் எடையாய் இடித்து 3 பங்கு

Koviloor Digital Library

செய்து ஒரு பங்கில் இரண்டு படி தண்ணீர்விட்டு அதில் மிளகு, திப்பிலி, சுக்கு, பூண்டு, ஓமம், வசம்பு இவைகளை வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் கிழிகட்டிப்போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து கிழிகட்டின மருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

இவ்விதம் மூன்று நாள் ஆறுபொழுது செய்ய மூலம் கூட்டோடே விழுந்து போகும்.

16. சுக்கு வேப்பீர்க்கு, வெள்ளுள்ளி, திப்பிலி வகைக்கு 3 வராகன் எடை இவைகளைக் கிழிக்கட்டி இரண்டு படித்தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் மேற்படி முருந்தை அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். இவ்விதம் மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கத் தீரும். அபான வேர் கரைந்து போகும்.

17. வெள்ளுள்ளி, கருவேப்பீர்க்கு, சுக்கு, திப்பிலி, வேப்பீர்க்கு ஓர் நிறையாய் தட்டி, 2 படி நீரில்போட்டு ஆழாக்காய் வற்றவைத்து ஒரு நாளைக்கு 2 வேளை சாப்பிட மூலவேர் அற்றுப் போகும்.

18. தூதுளை, மருள், கருணை, காட்டுக்கருணை, பிரண்டை, அறுகு, மிளகரணை, நீர்ப்பூண்டு இவைகளின் மூலம், ஆவாரை சமூலம் இவைகளை ஓர் எடையாய் நசுக்கித் தூள்செய்து திரிகடி வீதம்தேனில் 40 நாள்கள் உட்கொள்ள சகல அபானவேறும் தீரும்.

19. பிரண்டை சமூலத்தை அவித்து உலர்த்தி இடித்து வேடுகட்டின தூள் கால் படி, கருங்குருவை மாவு கால் படி, மிளகு, சுக்கு, ஓமம் இவைகளை வெதுப்பிப் பொடித்த தூள் வகைக்கு கால் பலம் ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு நல்லெண்ணெயிலாவது வெண்ணெயிலாவது சாப்பிட்டுவரக் கடுப்பு, சீதரத்தம் முதலான சகலமூலமும் தீரும் முளையும் நீங்கும்.

20. உகா இலைச்சாறு 1 படி, நெல்லிக்காய் சாறு கால் படி ஒன்றாய்க் கலந்து சட்டியில் விட்டு அதில் முற்றின கருங்கோழியை ரோமம், கால், சிறகு, தலை, குடல் நீக்கி சட்டியில் போட்டு நன்றாய் வேக வைத்து எலும்பை உதறி உரலில் போட்டு சுக்கு 2 பலம், கடுக்காய், மிளகு வகைக்கு 3 பலம், உள்ளி, தான்றிக்காய், திப்பிலி வகைக்கு 1 பலம், ஓமம் அரைப் பலம், கருஞ்சீரகம், கடுகு வகைக்கு கால் பலம் சவுக்காரம், பெருங்காயம், மாவிலிங்கு சாரணை, நொச்சி, பிரண்டை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 1 வராகன் எடை, இந்துப்பு 2 வராகன் எடை இவைகளை வெதுப்பிக் கூடப்போட்டு ஒரு கழஞ்சு சதுரக்கள்ளிவேர்பால், கால்படி நல்லெண்ணெயும் கலந்து கடப்பாறையால் மெழுகுபோல் இடித்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட அபானவேர் அற்று விழுந்துபோகும் சகல எருவாய் நோயும் தீரும்.

21. மாவிலிங்க இலையை அரைத்து ஒரு பாக்களவு எருமைத் தயிரில் கலக்கிக்கொடுக்க வேர் விழும்.

Koviloor Digital Library

22. ஒரு மாதம் சென்றகோழிக்குஞ்சை இறகு குடல் தலைகால் நீக்கி அதில் வயிற்றுக்குள் கால் பலம் வெள்ளைப்பூண்டை அரைத்துப் பூசி வாழைமட்டையில் வைத்துக் கட்டி உமிக்காந்தலில் இரவில் புதைத்துக் காலையில் எடுத்துத் தின்னவும். இதன் படி மூன்று நாட்கள் உட்கொள்ள மூலம் முதலான மற்றுமுள்ள வியாதிகளும் தீரும்.

மூலமுளை அபானக்கடுப்புக்குப் புகையும் ஒற்றடமும்.

1. முதலை மாமிசத்தை அனலில் போட்டு அபான வாயில் புகைபிடிக்கத் தீரும்.

2. வெள்ளுள்ளி 2 பலம் அரைத்து 6 உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டையாகப் புளியம் தணலில் போட்டு ஆசனத்தில் புகைபிடிக்கத் தீரும்.

3. மரவட்டையை உலர்த்திப் பொடித்துக் கனலிலிட்டு மூன்று நாட்கள் அபானத்தில் புகைபிடிக்க கடுப்புத் தீரும். மூலமுளை கரையும்.

4. பால்சாம்பிராணியும், ஏலமும் சமமாய்ப் பொடித்து நெருப்பில் தூவி அபானத்தில் புகை பிடிக்கத் தீரும்.

5. மாதுளை, ஆவாரை, நீர்ப்பூலா இவைகளின் கொழுந்தும், குழித்தாமரை இலையும் வகைக்கு ஒருபடி ஈருள்ளி 1 இவைகளை இடித்து நெல்லிக்காய் அளவு பசுவின் வெண்ணையில் கலந்து இரும்புக் கரண்டியில் வடித்து துணியில் முடிந்து ஒற்றடம் செய்ய எருவாய்க் கடுப்பு தீரும். வேர் கருகும்.

அபானவேருக்கும் அபான கடுப்புக்கும் மருந்து.

மருதம்பட்டை கால் பலம் அரைத்து ஆழாக்கு பசுவின் பாலில் கலக்கி மூன்று நாட்கள் உட்கொள்ள மூலமுளை கரையும். கடுப்புத் தீரும். வேர் கருகும்.

இரத்த அபானத்திற்கும் அபானவேருக்கும் எண்ணெய்.

பூநாகம் 4 பலம், நாராகரந்தை இலை வில்வக்காய் அளவு இவைகளை அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து ஐந்து நாட்கள் ஒரு கரண்டி வீதம் இருவேளை உட்கொள்ள நோய் தீரும்.

உள் அபானம், இரத்த அபானம், நிணக்கழிச்சலுக்கு மருந்து.

1. ஒருபிடி மூவிலைமின்னியை குருவைநெல்லரிசியுடன் கலந்து அரைத்து அடை தட்டி நல்லெண்ணெயில் வேக வைத்து 3 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

2. மருட்கிழங்கு, குருவைநெல்லரிசியுடன் சேர்த்து இடித்து சுக்கு, மிளகு, திப்பிலி, பூண்டு, ஓமம் வகைக்கு அரை பலம் இடித்துப் போட்டுப்

Koviloor Digital Library

பிசைந்து களிக்கிண்டியாவது பசுவின் நெய்யில் அடை சுட்டாவது 3 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

அபான நோய், மேற்படி முளைக்கு மருந்து.

காட்டுக்கருணைக்கிழங்கு 16 கழஞ்சு சுக்கு கழஞ்சு 4 கொடுவேலிவேர், மிளகு வகைக்கு 2 கழஞ்சு இவைகளைத் தூள் செய்து கழல்காய் அளவு நல்லெண்ணெயில் குழைத்து இருபத்தேழு நாட்கள் உட்கொள்ள நோய் தீரும். புளி தள்ளவும்.

உள் எருவாய் நோய், புற எருவாய் நோய்க்கு மருந்து (உள், புறமூலம்)

மூக்குரட்டை இலையை எலுமிச்சங்காய் அளவு அரைத்து கருங்குருவை மாவில் பிசைந்து, வடைதட்டி நெய்யில் வேக வைத்து 5 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

மூலக்கடுப்பு, இரத்த மூலத்திற்கு மருந்து.

ஒரு ஆழாக்கு ஓமத்தை 7 தடவை வறுத்துத் தேய்த்து உமிநீக்கி, அதனுடன் இரண்டு வராகன் எடை வசம்பு சுட்டசாம்பலையும் கூட்டித் தேனில் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு உட்கொள்ள நோய் தீரும்.

உள்மூலம் புறமூலம் விஷபாண்டு காமாலை வீக்கங்களுக்கு மருந்து.

வடக்கே ஓடிருக்கிற சங்கம்வேர்ப்பட்டை, ஒரு நாரத்தங்காய் அளவு அரைத்து சோமநாத பெருங்காயம் 2 வராகன் எடை இடித்து ஒன்றாய்க் கலந்து ஒரு பீங்கானில் இட்டு மருந்து மறையும்படி எலுமிச்சம்பழச்சாறு விட்டு கிண்டி வெளியில் வைக்கப் பொங்கி வரும். அதை எடுத்து நாள் ஒன்றுக்கு முள்ளிக் காய் அளவு 6 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

உள்மூலம் புறமூலம் வெப்புப்பாவை முதலான நோய்களுக்குச்சூரணம் (கலப்புத் தூள்)

காட்டுக்கருணை, கறிக்கருணை, பிரண்டை, புளியமடல் இவைகளின் கிழங்கு வகைக்கு 5 பலம், கொடிவேலிவேர், திரிகடுகு, திப்பிலி, திப்பிலிமூலம், இந்துப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, பெருங்காயம், வெட்பாலையரிசி, விளாவரிசி, உள்ளி, அதிவிடையம், சீரகம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், தேவதாரம் வகைக்கு 1 பலம் இடித்து தூள் செய்து மூன்று வருடம்சென்ற கருங்கோழியைக் கால், தலை, குடல், சிறகு, ரோமம் நீக்கி அதனை வயிற்றுக்குள் மேற்படி மருந்துகளை வைத்து தைத்து ஒரு பானையில் மூன்று படி பசுவின் பாலும் 3 படி காடியும் விட்டு வாயில் சீலையை வேடுகட்டி அதன் மேல் கோழியை வைத்து மூடி வெந்தபின் எலும்பை நீக்கி இடித்து உலர்த்தித் தூள்செய்து கொண்டு திரிகடி அளவு தேனிலாவது, சுக்கு, குடிநீரிலாவது உட்கொள்ள நோய் தீரும். புளி, புகையிலை தள்ளவும்.

Koviloor Digital Library

எருவாய்ப் பாண்டு மந்தாக்கினிக்கு மருந்து.

ஓமம், சுக்கு, கொடிவேலிவேர் வகைக்கு 1 பலம், கடுக்காய் 3பலம், இவைகளை இடித்துக் கொண்டு திரிகடி அளவு மோரில் உட்கொள்ள நோய் தீரும்.

மூலவாயுநோயின் இயல்பு.

மலந்தீயும் மந்திக்கும்; உடல்வெளுக்கும்; வயிறு சதாகாலமும் இரைந்து கொண்டிருக்கும்.

மருத்துவம்:- வெள்ளுள்ளி 5 பலம் அரைத்து அரைப்படி பசுவின் பால் கலக்கிக் காய்ச்சிப் புரை குத்தி உறைய வைத்த தயிர் எடுத்து காலை, மாலை இரு வேளை மூன்று நாட்கள் சாப்பாட்டில் விட்டுச் சாப்பிட மூலவாயு, பொருமல் தீரும்.

2. விதைநீக்கிய கடுக்காய் 20, ஒரு தலைப் பூண்டு 20, பெருங்காயம் 2 கழஞ்சு, முடக்கொத்தான் கொழுந்து ஒரு பிடி இவைகளை நன்றாய்ப் பிசைந்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் 15 நாட்கள் உட்கொள்ள சகல வாயுக்களும், மலக்கட்டும் தீரும்.

3. எருமைத்தயிரைத் துணியில் முடிந்து தொங்கவிட்டு தண்ணீர் வடிந்த பின்பு எடுத்து அதில் வெள்ளைப் பூண்டை அரைத்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு கலக்கி உட்கொள்ள மூலவாயு நோய் தீரும்.

4. சிவதைவேர் 1 பலம், திரிபலை, கொத்தமல்லி, இந்துப்பு, தேசவாரம், செவ்வியம், முத்தக்காசு, திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ, அன்னபேதி, விலாமிச்சு வகைக்கு 1 கழஞ்சு தேவதாரம், இலவங்கப்பத்திரி, சாதிப்பத்திரி, சந்தனம், பொரிகாரம், கத்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், வாய்விளங்கம் வகைக்கு 1 ½ கழஞ்சு இவைகளை இடித்து வடிகட்டி அந்த எடைக்குச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனிலாவது இஞ்சிச் சாற்றிலாவது உட்கொள்ள அபான வாயும், மலக்கட்டும், நீர்கட்டும் நிவர்த்தியாகும்.

5. கால் படி விளக்கெண்ணெயில், ஈருள்ளி ஒரு சிரங்கை, முடக்கொத்தான் இலை ஒரு பிடி, வெள்ளரிவிதை ஒரு பிடி, ஆழாக்கு சத்திச் சாரணைவேர் ஒரு பிடி இவைகளை மைபோல் அரைத்துப்போட்டு சிவக்கக் காய்ச்சி வடித்துக் கொண்டு மேற்படி கடுகும் எண்ணெயும், வேளைக்கு ஒரு கரண்டி வீதம் பத்தியமாய்ச் சாப்பிட்டுவர மலக்கட்டும் நீங்கும்.

மேற்படி நோயால் நீர் அடைத்தல்.

மருத்துவம்:- ஊமத்தன் விதையை வெதுப்பி அதற்கு நிகர் ஏலரிசி கூட்டி தண்ணீர் விட்டு அரைத்து கீழ் வயிற்றில் பூச உடனே நீர் இறங்கும்.

Koviloor Digital Library

2. திப்பிலி, கிராம்பு, இந்துப்பு, வெடியுப்பு வகைக்கு 1 கழஞ்சு, சுக்கு, அதிமதுரம், அமுக்கிறா, ஏலம் வகைக்கு 2 கழஞ்சு தான்றிக்காய், சண்பகப்பூ, கோட்டம் குருந்தொட்டிவேர் வகைக்கு 3 கழஞ்சு, அதிவிடயம், சந்தனம், நெல்லிப்பருப்பு கல்நார், சீரகம், இலவங்கப்பத்திரி வகைக்கு ஒரு கழஞ்சு, ஓமம் ஒரு கழஞ்சு, வால்மிளகு, விலாமிச்சம்வேர், சிவன்வேம்பு வகைக்கு ஒரு பிடி 10 கடுக்காய் இவைகளைத் தூள்செய்து திரிகடி அளவு தேனில் கலந்து சாப்பிட்டு இதன் அடியில் வருகிற தைலத்தைத் தலை முழுகி வரத் தீரும்.

மேற்படி நோய்க்குத் தலை முழுகத் தைலம்.

மருத்துவம்:— மேற்படி முறையில் கண்ட மருந்துகளில் இந்துப்பையும், வெடியுப்பையும், நீக்கி மற்ற மருந்துகளை இடித்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரவும்.

மூலக்கிராணி மூலவாயுவுக்கு லேகியம்

கறிக்கருணை, காட்டுக்கருணை, சேமங்கிழங்கு, புளியம் பிரண்டைக்கிழங்கு, பேய்பிரண்டை நல்ல பிரண்டை இவை வகைக்கு 1 பலம், திரிபலை, குரோசாணிஓமம், ஓமம், தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, முத்தக்காசு, நன்னாரிவேர், கற்றாழஞ்சருகு, தாமரைக்கிழங்கு, அதிவிடயம், கிராம்பு கருஞ்சீரகம், பொன்முசுட்டைவேர், சித்திரமூலம், இலவங்கப்பட்டை, அமுக்கிறாகிழங்கு வகைக்கு கால் பலம் இவை எல்லாம் இடித்து வடிகட்டிக்கொண்டு சூரணங்கண்ட இடை பனங்கற்கண்டைப் பாலில் கலக்கிப் பாகுசெய்து சூரணத்தைப் போட்டுக் கிண்டி கால் படி நெய் விட்டு இளகம் குறுகி வருகிற சமயத்தில் கூகைநீர், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம் வகைக்கு 2 வராகன் எடை தூளைப்போட்டு, தேன் 4 படி, கூடவிட்டுக் கலக்கி மெழுகுபதத்தில் இறக்கிக் கொண்டு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும்.

மூலவாயு அக்கினிமந்தம் பயித்தியவாயு ஆனந்தவாயுவுக்கு மருந்து.

சுக்கு, மிளகு, திப்பிலி, சித்திரமூலம், கோட்டம், திப்பிலிமூலம், நவாச்சாரம், இந்துப்பு, அதிவிடையம், பெருங்காயம், ஓமம், நற்சீரகம், வாய்விளங்கம், வசம்பு, சுட்டசாம்பல், கரியுப்பு வகைக்கு 4 கழஞ்சு இவைகளை இடித்துத் தூள் செய்து இதற்கு சமமாய் கடுக்காய்த் தூள் சேர்த்து திரிகடி அளவு சாப்பிட நோய் தீரும்.

மூலவாயு, மூலம், செரியாமை, தொடர் கழிச்சலுக்கு இளகம்.

நூறுகடுக்காயை வெள்ளாட்டுநீரில் அவித்து விதைபோக்கி உலர்த்தி வறுத்து இடித்துக்கொண்டு சிவதை சித்திரமூலம், மஞ்சள், சுக்கு, திப்பிலி, சேராங்கொட்டை, காரெள்ளு, நிலவாகை, கருணைக்கிழங்கு, பிரண்டை,

Koviloor Digital Library

புளியமடல்கிழங்கு, வெண்தோன்றிக் கிழங்கு, சடா,ணைக்கிழங்கு இவைகள் வகைக்கு 1 பலம் எடுத்து பாலில் அவித்து எடுத்துக்கொண்டு இதனுடன் கடுகு 2 பலம் இடித்து தூள் செய்து இரண்டுபடி வெள்ளாட்டு பாலில் ஒரு பலம் சர்க்கரைகூட்டிப் பாகுசெய்து அதில் மேற்படி தூள்களைத் தூவிக்கிண்டி தேன் கால் படி, நெய் 1 படி கூடவிட்டு இளகம் செய்துக் கொண்டு நாழி ஒன்றுக்கு இரு கழஞ்சு வீதம் ஒரு மண்டலம்(48 நாள்கள்) உட்கொள்ள மேற்படி நோய் தீரும். மலம் தாராளமாய் போகும். பசிதீபனம் உண்டாகும் தாது பலப்படும். கிருமிகள் அற்றுப் போகும். இச்சாபத்தியம்.

மூலவாயு, எருவாய்நோய், உதரநோய், இழுப்பு, குன்மம், பயித்தியம் சன்னிவாயு, உடம்புவியர்வை, பசிமந்தத்திற்கு மருந்து.

மருத்துவம்:– திப்பிலிமூலம் 6 பலம், சுக்கு, மிளகு, செவ்வியம், சித்திரமூலம், கடுகு, வாய்விளங்கம், கருஞ்சீரகம், அசமதாகம், இந்துப்பு, வெடியுப்பு, சவுக்காரம், கொத்தமல்லி, சதகுப்பை, அதிமதூரம், வெட்பாலையரிசி, சாதிப்பத்திரி, கிராம்பு, தாளிசபத்திரி, இலவங்கப்பத்திரி வகைக்கு 3 பலம் இவைகளை வெதுப்பி தூள் செய்து அதற்கு பாதி சர்க்கரையை கூட்டி திரிகடி அளவு தேனில் குழைத்து 10 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

2. மூன்று பலம் பனைவெல்லத்தைத் தண்ணீரில் போட்டுப் பாகு செய்து அதில் திரிகடுகு, ஓமம், தேசாவரம், குராசானியோமம் கருஞ்சீரகம், சிற்றரத்தை, சதகுப்பை, வசம்பு, வெள்ளுள்ளி, அதிவிடையம், பெருங்காயம், ஏலம், கிராம்பு, வெங்காரம், பழம்புளி, சத்திச்சாரணை வேர்ப்பட்டை, நாய் கடுகு வகைக்கு 3 வராகன் எடை அரைத்துப்போட்டுக் கிண்டி கொஞ்சம் பசுவின் நெய் விட்டு இளகம் செய்துக் கொண்டு நாழி ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள நோய் தீரும்.

எருவாய் நோய்ப்படலம் முற்றிற்று.

அதிசார நோய்ப் படலம்.

அதாவது சாதம் செரியாமல், அனல்மீறி, வாயு அதிகரித்து மூலத்தில் வாயு நின்று எப்பொழுதும் கழிச்சல் விளைத்தலாம்.

சொன்னார் தொகுப்பு அதிசாரம் தோன்றும் வாதபித் தமென
மன்னே சிலேத்ம வதிசாரம் வகுக்குஞ் சலத்தின் சாரம்
மின்னிய சாத்தி வதிசார மொழிந்தா ராயும்வே தமிது
பொன்னே மாந்தர் பிழைக்கவென்று புகன்றார் முனிவர் புகன்றாரே.

வாத அதிசாரத்தின் இயல்பு.

வயிறு பொருமிக் கழியும்; தொப்புளின் கீழ் நோகும்; அங்கம் நொந்து வாடும்; அயரும்; மலம் கருமையாயிருக்கும்; நுரை விழும்; காற்று பரியும்.

Koviloor Digital Library

பித்த அதிசாரத்தின் இயல்பு.

மலம் ஒருக்கால் செம்மையாவும், பசுமையாயும் இறங்கும்; ஒருநேரம் சீதம், இரத்தம் வீழும்; அபானங் கடுத்து நோகும்; எரியும்; சுவையின்மை காணும்; அன்னம் செல்லாது; வாந்தி பண்ணும்; தாகம் அதிகரிக்கும்; வியர்க்கும்.

சிலேத்தும அதிசாரத்தின் இயல்பு

மலம் வெண்மையாய்க் கழியும்; சீதம், நுரை விழும்; அபானங் கடுக்கும்; வயிறு பொருமும்; வலிக்கும்; சுவையின்மை காணும்; அன்னம் செல்லாது; இருமல் காணும்.

அதிசார தோடத்தின் இயல்பு.

இரத்தம் விழும்; பிதற்றும்; வாந்தியெடுக்கும்; விக்கலெடுக்கும்; உடல் நடுங்கும்; வயிறு பொருமும்; வியர்க்கும்; நசிக்கும்; அவயமும் மிகுதியாய் குளிர்ந்திருக்கும்; நித்திரை, கோபம் அதிகரிக்கும்.

சுர அதிசாரத்தின் இயல்பு.

சுரம் தீவிரமாய்க் காயும்; தாக மிகும்; பலவிதமாய் வயிறு கழியும்; சீதம், இரத்தம் விழும்; சுவையின்மை தோன்றும்; அன்னத்தைத் தள்ளும்.

அசாத்திய அதிசாரத்தின் இயல்பு.

ஊன்போலும், தேன் போலும், கரி போலும், தைலம் போலும், வெண்மையாயும் மிகுந்தநாற்றத்துடன் பலவிதமாய்க் கழிச்சல் காணும்; இடை வற்றும்; சிரசு நடுக்கும்; தேகம் வற்றும்; மயக்கம் காணும்; நினைவுதடுமாறும்; விக்கலெடுக்கும்; தொண்டை கமறும்; கை கால் சோர்ந்து நடுங்கும்; விழிவிரிந்து வெளுக்கும்; உதடு வெளுக்கும்; கை, கால், மூக்கு, நெஞ்சு, தொப்புள் குளிர்ந்திருக்கும்; அவயங்களில் நரம்பு தோன்றும்.

இவைகளுக்கு மருத்துவம்:– பெருமரத்துப்பட்டை அதிவிடயம், முத்தக்காசு, அசமதாகம், குழப்பாலைப்பாட்டை ஓர் அளவாய் அரைத்துத் தயிரிலாவது, காடியிலாவது கரைத்துக் கொடுக்க குணமாகும்.

2. மிளகு, அதிவிடயம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சாத்திர பேதி, இலவங்கப்பட்டை, முத்தக்காசு, இந்துப்பு, நற்சீரகம், காசுக்கட்டி, மாதுளம்பிஞ்சி, வில்வக்காய்ச் சதை, பெருமரத்துப் பட்டை, அத்திப்பூ, மாங்கொட்டைப் பருப்பு, அளிஞ்சி விதைப் பருப்பு வட்டத்திருப்பி வேர்ப்பட்டை இவைகளை வெதுப்பித் தூள்செய்து திரிகடி அளவு தேனிலும் மற்ற துணைமருந்துகளிலும் கொடுக்கத் தீரும்.

3. மாங்கொட்டைப்பருப்பு, அபின், கருநாவி, கஞ்சா, வித்து, அதிவிடயம், சாதிக்காய் இவைகளை ஓர் அளவாய்க் கூட்டி, சீந்தில் குடிநீரில் ஆட்டி சிறுபயறு போல் உருண்டை செய்து துணை மருந்துகளில் கொடுக்க குணமாகும்.

Koviloor Digital Library

4. கஞ்சா, பொரிகாரம், காரியபற்பம், சுக்கு, கருநாவி, சீரகம், குடசப்பாலை, கழற்சிப்பருப்பு, அதிவிடையம் இவைகளை சமஎடையாய் ஊமத்திலைச் சாற்றால் ஆட்டி கழற்சி அளவு உருண்டை செய்து தேனில் கொடுக்க குணமாகும்.

5. குடசப்பாலை, அதிவிடையம், கோரைக்கிழங்கு, சாதிக்காய், சுக்கு, அபின், கஞ்சா, கழற்சிப்பருப்பு, இலவம் பிசின், சீரகம், மாங்கொட்டைப்பருப்பு, வில்வப்பழம் இவைகளை சம எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றாலாட்டி கழற்சி அளவு உருண்டை செய்து தேனில் கொடுக்கத் தீரும்.

6. கடுக்காய், கரி துணியைச் சுட்டசாம்பல், விளாம்பிசின், இலவம் பிசின் இவைகளை சம எடையாய் எடுத்து அத்திப் பட்டைச் சாற்றில் அரைத்து தான்றிக்காய் அளவு உருண்டைசெய்து தேனில் கொடுக்கத் தீரும்.

7. மலைதாங்கிவேர், கோரைக்கிழங்கு, அத்திவேர்ப்பட்டை, நீர்ப்பூலாவேர்ப்பட்டை, நாவல்வேர்ப்பட்டை, மாதுளம்பிஞ்சித் தோல், அபின், அத்திப்பிஞ்சு, மாம்பருப்பு, அதிமதுரம், கோட்டம், சுக்கு, சீரகம், சாதிக்காய் இவைகளை சம எடையாய்த் தென்னம்பாலைச் சாற்றால் மூன்று நாள்கள் ஆட்டி தேற்றான்விதை அளவு உருண்டைசெய்து வாழைப்பூச் சாற்றில் ஓர் உருண்டை கொடுக்கத் தீரும்.

8. மாதுளம் வேர்ப்பட்டை, கூவிளவேர்ப்பட்டை, மாங்கொட்டை பருப்பு, ஓமம், குரோசாணி ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடையம், இலவங்கம், திரிகடுகு, கஞ்சா, வெட்பாலையரிசி, கடுக்காய்கரி கோட்டம், நற்சீரகம், சரக்கொன்றைவேர்ப்பட்டை, திப்பிலி மூலம், வெந்தயம், சித்திரமூலம், காட்டாத்திப் பூ, புளியவிதைத்தோல், ஊமத்தைவிதை, கழற்சிப்பருப்பு இவைகளை சமமாய்ப் பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள தீரும்.

9. ஓமத்தை வெதுப்பித் தேய்த்து உமி போக்கி அதற்கு சமமாய் காட்டாத்திப்பூக் கூட்டி திரிகடுகு இஞ்சிச் சாற்றில் உட்கொள்ளத் தீரும்.

10. சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கோட்டம், சீரகம், அதிமதுரம், அதிவிடையம், அபின், கோரோசனை வகைக்கு 2 வராகன் எடை தாய்ப்பாலில் அரைத்து சுண்டைக்காய் அளவு உருண்டை செய்துகொண்டு ஒரு சட்டியில் சுக்கு, ஓமம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை வறுத்துக்கொண்டு அந்தச் சட்டியில் இலைந்தையிலை ஒரு பிடி போட்டு வதக்கி மறுபடியும் மூன்று வகை மருந்துகளையும் தட்டிப்போட்டு ஒரு படி தண்ணீர்விட்டு ஆழாக்காய் வற்றவைத்து, அதில் மேற்படி மாத்திரை ஒன்றை உரைத்துக் கொடுக்கவும். இவ்விதம் மூன்று நாள் கொடுக்க அதிசாரஞ் தீரும்.

11. ஆவாரை இலையை வதக்கி மேற்படி மூன்று வகை மருந்துகளையும், முன்போல் வெதுப்பிக் குடிநீர் செய்து மாத்திரை ஒன்று உரைத்துக் கொடுத்தாலும் அல்லது விடத்தாரி இலையையும் மேற்படி மருந்தையும் முன்போல் குடிநீர் செய்து ஒரு மாத்திரை உரைத்துக் கொடுத்தாலும் வயிற்றுக் கடுப்புத் தீரும்.

அதிசார நோய்ப்படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

கிராணி நோய்ப் படலம்

அதாவது குடலில் வாயு அதிகரித்துப் அபானவாயில் கடுப்புண்டாகிப் பலவிதமான கழிச்சல் அதிகரித்தலாம்.

கூறு மூலக் கிராணியெனக்
குறிக்கும் வாதக் கிராணியென்றும்
தேறும் பித்தக் கிராணிஎன்றும்
தெளியும் சிலேத்தமக் கிராணியென்றும்
கோறுஞ் சீழுக் கிராணியென்றும்
குறிக்கும் நீரின் கிராணியென்றும்
ஆறுங் கிராணி பிறந்தவிதம்
அறைந்தார் முனிவர றைந்தாரே.

மூலக்கிராணி, சீழ்க்கிராணி, நீர்க்கிராணி, வாயுக்கிராணி, சூசிகாகிராணி, அசீரணக்கிராணி ஆகியவற்றின் இயல்பு.

கீழ்வயிறு கடுத்துளைந்து குருதிவிழும்; அபானவாயு கீழ்நோக்கி உறுப்புத் தள்ளும்; மலங்கழியும்; நாளுக்கு நாள் உடல் வற்றும் வயிறு நோகும் நாவரளும்; இளைப்பு, சோபு, தாப முண்டாகும்.

வாதமூலக் கிராணியின் இயல்பு.

மலங்கழியும்; சீதம் இரத்தம் விழும்; தொப்புளில் சுருக்கென்று வலிக்கும் உளையும்

பித்தமூலக் கிராணியின் இயல்பு.

மலம் சிறுத்துக் கழியும்; பலவிதமாய் நாறும்.

சிலேத்தும மூலக்கிராணியின் இயல்பு.

உதிரமாயும், வெண்மலமாயும் கழியும்; காற்றுப் பரியும்.

இவைகளுக்கு மருத்துவம்:— திப்பிலி, சுக்கு, மிளகு, சாதிக்காய், கிராம்பு, இந்துப்பு, ஏலம், சீரகம், பெருங்காயம், வேலம்பிசின், இலவம்பிசின், முத்தக்காசு, புளியவிரைத்தோல், மாதுளம்தோல், அபின் வகைக்கு 1 வராகன் எடை இவைகளைப் பொடித்து இதற்கு சமமாய் தூய்மைசெய்த கஞ்சாத் தூள் கூட்டி, ஒரு நாழிக்கு ஒரு வராகன் எடை வீதம் தேனில் உட்கொள்ள மூலக்கிராணி தீரும்.

2. மஞ்சள், பிரண்டை, வெள்ளைப்பூண்டு, சுக்கு, மிளகு, வகைக்கு அரைப் பலம் மைபோல் பொடித்து ஒரு கோழிமுட்டை கருவிற்பொரித்துச் சாப்பிடத் தீரும்.

3 அதிவிடையம, கிராம்பு, சுக்கு, திப்பிலி, சீரகம், ஓமம், யானைத்திப்பிலி, ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், அபின், இந்துப்பு,

Koviloor Digital Library

அத்திவிதை, கோட்டம், நெல்லிமுள்ளி, மாம் ருப்பு, காசுக்கட்டி, கழற்பருப்பு கருங்குங்கிலியம், களிப்பாக்கு, வில்வப்பழச்சதை, விளாவிதை, பெருமரத்துப்பட்டை, மலைதாங்கிவேர், சிருகாஞ்சோரிவேர், கொடிவழுதலைவேர், சிறுவழுதலை வேர், புளியவிதைத்தோல், வில்வப்பிசின், விளாம்பிசின், வெளிச்சிப்பிசின், கம்பளிப்பிசின், மருதம்பிசின், ஓதியம்பிசின், கிளுவைப்பிசின், அத்திப்பிசின், சண்பகப்பூ வகைக்கு 1 பலம் பொடித்துக்கொண்டு, இலவம்பட்டை, மாம்பட்டை, வேலம்பட்டை, அத்திப்பட்டை, உதியம்பட்டை, மருதம்பட்டை வகைக்கு 1 பலம் எடுத்து இடித்து 4 படித் தண்ணீரில் போட்டு அரைப்படியாய் வற்றவைத்து வடித்துக் குடிநீரில் ஆட்டி கழற்காய் அளவு உருண்டை செய்து 60 நாழிகை சென்ற எருமைத் தயிரை வடிகட்டி அதில் ஒரு உருண்டை கொடுக்க மூலக்கிராணி தீரும். வெள்ளாட்டு நெய்யில் கொடுக்க சங்கிரகிராணி ஒருபிடி காரையிலையில் ஒரு படி எருமை மோர் விட்டு உழக்காய் காய்ச்சி வடித்து அதில் ஓர் உருண்டையை அரைத்து நல்லெண்ணெய் ஒரு பணஎடை விட்டுக் கொடுக்க சகலக்கிராணியும் நீங்கும்.

4. உப்பை அரைத்து ஒரு தலை வெள்ளைப் பூண்டின் மேல் பூசி உமிக்காந்தலில் வெதுப்பி உப்பையும் தோலையும் முள்ளையும் நீக்கி அரைத்துத் தயிரில் கலக்கி உட்கொள்ளத் தீரும். கடுப்பு நிற்கும்.

5. பிரண்டைவேர்பொடி, சுக்க, மிளகு, கடுகு, வெள்ளைப்பூண்டு, ஓமம், கருஞ்சீரகம், கருவேப்பிலை, பெருங்காயம், இந்துப்பு வகைக்கு 3 பலம் ஒரு கருங்கோழியை இறகு, குடல், தலை, கால் நீக்கிச் சற்றே வேகவைத்து எலும்பு களைந்த மாமிசம் இவைகளைத் தனித்தனியே பிரண்டைச் சாற்றால் மைபோல் அரைத்து ஒன்றாய்க் கலந்து வில்லை தட்டி நல்லெண்ணெயில் வேகவைத்துக் காலை மாலை உட்கொள்ள நோய் தீரும்.

6. கொட்டைக்கரந்தையும் சீரகமும் ஓர் எடையாய் அரைத்து வில்லைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து உட்கொள்ளத் தீரும்.

7. அத்திப்பட்டை, ஆயில்பட்டை, வரப்பூலா வேர்ப்பட்டை, துடரிவேர் பட்டை நாவற்பட்டை, நெல்லிப்பட்டை ஆகியவற்றை ஒரே சமமாக இடித்துப் பிழிந்தசாறு கால் படி, சாதிக்காய், வசுவாசி, கிராம்பு, திப்பிலி வகைக்கு 1 வராகன் எடை, ஏலம் அரை வராகன் எடை சுக்கு, மிளகு வகைக்கு கால் பலம் இவைகளை மேற்படி சாற்றாலரைத்துச் கலக்கி ஆவினெய்படி கால் விட்டு வேகவைத்து இளகமாய் வைத்துக் கொண்டு நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும். (நாழிகை என்பது ஒரு வேளை என்ற பொருளில் வந்துள்ளதென்றறிக.)

8. பாவட்டை இலை 9 பலம், வெள்ளைப்பூண்டு, சுக்கு வகைக்கு 3 பலம், மிளகு கால் பலம், வட்டத்திருப்பி, வெட்பாலை அரிசி, திப்பிலி, தேசாவரம், அத்தி, கண்டந்திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை, பெருங்காயம், கிராம்பு, சாதிக்காய், இந்துப்பு, வெடியுப்பு, பொட்டிலுப்பு, நவாச்சாரம் வகைக்கு அரைப் பலம், ஓமம் அரைக்கால் பலம் பாவட்டை இலையை நல்லெண்ணெயில் அரைத்தும் மற்ற சர க்குகளை மோர் விட்டு அரைத்தும்

Koviloor Digital Library

ஒன்றாய்க் கலந்து கொதிக்க வைத்து அதில் நல்லெண்ணெய் அரைக்கால் படி கூடவிட்டு இளகம் செய்து ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

9. புளியாரைச்சாறு குறுணி, பசுவின் நெய் 2 படி, தயிர் ஒருநாழி, அதிவிடையம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், நவாச்சாரம், சாதிக்காய், வெட்பாலையரிசி, திப்பிலி, மூலம், கிராம்பு, மாதுளம்பூ, மரமஞ்சள், இலவங்கம் வகைக்கு 6 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் குணமாகும்.

மூலக்கிராணி, அதிசாரத்திற்கு மருந்து.

பூனைக்காலிவித்து, ஈயபற்பம், அதிவிடையம், அத்திப்பூ, கழற்காய்ப் பருப்பு, சாதிக்காய், ஊமத்தம்வித்து, சுக்கு, நாவி, கஞ்சாவித்து, மாங்கொட்டைப் பருப்பு, அபின், வில்வப்பழச்சதை, கொன்றைவேர்ப்பட்டை மாதுளந்தோடு, பொற்முசுட்டை வேர்பட்டை, ஏலம் இவைகளை சீந்திற்சாற்றாலாட்டிச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து தேனில் உட்கொள்ள நோய் தீரும். (அத்திப்பூ என்பது அதன் பிஞ்சு என்பதை அறிக).

வாயு கிராணியின் இயல்பு.

உணவு, செரியாது; வயிறுநோகும்; பொருமும்; இரைந்து கழியும்; புளியேப்பம்விடும்; இருமும்; வாயுபரியும்; நாட்சென்றால் புறந்தாள் அதைத்துவற்றும் அன்னஞ் செல்லாது; உடல்வரண்டு வற்றிவரும்; நாவரளும்; தாகம் அதிகமாகும்; கனவு காணும், வெருவும்.

மருத்துவம்:– மேல் தோல் சீவி உலர்த்திய இஞ்சி 10 பலம், ஏலம், இலவங்கம், அதிமதுரம், திரிகடுகு, திரிசாரம், இந்துப்பு, ஓமம், அதிவிடையம் வகைக்கு 4 கழஞ்சு இவைகளைப் பசுவின் நெய் விட்டுப் பொன்னிறமாய் வெதுப்பித் தூள்செய்து அதில் பாதி வெள்ளைச்சர்க்கரை கூட்டித் திரிகடுகு அளவு சாப்பிடத் தீரும். கரப்பான் பதார்த்தம் தள்ளவும்.

2. சேங்கொட்டை, திரிபலை, கொடிவேலிவேர் வகைக்கு 2 கழஞ்சு, இந்துப்பு 10 கழஞ்சு இவைகளை இடித்து ஒரு சட்டியில் போட்டு மூடி, ஏழு, சீலை மண் செய்து குக்குடப் புடம் போட்டுப் பொடித்து ஒரு காசு எடை பசுவின் வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள நீங்கும். பத்தியமாயிருக்கவும்.

3. அதிவிடையம், பெருங்காயம், சிறுநாகப்பூ, திப்பிலி, சாதிப்பத்திரி வகைக்கு 3 கழஞ்சு, ஆனைத்திப்பிலி 4 கழஞ்சு, சுக்கு, கடுகு, வெள்ளுள்ளி வகைக்கு 8 கழஞ்சு, நாய்க்கடுகு, திப்பிலிமூலம் வகைக்கு 10 கழஞ்சு, அபின் 2 கழஞ்சு இவைகளை வெதுப்பித் தூள் செய்து வெள்ளைச் சர்க்கரை 5 பலம் கூட்டிக் கலந்துக் கொண்டு காலை மாலை திரிகடி அளவு முத்தக்காசு, சுக்கு சேர்த்துச் செய்த குடிநீரிலாவது, இஞ்சிச் சாற்றிலாவது உட்கொள்ள ஆறு வகைக் கிராணி நோயும் தீரும்.

Koviloor Digital Library

4. சுக்கு, மிளகு, வெள்ளைப்பூண்டு, கத்தூரிமஞ்சள், சீரகம், ஓமம், சத்திச்சாரணைவேர், குப்பைமேனிவேர் வகைக்கு ஒரு பலம் பிரண்டைச் சாற்றாலாட்டி நல்லெண்ணெய் விட்டு இளகம் செய்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடத் தீரும்.

5. சுக்கு அரை பலம், திப்பிலி கால் பலம், மிளகு அரைக்கால் பலம், ஓமம் 1 பலம், பூண்டு 1 பலம் ஆகிய இவைகளை ஒன்றாய் வெதுப்பி இடித்து அவை கண்ட எடைக்குப்பாதி ஆடுதின்னாப்பாளைச் சூரணங்கூட்டி கழற்சிக்காய் அளவு இரண்டு நேரமும் சாப்பிட்டு வர நோய் குணமாகும்.

6. கொடிவேலி, திரிகடுகு, ஓமம், சிறுதேக்கு, ஆனைத்திப்பிலி, இந்துப்பு கோட்டம், வெடி உப்பு வகைக்கு 1 பலம், பெருங்காயம், வசம்புசுட்டகரி வகைக்குக் கால் பலம், கடுகு அரைப் பலம், இவற்றை இள வறுப்பாய் வறுத்து அதற்குச் சமமாய் வெள்ளைச் சர்க்கரைக் கூட்டி திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ளத் தீரும்.

7. சட்டியை நன்றாய்க் காய வைத்து ஒரு படி உப்பிட்டு கறுக வறுத்துக் கொட்டிப் போட்டு அதில் ஒரு பிரண்டைக் கொழுந்தை அரிந்து போட்டுக் கறுக வறுத்து ஒரு படி எருமை மோர் விட்டு வற்ற வைத்து இறுத்து அதிவிடையம், உள்ளி, திரிகடுகு, ஓமம், வசம்பு இவைகளை வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கொடுக்க நீங்கும்.

8. ஓமத்தைக் கறுக வறுத்துத் தேய்த்து உமி போக்கிப் பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நீங்கும்.

வாயுகிராணி, சூட்டுக் கழிச்சலுக்கு மருந்து.

நூறுவருடம் சென்ற வேப்பம்பட்டை 40 வராகன் எடை மிளகு 20 வராகன் எடை இவற்றை இடித்துத் தூள்செய்து, சர்க்கரை 30 வராகன் எடை இவைகளை ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு 2 வராகன் எடை வீதம் 7 நாள் உட்கொள்ள நோய் நீங்கும்.

சங்கிரகிராணியின் இயல்பு.

வயிறு ஊதும்; மேலும், சீதம்போலும், நெய்போலும், வெண்ணீர் (விந்து) போலும், புலால் கழுவின தண்ணீர்போலும் பலவிதமாகக் கழியும்; அபானம் கடுக்கும்.

மருத்துவம்:– அத்திப்பிஞ்சு, வாழைப்பிஞ்சு, மல்லி, சீரகம், முத்தக்காசு, வில்வவேர், பேராமுட்டிவேர் இவைகளை ஓர் எடையாய் இடித்துக் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும். வாதங் கதித்திருந்தால் சுக்கும், திப்பிலியும் மேற்படிக் குடிநீருடன் கூட்டிக் கொள்ளவேண்டும்.

2. திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம், கடுகுரோகணி, அதிவிடையம், ஓமம், குராசாணிஓமம், நற்சீரகம், இந்துப்பு, ஏலம், செங்கழுநீர்க் கிழங்கு,

Koviloor Digital Library

கோட்டம், கிராம்பு, காசுக்கட்டி, வெள்ளுள்ளி, சாரணைவேர்ப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, (வசுவாசி) அதிமதூரம் வகைக்கு 6 வராகன் எடை இவைகளை இளவறுப்பாக்கிச் சூரணித்து திரிகடி அளவு தேனில் 7 நாள் உட்கொள்ள தீராக்கழிச்சலும் தீரும்.

இரத்தக்கிராணியின் இயல்பு.

அடிவயிறு வலிக்கும், நெஞ்செரியும் ஏப்பம் பரியும், தாகிக்கும், சலமாயும், இரத்தமாயும், தண்ணீராயும் கழியும், உண்டி (அசனம்) சமியாது. அபானம் கடுக்கும் உடல் நடுக்கும் கால், கை நோவும்.

மருத்துவம்:– பெருமரத்துப்பட்டை, முத்தக்காசு, வகைக்கு கால் பலம் வீதம் இடித்து 2 படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இதுபோல் ஆறு பொழுது கொடுக்க நோய் குணமாகும்.

சாதிக்காய், சாதிலிங்கம், சீரகம், சுக்கு, கிராம்பு இலவம்பிசின், அபின், இந்துப்பு, கழற்பருப்பு, ஊமத்தன்வித்து இவைகளை ஓர் எடையாய் வெதுப்பி எலுமிச்சம் பழச்சாற்றாலாட்டி மாதுளங்காய்க்குள் வைத்து அவிபுடம் போட்டுத் தோலுடன் தயிர் வார்த்து அரைத்து குன்றிபோல் உருண்டைசெய்து வாழைப்பூச் சாற்றில் இடத் தீரும்.

கிராணியின்பேரில் காணும் பாண்டு விடபாக வீக்கத்திற்கு மருந்து.

அரப்பொடி, இரும்புக் கிட்டம், காந்தம், கடுக்காய் மேல் தோல், நெல்லி முள்ளி, கருஞ்சீரகம், நற்சீரகம், பூண்டு, பெருங்காயம், திரிகடுகு வகைக்கு 3 வராகன் எடை இவைகளை வறுத்துச் சூரணித்து திரிகடி அளவு காலை, மாலை 10 நாட்கள் சாப்பிடத் தீரும்.

செரியாமைக் கிராணிக்கு மருந்து.

வேப்பன் ஈர்க்கு, ஓதி ஈர்க்கு, சுக்கு, சீரகம், ஓமம் இவைகள் வகைக்கு கால் பலம் வீதம் வெதுப்பி ஒரு படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இதுபோல் ஆறு பொழுது கொடுக்கத் தீரும்.

2. திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், நவாச்சாரம், அதிவிடையம் இவைகளை சம எடையாய் வெதுப்பிக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெய் விட்டு இளகம் போல் அரைத்துக் கொண்டு நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வர நோய் தீரும்.

3. வெள்ளறுகும், குப்பைமேனியும் (உலர்த்திய சமூலம்) சமமாய் தூள்செய்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

சகல கிராணிக்கும்

இந்துப்பு, காயம், வளையலுப்பு, வெள்ளுள்ளி, சுக்கு, திப்பிலி, ஓமம், மிளகு சவுட்டுப்பு, சித்திரமூலம் ஆகிய இவைகளை பிரமிச்சாற்றிலாவ்து,

Koviloor Digital Library

எலுமிச்சம்பழச் சாற்றிலாவது அரைத்துக் கொண்டு ஓர் உடும்பைத் தலை, கால், குடல், தோல் நீக்கி அதன் வயிற்றுக்குள் வைத்துத்தைத்து மடக்கிக் கட்டிப் புட்டுபோல் அவித்துக் காயவைத்து இடித்துத் தூள் செய்து திரிகடிப்பிரமாணம் ஒரு மண்டலம் உட்கொள்ளத் தீரும்.

கோவைத்தண்டை இடித்து மேல்தோல் நீக்கி, நீர் சுண்டவறுத்துத் தூள்செய்து, ஓமத்தை வறுத்துச் சூரணித்து இரு வகையையும் ஓர் எடையாய்க் கலந்து நல்லெண்ணெயில் கொட்டைப் பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும். பத்தியம் பால் சோறு கொடுக்கவும்.

ஒரு வராகன் எடை காரீயத்துடன் 4 வராகன் எடை உக்கிரம் (இரசம்) சட்டியில் கூட்டித் தொந்தித்துக் கல்வத்திலிட்டுக் காந்தம் 6 வராகன் எடை, கெந்தி 2 வராகன் எடை வெள்ளைத்துத்தம் 4 வராகன் எடை சேர்த்து4 சாமம் அரைத்து வைத்துக்கொண்டு பஞ்சமூலக் குடிநீருடனும் மற்ற துணை மருந்துகளுடனும் கொடுக்கத் தீரும்.

காந்தம், இலிங்கம், கல்மதம், சாதிக்காய், சாதிப்பத்திரி கருவேலம்பிசின், மாதுளம்பிஞ்சு இவைகளை ஓர் எடையாய் அத்திப்பால்விட்டு அரைத்துக் காசெடையாக உருண்டை செய்து உலர்த்தி வெல்லத்தில் கொடுக்கத் தீரும்.

சாதிக்காய், சாத்திரபேதி, கல்மதம், அபின் இவைகளை சம எடையாய் அத்திப்பால் விட்டு அரைத்துக் குன்றிபோல் உருண்டை செய்து வெந்நீரில் அரைத்துக் கொடுக்கத் தீரும்.

நாவற்பட்டை, அரசம்பட்டை, அத்திப்பட்டை, கருங்காலிப்பட்டை, ஓதியம்பட்டை வகைக்கு 10 பலம் இடித்து ஐந்து மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து அதில் பனைவெல்லம் 10 பலம் தட்டிப்போட்டுப் பாகு செய்து சுக்கு, சீரகம், மிளகு, ஓமம், ஏலம், கோரோசனை, குரோசானி ஓமம், கற்கடகசிங்கி, கிராம்பு, மல்லி, திப்பிலி, சாதிப்பத்திரி, சாதிக்காய், அதிவிடையம் வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் கிண்டி பசுவின் நெய், தேன்விட்டு இளகம் செய்துகொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத்தீரும்.

சீதம் விழுவது நிற்க மருந்து.

அமுக்கறாவேரும், இந்துப்பும் சமமாய்ப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கத் தீரும்.

இரத்த கிராணி, நீர்க்கிராணி, அடித்தள்ளல், மூலச்சூடு, வயிறு இரைதல், வாயு, அன்னம் செரியாமை, பொருமல், நச்சுநீர் தொப்புள்சுற்றி வலித்தலுக்கும் மருந்து.

திரிபலை, முத்தக்காசு, வெள்ளைக்குங்கிலியம், திரிகடுகு, கோட்டம், சீரகம், அதிமதுரம், சாதிக்காய், கிராம்பு, ஏலம், வெட்பாலையரிசி, அபின்,

Koviloor Digital Library

தேவதாரம், கூகைநீர், வில்வப்பிஞ்சு, பருத்திவிதைப்பருப்பு, அத்திப்பிஞ்சு, நல்வல்விதைப்பருப்பு புளியங்கொட்டை, மாதுளம்மேற்றோல், பொன்முசுட்டை வேர், ஆவாரை வித்து, கஞ்சாவித்து, கற்கடகசிங்கி, அதிவிடையம், இலவம் பிசின், விளாம்பிசின், நன்னாரிவேர்ப் பட்டை, நிலப்பனைக் கிழங்கு, கடலிராஞ்சிப்பட்டை, பெருமரத்துப்பட்டை மரமஞ்சள் வகைக்கு கழஞ்சு வறுத்து இடித்துக்கொண்டு வெள்ளாட்டுப்பால், எருமைத்தயிர் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து கருப்புக்கட்டி 10 பலம் இடித்துப் போட்டு பாகுசெய்து மேற்படி பொடியைத் தூவிக்கிண்டி நல்லெண்ணெய் அரைப் படி விட்டு இளகஞ்செய்து சுண்டைக்காய் அளவு இளகத்தில் அயக்காந்த செந்தூரத்தை வைத்து 4 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

மேற்படி கருப்புக்கட்டியைப் பாகு செய்யும்போது ஒரு படி கஞ்சாசாறு விட்டுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. அவசியமானால் விட்டுக்கொள்ளலாம்.

சகலக்கிராணி, கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, உளைவு, செரியாமை, பித்தம், நீர்ச்சுருக்கு, பிரமேகத்திற்கு மருந்து.

செங்கழுநீர், கொட்டி, நெய்தல், அல்லி, தாமரை, நிலப்பனை, அழுக்கறா, நீர்வள்ளி, நன்னாரி, ஓரிலைத்தாமரை, வில்வம், மாதுளை, வாழை, கருணை, வெருகு, மலைதாங்கி, கற்றாழை, சங்கு, சித்திரமூலம் இவைகளின் மூலம் முத்தக்காசு, அதிவிடையம், தக்கோலம், அதிமதுரம், கோட்டம், ஆவாரைப்பஞ்சாங்கம் வகைக்கு ஒரு பலமாக இவைகளை உலர்த்தி இடித்துத் தூள்செய்து இரண்டு படி பசுவின் பாலில் கருப்புக்கட்டி 10 பலம் போட்டு பாகுசெய்து இதில் மேற்படி தூள்களைத் தூவிக் கிண்டி நெய் 1 படி, தேன் அரைப்படி கூடவிட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வர நோய் தீரும்.

கிராணிக் கழிச்சல், அபானக் கடுப்பு, எரிப்பு, உறுப்பு, ஈளை, காசம், பிரமியம், எலும்புருக்கி, உள்ளுருக்கி, தாது புஷ்டி இவைகளுக்கு மருந்து.

கூவிளை, மாதுளை, அத்தி, ஆத்தி, மருது, ஆல், அரசு, இத்தி, பருத்தி, ஆவாரை, இலவு, இலந்தை, கொன்றை, முருங்கை, மா, கோவை, அகத்தி வேம்பு முசுட்டை கதலி, அழிஞ்சில், தாமரை, அனிச்சை, ஆதாளை, ஊழலாத்தி இவைகளின் பிஞ்சு ஒரு கழஞ்சு, சீரகம், அதிமதுரம் வகைக்கு 1 பலம் இவைகளை உலர்த்தி இடித்துத் தூள்செய்து இரண்டு படி பசுவின் பாலில், சர்க்கரை, கற்கண்டு வகைக்கு பலம் 6 போட்டுப்பாகு செய்து அதில் மேற்படி சூரணத்தை தூவிக்கிண்டி பசுநெய் நல்லெண்ணெய் வகைக்குப் படி அரை தேன் அரைப்படி விட்டு இளகம் செய்து வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர நோய் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

Koviloor Digital Library

வெள்ளைக் கழிச்சலுக்கு மருந்து.

வெண்குன்றிப் பருப்பு, புளியன்விதைத் தோல் வகைக்கு 1 வராகன்எடை வீதம் மை போல் இடித்து எருமை வெண்ணெயில் குழைத்து 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

நீர்க் கழிச்சலுக்கு மருந்து.

சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சாதிலிங்கம், ஊசிக்காந்தம், அபின் வகைக்கு 2 கழஞ்சு எடுத்து மூன்று நாட்கள் ஆட்டி செப்பில் அடைத்துக்கொண்டு அனுபானங்களில் ஒரு நாழிகைக்கு ஒரு வராகன் எடை வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

சல கழிச்சலுக்கு மருந்து

மருத்துவம்:- ஆவாரம்பூ, ஆவாரை அல்லி, ஆவாரையரிசி, ஆவாரைக்கொழுந்து, ஆவாரைவேர்ப்பட்டை வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு ஊறவைத்துக் காலையில் அரைக்கால் படியாய் வற்றவைத்து அதில் கல்நார், கல்மதம், கிராம்பு, சாதிப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துக் கலக்கிக் கொடுக்க நோய் தீரும்.

2. அத்திப்பிஞ்சு, அதிமதுரம், ஓமம், இந்துப்பு, ஈருள்ளி, மிளகு, சுக்கு, சீரகம் ஓர் அளவாய்ப் பசுவின் நெய்யில் வேகவைத்துப் பதத்தில் வடித்து உட்கொள்ளத் தீரும்.

3. விளாம்பிசின், இலவம்பிசின், கருவேலம்பிசின் மஞ்சள் தேற்றா விதை, நெல்லிமுள்ளி, காசுக்கட்டி, புளியவிதைத்தோல், வாகை விதை, அமிர்தசக்கரை, அல்லிவிதை வகைக்கு ஒரு கழஞ்சு, சந்தனம் 8 வராகன்எடை, ஆவாரைவிதை, சர்க்கரை வகைக்கு 12 வராகன் எடை இவைகளை இடித்துத் தாழைவிழுதுச்சாற்றிலும், வாழைப்பூச்சாற்றிலும் அரைத்து இலந்தைக்கொட்டை அளவு உருண்டை செய்து தேனிலாவது எருமைமோரிலாவது உட்கொள்ள உட்காய்ச்சல், தாகம், மேகசலக்கழிச்சல் முதலிய நோய்கள் தீரும்.

வயிறு இரைந்து கழிதலுக்கு மருந்து.

திரிகடி வெந்தயத்தை, நல்லெண்ணெய் விட்டு வறுத்துச்சிவந்து வருகிற பதத்தில் ஆவாரைஇலை ஒரு பிடி கூடப்போட்டு வறுத்துக் கருகி வருகிற பதத்தில் எருமை மோர் ஒரு படி விட்டுக் காய்ச்சி இறுத்து உட்கொள்ள நோய் தீரும்.

மூலக் கழிச்சலுக்கு மருந்து.

ஒரு தலைவெள்ளைப்பூண்டும், கஞ்சாவிதையும், ஓர் அளவாய் வறுத்து நல்லெண்ணெயும், கொஞ்சம் தென்னங் கருப்புக்கட்டியும் சேர்த்து இளகம் போல் அரைத்து எலுமிச்சங்காய் அளவு மூன்று நாட்கள் காலையில் உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

கழிச்சல் சுரத்திற்கு அபின் மாத்திரை.

அபின் 6 வராகன் எடை, சுக்கு 7 வராகன் எடை, திப்பிலி 8 வராகன் எடை, சீரகம் 9 வராகன் எடை, மிளகு 10 வராகன் எடை இவைகளை விஷ்ணுகரந்தை குடிநீரில் நான்கு சாமம் அரைத்து குன்றி போல் உருண்டை செய்துகொண்டு வில்வம், விஷ்ணுகரந்தை, சீரகம், வெற்றிலைக் காம்பு இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் செய்து அதில் ஒரு குளிகை வீதம் ஆறுவேளை கொடுக்கக் கழிச்சல், தாபசுரம் நீங்கும். புளி தள்ளவும். இவை, சிறியோருக்கும், பெரியோருக்கும் உபயோகப்படும்.

கழிச்சலுக்கு மருந்து.

விளாம்பிசினைப் பொடித்து எருமைத் தயிரில் மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

மந்தம், அதிசாரம், கிராணிக்கு மருந்து.

இந்துப்பு, ஓமம், கிராம்பு, சுண்டைவற்றல், சாதிக்காய், சாதிப்பத்திரி, அபின், காந்தம், இலிங்கம், நற்சீரகம், ஏலம், திரிகடுகு, இலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், மாங்கொட்டைப் பருப்பு, அதிவிடயம் வகைக்கு ஒரு வராகன் எடை, கோரக்கர்மூலி 18 வராகன் எடை இவைகளில் காந்தம், இலிங்கம், கஞ்சா இம் மூன்றையும் தூய்மைசெய்து மற்ற மருந்துகளை வெதுப்பிப் பொடித்துச் சர்க்கரை 3 பலம் கூட்டித் தேன் விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வெந்நீர் குடிக்கத் தீரும்.

சகல கழிச்சலுக்கும் காந்தச் செந்தூரம்.

காந்தம் 3 பலம், ஆவாரைவேர்ப் பட்டை 4 பலம், இவைகளைப் பொடித்துக் கற்றாழைமடல்தண்ணீர் விட்டரைத்து பில்லைதட்டிக் காயவைத்துச் சட்டியில் இட்டு சீலைமண் செய்து நான்கு சாமம் எரித்து ஆற்றியெடுக்க செந்தூரமாகும் அதில் ஒரு பண எடை வீதம் தக்க அனுபானங்களில் கொடுக்கத் தீரும். பத்தியம் எருமைப்பால், மோர் கூட்டிக் கொள்ளலாம்.

வயிற்றுக்கடுப்பின் இயல்பு.

முந்தி மலங்கழிந்தடங்கும், சீதம் ரத்தம் விழும் கழிந்து இடுப்பும், வயிறும் உளையும்; அன்னஞ் செல்லாது; உடல் மெலிந்து வரும்.

மருத்துவம்:– விடத்தலை, வெட்பூலா, நீர்ப்பூலா இவைகளின் வேர்த்தோல், ஆல விழுதின் கொழுந்து வகைக்கு ஒரு பிடி வீதம் ஒன்றாய்ச் சிதைத்துக் குடிநீர் செய்து அல்லது இவைகளை அரைத்து எருமை மோரிலாவது, தயிரிலாவது கலக்கிக் கொடுக்கவும்.

2. முத்தக்காசு இடித்து மாவாக்கிப் பிட்டவித்துப் பிழிந்த தண்ணீர் ஆழாக்கில், ஒரு வராகன் எடை ஓமத்தை வறுத்துப் பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

3. நற்சீரகம் 7 பலம், இளவறுப்பாகச் செய்து பொடித்து வடிகட்டி சர்க்கரை 1 பலம் கூட்டித் திரிகடி அளவு ஏரண்டத் தெண்ணெயிலாவது பசுவின் நெய்யிலாவது கலந்து உட்கொள்ளத் தீரும்.

4. இளநீரில் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து கொடுத்தாலும், எலுமிச்சம்பழச்சாற்றில் சர்க்கரை கலந்து கொடுத்தாலும். வெந்தயமும், நெல்லிப்பருப்பும் வறுத்துப் பொடித்துத் திரிகடி அளவு புளித்த பழந்தயிரிலாவது, நல்லெண்ணெயிலாவது கொடுத்தாலும்; நெல்லிப்பருப்பை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துச் சர்க்கரை கூட்டிக் கொடுத்தாலும் தீரும்.

5. வில்வப்பிஞ்சு, திப்பிலி, சாதிக்காய், ஓமம், சுக்கு இவைகளை ஓர் எடையாய் வறுத்துப் பொடித்துச் சில்லுக் கருப்புக் கட்டியும், வெண்ணெயும் கூட்டி மெழுகுபோல் அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும்.

6. மாதுளங்காயை வட்டமாக நறுக்கி விதைகளை எடுத்துப் போட்டு அதற்குள் வெந்தயம், ஓமம், சீரகம் வகைக்கு ஒரு வராகன் எடை வைத்து முடித்து சாணிக்குள் பொதித்து சாணி வெந்தபின் எடுத்துக் கவசம் நீக்கி ஒரு வராகன் எடை சீந்தில் சர்க்கரை கூட்டி அரைத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

7. திரிகடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடையம், அபின், களிப்பாக்கு, மாம்பருப்பு, முள்ளி, இலவம்பிசின் மேல் தோல், சீனி, சுக்கு, நெல்லி வற்றல், காட்டாத்திப்பூ, கருவேப்பிலை, மாதுளம்பூ, விளாம்பிசின், காசுக்கட்டி, புளியவிதையின் மேல் தோல், தான்றிக்காய்த் தோல் வகைக்கு 1 வராகன் எடை, நற்சீரகம் 16 வராகன் எடை இவைகளை வெதுப்பித் தூள்செய்து திரிகடி அளவு தேனிலாவது, தயிரிலாவது உட்கொள்ள நீங்கும்.

8. கற்கடசிங்கி 2 வராகன் எடை, ஈருள்ளி 1 வராகன் எடை, நற்சீரகம் அரை வராகன் எடை இவைகளை வெதுப்பி அரைத்து எருமைத் தயிரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

9. துத்தம், வரப்பூலா, முத்தக்காசு, சுக்கு, ஓமம், அதிவிடையம், பொன்முசுட்டை வேர், நற்சீரகம், குங்கிலியம் இவைகளை ஓர் அளவாய் அரைத்து, பசுவின் நெய்யில் வேகவைத்து சாப்பிட நீங்கும்.

10. ஒரு கழஞ்சு மிளகை, பசுவின் மோரில் 3 நாட்கள் ஊற வைத்து எடுத்து அதனுள் கீழ்க்காய்நெல்லி, வரப்பூலாக்கொழுந்து இவைகளை ஒரு பாக்களவு அரைத்து, மேற்படி மோரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

11. துத்திவேரை ஓர் எலுமிச்சங்காய் அளவு அரைத்து எருமைத் தயிரில் கலந்துகொடுக்க நீங்கும்.

12. ஓர் எலுமிச்சம்பழத்தை எருமைத் தயிரில் பிழிந்து கொடுக்க நீங்கும்.

Koviloor Digital Library

13. வெள்ளைக்குங்கிலியம் ஒரு வராகன் எடை பொடித்து மோரில் போட்டு மத்தால் கடைந்து வடிகட்டி கால் ஆழாக்குத் தேங்காய் பாலில் கலந்து கொடுக்கத் தீரும்.

14. வெள்ளைக்குங்கிலியம், மாதுளம்பூ, ஓமம், சாதிக்காய், நெல்லிமுள்ளி, திரிகடுகு ஆகியவை வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பி பொடித்துத் துணியில் வடிகட்டி சர்க்கரையும் கலந்து எருமைத் தயிரில் கொடுக்க நீங்கும்.

15. வெண்கிளுவை, அத்தி, நாவல் இவைகளின் பட்டையைச் சமமாய் இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தசாறு ஆழாக்கு, கொட்டைப்பாக்கு அளவு வெண்ணெயில் கலந்து கொடுக்கத் தீரும்.

16. சாதிக்காய், காசுக்கட்டி, வசுவாசி, ஓமம் இலவம்பிசின், இலவங்கம், அதிவிடையம், குங்கிலியம் வகைக்கு 1 கழஞ்சு, அபின் 4 கழஞ்சு, பருத்தியிலைச் சாற்றாலரைத்துத் தேற்றான் விதை அளவு பருத்திக்காய் இவைகளை அரைத்து வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு வெண்ணெயில் குழைத்து உட்கொள்ள நோய் தீரும்.

17. வெந்தயம், பெருங்காயம், வெள்ளைப்பூண்டு வகைக்கு 1 வராகன் எடை, முருங்கையீர்க்கு 10 வராகன் எடை இவைகளைச் சிவக்க வறுத்து 1 படி தண்ணீர் விட்டு ஒரு சிரங்கை அளவாய் வற்றவைத்துக் கொடுக்க வாயு கழிச்சல் நீங்கும்.

18. காசுகட்டி, வசம்பு வெள்ளுள்ளி, பெருமரத்துப்பட்டை இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் பொரித்துக் கொடுக்க நீங்கும்.

19. சாதிக்காய், அபின், நீர்ப்பூலாவேர்ப்பட்டை வகைக்கு ஒரு வராகன் எடை பொடித்து, கோழிமுட்டைக் கருவில் கலந்து அரைத்து வடை தட்டி ஆறு வேளை கொடுக்க நீங்கும்.

20. ஓமம் ஆழாக்கு (1/8 படி), நற்சீரகம் அரை ஆழாக்கு (1/16 படி), சுக்கு, மஞ்சள், அபின், சாதிக்காய் வகைக்கு 1 வராகன் எடை, கஞ்சா 2 வராகன் எடை, வறுத்துப் பொடித்துத் திரிகடி அளவு இள வெந்நீரில் கொடுக்க நீங்கும்.

21. வெட்பூலா, மருது, விடத்தலை, நீர்ப்பூலா இவைகளின் வேர்ப்பட்டை, அதிவிடையம், நெல்லிமுள்ளி, கூவிளம்பிஞ்சு, இவைகளை ஓர் அளவாய் உலர்த்திப் பொடித்து, பசுவின் தயிரில் திரிகடி அளவு கொடுக்க நீங்கும்.

22. கெந்தகம் கால் வராகன் எடை, நான்கு கடுக்காயை விதை நீக்கிப் பொடித்துக் கோழிமுட்டை வெள்ளைக் கருவில் போட்டுக் கொடுக்க நீங்கும்.

23. எலுமிச்சங்காய் அளவு நாவற்கொழுந்தை அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3 நாள்கள் கொடுக்கத் தீரும். வெள்ளாட்டுப் பாலில் எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து 3 நாள்கள் அதிகாலையில் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

24. கோழிமுட்டையின் வெள்ளைக் கருவில் கடுக்காய்ப் பூவைப் பொடித்துப் போட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய் விட்டுப் பொரித்துக் கொடுக்க நீங்கும்.

25. முற்றின தேங்காய்ப் பூவில் சர்க்கரைக் கூட்டி உட்கொள்ள நீங்கும்.

26. அனிச்சை, துத்தி, மலைதாங்கி, வரப்பூலா இவைகளின் வேர், முத்தக்காசு, சுக்கு, அதிவிடையம், சீரகம், வெள்ளைக் குங்கிலியம், ஓமம், இந்துப்பு வகைக்கு 1 கழஞ்சு இவைகளைப் பசுவின் பாலில் வேகவைத்து உட்கொள்ள நீங்கும்.

27. ஆழாக்கு எருமை மோரில் ஒரு எலுமிச்சங்காய் அளவு இலவங்கப்பட்டையை அரைத்துக் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

28. ஆழாக்கு எருமைப் பாலில் கறந்தவுடனே ஒரு துளி புளியிலைச்சாறு பிழிந்து கொடுக்கவும். இவ்விதம் 6 நாள்கள் கொடுக்க நீங்கும்.

29. நாவி, சூதம், கெந்தகம், சித்திரமூலம், சாதிக்காய், அதிவிடையம், தான்றிக்காய், கிராம்பு, பெருமரத்துப்பட்டை, முத்தக்காசு, பொரித்த வெங்காரம், காயம், பற்பாடகம், இலவம்பிசின், சுக்கு, நெல்லிவற்றல், சாதிப்பத்திரி, அவின், திப்பிலி, கஞ்சா இவற்றைச் சமமாய்க் கூட்டி கஞ்சாச் சாற்றால் ஆட்டிக் குன்றிமணி அளவு உண்டை செய்து தயிரிலிட வயிற்றுக்கடுப்பும் தேனிலிடகிராணியும், தண்ணீரில், அதிசாரமும் மூலக்கடுப்பும் தீரும்.

வயிற்றுக் கடுப்பு, மூலமுளை, குன்மம், கை கால் ஊறலுக்கு நாகபற்பம்.

ஒருபலம் நாகத்தைக் குகையில் வைத்து உருக்கி, அதில் கீழ்க்காய் நெல்லி சமூலத்தை உலர்த்திப் பொடித்த தூளை 1 பலம் தூவி வறுக்கப் பற்பமாகும். அந்தப் பற்பத்தெடைக்கு மேற்படி மூலிகையின் தூளைச் சேர்த்துப் பனைமட்டைச் சாற்றால் ஆட்டிப் பில்லை தட்டிக் காயவைத்துக் குக்குடப் புடமிடக் கொடிய சுண்ணமாகும். அதை வெண்ணெயிலும் வியாதிக்குத் தக்க துணை மருந்துகளிலும் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

வயிற்றுக்கடுப்பு, கழிச்சலுக்கு மருந்து.

ஓமம், மிளகு வகைக்கு 1 பலம் ஓர் அளவாய் வெதப்பி பொடித்து வெல்லம் 1 பலம் கூட்டி அரைத்து திரிகடி அளவு 10 நாள்கள் கொடுக்கத் தீரும்.

வயிற்றுக்கடுப்பு வாயுவுக்கு மருந்து.

சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், உப்பு, கறிவேப்பிலை, பெருங்காயம், சுண்டைவற்றல், இவைகளை ஓர் அளவாய் வெதுப்பிப் பொடித்து சுடுசோற்றில் திரிகடி அளவு தூவி நெய்ஊற்றி வயிற்றுக் கடுப்பு நீங்கும்.

Koviloor Digital Library

ஆசனக்கடுப்புக்கு மருந்து.

1. ஆமை ஓட்டைப் பொடித்து தணலில் தூவி அபான வாயில் புகை பிடிக்கக் கடுப்பு உடனே நீங்கும்.

2. 2 வராகன் எடை சுக்கை மோர்விட்டு மைபோல அரைத்து அரசிலையில் வைத்து மோரில் பதமாய் வேகவைத்து வடிகட்டி தயிரில் குழைத்து உட்கொள்ள நீங்கும்.

சுரத்தில் காணும் கடுப்புக்கு மருந்து.

நெற்பொரிமா, பசுவின் வெண்ணெய், கற்கண்டு, நற்சீரகத் தூள் இவைகளை ஓர் எடையாய் எடுத்து ஒன்றாய்ப் பிசைந்து விளாங்காய் அளவு 6 நாழிகை சாப்பிட நீங்கும்.

சகல கிராணி, அதிசாரம், வயிற்று இறைச்சல், கழிச்சல், சீதம், இரத்தம் விழுதல், மூலக்கடுப்பு, வயிற்றுக்கடுப்புக்கு மருந்து.

சுண்டவற்றல், கறிவேப்பிலை, மாம்பருப்பு, ஓமம், மாதுளம் பழத்தோல், நெல்லிமுள்ளி, வெந்தயம், இவைகளைச் சமமாய் வெதுப்பிப் பொடித்து திரிகடி அளவு தயிரில் உட்கொள்ள நீங்கும்.

2. செவ்வியம், முத்தக்காசு, சுக்கு, திப்பிலிமூலம், மல்லி, வாய்விளங்கம், சீரகம், கருஞ்சீரகம், ஓமம், அரத்தை, பேரரத்தை, மிளகு, வெங்காயம், குரோசானி ஓமம், தக்கோலம், இலவங்கப்பட்டை, சன்னஇலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாவப்பூ, கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வகைக்கு 1 வராகன் எடை, தூதுவளை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, வழுதலை, சித்திர மூலம், ஈசுரமூலி, முக்காவேளை, சிறுகாஞ்சோரி, நன்னாரி, சிற்றாமுட்டி, வட்டத்திருப்பி, சிறுகுறிஞ்சா, விலாமிச்சு சுண்டை வில்வம், மாதுளம் இவைகளின்வேர், வில்வப்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு, கறிவேப்பீர்க்கு, நெற்பொரி வகைக்குக் கால்பலம் இவை எல்லாம் இடித்து 4 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு ஒரு ஆழாக்கு உட்கொள்ள நோய் தீரும்.

3. வெந்தயம், வால்மிளகு, கருஞ்சீரகம், அகில் சாதிப்பத்திரி, ஓமம், சாதிக்காய், கிராம்பு, இலவங்கப்பத்திரி, திரிகடுகு, திரிபலை, மாதுளம்பழத்தோல், அதிமதுரம், குரோசானி ஓமம், அதிவிடயம், சிறுநாகப்பூ, வாய்விளங்கம், கோட்டம், சடாமாஞ்சில், கடுக்காய்ப்பிஞ்சு, சீரகம், மல்லி, தாளிசப்பத்திரி, முத்தக்காசு, சன்ன இலவங்கப்பட்டை, காட்டாத்திப்பூ, கற்கடகசிங்கி, கசகசா, ஏழுமுறை ஊறப்போட்டுக் கழுவிய கஞ்சா, பெருமரத்துப் பட்டை கூவிளத்தின்பழம், அபின் புளியன் விதைத்தோல், மாங்கொட்டைப்பருப்பு வகைக்கு கால் பலம், பெருங்காயம் 1 வராகன் எடை இவைகளை இளவறுப்புச் செய்து (தூள் செய்து) கல்வத்தில் இட்டு ஆல், அரசு, நாவல், அத்தி, நீர்ப்பூலா, ஓதி, ஆவாரை, விடத்தலை, நெல்லி, இலந்தை இவைகளின் இலை வகைக்கு 2 பலம் இடித்து எட்டுப்படி தண்ணீரில்

Koviloor Digital Library

போட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து வடித்து மேற்படி தூளில் சிறுக சிறுக வார்த்து இரண்டு நாட்கள் அரைத்துப் பின் எடுத்து மேற்படி குடிநீரில் கலக்கிக் குழம்பாய்க் காய்ச்சி மைப்போல் ஆட்டி நாவல் இலையால் ஏழு தொன்னை தைத்து மூடி ஆவியில் வைத்து மூடி எரித்து இலை அவிந்த பத்தில் மருந்தை எடுத்து அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்துகொண்டு அந்தந்த வியாதிக்குத் தகுந்த படி பொன்னாங்கண்ணிச்சாறு, கிராம்பு, ஆவாரம்பட்டைக் குடிநீர், கோரைக்கிழங்குச்சாறு, எருமைத்தயிர், மோர், தேன், பச்சரிசிக்கழுவிநீர் இவைகளில் ஒன்றில் ஓர் உருண்டை கொடுக்க வியாதி நீங்கும்.

4. பெருமரத்துப்பட்டைக்கொழுந்து, மருதம்பட்டை, உசிலம்பட்டை வகைக்கு ஒரு தேங்காய் அளவு இடித்து வெண்சோளக் கழுநீரில் போட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு அரைப்படி வீதம் கொடுத்து மிளகுநீரும் அன்னமும் உட்கொள்ள நோய்தீரும்.

5. மாதுளம்பிஞ்சு, வில்வப்பிஞ்சு, விளாம்பிஞ்சு, மாம்பருப்பு, இலவம்பிசின், நெருஞ்சிக்காய், அத்திப்பிஞ்சு, பெருமரத்துப் பட்டை, புளியம்விதைத்தோல், பொன்முசுட்டைவேர், நாவல்பட்டை, நாய்க்கடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசானி ஓமம், பெருங்காயம் இவைகளை வெய்யிலில் உலர்த்தித் தூள் செய்து எருமை மோரில் ஒரு படி வீதம் உட்கொண்டுவரக் குணமாகும்.

6. அகத்தி, ஆல் அரசு, அத்தி, ஆவாரை இவைகளின் பிஞ்சு, மாதுளம்வேர், கோவைத்தண்டு, சுரைத்தண்டு, தான்றி, நெல்லிக்கடுக்காய், சாதிக்காய், கிராம்பு, பத்திரி, ஓமம், வெந்தயம், திரிகடுகு, ஏலம், இலவங்கம், சடாமாஞ்சில், குரோசானி ஓமம், அதிமதூரம், வாய்விளங்கும், சீரகம், மல்லி, நறுக்குமூலம் வகைக்கு 1 கழஞ்சு, இவைகளை இடித்து மூன்றுபடி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து வடிகட்டி அதில் கொட்டைப்பாக்கு அளவு பசுவின் வெண்ணெயைப் போட்டு உருகினபின் கொடுக்கவும் இவ்விதம் மூன்று நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

7. சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கிராம்பு, கோட்டம், அதிமதூரம், அதிவிடயம், இலவங்கப்பட்டை, இலவம் பிசின், விளாம்பிசின், இவைகள் ஒரு நிறையாய் அரைத்து மாதுளங்காய்க்குள் வைத்து வெள்ளைத்துணி சுற்றி அதன்மேல் சாணமப்பி, காட்டு எருவில்புடம்போட்டு சாணி வெந்தபருவத்தில் எடுத்து, கவசம் நீக்கி கஞ்சாச் சாற்றால் ஆட்டிச் சிறு சுண்டைக்காய்ப்போல் உருண்டை செய்து வடிதண்ணீரில் கொடுத்தால் கடுப்பு சீதம்; இரத்தம் மூலம் நோய் தீரும். தேனிலிட அதிசாரம் நீங்கும். புளிமிளகாய் தள்ளவும்.

8. சாதிக்காய், சாதிப்பத்திரி, பெருங்காயம், சீரகம், அதிவிடயம், கிராம்பு அபின் கஞ்சா, வெந்தயம், கழற்சிவித்து, குரோசானி, ஓமம் இவைகளை ஒரு நிறையாய், கஞ்சா இலைச்சாற்றால் நான்கு சாமம் அரைத்து இலந்தைவிதை அளவு உருண்டைசெய்து தயிரில் மூன்று நாட்கள் கொடுக்க நோய் தீரும்.

Koviloor Digital Library

9. கிராம்பு, திரிகடுகு, ஓமம், சிற்றரத்தை, பொன்னாவாரை வேர், அன்னபேதி, சமுத்திராப்பழம், சாதிக்காய், பெருங்காயம் வகைக்கு 1 வராகன் எடை வெள்ளுள்ளித்தோல் நீக்கி ஒன்றரைப் பலம், வெற்றிலைக்காம்பு 2 வராகன் எடை இவை எல்லாம் வறுத்து மைபோல் அரைத்து வெற்றிலையில் வைத்துக்கட்டி ஒரு சட்டியில் வைத்து எரித்து வெற்றிலை கருகி வருகிற சமயத்தில் எடுத்து அரைத்து மறுபடியும் வெற்றிலையில், வைத்துச் சுருட்டி முன்போல் வெதுப்பி எடுக்கவும். இவ்விதம் 7 முறை வேகவைத்து அரைத்து உருண்டை செய்து வெந்நீரில் உட்கொள்ள நோய் தீரும்.

10. திரிகடுகு, ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிவிடயம், கிராம்பு, அக்கிராகாரம் வகைக்கு 1 வராகன் எடை, அபின் 4 வராகன் எடை, எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து எருமைத் தயிரில் இட்டுக் கொள்ள வியாதிதீரும்.

11. சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடயம், குரோசானிஓமம், விளாம்பிசின், மாதுளம்பிஞ்சு, இலவம்பிசின் வகைக்கு 1 கழஞ்சு இவை கண்ட எடைக்கு அபின் கூட்டி கஞ்சா இலைச்சாற்றில் ஒரு சாமமும் ஊமத்திலைச்சாற்றில் ஒரு சாமமும் ஆட்டி, பருத்திவிதை அளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்தி எருமைத் தயிரில் வேளை ஒன்றிற்கு ஓர் உருண்டையாக 5 நாள் கொடுக்கவும்.

12. இரதம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடையம், குரோசானிஓமம், சாதிலிங்கம், ஊமத்தன்விதை, விளாம்பிசின், மாதுளம்பிஞ்சு, வகைக்கு 1 வராகன் எடை, இவை கண்ட எடைக்கு அபின் கூட்டிக் கஞ்சா இலைச்சாற்றிலும், ஊமத்தன் இலைச் சாற்றிலிலும் வகைக்கு ஒரு சாமமாட்டி, பருத்தி விதை அளவு உருண்டை செய்துகொண்டு தேனிலாவது எருமைத்தயிரிலாவது உட்கொள்ள கிராணி; வயிற்றுக்கடுப்பு நோய் தீரும்.

13. சாதிக்காய் சாதிப்பத்திரி, கிராம்பு, இலவங்கப்பத்திரி, ஆனைத்திப்பிலி, ஓமம், அதிவிடயம், கோட்டம், கசகசா, சீரகம், கருஞ்சீரகம், வால்மிளகு, குரோசானிஓமம், திரிகடுகு, திரிபலை, அதிமதூரம், வெந்தயம், மல்லி கடுக்காய்மொக்கு, அபின், தூய்மை செய்த கஞ்சா, காட்டாத்திமொக்கு, அகில் தாமரைக்கிழங்கு, விளாவரிசி, நீர்முள்ளி வித்து, கார்க்கோலரிசி, முத்தக்காசு, தென்னைமொக்கு, மாதுளைவித்து, பூலாவேர்ப்பட்டை, கருவேலவித்து, கறிக்கருணை பெருமரத்தின்வேர்பட்டை, காட்டுக்கருணை, புளியவிதைத்தோல், மாங்கொட்டைப்பருப்பு வகைக்கு 2 பலம் இவைகளை நிழலில் உலர்த்தித் தூள்செய்து ஆல், அரசு, நாவல், அத்தி, முள்ளி, ஓதியம்பட்டை, முடக்கொத்தான், வெட்பூலா இவைகளை ஓர் எடையாய் இடித்து 8 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் பசுவின் பால் 2 படி, பனைவெல்லம் 10 பலம் கூடச்சேர்த்து பாகுசெய்து மேற்படி சூரணத்தை தூவிக்கிண்டி ஆவினெய் பாடி 1 விட்டு லேகியஞ் செய்து இறக்கித் தேன் கால் படி கெந்தகச்செந்தூரம், லோகச்செந்தூரம் வகைக்கு ஒரு பலம் போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு கழற்சிக்காய் அளவு காலை மாலை 1 மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

14. மாதுளமபழத் தோல், வில்வப்பிஞ்சு, காட்டாத்திமொக்கு, கடுகு, பொன்முசுட்டைவேர், முத்தக்காசு, புளியவிதைத்தோல், இலவங்கம், இலவம் பிசின், ஓமம், திரிகடுகு, வெட்பாலையரிசி, ஆனைத்திப்பிலி, நாவல்பட்டை, இலவங்கப்பட்டை, மாம்பருப்பு, கழற்பருப்பு, கருங்காலி வைரம், வெள்ளிலோத்திரம், நீர்முள்ளிவிதை, அதிவிடயம், கருஞ்சீரகம், நற்சீரகம், காசுக்கட்டி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து நெல்லிக்காய்ச் சாற்றால் ஆட்டி கழற்காய் அளவு உருண்டை செய்து கொண்டு தயிரில் உட்கொள்ளத் தீரும். இவைகட்கெல்லாம் இச்சாபத்தியம்.

கிராணிநோய்ப்படலம் முற்றுப்பெற்றது.

வாயுநோய்ப் படலம்

அஃதாவது நரம்புவழியாய் வாதநீர் அதிகரித்து அபானத்தில் விதைகளில் நரம்புவழியாயும் இன்னும் பல பல வழியாயும் மாதுநீர்க்களால் சகல நோய்களையும் அதிகரித்தலாம். அதிமேக சம்பந்தத்தில் சேர்ந்த நோய் எனப்படும். இது வாயு நோய்ப்படலம் எனப் பெயர் வகுக்கப்பட்டது.

உரைத்தோம் வாயு வென்பதற்கு முகந்த வாதந் தானறிந்து
நிறைத்த சூட்ச விதமனைத்தும் நேரும்பல நூல்களை யாராய்ந்து
குறைத்த மொழியுந் தான்பகுத்துக் கூறப் பிணியுந் தானகல
திரைத்த முனிவர் தன்னருளால் தெளிய வுரைத்த திதுவாமே.

அண்டவாயுவின் இயல்பு.

வாயு குடலில் தங்கி நரம்பு வழியாய் விதை ஒன்றில் இறங்கிப் பொருமி வலிக்கும். அது மேல்நோக்கி உடலுள் வாங்கும். அதன் நரம்பு புடைத்துக் காணும்.

மருத்துவம்:– நொச்சி, கழற்கொடி, சாரணை, ஆடாதோடை , வேளை, வேலிப்பருத்தி, கோழியவரை இவைகளின் கொழுந்து எருக்கம்பூ வகைக்கு ஒரு பிடி, வசம்பு, சித்திரமூலம், மிளகு, திப்பிலி, ஓமம் வகைக்கு 3 வராகன் எடை, வெள்ளுள்ளி, கழற்சிப்பருப்பு வகைக்கு 5 வராகன் எடை, பெருங்காயம் 1 வராகன் எடை இவைகளை வேலிப்பருத்திச் சாற்றில் அரைத்து ஒரு கழஞ்சு வீதம் உருண்டைசெய்து நிழலில் உலர்த்திக்கொண்டு, சங்கங்குப்பி நொச்சி, உத்தாமணி, முருங்கை, சாரணை, கொடிவேலி, வகைக்கு அரைப்பலம் வீதம் ஒன்றாய்ச் சிதைத்துக் குடிநீர் செய்து அதில் ஓர் உருண்டையை 3 வேளை அரைத்துக் கொடுக்கவும். இப்படி 3 நாள் புளி தள்ளிச் சாப்பிடத் தீரும்.

2. கொடிவேலி, சங்கங்குப்பி, செங்கத்தாரி, காத்தொட்டி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 4 பலம், கருப்புக்கட்டி 5பலம், எள்ளுப்பொடி அரைப் பலம், மிளகு, ஓமம் வகைக்கு ஒரு பலம், வெள்ளைப்பூண்டு 2 பலம், சீரகம் ½ பலம், இந்துப்பு, வெடியுப்பு, நவாச்சாரம், அதிவிடையம் வகைக்கு 2 வராகன் எடை, தேங்காய் 1 இவைகளை மெழுகுபோல் இடித்துக்

Koviloor Digital Library

கொட்டைப்பாக்கு அளவு இரண்டு வேளை 20 நாள்கள் உட்கொள்ளத் தீரும். புகையிலை தள்ளவும்.

3. குருணி கழுதை விட்டையை 4 மரக்கால் தண்ணீரில் கரைத்து வேடு கட்டி அதன்மேல் 6 எருக்கங்காயில் பஞ்சுவிதை நீக்கி நாள் பட்ட வரகரிசி மாவை வைத்து மூடி நூலால் கட்டி பிட்டவித்து வெந்த பதத்தில் எடுத்து நாழிகை ஒன்றுக்கு ஒரு காய்ப்பிட்டை, சாப்பிடத் தீரும். பத்தியம்; கைப்பு, புளிப்பு தள்ளவும்.

4. சத்திச்சாரணைவேர், முடக்கொத்தான் கொழுந்து, கழற்கொழுந்து, உள்ளி, பெருங்காயம், சுக்கு இவைகளை ஓர் எடையாய் அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு 6 வேளை கொடுக்கத் தீரும்.

5. வெள்ளுள்ளி, சுக்கு நாவற்பட்டை வகைக்கு 1 பலம் இடித்து ஒரு நாழி நீரில் போட்டுச் சரிபாதியாக வற்றவைத்து அதில் மூன்று கழற்பருப்பைப் பொடித்துப் போட்டு மூன்று நாள் கொடுத்து முருங்கை இலையை வதக்கி மேலேவைத்துக் கட்ட விதையேறி இறங்கியதும் தீரும். இச்சாபத்தியம்.

6. ஒரு தேங்காய்ப் பூவின் மத்தியில் தோல் நீக்கின வெள்ளைப் பூண்டு 1 பலம் வைத்து பிட்டவித்துப் பூவைப் பால் பிழிந்து பூண்டையும், 1 பலம் முருங்கப்பட்டையையும் நன்றாக அரைத்துச் சாறு பிழிந்து ஒன்றாகக் கலந்து சாப்பிட்டுக் காற்றுப்படாத அறையில் படுத்துக் கொள்ளவும். இதுபோல் 3 நாள் செய்யத் தீரும்.

7. கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, முருங்கைப்பட்டை, சுக்கு, கருங்காணம் வகைக்கு 3 கழஞ்சு, ஒரு படி தண்ணீரில் போட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்தக் கொடுக்கவும். இப்படி 6 வேளை கொடுக்கத் தீரும்.

8. பூவரசம்விதை, மிளகு வகைக்கு 3 வராகன் எடை, வெள்ளைப்பூண்டு 3 வராகன் எடை அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு 3 நாள் சூரிய உதயத்தில் கொடுக்கத் தீரும். புளி, புகையிலே தள்ளவும்.

9. கழற்பருப்பு, சித்திரமூலம், மாவிலங்கு இவைகளின் வேர்பட்டை வகைக்கு 10 வராகன் எடை, முட்டை வெள்ளைக் கருவில் விரவிப் பொரித்துச் சாப்பிடத் தீரும்.

10. கோழிமுட்டையின் வெள்ளைக் கருவில், ஒரு கழற்பருப்பும், கொட்டைப் பாக்களவு சிற்றாமுட்டிக் கொழுந்தும் அரைத்துப் போட்டுப் பொரித்து உட்கொள்ளத் தீரும்.

11. கருவ்வேளையல், மிளகு, பெருங்காயம் இவைகளை ஓர் எடையாய் மைபோல் பொடித்துத் திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

12. திருகுகள்ளியை வாட்டிச் சாறுபிழிந்து அதற்குச் சமமாய் நல்லெண்ணெய் கூட்டி, உடல் வலிமைக்குத் தக்கபடி மூன்று நாள் கொடுத்து 6 நாள் பத்தியம் வைக்கத் தீரும்.

Koviloor Digital Library

13. கழற்சிப்பருப்பு, சத்திச்சாரணைக் கிழங்கு, மிளகு, இந்துப்பு, பெருங்காயம், வெள்ளுள்ளி, வசம்பு இவைகளை ஓர் எடையாய் வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக்கொடுக்க நீங்கும்.

14. புளியிலையை இடித்து மூன்று படி நீரில் போட்டு, அதில் திரிகடுகு, இந்துப்பு, ஓமம், கெந்தகம், காயம், வெங்காயம், வெள்ளுள்ளி வகைக்கு 1 வராகன் எடை, வாளம் 10 வராகன் எடை, கழற்சிப்பருப்பு 5 வராகன் எடை இவைகளைக் கிழிகட்டி வேகவைத்து மருந்துகளைக் கழுவி எருக்கம்பூச் சாற்றால் ஆட்டி தேற்றான் விதை அளவு உருண்டை செய்து விளக்கெண்ணெயில் ஒரு குளிகையைத் தூள்செய்து 3 நாள்கள் கடும் பத்தியமாகக் கொடுக்க நீங்கும்.

15. பெருங்காயம், கழற்சிப்பருப்பு, மிளகு இவைகளை ஊமத்த இலைச் சாற்றால் அரைத்து, பருத்தி விதை அளவு உருண்டைசெய்து இருதடவை மூன்று நாள்கள் ஒரு பண எடை அளவு ஊமத்தையிலைச் சாற்றில் அரைத்துக் கொடுத்து, மேற்படி சாற்றை விதையிற் பூசி தவிட்டை வறுத்து ஒற்றடம் செய்யத் தீரும்.

16. இலுப்பைப் பிண்ணாக்கும், சிவந்த கோழித்தலை கந்தகமும் 2 சுண்டைக்காய் அளவு அரைத்துப் பனைவெல்லத்தில் பொதித்துக் கொடுக்க நீங்கும்.

அண்டவாதத்திற்கு மருந்து.

1. குட்டித்தக்காளி இலையும், தைவேளையிலையும் வதக்கி ஒற்றடம் செய்து கட்டவும் வசம்பு பூடு கழற்யிலை வறுத்து ஒத்தடஞ் செய்து கட்டவும்.

2. கழுதை லத்தியும், கழற்சியிலையையும் வறுத்து ஒற்றடம் செய்து கட்டவும்.

3. ஆனை, குதிரை, ஒட்டை, கழுதை, வெள்ளாடு இவைகளின் லத்தியும், தேள் கொடுக்கு இலையும், தேங்காயைத் திருகின பூவும், பூவரசம்பூவும் கொடிக்கள்ளிப் பட்டையும் சமயெடையாய் இடித்து வறுத்து ஒற்றடம் கொடுக்கவும்.

மந்தாக்கினி வாய்வு குணம்.

பசி மிகவுண்டாகி மந்திக்கும்; சிந்தையில் நினைத்தது எல்லாம் தின்ன விரும்பும்; கொற்ற வொட்டது; வயிற்றில் இறங்காமல் வாந்தியாகும்; மலங்கருகும்; கிறுகிறுக்கும்; வயிறுவலிக்கும்; மலத்தில் சிறிது இரத்தமும் மிகுந்த சலமும் விழும்; பலம் குறையும்; நயனம், முகம் வெளுக்கும்.

மருத்துவம்:— மேற்றோல் நீக்கின 8 பலம் இஞ்சியைச் சிறு வில்லைகளாக நறுக்கி அதில் 15 எலுமிச்சம் பழம் பிழிந்து சூரியனில் வைத்து உலர்த்தி சரிநெய் விட்டு வறுத்து கூகைநீர் 1 பலம், சீரகம் 2 பலம், சதுர்ச்சாதம், திரிசாதம், திரிகடுகு, தாளிசப்பத்திரி; குரோசானி ஓமம்.

Koviloor Digital Library

வாய்விளங்கம் வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இடித்துத் தூள் செய்து சர்க்கரை 3 பலம் கூட்டித் திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

2. மேல் தோல் நீக்கி அரிந்த இஞ்சி 10 பலம் உமிபோக்கின, சீரகம் 2 பலம் இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தி பசுவின் நெய் தெளித்து தூள் செய்து கொண்டு திப்பிலி, மிளகு, கோட்டம், சோம்பு, தாளிசப்பத்திரி, திப்பிலி, வாய்விளங்கம், சடாமாஞ்சில், அதிமதூரம், கொத்தமல்லி, ஓமம், திப்பிலிமூலம், முக்காவேளைவேர், சந்தனம், ஏலக்காய் தழுதாழைவேர்த் தோல் இவைகளைச் சம எடையாய்க் கரிசாலைச் சாற்றில் மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தி இடித்துத் தூள் செய்துகொண்டு இருவகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து அதில் நெற்பொரி, முந்திரிப்பழம், சிலாசத்து பற்பம் வகைக்கு 1 பலம், சர்க்கரை 10 பலம் கூட்டித் திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

3. கருஞ்சீரகம், நற்சீரகம், இந்துப்பு, திரிகடுகு, கருவேப்பிலைக்கு வகைக்கு 1 பலம் இவைகட்டு எட்டிலொன்று காயம் வெதுப்பித் தூள்செய்து திரிகடி அளவு அன்னத்தில் தூவி நெய்விட்டுப் பிசைந்து உட்கொள்ளத் தீரும். மலம் தூய்மையாகும்.

அக்கினி மாந்தம், வாயு பொருமலுக்கு மருந்து

மருத்துவம்:- கண்டங்கத்திரி முள்ளி, சத்திச்சாரணை, ஓமம், கொடிவேலி, திரிகடுகு, நவச்சாரம், திரிபலை, பஞ்சலவணம், சத்திச்சாரம், சீரகம், கருஞ்சீரகம் வகைக்குக் கால் பலம் வீதம் பொடித்து அதற்குச் சமமாக அசுவகெந்தித் தூளுங் கூட்டித் தேனிலாவது இஞ்சிச் சாற்றிலாவது உட்கொள்ளத் தீரும்.

2. இந்துப்பு 1 வராகன் எடை, சீரகம் 2 வராகன் எடை, ஓமம் 3 வராகன் எடை சுக்கு 4 வராகனெடையை திப்பிலி வராகனடை மிளகு வராகனெடை 1 பொடித்து அதற்குக் கடுக்காய்ப் பொடி கூட்டி திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ளத் தீரும்.

3. ஓமம், சுக்கு, கொடிவேலி வேர் இவைகளை சமஎடையாய்ப் பொடித்து அதற்குச் சமமாகக் கடுக்காய்ப் பொடி கூட்டித் திரிகடி அளவு மோரில் உட்கொள்ளத் தீரும்.

4. பச்சைக்கருவேப்பிலையை ஒரு தேங்காய் அளவு அரைத்து ஒன்றரைப்படி தண்ணீரில் கலக்கி அரைப் படியாய் வற்றவைத்து வடிகட்டி அதில் பனைவெல்லம் 3 பலம் போட்டுப் பாகு செய்து கரியுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சீனிக்காரம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், ஓமம், திப்பிலி, பெருங்காயம், சவுக்காரம், நவாச்சாரம் வகைக்கு 3 கழஞ்சு, நெற்பொரி ஒரு ஆழாக்கு இவைகளைத்தனியே தூள் செய்து தூவிக் கிண்டி வைத்துக்கொண்டு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர குணமாகும்.

திரிகடுகு ஓமம் வாய்விளங்கம் வகைக்கு வராகனெடை 5 பொடித்து அதற்கு ௨ ன் சாக்க்ரை சேர்த்து தேன்நெய் வகைக்குப் படி காள் விட்டு லேகியக் செய்து கொட்டைப் பாக்கு பிரமாணஞ் சாப்பிட்டு வரத்தீரும்.

Koviloor Digital Library

பித்தவாயு, உஷ்ணவாயு, மந்தத்திற்கு மருந்து.

தோல் நீக்கின இஞ்சி 40 பலம், அரைப்படி நெய் தெளித்துப்பொன் நிறமாய் வறுத்துத் தூள் செய்துகொண்டு கடுகுரோகணி, தேசாவாரம், சுக்கு, சீரகம் வகைக்கு 1 பலம், ஏலம், மிளகு வகைக்கு முக்கால் பலம், இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி, நெல்லிமுள்ளி வகைக்கு அரைப் பலம், சாதிக்காய், அதிமதுரம், சிறுநாகப்பூ, இலவங்கம் தாளிசப்பத்திரி, கூகைநீர் வகைக்குக் கால் பலம் இடித்துத் தூள் செய்துகொண்டு இரு வகைத்தூளையும் ஒன்றாய்க் கலந்து சர்க்கரை பலம் பத்து கூட்டித் திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

வாயுத்திரட்சி, அரோசிகம், மலக்கட்டுக்கு மருந்து.

பசுவின் பாலில் அவித்துத் தூய்மைசெய்த சிவதை 6 பலம், திரிபலை, சுக்கு, திப்பிலிப், பூண்டு வகைக்கு 1 பலம் இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, ஏலம், இந்துப்பு வகைக்கு அரைப் பலம்; இவைகளை இடித்துத் தூள்செய்து அதற்கு சமமாக, சர்க்கரை கூட்டித் திரிகடி அளவு தேனிலாவது நெய்யிலாவது வெந்நீரிலாவது உட்கொள்ளத் தீரும்.

பித்தவாயு, அரோசியம், அக்கினி மந்தம், வயிற்றெரிவுக்கு மருந்து.

ஆவாரைப் பஞ்சாங்கத் தூள் 1 படி, இஞ்சி, எலுமிச்சம்பழம், முசுமுசுக்கை இவைகளின் சாறு பசுவின் பால் வகைக்கு 2 படி, சர்க்கரை 15 பலம் ஒன்றாய்க் கலந்து பாகு செய்து அதில் சீரகம், அதிமதுரம் 1 பலம், கோட்டம், திப்பிலி, மிளகு, கூகைநீர் வகைக்கு அரைப் பலம், விலாமிச்சம் வேர், சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி வகைக்கு கால் பலம் இவைகள் இடித்துத் தூள் செய்து தூவிக் கிண்டி, பசுவின் நெய் 2 படி, தேன் 1 படி கூட விட்டு இளகம் செய்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும். இச்சாபத்தியம்.

புளித்த ஏப்பத்திற்கு மருந்து.

வசம்புசுட்ட சாம்பல், வறுத்த கரியுப்பு, பெருங்காயம் இவைகளைச் சம எடையாய்ப் பொடித்து திரிகடி அளவு மோரிலாவது, நீரிலாவது உட்கொள்ளத் தீரும்.

உஷ்ணவாயுவுக்கு

பிரண்டை, ஓமம், கருவேப்பிலக்கு, கரியுப்பு வகைக்கு 1 பலம் வறுத்து மூன்று படி எருமை மோர் விட்டு ஒரு கொதி வந்த பிறகு இறக்கி வைத்துக் கொண்டு சாப்பிட்டுவர நோய் நீங்கும்.

அசீரணவாயுவுக்கு மருந்து.

மருத்துவம்:– சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், இந்துப்பு, நற்சீரகம், பெருங்காயம் இவைகளைச் சமஎடையாய்த் தூள்செய்து திரிகடி அளவு உணவில் பிசைந்து பசுவின் நெய் விட்டு உண்ண நோய் நீங்கும்.

Koviloor Digital Library

2. சத்திச்சாரணை, கண்டங்கத்திரி, வில்வம் இவைகளின் வேர் வகைக்கு 2 பலம், சுக்கு 1 பலம், பூண்டு 3 பலம், பெருங்காயம் கால் பலம், இந்துப்பு 1 ½ பலம் இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உணவுக்குப் பின் உட்கொள்ள நோய் தீரும்.

3. மிளகை வறுத்துப் பொடித்து திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய்த் தீரும்.

4. கருவேப்பிலைக்கு, சுக்கு, சீரகம், ஓமம் வகைக்கு 3 வராகன் எடை ஒரு படி தண்ணீரில் போட்டு ஒரு ஆழாக்காய் வற்ற வைத்து உட்கொள்ளத் தீரும்.

மந்தவாயுவுக்கு மருந்து.

மருத்துவம்:– சீரகம், ஏலம், பச்சைக்கற்பூரம் இவைகளைச் சமஎடையாய்த் தூள்செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கூட்டி திரிகடி அளவு காலை மாலை உட்கொள்ள நீங்கும்.

2. மேல் தோல் சீவின இஞ்சி 10 பலம், ஏலம், திரிகடுகு, கிராம்பு, ஓமம், வாலுளுவையரிசி, சாதிக்காய், ஆனைத்திப்பிலி, சீரகம், அதிமதுரம், குரோசானிஓமம், அமுக்கறா, கசகசா, இலவங்கப்பத்திரி, கொடிமல்லி இவைகள் வகைக்கு ஒரு பலம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம் இவைகள் வகைக்கு 2 பலம் நெய்விட்டு வறுத்துத் தூள் செய்துத் திரிகடி அளவு உட்கொள்ள நோய் தீரும்.

பித்தவாயுவுக்கு மருந்து.

மருத்துவம்:– இலவங்கம், திரிகடுகு, முத்தக்காசு, சிறுநாகப்பூ, திரிபலை இவைகளைச் சம எடையாய்த் தூள்செய்து அதற்கு நான்கில் ஒன்று பசுவின் பாலில் தூய்மை செய்த சிவதைச் தூள் கூட்டி வேளை ஒன்றுக்கு 1 கழஞ்சு தேனில் உட்கொள்ள நோய் நீங்கும்.

2. நற்சீரகம், அதிமதுரம், கருஞ்சீரகம், சோம்பு, சன்னலவங்கப்பட்டை, சதகுப்பை வகைக்கு 6 பலம், மல்லி 9 பலம், இவைகளை இடித்துத் தூள் செய்து சர்க்கரை, கல்கண்டு வகைக்கு 6 பலம் கூட்டி திரிகடி அளவு வெந்நீரில் காலை, மாலை பத்து நாள் உட்கொள்ளத் தீரும்.

3. கடுக்காய், திப்பிலி, சுக்கு, சீரகம், ஓமம், இந்துப்பு, நறுக்கு மூலம் வகைக்கு 1 பலம் இவைகளைப் பொடித்துப் பனைவெல்லம் 1 பலம் பாகுசெய்து அதில் தூவிக் கிண்டி ஒரு நாழிகைக்கு ஒரு கழற்காய் அளவு உட்கொள்ளத் தீரும்.

வாயுச்சூலைக்கு மருந்து.

திரிகடுகு, இந்தப்பு, ஓமம் இவைகளை வெதுப்பிப் பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் நீங்கும்.

Koviloor Digital Library

2. பதினாறு எருக்கிலைக்குள் தோல் நீக்கின அரைப்பலம் வெள்ளைப்பூண்டை வைத்துக் கட்டிப் பிட்டவித்து இலை வெந்த பருவத்தில் எடுத்துச்சாறு பிழிந்து அந்தச் சாற்றில் மேற்படி வெந்த பூண்டை அரைத்து மூன்று வேளை கொடுக்க நோய் நீங்கும்.

3. எலுமிச்சங்காய் அளவு இலுப்பைப் பிண்ணாக்கை ஆழாக்கு ஈருள்ளிச் சாற்றில் ஊறப் போட்டு வெதுப்பிக் கொடுக்க நோய் நீங்கும்.

வாயுவுக் குத்துக்கு மருந்து.

கொடிவேலிப் பட்டை, சுக்கு, பறங்கிப் பட்டை, பிறப்பங் கிழக்கு வகைக்கு 3 வராகன் எடை வீதம் சிதைத்து நான்கு படி நீரில் போட்டு எட்டொன்றாய் வற்றக் குடிநீர் (கஷாயம்) செய்து நாள் ஒன்றுக்கு மூன்று நாழிகை கொடுக்க நோய் நீங்கும்.

வாயுப் பொருமலின் இயல்பு.

வாயுப்பொருமி, அக்கினி கலந்து உண்ட உணவை வாந்திக்கும், புளித்த ஏப்பமிடும், காற்றுப்பரியும்.

மருத்துவம்:– பத்து வராகன் எடை சுக்கை வேலிப் பருத்திச் சாற்றால் மைபோல் அரைத்து வில்லை தட்டி ஒரு சட்டியில் இரண்டு விரல் கனம் உப்பை பரப்பி அதன் மேல் முன்போல உப்பைப் பரப்பி ஒரு மூடி 2 சீலை மண்செய்து நான்கு எருவில் புடம் போட்டு பொடித்துத் தேனில் உட்கொள்ள நோய் நீங்கும்.

2. சர்க்கரை 16 பலம், ஒன்றறை படி பசுவின் பாலில் பாகு செய்து அதில் கரிசாலைத் தூள் 1 பலம், ஏலம், வாய்விளங்கம், மிளகு, ஓமம், இலவங்கப் பட்டை, வெள்ளுள்ளி, வாலுளுவை, திப்பிலி, நற்சீரகம் வகைக்கு அரைப் பலம், சதகுப்பை 2 பலம், மல்லி 1 பலம், கிராம்பு 2 வராகன் எடை சுக்கு பலம் 6 இளவறுப்பாய்த் தூள் செய்து தூவிக் கிண்டி தேன், நெய் விட்டு இளகம் (லேகியம்) செய்து நாழிகை ஒன்றிற்கு கொட்டைப் பாக்கு அளவு ஒரு மண்டலம் (48 நாட்கள்) உட்கொள்ளத் தீரும்.

3. சுக்கு 4 பலம், சர்க்கரை, தேன், வகைக்கு 2 பலம் இவைகளை இளகம் செய்து உட்கொள்ளத் தீரும்.

4. திரிகடுகு, கடுக்காய், அரத்தை, நறுக்கு மூலம், பேய்ப்புடல், மல்லி, வாய்விளங்கம், வேப்பீர்க்கு, கருவேப்பீர்க்கு, முருங்கைப் பட்டை, சத்திச்சாரணை வேர் வகைக்கு அரைப் பலம் இவைகளைச் சிதைத்து 4 நாழி நீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து இரண்டு நாழிகை உட்கொள்ளத் தீரும்.

குண்டல வாயுவின் இயல்பு.

வாயு மிகுத்துக் கூப்பிட்டு ஓடித் திரிந்து வயிற்றில் வந்து கல்போல் திரளும்; மறுபடியும் சிதறி உடம்பெங்கும் பரந்து பின் வந்து அடங்கும்; பசியை ஒடுக்கும்.

Koviloor Digital Library

குடகரி வாயுவின் இயல்பு.

வாயு அதிகரித்து குடல், முதுகு, நெஞ்சு, விலா முதலான இடங்களில் ஓடிப் புடைத்து புரண்டு அழன்று வலிக்கும்; உடல் அயரும்; மலங் கருகும்.

அனாகத வாயுவின் இயல்பு அனாகநோய்.

மென்மேல் உண்பதினாலும், நொந்த அன்னம், ஊசல்கறி புசித்தலாலும்; மலங் கட்டினால்; வாயு அதிகரித்து; வயிறு பொருமி வாந்திப் பிராந்தியாகும்.

அந்தரா வாயுவின் இயல்பு.

அக்கினி மந்தித்து சீரணமாகாமல் உண்ட வண்ணமாய் பிரவர்த்திக்கும்; புளித் தேப்பம், வாந்தி, தாகங் காணும்; வாயு தருகாமற் பரிந்துகொண்டிருக்கும்.

துடி வாயுவின் இயல்பு.

வாயு அடிக்கடி உடலில் பரந்தோடித் துடித்துச் சில நேரம் அடங்கியிருக்கும்; நாள்தோறும் அதிகரித்து இப்படியே சேட்டை இருக்கச் செய்யும்.

குடல்வாயுவின் இயல்பு.

குடலில்வாயு புரண்டு தடித்துக் குமுறி இரையும். சிலைபோல் கனத்து மந்திக்கும்.

சகலவாயுவுக்கும் பொதுமருந்து.

வேப்பீர்க்கு, மூர்க்கரைச்சாரணைவேர், கருவேப்பீர்க்கு, முருங்கையீர்க்கு வகைக்கு ஒரு பிடி, சுக்கு, மஞ்சள் வகைக்கு 3 வராகன் எடை இவைகளைச் சிதைத்து 2 படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டு வரத் தீரும்.

2. சீரகம், இந்துப்பு, ஓமம், திரிகடுகு, கருஞ்சீரகம், பெருங்காயம் இவைகளை ஓர் எடையாய் வெதுப்பித் தூள்செய்து திரிகடி அளவு தேனிலாவது, நெய்யிலாவது உண்ண நலமாகும்.

3. சுக்கு, திப்பிலி, மிளகு, வெள்ளுள்ளி, ஓமம், வாலுளுவை அரிசி இவைகளை ஓர் எடையாய் வெதுப்பிப் கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

4. நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, ஓமம், பெருங்காயம், வகைக்குக் கால் பலம் வெதுப்பித் தூள்செய்து கரியுப்பை எருக்கம் பழுப்புச் சாற்றால் அரைத்து 4 அல்லது 6 புடம் போட்டு பற்பம் செய்து அதை மேற்படி தூளிற்குச் சமமாகக் கூட்டித் திரிகடி அளவு 7 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

5. செவ்வியம், கொடிவேலிவேர், திப்பிலி, கண்டந்திப்பிலி, சுக்கு, வகைக்கு 3 வராகன் எடை சிதைத்து 2 படி நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் சாதிலிங்கத்தை உரைத்து உட்கொள்ள நீங்கும்.

6. நற்சீரகம், கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபலை, திப்பிலிமூலம், சித்திரமூலம், இந்துப்பு, சவுட்டுப்பு, வாய்விளங்கம், கடுகுரோகணி இவைகளை ஓர் எடையாய்த் தூள் செய்து திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நீங்கும்.

7. அசுவகெந்தி, நற்சீரகம், திரிகடுகு, ஏலம், கிராம்பு, அக்கிராகாரம், அரத்தை இவைகளைச் சம எடையாயத் தூள் செய்து திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

8. மிளகு, ஓமம், வெந்தயம், சீரகம், தைவேளைவேர் இவைகளை வெதுப்பிப் பொடித்துத் தேனில் உட்கொள்ள குணமாகும்.

9. இரண்டு படி பசுவின் பாலில் 8 பலம் பனைவெல்லம் போட்டுப் பாகுசெய்து அதில் திரிகடுகு, ஏலம், சீரகம் வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கிண்டி தேன், நெய் வகைக்குக் கால் படி விட்டு இளகம் செய்துகொண்டு ஒரு நாழிகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உண்ண நீங்கும்.

10. ஏலம், இலவங்கம், குங்குமப்பூ, சடாமாஞ்சில், மஞ்சிட்டி, கடுகுரோகணி, திப்பிலிமூலம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, வசுவாசி, சிற்றரத்தை; சித்திரமூலம், அதிமதூரம், நற்சீரகம், கருஞ்சீரகம், கல்லுப்பு, குரோசானிஓமம், மிளகு, வாய்விளங்கம், நிலவாகைவேர் வகைக்கு 3 கழஞ்சு இவைகளைத் தூள் செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கூட்டித் திரிகடி அளவு சாப்பிட்டுவரத் தீரும்.

வாயுவுக்குக் கழிச்சல் மருந்து.

மிளகு, இந்துப்பு வகைக்கு 1 கழஞ்சு, சீரகம் 2 கழஞ்சு, சுக்கு, சிவதை வகைக்கு 5 வராகன் எடை, ஓமம் 3 கழஞ்சு, திப்பிலி 4 கழஞ்சு, கடுக்காய் 15 கழஞ்சு, சத்திச்சாரணை வேர்த் தூள் 10 கழஞ்சு இவைகளை நிழலில் உலர்த்திப் பொடித்து திரிகடி அளவு உட்கொள்ளக் கழிச்சலாகி வாயு தீரும்.

2. கெந்தகம், இரசம், நேர்வாளம், திரிகடுகு, காயம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், ஓமம் வகைக்கு 1 கழஞ்சு இவைகளைப் பொடித்து முற்றின தேங்காய்க்குள் அடைத்துக் கண்ணில் முருங்கை முளையடைத்து மேலோடு கறுகும்படிச் சிறுபுடம் போட்டு ஆறவிட்டு எடுத்து கறுகிய பாகத்தை நீக்கிவிட்டு மிகுந்தவைகளைச் சோற்றுக் கற்றாழைச் சாற்றாலாட்டி சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து தேனில் கொடுக்கக் கழிச்சலாகும். பத்தியம் மோரும், சாதமும், வெந்நீரும் உட்கொள்ள நலமாகும்.

3. மல்லி, வாய்விளங்கம், கடுகுரோகணி, கடுக்காய், வாளம் இவைகளை ஓர் எடையாய் இஞ்சிச்சாற்றில் ஆட்டிப் பருத்தி விதை அளவு

Koviloor Digital Library

உருண்டை செய்து மேற்படி சாற்றிலாவது மிளகுக் குடிநீரிலாவது கொடுக்கச் சகல வாயுவுத் தீரும்.

4. திரிகடுகு, கடுகுரோகணி, தேசாவரம், வாய்விளங்கம் வகைக்கு 2 கழஞ்சு; தூய்மைசெய்து முளைபோக்கின வாளம் 10 கழஞ்சு இவைகளை இஞ்சிச் சாற்றால் மைபோல் ஆட்டி, குன்றி அளவு உருண்டை செய்து இஞ்சிச் சாற்றிலாவது, பனைவெல்லத்திலாவது 2 உருண்டை கொடுத்து வெந்நீரில் சாப்பிட நன்றாய் கழிச்சலாகி சகல வாயுக்களும், மலக்கட்டும் தீரும். முன்போல் பத்தியம், கொள்ளவும்.

5. சிவதை 1 பலம், திரிபலை, மல்லி, கடுகுரோகணி, தேசாவரம், இந்துப்பு, செவ்வியம், முத்தக்காசு, திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், சிறுநாகப்பூ, அன்னபேதி, விலாமிச்சம் வேர் வகைக்கு 3 கழஞ்சு, தேவதாரம், இலவங்கப்பத்திரி, கோட்டம், சந்தனம், பொரிகாரம், கத்தூரி மஞ்சள், சடாமாஞ்சில், வாய்விளங்கம் வகைக்கு 1 ½ கழஞ்சு இவைகளை வெய்யிலில் உலர்த்திப் பொடித்துத் திரிகடி அளவு இஞ்சிச் சாற்றில் இட சகல வாயு, மலக்கட்டும் தீரும். மற்ற நோய் கட்டுதற்குரிய துணைமருந்துகளில் இட்டால் குணமாகும். மிளகுரசம், சாதமும், உப்பும் கூட்டிக் சுடுகஞ்சியும் கொள்ளலாம். இரவில் மிளகுக் குடிநீர் (கஷாயம்) உட்கொள்ளவும்.

6. சிவதைவேர் 30 வராகன் எடை, திரிகடுகு, வாய்விளங்கம், கிராம்பு, இலவங்கப்பட்டை, கோரைக்கிழங்கு, திரிபலை வகைக்கு 1 வராகன் எடை வெய்யிலில் உலர்த்திப் பொடித்து அதற்குச் சமமாய் சர்க்கரை கூட்டி திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ள மலக் கட்டு தீரும். பத்தியம்: மோர் சாதம் உட்கொள்ளவும். இரவில் மிளகுக் குடிநீர் கொள்ளவும். சகல வாயு, பாண்டு, வீக்கம், நச்சுநீர், கிராணி முதலானவை நீங்கும்.

7. சிற்றாமணக்கெண்ணெய் 1,2 படி, ஈருள்ளிச்சாறு, தண்ணீர் விட்டான் சாரு, பெரும்பேய்க்கு மட்டிச் சாறு ஒவ்வொன்றும் கால் படி வீதம் ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, அதிவிடயம், அதிமதுரம், சிறுநாகப்பூ, உலர்ந்த இஞ்சி வகைக்கு 2 வராகன் எடை, கற்றாழஞ்சருகு. வில்வக்கொழுந்து, இலந்தைக்கொழுந்து, முசுமுசுக்கை இலை, நீர்முள்ளியிலை வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள 2–3 தரம் பிரவிந்த்தியாகும்– பத்தியம் பொரி மிளகு சாறும், அன்னமும் இரவில் சுக்கு கஷாயமும் கொள்ளவது இந்தப்படி 4–5 முறை கொள் சகல வாயுவும் தீரும்.

வாயு நோய்ப் படலம் முற்றுப்பெற்றது.

குன்ம நோய்ப் படலம்

அதாவது பித்தம் அதிகரித்துக் குடல் புரிட்டல் உண்டாகி, எப்பொழுதும் ஏப்பத்தை உண்டாக்கி அக்கினி மந்தத்தைப் பற்றி நிற்பதால் குன்மம் எனப் பெயர் பெற்றது.

Koviloor Digital Library

செப்பினோங் குன்ம மெட்டுந் தெளியவே மானி டர்க்கு
ஒப்பிலா பலுநூ லாய்ந்து ஒருங்குடன் பிணிகள் நீங்க
துப்புநற் பாகத் தானும் துய்யவே செய்ய வென்று
மெய்புடன் முனிவர் தாமும் மேன்மையா யுரைத்திட்டாரே.

வாத பித்த சிலேத்தும குன்மம், வலிகுன்மம், சூலைக்குன்மம், கபால குன்மம்.

வாத குன்மத்தின் இயல்பு.

ஈரலும், நெஞ்சும் வற்றும்; ஒரு பக்கத்தைப்பற்றி வயிறு எரிந்து உளையும்; குடலைப்புரட்டி வலிக்கும் சத்திக்கும்; சிறுநீர் சிறுத்து சந்து கால் கை பொருத்துகள் உளையும்; இரவில் வலிஅதிகரித்து உறக்கம் சற்றும் வராது.

மருத்துவம்:- வில்வக்காய் 20 பலம், வில்வவேர் 15 பலம் இவைகளை இடித்து 4 மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து அதில் 15 பலம் வெல்லம் கரைத்து வடிகட்டிப் பாகு செய்து இஞ்சி, 3 பலம், மிளகு 4 பலம், திப்பிலி, உள்ளி 2 பலம், மஞ்சள், ஓமம் வகைக்கு 5 பலம் வெவ்வேறாக இடித்து வடிகட்டிப் பாகில் தூவி பசுவின் நெய் கால் படி விட்டு இளகம் செய்து ஒரு நாழிகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டு வர நீங்கும்.

2. வெள்ளுள்ளிச் சாறு, நெல்லிச் சாறு, இஞ்சிச் சாறு, இளநீர், நெய், பால் வகைக்கு 4 படி ஒன்றாய்க் கலந்து 2 படியாய் வற்றவைத்து அதில் கோட்டம், ஏலம், வெங்காரம், இந்துப்பு, நற்சீரகம், திரிகடுகு, கொத்தமல்லி, விராம்பு, சேங்கொட்டை வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு நாழிகைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

3. கொடுவேலி, புனலி, (காட்டி மல்லிகை) நிலவாகை, குமரி இவைகளின் வேர் வகைக்கு 10 பலம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து வடித்து அதில் திரிகடுகு, இந்துப்பு வகைக்கு 1 பலம், பூண்டு 5 பலம், அரைத்துப்போட்டு பசுவின்நெய் 1 படி கூடவிட்டுக் காய்ச்சி ஒரு நாழிகைக்கு ஒரு கரண்டி வீதம் உண்டு வரத் தீரும்.

4. இஞ்சி சிவதை, சீந்தில், நிலவாகை, கொடுவேலி, கழற்கொடி இவைகளின் மூலம் முடக்கொத்தான் சமூலம், பூண்டு, திரிகடுகு வகைக்கு 1 பலம் அரைத்து அரைப்படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் கலக்கிக் காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

5. நொச்சி, நிலவாகை, கொன்றை, கழற்கொடி, ஆதண்டை, முருங்கை, சிவதை, செம்முள்ளி இவைகளின் வேர், உள்ளி, இந்துப்பு வகைக்கு 1 பலம், இவைகளை அரைத்து ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சிக் கள்ளிப்பால் ஒரு கழஞ்சு கூடவிட்டு ஒரு நாழிகைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

பித்த குன்மத்தின் இயல்பு.

வயிறு மந்திக்கும், வலிக்கும்; நெஞ்செரியும்; வாய்நீர் உரும் ஓங்காரிக்கும் சரிரெடுக்கும் கிறுகிறுக்கும், வியர்க்கும்வாய் கசக்கும்; உண்டியை ஒறுக்கும்; மலத்தில் பித்தம் சுவறி கடுத்திறங்கும்; சிறு நீரும் விழியும் மஞ்சளித்திருக்கும்.

மருத்துவம்:- வில்வவேர், முல்லைவேர், சுக்கு, ஏலம், பாசிப்பயறு, நெல்லிப்பருப்பு வகைக்கு கால் பலம் இடித்து ஒரு படித்தண்ணீரில் போட்டெரித்துக் கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இவ்விதம் 6 வேளை கொடுக்கத் தீரும்.

2. சத்திச்சாரணைவேரை, பசுவின் பாலில் வேகவைத்து உலர்த்தித் தூள் செய்து சமஅளவு சர்க்கரை கலந்து திரிகடி அளவு நெய்யிலாவது தேனிலாவது உட்கொள்ள நோய் தீரும்.

3. முக்காவேளை சமூலத்தை இடித்துப் பிட்டவித்து கால் படி சாறு பிழிந்து திரிகடுகுப் பொடி 3 வராகன் எடை கூட்டி 4 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. சுக்கு கால் பலம், மிளகு, ஓமம், வகைக்கு 2 பலம், சேங்கொட்டை, அக்கிராகாரம் வகைக்கு முக்கால் பலம் இவைகளை வெதுப்பித் தூள் செய்து சத்திச்சாரணைவேர்த் தூள் கலந்து திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ள நோய் தீரும்.

சிலேத்தும குன்மத்தின் இயல்பு.

நாவு வழுவழுத்து இனிக்கும்; வாய்நீர் ஊறி வாந்தியாகும்; விக்கல், கொட்டாவி, இருமல், தும்மல், இளைப்பு, வயிற்றிரைச்சல் காணும். நீர், மலம் கட்டும்; அன்னத்தை வெறுக்கும். புறந்தாள் வீங்கி வற்றும்; சீழ்போல் கபம் (கோழை) விழும்.

மருத்துவம்:- திரிகடுகு, திரிபலை, கல்லுப்பு, செவ்வியம், அரத்தை, ஏலம், இலவங்கப்பட்டை, கெந்தகம், கண்டதிப்பிலி, கருஞ்சீரகம், நற்சீரகம், சீனிக்காரம், அக்கிராகாரம், கிராம்பு, இந்துப்பு, சாதிப்பத்திரி, அமுக்கறாவேர் வகைக்கு 6 வராகன் எடை, கடுகுரோகணி, சாதிக்காய், வெங்காரம் வகைக்கு 3 வராகன் எடை, நவாச்சாரம், கல்மதம், வகைக்கு அரை வராகன் எடை இவைகளை வெதுப்பி இடித்து அதில் கோப்பிரண்டையை அவித்து உலர்த்தி இடித்த தூள் 6 வராகன் எடை கலந்து இதற்கு நிகர் வச்சிர வல்லித் தூள், பிரண்டைத்தூள் சர்க்கரை 5 பலம் சேர்த்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

வலிகுன்மத்தின் இயல்பு.

வயிறு பலவிதமாய் வலிக்கும்; ஆகாரத்தை மறுக்கும்; நெஞ்செரியும்; எதிரெடுக்கும்; மலத்தில் பித்தம் சுவறிவிழும்; தேகம்வற்றும்.

மருத்துவம்:- அரைப்படி தேங்காய்ப் பாலில், இந்துப்பு 1 பலம், பூண்டு 2 பலம், சாரம் கழஞ்சு இரண்டு இடித்துப் போட்டுக் கள்ளிப்பால்

Koviloor Digital Library

2 கழஞ்சு கூடவிட்டுக் காய்ச்சி நெய் வடித்து அதை ஒரு கரண்டி வீதம் கொடுக்க வியாதி தீரும்.

2. கொடிக்கள்ளி, திருகு கள்ளி, கொடுவேலி, நாயுருவி, எருக்கு இவைகளில் சாம்பலை ஓர்நிறையாய் தண்ணீரில் கரைத்து தெளிவாய் இறுத்துக் காய்ச்சி உப்பு எடுத்துக்கொண்டு நாழி ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் நெய்யில் உட்கொள்ள வலிகுன்மம், முதலான சகல வியாதியும் தீரும்.

3. முற்றின தேங்காய்க்குள், வெடியுப்பு, வளையலுப்பு, அட்டுப்பு, கல்லுப்பு வகைக்கு 1 பலம், இந்துப்பு 2 பலம் இடித்துப் போட்டு அடைத்து சாணியில் பொதிந்து புடம் போட்டுச் சிரட்டையை நீக்கி மெழுகுபோல் அரைத்து நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட நோய் தீரும்.

சத்திகுன்மத்தின் இயல்பு.

வாந்திஅதிகரித்து, வயிறுபொருமும்; அன்னத்தைத் தள்ளும்; செரிக்காது; வாந்தியாகும்; நெஞ்செரியும்; புளித்தேப்பம் விடும்; உடல் வெளுத்து வற்றும்; ஆயாசம் உண்டாகும்; மலம் கருகும்.

மருத்துவம்:– கரியுப்புநீரில் 1 படி, வெடியுப்பு அரைபடி இவைகளைத் தனியே கலயத்தில் கரைத்து வைத்து மறுநாள் தெளிவை இறுத்துக் கலந்து அதில் 1 கழஞ்சுப் பெருங்காயத்தைப் இடித்துப் போட்டுக் குறுகக் காய்ச்சி நாழிகை ஒன்றுக்கு ஒரு பாக்களவு நீராகாரத்தில் உட்கொள்ள நோய் தீரும்.

2. இந்துப்பு 1 பலம், வெங்காரம், வெள்ளுள்ளி வகைக்கு 2 பலம், நவாச்சாரம் 2 கழஞ்சு, தேங்காய்ப்பால் 3 படி, கள்ளிப்பால் கால்படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி நெய் வடித்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு காசெடை உண்ணத் தீரும்.

3. திரிகடுகு, பூண்டு, இந்துப்பு, இரசபற்பம், வெங்காரம் கற்காந்தம் இவைகளை ஓர் நிறையாய்த் தெள்ளிப் பாலில் அரைத்து குன்றி அளவு உருண்டை செய்து நொச்சிஇலையைப் பிட்டவித்துப் பிழிந்த சாற்றில் ஓர் உருண்டை வீதம் ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

எரிகுன்மத்தின் இயல்பு.

வயிறு எப்போதும் இரையும்; பொருமும்; குடலைப்புரட்டி ஒக்காளிக்கும்; ஏப்பமிடும்; தலைகனத்து வலிக்கும்; கிறுகிறுக்கும் மயிர்க்கால் வழி வியர்க்கும்.

மருத்துவம்:– வெள்ளாட்டுப்பால், தேங்காய்ப்பால் வகைககு அரைக்கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் இந்துப்பு, திப்பிலி, வகைக்கு 1 வராகன் எடை இடித்துப் போட்டுக் காய்ச்சி 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. கழற்சிவேர், சாரணை, கொடுவேலி, நொச்சி, நிலவாகை, கொன்றை, முருங்கை, ஆதண்டை, உகாய் வீழி, செம்முள்ளி, இவைகளின் வேர்ப்பட்டை,

Koviloor Digital Library

சிவதை, பூண்டு, இந்துப்பு, சீந்தில் தண்டு, மிளகு, திப்பிலி வகைக்கு 1 பலம் இவைகளை முடக்கொத்தான்சாறு விட்டு அரைத்து அரைப்படி விளக்கெண்ணெயில் போட்டு கள்ளிப்பால் 1 கழஞ்சு கூடவிட்டு காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் எட்டு நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

குன்மசூலையின் இயல்பு.

மேல்வயிறு வலித்து எரியும்; வாய்நீர் ஊறும்; ஏப்பமிடும்; சிறுக வெதுப்பும்; குளிரும்; பொருத்துக்கள் உளையும், குத்தும்;

மருத்துவம்:— வெங்காரம், இந்துப்பு, காயம், சுக்கு, பஞ்சாசரச் செந்தூரம், இவைகளை ஓர் எடையாய் அரைத்துத் தேற்றான் விதை அளவு உருண்டை செய்து தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

2. காட்டுக்கருணைக்கிழங்கு 4 பலம், நற்சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி வகைக்குக் கால் பலம், சேங்கொட்டை 2 பலம் செவ்வியம் 1 ¼ பலம், சுக்கு, சித்திரமூலம் வகைக்குக் கால் பலம், இவைகளை நெருப்பில் வெதுப்பியும், மற்றவைகறை ரவியில் வெதுப்பிவும் இடித்துத் தூள் செய்தும் சர்க்கரை கலந்து திரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

குன்மம், எருவாய்நோய், இடுப்புக் குடைச்சல் வாயுவுக்கு மருந்து.

பறங்கிப் பட்டை 8 பலம், அரத்தை, சிறுநாகப்பூ, சுக்கு, சிறுதேக்கு, சீரகம், திப்பிலி, தாளிசப்பத்திரி, தேசாவரம், கருஞ்சீரகம், கோட்டம், வால்மிளகு, அதிமதூரம், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சதகுப்பை, குங்குமப்பூ, கிராம்பு, சடாமாஞ்சில் வகைக்கு 3 வராகன் எடை இலவங்கப்பட்டை, மல்லி, மலைதாங்கிவேர், திரிபலை, அமுக்கறாக்கிழங்கு, கிரந்திநாயகம், சித்திரமூலம், மிளகு, இலவங்கம் மேற்படி பத்திரி, சிவன் வேம்புவேர்ப்பட்டை, முத்தக்காசு, நிலப்பனைக்கிழங்கு வகைக்கு 9 வராகன் எடை இவைகளை இடித்து வடிகட்டிப் பால் விட்டுப் பிசைந்து வெய்யிலில் உலர்த்தி உலர்ந்தபின் அரைக்கால்படி நெய் தெளித்து பொன் நிறமாய் வறுத்துச் சர்க்கரை பலம் 10 கூட்டி வைத்துக் கொண்டு திரிகடிப்பிரமாணம் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும். பத்தியம் புளி, புகையிலை கரப்பான் உணவுகள் நீக்க வேண்டும்.

குன்ம வலிக்கு (வயிற்றுப்புண்) மருந்து.

சுக்கு, வெங்காரம், ஓமம், மிளகு வகைக்கு 1 வராகன் எடை வெதுப்பி, பெருந்தும்பைகொழுந்து ஒருபிடி சேர்த்து எருமை மோரில் அரைத்து உட்கொள்ள நோய் தீரும்.

பித்தகுன்மம், சத்திகுன்மம், எரிகுன்மம். கிருமிக்கு மருந்து.

கடுக்காய், நிலவாகை வகைக்கு 5 பலம் அதிமதூரம், கோட்டம், ஏலம், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை,

Koviloor Digital Library

சீரகம வகைக்கு 1 பலம் இடித்து தூள் செய்து அதற்குச் சமமாய் விளாம்பழமும் கரியுப்பும் ஓர் எடையாய் இடித்துத் தூள் செய்து கூட்டி, திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ள நோய்தீரும்.

குன்மம், அக்கினி மந்தத்திற்கு மருந்து.

சித்திரமூலம், திப்பிலி, ஓமம், மிளகு, மல்லி, நற்சீரகம், பொன்முசுட்டைவேர், பெருங்காயம், சடாமாஞ்சில், திப்பிலிமூலம், இந்துப்பு இவைகளை ஓர் எடையாய் தூள்செய்து திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

வெட்டையைப்பற்றின பித்தகுன்மம், எரிகுன்மம், ஈரல்வலி, வாயு, மலச்சிக்கலுக்கு மருந்து.

ஐம்பது வரிக்கடுக்காயை, விதைநீக்கி அரைப்படி ஆறு மாதத்திய காடியில் நனையவைத்து உலர்த்தி பின்பு வெற்றிலை, எலுமிச்சம்பழம், இஞ்சி, இவைகளின் சாற்றிலும் புளித்தமோரிலும் வகைக்குக் கால் படி விகிதம் தனித்தனியே ஊறவைத்து உலர்த்திக் கொண்டு பசுவின் பாலில் அவித்து உலர்த்தி நரம்பு நீக்கிய சிவதை 1 பலம், மிளகு, கடுகுரோகணி, சுக்கு, திப்பிலி, சீரகம், ஏலம், இந்துப்பு, கறியுப்பு, வளையலுப்பு, சவுட்டுப்பு, கல்லுப்பு வகைக்கு 1 பலம் இவைகளையெல்லாம் இடித்து எலுமிச்சம் பழச்சாற்றிலும், இஞ்சிச் சாற்றிலும் வகைக்கு 2 சாமம் அரைத்துக் கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டையாய் இச்சாபத்தியமாய் பழஞ்சோறு நீக்கி 40 நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

சகல குன்ம வாயுவுக்கும் மருந்து.

முற்றின கருங்கோழியை மயிர், குடல், தலை, கால், சிறகு நீக்கி அதன் வயிற்றுக்குள் காயம், கடுகு, திப்பிலி, கண்டத்திப்பிலி, சுக்கு, மிளகு, இந்துப்பு, கருஞ்சீரகம், ஓமம், பொரிகாரம், சீனக்காரம், சவுக்காரம் வகைக்கு 3 வராகன் எடை, சத்திச்சாரணைக்கிழங்கு, திருகுக்கள்ளிவேர்ப்பட்டை வகைக்கு 1 பலம் அரைத்து வைத்துமூடி கொள் அவித்த தண்ணீர் கால் படி, சிறுதும்பைச் சாறு 1 படி ஒன்றாய்க் கலந்து அதற்குள் விட்டு மூடிச் சீலைமண் செய்து நீர்வற்ற வேகவைத்து எலும்பு நீக்கி உலர்த்தி இடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

பைத்தியவாயு, அக்கினிமந்தம், மலக்கட்டு, உணவு செரியாமைக்கு மருந்து.

1. வாய்விளங்கம், கடுகுரோகணி, திரிகடுகு, அசமதாகம், இந்துப்பு, வளையலுப்பு, நற்சீரகம், பெருங்காயம், சித்திரமூலம், திப்பிலிமூலம், அதிமதூரம் வகைக்குக் கால் பலம் சிவதை இரண்டு பலம். கடுக்காய்த் தோல் 1 பலம் இவைகளில் மிளகு, திப்பிலி, கடுக்காய் அசமதாகம், இந்த நான்கையும் அனலில் வெதுப்பியும் மற்றவைகளை ரயில் வெதுப்பியும் தூள் செய்துதிரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் குணமாகும்.

Koviloor Digital Library

அஷ்டகுன்மம் வாயு அக்கினி மந்தத்திற்கு

கருங்கோழியை குடல், தலை, கால், மயிர், எலும்பு நீக்கி காசு போல் அரிந்து கருஞ்சீரகம், சுக்கு, ஓமம், பெருங்காயம், வெங்காரம், பூண்டு, கிராம்பு, இலுப்பைப்பிண்ணாக்கு, இந்துப்பு, மிளகு, கார்க்கோலரிசி, முருங்கைவேர்ப்பட்டை, கடுகுரோகணி, சீனாக்காரம், வெருகங்கிழங்கு, கடுக்காய், கழற்பருப்பு, மஞ்சள், தூய்மைசெய்த வாளம் வகைக்கு 1 கழஞ்சு இடித்துத் தூவிப்பிசைந்து காயவைத்துச் சட்டியில் போட்டு ஒரு படி இஞ்சிச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு சுக்கு, மிளகு, கடுகு வகைக்குக் கால் படி தூள் தனித்தனியே தூவி, மூன்று படி இஞ்சிச்சாறு விட்டு வறுத்து இடித்துத் தூள் செய்து திரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

குன்மம், வாயு, கெண்டை வீக்கத்திற்குக் காந்தச் செந்தூரம்.

காந்தம், கெந்தி வகைக்கு 1 பலம், எலுமிச்சம்பழச் சாற்றால் ஆட்டி 2 சாமம் சென்றபின் வில்லை தட்டிக் காயவைத்து மூன்று முறை கெசபுடம் போடச் செந்தூரமாகும். கொடுவேலி வேர், கெந்தகம் வகைக்கு 1 பலம், தாய்ப் பாலாலும், வெள்ளைக் கருவாலும் வகைக்கு இரண்டு சாமம் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்துப் புடம்போடச் சொந்தூரமாகும். இருவகை செந்தூரத்தையும் எருக்கம் பாலில் ஆட்டி வில்லை செய்து கெசபுடம் போடக் கருநிற செந்தூரமாக ஒரு வகைச் செந்தூரமாயிருக்கும் அதில் பணவிடை வீதம் தேனிலும் மற்ற துணைமருந்துகளிலும் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும்.

குன்மம், மூலவாயு, பாரிசவாயு, வயிற்று வலிக்கு மருந்து.

ஒரு பலம் வெள்ளுள்ளியை மேற்றோல் நீக்கிப் பசுவின் பாலில் அவித்து அதில் சீரகம், இந்துப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், பெருங்காயம் இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் வெதுப்பி இடித்து தூவிக் கடைந்து வேளை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும்.

வயிற்றுப்புண் (குன்மம்), சூதகவாயுத்திரட்சிக்கு மருந்து.

1. நான்கு பலம் பனைவெல்லத்தை ஒருபடி பசுவின் பாலில் பாகு செய்து அதில் அமுக்கறா, கொடுவேலி, பெருந்தும்பை, பேய்ப்பிரண்டை, நொச்சி, சங்கு, மாவிலங்கு, மிளகரணை, கொழுஞ்சி, வெள்ளைச்சாரணை, கடம்பு, சிறுபீளை, நிலவாகை, இவைகளின்வேர் வகைக்கு 1 பலம் இடித்துத் தூள்செய்துகொண்டு வால்மிளகு, கடுக்காய், தான்றிக்காய், ஆனைத்திப்பிலி, அரத்தை சுக்கு, பெருங்காயம், கண்டதிப்பிலி, சதகுப்பை, குரோசானி, ஓமம், திப்பிலிமூலம், சாதிக்காய், கிராம்பு சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, அதிவிடையம், திப்பிலி, சடாமாஞ்சில், சேங்கொட்டை, இரசகற்பூரம்

Koviloor Digital Library

வகைக்குக் கால் பலம், வெள்ளுள்ளி 1 பலம், மூங்கிலிலை தேசிக்காய் பிரமானம் நெற்பொரிமர படிஅரை இவைகளை கொள்ளிலைச் சாற்றிலும் தேங்கால் பாலிலும் அரைந்துப்போட்டு நெய்படி–1 தேன் கால் படி கூட விட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கழற்சிக்காய் அளவு சாப்பிட்டுவர நோய் தீரும். இவைகட்கு எல்லாம் இச்சாபத்தியம்.

சகலகுன்மம் வாயுவிற்குத் தாம்பிரபஸ்மம்

தாம்பிரம் பலம் 1 சுத்திசெய்து உருக்கி, அதில் தாளகத்தையும் அண்டத் தோலையும் வகைக்குப் பலம் ½ வீதம் எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டிக் குன்றிபோலுண்டைசெய்துலர்த்தி ஒவ்வோருண்டையாகக் கொடுக்க, வெண்கலம் போலிருக்கும், அதுடன் வீரம் கழஞ்சு 2 பூநீர்கழஞ்சு 1 கூட்டி வெள்ளெருக்கம்பாலால் ஒரு நாளாட்டி வில்லைதட்டி ¼ எருவில் புடம்போட்டு இரதங்கழங்கு 1 கூட்டி முலைப் பாலால் இரண்டுசாமம் ஆட்டிக் கோழிப்புடம்போடக் கொடிய பற்பமாயிருக்கும். அதில் பணவெடை இஞ்சிக்காற்றிலாவது வாழைப்பழத்திலாவது கொடுத்துப் பத்தியம் பாலுங்கஞ்சியுங்கொடுக்க.

2. தாம்பிரம் ஒரு பலம் தூய்மை செய்து வைத்துக் கொள்ளவும். தாளகம், அண்ட ஓடு வகைக்கு ½ பலம், பூநீர் 2 கழஞ்சு இவைகளை வெள்ளெருக்கும் பாலால் ஆட்டி, சிறு சிறு வில்லைகளாய்ச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்க. மேற்படி தாமிரத்தை உளையில் வைத்து உருக்கி, உருக்குமுகத்தில் மேற்படி வில்லைகளைச் சுருக்குக் கொடுத்துக் கோலாடி எல்லாம் சென்றபின் அத் தாமிரக் களங்கில் ஒரு கழஞ்சு தூய்மை செய்த இரசத்தையும் கூட்டி ஒரு செங்கல்லில் பள்ளம் செய்து அதனுள் ஊற்றவும். நன்றாகக் குளிர ஆறினபின் அதைக் கல்வத்திலிட்டுத் தூள்செய்து ஒரு பாதியைத் தாய்ப்பாலில் ஆட்டி வில்லைசெய்து கையகம் போலப் புடமிடவும் இரண்டொரு புடத்தில் பற்பமாகிவிடும். மறுபாதியை எருக்கம்பாலால் ஆட்டிப் புடம் போடவும். முதலதைவிட இது மிக்க காரமுள்ளதாக இருக்கும். வேளைக்கு 2 நெல் எடை இஞ்சிச் சாற்றில் கொடுக்க எல்லா வகைக் குன்மங்களும் (வயிற்று நோய்) தீரும்.

சகல குன்மத்திற்கும் (வயிற்றுப்புண்) மருந்து.

1. நொச்சி, தழுதாழை, மாவிலிங்கு இவைகளின் இலைகள் ஓளவாய்க் காய்ச்சி இடித்துப் பிழிந்தசாறு ஆழாக்கு, வெள்ளுள்ளித் தைலம் ஆழாக்கு, பெருங்காயம் 1 பலம் இடித்துப் போட்டுக் குழம்பாய்க் காய்ச்சி ஒரு கரண்டி அளவு 10 நாள்கள் கொடுக்க நோய் தீரும்.

2. ஓமம், இந்துப்பு, அதிவிடையம், ஒருதலைப்பூண்டு வகைக்கு 2 பலம் கடுகுரோகணி, சாதிப்பத்திரி, வகைக்கு 10 வராகன் எடை, ஆடாதோடை, நத்தைச்சூரி, சத்திச்சாரணை இவைகளின்வேர் கருவேப்பீர்க்கு, பிரண்டைச்சாற்றால் ஆட்டி ஒரு கருங்கோழி மாமிசத்தில் பிசைந்து குறுணி பிரண்டைச் சாற்றில் வேக வைத்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு தேனில் கலந்து உட்கொள்ள நோய் தீரும் புளி புகையிலைள்ளவும்.

Koviloor Digital Library

3. ஒரு· படி· கறியுப்பில் எருமை மோர், வரிக்குமட்டுக்காய்ச்சாறு வகைக்கு 1 படி, இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, வகைக்கு 1 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி ஒரு வராகன் எடை வீதம் நீராகாரத்தில் உட்கொள்ள நோய் தீரும்.

4. ஒரு துலாம் வேப்பிலையை ஒரு சட்டியில் போட்டு எரித்து நீறாக்கி, திரிகடி அளவு தேனில் கலந்து 8 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

5. இருபது வெள்ளைப் பூண்டைத் தோல் நீக்கி ஒரு தேங்காய்த் திருகலுக்குள் வைத்துப் பிட்டவித்துப் பூவைத் தள்ளி அரைத்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு 8 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

6. பெருங்காயம், கழற்பருப்பு, வெள்ளுள்ளி, சுக்கு இவைகளை ஓர் அளவாய் வெதுப்பி மெழுகு போல் அரைத்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள நோய் தீரும்.

7. சத்திச்சாரணைவேர் 15 பலம், சதாவேரிக்கிழங்கு, ஆயிற்பட்டை, சித்திரமூலம், வெள்ளைப்பூண்டு, முருங்கைப்பட்டை, சிற்றாமணக்கின்வேர், நெருஞ்சில் வகைக்கு 15 இவைகளை இடித்து 16 படி தண்ணீரில் போட்டு நான்கு படியாய் வற்ற வைத்து இதில் திரிகடுகு, கோட்டம், ஓமம், இந்துப்பு, நவாச்சாரம், சவுக்காரம், காயம், திரிபலை, ஆனைத்திப்பிலி, சத்திச்சாரணை வேர்ப்பட்டை, கொத்தமல்லி வகைக்கு 2 பலம் அரைத்துப்போட்டு நெய் 1 படி விட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

8. வசம்பு, திரிகடுகு, ஓமம், கருஞ்சீரகம், சண்பகப்பூ, அதிமதூரம், அபின், இலவங்கப்பட்டை, பெருங்காயம், திரிபலை இவைகளை ஏழு எருக்கிலைத் தொன்னைக்குள் வைத்து மூடி அதை ஒருபடி எருக்கம்பூவுக்கு மத்தியில் வைத்து ஒருபடி தண்ணீர் விட்டு மூடி வேகவைத்து நீர் வற்றினபின் எடுத்து மருந்தையும் பூவையும் பஞ்சலவணமும் கூட்டி வெந்த தொன்னையை இடித்துப் பிழிந்த சாற்றில் அரைத்துத் திரிகடி அளவு இருபது நாள்கள் உட்கொள்ள நோய் தீரும். புளி, புகையிலை, கரப்பன் உணவுகள் தள்ளவும்.

9. கால்படி வேலிப்பருத்திச் சாற்றில் இந்துப்பு, ஓமம் வகைக்கு ஒரு பலம், திப்பிலி ¾ பலம், காயம் ¼ பலம் போட்டு வெய்யிலில் உலர்த்திப் பின் வறுத்துப் பொடித்துத் திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ளத் தீரும்.

10. கால்படி உப்பில், வெற்றிலை, முருங்கை, ஊமத்தை இவைகளின் சாறு, வெள்ளாட்டுப்பால் வகைக்குக் கால் படி விட்டுக் கருக வறுத்துப்பொடித்து அதற்குச் சமமாய் சத்திச்சாரணைவேர்த் தூள் கூட்டித் திரிகடி அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

11. முருங்கை, சத்திச்சாரணை, சித்திரமூலம், இவைகளின் வேர்ப்பட்டை, முடக்கொத்தான்சமூலம், மிளகு, வெள்ளுள்ளி வகைக்கு 1

Koviloor Digital Library

பலம், காயம் கால் பலம் இவைகளை இடித்துத் தூள் செய்துகொண்டு திரிகடி அளவு சிற்றாமணக்கெண்ணெயில் கலந்து உட்கொள்ளத் தீரும்.

12. 20 பலம் ஈருள்ளியில் தண்ணீர் தெளித்து இடித்துப் பிழிந்தசாறு ஒரு படி, நெல்லிக்காய், இஞ்சி, வீராணிக்கிழங்கு இவைகளின் தனித்தனிச் சாறு, பால், இளநீர் வகைக்கு ஒரு படி நன்றாய்க் கலந்து ஒரு படியாக வற்றவைத்து அதில் பசுவின் நெய் ஒருபடி, கோட்டம், ஏலம், வெங்காரம், இந்துப்பு இவைகளை அரைத்து, திப்பிலி, கிராம்பு, வசுவாசி, சேங்கொட்டை வகைக்கு ஒன்றரைப்பலம் அரைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

13. கரியுப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, காந்தம், பெருங்காயம் வகைக்கு 1 பலம் இவைகளைப் பொடித்து 3 படி பசுவின் பாலில் கலந்து சுண்டக்காய்ச்சி வடித்துத் திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

14. மிளகாய், உப்பு, எள்ளு இவைகளை ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்துத் திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ளத் தீரும். இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்.

குன்ம நோய்ப்படலம் முற்றிற்று.

வாத நோய்ப் படலம்.

வாத நோயின் (வளி) இயல்பு

அதாவது நரம்புத் துவாரங்களில் கெட்ட நீர் தங்கி தசையில் ஊறி வாயு அதிகரித்து வலி, அசதி, சர்வாங்க நோயைப் பற்றி வாதத்தை விளைவித்தலாம்.

உடல், கை, கால், நொந்து, கடுத்துளைந்து பலம் கெட்டு அசதி, சோம்பல், தூக்கமிகுந்தால் வாதமென்றும், உடம்பில் பல இடங்களில் துடித்து அடங்கினால் துடிவாதமென்றும், உடல் வெதுப்பி உளைந்து கிறுகிறுத்து நடுங்கி, நா வறண்டு கால்கள் நடுங்குமானால் நடுக்கு வாதமென்றும், ஒரு பீசம் வீங்கி வலித்து மேல் நோக்கி ஏறினால் அண்டவாதமென்றும், சந்திற்பிடித்து விடாமல் உளைந்து வலித்து மாலையில் அதிகரித்து உடல் மெலிந்து தாது கெட்டால் சந்துவாதமென்றும், தேகம் மெலிந்து உளைந்து பல இடங்களில் ஓடிக்குத்தி பலம் குறைந்து நாவும் பல்லும் வரண்டால் ஓடுவாதமென்றும் தோள்வீங்கிக் கண்டம் பிடரி வலித்துக் கடுத்தால் தோள்வாதமென்றும் ஒரு புறத்தில் கையும் காலும் வணங்காதிருந்தால் பக்கவாதமென்றும், கழுத்தை திருப்பிப் பார்க்கமுடியாமல் பிடித்துக்கொண்டால் கழுத்துவாதமென்றும், இரவும் பகலும் விடாமல் தலை வலித்தால் தலைவாதமென்றும், திருத்தமாகப் பேசமுடியாமல் நாவை இழுத்துக் கொண்டால் தம்பனவாத மென்றும், பல்லசைந்து வலித்தால் பல் வாதமென்றும், இரு செவியும் மந்தித்தால் கர்ணிக(காது)வாதமென்றும், விரல் விரைத்து ஒன்றைப் பிடிக்கக் கூடாமலிருந்தால்

Koviloor Digital Library

அங்குலிவாதமென்றும், முன் கையிரண்டும்மிகவீங்கிவலித்தால் முன்கை வாதமென்றும், முகம் ஊதிக் கடுத்தால் வதனவாத மென்றும், இடுப்பு உளைந்து கடுத்துக் குனிய நிமிர முடியாமல் இருந்தால் இடுப்பு வாதமென்றும், ஆசனத்துருளை நொந்து கடுத்தால் உருளைவாத மென்றும், தொடைகடுத்து நடக்கமுடியாமலிருந்தால் தொடைவாத மென்றும், முழங்கால் வீங்கிக் கடுத்தால் முழங்கால் வாத மென்றும், கெண்டைக்கால் கடுத்து வலித்தால் கெண்டைவாத மென்றும், குதி வீங்கிக் கடுத்தால் குதி வாதமென்றும், வாய்கடுத்து அலகு கிட்டி வியர்த்துப் பேசமுடியாமல் இருந்தால் வாய் வாதமென்றும், தண்டு பொருமி வீங்கினால் தண்டு வாதமென்றும், கை காலை சுருக்கை வாங்கி இழுத்துக் கடுத்தால் வரண வாதமென்றும், அடிக்கடி உடலை வில்போல் வளைத்து வியர்த்து நா குதறி, பல் கிட்டி மேல்மூக்சு கண்டால் தனுர்வாதமென்றும், தூர நடக்க முடியாமலும் உண்ட உணவுசெரியாமலும் ஏப்பம் வந்து கொண்டிருந்தால் அசீரணவாத மென்றும், இரண்டு காதிலும் இரத்தம் கட்டி அயர்ந்தால் சுரோணித வாதமென்றும், உதரத்தின் மேல் நரம்பு பசுமையாய்த் தோன்றிய, மூலாக்கினி மஞ்தித்து உடல் வெளுத்தால் கபவாத மென்றும், குடல் புரண்டு குமுறி, இரைந்து, வலித்து, மந்தித்து, பரந்தோடி வலித்துக் கால் உளைந்தால் குடல் வாதமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இவைகட்கு மருத்துவம்:— தாளகம், இலிங்கம், சவ்வீரம், இரசம் சூடம், இரச செந்தூரம், மனோசிலை, வெளுமை, கெவுரி, இரசம் வகைக்கு 2 ½ வராகன் எடை, கெந்தி 5 வராகன் எடை இதனை நிம்பப்பழச் சாற்றால் ஆட்டி துணியில் ஊட்டி, நிழலில் உலர்த்தி திரித்துப் புங்கு, இலுப்பை, ஆமணக்கு, வேம்பு, எள்ளு இந்த ஐந்து வகை எண்ணெயையும் நன்றாய்க் கலந்து சுடர்த் தைலமிறக்கி, உடலாதியந்தமும் துவாலையிட்டு இஞ்சிச் சாற்றில் ஒரு பண எடை தைலங் கலந்து கொடுக்கத் தீரும். சந்நி தோடமும் தீரும். பத்தியம் உப்பு, புளி தள்ளவும்.

2. காஞ்சிரப் பழச்சாறு, சதுரக்கள்ளிப்பால், எருக்கம் பால், வகைக்கு ஆழாக்கு, திருகுக் கள்ளிப்பால் 1 ஆழாக்கு, தேங்காய்ப்பால், துவரைக் குடிநீர், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், குருந்தெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய், கோழிமுட்டைத் தைலம், மயில் நெய் வகைக்கு அரைப்படி, வெள்ளாட்டுக்கறி அவித்த நீர் அரைப்படி, மேற்படி பால் ஒரு நாழி (படி), ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, திப்பிலி, பேரரத்தை, சிற்றரத்தை, சதகுப்பை, செவ்வியம், தேவதாரம், திப்பிலிமூலம், அகில், கோட்டம், மஞ்சள், மரமஞ்சள், மஞ்சிட்டி, கத்தூரிமஞ்சள், வாய்விளங்கம், கரப்பான்பட்டை, விழாலரிசி, வெட்பாலையரிசி, ஆனைத்திப்பிலி, உள்ளி, பெருங்காயம், வெளிச்சிப்பிசின், சுக்கு, ஓமம், சீரகம், வசம்பு, சிறுதேக்கு, காட்டுச்சீரகம், இந்துப்பு, சவுக்காரம், கெந்தி, பொரிகாரம், கடுக்காய், அதிதாரம், கற்கடக்சிங்கி வகைக்கு 2 வராகன் எடை இவைகளை வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப் போட்டுப் பதத்திலிருந்து ஒரு பண எடை உள்ளுக்குக் கொடுத்து, மேலிலும் தடவத் தீரும்.

3. காஞ்சிரப் பழச்சாறு 5 படி, எலுமிச்சம்பழச் சாறு 7 படி, எருமைக் கருநொச்சி, வாதமடக்கி ஆடாதோடை, உத்தாமணி, முடக்கொத்தான்

Koviloor Digital Library

இவைகளின் சாறு வகைக்கு ஒரு குறுணி, அஞ்செண்ணெய் ஒரு குறுணி, எட்டி விதை 10 பலம்,கோட்டம் 1 பலம், வசம்பு, ஓமம், குரோசானிஓமம், முருங்கைப் பட்டை வகைக்கு 2 பலம், வெள்ளுள்ளி 4 பலம், திரிகடுகு 6 பலம், திரிபலை 3 பலம் இவைகளை அரைத்துப்போட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து உடலில் பூசிப் பிடிக்கத் தீரும்.

4. வாதமடக்கி, காத்தொட்டி, ஆதண்டை, மாவிலிங்கு, சத்திச்சாரணை, முருங்கை, கருநொச்சி, கொடிவேலி, புங்கு, வேம்பு, பாற்கொன்றை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு ஒரு பலம், கல்நார், சாதிலிங்கம், துருசு, பற்பம், கெந்தகம், அரிதாரம், பெருங்குரும்பை, மஞ்சள், காயம், வெளிச்சிப்பிசின், கிராம்பு, உள்ளி, சுக்கு, கடுகு, திப்பிலி, வசம்பு, அசமதாகம், வாலுழுவையரிசி, அரத்தை, சாதிக்காய், கடுக்காய், பொரிகாரம், கார்போகரிசி, மிளகு, சேங்கொட்டை வகைக்கு 3 கழஞ்சு இவைகளை எல்லாம் அரைத்து ஒரு படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி, ஒரு பண எடை உள்ளுக்கும் கொடுத்து, மேலிலும் பூசத் தீரும்.

5. எருக்கு, குருந்து, வீழி, சங்கு, துளசி, சிவனார் வேம்பு, கொடுவேலி, வெள்ளறுகு, அமுக்கறா, கருஞ்சூரை, கழற்பருப்பு, குருஞ்சா, சிறுகளா, கள்ளி, விளாத்தி, செம்புளிச்சை, எருமை, முல்லை, அப்டை, முத்தக்காசு, ஆவாரை, பூலா, நன்னாரி, சாரணை வகைக்கு 1 பலம், வசம்பு, சுக்கு, வெளிச்சிப் பிசின், சென்னகரப்பழம், சாதிக்காய், செவ்வள்ளிக்கொடி, திப்பிலி, கெந்தகம், மிளகு, அரிதாரம், சீனக்காரம், கடுகு, மஞ்சள், தான்றிக்காய், வசுவாசி, பெருங்குரும்பை, அகில், இலவங்கம், பெருங்காயம், சதகுப்பை, நேர்வாளம், கார்க்கோலரிசி வகைக்கு 3 வராகன் எடை இவைகளை அரைத்து ஐந்தெண்ணெயில் போட்டுக்காய்ச்சி வடித்து ஒரு பண எடை உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

6. வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் முருங்கை, முள்ளி, கொடிவேலி, எருக்கு, சதுரக்கள்ளி, குருஞ்சா, சாரணை, நொச்சி, ஆடாதோடை, ஈசுரமூலி, வீழி, ஆதண்டை இவைகளின் வேர்ப்பட்டை, வெள்ளறுகு, முத்தக்காசு, வேப்பம்பட்டை, எருக்கம்பழுப்பு, வெள்ளுள்ளி, கெந்தகம், பெருங்காயம், குங்கிலியம், மஞ்சள், மிளகு, இஞ்சி, வெண்காரம், அரிதாரம், ஓமம் வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சியெடுத்து ஒரு பண எடை உள்ளுக்குக்கொடுத்து உடம்பிலும் பூசத் தீரும்.

பக்கவாதம், தனுர்வாதம் முதலிய சகலவாதத்திற்கும் மருந்து.

எள்ளு, புங்கு, இலுப்பை, ஏரண்டம், கடுகு, வேம்பு இந்த ஆறுவகை எண்ணெய்களையும் வகைக்கு 2 படி, எட்டிப்பழச்சாறு 12 படி ஒன்றாய்க் கலந்து அதில், கருநொச்சி, கொன்றை, சிறுகுறிஞ்சா, மாவிலிங்கு, விழுதி, வேலிப்பருத்தி, குன்றி, ஊமத்து, சங்கு, அலரி, கண்டங்கத்திரி, தழுதாழை, முள்ளி, மிளகு, புங்கு, மூக்கரை, சாறுவேளை அழிஞ்சில், சிவதை, வேளை,

Koviloor Digital Library

மருக்காரை, சதுரக்கள்ளி, எருக்கு, எட்டி இலை, கள்ளிக்கொடி, வேலிப்பருத்தி, நெருஞ்சில், கூத்தன் குதம்பை, வசுவாசி, ஆதண்டை, செம்புளிச்சை, கூவிளம், ஆத்தி, வெள்ளைக் குன்றி, பணிக்கொஞ்சி, முருங்கை, காட்டாமணக்கு, கருங்காலி, சாரணை, சிற்றாமணக்கு, காட்டுமுருங்கை, வெட்பாலை, வெள்ளறுகு, சிவதை, வேம்பு, சீந்தில்கொடி, அசுவகெந்தி, பிரம்பு இவைகளின் சமூலங்கள், திப்பிலி, அரத்தை, சுக்கு, ஓமம், மிளகு வகைக்கு 20 பலம், மரமஞ்சள், குங்கிலியம் வகைக்கு 10 பலம், கொள்ளு தேவதாரம் வகைக்கு 30 பலம், வெள்ளுள்ளி 15 பலம் இவைகளை எல்லாம் இடித்துப் போட்டு முறைப்படி குடிநீர் செய்து வடித்துத் தழுதாழை, ஊமத்தை, மாவிலிங்கு, கழற்சி, முருங்கை, வேலிப்பருத்தி, வீழி, நொச்சி, ஆதண்டை, இலைக்கள்ளி, நொச்சி, வாகை, சதுரக்கள்ளி, சிற்றாமணக்கு, இஞ்சி, எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு வகைக்கு ஒரு படி ஒன்றாய்விட்டுக் காய்ச்சி இறுத்து உடம்பில் பூச சகலவாதமும் சன்னி வலியும் தீரும்.

பட்சவாதம் முதலான வாதம் (வளி) 80 – க்கும் மற்ற கொடிய நோய்களுக்கும் கெந்திமெழுகு.

தூய்மைசெய்த 1 வராகன் எடை நெல்லிக்காய்கெந்தியைக் அகண்ட இரும்புச்சட்டியில் இட்டுத் தீபம்போல் எரித்து இரும்புக் குரட்டால் கிண்டி தைலம்போலம் உருகி வருகிற சமயத்தில் கால் பலம் கொம்புத்தேனை சிறுகச் சிறுக விட்டுக் கிண்டிய பின்பு அதில் தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், வகைக்கு 12 வராகன் எடை இவைகளை மயனமாய் இடித்து தூளையும் இரண்டு பலம் தேனைகொஞ்சமாய் விட்டு விடாமல்கிண்டி இடித்து மெழுகுபோல் சிவந்த பதத்தில் ஆற்றி சிமிழில் அடைத்துக்கொண்டு தேற்றான்விதை அளவு பனைவெல்லத்தில் பொதிந்து புழுங்கல் அரிசித்தவிட்டில் புரட்டி இருபத்தி மூன்று நாள்கள் நாள் ஒன்றுக்கு 6 உருண்டை கொடுத்துப் புளி, உப்பு தள்ளி பசுவின் பால், நெய்கலந்து பத்தியமாக வைத்து ஏழாம் நாள் தலைமுழுகி ஒன்பதாம் நாள் பாலையும், மிளகையும் அரைத்துக்கொதிக்கவைத்து தலையில் தேய்த்து நீராட்டி, பதினோராம் நாள் வாத உடலானால் விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுவின்நெய் இவைகளை ஓரளவாய் காய்ச்சித் தேய்த்துத் தலைமுழுகவும் மற்ற உடலானால் விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுவின் நெய் இவைகளை ஓரளவாய் காய்ச்சித் தேய்த்துத் தலைமுழுகவும் மற்றஉடலானால் விளக்கெண்ணெய் மட்டும் தேய்த்துத் தலைமுழுகவும், பட்சவாதம்; இளம் பிள்ளைவாதம் முதலான வாதம் எண்பதும் சகல கிரந்தியும்; சூலை, அல்குல்புற்று; லிங்கப்புற்று; சகலகுட்டம்; குலைநோய்; மேகப்புண், சொரி; ஆறாப்புண், அரையாப்பும்; சுரையும்; அண்டவாதம்; அண்டச்சூலை, அந்தரவாதமான சகலவாயும்; சகலகுன்மமும் தீரும். பசும்பயறு, முளைக்கீரை, கத்திரிப்பிஞ்சு, துவரை கூட்டிக்கொள்ளவும், நெல்லாவி, முத்தாவி, நல்லெண்ணெய் வாடை, தாளிதவாடை முதலானவைகளும் கரப்பன் உணவுகள் ஒரு மாதம் தள்ளவும். வாய்பிடித்தால் சீனாக்காரத்தைவாயில் போட்டு அமிர்தத்தைக் கடித்து கருவேலம்பட்டைக் குடிநீர் கொப்பளிக்கவும். சொற்ப வாயுவுக்கு பரங்கிப்பட்டைக் குடிநீரில் ஒரு குன்றி எடை கொடுக்க நோய் தீரும்.

Koviloor Digital Library

செரியாமைவாதம், சுரோணிதவாதம், கபாலவாதம் முதலானவைகட்கு மருந்து.

மேற்றோல் நீக்கிய வெள்ளுள்ளி 3 படி, அரத்தை, வாய்விளங்கம், அதிமதுரம் வகைக்கு அரை பலம், செவ்வியம் மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு 1 பலம், மிளகு, திப்பிலிமூலம் வகைக்கு 3 பலம், சுக்கு, மல்லிகைப்பூ 2 பலம், கஞ்சா, காட்டாத்திப்பூ, திப்பிலி, வகைக்கு 2 பலம், முருங்கை, நொச்சி, கண்டங்கத்திரி, முள்ளி, எருக்கு, ஆயில், கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 1 ¼ பலம் இவைகளை இடித்து 3 படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒருகாசு எடை உட்கொண்டு தலையிலும் உடலிலும் பூசி, இலுப்பை அரைப்பிட்டுத் தலைமுழுகிவர நோய் தீரும்.

கை கால் முடக்கு முதலான வாதத்திற்கும் சீதசன்னிக்கும் மருந்து.

பால்நண்டை இடித்துப் பிழிந்த பால் ஆறுபடி கிராம்பு 10 பலம் இடித்து 5 மரக்கால் தண்ணீரில் போட்டு வற்ற வைத்த குடிநீர் குறுணி, நல்லெண்ணெய் 5 படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம், செவ்வியம், வாலுழுவையரிசி, வசம்பு, காயம், திரிபலை, ஏலம், இந்துப்பு, திரிகடுகு, பூதகரப்பன் பட்டை, வெட்பாலையரிசி, மரமஞ்சள் வகைக்கு 4 பலம் இவைகளை இடித்துப்போட்டு பதத்தில் வடித்து நாழி ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உள்ளுக்கும் கொடுத்து உடம்பிலும் பூச நோய் தீரும்.

கை, காலில் காணும் மேகக்கட்டு, வாயு முதலானதற்கு மருந்து.

நூறு பலம் இஞ்சியை இடித்துத் தூணி நீரில் போட்டு ஆறு நாட்கள் வரையில் கமலாக்கினியாக எரித்துக் குறுணியாக வற்றவைத்து வடித்து அதில் தயிர்நீர், காடி, நல்லெண்ணெய் வகைக்கு ஒரு குறுணிவிட்டு நவாச்சாரம், அதிமதுரம், அரத்தை, திப்பிலிமூலம், இந்துப்பு, வகைக்கு 2 பலம் சுக்கு, மஞ்சள் வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டு ஆறு நாள்வரை தீபமாய் எரித்துத் துணியில் நனைத்து வலிக்கிற இடத்தில் கட்டியும் வாரத்தில் இரண்டு முறை தலை முழுகிவர நோய் தீரும்.

திமிர்வாதம், தனுர்வாதம், சுரோணிதவாதம் முதலானதற்கு மருந்து.

வெள்ளெருக்குச் சமூலம் இடித்துப் பிழிந்தசாறு 1 படி, கருநொச்சி, சத்திச்சாரணை, ஆதண்டை, அசுவகெந்தி, முருங்கை, வேலிப்பருத்தி, மூக்குரண்டி வகைக்கு 5 பலம் இவைகளை இடித்துப் பதக்கு நீரில் போட்டு வற்றவைத்து வடித்தக் குடிநீர் படி நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 3 படி ஒன்றாய்க் கலந்து அதில் இந்துப்பு, தகரம், இலவங்கம், சுக்கு, ஏலம், கோட்டம், கத்தூரிமஞ்சள் வகைக்கு 1 பலம் அரைத்து வடிகட்டி உள்ளுக்கும் கொடுத்து உடம்பிலும் தடவ நோய் தீரும்.

Koviloor Digital Library

அண்டவாதம், நடுக்குவாதம், சந்துவாதம், முகவாதத்திற்கு மருந்து.

சித்திரமூலம், மாவிலிங்கு, கொன்றை, முருங்கை, சங்கு, வெள்ளறுகு, வேம்பு, எருக்கு, திப்பிலி, மிளகு, பஞ்சலவணம் இவைகளை ஓர் எடையாய் வெய்யிலில் உலர்த்தி இடித்த தூள் ஒரு மண்டலம் திரிகடி அளவு சாப்பிட்டு இதன் அடியில் வருகிற தைலத்தை உடம்பில் தடவ நோய் தீரும்.

2. ஐந்தெண்ணெய்த் தைலம் 1¼ பலம், தில்லைப்பால், முருங்கை, வாகை, மேதி, மாவிலிங்கு இவைகளின் வேர்ப்பட்டை, காயம், இந்துப்பு, திப்பிலி, வசம்பு, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூசிவரவும்.

அரைவாதம், கழல்வாதத்திற்கு மருந்து.

முற்றின தேங்காயைக் கண்திறந்து நீரை நீக்கிப்போட்டு அதற்குள் திருகுக் கள்ளிப்பால் விட்டு காஞ்சிரைமுளை அடித்து புளியந்தணலில் போட்டுச் சுட்டுச் சிரட்டை வெந்தபின் எடுத்து ஓடு நீக்கி வெண்ணெய்போல் அரைத்து அரைக்குக்கீழ் பாதம் வரையில் தடவி மாலையில் வெந்நீரில் தலைமுழுகிவர நோய் தீரும்.

வாதக்கடுப்பு, குத்து, கைகால் முடக்கு, திமிர்வாதத்திற்கு மருந்து.

புனலித்தண்டு, திருகுக் கள்ளி, கடுதுரத்தி, தழுதாழை, முடக்கொத்தான், வேப்பம்பட்டை, சங்கு, உத்தாமணி, வெண்ணொச்சி வெள்ளுள்ளி, பேய்ப் பிரண்டை வகைக்கு 10 பலம் இடித்து ஒரு பாண்டத்தில் இட்டு தண்ணீர் விட்டு கொதிக்க வைத்து வேது பிடிக்கவும்.

பக்கவாதம், முகவாதம், திமிர்வாதம், நடுக்குவாதம் முதலான சகல வாதத்திற்கும், உட்குத்து, புறவீச்சுக்கும் தலைவலிக்கும் மேற்பூச்சு மருந்து.

உகா, எருக்கு, கழற்கொடி, மாவிலிங்கு, சாரணை, குப்பைமேனி, கருநொச்சி, கொன்றை, ஈசுரமூலி, கொடுவேலி இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு, திரிகடுகு, வசம்பு, வெளிச்சிப்பிசின், அரத்தை, வெள்ளைப்பூண்டு, கருஞ்சீரகம் இவைகளைச் சம எடையாய் உத்தாமணிச் சாற்றால் ஆட்டிக் கொதிக்க வைத்துப் பூசத் தீரும்.

வாதக் கடுப்புக்கு மேற் பூச மருந்து.

கள்ளிக் கொழுந்தை வாட்டிப் பிழிந்த சாற்றில் பூநீர், சீரகம் வகைக்கு ஒரு சிரங்கை போட்டு மறு நாள் அந்தத் தண்ணீரால் கடுகை அரைத்துக் கடுக்கிற இடத்தில் தடவத் தீரும்.

2. வள்ளிக்கிழங்கைச் சிறுநீர் விட்டு அரைத்துக் கொதிக்க வைத்துத் தடவத் தீரும்.

Koviloor Digital Library

வாதத்திற்கு உட்கொள்ளும் எண்ணெய்

முதியார் கூந்தல் 25 பலம் இடித்து, பத்துபடி தண்ணீரில் போட்டு 2 ½ படியாய் வற்றவைத்து நல்லெண்ணெய் 1 ¼ படி கூட விட்டுத் திரிகடுகு, திரிபலை, மஞ்சிட்டி, கோட்டம், அதிமதுரம், சந்தனம், சதகுப்பை, ஏலம், நன்னாரிவேர் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர சகல வாத பித்தமும் தீரும்.

வாதத்திற்கு மருந்து.

கொடிவேலி, நிலவாகை, கற்றாழை, இவைகளின் வேர்வகைக்கு 3 ½ பலம் இவைகளை இடித்துப் பத்துப் படி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்து அதில் பசுவின் நெய் 1 படி கூட விட்டு வெள்ளுள்ளி 6 பலம், திரிகடுகு, இந்துப்பு, வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய் வடித்து நாழிகை ஒன்றிற்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

2. ஒரு படி பசுவின் பாலில் தோல் நீக்கிய வெள்ளைப்பூண்டு 1 பலம் போட்டு அவித்து, கடைந்து அதில் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சீரகம், ஏலம், அக்கிராகாரம், திப்பிலி மூலம், திரிகடுகு, ஓமம், பறங்கிப்பட்டை, நிலப்பனைக் கிழங்கு வகைக்கு 5 வராகன் எடை தூள் செய்து போட்டு நெய் 1 படி, தேன் 1 படி கூட விட்டு இளகம் செய்து கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

சகல வாதங்களுக்கும் தூள்

சித்திரமூலம், மிளகரணை, நொச்சி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 5 பலம் தூள்செய்து திரிகடி அளவு குளிர்ந்த நீரில் உட்கொள்ள குணமாகும்.

2. தூதுளை, கண்டங்கத்திரி, முள்ளி, கத்தரி, மூக்குரண்டி, கொடிவேலிப் பருத்தி, சத்திச்சாரணை, நாயுருவி, நன்னாரி, சீராசெங்கழுநீர், சின்னி, ஆடாதோடை, சாரணை, சங்கு, சங்கங்குப்பி, நொச்சி, கருநொச்சி, சிவனார்வேம்பு, செங்கத்தாரி இவைகளின் வேர்ப்பட்டை, வெள்ளறுகு, பிரமி, மருட்கிழங்கு, காட்டுக்கருணைக்கிழங்கு, நாட்டுக் கருணைக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு வகைக்கு 5 பலம்; நிலவாகைச் சமூலம், பலம்பத்து, கடுக்காய், நெல்லிப்பருப்பு, ஓமம், மிளகு வகைக்கு 5 பலம்; தான்றிக்காய், பூண்டு 2 பலம், பறங்கிப்பட்டை 3 பலம், வசம்பு 1 பலம், செவ்வியம், தேசாவரம், மல்லி, வாயவிளங்கம், கடுகுரோகணி, கருஞ்சீரகம், சுக்கு, இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, காந்தம், அரப்பொடி, சிட்டம், கர்ச்சூரம், குரோசானி ஓமம், கத்தூரிமஞ்சள், அரத்தை வகைக்கு 5 வராகன் எடை, சாதிக்காய் சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு 2 வராகன் எடை இவைகளை இடித்துத் தூள்செய்து சர்க்கரை 3 பலம் கூட்டி திரிகடி அளவு தேனில் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

3. கொன்றை, மாவிலிங்கு, கொடிவேலி, கண்டங்கத்திரி, பூதகரப்பன், சங்கு, வெள்ளறுகு இவைகளின் வேர்ப்பட்டை, தூதுளைச்சமூலம் வகைக்கு 6 பலம், திரிபலை, பெருங்காயம், சுக்கு, இந்துப்பு, வளையலுப்பு, வெடியுப்பு, கல்லுப்பு, வகைக்கு 1 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

முழங்கால் வாதத்திற்கு மருந்து.

வீழியிலை, பிண்ணாக்குக்கீரை, பூண்டு, ஆவாரையிலை, திரிபலை இவைகளை சம எடையாய் இடித்து ஒரு துணியில் முடிந்து விளக்கெண்ணெயில் வறுத்து ஒற்றடம் செய்து ஆறு நாள் உட்கொள்ளத் தீரும்.

மலை அலரியை இடித்து அமுரிவிட்டு வதக்கி வைத்துத் கட்டத் தீரும்.

வாதக் கடுப்பு வாயுவுக்கு மருந்து.

சங்கம் வேர், முகக்கொமுஞ்சி, கொடிவேலி, பறங்கிப்பட்டை, சுக்கு, வாய்விளங்கம், சிறுதேக்கு, கொத்தமல்லி வகைக்கு 2 வராகன் எடை இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் ஒரு வராகன் எடை மிளகுப் பொடியும் ஒரு பணவெடை விளக்கெண்ணெயும் சேர்த்து இப்படி 6 வேளை உட்கொள்ளத் தீரும்.

வாதக்கடுப்பு, முடக்குவாதம், மேகவாயுவிற்கு மருந்து.

பறங்கிப்பட்டை, சித்திரமூலம், சங்கு, அமுக்கரா இவைகளின் வேர்ப்பட்டை, திரிகடுகு, சீரகம், ஏலம் வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்துத் தூள் செய்து ஒரு சட்டியில் அரைப்படி பசுவின் நெய், கால் பலம் சர்க்கரையும் கூட்டிக் காய்ச்சி இறக்கி அதில் தூளைத் தூவிக் கிண்டி வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு உட்கொள்ளத் தீரும்.

அண்ட வாதத்திற்கு மருந்து.

1. ஒரு பிடி கருஞ்சீரகமும், பத்து திரிபலையும் இந்துப்பு தேனில் குழைத்து 6 வேளை உட்கொள்ளத் தீரும்.

2. முருங்கைஇலை ஒரு பிடி, வெந்தயம், வெள்ளுள்ளி, கழற்பருப்பு வகைக்கு ஆழாக்கு, சுக்கு, மிளகு வகைக்கு ஒரு வராகன் எடை இவைகளை மைபோல் அரைத்துக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

3. 6 பலம் இஞ்சியை மேல்தோல் சீவி வில்லையாய் நறுக்கி குப்பைமேனிச் சாறு விட்டு இரவில் ஒரு பலம் வெள்ளெருக்குப் பூவையாவது, பட்டையையாவது, அரைத்துப் பிசரி இரவில் பனியில் வைத்துக் காலையிலும் மாலையிலும் 6 பொழுது சாப்பிட்டு வரத் தீரும்.

Koviloor Digital Library

தண்டு வாதத்திற்கு மருநது.

பிரண்டைத் தண்டு, கோவைத்தண்டு, சீந்தில்தண்டு இவைகளைச் சிதைத்துக் கால்படி சாறு பிழிந்து சுக்கு, மிளகு, ஈருள்ளி, வகைக்கு 3 வராகன் எடை அரைத்துக் கலக்கி இவ்விதம் 3 நாள் கொடுத்துக் காத்தொட்டியிலையை அரைத்துத் தண்டில் தடவத் தீரும்.

சந்துவாதத்திற்கு மருந்து.

தேங்காய்க்குள் கடுகைப் போட்டு, மூடி சிரட்டை வெந்த பின்பு கடுகைப்போட்டு புன்னைக்காயளவு மோரில் அரைத்துக் கலக்கி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

2. முட்குருந்தப் பட்டையும் கஞ்சாவேரும் எலுமிச்சங்காய் அளவு அரைத்துச் சந்தில் தடவத் தீரும்.

3. வாகைப்பட்டையையும், கருங்குருவையரிசியையும், ஒரு எடையாய் இடித்துப் பிட்டவித்து மூன்று நாள் உண்ணத் தீரும்.

தோள்வாதத்திற்கு மருந்து.

தழுதாழை, நொச்சி, வாதமடக்கி இவைகளை இடித்துத் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வேது விட்டுத் தோளில் விளக்கெண்ணெயைத் தடவிப் பிட்டவித்து வைத்து கட்டத் தீரும்.

நடுக்கு வாதத்திற்கு மருந்து.

காரெள்ளெண்ணெய் இரண்டு படி, 2¼ ஆயில்பட்டை, திரிபலை வகைக்கு 1 பலம், வசம்பு அரைப் பலம், காயம், திப்பிலி வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் உள்ளுக்கும் கொடுத்து மேலிலும் பூசத்தீரும் பத்தியம்: புளி தள்ளவும்.

2. வாதமடக்கி, மேனி, வசம்பு இவைகளின் இலைச்சாறு வகைக்கு அரைப்படி, சிற்றாமணக்கெண்ணெய் ஒரு படி 1 ஒன்றாய்க் கலந்ததில் மஞ்சள் ஒரு கழஞ்சு அரைத்துக் கலக்கிக் காய்ச்சிப் பதமாய் வடித்து வைத்துக் கொண்டு ஒரு கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூசத் தீரும்.

3. உளுந்து 10 பலம், சேவகன் கிழங்கு 2 பலம் இவைகளை இடித்து முக்குறுணி தண்ணீரில் போட்டு, 3 படியாய் வற்றவைத்து இறுத்து, நல்லெண்ணெய் 1 படி, பசுவின் பால் 4 படி, சதகுப்பை, வசம்பு, சிறுபுள்ளடி, அரத்தை, இந்துப்பு, அதிமதுரம், செவ்வியம், சாரடைவேர், திரிகடுகு, அமுக்கறா வகைக்கு ஒரு பலம், அரைத்துக் கலந்து காய்ச்சி வடித்து உடம்பெங்கும் தடவத் தீரும்.

குடல்வாதத்திற்கு மருந்து.

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுவின் நெய், வாதமடக்கி, பிரமி, கழற்சி இவைகளின் சாறு வகைக்கு கால் படி ஒன்றாய்க் கலந்து உள்ளி, பொடுதலைக் கொழுந்து, முடக்கொத்தான் கொழுந்து

Koviloor Digital Library

வகைக்கு 1 பலம், இந்துப்பு, கருஞ்சீரகம், திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு, காயம் ஒரு கழஞ்சு, கழற்சிப் பருப்பு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து 2 பண எடை வீதம் சாப்பிடத் தீரும்.

2. குருஞ்சாஇலையைப் பிட்டவித்துப் பிழிந்தசாறு ஆழாக்கு, சுக்கு, மிளகு, உள்ளி, நற்சீரகம், கடுகு, வெந்தயம் வகைக்கு ஒரு வராகன் எடை வெதுப்பிப் பொடித்துத் தூவி 3 நாள் சாப்பிடத் தீரும்.

3. வேளைவேர், கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, முருங்கைப்பட்டை, சுக்கு வகைக்கு 3 வராகன் எடை இவைகளைச் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 3 வேளைகொடுத்து, பிறகு தழுதாழைச்சாறு ஆழாக்கு, விளக்கெண்ணெய் அரை ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து கொடுக்கத் தீரும்.

4. முருங்கைப்பட்டையை ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து எலுமிச்சைச்சாறு ஒரு ஆழாக்கில் கலந்து கொடுக்கத் தீரும்.

கெண்டைக்கால் வாதத்திற்கு மருந்து.

மாஞ்செவிக்கள்ளியிலைச் சாற்றை 3 நாள் தடவி, பின்பு வெந்நீர் குளிக்க நீங்கும்.

இடுப்பு வலி, மேக நீர்க்கட்டுக்கு சூலைகளுக்கு மருந்து.

6 முற்றின தேங்காயைப் பால் பிழிந்து அதில் கெந்தகம், கருஞ்சீரகம் வகைக்கு 6 கழஞ்சு, தாளகம், மனோசிலை வகைக்கு 3 வராகன் எடை இவைகளைக் கொடிக்கள்ளிப்பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய் வடித்து ஒரு பண எடை கொடுத்து, பத்தியம்: மிளகு நீரும், சோறும், பாசிப்பயறும் கூட்டத் தீரும்.

சூலைகடுப்பு, வாயு, உட்குடைச்சல், வாதக்கடுப்புக்கு மருந்து.

பறங்கிப்பட்டை, திரிகடுகு வகைக்கு 5 பலம் இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு வாத உடலினற்குத் தேனிலும், இளைத்த தேகிக்கு பசுவின் நெய்யிலும், வாயு உணவுப் பண்டங்கள் தள்ளி, 10 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

இடுப்புவலி, கால் அசதிக்கு மருந்து.

வீழிச்சாறும், நல்லெண்ணெயும் ஓர் அளவாய்க் கலந்து ஒரு ஆழாக்கு வீதம் 3 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

மொழி வீக்கத்திற்கு மருந்து.

பிரண்டையைத் தூள்செய்து எருக்கஞ் சாறு விட்டு வதக்கி வீக்கத்தில் வைத்துக்கட்டத் தீரும்.

Koviloor Digital Library

திமிருக்கு மருந்து

சங்கிலிசாலைச் சாறும், வெள்ளாட்டுப் பாலும் ஒன்றாய்க் கலந்து ஒரு வேளைக்கு கால் படி வீதம் 3 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

அலகுப்பூட்டுக்கு மருந்து (முக்குத்துளி)

முருங்கப்பட்டை, வசம்பு, வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் இவைகளை தைவேளைச்சாறு விட்டுச் சிதைத்துத் துணியில் முடிந்து மூக்கில் நசியமிட நோய் தீரும்.

எரிவாதத்திற்கு மருந்து.

இலந்தை இலையை அரைத்துக் காடியில் கரைத்து மத்தால் கடைந்து அதில் வருகிற நுரையை உடம்பில் பூச எரிச்சல் மாறும்.

தோள் கடுப்புக்கு மருந்து.

சிறுபீளைவேர் 1 பலம், சுக்கு, மிளகு, மஞ்சள், வெள்ளுள்ளி வகைக்கு 1 வராகன் எடை இவைகளைக் குன்றிமணிச் சாற்றிலாவது, ஊசிநீரிலாவது, மயனமாய் அரைத்து அயக்கரண்டியில் கொதிக்க வைத்து நான்கு வேளை பத்துப்போட்டு பிரப்பங்கிழங்கு, மிளகு, பரங்கிப்பட்டை, சுக்கு அல்லது அரத்தை வகைக்கு 6 வராகன் எடை வீதம் இடித்து ஆறுபங்காகப் பங்கிட்டு படி ஒன்றுக்கு ஒரு பங்கை இரண்டு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து ஆறுவேளை உட்கொள்ள நோய் தீரும். புளி, புகை தள்ளவும்.

நெஞ்சுக்குத்து விலாக்குத்துக்கு மருந்து.

ஐந்து பலம் இஞ்சியைத் தட்டிச் சாறுபிழிந்து முறிந்து அதில் 1 ¼ பலம் வெள்ளைப்பூண்டை இடித்துத் துணியில் முடித்துச் சாறுபிழிந்து வெதுப்பத்துடன் சாப்பிடவும். இதன் படி மூன்று நாள்கள் ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

2. அதில் தீராவிட்டால் உப்பிலான் இலை ஒரு பிடி, சுக்கு, மிளகு 2 வராகன் எடை இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்ற வைத்து அதில் அரைக்கால் பலம் வெள்ளுள்ளியை இடித்து பிழிந்த சாற்றை விரவிச் சூட்டுடன் இப்படி 6 வேளைசாப்பிடவும், பத்தியம்: கரப்பன், உணவுகள் நீக்கவும்.

3. கடுகு, வெள்ளுள்ளி இவைகளை வகைக்கு 2 பலம் கொட்டைப்பாக்கு அளவு அரைத்துக் கொஞ்சம் பழம்புளி கூட்டி ரசம் செய்து கால் படி வீதம் மூன்று நாள்கள் சாப்பிடத் தீரும்.

4. உள்ளங்கை அகலத்துணியில் இரு புறமும் சுண்ணாம்பு தடவிச் சட்டியில் போட்டுத் தீயெரித்துச் சாம்பலான பின்பு மிளகு, பூண்டு, எருக்கம்பூக்கொழுந்து வகைக்கு 2 வராகன் எடை போட்டு வறுத்து ஒரு படி தண்ணீர் விட்டு ஆழாக்காய் வற்ற வைத்துச் சாப்பிட நோய் தீரும்.

Koviloor Digital Library

மூச்சுக்குத்து, முலைக்குத்துக்கு மருந்து.

உகாயிலையும், உப்பும் கசக்கி, மூன்று வேளை, தடவ மூச்சுக் குத்துத் தீரும். முக்கரைச்சாரணை இலையும், உப்பும் கசக்கி மூன்று முறை தடவ முலைக்குத்தும் நீங்கும்.

நரம்புப்பிடிக்கு மருந்து

நண்டுக்கொழுப்பும், விளக்கெண்ணெயும் ஓர் எடையாய்க் கலந்து காய்ச்சி நரம்புப் பிடிப்பில் பூசி வழித்துவிட நோய் தீரும்.

உள்ளங்கால் குத்துக்கு மருந்து.

நல்ல அபினைக் குளிர்ந்த தண்ணீரில் அரைத்து உள்ளங்காலில் தடவி சூடு பிறக்கத் தேய்த்துவரக் குத்தும், நீர்த்தங்கலும் மாறும்.

வாதத்திற்குத் தைலம் (தலை முழுக்கு நெய்)

1. ஆதண்டை, நொச்சி, சங்கு, எருக்கு சிற்றாமுட்டி இவைகளின் தோல் வகைக்கு 10 பலம் இடித்துத் தூணி நீரில்போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய், எருக்கம்பழுப்புச் சாறு வகைக்கு 1 படி, வேப்பெண்ணெய் அரைப்படி கூடவிட்டு திரிகடுகு, ஓமம், வெள்ளுள்ளி, வசம்பு, ஏலம், மஞ்சள் வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தலைவாதம், திமிர்வாதம், வாதசூலை, வாதக்கடுப்பு, நேத்திரக்குத்து, மண்டைஇடி, மேகச்சொரி தீரும். தலை முழுகின தினத்தில் உப்பு, புளி, புகையிலை தள்ளவும்.

2. தாழைவிழுதுச்சாறு, மேற்படி பூச்சாறு, நல்லெண்ணெய், வெள்ளாட்டுப் பால் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து அதில்கோட்டம், சதுர்ச்சாதம், சடாமாஞ்சில், முத்தக்காசு, வெட்டிவேர், தைவேளைவேர், விலாமிச்சவேர், நன்னாரி, சிற்றாமுட்டி, தேவதாரம், செங்கழுநீர்க்கிழங்கு, சதகுப்பை, அசுவகெந்திக்கிழங்கு, குங்குலியம், திரிபலை, கத்தூரிமஞ்சள், ஓமம், மஞ்சிட்டி வகைக்கு 4 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்துத் தலைமுழுகியும் இஞ்சி சுரசத்தில் மேற்படி தைலம் கொஞ்சம் விட்டுச் சாப்பிட்டு வரச் சுரோணிதவாதம் முதலான சகல வாதமும் தீரும்.

3. ஆயிலியப்பட்டை 100 பலம், சிற்றாமுட்டி, நன்னாரி வகைக்கு 30 பலம், தவசு முருங்கை 40 பலம் இவைகளைத் தனித் தனியே குடிநீர் செய்து இறுத்து அதில் வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் வகைக்கு குறுணிவிட்டு, அதில் அதிமதுரம், கடுக்காய், மஞ்சள், அசுவகெந்தி வகைக்கு 1 பலம் தூள்செய்து போட்டுக் காய்ச்சி இறுத்து, தலைமுழுகிவர வாதம், தலைநோய், கண்ணீர் பாய்ச்சல் தீரும்.

4. ஆயிலியப்பட்டை 100 பலம் தூள் பண்ணிக் குடிநீர் செய்து வடிகட்டி அதில் நல்லெண்ணை 4 படி கூடவிட்டு வாய் விளங்கம், கடுகு, அரத்தை, கச்சோலம், வெண்காரம், திப்பிலி, வெள்ளைப்பூடு கல்லுப்பு, கடுக்காய்,

Koviloor Digital Library

கோரைக்கிழங்கு, பெருங்காயம், தக்கோலம், தகரம், கொடுவேலி, கிரந்திநாயகம், கழற்சி, எருக்கை, நிலச்சர்க்கரை, நொச்சி, செம்புளிச்சி, கண்டங்கத்திரி, அமுக்கறா, சாரணை, பேய்க்குமட்டி, கொழுஞ்சி, ஆமணக்கை, நரிப்பயறு, சூரியகாந்தி இவைகளின் வேர் வகைக்கு 1 பலம் தூள் செய்து அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் பூசி தலைமுழுகி வரப் பாரிச வாயு, முடக்கு முதலான வாதமும் தீரும்.

5. குங்கிலியம் 1 பலம், கீழ்க்காய்நெல்லிவேர், ஆமணக்கின் பருப்பு, விஷ்ணுகாந்திவேர், கருஞ்சீரகம் வகைக்கு 1 பலம், கத்தூரிமஞ்சள் 2 பலம், சீரகம் கால் பலம், சதுரக்கள்ளிப்பால் அரை சேர், நல்லெண்ணெய் 2 படி இவைகளைக் காய்ச்சி வடித்து ஒரு பண எடை உள்ளுக்குங் கொடுத்து உடம்பிலும் பூச சுரோணிதவாதம், வாயு முதலான நோய் தீரும்.

6. தாழைவிழுதுச் சாறு, பால் நல்லெண்ணெய் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து அதில் மூங்கில் இலை, சீந்தில், சிற்றாமுட்டி, விலாமிச்சு வகைக்கு 10 பலம், தக்கோலம், வெட்டிவேர், தேவதாரம், சந்தனம், கோட்டம், செம்புளிச்சை, அகில், அரத்தை, அமுக்கறா, சாம்பிராணி, குங்குமப்பூ, அதிமதுரம், நன்னாரி, ஏச்சோலம், மரமஞ்சள், சதகுப்பை, சதுர்ச்சாதம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரச் சுரோணித வாதம், வாயு முதலான நோய்கள் தீரும்.

7. கள்ளி, தழுதாழை, எருக்கு, நொச்சி இவைகளின் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் 1 படி கலந்து இதில் செம்புளிச்சை, அகில், கோட்டம், சுக்கு, சாரணைவேர், கொடிவேலிவேர், திப்பிலிமூலம், வசம்பு, காட்டுமுருங்கை, பூளைவேர், குக்கில், இந்துப்பு, அசுவகெந்திக்கிழங்கு இவைகளைச் சம எடையாய் இடித்து வடிகட்டின தூள் 1 ¼ படி கூடப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குங் கொடுத்து உடம்பிலும் பூசி பிடிக்க, கன்னவலி, காதுநோய், கழுத்துப்பிடிப்பு, திமிர்வாதம், கடுப்பு, தோள்வலி, தனுர்வாதம், தொடைவலி, பக்கவாதம், எங்கும் ஓடி வலிக்கும் வாதம் முதலான சகல வாதமும் தீரும்.

8. மாவிலிங்கு, நொச்சி, ஊமத்தை, கழற்சி, முருங்கை, சிற்றாமணக்கு, வீழி, இலைக்கள்ளி, தழுதாழை, சதுரக்கள்ளி, முள்ளிலவு இவைகளின் சாறு, எட்டிப்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு குறுணி, பசுவின் நீர், வெள்ளாட்டு நீர் வகைக்கு ஒரு படி, சதுரக்கள்ளி, எருக்கு, இவற்றின் பால் ½ படி, எட்டி விதை 4 பலம் அரைத்துப் போட்டு ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து உடம்பில் பூச முறுக்கவாதம் எண்பதும் தீரும்.

வாத நோய்ப் படலம் முற்றிற்று.

பித்த நோய்ப் படலம்.

அஃதாவது எந்நேரமும் மயக்க முண்டாகிக் கபாலத்தைப் பற்றி மூளைகெட்டு நீர் அதிகரித்து நோய் தோன்றுதலாம்.

Koviloor Digital Library

KOVILOOR ARULVAKI LIBRARY, KOVILOOR
44963

மண்ணுல கத்தோ ரான மானிட ரறிய வென்று
திண்ணமா யுள்ள வேதத் திரட்டினை யாய்ந்து நன்றாய்
வண்ணமாம் பித்தத் தாலே வந்ததோர் நோயைக் கண்டு
கண்ணனா முனிவோர் தாமும் கழறினார் சுருதி யாமே.

பித்த (அழல்) வறட்சியின் இயல்பு.

தலைகனக்கும், உடம்புலரும், தாதுகெடும், தீப்போல் அபானம் எரிந்து மலமிறங்கும், புத்தி மந்தித்து மறதி உண்டாகும், மனதில் தோன்றாததெல்லாம் தோன்றும்.

மருத்துவம்:– சீராசெங்கழுநீர்ச்சாறு குறுணி, பசுவின் பால் 1 படி, நெய் 2 படி கலந்து அதில் மல்லி, சதகுப்பை, அதிமதுரம், சண்பகப்பூ, கோட்டம், சந்தனம், சீரகம், ஓமம், சத்திச்சாரணைக்கிழங்கு, ஏலம், கற்கண்டு வகைக்கு 5 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு பித்தத்திற்காகச் சொல்லி இருக்கிற தைலங்களில் ஒன்றைத் தேய்த்துத் தலை முழுக்கு செய்ய நோய் தீரும்.

இரத்த பித்தத்தின் இயல்பு

மூக்காலும், வாயாலும், இரத்தம் விழும்: உடல்தணல் போல் காய்ந்து வெளுக்கும்; கை, கால் அயரும்.

மருத்துவம்:– பசுவின் பால் (குறுணி) 8 படி, மேற்படி நெய் 4 படி, வெள்ளறுகுச்சாறு 4 படி ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், விலாமிச்சம், மஞ்சிட்டி, செவ்வியம், செங்கழுநீர்க்கிழங்கு, தாமரை வளையம், இலவங்கம், சன்னலவங்கப்பட்டை, நன்னாரிவேர் வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளை இளநீரில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர, வாயால் இரத்தம்விழுதல் தீரும். மூக்கில் நசியமிட மூக்கால் இரத்தம் வடிதலும், காதில் விட்டடைக்கக் காதில் இரத்தம் வடிதலும் தீரும்.

2. தேற்றான்விதை படி அரைக்கால் புழுங்கல் அரிசி கால் படி இவைகளை நனைத்தரைத்துப் பசுவின் பாலில் கலக்கிக் கூழ் காய்ச்சி ஒரு விளாங்காய் அளவு பனங்கருப்புக்கட்டியும் ஆழாக்கு நல்லெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட்டுவர நோய் தீரும்.

3. சிறுகீரைவேரைப் பச்சரிசிக் கழுநீரால் அரைத்துத் தேனில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

4. முருங்கையிலை, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், முத்தக்காசு, மாதுளை, அரும்பு, முசுமுசுக்கை இலை இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் (கியாழஞ்) செய்து கொடுக்கத் தீரும்.

பித்த வெறிக்குணம்

விஷபித்தம் தேகமெங்கும் பாய்ந்து இரத்தத்தைக் குடித்து சிரசிலேறும், அறிவற்று பித்தரைபான்.

Koviloor Digital Library

பித்தவெறி நோய்க்கு மருந்து.

எலுமிச்சம்பழம், முசுமுசுக்கை, முடக்கொத்தான், தாழை விழுது இவைகளின் சாறு; ஆறு மாதக் காடி இவைகளை ஓர் எடையாய்க் கலந்து அதில் அரப்பொடி, காந்தம், மிளகு, கிட்டம், பலகரை இவைகளின் பற்பம் வகைக்கு 1 வராகன் எடை போட்டு வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம் நாளொன்றுக்கு இரு வேளையாக 10 நாளில் கொடுத்து உச்சி முதல் உள்ளங்கால்வரை களிமண்ணைப்பூசிவைத்து மாலை நேரத்தில் சிரத்தில் முப்பது எலுமிச்சம் பழத்தை பிழிந்து தேய்த்து நூறுகுடஞ் சலத்தை விட்டு நீராட்டி வரத் தீரும்.

2. மேற்படி நோய் கண்டவுடனே இப்படிச் செய்யுமாறும் நாள்சென்றதாயிருந்தால் மேற்படி மருந்தை ஒரு சாமம் செப்புப்பாத்திரத்திலாவது பித்தளைப் பாத்திரத்திலாவது வைத்திருந்து அப்பால் கொடுத்து வரவும்.

3. இஞ்சிச்சாறும் கழுதைப்பாலும் ஓர் எடையாய்க் கலந்து வேளை ஒன்றிற்குக் கால்படி வீதம் 10 நாள் கொடுத்து ஆதள் இலையும் முத்தெருக்கஞ்செவியும் ஓர் எடையாய் ஓராண்டு காடிவிட்டு இடித்து உச்சி முதல் பாதம்வரை உடல், ஆதியந்தமும் பூசி வைத்து மாலையில் நீராட்டி வர நீங்கும்.

4. கோழிமுட்டை 40 அவித்துச் சவ்வும் ஓடும் நீக்கி, குறுணி உப்புக்குள் புதைத்து மறுதினம் முதல், வேளை ஒன்றுக்கு ஒரு முட்டை வீதமெடுத்து உப்பை உதிர்த்துச் சாப்பிட்டு ஒரு சாமத்திற்குப் பின்பு தண்ணீர் குடிக்கவும். இதன்படி ஆறுநாள் சாப்பிடத் தீரும்.

5. பசுவின்பால், பழச்சாறு, தாய்ப்பால், பசுவின் நீர், முசுமுசுக்கைச் சாறு, கொடுப்பைச் சாறு வகைக்கு 4 படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதிமதுரம், கோட்டம், ஏலம், வாய்விளங்கம், கருஞ்சீரகம், சந்தனம் வகைக்கு 1 பலம் கோவை இலைச்சாற்றாலாட்டிப் போட்டுப்பதமாய்க் காய்ச்சி வடித்து தலையில் இளஞ்சூட்டோடு தேய்த்துக் குடம் நீர்விட்டு மோரும் சோறும் கொடுக்கவும். இப்படி ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள தீரும்.

6. உப்பு, மிளகு, எருக்கம்பழுப்பு, தும்பை, துளசி, முருக்கு, வெற்றிலை, இவைகளைத் தட்டி மூக்கில் உறிஞ்சச் செய்தாலும் அல்லது இலுப்பைபிண்ணாக்கையும் சீயக்காயையும் வெற்றிலையையும் தட்டி மூக்கிலும் கண்ணிலும் பிழிந்தாலும் தீரும்.

7. இரண்டு தேங்காய் அளவு மருதம்பட்டையை அரைத்துக் குறுணி வெள்ளாட்டு நீரில் கரைத்து வேகவைத்து முக்காடுபோட்டு ஆவிபிடித்து அப்பால் மூன்று சுக்கான் கல்லை உலையில் பழுக்கக் காய்ச்சி ஒவ்வொரு கல்லாய்ப்போட்டு ஆவிபிடிக்கவும்.

Koviloor Digital Library

பித்த எரிச்சலுக்கு (அழலெரிவு) மருந்து.

சீந்தில், ஆடாதோடை, கரிப்பான், கற்றாழை இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி, நல்லெண்ணெய் 1 நாழி ஒன்றாய்க் கல்ந்து அதில் திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், அசமதாகம், நற்சீரகம், வாலுளுவையரிசி, ஏலம், இலவங்கம், சிறுதேக்கு, அதிவிடயம், செண்பகப்பூ, மல்லி, இலவங்கப்பட்டை, அதிமதூரம், செவ்வல்லிக்கொடி, சடாமாஞ்சில், மஞ்சிட்டி, செஞ்சந்தனம் வகைக்கு 6 கழஞ்சு, தான்றிக்காய் 8 , கடுக்காய் 16, நெல்லிவற்றல் 6, கூவிளை குறுந்தொட்டி நன்னாரி, விலாமிச்சு, வெட்டிவேர் இவைகளின் வேர் வகைக்கு 6 பலம், சுக்கு 6 கழஞ்சு இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சியிறுத்து ஒரு கரண்டி வீதம் உட்கொண்டு நான்கு நாட்களுக்கு ஒரு முறை தலைமுழுக்குச் செய்து வரத் தீரும்.

பித்த மயக்கத்திற்கு மருந்து.

நாயுருவியரிசியைக் கழுதைப் பாலில் அரைத்துக் கொடுக்கவும்.

பித்தத்தில் தோன்றி சகல நோய்க்கும் மருந்து.

1. ஒரு படி எலுமிச்சம் பழச்சாற்றில் ஐந்து பலம், சர்க்கரையும் 15 கோழி முட்டையையும் உடைத்துக் குழம்புபோல் காய்ச்சி வைத்துக் கொண்டு வேளை ஒன்றிற்கு ஒரு கரண்டிவீதம் சாப்பிட்டு எலுமிச்சம் பழச்சாற்றில் சீனாக்காரத்தைப் பொடித்துப் போட்டுக் கொதிக்கவைத்துத் தலையிலும், உடம்பிலும் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

2. முசுமுசுக்கைச் சமூலத்தைப் பசுவின்பால் விட்டு இடித்து பிழிந்தசாறு குறுணி, இஞ்சிச்சாறு, கழுதைப்பால் வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்ததில் கடுக்காய்த் தூள்படி கால் தூவிக்கிளறி குறுகி வருகிற சமயத்தில் ஒரு தேங்காய் அளவு பசுவின் வெண்ணெயும், 3 பலம், கருப்புக் கட்டியும், அரைப் பலம் தேனும் கலந்து இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

3. ஆவாரைவேர்ப்பட்டை, ஓரிலைதாமரை, கீழ்க்காய்நெல்லி, குமிழவேர், சிற்றாமுட்டி, இலவம்வேர், வேலிப்பருத்திவேர், நரியயற்றங்கொடி, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர் வகைக்கு 2 பலம், கடுக்காய், ஏலம், சடாமாஞ்சில், சந்தனம், தேவதாரம் வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து அதற்கு நிகர் சீரகத்தூள், சர்க்கரை சேர்த்து திரிகடி அளவு கொடுத்து வரத் தீரும்.

சித்தப் பிரமை, பித்தக் கிறுகிறுப்பு, வாய்நீர், சுழற்றல், அரோசியம், வாந்தி இவைகளுக்கு

அதிமதூரம், கோட்டம், மஞ்சிட்டி, ஏலம், நெல்லிப் பருப்பு, சடாமாஞ்சில், திரிகடுகு, திப்பிலி மூலம், பச்சைக் கற்பூரம், சந்தனம், கிராம்பு, தாளிசப்பத்திரி, சீரகம், சிறுநாகப்பூ, இவைகளை ஓர் எடையாய்த் தூள் செய்து அதற்கு நிகர் சர்க்கரை கூட்டி திரிகடி அளவு சாப்பிட்டு இதன் அடியில் வருகிற தைலத்தைத் தலைமுழுகி வரத் தீரும்.

Koviloor Digital Library

நெல்லிக்காய், முசுமுசுக்கை, சீந்தில், பொன்னாங்காணி இவை களின் சாறு நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்ததில் முத்தக்காசு, அதிமதுரம், ஏலம், சந்தனம், சடாமாஞ்சில், சண்பகப் பூ, இலவங்கம், திரிகடுகு வகைக்குக் கால் பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரவும்.

பித்தக் காங்கை, கக்கல் கிறுகிறுப்பு, தாகத்திற்கு மருந்து.

1. நெற்பொரி, பாசிப்பயறு, வில்வவேர்ப்பட்டை, முல்லைவேர்ப்பட்டை, சுக்கு ஏலம், நெல்லிமுள்ளி வகைக்கு 1 வராகன் எடை மயனமாய் அரைத்து ½ படி இளநீரில் போட்டு கால் படியாய் வற்ற வைத்து 10 நாள் சாப்பிடத் தீரும்.

2. இளநீரும்,பசுவின் பாலும் ஓர் அளவாய்க்கலந்து அதில் பச்சைப்பயறும், சீரகமும், நெற்பொரியும் சமமாய்க் கலந்து மாவு செய்து போட்டுப் பாகுபோல் காய்ச்சி சர்க்கரை கலந்து பத்து நாள்கள் சாப்பிட்டு வரத் தீரும்.

பித்த காங்கை, எரிவு, வறட்சிக்கு மருந்து.

1. சீந்திற்றண்டு, அதிமதுரம், சீரகம், ஏலம், இலவங்கம் கூகைநீர் வகைக்குக் கால் பலம், சர்க்கரை அரைப் பலம் இவைகளை இடித்து ஒரு படி பசுவின் நெய்யில் போட்டுக் காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத்தீரும்.

2. ஏலம், இலவங்கம், திப்பிலி, நெல்லி வற்றல், அதிமதுரம், விலாமிச்சம் வேர், வெட்டி வேர், இலுப்பைப்பூ இவைகளை ஓர் எடையாய்த் தூள்செய்து திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

பித்த மயக்கம் மீறல், கிறுகிறுப்பு, காங்கை, கக்கல், சோகை மற்ற பித்தத்தில் எடுத்த நோய்கட்கு மருந்து.

ஆறு எலுமிச்சம் பழச்சாறு, படி 1 சர்க்கரை 12 பலம், கோழி முட்டை வெள்ளைக்கரு 1 பலம். இவைகளை ஒன்றாகக் கலந்து காய்ச்சி அதில் சுக்கு, ஏலம், சீரகம், அதிமதுரம், நெற்பொரி, நெல்லிவற்றல் வகைக்கு 1 பலம் வறுத்துத் தூள் செய்து, தூவிக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு வேளை ஒன்றில் ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

பித்தமீறல், கிறுகிறுப்பு, பித்தவெட்டை, உடம்பெரிவிற்கு மருந்து.

சுக்கு 2 பலம், மிளகு 2 பலம், திப்பிலி 5 பலம், கூகைநீர், ஏலம், இலவங்கம் வகைக்கு ½ பலம் மேற்படி பாலில் அரைத்துப் போட்டுக்

Koviloor Digital Library

காய்ச்சிக் கடுகுடன் வேளை ஒனறுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

கற்றாழை சீந்தி கொடுப்பை கமுகந்தொலி இவைகளின் சாறு வகைக்குப் படி 1– ஆவினெய்படி 1– அழிமதூரம் முந்திரிப்பழம், கூடைசைநீர் சந்தனம் வகைக்குப் பலம் 1– மேற்படி பாலிலரைத்து போட்டுக் காய்ச்சி கடுகுடன் வேளையொன்னுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிடத்தீரும்.

பித்த வாயுவுக்கு (அழல் வாயு) மருந்து.

முக்கரைச்சாரணை வேர்த் தூளும் மிளகை வறுத்துப்பொடித்த தூளும் வகைக்கு 20 வராகன் எடை, சர்க்கரை 40 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

2. தூய்மைசெய்த சிவதை வேர், திரிகடுகு, இவைகளைச் சம எடையாய்த் தூள்செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கலந்த உட்கொள்ளத் தீரும்.

பித்தத்தை வாந்தி (கக்கல்) செய்ய மருந்து.

எலுமிச்சம் பழத்தை கீறி அதற்குள் மூன்றுதுளி எருக்கம் பால்விட்டு ஓரிரவு வைத்திருந்து காணயில் அதை சாப்பிட பித்தம் வாந்தியாகும்.

அழிஞ்சில் வேர்ப்பட்டையை அரைத்துக் கழற்காய் அளவு வெந்நீரில் கலக்கிக் கொடுக்கப் பித்தம் வாந்தியாகும். பின்பு குளிர்ந்த தண்ணீரில் தலைமுழுகச் செய்து மிளகுநீர், மோர் உணவுடன் உட்கொள்ள பித்தம் சாந்தியாகும்.

பித்தம் 40–க்கு கைகால் எரிவு உடம்பெரிவுவறட்சி, தாகம், பித்த சுரத்திற்கு

குமரிச்சாறு 6 படி, சிறுகீரை, பொன்னாங்காணி, தண்ணீர் விட்டான் கிழங்கு, தாமரைக்கிழங்கு, தூதுளை இவைகளின் சாறு, பால், இளநீர் வகைக்கு 3 படி, பசுவின் நெய் 4 படி ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், இலவங்கம், சாத்திரபேதி, அதிமதூரம், பச்சைக்கற்பூரம், வசுவாசி (சாதிப்பத்திரி), திரிபலை, சிறுநாகப்பூ, நறும்பிசின், பச்சை, சண்பகப்பூ, கோட்டம், கச்சோலம், மரமஞ்சள், சந்தனம், கலைக்கொம்பு, மஞ்சிட்டி, புனுகுச் சட்டம், விலாமிச்சம்வேர், நன்னாரி, வெட்டிவேர், முத்தக்காசு (கோரைக்கிழங்கு), கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு 3 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும். உடம்பு வளமையாகும்; உடம்பு புஷ்டியாகும் உடலிற்குக் குளிர்ச்சி உண்டாகும்.

பித்தசுரம், பித்தகாங்கை, பிதற்றல், பித்தத்தின்பேரில் தோன்றிய இரைப்பிருமல், மேகவெட்டை, வறட்சிக்கு மருந்து.

முற்றின சீந்தில் தண்டு 20 பலம், கோவைத்தண்டு வேப்பம்பட்டை, முள்ளி, சிற்றாமுட்டி, செர்தொட்டி, கோடகசாலை வகைக்கு 5 பலம்

Koviloor Digital Library

இவைகளை இடித்து 4 மரக்கால் நீரில்போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் நெய் 4 படி, சாணிப்பால், தாய்ப்பால், கருப்பஞ்சாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி கூடவிட்டு அதிமதூரம், முந்திரிகைப்பழம், கடுகுரோகணி, மல்லி, சந்தனம், சிறுதேக்கு, சடாமாஞ்சில், விலாமிச்சு, பேரீச்சம்பழம், வேர்ப்பீர்க்கு, கோட்டம், சிறுநாவப்பூ, கடுக்காய், சிற்றரத்தை, கற்கண்டு வகைக்கு அரைப் பலம் இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உண்ண நோய்தீரும்.

சுவையின்மை, உணவேலாமை முதலியவைகட்கு மருந்து.

எலுமிச்சம் பழத்தை நான்காய்க் கீறி அதில் திரிகடுகு, ஓமம், காயம் வகைக்குக் கால் பலம் வீதம் பொடித்துவைத்து மூன்று நாள் காலையில் ஒவ்வொரு பழம் சாப்பிட பித்தவாயு, கிறுகிறுப்பு, நெஞ்செரிவு, வாய்நீரூறல், வெள்ளோக்காளம், அன்னம் செரியாது இருத்தல் ஆகியவை தீரும்.

பஞ்சதாரை, அதிமதூரம், வகைக்கு 2 பலம், இஞ்சி 4 பலம், ஏலம், திப்பிலி, வகைக்கு 1 பலம் தூள்செய்து திரிகடியளவு பசுவின் பாலில் பத்துநாள் கொள்ளத் தீரும்.

பித்தத்திற்கு (அழல்) மருந்து.

இஞ்சி, திரிகடுகு, ஏலம், அதிமதுரம், சீரகம் சந்தனம் வகைக்கு ஒரு வராகன் எடை வீதம் சிதைத்து ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து இறுத்துச் சர்க்கரை கலந்து சாப்பிட்டுவரத் தீரும்.

2. சர்க்கரை 4 பலம், இஞ்சி, சுக்கு, வகைக்கு 3 பலம், சீரகம், ஏலம் வகைக்கு 1 பலம், அதிமதூரம், பாசிப்பயறு வகைக்கு 2 பலம் இவைகளை வெதுப்பிப் பொடித்துத் திரிகடி அளவு நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

3. அதிமதூரம், நெல்லி வற்றல், ஏலம், இஞ்சி, சர்க்கரை, சுக்கு, விளாவேர் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து அதற்குச் சமமாய் நெற்பொரியும், சீரகத்தூள் சேர்த்துத் திரிகடி அளவு பசுவின் நெய்யில் சாப்பிட்டு வரத் தீரும்.

4. சீரகம், நெல்லிவற்றல், சுக்கு ஏலம் இவைகளை ஓர் எடையாய்த் தூள் செய்து அதற்குப் பாதி சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனில் குழப்பிக் கொடுக்கத் தீரும்.

5. ஆடாதோடைவேர், முந்திரிகைப்பழம் வகைக்கு 1 பலம் ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் அக்கிராகாரம் 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

6. எலுமிச்சம் பழச்சாறு, துளசிச்சாறு வகைக்கு அரை ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதை, சர்க்கரையுடன் உட்கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

7. கூகைநீர், திப்பிலி, அதிமதூரம், சீந்தில்சர்க்கரை, சடாமாஞ்சில், வால்மிளகு, பேரீச்சங்காய், சீரகம் வகைக்கு 1 பலம் தூள்செய்து அதற்குப் பாதி சர்க்கரை கூட்டித் திரிகடி அளவு 1 நாழிகையும் சாப்பிடத் தீரும்.

பித்த (அழல்) நோய்க்குத் தைலம்.

பசுவின் பால், இளநீர் வகைக்கு நான்கு படி, சீராச்செங்கழு நீர், பொன்னாங்காணி, தாமரைக் கிழங்கு, நிலைப்பனைக் கிழங்கு, வெற்றிலை, வெட்டி வேர், விலாமிச்சம்வேர், எலுமிச்சம் வேர், எலுமிச்சம் பழம் இவைகளின் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் மலாக்காசந்தனம் 8 பலம் சாத்திரபேதி, தக்கோலம், நெற்பொரி, சீரகம், முந்திரிகைப்பழம், இலவங்கம், ஏலம், சிறுநாவப்பூ, சண்பகப்பூ, பச்சைச் சோளம், கோட்டம் வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரப் பித்தசுரமும் மேற்காட்டிய பித்த நோய்களும் தீரும்.

2. கற்றாழை மடல், தாலைவிழுது, சீந்தி, கற்பூரவல்லி, குறுஞ்தொட்டி இவைகளின் சாறு நல்லெண்ணெய் வகைக்கு ஒரு படி நெல்லிக்காய்ச் சாறு, பசுவின் பால் வகைக்கு 2 படி, ஒன்றாய்க் கலந்து அதில் சிறுதேக்கு, ஏலம், இலவங்கம், சீரகம், சந்தனம், சண்பகப் பூ, திப்பிலி மூலம், சதகுப்பை, சாதிக்காய், செங்கழுநீர்க் கிழங்கு, செவ்வல்லிக் கொடி, சடாமாஞ்சில், தேவதாரம் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகப் பித்த வெறி, கிறுகிறுப்பு, கைகால் எரிவுகள், பிரமேகம் தீரும்.

3. கரிப்பான், இஞ்சி, கருவேப்பிலை, எலுமிச்சம் பழம், பொடுதலை, கொடுப்பை, பொற்சீந்தில், முசுமுசுக்கை இவைகளின் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்குக் கால் படி ஒன்றாய்க் கலந்து மலாக்காச்சந்தனம், தேவதாரம், கிளியூரல்பட்டை, பூலாக்கிழங்கு, வெட்டி வேர், விலாமிச்சம் வேர், கிராம்பு, வில்வவேர், ஏலம், சாதிக்காய், முந்திரிகைப்பழம், சந்தனம் வகைக்கு ஒரு பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, அதில் புனுகு, சவ்வாது வகைக்கு 1 வராகன் எடை கலந்து வைத்துக்கொண்டு தலைமுழுகிவரப் பித்தத்தால் தோன்றிய நோய்கள் நாற்பதும் தீரும்.

4. கரிப்பான், நெல்லிக்காய் சாறு வகைக்கு ஒரு படி, பசுவின் பால் 4 படி, ஒன்றாய்க் கலந்து அதிமதூரம் ஒரு பலம் அரைத்துப் போட்டு மெழுகு பதத்தில் வடித்துத் தலைமுழுகி வரச் சகலமும் தீரும்.

5. நெல்லிக்காய், சீந்தில், குமரி, கரப்பான், சீராசெங்கழுநீர் இவைகளின் சாறு வகைக்கு அரைப் படி, நல்லெண்ணெய் 2 படி, பசுவின் பால் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதூரம் அரைப் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரத் தீரும்.

பித்த நோய்ப் படலம் முற்றிற்று.

Koviloor Digital Library

சிலேத்தும நோய்ப் படலம்.

சிலேத்தும நோய் உடம்பில் சீதளத்தை அதிகப்படுத்தி எப்பொழுதும் வெப்பத்தை ஏற்படுத்தி சூடுபோல் காண்பித்து நீரைப் பெருக்குதலாம்.

தீரு முனிவர் வாகடத்தைத் திறமா யுருவுங் கண்டறியச்
சீருஞ் சேத்ம ரோகவிதந் தெளிவாய் தொண்ணூற் றாறுதொகை
சாரும் பன்னூ லாராய்ந்து சதுராய்ச் செய்து பிணியகல
நேரும் வைத்ய சாரமென நெடிய வரைந்த குருநூலே.

சிலேத்தும (ஐய) நோயின் இயல்பு.

மூலத்தில் அனல் அதிகரித்து கபாலத்தில் (மண்டையில்) பற்றி, இரத்தம் வற்றி, தாதுகெட்டு, நீர் ஏறி, நெஞ்சில் கபம் உண்டாகி இருமல், இளைப்பு கண்டு உடல் வற்றும்.

மருத்துவம்:– தூதுவளை 20 பலம், முள்ளி, கண்டங்கத்திரி, சிறுகாஞ்சோறி, ஆடாதோடை, மிளகு, கடுக்காய், திப்பிலி, வகைக்கு 4 பலம் இவைகளை இடித்து இருதூணி நீரில் போட்டு, 16 இல் ஒரு பாகமாக வற்றவைத்து இடித்து அதில் பசுவின் பால், நெய் வகைக்கு 2 படி கூடவிட்டுத் திரிகடுகு, திரிபலாதி, தாளிசப்பத்திரி, கோட்டம், அக்கிராகாரம், வாய்விளங்கம், கருஞ்சீரகம், வால்மிளகு, சிற்றரத்தை, பேரரத்தை, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு 3 கழஞ்சு, பசுவின் பாலில் ஆட்டிப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள சிலேத்தும (ஐய) நோய் 96–ம் தீரும்.

2. கண்டங்கத்திரிச் சமூலம் 20 பலம், சிறுகாஞ்சோரி, நிலவாகை, தூதுவளை, சங்கம்வேர் வகைக்கு 5 பலம் இவைகளை இடித்துத் தூணி நீரில் போட்டுப் பதினாறில் ஒரு பாகமாய்க் காய்ச்சி வடித்து அதில் பசும் நெய்யில் வகைக்கு 2 படி கூடவிட்டுத் திரிகடுகு, திரிபலாதி, ஏலம், அக்கிராகாரம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை, சிற்றரத்தை, பேரரத்தை, சீரகம் ஓமம் வகைக்கு 3 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் (48 நாள்கள்) சாப்பிட்டு வர ஐய நோய் (சிலேத்துமம்) 96–ம் தீரும்.

3. செம்முள்ளி, சங்கு, ஆடாதோடை இவைகளின் வேர்களை ஓர் அளவாய் இடித்துப் பாண்டத்தில்போட்டுக் குழித்தைலமிறக்கி வேளைஒன்றிற்கு ஒரு வராகன் எடை வீதம் தேனில் கலந்து கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

4. சங்கம்வேர் 50 பலம், கண்டங்கத்திரி 25 பலம், கீழ்க்காய் நெல்லிவேர் 20 பலம், தூதுவளை வேர் 10 பலம் இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு 1 மரக்கால் அளவு வற்ற வைத்து வடித்து அதில் கருப்புக்கட்டி பலம் 25 தட்டிப்போட்டுக் கரைத்து வடிகட்டிப் பாகு காய்ச்சி,

Koviloor Digital Library

அதில் அரத்தை, திப்பிலி வகைக்கு 10 பலம், கூடைநீர், ஏலம், இலவங்கம், பச்சைச் சீரகம், ஓமம், பெருங்காயம், சிறுதேக்கு, கற்கடகச்சிங்கி, திரிபலை வகைக்கு 2 பலம், பொடித்துத் தூவிக் கிண்டி அயம், கடுகு, மிளகு இவைகளின் பொடி வகைக்கு ஆழாக்கு, சுக்குப் பொடி 2 ஆழாக்கு இவைகளைத் தனித் தனியே தூவிக் கிண்டி வகைக்கு ¼ பலம் விட்டு இளகம் செய்து ஒரு நாழிகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) சாப்பிட்டு வர சிலேத்தும நோய் 96–ம், உள்ளுருக்கியும், சோகையும் நீங்கும்.

5. ஆடாதோடை, கண்டங்கத்திரி, துளசி வகைக்கு 10 பலம் இடித்து 10 படித் தண்ணீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்துக்கொண்டு ஒரு நாழிகைக்கு ஆழாக்காய் குடிநீரில் திரிகடி, திப்பிலிப் பொடி தூவிச் சாப்பிட்டு வரத் தீரும்.

6. திரிகடுகு, கீழ்க்காய் நெல்லி, சிறுதேக்கு, கண்டங்கத்திரி வேர், சங்கம்வேர், நெல்லிவற்றல் வகைக்குக் கால் பலம் இடித்து 2 படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து 7 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

7. பவழம், அதிதாரம், சாதிலிங்கம் கடல்நுரை இவைகளை ஓர் எடையாய்க் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றால் அரைத்துத் துணியில் ஊட்டி உலர்த்தி 7 நாள் புகைபிடிக்கத் தீரும்.

8. கண்டங்கத்திரிச் சமூலம் பிழிந்தசாறு, பசுவின் நெய் வகைக்கு ஒரு நாழி ஒன்றாய்க் கலந்து அதில் தாளிசப்பத்திரி, சிறுகாஞ்சோரி, சத்திச்சாரணை, நெருஞ்சி, கீழ்க்காய்நெல்லி இவைகளின் வேர், நெல்லிவற்றல், சிறுதேக்கு, சிற்றரத்தை, வெட்பாலையரிசி வகைக்கு 4 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு பண எடை வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

9. பசுவின் பால் 4 படி, மேற்படி நெய் 2 படி ஒன்றாய்க் கலந்து அதில் நிலவேம்பு, நன்னாரிவேர், குறுஞ்சா, விலாமிச்சு இவைகளின் வேரும் சந்தனம், பேராமல்லி, நெல்லிக்காய், வெட்பாலையரிசி, முந்திரிப்பழம், கீழ்க்காய்நெல்லி, சீரகம், கடுகுரோகணி, திப்பிலி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி சிவந்த பதத்தில் வடித்து சாப்பிட்டுவர நோய் தீரும்.

10. திப்பிலி 10 பலம், மிளகு, சுக்கு வகைக்கு 5 பலம், நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், அரத்தை வகைக்கு 2 பலம் லவங்கப்பட்டை திரிபலை கிராம்பு ஏலம்கொடுவேலி வகைக்கு பலம் ஒன்று இவைகளை வெதுப்பித் தூள்செய்து அதற்குச் சமம் சர்க்கரை கலந்து தேன் விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

11. மிளகு 100 பலம் இடித்து, தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் கற்கண்டு 10 பலம் பொடித்துப் போட்டு, பாகுசெய்து அதில் அக்கிராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோட்டம், அதிமதுரம்,

Koviloor Digital Library

வாய்விளங்கம், பத்திரி, நறுக்குமூலம் வகைக்கு ஒரு பலம் தூள் செய்து தூவிக்கிண்டி, தேன்அரைப்படி, நெய் 1 படி கூடவிட்டு இளகம் செய்து வேளைஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட நோய் தீரும்.

ஈளை, இருமலுக்கு மருந்து.

கற்கடகச்சிங்கி, திரிகடுகு, திரிபலை, அரத்தை, கண்டங்கத்திரி வேர் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துத் திரிகடி அளவு வெந்நீரிலாவது தேனிலாவது உட்கொள்ள நோய் தீரும்.

2. ஆடாதோடை இலையை இடித்துப் பிட்டவித்து அரைக்கால் படி சாறு பிழிந்து அதில் திரிகடி, திப்பிலிப் பொடி தூவி உட்கொள்ள நோய் தீரும்.

3. திரிகடுகு, கடுக்காய், சிற்றரத்தை, ஓமம் வகைக்கு 3 வராகன் எடை வெதுப்பிப் பொடித்து அதற்குச் சமம் சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனில் கொடுக்கத் தீரும்.

4. தாளிசப்பத்திரி 10 பலம், மிளகு 1 ½ பலம், சுக்கு, திப்பிலி வகைக்கு 2 பலம், கூகைநீர் 3 பலம், ஏலம், இலவங்கப்பட்டை வகைக்கு அரை பலம் இவைகளைத் தூள்செய்து சர்க்கரை 20 பலம் கூட்டித் திரிகடி அளவு உட்கொள்ள நோய் தீரும்.

5. இந்துப்பும் கற்கண்டும் பொடித்துத் திரிகடி அளவு உட்கொள்ள நோய் தீரும்.

6. பெட்டைக்கோழியைக் கால், குடல், ரோமம், நீக்கி அதன் வயிற்றுக்குள் கால் பலம் மிளகை உடைத்து வைத்துதைத்து 4 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து முடித்து மூன்று நாள்கள் சாப்பிட்டுவர நோய் தீரும்.

7. சுக்கு 32 வராகன் எடை, திப்பிலி 16 வராகன் எடை, மிளகு 8 வராகன் எடை, ஏலம் 4 வராகன் எடை, கிராம்பு 2 வராகன் எடை, சிறுநாவப்பூ 1 வராகன் எடை இவைகளை வெதுப்பி தூள்செய்து அதற்குச் சமம் அமுக்கறாவேர் தூள்கூட்டி தூள் கண்ட எடைக்குச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

8. கிராம்பு, சிறுநாவப்பூ, மல்லி, ஏலம், சன்னலவங்கப்பட்டை, சாதிப்பத்திரி, நற்சீரகம், மிளகு, திப்பிலி வகைக்கு 3 வராகன் எடை இவைகளை வெதுப்பிப் பொடித்து அதற்கு நிகர்சர்க்கரை கலந்து திரிகடி அளவு உட்கொள்ள நோய் தீரும்.

9. தூதுவளை, முருங்கைப்பட்டை, திப்பிலி, சர்க்கரை இவைகளை ஓர் எடையாய்த் தூள்செய்து திரிகடி அளவு பசுவின் வெண்ணெயில் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

10. மிளகும் பொடுதலைக் கொழுந்தும் ஓர் எடையாய் அரைத்து வேளைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

Koviloor Digital Library

11. மரமஞ்சள், திரிகடுகு, திரிபலை, ஓமம், கடுக்காய்ப்பூ, சிற்றரத்தை, தேற்றான்விதை வகைக்கு 3 வராகன் எடை இடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் தீரும்.

12. சிற்றரத்தை, பலம் அரை, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம், ஓமம், சுக்கு, மிளகு, கடுக்காய் வகைக்கு கால் பலம் இவைகளை வெதுப்பித் தூள்செய்து அதில் 3 பலம் பனைவெல்லம் கூட்டித் திரிகடிப் பிரமாணம் ஆவின் வெண்ணெயிற் சாப்பிட்டு பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி, சிற்றகத்திலைச்சாறு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு நரியுடைவேர், வகைக்கு பலம் 1 அரைத்துப் போட்டு காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர நோய் நீங்கும்.

13. தேனும், இஞ்சிச்சாறும், பழச்சாறும் ஓர் எடையாய்க் கலந்து வேளை ஒன்றிற்கு அரைக்கால் படி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

14. தூதுவளைச்சமூலம், கண்டங்கத்திரிவேர், நீர்முள்ளிச்ச இவைகளை மூலம் உலர்த்தி இடித்து வடிகட்டின தூள் 5 வராகன் எடை, கடுக்காய்ப்பொடி 1 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து காலை மாலை இரு வேளையும் திரிகடி அளவு உட்கொள்ளத் தீரும்.

15. விளா இலை, நீர்முள்ளி இலை வகைக்கு ஒரு பிடி இடித்துச் சாறு எடுத்து மூன்றுநாள் உட்கொள்ளத் தீரும்.

16. கருப்புக்கட்டி, குங்கிலியம், கடுக்காய், கருஞ்சீரகம், திப்பிலி, நாயுருவி அரிசி இவைகளை ஓர் எடையாய் தூள்செய்து திரிகடி அளவு கோழி முட்டையில் பொரித்து சாப்பிடத் தீரும்.

17. ஓமம், கடுக்காய், மிளகு, சுக்கு, திப்பிலி, அரத்தை, அக்கிராகாரம், தேசாவரம் ஆகிய இவைகளை ஓர் எடையாய் தூள்செய்து அதற்குப் பாதி சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனிற் உட்கொள்ளத் தீரும்.

18. கண்டங்கத்திரிவிதை 1 பலம், சிற்றரத்தை, அக்ராகாரம், திப்பிலி, தாளிசப்பத்திரி வகைக்கு கால் பலம் வெதுப்பிப் பொடித்துத் தூவிக் கிளறி பசுவின் நெய் அரைக்கால் படி விட்டு கிளறி இளகம் செய்து ஆறியபின்பு தேன் அரைக்கால் படி விட்டு நன்றாய் இளகித்து கொட்டைப்பாக்கு அளவு இரு வேளை ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

19. திரிகடுகு, திரிபலை, தேற்றான்விதை, கருஞ்சீரகம், நற்சீரகம், அதிமதூரம், இந்துப்பு, ஓமம், காட்டுச்சீரகம், கோரைக்கிழங்கு, முள்ளிவேர், நன்னாரி, வெள்ளுள்ளி, தூதுவளை வேர் இவைகளை ஓர் எடையாய் வெதுப்பி இடித்து தேனும், நெய்யும் ஒன்றாய்க்கலந்து அதில் தூவிக் கலக்கி, காலை மாலை இரு வேளையும் கொட்டைப்பாக்கு அள்வு சாப்பிடவும்.

20. ஆறு படி பசுவின் பாலில் சர்க்கரை 10 பலம், கற்கண்டு 5 பலம் பொடி செய்து போட்டுப் பாகு செய்து அதில் சீந்திற் சர்க்கரை 10 பலம், திரிகடுகு, திரிபலை, கோட்டம், அதிமதூரம், ஏலம், இலவங்கம், சாதிக்காய்,

Koviloor Digital Library

சாதிப்பத்திரி, சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், சீரகம், சிறுதேக்கு, தாளிசப்பத்திரி, நன்னாரி, தூதுவளை ஆகிய இவைகள் வகைக்கு 5 கழஞ்சு தூள் செய்து தூவிக்கலக்கி நெய் 1 படி, தேன் கால படி விட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்கு, கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத்தீரும். மேற்படி இளகத்தில் தாளபற்பம், காந்தச்செந்தூரம், வங்கச் செந்தூரம் வைத்துச் சாப்பிட சயகாசம், கபநோய் முதலான நோய்களும் தீரும்.

சய நோயின் (இளைப்பு) இயல்பு.

எலும்பில் அனலேறி இரத்தம் வற்றி, பித்தம் அதிகரித்து நெஞ்சில் கபமுண்டாகி இருமல், இளைப்பு உண்டாகும்; உடம்பு வற்றும்; முகம் வெளுக்கும்; வாய்நீரூறும்; அரோசிகங்காணும்; தொண்டைவிலா புண்போல நோகும்; நெஞ்சு பள்ளம் விழும்; கால் விரல் நரம்பை சுருங்க வாங்கும்.

மருத்துவம்:– பசுவின் நெய், பசுவின் பால் வகைக்கு ஒரு படி, தூதுளம்பழச்சாறு, ஈருள்ளிச்சாறு வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் தூதுவளைவேர், அதன் இலை, முடக்கொத்தான் இலை, கண்டங்கத்திரிவேர், அதன் இலை, சிறுவழுதலைவேர், முசுமுசுக்கை இலை, ஆவாரை வேர்ப்பட்டை, அதன் விதை, அதன் அரும்பு, வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு மிளகு, திப்பிலி, நற்சீரகம், அதிமதுரம், கோட்டம், கத்தூரிமஞ்சள், வாய் விளங்கம், மல்லி, ஏலம், தாளிசப்பத்திரி இவைகள் வகைக்கு 5 வராகன் எடை, சிற்றரத்தை 8 வராகன் எடை, இலவங்கப்பட்டை 10 பலம், சாதிக்காய், கிராம்பு வகைக்கு 3 வராகன் எடை, சாதிப்பத்திரி 2 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு 10 வராகன் எடை சர்க்கரை கலந்து பதமாய் நெய்செய்து நாழி ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட சயம், காசம் தீரும். பத்தியம் : உப்பு, புளி தள்ளவும். ஈருள்ளியும், தூதுளம் பழம் பிழிந்த சக்கையுடன் வறுத்து துணைமருந்துகளுடன் உட்கொள்ளவும்.

2. முயல் இறைச்சி 40 பலம் 12 படி தண்ணீரில் வேகவைத்து 4 படியாய் வற்ற வைத்து இறுத்து அதில் ஆடாதோடை இலைச்சாறு, பசுவின் பால் வகைக்குக் குறுணி, பசுவின் நெய் இரண்டரை படி விட்டு அப்பால் பெருங்குமிழ்வாகை, முன்னை, பேராமல்லி, வில்வம், அமுக்கறா, தூதுவளை, கண்டங்கத்திரி, முள்ளி, நெருஞ்சில், சிற்றாமல்லி, பாதிரிமலா் இவைகளின் மூலம், மிளகு, திரிபலை வகைக்கு 3 பலம் தூள்செய்து பத்து பலம் தண்ணீரில் போட்டு வற்றவைத்து வடித்த கியாழம் 4 படி கூடவிட்டு சித்திரமூலம் சிறுதேக்கு, சீரகம், சுக்கு, ஓமம், அரத்தை, கிராம்பு, கருஞ்சீரகம், கற்கடகச்சிங்கி, செவ்வியம், திப்பிலி, சடாமாஞ்சில், இலவங்கப்பட்டை, கடுகுரோகணி, திப்பிலிமூலம், இலவங்கப்பத்திரி வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டு 3 நாள்வரை சிறு தீயாக எரித்து நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி இறுத்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி நெய்யில் தேன் 2 வராகன் எடை, திப்பிலித்தூள் 1 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து கொடுத்து வரவும்.

Koviloor Digital Library

3. தூதுவளை பிரமி இசங்கு, ஆடாதோடை, முருக்கு, முல்லை, வில்வம், கொடுவேலி இவைகளின் சாறு வகை படி ஒன்றாய்க் கலந்து அதில் சர்க்கரை 10 பலம் கரைத்து பாகு செய்து தூதுளைகண்டங்கத்திரி, சிறுவழுதலை, வில்வம், அமுக்கறா, நரிமிரட்டி, செம்முள்ளி, கீழ்க்காய்நெல்லி இவைகளின் வேர், திரிபலை, திரிகடுகு, அரத்தை வகைக்கு 1 பலம் ரவியில் உலர்த்தித் தூள் செய்துபோட்டு நெய், தேன் விட்டு இளகம் செய்து சாப்பிட்டு வரத்தீரும்.

அஷரியிலைச் சாறு அரைப்படி முற்றின தேங்காய்ப்பால் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் பூநாகம் ஒரு மாங்காய் அளவு அரைத்துப்போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து வேளையொன்றிற்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவரத் தீரும்.

பித்த சய நோயின் இயல்பு.

பித்தம் அதிகரித்து அக்கினிகொண்டு உடல், உள்ளங்கால், உள்ளங்கை எரிந்து கடுக்கும்; வெதும்பும்; நெஞ்சில் கபம் உண்டாகி இருமல் இளைப்புக் காணும்; கபம் சிவந்து விழும்; வாந்தி பண்ணும்; வயிறு கழியும்; நீர் கடுக்கும்; சுவையின்மை, உணவு விரும்பாமை உண்டாகும்.

மருத்துவம்:– குமரி, கொடுப்பை, கரிசாலை, கீழ்க்காய் நெல்லி, அகத்தி, விஷ்ணு கரந்தை, தாழைவிழுது, நீர்முள்ளி, முசுமுசுக்கை, பேய்ப்புடல், நீர்வள்ளிக் கிழங்கு, தாமரைக் கிழங்கு, ஈருள்ளி, வல்லாரை, வெள்ளரி, தூதுவளைவேர், கரும்பு, எலுமிச்சை, வில்வம், கண்டங்கத்திரி, பிரமி, கஞ்சா, வெற்றிலை, புளியிலை செருப்படை, கருவேப்பிலை, பசலை, புளியாரை, துளசி, மிளகுதக்காளி, அமுக்கறா இவைகளின் சாறு, இளநீர், பசுவின் பால், நெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதூரம், நற்சீரகம், வெட்பாலை அரிசி, கோட்டம், ஏலம், அதிவிடையம், சுக்கு, வெள்ளைக் குங்கிலியம், அரத்தை, திரிபலை, நெற்பொரி, மிளகு, திப்பிலி வகைக்கு 1 பலம் வெதுப்பி, பொடித்துத் தூவிக்கிளறி கற்கண்டு 10 பலம், அரைப்படி தேன் கூட்டி இளகம் செய்து வேளை ஒன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்களவு சாப்பிட்டுவரத் தீரும்.

2. நெல்லி வற்றல் பலம்பத்து இடித்துத் தூணி நீரில்போட்டு இரண்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் சர்க்கரை 10 பலம் கரைத்துப் பாகுசெய்து திரிகடுகு, ஓமம், சித்திரமூலம், கிராம்பு, தக்கோலம், குக்கில், வாய்விளங்கம், கூகைநீர், அதிமதூரம் வகைக்கு 1 பலம் பொடித்துத் தூவி நெய் 1 படி, தேன் அரைப்படி கூடவிட்டு இளகம் செய்து கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

3. அரசம்பட்டை, அத்திப்பட்டை வகைக்கு 20 பலம் இடித்துப்பதக்கு நீரில்போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் கற்றாழஞ்சாறு, வெள்ளறுகு, பசுவின் நெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து ஆல், அரசு, அத்தி இவைகளின் பட்டை அதிமதூரம், கோட்டம், சந்தனம், இலுப்பைப்பூ, தாமரைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, வெள்ளறுகு, பேரீச்சம்பழம்,

Koviloor Digital Library

சிறுநாவட்பூ, சண்பகப்பூ, இலவங்கப்பத்திரி, கச்சோலம், நாணற்றாது, நன்னாரி வேர், அல்லிக் கிழங்கு, அமுக்கறாவேர், ஏலம் வகைக்கு 1 வராகன் எடை இவைகள் பசுவின் பாலில் அரைத்துப்போட்டு ஐந்துநாள் வரை சிறு தீயாகயெரித்து ஆறாம்நாள் பதமாய்க்காய்ச்சி வடித்து வேளை ஒன்றிற்கு ஒரு கரண்டிவீதம் சாப்பிட்டுவர பித்தகாசம், உளை, மாந்தை, எலும்புருக்கி ஆகியவை தீரும்.

காச நோயின் இயல்பு.

அக்கினியாய் எரித்து நெஞ்சு புண்ணாக்கி அடிக்கடி புகைந்து இருமும், கபத்தோடு இரத்தம் விழும். தொண்டை புண்போல் நோவும்; வாந்திபண்ணும்; களையுண்டாகும்; நாசி தணல் போல் எரியும்; உடல் வெதும்பும்; வற்றும்; கடுக்கும்; முறுக்கும்; தலைவலிக்கும்; வாயு அதிகரித்து வயிறு நோவும்.

மருத்துவம்:– சத்திச் சாரணைக் கிழங்கு, சதாவேரிக் கிழங்கு சீந்திற் கொடி, ஆடாதோடை, தூதுவளை பிரம்மி, அமுக்கறா வகைக்கு 1 பலம் இடித்து, ஆறு படி தண்ணீரில்போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு மிளகு, இந்துப்பு, சுக்கு, திப்பிலி, கடுக்காய், நற்சீரகம், கற்கடகச்சிங்கி, ஏலம், கிராம்பு, வெள்ளுள்ளி, கடுகுரோகணி வகைக்கு 3 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

2. சத்திச் சாரணை, கரிசாலை, கீழ்க்காய், நெல்லி, தூதுவளை, சங்கு, பிரம்மி, பொடுதலை, கண்டங்கத்திரி, நன்னாரி இவ்வகளின் சாறு வகைக்கு ¼ படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலி, வசம்பு, மிளகு, பெருங்காயம், நற்சீரகம், திரிபலை, மல்லி, கொடுவேலி, கோரோசனை, வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டிவீதம் சாப்பிட்டுத் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

3. தூதுவளை, கண்டங்கத்திரி, முள்ளி, செந்தொட்டி, ஆடாதோடை வகைக்கு 25 பலம், மிளகு, திப்பிலி, கடுக்காய், அரத்தை வகைக்கு 1 பலம் இடித்து இருபது படி தண்ணீரில்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் நெய், பால் வகைக்கு 2 படி, திரிகடுகு, திரிபலை, தாளிசப்பத்திரி, கோட்டம், அக்கிராகாரம், வாய்விளங்கம், ஓமம், அரத்தை, பேரரத்தை, வால்மிளகு, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு மூன்று கழஞ்சு பசுவின் பாலாலரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒரு கரண்டியளவு உட்கொள்ளத் தீரும்.

மந்தார காசத்தின் இயல்பு.

முகம், காது ஊரும்; நாசி கரகரத்துத் தும்மலுண்டாகும்; நீர்வடியும்; நெஞ்சிறகபங்கட்டி இருமும்; இளைக்கும், நெஞ்சும் விலாவும் வலிக்கும்; மந்தார காலங்களில் நோய் அதிகப்படும்; பசிமந்தம் ஏற்படும்; வயிறு பொருமும்; உடல் அதைக்கும்; கிறுகிறுக்கும்.

Koviloor Digital Library

மருத்துவம்:- ஒரு படி பசுவின் நெய்யில் தூதுவளை, கண்டங்கத்திரி, சிறுவழுதலை, இம்பூரல், சத்திச்சாரணை, முசுமுசுக்கை, முக்காவேளை, காட்டாமணக்கு, சித்திரமூலம் இவைகளின் வேர், முசுமுசுக்கை இலை வகைக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவு கால், தலை, குடல் நீக்கிய ஈத்திண்ணி வெளவால் 5, திப்பிலி, தேசாவரம், ஓமம், சிற்றரத்தை, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், கடுகுரோகணி, வசம்பு, குரோசாணிஓமம், இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு வகைக்கு 10 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டு இளகம் செய்து தேன் கால் படி கூட விட்டுக் கிளறி நாழிகை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

2. பிரம்மி, தேள்கொடுக்கு, சாரடை, சங்கு, பேராமுட்டி, வேப்பம்பட்டை, நொச்சி, கரிப்பான், பொடுதலை, ஆடாதோடை, கண்டங்கத்திரி, சிற்றாவாரை, கீழ்க்காய்நெல்லி, தூதுவளம் இவைகளின் சாறு வகைக்குக் கால் படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய் கலந்து அதில் மாசிக்காய், திரிகடுகு, செவ்வியம், தாமரைக்கிழங்கு, தக்கோலம், திரிபலை, முத்தக்காசு, சித்திரமூலம், ஆனைத்திப்பிலி, விளாவரிசி, அதிவிடையம், சீரகம், காயம், கடுகுரோகணி, வெட்பாலையரிசி, சிறுதேக்கு வகைக்கு1 கழஞ்சு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு ஒரு கரண்டி வீதம்உட்கொள்ளத் தீரும்

3. ஆடாதோடை சமூலம் இடித்து வடிகட்டின தூள் 10 பலம், மல்லி, மிளகு, அரத்தை, சுக்கு, அதிமதுரம், தாளிசப்பத்திரி, இந்துப்பு, பேரரத்தை, கோட்டம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, அதிவிடையம், சிறுநாகப்பூ, வாலுளுவையரிசி, கிராம்பு, சிறுதேக்கு, ஏலம், குக்கில், இஞ்சி வகைக்கு 1 பலம், இவை எல்லாம் இடித்துத் தூள்செய்து அதற்கு நாலிலொன்று சர்க்கரைக் கூட்டித் திரிகடி அளவு நெய், தேனில் உட்கொள்ளத் தீரும்.

4. சீந்தில், தூதுளம், சாறு வகைக்கு 1 படி கலந்து அதில்திரி கடுகு 3 பலம், பசுவின் பாலில் அரைத்துப் போட்டு தேன், நெய் விட்டு இளகம் செய்து வேளையொன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத்தீரும்.

5. பசுவின் நெய், வெள்ளாட்டுப்பால், எருக்கம்பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கற்கண்டு 8 பலம் பொடித்து போட்டுப் பாகு செய்து தூதுளம், சிறுகாஞ்சோறி, முசுமுசுக்கை, கண்டங்கத்திரி, கரிசாலை, சங்கு, முள்ளங்கி, மணத்தக்காளி, ஆடுதின்னாப்பாளை, சிறுவழுதலை, நிலஆவரை, கடுக்காய், கோட்டம், திப்பிலி, கருஞ்சீரகம், மிளகு, வசம்பு, இந்துப்பு, சிற்றரத்தை, பேரரத்தை, வாலுளுவை, கூகைநீர், சீரகம், கற்கடகச்சிங்கி, சிறுநாகப்பூ, நெல்லிவற்றல் வகைக்குக் கால் பலம் வீதம் இடித்துத் தூள் செய்து தூவிக் கிளறி அரைப்படி கூட விட்டு இளகம் செய்து நாள் ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு, அளவு தாளக பற்பமும், பவழபற்பமும் அரிசி எடை வைத்துச் சாப்பிட்டு வரத்தீரும். பத்தியம் வெள்ளாட்டுப்பாலும், அன்னமும் புசித்துப் பசுவின்நெய்யாவது முக்கூட்டெண்ணெயாவது தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவர மந்தார காசம், சயம், கிரந்தி, குட்டம், மேகம் தீரும்.

Koviloor Digital Library

நச்சு பித்த காசத்தின் இயல்பு.

வளாபிறை தோறும் பித்தம் அதிகரித்து, நுரைத்துப் பொங்கி கபமுண்டாகி, நினைவுதெரியாமல் இருமல் உண்டாகும்; அலுப்புக் கண்டு பித்தம் வடிந்தபோது நிற்கும்; கிறுகிறுத்துவரும்; சுரங்காயும்; தொண்டை, நெஞ்சு புண்போல் நோகும்; உணவு செல்லாது.

மருத்துவம்:– தூதுளம், கண்டங்கத்திரி, இம்பூரல், காட்டாமணக்கு இவைகளின் வேர் வகைக்கு 10 பலம், கொடுவேலிவேர் 3 பலம், சத்திச்சாரணை, முக்காவேளை, சங்கங்குப்பி, சின்னி, அவுரி, நிலவாகை, திரிகடுகு, தேசாவரம், ஓமம், வாய்விளங்கம், மல்லி, நற்சீரகம், கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், வகைக்கு 5 வராகன் எடை அரத்தை 8 வராகன் எடை, கடுக்காய் நெல்லிவற்றல் வகைக்கு 1 பலம், பேய்ப்புடல் 2 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு தேனில் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

வில்வவேர் 30 பலம் இடித்து முக்குறுணி நீரில் போட்டு மூன்று படியாய் வற்றவைத்து அதில் குமட்டிச்சாறு, மாதுளம் பழச்சாறு வகைக்கு ¼ படி ஒன்றாய்க் கலந்து பனைவெல்லம் 30 பலம் கரைத்து வடிகட்டிப் பாகுசெய்து சுக்கு 3 பலம், மிளகு 4 பலம், திப்பிலி ஒன்றரை பலம், செவ்வியம், சித்திரமூலம், தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ வகைக்கு 1 பலம், திப்பிலிமூலம் 2 பலம், ஏலம், இலவங்கப்பத்திரி வகைக்குக் கால் பலம் இவைகளை வெதுப்பித் தூள்செய்து பாகில் தூவிக் கிண்டி பசுவின் நெய் கால் படி விட்டு இளகம் செய்து வேளை ஒன்றுக்குக் கொட்டைபாக்கு அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

இரத்தகாச நோயின் இயல்பு.

இருமல் காணும்; வாயில் ரத்தம் அடிக்கடி வரும்; உடல் வற்றும்; நா உலர்ந்து; வழுவழுக்கும்; அன்னம் உட்கொள்ளாது.

மருத்துவம்:– சங்கிலைச்சாறும், நல்லெண்ணெயும், ஓர் எடையாய் ஒன்றாய்க்கலந்து அதில் ஒரு பண எடை மஞ்சள் பொடி கலந்து வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் ஐந்து நாள்கள் சாப்பிடுக. பத்தியம் உப்பு, புளி தள்ளவும். பத்தாம் நாள் ஓமம் தேய்த்துத், தலைமுழுகின பதிமூன்றாம் நாள் முக்கூட்டு எண்ணெய் தேய்த்துத் தலைமுழுகி உப்பு, புளி கூட்டிக் கொள்ளவும்.

2. தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு, பசுவின் நெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அத்தி, அரசு, ஆல் இவைகளின்விதை நிலப்பனைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, சாதிப்பத்திரி, திருமஞ்சனத் திரவியம் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டிவீதம் காலை, மாலை கொடுக்க நோய் தீரும். (திருமஞ்சனத் திரவியங்கள்: பச்சிலை, கிச்சிலைக்கிழங்கு, கோரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சுவேர், கிளியூரம்பட்டை, அகில், சந்தனம், தேவதாரு, மருக்காழுந்து,

Koviloor Digital Library

ரோஜாமொக்கு, பூஞ்சாந்துப்பட்டை, கோட்டம், புனுகு, கத்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கப்புமஞ்சள், கரிமஞ்சள், கத்தூரிமஞ்சள், மகிழம்பூ, தாழம்பூ சண்பகப்பூ, சவ்வாது, மல்லி, சாதிக்காய், சாதிபத்திரி, சரளதேவதாரு, வில்வப்பூ).

3. துளசிச்சாறும் நல்லெண்ணெயும் ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் 3 நாள்கள் காலையில் சாப்பிட்டு 6 நாள்கள் பத்தியமாய் இருக்க நோய் தீரும்.

4. புரசம்பட்டை 32 பலம், இடித்து 10 படி தண்ணீரில் போட்டு அதை குடிநீர் வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் 10 நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

5. பெரும்பூசணிக்காய்சாறு, கற்றாழைவேர்ச்சாறு, இளநீர், பசுவின் பால், நெய் வகைக்கு 1 படி திரிகடுகு, கற்கடகசிங்கி, கடுக்காய், அரத்தை, அக்கிராகாரம், நற்சீரகம், ஏலம், தாளிசப்பத்திரி, கிராம்பு, மல்லி, நெல்லிவற்றல், வால்மிளகு, அதிமதுரம், சதகுப்பை வகைக்கு 2 வராகன் எடை, கண்டங்கத்திரி, தூதுவளை கருமுள்ளி, நுணா, ஆடாதோடை இவைகளின்வேர் வகைக்கு ¼ பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

6. ஆடாதோடை இலைச்சாறு, பசுவின் நெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் நிலவேம்பு, குடசப்பாலைப்பட்டை, முத்தக்காசு, அதிமதுரம், சந்தனம், இலுப்பைப்பூ, நன்னாரிவேர், விலாமிச்சம்வேர், தாமரைக்கிழங்கு, பெருங்குரும்பை வகைக்குக் கால் பலம் மேற்படி சாற்றால் ஆட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

உளைமாந்தையின் இயல்பு.

உடல்கனத்து உளைத்து, குத்திக் குடைந்து, கை, கால் எரிந்து, சுரம், தலைவலி, இருமல், ஆயாசம், மயக்கம் புலம்பலுண்டாகும். நினைவு தடுமாறும்; வாயால் வெண்ணுறை தள்ளும்; வாய் நீர்வடியும்; அன்னம் செல்லாது; உடல் மெலியும்.

மருத்துவம்:- பெரும்பூசணிக்காய், சிறுகீரை, பொன்னாங்காணி இவைகளின்சாறு, இளநீர், பசுவின் பால், நெய் வகைக்கு ஒரு படி, இஞ்சிச்சாறு கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகு, திரிபலை, இலவங்கம், அதிமதுரம், ஏலம், சந்தனம், பூலாங்கிழங்கு, செங்கழுநீர், கோட்டம், சிறுதேக்கு, மரமஞ்சள், சண்பகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் சர்க்கரை 2 பலம், தேன் அரைக்கால் படி கூடவிட்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர் நோய் தீரும்.

2. சிவன்வேம்பு, நிலக்குமிழ்வல்லி, கோட்டம், வேம்பாடம்பட்டை, கருஞ்சீரகம், அதிமதுரம், மிளகு, தூதுளம் வகைக்கு கால் பலம் அரைத்து 1

Koviloor Digital Library

படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்த வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உண்டு வர நோய் தீரும்.

சுரமாந்தை நோயின் இயல்பு.

அகோரமாய்ச் சுரம் காயும்; இருமல், ஆயாசம் ஏற்பட்டு சாதத்தைத் தள்ளும், சுவையின்மை காணும் தேகம் மெலியும்

மருத்துவம்:- இளநீர், பசுவின் நெய் வகைக்கு 2 படி, சிற்றாமல்லி, நன்னாரி, கீழ்க்காய்நெல்லி, பிச்சி, விலாமிச்சு, ஆடாதோடை, நிலவேம்பு இவைகளின் வேர், வெட்பாலை அரிசி, திப்பிலி, கடுகுரோகிணி, முந்திரிப்பழம், சந்தனம், மல்லி, வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றிற்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர உளமாந்தை, சுரமாந்தை, பித்தம், சுரம் தீரும்.

2. திப்பிலி 1 பலம், சீரகம், சுக்கு, ஏலம், திப்பிலிமூலம், சிறுதேக்கு, வாய்விளங்கம், கடுக்காய் மிளகு வகைக்கு ஒரு பலம் வெதுப்பித் தூள்செய்து தேன், சர்க்கரை கூட்டிப் பிசைந்து ஒரு வேளைக்கு ஒரு கொட்டைப்பாக்களவு சாப்பிட்டு வரத்தீரும்.

சுவாசத்தின் இயல்பு.

உடல் உலர்ந்து வரும்; சுரம், குளிர், இருமல், ஆயாசம், தலைவலி காணும்; வயிறு பொருமி வாந்தி பண்ணும்; மலம் கட்டி வியர்வை, தாகம் மிகும்; புறந்தாள் அதைக்கும்.

மருத்துவம்:- தாளகம், இலிங்கம், மனோசிலை, வெண்காரம், திரிகடுகு, நாவிக்கிழங்கு வகைக்கு 2 வராகன் எடை, இவைகளைத் தூய்மை செய்து இஞ்சிச் சாற்றால் 4 சாமம் அரைத்து சிறுசுண்டைக்காய் அளவு உருண்டை செய்து தாய்ப்பால், இஞ்சிச் சாறு, சிற்றரத்தைக் குடிநீரில் இட சுவாசகாசம், சயம், கபம், சுரந்தீரும்.

2. வாய்விளங்கம், சுக்கு, சிறுதேக்கு, சீரகம், மிளகு, வகைக்கு 4 பலம், திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், அரப்பொடி, கையாந்தகரை வகைக்கு 2 பலம், திரிபலை, தக்கோலம் வகைக்கு ஒரு பலம் இவைகளை வெதுப்பிப் பொடித்த தூளுடன் திப்பிலித் தூள் ஒரு படி, சர்க்கரை அரைப் படி கூட்டித் தேன் விட்டுப் பிசைந்து அரை மண்டலம் (24 நாள்கள்) தானியப்புடம் வைத்தெடுத்து ஒரு நாளைக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடத் தீரும்.

சுவாசகாசம், சயம், காசம், உளமாந்தை முதலான சிலேத்தும (ஐய) நோய்களுக்கு மருந்து.

முயலிறைச்சி, ஆடாதோடைவேர் வகைக்கு 12 பலம், கடம்பு, அசுவகெந்தி, சிறுவழுதலை, கோரைக்கிழங்கு, தூதுளம், சங்கு, நன்னாரி, கண்டங்கத்திரி, வட்டத்திருப்பி, சத்திச்சாரணை, பெருமரத்துப்பட்டை, கீழ்க்காய்நெல்லி, இம்பூரல், கச்சந்திராய், கையாந்த கரை இவைகளின்

Koviloor Digital Library

வேர் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்து 16 படி நீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின்நெய், 2 படி, பால் 4 படி கூடவிட்டு விழலரிசி, தேவதாரம், திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, கற்கடகசிங்கி, இந்துப்பு, சிறுதேக்கு, அதிமதுரம், முந்திரிகைப்பழம், கோட்டம், நிலவேம்பு, கிராம்பு, மஞ்சள், திப்பிலிமூலம், வாலுளுவையரிசி, கருஞ்சீரகம், ஏலம் சடாமாஞ்சில் கார்க்கோலரிசி, அதிவிடையம், அரத்தை, அகில், மரமஞ்சள், கடுகுரோகணி, இலவங்கம், செவ்வள்ளிக்கொடி, பெருமரத்துப்பட்டை, சீந்தில்சர்க்கரை, செஞ்சந்தனம், வகைக்கு 2 கழஞ்சு, இவைகளை வெந்நீரில் அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

2. பூவந்திப்பட்டை 100 பலம் இடித்துப் பதினாறு படி நீரில் போட்டு இரண்டு படியாய் வற்ற வைத்திறுத்துப் பசுவின் நெய் 1 படி கூட விட்டு கஸ்தூரிமஞ்சள், கடுக்காய் வகைக்கு 2 பலம், வன்னிவேர்ப்பட்டை 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து அதில் கருஞ்சீரகம் 1 பலம் பொடித்துப்போட்டு வைத்துக் கொண்டு காலை மாலை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நீங்கும்.

3. திப்பிலி 3 பலம், அரத்தை 2 பலம், மிளகு, வால்மிளகு, ஏலம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், திரிபலை, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சடாமாஞ்சில், மல்லி, தாளிசப்பத்திரி குரோசானி செவியம் சிறுகதக்கு கருஞ்சீரகம் நற்சீரகம், அழிஞ்சில், திப்பிலி, கூகைநீர், நறுக்கு மூலம் அமுக்கிராவேர் அக்கிராகாறும் வகைக்கு 1 பலம் எடுத்து ரவியில் உலர்த்தி தனித்தனியாய் இடித்து வடிகட்டின ஆரணத்துடன் தூதுளை கண்டார்கத்திரி இவைகளை சமமாய் இடித்து வடிகட்டினதூள் படிகால் நன்றாக கலந்து அதற்கு பாதி சீனி கலந்து திரிகடிப்பிரமாணம் தேளில் அந்தி சந்தி சாப்பிட்டு வர சிலேத்மம் 96–ம் தீரும்.

4. திப்பிலி 60 கழஞ்சு, சிற்றரத்தை 30 கழஞ்சு, கொத்த மல்லி 12 கழஞ்சு மிளகு, சுக்கு, செவ்வியம், திப்பிலிமூலம், மதுரம், நெல்லி, சீரகம், கருஞ்சீரகம், ஏலம், நறுக்குமூலம், சிறுதேக்கு, கூகைநீர், அமுக்கறா, குரோசானிஓமம், வால்மிளகு, தாளிசப்பத்திரி, கடுக்காய் வகைக்கு 5 கழஞ்சு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு 3 கழஞ்சு இவைகளை இடித்து வடிகட்டின தூளுடன் தூதுவளை, கண்டங்கத்திரி, இவைகளின் தூள் வகைக்குக் கால்படி கூட்டி ஒரு படி கொம்புத்தேனைக் காய்ச்சி அதில் தூவிக் கிண்டி பசுவின் நெய் கால் படி விட்டு இளகம் செய்து, ஒரு வேளைக்குக் கொட்டைப் பாக்களவு சாப்பிட்டுவரச் சிலேத்துமம் தொண்ணூற்றாறும் தீரும்.

சிலேத்தும (ஐய) நோய்களுக்குத் தைலம்.

அசுவகெந்திக் கிழங்கு, சிற்றாமுட்டி வேர், கொம்பரக்கு வகைக்கு 16 பலம் இடித்து பதக்கு (16 படி) நீரில் போட்டுநான்கில் ஒன்றாய்க் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 4 படி, பசுவின் தயிர்த்தண்ணீர் ஒரு பதக்கு

Koviloor Digital Library

ஒன்றாய்க் கலந்து அதில் சிற்றரத்தை, முந்திரிகைப்பழம், சிற்றாமுட்டி, நன்னாரி, முத்தக்காசு, அதிமதூரம், கோட்டம், மரமஞ்சள், சீரகம், சதகுப்பை, கடுகுரோகணி, மஞ்சிட்டி, தேவதாரம், பெருங்குரும்பை, சந்தனம், அரேணுகம், திப்பிலிமூலம், அசுவகெந்தி வகைக்கு 4 கழஞ்சு, அரைத்துப்போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு உடல், ஆதி அந்தமும், பூசி ஊறவைத்துத் தலைமுழுக்குச் செய்ய காசம், இருமல், சுவாசகாசம், மாறல்சுரம், பொருமல் நீங்கும். (முந்திரிகைப்பழம்=திராட்சைப்பழம்)

2. ஆடாதோடைச் சாறு 4 படி, தூதுவளை, கரிசாலை, கண்டங்கத்திரி, தேள்கொடுக்கு, சிறுசெருப்படை, குப்பைமேனி, சிறுவழுதலை, சங்கு இவைகளின்சாறு வகைக்கு 1 படி எள்எண்ணெய் 4 படி ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலி, இலவங்கம், அதிவிடையம், சிறுதேக்கு, இந்துப்பு, அதிமதூரம், திப்பிலி, மரமஞ்சள், தேவதாரம், மிளகு, சுக்கு, கோட்டம் வகைக்கு அரை பலம் வெள்ளாட்டுப்பாலில் அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து ஒர கரண்டி வீதம் சாப்பிட்டுத் தலைமுழுகிவர நோய் தீரும்.

கப நோய்கள் 96

வறட்சி, பீனிசம், நீர்ப்பாய்தல், கண்ணோய் காங்கைக்கத் தலை முழுக்கு நெய்.

குமரி, முசுமுசுக்கை, கற்பூரவல்லி நிம்பப்பழம் பொன்னாங்காணி, கீழ்க்காய்நெல்லி, புளியாரை இவைகளின் சாறு கார்எள் எண்ணெய் வகைக்கு 1 படி, இளநீர், பசுவின் பால் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து அதில் வில்வவேர், விலாமிச்சவேர், வெட்டிவேர், கிளியூரம்பட்டை, தேவதாரம், மரமஞ்சள், கஸ்தூரிமாஞ்சள், வாலுளுவையரிசி, சிறுதேக்கு, சடாமஞ்சில், ஏலம், சந்தனம், கிராம்பு, மஞ்சள், பச்சைப்பூலாக் கிழங்கு குங்குமப்பூ வகைக்கு 1 கழஞ்சி பசுவின் பாலில் ஆட்டிப் போட்டு மெழுகுபதத்தில் வடித்துத் தலை முழுகிவர நோய் தீரும்.

சிலேத்தும நோய்ப்படலம் முற்றும்.

பல் நோய்ப் படலம்

அதாவது பல்லில் நீர் தங்கி நோய் விளைவித்தலாம்.

பூட்டு நோய்கள் புகலும்பல் நோய்கள்
நீட்டும் சாத்திய நேரும சாத்தியம்
மாட்டு மேபல நூற்களு மாய்ந்து
கூட்டு மாவிய ளிக்குமமு தமிதே.

பல்நோய்க்கு மருத்துவம்:– அரப்பொடி 1 பலம், கடுக்காய், தான்றிக்காய், மாசிக்காய், சீனாக்காரம், கொடுக்காய்ப்புளி, துருசு, காசுக்கட்டி வகைக்கு 3 வராகன் எடை இவைகளைப் பொடித்து அரைவீசம்படி எலுமிச்சம்பழச்சாற்றில் போட்டுக் கிண்டி ரவியில் காயவைத்து அப்பால்

Koviloor Digital Library

மேற்படி சாற்றால் மயனமாய் அரைத்து உலர்த்திப் பொடித்துப் பல் விளக்கிவரச் சகல நோய்களும் தீரும்.

2. கொம்பரக்கு, சீனிக்காரம், துருசு, மாசிக்காய் வகைக்கு 1 வராகன் எடை கடுக்காய், தான்றிக்காய், அரப்பொடி வகைக்கு 2 வராகன் எடை இவைகளைப் பொடித்து ஐந்து எலுமிச்சம்பழச் சாற்றில் ரவியில் உலர்த்தி பொடித்துப் பல் விளக்கிவரச் சகல பல் நோய்களும் தீரும்.

3. ஒரு பலம் கறியுப்பை எருக்கம்பாலிலும் குப்பைமேனிச் சாற்றிலும் தனித்தனியே 2 நாள்கள் அரைத்து வில்லை தட்டிக்காய் வைத்து ஓட்டில் இட்டுச் சீலைமண் செய்து முழப்புடம் போட்டு எடுத்துத் தேங்காய் ஓடு சுட்ட கரி 1 பலம், அரப்பொடி, துருசு, துத்தம், காசுக்கட்டி, கருஞ்சீரகம், களிப்பாக்கு, கண்டங்கத்திரி விதை இவைகளை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை வெதுப்பிப் பொடித்து ஒன்றாய்க் கலந்து பல் விளக்கிக் கடுக்காய், சுக்கான்கல், முடக்கொத்தான், கருவேலம்பட்டை, நீர்ப்பூலா, காட்டாமணக்கிண்வேர் வகைக்கு 1 பலம் இடித்து 8 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து வாய் கொப்பளித்துவரச் சகல பல் நோய்களும் தீரும்.

4. பேய்க்குமட்டிக்காயைக் கீறி விதைநீக்கி அதில் கறியுப்பை செலுத்தி மூடி 3 சீலைமண் செய்து ஐந்து நாள்கள் வரை நிழலில் உலர்த்தி முழப்புடம் போட்டுக் கவசம் நீக்கிப் பொடித்துப் பல்லை விளக்கி மருக்காரை, மருது, வெள்வேல், எருக்கு, ஆவாரை இவைகளின் வேர்ப்பட்டை, சுக்கு, பிரப்பங்கிழங்கு வகைக்குப் பத்து பலம் இடித்து 16 படி தண்ணீரில் போட்டு 4 படியாய் வற்றவைத்து வாய் கொப்புளித்துவர சகல பல் நோயும் தீரும்.

5. பல் மிகவும் அசைந்து கடுப்புக்கண்டால் அந்தப்பல்லை பிடுங்கிப் போட்டு நாகல்பட்டைக் குடிநீரால் கொப்பளிக்க நோய் தீரும்.

6. பல் இடை அதிகமாய் வீங்கிப் புண்ணாகிக் கடுப்புக் கண்டால் வாயில் குங்கிலியப் புகை பிடித்து ஆல், அரசு, அத்தி, இவைகளின் பட்டை வகைக்கு 10 பலம் நசுக்கி 32 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்ற வைத்து அதில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சிக் கொப்பளித்துவர நோய் மாறி மற்ற பற்கள் இறுகும்.

7. அத்தி, அரசு, கிளுவை, நாவல், கருவேல், வெள்வேல், ஆல் எருக்கு, ஆவாரை இவைகளின் பட்டை வகைக்கு 5 பலம் தூள் செய்து 16 படி நீரில் போட்டு அரைப் படியாய்க் காய்ச்சி இறுத்து அதில் நல்லெண்ணெய் கால் படி விட்டு துத்தம், துருசு, காசுக்கட்டி, வெள்ளைக்குங்கிலியம், சேங்கொட்டை வகைக்கு ஒன்றரை வராகன் எடை இடித்துப் போட்டுக் காய்ச்சித் திரண்ட பதத்தில் ஒரு சாவலின் இரத்தம் விட்டு பதத்தில் எண்ணெயை வடித்து வாயில் கொஞ்சம் எண்ணெயை விட்டு ஒரு நாழிகை வைத்திருந்து கொப்பளித்துவர பல்வாயு, பல்குத்து, தந்தசூலை பல்விப்புருதி, நாவரணை, பல்லரணை, சிங்குவை முதலிய நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

8. மருக்காரை, வெள்வேல், கருங்காலி, கருவேல், வேம்பு, நாவல், வாகை, மா இவைகளின்பட்டை வகைக்கு ஐந்து பலம் இடித்து ஆறு மரக்கால் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பங்காய் வற்றவைத்து வடித்ததில் சாதிக்காய் 6 வராகன் எடை சாதிப்பத்திரி, ஏலம் வகைக்கு 10 வராகன் எடை, கருப்பூரம் 2 வராகன் எடை அரப்பொடி, காசுக்கட்டி, கடுக்காய்ப் பொடி வகைக்கு 5 பலம் பொடித்துப் போட்டுக் குழம்புபோல் காய்ச்சி இரவியில் உலர்த்தி பொடித்துச் சிமிழில் வைத்துக் கொண்டு பல் விளக்கிவரச் சகல பல் நோய்களும் தீரும்.

9. தேங்காய்நெய், பொடுதலைச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து நெல்லி, தான்றி, தேவாரம், வேலம்பட்டை வகைக்கு 3 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துச் சற்று நேரம் வாயில் வைத்திருந்து கொப்பளிக்கவும். பல் அசைவு, பல் அடியில்புண் இருந்தால் மேற்படி தைலத்தைத் தொட்டுத் தேய்க்க நோய் தீரும்.

10. பிராமரப்பட்டையைக் குழித்தைலம் இறக்கி அதில் சுக்கு, கடுக்காய், அரப்பொடி இவைகளைச் சமமாய்ப் பொடித்துப்போட்டு களிம்புபோல் அரைத்துச் சிமிழில் அடைத்துக் கொண்டு பல் துலக்கிவரச் சகல பல் நோய்களும் தீரும்.

11. புழுங்கள் அரிசியைக், கோவையிலைச்சாற்றில், 3 விசை பொதும்ப வைத்து உலர்த்தி நல்லெண்ணெயில் பிசைந்து வாயில் ஒதுக்கிக் கொள்ள பல் ஈறுதனில், சீழ், இரத்தம் காணுதல் நீங்கும்.

12. கருங்காலிப்பட்டை 10 பலம் இடித்து 16 மரக்கால், தண்ணீரில் போட்டுப் பதக்காய் வற்றவைத்த அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 16 படி விட்டுக் கோட்டம், நெல்லிமுள்ளி, அதிமதூரம், மிளகு, தக்கோலம், காவிக்கல், சாதிக்காய், சாதிப்பத்திரி, தாமரைக்கிழங்கு, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, அகில், ஏலம், செவ்வல்லிக்கொடி, அரத்தை, கற்பூரம், சிலாசத்து வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து அன்றாடம் பல்லில் தேய்த்து நான்கு நாட்களுக்கு ஒரு வேளை தலையில் தேய்த்துத் தலைமுழுகிவரச் சகல பல் நோய்களும் தீரும்.

13. சேங்கொட்டை 10 பலம், கறியுப்பு 5 பலம் ஒரு கலசத்தில் போட்டு மூடிச் சந்துவாய், மண்சீலை செய்து முழுப்புடம், போட்டு எடுத்து தூள்செய்து பல் விளக்கிவர பல் வாயு நோய் தீரும்.

14. கண்டங்கத்திரிப்பழத்தை உமிக்காந்தலில் சுட்டுப்பாகலிலைச்சாற்றால் ஆட்டி நல்லெண்ணெயில் போட்டுச் சூரியபுடம் வைத்துப் பல்லில் தடவிவரப் பல் பூச்சி சாவும்.

பல் நோய்ப்படலம் முற்றும்.

Koviloor Digital Library

செவி நோய்ப் படலம்

காதில் சீதளம் அதிகரித்து எந்நேரமும் நீர் தங்கி நோய் உண்டாவதாகும்.

கூறுமா யுண்மரை தன்னை யாய்ந்து
தேறுங் கன்னத் துறையுஞ் செவிநோயை
மீறா மல்விரைந் தோடிப் போவதற
கோறு மாமுனி குறித்த வாகடமே.

காதில் சீழ்மாறலுக்கு மருந்து (தொளை நெய்)

சத்திச்சாரணைக்கிழங்கு, கிளாவேர், நெல்லிவேர், கையாந்தகரை, செப்புநெருஞ்சில் இவைகளை ஓர் எடையாய்த் தட்டி வேப்பெண்ணெயில் எரித்துக் காதில் விட்டு அடைக்கத் தீரும்.

2. எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு அரைக்கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் பூநாகம், 20 பூண்டு, வசம்பு வகைக்கு 1 வராகன் எடை இடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் அடைக்கத் தீரும்.

3. பெருங்காயம், உள்ளி, வசம்பு இவைகளை ஓர் எடையாய் இடித்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி காதுகளில் விடத்தீரும்.

4. இஞ்சி, எருக்கு, கள்ளி, முருங்கை, துளசி, திருநீற்றுப்பச்சை, மிதிபாகல், கருவாழைக்கிழங்கு இவைகளின் சாறு வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் கால் படியும் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி காதில் விட காது நோய் தீரும்.

5. மனோசிலை, தாளகம், சேங்கொட்டை வகைக்கு ஒரு வராகன் எடை சிதைத்து 3 பலம் நல்லெண்ணெயில் போட்டு வெள்ளாட்டு நீர் ஒரு படி விட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து காதில் விட்டடைக்கப் புண் தீரும்.

6. வில்வப்பழச் சதையை நல்லெண்ணெயில் வேகவைத்து வடித்துக் காதில் விட்டு அடைக்க நீங்கும்.

7. வெள்ளுள்ளி, முருங்கை, வேர்ப்பட்டை, எருக்கம்பூ, கள்ளிப்பால், வகைக்கு ஒரு வராகன் எடை, ஒரு நண்டு இவைகளை சிதைத்து, கால் படி வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி காதில் விட்டடைக்கத் தீரும்.

காது இரைச்சலுக்கு மருந்து.

தைவேளைச்சாறும், நல்லெண்ணெயும் ஓரளவாய்க் காய்ச்சிக் காதிலடைக்கத் தீரும்.

காது எழுச்சிக்கு மருந்து.

சுக்கு, உள்ளி, வசம்பு, குன்றிப்பருப்பு, கோட்டம், இந்துப்பு, திப்பிலி இவைகளை ஓர் எடையாய் எருக்கம் பழுப்புச் சாற்றால் அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் அடைக்க நீங்கும்.

Koviloor Digital Library

காதிரைச்சல், வலிக்கு மருந்து.

முசுமுசுக்கையிலையையும், வெள்ளுள்ளியையும் சிதைத்துக் காதில் பிழியத் தீரும்.

2. காத்தொட்டிக் கொழுந்து, உள்ளி, வசம்பு இவைகளை ஓர் எடையாய் அரைத்து நல்லெண்ணெயில் போட்டு வேகவைத்து வடித்து காதில் விடத் தீரும்.

காதில் புழுவிழுதலுக்கு மருத்துவம்.

செம்பொன் நெரிஞ்சி, பேய்ப்பீர்க்கம்வேர், காயம், கருஞ்சீரகம், வசம்பு இவைகளை ஓர் எடையாய் வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் அடைத்தாலும், அல்லது ஆடுதின்னாப்பாளையைச் சிதைத்துக் காதில் பிழிந்தாலும், முறுக்கிலைச்சாறும் நல்லெண்ணெயும் ஓர் அளவாய்க் கலந்து காதிலடைத்தாலும் புழு செத்து விழும்.

காது மந்தத்திற்கு மருந்து.

கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு, நல்லெண்ணெய், வெள்ளுள்ளிச் சாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் முருங்கைவேர், வசம்பு வகைக்கு 4 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து இருபது நாள் காதில் விட்டடைக்க மாறும்.

2. கையாந்தகரை, நாயுருவி, சுக்கு, தூதுவளை, வேலிப்பருத்தி இவைகளின் இலையும், எருக்கம்பூவும் ஓர் அளவாய்த் தட்டி அரைத்து பத்து நாள் வரை காலையில் தலையில் அப்பி வைத்திருந்து மாலையில் தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

3. வெள்ளுள்ளி, தாளகம், முள்ளிக்கிழங்கு இவைகளை ஓர் எடையாய்த் தட்டி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் அடைத்துவரத் தீரும்.

4. குதிரை லத்திச் சாறும். இஞ்சிச் சாறும் ஓர் அளவாய்க் கலந்து காதில் விட்டடைத்துவரத் தீரும்.

5. ஒரு படி பசுவின் வெண்ணெயைச் சட்டியிலிட்டு உருகும் போது ஒருபடி சங்கிலையைப் போட்டுக் காய்ச்சி வெந்த பதத்தில் அரிந்து போட்டு 3 வராகன் எடை பெருங்காயத்தைப்பொடித்துப் போட்டு இறக்கி வைத்துக்கொண்டு 3 நாள் வரை காலையிலும் மாலையிலும் தலையில் தேய்த்து நான்காம் நாள் பாசிப்பயறு தேய்த்துத் தலைமுழுக்குச் செய்யவும். இவ்விதம், ஒரு மண்டலம் செய்யத் தீரும்.

6. சித்திரமூலம் 2 கழஞ்சு தாய்ப்பாலாலாட்டிக் கால் படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு மண்டலம் தலையில் பதமிட்டு நான்கு நாட்களுக்கு ஒரு முறை தலைமுழுக்குச் செய்துவர நீங்கும்

Koviloor Digital Library

7. பன்றி முள்ளைச் சிதைத்துப் புங்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் விட்டடைத்து காற்று படாமல் மூன்று நாள் வரையிருக்க நீங்கும்.

8. மிளகாய் 1 துலாம் (7 கிலோ), தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் எள்ளெண்ணெய் 1 படி கூடவிட்டு மிளகு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரக் காதடைப்பு, குத்து, மண்டைக்குத்து, மேல்வலி, சொறிசிரங்கு, படை, சூலை, மேக வாயு, சோகை, திமிர்வாதம் ஆகியவை நீங்கும்.

காது இரைச்சல், குத்தல், மந்தம், எழுச்சி முதலான காது நோய்களுக்கு மருந்து.

ஒரு படி நல்லெண்ணெயில் முருங்கைப்பூ, மஞ்சள், மலராத நாணற்பூ, மிளகு வகைக்கு 1 பலம், வலம்புரிக்காய் 1½ வராகன் எடை, அதிமதுரம், தக்கோலம், தேவதாரம், சடைக்கஞ்சம் வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைத்து ஒன்றை விட்டொரு நாள் தலைமுழுக்குச் செய்து வர நீங்கும்.

2. பசுவின் நெய் கால் படி, நல்லெண்ணெய் ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதில் இரசம், அபின், கெந்தகம், வெள்ளைப்பாடாணம் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுக்குச் செய்து ஒரு துளி காதில் விட்டடைத்து வர நீங்கும்.

3. கால் படி வேப்பெண்ணெயில் மஞ்சள் ஒரு பலம் பூண்டு, ஈருள்ளி வகைக்கு அரைப் பலம் சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் அடைத்து உச்சியில் தேய்த்துவர நீங்கும்.

4. ஒரு படி நல்லெண்ணெயில் நொச்சிப்பூ, கொடிவேலி வேர்ப்பட்டை, மிளகு, கற்றாழை வேர், வலம்புரிக்காய், வெள்ளிச்சப்பிசின், கடுகுரோகணி வகைக்கு 4 வராகன் எடை இவைகளைச் சாராயத்தால் ஆட்டிப் போட்டு முள்ளுக்குரோசானி 8 பிச்சிப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலடைத்துத் தலையில் தேய்த்து முழுகி வர நீங்கும்.

5. ஒரு படி நல்லெண்ணெயில் 1 பலம் நிலப்பனங்கிழங்கை அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர நீங்கும்.

6. இலைக்கள்ளி, புனல்முருங்கை இவைகளின்சாறு வகைக்கு அரை ஆழாக்கு பசுவின் வெண்ணெய் வகைக்கு கால்படி ஒன்றாய்க் கலந்து அதில் மரமஞ்சள், வெள்ளைப்பூண்டு, சுக்கு, வலம்புரிக்காய், கருஞ்சீரகம், நண்டிரைச்சி, நத்தை, முசுறுமுட்டை வகைக்கு 1 வராகன் எடை சிதைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கருங்கோழிமுட்டைத் தைலம் 1 வராகன் எடை கூட விட்டுக் கலந்துகொண்டு பன்னிரண்டு நாள் வரை காதில் விட்டுப் பஞ்சுகொண்டு மூடி வைக்க நோய் நீங்கும்.

Koviloor Digital Library

7. முசுறுமுட்டை, பூநாகம், நண்டிறைச்சி, வெள்ளுள்ளி, கோழிமுட்டைமஞ்சட்கரு, குக்கில் வசம்பு வகைக்கு 1 கழஞ்சு சிதைத்து அரைக்கால் படி வேப்பெண்ணையில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதில் விட்டடைக்க மாறும்.

காதில் ஈ புகுதலுக்கு மருத்துவம்.

முத்தெருக்கஞ் செவி இலையைக் கசக்கிக் காதில் பிழிந்தாலும் அல்லது கோழியவரை இலையையும், குப்பைமேனி இலையையும் கசக்கிக் காதில் பிழிந்தாலும் ஈ செத்து விழும்.

செவி நோய்ப் படலம் முற்றும்.

ஒழுக்கு நோய்ப் படலம்

பல்வேறு பெண்களுடன் உடலுறவு கொள்வதால் இந்நோய் தோன்றுவதாம்.

சொல்லு மொழுக்குநோய் சுக்கிலங் கெட்டுமே
புல்லும் மேகம்பு கலும்வி தாவிதம்
அல்லவே யாயுள் மறைதனை யாய்ந்த
வெல்லும் வயித்தியசா ரமிது வாமே.

ஒழுக்கு நோய் வருவதற்குக் காரணம்.

பல மாதரிடத்தும், வேசிகளோடும், பிணியாளரோடும் உடலுறவு கொள்வதாலும் ஓயாத சம்போகத்தாலும் மூலத்தில் அக்கினி கொண்டு, தாது கெட்டு, பிரமியங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, தூலை, அரையாப்பு, பவுத்திரம், பிரமேகம், நீர்ச்சுருக்கு, கல்லடைப்பு, நீரிழிவு முதலான மேகநோய்கள் தோன்றுகின்றன.

இரத்த ஒழுக்கு நோய் இயல்பு (இரத்தப் பிரமியம்)

நீர்த்தாரையில் கடுப்பும், குத்தலும் கண்டு இரத்தம் விழும்; உடல் வெம்மையாயிருக்கும்; கை கால் அயர்ந்து வரும்.

மருத்துவம்:– ஆவாரையரிசி 1 ஆழாக்கு, நற்சீரகம், சந்தனம், சர்க்கரை வகைக்கு 1 கழஞ்சு இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துக் கலக்கி மூன்று வேளை கொடுக்க நீங்கும்.

2. ஆவாரை வேர்ப்பட்டை, விஷ்ணுகாந்திச் சமூலமும் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் பாலில் கலக்கி சர்க்கரை கூட்டி மூன்று நாள் கொடுக்க நீங்கும்.

3. விஷ்ணு காந்தியாவது, அம்மான் பச்சரியாவது அல்லி விதையாவது ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து, பசுவின் பாலில் கலந்த 3 நாள்கள் உட்கொள்ள நோய் நீங்கும்.

Koviloor Digital Library

4. முருங்கைப்பூச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு ஆழாக்கு, வெல்லம் 2 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து 3 நாள் உட்கொள்ள நீங்கும்.

5. சிறுகீரைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு ஆழாக்கு, கற்சுண்ணாம்புத் தெளிவு ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து 8 நாள்கள் கொடுக்க நீங்கும்.

6. விடத்தலைக்கொழுந்தும், ஏலமும் அரைத்து எலுமிச்சங்காய் அளவெடுத்துத் தயிரில் கலக்கிக் கொடுக்க நீங்கும்.

7. சந்தனம், சண்பகப்பூ வகைக்கு 1 கழஞ்சு, காவிக்கல், பொன்மெழுகு வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளைத் தாய்ப்பால் விட்டரைத்துத் தூதுளங்காய் அளவு உருண்டைசெய்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் ஆழாக்கு தாய்ப்பாலில் எட்டு நாள் கொடுக்க நீங்கும்.

8. பிரப்பங்கிழங்கு, சங்கம்வேர்ப்பட்டை, வெள்ளறுகு, சிவன் வேம்பு, முற்றின வேப்பம் பட்டை வகைக்கு 10 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு 3 நாள்கள் உட்கொள்ளத் தீரும்.

9. முன்னையிலைச் சாறு ஒரு ஆழாக்கு, எலுமிச்சங்காய் அளவு வெல்லம் கலந்து 3 நாள் உட்கொள்ளத் தீரும்.

10. பருத்தி இலைச்சாறு ஒரு ஆழாக்கு, கல்நார், எலுமிச்சங்காய் அளவு அரைத்துப்போட்டு சர்க்கரை கலந்து 3 நாள்கள் கொடுக்கத் தீரும்.

11. நெருஞ்சில்வேரை எலுமிச்சங்காய் அளவு அரைத்து எருமை மோரில் 3 நாள்கள் கொடுக்கத் தீரும்.

12. முருங்கைவேர்ப்பட்டையை எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் பாலில் 3 நாள் கொடுக்கத் தீரும்.

13. ஓரிலைத்தாமரைச் சாற்றில் சர்க்கரை கலந்து ஒரு வேளைக்கு கால் படி வீதம் 3 நாள் உட்கொள்ளவும்.

14. முருங்கைப்பூ, கற்றாழம் சோறு, வெண்ணெய் இவைகளை ஓர் எடையாய் அரைத்து ஒரு வேளைக்கு ஒரு மாங்காய் அளவு காலை மாலை மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

15. ஒரு பிடி வல்லாரையைக் கால் படி பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி 3 நாள்கள் உட்கொள்ள நீங்கும். மேற்படி மருந்தை உபயோகிக்கும்போது உப்பு, புளி நீக்கவும்.

விந்து ஒழுக்கு நோயின் (சுக்கிலப் பிரமியம்) இயல்பு.

நீர்த்தாரையில் சுறுக்குச் சுறுக்கென்று குத்தி சுக்கிலம் விழும்.

மருத்துவம்:– கலைக்கொம்பும், சந்தனமும் வகைக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு மோர் விட்டு அரைத்துத் தேனில் குழைத்து உண்ண நோய் தீரும்.

Koviloor Digital Library

2. வில்வவேரும், நெல்பொரியும் வகைக்கு 10 பலம் இடித்து, 8 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

3. கோரைக்கிழங்கு, விஷ்ணுகாந்தி, மிளகு வகைக்கு 1 ½ பலம், 4 படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்ற வைத்து வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் 6 வேளை உட்கொள்ள நோய் தீரும்.

4. நெல்லிக்காய் 10, தேற்றாவிதை 20, நையத்தட்டி, செவ்விளநீரில் ஒரு நாள் ஊறப்போட்டு மறுநாள் காலையில் இறுத்து அதில் கலைக்கொம்பைக் கொட்டைப்பாக்கு அளவு மூன்று நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

5. ஈருள்ளிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய் சமமாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் 3 நாள் காலையில் உட்கொள்ள நோய் நீங்கும்.

6. ஓரிலைத்தாமரையும், நற்சீரகமும், சமமாய் அரைத்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

7. நற்சீரகம், ஏலம், சிறுபுள்ளடி இவைகளை ஓர் எடையாய் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்தசாறு கால் படி சர்க்கரை கலந்து 3 நாள்கள் சாப்பிட நோய் தீரும். உப்பு, புளி தள்ளவும்.

8. நெரிஞ்சில்வேரின் மேற்றோல் ஒரு பிடி, சுக்குத்தோ் 2 இடித்து அரைப்படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து அதில் ஒரு வராகன் எடை வெண்காரமும், கொஞ்சம் தேனும் கலந்து 6 வேளை சாப்பிட நோய் தீரும். 6 நாள் வரையில் உப்பு, புளி தள்ளவும்.

9. பசுவின் நெய் ஒரு பலம், வாழைப்பூச்சாறு வகைக்கு 1 படி, மேற்படி கிழங்குச்சாறு வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் நற்சீரகம், அமிர்தசர்க்கரை வகைக்கு முக்கால் பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு மெழுகு பதத்தில் வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் உண்ண நோய் தீரும்.

10. பருத்திக்கொட்டைப் பால் 1 படி, வெல்லம் 4 பலம், கோழிமுட்டை 10, நல்லெண்ணெய் 4 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி 3 நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

11. பசுவின் நெய் 1 படி, கீழ்க்காய்நெல்லிவேர் 5 பலம், விராலிமஞ்சள் 5 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் 8 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும். இவைகளுக்கு பத்தியம் முன் போல் உட்கொள்ளவும்.

சீழ் ஒழுக்கு நோயின் இயல்பு.

நீர் கடுத்து எரியும், உடல் மெலியும்.

Koviloor Digital Library

மருத்துவம்:- மிளகை ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து நல்லெண்ணெயில் மூன்று நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

2. அதிமதுரத்தை தூள்செய்து திரிகடி அளவு நீராகாரத்தில் பத்து நாட்கள் உட்கொள்ள நோய் தீரும்.

3. அத்திப்பிஞ்சை, தேங்காய்ப்பால் விட்டு இடித்துப் பிழிந்தசாறு அரைக்கால் படி, வெள்ளைக்குங்கிலியம் 1 வராகன் எடை இடித்துப் பொரித்துப் போட்டுத்தூவி ஒரு மாங்காய் அளவு காலையில் 3 நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

ஒழுக்கு (பிரமியம்) நோய்க்குப் பொது மருந்துகள்.

ஒரு பலம் சீனிக்காரத்தை, பசுவின் பாலில் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் இட்டு சீலைமண் செய்து காடைப்புடம் போட்டு வேளை ஒன்றுக்கு ஒரு வராகன் எடை வீதம் எலுமிச்சம் பழச்சாற்றில் 3 நாள்கள் கொடுக்க நோய் தீரும்.

பத்தியம்:- மோர் அன்னம் உட்கொள்ளவும்.

2. சித்திரப்பாலாடையை எலுமிச்சங்காய் அளவு அரைத்து பசுவின் பாலில் கலக்கி மூன்று நாள்கள் கொடுக்க ஒழுக்கல் நோய் தீரும்.

3. வெள்ளாட்டுப்பால், ஒரு எலுமிச்சம்பழச்சாறு, மாம்பட்டைச்சாறு இவைகளை ஓர் எடையாய்க் கலந்து மூன்று நாள்கள் கொடுக்க நோய் தீரும் ஒரு துட்டை வெந்தயத்தை இரவில் ஊறவைத்து காலையில் அரைத்து மோலில் கலக்கி மூன்றுநாள் கொடுக்கதீரும். நீர்ப்பூலாள் கொழுந்தை எலுமிச்சல்காய் அளவு அரைத்து பசுவிண்பாலில் 3 நாள் கொடுக்க தீரும்.

4. அத்திப்பிஞ்சை தேங்காய்ப்பால் விட்டு இடித்துப் பிழிந்து வெள்ளைக்குங்கிலியம் 1 வராகன் எடை இடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி அளவு மூன்று நாள் கொடுக்க நோய் தீரும்.

5. ஒரு பிடி கற்றாழைவேர், இளநீரில் அரைத்துக் கலக்கி சர்க்கரை கலந்து மூன்று நாள் கொடுக்க நோய் தீரும்.

6. துளசியைப்பிட்டவித்து அரைக்கால் படி சாறு பிழிந்து அதில் ஒரு எலுமிச்சங்காய் அளவு வெண்ணெய் சேர்த்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

7. எலுமிச்சம் பழச்சாறு, ஈருள்ளிச்சாறு, பனங்கருப்புக் கட்டி இவைகளை ஓர் எடையாய்க் கலந்து இரவில் பனியில்வைத்து காலையில் 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

8. பற்படாகத்தை அரைத்து, எலுமிச்சங்காய் அளவு பசுவின் பாலில் கலந்து சர்க்கரை கலந்து 3 நாள் உட்கொள்ள நோய் தீரும்.

9. சுடுதுரத்திஇலைச்சாறும், நல்லெண்ணெயும் சமனாய்க் கலந்து வேளைக்கு ஒரு ஆழாக்கு வீதம் 3 நாள்கள் சாப்பிட்டு 6 நாள்கள் உப்பில்லாப் பத்தியமிருக்கத் தீரும்.

Koviloor Digital Library

10. சிவந்த கொட்டாங்கரந்தை, ஈருள்ளி வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்துச் சாறுபிழிந்து ஒரு ஆழாக்கு நல்லெண்ணெய் கலந்து இந்தப்படி 3 நாள் உட்கொள்ளத் தீரும்.

11. வெள்ளைக் குங்கிலியம் 1 பலம், காசுக்கட்டி, மேல்தோல் நீக்கின உள்ளி, வசம்பு வகைக்கு கால் பலம் இவைகளை சிதைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுச் சூரிய புடம் வைத்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் 20 நாள்கள் உட்கொள்ள நாட்சென்ற ஒழுக்கு நீங்கும்.

பத்தியம்:– பசுவின் பால், நெய், தயிர் கூட்டவும்.

12. வெள்ளைக் குங்கிலியம், சர்க்கரை, பரங்கிப்பட்டை, வகைக்கு 5 பலம் பொடித்துச் சலித்து நல்லெண்ணெயிலாவது இரசாயனம் செய்து காலை மாலை கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

13. சுண்ணாம்புத் தெளிவு தண்ணீர், நல்லெண்ணெய் வகைக்கு ஒரு படி வீதம் ஒன்றாய்க் கலந்து உட்கொள்ளத் தீரும்.

14. பொன்னாங்காணி, சிறுகீரை இவைகளின் மூலம் வகைக்கு ஒரு பிடி சிதைத்து அரைப்படி பசுவின் பாலில் போட்டு அத்துடன் அரைப்படி தண்ணீர் கலந்து, தண்ணீர் வற்றக் காய்ச்சி வடித்து ஒரு எலுமிச்சங்காய் அளவு வெண்ணெயும் திரிகடி அளவு சர்க்கரையும் கலந்து சாப்பிடவும், இப்படி 3 நாள், 6 வேளை சாப்பிட நீங்கும்; இவற்றிற்கும் முன்போல் பத்தியம் கொள்ளவும்.

நீர் கடுத்து துளித் துளியாய் விழுந்து இரத்தம் காணுவதற்கு மருந்து.

பொன்னாங்காணி, சீராசெங்கழுநீர், நிலவேம்பு, சிறுகீரை, ஓரிலைத்தாமரை, கீழ்க்காய்நெல்லி, மணத்தக்காளி, சிற்றாமல்லி வகைக்கு 1 பலம், இடித்து 5 படித் தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் நெய் 1 படி கூடவிட்டு சாத்திரபேதி, கிளியூரம்பட்டை, சடாமாஞ்சில், சதகுப்பை, பச்சை ஏலம், சாதிக்காய், கிராம்பு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சந்தனம், வசுவாசி வகைக்கு 2 கழஞ்சு பசுவின் பாலில் ஆட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

2. சிற்றாமல்லி, பேராமல்லி, நிலக்குமிழ், முல்லை, நன்னாரி, விலாமிச்சம்வேர், வெட்டிவேர் முத்தக்காசு, தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளின் சாறு வகைக்கு 1 படி, பசுவின் பால், நெய், இளநீர், தயிர்த்தண்ணீர் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனம், கோட்டம், இலவங்கம், அதிமதுரம், சீரகம், நெல்லிவற்றல் வகைக்குக் கால் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து சர்க்கரை கலந்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

3. பசுவின் பாலிலும், நெய்யிலும், கருப்பஞ்சாற்றிலும், கற்றாழஞ்சாற்றிலும் தனித் தனியே தூய்மைசெய்த கெந்தகம் 4 பலம்

Koviloor Digital Library

பரங்கிப்பட்டை 4 பலம், சந்தில் சர்க்கரை 2 பலம், இவைகளை சூரணித்து அதற்குப்பாதி கருப்பட்டிகலந்து வேளை யொன்றிற்கு திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ள சகல பிரமேகமும் நீங்கும்.

பத்தியம்:– கைப்பு, புளிப்பு தள்ளி, பசுவின் பால், தயிர், நெய் கூட்டிக் கொள்ளவும்.

சீழ் ஒழுக்கு, இரத்த ஒழுக்கு, நீர்க் கட்டு, கடுப்பு முத்திரக் கிரிச்சரத்துக்கு மருந்து.

பேராமுட்டி, நெரிஞ்சி, செப்புநெஞ்சி, தண்ணீர் விட்டான், பொன்னாங்காணி, அமிர்தவல்லி, இருவேலி இவைகளின் வேர், கருவாழைப்பூ வகைக்கு 1 பலம் இவைகளின் இடித்துப் பதக்குத்தண்ணீரில் போட்டு 2 படியாய் வற்றவைத்துப் பிசைந்து பிழிந்து வடிகட்டி அதில் பசுவின் நெய், பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதிமதுரம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ, கோட்டம், கல்நார், கற்பூரசிலாசத்து, சாதிக்காய், கிராம்பு, சாத்திரபேதி, சீரகம், நெல்லிமுள்ளி, கடுக்காய் வகைக்கு 1 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து பச்சைக்கற்பூரம் 1 வராகன் எடை, பொரித்த வெண்காரம் 5 வராகன் எடை நசுக்கிப் போட்டு வைத்துக்கொண்டு காலை, மாலை 2 கழஞ்சு வீதம் சாப்பிட்டு வர நீங்கும்.

தேங்காய்ப்பால், பொடுதலைச்சாறு, பிரமி வகைக்கு 1 படி ஒன்றாய்க் காய்ச்சி வடித்து 3 நாள்கள் 6 வேளை சாப்பிடத் தீரும்.

இரத்த ஒழுக்கு, கல்லடைப்புக்கு மருந்து.

ஆழாக்கு எலுமிச்சம்பழச் சாற்றில் ஐந்துசோகி சுட்டசாம்பலையும் 1 கழஞ்சு பொரித்த வெண்காரத்தையும், ஒரு பாக்கு அளவு பசுவின் வெண்ணெயும் கலந்து இவ்விதம் 5 வேளை சாப்பிட நீங்கும்.

இரத்த ஒழுக்கு, சீழ் ஒழுக்கு, விந்து ஒழுக்கு முத்திரக் கிரிச்சரம், நீர்க் கட்டுக்கு மருந்து.

பறங்கிப்பட்டை, கெந்தகம், சாதிக்காய், கிராம்பு, சிறுநாவப்பூ, சாதிப்பத்திரி, பச்சைக்கற்பூரம், அசுவகெந்தி, கொடிவேலி, சடாமாஞ்சில் இவைகளை ஓர் எடையாய்த் தூள்செய்து இதற்குச் சமமாய்ச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ளத் தீரும்.

ஒழுக்கு நோய், பெரும்பாடு, சூலைகளுக்கு மருந்து.

1. பசுவின் நெய் 1 படி, பறங்கிப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, சீரகம், வெல்லம் வகைக்குக் கால் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீரும் சாப்பிட்டு வர நீங்கும்.

2. கருவங்கம் 10 வராகன் எடை, ரசம் 5 வராகன் எடை ஒன்றாய்த் தொந்தித்து காந்தம், சாதிலிங்கம், சீனம் வகைக்கு 2 வராகன் எடை எருமைமோர் விட்டு அரைத்து குன்றிபோல் உருண்டை செய்து வேளைக்கு ஒரு உருண்டை வீதம் மேற்படி மோரில் கொடுக்கவும்.

Koviloor Digital Library

குருதி ஒழுக்கு, சீழ் ஒழுக்கு, உட்டிணத்திற்கு மருந்து.

மஞ்சள், வெல்லம் வகைக்கு 6 பலம், மிளகு, சுக்கு, ஏலம் வகைக்கு 2 பலம், வெண்காரம், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை இவைகள் ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் நீராகாரத்தில் விட்டு சாப்பிட்டு வர நோய் தீரும்.

2. தேற்றான் விதையும், ஊறுவைத்தரைத்த சந்தனமும், பசுவின் வெண்ணெயும் ஒரு கொட்டைப் பாக்களவு ஒன்றாய்க் கலந்து ஆறு வேளை உட்கொள்ள நோய் தீரும்.

இரத்த ஒழுக்கு, உடம்பெரிவு, நல்லெரிப்பனுக்கு மருந்து.

திருநாமப்பாலைச் சமூலம் ஒரு சிரங்கும், பாசிப்பயறும் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டுக் காய்ச்சி உழக்காய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் நெய், ஈருள்ளிச்சாறு வகைக்கு ஒரு படி ஆழாக்கு, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், சண்பகப்பூ, கலைக்கொம்பு, விலாமிச்சம்வேர், சந்தனம், பூமி சர்க்கரை வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுப் பதத்தில் வடித்து சர்க்கரை கலந்து நாள் ஒன்றுக்கு 1 கழஞ்சு வீதம் சாப்பிடுவர நோய் தீரும்.

ஒழுக்கு, எலும்புருக்கி, காமாலை, மூத்திரக் கிரிச்சரம் முதலான உட்டிண நோய்களுக்கு மருந்து.

இளநீர், பொன்னாங்காணிச்சாறு, பசுவின் பால், பெரும்பூசணிக்காய் சாறு, வாழைக்கிழங்குச்சாறு வகைக்கு 4 படி, சிற்றாமுட்டிவேர் 10 பலம், குடித்துப் பத்துப்படி தண்ணீரிற் போட்டு வற்றவைத்த கஷாயம் படிக– ஆவின் நெய் 2 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், அதிமதுரம், இந்துப்பு, முந்திகைப்பழம் (திராட்சை) வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

மூத்திரப்பாலை, கிரிச்சனம் நீர்ச்சுருக்கு, எரிவு, இரத்த ஒழுக்கு முதலியவற்றிற்கு மருந்து.

அமுக்கரா இலையும், தண்டும் இடித்துப் பிழிந்தசாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி, பசுவின் நெய் 2 படி ஒன்றாய்க் கலந்து அருகம்வேர், தேற்றான்விதை, செங்கழுநீர்க்கிழங்கு வகைக்கு 4 பலம் அதிமதுரம், பூமிசர்க்கரைக் கிழங்கு வகைக்கு 4 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தேன், அரைப்படி சர்க்கரை, கலந்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

2. முத்திரிகை, பேரீச்சு, நெல்லி, அதிமதுரம், ஏலம், கல்நார், திப்பிலி, சிறுபீளைவேர்ப்பட்டை, சந்தனம், மல்லி, வெள்ளிவித்து இவைகளை ஓர் அளவாய்த் தூள்செய்து திரிகடி அளவு பச்சரிசிக் கழுநீரில் உட்கொள்ளவும்.

Koviloor Digital Library

இரத்தம்போல் நீர் இறங்குவதற்கு மருந்து.

எருமைப்பால் 2 படி, பொன்னாங்காணிவேர் ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி, புரைகுத்திக் கடைந்து, வெண்ணெய் எடுத்ததை 3 நாட்கள் சாப்பிட்டு, மோரை தாக சாந்தி பண்ண நோய் தீரும்.

2. மாம்பட்டை, அத்திப்பட்டை, ஆவாரைவேர்ப்பட்டை, இவைகளை ஓர் எடையாய் இடித்து தண்ணீரில் ஊற வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு அரைக்கால் படி வீதம் அதில் கொஞ்சம் பசுவின் நெய் கலந்து 3 நாட்கள் சாப்பிட நோய் தீரும்.

நீர்க்கடுப்பு எரிவுக்கு மருந்து.

ஓர் ஆழாக்கு ஈருள்ளிச்சாற்றில் வெண்காரம் 1 வராகன் எடை பொரித்துப் போட்டு 3 நாள்கள், ஆறு வேளை சாப்பிட நோய் தீரும்.

2. இளநீரைக் கண் திறந்து அதில் சீரகம், சீனி, பாசிப்பயறு வகைக்கு 1 வராகன் எடை போட்டு ஓர் இரவு வைத்து காலையில் மருந்தை எடுத்து அரைத்து இளநீரில் கரைத்துச் சாப்பிடவும் இதன்படி 3 நாள்கள் ஆறு வேளை சாப்பிட நோய் தீரும்.

3. கீழ்க்காய்நெல்லிஇலை ஒரு பிடி, சீரகம் 1 வராகன் எடை, அரைத்து எருமைத் தயிரில் கலக்கி 3 நாள் கொடுக்க நோய் தீரும்.

4. கடுக்காய், சுக்கு, சீரகம் 1 வராகன் எடை, ஈருள்ளி பூண்டு வகைக்கு 1 வராகன் எடை, கீழ்க்காய்நெல்லிச் சமூலம் 1 பிடி இவைகளைக் குடிநீர்செய்து உண்ணவும்.

5. அரைக்கால் படி வெந்நீரில் சந்தனம், பசுவின் வெண்ணெய் வகைக்கு ஒரு கொட்டைபாக்கு அளவு போட்டு சாப்பிட நோய் தீரும். சுடுநீரில் எலுமிச்சம்பழம் பிழிந்து கற்கண்டு கலந்து சாப்பிட நோய் தீரும்.

6. எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெயில் கலந்து சாப்பிட நோய் தீரும்.

7. முத்தக்காசு, ஆவாரை, புளியங்கொட்டை, மேற்றோல் சீவின சுக்கு இவைகள் வகைக்கு 1 பலம் பொடித்து ஒரு படி இளநீரில் ஓர் இரவு ஊறவைத்து மூன்று நாள்கள் காலையில் சாப்பிட நோய் தீரும்.

8. மூன்று வராகன் எடை நீர்முள்ளிவிதையைப் பசுவின் நெய் விட்டு வெதுப்பிப் பொடித்து அரைக்கால் படி தேங்காய்ப்பாலில் கலந்து மூன்று நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

9. ஒரு சிரங்கை பசுவின் பாலில் ஒரு கொடைப் பாக்கு அளவு புத்தான் சோற்றை அரைத்துக் கலக்கிச் சாப்பிட நீர்க் கடுப்பு, ஒழுக்கு நோய் தீரும்.

Koviloor Digital Library

10. எலுமிச்சங்காய் அளவு கட்டுக் கொடியிலையை அரைத்து நான்கு படி தண்ணீரில் கலக்கி அதில் சீரகம், ஏலம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப்போட்டு ஒரு பண எடை சர்க்கரை கலந்து உட்கொள்ளத் தீரும்.

நீர்த்தாரையெரிவு, கடுப்பு, சதை வளர்ச்சிக்கு மருந்து.

ஆலம் விழுது 2 பிடி, பருத்திவேர்த்தோல், அசுவகெந்திக் கிழங்கு, ஆவாரைவேர்ப்பட்டை, முற்றின வெள்வேலம்பட்டை, வகைக்கு ஒரு பிடி, பருத்திப்பிஞ்சு, பருத்திவிதைப் பருப்பு வகைக்கு ஒரு சிரங்கை, ஏலம், அதிமதுரம், வகைக்கு 10 வராகன் எடை, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், கிராம்பு, சாதிப்பத்திரி, சாதிக்காய் வகைக்கு 5 வராகன் எடை, திப்பிலி, 4 வராகன் எடை, பொரிகாரம், சாதிலிங்கம், வகைக்கு 2 வராகன் எடை, முந்திரிகைப் பழம் (திராட்சை), தேன்மெழுகு வகைக்கு ½ பலம், பேரீச்சம்பழம் 8 வராகன் எடை, நெருஞ்சிக்காய் ஒரு எலுமிச்சங்காய் அளவு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்து, ஒரு படி பசுவின் பாலில் கரைத்து அதில் நெல்லிக்காய்ச்சாறு கால்படி, பசுவின் நெய் மூன்று படி கூட விட்டுக் காய்ச்சிக் கிருதஞ் செய்து நாள் ஒன்றுககு அரை கரண்டி வீதம் உண்ணவும்.

கல்லடைப்புக்கு மருந்து.

சங்கிலை, ஈருள்ளி, பச்சை நெல் இவைகளைச் சம எடையாய் இடித்துச் சாறு பிழிந்து நாள் ஒன்றுக்கு கால் படி வீதம் கொடுக்க உடனே கல்தெறித்து நீர் இறங்கும்.

2. ஒரு பலம் வெடியுப்பை சட்டியில் உருக்கி ஒரு படி தண்ணீர் விட்டு அரைப் படியாய் வற்றவைத்திருத்து அதில்கோவைத் தண்டை இடித்துப் போட்டு நாள் ஒன்றுக்குக் கால் படியாக இரண்டு நேரம் உட்கொள்ள கல் தெறித்து நீர் இறங்கும்.

3. நெருஞ்சி வேர், சிறுபீளை வேர், சிறுகீரை வேர், சீரகம் வகைக்கு ஒரு பலம் சிதைத்துப் போட்டுக் குடிநீர்செய்து உட்கொள்ளத் தீரும்.

4. கோவைத் தண்டை இடித்துப் பிழிந்தசாறு கால்படி, பொரித்த சீனாக்காரம், சுண்ணாம்பு வகைக்கு 1 வராகன் எடை, பொடித்துப் போட்டுக்கொடுக்க, கல் தெரித்து நீர் இறங்கும்.

நெருஞ்சி, சிறுபூளை, மாவிலிங்கு பேராமுட்டி இவைகளின் சமூலம் வகைக்குப் பலம் 10 இடித்துப் 10 படி நீரிற்போட்டு ஒரு படியாக வற்றவைத்து வேளை ஒன்றிற்கு காற்படி வீதம் கொடுக்க தீரும்.

முள்ளிலவு, நாவல், பூலா, வெட்பூலா, முத்தக்காசு, நன்னாரி, முல்லை, சீந்தில், செந்தாமரை, சிற்றாமுட்டி, சீராசெங்கழுநீர், சிறுகீரை, விராலி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பொன்னாங்காணி வகைக்கு 1 பலம், நான்கு படி இளநீரில் போட்டு அரைப்படி குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

சதை அடைப்புக்கு மருந்து.

முற்றின கோழியின் கல்லீரலில் இருக்கிற சிறுகல்லும், வெள்ளரி விதையும், பூநாகமும், வெல்லமும் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு அரைத்துப் பசுவின்பாலில் 9 நாள் கொடுக்கத் தீரும்.

நாயுருவி, சிறுநெருஞ்சி, வாழைச்சருகு, ஈருள்ளி, சிறுபீளை இவைகளின் சாறு வகைக்கு அரைக்கால்படி தண்ணீரில் கலக்கி தெளிய இறுத்து அதில் பொரிகாரம், அதிமதுரம் வகைக்கு அரை வராகன் எடை பொடித்துப் போட்டு ஒரு நாளைக்குக் கால்படி வீதம் 3 வேளை கொடுக்க நீர் அடைப்பு, சதை அடைப்பு தீரும்.

பசுவின்நெய் 1 படி, மூக்குவெட்டித் தூய்மை செய்த சேங்கொட்டை 15 நறுக்கிப்போட்டுக் காய்ச்சி கறுப்பாய் வருகிற பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு பண எடை வீதம் 15 நாள்கள் கொடுக்கத் தீரும்.

நீர் அடைப்புக்கு மருந்து.

கற்றழஞ் சோற்றில் கடுக்காயைப் பொடித்துப்போட்டு சிறுதுநேரம் வைத்திருந்து பிழிந்து வடிகட்டின தண்ணீர் நான்கு படி, பொரித்த வெண்காரம் 1 வராகன் எடை, பனைவெல்லம் கால் பலம் சிதைத்துப்போட்டுக் கொடுக்க மாசுற்ற சிறுநீர் இறங்கும்.

2. பசலி, நீலக்கத்திரி இலை, வகைக்கு 10 பலம் இடித்துக் குடிநீர் செய்து கால்படி வீதம் உட்கொள்ளத் தீரும்.

3. குருஞ்சாவிலை, கல்லத்திப்பட்டை, கடுகுரோகணி, திரிகடுகு, நாயுருவி, கொழுஞ்சிவேர் வகைக்கு 1 பலம் இடித்து ஒருபடி தண்ணீரில்போட்டு கால் படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும். இவ்விதம் மூன்று வேளைக்கு கொடுக்கத் தீரும்.

4. ஆதண்டயிலையைப் பசுவின்மோர் விட்டு அரைத்து ஊற வைத்துப் பிழிந்து கொடுக்கத் தீரும்.

5. சுறாமீன் தலையில் இருக்கிற இரண்டு கல்லை எடுத்து உலர்த்தி இளவெந்நீரில் ஊறவைத்துக் கொடுக்க உடனே நீர் இறங்கும்.

6. கோவைத் தண்டுசாறு, தேங்காய்ப் பால்வகைக்கு அரைக்கால்படி ஒன்றாய்க் கலந்து நற்சீரகம் 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

7. அண்டத்தோல், வெள்ளரிவித்து, எலிப்புழுக்கை, வெண்காரம் இவைகளைச் சற்று வறுத்துப் பொடித்துக் கால் படி சுரை இலைச் சாற்றில் கலந்து கொடுக்கத் தீரும்.

8. நீராகாரத்தில் பழைய கூரை வைக்கோலை ஊறவைத்துப் பிசைந்து இறுத்துக் கால்படி சாப்பிட நீரடைப்பு, சதையடைப்புத் தீரும்.

Koviloor Digital Library

9. வெண்காரம், கற்பூர சிலாத்து வகைக்கு 1 பலம் எலுமிச்சபழச் சாற்றில் ஆட்டி வில்லைதட்டி சுண்ணாம்புக் குகையில் வைத்துச் சிறுபுடம் போட்டு ஒரு வராகன் எடை வீதம் தேனில் கொடுக்க நீர் அடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, வெட்டை, நீர்ச்சுருக்கு, கடுப்புமேகம் முதலானவை தீரும்.

வெடியுப்பு, பொரிகாரம், அண்டத்தோல், சோகி, கருப்பூர சிலாசத்து, சீனிக்காரம் வகைக்கு 1 பலம் எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோல் ஆட்டி வில்லைதட்டிக் காயவைத்துக் கற்சுண்ணக் குகையில் வைத்துச் சில்லி போட்டு மூடி, வாலி புடம் போட்டு ஒரு வராகன் எடை பற்பத்தை மேற்படிக் குடிநீரிலாவது, இளநீரிலாவது, ஈருள்ளிச் சாற்றிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது, தேனிலாவது உட்கொள்ள நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர் கடுப்பு முதலானவை தீரும்.

நீர்ச்சுருக்கின் இயல்பு (கிருச்சரம்)

நீர்த்தாரைப் புண்ணாகி, நொந்து, வீங்கிக் கடுத்து எரியும்; நீர் வருவது போலிருக்கும்; இறங்காது; இறங்கினால் ஒவ்வொரு துளியாய் விழும்; அப்பொழுது சகிக்கமுடியாத வேதனையும், மயக்கமும் காணும்; ஒரு வேளை நீர் மஞ்சள்போலும், இரத்தம் போலும், சுக்கிலம் போலும் இறங்கும்; தொப்புடை கனத்து நோகும். வயிறு பொருமும் அபானங் கடுக்கும். உணவு செல்லாது; உடல்மெலியும்.

மருத்துவம்:– நெருஞ்சிவேர் 12 பலம் இடித்துப் பதக்குத் தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து இறுத்து அதில் முந்திகைப்பழம் பேரீச்சம்பழம், பொரித்த வெண்காரம், சீந்தில்சர்க்கரை, கோட்டம், இலவங்கம், அதிமதுரம், ஏலம், செங்கழுநீர்க் கிழங்கு, ஆடாதோடை வேர், கற்பூரவல்லி, தேற்றான்விதை, கூகைநீர் வகைக்கு 4 கழஞ்சு, பச்சைக்கற்பூரம் 1 கழஞ்சு அரைத்துப்போட்டுப் பசுவின் பால், நெய் வகைக்கு 2 பலம் போட்டு ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிடத் தீரும்.

2. இளநீர் 6 படி, சீந்தில், நெருஞ்சி, ஓரிலைத்தா!ா ரை, பெரும்பூசணிக்காய், வாழைக்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு இவைகளின் சாறு, பசுவின் பால், வகைக்கு 4 படி, கரிப்பான், பொன்னாங்காணி, நீர்முள்ளி இவைகளின் சாறு; பசுவின் நெய் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து அதில் கருப்பூரசிலாசத்து, கல்நார், கல்மதம், சிறுபீளைவேர், அத்தித்திப்பிலி பொன்னாங்காணி வேர் செந்நாயிருவிவேர், கூகை நீர் நீர்முள்ளிவிதை, சிறுகீரை வேர், ஏலம், எள்ளு, பொன்னூமத்தின் விதை, தேற்றான்விதை வகைக்கு 3 வராகன் எடை தாய்ப்பாலால் ஆட்டிப்போட்டுச் சர்க்கரை 1 பலம், தேன் முக்கால் படி விட்டுப் பதமாய்க் கிண்டி வைத்துக் கொண்டு ஒரு நாளைக்கு 3 கழஞ்சு வீதம் சாப்பிட நீர்ச்சுருக்கு விந்து ஒழுக்கு, கை கால் எரிவு, காங்கை ஆகியவை தீரும்.

3. ஒரு படி பசுவின் நெய்யில் ஆவாரை, வெட்பூலா, நீர்ப்பூலா, நெருஞ்சில் இவைகளின் வேர்; வெள்ளிரிவிதை, செங்கத்தாரிப்பட்டை

Koviloor Digital Library

வகைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து, பொரித்த வெங்காரம், முட்டைத்தோல் வகைக்கு 1 பலம், கோழிக்காரம் கால் பலம் பொடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிடத் தீரும்.

4. வெள்ளிரிக்காய்ச் சாறு 1 படி, பெரும் பூசணிக்காய், தண்ணீர்விட்டான் கிழங்கு, வாழைக்கிழங்கு, சீந்தில்தண்டு, கோவைத்தண்டு, நிலப்பனைங்கிழங்கு இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி, பசுவின் பால் 5 படி, நெய் 1 படி, இளநீர் முக்கால் படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பொன்னாங்காணி, நன்னாரி, நெருஞ்சில், சிறுபீளை இவைகளின்வேர், அதிமதுரம், சாத்திரபேதி, கூகைநீர், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், ஏலம், கிராம்பு, சீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, திப்பிலி மூலம், செவ்வள்ளிக்கொடி, அரத்தை வகைக்கு ஒரு கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, கற்பூரம் 1 வராகன் எடை, கற்கண்டு 1 பலம் பொடித்துப் போட்டு ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட நீர்ச்சுருக்கு, சீழ்மேகம், இரத்தமேகம், இரணக்கடுப்பு, எரிப்பு, எலும்புருக்கி, பெரும்பாடு, நீரடைப்பு, கல்லடைப்பு சதையடைப்பு தீரும்.

வெள்ளை வெட்டையின் இயல்பு.

பித்த மேகமானால் மஞ்சள் போலும், வாத மேகமானால் வெண்மையாவும், ஐய மேகமானால் மயிலினது நிறம் போலும், கௌபீனத்தில் காணும்; வாதம் அதிகரித்திட்டால் வெள்ளை மிகக்காணும், தாது நட்டமாகும்; வாய்வும் பித்தமும் சேர்ந்தால் நாளத்தில் வெந்து எரிவு வலி காணும். நீர்க் கட்டித் துளியாய் விழும்; சில நேரத்தில் பளிச்சென்று நீர் இறங்கும்; கல்லடைக்கும்; வாயுவோடு ஐயஞ் சேர்ந்தால் நீர் பொசியாது; வெள்ளை விழாது; புகைச்சல், இருமல், இளைப்புண்டாகும்.

2. கால் படி தேற்றான் விதையை நன்றாய் அரைத்துக் கழுவித் தட்டி, பசுவின் பாலில் 3–நாள் ஊறப்போட்டு ஆட்டிதரட்டி அதளைவு பசுவின் வெண்ணெயும் கூட்டிப் பிசைந்து அதற்குச் சமமாய்ப் பசுவின் நெய்யில் வேக வைத்துப் பொன் நிறமாக வரும் சமயத்தில் சீரகம், ஏலம் வகைக்கு 2 கழஞ்சு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குங்குமப்பூ, கிராம்பு, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம் கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, சதகுப்பை, திரிகடுகு வகைக்கு 5 வராகன் எடை, இடித்து வடிகட்டின தூளையும், 3 பலம் சர்க்கரையைத் தூவிக் கிண்டி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

3. ஆவினைய் படி இரண்டரையில் பொரித்த நற்சீரகம் பலம் –5 கற்கண்டு பலம் இரண்டரை, பொடித்துப் போட்டு, வேளையொன்றிற்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வரத்தீரும் நாயுருவிவேர் 20 பலம் இடித்து, 10 படி தண்ணீரில் போட்டு 4 படியாய் வற்றவைத்து வடித்து அதில் தண்ணீர் விட்டான் கிழங்குச்சாறு, பசுவின் பால், நெய் வகைக்கு 1 படி கூட விட்டு முத்தக்காசு, நன்னாரிவேர், ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோட்டம், திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டு, பதமாய்க் காய்ச்சி வடித்து சர்க்கரை 5 பலம் சேர்த்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுத் தீரும்.

Koviloor Digital Library

4. ஏலம், அதிமதுரம், சீரகம், சுக்கு, திப்பிலி, நெல்லிமுள்ளி, தாளிசப்பத்திரி, மல்லி, கோட்டம், சந்தனம், பச்சைக்கற்பூரம், கத்தூரி, குங்குமப்பூ, கத்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், சாதிக்காய், இலவம்பிசின், சிறுநாகப்பூ, நன்னாரிவேர், தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலப்பனை, சந்தனம், அமுக்காறாவேர், முத்தக்காசு, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், நெருஞ்சில்வேர் இவைகளை ஓர் எடையாய் ரவியிலுலர்த்தித் தூள்செய்து அதற்குச் சமம் சீனியும் சீந்தில் சர்க்கரையும் கூட்டித் திரிகடி அளவில் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ளத் தீரும்.

5. வெள்ளைக் குங்கிலியம், கற்கண்டு வகைக்கு 7 பலம் பொடித்துக் கொண்டு ஒரு வேளைக்கு ஒரு பலம் வீதம் அரைப்பலம் நல்லெண்ணெயில் கலந்து ஒரு நாளைக்கு இரு நேரமாக ஏழு நாள் சாப்பிட்டுவர நீரிழிவு, வெட்டைத் தீரும்.

6. தேங்காய்ப்பால், பருத்தி, விதைப்பால், பசுவின்பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் பரங்கிப்பட்டை, சுக்கு, மிளகு, நற்சீரகம் வகைக்கு 1 பலம் பொடித்துப்போட்டு ஒன்றரைப்படியாய் வற்றவைத்துக்கொண்டு ஒரு வேளைக்குக் கால்படி வீதம் சாப்பிட்டு வரத் தீரும்.

7. புங்கவேர் கால்படி, தேங்காய்ப்பால், பசுவின்பால், வகைக்கு அரைக்கால்படி ஒன்றாய் கலந்து அதில் ஓரிலைத் தாமரை வேரை அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு கரைத்து மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

8. பழம்பாசிச் சாறு அரைக்கால்படி, நல்லெண்ணெய் ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில் நற்சீரகம், ஈருள்ளி வகைக்கு கால் பலம் அரைத்துக் கலக்கி இவ்விதம் 3 நாள்கள் சாப்பிடத் தீரும்.

9. கொடிக் கள்ளிக் கொழுந்தை ஒரு எலுமிச்சங்காய் அளவு அரைத்து மிளகு 32 அரைத்து ஒன்றாய்க் கலந்து ஒரு வேளைக்கு அரைக் கொட்டைப் பாக்கு அளவு 3 நாள்கள் சாப்பிட்டு வரவும்.

பத்தியம்:– பசுவின் மோரும், அன்னமும் உட்கொள்ளத் தீரும்.

10. ஒரு படி புங்கம்பூவில் 1 படி பசுவின் நெய்யைச் சிறுகவிட்டுப் பொன் நிறமாய் வதக்கிக்கொண்டு காலை, மாலை திரிகடி அளவு சாப்பிட்டுவர வெட்டைமேகம், வெடிமேக சூலை, புண் தீரும்.

11. சிற்றாமணக்கெண்ணெய் இரண்டரை படி, ஈருள்ளிச் சாறு கால் படி ஒன்றாய்க்கலந்து அதில் பறங்கிப்பட்டை 4 பலம், கத்தூரிப்பட்டை 7 பலம், கொல்லன்கோவைக் கிழங்கு 8 பலம் இவைகளை அரைத்துப் போட்டு புளியம் விறகு தவிர மற்ற விறகாலெரித்துப் பதத்தில் வடித்து உடல்நிலை அறிந்து அரைச் சிரங்கை எண்ணெய் கொடுக்கப் பத்து முறை கழிச்சலாகும். உப்பு, புளி நீக்கி, நீர்க்கஞ்சிகொள்ள, பேதி நிற்கும். இவ்விதம், வாரத்திற்கு ஒரு முறை மூன்று வாரம் கொள்ள மேற்படி நோய்கள் தீரும். மேற்படி எண்ணெய் சாப்பிடுவதற்கு முதல் நாளிலும் அதைச் சாப்பிட்ட

Koviloor Digital Library

மறுதினத்திலும் விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகச் செய்ய வேண்டும். பருத்தியிலைச் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு அரைக் கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் வட்டின சுண்ணாம்பு ஒரு பாக்கு அளவு கலந்து இவ்விதம் மூன்றுநாள் சாப்பிடத் தீரும்.

12. பழச்சாறு, நல்லெண்ணெய், வகைக்கு ஒரு ஆழாக்கு ஒன்றாகக் கலந்து இவ்விதம் மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

13. நாரத்தையிலை, மாம்பட்டை வகைக்கு ஒரு தேற்றான விதை அளவு அரைத்து எருமைத் தயிரில் கலந்து 3 நாள் சாப்பிடத் தீரும்.

14. நிலக்குமிழி இலையை ஓர் எலுமிச்சங்காய் அளவு அரைத்து ஈருள்ளி வகைக்கு 15 வராகன் எடையும், புது கலயத்தில் அரைக்கால் படி தண்ணீர்விட்டு அதில்போட்டு, பனியில் வைத்துக் காலையில் பிழிந்து சாப்பிடவும். இவ்விதம், 5 நாள் காலையில் சாப்பிட்டு வரத் தீரும்.

15. 100 கதலி வாழைப்பழத்தைத் தோல் நீக்கி ஒரு பீங்கானில் போட்டு அதில் பச்சைமூங்கில், மேல்தோல் இடித்ததூள், விளாங்காய் அளவு பச்சை நெல் உமி ஒரு சிரங்கை போட்டு பிசைந்து 30 நாழிகை வைத்திருந்து அப்பால் இழைத் துணியில் முடிந்து தொங்கவிட்டால் நீர் இறங்கும். அந்த நீர் 1 படி ஒன்றாய்க் கலந்து சூரியப்புடம் ஒரு நாள் வைத்து மறுநாள் 1 பலம் சர்க்கரை கலந்து காய்ச்சி பதத்தில் இறுத்து வைத்துக் கொண்டு ஒரு வேளைக்கு அரைவீசம்படி வீதம் சாப்பிட்டு வர வெள்ளைவெட்டை, நீர்க்கடுப்பு எரிவு நோய் நீங்கும்.

16. மேற்சொல்லியபடி பழச்சாறு 1 படி, ஆவின் பால் படி ஒன்று கற்கண்டு 6 பலம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி, ஓயாமல் கிளறிக் கொடுத்து உருகிவரும் போது நெய் ஆழாக்கு விட்டு கிளறி, பாகை ஓர் இலையில் விட்டு ஆறவிட்டுத் திரட்டிப் பார்க்க மெழுகுபோலிருந்தால் அந்தப் பதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்குக் கொட்டைப்பாக்கு அளவு பவழபற்பம் வைத்து உண்ண நோய் நீங்கும்.

17. ஆனையறுகை இடித்ததூள் 4 படியில் பதினாறுபடி தண்ணீர் விட்டு ஒரு நாள் முழுவதும் ஊறவைத்துப் பிசைந்து வடிகட்டின தண்ணீரைத் தெளிய வைத்து வடித்துப் போட்டு உறைந்திருக்கிற அடி மண்டியை உலர்த்தின பொடி ஒரு பலம், சந்தனம், அகில்கட்டை, கிராம்பு, சோம்பு, ஏலம், இலவங்கப்பத்திரி, கார்க்கோல்அரிசி, வெட்பால அரிசி, தேற்றான்விதை, சிற்றாமுட்டி, அதிமதுரம், வேர் வகைக்கு 1 பலம் வீதம் நிழலில் உலர்த்தித் தூள்செய்து திரிகடி அளவு வெண்ணெயில் சாப்பிட்டுவர மேற்படி நோய்கள் தீரும். நீர்க்கடுப்பு உடனே நிற்கும்.

ஒழுக்கு, வெள்ளை, வெட்டை, நீர்ச்சுருக்கு, கடுப்பு கிருச்சரம் மேககாங்கை ஆகியவற்றிற்கு மருந்து.

அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய், பசுவின் நெய் வகைக்கு 1 படி, தாய்ப்பால் கால் படி, இளநீர், தென்னம்பூச்சாறு வகைக்கு 2 படி,

Koviloor Digital Library

துளசி, நெல்லி, கொடுப்பை, முசுமுசுக்கை, சீந்தில், முடக்கொத்தான், கற்றாழை, சதாவேரி, கரிசாலை, பொற்றலைக்கரிப்பான், கற்பூரவள்ளி, சிறுகீரை வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் நிலப்பனை, நன்னாரி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், முத்தக்காசு, அமுக்கறா, செவ்வல்லிக்கொடி, நெய்தல், கோட்டம், திரிகடுகு, திரிபலை, தாமரை வளையம், சிற்றரத்தை, ஏலம், அதிமதுரம், இலவங்கப்பட்டை, பத்திரி, நற்சீரகம், கருஞ்சீரகம், முந்திரிகை (திராட்சை), பேரீந்து, சந்தனம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வெந்தயம், சீனிகற்கண்டு வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டு 3 நாள்வரை சிறு கொதிப்பிட்டுக் காய்ச்சி வடித்து வகைக்கு ஒரு மண்டலம் (48 நாள்) நெல்லுக்குள் வைத்தெடுத்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

2. துளசி, செங்கழுநீர், சுரை, வல்லாரை, ஈருள்ளி, கற்பூரவல்லி, வில்வம், இவைகளின்சாறு வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்ததில் கூகைநீர், திரிசாதம் பாற்கெருடக்கல், அதிமதுரம், கருஞ்சீரகம், நற்சீரகம், மலாக்காய்ச் சந்தனம், செஞ்சந்தனம், ஏலம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டு நெய் 1 படி கூடவிட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நோய் தீரும்.

3. பசுவின் பால், ஏரண்டத்தெண்ணெய், தேங்காய்ப்பால், எலுமிச்சம்பழச்சாறு, ஈருள்ளி, ஆனைநெருஞ்சி வகைக்குச்சாறு 1 படி ஒன்றாய்க் கலந்து வெந்தயம், சீரகம், ஏலம், அதிமதுரம், மலாக்காய் சந்தனம் வகைக்கு ஒரு கழஞ்சு 3 நாள் வரை சிறுதீயா எரித்து வடித்துக் குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் கலக்கி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

4. 10 பலம் அரசன் விதையை ஒரு படி பசுவின் பால்விட்டு 12 மணிநேரம் வரை அரைத்து, ஒரு படி பசுவின் நெய்யில் கலந்து, அதில் கற்றாழைச் சோற்றை ஏழு முறை கழுவி பச்சை நெல்உமியுடன் கலந்து பிசைந்துப் பிழிந்த சாறு 4 படி, எலுமிச்சம்பழச்சாறு கால் படி கூட்டி, நீர் வற்றக் காய்ச்சி வடித்து திரிகடுகு, பறங்கிப்பட்டை, ஏலம், சீரகம், அதிமதுரம், நெருஞ்சிக்காய், ஆனைத்திப்பிலி, திராட்சைப்பழம் வகைக்கு 1 பலம் பொடித்து வடிகட்டின தூளையும் 32 பலம் சர்க்கரையும் தூவிக்கிண்டி வேளை ஒன்றுக்கு ஒரு ரூபாய் எடை சாப்பிட்டுவர நோய் தீரும்.

மேற்படி நோய்களுக்குத் தைலம் (தலைமுழுக்குக்கு நெய்)

வெட்டிவேர், முத்தக்காசு வகைக்கு 2 பலம், முடக்கொத்தான், அமுக்கறா, சிற்றாமுட்டி, விலாமிச்சு, நன்னாரி, தாமரைவளையம், சீராசெங்கழுநீர் இவைகளின் வேர்கள் வகைக்கு 3 பலம் இடித்துத் தூணிநீரில் போட்டு, நான்கில் ஒன்றாய் வற்றவைத்து, வடித்து அதில் கரிசாலை, சிறுகீரை, கொடுப்பை, முசுமுசுக்கை, குமரிநெல்லி, நீர்வள்ளிக்கிழங்கு இவைகளின்சாறு, இளநீர், பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 4 படி ஒன்றாய்க்கலந்து; நெல்லிவற்றல், அதிமதுரம், ஏலம்,

Koviloor Digital Library

சிறுநாகப்பூ, தேவதாரம், சடாமாஞ்சில், மரமஞ்சள், சண்பகப்பூ, முருங்கைப்பட்டை, செவ்வள்ளிக்கொடி, மலாக்காச் சந்தனம், செஞ்சந்தனம், அகில், சாத்திரபேதி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, பூலாக்கிழங்கு, கோட்டம், கிராம்பு, சாதிக்காய் வகைக்கு 3 கழஞ்சு இளநீரில் அரைத்துப்போட்டு 3 நாள் வரை சிறுகொதிப்பிட்டு நான்காம் நாள் பதமாய்க் காய்ச்சி வடித்து குங்குமப்பூ, கோரோசனை, புனுகுசட்டம், சவ்வாது வகைக்கு 2 கழஞ்சு போட்டு வைத்துக்கொண்டு வாரத்தில் இரண்டு முறை தலை முழுகிவரத் தீரும். தைலம் தேய்த்துக்கொண்ட தினத்தில் தயிர், மோர், புளி, உப்பு நீக்கவும்.

2. எள்ளெண்ணெய், குழித்தாமரைச் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து அதில் பூலாக்கிழங்கு, பச்சை வகைக்கு 5 வராகன் எடை பொடித்துப் போட்டு வைத்துக் கொண்டு, வாரத்தில் இரண்டு முறை தலைமுழுகிவர நோய் தீரும்.

ஒழுக்கு நோய்ப்படலம் முற்றும்.

மேக நோய்ப் படலம்.

பெண்களுடன் உடலுறவு கொள்வதால் மேகம் சம்பவித்தலாம்.

மேகம் பிறந்தவிதஞ் சொன்னா ரென்னந்தி
ஆக மிளந்தைப் பருவத்தில் மோகித்து
போகந் தினஞ்செய்யிற் புகழ்மந்தத் தேகூடில்
வாகைப் பசியால் வழங்குஞ் சையோகமே
சையோகஞ் செய்யத் தனித்த சுழியோடும்
ஐயா வமிர்தமடங் கிக்கன லேறும்
மெய்யாக விந்து விழவிழப் புண்ணாகும்
மையாம் விழியாட்கும் மகத்தாம் பெரும்பாடாம்.

நீரிழிவு (பிரமேகம்) வருவதற்குக் காரணம்

பெண்களுடன் உடலுறவை மிக விரும்புவதால் மூலத்தில் கனல் மிஞ்சி, மேகம் தோன்றி தலைவரை வெந்துருகி, தாதுகெட்டு ஆக்கை நரம்பெல்லாம் பலம் குறைந்து (ஒழுக்குநீர்) நீரிழிவு உண்டாகின்றன. அக்காலத்தில் கொழுத்த மீன் இறைச்சி, நெய், பால், இவைகளை மிக விரும்பினால் நோய் அதிகரிக்கும்.

நீரிழிவின் இயல்பு.

உடல் மெலியும்; வெளுக்கும், உருகும், வியர்க்கும், நோகும், முகம், கை, கால், காய்ந்தும், நகை பிரியும்; கண் வெளுக்கும்; நெஞ்சு உலரும்; நா வறளும், தாகமாகும்; ஆயாசம், களைப்புண்டாகும்; இரவும் பகலும் தூக்கம் அதிகரிக்கும்; அன்னம் செல்லாது.

ஒழுக்கு நீரின் வகைகள்:- வாதத்தில் நான்கு, பித்தத்தில் ஆறு, சிலேத்துமத்தில் பத்து ஆக ஒழுக்கு நோய் வகை இருபதாகும்.

Koviloor Digital Library

வாத ஒழுக்கு நீர் நான்கின் இயல்பு.

மூளைபோலும்; இளம் நுங்குபோலும்; நிணம்போலும்; இருகின சளிபோலும் முதிர்ந்த சுக்கிலம்போலும்; நீள்நரம்புபோலும்; நீரில் தோன்றும் நல்லெண்ணெய்போலும்; ஊனை உருக்கின நெய் போலும்; சிதறின கள்ளைப்போல்; வழுவழுப்பாயும் இறங்கும். ஈ விழும். நலப்படா நோய்.

அழல் பிரமேக நீர் ஆறின் இயல்பு.

உடல் கடுக்கும்; மஞ்சளிக்கும்; நாவு புளிக்கும்; துவர்க்கும்; கிறுகிறுத்து வரும்; மயக்கம் காணும்; நீர் மஞ்சள்போலும்; கரிபோலும்; சாம்பலைக் கழுவின தண்ணீர்போலும் இறங்கும்; புளித்திருக்கும், இறைச்சி கழுவிண தண்ணீர் போலிறங்கும் அதைக்காய்ச்சின கக்கத்தினால் தீபமெரிக்கலாம். பித்தத்தில் எடுத்த ஆறையும் பார்க்குங்கால் மஞ்சள் நிறமாய் இருக்கும்.

ஐய பிரமேக நீர் பத்தின் இயல்பு.

அடிக் கரும்பின் சாறுபோலும்; அறும் புனல்போலும்; மாவைக் கரைத்ததுபோலும்; பன்னீர்போலும்; தயிர், பால், தண்ணீர் போலும்; சர்க்கரைப்பாகு போலும்; தேன்பாகு போலும்; கடுத்திறங்கும்; எறும்பு விழும்; இரசம்போல் நீர் இறங்கி நெய் மிதக்கும்; மணக்கும்; அதைக் காய்ச்சி தீபமெரிக்கலாம். சிலேத்துமத்தில் கலந்து எடுத்த பத்து நீரும் வெண்மையாய் நுரைத்து இருக்கும்.

காலப் பிரமேக நீரின் இயல்பு.

கட்டுண்ட சுனை நீர்போலும்; பழங் கூரை நீர்போலும்; கரும்பின் சாறுபோலும்; பழைய வெல்லப் பானகம்போலும் நீர் இறங்கும்.

வேறு:- உடல் மஞ்சணித்துப் பதைபதைக்கும்; மயக்கம் காணும்; அறிவு மயங்கும்; பல காலும் நீர் இறங்கும்; அது மஞ்சள் போல் இருக்கும்.

சுரப்பிரமேக நீரின் இயல்பு.

பசுமூத்திரம்போல் நீர் இறங்கும்; பால் நாற்றம் அடிக்கும்.

மதுப் பிரமேக நீரின் இயல்பு.

புது மழைத் தண்ணீர்போல் இறங்கும்; புலால் போல் நாறும்; அதைக் காய்ச்சிணகக்கம் தேன் போலிருக்கும். நீர்த்தாரை கடுத்து தேன்போல் இறங்கும்.

மலப் பிரமேக நீரின் இயல்பு.

நீர் புளித்த மல நாற்றம் அடிக்கும்.

சுக்கிலப் பிரமேக நீரின் இயல்பு.

பெருக நீரிறங்கிப் பின்பு சுக்கிலம்போல் விழும்; உடல் கடுக்கும்.

Koviloor Digital Library

மருந்தீட்டின் பேரில் காணும் நீரின் இயல்பு.

சுண்ணாம்பு கரைத்த நாற்றமாயும்; சுடலைச் சாம்பல் நாற்ற மாயும்; இவைகளை ஒன்றாய் நீரில் கரைத்த நாற்றாமாயும் அடிக்கும்; நாவில் வைத்தாலும் அதுபோலவே சுவையாம்.

சீயக்காய்ப் பிரமேக நீரின் இயல்பு.

சத்துடன் சருகாக விழும் அதைக் காய்ச்சினால் நாறுபோல் இழையும்; சீயக்காய்போல் நாறும்.

நீரிழிவு நோய் வகை.

வாதத்தில் மூன்று, வாத பித்தத்தில் 4, பித்தத்தில் 3, பித்த வாதத்தில் 2, சிலேத்துமத்தில்4, சிலேத்துமப் பித்தத்தில் 3, சிலேத்தும வாதத்தில் 5 ஆக, நீரிழிவு 24.

வாத நீரிழிவு மூன்றின் இயல்பு.

நீர் மாம்பூ வாசமாயும்; சுவை புளிப்பாயும்; குங்குமப்பூ வாசனையாயும்; காடி வாசமாயும்; சுவை கசப்பும்; புளிப்பாயும் இருக்கும்.

வாத பித்த நீரிழிவு நான்கின் இயல்பு.

நீர் மஞ்சள் நாற்றாமாயும்; சுவை புளிப்பும் கசப்புமாயும்; அலரிப்பூ மணமாயும்; ஐந்து வித சுவையாயும்; பால் மணமாயும்; சுவை வெண்ணெய்போலும்; நிண நாற்றமாயும்; சுவை கைப்பாய் வசம்புபோல் இருக்கும்.

பித்த நீரிழிவு மூன்றின் இயல்பு.

நீர் பானக மணமாயும்; சுவை கைப்பாயும்; உப்பு நாற்றமாயும்; சுவை உப்புக்கரித்தும்; மல்லிகைப்பூ வாசனையாயும்; சுவை கரிப்பாயும் இருக்கும்.

பித்த வாத நீரிழிவு இரண்டின் இயல்பு.

நீர், கோழிமூத்திரவாசமாயும்; சுவை துவர்ப்பாயும்; சந்தன வாசமாயும்; சுவை மிளகு போலும் இருக்கும்.

சிலேத்ம நீரிழிவு நான்கின் இயல்பு.

நீர், தாழைமலர்போலும்; சாணம்போலும்; எலுமிச்சம்பழம் போலும்; குருதி போலும்; வாசனையாகவும், சுவை இனிப்பாயும் இருக்கும்.

சிலேத்ம பித்த நீரிழிவு மூன்றின் இயல்பு.

நீர், செண்பகப்பூ வாசமாயும், சுவை நாகப்பழம்போலும் இருக்கும்; நீர், தீயநாற்றமாய் இருக்கும், எறும்பரிக்கும், சுவை சுண்ணாம்பு போல் இருக்கும்.

Koviloor Digital Library

சிலேத்ம வாத நீரிழிவு ஐந்தின் இயல்பு.

சிறுநீர், மிகுந்த நாற்றமாயும், சுவை புளிப்பாயும் இருக்கும் மேற்சொல்லிய இருபத்து நான்கு வகை நீரிழிவில், வாதநீரிழிவு மூன்றும் அசாத்தியம்.

இவைகட்கு மருத்துவம்:- திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், அதிமதுரம், கோட்டம், சண்பகப்பூ, இலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, கோரோசனை, கூகைநீர், கல்நார், தாமரை வளையம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு 5 பலம், வாய்விளங்கம், திரிபாலை, குரோசானிஓமம், வகைக்கு 1 பலம், இவைகளை இடித்துத் தூள்செய்து அதில் சீந்தில் சர்க்கரை, முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம்பழம் இவைகளை ஒன்றாய்ப் பொடித்துக்கொண்டு திரிகடி அளவுக்கு, வங்க பற்பம் ஒரு பணஎடை வைத்து ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள 21 பிரமேக நோய்களும் தீரும்.

2. பசுமஞ்சள்சாறு ஒரு தூணியில் 50 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகு செய்து அதில் நெல்லிமுள்ளி, மரமஞ்சள், வெண்காரம், அதிமதுரம், கோட்டம், இலவங்கம், ஏலம், சதகுப்பை, இருவேலிவேர் வகைக்கு 2 பலம் தூள் தூவிக்கிண்டி ஒரு கலசத்தில் போட்டு ஒரு மண்டலம் (48 நாள்) நெல்லுக்குள் புதைத்து எடுத்து நாள் ஒன்றுக்குப் பாக்களவு கெந்தகபற்பம் வைத்து 20 நாள்கள் உண்ணப் பிரமேகங்கள் தீரும்.

3. ஒரு படி புங்கம்பூவில், ஒரு படி பசுவின் நெய்யைச் சிறுக சிறுக விட்டுக் கிண்டித் திரிகடி அளவில், கருவங்கச்செந்தூரம் ஒரு பண எடை வைத்து ஒரு மண்டலம்(48 நாள்) உட்கொள்ளப் பிரமேகங்கள் தீரும்.

4. அரிதாரம், மனோசிலை, வெள்ளைக்குங்கிலியம், விளாம்பிசின் தேற்றான்விதை, இரதம் இவைகளைச் சமமாய்ப் பொடித்துத் துணியில் கிழிகட்டி 3 முறை பச்சரிசிக் கழுவுநீரில் ஊறவைத்து உலர்த்திக் காடி விட்டரைத்துக் குன்றிபோல் உலர்த்திக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் மோரிலாவது, தேனிலாவது ஒரு மண்டலம் (48 நாள்) உட்கொள்ளச் சகல மேகங்களும் தீரும். முருங்கைஇலைச் சாற்றில் இட மதுப்பிரமேகம். மரசு சுரக்கம் போல் இருக்கிற நோய்கள் தீரும்.

5. நீர்முள்ளிவிதையும், மேற்படி உருண்டையையும் சேர்த்து அரைத்து, நல்லெண்ணெயில் குழப்பிக் கொடுக்க சகலமான ஒழுகல் நோய்களும் தீரும்.

6. முள்ளிவிதையும், மேற்படி உருண்டையையும் பொடித்துக் கருங்குருவை மாக்களியில் போட்டுப் பிசைந்து கொடுக்க மூத்திரக் கிருச்சரம் தீரும்.

7. மேற்படி உருண்டையை ஆனையறுக்குத் தூளில் உட்கொள்ள மாவு கரைத்ததுபோல் இறங்குவது தீரும்.

Koviloor Digital Library

8. புண்ணாக்கும், சிறு கீரையும் வேகவைதது அந்நீரை வடித்து நல்லெண்ணெய் கலந்து, அதில் மேற்படி உருண்டையைக் கரைத்துக் கொடுத்த நேரத்தில் நல்லெண்ணெய், புண்ணாக்கு, சேர்த்து உண்ண மஞ்சள் நிறமாயும், சுண்ணாம்புபோலும் இறங்குகிற பிரமேக நோய் தீரும்.

9. திரிபலை, முத்தக்காசு, மஞ்சள், தென்னம்பாளை, முருக்கிலை கடலழிஞ்சிப்பட்டை வகைக்கு 1 கழஞ்சு பொடித்து 2 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்ற வைத்து, மேற்படி உருண்டையை உரைத்துக் கொடுக்கச் சுண்ணாம்புநீர் போலும்; நுங்குபோலும் இறங்குகிற பிரமேகம் தீரும்.

10. கடுக்காய் 3 கழஞ்சு, கடலழிஞ்சிப்பட்டை 2 கழஞ்சு, நெல்லிமுள்ளி, கெந்தகம், வெண்காரம் வகைக்கு 1 கழஞ்சு இவைகளைப் பொடித்து 2 படி தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து, அதில் ஒரு பண எடை தேன் கலந்து உட்கொள்ள, மேற்படி மேகம், நீலநிறமாய் நீர் இறங்குவது தீரும்.

11. கருங்குருவையரிசியும், நீர்முள்ளி இலையையும் சேர்த்து சிதைத்துக் கஞ்சி காய்ச்சி வடித்து, மேற்படி உருண்டையை உரைத்துக் கொடுக்க, மிகுதியாக நீர் இறங்குவதும், அடைநீராய் மீன் கழுவின நீர் போல் இறங்குவதும் தீரும்.

12. எள்ளுப்பிண்ணாக்கு, நெருஞ்சில்வேர், முசுட்டை வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டு, கால் படியாய் வற்றவைத்து ஒரு பண எடை நல்லெண்ணெய் கலந்து அதில் மேற்படி உருண்டையை உரைத்துக் கொடுக்க, நீர்ச் சுறுக்கு, எரிவு கடுப்பு நோய் தீரும்.

13. நல்லெண்ணெய், நீர்மோர், பாசிப்பயறு, பொன்னாங் காணி, முயல், உடும்பு, ஆமை, காடை, ஊர்க்குருவி, வெள்ளாடு, புறா, தூதுவளைச்சமூலம், சிறுவழுதலைப்பிஞ்சு இவைகளைப் பத்தியத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும்.

14. தூய்மை செய்த காரீயம் 10 வராகன் எடை, இரசம் 5 வராகன் எடை ஒன்று கலந்து சாதிலிங்கம், காந்தம், மனோசிலை வகைக்கு 5 வராகன் எடை இவைகளைப் புளித்த மோர் விட்டு மைபோலரைத்துக் குன்றியளவு உருண்டை செய்துகொண்டு மோரில் கொடுக்கச் சகல பிரமேகமும் தீரும்.

குறிப்பு:– முன் சொல்லியபடி, மேற்படி உருண்டையை அந்த நோய்க்குத் தகுந்தபடி வெவ்வேறான துணைமருந்துகளிலும் மற்ற துணைமருந்துகளிலும் கொடுக்கத் தீரும்.

15. மரமஞ்சள், கருவேலம்பிசின் வகைக்கு அரைக்கால் பலம், மஞ்சள், தேற்றான்விதை வகைக்குக் கால் பலம், ஆவாரை விதை 2½ பலம் இவைகளைத் தூள்செய்து, திரிகடி அளவு மோரில் உட்கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

16. மருது, கொன்றை, நாவல், அத்தி இவைகளின் வேர்பட்டை, அத்திப்பிஞ்சு, அல்லிக்கிழங்கு, மூங்கிலரிசி, தான்றிக்காய், நெல்லிக்காய், கடலழிஞ்சிப்பட்டை, காசுக்கட்டி இவைகளைச் சமமாய்க் கூட்டிப் பொடித்துக் கடலை அளவு உருட்டிக் கொண்டு எண்ணெயிலும், தேனிலும் ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் 20 நாள்கள் உட்கொள்ள சகல பிரமேகம் கடுப்பும் தீரும்.

17. ஆவாரை விதை ஒரு படி, காசுக்கட்டி ஒரு பலம், கற்பூரம் 4பலம் பொடித்துத் தேன் விட்டு ஒரு சாமம் அரைத்து கடலை அளவு உருட்டி உலர்த்தி, வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் எண்ணெயில் ஊறவைத்துத் தேனில் கலந்து 15 நாள்கள் உட்கொள்ள சகல மேகக் கடுப்பும் தீரும்.

18. பூனைக்காலி விதை, நிலப்பனைக் கிழங்கு, கலைக்கொம்பு, ஆவாரை வேர், மேற்படி விதை சமன் கூட்டி, பசுவின் பால் விட்டு அரைத்துக் கொடுக்க மேற்படி நோய் தீரும்.

19. அத்தி, மருது இவைகளின் பட்டையினால் கருவங்கத்தைக் கிண்டி வறுத்துப் பொடியானதின் பேரில் அதற்குச் சமன்சூதம் விட்டு புகையாமல் சற்று நேரம் கிண்டி ஒரு பலம் நிறுத்து கல்வத்திலிட்டு திரிபலை, ஆவாரை, கடலழிஞ்சிப் பட்டை வகைக்கு ஒரு பலம் கூட்டிப் பொடித்து நல்லெண்ணெய் விட்டு அரைத்துக் கழற்சிக்காய் அளவு உருட்டி உலர்த்தி நல்லெண்ணெயில் ஊறவைத்துக் கொண்டு மேற்படி எண்ணெயில் கலந்து வேளைக்கு ஓர் உருண்டை வீதம் சாப்பிட்டு, உடனே நன்னாரி வேர் ஆவாரைப் பிஞ்சு சமன் கூட்டி, குருணி நீர் விட்டுக் குடிநீர் செய்து சாப்பிட்டு வர மேகம் தீரும்.

20. கோட்டம், அதிமதுரம், மரமஞ்சள், சன்னலவங்கம், திரிபலை, சீந்தில், மஞ்சள், முத்தக்காசு, நன்னாரி வேர், சிறுதேக்கு, விலாமிச்சம் வேர், தூதுவளை வேர், கடலழிஞ்சிப் பட்டை, கொன்றைப் பட்டை, ஆவாரம் பட்டை, நாவல் பட்டை, அத்திப் பட்டை, பூவரசம் பட்டை, மருதம் பட்டை, அரசம் பட்டை, இலந்தைப் பட்டை, சிற்றாமுட்டி, நெருஞ்சி சமன்கூட்டி இடித்துக் குடிநீர் செய்து அதில் சிறுகத் தேன் விட்டு உருண்டையை உரைத்துக் கொடுக்க நீர் ஒழுக்கு தீரும்.

21. சூதபற்பம் 10 கழஞ்சு, அப்பிரகச் செந்தூரம் 20 கழஞ்சு, தூய்மைசெய்த கெந்தகம், தாரம் வகைக்கு 50 கழஞ்சு, சிலாசத்து 5 கழஞ்சு, காரீயச் செந்தூரம் 30 கழஞ்சு, பருத்திவிதைப் பருப்பு, தேற்றான்வித்து, வெண்குன்றிவித்து, புளியவிதையின் மேல்தோல், கற்கடகச்சிங்கி வகைக்கு 5 கழஞ்சு; மரமஞ்சள், கத்தூரிமஞ்சள், நிலப்பனைக்கிழங்கு, சித்திரமூலம் வகைக்கு 10 கழஞ்சு, வேம்பு, வெள்வேல், கருங்காலி, கருவேல் இவைகளின் பிசின் வகைக்கு 10 கழஞ்சு தென்னம் பாளைத்தூள் கழஞ்சு 9, திரிகடுகு கழஞ்சு 80, இவைகளை எல்லாம் ஒன்றாய்ப் பொடித்து, ஆவாரை இலைச்சாற்றாலும் இலந்தையிலைச் சாற்றாலும் கொன்றையிலைச் சாற்றாலும் தனித் தனியே மூன்று நாள்கள் ஆட்டி, தேற்றான்விதை அளவு

Koviloor Digital Library

உருண்டை செய்து காலையில் ஒரு உருண்டை தேனில் கலந்து கொடுப்பதோடு; மாலையில் துடரி சுண்டை நீர்ச்சுண்டி, நீர்ப்பூலா, குரா, கடலழிஞ்சி, இம்பூரல், ஆவாரப்பட்டை, பொன்முசுட்டை, வில்வம் இவைகளின் வேர், முத்தக்காசு, திரிபலை, தேற்றான்வித்து இவைகளை ஓர் எடையாய் இடித்து ஒரு படி தண்ணீரில் போட்டுப் புதுச் சட்டியில் விட்டு வேடுகட்டி, மூன்று சாமம் ஆவியில் வைத்துக் காய்ச்சி கால் படியாய் வற்ற வைத்து, ஒரு கழஞ்சு தேன் விட்டு இரவில் உண்டுவர சகல நீரிழிவு நோய்களும் தீரும்.

22. பொன்முசுட்டை வேர், திரிகடுகு, முத்தக்காசு, மூங்கிலரிசி, திரிபலை வகைக்கு 2 கழஞ்சு சிதைத்து, இரண்டு படித் தண்ணீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து, அதில் மேற்படி உருண்டையை உலர்த்திக் கொடுக்க சீழ்ப்பிரமேகம், மதுப்பிரமேகம், நீலம்போலும் நீரிறங்கல் பிரமேகம், தசைப்பிரமேகம் அஸ்திப்பிரமேகம் அனற் பிரமேகம் வாதப்பிரமேகம், உள்ளுருக்கி மாங்கிசப் பிரமேகம் முதலான 24 பிரமேகமும் தீரும்.

23. வங்கம், நாகம் காரீயம் வகைக்கு 1 பலம், அப்பிரகச்சத்து ஒரு பலம் இவைகளை ஒன்றாய் உருக்கிக் கண்ட எடைக்கு நான்கில் ஒன்று சூதமும், சூதத்துக்கு இரண்டு பங்கு கெந்தியும் சேர்த்துத் தூதுவேளைச்சாற்றால் ஒரு சாமம் ஆட்டி, உலர்த்திக் குப்பியில் அடைத்து ஒரு சாமம் எரித்தெடுத்து, அந்த எடைக்கு மறுபடியும் கெந்தி சேர்த்துக் கரிசாலைச் சாற்றில் ஒரு சாமம் ஆட்டி, வில்லைதட்டிப் புடம் போட்டு சிவக்கும்வரைக் கந்தி சேர்த்து, மேற்படி சாற்றால் ஆட்டிப் புடம் போட்டுச் சிவந்த பின்பு கண்ட எடைக்குப் பாதி இலிங்கம் சேர்த்துத் தாய்ப்பாலில் ஆட்டி, சுண்டக்காய் அளவு குளிகைசெய்து, முன்போல் துணைமருந்துகளில் கொடுக்க நீரிழிவு. பிரமேகம் தீரும்.

24. அலகைச் சாற்றில், மஞ்சள் தூளைப்போட்டுக் கொடுக்க சலகபிரமேகம், நீரிழிவு தீரும்.

வாதப்பிரமேகத்திற்கு மருந்து.

துத்தி, ஆல், அரசு, அத்தி, கருவேல், ஆவாரை இவைகளின் விதைகளையும் செங்கிலுப்பைப்பட்டையும் ஓர் எடையாய் தூள் செய்து அதிவிடயம், கல்மதம், கிராம்பு, சாதிக்காய், திப்பிலி காயம் இவைகளைச் சமனாய்ப் பொடித்து முன் பொடியுடன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

பித்தபிரமேகத்திற்கு மருந்து.

விலாமிச்சு, மருதம்பட்டை, வெள்ளிலோத்திரம், அத்திப்பட்டை, சந்தனம் இவைகளை எல்லாம் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

2. வேப்பம்பட்டை, ஆமலகம், பேய்ப்புடல், சீந்தில் இவைகளைச் சமமாய்க் குடிநீர் செய்து, தேன் விட்டு உட்கொள்ள நோய் தீரும்.

3. வெள்ளிலோத்திரம், அகில்கட்டை, அத்திப்பட்டை, இஞ்சி இருவேலி இவைகளைக் குடிநீர் செய்து, தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

சிலேத்மபிரமேகத்திற்கு மருந்து.

தேவதாரம், திரிபலை, முத்தக்காசு, மரமஞ்சள் இவைகளைக் குடிநீர் செய்து, தேனில் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

2. திரிபலை, வெட்பாலைப்பட்டை, மரமஞ்சள் இவைகளைக் குடிநீர் செய்து, தேனில் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

3. வெள்ளிலோத்திரம், விளாவரிசி, சீதேவி, பொன்முசுட்டை, முத்தக்காசு, கடுக்காய், செந்தொட்டி, கருங்காலிப்பட்டை இவைகளைக் குடிநீர் செய்து, தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

4. பங்கம்பாளை, மரமஞ்சள், மருதம்பட்டை இவைகளைக் குடிநீர் செய்து உட்கொள்ளச் சகல பிரமேகமும் தீரும்.

5. ஆவாரைவேர்ப்பட்டை, வேம்பு, மருது, கருங்காலி, வேங்கை, கடலழிஞ்சி இவைகளின்பட்டை, முருங்கைவித்து, திரிபலை, முத்தக்காசு, பொன்முசுட்டை, தேற்றான்கொட்டை இவைகளை உடனுக்குடன் குடிநீர்செய்து, தேன் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

மேக நீரிழிவுக்கு மருந்து.

அப்பிரகச்செந்தூரம், அயக்காந்தச்செந்தூரம், பவழபற்பம், இரசபற்பம் வகைக்கு 5 வராகன் எடை; தங்கரேக்கு 2 ½ வராகன் எடை, கருவங்கச்செந்தூரம் 1 ¼ வராகன் எடை இவைகளைக் குமரிச் சாற்றால் ஆட்டி புடம் போட்டு அதற்குப் பாதி கெந்தி, அதற்குப் பாதி இலிங்கம் சேர்த்து மேற்படி பாலில் ஆட்டி, ஏழுபுடம்போட்டு எடுக்கச் செந்தூரமாகும். நிறம் குறைந்தால், ஒரு கழஞ்சு இலிங்கம் சேர்த்து அரைத்துப் புடம்போட்டு வைத்துக்கொண்டு, இதனடியில் சொல்லியிருக்கிற இளகங்களிலாவது எண்ணெயிலாவது மூன்று நெல்லளவு வைத்து உட்கொள்ள, மேகம் இருபத்தினான்கு, மேகசூலை, வாயு, குட்டமும் தீரும்.

2. சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, சாதிலிங்கம், கல்மதம் கல்நார், கெருடப்பச்சை, குரோசானிஓமம், காந்தம், அக்கிராகாரம், காசுக்கட்டி வகைக்கு 1 கழஞ்சு; ஊமத்தைவிதை வகைக்கு அரைக் கழஞ்சு இவைகளுக்குச் சரி எடை அபின், இவை எல்லாம் கண்ட எடைக்கு ஆவாரை விதை, (இளவறுப்புச் செய்து பொடித்தது) எருமை மோரில் அரைத்துச் சுண்டக்காய் அளவு உருண்டை செய்து உலர்த்திக் கொண்டு எருமைமோர் தயிரில் இரண்டு வேளை ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

3. கடலழிஞ்சில், பூவரசு, மஞ்சணத்தி, ஓதி, வெள்வேல், கருவேல், ஆவாரை, செங்கிளுவை, அத்தி இவைகளின் பட்டை வகைக்கு 10 பலம் இடித்து நான்கு மரக்கால் தண்ணீர் போட்டு எட்டு நாள் வரை ஊறவைத்து ஒரு படியாக வற்றவைத்து, காந்தம், அப்பிரகச்செந்தூரம், கிட்டம், அரப்பொடி, மஞ்சள், தேற்றான்விதை, கடுக்காய், நெல்லிமுள்ளி, விளாம்பிசின், காரீயம், இரசமும் சேர்த்து உருக்கிப் பொடித்த பொடி வேலம்பிசின் இவைகளை ஓர்

Koviloor Digital Library

எடையாய் கல்வத்தில் இட்டு மேற்படிக் குடிநீரில் ஆட்டி 10 வராகன் எடையுள்ள உருண்டைகளாகச் செய்து கொண்டு வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் 20 வராகன் எடை ஆவாரை அரிசியைப் பொடித்துத் தேனில் கலந்து இருபது நாள்கள் உண்ண நோய் தீரும்.

4. மரமஞ்சள், கருவேலம் பிசின் வகைக்கு அரைக்கால் பலம்; மஞ்சள், தேற்றான்விதை வகைக்குக் கால் பலம்; ஆவாரையரிசி 8½பலம் தூள்செய்து திரிகடி அளவு தேனில் கலந்து 20 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

மரமஞ்சள் கடுகு சுக்கு வகைக்கு பலம் அரைக்கால் கருவேலம் பிசின் பளம் கால் ஆவாரையரிசி பலம் 2 ½ இவைவகை ஆவாரை வேர்க் கஷாயத்தால் ஆட்டி மோரில் கொள்ளவும் இந்தப்படி நாளொன்றுக்கு இருநேரமாக இருபது நாள்வரை அரைத்து சாப்பிடத் தீரும்.

5. ஆவாரங்கொழுந்து, கல்மதம், கொன்றைவேர் இவைகளைச் சமமாய்ப் புளித்தமோர் விட்டு அரைத்து எலுமிச்சங்காய் அளவு மோரில் கலக்கி நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை 20 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

6. காரீயம் 10 கழஞ்சு, இரசம் 4 கழஞ்சு ஒன்றாய்க் கலந்து கல்வத்தில் இட்டு, காந்தம் 12 கழஞ்சு, சாதிலிங்கம் 4 கழஞ்சு இவைகளை மோர் விட்டு அரைத்து உளுந்து அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் மோரில் ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

7. சாதிக்காய், காந்தம், சாதிப்பத்திரி, அபின், கோரோசனை, காசுக்கட்டி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துத் தேனில் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

8. மருள் ஊமத்தம்விதை கருஞ்சீரகம், நற்சீரகம், காந்தம், ஓமம், குரோசானிஓமம், திரிசாதம், இலவங்கம், திப்பிலி, பாற்கெருடக்கல் வகைக்கு ஒரு கழஞ்சு; அபின் 4 கழஞ்சு இவைகளைத் தேன் விட்டு அரைத்துச் சிமிழில் அடைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு கால் கழஞ்சு வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

9. ஆவாரங்கொழுந்து, ஆவாரம்பூ, அரிசி, கீழ்க்காய் நெல்லி, சித்திரைப் பாலாடை, ஆவாரை இலை இவைகளைச் சமமாய் சிதைத்து 1 படி எருமை மோரில் போட்டு அரைப்படியாய் வற்ற, அதிமதுரம் அரைத்து ஒரு எலுமிச்சங்காய் அளவு, கல்மதம், நெல்லிப் பருப்பு வகைக்குக் கால் பலம், தேற்றான்விதை 4, இவைகளை மேற்படி மோரில் அரைத்துக் கொண்டு எலுமிச்சங்காய் அளவு மேற்படி மோரில் கலக்கிக் கொடுக்கவும். இதன்படி பத்து நாள் உட்கொள்ளத் தீரும்.

10. சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அபின், காந்தம், சாதிலிங்கம், ஆவாரைவிதை, மருளூமத்தம்விதை, பொரித்த பொரிகாரம் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து ஒரு வேளைக்கு ஒரு கழஞ்சு வீதம் தேனில் கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

11. விதைபோக்கிய கடுக்காய் 4 பலம், விதைபோக்கிய தான்றிக்காய் 4 பலம், கடலிராஞ்சிப் பட்டை 4 பலம், நெல்லிப் பருப்பு ஒடு போக்கி 2 ½ பலம், தேற்றான்விதை 1 ½ பலம், செங்கிளுவைப்பட்டை 2 பலம், ஆவாரை வேர்ப்பட்டை 2 ½ பலம், சீந்தில் தண்டுமேல்தோல் நீக்கியது 2 ½ பலம், முசுட்டைத் தண்டு 3 பலம் இவைகளைப் பொடித்து, பத்துபடி நீரில் போட்டு, ஒரு படியாய் வற்றவைத்து, ஒரு வேளைக்குக் கால்படி வீதம் ஒரு பணஎடை தேன்விட்டு உணவுடன் சாப்பிடத் தீரும்.

12. ஆவாரங்கொழுந்து, சித்திரப்பாலாடை, சிறுபுள்ளடி இவைகளை இடித்துப் பிட்டவித்து அரைத்து எலுமிச்சங்காயளவு 3 நாள் ஆறு வேளை சாப்பிட்டு வரத் தீரும்.

13. விடத்தலை, விளா, கட்டுக்கொடி இவைகளின் கொழுந்து, ஆவாரைப்பட்டை வகைக்கு ஒரு பிடி இவைகளை எருமைமோர் விட்டரைத்து இரண்டு நாள் 2 வேளை சாப்பிடத் தீரும்.

14. ஏரலங்கலரிசி, சாமையரிசி, வரகரிசி, அமனையரிசி வகைக்கு 1 படி, கருங்காலிப்பட்டை 1 பலம் இவைகளைச் சிதைத்துச் சட்டியிலிட்டு ஒரு படி பால் விட்டு ஏடுகட்டி அதன் மத்தியில் 2 வராகன் எடை அபினை வைத்து மேல்சட்டி மூடி தீயெரித்து பால் வற்றினபின்பு மேல்பட்டையையும் அரிசிகளையும் உலர்த்தி இடித்துக் கொண்டு அவைகளுடன் குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, பச்சைக்கற்பூரம் வகைக்கு 1 வராகன் எடை, ஏலரிசி 1 வராகன் எடை இவைகளைத் தனித்தனியே பொடித்து வடிகட்டித் திரிகடி அளவு தேனிலாவது நெய்யிலாவது சாப்பிட நோய் தீரும்.

15. ஆவாரைப்பட்டை 20 பலம், அத்திப்பட்டை வகைக்கு 10 பலம் இவைகளை இடித்து முப்பது படி தண்ணீரில் போட்டு, எட்டில் ஒரு பாகமாக வற்றவைத்து வடிகட்டிக் கொண்டு, தென்னங்குரும்பை 20 பலம், நீர்ப்பூலாவேர் 10 பலம் இவைகளை இடித்து 20 படி தண்ணீரில் போட்டு, எட்டில் ஒரு பாகமாக வற்ற வைத்து வடித்துக்கொண்டு, இருவகைக் குடிநீரையும் ஒன்றாய்க்கலந்து, அதில் பசுவின்நெய் 2 படி, இஞ்சிச்சாறு கால் படி, முசுமுசுக்கைச்சாறு அரைப்படி விட்டு அதிமதுரம், நற்சீரகம் மிளகு, அத்திவேர், பழம்பாசிவேர் வகைக்கு 1 பலம்; செங்கழுநீர்க்கிழங்கு தாமரைக்கிழங்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சிறுகீரைவேர், பசலிவேர், ஏலம், நெல்லிப்பருப்பு வகைக்கு அரை பலம் புளியங்கொட்டையின் தோல், ஆவாரையரிசி, ஆவாரைக் கொழுந்து வகைக்கு 2 பலம், வெள்வேல், விளார்வேம்பு இவைகளின் பிசின் வகைக்குக் கால் பலம்; வெல்வேர், விலாமிச்சம்வேர், அறுகங்கிழங்கு வகைக்குக் கால் பலம் இவைகளை அரைத்துப் போட்டு, காய்ச்சி பதமாய் இறக்கி ஆறினபின் கால்பலம் திப்பிலிப்பொடி, இரண்டு பலம் சர்க்கரை, கால் படி தேனும் விட்டுக் கிண்டி, வேளை ஒன்றுக்கு எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டுவர, சகல நீரிழிவு, மூத்திரக்கிரிச்சரம், எலும்புருக்கி, பெரும்பாடும் தீரும்.

Koviloor Digital Library

16. பருத்திவிதைப் பருப்பு, கோதுமை, உளுந்து வகைக்கு 1½ பலம், தாமரைவளையம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், தேற்றான் விதை, வில்வப்பழச்சதை, மாதுளைவேர், சீந்தில்தண்டு, அமுக்கறாக் கிழங்கு, முத்தக்காசு, விலாமிச்சம்வேர், ஏலம், சீரகம், கோட்டம், நெல்லிமுள்ளி, சிறுகாஞ்ப்பூ, நெல்பொரி, சந்தனம், புரசமுகிழ், இலவங்கப்பத்திரி, சண்பகப்பூ, சிற்றாமுட்டிவேர், மல்லி, அதிமதுரம், சாதிப்பத்திரி, வாழைப்பூ, தென்னைப்பூ, பொன்னாங்காணிவேர் வகைக்கு 2 வராகன் எடை, வெள்ளைக்குங்கிலியம் 1 பலம் இவைகளை இடித்துத் தூள் செய்து அதற்குச் சமமாக கரைத்துக் கலந்து திரிகடியளவு இருபது நாள்கள் காலை, மாலை சாப்பிட ஒழுக்கு இருபதும் நீங்கும். கிரந்திசேட்டையும் கூடி இருந்தால் மேற்படி தூரணத்தெடை பரங்கிப்பட்டைச் சூரணங்களை கலந்து சாப்பிட நோய் நீங்கும்.

மருத்துணவு:— கைப்பு, புளிப்பு, தள்ளி வெந்நீரும், சாதமும் உட்கொள்ளவும்.

17. 4 பலம், சர்க்கரையைப் பாகு செய்து அதில் கோதுமை, உளுந்து, நற்சீரகம், பாசிப்பயறு, சாலாமிசிரி, அமுக்கறா, கசகசா, நிலப்பனை, அமிர்தசர்க்கரை இவைகளைத் தூள் செய்து வடிகட்டி வகைக்கு 4 பலம் தூவி கிண்டி நெய்விட்டு இளகம் செய்து, நாளொன்றுக்குக் கொட்டைப் பாக்களவு சாப்பிட்டுவர, மேகம் இருபதும் எலும்புருக்கியும் தீர்ந்து உடல் வலிமை உண்டாகும்.

1. பேய்க்குமிட்டி வேர் 10 பலம், கடுக்காய், தான்றி, நெல்லி, சிற்றாமல்லி, பேராமல்லி, வில்வம், இருவேலி, தூதுவளம், மாதுளம், சிறுகாஞ்சோரி, பொன்முசுட்டை, நன்னாரி, நெய்தல், செங்கழுநீர், தாமரை, அல்லி, நிலப்பனை, நிலவாகை, கண்டங்கத்திரி இவைகளின் வேர்கள் வகைக்கு 1 பலம் இடித்து, இருதூணி நீர்விட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து, அதில் பசுவின் நெய், பால் வகைக்கு 4 நாழி (படி), வல்லாரைச்சாறு, செவ்விளநீர் வகைக்கு 2 நாழி (படி), சர்க்கரை 9 பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, நற்சீரகம், ஏலம், இலவங்கப்பட்டை, மஞ்சிட்டி, சாத்திரபேதி, சதகுப்பை, வாய்விளங்கம், தாளிசப்பத்திரி, தேவதாரம், சந்தனம், சிறுநாகப்பூ, அதிமதுரம், கோட்டம், மிளகு, வாலுழுவையரிசி, கற்கடகசிங்கி, சிறுதேக்கு, கருஞ்சீரகம், கத்தூரி மஞ்சள், திப்பிலி மூலம், சடாமாஞ்சில், கடுகுரோகிணி, நெருஞ்சிக்காய், நெல்லிவற்றல், சிற்றாமல்லி, முத்தக்காசு, குரோசானி, வால்மிளகு, கடுக்காய், மாதுளம்பூ, குங்குமப்பூ, வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு ஒன்றாய்க் கலந்து, பதமாய்க் காய்ச்சி பாத்திரத்திலிறுத்து, அதில் சீரகம், கோரோசனை, வகைக்கு 64 கழஞ்சு பொடித்துப் போட்டு, ஒரு மண்டலம் (48 நாள்கள்) நெல்லுக்குள் வைத்தெடுத்து, நாள் ஒன்றுக்கு முக்கழஞ்சு நெய்யில் பவழபற்பம் ஒரு பண எடை வைத்து மண்டலம் உட்கொள்ளச் சகல மேக நோய்களும் தீரும். பத்தியம்: கைப்பு, புளிப்புத் தள்ளவும்.

2. சீந்தில்சர்க்கரை, பூமிசர்க்கரைக் கிழங்கு வகைக்கு 5 பலம்; பறங்கிப்பட்டை 8 பலம், திரிகடுகு, நறுக்குமூலம், சிற்றரத்தை, சிறுநாகப்பூ,

Koviloor Digital Library

கடலழிஞ்சிப்பட்டை, சடாமாஞ்சில், கோட்டம், மகரப்பூ, குங்குமப்பூ, சாதிக்காய், கோரோசனை, கிராம்பு, ஏலம், சிறுதேக்கு, அதிமதூரம், சந்தனம், சீரகம், வால்மிளகு, தாளிசப்பத்திரி, அக்கிராகாரம், சாதிப்பத்திரி, கடுக்காய்ப்பூ வகைக்கு 1 பலம் இடித்துத் தூள்செய்து வைத்துக்கொள்க. ஆவாரைப் பஞ்சாங்கம் வகைக்கு 10 பலம் இடித்து ஐம்பது படி செவ்விள நீரில்போட்டு, எட்டில் ஒன்றாய் வற்றவைத்து இறுத்துக் குடிநீரில், இருபது பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து, அதில் மேற்படி தூளைத் தூவிக் கிண்டி நெய் 1 படி கூடவிட்டு தேன்படி 1 விட்டு இளகம் செய்து, நாள் ஒன்றுக்குக் கொட்டைப்பாக்களவு அப்பிரகச் செந்தூரம், வங்கபற்பம், பவழபற்பம் 1 ¾ அல்லது 1½ கழஞ்சு வீதம் வைத்து ஒரு மண்டலம் சாப்பிட்டுவர ஒழுக்கு, நீரிழிவு, என்புமேகம், தாகம், வறட்சி, மேககாங்கை முதலான சகல மேகமும் தீரும்.

மேக நோயாளிகளுக்குக் காணும் தாகத்திற்கு மருந்து.

ஆவாரைப்பஞ்சாங்கம், நிலப்பனைகிழங்கு, நீர்ப்பூலா, முத்தக்காசு, வில்வவேர், தேற்றான்விதை, பொன்முசுட்டை, துடரி, நீர்ச்சுண்டி, கருஞ்சூரை, சுண்டைவேர், இலந்தைவேர், மாதுளம் வேர், பேரீச்சு, முந்திரிப்பழம் நெல்பொரி, சீனாக்கற்கண்டு, பொன்னாங்காணிவேர் வகைக்கு ஒரு கழஞ்சு இடித்து இரண்டு படி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாக வற்றவைத்து உட்கொள்ளநோய் தீரும்.

2. சீந்தில் தண்டையும், நெல்பொரியையும் குடிநீர் செய்து உட்கொள்ள நோய் தீரும்.

3. மரமஞ்சளைத் தட்டி சட்டியில் போட்டுக் கருக வறுத்து மோர் விட்டுக் குடிநீர் செய்து கொடுக்கவும்.

4. சிறுகட்டுக்கொடி இலைச்சாறு, பேய்முசுட்டை இலைச்சாறு வகைக்கு அரைப் படி ஒன்றாய்க் கலந்து ஒரு புது சட்டியில் விட்டு வைத்திருக்க கட்டியாய் நிறைந்திருக்கும். அதை வேளை ஒன்றுக்கு ஒரு எலுமிச்சங்காயளவு சாப்பிட்டுவர தாகம் தீரும். நீரையும் பிரிக்கும்.

5. எருது நீரும், நல்லெண்ணெயும் சமமாகச் சேர்த்துக் கலக்க வெண்ணை போலாகும். அதை நாளொன்றுக்கு கொட்டைப்பாக்களவு சாப்பிட தாகம், காந்தல் தீரும். (தாகம் என்பது எரிவு எனக் கொள்க. நீர் வேட்கையல்ல).

நீரிழிவு, ஒழுக்கு, எலும்புருக்கி, கடுப்பு, பெரும்பாட்டுக்கு மருந்து.

வேம்பு, புங்கு, நெல்லி, வில்வம், மருக்காரை, விறாலி, குரு[illegible]. மா, ஊமத்தை, கரிசாலை, பொற்றாலைக்கரிப்பான், கொன்றை, அமுக்கறா, தூதுளம், காட்டாத்தி, கருவேல், ஆவாரை, அழிஞ்சில், கோகிலவு, நெரிஞ்சி, மாதுளம் இவைகளின் பூவும், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, குங்கும[illegible], கிராம்பு, பத்திரி,

Koviloor Digital Library

பூவரசம், மல்லி, நாகப்பூ இவைகளைச சம எடையாய் நிழலில் உலர்த்தி தூள் செய்து, அதற்கு இரட்டி சீந்தில்சர்க்கரை ஒரு பாகமும், தென்னம் பூவும், பனம்பூவும் சம எடையாய்ச் சேர்த்து இடித்த தூள் ஒரு பாகமும் கலந்து, சீனாகற்கண்டு, பசுவின்பாலும் சேர்த்துச் செய்த பாகில் தூவிக் கிளறி தேன், நெய் விட்டு இளகம் செய்து வேளை ஒன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்களவில் அளவுப் படி, அப்பிரகச் செந்தூரம் வைத்துச் சாப்பிட்டுவர நோய் தீரும்.

விந்துமேகம், குருதிமேகம், சீழ்மேகம், மூத்திரப்பாளை கிருச்சரம் (நீர்ச்சுருக்கு) இவைகளுக்கு மருந்து.

பறங்கிப்பட்டை, கெந்தகம், சாதிக்காய், பத்திரி, கிராம்பு, சிறுநாகப்பூ, கண்டங்கத்திரி, அரத்தை, இரசகற்பூரம், அமுக்கறாக்கிழங்கு, கொடிவேலிவேர்ப்பட்டை, சடாமாஞ்சில் இவைகளைச் சம எடையாய் இடித்துத் தூள்செய்து சர்க்கரைப்பாகில் தூவிக் கிளறி நெய் விட்டு இளகம் செய்து நாளொன்றுக்குக் கொட்டைப் பாக்கு அளவு சாப்பிடநோய் தீரும்.

2. அத்திப்பால் கால் படி, தேங்காய்ப்பால், செவ்விளநீர், நுங்குநீர், ஓதியம்பட்டைச்சாறு, பசுவின் பால், நெய் வகைக்கு முக்கால் படி, ஏரண்டத்தெண்ணெய் 1 ½ படி இவைகளை ஒன்றாய்க் கலந்து முல்லை, குமிழ், கொடிவேலி இவைகளின்வேர், சாதிக்காய், கிராம்பு, ஏலம், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, கோரோசனை, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்குக் கால் பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் வங்கபற்பம் (நீறு) கலந்துண்ண மேகச்சொரி, மேககாங்கை தீரும்.

3. ஏரண்டத்தெண்ணெய் 1 படி, ஈருள்ளி, எலுமிச்சம்பழம், செம்பொன்நெருஞ்சி, கரிசாலை, கற்பூரவள்ளி, பூவரசங்காய், சங்கங்குப்பி இவைகளின் சாறு வகைக்கு ½ படி வீதம் கலக்கிக் காய்ச்சி வடித்து ஒரு வேளைக்கு அரை ஆழாக்கு வீதம் 7 நாள் வரை உப்பு, புளி தள்ளிச்சாப்பிட மேககாங்கை, வாயு, கிரந்தி, அரையாப்பு, அல்குல் புண், வெடி சூலை தீரும்.

4. கோவை, பொன்னாங்காணி, வல்லாரை, சிறுசெ[illegible]டை, ஆனைநெருஞ்சில், சீந்தில் தண்டு, பூவரசம்பட்டை இவைகளின் சாறு வகைக்கு ½ பலம், சிற்றாமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு ¾ படி ஒன்றாய்க் கலந்து சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கற்கடகச்சிங்கி, சண்பகப்பூ, காட்டாத்திப்பூ, சிறுநாகப்பூ, குரோசானி வகைக்கு 2 கழஞ்சு, கொடிவேலி வேர்ப்பட்டை 1 பலம், பசுவின் பாலால் ஆட்டிப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து அதில் கற்கண்டு 2 பலம் பொடித்துப்போட்டு ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள மேக காங்கை, புற்று, சொரி, ஊறல், கிரந்திப்புண், இலிங்கப்புற்று, அல்குல்புற்று, சீழ்ப்புண், வெடிசூலை, இரத்த ஒழுக்கு நோய் ஆகியவை தீரும்.

சகல மேகத்திற்கும் எண்ணெய் (குடிநெய்)

ஏரண்டத்தெண்ணெய், பெரும்பூசணிக்காய்சாறு வகைக்கு 2 படி, ஈருள்ளிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, ஓரிலைத்தாமரைச்சாறு வகைக்கு 1

Koviloor Digital Library

படி, ஒன்றாய்க் கலந்து அதில் வெந்தயம் 2 பலம், அரைத்துப் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்துக் கோரோசனை, குங்குமப்பூ வகைக்கு 2 கழஞ்சு பொடித்துப் போட்டு வைத்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவரச் சகல மேக நோய்களும் தீரும். மேகசுரம், வைசூரி, வெட்டை, பிரமேகங்கள், எருவாய் நோய்கள் அணுகாது. நெடுநாளைய நீர்க்கட்டு, செரியாமை ஆகியவை தீரும்.

2. கற்றாழஞ்சோற்றில் பூலாவேர்த் தூளைப் போட்டுப் பிசைந்து வடிகட்டின நீர் 8 படி, சிற்றாமணக்கெண்ணெய், தாழை விழுதுச்சாறு, இளநீர், பசுவின் பால், அல்லிக்கிழங்குச்சாறு, அருகம்வேர்க் குடிநீர் வகைக்கு 4 படி ஒன்றாய்க் கலந்து அதிமதுரம் 8 பலம், குன்றிவேர் 2 பலம், ஏலம் 1 பலம் இவைகளைப் பசும் பாலில் அரைத்துப் போட்டு சிறுதீயாய் 7 நாள்கள் வரை காய்ச்சி 8–ம் நாள் பதமாய் வடித்து அதில் குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு 2 கழஞ்சு பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள நீரிழிவு, மேகம், சூலை, வலி, எலும்புருக்கி, தாகம், கடுப்பு, உளைமாந்தை, வசூரிக்காந்தல் ஆகிய சகல நோய்களும் தீரும்.

3. சிற்றாமணக்கெண்ணெய், தேங்காய்ப்பால், வகைக்கு படி கவதும்பை, பொடுதலை, வெள்ளறுகு, குப்பைமேனி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி, ஒன்றாய்க் கலந்து சத்திச்சாரணைவேர், சித்திரமூலம், வீழிவேர், இந்துப்பு, நீர்முள்ளிவேர் வகைக்கு 4 பலம், வெண்காரம் 8 கழஞ்சு, தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு, பெருங்காயம், கள்ளிப்பால், கடுகு, திப்பிலி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டு பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ளச் சகலப் பிரமேகத்தில் எடுத்த தொந்தசூலை, தீராத வாயு, குன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

4. சிற்றாமணக்கு முத்தை, இளநீரில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் கழு நீரில் வேகவைத்து உலர்த்தி இடித்து, ஆவாரை வேர்க் குடிநீரில் கரைத்துக் காய்ச்சி ஊற்றின எண்ணெய், பெரும்பூசணிக்காய்ச்சாறு, தென்னம்பூச்சாறு இளநீர், குமரிச்சாறு வகைக்கு 1 படி, நன்னாரிவேர் 10 பலம் இடித்து 8 படி நீரில் போட்டு வற்றவைத்தக் குடிநீர் 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து கட்டின இரசகற்பூரம் 8 வராகன் எடை கோரோசனை 2 வராகன் எடை கல்வத்தில் இட்டு மேற்படி எண்ணெயில் நான்கு சாமம் அரைத்து கலக்கி வைத்துக் கொண்டு கொடுத்து உப்பு, புளி நீக்கி பத்தியம் கொள்ள மேகசூலை, வெட்டை, என்புச்சூடு, பிரமேகம், மேகச்சொரி, சிரங்கு முதலான மேக நோய்கள் தீரும்.

கெந்தித் தைலம் (குடிநெய்)

கெந்தகம் 5 பலம், வெடியுப்பு 1 பலம் அரிதாலம் வராகனெடை 3– சாரம், வீரம் வராகனெடை–1– இவைகளை ஒரு படி பசுவின் நெய்யில் நான்கு சாமம் அரைத்துச் சட்டியில் போட்டு சற்று வெதுப்பி நெய்யை வடித்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு பண எடை வீதம் 3 நாள்கள், 6 வேளை எருமைச்சாணிப் பாலிலிட சய (இளைப்பு) நோய் தீரும். இதன்

Koviloor Digital Library

அடியில் கண்டிருக்கிற நோய்களுக்கு அதற்குரிய மருந்துகளில் ஒரு வராகன் எடை வீதம் வைத்து உட்கொள்ளத் தீரும்.

மேக ஊறலுக்கு மருந்து.

தூய்மைசெய்த இருபது பலம் கெந்தகத்தை ஒரு புதுச்சட்டியில் வைத்து அதற்குக் கீழும் மேலும் பதமாய் மிளகுத் தக்காளிச்சமூலம் 10 பலம் இடித்து வடிகட்டின தூளைப் போட்டமுக்கி மேல்சட்டி மூடி, வாயில் ஏழுசீலைமண் செய்து காயவைத்து ஒரேவித விறகால் எரித்து மேல்சட்டியில் சூடேறாமல் அதன்மேல் துணியை நனைத்துப்போட்டுப் போட்டு ஒருசாமம் சென்றபின்பு தீயாற்றி ஆறவைத்துப் பன்றி முடியால் சுரண்டி குப்பியல் அடைத்துக்கொண்டு சுக்கு, மிளகு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வால்மிளகு, பறங்கிப்பட்டை, சர்க்கரை இவைகளைச் சம எடையாய்ப் பொடித்து வேளையொன்றிற்கு திரிகடி அளவு தூளில் மேற்படி கெந்திப்பதங்கம் இரண்டு பண எடை வீதம்வைத்து வாத உடலினர்க்குத் தேனிலும், பித்த உடலினர்க்குப் பசுவின் நெய்யிலும் கலந்து ஒரு மண்டலம் புளி, கரப்பான் உணவுப்பண்டங்கள் நீக்கி உண்டு; வாரந்தோறும் வால்மிளகு தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவர நோய் தீரும்.

2. பறங்கிப்பட்டை 5 பலம், சிறுநெருஞ்சில் கரிப்பான், முசுமுசுக்கை, சங்கங்குப்பி, சிறுசெருப்படை, பூவரசம்பட்டை, வாகைப்பட்டை திருகுகள்ளி இவற்றின் சாற்றில் தனித்தனியே 1 படி வீதம் விட்டு வற்றவைத்து உலர்த்தி இடித்துக் கலசத்திலிட்டு இழைத்துத் துணியால் வேடு கட்டி மற்றொரு கலசத்தில் குங்கிலியம், இலிங்கம், இரசம் வகைக்கு ஒரு வராகன் எடை பொடித்துப் போட்டு இரு கலசத்து வாயையும் ஒன்றாய்ப் பொருத்தி சந்துவாயில் உளுந்த மாவைத் தடவி, 7 சீலை செய்து காயவைத்து ஒரு சாமம் தீயெரித்து ஆற்றி, தூள் எடை சர்க்கரை கலந்து திரிகடி அளவு கெந்தித்தைலத்தில் கலந்து புளி, கரப்பான் உணவுப்பண்டங்கள் நீக்கி, ஒரு மண்டலம் உண்டு, வாரந்தோறும் விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுக்குச் செய்துவரத் தீரும்.

மேகவெட்டைப் பிடிப்பு, மேகச் சிரங்குகளுக்கு மருந்து.

அரைப் படி பசுவின் நெய்யில் ஏழு சேங்கொட்டையை மூக்கு வெட்டி இரண்டாய் நறுக்கிப் போட்டுக் காய்ச்சி நெய்யை இறுத்து அதில் 1 படி கோதுமை மாவும், கால் படி சங்கம் வேர்த்தூளையும் சிறுகத் தூவிக் கிண்டி பிறகு திரிகடுகு, தேசாவரம், அக்ராகாரம், கோட்டம், சிற்றரத்தை, நெல்லிப்பருப்பு, ஓமம், நற்சீரகம், சடாமாஞ்சில், வாய்விளங்கம், வால்மிளகு, மல்லி, குரோசானிஓமம், அதிமதுரம், சன்னலவங்கம், தாளிசப்பத்திரி, கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை இவைகளை வெதுப்பிய பொடித்த தூளைச் சிறுகச் சிறுகத் தூவி, பின்பு பறங்கிப்பட்டை 5 பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், வகைக்கு 2½ வராகன் எடை வெதுப்பிப் பொடித்த தூளையும், 4 பலம் சர்க்கரையையும் தூவி பதத்தில் இறக்கித் தேன் ஒரு

Koviloor Digital Library

படி விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு காலை, மாலை 48 நாள் கரப்பன் உணவுப் பொருள்கள் நீக்கிச் சாப்பிட நோய் தீரும்.

மேகத்தால் காணும், வாய்ப்புண், இரணங்கள், வெள்ளைப்புள்ளி, தடிப்பு, சிரங்கு, சூலைகட்டுக்கு மருந்து.

விளக்கெண்ணெய், சங்கஞ்சாறு, பாச்சனை வாட்டிப் பிழிந்த சாறு, நீர்ப்பூண்டுசாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு 3 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து 1 ஆழாக்கு வீதம் 3 நாள்கள் கொடுத்து 6 நாள்கள் உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருக்க நோய் நீங்கும். பாச்சனைவாட்டிப் பிழிந்த தண்ணீரைக் கால் படி வீதம் மூன்று முறை கொடுத்து முன்போல் பத்தியம் இருக்க நோய் தீரும்.

ஒழுக்கு, வெட்டை, மேகத்தால்காணும் தடிப்பு, இரணம். கையில் ஊறல், வெளுப்பு, சிரங்கு, அல்குல் புற்றுக்கு மருந்து.

உளுத்த பரங்கிப்பட்டை 10 பலம், திரிகடுகு, சன்னலவங்கம், ஏலம், செவ்வியம், கருஞ்சீரகம், கிராம்பு, திரிபலை, சித்திரமூலம், ஓமம், சாதிப்பத்திரி, சாதிக்காய், சங்கம்வேர், சங்கங்குப்பிவேர் வகைக்கு 2 கழஞ்சு வீதம் இடித்து வடிகட்டி 2 படி பசுவின் பாலும், அரைப்படி தண்ணீரும் கலந்து 7 பலம் சர்க்கரையும் கரைத்துப் பாகு செய்து அதில் மேற்படி தூளைத் தூவிக் கிண்டி, தேன், நெய் விட்டு ஓயாமல் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கிக் கொட்டைப் பாக்கு அளவு இரண்டு வேளையும் சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

2. பசுவின் நெய் 1 படி, சேங்கொட்டை ஒரு பலம் மூக்கு வெட்டிப் போட்டுக் காய்ச்சிப்பொடித்தமாவு கால் படி, பறங்கிப்பட்டை 5 பலம், மூக்குரட்டை, அமுக்கறாக்கிழங்கு, சங்கம்வேர், கொடிவேலி வேர் வகைக்கு 2 பலம் இவைகளையிடித்து வடிகட்டின தூளையும், 5 பலம் சர்க்கரையையும் சிறுகச்சிறுகத் தூவிக் கிண்டி வைத்துக்கொண்டு ஒரு நாளைக்குக் கொட்டைப் பாக்கு அளவு ஒரு மண்டலம் சாப்பிட்டு வர நோய் நீங்கும்.

மேககரப்பன், இரணம், சூலைக்கட்டு, மேகவாயுவுக்கு மருந்து.

பறங்கிப்பட்டை 3 பலம், சித்திரமூலம், திரிகடுகு, சங்கம்வேர், அமுக்கறாக்கிழங்கு, சீரகம் வகைக்கு 1 பலம் தூள்செய்து ஒரு படி நெய், 8 பலம் சர்க்கரை கலந்து காய்ச்சி உருகின உடனே கீழே இறக்கி அதில் கால் படி தேன் விட்டு, தூளைத் தூவிக் கிண்டி வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு எலுமிச்சங்காய் அளவு ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் நீங்கும்.

Koviloor Digital Library

2. பறங்கிப்பட்டை 5 பலம், அதிவிடயம், குரோசானி ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, திரிபலை, மிளகு வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்து, ஒரு படி பசுவின் பாலும் 6 பலம் சர்க்கரையும் போட்டுப் பாகுசெய்து, அதில் மேற்படி தூளைத் தூவிக் கிண்டி நெய் விட்டு இளகம் செய்து கொட்டைப் பாக்களவு ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

மேககாங்கை, அலுப்புக்கு மருந்து.

நிலவாகை, சீதேவிச் செங்கழுநீர், சித்திரமூலம், விலாமிச்சம் வேர், நிலப்பனை, நன்னாரி, சங்கு, அரத்தை, கருஞ்சீரகம், நற்சீரகம், திரிகடுகு, திரிசாதம், கோட்டம், மிளகு, அதிவிடயம், ஓமம், சிறுதேக்கு, வேர்க்கொம்பு, கெருடக்கொடி வகைக்கு 5 வராகன் எடை இவைகளை இடித்துத் தூள்செய்து அதில் பறங்கிப்பட்டைத் தூள், அமுக்கறாத்தூள் வகைக்கு 50 வராகன் எடை சேர்த்துப் பசுவின் பால் விட்டுப் பிசைந்து ஒரு பாண்டத்தில் பாலும் தண்ணீரும் கலந்து விட்டு வாயில் சீலையால் வேடுகட்டி அதன்மேல் பிசைந்தமருந்து வைத்துப் பிட்டவித்து உலர்த்தி நெய், தேன் விட்டு இரசாயனம் (சுவைப்பு) செய்துகொண்டு தேசிக்காய் அளவு உப்பு, புளி தள்ளிச் சாப்பிட நோய் நீங்கும்.

மேகத்தில் வெடித்த சகல சூலைக்கடுப்பு வாயுவுக்கு மருந்து.

பறங்கிப்பட்டை 3 பலம், மிளகு, திப்பிலிமூலம், செவ்வியம், தேசாவரம், மல்லி, வாய்விளங்கம், சாதிப்பத்திரி குரோசானி ஓமம், சுக்கு, கடுகுரோகணி, சிற்றரத்தை, இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு வகைக்கு 5 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை இவைகளை இடித்துக் கருங்கோழி வயிற்றுக்குள் வைத்து ஒரு பாண்டத்தில் சதுரக்கள்ளியை வெட்டிப்போட்டுத் தண்ணீர்விட்டு வாயில் துணியால் வேடு சுற்றி அரைத்துப் பாலில் கரைத்துக் கொதிக்க வைத்துத் தலைமுழுகிவர, நோய் தீரும் பத்தியம்:– நல்லெண்ணெய், புளி, கரப்பான் உணவுப்பண்டங்கள் நீக்கி வைக்கவும்.

மேகம், மேககாங்கையினால் உடல் எரிச்சல், தாகம், கண்புகைதல் பித்தக்கிறுகிறுப்பு, மயக்கம், சோம்பல், தலையில் மயிர் உதிர்தல், உடல் மெலிவுக்குத் தைலம்.

நெல்லிக்காய், பொற்றலைக்கரிப்பான், சீதேவிச் செங்கழுநீர், சிறுகீரை, பொன்னாங்காணி, தாமரைத்தண்டு, முசுமுசுக்கை, வல்லாரை, தண்ணீர்விட்டான், சிற்றகத்தி, சீந்தில்தண்டு இவைகளின் சாறு வகைக்கு 1 படி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, விலாமிச்சு, நன்னாரி, சிறுகாஞ்சோரி, வில்வம், நீர்முள்ளி, தூதுவளை இவைகளின் மூலம், வெட்டிவேர், சிற்றரத்தை, சந்தனம், மரமஞ்சள் வகைக்கு 5 படி இவைகளை இடித்து 1 படி தண்ணீரில் போட்டு வற்றவைத்தக் குடிநீர் 2 படி, நல்லெண்ணெய் 5 படி, பசுவின் பால் 1 பதக்கு இவைகளை ஒன்றாய்க் கலந்து அதிமதூரம், கோட்டம், சிறுநாகப்பூ, சதகுப்பை, தேவதாரம், சீரகம், மிளகு, மஞ்சள், கோரோசனை,

Koviloor Digital Library

இலவங்கப்பட்டை, குங்குமப்பூ, சிற்றரத்தை, மரமஞ்சள் வகைக்கு ½ பலம் வீதம் அரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து வாரத்துக்கு இரண்டு முறை தலைமுழுகி வர நோய் தீரும்.

2. அமுக்கறாக்கிழங்கு 40 பலம், அரக்கு இருபது பலம், சேவகனார் கிழங்கு, சிற்றாமுட்டி, தூதுவளை, நன்னாரி, சீந்தில்தண்டு வகைக்கு 5 பலம், இரண்டு தூணி நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாக வற்றவைத்து வடித்தக் குடிநீருடன் பசுவின் பால் 3 படி, நல்லெண்ணெய் 5 படி கலந்து சதகுப்பை, மஞ்சள், சந்தனம், முத்தக்காசு, கடுகுரோகணி, அரத்தை, சிறுதேக்கு, மஞ்சிட்டி, தேவதாரம், அதிமதுரம், வெட்டிவேர், விலாமிச்சு, சரக்கொன்றைவேர்ப் பட்டை, முக்காவேளைவேர் வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வாரத்துக்கு இரண்டு முறை தலைமுழுகிவரத்தீரும்

மேகப்புற்று, மேகச்சொரிக்கு மருந்து.

கருஞ்சூரை, சுக்கு, நாயுக்கோட்டான் இவைகளின் வேர்ப்பட்டை, பேய்க்குமட்டிவேர் வகைக்கு 10 பலம் வீதம் கலசத்தில் போட்டுக் குழித்தைலம் இறக்கி, கருங்குருவையரிசிப் பொரிமாவில் ஒரு பண எடை தைலம் வைத்து, மூன்று நாள்கள் ஆறு வேளை உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய்ச் சாப்பிட்டு மறு பத்தியம் மூன்றாவது நாளிலிருந்து ஏழு நாள்கள் வரை மிளகை வடி கஞ்சியில் அரைத்துத் தேய்த்து, தலை முழுக்குச் செய்து சங்கிலைப் போட்டு வறுத்த உப்புப் போட்டுக்கூட்டவும். பிறகு, ஒரு மண்டலம் வரை மிளகைக் கரிப்பான் சாற்றில் கொட்டி அதன்மேல், கோழியை வைத்து மூடிச் சீலைமண் செய்து நான்கு சாமம் தீபம்போல் எரித்து கோழியை எடுத்து எலும்பு நீக்கி உலர்த்தி இடித்து வடிகட்டினவுடன் ஓமத்தூள் 1 பலம், சர்க்கரை 10 பலம் கலந்து வைத்துக் கொண்டு திரிகடியளவு அரை மண்டலம் (24 நாள்கள்) புளி, கரப்பன் உணவுப் பண்டங்கள் நீக்கி உட்கொள்ள நோய் தீரும்.

மேகவாதம், கிரந்திக்கு மருந்து.

கருங்குங்கிலியம் சாம்பிராணி, கருஞ்சீரகம் வகைக்கு 1 பலம், சிறுசெருப்படை, கையாந்தகரை, பொடுதலை, வகைக்கு 2 படி, சங்கம்வேர்ப்பட்டை, மிளகரணைப்பட்டை, செங்கத்தாரிப்பட்டை, கொடிவேலி வேர்ப்பட்டை, அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 5 பலம், பறங்கிப்பட்டை, சதுரக்கள்ளி வேர்ப்பட்டை வகைக்கு பத்து பலம் இவைகளை இடித்துத் தூள்செய்துகொண்டு புது பாண்டத்தில் பசுவின் பாலும் தண்ணீரும் 18 படி விட்டு வாயில் துணியினால் வேடுகட்டி அதன்மேல் மேற்படி தூளை வைத்து நீர்வற்றியபின் எடுத்து உலர்த்தி, திரிகடி அளவு அரை மண்டலம் (24 நாள்கள்) உட்கொள்ள நோய் தீரும்.

மேகக்கரப்பான், கிரந்திக்கு எண்ணெய் (குடிநெய்)

விளக்கெண்ணெய் 1 படி, குருக அறிந்த ஈருள்ளி கால் படி, நாகமொச்சம் என்னும் காட்டுமொச்சக்கிழங்கு 3 பலம் சிதைத்துப் போட்டுக்காய்ச்சி ஈருள்ளி, மொரு மொருப்பான பதத்தில் பறங்கிப்பட்டை 1

Koviloor Digital Library

பலம் பொடித்துத் தூவி பதத்திலிறக்கி வடித்து ஒரு கரண்டி வீதம் காலையில் உட்கொள்ள வயிறு கழிச்சலாகும். அதன் கடுகை கழற்காய் அளவு சாப்பிட்டு வரவும். கைப்பு, புளி தள்ளவும்.

மேககூலை வீக்கத்திற்கு மருந்து

அமுக்கறாவேர் 4 பலம், திப்பிலி, ஓமம், திப்பிலிமூலம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், பறங்கிப்பட்டை, நீரடிமுத்து வகைக்குக் கால் பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு 1 வராகன் எடை இவற்றை இடித்துத் தூள் செய்து திரிகடி அளவு தேனில் உட்கொள்ளத் தீரும்.

பத்தியம்:– உப்பு, புளி நீக்கவும்.

2. வில்வம், விலாமிச்சு, நன்னாரி, முல்லை, மாதுளை, அமுக்கறா, மிளகரணை, தான்றி, கீழ்க்காய்நெல்லி, குருந்தொட்டி இவைகளின் வேர்கள், வெட்டிவேர், சடாமாஞ்சில், சந்தனம், அகில், தேவதாரம், வகைக்கு 1 பலம் இடித்து இருபது படி நீரில் போட்டு, வற்றவைத்துக் குடிநீர் எட்டு படி, நல்லெண்ணெய் எட்டு படி, செவ்விளநீர் 6 படி, பசுவின் பால், தாய்ப்பால், ஊமத்தஞ்சாறு, பனங்கள்ளு, பொற்றலைக் கரிப்பான்சாறு, கண்டங்கத்திரிவேர், மிளகுக்குடிநீர், தக்காளிச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து; சாதிக்காய், அதிமதுரம், கோட்டம், கார்க்கோலரிசி, நற்சீரகம், மல்லி, வால்மிளகு, பச்சைப் பூலாக்கிழங்கு, மரமஞ்சள், சடாமாஞ்சில் வகைக்கு 4 கழஞ்சு; இவைகளை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கற்பூரம், புனுகு, வகைக்கு 1 கழஞ்சு; சிற்றாமுட்டிவேர் 80 பலம், வெட்டிவேர், மிளகு, விலாமிச்சம்வேர் வகைக்கு 12 பலம் இடித்து, எட்டு மரக்கால் நீரில் போட்டு வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு குறுணி (8 படி) விட்டு, கோட்டம், அதிமதுரம் வகைக்கு 2 பலம், மிளகு 6 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர நோய் தீரும்.

3. சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம்வேர் வகைக்கு 12 பலம்; சிற்றாமுட்டிவேர் 36 பலம், மிளகு 20 பலம் இவைகளை இடித்து ஒரு மரக்கால் தண்ணீரில்போட்டு, எட்டொன்றாய் வற்ற வைத்து வடித்து, அதில் நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 4 படி கூடவிட்டு, சடாமாஞ்சில், அதிமதுரம், மஞ்சிட்டி, கச்சோலம், சந்தனம், தக்கோலம், தேவதாரம், கோட்டம் வகைக்கு அரைப் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர நோய் தீரும்.

4. கருஞ்சிற்றகத்தி இலையைப் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்தசாறு, நல்லெண்ணெய் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி தலைமுழுகிவர நோய் தீரும்.

5. செங்கழுநீர், நெய்தல், சிறுகீரை, தண்ணீர் விட்டான், முசுமுசுக்கை, பொன்னாங்காணி, விலாமிச்சம், நெருஞ்சி நன்னாரி, மிளகரணை, கோரை, சீந்தில் நீர்ப்பூலா, தாரை, சிற்றாமுட்டி, பேராமுட்டி சீதேவியார் செங்கழுநீர், வெள்ளறுகு, மயிர்மாணிக்கம், சடைச்சி, பாலை, பூமிச்சர்க்கரை, நிலப்பனை, வெட்டிவேர், கையாந்தகரை இவைகளின் வேர்கள் வகைக்கு 2 வீசை

Koviloor Digital Library

சிதைத்துப் பன்னிரெண்டு மரக்கால் நீரில் போட்டு, எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில், நல்லெண்ணெய் 8 படி கூடவிட்டு சாதிக்காய், சாதிப்பத்திரி, மரமஞ்சள், இலவங்கம், மல்லி கச்சோலம், வாய்விளங்கம், கல்நார், பசுமஞ்சள், நற்சீரகம், அரத்தை, சடாமாஞ்சில், மலாக்காய்ச்சந்தனம், சிறுநாகப்பூ, செஞ்சந்தனம், நெல்லிவற்றல், வெட்பாலையரிசி, வெந்தயம், செவ்வள்ளிக்கொடி, தேவதாரம், சாத்திரபேதி, மஞ்சிட்டி வகைக்கு 1 ½ பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் புனுகுசட்டம், கோரோசனை, குங்குமப்பூ இவைகளை இடித்துப் போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

6. வில்வவேர் 100 பலம், தூதுவளை, சீந்தில் தண்டு, சிற்றாமுட்டி, சிறுகாஞ்சோரி, நன்னாரி, கண்டங்கத்திரி, சிறுவழுதலை இவைகளின் வேர் வகைக்கு 10 பலம் இடித்து ஒரு தூணி நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண்ணெய் 8 படி, இளநீர், பசுவின்பால் வகைக்கு 5 படி ஒன்றாய்க் கலந்து சிறுநாகப்பூ, கோட்டம், சிற்றரத்தை, திரிபலை, சன்னலவங்கம், திரிகடுகு, மஞ்சள், சந்தனம், சடாமாஞ்சில் தாளிசப்பத்திரி வகைக்கு ஐந்து வராகன் எடை அரைத்துப்போட்டு இறுத்துக் காய்ச்சி வாரந்தோறும் தலைமுழுகிவரத் தீரும்.

7. மேற்படி எண்ணெயை ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வந்தால் என்பு காங்கை நீங்கித் தொந்தியுண்டாகும்.

8. மலாக்காய்ச்சந்தனம் 100 பலம், சீந்தில், சிற்றாமுட்டி, தூதுவளை, நன்னாரி, பேராமுட்டி, சிறுவழுதலை, சிறுமுன்னை, விலாமிச்சம், கண்டங்கத்திரி, வட்டத்திருப்பி, வெட்டிவேர், சீதேவிச் செங்கழுநீர், கோரைக்கிழங்கு, சிறுகீரை, பொன்னாங்காணி, வெதுப்படக்கி, தாழை, அசுவகெந்தி, நிலப்பனை, பூமிச்சர்க்கரை இவைகளின் வேர்கள் வகைக்கு 10 தூள்செய்து இரு தூணிநீரில் போட்டு, எட்டில் 1 பாகமாய் வற்றவைத்து, அதில் தண்ணீர்விட்டான்கிழங்குச் சாறு, இளநீர் வகைக்கு குறுணி (4 படி) பசுவின் பால் நல்லெண்ணெய் 10 படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம், அதிமதூரம், சன்னலவங்கப் பட்டை, ஏலம், சிறுதேக்கு, சிறுநாகப்பூ, மஞ்சள், சதகுப்பை, மிளகு, தாளிசப்பத்திரி, சடாமாஞ்சில், கச்சோலம், பச்சை மகரப்பூ நெல்லிப்பருப்பு, கிராம்பு, சண்பகப்பூ, பூலாக்கிழங்கு, தாமரைக் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு வகைக்குப் பலம் அரை, சேனைக்கிழங்கு கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி வகைக்கு 1 கழஞ்சு இளநீரில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி இறுத்துத் தலைமுழுக்குச் செய்து வரத் தீரும். தாது விருத்தியாகும்.

மேக.வெட்டை, நீரிழிவு, நீரடைப்பு, கல்லடைப்பு கடுப்பு, கிருச்சரம், மேககாந்தல், பித்தம், கண் புகைச்சலுக்குத் தைலம் (தலைமுழுக்கு நெய்)

வில்வ விதையைப் பட்டை நீக்கி, நரம்பை இழைத்த தூள் 10 பலம், நன்னாரிவேர் 5 பலம், தாழை விழுது, விலாமிச்சம்வேர், வகைக்கு மூன்று

Koviloor Digital Library

பலம் வெட்டிவேர், மலாக் காச்சந்தனட் தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்கு வலம் அரை இவைகளைத் தூள்செய்து 10 படி தண்ணீரில் போட்டு, வற்றவைத்து வடித்த குடிநீர் 2 படி, நல்லெண்ணெய் 1 படி, ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு ஐந்து வராகன் எடை, முத்தக்காசு, சடாமாஞ்சில், கோட்டம் வகைக்கு அரை வராகன் எடை, சாதிக்காய், வாள்மிளகு வகைக்கு அரை வராகன் எடை, அரைத்துப் போட்டு, இரண்டு நாள்வரை உமிக் காந்தலில் வைத்திருந்து மூன்றாம் நாள் மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து, ஏழுநாள் வரை நெல்லுக்குள் வைத்து எடுத்துக்கொண்டு, வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுக்குச் செய்து வரத்தீரும். தலைமுழுக்கு செய்த தினத்தில் உடலுறவு, புளி, புகை, தூக்கம், மீன், கரப்பான் உணவுப்பொருள்கள் நீக்க நோய் நீங்கும்.

2. வில்வவேர் சீவல், விலாமிச்சு, கொன்றைவேர், சீந்தில் தண்டு, கீழ்க்காய்நெல்லிவேர் வகைக்கு 8 பலம் இவைகளை இடித்து 40 படி தண்ணீரில் போட்டு, எட்டில் ஒன்றாய் வற்றவைத்து இறுத்தக் குடிநீருடன், 2 சேர் கொம்பரக்கை, தூணி நீரில் போட்டு வற்றவைத்தக் குடிநீர் 2 படி, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 5 படி ஒன்றாய்க் கலந்து திரிகடுகு, திரிபலை, கஸ்தூரி மஞ்சள், அதிமதுரம், கோட்டம், கருஞ்சீரகம், நற்சீரகம் சடாமாஞ்சில், சந்தனம், கிளியூரம்பட்டை, பச்சைப்பூலாக்கிழங்கு, பூஞ்சாந்துப் பட்டை, செவ்வள்ளிக்கொடி, இலவங்கப்பட்டை, ஏலம் வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர நோய் தீரும்.

3. சதாவேரி, நன்னாரி, பொன்னாங்காணி, வில்வம், சீந்தில், விலாமிச்சு, தாமரை, சிற்றாமுட்டி இவைகளின் வேர்கள், சந்தனம், கோரைக்கிழங்கு அசில் வெட்டிவேர் வகைக்கு 1 பலம் இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு, வற்றவைத்தக் குடிநீர் 2 படி, நல்லெண்ணெய், பசுவின் பால், இளநீர் வகைக்கு 2 படி, தாளிகொடுப்பை, சதாவேரி, வீழி, முருக்கு நொச்சி, குமரி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து; சந்தனம், செஞ்சந்தனம், சாதிக்காய், கோட்டம், வசுவாசி, மகரப்பூ, பச்சைகச்கோலம், மஞ்சிட்டி, சடாமஞ்சில், செங்கழுநீர்க்கிழங்கு, சண்பகப்பூ, ஏலம், இலவங்கம், இருவேலி, சிற்றரத்தை, தேவதாரம், செவ்வள்ளிக்கொடி, தக்கோலம், கடுகுரோகணி, பூலாக்கிழங்கு, சாதிப்பத்திரி, குரோசானிஓமம், சிறுநாகப்பூ, அதிமதுரம், விளாவரிசி, வெட்பாலையரிசி, வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து அதில் கஸ்தூரிமஞ்சள், கோட்டம், குங்கமப்பூ, கோரோசனை, புனுகுச்சட்டம் இவைகளைப் பொடித்துப் போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுக்கு செய்து வர நோய் தீரும்.

மேகநோய்ப் படலம் முற்றும்.

பவுத்திர நோய்ப் படலம்.

மூலத்தில் வாயுகண்டு மேகநீர் தோன்றி புரையோடி கண்விட்டு கீழ்ப்பாய்ச்சல்கண்டு முளை விழுதலாம்.

Koviloor Digital Library

சொல்லு மேகந் துளைத்து வெலும்பெலாம்
புல்லு கேமதிற் பூண்டு தசையெல்லாம்
வெல்லும் சாத்திய மசாத்திய மதானறிந்
துல்லு மாவியளிக் குமற்புதச் சுருக்கமிதே.

பவுத்திர நோயின் இயல்பு.

உடலுறவில் கனல்மிஞ்சி, மேகம் உண்டாகி, பீசத்திற்கும், அபானத்திற்கும், இடையில் அடி நரம்பின் பேரிலாவது, அதன் வலமிட புறத்திலாவது, இரு புறத்திலாவது, அண்டத்திலாவது அபானவாலிலாவது நமைச்சல் எடுத்து வீங்கி நொந்து கொப்பளித்துச் சீழும் நீரும் வடியும்; புரையாடி; நரம்பமுகி யற்றுகண்விழுந்து, அதன்வழியே நீரும் மலமும் இறங்கும்; அல்லது அபானவாயில் கழற்காய்ப்போலும், குமிழ்முளைபோலும், கற்போல் புடைத்துப் பழுத்துச் சீழ்வடியும்; புரையோடும்; வேதனைகாணும்; மலசலம் சிறுக்கும்; அபானங்கடுத்தெரியும்; கைகால் காந்தும்; கடுத்து உளையும், நித்திரை சற்றும் வராது; உடல்மெலியும்; அன்னம் செல்லாது, அசதிகளை உண்டாக்கும்.

மருத்துவம்:— குப்பைமேனித்தூள், திப்பிலித்தூள், சமமாய்க் கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

2. பறங்கிப்பட்டை 8 பலம், கெந்தி 4 பலம், பசுவின் நெய்யால் வறுத்து குக்கில் 4 பலம், திரிகடுகு, திரிபலை, திரிசாரம், அரிதாரம், அதிவிடையம், நவாச்சாரம், வெண்காரம், கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், குரோசானிஓமம், சிவதை, கடுகுரோகணி, வெள்ளைக்குங்கிலியம் வகைக்கு 4 கழஞ்சு இவைகளின் இடித்துத்தூள் செய்து, அதற்குச் சமமாய் சர்க்கரை சேர்த்து திரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

3. பச்சைக் கொடிவேலிவேர்ப்பட்டை 2 பலம், நத்தைச் சூரியிலை ஒரு எலுமிச்சங்காய் அளவு, இவைகளை மைபோல் அரைத்து, ஆழாக்கு நல்லெண்ணெயில் போட்டு, மெழுகு பதமாய் இளகம் செய்து, அரைமண்டலம் புளி, கரப்பான் உணவுப்பொருள் அவபத்தியம் நீக்கிச் சாப்பிடுவதோடு, நல்லெண்ணெயைக் கரண்டியில் சிறுக வெதுப்பி அதில் கொடிவேலிவேரைத் தட்டித் துணியில் முடிந்து நனைத்து வெதுப்பத்துடன் புண்ணில் ஒறறடம் செய்துவர நோய் தீரும்.

4. பச்சைக்கொடிவேலி வேர்ப்பட்டையும், கொன்றையும் சம எடையாய் அவித்து, நீர் சுண்டின பின்பு அரைத்து, ஒரு நாளைக்கு எலுமிச்சங்காயளவு வீதம் அரை மண்டலம் புளி தள்ளிச் சாப்பிட்டுவர பவுத்திரம், கண்டமாலை தீரும்.

5. பச்சைக்கொடிவேலி வேர்ப்பட்டை 5 பலம் இடித்து, 5 படி தண்ணீரில் போட்டு, ஒரு படியாய் வற்றவைத்து, வடித்ததில் பசுவின் நெய் கால் படி விட்டுக் கொதிக்கவைத்து, குழம்புபோல் வருகிற பதத்தில் திரிகடுகு, திரிபலை, கோரைக்கிழங்கு, கொடிவேலி, வேர்ப்பட்டை, விளாவரிசி, திப்பிலிமூலம், பச்சை தேவதாரம், மல்லி, சிறுதேக்கு, நன்னாரிவேர்,

Koviloor Digital Library

நெருஞ்சில்வேர், ஆனைத்திப்பலி, ஓமம், சீரகம், பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி வகைக்கு 5 வராகன் எடை வீதம் இடித்து, வடிகட்டின தூளைத் தூவிக் கிளறி, தேன்விட்டு இளகம்செய்து, 30 நாள் வரை நெல்லுக்குள் வைத்தெடுத்துத் தான்றிக்காயளவு காலை, மாலை அரை மண்டலம் புளி, கரப்பான், உணவுப் பண்டங்கள் நீக்கிச் சாப்பிட்டுவர பவுத்திரம், கண்டமாலை அண்டவாதம் தீரும்.

மேற்படி நோய்க்குக் கந்தக வடகம்.

கந்தகத்தைப் பசுவின் நெய்யில் 10 முறை உருக்கி, பசுவின் பாலில் சாய்த்து எடுத்துச் சங்கம்பழச் சாற்றால் 3 நாளாட்டி இரவியில் வைத்து நன்றாய்க் காய்ந்த பின்பு, முருங்கைப்பூச் சாற்றால் ஒரு நாளாட்டிக் காயவைத்து, அப்பால் மிளகு தக்காளிச்சாற்றால் ஒரு நாளட்டிக் காயவைத்து மணல்மறைவில் புடம் போட்டு, இதனடியில் கண்டிருக்கிற துணைமருந்துகளில் வைத்து உட்கொள்ளப் பவுத்திரம் முதலான நோய்கள் தீரும்.

பவுத்திரம், பிளவை, சூலை, குட்டம், கிரந்தி, அரையாப்பு, வாதம், மேகச்சொரி, கண்டமாலை, படர்தாமரை, பறங்கிப்புண், உருத்திரவாயு, குலைமுட்டி முதலான, மேக நோய்களுக்குச் சேங்கொட்டை மருந்துகள்.

செங்கொட்டையை மூக்குவெட்டி புது கல்சுண்ணாம்புக்குள் வைத்துப் புளித்தண்ணீர்விட்டு 6,7 முறை நீற்றி சுத்ததண்ணீரால் கழுவி, பின்பு எருமைச்சாணிப் பாலிலும், புளி இலைக் குடிநீரிலும் பூவரசம்பூக் குடிநீரிலும் தனித்தனியே வேகவைத்துத் தூய்மை செய்தது பலம்– 6, பறங்கிப்பட்டை 5 பலம், ஓமம், குரோசானி ஓமம், மிளகு, மஞ்சள், மரமஞ்சள், சிற்றரத்தை, மல்லி, குங்குமப்பூ, சித்திரமூலம், தேசாவரம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கடுக்காய், நற்சீரகம், தான்றிக்காய், சிறுதேக்கு, கஸ்தூரி, கோரோசனை வகைக்கு இரண்டு வராகன் எடை இவைகளை எல்லாம்வெதுப்பி, செங்கொட்டையைத் தவிர மற்றவையெல்லாம் தூள்செய்து, சேங்கொட்டையுடன் வெள்ளுள்ளி, பேர்ச்சங்காய், வகைக்கு 1 பலம், வெல்லம் 10 பலம், பசுவின் நெய், தேன் வகைக்கு 1 படி இவைகளையெல்லாம் ஒன்றாய்க் கலந்து கல்லுரலில் இட்டு மெழுகுபோல் இடித்து, ஒரு நாளைக்கு கொட்டைப்பாக்கு அளவில், சூதபற்பம் கந்தகவடகம் வகைக்கு ஒரு பண எடை வைத்து 15 நாள்கள் உட்கொள்ளத் தீரும். புளி தள்ளி, பசுவின் நெய்யால் மற்ற பத்தியக் காய்கறிகள் சேர்த்து உட்கொள்ளவும்.

2. தூய்மை செய்த சேங்கொட்டை 100 வராகன் எடை, கொடிவேலிவேர், பறங்கிப்பட்டை, சங்கு, அமுக்கறா, சிவனார் வேம்பு, மாவிலிங்கு இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 10 வராகன் எடை; கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், திப்பிலி, கடுக்காய்த்தோல், வாலுழுவையரிசி, கோட்டம் வகைக்கு 8 வராகன் எடை; இவைகளைத்தூள் செய்துகொண்டு சேங்கொட்டையும் ஒரு

Koviloor Digital Library

கொப்பரைத் தேங்காயையும் ஒரு சிரங்கையளவு எள்ளையும் ஒன்றாய் சேர்த்து இடித்து மெழுகுபோலான பின்பு துளுடன் 10 வராகன் எடை பனைவெல்லம், ஐந்து வராகன் எடை கருப்பூரத்தையும் பொடித்துச் சிறுகத்தூவி 4 சாமம் வரை இடித்து வைத்து, காலை, மாலை கொட்டைப்பாக்களவில் கந்தகவடகமும் இரசபற்பமும் வகைக்கு ஒரு பண எடை வைத்து பத்தியமாயுண்ணத் தீரும்.

3. கருஞ்சீரகம், இரசபற்பம், கெந்திவடகம் வகைக்கு 1 கழஞ்சு, வெல்லம், சித்திரமூலம், ஓமம் வகைக்கு 1 பலம் தூய்மை செய்த 20 சேங்கொட்டை இவைகளையெல்லாம் கல்லுரலிலிட்டு மெழுகுபோல் இடித்துக்கொண்டு நாளொன்றுக்கு நெல்லிக்காய் அளவு சாப்பிட்டுவரத் தீரும். பத்தியமாயிருக்கவும்.

4. கெந்தவடகம் 3 பலம், சேங்கொட்டை 2 பலம், பறங்கிப்பட்டை, சங்கு, சிறுகளா, ஆடுதீண்டாவேர், சங்கங்குப்பி, நிலவாகை, கரந்தை, மிளகரணை, அசுவகெந்தி, தலைச்சுருளி, பெருமரம், பிராய்க்கட்டை, மல்லிகை, தவசுமுருங்கை, சித்திரமூலம், சிறுசெருப்படை இவற்றின் வேர்ப்பட்டை வகைக்கு அரைப் பலம், இலவங்கப்பட்டை 1 பலம், மிளகு, சுக்கு, கோட்டம், கொல்லன், கோவைக்கிழங்கு, சீரகம், சிற்றரத்தை, சாதிக்காய், நெல்லிவற்றல், சண்பகப்பூ, சாதிப்பத்திரி, கடுக்காய், ஓமம், இலவங்கப்பத்திரி, தான்றிக்காய், திப்பிலி, கோரோசனை, கருஞ்சீரகம் வகைக்கு அரைப் பலம் இவைகளை எல்லாம் உலர்த்தி இடித்துத் துணியில் சல்லித்து சர்க்கரை 40 பலம், தேன் 1 படி ஒன்றாய்க் கலந்து கல்லுரலில் போட்டு 4 நாழி இடித்து அரை மண்டலம் (24 நாள்கள்) புளி, கரப்பன் உணவுப் பண்டங்கள் தள்ளிச் சாப்பிடத் தீரும்.

5. வேப்பம்பட்டை, பேய்ப்புடல், சீந்தில்தண்டு, கொடிவேலிவேர், ஆடாதோடைவேர், கண்டங்கத்திரி வகைக்கு அறுபது பலம் இடித்துக் கலந்து தண்ணீரில் போட்டு, நான்கில் ஒரு பாகமாய் வடித்து வைத்து அதில் கடுகுரோகணி, விளாவரிசி, தேவதாரம், வெட்பாலையரிசி, திப்பிலிமூலம், திப்பிலி, வெண்காரம், இந்துப்பு, சதகுப்பை, மிளகு, சுக்கு, கரும்பிசின், கொடிவேலி, வாலுமுவையரிசி, ஓமம், பங்கம்பாளைவேர், மஞ்சள், மரமஞ்சள் வகைக்கு 20 ½ பலம் இவைகளை எல்லாம் அரைத்துப் போட்டு நெய் ஐந்து படி, பால் நான்கு படி கூடவிட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ளத் தீரும்.

6. இருபத்தோரு பலம் சேராங்கொட்டையை, எருமைச்சாணியில் ஏழு முறை அவித்துப் பின்பு, புளியிலைச் சாற்றிலும், பசுவின் பாலிலும், குமரிச்சாற்றிலும், இளநீரிலும், ஒருநாள் அவித்து உலர்த்தி இரண்டாக வெட்டிச் சட்டியில் போட்டு நெய், பால், தண்ணீர் வகைக்கு 4 படி தனித்தனியே விட்டுக் காய்ச்சி வடித்துப் பாலையும், தண்ணீரையும் கலந்து 30 பலம் சர்க்கரையைக்கரைத்துப் பாகுசெய்து அதில் நெல்லிவற்றல், விதை நீக்கிய தான்றிக்காய், வகைக்கு 10 பலம் சுக்கு, சிற்றரத்தை, சடாமாஞ்சில், இலவங்கப்பட்டை வகைக்கு ½ பலம், நிலப்பனங்கிழங்கு கடுகுரோகணி,

Koviloor Digital Library

வெட்பாலையரிசி, சிவனார்வேம்பு வகைக்கு 2 பலம், சாதிக்காய், கிராம்பு, பத்திரி, மிளகு, ஏலம், ஓமம், திப்பிலி திப்பிலிமூலம், செவ்வியம், கார்க்கோலரிசி, மல்லி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், சித்திரமூலம், குங்குமப்பூ, வாலுழுவையரிசி, அமுக்கராவேர் வகைக்கு 1 பலம், வெதுப்பிப் பொடித்து வடிகட்டின தூளையும் குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு 5 வராகன் எடை வீதம் பொடித்தத் தூளையும் தூவி மேற்படி நெய்யையும் விட்டு இளகம் செய்து இளஞ்சூட்டில் தேன் கால் படி விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்களவில் இரசகற்பூரபற்பமும், கெந்தகவடமும் வைத்து அரை மண்டலம் உட்கொள்ள இதன் தலைப்பில் கண்டிருக்கிற நோய்கள் சூலை, முடக்கு, ஒழுக்கு, வெள்ளை விழுதல், மேகஊறல் ஆகிற நோய்கள் தீரும்.

பவுத்திரம், கண்ட மாலை, கிரந்தி முதலானவைக்குப் புகை.

இரசம், பாசாணம் துருசு, துத்தம், கெந்தகம் வகைக்கு அரை வராகன் எடை, கொடிவேலிவேர்ப்பட்டை 1 பலம், கரிப்பான் சாற்றால் ஒரு சாமம் ஆட்டித் துணியில் தடவி திரிபோல் உருட்டி உலர்த்தி, தீயில் கொளுத்தி ஆற்றி, புண்களில் புகை காட்ட ஆறும்.

பவுத்திர இரணங்களுக்குக் களிம்பு.

காசுக்கட்டி, துத்தம், ரசம் வெள்ளைக்குங்கிலியம் வகைக்கு 1 வராகன் எடை, சுண்ணாம்பு 4 வராகன் எடை, வெண்ணெய் 8 வராகன் எடை இவைகளை அரைத்துக் களிம்புசெய்து துணியில் ஊட்டி மேற்படி இரணங்களில் போட மாறும்.

2. தேங்காய்எண்ணெயில் மெழுகு, வெள்ளைக்குங்கிலியம் வகைக்கு 4 வராகன் எடை, மஞ்சள்பொடி 1 வராகன் எடை போட்டுக் காய்ச்சிக் குழம்பு போலிருக்கிற பதத்தில் துணியை நனைத்து வைத்துக்கொண்டு அதைக் கத்தரித்துப்போட சகல புண்ணும் ஆறும்.

உருத்திரம், கண்ட மாலை, விப்புருதி, பிளவை, அரையாப்பு, முதலான வீக்கத்திற்குமேப் பூச்சு மருந்து.

மருதோன்றி, நீலி, கார்த்திகைக்கிழங்கு, குன்றிமணி, எட்டி, பெருமரத்துப்பட்டை, கஞ்சா, வசம்பு, காயம், வெள்ளுள்ளி, இவைகளை அரைத்துப் பூச நோய் தீரும்.

பவுத்திர நோய்ப் படலம் முற்றும்.

கிரந்தி நோய்ப் படலம்.

தோலைப்பற்றிய 18–வகை சொரிப்படைகளைக் கூறுதலாம்.

Koviloor Digital Library

உடம்பில் எரிவு, தினவுகண்டு, கறுப்பாய்த் தடித்து அதில் அடிக்கடி செம்முளைபோல் தோன்றி, நீர்க்கட்டி, வெடித்து, வற்றி கருமையான அசறுண்டாகி உதிரும்; தழும்புகருப்பாய் இருக்கும்; சிலவேளை இரணமாயிருக்கும். இதைக் கருங்கிரந்தி என்றும்; தேகத்தில் செம்மை நிறமாய் வட்ட வட்டமாய்த் தடித்துப் படர்ந்து இவைகளின் மத்தியில் வெண்மையாய், சுற்று ஓரங்களில் முளை முளையாய்ச் சீழ்கட்டி வற்றிச் சிவந்த சருகுபோல் உதிர்ந்து, தழும்பு சிவப்பாய் இருக்கும். இதைச் செங்கிரந்தி என்றும்; உடலில் சிறு சிரங்கு போல் தோன்றிப் படர்ந்து மாறாத்தினவு, அரிப்பு காணும்; இதை அரிகிரந்தியென்றும்; உடலனைத்தும் கழற்காய்ப் போல் தோன்றி ஒவ்வொன்றாய் வெடித்துப் புண்ணாகும் இதை ஆலங்காய்க் கிரந்தியென்றும்; உடம்பில் கள்ளிப்பூபோல் தடித்து அரித்து இரணமாகும்; இதைக் கள்ளிப்பூ கிரந்தியென்றும் சொல்லப்படுகின்றன.

மருத்துவம்:– பூவரசங்காய்ச்சாறு 4 படி, சங்கங்குப்பி, கழற்சி, வெருகங்கிழங்கு, கிளிமூக்குக்கிழங்கு, வாதமடக்கி, சுடுதூரத்தி, கோடங்கிழங்கு, கோழியவரை, அசுவகெந்தி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி; பூவரசம்பட்டை 3 பலம், பீநாறிப்பட்டை 4 பலம், அசுவகெந்திக்கிழங்கு 5 பலம், செங்கத்தாரி, நீலி, மாவிலிங்கு, ஆயிலியம், நாய்க்கோட்டான், சிவனார்வேம்பு இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 10 பலம்; இடித்துப் பத்துப் படி தண்ணீரில்போட்டு வற்றவைத்தக் குடிநீர் 2 படி, சிற்றாமணக்கெண்ணெய் 3 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து வாலுழுவையரிசி, கெந்தகம், சீனிக்கற்கண்டு, மனோசிலை, நவச்சாரம், துருசு, துத்தம், சத்திச்சாரம், குக்கில், எவச்சாரம், திப்பிலிமூலம், செவ்வியம், கார்க்கோலரிசி, சதகுப்பை, சிறுதேக்கு, சண்பகப்பூ, வேப்பமுத்து வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் புளி, புகையிலை, கரப்பான் உணவுப் பண்டங்கள் நீக்கிச் சாப்பிட்டு வர கிரந்தி, உடலில் கருமையாயும் வெண்மையாயும் படரும். மேக ஊறல், மேகவெட்டை, தூலை, படர்தாமரை, அரையாப்பு முதலான மேகநோய்களும் தீரும்.

2. பறங்கிப்பட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், திப்பிலிமூலம், கிராம்பு வகைக்கு 1 கழஞ்சு, ஈருள்ளி 5 பலம், நிலப்பனைக்கிழங்கு, புளியமடல்கிழங்கு, சத்திச்சாரணைக்கிழங்கு, வெருகங்கிழங்கு, சங்கம்வேர், நன்னாரிவேர், கருணைக்கிழங்கு, கஞ்சாவேர், வெள்ளறுகு, அமுக்கறாக்கிழங்கு, கருஞ்சூரைப்பட்டை வகைக்கு 2 ½ பலம் இவைகளை அரைத்து ஒரு படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவரச் செங்கிரந்தி, அரிகிரந்தி, பொரிகிரந்தி, செவ்வாப்பு ஆகியவை தீரும்.

3. இரசகற்பூரம், கெந்தி, கருஞ்சீரகம், பறங்கிப்பட்டை இவைகளை ஓர் எடையாய் கையாந்தகரைச் சாற்றால் ஆட்டி தான்றிக்காய் அளவு உருண்டை செய்து ஒரு நாளைக்கு ஒரு உருண்டை வீதம் சர்க்கரையில் 10 நாள்கள் சாப்பிட்டு வரவும். பத்தியம்: உப்பு, புளி தள்ளிப் பசுவின் பால், நெய் கூட்டி வர நோய் தீரும்.

Koviloor Digital Library

4. பூவரசம்பட்டை, ஈருள்ளி, சிறுசெருப்படை, இவைகளின் சாறு வகைக்குக் கால் படி, விளக்கெண்ணெய் முக்கால் படி ஒன்றாய்க் கலந்து அதில் இரசம், இரசகற்பூரம், வீரம், கெந்தகம், கடுக்காய், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு 5 வராகன் எடை; சாரம், துருசு வகைக்கு 2 ½ வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி, பதத்தில் இறுத்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் புளி, புகை, கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கி 10 நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

5. சங்கங்குப்பையிலைச்சாறு, நுணாயிலைச்சாறு, கொடிக்கள்ளியை வாட்டிப் பிழிந்தசாறு, பசுவின் பால், நல்லெண்ணெய் இவைகளை ஓர் அளவாய்க் கலந்து ஒரு நாளைக்குக் கால் படி சாற்றில் அரைக்கால் வராகன் எடை இரசகற்பூரத்தை உரைத்து 3 நாள்கள் 6 வேளை சாப்பிட்டு, பசுவின் பால், வெள்ளாட்டுப் பால், வெந்நீர் கலந்துகொண்டு ஏழாம் நாள் உப்பை வறுத்துக் கூட்ட, கிரந்திகளும், இரணங்களும், கை, கால் பிடிப்பும் தீரும்.

6. சிற்றாமணக்கெண்ணெய், பொடுதலைச்சாறு வகைக்கு 2 படி, வீழி, கரிசாலை, சங்கங்குப்பி, ஈருள்ளி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி, ஒன்றாய்க்கலந்து அதில் சங்கு, சிறுகாஞ்சோரி, சித்திரமூலம், செம்முள்ளி, அமுக்கறா, செங்கத்தாரி, பூதகரப்பான், குமரி, சாரணை, வேம்பு, குரட்டை நெருஞ்சி, நிலவாகை, நெல்லி, விளை, பங்கம்பாளை கருஞ்சூரை, நாகதாளிக் கிழங்கு இவைகளின் வேர்ப்பட்டை, திரிபலை, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், ஏலம், கார்க்கோலரிசி, நேர்வாளம், கெந்தகம், தகரவிதை, அத்தித்திப்பிலி திப்பிலிமூலம், வலம்புரிக்காய், கற்கடகசிங்கி, சிறுநாகப்பூ, அதிமதுரம், இந்துப்பு, ஓமம், நிலப்பனைக்கிழங்கு, வெட்பாலையரிசி, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், கழற்சிப்பருப்பு, சத்திச்சாரணை வகைக்கு 1 பலம், இடித்து, கொடிக்கள்ளிச் சாற்றாலும், புங்கம் பாலாலும், வெள்ளாட்டுப் பாலாலும் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் இரசகற்பூரம் 1 கழஞ்சு, அரிதாரபற்பம் 2 கழஞ்சு போட்டு, 15 நாள் வரை தானியபுடம் வைத்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் 3 நாள்கள் சாப்பிட்டு 6 நாள்கள் வரை உப்பு, புளி நீக்கி பத்தியமாய் இருந்து ஏழாம் நாள் தலைமுழுக்குச் செய்ய கிரந்தி, அரையாப்பு, மேகவெடியூறல், குட்டம், சூலைநோய், படர் த்.மரை, புற்று, பிளவை, சொரி கரப்பான் ஆகியவை தீரும்.

7. பெரும் பூசனிக்காய்ச்சாறு 2 படி, தாழைவிழுது, கற்றாழை குமிழ், நெல்லிக்காய், கையாந்தகரை, வல்லாரை, வில்வம், கொடுப்பை, வீழி, ஆதண்டை இலை, அப்பைக் கிழங்கு, சங்கு, நீர்ப்பூலா, தென்னம்பாளை, தக்காளியிலை, ஆனைநெருஞ்சில், ஆலம்விழுது, அறுகம்வேர் இவைகளின் சாறு வகைக்கு 1 படி, கள்ளியை வாட்டிப் பிழிந்தச்சாறு, இளநீர், பசுவின் பால், காடித் தண்ணீர், கோசலம் யானை நீர் வகைக்கு 1 படி; சிற்றாமணக்கு முத்தைக் காடியில் ஊறவைத்து உலரப்போட்டுப் பசுவின் பால் விட்டு அவித்து, இடித்து இளநீரில் போட்டு வேகவைத்து ஊற்றின எண்ணெய் 5 படி, ஒன்றாய்க்கலந்து அசுவகெந்தி, நிலப்பனைக் கிழங்கு, நிலக்குமிழ்,

Koviloor Digital Library

சித்திரமூலம், தாமரை, பூமி சர்க்கரை, துத்தி, நீர்மேல் நெருப்பு இவைகளின் சமூலம் வகைக்கு 1 பலம்; சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கம், அதிமதுரம், சடாமாஞ்சில், சோம்பு, ஏலம், திரிகடுகு, திரிபலாதி, வெந்தயம், சீரகம், கஸ்தூரி மஞ்சள், கோரோசனை, பூரம், வால்மிளகு, கசகசா வகைக்கு 3 கழஞ்சு இவைகளை எல்லாம் வறுத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் பத்தியமில்லாமல் ஒரு மண்டலம் உட்கொள்ளா கருங்கிரந்தி, செங்கிரந்தி, புண், சிறுசிரங்கு, பெருஞ்சிரங்கு, பிரமை முதலான மேகநோய்கள் 21-ம் தீரும்.

8. பறங்கிப்பட்டை 6 பலம், கருஞ்சீரகம், ஓமம், குரோசானியோமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடயம், திரிபலை, சுக்கு, திப்பிலி, மிளகு, சமுத்திரப்பழம் வகைக்கு அரைப்பலம், வெள்ளறுகு, அமுக்கறாக்கிழங்கு, நிலஆவாரைவேர், எருக்கம்வேர், கொடிவேலிவேர் வகைக்கு அரைப்பலம் இவைகளை இடித்து திரிகடி அளவு பத்தியமாய் ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

9. ஒரு பாண்டத்தில் 1 படி தண்ணீர்விட்டு, அதன் வாயில் சீலையால் வேடுகட்டி அதன்பேரில் கள்ளிக்கொழுந்தை வைத்துப்பிட்டவித்து ஒரு சிரங்கைச்சாறு பிழிந்து அதில் ஒரு பண எடை நல்லெண்ணெய் கலந்து 3 நாள் கொடுத்து 6 நாள் பத்தியமாக இருக்கச் செங்கிரந்தி, கருங்கிரந்தி, தடிப்பு மாறும்.

10.ஆவாரைக் கொழுந்தை இடித்து ஆழாக்குச் சாறு பிழிந்து அதில் ஒரு பண எடை நல்லெண்ணெய் கலந்து 3 நாள் கொடுத்து 6 நாள் பத்தியமாய் இருக்க கள்ளிப்பூ கிரந்தித் தீரும்.

11. மஞ்சணத்திக்கொழுந்தை இடித்துச் சாறுபிழிந்து ஒரு வேளைக்கு ஆழாக்கு வீதம் 3 நாள் சாப்பிட எச்சக் கிரந்தித் தீரும்.

12. ஏரண்டத்தெண்ணெய் 1 படி, சங்கங்குப்பி, கழற்சி, செப்புநெருஞ்சி, சிறுகாஞ்சோறி, முருக்கு முருங்கை, நீர்முள்ளி இவைகளின் சாறு வகைக்கு ¼ படி, சிறு செருப்படைச் சாறு ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து, அதில் கெந்தி, தாளகம், பறங்கிப்பட்டை, கடுக்காய், நிலவாகைவேர், செந்தொட்டிவேர், சித்திரமூலம், கருஞ்சீரகம், வசம்பு இவைகளை அரைத்துப் போட்டு, காய்ச்சி வடித்துச் சூட்டுடன் 5 கழஞ்சு சர்க்கரை கூட்டி வைத்துக்கொண்டு ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு மேற்படி எண்ணெயை ஒன்று விட்டு ஒரு நாள் தலைமுழுக்குச் செய்துவர கிரந்தி, கரப்பான், சூலை, முடக்கு, மொளிக்கட்டு, இரணம் முதலானவைகளும் தீரும். பத்தியம்:- கைப்பு, புளி, கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கவும்.

13. கழற்சி, சுடுதுரத்தி சங்கங்குப்பி, நொச்சி, கவுதும்பை, கண்டங்கத்திரி, நிலப்பனங்கிழங்கு இவைகளின் சாறு, சிறுநீர் சிறறாமணக் கொண்ணெய் வகைக்கு படி-1- ஒன்றகக் கலந்து அதிமதுரம், முந்திரிக்காசு, சாதிக்காய், கிராம்பு, கோட்டம், கோரோசனை, சுக்கு, கார்க்கோலரிசி, ஏலம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு

Koviloor Digital Library

நாளைக்கு ஒரு கரண்டி வீதம் ஏழு நாள் உட்கொள்ள கருங்கிரந்தி, செங்கிரந்தி கள்ளிப்பூக்கிரந்தி, மேகவெட்டை முதலிய மேகநோய்கள் தீரும். உப்பு, புளி, கரப்பான் உணவுப் பொருள்கள் தள்ளிப் பத்தியம் நீர்க் கஞ்சி உட்கொள்ளத் தீரும்.

14. கால்படி நல்லெண்ணெயில் கெந்தகம், அரிதாரம், சாதிலிங்கம் வகைக்கு 1 ½ வராகன் எடை, கொடிவேலி, தைவேளை, நத்தைச்சூரி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 5 வராகன் எடை, தூய்மைசெய்த வாளம் 1 வராகன் எடை, அரைத்துப்போட்டுக் காய்ச்சி 3 நாள் காலையில் ஒரு கரண்டி வீதம் கடும்பத்தியமாய்ச் சாப்பிட்டு, 10 நாள் விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்து உப்பு வறுத்துக் கூட்டி உட்கொள்ளத் தீரும்.

15. விளக்கெண்ணெய் 1 படி, சங்கு சங்கங்குப்பி, வெள்ளறுகு, சுடுதூரத்தி, சின்னி, அவுரி, காட்டாமணக்கு, கழற்சிச்சாறு வகைக்கு ¼ படி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், ஓமம், சீரகம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், அரத்தை, சுக்கு வகைக்கு 5 வராகன் எடை, பறங்கிப்பட்டை வகைக்கு 20 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு நாளைக்கு ஒரு கரண்டி வீதம் மூன்று நாள், 6 வேளை உட்கொள்ள, கிரந்திப்புண், சூலைக்கடுப்பு, செங்கரப்பன், கட்டுக்கரப்பன், வெடிகரப்பன், அரையாப்புத் தீரும்.

பத்தியம்:– கைப்பு, புளிப்பு தள்ளவும்.

16. தூய்மைசெய்த சேராங்கொட்டை, வெள்ளுள்ளி, நாய்வேளைக்கொழுந்து வகைக்கு 1 பலம், இவைகளையெல்லாம் மெழுகுபோல் இடித்து பத்து வில்லைகள் செய்து, தீயில் வெதுப்பி ஒரு நாளைக்கு ஒரு வில்லையாக 5 நாள் சாப்பிட கிரந்தி, பவுத்திரம், அல்குல்சூலை, புற்று, வெடிசூலை, வாதம் தீரும்.

மருத்துணவு:– உப்பு இல்லாமல் நீர்க் கஞ்சி உட்கொள்ளவும், ஒன்பதாம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுகச் செய்து வரவும்.

பேய்ச் சொரியின் இயல்பு.

அடிக்கடி உடம்பில் தினவு கண்டு காசுபோல் தடித்துச் சிவந்து மறையும். நாள் சென்றால் இருமல், கபம் உண்டாகும்.

மருத்துவம்:– சங்கம் பட்டை, செங்கத்தாரிப்பட்டை, சிவன் வேம்பு, வெள்ளறுகு, சங்கங்குப்பி, சிறுசெருப்படை, சின்னிஇலை, நிலைவாகை, காட்டாமணக்கு இலை, பறங்கிப்பட்டை வகைக்கு 30 வரான் எடை, ஓமம், கருஞ்சீரகம் வகைக்கு 1 பலம் இவைகள் நிழலில் உலர்த்தித் தூள்செய்து வெந்நீரில் திரிகடி அளவு சாப்பிட பேய்ச்சொரி, சகல கரப்பன், கிரந்தி தீரும்.

மருத்துணவு:– கைப்பு, புளிப்புத் தள்ளவும்.

Koviloor Digital Library

கிரந்திப் புண், சிரங்குக்கு மேல் பூசும் தைலம்

இரசம் 1 வராகன் எடை, நீரடிமுத்து, துருசு, கெந்தகம் வகைக்கு 2 வராகன் எடை, இவைகளை வெற்றிலைச் சாற்றாலரைத்து ஆழாக்கு நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்து உடம்பில் தடவ மாறும்.

கிரந்தி நோய்ப் படலம் முற்றும்.

அரையாப்பு நோய்ப் படலம்.

பல பெண்களுடன் உடலுறவு கொள்வதாலும் நரம்புப் பிசகாலும், நோய் தோன்றுதலால் அரையாப்புப் படலமெனப் பெயர் பெற்றது.

மருத்துவம்:- பச்சைக் கொடிவேலி வேர்ப்பட்டையும் சுண்ணாம்பையும் சம எடையாய் அரைத்துப் பூச வற்றும்.

2. வெள்ளைப் பாடாணத்தையும் மெழுகையும் அரைத்து வில்லைத் தட்டி வெதுப்பி, வீக்கத்தில் வைத்துக் கட்ட கரைந்து போகும்.

3. கோவை இலையாயவது, நீர்ப்பூலாக் கொழுந்தையாவது, அவுரி இலையையாவது அரைத்துப் பசுவின் வெண்ணெயில் கலந்து வீக்கத்தில் கட்ட மாறும்.

4. பழம்புளி, 1 பலம், சேங்கொட்டை 10 இவைகளைப் பஞ்சு போல் தட்டி வீக்கத்தில் வைத்துக் கட்ட மாறும்.

5. வெள்ளைப்பூண்டும், வெள்ளருகும் அரைத்துக் கட்ட வீக்கம் மாறும்.

6. முடக்கொத்தான்இலை, சுண்ணாம்பு, வெல்லம் இவைகளை அரைத்துத் தடவ வீக்கம் மாறும்.

7. ஆதளைவேரை, நையத்தட்டி வைத்துக்கட்ட நோய் தீரும்.

8. எருக்கம்பிஞ்சும், வெள்ளைப்பூண்டும் ஓர் எடையாய் உமிக்காந்தலில் வெதுப்பி அரைத்து வீக்கத்தில் தடவ நோய் தீரும்.

குறிப்பு:- மேல்காட்டிய பற்றுக்களில் ஒன்றைப் போட்டு இதன் அடியில் காட்டியிருக்கிற எண்ணெய்களில் ஒன்றை உள்ளுக்குக் கொடுத்துவர நோய் தீரும். ஆனால், சீழ்கட்டிப் புரையோடினால், அதைக்கீறி பிளாஸ்திரி போட புண் ஆறும்.

அரையாப்பு நோய்க்கு எண்ணெய் (குடிநெய்)

1. மேற்றோல் சீவிய கொல்லங்கோவைக் கிழங்கு 2 பலம், அப்பக் கோவைக்கிழங்கு 2 பலம் பச்சைக் கொடுவேலி வேர்ப்பட்டை பலம் -1- நீர் முற்றியிலை பலம்-2- இதை அரைத்து அரைப்படி விளக்கெண்ணெயில் போட்டு எள்ளெண்ணெய் அரைப்படி கூடவிட்டு மிருதார்சிங்கி 2 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி மருந்துகள் மொரு மொரு என்று

Koviloor Digital Library

வெந்த பதத்தில் வெலலம் 2 பலம் தட்டிப்போட்டு இறக்கிவைத்துக் கொணடு கடுகு அரைப் பலமும், எண்ணெய் ஒரு கரண்டியுமாய்ச் சேர்த்து 12 வேளை சாப்பிட்டு உப்பு புளிதள்ளி, ஆவி நெய்து துவரம் பருப்பு, வெந்நீர், இவைகளைச் சேர்த்து ஏழாம் நாள் மேற்படி எண்ணெயைத் தேய்த்து தலைமுழுக்குச் செய்து புளி கூட்டிக் கொள்ளவும்.

2. பச்சைக்கொடிவேலி வேர்ப்பட்டை 8 பலம், தோல்நீக்கிய வெள்ளைப்பூண்டு 8 பலம் அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டு ஒரு படி பொடுதலைச்சாறு கூடவிட்டுக் காய்ச்சி வெள்ளைப்பூண்டு பொன்நிறமாய் வருகிற சமயத்தில் இறக்கி நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி எண்ணெயும், ஒரு கரண்டி கடுகுமாய்ச் சேர்த்துச் சாப்பிட்டு உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருக்க நோய் தீரும்.

3. கொடிவேலி, மாவிலிங்கு, தலைச்சுருளி இவைகளின் இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி, மேற்படி வேர்ப்பட்டைகள் மூன்றும் வகைக்கு 5 வராகன் எடை, மிளகு, வெள்ளைப்பூண்டு, கடுக்காய், கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம் வகைக்கு 4 வராகன் எடை, அரைத்துப் போட்டுக் கலந்து காய்ச்சி வடித்து 3 நாள்கள் சாப்பிட்டு, 6 நாள்கள் வரை உப்பு, புளி தள்ளிப் பத்தியமாய் இருந்து ஏழாம் நாள் தலைமுழுக்குச் செய்ய, அரையாப்பு, கண்டமாலை, ஆகிய நோய்கள் தீரும்.

4. பொடுதலைச்சமூலம், பூவரசம்பட்டை வகைக்கு கால் பலம் வீதம் மைபோல் அரைத்து ஆழாக்கு காடி நீரில் கரைத்து இதன் படி மூன்று நாள்கள் காலையில் சாப்பிட்டு, பத்தியம் உப்பில்லாமல் நீர்க்கஞ்சி உட்கொள்ளவும். மறுபத்தியம் மூன்று நாளிருந்து எட்டாம் நாள் தலைமுழுகி உப்பு வறுத்துக்கூட்ட அரையாப்பு, கிரந்தி, கரப்பான், பறங்கிப்புண் ஆகிய நோய்கள் தீரும். ஒருமாதம் வரை கரப்பான் உணவுப் பொருள்கள் தள்ளவும்.

5. சங்கு சங்கங்குப்பி, கருநொச்சி,சுடுதுரத்தி, வெள்ளறுகு, சின்னி, கிரந்திநாயகம், பூவரசம்பட்டை, கள்ளி, நீர்முள்ளி இவைகளை இடித்துப்பிழிந்தசாறு, விளக்கெண்ணெய் வகைக்கு 1 படி, ஒன்றாய்க் கலந்து ஒரு நாள் சூரியனில் வைத்து அதில் பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், கார்க்கோலரிசி, கஸ்தூரிமஞ்சள், வசம்பு, பூண்டு வகைக்கு 5 வராகன் எடை, அரைத்துப் போட்டு மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஆழாக்கு வீதம் மூன்று நாள் சாப்பிட்டு ஆறுநாள் வரை உப்பு, புளி தள்ளிப் பத்தியம் இருந்து ஏழாம் நாள் தலைமுழுக கிரந்தி, அரையாப்பு முதலான மேகப்பிணி நோய்கள் தீரும்.

அரையாப்பு முதலிய இரணங்களுக்குக் களிம்பு.

இலிங்கம், மிருதார்சிங்கி, இரசகற்பூரம், வெள்ளைக்குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காசிக்கட்டி, தான்றிக்காய் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துப் பசுவின் வெண்ணெயில் அரைத்துத் தண்ணீரில் ஒரு நாள் மிதக்கப் போட்டு மறுநாள் எடுத்துப் புண்களின் போட மாறும்.

Koviloor Digital Library

அரையாப்பு முதலிய இரணங்களுக்குத் துவர்ச்சீலை,

உதி, இலந்தை, நாவல், கருவேல் அதில் இவைகளின் பட்டை வகைக்கு 5 பலம், இடித்து இரண்டுபடி தண்ணீரிற் போட்டு மூன்று நாளூறவைத்து காய்ச்சி அரைப்படியாக வற்ற வைத்து பிழிந்து வடிகட்டி துத்தம், துருசு, கடுக்காய், காசுக்கட்டி, வெள்ளைக் குங்கிலியம், சீனிக்காரம் வகைக்குக் கால் பலம் பொடித்துப் போட்டு 5 எலுமிச்சம் பழச்சாறு பிழிந்து ஓயாமல் கிளறி குழம்பு பதத்தில் சீலையில் நனைத்து உலர்த்திக்கொண்டு துண்டாய் வெட்டி ரணங்களில் போட ஆறும்.

குறிப்பு:– பவுத்திரத்தில் சொல்லிய சேங்கொட்டை மருந்துகளுள் கிரந்திநோயில் சொல்லிய எண்ணெய்களும் இந்த நோய்களுக்கு உபயோகமுள்ளதெனக் கொள்க.

அரையாப்பு நோய்ப் படலம் முற்றும்.

சூலை நோய்ப் படலம்.

அதாவது குன்மத்தைப் பற்றி பக்க விலாவில் அவ் வாயு தங்குவதால் சூலை நோய்ப் படலம் எனப் பெயர் பெற்றது.

சூலை பதினெட்டின் இயல்பு.

1. உடல் கனத்துத் திமிராய் விறுவிறுத்துப் பிடரியையும் பாதத்தையும் பற்றி இழுத்துக் கை, கால், விரல்கள், மொளி முதலான பொருத்துக்கள் வீங்கி கடுத்துளைந்து நடக்க ஒட்டாமல் முடங்கி மலம் சிக்கும். குளிர் காலத்தில் இதை வாதசூலை என்றும்.

2. உடல் புண் போல் உளைந்து கை, கால், விரல்கள் வீங்கித் திமிராய் விறுவிறுத்து மெய் விருந்து குளிர்ந்து முகம் தலைவெதும்பிச் சயமும் பித்தமும் மீறி ஓடினால் வாத நீர்ச் சூலை என்றும்.

3. பிடரி, கழுத்து, மூட்டு, முள்ளந்தண்டு, நெஞ்சு, விலாவிடை, துடை இவைகள் உளைந்து குத்து வலித்துக் காலையில் வயிறு கடல் திரைபோல் இரைந்தால் வாத வாயுச் சூலை என்றும்.

4. நரம்பு வழி நீர் சென்று உடலில் பாய்ந்து அசைவுகள் வீங்கி வலித்து நீர் ஓடினால் வாத சுரோணித சூலை என்றும்.

5. கை, கால் பொருத்துக்களில் கறடு கட்டி உடம்பெல்லாம் தடித்துப் புண்ணானால் வாத பித்த சூலை என்றும்.

6. கை கால் மூட்டுகளில் மோது கட்டி உடல், வீங்கி அயர்ந்து நரம்பு தோன்றி நாக்கு குழறி, காது மந்தமாகி, சலவை கண்டால் சன்னி வாதச் சூலை என்றும்.

7. உடல் உஷ்ணத்தால் வறண்டு கடுத்து அசதியாய் நடுங்கி தலை வலித்து, வாய்க் கசந்து, கண், மூக்கு, நீர் மஞ்சளித்து, கை, கால் பொருத்துக்கள் உளைந்து, விறுவிறுத்து மோது கட்டினால் பித்த சூலை என்றும்.

Koviloor Digital Library

8. ஏ,கு, கால், நெஞ்சு இவை களிற் குத்து தீய்ந்து வரண்டு இருமிக்கபம் கட்டினால் ஐய சூலை என்றும்.

9. உடலில் அக்கினி அதிகரித்து, நீர்த்தாரையில், சுக்கிலம், சீழ், இரத்தம் சதை போல் இறங்கிக் குத்துதலும், வலியும் கை, கால் மொளிகளில் வீக்கம் கண்டால் விந்துப் பிரமேகம் என்றும்,

10. கிரந்தி நோயால் கை, கால் மொளி, பொருத்து நீர்க் கட்டி வீங்கித் தடித்துக் கரடு கட்டி வெடித்து சீழும் நீரும் வடிந்து இந்திரியம் கெட்டு நீர்க் கடுத்து இறங்கினால் கிரந்தி சூலை என்றும்.

11. மொளி முதலான அசைவு ஸ்தானங்கள் வீங்கி வெடித்து நொந்து புலால் நாறி உடம்பு வற்றினால் மாங்கிசச் சூலை என்றும்.

12. புறங்கால் தினவுண்டாகி வீங்கிப் பொருத்துகள் உளைந்து குத்தி, வாயில் கெப்பளம்போல் திரண்டு உடைந்தால் நீர்ச் சூலை என்றும், கிரந்தி நோயால் விஷ நீர், நரம்பு வழியாக உடலில் பரவி அக்கினி போல் எரிதலும், குத்தலும் கண்டு விரல் முதலான அவயவங்கள் வீங்கி மொளிகளில் மோது கட்டி வெடித்து எலும்புகள் தெறித்து விழுந்தால் நச்சு நீர்ச் சூலை என்றும்.

13. முழங்கால், முழங்கை முதலான மூட்டுகளில் மோது கட்டிக் குத்தி உளைந்து கடுத்து வெடித்துச் சீழும் சலமுஞ்சிந்தி எலும்பு தெறித்து விழுந்து கை கால் முடங்கித்தாது கெட்டாமல் எழும்புச் சூலை யென்றும் தேகம் வரண்டு வெளுத்து திமிரேறி வீங்கி கைகால் உளைந்து பொருத்துகளில மோதுகட்டி மலஞ்சிறுத்து தூக்கம் அசதி ஆயாசம் கண்டால் மூலபாண்டுச் சூலை யென்றும்

14. இரு விழி, உதடு நாக்கு, பல் கறுத்து உடல் வீங்கி பொருத்துகள் உளைந்து நொந்து மோது கட்டினால் நச்சு அழல் சூலை என்றும்.

15. முகம், வயிறு, முதுகு, அரை, துடை, புறங்கால் அதைத்து அயர்ந்து விருவிருத்து அசைவுகளில் மோது கட்டினால் வாதபாண்டுச் சூலை என்றும்.

16. வயிறும் துடையும் வீங்கிப் பொருத்து களிற்குத்தெடுத்து கிறுகிறுத்துக் கண், முகம், நீர், மலம் கருத்தாலும் அல்லது மஞ்சளித்தாலும் பித்த பாண்டு சூலை என்றும்.

17. உடல் வற்றி நரம்பு எல்லாம் தோன்றி வாயு மிகுந்து நெஞ்சுவலி, சுரம் மாறாமல் ஏற்பட்டு கை, கால் வீங்கி, மொளிகளில் கரடு கட்டி இருமல் எடுத்தால் பாண்டுச் சூலை என்றும்.

18. உடம்பில் ஒரு பக்கம் வீங்கி உளைந்து கடுப்பு எடுத்துக் கண் வெளுத்துத் தாகம் மிகுந்து சோம்பலும், பெருமூச்சும் உண்டானால் நச்சுப் பாண்டுச் சூலை என்றும்.

19. உடல் மிகக் கொதித்துப் பாவை போல் வற்றி நகக்கண்ணில் குத்தெடுத்து புத்தி மயக்கமாகிப் பொருத்துக்கற் வீங்கிக் கட்டினால் என்பு சுர சூலை என்றும்.

Koviloor Digital Library

20. உடலில் சுரம் மிகுந்தும்: கால் கை ஓய்ந்து குறுக்கிலும் மொளிகளிலும் குத்து உண்டாகி விரல்கள் எல்லாம் விறுவிறுத்து வலித்தால் சுரச் சூலை என்றும்.

21. சுரம், தலைவலி, உடலில் வீக்கம், பலவீனம் உண்டாகி மொளிகள் வீங்கி மோது கட்டினால் சுரமுறு சூலை என்றும்.

22. அண்டத்தில் வாயு பொருமி வலி எடுத்தால் அண்டவாயு என்றும், குறுக்குப் பிடரி நொந்து சுரம் காய்ந்து ஒரு பக்கத்து விதையில் வாயு விளங்கி மேல் நோக்கி ஏறினால் அண்ட சூலை, பக்கச் சூலை என்றும் அந்தரவாயுச் சூலை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

வாதசூலை, முடக்கு, வீக்கங்கடுப்பு, உளைவிற்கு மருந்து.

புங்கம்வேர் 40 பலம், சங்கம்வேர் 20 பலம் இடித்து நான்கு மரக்கால் தண்ணீர் விட்டு ஆவிபோகாமல் மேல்சட்டி முடிச்சீலைமண் செய்து இரண்டு சாமம் எரித்துக் குறுணியாக வற்ற வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம் ஏழுநாள் உட்கொள்ள நோய் தீரும்.

2. பறங்கிப்பட்டை, புனலித்தண்டு வகைக்கு 60 பலம், விழி தூதுவளைச்சமூலம் வகைக்கு 10 பலம், கொடிவேலிவேர் 3 பலம், சங்கம்வேர் 2 பலம், நறுக்கிப்பாண்டத்தில் போட்டு முன் போல் குடிநீர் செய்து சாப்பிட்டுவர நோய் தீரும்.

3. பறங்கிப்பட்டை 6 பலம், நிலாவரை 5 பலம், சுக்கு 4 பலம் இடித்துத் தூள்செய்து வேளை ஒன்றுக்கு அரைப் பலம் தூளை ஒரு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துப் பதினாறு வேளை சாப்பிட நோய் தீரும்.

4. கழற்சி, இலுப்பை, கையாந்தகரை, நொச்சி, நீர்முள்ளி இவைகளின் கொழுந்து வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்து இரண்டு படி தண்ணீரில் போட்டு ஆழாக்காய் வற்றக் காய்ச்சி வடித்து அதில் மிளகு, சுக்கு, மஞ்சள் உள்ளி வகைக்கு 1 கழஞ்சு வீதம் அரைத்துக் கலக்கி ஆழாக்காய் வற்றவைத்து ஆறு வேளை கொடுக்க நோய் தீரும்.

5. பறங்கிப்பட்டை 8 பலம், திரிகடுகு, வசம்பு, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி, கடுகு, செவ்வியம், அரத்தை, வெள்ளறுகு, கொடிவேலி, மிளகரணை, அசுவகெந்தி, சங்கு, நிலவேம்பு இவைகளின் மூலப்பட்டை வகைக்கு கால் பலம் இவைகளைத் தூள்செய்து கருங்கோழி வயிற்றுக்குள் வைத்து ஒரு பாண்டத்தில் சதுரக்கள்ளியை இடித்துப் போட்டுத் தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன் மேல், கோழியை வைத்து மூடி வெந்தபின் எடுத்து, எலும்பை நீக்கி எடுத்து, உலர்த்தித் தூள்செய்து திரிகடி அளவு தேனிலாவது, வெந்நீரிலாவது தினம் மூன்று வேளை சாப்பிடவும், புளி, புகையிலை, கரப்பான் உணவுப்பொருள் நீக்கி கோழிக்கால் சூப்பு, துவரம் பருப்பு, தூதுவளங்காய், முளைத்தடு சேர்த்து 15 நாள் சாப்பிட 18 வகைச்

Koviloor Digital Library

சூலை, கிரந்தி, வாதம், உதிரக்கட்டு, எருவாய்முளை, குடல்வலி முதலிய நோய்கள் தீரும்.

6. பறங்கிப்பட்டை 10 பலம், சீரகம், 3 பலம், கொடிவேலி, மிளகரணை, சங்கு சிவன்வேம்பு, அசுவகெந்தி இவைகளின் வேர்ப்பட்டை, வெள்ளறுகு, கோட்டம், அதிமதுரம், சிறுதேக்கு, வாய்விளங்கம், மரமஞ்சள், வெட்பாலையரிசி, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, இலவங்கப்பட்டை, திப்பிலி, மிளகு, சுக்கு, செவ்வியம், திரிபலை, ஏலம், திராட்சைப்பழம், பேரீச்சம்பழம், கருஞ்சீரகம் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு சட்டியில் ஒரு படி தண்ணீரும் ஆவின் பாலும் விட்டு வேடுகட்டி அதில் மேற்படி தூளைவைத்து மேல்மூடியால் மூடி பால் வற்றும் வரை பிட்டுபோல் அவித்து உலர்த்தி ஒரு படி பசுவின் நெய்யில் 8 பலம் சர்க்கரை போட்டுக் காய்ச்சி இறக்கி அதில் தூளைத் தூவிக் கிளறி சூடாறின பின்பு ஒரு படி தேன் விட்டுக் கலந்துவைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர வாதசூலை, உடம்புக்கடுப்பு, பித்தமேகம், தாது இழப்பு தீரும். தாது விருத்தி உண்டாகும். உடல் பொன் போல் ஆகும். நுண்புழு எல்லாம் செத்து விழும்.

7. சிவனார்வேம்பு, சங்கம்வேர், சித்திரமூலம், வெள்ளறுகு, அசுவகெந்தி, சங்கங்குப்பி, பிரப்பங்கிழங்கு, பூவரசு, நச்சுப்பாலை பட்டை வகைக்கு 1 பலம் வாய்விளங்கம், சுக்கு, காட்டுச் சீரகம் வகைக்கு பலம் 2 இவைகளை இடித்துத் தூள்செய்து ஆறுபங்கிட்டு வேளை ஒன்றுக்கு ஒருபங்குத்தூளை ஒரு படி நீரில் போட்டு கால்பலம் பறங்கிப்பட்டை தூளை ஒரு துணியில் முடிந்து நீரில் போட்டு ஆழாக்காய் வற்றவைத்துக் கொடுக்கவும். இந்தப் படி 9 வேளை கொடுக்க சகல சூலையும் தீரும். நீர்க் கஞ்சி தவிர வேறு ஏதும் ஆகாது.

8. பசுவின் நெய் படி ஒன்றுக்கு ஒரு பலம் சேங்கொட்டையை வெட்டிப் போட்டுக் காய்ச்சி நெய் வடித்து 5 பலம் சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சி கரைந்த பதத்தில் இறக்கி முக்குரண்டி அமுக்கிராக் கிழங்கு, சங்கம்வேர், கொடி வேலி வேர் இவைகளின் தூள் 2 பலம், கோதுமை மாவு கால் பலம் சிறுகத்தூவிக் கிளறி வேளைக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவு பத்து நாள்கள் சாப்பிட நோய் தீரும்.

9. தூய்மைசெய்த நூறு சேங்கொட்டையைச் சட்டியில் இட்டு வறுத்து வெடித்த பின்பு கல்லுரலில் போட்டு பொரித்த எள்ளு 1 படி, மாவிலிங்கப்பட்டையை இடித்து வடிகட்டின தூள் 1 படி, கொப்பரைத்தேங்காய் 2, பனைவெல்லம் 1 பலம் இவைகளைக் கூடப்போட்டு இடித்து எலுமிச்சங்காய் அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டைவீதம் ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

குறிப்பு:- விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுக்குச் செய்து வரவும்.

10. ஆழாக்கு பசுவின் நெய்யில் தூய்மைசெய்த அரைப்பலம் சேங்கொட்டையை இரண்டாய் நறுக்கிப் போட்டுக் காய்ச்சி வடித்து, அதில்

Koviloor Digital Library

நான்கு பலம் வெல்லத்தைப் போட்டுக் காய்ச்சி நன்றாக கரைந்த பின்பு இறக்கி அதில் திரிகடுகு, மல்லி, தேவதாரம், சித்திரமூலப்பட்டை வகைக்கு அரைப் பலம், இரசச்செந்தூரம், ரசகற்பூரம் வகைக்கு 1 வராகன் எடை, ஓமம் 2 வராகன் எடை இவைகளைப் பொடித்து வடிகட்டின தூளைத்தூவிக் கிளறி, எடுத்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு புளி, புகை, கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கி 15 நாள்கள் சாப்பிட்டுவர நோய் தீரும்.

11. பறங்கிப்பட்டை 4 பலம், சிவனார் வேம்பு, ஓமம், வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், சதகுப்பை வகைக்கு ஒரு பலம், மல்லி, கெந்தகம், திப்பிலி, குரோசானி ஓமம் வகைக்கு அரைப் பலம் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு கால் பலம், சித்திரமூலம், மிளகரணைவேர்ப்பட்டை, வெள்ளறுகு, செங்கத்தாரி வேர்ப்பட்டை வகைக்கு ஒரு பலம், அரைக்கால் இரசகற்பூரம் 3 வராகன் எடை இவைகளை இடித்து வடிகட்டி நல்ல சாராயம் விட்டுப் பிசைந்து ஒரு கருங்கோழியின் தலை, கால், சிறகு, குடல் முதலியவைகளை நீக்கி அதன் வயிற்றில் மேற்படி மருந்தை வைத்துத் தைத்துத் கொள்க. ஒரு பானையில் சிவனார் வேம்பு இடித்துப் போட்டு சாராயமும் தண்ணீரும் கலந்து 9 படி விட்டு வாயில் மெல்லிய துணியால் வேடு கட்டி அதன் மேல் மேற்படி கோழியை வைத்துச் சட்டி மூடி வாயில் சீலை மண் செய்து சிறு தீயாய் எரித்துக் கோழிவெந்த பின்பு எடுத்து எலும்பு நீக்கி உலர்த்தி இடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு தேனில் கலந்து ஏழு நாள் பத்தியமாய்ச் சாப்பிட சகல சூலை, முடக்கு நோய்களும் தீரும்.

12. பறங்கிப் பட்டை, திரிகடுகு, திப்பிலி மூலம் வகைக்கு 5 பலம், வாய்விளங்கம், கிராம்பு, சாதிக்காய், சீரகம் வகைக்குக் கால் பலம் சாதிப்பத்திரி, கோரோசனை வகைக்கு அரைக்கால் பலம், ஓமம் ஒரு பலம், சித்திர மூலம், சங்கு, நிலவாகை இவைகளின் வேர்ப் பட்டை, வெள்ளருகு வகைக்கு அரைப் பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு பாத்திரத்தில் இருபது பலம் சதுரக்கள்ளியை இடித்துப் போட்டுத் தண்ணீர் விட்டு வாயில் சீலையால் வேடு கட்டி அதன் மேல் தூளை வைத்து மேல் சட்டி மூடிச் சீலை மண் செய்து முத்தீயாய் மூன்று சாமம் எரித்து தூளை உலர்த்தி அரைத்து திரிகடி அளவு அரை மண்டலம் (24 நாள்கள்) உப்பு, புளி நீக்கிச் சாப்பிட்டு வர நோய் தீரும்.

13. சேங்கோட்டை, அழிஞ்சிக்கொட்டை, பூவந்திக் கொட்டை, எட்டிக்கொட்டை, வேப்பம்பிண்ணாக்கு, சிவன்வேம்பு இவைகளையெல்லாம் கள்ளிச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்திக் குழி தைலம் இறக்கிப் பறங்கிப்பட்டை 15 பலம், திரிகடுகு, திப்பிலிமூலம், இலவங்கப்பட்டை, ஏலம் இலவங்கப்பத்திரி, வாய்விளங்கம், ஓமம், குரோசானிஓமம், அரத்தை வகைக்கு 5 பலம், சித்திரமூலம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு வகைக்கு கால் பலம், இடித்துத் தூள்செய்து முன்போல் பிட்டவித்து உலர்த்தித் தூள்செய்து ஒரு திரிகடி வீதம் ஒரு பண எடை மேற்படி தைலத்தில் வைத்து 21 நாற் பத்தியமாய்ச் சாப்பிட்டு வரத் தீரும்.

Koviloor Digital Library

14. நான்கு பலம் பறங்கிப்பட்டையைத் தூள்செய்து 4 முறை சங்கங்குப்பி சாற்றில் ஊறவைத்து ரவியில் உலர்த்தி ஒரு சட்டியில் ரசம், கெந்தகம், குக்கில், சாதிலிங்கம், ரசகற்பூரம், வகைக்கு 1 வராகன் எடை, பொடித்துப் போட்டுச் சட்டிவாயைச் சீலையால் வேடுகட்டி அதில் மேற்படி தூளை வைத்து மேல் சடடியால்மூடி வாய்க்குச் சீலை மண்செய்து அரைச் சாமம் எரித்து எடுத்து திரிகடி அளவில் மேற்படி தைலம் காசு எடையில் வைத்துத் தேன்விட்டுக் கலந்து பத்து நாள் உட்கொள்ள நோய்த் தீரும்.

15. பறங்கிப்பட்டை, திரிகடுகு, ஏலம், லவங்கம், இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், கொடிவேலிவேர்ப்பட்டை, சிற்றரத்தை, ஓமம், குரோசானி, கையாந்தகரை, ஆயிலியப்பட்டை வகைக்கு 5 பலம், இரசகற்பூரம் 1 பலம், பொடித்து வடிகட்டிப் பாலில் பிட்டவித்து உலர்த்தி மறுபடி பசுவின்பாலில் 5 பலம் சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சி இறக்கித் தூளைத் தூவிக் கிண்டி வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு அரைப்பலம் வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

கை முடக்கு முதலான சூலை பதினெட்டு, மேக ஊறல், தடிப்பு சொரி, நீர்க்கருப்பு, வெள்ளை விழுதல், குட்டம் (பெருநோய்), கிரந்தி, அரையாப்பு, படர்த் தாமரை, தொடைவாழை, ரணம், கண்டமாலை, இலிங்கப்புற்று, அல்குல் புற்றுக்கு மருந்து.

கெந்தகம் 10 வராகன் எடை, தூய்மைசெய்த சேங்கொட்டை 30 வராகன் எடை இவைகளை சிதைத்துக் ¼ படி விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி சேங்கொட்டை வெடிக்கும் சமயத்தில் தீயாற்றி, தைலத்தை வடித்து இரண்டு வராகன் எடை, ரசத்தில் ஒரு பண எடை தைலம், 1 பண எடை பசுவின் நெய்விட்டுக் கலந்து 6 பங்கு செய்து 6 வேளை உள்ளுக்குக் கொடுத்து தைலமும் ரசமும் சேர்த்து ரணங்களில் போட்டுப் புளி, கரப்பான் உணவுப்பொருள்களை நீக்கிப் பசுவின் பால், நெய், வெள்ளாட்டு மாமிசம் சேர்த்து விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவர நோய் தீரும்.

2. சிவனார்வேம்பு சமூலத்தை நிழலில் உலர்த்தித் தூள்செய்து அதற்குச் சமன் வாலுழுவை அரிசி சேர்த்துக் கெருடன்கிழங்குச் சாற்றில் ஆட்டி வில்லைத் தட்டி உலர்த்தி முறைப்படிக் குழித்தைலம் இறக்கி அதில் இரசகற்பூரம் கால் பலம் பொடித்துப் போட்டு வைத்துக்கொள்க, சிவன்வேம்புச் சமூலம் 10, சங்கு, வெள்ளைச்சாரணை, மிளகரணை, வேம்பு, அமுக்கறா, கருங்காலி, கொடிவேலிவேர், நொச்சி, கருஞ்சூரை, சித்திரமூலம் இவைகளின் வேர்ப்பட்டை, தூதுவளைச் சமூலம், பறங்கிப்பட்டை, திரிகடுகு, திரிபலா, கார்க்கோலரிசி, கடல்நுரை, சோம்பு, சீரகம், வசம்பு, இந்துப்பு வகைக்கு 2 பலம் இவைகளை எல்லாம் இடித்துத் தூள்செய்து அதில் திருகுக் கள்ளி, சிறு பேய்க்குமட்டி, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு, வெள்ளாட்டுநீர் வகைக்கு 1 படி விட்டு, குழி தோண்டி மூன்று நாள் பூமிக்குள் புதைத்து

Koviloor Digital Library

எடுத்து நன்றாய் ரவியில் உலர்த்தி வைத்துக்கொண்டு திரிகடி அளவு ஒரு பணஎடை மேற்படி தைலத்தில் வைத்து உட்கொள்ளத் தீரும்.

3. சேங்கொட்டை, எட்டிக்கொட்டை, கொடிவேலிவேர், செஞ்சூரைவேர், கார்த்திகைக் கிழங்கு, கொடிக்கள்ளிவேர், வாலுழுவையரிசி வகைக்கு 10 பலம் நசுக்கிப் பாண்டத்தில் போட்டுக் குழித்தைலம் இறக்கிக்கொண்டு பறங்கிப்பட்டை 12 பலம், அழிஞ்சில், சங்கங்குப்பி, சிவன்வேம்பு, விடத்தலை இவைகளின் வேர்ப்பட்டை, கஸ்தூரிப்பட்டை, பூவரசம்பட்டை, ஆயிலியப்பட்டை, நாறாக்கரந்தைச் சமூலம் வகைக்கு 2 பலம், இரசகற்பூரம் 1 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து திரிகடித் தூளில் மேற்படி தைலம் விட்டுக் கலந்து புளி, புகை, கரப்பான் உணவுப்பொருள்கள் நீக்கி ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள நோய்தீரும். வாரந்தோறும் விளக்கெண்ணெய் தேய்த்து தலை முழுக்குச் செய்து வரவும்.

4. சிவன்வேம்புத் தூள் 10 பலம், வாலுழுவையரிசி, தாளிசப்பத்திரி, கிராம்பு, ஏலம், அதிமதூரம், கோட்டம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கருஞ்சீரகம், மிளகு, கடுக்காய், திப்பிலி, அதிவிடையம், பரங்கிப்பட்டை, சிறுநாகப்பூ, வால்மிளகு வகைக்கு கால் பலம் இடித்துத் தூள்செய்து இருவகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு தூளில் மேற்படி தைலத்தைக் காசு எடைவைத்து உண்ண நோய் தீரும். உடல் தூய்மையாகும்.

5. தூய்மை செய்த சேராங்கொட்டை 10 பலம், பொரித்த எள்ளு 1 ½ படி, கொப்பரைத் தேங்காய் 2, பறங்கிப்பட்டை, சங்கு, அழுக்கறா, சித்திரமூலம், மாவிலிங்கப்பட்டை, சிவன் வேம்பு திப்பிலி ஆனைத்திப்பிலி, கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், வாலுழுவையரிசி, குரோசானியோமம், வெற்றிலைக்காம்பு, கடுக்காய், கோட்டம் வகைக்கு 1 பலம், இரசகற்பூரம் 5 வராகன் எடை, பனைவெல்லம் 5 பலம் எடுத்து இவைகளை நன்கு இடித்து ஒருவேளைக்கு திரிகடி அளவு காசு எடை அளவு தைலம் விட்டு ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும். புளி, கரப்பான் முதலான உணவுப் பொருள்கள் நீக்கிப் பத்தியமாக இருக்க வேண்டும்.

6. சங்கு, சங்கங்குப்பி, கொடிவேலி, நிலப்பனை, அசுவகெந்தி, குமிழ், நீர்க்குமிழ், நெருஞ்சில் பூவரசு, செங்கத்தாரி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 1 பலம், திரிகடுகு, ஓமம், கோட்டம் இவைகளை அரைத்து இஞ்சி, சன்னலவங்கப்பூப் பட்டை வகைக்கு அரைப்பலம், பறங்கிப்பட்டை 5 பலம் இவைகளை இடித்து வடிகட்டி ஒரு படி பசுவின் நெய்யில் 10 பலம் சர்க்கரை போட்டுக் காய்ச்சி இறக்கித் தூளைத் தூவிக் கிண்டி ஆறினபின் தேன்விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு ஒரு வேளைக்கு கொட்டைப்பாக்கு அளவில் ஒரு காசு எடை அளவு தைலம் சேர்த்துச் சாப்பிட்டு வர நோய் தீரும்.

7. நிலவாகை, சிவனார்வேம்பு, விராலி வகைக்குக் கால் துலாம் வீதம் கண்டந்துண்டமாய் நறுக்கி வெள்ளாட்டு நீரில் ஓர் இரவு ஊறவைத்து இரவியில் உலர்த்தி ஒரு பாண்டத்திலடைத்து குழித் தைலமிறக்கிக்கொண்டு பறங்கிப்பட்டை, பெருங்காயம், கார்க்கோலரிசி, அக்கிராகாரம், கஸ்தூரிமஞ்சள்,

Koviloor Digital Library

ஏலம், திரிபலை, திப்பிலி, வால்மிளகு வகைக்குக் கால் கழஞ்சு, இந்துப்பு, நவாச்சாரம், வெண்காரம், வெடியுப்பு வகைக்கு அரை கழஞ்சு, கிராம்பு 1 கழஞ்சு, சாதிக்காய் கழஞ்சு 2 ஒரு பேய்க்குமட்டிக்காய் இவைகளை எல்லாம் மேற்படி நீர் விட்டரைத்து முற்றின தேங்காய்க்குள் அடைத்துக் காஞ்சிரங்குச்சி முளையடித்து அதற்கு மேல் லவணச் சுண்ணமும், ஆகாசத்தூளும் அரைத்து தூணியிலூட்டி மூன்று சீலை செய்து குக்குடப் புடம் போட்டுச் சிரட்டை நீக்கி அரைத்து உருண்டை செய்து ஒரு நாழிகைக்கு நெல்லிக்காய் அளவில் 3 கழஞ்சு தைலம் வைத்து ஏழு வேளை சாப்பிட்டு நாலாம் நாள் பசுவின் நெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இவைகளை ஓர் எடையாய்க் கலந்து காய்ச்சி தலையில் தேய்த்து வெந்நீரில் தலைமுழுக்குச் செய்து வந்தால் வாயு, கெண்டை, நீறாமை, கவுசி, மேகம், வாதம், சூலை முதலான நோய்களும் தீரும்.

8. பறங்கிப்பட்டை, ஆடாதோடைமூலிவேர், (ஆடுதீண்டாப்பாளை) பிரப்பங்கிழங்கு, அதிவிடையம், அக்கிராகாரம், புண்ணாக்கு, பூண்டு வகைக்கு 1 பலம், கார்க்கோலரிசி, அதிமதுரம், சன்னலவங்கம், சீரகம் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துத் திரிகடி அளவில் 3 கழஞ்சு தைலம்வைத்து அரை மண்டலம் (24 நாள்கள்) உட்கொண்டு மேற்படி முக்கூட்டு எண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவர அனுபோகத்தினால் நேரிட்ட சூடு, சலமேகம், மேகத்தடிப்பு, வெள்ளைபடர்தல், வாதமுடக்கு, சன்னி, குட்டம், சூலைநோய், காமாலை, வாயு, கெண்டை, இரணம், முதலான நோய்களும் தீரும்.

9. மேற்படி தைலத்தில் கெந்தகசெந்தூரம், தங்கசெந்தூரம் வைத்து ஒரு மண்டலம் உட்கொள்ள நரை திரை மாறும்; உடல் சிவந்து மின்னும்; மேற்படி தைலம் உட்கொள்ளும்போது மிளகு, பசுவின் பால், நெய், சர்க்கரை, துவரை, பாசிப்பயறு, கத்தரிப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, பொன்னாங்காணி, முருங்கைப்பிஞ்சு கூட்டி மற்ற உணவுப்பொருள்களை நீக்கிவர நோய் தீரும்.

10. வெள்ளறுகு, சிவன்வேம்பு, சங்கம்வேர் இவைகளை ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து திரிகடி அளவில் ஒரு காசு எடை தைலம் வைத்து ஒரு பட்சம் சாப்பிட்டு வர நோய் தீரும்.

11. பறங்கிப்பட்டை 10 பலம், சித்திரமூலம், பிறப்பங்கிழங்கு, நன்னாரி, ஆடு தீண்டாப்பாளை, அவுரி, வாதமடக்கி, கெருடக்கிழங்கு, அப்பைக்கிழங்கு, கீரிப்பூண்டு, நிலப்பனங்கிழங்கு, அரத்தை, சேங்கொட்டை வகைக்கு 2 1/2 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு பாண்டத்தில் வெள்ளாட்டுப்பாலும், பசுவின் பாலும் வகைக்கு 1 படி வீதம் ஒன்றாய்க் கலந்து விட்டு வேடு கட்டி அதில் மேற்படி தூளை வைத்து மேற்சட்டி மூடிச் சீலைசெய்து பால் வற்றும் வரை அவற்றைப் பிட்டவித்து உலர்த்திப் பொடித்துக் கொண்டு திரிகடித் தூளில் காசு எடைத் தைலம் விட்டுக் கலந்து இரசகற்பூரம், தாகளச்செந்தூரம் இவைகளை வகைக்கு ஒரு காசு எடை வைத்து உண்ண நோய் தீரும்.

12. அரிதாரம், கந்தகம், எள்ளு, எட்டிவிதை, சேங்கொட்டை, சித்திரமூலம், ரசம், கெந்தகம், மரமஞ்சள், ஓமம், மாசிக்காய், சாதிக்காய்,

Koviloor Digital Library

வசம்பு, உள்ளி, கொள்ளு, துருசு, துத்தம், இந்துப்பு, கோட்டம், கார்க்கோலரிசி வகைக்கு ஒரு பலம், அமுக்கறா வேர்ப்பட்டை 20 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து கல்வத்திலிட்டு கரிசாலைச்சாறு, சிறு செருப்படைச்சாறு, கோழிமுட்டை வெண் கரு வகைக்குக் கால் படி வீதம் இட்டு அரைத்துச் சிறு சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் இச்சாபத்தியமாய் ஒரு மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

பத்தியம் இல்லை. பால், நெய், மோர் மிகுதியாய்க் கூட்டி வரவும்.

வாத சூலை சுரோணித சூலைக்கு

சிறுசெருப்படை, 1 கழஞ்சு, சிவனார்வேம்பு முருங்கை, தும்பை, கருக்கு வாய்ச்சி நொச்சி இவைகளின் தளிரை ஓர் எடையாய் இடித்துக் கால் படி சாறு பிழிந்து அதில் ரசகற்பூரம் 1 வராகன் எடை உரைத்து ஐந்து நாள்கள் காலையில் கொடுத்து பத்தியம்: புளி, கரப்பான் உணவுப்பொருள்கள் தள்ளி, நீர்க்கஞ்சி உட்கொள்ளவும்.

வாதசூலை, நடுக்கு சன்னிக்கு மருந்து.

தும்பை, நொச்சி, மேனி, பொடுதலை, வீழி, வெள்ளுள்ளி, இஞ்சி, முருங்கை, பிரண்டை இவைகளின்சாறு வேப்பெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் திரிகடுகு, சிறுதேக்கு, வசம்பு, குக்கில், கெந்தகம், மஞ்சள், சடாமாஞ்சில், பறங்கிப்பட்டை, ஓமம் வகைக்கு மூன்று கழஞ்சு, அரைத்து போட்டு காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் பூச நோய் தீரும்.

வாயு சூலைக்கு மருந்து.

திரிகடுகு, இந்துப்பு, ஓமம், காயம் வகைக்கு 1 பலம் இவைகளை வெதுப்பிப் பொடித்த தூளுடன் சிவன்வேம்புசமூலத்தை நிழலில் உலர்த்தி இடித்து வடிகட்டின தூள் அரைப்படி கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை திரிகடி அளவு பத்தியமாய் 10 நாள்கள் தேனில் கலந்து உட்கொள்ள நோய் தீரும்.

வாதசூலை, மேகசூலை, கிரந்தி, வண்டுகடிக்கு மருந்து.

எருக்கம்பூ, குப்பைமேனி, கெந்தகவடகம், நெல் பொரி இவைகளை ஓர் எடையாய் இடித்து வடிகட்டின தூளை வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டுவர நோய் தீரும்.

சூலைகடுப்பு, வீக்கத்திற்கு மருந்து.

வில்வஇலையை இடித்து ½ ஆழாக்குச் சாறு பிழிந்து அதில் பெருங்காயம், வெள்ளுள்ளி வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கி நாள் ஒன்றுக்கு இரண்டு வேளையாக ஐந்து நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

Koviloor Digital Library

நச்சுப்பாண்டு, மூலப்பாண்டு, சூலைக்கு மருந்து.

தூய்மைசெய்த கெந்தகம், அரப்பொடி, திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம், ஓமம், அத்தி, திப்பிலி, கடுகு, வெள்ளுள்ளி, கிரந்தி நாயகம், கிராம்பு, சாதிப்பத்திரி, கடுகுரோகணி, சிவதை, கோட்டம் வகைக்கு அரைப் பலம் இவைகளைப் பொடித்து வேளை ஒன்றுக்கு திரிகடி அளவு ½ ஆழாக்கு வில்வஇலைச் சாற்றில் பத்து நாள்கள் உட்கொள்ள நோய் தீரும்.

வாதபாண்டு சூலைக்கும், வெடிச் சூலைக்கும் மருந்து.

இரும்பு, காரீயம், செம்பு இவைகளின் அரப்பொடி வகைக்கு 1 பலம் இவைகளைத் தனித்தனியே தூய்மைசெய்து குமரிச்சாற்றில் 10 புடம், கையான் சாற்றில் 3 புடம், நாவற்பட்டைச்சாற்றில் 3 புடம் போட்டு எடுத்து அதில் கெந்தகம், தாரம் வகைக்கு 1 கழஞ்சு, இரசம் 3 கழஞ்சு கூட்டி, எலுமிச்சம்பழச்சாற்றாலும், முருக்கிலைச்சாற்றாலும், தனித்தனியே அரைத்து 3 புடம் போட்டு வைத்துக்கொண்டு பசுவின் பாலில் தூய்மை செய்த பரங்கிப் பட்டை, கெந்தகம் வகைக்கு 2 பலம், திரிகடுகு, திரிபலை, சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம் வகைக்குக் கால் பலம் இவைகளைத் தூள்செய்து திரிகடி அளவு மேற்படி செந்தூரம் ஒரு வராகன் எடை வைத்து அரை மண்டலம் உட்கொள்ள நோய் தீரும்.

பிரமேகச்சூலை, இலிங்கச்சூலைக்கு மருந்து.

பறங்கிப்பட்டை 8 பலம், கெந்தகம், அசுவகெந்தி வகைக்கு 4 பலம், சித்திரமூலவேர்ப்பட்டைச் சமூலம் 2 பலம் இவைகளை இடித்துத் தூள்செய்து அதில் திரிகடி அளவு எடுத்துச் சர்க்கரையில் உட்கொள்ள பிரமேகச்சூலை, தீரும்.

இஞ்சிச்சாற்றில் உட்கொள்ள லிங்கச்சூலை, நெஞ்சடைப்பு, மூர்ச்சை, வாயு, வயிறு எரிவு ஆகிய நோய்கள் தீரும்.

கொடிவேலிக் குடிநீரில் உட்கொள்ள பித்தபாண்டு, விஷபாகம், வயிற்றுவலி, குன்மம், சோகை குணமாகும்.

வேப்பெண்ணெய் 2 படி, கொடிவேலிவேர் 5 கழஞ்சு, கருவேல், வெள்வேல், விளா இவைகளின் பிசின், அதிமதுரம், அறுவகையரிசி, சிற்றரத்தை, அபின், கார்க்கோலரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்ன லவங்கப்பட்டை, கிராம்பு, ஏலம் வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நாழி ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உடம்பில் துவாலையிட்டு வர நோய் தீரும்.

எலும்புச் சூலை, வெடிசூலை, பறங்கிப்புண், கிரந்திக்கு மருந்து.

கெந்தகம், காந்தம், பொரிகாரம், வகைக்கு 2 கழஞ்சு, இரசம் 1 கழஞ்சு இவைகளைப் பொடித்துப் பனைவெல்லத்துடன் சேர்த்து அரைத்துத்

Koviloor Digital Library

தவிட்டில் பிரட்டி ஆறு உருண்டை செய்து நாள் ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் 3 நாள் கொடுத்து கைப்பு, புளிப்பு தள்ளி விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்துவர நோய் தீரும்.

2. சிற்றாமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் வகைக்குக் கால் படி, முருங்கைப்பிசின், கழற்சி, ஆவாரை, சங்கு, எருக்கம்பழுப்பு, மாவிலிங்கு, மூர்க்கரைச்சாரணை, விளாத்தி இவைகளின் சாறு வகைக்கு ½ ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில் வெள்ளைப்பூண்டு, கடுகு, சுக்கு, வசம்பு, திப்பிலி வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி, பதத்தில் வடித்து ஒரு வேளைக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளத் தீரும்.

3. சத்திச்சாரணைக் கிழங்கு, சித்திர மூலப்பட்டை, வீழிவேர்பட்டை, இந்துப்பு, வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம், வெண்காரம் 8 கழஞ்சு, தூய்மைசெய்து முளைபோக்கின வாளம் 50 வராகன் எடை இவைகளைக் கால் படி கொடிக்கள்ளிப் பாலில் ஆட்டி, இரண்டு படி விளக்கெண்ணெயில் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து உடல் பலமும், வியாதி பலமும் அறிந்து, மருந்தை அளவிட்டுக் கொடுக்க நன்றாய் கழிச்சலாகி மேற்படி நோய் தீரும்.

4. பெருங்காயம், மிளகு, வெள்ளுள்ளி, சுக்கு, சத்திச்சாரணை கிழங்கு இவைகளை ஓர் எடையாய் சிதைத்துப் போட்டுக் குடிநீர் செய்தாவது ஒரு கழற்சிப் பருப்பும், ஒரு கொட்டைப்பாக்கு அளவு மேற்படி கொழுந்தும் அரைத்து ஒரு கோழி முட்டைக்கருவில் போட்டுப் பொரித்தாவது மூன்று நாள் ஆறு வேளை கொடுத்துப் பெரிய முடக்கொத்தான் இலை, கழற்சிக் கொழுந்து, உப்பு, வசம்பு, வெள்ளுள்ளி இவைகளை ஓர் எடையாய் இடித்து வதக்கி அண்டத்தில் ஒற்றடஞ் செய்து கட்டத் தீரும்.

சுர சூலைகளுக்கு மருந்து.

கொள்ளுக்காய், பொடுதலை, கையாந்தகரை, குருந்து, மூவிலை, மின்னி, குப்பைமேனி இவைகளின் சாறு வகைக்கு அரைப்படி பசுவின் நெய், வெள்ளாட்டுப் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம், வாய்விளங்கம், கோட்டம், கருஞ்சீரகம், நற்சீரகம், தேற்றான்விதை, திரிகடுகு, உள்ளி, இலவங்கப்பத்திரி, சாதிபத்திரி கிராம்பு (பச்சை), அதில் எட்டிவிதை வகைக்கு 2 கழஞ்சு இடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

வாயில் ஏற்படும் சூலைப் புண்களுக்கு மருந்து.

எட்டுப்படி ஆற்றுத் தண்ணீரை ஒரு படியாய் வற்றவைத்து அதில் ஒரு படி பொடுதலைச் சாறும், முற்றின தேங்காய்ப்பூவும் போட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து ஒரு காசு எடை வீதம் காலை, மாலை சாப்பிட்டுவர, கரு நாக்குச் சூலை, மேல்வாய்ப்புண் உள்நாக்கை அரிக்கும் கிரந்தி; பல்லீற்றையரித்துத் தின்னும் கிரந்தி; நாவரிப்புண் முதலியவை தீரும்.

Koviloor Digital Library

பித்தப் பாண்டுச் சூலைக்கு மருந்து.

மண்டூரம் 1 பலம் பொடித்து அதில் அமுரி, வெள்ளாட்டு நீர் வகைக்கு 1 படி விட்டு ரவியில் உலர்த்தி அரைப்பலம் அரப்பொடி, நாவற் பட்டைச்சாறு ¼ படி விட்டு ரவியில் உலர்த்திப்பொடித்து கெந்தகம், அறுவகையரிசி, நற்சீரகம், ஓமம், கருஞ்சீரகம், வாய் விளங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, ஏலம், கிராம்பு, காயம், வெள்ளுள்ளி, நவாச்சாரம், பொரித்த வெண்காரம் வகைக்கு அரைப்பலம் வீதம் இடித்துத் தூள்செய்து இருவகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு இஞ்சிச் சாற்றில் அரை மண்டலம் (24 நாள்கள்) சாப்பிட்டு கையாந்தகரை உகாய் கழற்சிக்காய், கொடுப்பை, வல்லாரை, எலுமிச்சம்பழம், முதியார் கூந்தல், மஞ்சள் இவைகளின் சாறு, வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி, ஒரு படி மிளகைப் பொடித்துத் தூணி நீரில் போட்டு வற்றவைத்து வடித்த குடிநீர் அரைப்படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து தலைமுழுக்குச் செய்துவர நோய் தீரும்.

பித்த சூலைக்கு

நல்லெண்ணெய் கால் படி, சர்க்கரை 2 பலம் போட்டுக் காய்ச்சி அதில் கொடிவேலி வேர்ப்பட்டை, பரங்கிப்பட்டை, மிளகு வகைக்கு 2 பலம் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டு இளகம்செய்து ஒரு வேளைக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவு உட்கொள்ளத் தீரும்.

கபால சூலையின் இயல்பு.

நெற்றி, கன்னம், கபாலம், ஆகிய இடங்கள் மிகுந்த இடியும், குத்தலும், சகிக்க முடியாத வேதனையும் காணும்.

மருத்துவம்:- அகஸ்தியர் குழம்பைத் துணியில் ஊற்றித் திரித்து வேப்பெண்ணெய்யில் துவைத்து தீயில் கொளுத்தி ஆற்றி நாசியில் புகை பிடித்து வேப்பம்பட்டைச் சாறு 1 படி, பசுவின் நெய், நல்லெண்ணெய் வகைக்கு கால் படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்து சிரசில் பதமிட்டு வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுக்குச் செய்துவர நோய் தீரும்.

சூலைப் புண்ணுக்கு மருந்து.

பரங்கிப்பட்டை 8 பலம், கெந்தகம், வடகம், அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 4 பலம், கொடிவேலிவேர் 2 பலம் இவையெல்லாம் இடித்துத் தூள் செய்துகொண்டு திரிகடி அளவு பசுவின் நெய்யில் சாப்பிடத் தீரும்.

சூலைக்கட்டு, வீக்கம், கடுப்பு, பிடிப்பு, குத்துக்கு மருந்து.

கரியபவளம், குங்கிலியம், சாம்பிராணி, வெந்தயம், இவைகளை ஓர் எடையாய் நொச்சிச் சாற்றிலாவது, சாரணைச்சாற்றிலாவது அரைத்துக் கொதிக்கவைத்துப் பூசினாலும், புற்றுமண், சவுட்டுமண், வளையலுப்பு,

Koviloor Digital Library

கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம், உள்ளி, வசம்பு இவைளை கள்ளிச் (கள்ளி) சாற்றிலாவது வாதமடக்கிச் சாற்றிலாவது அரைத்துக் கொதிக்கவைத்துப் பூசினாலும், இரசம், நேர்வாளம், கெந்தகம், அரிதாரம், சாதிலிங்கம், கருஞ்சீரகம், ஏலம் இவைகளை ஓர் எடையாய் வெற்றிலைச்சாற்றில் அரைத்துப் பூசினாலும் மாறும்.

கால் முட்டுகளில் நீர் இறங்கிக் கனத்திருந்தால் அதில் அட்டையை விட்டாவது, கீறியாவது நீரை வடித்து மிளகு, சுக்கு, சாதம், மஞ்சள், கடுக்காய், கடுகு, உள்ளி இவைகளை அரைத்துப் பூசி இதன் அடியில் கண்டிருக்கிற தைலத்தைத் தலைமுழுகி வர மாறும்.

மேற்படி நோய்களுக்குத் தைலம்.

காட்டு முருங்கை, நொச்சி, புங்கு, பொன்னாங்காணி, செம்முள்ளி இவைகளின் சாறு, பசுவின் பால் வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் 4 படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் நொச்சி, வாதமடக்கி, மாவிலிங்கு, விடத்தலை, அசுவகெந்தி, செம்புளிச்சை, நாயுருவி, சதுரக்கள்ளிவேர் வகைக்கு 10 பலம், திரிகடுகு, காட்டாத்திப்பூ, ஏலம், முத்தக்காசு, சிறுதேக்கு, மஞ்சள், செவ்வியம், திரிபலை, கொடிவேலி வேர், வாய்விளங்கம், சிறுநாகப்பூ, சந்தனம், கடுகுரோகணி, சாதிக்காய், வசம்பு, கஸ்தூரிமஞ்சள், திப்பிலி மூலம், அதிமதுரம், கருஞ்சீரகம், நற்சீரகம், சாதிப்பத்திரி, இலவங்கம், மரமஞ்சள், நன்னாரிவேர், மஞ்சிட்டி, மணத்தக்காளி விதை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து பொருத்துக்களில் பூசி, வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுக்குச் செய்துவர சூலை, பாரிசவாதம், விப்புருதி, தனுர்வாதம் ஆகியவை தீரும்.

பத்து பலம் திருகுகள்ளி வேர்ப்பட்டையை அரைத்து அரைப்படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் கை, கால் மூட்டுகளில் தடவிவைத்து மாலையில் புளிய இலையை வேகவைத்து தண்ணீரை வேதுவிட சூலைகடுப்புத் தீரும்.

வாதமடக்கிச்சாறு ஒரு குறுணி, நல்லெண்ணெய் ஒரு படி வெள்ளாட்டுப்பால் 1 படி, சிற்றாமுட்டிவேர் 10 பலம் இவைகளை இடித்து பதக்கு தண்ணீரில்போட்டு வற்றவைத்தக் குடிநீர் 2 படி ஒன்றாய்க்கலந்து அதில் கிராம்பு, சாதிக்காய், ஏலம், சாதிப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, அதிமதுரம், கோட்டம், சண்பகப்பூ, மிளகு, அதிவிடையம், வகைக்குக் கால்பலம் பொடித்துத் தூவி, காய்ச்சிவடித்து கை, கால் முதலிய மூட்டுகளில் பூசி, வாரத்திற்கு இரண்டு முறை தலைமுழுக்குச் செய்து வர சகல சூலையும் பிடிப்பும் தீரும்.

சிற்றாமுட்டி, முன்னை, நொச்சி, மாவிலிங்கு, வில்வம், கோரைக்கிழங்கு, வாதமடக்கி, நன்னாரி, வேம்பு, அகில், வேங்கை, அமுக்கறா, சீந்தில், சின்னி, சீதேவிச் செங்கழுநீர், கொடிவேலி, இவைகளின் மூலம் திரிபலை, மிளகு, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சம் வேர் வகைக்கு 10 பலம் இடித்து, 20 படி தண்ணீரில்போட்டு வற்றவைத்தக் குடிநீர் 4 படி, வெள்ளாட்டுப் பால்,

Koviloor Digital Library

நெய், வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் கோட்டம், தேவதாரம், அறுவகையரிசி, குக்கில், பட்டை, மஞ்சள், ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்னலவங்கப்பட்டை, புனுகுச்சட்டம், தக்கோலம், சாத்திரபேதி, கற்பாசி, பச்சைக்கற்பூரம், நெரியரிசிப்பால், சண்பகப்பூ, நாகணம், செஞ்சந்தனம், கல்நார், அதிமதுரம், சடாமாஞ்சில் வகைக்கு 3 கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர சகல சூலைக்கட்டு, வீக்கம், முடக்கு, கடுப்பு முதலான பதினெட்டு வகை சூலைகளும் தீரும்.

சூலைநோய்ப் படலம் முற்றிற்று.

குட்ட நோய்ப் படலம்
குட்ட நோயின் இயல்பு.

அஃதாவது பூர்வீக செனன பலத்தாலும் கர்மம் சம்பவித்து ரணம் அதிகரிப்பதாலும் நோயாலும் மேற்படி குட்டம் 18. அதனுடைய குணா குணம் கூறுதலாம். பாதம், கை, உச்சி, உதடு, அணிவிரல், மணிக்கட்டு இவைகளில் வெண்மையாய்த் தோன்றிப் படர்ந்து வெண்மையான அசருண்டாகித் தீரும்.

உடலில் வட்ட வட்டமாய் வெள்ளை விழுந்து அவைகளின் சுற்றோரந் தடித்து விரிவாய்ப் படர்ந்து அசறு உண்டாகி உதிர்ந்து கொண்டிருக்கும். இதை வெண் குட்டம் என்றும்,

உடலில் செந்நிறமாய் வட்ட வட்டமாய் விழுந்து பரிச மற்றிருக்கும். இதை செங் குட்டம் என்றும்,

முழங்கால், மூக்கு இமையின் அடியில் பரிசமற்றுக் கருமையாய்த் தோன்றிப் படரும்; உடல் முழுவதும் தீப்போல் காந்தும்; தினவெடுக்கும்; சாம்பல் பொடிபோல் மிகவும் அதிகமாய் உதிரும்; தாது வற்றும்; இதைக் கருங் குட்டம் என்றும்,

உடல் சிவந்து திமிர் ஏற்பட்டு உணர்ச்சியற்று, மூக்கு, இமையினடி, நாவு தடித்து, கை, கால், குறுகி வெடித்துப் புண்ணாகி நாறும்; முகம் வியர்க்கும் நாசியடைக்கும்; சீழோடும்; அழகு கெடும்; இதைப் பெரு நோய் என்றும் கூறுவர்.

மருத்துவம்:– சிவனார்வேம்பு, வெள்ளெருக்கு, கூவிளாத்தி, தழுதாழை, புங்கு, குமிழ், மாவிலிங்கு, காட்டாமணக்கு, கழற்சி, விளா, கிளா, ஆவாரை, மிளகரணை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 4 பலம், புங்கு, இலுப்பை, புன்னை, வேம்பு, அழிஞ்சி, எட்டி இவைகளின் விதை வகைக்குப் 5 பலம் இவைகளைக் குழித்தைலம் இறக்கி 10 பலம் எட்டிவிதையைச் சிறு துண்டுகளாய் நறுக்கி அமுரியில் மூன்று நாள் ஊற வைத்துச் சிறுதீயாக எரித்து வற்றவைத்து உலர்த்திஇடித்த தூளையும் ஒரு பாண்டத்தில் குறுணி வெள்ளாட்டுப் பாலையும் விட்டுச் சீலையால் வேடுகட்டி, அதன் மேல் 5

Koviloor Digital Library

பலம் ஆடுதீண்டாப்பாளைவேர்த் தூளை வைத்துப் பிட்டு அவித்து உலர்த்தினதையும், வாலுளுவையரிசி, தான்றிக்காய், கடுக்காய், கருஞ்சீரகம், சுக்கு, கார்க்கோலரிசி வகைக்கு 4 வராகன் எடை, நிலவாகைவேர், அவுரிவேர் வகைக்கு 5 பலம் இவைகளை இடித்து வடிகட்டின தூளையும் ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு கொடுத்து அதில் ஒரு பண எடை தைலம் வைத்து ஒரு மண்டலம் உட்கொண்டு தைலத்தை உடம்பில் பூசி வரக்குட்டம் 18, நச்சுநீர், வண்டுகடிப்பு ஆகியவை தீரும் இச்சாபத்தியம்.

2. நூறு பலம் சடைச்சிவேரை இடித்து, நான்கு மரக்கால் தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்ற வைத்து அதில் முத்தக்காசு, வாலுளுவையரிசி, இந்துப்பு, திரிபலை, மஞ்சள், இஞ்சி, தேவதாரம், மால்தேவி, செங்கொட்டை, பறங்கிப்பட்டை, மிளகு, காந்தம், அசுவகெந்திக்கிழங்கு, மாவிலிங்கப்பட்டை, தில்லைப்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை, சீரகம், கெந்தி, , மஞ்சிட்டி, அதிவிடையம், கரிசாலை, சேவகன்கிழங்கு வகைக்கு 4 கழஞ்சு அரைத்துப் போட்டு நெய் 4 படி, காடி, பால், வகைக்கு 2 படி கூடவிட்டுக் காய்ச்சி வடித்து வேளைக்கு ஒரு கரண்டி வீதம் ஒரு மண்டலம் சாப்பிட்டுவரக் குட்டம் 18-ம், வாதசூலை, சூலைப்புண் ஆகிய நோய் தீரும். இச்சாபத்தியம். தயிர், பால் சேர்த்துக் கொள்ளவும்.

3. முற்றிய பிராய்மரத்துப்பட்டைத்தூள், அழிஞ்சிப்பருப்பு, கோரைக்கிழங்கு, இவைகளின் மாவு வகைக்கு 1 படி, நீர்முள்ளி விதை, கடுக்காய், தான்றிக்காய் இவைகளின் தூள்கள் வகைக்கு 1 பலம் இவைகளை மூன்றுபடி செவ்விளநீரில் ஊற வைத்து உலர்த்தி இடித்து வேளை ஒன்றுக்கு திரிகடி அளவு சாப்பிட்டு வேம்பு, அழிஞ்சில், மாவிலிங்கு, முருங்கை, பேய்க்குமட்டி, பேய்ச்சுரைக்காய், தகரை வில்லை சிற்றாமணக்கு, புரசு, முருக்கு, ஊமத்தை இவைகளின்விதை, திரிபலை, வசம்பு, கொடிவேலி, தேற்றாம்பட்டை, பரங்கிப்பட்டை, சேங்கொட்டை, கார்க்கோலரிசி, வாலுளுவைஅரிசி, சிவனார்வேம்பு, கருஞ்சீரகம், வெள்ளறுகு, வெந்தோன்றிக் கிழங்கு வகைக்கு 1 பலம் வீதம் குழித்தைலம் இறக்கி அதனுடன் வேப்பெண்ணெய், பசுவின் நெய் வகைக்கு 1 படி விட்டு, நீர்வற்றக் காய்ச்சி உடம்பில்பூசி வாரத்துக்கு இரண்டு முறை தலை முழுக்குச் செய்து வர ஒரு மண்டலத்தில் சட்டை தள்ளிக் குட்டம் பதினெட்டும் தீரும். இச்சாபத்தியம்.

4. நிலவகை சிவனார்வேம்பு, வெள்ளறுகு, நிலவேம்பு, நொச்சி, கொடிவேலிவேர், பூவரசம்பட்டை வகைக்கு 10 பலம் வீதம் இடித்து தைலம் இறக்கி அதில் தாரம், இரசம், இலிங்கம், கெந்தி, பொரிகாரம் வகைக்கு இரண்டு கழஞ்சு பொடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு ஒரு பண எடை வீதம் தேனில் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ள குட்டம், சொரி, சிரங்கு ஆகியவை தீரும். இச்சாபத்தியம்.

5. எட்டிவிதை, புங்கம்விதை வகைக்கு 4 படி, வில்வப்பழம் 100 இவைகளை இடித்து குழித் தைலம் இறக்கி ஒரு காசு எடை வீதம்உட்கொள்ள குட்டம் தீரும். தலையில் பூச பித்தச் சூட்டினால்

Koviloor Digital Library

தலைமுடி உதிர்தல் மாறும். உடம்பில் பூச, சொரி, இரணம் தீரும். இச்சாபத்தியம்.

6. புங்கம்வித்து 8 படி, அழிஞ்சிவித்து 1 படி, முல்லைவேர் 2 வீசை, குமரிக்கிழங்கு 8 வீசை இவைகளைக் குழித் தைலம் இறக்கி ஒரு காசு எடை வீதம் சாப்பிட்டு உடம்பில் பூசி வர மேற்படி நோய்கள் தீரும். இச்சாபத்தியம்.

7. அழிஞ்சில், புங்கு, தான்றி, புன்னை இவைகளின் விதை கடுக்காய், கார்கோலரிசி, மிளகு இவைகளை ஓர் எடையாய் அமுரியில் 20 நாள்கள் ஊறவைத்து உலர்த்திக் குழித் தைலம் இறக்கி ஒரு காசு எடை வீதம் வெற்றிலையில் வைத்து ஒரு மண்டலம் சாப்பிட்டு உடம்பிலும் பூசிவர மேகச்சொரி, இரணம், கண்டமாலை, வெடிசூலை, குட்டம், தலைப்புழுவெட்டு பிளவை புற்று , விஷக்கடிகள் தீரும். நரைமுடியில் தடவ, கருமையாக்கும். இச்சாபத்தியம்.

8. தூய்மை செய்த இரசம் 1 பலம், கெந்தி 1 பலம், தாரம் 2 பலம், பறங்கிப்பட்டை 4 பலம், கொடிவேலிவேர்ப்பட்டை 1 ½ பலம், எட்டிவிதை 1 பலம், தூய்மை செய்து வறுத்த சேங்கொட்டை 5 பலம் இவைகளை இடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கழற்சியில் மேற்படி தைலத்தை ஒரு பணஎடை வைத்து உண்ணக்கருங்குட்டம், வெண்குட்டம், சூலை, கிரந்தி, தண்டுப்பிளவை புண்கள், அரையாப்பு மூலம், ஆகியவை தீரும். கடுகு, நல்லெண்ணெய் ஆகாது. புளி சுட்டு கூட்டவும்.

9. பரங்கிப்பட்டைத்தூள் 6 பலம், கொடிவேலி, சிறுகுறிஞ்சா, கருஞ்சீரகம், தூய்மை செய்த கெந்தகம், நீரடிமுத்து இவைகளின் தூள்கள் வகைக்கு 1 பலம், தூய்மை செய்த சேங்கொட்டை 100, காட்டுஎள்ளு 1 படி இவை எல்லாம் மையாய் இடித்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டு வெந்நீர் உட்கொள்ள ஒரு மண்டலத்தில் குட்டம், கிரந்தி தீரும்.

பத்தியம்: கரப்பான் உணவுகளை நீக்கவும். இச்சாபத்தியம்.

10. கருஞ்சூரை, வீழி இவைகளின் வேர்ப்பட்டை, சீந்தில் சர்க்கரை, பிரம்மிசமூலம், சிவன்சமூலம், கார்க்கோலரிசி இவைகளை எல்லாம் ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு தேனில் கலந்து ஒரு மண்டலம் உட்கொள்ளக் கருங்குட்டம், தேமல், சொரி தீரும்.

11. கெந்தகவடகம் 3 பலம், சணம்புவிதை, திரிகடுகு, வாய்விளங்கம், சேங்கொட்டை, இலவங்கப்பத்திரி, சித்திரமூலம் வகைக்கு அரைப் பலம் இடித்துத் தூள்செய்து திரிகடி அளவு வாழைப் பழத்திலாவது சர்க்கரையிலாவது உட்கொள்ளக் குட்டம், குலை நோய், குன்மமூலம் தீரும். இச்சாபத்தியம்.

12. அழிஞ்சில், குன்றி, வெள்ளெருக்கு, சித்திரமூலம், வெண்புரசு, பூவரசு, வெண்ணொச்சி, வில்வம், கருஞ்சூரை (எட்டி), புங்கு, மருதோன்றி, சங்கு, வேம்பு, சதுரக்கள்ளி, தேற்றான் இவைகளின்வேர்

Koviloor Digital Library

சிவனார்வேம்புசமூலம், அகில், தேவதாரம், சந்தனம், வசம்பு இவைகளைத் தனித்தனியேக் குழித்தைலம் இறக்கி வகைக்கு அரைப்படி வீதம் ஒன்றாய்க் கலந்து, அதில் இரசகற்பூரம் 1 பலம் பொடித்துப் போட்டு நீர்வற்றக் காய்ச்சி உடம்பில்பூச குட்டம், வாதம் வலிப்புத் தீரும்.

13. சேங்கொட்டை 100, எட்டிக்கொட்டை 100, நேர்வாளகொட்டை 200, நீரடிமுத்து 2 படி, வாலுளுவையரிசி, கருஞ்சீரகம், மஞ்சள், மிளகு, கொடிவேலிவேர்ப்பட்டை வகைக்கு 1 படி, கெந்தகம், அரிதாரம் வகைக்கு அரைப்படி இவைகளைக் குன்றுமணிச்சாறு விட்டு இடித்து வில்லை தட்டி உலர்த்திக் குழித்தைலம் இறக்கி அதில் சூதம், அரிதாரம், இலிங்கம், சவுக்காரம், பொரிகாரம் வகைக்கு 1 கழஞ்சு பொடித்துப் போட்டு வேளைக்கு ஒரு காசு எடை வீதம் தேனில் கலந்து உள்ளுக்குக் கொடுத்துத் தைலத்தை உடம்பில் பூசி வர குட்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு சொரிவண்டுக்கடி, சில்விஷக்கடி தீரும்.

14. இரண்டுபடி எட்டிக்கொட்டையை ஊறவைத்து இடித்து வடிகட்டின தூளையும் அதற்குச் சமமாய் வெள்ளுள்ளியையும் சேர்த்து இடித்துத் திருகு கள்ளிச்சாற்றில் ஆட்டி வில்லை தட்டி குழித்தைலம் இறக்கி அதில் இரசகற்பூரம் ¼ பலம், பூநீர்ச்சுண்ணம் 1 வராகன் எடை பொடித்து போட்டுச் சிவனார்வேம்பு, வெள்ளறுகு, சமூலம், சங்கம்வேர் இவைகளை ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து திரிகடி அளவில் ஒரு காசு எடை தைலம் வைத்து உண்ணக் குட்டம், வாதம், கிரந்தி, மேகக் கடுப்பு, உளைவு சூலை ஆகியவை தீரும்.

15. செவ்வலரிவேரை உலர்த்திக் குழித்தைலம் இறக்கி நாள் ஒன்றுக்கு ஒரு துளி வீதம் தண்ணீரில் கலந்து மூன்று நாள் உள்ளுக்குக் கொடுக்க இரணங்களில் குருதி வடிந்து நோய் தீரும். உப்பு, புளி நீக்கிப் பத்தியம் இருந்து, ஏழாம் நாள் தலைமுழுகி வரத் தீரும். கடும்பத்தியம் இருக்கவும்.

16. வேப்பம்பட்டையை மேற்பரணை தள்ளி இடித்த தூள் 20 பலம், பாண்டத்தில் போட்டுப் பதினாறு படி நீரில், இருபது நாள்கள் ஊறவைத்துச் சீலையால் வேடுகட்டி, கருங்கோழி வயிற்றில் இரண்டு பலம் அமுக்கறாக்கிழங்கு தூளை வைத்து வேட்டின் மேல் கோழியை வைத்து மூடி, வேப்பம் விறகினால் எரித்து நீர்வற்றின பின்பு, கோழியை உலர்த்தி இடித்தத் தூளையும், பத்து பலம் பறங்கிப்பட்டைத் தூளையும், கடுகு, சுக்கு, கருஞ்சீரகம், திப்பிலி, ஓமம், கார்க்கோலரிசி, மிளகு வகைக்கு அரைப் பலம் வீதம் வறுத்து இடித்து வடிகட்டின தூளையும் ஒரு வராகன் எடை வைத்து ஒரு மண்டலம் (48 நாள்) உட்கொள்ள குட்டம் (தொழுநோய்), சூலை, கிரந்தி, வாதம், வாயு, அண்டவாதம், கிருச்சனவாயு தீரும். புகை, கரப்பான், புளி உணவுகள் நீக்கிப் பத்தியம் கொள்ள நோய் தீரும்.

குட்ட நோய்ப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

வயிற்று நோய்ப் படலம்.

வயிற்றில் பலவழியாய், நரம்புகள், தோன்றிய புண் ஏற்பட்டு மாறுதலாகி கரடுகட்டி மோதுகளில் தங்கிப் பலவாறான நோய்களை விளைவித்தலாம்.

வயிற்று நோய்களின் இயல்பு.

உடல் வெளுத்து வற்றிக் கருவிகள் மந்தித்து வயிறு பெருக்கும்; அன்னம் செல்லாது; மலம் தீயும்; இதைப் பெருவயிறு என்றும்.

சூடு மிகுந்து நீர் உண்டாகி உடல்கனத்து வயிற்றில் வாயுவும் நீரும் கோர்த்துப்பெருக்கும் இந்தக் காலத்தில், வாயு கலைந்து வலி மிகச் செய்யும்; நெஞ்சுவரண்டு தாகமிகும்; ஆயாசம் களைப்பு உண்டாகும். இதை மகோதரம் என்றும்,

உடல் வெளுத்து வற்றி, மார்பின் கீழ், வயிறும் காலும் வீங்கி தாகித்து புளிப்பிலும், பல தின்பண்டங்களிலும், விருப்பம் உண்டானால் நீராம்பல் என்றும்

உடலில் அனல் அதிகப்பட்டு நீர்கோர்த்துக் கண்டவர்கள் யாவரும் பயப்படும்படி வீக்கம் கண்டால் பிற நீர்க்கோர்வை என்றும்,

சுரம் அதிகரித்து உடல் வற்றிக் கல்போல் வெதும்பி வயிற்றில் கட்டி உண்டாக்கி இடது தோளில் புரண்டு ஈரளுள் முழுதும் இரத்தம் பொறுமி, சோர்வு, மயக்கம், உறக்கமின்மை, உணவு ஏற்காமை கண்டு, கைப்பு, புளிப்பு மிகவிரும்பினால் வெப்புப்பாவை என்றும்,

நடுவயிற்றிலாவது வலப்பக்கத்திலாவது கட்டிபோல் திரண்டு நலிந்து வயிறு ஊதி வந்தால் கவுசி என்றும்,

இடப் பக்கத்தில் அதுபோல் கண்டால் கெண்டை என்றும், வயிற்றில், ஆமைபோல், கட்டியுண்டாகி பரவி உடல் முருகி அக்கினிச் சுவாலையாயிருந்து அன்னஞ் செல்லாதிருந்தால் நீராமை என்றும்,

வயிற்றில் ஈரலைப்பற்றிக் குழவி போல் திரண்டு குறுக்கே கிடந்து புரளும்; மேல் நோக்கி ஏறும்; ஒக்காளிக்கும்; அன்னத்தைத் தள்ளும்; உடல் வற்றி வலிமை கெடும்; மந்தமுறும்; புளித்த ஏப்பமிடும்; இதைப் பீலிகை என்றும் சொல்லப்படுகின்றன.

மருத்துவம்:– குமட்டிக்காய், எலுமிச்சம்பழம், இஞ்சி, நொச்சி, வெள்ளுள்ளி இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதில் தூய்மைசெய்த கெந்தகம், இலவங்கப்பட்டை, இரதம், மனோசிலை, காந்தம், சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், ஏலம், சன்னலவங்கப்பட்டை, கிராம்பு, சாதிலிங்கம், சணம்புவிதை, வெண்காரம், நவாச்சாரம், மஞ்சள், மரமஞ்சள், கோரைக்கிழங்கு, நன்னாரி, திரிபலை, நேர்வாளம், ஓமம், சீரகம், காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், தைவேளைவேர், அதிமதுரம், அமுக்கரா, பிரப்பங்கிழங்கு வகைக்கு 1 ½ வராகன் எடை வீதம் பொடித்துப் போட்டுக் கிண்டி நீர் வற்றின பதத்தில் இறக்கிக் கல்வத்திலிட்டு

Koviloor Digital Library

மெழுகுபோல் அரைத்துச் சுண்டைக்காய்போல் உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் உப்பு, புளி நீக்கிச் சாப்பிட மேற்காட்டிய நோய்களும், வாயுத் திரட்சியும், குன்மமும் தீரும். பத்தியம்: பாலும், அன்னமும் உட்கொள்ளவும்.

2. குமட்டிக்காய், எலுமிச்சம்பழம், வெள்ளுள்ளி, நொச்சி, இஞ்சி இவைகளின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி ஒரு படியாய் வற்றவைத்துக் கல்வத்திலிட்டு சூதம், இலிங்கம், பெருங்காயம், இந்துப்பு, ஓமம், வெங்காரம், கடுகு, மஞ்சள், வெந்தயம், மிளகு, காந்தம், நேர்வாளம் வகைக்கு 3 கழஞ்சு வீதம் பொடித்துப் போட்டு மெழுகுபோல் அரைத்துச் சிமிழில் வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குத் தூதுவளங்காய் அளவு வெல்லத்தில் பொதித்து, பத்து நாள் உட்கொள்ள உதரநோய்கள், குன்மம், வாய்வு தீரும்.

வெள்ளாட்டு நீர் காராவின்நீர் வகைக்குப் படி 4 ஒன்றாகக்கலந்து அதில் நவச்சாரம் கல்லுப்பு வகைக்குப் பலம் 8 பூநீறு எவச்சாரம் சூடன் குமரியுப்பு கதலியுப்பு நாயுருவியுப்பு பனிதாங்கிமூலியுப்பு வகைக்குப் பலம் 1 வெடியுப்புப் பலம் 2 போட்டுக்கரைத்துத் தெளிவிறுத்துத் தீபம்போலெரித்துக் காய்ச்சி உப் பானதின்பின் ஆமணக்கெண்ணெய் படி 2 போய்க்குமட்டிச்சாறு படி 1 கொடிக் கள்ளி திருகுகள்ளி சதுரக்கள்ளி இலைக்கள்ளி எருக்கு இவைகளின்சாறு வகைக்குப் படி 1.2 முடக்கொத்தான் முசுமுசுக்கை புரசு கொன்றை வகைக்குச்சாறு படி 2 விட்டுச் சிவதை கடுக்காய் தானறிக்காய் கடுகுரோகணி மிளகு சுக்கு வகைக்குப் பலம் 4 காயம் பலம் 1 வெள்ளுள்ளி பொரிகாரம் வகைக்குப் பலம் 2 மயனமாய்ப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்திலெடுத்து நாளொன்றுக்குச் சுண்டைக் காய்ப்பிரமாணம் சீனியிற் பொதிந்துசாப்பிட்டு வெந்நீர்கொள்ள விரேதசனமாகும். பத்தியம் பாலும் அன்னமுங்கொள்ள அரைமண்டலத்தில் மேற்படி ரோகங்களும் குடற் சூலை வாயுத்திரஷி விப்புருதி சுரோணிதக்கட்டுந் தீரும்.

அவிரி திருகுகள்ளி வீழி கரிசாலை கழற்சி மூடக்கொத்தான் வேம்பு இவைகளின் சாறு வகைக்குப் படி 1 பேய்க்குமட்டிக்காய் ஆடாதோடை இவைகளின் சாறு சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி 2 வெள்ளாட்டுநீர் எருக்கம்பழுப்புச்சாறு திருகுகள்ளிச்சாறு வகைக்குப் படி 1.2 ஒன்றாகக்கலந்து திரிகடுகு திரிபலை வெங்காரம் வாய்விளங்கம் வெண்கடுகு கடுகுரோணி கருஞ்சீரகம் நவச்சாரம் பஞ்சலவணம் ஆனைத்திப்பலி திப்பலி மூலம் மரமஞ்சள் வகைக்குப் பலம் 1 பொடித்திட்டுக்கிண்டி மெழுகுபதத்தில் எண்ணெயை வடித்து ஒருமண்டலம் நெல்லுக்குட் புதைத்தெடுத்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதம் மூன்றுநாட்கொடுத்து ஆறுநாள்வகை மறுபத்திய பிருந்து ஏழாநாள் தலைக்குத்தண்ணீர்வார்த்து உப்புக்கூட்டிக்கொள்ள மேற்படி வியாதிகள் தீரும்.

நொச்சி சிவதை முருங்கை சாரணை ஆயிலியம் சங்கு மாவிலிங்கு முட்காய்வேளை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்குப் பலம் 2 வீதமடித்துப் பதக்குநீரிற்போட்டு வற்றவைத்து வடித்தகஷாயம் படி 1 ஆவினெய் படி 1

Koviloor Digital Library

திருகுகள்ளிப்பால படி அரைக்கால் பேய்க்குமட்டிக்காய்ச்சாறு படி 1.2 ஒன்றாகக்கலந்து அதில் வாளம் வராகனெடை 8 பெருங்காயம் வராகனெடை 6 இந்துப்பு வெங்காரம் கடுகுரோகணி வெள்ளுள்ளி சவுக்காரம் சீனம் வெட்பாலையரிசி வகைக்கு வராகனெடை 5 அரைத்துப்போட்டு நாலுநாள்வரை சிறுதீயாயெரித்து ஐந்தாநாள் பதமாய்க் காய்ச்சிவடித்து நாளொன்றுக்கு ஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுப் பத்தியம் சுண்டைவற்றல் மோர் மிளகுநீர் கோழிச்சாறு கூட்டிக்கொள்ளவும்.

கோசலம் பால் நொய் பேய்க்குமட்டிக்காய்ச்சாறு வகைக்குப் படி 1 சுக்கு திப்பிலி கோஷ்டம் சிவதை வெள்ளைக்காக்கணான்வேர் கற்கடகசிங்கி காரணைவேர் பெருங்காயம் ஓமம் இந்துப்பு கடுகு வகைக்குக் கழஞ்சு 1 வீதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து நாளொன்றுக்கு இரண்டு காசெடைவீதஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

சாரணைவேர்ப்பட்டைத்தூள் படி 1 மேற்படி இலைச்சாறு படி 1 இலைக்கள்ளிப் பால் ஆவினெய் வகைக்குப் படி 1.4 மேற்படிநீர் படி 2 ஒன்றாகக்கலந்து அதில் கல்லுப்புப்படி அரைக்கால் பொடித்துப்போட்டுக் குழம்பாய்க்காய்ச்சிக் கல்வத்திட்டு மெழுகுபோலரைத்துச் சிமிழிலடைத்துக் கொண்டு வேளை யொன்றிற்குச் சுண்டைக் காய்ப்பிரமாணம் சாப்பிட்டு மோரசனஞ்செய்யத் தீரும்.

ஐம்பதுவரிக் குமட்டிக்காயைபிடித்துப்ப பிழிந்து சாறுடன் ஆவின்பால் கோசலம் வகைக்குப் பதக்குவிட்டு ஒருநாட்காய்ச்சிக் குறுகிவரும்போது பன்னிரண்டுபல வெல்லத்தைக் கரைத்துக்காய்ச்சிப் பாகுப்பருவத்தில் திரிகடுகு வெள்ளுள்ளி காந்தம் சீனக்காரம் வெங்காரம் வெயுப்பு சவுக்காரம் கரியசீரகம் இந்துப்பு வகைக்கு வராக னெடை 1 ரசம் கெந்தகம் வாளம் வகைக்கு வராகனெடை 1.2 இவைகளை அரைக் காற்படி கள்ளிப்பாலாலாட்டிப்போட்டுக்கிண்டி ஆவினெய் ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி 1 கூடவிட்டு நீரில்லாமற் பதமாய்க்காய்ச்சி நெல்லுக்குள் பத்துநாள் வைத்தெடுத்து ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணம் வெல்லத்திற் பொதிந்து சாப்பிட்டுவரத்தீரும்.

ஐம்பது வரிக்குமட்டிக்காயையிடித்து பிழிந்த சாற்றில் கல்லுப்புப் படி 1 வெடியுப்பு வளையலுப்பு இந்துப்பு காந்தம் சுக்க திப்பலி வெள்ளுள்ளி வகைக்குப் பலம் 1.2 பெருங்காயம் பலம் 1.4 வாளம் சாதிலிங்கம் வகைக்குப் பலம் 1 பொடித்துப்போட்டு இலைக்கள்ளிப்பால் படி 1 கூடவிட்டுக்காய்ச்சி மெழுகு பதத்திலெடுத்து நாளொன்றுக்கு ஒருவராகனெடைவீதம் கொடுத்து உப்புப்புளிநீக்கி நீர்க்கஞ்சி கொள்ளத் தீரும்.

ஒருபல இலுப்பையரப்பையிடித்துச் சட்டியிலிட்டு மயில்நிறமாகவறுத்துக் கொண்டு அன்னபேதி கடுகுரோகணி குரோசானிஓமம் வகைக்குப் பலம் கால்வீதம் ஒருபாத்திரத்திற்போட்டு அதில் பிரண்டை மேனி தைவேளை இவைகளின்சாறு வகைக்குப் படி 1.2 விட்டு ரவியிலுலர்த்தியிடித்து அரப்புத்தூளுடன் கலந்து அத்துடன் ஒருபல வெல்லஞ் சேர்த்து மெழுகுபோலுருட்டிவைத்துக்கொண்டு வேளையொன்றிற்குப் புன்னைக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவரப் பெருவயிறு குன்மம் பீலிகை தீரும்.

Koviloor Digital Library

பேய்ப்பீர்க்கங்காயையிடித்துப் பிழிந்தசாறு பதக்கில் பெருங்காயம் கழஞ்சு 1 பொடித்துப்போட்டுக் காய்ச்சிக் குழம்புபோல் வற்றவைத்துக் கல்வத்திட்டு மெழுகு போலரைத்துக் கொட்டைப்பாக்குப்பிராமாணமாக உருட்டிவைத்துக்கொண்டு வேளையொன்றிற்கு ஒருண்டைவீதம் சாப்பிட்டுவரத் தீரும். நீர்வற்றின் தேங்காய்க்குள் லிங்கம் வராகனெடை 1.2 கெந்தி வராகனெடை 1.4 பொடித்து ஒரு சிறங்கை கள்ளிப்பாலடைத்து அதற்கு மூன்று சீலைமண்செய்து மூன்றுநாட் காயப்போட்டு ஏழெருவிற் புடம்போட்டுச் சிரட்டைநீக்கித் தாழைத்தலைமூடிச்சில் வெட்டி இலையைத் தள்ளி முடிச்சையெடுத்து மேற்றொலியைச்சீவி உட்பருப்பை வில்லை வில்லையாய் நறுக்கிச் சற்றுநேரம் ரவியிற்காயவைத்து இதை முன்மருந்துக்குப் பாதிசோத்து ஒன்றாயிடித்துச் சற்றுநேரம் ரவியில வைக்க லேகியமாகும். அதில் ஒருசுண்டைக் காய்ப்பிரமாணங்கொள்ளப் பேதியாகும், அதிகப்பட்டால் தண்ணீரிற் பழச்சாறு பிழிந்து கொடுக்க நிற்கும். கவுசி கெண்டை பெருவயிறு பாண்டு பாரிசவாயு பக்கவாயு சூதகவாயு குன்மந்தீரும்.

ஒருபடி சிற்றாமணக்கெண்ணெயில் கொல்லங்ககோவைக்கிழங்கு ஈருள்ளி வெள்ளறுகு வகைக்குப் பலம் 2 வீதமிடித்துப்போட்டு மூன்றுநாள்வரை ரவியில்வைத்து நாலாநாள் காய்ச்சிவடித்து வேளையொன்றிற்கு ஒருகரண்டிவீதம் சாப்பிட்டுவாக் கெண்டை பெருவயிறு குன்மம் தீரும்.

கெந்தி வெடியுப்பு இந்துப்பு கவுக்காரம் சீனம் பெருங்காயம் வகைக்குப் பலம் கால்வீதம் பொடித்து எலுமிச்சம்பழச்சாற்றில்விரவி மூன்றுநாட் காயவைத்து மெழுகுபோலரைத்துக் கொண்டு வேளையொன்றிற்கு ஒருபணவெடைவீதம் தேனில் மத்தித்து 11 வேளைகொடுக்கக் கவுசி குன்மம் வெடிப்புப்பாவை சோகை தீரும்.

மூன்றுபடி ஆவினீரில் பஞ்சலவணம் வகைக்குப் பலம் 1 வீதம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி வற்றவைத்து அப்பால் ஐம்பது பேய்க்குமட்டிக்காய்ச்சாறுவிட்டு வற்றவைத்து மெழுகுபோலரைத்து நாளொன்றுக்குச் சுண்டைக்காய்ப்பிரமாணஞ் சாப்பிட்டுவர உதரரோகங்கள் தீரும்.

வெள்ளுள்ளித்தைலம் இஞ்சிச்சாறு திருகுகள்ளிப்பால் கொள்ளவித்த தண்ணீர் மீடக்கொத்தான்சாறு வகைக்குப் படி 1.4 நல்லெண்ணெய் படி 1 ஒன்றாகக்கலந்து அதில் இந்துப்பு சிவதை செவ்வள்ளிக்கொடி கடுகு நிலவாகைவேர்ப்பட்டை வகைக்கு வராகனெடை 3 வீதமரைத்துப்போட்டுக்காய்சி வைத்துக்கொண்டு வேளையொனறிற்கு ஒருகரண்டிவீதஞ் சாப்பிட்டுவரக் கெண்டை குன்மந் தீரும்.

பெருங்காயம் இந்துப்பு திப்பிலி வகைக்கு வராகனெடை 1 1.2 கருஞ்சீரகம் வசம்பு கோஷ்டம் வகைக்கு வராகனெடை 6 வெங்காரம் வெள்ளுள்ளி ஓமம் சக்கு வகைக்கு வராகனெடை 40 முருக்கு எருக்கு வேலிப்பருத்தி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு வராகனெடை 20 இவைகளைக் குப்பைமேனிச்சாற்றால் மயனமாயொருநாளாட்டிக் காற்படி

Koviloor Digital Library

கொடிக்கள்ளிப்பாலிற் கரைத்துக்காய்ச்சிக் கிண்டி வைத்துக்கொண்டு நாளொன்றுக்கு ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டுவா உதரரோகங்கள் தீரும்.

பாக்கு கடுக்காய் வகைக்குப் பலம் 5 சிவதை பலம் 8 மிளகாய் பலம் 3 சுக்கு திப்பிலி காயம் கடுகு இந்துப்பு ஓமம் அதிவிடயம் அரத்தை வகைக்குப் பலம் 2 காந்தம் அரபொடி கொடுவேலிவேர் திப்பிலிமூலம் வகைக்குப் பலம் 4 இவைகளைச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளநீரில் மண்டலங்கொள்ள மகோதரமுதலான உதரரோகங்கள் தீரும்.

மூன்று முற்றினதேங்காயைப் பால்பிழிந்து அதில் நேர்வாளப்பருப்பு 1.2 சகாப்பூரம் கழஞ்சு 1 வெள்ளைப்பாசாணம் கழஞ்சு 1.2 ஆவின்பால் கள்ளிப்பால் வகைக்குப் படி 1.4 கூடவிட்டுக்காய்ச்சி நெய்யைவடித்து இரண்டுகாசெடை கொடுக்க மேற்படி ரோகங்கள் தீரும்.

கெர்ப்பரோகத்திற் சொல்லிய பேய்க்குமட்டிக்காய்ப்பிரயோகங்கள் இந்த உதாரோகங்களுக்கும் உபயோகப்படும்.

உதரரோகம் முற்றிற்று

பாண்டுரோகம்.
மேற்படி வியாதியின் குணம்.

தேகம் பசியநிறமாய்ப் பளபளத்து முகந்துளுப்பையிட்டு இருவிழியும் நீலநிறமாய் இடுப்புக்கனத்து நீர்பொன்னிறமாயிறங்கினால் பாண்டின்குணமென்றும், தேகம் வெளுத்தரைத்து நெஞ்சிற் குத்தல் துடி இருமல் இளைப்பு நடக்கிற்றிகைப்பு எய்ப்புக் கிறுகிறுப்புத் தோன்றிடிற் பித்தபாண்டென்றும், அது முற்றினால் நாளுக்குநாள் சரீரம்வற்றித் தலைவலி அரோசகம் குரல்கம்மல் வயிற்றுக்கடுப்பு உளைவு கை கால் நாவில் வெடியுப்பு வாயாலிரத்தங்கக்கல் முதலான வேதனைகளுண்டாகுமென்றும், உடல் வெளுத்தைத்து இடுப்புளைந்து அன்னங்குறைந்து அபானங்சுருங்கி மலம்வரண்டு பலங்குறைந்து நசுக்கண் முகம் மலம் நீர் மஞ்சணித்தால் மூலபித்தபாண்டென்றும், உடல்காய்ந்து அதைத்து வெளுத்துப் பலங்குறைந்து கைகாலோய்ந்து தூலைமேற் கொண்டு அன்னஞ்சுருங்கினால் மூலபாண்டடென்றும், தாகம் பசி நீங்கிச் சரீரம் கண் உதடு நாவு நீர் மலம் தன்னிறங்கெட்டுக் கருகி வயிறுபொருமி விரோசித்துப் புறங்கால் வீங்கிக் கைகாலோய்ந்தால் வாதபாண்டென்றும், உடல்வெளுத்து ஒருபக்கம் வீங்கி வற்றிக் கண்ணிலிரத்தம்வற்றி வெளுப்பேறி அசதி தாகம் சிரோபாரம் அன்னத்துவே சங்கண்டு வாயு விஷம்போலேறினால் விஷபாண்டென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

நிவிர்த்தி

முப்புரமெரித்தான்சமூலம் மூக்கரைச்சாரணைவேர் நெருஞ்சிச்சமூலம் நீர்முள்ளிபிலை வீழியிலை மூசுட்டையிலை வகைக்குப்பிடி 3 விதைநீக்கிய

Koviloor Digital Library

கடுக்காய் 21 களிப்பாக்கு 20 இரும்புக்கிட்டம் வெள்ளைப்பூடு வகைக்குப் பலம் 1 அரியசிவதை கடுகுரோகணி இந்துப்பு இஞ்சி வகைக்குப் பலம் 3 இவைகளைச்சிதைத்துப் பதக்குத்தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து அடைக்காயமாய் வைத்துக் கொண்டு வேளையொன்றிற்குக் காற்படிவீதம் மூன்றுநாளாறு போது கொடுக்கப் பாண்டு விஷபாண்டு முதலான எவ்வகை வீக்கமுந் தீரும்.

சங்கு நெருஞ்சி சத்திசாரணை கோவை நீர்முள்ளி திரிபலை வேப்பந்தோல் பழங்கிட்டம் இரும்பு மணலி பிரமி சுரைக்கொடி ஈருள்ளி பங்கம்பாளை செங்கத்தாரி சிறுகுறுஞ்சா வனநெத்து மயிர்மாலை வகைக்குப் பலம் 6 வீதஞ்சிதைத்து நாலுபடி கோசலத்திற்போட்டு நாலுபடி பழங்காடியுங் கூடவிட்டு ஒருபடியாக வற்றவைத்துக் கொண்டு நாளொன்றிற்குக் காற்படிவீதம் மூன்றநாட்கொடுக்கப் பாண்டுமுதலான எவ்வகை வீக்கமுந் தீரும்.

நீர் முள்ளி கீழ்க்காய் நெல்லி வீழிவேர் கோவைத்தண்டு பூவரசம் பட்டை கையாந் தகரை செந்தொட்டிவேர் சிறுபூளைவேர் நவ்வற்றுளிர் நெருஞ்சிவேர் சிறுகீரைவேர் நிலவாகை உசிலம்பட்டை வகைக்குப் பலம் 6 கடுக்காய் கடுகுரோகணி கருஞ்சீரகம் காட்டுச்சீரகம் திப்பிலி வகைக்கு வராகனெடை 6 இவைகளை இடித்து ஆறுபங்கு செய்து நாளொன்றிற்கு ஒரு பங்கில் நாலுபடி ஜலம்விட்டு அரைப்படியாய் வற்றவைத்து வேளையொனறிற்குக் காற்படிவீதம் கொடுக்கவும். இந்தப்படி ஆறுநாட்கொடுக்க எவ்வகை வீக்கமும் வயிற்றுப் பொருமலுந் தீரும். உப்புப்புளி நீக்கிப் பத்தியங்கொள்ளவும்.

சுடுதுரத்தியிலைச்சாறு தேங்காய்பால் வகைக்குப் படி அரைக்கால் வீத் ஒன்றாகக்கலந்து வேளையொன்றிற்குக் காற்படிவீதம் ஏழுநாட் சாப்பிட்டுப் பாசிப்பயறும் தேங்காயுங் கறிசெய்து கொள்ளப் பாண்டு விஷபாண்டு தீரும்.

பொற்றலைக்கரிப்பான் நெருஞ்சி வகைக்குச்சாறு படி 2 சிறுகீரை பொடுதலை கீழ்க்காய் நெல்லி சிறுசெருப்படை வகைக்குச்சாறு படி 1 நல்வல் கருங்கலி அத்தி இவைகளின்பட்டை தென்னம்பூ மஞ்சள் வகைக்கு ஒருபலமிடித்துத் தூணிநீரிற் போட்டு வற்றவைத்த கஷாயம் படி 2 மிளகு மிளகரணைவேர் அவுரி சிற்றாமுட்டி பேராமுட்டி விலாமிச்சு வகைக்கு பலம் 3 வீதமிடித்துத் தூணிநீரிற்போட்டு வற்றவைத்தகஷாயம் படி 2 ஆவின்பால் படி 4 இவைகளைக் கலந்து கருப்புக்கட்டி வெல்லம் வகைக்குப் பலம் 8 கரைத்துக்காய்ச்சிப் பாகுசெய்து சீரகம் கிராம்பு ஏலம் சாதிக்காய் சாதிபத்திரி ஓமம் குரோசானிஓமம் சிறுநாகப்பூ கற்கடகசிங்கி கோஷ்டம் அக்கிராகாரம் அதிமதுரம் தாளிசபத்திரி திரிகடுகு திரிபலாதி வகைக்கு ஒருபலவீதஞ் சூரணித்துத் தூவிக்கிண்டி ஆவினெய் படி 12 தேன் படி 1 கூடவிட்டு லேகியஞ்செய்து திரிலோகசெந்தூரம் மண்டூரசெந்தூரம் வகைக்குப் பலம் 1 போட்டுப் பிசைந்து கொண்டு வேளையொன்றிற்குப் புன்னைக்காய்ப்பிரமாணஞ் சாப்பிட்டுவரச் சகலபாண்டு வீக்கம் கிராணி அரோசிகந் தீரும்.

Koviloor Digital Library

பொற்றலைக்கரிப்பாசைாறு பெருந்தும்பைச்சாறு தென்னை கமுகு இவைகளின் பூவை இடித்துப்பிழிந்தசாறு வகைக்குப் படி 1 பொடுதலை எலுமிச்சம்பழம் சிறுகீரை நெல்லிக்காய் சிறுபுள்ளடி நெரிஞ்சி இஞ்சி இவைகளின்சாறு வகைக்குப் படி 1.2 இளநீர் படி 14 நொச்சி விலாமிச்சு மரட்கிழங்கு பிரண்டை நிலவாகை சித்திரமூலம் நன்னாரி கீழ்க்காய் நெல்லி மலைதாங்கி இவைகளின் மூலம் பெருமரத்துப் பட்டை கடுக்காய் மண்டூரம் வில்வப்பழத்தோடு வகைக்குப் பலம் 1 வீதம் இடித்து 24 படிதண்ணீரிறபோட்டு வற்றவைத்தகஷாயம் படி 4 ஒன்றாகக்கலந்து கருப்புக்கட்டி வெல்லம் வகைக்குப் பலம் 8 சிதைத்துப்போட்டுக் காய்ச்சிக் குறுகி வரும்போது திரிகடுகு ஓமம் மஞ்சள் கீழ்க்காய்நெல்லிவேர் சிறுதேக்கு சிற்றரத்தை கற்கடகசிங்கி சடாமஞ்சி ஏலம் சிறுநாகப்பூ பெருஞ்சீரகம் பொரிகாரம் சீரகம் மதூரம் சாதிக்காய் வால்மிளகு பேரீச்சங்காய் தாளிசபத்திரி சாதிபத்திரி கிராம்பு கருவாப் பட்டை வகைக்குக் கழஞ்சு 6 வீதம் இரவியிலுலர்த்தி இடித்து வடிகட்டின சூரணத்தையும் கோஷ்டம் மாங்கொட்டைப்பருப்பு அத்திப்பிஞ்சு இவைகள் வகைக்குப் பலம் 1 வீதம் நெய்விட்டு வெதுப்பிப் பொடித்த ரேணத்தையும் தூவிக்கிண்டி நெய் படி 2 தேன் படி 1 கூடவிட்டு மெழுகுபதமாய் லேகியஞ்செய்து வேளையொன்றிற்குக் கொட்டைப்பாக்குப் பிரமாணத்தில் திரிலோகம் அப்பிரகம் காந்தம் அயம் இவைகளின் செந்தூரம் வகைக்கு ஒரு பணவெடைவீதம் வைத்து அரைமண்டலம் கொள்ளச் சகல பாண்டு சோகை காமலை கிராணிகளுந் தீரும்.

எலுமிச்சம்பழம் பொற்றலைக்கரிப்பான் நெல்லிக்காய் பேய்ப்புடல் முசுமுசுக்கை கீழ்க்காய்நெல்லி ஆவின்பால் வகைக்குப் படி 1 சீனி பலம் 5 ஒன்றாகவிட்டுக் காய்ச்சிக் குறுகிவரும்போது கொடுவேலி சீரகம் திரிகடுகு திரிபலை இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் 1 தூவிக்கிண்டி ஆவினெய் படி 1.2 தேன் படி 1.4 விட்டு மெழுகுபதமாய்லேகியஞ்செய்து வேளையொன்றிற்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணத்திற காந்தசெந்தூரம் அயசெந்தூரம வைத்து அரைமண்டலஞ் சாப்பிட்டு ஒருபடி ஆவினெய்யில் ஒருபலக் கொடிவேலிவேர்ப்பட்டையை ஆவின்பாலிலும் மூன்றுபலத் திரிபலையை முலைப்பாலிலுமரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்து வாரத்துக்கிரண்டு முறை ஸ்நானஞ்செய்துவர விஷபாண்டு பித்தகாமாலை குன்மமம் வாயு வண்டுகடி தீரும்.

இருபத்தஞ்சுபலக்கரிப்பானைச்சிதைத்துப் பதினாறுபடி தண்ணீரிற்போட்டு ஒரு படியாய் வற்றவைத்து வடித்தகஷாயத்தையும் 12 பல மிளகைச்சிதைத்து 6 படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்த கஷாயத்தையும் ஒன்றாகக்கலந்து அதில் சீனி பலம் 7 போட்டுப்பாகுசெய்து மைக்கொனறைப்பூ புளியாரைச்சமூலம் தூதுளையிலை நாறாக்கரந்தையிலை பொற்றலைக்கரிப்பான் வகைக்குப் பலம் 1 திரிகடுகு மல்லி சீரகம் கருஞ்சீரகம் சடாமாஞ்சில் வெப்பாலையரிசி வகைக்குப் பலம் 14 குங்குமப்பூ கோரோசனை ஏலம் வகைக்கு வராகனெடை 1 இவைகளைத் தனித்தனியே யிடித்து வடிகட்டின சூரணத்தைத்தூவி ஆவினெய் படி அரைக்கால் கூடவிட்டுக் கிண்டி இறக்கி அயசெந்தூரம் மண்டூரசெந்தூரம் வகைக்குப் பலம் 1 போட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளையொனறிற்கு ஒரு கொட்டைப்பாகக்குப்பிரமாணம் சாப்பிட்டுவாத தீரும்.

Koviloor Digital Library

நிலப்பனைக்கிழங்கு, நீர்வள்ளிக்கிழங்கு, நெருஞ்சி சமூலம், தூதுவளைச்சமூலம், நாணல்வேர், முருக்கம்பூ, வெள்ளரிக்காய், சிற்றாமுட்டிச்சமூலம், கீழ்க்காய்நெல்லிச் சமூலம், பூனைக்காலியிலை, சிறுகீரைச்சமூலம், விளாவிலை, வில்வஇலை இவைகளைப் பால் விட்டு இடித்துப் பிழிந்த சாறு வகைக்கு ஒரு பதக்கு, வாழைக்கிழங்குச் சாறு 2 படி, கரிப்பான் சாறு 4 படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் இஞ்சி, முந்திரிகைப் (திராட்சை) பழம், விலாமிச்சு, வெட்டிவேர், தாமரைவளையம், முல்லைவேர், முத்தக்காசு, நன்னாரி வேர், சீராச்செங்கழுநீர்வேர், இலவங்கம், ஏலம், மதுரம், கோட்டம், கற்டகச்சிங்கி, இந்துப்பு, ஓமம், கசகசா, திப்பிலி, சீரகம், கருஞ்சீரகம், திரிபலை, கிராம்பு, சாதிக்காய், சுக்கு, சாதிப்பத்திரி, மஞ்சிட்டி, பச்சிலை, கச்சோலம் வகைக்கு 2 பலம் இவைகளைப் பசுவின் பாலால் ஆட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து அயச்செந்தூரம், காந்தச் செந்தூரம், மண்டூரச்செந்தூரம் வகைக்கு ஒரு பலம் அரைத்துப் போட்டு வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் 20 நாள் சாப்பிட பாண்டு, காமாலை தீரும். சிலேத்துமப் பண்டங்களை நீக்கவும். இச்சாபத்தியம்.

அதிசாரத்தின்மேல் காணும் வீக்கம், சோகைக்கு மருந்து.

சுக்கு, ஆயில்யமரப்பட்டை வகைக்கு 20 பலம் இடித்து, முக்குறுணி தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து வடித்தக் குடிநீருடன் (கியாழம்) தயிர் தண்ணீர் 2 படி, நெய் 2 ½ படி கூட விட்டு அதில் பெருங்காயம், திரிகடுகு, செவ்வியம், ஓமம், திப்பிலிமூலம், கொடிவேலிவேர், ஆனைத்திப்பிலி, நவாச்சாரம் வகைக்கு 2 கழஞ்சு வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து வேளையொன்றுக்கு முக்கழஞ்சு வீதம் சாப்பிட்டு வர நோய் தீரும்.

வயிற்றுநோய்ப் படலம் முற்றும்.

மஞ்சள் நோய்ப் படலம்.

அஃதாவது, உடலில் இரத்தம் கெட்டு, தசை வெளுத்து, ஈரல் கருக பலவாறான நோய்களை விளைத்தலாம்.

சொன்னார் முனிவர் காமாலை சூட்சா சூட்சந் தானறிந்து
புன்னும் வியாதி சாத்தியமும் பேராக் குறிப்புந் தனையறிதல்
குன்னும் நேத்திரப் பரிட்சைகளும் கூறும் பாகந்தனைப் புகழ்ந்து
அன்னே தாமுந் தானறிய அறைந்தார் வயித்திய சாரமிதே.

மஞ்சள் நோயின் இயல்பு.

உடல் அதைத்துப் புண் போல் நொந்து, கண் வெளுத்து, நா உலர்ந்து, வயிறு பொருமிக் கழிந்து, நீர் மஞ்சள் நிறமாய் இறங்கி தாகம், மூர்ச்சை, அசதி கண்டால் காமாலை என்றும்; உடல் வறண்டு, முகம் அதைத்து,

Koviloor Digital Library

விழிகள் நகம வெளுத்து, தாது கெட்டு வலிமை குறைந்து, நடக்கிற்றிகைப்பு, இளைப்பு, கை, கால் ஓய்வு, அசதி, நித்திரை, ஊண் வெறுப்பு கண்டால் வறள் காமாலை என்றும், உடல் உலர்ந்து கடுத்து வடித்துக் கண் வெளுத்துப் பசக்கும்; மூலத்தில் அக்கினி கலந்து, அன்னத்தை ஒறுத்துக் கைகாய் ஓய்ந்து பலங்கெட்டு அயர்ந்து, புறங்காலதைத்து மலம் கட்டி, வயிறு பொருமி, ஆயாசம், களைப்பு உண்டானால் வாத காமாலை என்றும்; உடல் வரண்டு, வெளுத்து, முகம் கனத்து, கை, கால் தீப்போல் காந்தி செருமலெடுத்து, விழி நீர் மஞ்சளித்து அன்னம் செரியாமல் வயிறு பொருமிக் கழிந்து, வாந்தி, கிறுகிறுப்பு, அசதி கண்டால் பித்தக் காமாலை (அழல் மஞ்சள் நோய் என்றும்;) தலை, மூக்கு, முகம் வியர்த்து, உடல் நடுங்கி, நாக்கு கண்ணீர் வெளுத்து, மொளி வீங்கி, இருமல், விக்கல் எடுத்து நித்திரை கெட்டு, நடந்தால் மேல் மூச்சு, இளைப்பு கண்டால் சிலேத்துமக் காமாலை (ஐய மஞ்சள் நோய்) என்றும்; அக்கினி கலந்து அன்னம் ஒறுத்துக் கண், மலம், நீர் மஞ்சளாயிருந்தால் மஞ்சள் காமாலை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மருத்துவம்:– காந்தம், அரப்பொடி, மிளகு, கரிப்பான் சமூலம் வகைக்கு 3 பலம் இந்த மூன்று வகையையும் மேற்படிச் சாற்றால் இரண்டு நாள் விடாமல் ஆட்டி, கழற்சிக்காய் அளவு உருண்டை செய்து, வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் பன்னிரெண்டு நாள் இஞ்சிச் சாற்றில் கொடுத்து மோர் சாதம் பத்தியம் கொடுத்து அப்பால் ஆறு முறை ஒன்றை விட்டு ஒரு நாள் முக்கூட்டு எண்ணெய் தேய்த்துத் தலைமுழுக்குச் செய்து வர சகல மஞ்சள் நோயும் (காமாலை) நீங்கும். இச்சாபத்தியம்.

2. காட்டுக்கோவைச் சாறு, பருத்திக் கொட்டைப் பால், பசுவின் பால், வகைக்கு அரைப்படி, பாசிப்பருப்பு, பச்சரிசி வகைக்கு ஆழாக்கு, சுக்கு 1 பலம், சர்க்கரை 3 பலம் இவைகளெல்லாம் ஒன்றாய்க் கலந்து இரவில் வேக வைத்து நான்கில் ஒன்றாய் வற்றினதின் பேரில் காலையில் கொடுக்கவும். இதன் படி மூன்று வேளை கொடுக்க மஞ்சள் காமாலை தீரும்; இச்சாபத்தியம்.

3. திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், வாலுளுவைஅரிசி, வசம்பு, பெருங்காயம், வெள்ளுள்ளி இவைகளின் தூள் வகைக்கு 6 கழஞ்சு, அயச் செந்தூரம் 12 கழஞ்சு, கெந்தகச் செந்தூரம் 9 கழஞ்சு, கிட்டச்செந்தூரம் 18 கழஞ்சு, முத்தக்காசு, சிவனார் வேம்பு இவைகளின் தூள் வகைக்கு கால்படி ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றிற்குத் திரிகடி அளவு வெந்நீரில் பதினெட்டு நாள் உட்கொள்ள காமாலை, பாண்டு தீரும்; வாயுப் பண்டங்களை நீக்கவும்.

4. பசுவின் நெய், மோர், பசுவின் கொடிக்கள்ளிப் பால் வகைக்கு முக்கால் படி திரிகடுகு, ஓமம், திரிபலை, இந்துப்பு, சீரகம், சவுக்காரம், கோட்டம் வகைக்கு 2 வராகன் எடை, தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு, பெருங்காயம் வகைக்கு 4 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு பண எடை வீதம் 10 நாள்கள் சாப்பிட மஞ்சள்நோய் (காமாலை), பாண்டுவீக்கம், நீர்க்கோவை, வயிற்று நோய் தீரும். கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கவும்.

Koviloor Digital Library

5. கையாந்தகரை, தும்பை, அம்மான் பச்சரிசி வகைக்கு ஒரு பிடி வீதம் இடித்துச் சாறு பிழிந்து அதில் பன்னிரெண்டு மிளகை அரைத்துக் கலக்கி அதில் வெள்ளாட்டுப் பாலாவது பசுவின் பாலாவது கால்படி விட்டுச் சர்க்கரை 10 பலம் கூடப்போட்டுக் கொடுக்கவும். இவ்விதம் 6 நாள் கொடுக்க மஞ்சள் நோய் (காமாலை) தீரும்; கடும்பத்தியம்.

6. அரப்பொடி, கிட்டம், காந்தம், திரிபலை, திரிகடுகு, கருஞ்சீரகம், நற்சீரகம் இந்துப்பு, பெருங்காயம் இவைகளை ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து கரிப்பான் சாற்றால் நன்றாக ஆட்டி, கொட்டைப்பாக்கு அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் இஞ்சி சாற்றிலாவது, எலுமிச்சம்பழச் சாற்றிலாவது பத்து நாள் உட்கொள்ள பாண்டு, சோகை, காமாலை, தீரும்; பித்த உணவுப் பொருள்கள் தள்ளவும்.

7. ஒன்று முதல் மூன்று வரை முட்டையிட்ட கருங்கோழி ஈரலைக் கொழுப்புடன் எடுத்து ஆவாரை இலையை ஒரு சட்டி நிறைய அழுத்தி அதன் மேல் ஈரலை வைத்து மேலும் மேல் சட்டியிலும் அந்த இலையை அழுத்தி மூடிச் சந்து வாய்க்குச் சீலை செய்து மூன்று நாழிகை எரித்தெடுத்து மூன்று துண்டு செய்து வேளை ஒன்றுக்கு ஒரு துண்டாக மூன்று வேளை சாப்பிடத் தீரும்; இச்சாபத்தியம்.

8. நெல்லி இலையைப் புன்னைக்காய் அளவு அரைத்துக் கால்படி புளித்த மோரில் கலக்கி மூன்று நாள் காலையில் கொடுக்கத் தீரும்.

9. வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை ஒரு பாக்களவு அரைத்து எருமைத் தயிரில் கலக்கி மூன்று நாள் உட்கொள்ள நோய் தீரும்.

10. சீரகத்தையும் சங்கம்வேர்ப்பட்டையையும் வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு அரைத்துப் பசுவின் பாலில் கலக்கி உட்கொள்ள நோய் தீரும்.

11. அரப்பொடி, சுக்கு, கடுகு, திப்பிலி, வெள்ளுள்ளி, ஓமம் வகைக்கு 1 பலம், பெருங்காயம் 4 பலம், கடுக்காய் 5 பலம், இந்துப்பு, சீரகம், காந்தம் வகைக்கு 2 பலம், உப்பு கால் படி இவைகளை எல்லாம் கரிப்பான் சாற்றால் மூன்று நாள் வரை மெழுகுபோலாட்டிக் கொட்டைப்பாக்கு அளவு உருண்டை செய்து வேளையொன்றுக்கு ஓர் உருண்டை வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் பத்து நாள் உட்கொள்ள பாண்டு, காமாலை ஆகியநோய்கள் தீரும்.

மருத்துணவு:- மோர்சாதம் உட்கொள்ளவும்.

மஞ்சள் நோய்ப் படலம் முற்றும்.

சோகை நோய்ப் படலம்.

பாண்டு நோயிலிருந்து நீர் கெட்டுச் சோகை வருதலாம்.

கூறுஞ் சோகை குறிப்பை யறிந்துமே
தூறும் வியாதிகள் துப்பு ரவாகி
ஆறும் பண்டிதர் அன்பாகப் போற்றிட
கோறு மாமுனி குறிப்பா யுரைத்ததே.

Koviloor Digital Library

வாத சோகையின் இயல்பு.

உடல் அதைத்து, நா வறண்டு, விழி மஞ்சளாகி, நீர் வெதும்பி, பொன் நிறமாய் இறங்கி, கை கால் ஓயும்.

பித்த சோகையின் இயல்பு.

மெய் வெளுத்துத் தடித்துத் தலை திமிர்ந்து முகம் அதைத்து கண் வெளுத்துத் தளர்ந்து நெஞ்சம் பதைத்து அடிவயிறு கனத்து விம்மும்; நாவில் சுவையற்று நாக்கு, உதடு மஞ்சணித்து, இரு காதுகளும் அடைக்கும், கை, கால் மிகவும் ஓய்ந்து நீர் வெளுத்திறங்கும்.

மருத்துவம்:– கீழ்க்காய்நெல்லி மூன்று பங்கும், ஈருள்ளி ஒரு பங்கும் சேர்த்து மோர் தெளித்து இடித்துச் சாறு பிழிந்து கால் படி வீதம் மூன்று நாள் காலையில் கொடுக்க நன்றாய்க் கழிச்சலாகி வீக்கம் வற்றும்.

2. பசுவின் நீர், வெள்ளாட்டுநீர், கரிப்பான் சாறு வகைக்கு ½ படி ஒன்றாய்க் கலந்து அதில் நாள்சென்ற இரும்புக் கிட்டத்தை ஒரு மண்டலம் ஊறவைத்து உலர்த்திப் பொடித்தத் தூளும், சுக்கு வெதுப்பிப் பொடித்தத் தூளும் கொடுவேலிவேர்ப் பட்டைத்தூளும் ஓர் எடையாய்க் கலந்து வேளையொன்றுக்குத் திரிகடி அளவு பத்து நாள் உண்ணத் தீரும்.

3. அரப்பொடி, காந்தம் வகைக்கு 10 வராகன் எடை, இலிங்கம் 5 வராகன் எடை, இவைகளை நாவற்பட்டைச் சாற்றிலும், எலுமிச்சம் பழச்சாற்றிலும் வகைக்கு ஒரு நாளாட்டிவில்லை தட்டிக் காயவைத்து ஒரு கலசத்தில் போட்டு வேடு கட்டி நெல் குழியில் ஒரு மண்டலம் வைத்தெடுத்து வேளையொன்றுக்கு இரண்டு வராகன் எடை வீதம் நல்லெண்ணெயில் கலந்து 10 நாள் கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கிச் சாப்பிட்டுவர சோகை (வீக்கநோய்), மஞ்சள் நோய் (காமாலை) தீரும்.

4. அரப்பொடி, காந்தம், இரும்புக் கிட்டம் வகைக்கு 1 பலம் இவைகளைக் கையாந்தகரைச் சாற்றால் மூன்று நாளாட்டி புன்னைக்காய் அளவு உருண்டை செய்து வேளையொன்றுக்கு ஓர் உருண்டை வீதம் காலையில் எருமை மோரிலும் மாலையில் நீர் முள்ளிக் குடிநீரிலும் கொடுக்கத் தீரும். இச்சாபத்தியம்.

5. இரசம், கந்தகம், வெண்காரம், இந்துப்பு, அரப்பொடி, திப்பிலி, ஓமம், கருஞ்சீரகம், பெருங்காயம், மிளகு, கடுகு இவைகளை ஓர் எடையாய் கையாந்தகரைச் சாற்றாலாட்டித் தேற்றான்விதை அளவு உருண்டை செய்து வேளையொன்றுக்கு ஓர் உருண்டை வீதம் இஞ்சிச் சாற்றில் 10 நாள் உட்கொள்ளத் தீரும்.

சோகை நோய்ப் பகுதி முற்றிற்று.

Koviloor Digital Library

கண்டமாலை நோய்ப் படலம்.

கண்டமாலை நோய் என்பது, மேகநீரால் நரம்பு வழியாய் இரத்தம் கெட்டு கட்டி போல் திரண்டு வருதலாம்.

செப்பிடு மேகந் தானும் திரண்டுமே பலவா றாக
கப்பிய நரம்பைப் பற்றிக் கசிந்து நீ ரதிக மாகி
ஒப்புடன் சிரசைத் தாக்கி யோங்கி கண்டத்தின் கீழே
மெய்ப்புடன் கண்ட மாலை யாகவே விளைந்த தென்னே.

கண்டமாலை நோயின் இயல்பு.

கண்டத்தைச் சுற்றி அரித்துத் தடித்து வெடித்துப் புண்ணாகிச் சீழ் கட்டிப் புரை ஓடும்.

மருத்துவம்:– 1. சங்கு சங்கங்குப்பி, செங்கத்தாரி, அவுரி, சின்னி, கருந்துத்தி, நிலவாகை, கொடிவேலி, காட்டாமணக்கு இவைகளின் வேர்ப்பட்டை சிவன்வேம்புச் சமூலம், வெள்ளறுகுக் சமூலம் இவைகளை நிழலில் உலர்த்தி இடித்து வடிகட்டின தூள் வகைக்கு 5 பலம், பறங்கிப்பட்டை 3 பலம், குக்கில் ஓமம், கருஞ்சீரகம், வகைக்கு 1 பலம் வெள்ளுள்ளி 2 பலம், திப்பிலி, மிளகு, திப்பிலிமூலம், செவ்வியம், தேசாவரம், கடுகுரோகணி வகைக்கு 5 வராகனெடை இவைகளை இடித்துத் தூள்செய்து இரண்டு வகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு ஒரு மண்டலம் கரப்பான் உணவுப் பொருள்கள் நீக்கிச் சாப்பிட்டுவர கண்ட மாலை, கிரந்தி, கரப்பான் நோய் ஆகியவை தீரும்.

2. கெந்தகத்தைக் கோழிமுட்டை வெள்ளைக் கருவிலும், வில்வயிலைச் சாற்றிலும் வகைக்கு இரண்டு நாள் தனித்தனியே அரைத்துக் காயவைத்து இரண்டு முறை மணல் மறைவில் புடம் போட்டு கந்தகம் 1 வராகனெடை பலம், இரசம் 3 வராகன் எடை, தூய்மை செய்த சேங்கொட்டை 1 பலம், நொச்சி, குப்பைமேனி, கழற்சி, இண்டு, முருக்கு இவைகளின் கொழுந்து வகைக்கு ஒரு படி, வெள்ளறுகு 1 பலம், பொரியரிசி, அரைச்சிரங்கை, பனைவெல்லம் 3 வராகன் எடை, புளி 1 ½ வராகன் எடை இவைகளில் சேங்கொட்டையைத் தைலம் போக வறுத்துப் போட்டு ஒன்றாய் இடித்து மூன்று நாள் கொடுத்து மறுபத்தியம் 3 நாள் இருந்து 8–ம் நாள் தலைமுழுகி உப்பு வறுத்துக் கூட்டவும். வாய் வெந்தால் மருதம்பட்டைக் குடிநீரில் கொப்பளிக்கவும். கண்டமாலை, கன்னப்புற்று, வெடிசூலை கரப்பான் நோய் ஆகியவை தீரும்.

3. காரெள்ளெண்ணெய் கால் படி, சித்திரமூலப்பட்டை அரைப்பலம் அரைத்துப் போட்டு எண்ணெய் காய்ந்து வரும்போது 1 வராகன் எடை பனைவெல்லத்தைப் போட்டு மெழுகு பதத்தில் இறக்கிவைத்துக்கொண்டு மூன்று நாள்கள் வரை வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உப்பு, புளி, தள்ளி பத்தியம் இருக்க கண்டமாலை, அரையாப்பு முதலியன தீரும்.

4. நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி, கொடிவேலிவேர்ப்பட்டை, விஷ்ணு கரந்தை வேர்ப்பட்டை பூடு வகைக்கு 1

Koviloor Digital Library

பலம், சங்கு, நாயுருவி, சிறுபீளை இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு அரைப்பலம், வசம்பு 2 வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டு ஒரு நாள் இரவியில் வைத்து மறுநாள் காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் ஏழு நாள் உப்பு, புளி தள்ளிச் சாப்பிட்டுவர நோய் தீரும்.

கண்டமாலை முதலிய இரணங்களுக்குக் களிம்பு.

1. துத்தம், கந்தகம், சூதம், காசுக்கட்டி, துருசு, குங்கிலியம், குக்கில், மிருதார்சிங்கி, தாரம், வேம்பாடம் பட்டை, வெண்தோன்றிக்கிழங்கு இவைகளை ஒரு எடையாய் ஈருள்ளிச்சாற்றால் ஒரு நாள் ஆட்டி உலர்த்திப் பின்பு வேப்பெண்ணெய் விட்டுக் களிம்பாகும் வரை அரைத்துப் புண்ணில் போட்டுவர நோய் தீரும்.

2. வெள்ளைப்பாடாணம், மனோசிலை, காரீயம், வெண்தோன்றிக் கிழங்கு, சூதம், கந்தகம், அரிதாரம், மிருதார்சிங்கி, துத்தம், துருசு, இவைகளை ஓர் எடையாய் வெற்றிலைச்சாற்றால் ஆட்டி உலர்த்திப் பின்பு வேப்பெண்ணெய் ¼ படி, நரிமிரட்டி, பெருந்தும்பை, எட்டி இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 1 பலம் வீதம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் கல்வத்தில் இட்டு, களிம்பு போல் அரைத்துப் புண்ணில் போட ஆறும்.

மேற்படி இரணங்களுக்குத் துவர்ச்சீலை

உதியம், பெருமரம், வேம்பு, செங்கத்தாரி, பூதகரப்பான் இவைகளின்பட்டை, தேவதாரம் வகைக்கு 2 பலம், கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், மிளகு, பூண்டு, வெள்ளைக்குங்கிலியம், காசுக்கட்டி வகைக்கு 1 பலம், துருசு, கால் பலம் இவைகளை அரைத்துக் கால் படி நல்லெண்ணெயிலாவது, வேப்பெண்ணெயிலாவது போட்டுக் காய்ச்சி வடித்துச் சீலையில் ஊட்டி இரணங்களில் போட்டுவர நீங்கும்.

கண்டமாலை, விப்புருதி, அரையாப்பு, முலைக்குத்து கட்டிகளுக்கு மேல் பூச்சு,

1. பசுவின் நெய், பால் வகைக்கு அரைப் படி; சதுரக்கள்ளிப் பால் ஒரு ஆழாக்கு; விஷ்ணுகாந்தி, வட்டத்திருப்பி, கொடிவேலி இவைகளின் சாறு வகைக்கு கால் படி வீதம் விட்டுக் காய்ச்சி வடித்து ஒரு காசு எடை உள்ளுக்கும் கொடுத்து உடம்பிலும் பூசத்தீரும். உப்பு, புளி நீக்கிப் பத்தியம் கொள்ளவும்.

2. கால் படி வேப்பெண்ணெயில் வலம்புரிக்காய், கஸ்தூரி மஞ்சள், ஏலம், கருஞ்சீரகம், துருசு, துத்தம் வகைக்கு 2 கழஞ்சு, மாவிலிங்கம் கொழுந்து, கொடிவேலிவேர்ப்பட்டை வகைக்கு 1 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துப் பூச மாறும். இச்சாபத்தியம்.

கண்டமாலை நோய்ப் பாலம் முற்றிற்று.

Koviloor Digital Library

பிளவை நோய்ப் படலம்.

அறைந்தார் நோயின் சாரமிது அன்பாய் மாதர் தானறிய
நிறைந்தார் பிளவை நேரும்விதம் நிறையும் ரணங்கள் வந்தவகை
திறைந்தார் விடநீர் தான்றேவி தெரிக்கும் காமாலை யெனவே
முறைந்தார் முனிவ ரானவரும் மொழிந்தார் மொழிந்தார் மொழிந்தாரே.

மேற்படி நோயின் இயல்பு.

1. நடு முதுகின் முள்ளந்தண்டின்மீது மாங்காய் அல்லது தாமரைக்காய் போல் வீங்கி முகக் கண்ணுண்டாகிப் புரையோடி வேதனை அதிகரித்து மூச்சுவிடாக்குத்து, குளிர்சுரம், நாவறட்சி, சோபதாபம் கண்டால் இராசப்பிளவை என்றும், மருந்தினாலும், கருவியினாலும் தீராதென்றும், முள்ளந்தண்டோரத்தில் உரைபோல் திரண்டு பல கண்ணும் புரையுமுண்டாகி தினமும் கழிச்சல் கண்டால் பக்கப் பிளவை என்றும், மார்பில் தெண்டு போல் திரண்டு கண்டால் மாரப் பிளவை என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மருத்துவம்:– 1. நெல்லி வேர்ப்பட்டை, நிலப்பனங்கிழங்கு, நெற்பொரி, ஆவாரைவேர்ப்பட்டை இவைகளை ஓர் எடையாய் தாய்ப்பாலில் அரைத்துப் பசுவின் வெண்ணெயில் கலந்து பூசி வந்தாலும், ஆவாரை, அல்லி, நெல்லி, நீர்ப்பூலாவேர் இவைகளைப் பசுவின் வெண்ணெயாலாட்டி நீரை வடித்துத் தைலம் கலந்து பூசி வந்தாலும் வீக்கத்தின் வலி வாங்கும். வாராகிக்கிழங்கை தாய்ப்பாலில் அரைத்துப் பசுவின் வெண்ணெயில் கலந்து வீக்கத்தில் பூசிவர வலி வாங்கும். காரம், துருசு, பாடாணம் இவைகளை ஓர் எடையாய் வெண்ணெயிலரைத்துக் களிம்புசெய்து வீக்கத்தில் பூச உடையும். பின்பு களிம்பைத் துணியில் ஊட்டிப்புண்ணிற்போட்டு மூன்று நாள் தயிரும் சோறும் வைத்துக்கட்டி காரத்தின் வெப்பையாற்றிய பின்பு வேம்பாடம்பட்டை 2 பலம், ஆவாரைவேர்ப்பட்டை 1 பலம், துடரிப் பூலா வேர்ப்பட்டை அரைப் பலம் இவைகளைப் பொடித்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துப் பகலில் புண்ணில் பூசி இரவில் ஆவாரங் கொழுந்தை வதக்கிவைத்துக் கட்டிவர நோய் தீரும்.

2. ஆவாரைவேர்ப்பட்டையை அரைத்துப் புண்ணைச் சுற்றிச்சுவர் போல் வளைத்து சேங்கொட்டை சுட்ட கரியைப் பொடித்துத் தூவிக் கட்டி வைத்திருந்து மாலையில் ஆவாரங்கொழுந்தைப் பசுவின் நீரில் வதக்கிவைத்துக் கட்டிச் சூரிய உதயத்தில் வெந்நீரால் புண்ணைக்கழுவி வரப் புண் ஆறிவிடும்.

3. மலைதாங்கிவேர், ஆவாரம்பூ, குருவையரிசிமாவு இவைகளை இடித்துப் பிட்டவித்துக் கொடுக்க இரணத்தில் நீர்க்கசிதல் வாங்கும்.

4. பொன்னாவரை அல்லியைக் கொட்டைப்பாக்கு அளவு அரைத்துப் புளித்த மோரில் கலக்கிக்கொடுக்க நாவறட்சி, தாகம் ஆகியவை தீரும்.

5. கோவைக்கிழங்கைத் தயிர்விட்டு அரைத்துக் கட்டினாலும் அல்லது பிளவைக்கொல்லிக்கிழங்கை அரைத்துக் கட்டினாலும் ஆணிவிழுந்து புண்ணாறும்.

பிளவை நோய்ப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

வயிற்றுவலி நோய்ப் படலம்.

வயிற்றுவலி நோய் என்பது மலச்சிக்கலாகி மூலத்தில் கனலேறி சூடுகொண்டு குடல் முறுக்கு ஏற்பட்டு அதனால் அநேக நோய்கள் உண்டாகின்றன.

சொன்னார் நந்தி துடருங் குன்மவகை
மின்னார் சித்தர் மறையிது வல்லோ
அன்ன மேக மறையும் வயிற்றுவலி
பொன்னோ மாதா புகல வறைந்ததே.

மருத்துவம்:– 1. ஒரு பிடி பிரண்டையைக் குறுக நறுக்கிச் சிதைத்துச் சட்டியில்போட்டு வறுத்து தண்ணீரும், அரைப்படி மோரும்விட்டு, திப்பிலி வெள்ளுள்ளி வகைக்கு 5 வராகன் எடை தட்டிப்போட்டு ஒரு சிரங்கையாக வற்றவைத்துக் கொடுக்கத் தீரும்.

2. முருங்கை, கழற்சி, சிவனார்வேம்பு, மூக்கரைச்சாரணை, கொடிவேலி இவைகளின் வேர்ப்பட்டை, வெள்ளுள்ளி, பெருங்காயம் வகைக்கு 2 வராகன் எடை, 2 படி தண்ணீரில் போட்டு கால் படியாய் வற்றவைத்து வேளையொன்றுக்கு ஆழாக்கு வீதம் இரண்டு வேளை உட்கொள்ளத் தீரும்.

3. ஓமம், பனைவெல்லம், இந்துப்பு, உள்ளி, சுக்கு, திப்பிலி வகைக்கு 1 கழஞ்சு, புங்கு, வேம்பு இவற்றின் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, இவைகளை நன்றாய் அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவு உருட்டி வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் வெந்நீரில் உரைத்துச் சாப்பிட்டு வரத் தீரும்.

4. திரிகடுகு, ஓமம், சதகுப்பை வகைக்கு கால் பலம், காயம், கடுகுரோகணி வகைக்கு 1 ½ வராகன் எடை, கருக்கின இலுப்பைப் பிண்ணாக்கு, பனைவெல்லம் வகைக்கு 1 பலம் இவைகளைப் குழம்பு போல் காய்ச்சி கால்படி பிரண்டைச் சாற்றால் ஆட்டிக்கொட்டைப்பாக்கு அளவு உருண்டைசெய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டு வரத்தீரும்.

5. அரைப்படி பசுவின் நெய்யில் 6 பலம் சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சி, ஒன்பது பலம் சுக்குத் தூளைத் தூவிக் கிளறிக் கம்பிபோல வரும்போது மறுபடியும் 6 பலம் சர்க்கரையை போட்டுக் கிளறி வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு ஓர் எலுமிச்சங்காய் அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

6. ஒரு படி கோவைக்காயை இரண்டாய்க் கீறி, கால் படி உப்புப் போட்டு ஊறவைத்துப் பத்து நாள் சென்றபின்பு உணவுடன் சேர்த்துச் சாப்பிட்டுவர நெடுநாளைய வயிற்றுவலி நீங்கும்.

7. முருங்கைப்பூ, முற்றின பிரண்டை வகைக்கு ஒரு பிடி கொப்பரைத் தேங்காய் 1. இவைகளை இடித்துப் பிட்டவிழ்த்துப் பிழிந்து கொடுக்க வயிற்றுவலி தீரும்.

Koviloor Digital Library

8. ஒரு படி பிரண்டைச் சாற்றைக் கால் படியாய் வற்ற வைத்துக் கல்வத்திலிட்டு இலுப்பை அரப்பைச் சுட்டகரி 2 பலம், பனைவெல்லம் அரைப்பலம் கூடப்போட்டு மெழுகுபோல் அரைத்துக் கழற்சிக்காய் அளவு உருண்டைசெய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் ஒரு மண்டலம் உட்கொள்ளத் தீரும். இச்சாபத்தியம்.

வயிற்றுவலி முதலியவைகளும் மருந்து.

கரியுப்பு, எருமைமோர், பேய்க்குமட்டிச்சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து இந்துப்பு சவுட்டுப்பு, வளையலுப்பு, வெடியுப்பு வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி வைத்துக் கொண்டு உதயத்தில் நீராகாரத்தில் ஒரு காசு எடை உப்புப்போட்டு ஒரு மண்டலம் சாப்பிட சகல விதமாக கட்டிகள், கெண்டை, சோகை, பொருமல், வயிற்றுவலி ஆகியவை தீரும். இச்சாபத்தியம்; வாய்வு பண்டங்களைத் தள்ளவும்.

வயிற்றுவலி, செரியாமைக்கு வச்சிரவல்லி இளகம்.

பிரண்டைச்சாறு 3 படி, இஞ்சிச்சாறு கால் படி ஒன்றாய்க் கலந்து 6 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து திப்பிலி, மிளகு, ஓமம் வகைக்கு 1 பலம், வெள்ளுள்ளி 5 பலம், சுக்கு, இந்துப்பு, கல்லுப்பு, வளையலுப்பு அட்டுப்பு வகைக்கு அரைப் பலம், பெருங்காயம் 4 வராகன் எடை இவைகளைப் பொடித்துத் தூவிக் கிண்டி நெய், தேன் விட்டு இளகஞ் செய்து வேளையொன்றுக்குக் கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

வயிற்றுவலிக்குப் பேய்க்குமட்டி எண்ணெய் (குடிநெய்)

பேய்க்குமட்டிக்காய்ச்சாறு 4 படி, நல்லெண்ணெய் 1 படி, சீரகம், ஓமம், கந்தகம், கருஞ்சீரகம், மிளகு, வெள்ளைப்பூண்டு, இந்துப்பு, பெருங்காயம், திப்பிலி, மல்லி, சதகுப்பை, செஞ்சந்தனம், பூலாங்கிழங்கு வகைக்கு ஒரு பலம், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 6 பலம் இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து ஒரு காசு எடை கொடுக்க சகல வயிற்று நோயும் தீரும்.

இரத்த சத்துக்கு மருந்து.

1. கால் பலம் வெந்தயத்தை ஊறப்போட்டு அரைத்து 4 தேங்காய்களைப் பிழிந்த பாலில் கலக்கி, அதில் பனைவெல்லம் 1 வராகன் எடை, பசுவின் நெய் 1 படி கூடவிட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து சாதத்தில் விட்டு சாப்பிட இரத்தசத்து உண்டாகும்.

2. ஆடாதோடை இலையையும் தூதுவளை இலையையும் இடித்துப் பிட்டவித்து உழக்குச்சாறு பிழிந்து அதில், கோட்டம், திப்பிலி, சாம்பிராணி இவைகளை வெதுப்பிப் பொடித்துத் தூவிக்கொடுக்க சத்து உண்டாகும்.

3. கருங்குங்கிலியத்தைப் பனைவெல்லத்துடன் ஓரளவாய்ப் பொடித்துப்போட்டு அதில் கோழிமுட்டை வெள்ளைக்கருவும்

Koviloor Digital Library

நல்லெண்ணெயும் ஓர் எடையாய் விட்டுக் கம்பிப்பிசின் போல் கலந்து, காலையில் 6 மணிக்கு முன்னால் உணவுடன் கலந்து மூன்று நாள் உட்கொள்ளத் தீரும்.

4. அத்திப் பட்டை, அத்திப் பிஞ்சு, தென்னம் பிஞ்சு, பருத்திப் பிஞ்சு, அரசு, ஆவாரை, முடக்கொத்தான், ஆல், வரப்பூலா, விருசு இவைகளின் கொழுந்து வெள்வேலம் பட்டை, சுக்கு, மிளகு, திப்பிலி மூலம், திப்பிலி சன்னலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, நன்னாரி வேர், தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பனங் கிழங்கு, அதிமதுரம் வகைக்கு 5 வராகன் எடை வீதம் அரைத்து, அரைப்படி பசுவின் நெய்யில் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுவர சத்து உண்டாகும்.

வாயாலும் மூக்காலும் இரத்தம் விழுதலுக்கு மருந்து.

1. ஆடாதோடை இலைச் சாறும் தேனும் வகைக்குச் சம அளவு வீதம் கலந்து மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

2. வில்வ வேர் இழைத்து சீவலை ஓர் எலுமிச்சங்காய் அளவு அரைத்துப் பசுவின் மோரில் கலக்கி மூன்று நாள் கொடுக்கத் தீரும்.

3. கடுக்காய் விதை நீக்கி ஆடாதோடை இலைச் சாற்றில் பதினாறு முறை சூரியினில் உலர்த்திப் பொடித்துத் தேனில் கலந்து தான்றிக்காய் அளவு சாப்பிட்டு வரத் தீரும்.

விக்கலுக்கு மருந்து.

1. ஒரு விளாம்பழச் சதையில் வறுத்த திப்பிலிப் பொடி, அழுக்கறாவேர்ச் சுட்டகரி வகைக்கு ஒரு கழஞ்சு, இந்துப்பு கால் கழஞ்சு இவைகளைத் தாய்ப்பால் விட்டு அரைத்துத் தேனில் கலந்து சாப்பிடத் தீரும்.

2. திப்பிலி, வெந்தயம், நெற்பொரி, நெல்லிப் பருப்பு, சிற்றரத்தை, இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துச் சர்க்கரை கலந்து நெய்யில் குழைத்துச் சாப்பிட்டு வரத் தீரும்.

3. அரைப்படி பருத்தி விதைப் பாலில் கால் பலம் வெல்லத்தைப் போட்டுப் பாகுசெய்து திப்பிலி, ஏலம், அதிமதுரம், நெற்பொரி வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துத் தூவிக்கிண்டிச் சாப்பிட்டுவரத் தீரும்.

4. தேங்காய்ப் பால் கால் படி; தேன் படி அரைக்கால் ஒன்றாய்க் கலந்து அதில் கால் வராகன் எடை அபினியைக் கலந்து கொடுக்கத் தீரும்.

5. தாமரை விதைப் பருப்பை வெந்நீரில் அரைத்துக் கலக்கிக் கொடுக்கத் தீரும்.

6. செருப்பைச் சுட்ட சாம்பலும், மிளகைச் சுட்ட சாம்பலும், திப்பிலிச் சாம்பலும் ஓர் எடையாய்த் தேனில் கலந்து நாவில் தடவ, நாவில் காணும் சுரசுரப்பு, விக்கல் தீரும்.

Koviloor Digital Library

7. இந்துப்புட், திப்பிலியும் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்க நீங்கும்.

8. சீந்தில் கொடியும், நிலவேம்பும் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

9. மான்கொம்பு, சடாமாஞ்சில், திரிகடுகு, சிறுதேக்கு, பூசணிவித்து இவைகளைத் தூள்செய்து சர்க்கரை கலந்து திரிகடி அளவு சாப்பிடத் தீரும்.

10. கொடிவேலி வேர், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, சுக்கு, வளையலுப்பு இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர்செய்து குடிக்கத் தீரும்.

11. கொடிவேலி வேர், உள்ளி, சேவகன்பூடு (சிற்றாமுட்டி) ஓர் எடையாய்க் கியாழம் செய்து கொடுக்கத் தீரும்.

12. திப்பிலியும், நெற் பொரியும் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கத் தீரும்.

13. பளிங்குச்சாம்பிராணி, பசுவின் நெய், மனோசிலை, மயில் இறகு இவைகளை ஒன்றாய்க் கூட்டித் தீயில் போட்டுப் புகை போட சுரத்தின் பேரில் காணும் விக்கல் மாறும்.

14. மஞ்சள், பொன்மெழுகு, தேவதாரம், மனோசிலை, அகில், சடாமாஞ்சில், அமுக்கறா வேர் இவைகளைப் பொடித்துத் துணியில் ஊட்டித் தீயில் கொளுத்தி ஆற்றி நாசியில் புகைபிடிக்கத் தீரும்.

15. பசுவின் நெய், தாய்ப்பால், விளக்கெண்ணெய் இவைகளை ஓர் எடையாய் கலந்து பஞ்சில் ஊட்டி நெஞ்சில் போடத் தீரும்.

16. கோழிமுட்டை வெள்ளைக் கருவில் துணியை நனைத்துத் தொண்டைக் குழிமேல் போடக் குணமாகும்.

17. சுக்கு மேல் புறணியைச் சீவி விட்டுச் சோற்று உப்பை அரைத்துக் கவசித்துக் கம்பியில் கோத்து நெருப்பில் சுட்டு எடுத்துக் குழியம்மியில் இட்டு அரைத்துத் தூள்செய்து வேளைக்கு இரண்டு சிட்டிகை அளவு தேனில் குழைத்துக் கொடுக்கத் தீராத விக்கலும் தீரும். அரை மணிக்கு ஒரு முறை, விக்கல் நிற்கும் வரை கொடுக்கவும்.

கக்கல் (வாந்தி) விக்கலுக்கு மருந்து.

1. பாலைவேர்ப்பட்டை, ஏலம் விலாமிச்சம்வேர், அதிமதுரம், லவங்கப்பட்டை, வில்வவேர், சுக்கு, அரத்தை இவைகளை வகைக்குக் கால் பலம் வீதம் சிதைத்து ஒரு படி நீரில் போட்டுக் கால் படியாய் வற்றவைத்து மூன்று வேளை கொடுக்க நீங்கும்.

2. கிராம்பு, சாதிக்காய், அதிமதுரம், மாதுளம் பழம், ஏலம், வில்வவேர், புங்கம் வேர், விளாம்பழம், சீந்தில் தண்டு, கடுக்காய் இவைகளை ஓர்

Koviloor Digital Library

எஃடையாய்க் குடிநீர் செய்து தேன்விட்டு வெண்காரம் பொரித்துப்போட்டு மூன்று வேளை கொடுக்க நீங்கும்.

3. செவ்வியம், சுக்கு, விலாமிச்சு, ஏலம், அதிமதுரம், கொத்தமல்லி, வில்வவேர், பாலைவேர் இவைகளை ஓர் எடையாய் சிதைத்துப் போட்டுக் குடிநீர் செய்து கொடுக்க நீங்கும்.

4. சுக்கு, முத்தக்காசு ஓர் எடையாய்ப் போட்டுக் குடிநீர் செய்து மூன்று வேளை கொடுக்க நீங்கும்.

5. வில்வவேர், நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துத் தேனில் கலந்து நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

6. நெல்லிப்பருப்பு, நெற்பொரி, சர்க்கரை, திப்பிலி, மான்கொம்பு ஆகியவற்றை ஓர் எடையாய்ப் பொடித்துத் தேனில் கலந்த நாள் ஒன்றுக்கு மூன்று வேளை கொடுக்க நோய் தீரும்.

7. ஏலம், இலவங்கம், முத்தக்காசு, தாமரைவிதைப் பருப்பு, தூதுவளை, சந்தனம், பச்சைக்கற்பூரம், இலந்தைவிதை, நெற்பொரி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து அதற்கு சமமாக சர்க்கரை கலந்து திரிகடி அளவு தேனில் கலந்து கொடுக்க நோய் தீரும்.

8. கல்நார், சாத்திரவேதி இவற்றை ஓர் எடையாயப் பொடித்து கஞ்சாசாறு விட்டு அரைத்து ஏழு புடம் போட்டு எடுத்து நன்கு நெகிழ அரைத்து காலை மாலை இரு வேளையும் குன்றியளவு தேனில் உட்கொள்ள வாத சிலேத்துமம், கபம் ஆகியவை தீரும். பித்தம் மீறி நின்றால் பசுவின் நெய் அல்லது இளநீரில் கொடுக்கத் தீரும்.

9. வில்வவேர், சிற்றாமுட்டிவேர், சுக்கு இவைகளை வகைக்கு நான்கு வராகன் எடை வீதம் தட்டி நான்கு படித் தண்ணீரில் போட்டு அரைப் படியாய் வற்றவைத்துக் கொஞ்சம் தேன் விட்டு நாளொன்றுக்கு மூன்று வேளை உட்கொள்ளத் தீரும்.

10. திப்பிலியும், அதிமதுரமும் ஓர் எடையாய்ப் பொடித்துத் தேனில் கலந்து தடவத் தீரும்.

11. மாதுளம்பழச் சாற்றில் திப்பிலிப் பொடி, சர்க்கரை, நெற்பொரி, தேன் இவைகளைக் கலந்து உட்கொள்ளத் தீரும்.

12. மயிலிறகைச் சுட்டகரி, அதிமதுரம், சர்க்கரை, திப்பிலி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கத் தீரும்.

13. எலுமிச்சம்பழச் சாற்றில் மிளகைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கத் தீரும்.

14. நெற்பொரி, பாசிப்பயறு, வில்வவேர், முன்னைவேர், ஏலம், இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் செய்து கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

வாந்தியை நிறுத்த மருந்து.

1. ஓர் எலுமிச்சம்பழச் சாற்றில் ½ வராகன் எடை தேனையாவது சர்க்கரையையாவது கலந்து மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

2. ஓர் எலுமிச்சம்பழத்தை நான்காய்க் கீறி அதில் ஏலம், கிராம்பு, அதிமதுரம், ஓமம், சீரகம், மல்லி, அரத்தை, அட்டுப்பு, தாளிசப்பத்திரி வகைக்கு 1 வராகன் எடை வீதம் பொடித்துத் தூளை வைத்து நூலால் கட்டி சுடு சோற்றை அரைத்து அதில் எலுமிச்சம் பழத்தைப் பொதிந்து தீயில் வாட்டி ஆற்றிக் கவசம் தள்ளி ஒவ்வொரு கீற்றாய்ச் சாப்பிட்டுவரத் தீரும்.

3. நாயுருவி இலை, பிரண்டைக்கொழுந்து வகைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு அரைத்து இளவெந்நீரில் கரைத்து மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

4. திரிகடுகு, வில்வவேர், மல்லி இவைகளை ஓர் எடையாய்ச் சிதைத்து ஒரு படி நீரில் போட்டுக் குடிநீர் செய்து மூன்று வேளை கொடுக்க நிற்கும்.

5. பருத்திவிதைப்பருப்பு, ஏலம், முன்னைவேர், நெற்பொரி இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து, சர்க்கரையைச் சம அளவு கலந்து மூன்று வேளை கொடுக்க நீங்கும்.

6. பருத்திவிதைப்பருப்பு, சீரகம், திப்பிலி, ஏலம், அதிமதுரம், நெற்பொரி, சர்க்கரை வகைக்கு 5 வராகன் எடை பொடித்துத் திரிகடி அளவு தேனில் உட்கொள்ள நோய் நீங்கும்.

நாவறட்சிக்கு

கற்கடகசிங்கி, சிறுதேக்கு, திரிகடுகு, கடுக்காய், கோட்டம், சடாமாஞ்சில், இந்துப்பு இவைகளை வெதுப்பிப் பொடித்துத் திரிகடி அளவு தேனிலாவது, தாய்ப்பாலிலாவது மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

தாகத்திற்கு

வெட்டிவேர், மதுரம், சீரகம், கடுகு, சுக்கு, மல்லி, விலாமிச்சுவேர், சதகுப்பை, கோட்டம் இவைகளை ஓர் எடையாய்க் கியாழம் செய்து உட்கொள்ள நோய் நீங்கும்.

வில்வக்கொழுந்து, அதிமதுரம், வெட்டிவேர், கோட்டம், பாலை, கொத்தமல்லி, பாசிப்பயறு இவைகளை ஓர் எடையாய்க் கியாழம் செய்துகொடுக்கத் தீரும்.

கொத்தமல்லி, வெட்டிவேர், கோட்டம், அதிமதுரம், நெல்லிக்காய், சந்தனம், சீரகம், தாமரைக்கிழங்கு, முத்தக்காசு, அறுகு, விலாமிச்சம்வேர் இவைகளை ஓர் எடையாய்க் குடிநீர் செய்து உட்கொள்ளத் தீரும்.

Koviloor Digital Library

ஒன்றேகால் படி ஆற்றுமணலைத் தீப்போல் வறுத்து, ஒரு பிடி அரசங்கொழுந்தைக் குறுக அரிந்துபோட்டுக் கருகின பின் ஓமம் ஒரு கழஞ்சு போட்டுப் பொரித்து அதனுடன் நான்கு படி தண்ணீர் விட்டுக் காயவைத்துக்கொண்டு கொடுத்துவர தாகவேட்கை நீங்கும்.

குறிப்பு: இவற்றிற்கெல்லாம் பத்தியமில்லை. மேற்சொல்லிய பொருட்களை வகைக்கு ஒரு பலம் விழுக்காடு போட்டக் கொள்ளவும்; பித்தத்தைக் கண்டிக்கும் படியான உணவுப்பொருள்களைச் சேர்க்கவும்; இச்சாபத்தியம்.

சுவையின்மைக்கு மருந்து.

பொரித்த சீரகம் ஒரு பலம், ஏலம் அரைப் பலம் இவைகளைக் கியாழம் செய்து சர்க்கரை கலந்து சாப்பிட சுவையின்மை நீங்கும்.

வயிற்றுவலி நோய்ப் படலம் முற்றும்.

சூரணப் படலம்.

இது கல்கவகை வேர் வகைகளால் தூள்செய்து சர்க்கரை கலந்து சாப்பிடுதலால் (கலப்புத்தூள்) சூரணப் படலம் எனப்பெயர் பெற்றது.

கூறுஞ் தூரணங் குறிக்கு முறைமைகேள்
தேனு மாமுனி தெளிய வெடுத்துமே
ஆறும் படித்தற் கரியவைத் தியமிது
கோறுஞ் சாரசங் கிரகமென் னலாமே.

சொல்லுவேன் தூரணத்தின் வயது மார்க்கஞ்
சுருக்கமாய் மானிடர் களறிய வேண்டி
புல்லுவேன் வயதுதான் திங்க ளாறு
பூட்டினார் லோகத்து மாந்தர்க் காக
வெல்லுவேனி துவறிந்து பிணியா ளர்க்கு
விரும்பியே யவிழ்தமது கொடுப்பா ரானால்
அல்லவே நோயேது கோளா றேது
அப்பனே யிதுவறிந்து செய்து பாரே.

இந்த நூலில் கூறியபடி 6 திங்களுக்கு மேல் தூள்களை உபயோகிக்கலாகாது; அதனால் நோய் தீராது 5 மாதத்திற்குள் உபயோகிக்க வேண்டும். பெரும்பாலும், சித்தர்கள் கூறியவண்ணம் பிசகி நடக்கும் வைத்தியருக்கும், நோயாளிக்கும் இப்பாடலை நற்சாட்சியாகக் கூறப்பட்டது. இவ் விதிகளை மீறுவதால் நோயாளிக்கு நோய் போகாமல் பண்டிதன்மீது குற்றம் சாற்றலாயிற்று. ஆகையால் இவ்வைத்தைப் பண்டிதன் பெரும்பாலும் அறியவேண்டும். இவ்வாறு (நூலாசிரியரால்) தீர்வு சொல்லப்பட்டுள்ளது.

1. ஏலம், அதிமதுரம், தாமரைக்கிழங்கு, நிலவேம்பு, முத்தக்காசு, வில்வவேர், கோட்டம், சந்தனம், வாய்விளங்கம், சடாமாஞ்சில்,

Koviloor Digital Library

தண்ணீர்விட்டான்கிழங்கு, அசுவகெந்திக்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, நன்னாரிவேர், முந்திரிகைப்பழம் (திராட்சை), இலவங்கம், முடக்கொத்தான்வேர், நெருஞ்சி வேர் திரிகடுகு, தாளிசப்பத்திரி, நெய்தல்கிழங்கு, கருஞ்சீரகம், சாதிக்காய், திப்பிலி, நெல்லிப்பருப்பு, கச்சோலம், காட்டுச்சீரகம், தக்கோலம் வகைக்கு 1 ½ பலம்; குங்குமப்பூ, கோரோசனை, கற்பூரம் வகைக்கு அரைப் பலம்; இவைகளைப் பொடித்து அதற்குச் சமமாய் சர்க்கரை கலந்து வேளையொன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டுவரக் கக்கல், அரோசிகம், (சுவையின்மை), நெஞ்செரிவு, கை, கால், வயிறு எரிவு, உடல் படபடப்பு, என்பு வெட்டை, வாத பித்த பாண்டு தீரும்; இச்சாபத்தியம்.

2. ஏலம், திரிகடுகு, அதிமதுரம், சந்தனம், தக்கோலம், சிறுநாகப்பூ, கொத்தமல்லி, கோட்டம், அதிவிடையம், முத்தக்காசு, சடாமாஞ்சில், சிறுதேக்கு, மஞ்சள், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், தாமரைவளையம், கூகைநீர், செங்கழுநீர்க்கிழங்கு, நெல்லிவற்றல், பேரீச்சம்பழம், முந்திரிகைப்பழம், மரமஞ்சள், தாளிசப்பத்திரி, சீந்தில்சர்க்கரை, கருங்காலிப்பட்டை, வேப்பம்பட்டை, சீரகம், அசுவகெந்தி, கற்பூரம், சாரணைவேர், இந்துப்பு, நிலப்பனங்கிழங்கு இவற்றை ஒரு எடையாய்த் தூள்செய்து நெய், தேன், சர்க்கரையில் உட்கொள்ள பிரமேகம் மூத்திரக்கிருச்சனம், பாண்டு, சோகை, மஞ்சள் நோய் (காமாலை), பழையசுரம், பித்தம், இருமல், பீனிசம் ஆகியவை தீரும். கரப்பான் உணவுப்பொருள்களை நீக்கவும்.

3. ஏலம், இலவங்கம், மஞ்சள், அதிமதுரம், திரிகடுகு, திப்பிலிமூலம், செவ்வியம், சிற்றரத்தை, சந்தனத்தூள், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, தகரம், வால்மிளகு, முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம், தாமரைக்கிழங்கு, மல்லி, நெல்லிவற்றல், நெற்பொரி, பருத்திவிதைப்பருப்பு, மாதுளைவேர்ப்பட்டை, வில்வவேர், சந்தனம், நிலப்பனைக்கிழங்கு, நன்னாரி, அமுக்கறா, முத்தக்காசு, சீந்தில்சர்க்கரை இவற்றை ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாய் சர்க்கரை உட்கொள்ள நீரெரிவு, இரத்தம் விழுதல், விடாய், மயக்கம், கக்கல், பித்தம், தலைநோய், என்புசுரம், ஈளை, இருமல், உப்புசம், நெஞ்செரிவு ஆகியவை தீரும். கடுகு, நல்லெண்ணெய் தவிர மற்றவை எல்லாம் சேர்க்கலாம்.

4. இலவங்கம் 1 பலம்; மிளகு 2 பலம்; சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி 8 பலம்; கூகைநீர் 16 பலம்; சுக்கு 32 பலம்; வெல்லம் 64 பலம்; இவற்றை இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாய்ச் சர்க்கரை கலந்து வேளையொன்றுக்குத் திரிகடி அளவு உட்கொள்ள பித்தம் (அழல்), வாதம் (வளி), வாயுகிரந்தி, ரணம் மேகஊறல், சொரி சிரங்கு, சிறுநச்சுக்கடிகள், பெரும்பாடு, எலும்புருக்கி ஆகியவை தீரும்.

5. ஏலம், நற்சீரகம், இலவங்கம், மரமஞ்சள், விலாமிச்சம் வேர், கார்போகரிசி, கடுக்காய், முத்தக்காசு, நெற்பொரி, சிறுநாகப்பூ, பெருங்காயம் இவற்றையெல்லாம் ஓர் எடையாய்த் தூள்செய்து திரிகடி அளவு தேன் நெய்யில் உட்கொள்ளச் சுவையின்மை, கக்கல், பொருமல் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

6. ஏலம், திப்பிலி, கிராம்பு, சடாமாஞ்சில், முத்தக்காசு, பேரீச்சு, வெட்டிவேர், கொத்தமல்லி, சந்தனம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், தாமரைக்கிழங்கு, முந்திரிகைப்பழம், செங்கழுநீர்க்கிழங்கு, சாதிக்காய், நெரிஞ்சிவேர், மூக்குரட்டை, கோட்டம், அமுக்கறாக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, இலவம்பிசின் இவற்றையெல்லாம் ஓர் எடையாய்த் தூள்செய்து சமமாய்ச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு நெய் அல்லது தேனில் உட்கொள்ள மேகம், கக்கல், சுவையின்மை, வியர்வை, பித்தசோகை, மலக்கட்டு ஆகியவை தீர்ந்து வலிமை உண்டாகும்.

தாளிசப்பத்திரிச் சூரணம்.

1. தாளிசப்பத்திரி 40 கழஞ்சு; திரிகடுகு, திரிபலை, சீரகம், கருஞ்சீரகம் ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, சிறுதேக்கு, அதிமதுரம், சிறுநாகப்பூ, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, செவ்வியம், வாய்விளங்கம், சிற்றரத்தை, வால்மிளகு, ஓமம், குரோசானி ஓமம், கோஷ்டம் கோரோசனை, தேசாவரம், அக்கராகாரம், கொத்துமல்லி, முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம்பழம், கூகைநீர், நிலப்பனைக்கிழங்கு, அமுக்கறாக்கிழங்கு, முத்தக்காசு, விலாமிச்சுவேர், வெட்டிவேர், தூதுவளை, கண்டங்கத்திரிவேர், நெய்தல்கிழங்கு, நெற்பொரி வகைக்க ஒரு கழஞ்சு. இவைகளைப் ரவியில் உலர்த்தி இடித்து வடி கட்டினதில் சர்க்கரை 40 கழஞ்சு கூட்டி வேளையொன்றுக்குத் திரிகடி அளவு தேன், இஞ்சிச்சாறு, மாதுளம் பழச் சாற்றில் உட்கொள்ளக் காமாலை, வாந்தி, கிரந்தி, சுவையின்மை, நெஞ்செரிவு, தேகளிவு, குன்மம், பித்தவெட்டை, தாதுநட்டம், புகைச்சல், கண்மயக்கம், புண், சிரங்கு, கரப்பான், சூலை, குட்டம், வாயு ஆகிய நோய்கள் தீரும்.

2. தாளிசப்பத்திரி 10 பலம்; திரிகடுகு, திரிபலை, கோட்டம், அக்கராகாரம், ஆனைத் திப்பிலி, சீரகம், கொத்துமல்லி, வாய்விளங்கம், கிராம்பு ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், சோம்பு, வால்மிளகு, இலவங்கப்பட்டை வகைக்கு 1 பலம் இடித்துத் தூள் செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கூட்டி உட்கொள்ள என்புருக்கி, காசம், ஈளை, என்புசுரம், என்புவெட்டை, தாகம், நெஞ்சுப்புண், பித்தவெட்டை, பித்தப்பாண்டு, கிராணி, சுவையின்மை, பொருமல், கால், கை எரிவு, காந்தல் தீரும்.

3. தாளிசப்பத்திரி, கடுகு, கிராம்பு ஏலம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், கோட்டம், சீரகம், முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம்பழம், சிறுதேக்கு இவற்றை ஓர் எடையாய் எடுத்துத் தூள்செய்து அதற்குச் சமமாகச் சர்க்கரை கலந்து திரிகடி அளவு சாப்பிட்டுவர பித்ததாகம், வாந்தி, சுவையின்மை தீரும்.

மேகராசாங்கக் கலப்புத் தூள்.

1. வெட்டிவேர், சீரகம், இலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, கோட்டம், நெல்லிவற்றல், நிலப்பனைக்கிழங்கு அரேணுகம் (வால்மிளகு), முந்திரிகைப்பழம், (திராட்சை) பேரீச்சம்பழம், குங்குமப்பூ, கோரோசனை, சிறுநாகப்பூ, தாமரைவளையம், அதன் தாது, பச்சைக் கற்பூரம்,

Koviloor Digital Library

சந்தனம், திரிகடுகு, அதிமதுரம், நெற்பொரி, அமுக்கறாச் கிழங்கு, கற்கடகச்சிங்கி, தக்கோலம், குங்குமப்பூ, பட்டை வகைக்கு அரைப்பலம் இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாகச் சர்க்கரை கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு பசுவின் வெண்ணெயில் ஒரு மண்டலம் (48 நாள்கள்) உட்கொள்ள கை, கால் எரிவு எலும்புருக்கி, நீர்த்தாரைவழி மோர் போல் இறங்குதல் கற்பிரமியம், நீர்ச்சுறுக்கு, கல்லடைப்பு, நீர்த்தாரை எரிவு, உடல் வறட்சி, உட்சுரம் பித்தசயம் ஆகிய நோய்கள் தீரும்.

கரந்தைச் சூரணம்

திரிகடுகு, திரிபலை, வசம்பு, இந்துப்பு, வாலுழுவையரிசி, கோட்டம், கருஞ்சீரகம், ஓமம், ஏலம், மரமஞ்சள், திப்பிலிமூலம், சாதிக்காய், சண்பகப்பூ, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், சாதிப்பத்திரி, கார்போகரிசி, செவ்வியம், வாய்விளங்கம், ஆனைத்திப்பிலி இவற்றை ஓர் எடையாய் வெதுப்பித் தூள்செய்து, அதற்குச் சமமாக கரந்தைச் தூரணம் கலந்து வேளை ஒன்றுக்குத், திரிகடி அளவு பசுவின் நெய்யில் கலந்து இரசபறபம் வைத்துண்ண கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திரம், மேகஊறல், புற்று, வெள்ளைப் படர்தல், சொரி, கரப்பான், வெடிகரப்பான், கன்னப்புற்று, அல்குல்புற்று, தொடைவாழை, பிளவை, எலிக்கடி ஆகிய நோய்கள் தீரும்.

முந்திரிகைச் (திராட்சை) சூரணம்.

முந்திரிகைப்பழம், திப்பிலிமூலம், திரிகடுகு, செங்கழுநீர்க்கிழங்கு, வெட்டிவேர், சந்தனம், விலாமிச்சு, தக்கோலம், அதிமதுரம், முத்தக்காசு, வில்வப்பூ, ஏலம், மல்லி, திரிபலை, நெற்பொரி, பேரீச்சம்பழம், பச்சைக்கற்பூரம், கற்கண்டு, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கூகைநீர் இவற்றை ஓர் எடையாய் இடித்துத் தூள் செய்து, வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டுவர பித்தம், கை, கால், வயிறுளிவு, குருதி அழல், கக்கல், கிறுகிறுப்பு பித்தபாண்டு சுரம், ஆகியவை தீரும்.

பூசணிச் சூரணம்.

ஒரு பெரும்பூசணிக்காயைக் கீறி, விதை, மேல்தோல் நீக்கி அரிந்து இள அவியலாய் அவித்துப்பிழிந்து சட்டியிலிட்டுப் பசுவின் நெய் தெளித்துச் சிவக்க வறுத்து இடித்தத் தூளுடன் கடுக்காய், தான்றிக்காய், திரிகடுகு, அதிமதுரம், ஏலம், இலவங்கம், சண்பகப்பூ, கல்மதம், சீரகம் வகைக்கு 1 கழஞ்சு வெதுப்பிப் பொடித்தத் துளையும் ஒன்றாய்க் கலந்து அதற்குச் சமமாக சர்க்கரையைக் கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு உட்கொள்ள மேகம், பவுத்திரம், எருவாய் நோய், மூத்திரப்பாளை, கிருச்சனம், பெரும்பாடு, வெள்ளை, கடுப்பு, எரிப்பு, மேகக்காங்கை, கல்லடைப்பு, நீரடைப்பு ஆகிய நோய்கள் தீரும்.

இங்குலாதிச் சூரணம்.

பெருங்காயம், வசம்புசுட்டகரி, மாதுளம்வேர், ஓமம், மல்லி, கோட்டம், பொன்முசுட்டைவேர், செங்கழுநீர்க்கிழங்கு, கொட்டைக்கரந்தைச் சமூலம்,

Koviloor Digital Library

கொடுவேலிவேர், பஞ்சலவணம், செவ்வியம், ஆனைத்திப்பிலி, திரிகடுகு, திப்பிலிமூலம், சீரகம், வாய்விளங்கம், குரோசானிஓமம், கருவேப்பிலை ஓர் எடையாய்த் தூள்செய்துக் கலந்து திரிகடி அளவு வெந்நீரில் உட்கொள்ள அக்கினிமந்தம், வாய்நீரூறல், வாந்தி, ஓக்காளம், விக்கல் ஆகிய நோய்கள் தீரும்.

அக்கினிச் சூரணம்.

கொடிவேலிவேர், திரிகடுகு, ஓமம், சிறுதேக்கு, ஆனைத்திப்பிலி, கோட்டம், இந்துப்பு வகைக்கு 1 பலம், காயம், வசம்புசுட்டகரி வகைக்குக் கால் பலம், கடுகு அரைப் பலம் இவைகளைத் தூள் செய்து அதற்குச் சமமாக சர்க்கரை கலந்து திரிகடி அளவு வெந்நீரில் சாப்பிட செரியாமை, மந்தம், பொருமல், கிராணி ஆகியவை நீங்கும்; இச்சாபத்தியம்.

மேகக் கலப்புத்தூள்.

வெள்ளாட்டு உதவலை நீரைப்பிழிந்து அதை வறுத்து இடித்து வடிகட்டினத் தூள் 2 பலம், குங்குமப்பூ, கோரோசனை, திப்பிலி மூலம், ஓமம், அரத்தை, சீரகம், கிராம்பு, தூய்மை செய்த மனோசிலை, நெற்பொரி, கோட்டம் வகைக்கு 1 கழஞ்சு வெதுப்பிப் பொடித்து இரு வகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் ஒரு மண்டலம் சாப்பிட்டுவர சிலேத்தும நோய் (ஐயம்) தீரும்.

சீரகக் கலப்புத்தூள்.

நான்கு பலம் சீரகத்தை இஞ்சிச் சாற்றில் 9 நாள் ஊறவைத்து உலர்த்தி அப்பால் முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்திக் கொண்டு ஏலம், திரிகடுகு, கோட்டம், நெல்லி வற்றில், நெற்பொரி, வில்வப்பழவோடு வகைக்கு 2 வீசை இவைகளெல்லாம் பொடித்து அதற்குச் சமமாக சர்க்கரை கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டுவர பித்தம் (அழல்), சுவையின்மை, பித்த வாயு, கிறுகிறுப்பு, உஷ்ணம், வாய்நாற்றம், வழுவழுப்புத் தீரும்.

2. தாளிசப்பத்திரி 1 பலம், திரிகடுகு, திரிபாலாதி, ஏலம், கிராம்பு, பத்திரி வகைக்கு அரைப்பலம், தூள் செய்து சர்க்கரை 3 பலம் கூட்டித் திரிகடி அளவு சாப்பிட்டுவர மூலக்கடுப்பு, வெள்ளை, இரத்தக்கடுப்பு வெட்டை, நீர்க்கட்டு, கல்லடைப்பு ஆகியவை தீரும்.

நிலவாகைக் கலப்புத் தூள்.

நிலவாகைச் சமூலம், சுக்கு, மிளகு, வாய்விளங்கம், ஓமம் வகைக்கு ஒரு பலம் பரிதியில் உலர்த்தி இடித்துச் சர்க்கரை சமன் கலந்து திரிகடி அளவு சாப்பிட்டு வர வாய்வு, பித்தச் சூடு, பொருமல், விக்கல், வாந்தி தீரும். நிலவாகை சமூலம் வகைக்கு 10 பலம், மிளகு, கடுக்காய், தான்றிக்காய், சீரகம், வாலுழுவையரிசி, சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கப்பட்டை, கடுகுரோகணி,

Koviloor Digital Library

சிவதை, தாளிசப்பத்திரி, சாதிக்காய், கிராம்பு, திப்பிலி, செவ்வியம், இந்துப்பு, கூகைநீர், சுக்கு வகைக்குக் கால் பலம் இடித்துத் தூள் செய்து அதற்குப் பாதி சர்க்கரை கலந்து திரிகடி அளவு நெய், தேனில் உட்கொள்ள மேகச்சொரி, சிரங்கு, பித்த வாதம், வாய் நீர் ஊறல், கிரந்தி, சூடு, சிறுநஞ்சு, வாயு, வாயுத்திறட்சி, மலக்கட்டு முதலியவை தீரும்.

இராச அமிர்தாதித் தூள்.

ஏலம், இலவங்கம், அதிமதுரம், நற்சீரகம், கருஞ்சீரகம், மகரப்பூ, குரோசானிஓமம், வால்மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், குங்குமப்பூ, மஞ்சிட்டி சடாமாஞ்சில் கடுகுரோகணி, திப்பிலிமூலம், சாதிக்காய், கிராம்பு, விசுவாசி, சிற்றரத்தை, சித்திர மூலம், நிலவாகை இவற்றை ஓர் எடையாய்த் தூள் செய்து அதற்கு சமமாகச் சர்க்கரை கூட்டி திரிகடி அளவு சாப்பிட்டுவர கை, கால் உளைச்சல், உள்ளுருக்கி, எலும்புருக்கி, பிரமியம், கரப்பான், மூலம், வாத பித்தம், வெப்ப வாயு முதலான சகல வாயுவும் தீர்ந்து திறம் உண்டாகும்; உடல் குளிரும்.

பஞ்சலவணக் கலப்புத்தூள்

பஞ்சலவணம், நவாச்சாரம், சத்திச்சாரம், அசமதாகம், மரமஞ்சள், திப்பிலி திப்பிலிமூலம், மஞ்சள், முள்ளி வேர் கண்டங்கத்திரி வேர், கோட்டம், முத்தக்காசு, சிறுதேக்கு, கருஞ்சீரகம், நற்சீரகம், கடுகு, திரிபலை, யானைத் வாய்விளங்கம், பெருங்காயம், கொடிவேலிவேர், அதிவிடையம், செவ்வியம், பங்கம்பாளை வேர், பெருமரத்துப் பட்டை, வெட்பாலையரிசி, இவற்றை ஓர் எடையாய் இடித்துத் தூள்செய்து அதற்குப் பாதி சர்க்கரை கலந்து நெய்யில் உட்கொள்ள செரியாமை, கழிச்சல், கிராணி, வாய் நீர்ஊறல், கக்கல், சூலை, சீதசுரம், பாண்டு, காமாலை, சுவாசம்காசம் சயம், திமிர், வாயு, எருவாய் நோய் முதலிய நோய்கள் தீரும்.

சித்திரமூலாதித் தூள்.

சித்திர மூலம், திப்பிலி, ஓமம், மிளகு, மல்லி, நற்சீரகம், பொன்முசுட்டை வேர், பெருங்காயம், சடாமாஞ்சில், திப்பிலிமூலம் இந்துப்பு ஓர் எடையாய் இடித்துத் தூள் செய்து திரிகடி அளவு தேன், சர்க்கரையில் உட்கொள்ள அக்கினிமந்தம், அதிசாரம், குன்மம் பித்த நோய் தீரும்.

அசுவகெந்திக் கலப்புத் தூள்.

1. பசுவின் பாலில் அவித்துத் தூய்மை செய்த அமுக்கறாவேர் 3 பலம், சுக்கு, ஏலம், கூகைநீர் வகைக்கு 1 ½ பலம், கிராம்பு, சிறுநாகப்பூ 2 பலம், திப்பிலி 8 பலம், மிளகு 4 பலம், இவற்றை இடித்துத் தூள்செய்து சர்க்கரை 4 பலம் கூட்டித் தேன் இஞ்சிச் சாற்றில் உட்கொள்ள மந்தவாயு, வயிற்றுவலி, சுவையின்மை, வாதபித்தம், உப்புசம், நெஞ்செரிவு, கக்கல், சுயம், ஈளை, இருமல் நீங்கும்.

2. இலவங்கம் ஒரு பலம், சிறுநாகப்பூ 2 பலம், ஏலம் 4 பலம், மிளகு 8 பலம், திப்பிலி 16 பலம், சுக்கு 32 பலம், தூய்மை செய்த அசுவகெந்தி 64

Koviloor Digital Library

பலம் இடித்துத் தூள் செய்து அதற்குச் சமமாகச் சர்க்கரை கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு பசுவின் பால், நெய்யில், உட்கொள்ள மேகம், என்புசுரம், என்புவெட்டை, சுவாசம், ஈளை பாண்டு, மேக ஊறல் நீங்கும்.

3. தூய்மைசெய்த அமுக்கறாத் தூள் 64 வராகன் எடை ஓமத்தைப் பொரித்து உமியைப் போக்கிப் பொடித்து வடிகட்டின தூள் 32 வராகன் எடை, கிராம்பு 1 வராகன் எடை, ஏலம் 4 வராகன் எடை, மிளகு 8 வராகன் எடை இவற்றைப் பொடித்து வடிகட்டின தூளையும் ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டு வர பிரமேகம், வெட்டை, மூத்திரக்கிருச்சரம் தீரும். இவைகட்கெல்லாம் இச்சாபத்தியம்.

கரிசாலைக் கலப்புத்தூள்.

கடுக்காய், மிளகு, கோட்டம், ஓமம், மரமஞ்சள், கடுக்காய்ப்பூ, கருஞ்சீரகம், சடாமாஞ்சில், திப்பிலிமூலம், கிராம்பு, தாளிசப்பத்திரி, திப்பிலி, ஏலம் வகைக்குக் கால் பலம், சுக்கு, நெல்லிப்பருப்பு, சீரகம், மதுரம், மல்லி, வாய்விளங்கம், மூக்குரண்டி வேர், ஆகிய இவற்றை ஓர் எடையாய்ப் பரிதியில் உலர்த்தித் தூள் செய்து அதில் பொற்றலைக் கரிப்பான் தூள் சேர்த்துக் திரிலோகச் செந்தூரம் வைத்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு சாப்பிட்டு வர பாண்டு, மஞ்சள் நோய் (காமாலை), சோகை (வீக்கப்பிணி) ஆகியவை தீரும்.

வல்லாரைச் சூரணம்

வல்லாரையைப் பாலில் அவித்து உலர்த்தி இடித்து வடி கட்டின தூள் ஒரு பலம்; கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், தாளிசப்பத்திரி, திரிபலை வகைக்கு ஒரு பலம் வெதுப்பிப் பொடித்து ஒன்றாய்க் கலந்து சர்க்கரையைச் சமமாய்க் கலந்து திரிகடி அளவு நெய்யில் உட்கொள்ள மேக காங்கை, மூலச்சூடு, உடம்பு எரிவு தீர்ந்த உடல் குளிரும்.

சந்தனச் சூரணம்.

சந்தனம், கோட்டம், நன்னாரிவேர், கடுகுரோகணி, கற்பூரம், சீந்தில்சர்க்கரை, முத்தக்காசு, மஞ்சள், இலுப்பைப்பூ, முந்திரிப் (திராட்சை) பழம், அதிமதுரம், பூலாங்கிழங்கு, ஏலம், தாமரைக் கிழங்கு, நெய்தல்கிழங்கு, மரமஞ்சள், விலாமிச்சம்வேர், நெல்லி வற்றல் இவற்றை ஓர் எடையாய்த் தூள்செய்து அதற்குச் சமமாய் சர்க்கரை கலந்து திரிகடி அளவு வெண்ணெயிலாவது, பசுவின் பாலிலாவது உட்கொள்ள சீதம் (நிணம்), இரத்தம் விழுதல், வாயால் இரத்தம் கக்குதல் முதலான மேகம் இருபத்தொன்றும் தீரும்.

கற்பூரக் கலப்புத்தூள்.

கற்பூரம், கோட்டம், சாத்திரபேதி, கல்நார், சாதிக்காய், கிராம்பு, சடாமாஞ்சில், ஏலம், குங்குமப்பூ, சந்தனம், நற்சீரகம், மல்லி, அமுக்கறாக்கிழங்கு, சீந்திக் சர்க்கரை, முந்திரிகை, பேரீந்து, சலாசத்து,

Koviloor Digital Library

நெருஞ்சிவேர், விளாவிதை, நீர்முள்ளிவிதை, இலவம்பிசின், முத்தக்காசு, விலாமிச்சம்வேர், இந்துப்பு, வெண்காரம், ஆவாரைஅரிசி, கஸ்தூரிமஞ்சள், சிறுநாகப்பூ, நிலப்பனங்கிழங்கு, கஞ்சாங்கோரை, சந்தனம், தக்கோலம், அதிமதுரம், வால்மிளகு, இவற்றை எல்லாம் ஓர் எடையாய்த் தூள்செய்து அதற்குச் சமமாய் சர்க்கரை கலந்து வேளையொன்றுக்குத் திரிகடி அளவு தேனிலாவது, நெய்யிலாவது உட்கொள்ள நீர்க்கடுப்பு, நீர்எரிவு, நீரிழிவு, மேககாங்கை, நீரடைப்பு பாண்டு, காமாலை, கண் கால் எரிவு, சுரம், தாகம் ஆகியவை தீரும்.

அமிர்தசஞ்சீவிச் சூரணம்.

சீந்தில் சர்க்கரை 1 பலம், முந்திரிப் (திராட்சை) பழம், தக்கோலம், கோட்டம், அதிமதுரம், திரிகடுகு, நெல்லிவற்றல், பூஞ்சாந்துப்பட்டை, அமுக்கிறாக்கிழங்கு, ஏலம், பூனைக்காலிவித்து, சூடன், சீரகம், சந்தனம், குங்குமப்பூபட்டை, சாதிக்காய், வால்மிளகு, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி இவைகளை ஓர் எடையாய் இடித்து வடிகட்டின தூள் ஒரு பலம், நீர்வள்ளிக்கிழங்கு 5 வராகன் எடை, நிலப்பால் கிழங்கு 5 வாரகன் எடை விலாமிச்சம்வேர், கொழுஞ்சிவித்து, வெட்டிவேர், தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு வகைக்கு 2 வராகன் எடை இவற்றை இடித்து வடிகட்டிய தூளையும் ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவு பசுவின் நெய்யில் உட்கொள்ள நீர்க்கடுப்பு, எரிப்பு, அடைப்பு, மூத்திரப்பாளை, கை கால் காந்தல், எலும்புருக்கி, பெரும்பாடு ஆகிய நோய்கள் தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

2. சீந்தில் சர்க்கரை 1 பலம், சாதிக்காய், வால்மிளகு, ஏலம், கிராம்பு, கசகசா, தாளிசப்பத்திரி, மாசிக்காய் இவற்றை எல்லாம் ஓர் அளவாக இடித்து வடிகட்டின தூள் கால் பலம், சர்க்கரை 1 பலம் இவற்றை ஒன்றாய்க் கலந்து திரிகடி அளவில் வாலைரசச் செந்தூரம் வைத்து நெய்யில் உட்கொள்ள மேகநீர், பிரமேகம், ஒழுக்கு நோய், என்பு சுரம், வெட்டை, மூலச்சூடு, பித்தம் (அழல்), கை, கால் எரிவு, மேக ஊறல் ஆகிய நோய்கள் தீரும்.

கொடிவேலிச் சூரணம்.

கொடிவேலிவேர், புங்கன்வேர், ஆயில்பயப்பட்டை இவற்றின் தூள்கள் வகைக்கு 1 பலம், கடுக்காய், திப்பிலி, கடுகு, கருஞ்சீரகம் வகைக்கு அரைப் பலம் இவற்றையெல்லாம் வெதுப்பித் தூள் செய்து ஒன்றாய்க் கலந்து வேளை ஒன்றுக்குத் திரிகடி அளவு ஒரு மண்டலம் உட்கொள்ள வாத வாயு, பக்கவாதம் ஆகியவை தீரும்.

அதிமதுராதிச் சூரணம்.

அதிமதுரம், கோட்டம், அக்கிராகாரம், விலாமிச்சம்வேர், தக்கோலம், ஏலம், சிறுநாகப்பூ, மல்லி, கிராம்பு, சிறுதேக்கு, மிளகு, திரிபலை, கூகைநீர், முத்தக்காசு, திப்பிலி, லவங்கம் இலவங்கப்பத்திரி, நன்னாரிவேர்,

Koviloor Digital Library

பருத்திவிதைப் பருப்பு, நெற்பொறி, நற்சீரகம் வகைக்கு 2 வராகன் எடை, வெதுப்பி பொடித்துத் தாளிசபத்திரிச் சூரணம் வராகனெடை4 கூட்டி, திரிகடி அளவு சாப்பிட்டுவர வாதபித்தம், அரோசிகம் (சுவையின்மை), எரிவு, கிறுகிறுப்பு, கக்கல் ஆகிய நோய்கள் தீரும்.

வச்சிரவல்லித் தூள்.

திரிகடுகு, திரிபலை, கல்லுப்பு, ஏலம், இலவங்கம், சிற்றரத்தை, திப்பிலிமூலம், கருஞ்சீரகம், நற்சீரகம் பறங்கிப்பட்டை, அக்கிராகாரம், இந்துப்பு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 4 கழஞ்சு, கடுகுரோகணி, வெண்காரம், ஓமம் வகைக்கு 2 கழஞ்சு நவாச்சாரம், கல்மதம் வகைக்கு ஒரு கழஞ்சு, இவற்றை இடித்துத் தூள்செய்து அதற்குச் சமமாக முற்றின பிரண்டைத்தூள் பாதியும் சர்க்கரை பாதியும் கலந்து திரிகடி அளவு தேன், நெய், பாலில் கொள்ள கபால வாயு, குன்மம், காசம், கபம், பித்தம் (அழல்), வெப்பம், வெட்டை, அபான வாயு, மூலவாயு ஆகிய நோய்கள் தீரும்.

சூரணப் படலம் முற்றும்.

நெய்ப் படலம்.
(இரசாயனப் படலம்)

இரசாயனம்=உடல் தேற்றி. அஃதாவது சூரண பாகங்களை நெய், தேன், சர்க்கரை கலந்து கிளறி உண்ணுதலாம்.

கூறு மாதர் தானறிய குறிப்பாய் மருந்து ரசாயனத்தைத்
தேறும் பாகம் தானறிந்து திறமா யருந்த வேண்டுமெனில்
கோறும் வருட மொன்றுக்குள் கொள்ளும் விதியே சரியாகும்
மீறு மாண்டில் மேற்பட்டால் மீளா நோயு மீளாதே.

இந்த இரசாயனங்கள் மானிடர்கள் நோய் உண்டாகி இருக்கும்போதும், சுகமாயிருக்கும்போதும் அருந்த வேண்டுமானால் ஒரு வருடத்திற்குள்ளாகச் சாப்பிடுவதே உடம்பிற்கு வலியபிணியும் நீங்கும்; மேற்பட்டால் நோய் போகாது; அதனால், பலன் இல்லை, பண்டிதன் பேரில் குற்றம் சாற்றா வண்ணம் மிகவும் நன்மையுண்டாகும்.

தீரும் லேகிய ரசாயனமுந் தெளிவா யரியமா னிடற்கு
சாறும் பிணிகள் தானகல தயவாய்ப் பலநூ லாராய்ந்து
சேரும் பாகம் பிசகாமல் தெளிய வுரைத்த பண்டிதந்தான்
மேருப் முனிவர் தான்கூடி மெய்யா யுரைத்த இந்நூலே.

சகல மேக நெய்.

1. தண்ணீர்விட்டான்கிழங்கு, கோரைக்கிழங்கு வகைக்கு கால் பலம், முப்பிரண்டை, தூதுவளை, கண்டங்கத்தரி இவற்றின் வேர்கள் வகைக்கு 3 பலம் பிரப்பங்கிழங்கு, அசுவகெந்திக்கிழங்கு வகைக்கு 1 பலம், பறங்கிப்பட்டை 10 பலம், நிலப்பனைக்கிழங்கு 2 பலம், திரிகடுகு வகைக்கு 3 பலம் மல்லி சிற்றரத்தை கோட்டம், லவங்கம் தாளிச்பத்திரி வகைக்கு வராகனெடை3 வெட்டிவேர், கூகைநீர், விலாமிச்சம்வேர், கடுகுரோகணி வகைக்கு 5 வராகன்

Koviloor Digital Library

எடை, குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கற்பூரம் வகைக்கு 1 வராகன் எடை, தான்றிக்காய், வாய்விளங்கம், மாசிக்காய், தேவதாரம், சிறுநாகப்பூ 2 வராகன் எடை, அதிமதுரம், கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், அதிவிடையம், கொடிமுந்திரிப்பழம் பேரீச்சம் பழம் வகைக்கு 5 வராகன் எடை, இவற்றைப் பரிதியில் உலர்த்தித் தனித்தனியே இடித்து வடிகட்டி எடைப்படி ஒன்றாகக் கலந்து ஆவின்பால் விட்டுப் பிசைந்து ஒரு படி ஆவின் பாலும் ஒருபடி தண்ணீரும் கலந்து சிறு சட்டியிலிட்டுத் துணியினால் வாயில் வேடுகட்டி, அதன் மேல் பிசைந்த மருந்தை வைத்துச் சட்டியால் மூடி, பால் வற்றும் வரை எரித்து மருந்தை எடுத்து உலர்த்தி ஒரு சட்டியில் மூன்றுபடி பசுவின் நெய்விட்டுத் தீபம்போல் எரித்துக் கொதிக்கும்போது பத்து கதலிவாழைப் பழத்தைத் தோல் நீக்கி வில்லைபோல் கிள்ளிப்போட்டு அயக்கரண்டி அடியால் கிண்டிச் சிவந்து வரும் போது பத்துப் பலம் சர்க்கரையைப் போட்டுக் கிளறி ஆறினபின்பு அரைப் படி தேன்விட்டு கலந்துகொண்டு வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு ஒரு மண்டலம் உட்கொண்டால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீர் வடிதல், மேலிளைப்பு, பித்தம் (அழல்), பிரமை, வெட்டை, வெடிசூலை, சகல கழிச்சல், மூலம்பாண்டு, காமாலை, சோகை (வீக்கநோய்), காசம், உளைமாந்தம், குன்மம், குட்டம், நிணமுறுக்கி, கிறுகிறுப்பு, கபால வாயு, கண்டச்சூலை, அண்ட வாயு, கன்னப்புற்று, மகோதரம், வீக்கம், அதிசாரம் ஆகிய நோய்கள் தீரும்.

நாடிகள் பலத்துத் தாது விருத்தியாகும்; பத்தியமில்லை; ஆனால், அவபயத்தியம். பழையது ஆகாது.

2. பறங்கிப்பட்டை, அமுக்கறாக்கிழங்கு வகைக்கு 10 பலம், நிலப்பனைக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு 2 பலம், நன்னாரிவேர், சங்கம்வேர், திரிகடுகு, திரிபலை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, வாய்விளங்கம், மல்லி, கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம் குரோசானி, அரத்தை, சந்தனம், சிறுதேக்கு, கண்டங்கத்தரிவேர், கொடிவேலிவேர், விலாமிச்சம்வேர், தக்கோலம், வால்மிளகு, முந்திரிகை (திராட்சை), பேரீந்து, வெட்பாலையரிசி, தாமரைக்கிழங்கு, சாதிக்காய், கிராம்பு, பத்திரி, கருவேப்பிலை வகைக்கு 1 பலம், குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கற்பூரம், வகைக்கு 1 கழஞ்சு, இவற்றையெல்லாம் பரிதியில் உலர்த்தி இடித்துத் தூள் செய்து முன்போல் பிட்டவித்து உலர்த்தி நான்கு படி பசுவின் பாலில், நான்கு சேர் சர்க்கரைப் போட்டுப் பாகுசெய்து, பிறகு நெய் அரைப்படி கூட விட்டுக் கிளறி ஒன்றாய்க்கலந்த பின்பு கீழே இறக்கி மேற்படித் தூளைத் தூவிக் கிளறி ஆறின பிறகு தேன் 1 படி விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் சாட்பிட்டுவர கிரந்தி, சூலை, கண்டமாலை, வாயு, வாதம், பிரமியம் (ஒழுக்கு நோய்), இலிங்கப்புற்று, சிலேத்தும நோய் ஆகிய 96–ம் தீரும்.

கந்தக நெய்.

திரிகடுகு, கிராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர், ஓமம், சீரகம், குரோசானிஓமம், சிற்றரத்தை, சித்திரமூலம், திப்பிலிமூலம், பூலாங்கிழங்கு,

Koviloor Digital Library

ஆனைத்திப்பிலி, கருஞ்சீரகம், கூகைநீர், முந்திரிகை, சந்தனம், தக்கோலம், அதிமதுரம், முத்தக்காசு, சடாமாஞ்சில், மல்லி, பேரீச்சம்பழம், திரிபலை, சாதிப்பத்திரி, வெட்டிவேர், குங்குமப்பூ, நிலப்பனங்கிழங்கு, அசுவகெந்திக்கிழங்கு, நெரிஞ்சி, நீர்முள்ளி, பூனைக்காலி இவற்றின் விதை 4 வராகன் எடை, பறங்கிப்பட்டை, 20 பலம் இவற்றைத் தனித்தனியே இடித்து வடிகட்டி இதை ஒன்றாய்க் கலந்து முன்போல் பிட்டவித்து உலர்த்தி எழுபது பலம் சர்க்கரையை 6 படி தண்ணீர் விட்டான் கிழங்குச் சாற்றில் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் ஒரு படி பசுவின் நெய்யில் தூய்மைசெய்த நான்கு பலம் கெந்தகத்தைப் போட்டுக் கரையக் காய்ச்சி, பாகில் விட்டுக் கிண்டி நீர் வற்றின பிறகு இறக்கி அதில் தூளைத் தூவிக் கிண்டி ஆறின பின்பு தேன் ஒரு படி கூடவிட்டுப் பிசைந்து கலத்தில் அடைத்து நெல்லுக்குள் பத்து நாள் வைத்து எடுத்து கழற்காய் அளவு ஒரு மண்டலம் (48 நாள்) பத்தியமாய்க் கொள்ள வாதம் எண்பது, பித்தம் நாற்பது, கிருச்சனம் ஆறு, சூலை பதினெட்டு, குன்மம், பாண்டு, சோகை, காசநோய், அக்கினிமந்தம் ஆகியவை தீரும்.

கதலி நெய்.

கோட்டம் 4 பலம், கண்டத்திப்பிலி, சாதிக்காய், சுக்கு கிராம்பு, சீரகம், மிளகரணை, சங்கம் வேர் வகைக்கு இரண்டு பலம் இவற்றை இடித்து வடிகட்டி, முன்போல் பிட்டவித்து உலர்த்தி இரண்டு படி பசுவின் பாலில் நூறு கதலிப் பழத்தையும் பத்து பலம் சர்க்கரையும் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் ஒரு படி பசுவின் நெய் விட்டுக் கிண்டிக் கொடுத்து நீர் வற்றின பின்பு கீழே இறக்கித் தூளை வைத்துத் தூவி, கிண்டி ஆறின பிறகு கால் படி தேன் விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவில் வங்கபற்பம், ரச பற்பம் வைத்துச் சாப்பிட, பெரும்பாடு, எலும்புருக்கி, பிரமேகம், சூலை, அரையாப்புக் கிரந்தி, என்புவெட்டை, வெப்பம், எரிவு, காந்தல், சிரங்கு, சொரி, கரப்பான், மேக ஊறல், கிராணி, மூலச்சூடு, இளைப்பு, இருமல், நீரிழிவு கிருச்சனம் ஆகியவை தீரும்.

இஞ்சி நெய்.

அரைப்படி எலுமிச்சம்பழச் சாற்றில் இந்துப்பைக் கரைத்து அதல் மேல்தோல் சீவி வில்லைபோல் அரிந்த இஞ்சி 10 பலம் போட்டு 3 நாள் ஊறவைத்து உலர்த்தி இடித்து வடிகட்டின தூளையும், திரிகடுகு, திரிபலை, சீரகம், சதகுப்பை, மகரப்பூ, அதிமதுரம், அதிவிடையம், மல்லி, ஓமம், இலவங்கப்பத்திரி, சன்னஇலவங்கப்பட்டை வகைக்கு கால் பலம், கோட்டம், அக்ராகாரம், பெருங்காயம் வகைக்கு அரைக்கால் பலம் பறங்கிப்பட்டை கொடிவேலி வேர்ப் பட்டை வகைக்கு 10 பலம் இவற்றை வெதுப்பி இடித்து வடிகட்டின தூளையும் ஒன்றாய்க் கலந்ததில் தேன், பசுவின் நெய் வகைக்கு கால்படி வீதம்விட்டு நன்றாய்ப் பிசைந்து வைத்துக் கொண்டு நெல்லிக்காய் அளவு ஒரு மண்டலம் உட்கொள்ள எண்வகை குன்மம், நெஞ்செரிவு, வாந்தி, குடல் புரட்டல், நடுக்கல், கழிச்சல், வயிற்று இரைச்சல், வயிறெரிதல், மண்டைக்குத்து, பித்தப்படபடப்பு, வாய் நீர் ஊறல், விலாக்குத்து, ருத்திர

Koviloor Digital Library

வாயு, ெ◌ரியாமை, அரைசோறு போல் கழிதல், அபானக் கடுப்பு, பொருமல், கை, கால் ஓய்தல் தீரும்.

பறங்கிப்பட்டை நெய்.

பறங்கிப்பட்டை 34 வராகன் எடை, திரிகடுகு, கருஞ்சீரகம், ஓமம், குரோசானிஓமம், திரிபலை, சிற்றரத்தை, பேரரத்தை, செவ்வியம், வால்மிளகு, கோட்டம், மல்லி, கசகசா, சடாமாஞ்சில், கிராம்பு, சாதிக்காய், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, திப்பிலி மூலம் வகைக்கு 1 வராகன் எடை, சீரகம் ஏலம் வகைக்கு 1 வராகன் எடை கொடிவேலி, நன்னாரி சங்கு இவற்றின் வேர் நிலப்பனைக் கிழங்கு, அமுக்கறாக் கிழங்கு வகைக்கு ஒரு வராகன் எடை இவற்றைப் பரிதியில் உலர்த்தி இடித்து முன்போல் பாலில் பிட்டவித்து உலர்த்தி ஆழாக்குப் பசுவின் நெய்யில் 34 வராகன் எடை சர்க்கரை கலந்து காய்ச்சி இளகின பின்பு அதில் தூளைத் தூவிக் கிண்டி ஆறின பின்பு, தேன் கால்படி விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகவாயு, வாயுத்திரட்சி ஆகியவை தீரும். உப்பைக் கூட்டி புளி, புகை, தள்ளவும்.

நெய்ப் படலம் முற்றும்.

இளகப் படலம்.

அஃதாவது எவ்வகைத் தூள் பாகங்களுடன் முக்கியமான செந்தூரங்கள், பற்பம் முதலானவைகளை மெழுகு போல் இளகப் பதத்துடன் கிளறி உண்ணுதலாம்.

பூட்டினார் இளகத்தின் வயது மார்க்கம்
பொல்லாத பாவிகட்கும் கருமி கட்கும்
காட்டினார் வயதுதான் திங்கள் எட்டு
களிப்புறவே தின்பதுவ மமிர்த மாகும்
மாட்டினார் சித்தர்கள்தான் செய்ய மார்க்கம்
மகிமையடா மண்டலத்தில் யார்க்குங் கிட்டா
ஆட்டினார் அமுதமுறைச் சுருக் கமாக
அருமக்கள் தானறிய அளித் திட்டாரே.

இதன் தாத்பரியம், உலகத்து மானிடர்கள் அறிய வேண்டி இந்நூலில் சொல்லிய இளகங்களை எட்டு மாதத்திற்குள் சாப்பிடுவதே தேவாமிர்தமாகும். மேற்பட்டால் நஞ்சாமிர்தமாகும். ஆகையால் பெரும்பாலும் பிணியாளர்க்குப் பண்டிதன் கவனித்து வயதறிந்து அவிழ்தங்கள் கொடுக்கவேண்டும் என்பதாகும்.

அமிர்த சஞ்சீவி இளகம்.

வல்லாரை, சிறுபுள்ளடி, கொடுப்பை, சிற்றாமுட்டி, தாழை, விழுது வகைக்கு 5 பலம், இடித்து இருபது படி நீரில் போட்டு வற்றவைத்தக்

Koviloor Digital Library

குடிநீர், பசுவின் பால், இளநீர் வகைக்கு 2½ படி ஒன்றாய்க் கலந்து அதில் மேற்பரணை நீக்கின 10 பலம் இஞ்சியை மயனமாக அரைத்துப் போட்டு வேகவைத்து வெந்தபிறகு சர்க்கரை, கற்கண்டு, வகைக்கு 12 பலம் வீதம் போட்டுப் பாகு செய்து கோட்டம், வால்மிளகு, ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம், சாதிக்காய், கிராம்பு, அக்ராகாரம், சிவதை, ஓமம், நறுக்கு மூலம், திரிகடுகு, அரத்தை, சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, அதிவிடையம், திரிபலை வகைக்கு அரைப் பலம் வீதம் வெதுப்பிப் பொடித்த தூளையும் வில்வப்பூ, பாலில் அரைத்துத் தூய்மை செய்த பறங்கிப்பட்டையும் வகைக்கு 2 பலம், அன்னபேதி, காயம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கூகைநீர் வகைக்கு அரைப் பலம், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, பச்சைக்கற்பூரம், அபின் வகைக்கு 6 கழஞ்சு வீதம் பொடித்த தூளையும், அரைப்பலம் தேற்றான் விதையைப் பசுவின் பாலில் ஊறவைத்து அரைத்து நான்கு பலம் சீந்தில்சர்க்கரையும் சிறுகச் சிறுகப் போட்டு மருந்துக்குத் தகுந்த நெய்யைச் சிறுகச்சிறுக விட்டுக் கிளறி மெழுகு பதத்திலிறக்கி, ஆற்றி, ஒரு படி தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகத்தினால் ஏற்பட்ட சகல நோயும், என்புசுரம், காங்கை, சீதம், இரத்தம்விழுதல், வாயு, பாண்டு, சோகை, காமாலை ஆகிய சகல நோய்களும் தீரும்.

குண்டலாதி இளகம்.

சங்கம்வேர் 100 பலம், செவ்வியம், கண்டங்கத்திரிவேர் வகைக்கு 50 பலம், வில்வம், கொடிவேலி, சீந்தில், நிலப்பனை, சிற்றாமுட்டி, கொட்டி, அமுக்கறா, இருவேலி இவற்றின் மூலம், திப்பிலிமூலம், வகைக்கு 20 பலம், இவைகளை இடித்து 8 மரக்கால் தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து, குழம்பாய்க் காய்ச்சிக் கூகைநீர் 4 பலம், சிறுநாகப்பூ, கருஞ்சீரகம், நற்சீரகம் வகைக்கு 3 பலம், ஏலம், இலவங்கம், முத்தக்காசு, சிறுதேக்கு, கற்கடகசிங்கி திப்பிலி திப்பிலிமூலம் சாதிக்காய், பெருங்காயம் வகைக்கு 2 பலம் இவைகளை இடித்து வடிகட்டினத் தூளையும், அரைப்படி சுக்குத் தூளையும், அரைப்படி மிளகுத் தூளையும் தூவி ஒரு படி நெய்விட்டு கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஆற்றி ஒரு படி தேன் விட்டுப் பிசைந்துகொண்டு வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம்(48 நாள்) பத்தியமாய்ச் சாப்பிட்டு வர 96 வகை சிலேத்தும நோயும், சகல வாயுவும், குன்மம் எட்டும், விக்கல், வாந்தி, ஓக்காளம், பீனிசம், சன்னிதோடம், சுரக்குத்து, உளை, வயிறு ஊதல், அக்கினிமந்தம், செரியாமை, நெஞ்செரிவு, பித்தம் ஆகிய நோய்கள் தீரும்.

கூழ்ப்பாண்ட இளகம்.

வெண்பூசணிச் சாறு 4 படி, தாழை விழுது, தென்னம்பூ, எலுமிச்சம்பழம் இவைகளின் சாறு வகைக்கு 1 படி, பசுவின் பால் 2 படி, ஒன்றாய்க் கலந்து பத்து பலம் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து அதில் சீரகம், மல்லி, கோட்டம், மிளகு, மாசிக்காய், ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதூரம், தாளிசப்பத்திரி வகைக்கு 1 பலம்

Koviloor Digital Library

தூள்செய்து தூவி, நெய் அரைப்படி விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி தேன் அரைப்படி விட்டுப் பிசைந்து புன்னக்காய் அளவு சாப்பிட்டுவர காமாலை, சோகை, என்புசுரம், என்புவெட்டை, பிரமியம், வெள்ளை விழுதல், நீர்ச்சுருக்கு, வெட்டு, உட்டிணநோய் ஆகியவை தீரும். உடல் வலிமையுறும்; விந்தூறும். புளி, புகை தள்ளவும்.

வில்வாதி இளகம்.

1. மேல்தோல் போக்கின வில்வவேர் 1 துலாம்; சங்கு, அழுக்கறா, சத்திச்சாரணை, மிளகரணை, விலாமிச்சு, முக்காவேளை, நன்னாரி, மணிவேம்பு, அறுகு, கற்றாழை, தாழை, கீழ்க்காய்நெல்லி, விளா, வெள்ளறுகு, நெல்லி, வேலிப்பருத்தி, தூதுவளை, குட்டிவிளா, நெருஞ்சி, சிறுவழுதலை இவற்றின் மூலம் வகைக்கு 10 பலம் இரண்டு தூணி நீரில் போட்டு வற்றவைத்த குடிநீர் 3 படி; கரிசாலை, வல்லாரை, நெல்லிக்காய், புளியாரை, மணித்தக்காளி, கும்மட்டி, மாதுளம்பழம், கிடார நாதரத்தம் பழம், நாரத்தம்பழம், எலுமிச்சம்பழம், புளிப்பு மாதுளம்பழம், நீர்முள்ளி, இஞ்சி, முள்ளி, ஆடாதோடை, முசுமுசுக்கை இவற்றின் சாறு வகைக்கு 1 படி; பசுவின் பால் 2 படி ஒன்றாய்க் கலந்து ஐம்பது பலம் சர்க்கரை கலந்து காய்ச்சிப் பாகுசெய்து, அதில் சாதிக்காய், கிராம்பு, பத்திரி, வால்மிளகு, குரோசானிஓமம், அதிமதுரம், கோட்டம், சன்னலவங்கம், சடாமாஞ்சில், வாலுழுவையரிசி, தாளிசப்பத்திரி, வாய்விளங்கம், கருஞ்சீரகம், நற்சீரகம், அதிவிடையம், அரத்தை, பேரரத்தை, கடுக்காய்ப்பூ, ஓமம், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், திப்பிலிமூலம், விளாவரிசி, வெட்பாலையரிசி, மல்லி, கூகைநீர், காட்டாத்திப்பூ, விளாம்பழ ஓடு, வில்வப்பழ ஓடு, சிறுதேக்கு, நிலவேம்பு, இலுப்பைப்பூ, சந்தனம் வகைக்கு கால் பலம் வெதுப்பிப் பொடித்துத் தூவி, நெய் 1 படி கூடவிட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி, ஆற்றி, தேன் அரைப்படி விட்டுப் பிசைந்து கலத்தில் அடைத்து ஒரு மண்டலம் (48 நாள்) தானியப்புடம் வைத்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு திரிலோகச்செந்தூரம் வைத்து ஒரு மண்டலம் உண்ணப் பித்தம் நாற்பது, உப்பிசம், உட்டிணவாயு, கைகால் எரிவு, காந்தல், சுவையின்மை, கசப்பு, உணவு ஏலாமை, வாந்தி, விக்கல், வெள்ளோக்காளம், என்புசுரம், என்புவெட்டை, கிறுகிறுப்பு, குலையெரிவு, குன்மம், மேல்மூச்சு, முச்சுதிணறல், தொடர்க்கழிச்சல், காமாலை, சோகை, பாண்டு, நீரிழிவு, அந்தரவாயுவு முதலான நோய்கள் தீரும்.

2. வில்வவேர் 5 பலம் இடித்து இரண்டு தூணி நீரில்போட்டு நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து இடித்து 6 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து மிளகு, செவ்வியம், திப்பிலி இவைகளின் பொடி வகைக்கு கால் படி; ஏலம், இலவங்கம், சுக்கு சிறுநாகப்பூ, தானிசப்பத்திரி வகைக்கு ஒருபலம் சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு அரைப் பலம். இவைகளை இடித்து வடிகட்டின தூளைத் தூவி நெய் ஆழாக்கு விட்டுக் கிண்டி இறுத்து ஆற்றி, தேன் ஆழாக்கு விட்டுப் பிசைந்து வேளையொன்றுக்குக் கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டுவர வயிற்றுவலி, குன்மம், இருமல், ஈளை, காசம், நெஞ்செரிவு, வாய்வு, தொடர்க்கழிச்சல் (கிராணி), அதிசாரம், பித்தகாசம், உடல் காந்தல்,

Koviloor Digital Library

நீரேற்றம், விடப்பாண்டு, சுரம், வயிறு இரைச்சல், வாந்தி, பித்தம், மலக்கட்டு ஆகியவை தீரும்.

3. வில்வவேர், ஒரு துலாம் இடித்து இரண்டு தூணி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து 41 பலம் கற்கண்டைக் கரைத்துப் பாகுசெய்து சுக்கு 4½ பலம், வால் மிளகு, சிறுநாகப்பூ, திப்பிலி வகைக்கு 2 ½ பலம்; அரத்தை, செவ்வியம், சீரகம் வகைக்கு 3 ½ பலம்; தேற்றாவேர், கொடிவேலி வேர் வகைக்கு 1 ½ பலம்; ஏலம், இலவங்கம், பச்சிலை, கச்சோளம், வகைக்கு 1 கழஞ்சு. இவற்றை இடித்துத்தூவி, நெய் அதிகம் விட்டுக் கிண்டி இளகம்செய்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டுவர முந்தின முறையில் சொல்லிய நோய்கள் தீரும்.

4. வில்வவேர் 5 பலம், வில்வப்பழம் 20 இவைகளை இடித்துப் பதக்கு நீரில் போட்டு மூன்று படியாய் வற்றவைத்த குடிநீரில் வெல்லம் 10 பலம் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து, திப்பிலி மூலம், செவ்வியம், சித்திரமூலம், மிளகு, சீரகம், ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம், கூகைநீர், வாலுமுவையரிசி, சடாமாஞ்சில், அதிவிடையம், அகில், இந்துப்பு வகைக்கு 2 பலம் குங்குமப்பூ கிராம்பு பத்திரி, சாதிக்காய், கோரோசனை வகைக்கு வராகனெடை 2 வெதுப்பிப் பொடித்துத் தூவி, நெய், தேன் விட்டு இளகம் செய்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவரக், குன்மம், கக்கல், விக்கல், நெஞ்சுவலி, சுவையின்மை, மூக்கு நீர்ப்பாய்ச்சல், குலையெரிவு, காமாலை, தொடர்க்கழிச்சல், இருமல், வயிற்றுவலி, கிருமிமூலம் ஆகிய நோய்கள் தீரும்.

5. வில்வவேர் 100 பலம், விலாமிச்சு, வாகை, பாதிரி, விளா, நன்னாரி, சிற்றாமுட்டி, பேராமுட்டி, குட்டிவிளா, நிலவாகை, முன்னை, முசுமுசுக்கை, கொடிவேலி, தேற்றான் இவற்றின் மூலம், வகைக்கு 3 பலம் இடித்து இரண்டு தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீருடன் குமட்டி, மாதுளம்பழச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு 1 படி; பசுவின் பால் 2 படி விட்டு நான்கு சேர் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து திரிகடுகு, திரிபலாதி, இலவங்கம், ஏலம், கோட்டம், அதிமதுரம், சீரகம், வாய்விளங்கம், சாத்திர பேதி, தாளிசப்பத்திரி, சண்பகப்பூ, அக்ராகாரம், மல்லி விளாவரிசி, சிறுதேக்கு, முந்திரிகை (திராட்சை), பேரீச்சு, வில்வப்பூ, வாலுழுவையரிசி, சடாமாஞ்சில், சிறுநாகப்பூ, நாகணம், பருத்திப்பருப்பு, நிம்பவித்து, இலுப்பைப்பூ வகைக்கு 1 பலம். இவைகளை இடித்துத் தூள் செய்துத் தூவி, பசுவின் நெய் அரைப் படி விட்டுக் கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஆற்றி தேன்படி அரைவிட்டுப் பினசந்து கொண்டு வேளையொன்றுக்கு ஒரு கொட்டைப் பாக்கு அளவு சாப்பிட்டுவரச் சுவையின்மை, வீக்கம், பாண்டு, விடப்பாண்டு, வயிறெரிவு, உப்புசம், தொடர்க்கழிச்சல், கை கால் எரிவு, காந்தல், உணவு ஏலாமை, சயம், சுவாச காசம், சூலை, 64 வகைச் சுரம், 40 வகைப் பித்தம், அதிசாரம் ஆகியவை தீரும்.

6. வில்வம், முக்காவேளை, சங்கு இவைகளின் வேர் வகைக்கு 20 பலம்; சிற்றாமுட்டி 10 பலம்; கூந்தல், முள்ளி, சாரணை, கண்டங்கத்திரி,

Koviloor Digital Library

விலா மிச்சம், சீந்தில், கொடிவேலி, பொன்முசுட்டை, நன்னாரி இவைகளின் மூலம்; சிறுதேக்கு வகைக்கு 5 பலம்; காட்டு முசுலிகை 2 பலம். இவைகளை இடித்து இரண்டு தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீருடன் 2 படி பால் விட்டு 4 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் திரிகடுகு, திரிபலாதி, கிராம்பு, ஏலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கோட்டம், தாளிசப்பத்திரி, ஓமம், குரோசானியோமம், சிற்றரத்தை, பேரரத்தை, மல்லி, இலவங்கப்பட்டை, அக்ராகாரம், ஆனைத்திப்பிலி, அரிசித்திப்பிலி, வால்மிளகு, சாதிக்காய், இந்துப்பு வகைக்கு 1 பலம் இவற்றை வெதுப்பிப் பொடித்துத் தூவி, நெய் 1 படி விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி, தேன் அரைப் படி, அயச் செந்தூரம், மண்டூரச் செந்தூரம் வகைக்கு 2 பலம் சேர்த்துப் பிசைந்து வேளை யொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட மேற்படி நோய்கள் குணமாகும்.

நெல்லிக்காய் இளகம்.

1. நெல்லிக்காய்ச்சாறு ஒரு படி; இஞ்சிச்சாறு, பசுவின்பால், இளநீர் வகைக்கு ஒரு படி; வில்வவேர், சிற்றாமுட்டிவேர் வகைக்கு 2 ½ பலம், இவற்றை இடித்து எட்டுப்படி தண்ணீரில் போட்டு, வற்றவைத்த குடிநீர் 1 ½ படி. இவற்றை ஒன்றாயக் கலந்து சர்க்கரை 6 பலம், கற்கண்டு 10 பலம் கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில் சுக்கு, கண்டத்திப்பிலி, கருஞ்சீரகம், அதிமதுரம் வகைக்கு 1 ½ பலம்; மிளகு, திப்பிலி, கடுகு, வாய்விளங்கம், முந்திரிகைப்பழம், பேரீச்சம்பழம் வகைக்கு 1/8 பலம், நற்சீரகம், சாதிக்காய், தான்றிக்காய் வகைக்கு 2 ½ பலம்; இலுப்பைப்பூ, மல்லி, சன்னலவங்கம் வகைக்கு கால் பலம்; சாதிப்பத்திரி, வெட்பாலையரிசி, வாலுராவ அரிசி கோட்டம், சதகுப்பை, தாளிசப்பத்திரி, இலவங்கப்பத்திரி, இந்துப்பு வெண்காரம், அமுக்கறாவேர், நன்னாரிவேர், ஆடுதீண்டாப்பாளை வேர், சிறுதேக்கு, ஆனைத்திப்பிலி, கற்கடகச்சிங்கி, கூகைநீர் வகைக்கு 2 ½ வராகன் எடை; குரோசானி ஓமம், வெடியுப்பு, கஸ்தூரிமஞ்சள், வளையலுப்பு பெருங்குரும்பை வகைக்கு 1 ¼ வராகன் எடை; வலம்புரிக்காய் 1 ½ வராகன் எடை; பெருங்காயம் முக்கால் பலம். இவைகளைப் பொடித்து அதற்குத் தகுந்த பசுவின் நெய் விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி, தேன்விட்டுப் பிசைந்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவரப் பித்தம், பித்தவாய்வு, சுவையின்மை, இருமல், சுவாசகாசம், சயம், எலிக்கடி, நாவறட்சி, உட்சுரம், தொடர்க்கழிச்சல், அக்கினி மந்தம், குன்மம், கை, கால், உடம்பு எரிவு, பித்தக்காமாலை, சோகை, நெஞ்சுத் துடிப்பு, கிறுகிறுப்பு, எலும்புருக்கி, நீர்த்தாரையெரிவு, நீர்ச்சுருக்கு, வியளூர்வை ஆகியவை தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

2. அறுபது பலம் நெல்லி வற்றலை, 32 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் 25 பலம் சர்க்கரையைப் பாகுசெய்து அதில் அதிமதுரம், கூகைநீர், முந்திரிகைப் (திராட்சை) பழம், வகைக்கு 2 பலம், பேரீச்சம்பழம், திப்பிலி வகைக்கு 3 பலம், இவற்றை அரைத்து நெய் விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு உட்கொள்ள வாந்தி, பித்தம்,

Koviloor Digital Library

காமாலை, பித்தப்பாண்டு, வறட்சி, திமிர்வாய்வு, சோகை, நீர்ச்சுருக்கு, குன்மம், உடல் எரிவு ஆகிய நோய்கள் தீரும்.

3. நூறு பலம் நெல்லிவற்றலைத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் 10 பலம் சர்க்கரையைப் பாகுசெய்து அதில் சுக்கு, ஓமம், மூலம், கிராம்பு, தக்கோலம், ஏலம், குங்கிலியம் குக்கில் வாய்விளங்கம், சீரகம், கொத்தமல்லி, கூகைநீர், அதிமதூரம் வகைக்கு 1 பலம் இடித்துத் தூவி, ஒரு படி நெய் விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகம், என்புசுரம், உழலை, காந்தல், கிராணி, வாயு, பொருமல், இருமல், சயம், ஈளை ஆகிய நோய்கள் தீரும்.

தான்றிக்காய் இளகம்.

100 பலம் தான்றிக்காயைத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் 10 பலம் சர்க்கரையைப் பாகுசெய்து அதில் அதிவிடயம் சாதிக்காய், அபின் கஞ்சா வகைக்கு 1 பலம் சூரணம் செய்து ஒரு படி நெய் விட்டுக் கிண்டி லேகியஞ் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு சுண்டைக்காய் அளவு சாப்பிட்டுவரப் பொருமல், வாயுக்கடுப்பு, இரத்தம், அதிசாரம், கிராணி, மூலம், உட்டிணம் ஆகிய நோய்கள் தீரும்.

கடுக்காய் லேகயியட்

100 பலம் கடுக்காய் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் 10 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் சிவதை, இஞ்சி, மிளகு, ஓமம், வாய்விளங்கம், திப்பிலி வகைக்கு 1 பலம் ஆகியவற்றை அரைத்துப் போட்டு பசுவின் நெய் 1 படி விட்டுக் கிளறி இளகம் செய்து வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு உட்கொள்ள அக்கினிமந்தம், சூலை, மலசலக்கட்டு, வாயு, மூலம் ஆகிய நோய்கள் தீரும். கரப்பான் உணவுப் பொருள்கள் தள்ளவும்.

2. கொட்டைநீக்கிய கடுக்காய்ப்பூ 10 பலம், சிவதை, புளியாரை, வல்லாரை, சூரத்துநிலவாகை வகைக்கு 2 பலம்; கடுகுரோகணி, கிராம்பு, திப்பிலி, சிறுநாகப்பூ, வாலுழுவையரிசி, கற்கடகச்சிங்கி, கருஞ்சீரகம், மிளகு, தான்றிக்காய், மல்லி, தாளிச்சப்பத்திரி வகைக்கு ¼ பலம். இவற்றை இடித்துத் தூள்செய்து, அதற்குப் பாதி சர்க்கரையைக் கலந்து நெய், தேன் விட்டு இளகம்செய்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர மலசலக்கட்டு, கோழைக்கட்டு, உட்டிண வாயு, மேககாந்தல், குலை, கால், கை எரிவு, குடலைப்புரட்டுதல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, வறட்சி, புகைச்சல், இருமல் ஆகிய நோய்கள் தீரும்.

சுக்கு இளகம்.

100 பலம் சுக்கை இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் 10 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப்

Koviloor Digital Library

பாகு செய்து ஓமத்தூள், கறிவேப்பிலைத் தூள் வகைக்கு அரைப்படி வீதம் தூவி, அரைப் படி நெய் விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர கிராணிமூலம், திசைவாயு, அதிசாரம், கடுப்பு, இரத்தம், பாரிசவாயு, வீக்கம், சூலை, பொருமல், மந்தம், செரியாமை, புளித்தேப்பம் ஆகிய நோய்கள் தீரும்.

மிளகு இளகம்.

100 பலம் மிளகை இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்த குடிநீரில் 10 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து, அக்கராகாரம், சீரகம், கிராம்பு, ஏலம், கோட்டம், மதுரம், வாய்விளங்கம், பத்திரி, நறுக்குமூலம் வகைக்கு 1 பலம் இடித்துத் தூவி, நெய் நாழி விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி, தேன் அரைப் படி விட்டுப்பிசைந்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர 96 வகை சிலேத்துமம், கபம், நீர்த்தோடம், சில் விடம், வாதம், வாயு ஆகிய நோய்கள் தீரும்.

திப்பிலி இளகம்.

100 பலம் திப்பிலியைத் தூணி நீரில் சிதைத்துப் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து அதில் 10 பலம் கற்கண்டைக் கரைத்துப் பாகுசெய்து சுக்கு, அரத்தை, அக்கராகாரம், கடுக்காய், ஓமம், சீரகம், கொத்துமல்லி, வெட்பாலையரிசி, சண்பகப்பூ, கோட்டம் வகைக்கு 3 பலம் பொடித்து வடிகட்டித் தூவி அரைப் படி நெய் விட்டுக் கிளறித் தேன் ஆழாக்கு விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு உட்கொள்ள ஒரு மண்டலத்தில் 96 வகைச் சிலேத்துமம், வாதம், அதிசாரம், வாயு, குன்மம், உப்புசம் ஆகிய நோய்கள் தீரும்.

வெள்ளைப் பூண்டு இளகம்.

1. 100 பலம் வெள்ளைப் பூண்டைத் தூணி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து அதில் 10 பலம் சர்க்கரையைப் போட்டு பாகுசெய்து பெருங்காயம், சுக்கு, வால்மிளகு, கடுகு, இந்துப்பு, ஓமம், திப்பிலி, மிளகு, சீரகம், திரிபலை, வெட்பாலையரிசி, அதிவிடையம், வாய்விளங்கம் வகைக்கு 4 பலம் பொடித்துத் தூவிக் கால்படி பசுவின் நெய்யை விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் எடுத்து வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு உட்கொள்ள வாயு, குன்மம் எட்டும் நீங்கும்.

கடுகு லோகியம்

100 பலம் கடுகைத் தூணி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து இடித்து அதில் 10 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து ஓமம், சுக்கு, திப்பிலி, கிராம்பு, காயம், கொத்தமல்லி, சீரகம், வாய்விளங்கம், மஞ்சள், அதிவிடையம், வகைக்கு 1 பலம் இடித்துத் தூவிக் கால்படி நல்லெண்ணெய் விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் எடுத்துக்கொண்டு

Koviloor Digital Library

வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு சாப்பிட்டுவர குலைநோய், வாயு, குருதித்திரட்சி, புளித்த ஏப்பம், செரியாமை, பொருமல், குன்மவாயு, மலம், சிறுநீர்க்கட்டு ஆகியவை நீங்கும்.

வெந்தய இளகம்.

100 பலம் வெந்தயத்தைத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்துவடி கட்டி 10 பலம் பஞ்ச தாரையை கரைத்துப் பாகுசெய்து அதில் மதுரம் கோஷ்டம் சீரகம் கசகசா அதிவிடையம், ஓமம், சாதிக்காய், கிராம்பு, அபின், கஞ்சா, சுக்கு, குரோசானி வகைக்கு 1 பலம் பொடித்துத் தூவி 1 படி நெய்விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் எடுத்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு 1 கழஞ்சு வீதம் சாப்பிட்டுவர தொடர்க்கழிச்சல், கடுப்பு ஆகியவை தீரும்.

ஓம இளகம்.

100 பலம் ஓமத்தைத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து அதில் 10 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அமுக்கறாக்கிழங்கு, குக்கில், பறங்கிப்பட்டை, கார்கோலரிசி வகைக்கு 1 பலம் பொடித்துத் தூவி 1 படி நெய் விட்டுக் கிளறி இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் சாப்பிட்டுவர பறங்கிச்சூலை, சிரங்கு, குட்டம், கிரந்தி, புண், சில் விஷம், வாயு ஆகிய நோய்கள் தீரும்.

பெருங்காய இளகம்.

பெருங்காயம் 25 பலம் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாக்கி 10 பலம் சர்க்கரையைப் போட்டுப் பாகுசெய்து வெள்ளைப்பூண்டு, கடுகு, மிளகு, சுக்கு, வகைக்கு 1 பலம் பொடித்துத் தூவிக் கால் படி பசுவின் நெய்விட்டுக் கிளறி, மெழுகு பதத்தில் இறக்கி வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் உண்ண வாயு, வாதம் ஆகியவை தீரும்.

இஞ்சி இளகம்.

ஒரு படி பசுவின் நெய்யில் 30 பலம் சர்க்கரையைக் கலந்து காய்ச்சிக் கரைந்தபின்பு இறக்கி, அதில் மேல்தோல் நீக்கின பத்து பலம் இஞ்சியை எலுமிச்சம்பழச் சாற்றால் மையாய் அரைத்து உலர்த்தின சூரணத்தைச் சேர்த்து உப்பு கலந்து மோரில் போட்டு ஊறவைத்து உலர்த்தின பிரண்டை, உலர்ந்த கரிப்பான், பூவரசம்பட்டை வகைக்கு 1 பலம்; வாலுளுவையரிசி, தாளிசப்பத்திரி, கடுகு, மல்லி, சித்தரமூலம், கற்கடகசிங்கி, குரோசானிஓமம், மிளகு, சீரகம், ஏலம், திப்பிலி, அதிமதூரம், கோட்டம், திப்பிலி மூலம், வகைக்கு அரைப் பலம்; இவைகளை இடித்து வடிகட்டின தூளையும் தூவிக்கிளறி, வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவரப் பித்தவாயு, உட்டிணம், சத்திகுன்மம், அரோசிகம் (சுவையின்மை), விக்கல், என்பு சுரம், சன்னி, செரியாமை, வாயு, உப்புசம் ஆகிய நோய்கள் தீரும்.

கண்டங்கத்தரி இளகம்.

1 ஆழாக்குப் பசுவின் நெய்யில் ஐந்து பலம் வெல்லத்தைப் போட்டுக் காய்ச்சிக் கரைந்த பின்பு இறக்கி மேல்தோல் நீக்கிய பதினைந்து பலம்

Koviloor Digital Library

இஞ்சியைச் சிறுக அரிந்து பசுவின் நெய் விட்டுச் சிவக்க வறுத்து இடித்து வடிகட்டினத் தூளுடன் திரிகடுகு, சிற்றரத்தை, செவ்வியம், அதிமதூரம், சிறுதேக்கு, வாய்விளங்கம், ஏலம், திரிபலை, மல்லி, சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, நெற்பொறி வகைக்கு 3 கழஞ்சு; சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடையம் வகைக்கு 2 கழஞ்சு இவற்றைப் பரிதியில் உலர்த்தி இடித்து வடிகட்டின தூளையும் ஒரு பலம் சர்க்கரையையும் கிளறி ஆற்றி ஆழாக்குத் தேன்விட்டுப் பிசைந்து வைத்துகொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர புகைச்சல் இருமல், பித்தம் (அழல்), நெஞ்செரிவு, கக்கல், தொண்டைக்கட்டு, தலைநோய், குன்மம், வறட்சி, மலசலக்கட்டு, உட்சுரம், தாகசோபம், வயிறு இரைச்சல், பொருமல், சீழ், இரத்தம், வாயு, அக்கினி மந்தம், அபானவாயு, தொடர்க்கழிச்சல், அதிசாரம், கழிச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

2. இஞ்சி, கண்டங்கத்தரி, நெரிஞ்சி, முள்ளங்கி, எலுமிச்சம் பழம் இவைகளின் சாறு வகைக்கு 1 படி, பசுவின் பால் 2 படி; ஒன்றாய்க் கலந்து அதில் 8 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து திரிகடுகு, சீரகம், ஏலம், வாய்விளங்கம், கிராம்பு, தாளிசப்பத்திரி வகைக்கு ஒரு பலம் தூள்செய்துத் தூவி அரைப்படி பசுவின் நெய்விட்டுக் கிளறி மெழுகு பதமாய் ஆட்டி, தேன்விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் உண்ண வாதபித்தம், கக்கல், சூலை சுவையின்மை, உணவு ஏற்காமை, குன்மம், பொருமல், விக்கல், பித்தம் (அழல்), எரிவு, கடுப்பு, கபாலகுத்து, மயக்கம் ஆகிய நோய்கள் தீரும். இச்சாபத்தியம்.

அட்ட குன்ம இளகம்.

தைவேளை, பிரண்டை, குப்பைமேனி இவற்றின் சாறு வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி குழம்பு பதத்தில் கல்வத்திலிட்டுப் பதினைந்து பலம் இலுப்பைப் அரப்பை சுட்டகரியையும் திரிகடுகு, ஓமம் வகைக்கு 1 பலம்; கடுகுரோகணி, அன்னபேதி, குரோசானிஓமம், காயம் வகைக்கு 3 கழஞ்சு இவற்றையும் கூடப்போட்டு மெழுகுபோல் அரைத்துப் பின்பு, ஐந்து பலம் பனைவெல்லத்தைச் சேர்த்துப் பிசைந்து, தான்றிக்காய் போல் குளிகைசெய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர அண்டவாதம், குன்மம், கெண்டை, உப்புசம், பெருவயிறு, வாயுத்திரட்சி, மலக்கட்டு, வாய்நீர், இரத்தம் வடிதல், சகல வாயு அகிய நோய்கள் தீரும்.
பத்தியம்: புளிப்புத் தள்ளவும்.

நாரத்தங்காய் இளகம்.

1. நாரத்தம்பழம், இஞ்சி, மூக்கரைச்சாரணைவேர் இவற்றின் சாறு வகைக்கு 4 படி, ஒன்றாய்க் கலந்து 50 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுசெய்து அதில் திரிகடுகு, ஏலம், அதிமதூரம், தேசாவரம், கோட்டம், சிற்றரத்தை, மல்லி, தாளிசப்பத்திரி, முந்திரிகைப் (திராட்சை)

Koviloor Digital Library

பழம் வகைக்கு 1 பலம்; அதிவிடையம், அக்கிராகாரம், வால்மிளகு, சிறுநாகப்பூ, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, திரிபலை, குரோசானிஓமம், சந்தனம், கருஞ்சீரகம் வகைக்கு அரைப் பலம் இவற்றை இடித்து வடிகட்டின தூளையும், 15 பலம் சர்க்கரையையும் தூவி ஒரு படி நெய்யை விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி, இரண்டு படி தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு புன்னைக்காய் வீதம் உட்கொள்ள பித்தம், நெஞ்செரிவு, சுவையின்மை, கக்கல், தாபசுரம், வாதபித்தம், கிறுகிறுப்பு, வாயு, தலைநோய், அக்கினிமந்தம், மலக்கட்டு, காந்தல் ஆகிய நோய்கள் தீரும். புளி கசப்பு, மோர் தள்ளவும்.

சிவதை லேகியம்

பாலில் அவித்துத் தூய்மைசெய்து இடித்து வடிகட்டின சிவதைத் தூள், நிலவாகைத் தூள் வகைக்கு 150 வராகன் எடை; முத்தக்காசுத் தூள் 33 வராகன் எடை; திரிகடுகு, திரிபலை, கண்டந்திப்பிலி, இந்துப்பு, ஓமம், கடுகுரோகணி, வாய்விளங்கம், அதிவிடையம், மாசிக்காய் இவற்றின் தூள் வகைக்கு 1 கழஞ்சு; ஒன்றாய்க் கலந்து ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில், 5 பலம் சர்க்கரை போட்டுக் காய்ச்சிக் கரைந்தபின் கீழே இறக்கி அதில் மேற்படி தூளைத் தூவிக் கிளறி ஒரு கொட்டைப்பாக்கு அளவு பத்தியமாகச் சாப்பிட்டுவர வாயு, வயிற்றுவலி, வாதம், குன்மம், அக்கினிமந்தம், கிருமி, பாண்டு, தலைமுடி, உதிர்தல், பித்தம், சுவையின்மை, கிருச்சனம், ஆனந்தவாயு, அண்டவாயு, மகோதரம், சூலை, வாதம், மலக்கட்டு, குதிக்கால்குத்து, விரற்சூதத்தை, உடம்பில் விழும் கறுப்பு, எரிவு முதலிய நோய்கள் தீரும்.

பஞ்ச தீபாக்கினி இளகம்.

திரிகடுகு, ஏலம், சீரகம் வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்து இரண்டுபடி பசுவின் பாலில் 8 பலம்; பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து அதில் மேற்படி தூளைத் தூவி ஆழாக்கு நெய்விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி மாகாணி தேன் (1 1/6 படி) விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர வாயு, வாதம், உட்டிணம், பித்தவாயு, சரீரத்தில் உளைவு, குத்து, வலி, கடுப்பு, எரிச்சல், கழிச்சல், பொருமல், வாயு, தொடர்க்கழிச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

முடக்கொத்தான் இளகம்.

கால்படி விளக்கெண்ணெயில் முடக்கொத்தான் இலை 4 படி; கழற்சிவிதைப்பருப்பு 4 பலம்; மூக்கரைச்சாரணைவேர் 4 பலம்; திரிகடுகு, திரிபலைவகைக்கு 1 பலம்; பனைவெல்லம் 6 பலம் இவற்றை நன்றாகப் பொடித்து அரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க் கிளறி கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள வெட்டை, வெள்ளை, புண்கள், மேலெரிவு, முடக்கு, சொரிசிரங்கு, வயிற்றுவலி, கண்புகைச்சல், மேகசூலை, மாரடைப்பு, நீர்க்குத்து, அண்டவாதம், உட்காந்தல், மலக்கட்டு ஆகிய நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

சண்டமாருத இளகம்.

கண்டங்கத்திரி, தூதுவளை, மிளகுத்தக்காளி, சங்கிலை, ஆடாதோடை, துளசியிலைச்சாறு வகைக்கு ¼ படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் 5 பலம் பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து திப்பிலி, அரத்தை, சுக்கு வகைக்கு 10 கழஞ்சு இடித்துத் தூள் செய்து தூவி மாகாணி (1 1/6 படி) செய்விட்டுக்கிண்டி மெழுகு பதத்திலிறக்கி ஆற்றி அரைக்கலற்படி தேன்விட்டு பிசைந்து கொண்டு தான்றிக்காய் அளவு பத்தியமாய் உட்கொள்ள எல்லா இருமல் நோய்கள் தீரும்.

மிக்குலாந்தக (இஞ்சி) இளகம்.

பறங்கிப்பட்டை, வால்மிளகு, தாளிசப்பத்திரி, இலவங்கம், சடாமாஞ்சில், சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சவேர், ஏலம், மிளகு, தாமரைக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, சீரகம், கருஞ்சீரகம், அதிமதுரம், சீந்தில்சர்க்கரை வகைக்கு 1 பலம்; சுக்கு இலவங்கப்பட்டை வகைக்கு 3 பலம்; இலவங்கப்பத்திரி 2 பலம்; சாதிப்பத்திரி கால் பலம்; கூகைநீர் பலம் ½ இவைகளை இடித்துத் தூள்செய்து 4 பலம் இஞ்சிச்சாற்றில் 32 பலம் சர்க்கரையைப் போட்டுப் பாகுசெய்து தூளைத் தூவி 15 பலம் நெய்விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றிப் 10 பலம் தேன் விட்டுப் பிசைந்துகொண்டு வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர மேக காங்கை, பித்தகாங்கை முதலிய நோய்கள் தீரும்.

கலிங்காதி இளகம்.

விளக்கெண்ணெய், தேங்காய்ப்பால், பேய்க்குமட்டிக் காய்ச்சாறு வகைக்கு அரைப்படி ஒன்றாய்க் கலந்து அதில் சத்திச்சாரம், நவாச்சாரம், பஞ்சலவணம், பெருங்காயம், வாய்விளங்கம், கருஞ்சீரகம், கிராம்பு, அரத்தை, யானைத் திப்பிலி, அரிசித் திப்பிலி, திப்பிலி மூலம், அமுக்கராக் கிழங்கு, சதகுப்பை, நெல்லிப்பருப்பு, மல்லி, பொன்முசுட்டை வேர் வகைக்கு 5 பழஞ்சு; ஓமம் அரைப் பலம்; சித்திரமூலம், வெந்தயம் வகைக்கு 1 பலம்; வெள்ளைப்பூண்டு 3 பலம்; வெல்லம் 4 பலம்; கடுக்காய் 20, தான்றிக்காய் 10 இவைகளை இடித்துத், தூளைத் தூவிக் கிண்டி இளகம் செய்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டு வர வாயு, சூலைவாயு, திரட்சி கெண்டை முதலான வயிற்று நோய்கள் தீரும்.

தூதுவளை இளகம்.

முருங்கைப்பூ, தூதுளம் பூ வகைக்கு 4 பலம, சதாவேறிக்கிழங்கு 3 பலம். நன்னாரிவேர் 2 பலம். நிலைப்பனைக் கிழங்கு, நெறிஞ்சுமுள்ளு வகைக்கு 1 பலம் தூள்செய்து, குறுணிப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சிக் குறுகி வரும்போது 12 பலம் சர்க்கரையைப் போட்டு நெய் அரைப்படி, தேன் கால் படிவிட்டுக் கிண்டி தான்றிக்காய் அளவு உட்கொள்ள பிரமியம், மேகம், எலும்புருக்கி, பிரமேகம் முதலியவை தீர்ந்து உடம்பு பலமாகும்.

Koviloor Digital Library

சிந்தாதி இளகம்.

1. ஆறுமாதக்காடி, புளித்த மோர் வகைக்கு 10 படி. அதில் இடித்த புளியிலை ஒரு தூக்கு, துருப்பிடித்த இரும்பு ஓர் எடைபோட்டுக் காய்ச்சி எட்டில் ஒன்றாய் வற்றவைத்துக் கையாந்தகரைச்சாறு 2 படி, இஞ்சி, எலுமிச்சம்பழம், நெருஞ்சி, சிறுகீரை, செருப்படை, தென்னம்பூ, கீழ்க்காய் நெல்லி இவற்றின் சாறு வகைக்கு ஒரு படி, பசுவின் பால் 4 படி ஒன்றாய்க் கலந்து அதில் பத்துப் பலம் பனைவெல்லத்தையும் கரைத்துப் பாகு செய்து திரிகடுகு, ஓமம், திரிபலை, கோட்டம், மாஞ்சில், சீரகம், வால்மிளகு, ஏலம், கிராம்பு, தாளிசப்பத்திரி, இலவங்கப்பட்டை, ஆனைத்திப்பிலி வகைக்கு ஒரு பலம். இவற்றை வெதுப்பித் தூள்செய்து தூவி ஒரு படி பசுவின் நெய் விட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றி ஒரு படி தேன் விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு ஒரு மண்டலம் (48 நாள்) சாப்பிட்டுவரப் பாண்டு, பித்தம், வெட்டை, வாயு, அக்கினிமந்தம், பொருமல், உடம்பு இளைப்பு, வெளுப்பு, சோகை, தொடர்கழிச்சல் ஆகியவை நீங்கும்.

சித்திரவல்லாதி இளகம்.

சித்திரமூலம், வெள்ளறுகு, சிவனார் வேம்பு, சங்கு, சங்கங்குப்பி, கொல்லங்கோவை, அமுக்கறா, வெள்ளறுகு, சின்னி, விளாத்தி, குமிழ், மிளகரணை, செங்கத்திரி, குன்றி, பிரப்பங்கிழங்கு, பூதவிருட்சம், வாதக்கரப்பான் இவற்றின் மூலப்பட்டை, முற்றின தேங்காய், நீரடிமுத்து, வெட்பாலையரிசி, கரிய சீரகம், காட்டுச் சீரகம், கெந்தகம், துருசு, செந்தூரம், சூதம், துத்தம் வகைக்கு ஒரு பலம். பனைவெல்லம், காரெள்ளு வகைக்கு ஒரு சேர், தூய்மை செய்த சேங்கொட்டை 100, பறங்கிப்பட்டை 2 பலம் இவற்றையெல்லாம் மெழுகு போல் இடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு மண்டலம் (48 நாள்) உட்கொள்ளச் சூலை, கிரந்தி, முடக்கு, கடுப்பு, பிடிப்பு, மேகவாதம், மேகவூறல், வெளுப்பு, அரிசிரங்கு, புழுவெட்டு, கடிவிடம், திமிர்குட்டம், கண்டமாலை, புற்று, பிளவை முதலான இரணங்கள் தீரும்.

தாது விருத்தி இளகம்.

1. இரண்டு படி பனைப் பதினியில் நான்கு பங்கு பனைவெல்லத்தைக் கரைத்துப் பாகுசெய்து அதில் தேங்காய்ப் பால், இளநீர், கரும்புச்சாறு, பசுவின் பால், நெய் வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி நெய்யை வடித்து விட்டு ஆல், நாயுருவி, பருத்தி, ஆவாரை, முருங்கை, பூனைக்காலி இவற்றின் வித்து, அமுத சருக்கரை, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், மிளகு, வாலமிளகு, இலவங்கப்பத்திரி, குரோசானிஓமம், கோட்டம், சடாமாஞ்சில், வாலுளுவையரிசி, சிறுநாகப்பூ, குங்குமப்பூ, திரிகடுகு, திரிபலை, தாளிசபத்திரி, சீரகம், வெந்தயம், நிலப்பனைக்கிழங்கு, பூமி சர்க்கரைக் கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், முந்திரிகைப் (திராட்சை)

Koviloor Digital Library

பழம், பேரீச்சம் பழம், சாரப் பருப்பு, ஓமம், கசகசா வகைக்கு 3 வராகன் எடை, தூய்மை செய்த கஞ்சா 16 வராகன் எடை. இவற்றை இடித்துத் தூள்செய்து தூவிக்கிண்டி மெழுகுபதத்தில் இறக்கி ஆற்றித் தேன் (1 1/6 படி) மாகாணி, அவித்த கோழிமுட்டை கரு 5, சர்க்கரை 5 பலம் இவற்றைச் சேர்த்துப் பிசைந்துகொண்டு வேளை ஒன்றுக்குச் சுண்டைக்காய் அளவு சாப்பிட்டுவர, மேகம், அதிசாரசுரம், வாயு தீரும். வீரியவிருத்தியும் உடம்பு காந்தியும் உண்டாகும்.

2. பத்து பலம் சர்க்கரையை இரண்டுபடி பசுவின் பாலில் கரைத்துப் பாகுசெய்து அதில் எலம், அதிமதுரம், சுக்கு, இலவங்கப்பட்டை, கோட்டம், வால்மிளகு, கசகசா, மிளகு, சிற்றரத்தை, குரோசானிஓமம், தாளிசப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், சாரப்பரப்பு, பற்பாடகம், இலவங்கப்பத்திரி, சீரகம், திப்பிலி, கிராம்பு, மல்லி மதனப்பூ, அபின், வாலுளுவை, ரூமிமஸ்தகி, மகரப்பூ, வெட்டிவேர், கோரோசனை, நறுக்கு மூலம், பூனைக்காலி விதை, வெள்ளைக்குங்கிலியம், இருவேலி, கூகைநீர், அதிவிடையம், அக்கிராகாரம், கச்சோளம், சாலாமிசிரி வகைக்கு 5 வராகன் எடை வெதுப்பி இடித்து வடிகட்டின தூளுடன் பாலில் அவித்துத் தூய்மைசெய்து உலர்த்தி ஒன்பது புடம் செய்த கஞ்சா 5 வராகன் எடை இவற்றை கலந்து தூவி நெய் படிகால் விட்டு கிண்டி மெழுகு பதத்திலிறக்கி தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கழற்சிக்காய் அளவு சாப்பிட்டுவரத் தாதுவிருத்திக்கும். சூடான உணவுப் பொருள்களைச் சாப்பிடலாம்.

3. வில்வவேர், விலாமிச்சம்வேர், நன்னாரி வகைக்குக் கால் பலம் நறுக்கி தூணி நீரில் போட்டு வற்றவைத்தக் கிழாயம் கால் படியில் பத்து பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் திரிகடுகு, ஓமம், அதிமதுரம், கிராம்பு, அபின், வால்மிளகு, சீரகம், வாலுளுவையரிசி, சாதிக்காய், சாதிப்பத்திரி, சன்னலவங்க பட்டை லவக்கபத்திரி மகரப்பூ, சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், சாரப்பருப்பு, நெல்லிப்பருப்பு, கசகசா, தூய்மைசெய்த கஞ்சா வகைக்கு 3 வராகன் எடை, வெதுப்பிப் பொடித்துத் தூவி, பசுவின் நெய் கால்படி விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் ஆழாக்குத் தேன் விட்டுப் பிசைந்து ஒரு வேளைக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர வயிற்றுளைவு, நீர்க்கழிச்சல், கை கால் எரிவு, உளைமாந்தை, வாதம் 80, திமிர் வாதம், பித்தம், குன்மம், நச்சுச் சார்பான வீக்கம் நீரும். தாது விருத்தி, உண்டாக்கும்.

4. இரண்டு படி பசுவின் பாலில் பத்து பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் பத்து அண்டத்தை உடைத்துவிட்டு திரிகடுகு, சாரப்பருப்பு, கசகசா, கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதுரம், கூகைநீர், கோட்டம், சடாமாஞ்சில், சன்னலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, தூய்மைசெய்த கஞ்சா வகைக்கு 1 பலம் இவைகளைத் தூள்செய்து தூவி பசுவின் நெய் கால்படி விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி தேன் ஆழாக்கு விட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்குப புன்னைக்காய் அளவு சாப்பிட்டுவர தாது விருத்தியாகும்.

Koviloor Digital Library

5. தூதுவளைச்சமூலம், வில்வவேர், அமுக்கராக்கிழங்கு, சந்தனத்தூள், அறுகம்வேர், சீந்தில்தண்டு, வகைக்கு 5 பலம் இடித்துப் பன்னிரண்டு படி புது தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வற்ற வைத்தக் குடிநீர் பசுவின் பால் வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து 5 பலம் சர்க்கரையையும், 3 பலம் பனைவெல்லத்தையும் கரைத்துப் பாகுசெய்து அதில் திரிகடுகு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சடாமாஞ்சில், நெல்லிவற்றல், அதிமதுரம், ஏலம், நற்சீரகம், இலவங்கம், இலவங்கப்பட்டை, அபின், சிறுநாகப்பூ, கசகசா, தாளிசப்பத்திரி, ஓமம், வால்மிளகு, சிற்றரத்தை, அக்கிராகாரம், கோட்டம், தூய்மைசெய்த கஞ்சா ஆகியவற்றை வகைக்கு 5 வராகன் எடை வெதுப்பித் தூள்செய்து தூவி அரைப்படி பசுவின் நெய் விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றி தேன் கால் படி விட்டுப் பிசைந்துகொண்டு வேளை ஒன்றுக்குத் தேற்றான் விதை அளவு சாப்பிட்டுவர தாது விருத்தியாகும். பிரமேகம், தொடர்க்கழிச்சல், அதிசாரம், வாயு, பெரும்பாடு, எரிகுன்மம், ஆகிய நோய்கள் தீரும்.

6. ஒரு படி பசுவின் பாலில் 10 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து திரிசாதம், சீரகம், ஓமம், ஏலம், அபின், திரிகடுகு, உளுந்து, அதிமதுரம், முத்தக்காசு, நெல்லிமுள்ளி, அசுவகெந்திக்கிழங்கு, பூனைக்காலிவிதை, இலவம்பிசின், வாய்விளங்கம், இலவங்கம், நிலப்பனைக்கிழங்கு, நெருஞ்சிவேர், கசகசா, தூய்மை செய்த கஞ்சா, ஆகியவற்றை வகைக்கு 12 கழஞ்சு இடித்துத் தூள் செய்து தூவி, நெய் 1,4 படி விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கித் தேன் ஆழாக்கு விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குத் தேற்றான் விதை அளவு சாப்பிட்டுவர தாது விருத்தி உண்டாகும்.

மதனகாமேசுர இளகம்.

1. இரண்டுபடி பசுவின் பாலில் 10 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்துதிரி கடுகு, அதிமதுரம், சிறுதேக்கு, நீர்முள்ளிவித்து, நெருஞ்சிவேர், மல்லி, கோட்டம், சாதிக்காய், உளுந்து, எள்ளு, முந்திரிகைப்பழம் (திராட்சை), ஏலம், முள்ளிலவம்பிசின், இந்துப்பு, அதிவிடையம், கஸ்தூரிமஞ்சள், கதலிக்கிழங்கு, சாரணைக்கிழங்கு, அமுக்கராக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, கரிப்பான்சமூலம், கொடிவேலிவேர், ஆனைத்திப்பிலி, மருட்கிழங்கு, சிறுநாகப்பூ, வெந்தயம், அபின், அப்பிரகசெந்தூரம், திரிபலை, இலவங்கம், சண்பகவிதை, நற்சீரகம், தூய்மைசெய்த கஞ்சா, பெருஞ்சீரகம், நிலப்பனைக்கிழங்கு, இலவங்கப்பட்டை ஆகியவற்றை வகைக்கு கால் பலம் தூள்செய்து அதற்குச் சமம் பூனைக்காலிவிதைப் பருப்பின்மாவு சேர்த்துத் தூவி, நெய்விட்டுக் கிளறி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றித் தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்குத் தேற்றான்விதை அளவு சாப்பிட்டுவர விந்து விருத்தி உண்டாகும்; விந்து கட்டுதல்; அதிசாரம், தொடர்க் கழிச்சல், பித்தம் (அழல்), சிலேத்துமம், வாயு ஆகிய நோய்கள் தீரும். புளி, நல்லெண்ணெய், கடுகு நீக்கிப் பசுவின் பால், நெய், முருங்கைப் பிஞ்சு கூட்டிப் பத்தியம் உட்கொள்ளவும்.

Koviloor Digital Library

2. வில்வம், தூதுவளை, கண்டங்கத்தரி, சிறுவழுதலை, சிற்றாமுட்டி, நொச்சி, முக்காவேளை, நன்னாரி, சங்கு, சங்கங்குப்பி, காட்டுமல்லிகை, சீதேவிசெங்கழுநீர், பொன்முசுட்டை, இம்பூரல், அமுக்கறா, ஓரிலைத்தாமரை, சிறுகீரை, பொன்னாங்காணி, வேலிப்பருத்தி, காட்டாமணக்கு, சின்னி இவற்றின் வேர்கள் வகைக்கு 10 பலம் இடித்துப் போட்டு 5 மரக்கால் தண்ணீர் விட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் கரிப்பான், பொடுதலை, பிரமி, முசுமுசுக்கை, முடக்கொத்தான், சங்கிலை, நிலவாகை, ஆடாதோடை, புளியிலை, பழம்பாசி, சங்கங்குப்பி, பொற்றலைக்கரிப்பான், மாதுளம்பழம், பெரும்பூசணி, எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், இஞ்சி இவற்றின் சாறு வகைக்குக் கால் படி ஒன்றாய்க் கலந்து 20 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து மிளகு, ஓமம், வெள்ளைப்பூண்டு, கடுக்காய், தான்றிக்காய், கோட்டம், அக்கிராகாரம், கடுகுரோகணி, அரத்தை, திப்பிலி, செவ்வியம், கருஞ்சீரகம், தேசாவரம் வகைக்கு 1 பலம், கஸ்தூரி மஞ்சள், தேவதாரம், இந்துப்பு, கல்லுப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, சடைக்கஞ்சா, குரோசானி ஓமம், கசகசா, சாரப்பருப்பு, அபின், வாய்விளங்கம், மல்லி, சீரகம், சுக்கு, அதிமதுரம், ஏலம், இலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, வகைக்கு 5 வராகன் எடை, சாதிப்பத்திரி 1 வராகன் எடை, சாதிக்காய், கிராம்பு, வகைக்கு 2 வராகன் எடை இவற்றை இடித்துத் தூள்செய்து நெய் 1 படி விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி, தேன் கால் படி, முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம்பழம் வகைக்கு 1 பலம் சேர்த்துப் பிசைந்து வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர சகல நோயும் தீரும். தாது விருத்தி உண்டாகும்.

மதனகாமேசுரக் குளிகை.

1. வாலைரசம் 3 கழஞ்சு, இலிங்கம் 1 கழஞ்சு, முருக்கை வித்து, சாதிக்காய், முத்தக்காசு, அபின், கஞ்சா, பூனைக்காலிவித்து, பூமிசர்க்கரைக் கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, சமுத்திரச்சோகி விதை, சாதிப்பத்திரி, சாரப்பருப்பு, வெண்காரம் வகைக்கு அரைப் பலம் இவைகளைப் பொடித்து முற்றின தேங்காய்க்குள் அடைத்து, மூடிச் சாணியில் பொதித்துக் காயவைத்து சிரட்டைக் கருகும்படிப் புடம்போட்டு ஆறவிட்டு எடுத்துச், சிரட்டை நீக்கி மெழுகு போல் அரைத்து தேற்றான்விதை அளவு உருட்டி சர்க்கரையில் பொதித்து சாப்பிட்டு, பாலும் அன்னமும் உட்கொள்ள தாது விருத்தியாகி கட்டும்; புணர்ந்தால் வெளிப்படாது; அதற்கு மாற்று எலுமிச்சம்பழம்.

2. சிறுபூனைக்காலி, நத்தைச்சூரி, நீர்முள்ளி, முருங்கை, அமுக்கறா, செம்முள்ளி, நெருஞ்சி, ஊமத்தை, ஓரிலைத்தாமரை, கஞ்சா, ஆவாரை, முள்ளி, சங்கு, முசுமுசுக்கை, அழிஞ்சில், வில்வம், நெல்லி, அத்தி, அரசு, ஆல், அவுரி, புரசு, முசுட்டை, சுண்டை, திரிபலை, கருவேல், வன்னி, மருது, மாங்கொட்டை, அகத்தி, தேற்றான், சிவனார்வேம்பு, செந்நாயுருவி, பாற்கொரண்டி இவைகளின் வித்து, நிலப்பனங்க கிழய்கு, அமுக்கிறா கிழங்கு நன்னாரி வேர், சமுத்திராப்பழம் வாகை, முருங்கை, விளா வேலா, வேம்பு, இலவு இவைகளின் பிசின்; சாதிக்காய், சாதிப்பத்திரி, குரோசானிஓமம், அமிர்தசருக்கரை, சர்க்கரை (சீனி), கற்கண்டு, வெள்ளைக்குங்கிலியம்,

Koviloor Digital Library

மதனப்பூ, அப்பிரகச்செந்தூரம் வகைக்கு ஒரு கழஞ்சு இவைகளை முந்திரிகைப் (திராட்சை) பழச்சாற்றால் நாற்பது நாழிகை அரைத்துக் கடலை அளவு உருட்டி வேளை ஒன்றுக்கு ஒரு குளிகை வீதம் பசுவின் பாலில் ஒரு மண்டலம் (48 நாள்கள்) கைப்பு, புளி, நீக்கி உட்கொள்ள யானை வலிமை உண்டாகும். தாது விருத்தியாகும்; விந்து கட்டும்.

3. தேய்ந்த உருக்கு உளியை இலேசாய்த் தட்டிக் காய்ச்சி, வாழைக்கிழங்குச் சாற்றில் துவைத்து நொலுக்கிப் பொடித்து அது நனையத்தக்க பரட்டைக்காயைப் பொடித்து, அதில் வருகிற பாலை விட்டு உலர்த்திக் கல்வத்திலிட்டு பிராய்மரப் பாலால் மெழுகு போல் அரைத்துக் குன்றிபோல் உருண்டைசெய்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் பசுவின் பாலில் உட்கொள்ள உடல் வலுக்கும். வீரிய விருத்தி உண்டாகும்.

4. அபின், மதனப்பூ, கிராம்பு, சாதிக்காய், மராட்டி மொக்கு, தங்கபறபம், சாம்பிராணிப்பூ, முருங்கை, ஆல், அரசு, அத்தி இவைகளின் வித்து; அதிமதூரம், இவைகளை ஓர் எடையாய் முருங்கைப்பூச் சாற்றாலாட்டிச் சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து பசுவின் பாலில் முருங்கைப்பூவைப் போட்டுக் காய்ச்சி வடித்து அதில் ஓர் உருண்டையை உரைத்து ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

பத்தியம்: புளி, உப்பு நீக்கவும். பாலும், அன்னமும் உட்கொள்ளவும்.

5. அமுக்கறாக்கிழங்கு, நீர்முள்ளி, வித்து, குருந்தொட்டி வேர் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து, முவ்விரல் அளவு பசுவின் வெண்ணெயில் கலந்து உண்டுவர தாது விருத்தியாகும்.

6. சாதிக்காய், அதிமதுரம், கஸ்தூரிமஞ்சள், குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, முருங்கைவித்து, பூனைக்காலிவித்து, அமுக்கறாக்கிழங்கு, கோட்டம், அக்கிராகாரம், கசகசா, ஓமம், குரோசானி ஓமம், சமுத்திராச்சோகிவிதை, இவற்றை ஓர் எடையாய்த் தூள்செய்து, அதற்குச் சமமாய் கஞ்சாத் தூள் சேர்த்துத் தேன்விட்டு மூன்று நாளாட்டித் தூதுவளங்காய் அளவு சாப்பிட்டுவர விந்து விருத்தியாகும்.

7. முத்து அரை வராகன் எடை, தங்கம் கால் வராகன் எடை, பவழம் 1 வராகன் எடை, முருங்கை, ஆவாரை, மகிழம் நெருஞ்சி, நீர்முள்ளி ஆகியவற்றின் வித்து, பருத்திவிதைப்பருப்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வகைக்கு அரை வராகன் எடை இவற்றைத் தேன் விட்டரைத்துச் சுண்டைக்காய் அளவு சாப்பிட்டுப் பசுவின் பாலில் முருங்கைப்பூவைப் போட்டுக் காய்ச்சி சாப்பிட்டு உடலுறவு கொள்ள தாது கட்டும்.

8. மூன்று முட்டையின் மஞ்சள் கரு, அபின், அக்கிராகாரம், நிலப்பனைக்கிழங்கு, சர்க்கரை இவற்றை ஓர் எடையாய்த் தேன் விட்டு அரைத்துச் சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு முன்போல் பசுவின் பாலைச் குடித்துப் புணர தாது கட்டும்.

Koviloor Digital Library

மதனகாமேசுர நெய்.

திரிகடுகு, சிறுநாகப்பூ, கிராம்பு பத்திரி, வால்மிளகு, சீரகம், தக்கோலம் வகைக்கு 4 கழஞ்சு இவற்றைப் பசுவின் பாலில் அரைத்து முக்கால்படி நெய்யில் வேகவைத்து, நெய்யை வடித்து ஒரு கரண்டி சாப்பிட்டு புளி தள்ளி, பாலும், அன்னமும் புசித்துப் புணர்ந்தால் இந்திரியம் வெளியாகாது.

மதனபூரண வல்லாதி,

எள், பூமிச்சர்க்கரைக்கிழங்கு, தூய்மைசெய்த சேங்கொட்டை வகைக்கு 2 பலம், அமுக்கறாக்கிழங்கு, நாயுருவிநத்தைச்சூரி, பாற்குரண்டி, கஞ்சா, துளசி, அரசு, அத்தி, ஆல், முருங்கை, நீர்முள்ளி, பூனைக்காலி, ஆவாரை, திருநீற்றுப்பச்சை, கருவேல், சிறுகீரை, பொன்னாவரை, தேற்றான் இவைகளின் வித்து வகைக்கு 2 கழஞ்சு, திரிகடுகு, சாதிக்காய், கிராம்பு, பத்திரி, சோம்பு, கருவாப்பட்டை, சாரப்பருப்பு, வால்மிளகு, மதனப்பூ, சிறுநாகப்பூ, அபின், கசகசா, ஏலம், ஓமம், வாலுளுவையரிசி, கோட்டம், வகைக்கு 3 கழஞ்சு; முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம் பழம் வகைக்கு 1 பலம்; தூய்மைசெய்து வறுத்த கஞ்சா 4 பலம் இவற்றைக் கல்லுரலில் நான்கு சாமம் இடித்துச் சர்க்கரை 5 பலம், கற்கண்டு 25 பலம் சேர்த்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரைவராகன் எடை வீதம் பாலில் உட்கொள்ள விந்து கட்டும். மயங்கினால் எலுமிச்சம்பழச் சாறும், ஈருள்ளிச்சாறும் கொடுக்க மாறும்.

மதனசஞ்சீவி

ஒரு படி பசுவின் பாலில் நான்கு பலம் கோதுமை மாவையும், இருபது பலம் சருக்கரையையும் போட்டுக் கிண்டி, காய்ச்சிப் பாகுபதத்தில், நீர்முள்ளிவிதை, நிலப்பனைக்கிழங்கு, இலவங்கபட்டை, பனைவேர் வகைக்கு 1 பலம்; கஜவேலம் பிசிண், கஞ்சா, வகைக்கு பலம் 2 சந்தனம், சாதிக்காய், கிராம்பு, பெருஞ்சீரகம் வகைக்கு 2 வராகன் எடை; திப்பிலி அரைப் பலம் இவற்றை இடித்துத் தூள்செய்துத் தூவி, அரைப்படி நெய்விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் இறக்கி ஆற்றிப் பேரீச்சம்பழம் 4 பலம், தேன் 10 பலம் சேர்த்துப் பிசைந்து வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர விந்து ஊறும்; போகம் மிகும்.

விந்துவிருத்திக்கு மருந்து.

1. சந்தனம், தேற்றான்விதை, முருங்கைவேர்ப்பட்டை இவற்றை ஓர் எடையாய்த் தேங்காய்ப்பாலில் அரைத்து உட்கொள்ள விந்து கட்டும்; புளி தள்ளவும்.

2. பூனைக்காலி நிலப்பனைக்கிழங்கு, பூமிசர்க்கரைக்கிழங்கு இம் மூன்றையும் பசுவின் பாலிலாவது, கல்லாத்திப் பாலிலாவது அரைத்து உண்டால் விந்து விருத்தியாகும்.

3. வீழிக்கிழங்கையும், பூமிசர்க்கரைக் கிழங்கையும் பசுவின் பாலில் அரைத்து உண்டால் விந்து வளமையாம்.

Koviloor Digital Library

4. சீராச் செங்கழுநீர், குரட்டை இவற்றை ஓர் எடையாய்ப் பாலில் அரைத்து உட்கொண்டாலும் தாது விருத்தி உண்டாகும்.

5. நீர்முள்ளி, முருங்கை, முசுட்டை, பாற்குரண்டி இவைகளின் விந்து; கசகசா வகைக்கு 5 வராகன் எடை இவைகளைப் பொடித்து வடிகட்டி ஒரு படி பசுவின் பாலில் போட்டுச் சிறுதீயாய் எரித்து அரைக்கால் படியாக வற்றவைத்துச் சருக்கரை கலந்து இவ்விதம் பத்து நாள்கள் உட்கொள்ள பலன் உண்டாகும்.

6. பசுவின் பாலில் நெரிஞ்சிப்பூவையும், முருங்கைப் பூவையும் போட்டுக் காய்ச்சிக் காலையிலும், மாலையிலும், சாப்பிட்டு வர தாது விருத்தியாகும்.

தம்பன வெண்ணெய்.

சிவந்த பசுவின் பால ஒரு படியில் 60 வெள்ளெருக்கம் பூவைப் போட்டுக் காய்ச்சிப் பூ குழைந்த பின்பு எடுத்துப்போட்டு நன்றாய்க் காய்ச்சிப் புரைகுற்றிக் கடைந்த வெண்ணெய், பச்சைப் புனுகு, கோரோசனை இவைகளை ஓர் எடையாய்க் கலந்து இலிங்கத்தில் பூசிப் புணர்ச்சி செய்ய இன்பமுண்டாகும்.

கந்தாதி இளகம்.

வல்லாரை, புளியாரை, கண்டங்கத்திரி, தூதுவளை, பொற்றலைக் கரிப்பான் இவற்றின் சாறு; தேங்காய்ப்பால், பசுவின்பால் வகைக்கு ஒரு படி, ஒன்றாய்க் கலந்து அதில் 40 பலம் சர்க்கரையைக் கரைத்து பாகுசெய்து தீயாற்றி அதில் கருணை, வெள்ளருகு, காட்டுக்கரணை, சாரணை, அமுக்கரா, பிரண்டை, மருள் சேனை, அமிர்தவல்லி, புளியமடல், ஆனையறுகு, கொட்டி, ஆம்பல், நெய்தல், கோரை, முள்ளங்கி, நிலப்பனை, பூமிச், சர்க்கரை, மாதுளை, செங்கழுநீர் இவற்றின் சமூலம்; பிடிகிழங்கு, ஆவாரைபஞ்சாங்கம், வெள்ளுள்ளி, நெருஞ்சி, நீர்முள்ளி, ஊமத்தை, நாயுருவி, கஞ்சா, கழற்சி, முருங்கைப்பூ, பூனைக்காலி, நத்தைச் சூரி இவைகளின் வித்து வகைக்கு 1 பலம்; இவைகளைப பசுவின் மோரில் அவித்து உலர்த்தி இடித்து வடிகட்டின தூளையும்; திரிகடுகு, நறுக்குமூலம், பறங்கிப்பட்டை, சிற்றரத்தை, ஏலம், திரிபலை, கல்மதம், கோட்டம், அதிமதூரம், கருஞ்சீரகம், நற்சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, தேற்றான்விதை, கிராம்பு, கார்போகஅரிசி, ஓமம், கெருடப்பட்சிக்கல் நார்கல்கஞ்சா, கற்பூரம், பச்சைசந்தனம் தாளிசப்பத்திரி, இஞ்சி வகைக்கு 1 பலம்; அபின் ஒரு வராகன் எடை இவைகளைப் பரிதியில் உலர்த்தி இடித்து துணியில் சலித்துப் பசுவின் பால் விட்டுப் பிசைந்து ஒரு சட்டியில் 2 படி பசுவின் பால் விட்டு, வாயில் வேடுகட்டி, அதன்மேல் மருந்தை வைத்துப் பிட்டவித்து உலர்த்தின தூளைத் தூவி பசுவின் நெய் 2 படி விட்டுக் கிண்டி, மெழுகு பதத்தில் இறக்கி, தேன் ஒரு படி விட்டுப் பிசைந்து, வேளையொன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர மேகம், எருவாய் நோய், கிராணி, கபாலச்சூடு முதலான நோய்கள் தீரும்; தாது விருத்தியாகும்; உடல் பூரிக்கும்.

Koviloor Digital Library

மன்மத சிந்தாமணி.

1. அரைப்படி பசுவின் நெய்யில் பத்து பலம் சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சி சிவந்தபின் இறக்கி அதில் திரிகடுகு, ஏலம், எள், கிராம்பு, உளுந்து, கோட்டம், வெந்தயம், இலவம்பிசின், இலவம் விதை, குரோசானிஓமம், மல்லி, அதிமதுரம், கச்சோலம், சாதிக்காய் இந்துப்பு, சிறுதேக்கு, கடுக்காய்ப்பூ, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, மதனப்பூ, அத்தி, திப்பிலி, முந்திரிகைப்பழம் (திராட்சை), வசம்பு, கடுக்காய், நெல்லிவற்றல், தான்றிக்காய், இலுப்பைப்பூ, செங்கழுநீர், அமுக்கறா, சீந்தில், நெருஞ்சி, பழுப்பாகல், நிலப்பனை, நீர்முள்ளி, வாழை, தண்ணீர் விட்டான், ஆவாரை, சத்திச்சாரணை, சிறுகாஞ்சோரி இவற்றின் வேர்கள் வகைக்கு 1 பலம்; அபின் 1 வராகன் எடை; பரிதியில் உலர்த்தி இடித்துத் துணியில் சல்லித்து முன்புபோல் பாலில் விட்டு அவித்து உலர்த்தினத் தூளைத் தூவிக் கிளறி ஆற்றித் தேன் கால் படி விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடவும். பத்தியம்: பாலும், சாதமும் உண்ண உடல் வலுக்கும்; தாது விருத்தி உண்டாகும்.

2. வில்வப்பத்திரி, பொன்னாங்காணி, நன்னாரி, நத்தைச்சூரி, சிறுநெருஞ்சி, கீழ்க்காய்நெல்லி, சிறுகீரை, மாதுளை, இருவேலி, அம்மான்பச்சரிசி, ஆவாரை, அத்தி இவற்றின் வேர்கள், கஞ்சா, சாதிக்காய், சாதிப்பத்திரி, கூகைநீர், கிராம்பு, ஏலம், முந்திரிகைப் பழம் (திராட்சை), கற்கண்டு, சிற்றரத்தை, கல்நார், கல்மதம், மல்லி, தாளிசப்பத்திரி, கடுகு, அதிமதுரம், வகைக்கு 3 கழஞ்சு; கருஞ்சீரகம், நற்சீரகம், குரோசானிஓமம், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, கோட்டம், விளாவரிசி, தேசாவரம், தக்கோலம், கஸ்தூரி மஞ்சள், திப்பிலிமூலம், வால்மிளகு, தேவதாரம், செவ்வியம், கச்சோலம், அன்னபேதி, மாதுளம்தோல், அக்கிராகாரம், வாய்விளங்கம், மகரப்பூ வகைக்கு இரண்டு கழஞ்சு; குங்குமப்பூ, கோரோசனை கஸ்தூரி, நெற்பொரி, பருத்திவிதைப் பருப்பு வகைக்கு ஒரு கழஞ்சு இவற்றை இடித்துத் துணியில் சல்லித்து அதற்குப்பாதி அளவு சர்க்கரை கூட்டிப் பசுவின் நெய், பால், மாதுளம்பழச் சாறு இவற்றில் சாப்பிட மேக வெட்டை, தாதுக்குறை நீங்கும். விந்து விருத்தி உண்டாகும்.

மருத்துணவு: பாலும் சாதமும் சாப்பிடவும்; இஞ்சிச் சாற்றில் உண்ண தலைவாதம், பித்தம் (அழல்), குடைச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

சித்திரமூல இளகம்.

கொடிவேலிவேர் 100 பலம் இடித்துக் கலக்கி, தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து, பத்து பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து திரிகடுகு, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி, வெட்பாலைப்பட்டை, சீரகம், ஓமம், சிற்றரத்தை, இந்துப்பு, தேவதாரம், செவ்வியம், வட்டத்திருப்பி, மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, புளியமடற்கிழங்கு, சிறுவழுதலைவேர், நவாச்சாரம், கும்மட்டி, மாதுளைவேர், பெருங்காயம் வகைக்கு 1 பலம் இடித்துத் தூள்செய்து தூவிக் கால் படி நெய் விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி, ஆற்றிக் கால் படிதேன் விட்டுப்

Koviloor Digital Library

பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட குன்மம், எருவாய்நோய், தொடர்க்கழிச்சல், அக்கினிமந்தம், அகுவை, பீலிகை, வாதம், குடல்வாதம் பித்தம் ஆகிய நோய்கள் தீரும்.

சிறு கூழ்ப்பாண்ட இளகம்.

இரண்டு படி பசுவின் பாலில் இருபது பலம் சருக்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் பெரும்பூசணிக்காயை மேல்தோல் சீவி நறுக்கி உலர்த்தி இடித்து வடிகட்டின பொடி 1 படி, கோட்டம், இலவங்கம், கஸ்தூரிமஞ்சள், இந்துப்பு, திரிபலை, அதிமதுரம், சாதிப்பத்திரி, திரி கடுகு வகைக்கு 1 கழஞ்சு இடித்துத் தூள்செய்து இரண்டு வகைத் தூளையும் ஒன்றாய்க் கலந்து தூவி அதை ½ படி நெய்விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர உடல் வறட்சி, எலும்புருக்கி, சிரங்கு, நீர்க்கடுப்பு, கல்லடைப்பு, வெட்டை ஆகியவை தீரும். உடம்பு குளிரும்.

இளகப் படலம் முற்றும்.

நெய்ப் படலம்.

கடை சரக்குத் தூள்களை நெய்களால் இளகம் போல் கிளறி நெய் பதத்தில் இறக்குதல் நெய்ப் படலம் எனப் பெயர் பெற்றது. (வடமொழியில் கிருதம் என்பதைத் தமிழில் நெய் என்று வழங்குவர்).

கூறுந் நெய்யுஞ் சர்பத்துக் கொடிய பாகந் தனையாய்ந்து
வீறும் சாத்திர மனைத்தும்யான் விளங்கத் திரட்டிக் கோதுபட
தீரும் சாத்திய சாத்தியமுந் திறமாய்ப் பண்டி தனையாய்ந்து
கோது முனிவர் மானிடத்திற் குறிப்பா யுரைத்த திதுவாமே.

சந்தன நெய்.

1. சந்தனக் கட்டை 4 பலம்; அரத்தை 3 பலம்; மிளகு 2 பலம்; வில்வவேர் 1 பலம்; இடித்துப் பத்து படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் பசுவின் நெய் 1 படி; ஆடாதோடை, முசுமுசுக்கை, இஞ்சி இவற்றின் சாறு வகைக்கு கால் படி கூடவிட்டு அதிமதுரம், துத்திவிதை, கலைக்கொம்பு வகைக்கு அரைப் பலம் தாளிசப்பத்திரி, திப்பிலி, சீரகம், சுக்கு, பருத்திவிதைப் பருப்பு, கோட்டம், கிராம்பு, கோரோசனை, நெல்லிமுள்ளி, அக்கிராகாரம், ஏலம் வகைக்கு 2 வராகன் எடை அரைத்துப்போட்டுக் காய்ச்சிக் கடுகு பதத்தில் இறக்கி இரண்டு பலம் சர்க்கரையைக் கலந்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுவர இருமல் விக்கல் சுவாசம் மேகட் பித்தம் வாந்தி தீரும்.

புளியாரை நெல்

புளியாரை பலம் 20 தண்ணீர மீட்டார் கிழங்கு, பொன்முசுட்டைவேர், நன்னாரி வேர்கருவேர்பிணி அதன் ஈர்க்கு கோரங்கிழங்கு, விலகுமிச்சை

Koviloor Digital Library

வேர், வில்வவேர் வகைக்கு 30 பலம் இடித்து 30 படி தண்ணீரிபோட்டு எட்டொன்றால் வற்றவைத்து வடித் நீரில் ஆவினெய்படி விட்டு தானிசபத்திரி, திப்பிலி சிறுநாகப்பூ சுக்கு வகைகக்கு பலம் 1– வெட்பாளையரிசி கற்கடகசில்சி, சீரகம், சன்னவங்கப்பட்டை, நறுக்குமூலம் இலவங்கபத்திரி, ஓலம் கஞ்சீரகம், வகைக்கு பலம் 12 சாதிக்காய் சாதிபத்திரி இராம்பு வகைக்கு ஒரு வராகனெடை அரைத்து கலக்கி காய்ச்சிக் கக்கத்துடன் சீனி கற்கண்டு வகைக்கு பலம் 5 அழிமதுரம் பலம் 5 அழி மதுரம் பலம் 1 பொடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி விஜா்சாப்பிட்டுவர வர இரத்தகிராணி, இரத்த மூலம் இரத்த அஜிசாலம், இரத்த மேகம், இரத்த பாண்டு, கிறத்த காசமா, இரத்த தாத்தம், வறட்சி, காமாலை, இருமல், சோகை தீரும்.

2. புளியாரைச்சாறு 4 படி, தயிர்த் தண்ணீர் ஒரு படி, பசுவின் நெய் 2 படி கலந்து அதில் முந்திரிகைப் (திராட்சை) பழம், பேரீச்சம்பழம், வெட்பாலையரிசி, அதிவிடையம், கோரைக்கிழங்கு, தேசாவரம், அதிமதுரம், கோட்டம், சாதிக்காய், செவ்வியம், சீரகம், வட்டத்திப்பிலிவேர், ஓமம், வில்வவேர் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட தொடர்கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, வயிற்றுப்புண் (குன்மம்), எரிவு, சோகை, வாய்க்கசப்பு ஆகியவைத்தீரும்.

3. புளியாரைச்சாறு குறுணி, நெய் 2 படி, தயிர் நீர் ஒருபடி அதிவிடையம், திரிகடுகு, இந்துப்பு, பெருங்காயம், யவாச்சாரம், சாதிக்காய், வெட்பாலையரிசி, திப்பிலிமூலம், கிராம்பு, மாதுளம்பூ, மரமஞ்சள், இலவங்கம் வகைக்கு 6 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர அறுவகைத்தொடர் கழிச்சல் தீரும்.

4. புளியாரை, வள்ளிக்கிழங்கு, பொன்னாங்காணி, இவைகளின் சாறு வகைக்கு ஒரு படி செவ்விளநீர் 2 படி, பசுவின் நெய் வகைக்கு 5 படி, சீரகம், மாசிக்காய், அதிமதுரம் வகைக்கு 4 கழஞ்சு, பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து கற்கண்டு ஒரு பலம், பத்திரி, ஏலம் வகைக்கு 2 கழஞ்சு பொடித்துத் தூவி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர பித்த வெட்டை, பித்தவாயு, எரிச்சல், நீர்ச்சுறுக்கு, மயக்கம், பித்தக் கக்கல் சுவையின்மை ஆகியவைத் தீரும். உடம்பு ஊறல் தீரும்.

கூழ்ப்பாண்ட நெய்.

1. பெரும் பூசணிக்காய்ச் சாறு 1 படி, தாழை, விழுதுச்சாறு, தென்னம்பூச் சாறு, குமரிச்சாறு, செவ்விளநீர் வகைக்கு ஒரு படி, பசுவின் நெய், பால் வகைக்கு 2 படி, ஒன்றாய்க் கலந்து சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், திரிபலை, சீரகம், ஏலம், வால்மிளகு, காட்டாத்திப்பூ, கற்கடகச்சிங்கி, மல்லி, குரோசானிஓமம் வகைக்கு 3 கழஞ்சு இவற்றைப் பசுவின் பாலால் ஆட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து இரண்டு பலம் கற்கண்டைப் பொடித்துத் தூவி அப்பிரகச்செந்தூரம் கலந்து ஒரு கரண்டி வீதம் உண்ண மேகம், பிரமேகம், காங்கை, எரிப்பு, காந்தல், நீர்க்குத்து,

Koviloor Digital Library

எரிவு, என்பு வெட்டை, என்பு காங்கை, எலும்புருக்கி, மஞ்சள் நோய் (காமாலை), தொடர்கழிச்சல், பித்தம் (அழல்) ஆகிய நோய்கள் தீரும்.

2. பெரும்பூசணிக்காய்ச் சாறு 4 படி; வெள்ளரிக்காய், பொற்றலைக் கரிப்பான், இளநீர், நீர்வள்ளிக் கிழங்கு, சீந்தில், சீதேவியார்செங்கழுநீர், தாமரைக் கிழங்கு, தாமரை விழுது, முடக்கொத்தான் இவைகளின் சாறு வகைக்கு 2 படி; பசுவின் பால், நெய் வகைக்கு 8 படி; ஏலம், இலவங்கம், கோட்டம், அதிமதுரம், கச்சோலம், பச்சை, சிறுநாகப்பூ, செவ்விளநீர், ஆனைத்திப்பிலி, சாதிக்காய், முந்திரிகைப் (திராட்சை) பழம், பேரீச்சம் பழம், இந்துப்பு, சண்பகப்பூ, நறும்பிசின், அகில், சந்தனம், செஞ்சந்தனம், இலுப்பைப்பூ, கிராம்பு, மஞ்சிட்டி, வள்ளிக்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, செந்நாயுருவி வேர், கரிப்பாலைவேர், சத்திச் சாரணைவேர், செங்கழுநீர்ப்பூ, முத்தக்காசு நன்னாரிவேர், கோட்டம், விலாமிச்சவேர், வெட்டிவேர், பொன்னாங்காணிவேர், ஓரிலைத்தாமரைவேர் வகைக்கு முக்கால் பலம் இவற்றைப் பசுவின் பாலால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, சீனி, கற்கண்டு வகைக்கு 2 பலம்; புனுகு 1 வராகன் எடை சேர்த்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட அழல் மேகம். என்பு, சுரம், வெட்டை, உடம்பெரிதல், கண் புகைச்சல், தாது இழப்பு ஆகியவை தீரும்.

3. பெரும் பூசணிக்காய்ச்சாறு, நீர்வள்ளிக்கிழங்குச்சாறு வகைக்கு 8 படி; கரிப்பான்சாறு, பொற்றலைக்கையான் சாறு, பசுவின் பால், நெய் வகைக்கு 2 படி; இலவங்கம், ஏலம், இந்துப்பு, விளாவரிசி, ஓமம், சாதிக்காய், சீரகம், கருஞ்சீரகம், சதகுப்பை, கூகைநீர், முந்திரிகைப் (திராட்சை) பழம், பேரீச்சம்பழம், கோட்டம், அதிமதுரம், சாதிப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, அதில் 10 கதலிப் பழமும், கால் படி சர்க்கரையையும் போட்டுக் கடைந்து கொண்டு வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர உளைமாந்தை, சுரமாந்தை, ஆறு வகைக் கிருச்சரம், மூத்திரப்பாளை, இரத்தகாசம், பித்தகாசம் ஆகியவை தீரும்.

பெரும்பூசணி நெய்.

பெரும்பூசணிக்காய்ச் சாறு 8 படி, வெள்ளரிக்காய்ச் சாறு 4 படி, தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு 2 படி, கரிப்பான் சாறு வகைக்கு படி 2 பசுவின் நெய் 1 படி, இளநீர் 2 படி யாவற்றையும் ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், சந்தனம், இலவங்கம், இலுப்பைப்பூ, கூகைநீர் வெருகங்கிழங்கு முந்திரிகைப்பழம் (திராட்சை), பேரீச்சம்பழம், கோட்டம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, திப்பிலி, கார்போக அரிசி, அதிமதுரம், மிளகு வகைக்கு 3 கழஞ்சு, அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தேன் அரைப்படி, சர்க்கரை கால்படி கலந்து கொண்டு வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர பிரமேகம், கிருச்சாரம், உடல் எரிவு, வறட்சி ஆகியவை தீரும்.

மருந்துணவு: கைப்பு, புளி தள்ளவும்.

Koviloor Digital Library

ஆவாரை நெய்.

ஆவாரைவேர்ப்பட்டை, தென்னங் குரும்பை வகைக்கு 20 பலம் நாவற்பட்டை அத்திப்பட்டை, நீர்ப்பூலாவேர் வகைக்கு 10 பலம் இவற்றை இடித்து 20 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் பசுவின் நெய் 2 படி; இஞ்சிச்சாறு கால் படி; முசுமுசுக்கைச்சாறு அரைப்படி விட்டு அதிமதுரம், நற்சீரகம், மிளகு, துத்திவேர், பழம்பாசிவேர், நாகவல்லிவேர் வகைக்கு 1 பலம்; செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைக்கிழங்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சிறுகீரைவேர், பசலிவேர், நெல்லிவற்றல், ஏலம் வகைக்குக் அரைப் பலம்; புளியங்கொட்டைத்தோல், ஆவாரையரிசி, வரப்பூலாக்கொழுந்து வகைக்கு 2 பலம்; கருவேலம்பிசின், விளாம்பிசின், மாம்பிசின், வெட்டிவேர், விலாமிச்சம்வேர், அறுகன்கிழங்கு வகைக்கு கால் பலம் இவற்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து ஆற்றி காற்பல திப்பிலிம் பொடியும் இரண்டு பல சர்க்கரையும் கால் படி தேன் சேர்த்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர சகல மேகம், நீரிழிவு, எரிவு, அடைப்பு, விடாய், நீர்ச்சுருக்கு (மூத்திரக்கிருச்சரம்), எலும்புருக்கி, பெரும்பாடு, தொடர்க்கழிச்சல் ஆகிய நோய்கள் தீரும்.

கொன்றை நெய்.

கொன்றைவேர்ப்பட்டை 16 பலம்; இடித்துப் பதினாறு படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடி நீரில் இஞ்சிச்சாறு 1 படி; பசுவின் நெய் 1 படி மணித்தக்காளி, நத்தைச்சூரி, கீழ்க்காய்நெல்லி, கொடிவேலி, கண்டங்கத்திரி, பொன்முசுட்டை, தழுதாழை, வில்வம், தைவேளை, சத்திச்சாரணை, கொழுஞ்சி, சிற்றாமுட்டி, பாதிரி இவற்றின்வேர்; விளாம்பட்டை, ஆயிலியப்பட்டை, முடக்கொத்தானிலை, நாயுருவியிலை வகைக்கு கால் பலம், திரிகடுகு, திரிபலை, செவ்வியம், வாய்விளங்கம், நறுக்குமூலம், தகரம், தக்கோலம், சதகுப்பை, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கடுகுரோகணி, அரத்தை, கார்போகரிசி வெட்பாலையரிசி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர முயல்கண்டன் முதலான வலிப்பு, வாதம், குடல்வாதம், பவுத்திரம், பெருவயிறு, மகோதரம், வயிற்றுக் கட்டி ஆகிய நோய்கள் தீரும்.

நாவல் நெய்.

நாவல்பட்டை 40 பலம் இடித்து, 20 பலம் தண்ணீரில் போட்டு நான்கு படியாய் வற்றவைத்து வடித்து, அதில் பெருமரத்துப் பட்டை, ஆவாரையரிசி, ஆவாரைவேர்ப்பட்டை, கோட்டம், இலவங்கப்பட்டை, கற்கடகச்சிங்கி, அதிமதுரம், அதிவிடையம், சடாமாஞ்சில், கூகைநீர், தேவதாரம், சிறுநாகப்பூ, நிலப்பனைக்கிழங்கு, நன்னாரிவேர் வகைக்கு 2 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துப் போட்டு, பசுவின் நெய் 1 படி விட்டுக் காய்ச்சி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள பெரும்பாடு தீரும்.

பொன்னாங்காணி நெய்.

பொன்னாங்காணி, பொற்றலைக்கரிப்பான், இவற்றின் சாறு, பசுவின் பால், நெய் வகைக்கு 1 படி; எலுமிச்சம்பழச்சாறு அரைப்படி; அதிமதூரம் 2

Koviloor Digital Library

பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து கற்கண்டு, கோரோசனை, சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்கு 1 கழஞ்சு பொடித்துப் போட்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டால் எருவாய்நோய், மேககாங்கை, கை, கால் எரிவு, காந்தல், உடல் எரிவு, வாய் நாற்றம், ஒழுக்கு நோய் (பிரமியம்) ஆகிய நோய்கள் தீரும். கண் குளிரும்.

வல்லாரை நெய்.

1. வல்லாரைச்சாறு, பசுவின் பால் வகைக்கு நான்கு படி; இளநீர், நெய் வகைக்கு 2 படி, சீராச்செங்கழுநீர்ச்சாறு 1 படி, அதிமதுரம், கோட்டம், செங்கழுநீர்க்கிழங்கு, பச்சைக்கற்பூரம், கோரோசனை வகைக்கு 3 வராகன் எடை பாலால் அரைத்துப் போட்டு மூன்று நாள்வரை சிறுதீயாய் எரித்து நான்காம் நாள் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள ஈளை, இருமல், தொண்டைக்கம்மல், நச்சுக்கடி, உடம்பில் காந்தல், நாவறட்சி ஆகிய நோய்கள் தீரும்.

2. வல்லாரை, பொன்னாங்காணி, பொடுதலைச் சாறு வகைக்கு 1 படி எலுமிச்சம்பழச்சாறு அரைப்படி பசுவின் பால், நெய் வகைக்கு 2 படி, சாதிக்காய், சாதிப்பத்திரி, மாசிக்காய், கடுக்காய்ப்பூ, காட்டாத்திப்பூ, வால்மிளகு, ஏலம், கிராம்பு, அதிமதுரம் வகைக்கு 2 கழஞ்சு, பசுவின் பால்விட்டு அரைத்துப் போட்டு மெழுகுபதத்தில் வடித்து இரண்டு பலம் சருக்கரையைப் போட்டுக் கிளறி, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் இரசபற்பம் வைத்து உட்கொள்ள சகல மேகம், இரணம், கிரந்தி, ஒழுக்குநோய், மேகச்சூலை, குட்டம், சொரி, சிரங்கு, நாபிநோய், அல்குல்புற்று, நீர்க்கடுப்பு, எரிப்பு, சுரப்பு ஆகியவை தீரும்.

3. வல்லாரைச்சாறு 2 படி, சீந்தில்தண்டு அரைப்படி, நெய் 1 படி, திரிபலை, திரிகடுகு, சீரகம், கிராம்பு, தாளிசப்பத்திரி, அதிமதுரம், கோட்டம், பேரீச்சம்பழம், சிறுதேக்கு, கடுகுரோகணி, நறுக்குமூலம், நன்னாரிவேர், சிற்றாமுட்டிவேர் வகைக்கு 2 வராகன் எடை; அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, இரண்டு பலம் கற்கண்டைப் பொடித்துத் தூவி வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள பழஞ்சுரம், என்புசுரம், வறட்சிஇருமல், கணைசுரம் மஞ்சள் (காமாலை), மாந்த சுரம், பாண்டு, உடல்எரிவு, வயிறெரிவு, பித்தம் ஆகிய நோய்கள் நீங்கும்.

கடுக்காய் நெய்.

200 கடுக்காய்விதையை நீக்கிப் பதக்கு தண்ணீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் கையாந்தகரை, கீழ்க்காய்நெல்லி, அவுரி, பொடுதலை, முருக்கு, குப்பைமேனி, சிறுசெருப்படை, சத்திச்சாரணை இவற்றின்சாறு, வெள்ளாட்டுநீர், பசுவின் நெய் வகைக்கு 1 படி கூடிவிட்டு, சிவதை, சங்கம்வேர், மூக்குரட்டைவேர், கீழ்க்காய்நெல்லிவேர், திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள சூலை பாண்டு, சோகை, உதரரோகங்கள் தீரும்.

Koviloor Digital Library

வில்வ நெய்.

வில்வவேர் 24 பலம் இடித்து 16 படி தண்ணீரில் போட்டு, எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் பசுவின் நெய் 1 படி, இலவங்கப்பட்டை, ஏலம், சந்தனம், திரிகடுகு, நற்சீரகம், இந்துப்பு, கற்கடகசிங்கி, பேரீச்சம்பழம், செங்கழுநீர்க்கிழங்கு, சிறுநாகப்பூ வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப்போட்டுப் பதத்தில் வடித்து வேளையொன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள விக்கல், கக்கல், வறட்சி தீரும்.

அவுரி நெய்.

அவுரிவேர் 6 பலம்; சங்கம்வேர், முருங்கைவேர் வகைக்கு 2 பலம், வேலிப்பருத்திவேர், சிவனார்வேம்பு, சிறு குறுஞ்சா, மிளகரணை, அழிஞ்சி, கருநொச்சி இவைகளின் வேர்கள் வகைக்கு 1 பலம் இவைகளை இடித்துப் பதினாறுபடி (2 மரக்கால்) தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் பசுவின் நெய் 1 படி, செங்கத்தரிப் பட்டை, கடுக்காய், கருஞ்சீரகம், ஓமம், அழிஞ்சிவிதை, கடுகுரோகணி, தேற்றான்பட்டை, கார்த்திகைக்கிழங்கு, மருட்கிழங்கு, கார்போகரிசி, கஸ்தூரிமஞ்சள் பொன்முசுட்டைவேர், கீழ்க்காய் நெல்லிவேர், எட்டிவிதை, கடம்பு விதை வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர சகல நஞ்சும், காணாக் கடி, ஈளை, இருமல், மரவட்டைக் கடி ஆகியவை, தீரும்.

அருகன்வேர் நெய் (கிருதம்)

அறுகன் வேர்ச்சாறு 4 படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம் 1 பலம், சீரகம், சாதிப்பத்திரி, விலாமிச்சம்வேர், சிற்றாமுட்டிவேர், வில்வவேர் வகைக்கு 3 வராகன் எடை; ஏலம், கிராம்பு, மிளகு, கோட்டம் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள உடம்பெரிவு, ஒழுக்கு நோய் (பிரமியம்), இரத்தம், பித்தம், நீர்க்கட்டு, விடாய் (தாகம்) ஆகியவை தீரும்.

சமுத்திராப் பழ நெய்.

சமுத்திரப் பழம், இஞ்சி, வெள்ளுள்ளி, வகைக்கு 10 பலம் இவற்றை இடித்துக் குறுணி நீரில் போட்டு நான்கில் 1 பாகமாய் வற்றவைத்துப் பிழிந்து வடித்து அதில் முருங்கைவேர், கொடிவேலி, ஓமம், இந்துப்பு, திரிகடுகு, காயம், செவ்வியம், நவாச்சாரம், கருஞ்சீரகம், நற்சீரகம், வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டு, பசுவின் நெய் 2 படி விட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர வயிற்றுப்புண் (குன்மம்), வயிற்றுநோய், நீர்க்கோவை, பீலிகை, கெண்டை, பெரு வயிறு ஆகிய நோய்கள் தீரும்.

கண்டங்கத்திரி நெய்.

கண்டங்கத்திரிச் சமூலம் 32 பலம், வில்வம், அமுக்கரா, ஆடாதோடை, சங்கு, சிறுவழுதலை இவற்றின் வேர்கள்; பேய்ப்புடல் வகைக்கு ஒரு பலம்

Koviloor Digital Library

இடித்து குறுணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்ததில் பசுவின் நெய், பெரும் பூசணிக்காய்சாறு வகைக்கு 1 படி, பசுவின் பால் 1 படி ஒன்றாய்க்கலந்து தாளிசப்பத்திரி, மிளகு, செவ்வியம், வகைக்கு 3 கழஞ்சு; ஏலம், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, திப்பிலி, விலாமிச்சு, சிறுநாகப்பூ, சடாமாஞ்சில், கறகடகசிங்கி வகைக்கு 1 கழஞ்சு; பசுவின் பாலில் ஆட்டிப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து, திப்பிலி, பேரீச்சம் பழம் வகைக்கு மூன்று கழஞ்சு வீதம் சாப்பிட்டு வர உளைமாந்தை, இரைப்பு (சுவாசகாசம்), ஈளை, இளைப்பு, சயம் ஆகியவை தீரும்.

தூதுவளை நெய்.

தூதுவளைச் சமூலம் 20 பலம், கரிமுள்ளிவேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு 10 பலம் இடித்து பதினாறுபடி தண்ணீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்தக் குடிநீரில் பசுவின் நெய், பால் வகைக்கு கால் படி விட்டுத் திரிபலை, திரிகடுகு, கோட்டம், தாளிசப்பத்திரி, கொடிவேலிவேர், நன்னாரிவேர், சிறுநாகப்பூ வகைக்கு ஒரு கழஞ்சு, சிறுகாஞ்சோரிவேர், ஆடாதோடை வேர், அதிமதுரம், நற்சீரகம், தேற்றான் விதை, சடாமாஞ்சில் செவ்வல்லிக்கொடி வகைக்குக் கால் பலம், முசுமுசுக்கைவேர், கண்டங்கத்தரி விதை வகைக்கு அரைப் பலம் அரைத்துப் போட்டு இஞ்சிச் சாறு 1 படி விட்டுக் காய்ச்சிப் பதமுடன் ஆழாக்கு தேன், சர்க்கரை ஒரு பலம் சேர்த்து, வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள ஈளை, இருமல், இரைப்பு (சுவாசகாசம்), இரத்த காசம் ஆகியவை தீரும்.

விஷ்ணுகரந்தை நெய்.

விஷ்ணுகரந்தை 8 பலம்; வில்வவேர், சிற்றாமுட்டிவேர் வகைக்கு 2 பலம், பற்பாடகம் 4 பலம் இடித்து 16 படி தண்ணீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் பசுவின் நெய், பால் வகைக்கு ஒரு படி, அதிமதுரம், சீரகம் வகைக்கு ஒரு பலம்; திப்பிலி, மிளகு, கிராம்பு சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி வகைக்கு 2 வராகன் எடை ஏலம் சிறுநாகப்பூ, சண்பகப்பூ, கோட்டம் சந்தனம், விலாமிச்சைவேர், ஒருலைத்தாமரை, நறுக்குமூலம், கடுகுரோகணி வகைக்கு வராகனெடை 12, கோரோசனை, பச்சைக்கற்பூசம் வகைக்கு அரை வராகன் எடை இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு வர உட்காய்ச்சல், வறட்சி, சுரம், இருமல், சோகை, மஞ்சள் நோய் (காமாலை), கை, கால் எரிவு, தாகம், வயிற்றெரிவு ஆகிய நோய்கள் தீரும்.

சதாவேரி நெய்.

சதாவேரி கிழங்குச்சாறு 12 படி; குழிமீட்டான் கிழங்குச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பெரும்பூசணிக்காய்ச் சாறு, கரும்புச் சாறு, கரும்புச் சாறு வகைக்கு ஒரு படி, பசுவின் நெய் 4 படி ஒன்றாய்க் கலந்து திரிகடுகு, திரிபலை, வெட்பாலையரிசி, கொத்தமல்லி, ஏலம், இலவங்கப்பத்திரி,

Koviloor Digital Library

சிறுநாகப்பூ, சீரகம், விலாமிச்சம்வேர், அதிமதுரம், கூகைநீர், முந்திரிகைப்(திராட்சை) பழம், பேரீச்சம்பழம், இந்துப்பு, ஓமம், கோரைக்கிழங்கு, சிறுதேக்கு, கோட்டம், சந்தனம் வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர மூத்திரபபாளை, நீர்க்கடுப்பு, குத்து, எலும்புருக்கி, மேகசுரம், கை கால் எரிவு ஆகியவை நீங்கும். உடல்வளமை, தாது விருத்தி ஆகியவை உண்டாகும்.

கதலிகெந்தக நெய்.

கதலிக்கிழங்கு, கதலிப் பூ வகைக்கு அரைத் துலாம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு நான்கில் ஒன்றாய் வற்றவைத்துப் பசுவின் நெய், பால் வகைக்கு 1 படி, கரும்புச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து ஏலம், இலவங்கம், சந்தனம், சடாமாஞ்சில், திரிபலை, ஆலம்விழுது, செங்கழுநீர்க்கிழங்கு, நெய்தற்கிழங்கு வகைக்கு 3 கழஞ்சு ஆகியவற்றை அரைத்து நாலுநாட் சிறுதீயாயெரித்து 5—நாள் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள எலும்புருக்கி, மேகவெட்டை, பெரும்பாடு, நீரிழிவு ஆகியவை தீரும்.

தாய்ப்பால் நெய்.

தாய்ப்பால் 2 படி, பசுவின் நெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் கொடுப்பைவேர், வெள்ளரிவித்து, பூசணிவித்து, நெல்லிமுள்ளி, அதிமதுரம் வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு, ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள உட்காந்தல், மெலிவு, எலும்புருக்கி, கணம், வறட்சி, பிரமேகம், வெட்டை ஆகியவை தீரும்.

கடுக்காய் நெய்.

100 கடுக்காய், கீழ்க்காய் நெல்லி 20 பலம் இவற்றை இடித்துத் தூணி நீரில் போட்டுக் காய்ச்சி இரண்டு படியாய் வற்ற வைத்து வடித்து பசுவின் நெய் ஒரு படி, பால் படிக சண்பகப்பூ, ஏலம், சிவதை சுக்கு மஞ்சள் சீரகம் கடுகுரோகணி, கடுக்காய், திப்பிலி வகைக்கு அரைப் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு இரண்டு கழஞ்சு வீதம் சாப்பிட்டுவர உடம்புவீக்கம், பித்தசோகை, உடம்பெரிவு செரியாமை, (அக்கினி மந்தம்), மலக்கட்டு, இளைப்பு, பித்தம் ஆகியவை நீங்கும்.

சுக்கு நெய் (கிருதம்)

1. சுக்கு 24 பலம் இடித்துத் தூணி நீரில்போட்டு, நான்கில் ஒன்றாய் வற்றவைத்து உடன், பசுவின் நெய் 2 படி, வெள்ளாட்டு நீர் 1 படி ஒன்றாய்க்கலந்து அதிவிடையம், காட்டாத்திப்பூ, பெருங்குரும்பை, கொடிவேலி, பெருங்காயம், முத்தக்காசு, திரிகடுகு, திரிபலை, சிறுதேக்கு, திப்பிலிமூலம், விளாம்பிசின், ஆடு தீண்டாப்பாளை, இந்துப்பு, சீரகம், மஞ்சள், ஓமம், செவ்வியம் வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து வேளைஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர வயிற்றுப்புண் (குன்மம்), தொடர்க்கழிச்சல், (கிராணி), கடுப்பு, பெருங்கழிச்சல், மூலக்கடுப்பு ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

பிரமி நெய்

பிரமிச்சாறு 4 படி, பசுவின் நெய் 3 படி பசும் பால் படி இவற்றை ஒன்றாய்க் கலந்து சிவதை, சுக்கு, திப்பிலி, நெல்லிவற்றல், இந்துப்பு, விளாவரிசி, கற்கண்டு, வசம்பு, கஸ்தூரிமஞ்சள் வகைக்கு 3 கழஞ்சு அரைத்துப் போட்டு மூன்று நாள் வரை சிறுகொதிப்பிட்டு நான்காம் நாள் காய்ச்சி வடித்து கைப்பு, புளிப்பு நீக்கி வேளை நன்றுக்கு 1 கரண்டிவீதம் உட்கொன்ற வாயு, அக்கினி மந்தம் ஒரு நீங்கும்; பசி உண்டாகும்; கபம் அறும்; உடல் பொன் நிறமாகி அறிவு வளர்ச்சியாகும்.

நெய் வகைமுற்றிற்று

மணப்பாகுப் படலம்.

அஃதாவது, பற்பலவகை பழவகைகள், பூச்சாறு சத்துகள், சர்க்கரைப்பாகு, கற்கண்டு இவைகளைச் சேர்த்து மெழுகு பதமாய்க் காய்ச்சி அருந்தினாலும்; வேர் வகைகளால் செய்யப்பட்டாலும், அதற்குச் சித்த மருத்துவர்கள் மணப்பாகுப் படலமெனப் பெயர் வழங்கலாயினர்.

குறிப்பு: இந்த மணப்பாகுகளை மூன்று திங்கள்வரை பயன்படுத்தலாம்.

நன்னாரி மணப்பாகு (சர்பத்து)

37 ½ ரூபாய் எடை நன்னாரி வேரை இடித்து ஒன்றரைப் படி வெந்நீரில் ஆறுமணி நேரம்வரை ஊறவைத்து வடிகட்டி முக்கால் படியாய் வற்றவைத்து வடிகட்ட 37 ½ ரூபாய் எடை சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி ஒரு துளியை விரலால் அழுத்திப்பார்க்கில் பிசின் போலிருந்தால் அந்தப் பதத்தில் குப்பியில் அடைத்துக்கொண்டு 2 ரூபாய் எடை மணப்பாகில் 4 ரூபாய் எடை தண்ணீர் கலந்து சாப்பிட்டுவர மேககாங்கை, பிரமேகம், நீர்ச்சுருக்கு, நீர்க்கட்டு, நீர்ப்பணைப்பு, மேகநீர்காந்தல், கண்ணெரிவு, நாவறட்சி, தாகம், தீரும்; உடல் குளிரும்; மருந்தீடு நீங்கும்.

சந்தன மணப்பாகு.

இரண்டு பலம் முற்றின சந்தனத் தூளைப் பத்து பலத்தண்ணீரில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் காய்ச்சி 4 பலம் நீர்வற்றின பின் வடிகட்டி அதற்கு ஒன்றரைப் பங்கு கற்கண்டையும், 2 பலம் பனிநீரையும் சேர்த்துக் காய்ச்சி மேற்சொல்லிய பதத்தில் இறக்கிக் குப்பியில் அடைத்துக்கொண்டு இரண்டு ரூபாய் எடை வீதம் தண்ணீரில் கலக்கிச் சாப்பிட்டு வர மூலச்சூடு, ஒழுக்குநோய் ஆகியவை தீரும்.

ரோஜாப்பூ, தாமரைப்பூ, வல்லாரை மணப்பாகு.

பதினெட்டு ரூபாய் எடை காய்ந்த ரோஜாப்பூவை 5,8 படி வெந்நீரில் 12 மணி நேரம் வரையில் ஊறவைத்து வடிகட்டி 3,8 படியாய் வற்றவைத்து

Koviloor Digital Library

அரைப் பலம் பனிநீரும் 180 ரூபாய் எடை சர்க்கரையும் கலந்து காய்ச்சி மேல்சொல்லியபடி பதம் அறிந்து பளிங்குக் குப்பியில் அடைத்துக்கொண்டு ஒரு ரூபாய் எடை அளவு எடுத்து இரண்டு ரூபாய் எடை தண்ணீரில் கலந்து சாப்பிட்டு வர நீர்க்கட்டு, மலக்கட்டு, நீர்ப்பிணைப்பு, காங்கை, எருவாய்ச்சூடு தீர்ந்து உடம்புகுளிரும். இதுபோல் உலர்ந்த தாமரைப்பூவையாவது, உலர்ந்த வல்லாரையையாவது மணப்பாகுசெய்து சாப்பிட்டு வந்தால் மேக காங்கை தீரும்.

கொடிமுந்திரிகைப்பழ மணப்பாகு.

கொடிமுந்திரிகைப் பழத்தைச் சாறு பிழிந்து வடித்துக் கொண்டு அதற்குச் சமமாய்ச் சர்க்கரையாவது கற்கண்டையாவது சேர்த்து 2½ பலம் பனிநீர் விட்டுக் காய்ச்சி மேற்சொல்லிய பாகுபதத்தில் இறக்கி, பளிங்குக் குப்பியில் அடைத்துக்கொண்டு மூன்று ரூபாய் எடை மணப்பாகில் ஆறு ரூபாய் எடை தண்ணீர் கலந்து சாப்பிட்டுவர பித்தசூடு, கை, கால் எரிவு ஆகிய நோய்கள் தீரும்.

எலுமிச்சம் பழ மணப்பாகு

தேறின எலுமிச்சம் பழரசத்தினெடைக்கு இரண்டு பங்கு அல்லது இரண்டரை பங்கு சீனியாவது கற்கண்டாவது கலந்து காய்ச்சி பாகுபதத்தில் சீனவிலடைத்துக் கொண்டு முன் எடைப்படி சாப்பிட்டு வந்தால் பித்தம் தீரும்.

நாரத்தம் மணப்பாகு.

நாரத்தம்பழச் சாற்றின எடையளவு இரு பங்கு சர்க்கரை கலந்து காய்ச்சிப் பாகுபதத்தில் பளிங்குக் குப்பியில் அடைத்துக் கொண்டு சாப்பிட்டு வந்தால் பித்தம் தணிக்கும்.

கொம்மட்டி மாதுளம் பழம் மணப்பாகு.

கொம்மட்டிமாதுளையை மேல்தோல் நீக்கி இடித்துச்சாறு பிழிந்து அந்த நிறைக்கு 7/8 அளவு சர்க்கரை அல்லது கற்கண்டாவது கலந்து காய்ச்சிப் பாகு பதத்தில் பளிங்குக் குப்பியில் அடைத்துக் கொண்டு ஒரு ரூபாய் எடையில், இரண்டு ரூபாய் எடை தண்ணீர் கலந்து சாப்பிட்டுவர, பித்தத்தையும், பித்தச்சூட்டையும் நீக்கும்.

மாதுளைப்பழம் மணப்பாகு.

மாதுளம்பழச்சாற்றின் எடைக்கு ஒன்றரைப் பங்கு சர்க்கரை கலந்து முன்போல் காய்ச்சிப்பாகுசெய்து பளிங்குக் குப்பியில் அடைத்துக்கொண்டு சாப்பிட்டுவர பித்த நோய் தீரும்.

இஞ்சி மணப்பாகு.

6 ¼ ரூபாய் எடை இஞ்சியைத் துண்டுத் துண்டாய் நறுக்கி 3/16 படி வெந்நீரில் நான்கு மணி நேரம் ஊறவைத்து வடிகட்டி 75 ரூபாய் எடை

Koviloor Digital Library

சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து குப்பியில் அடைத்துக் கொண்டு சாப்பிடவும்.

காடி மணப்பாகு.

ஒரு குப்பி காடியைப் பீங்கானில் விட்டு 64 ரூபாய் எடை சர்க்கரையைப் போட்டுக் காய்ச்சிப் பாகுபதத்தில் பளிங்குக் குப்பியில் அடைத்துக்கொண்டு சாப்பிடவும்.

குறிப்பு:- மேற்படி மணப்பாகுகள் நாள்பட இருந்தால் புளித்து, குணத்தில் வேறு பட்டுப்போகும். ஆதலால், தேவையானால் அப்போதைக்கப்போது செய்து உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

மணப்பாகுப் படலம் முற்றும்.

எண்ணெய்ப் படலம்.
(இவை குடித்தைல வகையாம்)

செங்கத்தாரி எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, செங்கத்தரிவேர்ப் பட்டை, பூதகரப்பான்பட்டை, வேம்பாடம்பட்டை, பெருமரத்துப்பட்டை, கண்டங்கத்திரிவேர், நன்னாரிவேர், கழற்சிவேர், கிரந்திநாயகம், வேலிப்பருத்திவேர், கடுக்காய், சுக்கு, திப்பிலி, வகைக்கு 2 கழஞ்சு அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு காசு எடை வீதம் கரப்பான் உணவுப் பொருள்களை நீக்கிச் சாப்பிட்டுவர தொண்டைப்புற்று, நாவுப்புற்று, வாய்ப்புற்று, நாக்குவெடிப்பு, உதடுவெடிப்பு, நாக்குக்கொப்பளம், பல்லெறிவு, ஈறில் சீழ்வடிதல், வாய்நாற்றம், வாய்க் கிரந்தி ஆகிய நோய்கள் தீரும்.

கொம்மட்டிக்காய் எண்ணெய்.

கொம்மட்டிக்காய்ச்சாறு, பசுவின் பால் வகைக்கு 4 படி, தேங்காய்ப் பால் 1 படி, சிற்றாமணக்கெண்ணெய் 3 படி, ஈருள்ளிச் சாறு 3 படி, கடுகு, வெள்ளுள்ளி, பஞ்சலவணம், கடுக்காய் கடுகுரோகணி, அதிமதூரம், திரிகடுகு, ஓமம், வாய்விளங்கம், சீரகம், அரத்தை, கோட்டம், சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை வகைக்கு 3 கழஞ்சு அரைத்தப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டுவர வாதநீர், சீதக்கட்டு, இடப்பாட்டீரல் நோய், (பீலிகை), நுண்புழு நோய், நீர்க்கோவை, வயிற்று நோய், பெருவயிறு, வெட்டை, வாயு ஆகிய நோய்கள் தீரும்.

உள்ளி ஆமணக்கு எண்ணெய்.

வெள்ளுள்ளி 100 பலம்; சிற்றாமுட்டி, பேராமுட்டி, சிறுவழுதலை, தூதுவளை, கண்டங்கத்திரி, புங்கு, ஆயிலியம், நொச்சி, மாவிலிங்கு, பேராமணக்கு, முருங்கை இவற்றின் வேர்ப்பட்டை வகைக்கு ஐந்து பலம் இடித்து எட்டு மரக்கால் நீரில் போட்டுக் குறுணியாய் வற்றவைத்து வடித்து

Koviloor Digital Library

அதில் சிற்றாமணக்கு எண்ணெய் 4 படி கூடவிட்டுக் கலக்கி வசம்பு, செவ்வியம், சிவதை, சீரகம், கடுக்காய், இந்துப்பு, திரிகடுகு, ஓமம், கொடிவேலிவேர், பங்கம்பாளைவேர் வகைக்கு 4 கழஞ்சு; வெள்ளாட்டுப் பாலால் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் சாப்பிட வாதகாசம், விக்கல், நச்சுக்கடி, குடல்வாதம், இடப்பாட்டீரல் நோய் (பீலிகை), கொப்பவிப்புருதி, பெருவயிறு, பவுத்திரம், கல்லடைப்பு, அல்குல்சூலை, வாயு ஆகியவை தீரும்.

முடக்கொத்தான் எண்ணெய்.

முடக்கொத்தான்சாறு, கள்ளியை வாட்டிப் பிழிந்த சாறு வகைக்கு முக்கால் படி; 1½ படி சிற்றாமணக்கெண்ணெயில் சிவதை வேர், கொடிவேலிவேர், வெள்ளைக் காக்கணான்வேர், சிற்றரத்தை, சதகுப்பை, தேவதாரம், இந்துப்பு, திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, கழற்சிப்பருப்பு வகைக்கு 1 பலம், தூய்மைசெய்த நேர்வாளம் 20 பலம், வெள்ளுள்ளி 4 பலம் இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, கடும் பத்தியமாய் ஒரு கரண்டிவீதம் சாப்பிட அண்டவாதம், குடல்வாதம், வாயு ஆகிய வாதங்கள் தீரும்.

கொடிவேலி எண்ணெய்.

நல்லெண்ணெய் கால் படி, கொடிவேலிவேர்பட்டை அரைப்பலம், பனைவெல்லம் கால் பலம் இவற்றை அரைத்துப்போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சிக் கடுகுடன் வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் பத்தியமாய் மூன்று நாள்களுக்கு, ஆறு வேளை சாப்பிட்டு நான்காவது நாள் தலை முழுகி உப்பை வறுத்துக்கூட்ட அரையாப்பு தீரும்.

மேக ராசாங்க எண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய் 4 படி, ஈருள்ளி, கழுதைலத்தி, வரிக்கொம்மட்டி, கையாந்தகரை, புளியாரை, சங்கு, வல்லாரை, பொடுதலை, பிரமி செருப்படை, கருநொச்சி, பொன்னாங்காணி, நுணா, ஆடாதோடை, கிரந்திநாயகம், வெள்ளறுகு, சிவனார்வேம்புச்சாறு வகைக்கு 2 படி ஒன்றாய்க் கலந்து கொடிவேலி, பூவரசு, நிலவாகைவேர், சுடுதுரத்திவேர், கிளிமூக்குக்கிழங்கு என்னும் கருடன் கிழங்கு, அப்பைக்கிழங்கு, சங்கங்குப்பிவேர் வகைக்கு 1 பலம் இடித்துக் குறுணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீரையும் கூட்டி, சாதிக்காய், கிராம்பு, ஏலம், சன்னலவங்கப்பட்டை, வால்மிளகு, அதிமதுரம், கோட்டம், திப்பிலிமூலம், வெண்காரம், குரோசானிஓமம், தான்றிக்காய், கடுக்காய் கருஞ்சீரகம், கார்போகரிசி, கஸ்தூரிமஞ்சள், அரத்தை, சுக்கு, அதிவிடையம், அக்கரகாரம், கடுகுரோகணி, சடாமாஞ்சில், தாளிசப்பத்திரி, கசகசா, கஞ்சா, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை, அழிஞ்சில்பட்டை, வாலுளுவையரிசி, சிறுநாகப்பூ, தக்கோலம், வசம்பு, அபின், வசுவாசி, சீரகம், ஆனைத்திப்பிலி, குங்குமப்பூ, சாத்திரபேதி, வாளம், சேங்கொட்டை, சத்திச்சாரம், எவாச்சாரம், நவாச்சாரம் வகைக்கு 4 வராகன் எடை பொடித்துப் போட்டுக் காய்ச்சி,

Koviloor Digital Library

மெழுகு பதத்தில் வடித்து வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் கடும்பத்தியமாய் மூன்று நாள், ஆறு வேளை உண்ண கிரந்தி, அரையாப்பு, சூலை, விப்புருதி, கண்டமாலை, மேகம், 21 காங்கை, சோகை, பாண்டு, கழல்வாதம், அண்டவாதம், கீல்வாதம், பக்கவாதம், பவுத்திரம், முலைப்புற்று, மண்டைச்சூலை, வாயு இரணம், சூலை ஆகிய நோய்கள் தீரும். ஓட்டில் வறுத்த துவரம்பருப்பு கூட்டவும்.

ஐந்தெண்ணெய்த் தைலம்.

எள்ளு, ஏரண்டம், இலுப்பை, வேம்பு, புங்கு இவற்றின் எண்ணெய் வகைக்கு 1 படி; ஆடாதோடைவேர், அதன் இலை, தழுதாழை, காட்டாமணக்கு, திருகுக்கள்ளி, வேளை, மேனி, மாவிலிங்கு, கருநொச்சி, வெண்நொச்சி, வேம்பு, புங்கு கொடிவேலி, முருங்கை, சங்கு, காட்டுமுருங்கை, தூதுவளை இவற்றின் வேர், மாம்பட்டை வகைக்கு 5 பலம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரையும் ஒன்றாய்க் கலந்து அரத்தை, சுக்கு, ஓமம், திப்பிலி, திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, கருஞ்சீரகம், சதகுப்பை, தேசாவரம், குரோசானி, வெள்ளைப்பூண்டு, வெளிச்சிப்பிசின், வசம்பு, சிறுதேக்கு, இஞ்சி, சடாமாஞ்சில், கிராம்பு, குக்கில் வகைக்குக் கால் பலம் இடித்துப் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து மூன்று நாள் உப்பு, புளி நீக்கி பத்தியம் வைத்து ஒரு காசு எடை வீதம் உள்ளுக்குக் கொடுத்து உடம்பெங்கும் பூசினால் சன்னிதோடம், வலிப்பு, அண்டவாதம் ஆகியவை தீரும். நான்காம் நாள் தண்ணீர் ஊற்றி உப்புக் கூட்டவும்.

சுத்தவல்லாதி எண்ணெய்.

சிற்றாமுட்டிவேர் 32 பலம் இடித்து இரண்டு தூணி நீரில் போட்டு, நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து, அதில் பசுவின்பால், எலுமிச்சம்பழச்சாறு வகைக்கு ஒரு படி; ஐந்தெண்ணெய், கெந்தி, அதிமதுரம், கோட்டம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், இலவங்கப்பட்டை, அரத்தை, சுக்கு, அக்கரகாரம், சடாமாஞ்சில், தாளிசப்பத்திரி, வாய்விளங்கம், ஆனைத்திப்பிலி, கடுகுரோகணி, வால்மிளகு, ஓமம், குங்குமப்பூ, கருஞ்சீரகம், கடுக்காய், தான்றிக்காய், சண்பகப்பூ, கொத்தமல்லி, வாலுளுவையரிசி, சிறுநாகப்பூ, செவ்வியம் வகைக்கு 4 கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்துப் புனுகு, கஸ்தூரி வகைக்கு 1 கழஞ்சு போட்டு மூன்று நாள்கள் ஆறு வேளை ஒரு காசு எடை வீதம் உள்ளுக்குக் கொடுத்து, ஒரு துளி மூக்கில் விட்டு, உடம்பில் பூசி வர முகவாதம், அண்டவாதம், பித்தம், நீலகாசம், பீனிசம், வாயு, சூலை, சொரி ஆகிய நோய்கள் தீரும்.

மருத்துணவு:— பாசிப் பயறும், உப்பும் கூட்டி வந்து நான்காம் நாள் சீயக்காய் தேய்த்து வெந்நீரில் குளியல் செய்யவும்.

முடக்கொத்தான் எண்ணெய்.

முடக்கொத்தான் சமூலம் 30; சிற்றாமுட்டிவேர் 15 பலம்; சிற்றாமணக்கின்வேர் 7 ½ பலம்; முள்ளிவேர் இலவம் பட்டை,

Koviloor Digital Library

முருங்கப்பட்டை, செவ்வியம், சிவதைவேர், வீழிக்கிழங்கு, வெள்ளைச்சாரணைவேர், கழற்சிப்பருப்பு, கொள்ளுப்பருப்பு, முதியார்கூந்தல், செம்முள்ளிவேர், கொடிவேலிவேர், தேவதாரம், நெருஞ்சிவேர், தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்கு 3 பலம் இடித்து, இரண்டு தூணி நீரில் போட்டு, எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் கொடிக் கள்ளிப்பால், சதுரக் கள்ளிப்பால் வகைக்கு கால் படி; பசுவின் பால், ஏரண்டத்தெண்ணெய், தாமரைக்கிழங்குச் சாறு, பேய்க்கொம்மட்டிக்காய்ச் சாறு வகைக்கு 4 படி ஒன்றாய்விட்டுத் திரிகடுகு, சித்திரமூலம், சாதிக்காய், செவ்வியம், ஏலம், பெருங்காயம், வசம்பு, ஓமம், மல்லி, சதகுப்பை, இந்துப்பு, பொட்டிலுப்பு, அமுக்கறாவேர், அதிமதுரம், இலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், வாலுளுவையரிசி, சிவதை, வெட்பாலைவேர், சிற்றரத்தை, சந்தனம், நன்னாரிவேர், அகில், கண்டந்திப்பிலி, வகைக்கு 3 கழஞ்சு, அரைத்துப்போட்டு ஐந்து நாள் பரிதியில் ஊற வைத்துக் காய்ச்சி வடித்து நோயின் பலம், நோயாளியின் உடல் பலம் அறிந்து ஒரு கழஞ்சு முதல் இரண்டு கழஞ்சு வரை கொடுக்க நீர்க்கட்டு, மலக்கட்டு, மகோதரம், குட்டம், குன்மம், நச்சுபாக வீக்கம், கவுசி, கெண்டை, வெப்புப்பாவை, அகவை, நீராம்பல்,பெருவயிறு, விப்புருதி, பாண்டு, இளைப்பு, உதிரக்கட்டால் நேரிடும் எல்லா நோய்களும் தீரும்.

பத்தியத்திற்குக் கொள்ளு, மிளகு நீர், கோழியும் சேர்த்துக் கொள்ளலாம்.

விப்புருதி எண்ணெய்.

1. விளக்கெண்ணெய் 1 படி; நிலவாகை, பிரம்மி, பொடுதலை, கோழியவரை, சின்னி, அவுரி, வெள்ளெறுகு, மலைவேம்பு, சங்கங்குப்பி, கழற்சி, காட்டாமணக்கு இவற்றின் சாறு வகைக்கு ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து அதில் திப்பிலி, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கடுகுரோகணி, வசம்பு, நீரடிமுத்து, நேர்வாளம், காட்டுச்சீரகம், வகைக்கு 5 வராகன் எடை; வெள்ளுள்ளி, கடுக்காய் வகைக்கு 1 பலம் இடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து, எட்டு நாள் காலையில் ஒரு கரண்டி வீதம் உட்கொள்ளக் கழிச்சலாகும். நான்கு அல்லது ஆறு முறை கழிச்சலான பின் பத்தியம் கொள்ள உடலில் பலவிதமாய்க் கட்டுகிற விப்புருதிக்கட்டியும், அதிலுண்டாகும் புண்ணும், அரையாப்பும், பவுத்திரமும் தீரும்.

பத்தியம்:– உப்பு, புளி நீக்கவும்.

2. வேப்பெண்ணெயாவது, விளக்கெண்ணெயாவது அரைப்படி; ஆடுதீண்டாப்பாளை, சங்கங்குப்பி, காட்டாமணக்கு, சின்னி, அவுரி, வெள்ளறுகு, வேலம்பட்டை இவைகளின் சாறு; புங்கம்பால், ஆலம்பால் வகைக்கு ஆழாக்கு ஒன்றாய்க் கலந்து துத்தம், சாதிலிங்கம், மிருதாரிசிங்கி, கெந்தகம், சீனக்காரம், கருஞ்சீரகம் வகைக்கு 3 வராகன்எடை; கார்க்கோலரிசி, வெள்ளைக்குங்கிலியம் வகைக்கு 5 வராகன் எடை; பொடித்துப் போட்டுக் காய்ச்சி வடித்து மேற்படி எண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து இந்த எண்ணெயை மேலே போட விப்புருதிப் புண்ணும், புரை விழுந்த புண்ணும், தூலை, அரையாப்பு, பவுத்திரப் புண்களும் மற்ற ஆறாட் புண்களும் ஆறும்.

Koviloor Digital Library

நீரடைப்புக்கு எண்ணெய்.

விளக்கெண்ணெய் கால் படியில் ஈருள்ளி 1 பலம் சிதைத்துப் போட்டு, பொன் நிறமாய்க் காய்ச்சி வடித்துப் பொரித்த வெண்காரம், கடுகுத்தூள் வகைக்கு ஒரு கழஞ்சு போட்டுக் கலக்கிக் கொடுக்கத் தீய தசை வளர்ச்சி, நீரடைப்பு, கல்லடைப்பு ஆகியவை தீரும்.

சாதிக்காய் எண்ணெய்.

நல்லெண்ணெய் 1 படி; தாய்ப்பால் ஆழாக்கு; பசுவின் பால் கால் படி இவற்றை ஒன்றாய்க் கலந்து, சாதிக்காய் 2 பலம், சாதிப்பத்திரி, வெந்தயம் வகைக்கு 1 பலம் குமரிச்சாற்றால் ஆட்டிப்போட்டுக் காய்ச்சி வடித்துத் தண்ணீரிலாவது, வெந்நீரிலாவது, தாய்ப்பாலிலாவது ஒன்று அல்லது இரண்டு துளி விட்டுக்கொடுக்க கணதோடம் இரத்தவாந்தி, இரத்தகாசம், கக்கல், இருமல், கக்குவான், நிணக்கழிச்சல், குருதிக்கழிச்சல் ஆகியவை தீரும்.

இலவங்காதி எண்ணெய்.

இலவங்கம், கற்கண்டு வகைக்கு 2 பலம், சாதிக்காய், சாதிப்பத்திரி வகைக்குக் கால் பலம். இவைகளைப் பொடித்து ஒரு படி எண்ணெயில் போட்டு முயல் இரத்தம் கால் பலம் கூடவிட்டுக் காய்ச்சி வடித்து அதில் குங்குமப்பூ, கோரோசனை வகைக்கு ஒரு துளி அல்லது இரண்டு துளி வெந்நீரிலாவது, தாய்ப்பாலிலாவது கொடுக்கச் சயகாசம், ஈளை, இருமல், உப்புசம் ஆகியவை தீரும்.

சந்தன எண்ணெய்.

சந்தனத்தூள் 8 பலம், நல்லெண்ணெய் 10 பலம் இவைகளைப் பதக்கு நீரில் கலந்து நீர் வற்றக் காய்ச்சி வடித்து குப்பியில் அடைத்துக்கொண்டு பஞ்சில் தோய்த்துக் கையில் வைத்திருக்க உடம்பில் வாடை ஏறிச் சுகத்தைத் தரும். சொரி, சிரங்கு, கரப்பான் புண்ணில் தடவ மாறும்.

மதனகாமேசுரப் பூ எண்ணெய்.

இரண்டு சேர் மதனகாமேசுரப் பூவை மலருமுன் பதக்கு நீரில் போட்டு வைத்திருந்து மலர்ந்த பின்பு நான்கு பலம் நல்லெண்ணெய் விட்டு வேகவைத்து இறக்கி எண்ணெயைத் துண்டு துண்டாய்ப் பிரித்துக் குப்பியில் அடைத்துக்கொண்டு உடம்பில் பூசிக்கொள்ளச் சுகம் நல்கும். வசியமாகும்.

எண்ணெய்ப் படலம் முற்றும்.

வடகப் படலம்

தாளிசப்பத்திரி வடகம்

1. தூதுவளைவேர், கண்டங்கத்திரி வேர் வகைக்கு ஒன்றரை பலம்; திரிகடுகு, கடுக்காய் வகைக்கு ஒரு பலம்; தாளிசப்பத்திரி 2 பலம்;

Koviloor Digital Library

நெல்லிமுள்ளி, தான்றிக்காய், திப்பிலி மூலம் வகைக்கு முக்கால் பலம்; நற்சீரகம், ஓமம், வாய்விளங்கம், கூகைநீர், சதகுப்பை வகைக்கு அரைபலம்; ஏலம் கோட்டம், சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், கிராம்பு, சிறுநாகப்பூ, அதிமதுரம், வெட்பாலையரிசி, இலவங்கப்பத்திரி வகைக்கு கால்பலம்; சாதிப்பத்திரி, சுக்கு வகைக்கு அரைக்கால் பலம். இவைகளை இடித்துத் தூள்செய்து ஒரு பானையில் இரண்டுபடி பசுவின் பாலும் அரைப்படி பாசிப்பயிறும் போட்டு வாயில் வேடு கட்டித் தூளை வைத்துச் சட்டியால் மூடிப் பிட்டவித்து இறக்கிப் பதினாறு பலம் சர்க்கரையைக் கலந்து, பிசைந்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு வெந்நீரில் உட்கொள்ள நீரடைப்பு, கல்லடைப்பு ஏப்பம், வாயு, சூசிகாவாயு சூலை, காந்தல், வறட்சி தீரும்.

2. தாளிசப்பத்திரி 16 வராகன் எடை, சாதிக்காய் ஒரு வராகன் எடை, ஏலம், அதிமதுரம், அக்கரகாரம், கோட்டம், திப்பிலி, சன்னலவங்கம் வகைக்கு 4 வராகன் எடை. சுக்கு ஓமம். மிளகு சீரகம் இலவங்கம் வகைக்கு 2 வராககன எடை இவைகளைத் தூள்செய்து ஒரு பாண்டத்தில் குறுணிப் பால் விட்டு வாயில் வேடுகட்டி, தோல் நீக்கின நான்கு பலம் வெள்ளைப் பூண்டில் பாதியைச்சிதைத்து வேட்டின் மேல் பரப்பித் தூள்செய்து வைத்து, அதன் மேல் மற்ற பாதிப் பூண்டை வைத்து மூடி, பிட்டவித்து இறக்கி 3 அல்லது 2 பலம் சர்க்கரையைச் சேர்த்து மெழுகு போல் அரைத்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர இரத்தம் விழுதல், இருமல், இளைப்பு, சுவையின்மை, வாதம், நீரூறல், காங்கை, மெய்மயக்கம், வாயுமந்தம், புளித்தஏப்பம் ஆகிய நோய்கள் தீரும்.

நெல்லி வடகம்.

பதக்கு நெல்லிவற்றலை எலுமிச்சம்பழச் சாற்றில் ஊறவைத்து உலர்த்தி அதற்குச் சமமாகச் சர்க்கரையைப் பாலில் கரைத்துப் பாகுசெய்து, இந்துப்பு, கொடிவேலிவேர், சதுர்சாதம், அதிமதுரம், சீரகம் வகைக்கு அரைப் பலம்; சுக்கு, மிளகு வகைக்கு ஒரு பலம்; முந்திரிகைப் (திராட்சை) பழம், திப்பிலி, சிவதை வகைக்கு 4 பலம் இடித்துத் தூள்செய்து கிண்டி நெய் 4 பலம்; தேன் 8 பலம் கூடவிட்டுப் பிசைந்துவைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர பாண்டு, மஞ்சள் நோய் (காமாலை), பித்தம் (அழல்), இருமல், ஈளை, சோகை, தாகம், தலைவலி, சுவையின்மை (அரோசியம்) ஆகிய நோய்கள் நீங்கும்.

கெந்தக வடகம்.

கெந்தகம், திரிகடுகு, சதுர்ச்சாதம், வாய்விளங்கம், திரிபலை, சிறுநாகப்பூ வகைக்கு 5 பலம்; குக்கில் 2 ½ பலம்; சித்திரமூலப்பட்டை ஒன்றேகால் பலம். இவைகளைச் சேர்த்து அரைத்துத் தான்றிக் காய் அளவு உருண்டைசெய்து உட்கொள்ள மேகநோய் தீரும்.

இலவங்காதி வடகம்.

இலவங்கம், சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர், திரிகடுகு வகைக்கு 100 வாரகன் எடை, இவைகளைப் பொடித்து முன்போல் பிட்டவித்து 120 வராகன்

Koviloor Digital Library

எடை வெல்லம் சேர்த்துப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு உருண்டை செய்து சாப்பிட்டுவர நீரடைப்பு, கல்லடைப்பு, ஏப்பம், வாயு, சூதக வாயு, சூலை, காந்தல், வறட்சி, ஆகிய நோய்கள் தீரும்.

காந்தரச வடகம்.

1. காந்தம், அரப்பொடி, இரசம், கந்தகம், பெருங்காயம், இலிங்கம் இவற்றை ஓர் எடையாய்க் கற்றாழைச் சாற்றால் மூன்று நாள் அரைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு தேனில், திரிகடுகுப் பொடியோடு வேளை ஒன்றுக்கு ஒரு பண எடை வீதம் 1 மண்டலம் (48 நாள்) உட்கொள்ள வாயு, சன்னி, வயிற்றுப்புண், குன்மம், பாண்டு, சோகை, வீக்கம் ஆகிய நோய்கள் தீரும்.

மண்டூரச்செந்தூரம், லோகச்செந்தூரம், வெள்ளுள்ளி, செவ்வியம், சித்திரமூலம், சீரகம், கருஞ்சீரகம், திப்பிலி, ஆனைத்திப்பிலி, இந்துப்பு, கோரைக்கிழங்கு, திரிகடுகு, முத்தக்காசு, சதகுப்பை, நறுக்கு மூலம், ஏலம் இவைகளை இடித்துப் பொடிசெய்து குப்பைமேனி, சங்கு, நொச்சி, கையாந்தகரை, கீழ்க்காய் நெல்லி, பூவரசு, தழுதாழை இவைகளின் சாற்றால் வகைக்கு ஒரு நாள் ஆட்டி, நெல்லிக்காய் அளவு உருண்டை செய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் உட்கொள்ளக் காசம், வாயு, விக்கல், குன்மம், வாந்தி, பாண்டு, சோகை, மஞ்சள் நோய் ஆகிய நோய்கள் தீரும்.

2. திரிகடுகு, சடாமாஞ்சில், திரிபலை, சாதிக்காய், கருஞ்சீரகம், நற்சீரகம், இலந்தை வேர், மரமஞ்சள், இந்துப்பு, வாய்விளங்கம், இலவங்கம், ஓமம், மஞ்சள், சாதிப்பத்திரி, திப்பிலிச்சமூலம், செவ்வியம், முத்தக்காசு, அரத்தை, பொன்முசுட்டைவேர் இவைகளை ஓர் எடையாய்ப் பொடித்து அதற்குச் சமமாக மண்டூரச்செந்தூரம், திரிலோகச்செந்தூரம், அயச்செந்தூரம் கூட்டிக் கரிப்பான்சாற்றால் ஒரு நாள் ஆட்டி நெல்லிக்காய்போல் உருண்டைசெய்து தேன், சர்க்கரை, மோரில்உட்கொள்ள பாண்டு, மஞ்சள், சோகை ஆகிய நோய்கள் தீரும்.

3. ஒரு பலம் மண்டூரத்தை எட்டுப் பலம் கோசலத்தில் பொடித்துப் போட்டுக் காய்ச்சி உலர்த்தி அதற்குச் சமமாகத் தேவதாரம், மஞ்சள், சித்திரமூலம், வாய்விளங்கம், முத்தக்காசு, திப்பிலிமூலம், திப்பிலி, மிளகு ஆகியவற்றை இடித்துச் சலித்துக் கலந்துவைத்துக் கொண்டு முவ்விரல் அளவு எருமை மோரில் உண்ணப் பாண்டு, சோகை, மஞ்சள் நோய் ஆகியவை தீரும்.

ஏலாதி வடகம்.

1. ஏலம், இலவங்கப்பட்டை, முந்திரிகைப் (திராட்சை) பழம், திப்பிலி வகைக்கு 6 பலம். அதிமதுரம், தழுதாழை, பேரீச்சம் பழம் வகைக்கு ஒரு பலம். இவற்றை இடித்துத் கழற்சிக்காய் அளவு உருண்டைசெய்து சாப்பிட்டுவர செரியாமை (அக்கினிமந்தம்), பித்தம் (அழல்), வயிற்றுவலி, மூலக்கொதிப்பினால் இரத்தம் காணுதல், சயம் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

செவிய வடகம்

செவ்வியம், இலுப்பைப்பூ, திப்பிலிமூலம், விலாமிச்சம்வேர், சுக்கு, நிலவேம்பு, அதிமதுரம், நெய்தற்கிழங்கு, வெட்டிவேர், சந்தனம், சதுர்சாதம், மிளகு, தாளிசப்பத்திரி இவற்றைச் சம எடையாய்த் தூள்செய்து அதற்குச் சமமாக வெல்லம் சேர்த்து இடித்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு உருண்டைசெய்து உட்கொள்ள வாயு, விக்கல், கக்கல் (வாந்தி), செரியாமை, நெஞ்செரிவு, கிராணி, மஞ்சள்நோய், சோகை, வீக்கம், இருமல் ஆகிய நோய்கள் தீரும்.

சுக்கு வடகம்.

சுக்கு 6 பலம்; தாளிசப்பத்திரி 5 பலம்; செவ்வியம், மிளகு வகைக்கு 1 பலம்; திப்பிலி 4 பலம், விலாமிச்சம்வேர், சதுர்சாதம் வகைக்கு அரைப்பலம் தூள்செய்து முன்புபோல் பாலில் பிட்டுஅவித்து சர்க்கரை 6 பலம் சேர்த்துப் பிசைந்து ஒரு கொட்டைப்பாக்கு அளவு உருண்டை செய்து சாப்பிட்டுவரக் கக்கல் (சத்தி), விக்கல், சுவையின்மை (அரோசியம்), வாயூறல், வாயு, செரியாமை, பொருமல், ஈளை, இருமல், முப்பிணி (திரிதோடம்) நீங்கிப் பசி உண்டாகி உடல் வலுக்கும்.

கடுக்காய் வடகம்.

நூறு கடுக்காயைக் காடியில் மூன்று முறை மும்மூன்று நாள் ஊறவைத்து இறுத்துப்போட்டு உலர்த்தி நறுக்கி விதை நீக்கி அதற்கு நான்கில் ஒரு பாகம் கல்லுப்பு, கோரைக்கிழங்கு, குரோசானிஓமம், சுக்கு, கொடிவேலிவேர், திப்பிலி, செவ்வியம், திப்பிலிமூலம் வகைக்கு 3 வராகன் எடை; மிளகு, இந்துப்பு, ஓமம் வகைக்கு அரைப்பலம் இவற்றை இடித்துத் தூள்செய்து அதில் புளித்தமோர், எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு வகைக்கு 1 படி தனித்தனியே விட்டுப் பிசைந்து உலர்த்திப் பொடித்துக் கொண்டு முவ்விரல் அளவு சாப்பிட்டுவரக் கக்கல், வயிற்றுப்புண் (குன்மம்), இரைப்பு, எருவாய்நோய் (மூலம்), கிராணி, சுவையின்மை, பாண்டு, வீக்கம், வயிற்றுவலி, சூலை, வயிற்றுளைவு, சோகை ஆகிய நோய்கள் தீரும்.

மேகாதி வடகம்.

1. பத்துப்பலம் வெள்ளுள்ளியைமேல் தோல் நீக்கி; 25 பலம் பசுவின் பாலில் போட்டு தீபம்போல் எரித்து வேகவைத்து ஐந்து பலம் பசுவின் நெய்விட்டுக் கிளறி மெழுகுபதத்தில் இறக்கி சர்க்கரை 2 ½ பலம், கோதுமைமாவு 5 பலம் தூவிக் கிளறி, வேளை ஒன்றுக்கு கொட்டைப்பாக்கு அளவு உட்கொள்ள வெகுமூத்திரமாக இறங்கும். மேகநீரெல்லாம் தீரும்.

2. திரிபலை, பருத்திவிதைப்பருப்பு, புளியவிதைத்தோல், விளாம்பிசின், வெண்குன்றிப்பருப்பு, மஞ்சள், காந்தபற்பம், அப்பிரகச்செந்தூரம் வகைக்கு 1 வராகன் எடை, இவற்றை 8 வராகன் எடை ஆவாரைவிதைப் பருப்புக் கூட்டிப்பொடித்து அத்திப்பால்விட்டு 3 கழஞ்சு உருண்டைசெய்து வேளை ஒன்றுக்கு ஓர் உருண்டை வீதம் எருமை மோரில் உட்கொள்ள மேகநீர் இருபதும் நீங்கும்.

Koviloor Digital Library

உலோகாதி வடகம்.

முத்தக்காசு, சீந்தில், சுக்கு, திப்பிலி, வாய்விளங்கம், சித்திரமூலம் இவற்றை ஓர் எடையாய்ப் பொடித்து அதற்குச் சமமாக உலோகச்செந்தூரம் கூட்டி தேனில் கலந்து உண்டுவர பாண்டு, சோகை, காமாலை, ஆகிய நோய்கள் தீரும்.

சவுபாக்கியசுண்டி வடகம்.

1. கரிசாலை, பொடுதலை இவற்றின் தூள்கள் வகைக்கு எட்டு பலம்; திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், ஓமம், குரோசானிஓமம், தாளிசப்பத்திரி, சிற்றரத்தை, தேசாவரம், ஏலம் வகைக்கு 1 பலம்; சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடையம், கருஞ்சீரகம், நற்சீரகம், இலவங்கப்பத்திரி, வால்மிளகு, மல்லி, வெந்தயம் வகைக்கு அரைப்பலம் இடித்து வடிகட்டின தூள்களையும் நான்கு படி பசுவின்பாலையும் குழம்பாய்க் காய்ச்சி அதில் சிறுகத்தூவிப் பிசைந்து ஒரு சட்டியில் இரண்டு படி பால்விட்டு வேடுகட்டி அதன் மேல் பிசைந்த மருந்தை வைத்துப் பிட்டவித்துத் தேன்விட்டுக் கலந்து சுண்டைக்காய் அளவு இஞ்சி, எலுமிச்சம்பழம், நாரத்தம் பழம், மாதுளம்பழம் இவற்றின் சாற்றிலும் தேனிலும் அல்லது சர்க்கரையிலும் உட்கொள்ளக் கருப்பைவளி (சூதக வாயு), (கிராணி), வயிற்றுப்புண் (குன்மம்), வாயு, விடாய், உப்புசம், சுவையின்மை, செரியாமை, கழிச்சல், ஆகிய நோய்கள் தீரும்.

2. இரண்டு படி பசுவின் பாலில், 22 பலம் சர்க்கரையைக் கரைத்துப் பாகுசெய்து அதில் 8 பலம் சுக்கை மேல்தோல் நீக்கிச் சீவி, சிறு துண்டுகளாய் நறுக்கி அதில் செம்முள்ளி, செந்திராய், முருக்கிலை, கரிசாலை, சிறுசெருப்படை, காத்தட்டி இவற்றின் சாறுவகைக்கு கால் படி தனித்தனியாகவிட்டுப் பரிதியில் உலர்த்தி, இடித்த தூள்களுடன் தக்கோலம், வாலுளுவையரிசி, கூகைநீர், கரியப்பவளம், வாய்விளங்கம், தான்றிக்காய், நெல்லி, திப்பிலி மூலம் வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்த தூள்களையும், அமுக்கறா, பொன்முசுட்டை, கண்டங்கத்தரி, நன்னாரி, நிலப்பனை, வகைக்கு 2 பலம், பசுவின் பாலில் அவித்து உலர்த்தி இடித்தத் தூளையும் தூவிக் கிளறி முவ்விரல் அளவு உட்கொள்ள கிராணி, ஒழுக்குநோய், வாதபித்தம், மேகம், செரியாமை (அக்கினிமந்தம்), வாதசூலை, அந்தரவாயு, வாயூறல், கசப்பு ஆகிய நோய்கள் தீரும்.

3. இரண்டுபடி பசுவின் பாலில் அரை வீசை சர்க்கரை கலந்து பாகுசெய்து அதில் இஞ்சி, வாலுளுவையரிசி, ஓமம், வாய்விளங்கம், திப்பிலி, மிளகு, கரிசாலை வகைக்கு 1 பலம், சதகுப்பை 5 பலம், மல்லி 3 பலம், சுக்கு 8 பலம் இவைகளை இடித்துத் தூள் செய்து தூவிக் கிண்டிக் கொட்டைப்பாக்கு அளவு சாப்பிட்டுவர வாதபித்தம், வலிகுன்மம், காசம், சூதகவாயு, சுரதோடம், தொடர்க்கழிச்சல் (கிராணி) ஆகிய நோய்கள் தீரும்.

வடகப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

கட்டுவகைப் படலம்:

அஃதாவது, ஒவ்வொரு மூலிகைகளாலும், பூச்சாற்றுச் சத்துகளாலும், பால் வகைகளாலும், செயநீர்ப்போக்குகளாலும், சுருக்கிட்டுக் கட்டுவது கட்டுவகைப் படலமெனப் பெயர்பெற்றது.

குறிப்பு:– கட்டு 100 ஆண்டுகள் பயன்படுத்தலாம்.

சாதிலிங்கக் கட்டு.

1. ஐந்து கோழிமுட்டை வெள்ளைக் கருவில் வீரம், பச்சைக்கற்பூரம், வெடியுப்புச்சுண்ணம் வகைக்கு 1 வராகன் எடை பொடித்துப் போட்டுக் குப்பியில் அடைத்து, ஆறுநாள் சென்ற பின்பு அதில் 10 வராகன் எடை இலிங்கத்தைப் பத்து முறை தோய்த்துக் காயப்போட்டுப் பிறகு அதில் தோய்த்துக் கருஊமத்தை இலையில் சுற்றி ஒன்று முதல் 32 புடம் வரை, புடம்தோறும் ஒவ்வோர் எருவாய் கூடுதலாக்கி 32 புடம் மணல் மறைவில் போட்டெடுக்க உருகிக் கட்டும். அதைத் துணைமருந்துகளில் கொடுக்க முயல்கண்டன், குமரகண்டன், முயல்வலிப்பு, குதிரைவலிப்பு, காக்கைவலிப்பு, உள்வீச்சு, புறவீச்சு, சன்னிதோடம், வாலைத்தோடம், நெஞ்சுக்குத்து, வாயுக்குத்து முதலிய நோய்கள் தீரும்.

2. பத்து வராகன் எடை இலிங்கத்தைத் தாய்ப் பாலில் எலுமிச்சம்பழச்சாறு, மாவிலிங்கப்பட்டைச்சாறு, ஐவிரலிச்சாறு, தேன் இவைகளை வகைக்கு ஒரு சாமம் சுருக்குக் கொடுத்து ஐந்து வராகன் எடை சூடத்தையும், ஐந்து வராகன் எடை சாம்பிராணியையும் மெழுகுபோல் அரைத்துப் பத்துப் பங்குசெய்து ஒவ்வொரு பங்காய்த் துணியில் தடவி இலிங்கத்தின்பேரில் சுற்றித் தீயில் கொளுத்திக் கரியெல்லாம் சுரண்டிப்போட்டுத் தேனில் இழைத்துக் கொடுக்க வாயு போகும்; திரிகடுகில் கொடுக்க சன்னிதோடம் போகும்; இஞ்சிச்சாற்றில் கொடுக்க நெஞ்சடைப்பு, வாயு, மூர்ச்சை, பேதி, வயிற்றுப்பொருமல் தீரும்; கொடிவேலிக் குடிநீரில் கொடுக்க விடபாகம், வயிற்றுவலி (குன்மம்), சோகை, சூலை, பித்தபாண்டு ஆகியவை தீரும்.

3. 1 பலம் சாதிலிங்கக் கட்டியின்பேரில் குன்றிமணிப்பருப்பின் பசையினால் ஒரு வராகன் எடை தங்கரேக்கை ஒட்டி, அதன் மேல் ரோமத்தை அரை விரல் கனம் சுற்றிப் பிரியாமல் கட்டி ஒரு அகிற சட்டியில் அதற்குக் கீழும் மேலும் கெந்தகம், அரிதாரம் வகைக்கு அரைப் பலம் வீதம் பொடித்த தூளைப்போட்டு மேற்சட்டி மூடி சீலைமண்செய்து காயவைத்து அதை ஒரு சட்டியில், நான்கு விரற்கடை மணலைக்கொட்டி அதன் மேல்வைத்து அது தெரியாமல் ஆறு விரற்கடை மணலைக் கொட்டி கமலாக்கினியாய் எரித்து, மணல் மேல் நெல்லைப்போட்டுப் பொரியும் பதத்தில் இறக்கி, ஆற்றி, மேற் கசடு நீக்கிச் சுத்தமாய்க் கழுவிப்போட்டுப் பசுவின் பாலில் ஒரு காசு எடை வீதம் உரைத்துச் சாப்பிட தாதூட்டம் உண்டாகும்; தாய்ப்பாலில் கொடுக்க மூலவாயு, மூர்ச்சைவாயு, அக்கனிமந்தம் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

4. ஒரு பலம் இலிங்கக்கட்டிக்கு ஒரு செம்பரத்தம்பூச்சாற்றைச் சுருக்கிட்டு அதன் பேரில் ஒரு வராகன் எடை தங்கரேக்கைச் சுற்றிப் பிறகு மேற்படி மூலிகைப்பூவை அரைத்துக் கவசம்செய்து, சீலைமண் வலுவாய்ச் செய்து குக்குடம் புடம் போடக்கட்டும்; அதைத் துணைமருந்துகளால் அரைத்துக் கொடுக்கச் சுரதோடம் தீரும்; உடல் வலுக்கும்.

5. 3 வராகன் எடை இலிங்கத்தைக் கரண்டியில் வைத்து அதற்குக் கீழும் மேலும் ஐந்து வராகன் எடை சீனத்தைப் பொடித்துப் போட்டுத், தீபாக்கினியாய் எரித்து ஓயாமல் புரட்டிக் கொடுத்த பின்பு மாகாணிப்படி (அரை ஆழாக்கு) கொடிக்கள்ளிப் பாலாலும், கால் படி கொம்புத்தேனாய் சுருக்குக் கொடுத்து இஞ்சிச் சாற்றில் உரைத்துக்கொடுக்க சுரம், சன்னிதோடம், வாயு, புறவீச்சு, வயிற்றுவலி (குன்மம்) ஆகியவை நீங்கும்.

6. ஒரு பலம் சாதிலிங்கக் கட்டிக்கு எலுமிச்சம்பழச்சாறு, தாய்ப்பால், தைவேளைச்சாறு, வெடியுப்பு, செயநீர் வகைக்கு ஒரு சாமம் சுருக்குக்கொடுத்து ஒரு வராகன் எடை தங்கரேக்கைச் சுற்றிப் பின்பு சாரம், சீனம், வெண்காரம், வெடியுப்பு வகைக்கு 1 பலம் வெண்கருவினால் ஆட்டிக் கவசம்செய்து காயவைத்துக் குகையில் வைத்துச் சில்லுப்போட்டு சீலைமண்செய்து இரண்டு கூடை உமியைக் கொட்டி அதற்கு நடுவில் தீப்போட்டெரித்து வெந்தபின் எடுக்க உருகி மணியாயிருக்கும்.

7. பத்து வராகன் எடை இலிங்கக்கட்டிக்கு, வெள்ளெருக்கு வேரைக் குழித் தைலம் இறக்கி சுருக்குக்கொடுத்து 20 சேங்கொட்டையை அரைத்துக் கவசம்செய்து அதன் மேல் எலுமிச்சங்காய் அளவு வெண்ணெயைவைத்து சட்டியில் இட்டுத் தீயாய் எரித்து நெருப்புப் பிடித்தவுடன் இறக்கி ஆறவிட்டு எடுக்கக் கட்டும்.

8. காசிக் குப்பியைக் கல்வத்தில் பொடித்ததூள், வெடியுப்பு, சீனக்காரம், அடைவைத்த கோழிமுட்டைத்தோல், வெண்காரம் இவற்றை ஓர் அளவாய் முட்டை வெண்கருவிட்டு அரைத்து இலிங்கத்துக்கு கவசம்செய்து ஏழு சீலைமண்செய்து காயவைத்து முன்போல் உமிப்புடம் போட்டு எடுக்கக் கட்டும்.

9. இலிங்கத்திடை, அயம், தாளகம், மனோசிலை, கெந்தி இவற்றை ஓர் அளவாய் எலுமிச்சம்பழச் சாற்றால் அல்லது கோழிமுட்டைவெள்ளைக் கருவிலாவது ஆட்டி அதற்குக் கவசம் செய்து உமியில் முன்போல் புடம் போடக் கட்டும்.

10. ஐந்து வராகன் எடை இலிங்கத்தை தாய்ப்பாலில் 5 நாள் ஊறவைத்துப் பரிதியில் உலர்த்தி முட்டைக்கூட்டில் வைத்து கெந்தி 1 வராகன் எடை, தாரம் 2 வராகன் எடை சூடன் 1 வராகன் எடை இவைகளை பொடித்ததூளைக் கீழும் மேலும் போட்டு மூடிச் சீலைமண்செய்து மணல் மறைவில் புடம் வைத்து எடுக்கக் கட்டும்.

11. ஒரு பலம் இலிங்கத்தை ஒரு படி ஈசுரமூலிச்சாற்றில் சுருக்குக் கொடுத்து அதற்குப் பொறித்த வெங்காரத்தை மேற்படி சாற்றால் ஆட்டிக்

Koviloor Digital Library

கவசம்செய்து உலர்த்தி ஓட்டில் வைத்துமூடி ஏழு சீலைமண்செய்து புடம் போடக் கட்டும்.

12. வங்கத்திடை கட்டின தாளகத்தைச் சேர்த்து தாய்ப்பால் விட்டு மைபோல் அரைத்து நிறுத்து அதற்குச் சமன் எடை இலிங்கத்தில் கவசம் செய்து ஏழு சீலைமண்செய்து காயவைத்து ஒரு சாண் ஆழக்குழியில் உமிப்புடம் போட்டு துணைமருந்துகளிலிட சன்னிதோடம், கக்கல், கிரந்தி ஆகிய நோய்கள் தீரும்.

13. தாளகம், கெந்தகம், பொரிகாரம், மனோசிலை வகைக்கு கால் வராகன் எடை பொடித்து இரண்டு பங்கு செய்து ஒரு கோழி முட்டைத் தோலில் பாதி வெள்ளைக் கருவிட்டு, ஒரு பங்கு பொடியைப் போட்டு அதன் மேல் பாதிப்பொடியைப் போட்டு வெள்ளைக்கருவிட்டு முட்டைத்தோலால் மூடி சீலைமண்செய்து மணல்மேல் வைத்து நான்கு சாமம் எரிக்கக் கட்டும்.

14. இரசமும் நாகமும், தொந்தித்து அதற்குச் சமம் பொரிகாரம், கெந்தி சேர்த்து தாய்ப் பாலில் ஆட்டி இலிங்கத்திற்குக் கவசம்செய்து பரிதியில் காயவைத்து அதன்மேல் சுண்ணாம்பும் உப்பும் சேர்த்து எலுமிச்சம்பழச் சாற்றால் அரைத்துச் சீலையில் தடவிக் கவசம்செய்து குக்குடப்புடம் இட, கட்டும். இவ்விதம் வீரத்தையும் கட்டிக் கொள்ளலாம்.

இலிங்க ரசகற்பூரக் கட்டு.

பன்னிரெண்டு வராகன் எடை கெந்தகத்தை உருக்கி அந்த எடைக்கு வீரம், இலிங்கம், இரசகற்பூரம் பொடித்துப் போட்டுக் கிளறி ஈரக்குழலில் விட்டு ஆற்றி மாத்திரைசெய்து சன்னி, சுரதோடம் முதலானவைகளுக்கு துணைமருந்துகளில் இடத் தீரும்.

ரசகற்பூரக்கட்டு

1. ஒரு பலம் இரசகற்பூரத்தை, தாய்ப் பாலில் 10 நாள் ஊறவைத்து உலர்த்தி அப்பால் உள்ளித்தைலத்தை மூன்று சாமம் சுருக்குக் கொடுத்து ஓட்டில் இரண்டு பலம் வெடியுப்பைப் பொடித்து அதற்குக் கீழும் மேலும் போட்டு 5 கோழிமுட்டையை உடைத்து விட்டு மூடி அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிக்கப் பொங்கியுருகி நெருப்புபற்றி கட்டிவிடும். குளிர்ந்த பயிரு உப்பை நீக்கி எடுத்து இதை துணைமருந்துகளில் அரைத்துக் கொடுக்க சன்னிசுரம், நாவறட்சி, மலக்கட்டு நீங்கும். இலிங்கக் கட்டுடன் சேர்த்துக் கொடுக்க வாதநோய் தீரும்.

2. நான்கு வராகன் எடை இரசகற்பூரத்துக்கு; முலைப்பால் பால் நண்டை இடித்துப் பிழிந்தசாறு, முசுமுசுக்கைச்சாறு இவற்றை வகைக்கு இரண்டு சாமம் சுருக்குக் கொடுக்கக் கட்டும்.

3. பத்து வராகன் எடை இரசகற்பூரத்துக்கு; முலைப் பால், எலுமிச்சம்பழச்சாறு, வாழைப்பூச்சாறு, காட்டாமணக்குப்பால் இவற்றை

Koviloor Digital Library

வகைக்கு ஒரு சாமம் சுருக்கிட்டு 5 வராகன் எடை சாம்பிராணியைப் பொடித்து வடிகட்டி அதைக் கால் படி தேனில் கலந்து சுருக்கிட்டுப் 10 வராகன் எடை சூடனைப்பொடித்து அதற்குக் கீழும் மேலும் வைத்து தீக்கொளுத்தவும். இப்படிப் பத்து முறை கொளுத்தக் கட்டும்.

தாளகக்கட்டு.

1. வெடியுப்பு, சீனம் வகைக்கு 20 வராகன் எடை, எவாச்சாரம், வெண்காரம் வகைக்கு 10 வராகன் எடை. இவைகளைப் பொடித்து கரண்டியில் போட்டு தீயில் வைத்து உருகிப் போகும்போது அதில் தூய்மைசெய்த 5 வராகன் எடை தாளகக்கட்டியைப் போட்டுப் புரட்டிக்கொடுத்து மிகுதியையும் அரைத்து அதன் மேல் கவசம் செய்து காயவைத்து, அதன் மேல் சுண்ணாம்புநீரும் பூநீரும் அரைத்துத் துணியில் பூசி ஏழு சீலைமண்செய்து காடைப்புடமிட்டு எடுத்து துணைமருந்துகளிலிட ஈளை, காசம், எலிக்கடி, விப்புருதி, உளைமாந்தை, குளிர்ச்சுரம் ஆகிய நோய்கள் தீரும்.

2. கிராம்பு, சிற்றரத்தை, இவற்றை ஓரளவாய் வெதுப்பிப் பொடித்துத் தேனில், தாளகக்கட்டை இழைத்துக் கலந்து கொடுக்கப் பழஞ்சுரம் தீரும். பத்தியமில்லை, மேல்சொல்லிய வண்ணம் வெள்ளையையும், கௌரியையும் கட்டிக் கொள்ளலாம்.

3. ஒரு பலம் தாளகத்தைக் கல்சுண்ணாம்பில் வைத்து அமுரி விட்டுப் பத்து முறை தாளித்து ஒவ்வொரு முறையும் நல்ல நீரில் கழுவி அயச்சட்டியில் வைத்து 1 படி பூநீரை ஒரு படி அமுரியில் கரைத்து வைத்து 3 நாள் கழித்து தெளிவை இறுத்து அதில் வெண்காரம், சாரம், சூடன் வகைக்கு 1 பலம், முப்புச்சுண்ணம் 1 கழஞ்சு பொடித்துப் போட்டு நான்கு சாமம் சுருக்குக்கொடுக்க தளுக்கற்றுக் கட்டும். துணைமருந்துகளில் கொடுக்க சேத்மரோகம் – 96–ம் சுரம், சன்னிதோடம் ஆகிய நோய்கள் தீரும். (அமுரி=சிறுநீர்)

4. பத்து வராகன் எடை தாளகக்கட்டிக்கு, ஒரு படி சிவகரந்தைச்சாற்றில், பத்து வராகன் எடை துருசுச் செந்தூரத்தைக் கலந்து சுருக்குக் கொடுத்துப் பிறகு, நவாச்சாரம், சீனாக்காரம், சூடன், வெடியுப்பு, வெண்காரம் வகைக்கு 4 வராகன் எடை வீதம் கல்வத்தில் இட்டு எருக்கம் பாலாலும், கள்ளிப்பாலாலும், குமரிச்சாற்றாலும் வகைக்கு ஒரு சாமம் தனித்தனியே ஆட்டி உலர்த்திப் பிறகு ஊமத்தஞ்சாற்றால் ஆட்டி மேற்படி தாளகக் கட்டிக்குக் கவசம்செய்து உலர்த்தி ஏழு சீலைமண் செய்து பத்து எருவில் புடமிடக் கட்டும்.

5. பத்து வராகன் எடை தாளகக்கட்டிக்குச் சிவகரந்தைச் சாறு, கரிப்பான்சாறு வகைக்கு 1 படி, சுருக்குக் கொடுத்து உலர்த்தி, அதை 15 எருவில் புடமிட்டு எடுத்து வெடியுப்பை எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து மூன்று புடம் போட்ட கறியுப்பு 40 வராகன் எடையை சிறுநீர் விட்டு அரைத்துக் கவசம் செய்து அதன் பேரில் நருவிரற் கனம் கற்சுண்ணாம்பு

Koviloor Digital Library

கவசம் செய்து காயவைத்து ஐந்து சீலைமண்செய்து பதினைந்து எருவில் புடம்போட உருகிக் கட்டும்.

சாரக்கட்டு.

குளத்தில் இருக்கிற முற்றின 100 காக்காய்ச் சிப்பியை உயிருடன் எடுத்துப் பொத்து பொரித்த பொரிகாரம் போட்டு வைக்க நீர் இறங்கும். இருப்புச்சட்டியில் ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பைப் போட்டு அடுப்பேற்றி மேற்படி நீரைச் சிறுகச் சிறுக விட்டுக் கிளறிக்கொடுத்துக் கொண்டிருக்க தண்ணீர்போல் ஆகும். அந்தப் பதத்தில் இறக்கி ஆற்றி ஒரு பலம் சாரக் கட்டிக்குக் கவசம் செய்து காயவைத்து நெருப்பில் கருகவாட்டி உதிர்த்துப் போட்டு பிறகு வெடியுப்புச் சுண்ணம், இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு, வெண்காரம், துருசு பற்பம், சிப்பிச்சுண்ணம், அண்டச்சுண்ணம் வகைக்கு கால் பலம் வீதம் வெள்ளைக்கருவில் மெழுகுபோல் ஆட்டிக்கவசம் செய்து நன்றாய்க் காய வைத்து ஒரு சட்டியில் அரைப்படி கல்சுண்ணத்தைக் கொட்டி அதன் மேல் ஓர் ஓலைச்சுருளை வைத்து அதற்குப் பாதி கரு மணல் கொட்டி அதன்மேற் சாரத்தைவைத்து மறையும்படி மேலும் கருமணல் போட்டு ஒருசாமம் 1 விறகாலும், மறுசாமம் 2 விறகாலும், மூன்றாஞ்சாமம் 3 விறகாலும், நான்காம் சாமம் 4 விறகாலும் தீயாய் எரித்து ஆறவிட்டு எடுத்துத் துணைமருந்துகளில் ஒரு பண எடை கொடுக்கக் குன்மம், நீர்க்கட்டு நீங்கும். இன்னும், இதைச் சேர்த்துச் செய்தால் சரக்குகள் எல்லாம் மெழுகாகும்.

பாடாணக்கட்டு.

ஒரு படி பூநீரில், நான்கு படி அமுரி விட்டுக் கரைத்து மூன்றாம் நாள் தெளிய இறுத்து ஒரு பலம் பாடாணக்கட்டியைத் துலாந்திரம் கட்டி எரித்தெடுத்துக் கள்ளிச்சாற்றிலும், எருக்கம்பாலிலும், திருகுக் கள்ளிப்பாலிலும் அல்லது சதுரக்கள்ளிப்பாலிலும் வகைக்கு நான்கு சாமம் சுருக்குக்கொடுத்து ஐவியலிச்சங்கைச் சுட்ட சுண்ணாம்பைச் சாராயம் விட்டுப்பிசைந்து அதற்கு மத்தியில் மேற்படி கட்டியை வைத்து தேங்காய் அளவு உருட்டி ஒரு துணியில் முடிந்து பானையில் வைத்து அதற்குக் கீழும் மேலும் ஒரு படி வெள்ளைக் கற்பொடியைக் கொட்டி தீ எரித்துத் துணிவெந்த பின் மேற்படி பாடாண கட்டியை ஆறவைத்துக் கட்டியை எடுத்து ஒரு தேங்காய் அளவு நத்தையை அரைத்து ஒரு கலசத்தில் போட்டு அதன்மேல் வைத்து மூடிச் சீலைமண்செய்து எரித்து மருந்து கருகும் படியாய்ப் புடம்போடவும். இப்படி ஐந்து புடம்போட்டு எடுத்து ஒரு காசு எடை துணைமருந்துகளிலிடச் சுரம், சன்னிதோடம் முதலான பல கொடிய நோய்கள் தீரும்.

2. வெள்ளைக்கற்சுண்ணாம்புநீறு ½ படி, 4 படி எலுமிச்சம்பழச் சாற்று நீரில் கரைத்துத் தெளிய வைத்து மூன்றாம் நாள் தெளிவை இறுத்து அதில் 10 வராகன் எடை பாடாணத்தைத் துலாந்திரம் கட்டி எரித்தெடுத்துச் சீனம், வெடியுப்புச் சுண்ணம், நவாச்சாரம், வெண்காரம், சூடன், பூநீர்,

Koviloor Digital Library

சிப்பிச்சதை இவற்றை அரைத்துக் கவசம் செய்து குறுணி உப்புக்குள்ளாவது சுண்ணாம்புக்குள்ளாவது நான்கு சாமம் வைத்தெரித்து எடுத்து இஞ்சிச் சாற்றில் ஒரு காசு எடை உரைத்துக் கொடுக்க சன்னிசுரம், சூலை ஆகிய நோய் தீரும்.

சலமஞ்சரி.

கெந்தி, காத்தம், லோகம், வெண்காரம், சீனம், சங்குப்பொடி, சலாசத்து, சாத்திரவேதி, கல்நார் வகைக்கு 1 வராகன் எடை, வெடியுப்பு 4 பலம். இவற்றை மையாக ஆட்டிக் குகையில் இட்டு அனலில் வைத்து உருகினவுடன் ஆற்றி எடுத்து ஒரு காசு எடை வீதம் இளநீர், பழச்சாறு, வெந்நீர், கரிப்பான் குடிநீரிலிடக் கவுசி, நீராமை, பாண்டு, சோகை, வீக்கம் ஆகிய நோய்கள் தீரும்.

வெடியுப்புக்கட்டு.

சிறுநீரில் பூநீரைக் கரைத்து அதில் அண்ட ஓட்டைப் போட்டுக் கொதிக்க வைத்துத் தூய்மைசெய்து 5 வராகன் எடை நொறுக்கிக் கரண்டியில் போட்டு அதற்குக் கீழும் மேலும் வெடியுப்பு, சீனம் வகைக்கு 5 வராகன் எடை வீதம் பொடித்த தூளைப்போட்டு உலையில் வைத்து ஊதி உருகினவுடன் எடுத்து ஆற்றிப் பொடித்து வைத்துக் கொண்டு தேகக் கூறறிந்து தேனிலாவது. பசுவின் வெண்ணெயிலாவது ஒரு காசு எடை உரைத்துக் கொடுக்க வாயு, குன்மம், வயிற்றுவலி, சூதகவாயு ஆகிய நோய்கள் தீரும்.

லவணக்கட்டு.

1. கறியுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, சவுட்டுப்பு, நவாச்சாரம் வகைக்கு 3 வராகன் எடை, ஐவிரலிச் சங்கு சுண்ணம் 15 வராகன் எடை இவற்றைப் பொடித்துத் திருகுக்கள்ளிக் கட்டையை நறுக்கிச் சோற்றை எடுத்து விட்டு அதற்குள் அடைத்து அதன் மேல் அந்தச்சோற்றால் மூடிச் சீலைமண் வலுவாய்ச் செய்து மூடிப் புடம்போடக் கம்பியாய் உருகி நிற்கும். அதை ஒரு பண எடை பனைவெல்லத்தில் கொடுக்கக் குன்மம், வாயு, வயிற்றுவலி முதலான நோய்கள் தீரும்.

2. இந்துப்பு, கல்லுப்பு, பாறையுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, மாவிலிங்கு, பிரண்டை இவற்றை ஓர் எடையாய் முருங்கைப்பூ, எருக்கம்பூ, வேலிப்பருத்தி இவற்றின் சாற்றால் வகைக்கு ஒரு சாமம் ஆட்டி வில்லை செய்து நன்றாய்க் காய வைத்து முழப் புடம் போட வலுத்துக் கட்டிப் போகும். கருத்திருந்தால் அந்தச் சாறுகளிலெதினாலாவது அரைத்துப் புடம்போட்டு இரண்டு காசு எடை வாயு நெஞ்சடைப்புக்கு வெந்நீரிலும்; என்பு குன்மத்திற்குப் பசுவின் நெய்யிலாவது, தேனிலாவது, சுக்கிலாவது கொடுக்க நீங்கும். கரியுப்பைத் தண்ணீரில் கரைத்துத் தெளியவிறுத்துக் காய்ச்சி எடுத்து மேனி, தைவேளை, முருங்கை இவற்றின் இலைச்சாற்றை ஓர் அளவாய் விட்டு மெழுகு போல் ஆட்டிக் காய வைத்துக் குக்குட புடமாக மூன்று புடம் போட்டு ஒரு காசு எடை பனைவெல்லத்தில் கலந்துகொடுக்க எல்லா வாயு நோய்களும் தீரும்.

Koviloor Digital Library

வீரக்கட்டு.

1. ஒரு வராகன் எடை வீரத்துக்கு அவுரியிலைச்சாறு அரைப்படி சுருக்குக் கொடுத்துக் கட்டி ஒரு கரண்டியில் பசுவின் நெய்விட்டுக் காய்ச்சி கட்டியைப் போட்டு உடனே எடுத்துக்கொண்டு அந்த நெய்யில் பறங்கிப்பட்டைத் தூளைப் பிசைந்து சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து பனைவெல்லத்தில் பொதிந்த மூன்றுநாள் ஆறு வேளை உப்பும், புளியும் நீக்கிச் சாப்பிட மேகம், கிரந்தி முதலான மேக இரணங்கள் தீரும்.

2. இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, சீனம், சாரம் வகைக்கு ஒரு பலம்; வெடியுப்பு 3 பலம் வெண்மையாய் வறுத்தத் துருசு அரைப் பலம்; சூடன் கால் பலம் இவற்றைப் பொடித்து இரண்டு பங்கு செய்து ஒரு பங்கைத் திராவகமாக வடித்து அதை மற்றொரு பங்கில்விட்டுக் கலந்து கலசத்திலிட்டுத் திராவகம்வடித்து குப்பியில் அடைத்துக்கொண்டு அத் திராவகம்விட்டுக் கறியுப்பை மையாய் ஆட்டி எடுத்துக் குகை பிடித்து அந்தக் குகையிலாவது அப்பிரகத்தகட்டிலாவது சவ்வீரக் கட்டியை வைத்து அதை மணல் மேல் வைத்துத் தீயெரித்து வீரக்கட்டியில் சூடு ஏறினவுடன் மேற்படி திராவகம் இரண்டு சாமமும் தும்பை, ஆடாதோடை, முருங்கைப்பூ இவற்றின் சாற்றிலும் தாய்ப் பாலிலும் வகைக்கு ஒரு சாமம் சுருக்குக் கொடுக்கக் கட்டும். அதைத் துணைமருந்துகளிலிட எல்லாக் கொடிய நோய்களும் தீரும்.

3. கட்டின வீரத்தெடை கெந்தகமும், அயமும் சமனாய் எலுமிச்சம்பழச் சாற்றினால் மெழுகு போல் ஆட்டிக் கவசஞ்செய்து அதற்குமேல் சோற்று உப்பை அரைத்துக் கவசஞ் செய்து காய வைத்து ஒரு சட்டியில் இரண்டு விரற்கடை மணல் போட்டு அதன் மேல் வைத்து அதன் மேலும் மணலைக்கொட்டி இரண்டு .சாமம் கமலாக்கினியாய்த் தீயெரித்து ஆற்றியெடுக்கச் செந்தூரமாய் இருக்கும். இதைத் தக்க துணைமருந்துகளில் கொடுக்கச் சகல நோய்களும் தீரும். வாய்பிடிக்காது. 10 ஆண்டுகள் பயன்படுத்தலாம்.

கட்டுவகைப் படலம் முற்றும்.

மெழுகுவகைப் படலம்.

இங்கு பல மருந்துப் பொருட்களின் தூளை அளவுப்படி கூட்டி முறைப்படி தேன், பனைவெல்லம், எண்ணெய், நெய் சேர்த்து அரைத்துப்போலச் செய்து வரும் மருந்து வகையைக் கூறினமையால் இது மெழுகு படலமெனப் பெயர் பெற்றது.

இலிங்க மெழுகு.

குமரிச்சாற்றில் கடுக்காய்த் தூளைப் போட்டுப் பிசைந்து வைத்து அதில் வருகிற நீரைப் பத்து வராகன் எடை இலிங்கத்திற்கு ஒரு சாமம் சுருக்குக் கொடுத்துச் சீனாக்காரம், துருசு, வெண்காரம், பூநீர் வகைக்கு 5 வராகன் எடை, எருக்கம் பால் விட்டு மெழுகு போல் அரைத்து மூன்று

Koviloor Digital Library

பங்கிட்டு ஒரு பங்கை கட்டிக்குப் பூசிக் காய வைத்து நன்றாய்க் காய்ந்த பின்பு மற்ற இரண்டு பங்கையும் அது போல் பூசிக் காய வைத்து மண்ணை அரைத்துத் துணியில் பூசி ஐந்து சீலைமண்செய்து குக்குடப் புடம் போட்டு எடுத்துக் கரண்டியில் வைத்துக் கொடிக்கள்ளிச் சாற்றால் ஒரு சாமம் சுருக்குக் கொடுத்துக் கட்டியில் ஊசியினால் குத்த இறங்கும். அந்தப் பதத்தில் கல்வத்திலிட்டு அரைக்க மெழுகாகும்; அதை ஒரு காசு எடை தக்கத் துணைமருந்துகளிலிட கிரந்தி, குட்டம், கரப்பான், காசம், சன்னி, சுரம், சூலை, நீரோடுதல், புண், கழிச்சல், வாதம், இரணம் ஆகிய நோய்கள் தீரும்.

வீர மெழுகு.

பறங்கிப்பட்டை, கொடிவேலிவேர், சிவனார்வேம்புச் சமூலம், சேங்கொட்டை ஓர் எடையாய் நறுக்கிப் பாண்டத்திலிட்டுக் குழித்தைலம் இறக்கிவைத்துக் கொள்க. தூய்மை செய்த சவ்வீரம், இலிங்கம், இரசகற்பூரம் வகைக்கு 3 வராகன்எடை; இரசம், அரிதாரம், துருசுபற்பம், இந்துப்பு வகைக்கு ஒரு வராகன் எடை, இவற்றை மையாய்ப் பொடித்துக் கரண்டியில் போட்டு கால் படி மேற்படி தைலம் விட்டு ஓயாமல் கிண்டிக் கொடுத்து தைலம் வற்றின பின்பு தேன் அரைக் கால் படி விட்டுக் கிண்டி மெழுகு பதத்தில் கல்வத்திலிட்டுச் சாதிக்காய், கார்போகரிசி, திரிகடுகு, கோட்டம், அரத்தை, தேவதாரம், சன்னிநாயகம் (தும்பை), திப்பிலிமூலம், ஓமம், திப்பிலி, கொடிவேலி வேர்ப்பட்டை இவற்றைச் சமமாய் 1 வராகன் எடை பொடித்து, வடிகட்டிச் சேர்த்துத் தேன்விட்டு இரண்டு சாமம் மெழுகுபோல் ஆட்டி தந்தக் குப்பியில் அடைத்துக் கொண்டு மிளகு அளவு பனைவெல்லத்தில் பொதித்து ஏழுவேளை கொடுக்க நெஞ்சடைப்பு, மார்புகுத்து, விப்புருதி, வலிப்புகள், வயிற்றுவலி, முகவாத சன்னி, 18 வகைச் சூலை, கரப்பான், உதிரத்திரட்சி, உடல்கடுப்பு, சூதகவாயு, மந்தாரகாசம், சன்னிதோடம், கை காலில் விழும் கறுப்பு வெள்ளை, சொரி சிரங்கு, படர்தாமரை, குட்டம், மேக ரணம், கிரந்தி, அரையாப்பு, மேகப்புற்று, தீயதசைவளர்ச்சி ஆகியவை தீரும்.

பத்தியம்:– புளிப்புத் தள்ளவும். கொஞ்சம் இருமலும் வயிற்றுவலியும் வாய்ப்பிடிப்பும் ஏற்படும்.

குறிப்பு:– மருந்துண்டு மிளகு குடிநீரருந்தினால் இத்தீமைகள் அகலும்.

இரச மெழுகு.

ஒரு பலம் கெந்தகத்தில் பசுவின் வெண்ணெய்போட்டு உருக்கி மூன்று முறை மிளகுதக்காளிச்சாற்றிலும், இரண்டு முறை வேலிப்பருத்திச் சாற்றிலும் சுருக்கிட்டு எடுத்து அதையும் நான்கு சேங்கொட்டையும் வெட்டி ஒரு ஆழாக்கு விளக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு சொட்டுக் கீழேவிட்டுப் பார்க்கக் கந்தக நிறமாக இல்லாமல் இருந்தால் அந்தப் பதத்தில் இறக்கிக்கொண்டு 1 வராகன் எடை இரசத்தில் வார்த்துக் கலந்து வேளை ஒன்[illegible]க்கு மிளகு அளவு சருக்கரையில் கலந்து உண்ண மேகம் இருபத்து ஒன்[illegible] சூலை, கிரந்தி, சொரிசிரங்கு, வெட்டை ஆகிய நோய்களும் தீரும்.

Koviloor Digital Library

2. கந்தகம் 15 வராகன் எடை, பசுவின் வெண்ணெய் 2 பலம் சேர்த்துத் தீயில் கொளுத்திச் சுடர்த் தைலம் இளக்கிக் கல்வத்திலிட்டு இரசம் 4 வராகன் எடை சேர்த்து மெழுகுபோல் அரைத்துக்கொண்டு ஒரு காசு எடை வீதம் மூன்று நாள் ஆறு வேளை பனைவெல்லத்தில் உட்கொள்ள வாததூலை தீரும்.

மேற்படி மெழுகைச் சங்கங்குப்பிச்சாற்றில் கொடுக்க கிரந்தி, அரையாப்பு பவுத்திரம், தீரும். சிறுசெருப்படைச் சாற்றில் கொடுக்கச் சிரங்கு, சொரி தீரும்.

இலிங்க ரசகற்பூர மெழுகு.

இரசகற்பூரம் 2 வராகன் எடை, இலிங்கம் 1 வராகன் எடை, தாய்ப்பால், எலுமிச்சம்பழச்சாறு, தேன் இவற்றால் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் கரண்டியில் எடுத்துப்போட்டு மேற்படி சாறு கொஞ்சம் விட்டு அடுப்பேற்றித் தீபம்போல் எரிக்க உருகி மெழுகாகும். ஒருகாசு எடை வீதம் பனைவெல்லத்தில் கொடுக்க வயிற்று வலி, ஆதகத்திரப்பி தீரும். திரிகடுகு பொடியில் கொடுக்க வாயுதீரும்.

பாடாண மெழுகு.

ஒரு படி பூநீரை 4 படி சிறுநீரில் கலந்து ஒரு பலம் பாடாணம் துலாந்திரம் கட்டி எரித்துப் பிறகு ஒரு படி முந்திரிப்பழச்சாற்றில் சுருக்குக்கொடுக்கவும். பிறகு மெழுகாகும். வரை பிராய்மரம்பட்டைத் தைலத்தைச் சுருக்குக் கொடுத்து அதை ஒரு காசு எடை துணை மருந்துகளில் கொடுக்க சுரம், சன்னிதோடம் முதலிய நோய்கள் நீங்கும்.

மெழுகுவகைப் படலம் முற்றும்.

செந்தூரவகைப் படலம்.

அஃதாவது உலோகங்கள், உபரசம் முதலிய பொருட்களைத் தக்க பழரசம், மூலிகைரசம், செயநீர், திராவகம் முதலியவைகளை விட்டு 1 முதல் 50 புடம் தேவைப்பட்டவரை போடும் முறைகளைக் கூறுவதால் இது செந்தூரப் படலம் எனப் பெயர் பெற்றது.

குறிப்பு:- அயச்செந்தூரத்தை 500 ஆண்டுகள் வரை உபயோகிக்கலாம்.

அயச் செந்தூரம்

1. அரப்பொடியைப் பழச்சாற்றில் 3 நாள் ஊறவைத்துப் பிசறிக் கழுவிப் போட்டுப் பிறகு காடியில் 3 நாள் ஊறவைத்துக் கழுவித் தூய்மை செய்து, காட்டாமணக்குப் பாலில் 3 நாள் ஊறவைத்து, வெய்யிலில் உலர்த்திக் கல்வத்திலிட்டு மேற்படி பாலால் நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் இட்டுச் சீலைமண் செய்து கெசப்புடம் போடவும்.

Koviloor Digital Library

இப்படி மேற்படி பாலில் 11 புடமும்; மருதம்பட்டை, நாவற்பட்டை, கற்றாழைச்சமூலம் இவற்றை ஓர் எடையாய் இடித்துச் சாறு வாங்கி அதில் 25 நாள்கள் ஊறவைத்து அரைத்து 64 புடமும்; பொற்றலைக் கரிப்பான் இலையும், சீந்தில்தண்டும் ஓர் எடையாய் இடித்துப் பிழிந்த இரசத்தில் 25 புடமும்போட்டு வாதவுடலினர்க்குத் தேனிலும், பித்த உடலினர்க்கு வாழைப்பழத்திலும், நெய்யிலும், கப உடலினர்க்கு அரத்தையிலும், பாலிலும் உட்கொள்ளச் செய்ய சோகை, விசபாகவீக்கம், குடல் வாதம், உடல் வெளுப்பு 96 விதக் கண்நோய் நீங்கும்; உடம்பு பொன்போலாகும்; ஒளி உண்டாகும்; அதிக வலுவு உண்டாகும்; உதிர்ந்த மயிர்கள் முளைக்கும்; நரைமாறும்; மேற்சொல்லியதைத் திரிகடுகு தூளில் உட்கொள்ள பெருவயிறு, பக்கவாய்வு ஆகியவை தீரும். வேளைச் ஈசந்தில் கொன்ற குன்மம் சத்தி காசரோங்கள் தீரும்.

2. முன்போல் தூய்மைசெய்த அய அரப்பொடி 1 பலம், தூய்மைசெய்த கெந்தி 1 பலம், சிங்கி, முப்பு வகைக்கு 1 கழஞ்சு இவற்றைப் பொற்றலைக்கரிப்பான் சாற்றிலும், எலுமிச்சம்பழச்சாற்றிலும் வகைக்கு நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காய்ந்த பின் ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சீலைமண்செய்து முப்பது எருவில் புடம் போட்டெடுத்துப் பிறகு மேற்படி கரிப்பான் இலைச்சாற்றில் மூன்று புடம் போட்டுத் தக்க துணைமருந்துகளில் கொடுக்கப் பாண்டு, பித்தம், மெய்மயக்கம், கக்கல்(வாந்தி), வாயு ஆகியவை தீரும். உலர்ந்த இஞ்சித் தூளில் கொடுக்க பித்த வெட்டை, பித்தவாயு, சுவையின்மை, உணவு ஏலாமை (அரோசகம்), ஆகியவை தீரும்.

3. முன்போல் தூய்மைசெய்த நான்கு பலம் அய அரப்பொடியை நாவற்பட்டைச் சாற்றால் ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து கெசப்புடம் போடவும். இப்படிப்பொற்றலைக் கரிப்பான் சாற்றிலும், கவதும்பைச் சாற்றிலும் வகைக்கு ஒரு புடம் போட்டு எடுத்துத் திரிகடுகு. நற்சீரகம் இவைகளை ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்த தூள் முவ்விரல் அளவில் ஒரு காசு எடை செந்தூரம்வைத்து வாத உடலினர்க்கும்; ப்சுநெய்யில் கலந்து பித்த உடலினர்க்கும்; தேனில் கலந்து சிலேத்தும உடலினர்க்கும் கொடுக்க விடபாகம் தீரும்; கையாந்தகரைக் குடிநீரில் தேன்விட்டுக் காசு எடை வீதம் கொடுக்கச் சோகை, மஞ்சள் காமாலை தீரும். இவற்றிற்கெல்லாம் இச்சாபத்தியம்.

சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு இவற்றைப் பொடித்து ஒரு காசு எடைப் பொடியில் பண எடைச் செந்தூரம் வைத்துத் தேனில் கலந்து கொடுக்க மேகம் தீரும்.

4. தூய்மைசெய்த அய அரப்பொடி 1 ½ பலம், தூய்மைசெய்த கந்தகம் 4 ½ பலம் இவற்றைக் கல்வத்திலிட்டு சுண்ணாம்பு நீற்றைக் கலக்கித் தெளிய அந்தத் தெளிநீரால் 7 நாள் அரைத்துப் பரிதியில் போட்டு காய வைக்க உதிர்ந்து ஒரு சட்டியில் போட்டு மேல் சட்டி மூடிச்சீலைசெய்து இரண்டு சாமம் எரிக்கச் செந்தூரமாகும். அதைக் கரிசாலை இளகத்தில்

Koviloor Digital Library

உட்கொள்ள பாண்டு, சோகை, காமாலையும், பச்சரிசிக் கழுநீரில் உண்ணக் கிராணியும், தேன் அல்லது வெட்பாலையரிசியையும், சீரகத்தையும் குடிநீர் செய்து அதில் உட்கொள்ள மேகம், சொரிசிரங்கு புண் புரையும் தீரும்.

5. தூய்மைசெய்த அய அரப்பொடியை நாவற்பட்டைச்சாற்றில் நான்கு சாமம் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து கற்றாழஞ்சருகைத் தூள்செய்து மேற்படி தூளில் ஒரு குருணியை ஒரு பானையில் கொட்டி அதன் மேல், மேற்படி வில்லையை வைத்து மேலுமந்தத் துளைக் கொட்டி அதன் மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து 12 சாமம் எரித்து ஆற்றி இதற்கு முந்தின முறையில் சொல்லியபடி துணைமருந்தில் கொடுக்க மேற்படி நோய்கள் குணமாகும்.

6. முன்போல் தூய்மைசெய்த அய் அரப்பொடி 5 பலம், இலிங்கம் 2 பலம், சூதம், கெந்தி, பொரிகாரம் வகைக்கு 1 பலம் தங்கக் கழஞ்சு—1 இவற்றைப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றிலும், குமரிச்சாற்றிலும் வகைக்கு 2 சாமம், நாவறபட்டைசாற்றில் 3 சாமம், முருக்கம்பூச் சாற்றில் 4 சாமம், புளித்த மாதுளம்பழச் சாற்றில் ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக்காய் வைத்துக் கற்றாழஞ் சோற்றை நான்கு விரல் கனத்தில் ஒரு சட்டியில் போட்டு அதன்மேல் நாவல்பட்டையை இடித்த வேளை நான்கு விரற் கனத்தில் பரப்பி அதன்மேல் மேற்படி வில்லையை வைத்து மேலும் அதுபோலவே நாவற பட்டைத்தூளும், கற்றாழஞ்சோறும் போட்டு அதன் மேல் சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து அடுப்பேற்றி முத்தீயாக வகைக்கு 8 சாமம் எரித்து ஆற்றி எடுத்து கல்வத்தில் இட்டு குமரி, முருக்கம்பூ, வெண்ணாவறபட்டை இவற்றின் சாற்றால் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் காய வைதது ஓட்டில் இட்டு ஏழு சீலைமண் செய்து முழங்கால் பள்ளத்தில் புடம் போட்டு எடுத்து ஒரு காசு எடை வீதம் திரிகடுகுத் தூளில் 20 நாள் உட்கொள்ள எண்வகை காசம் மந்தாரகாசம், சுவாசகாசம், பாண்டு முதலியவை தீரும்.

அயகாந்தச் செந்தூரம்.

தூய்மை செய்த அயகாந்தம் அரப்பொடி வகைக்கு 1 பலம்; சாதிலிங்கம், கெந்தகம் வகைக்கு 2 பலம்; வெண்காரம், இரசம் வகைக்கு கால் பலம்; முப்பு 2 கழஞ்சு இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் நான்கு சாமமும், பொற்றலைக்கரிப்பான் சாற்றில் நான்கு சாமமும் அரைத்து வில்லை செய்து காய வைத்து ஓட்டில் இட்டுச் சீலைசெய்து முப்பது எருவில் புடமிட்டச் செந்தூரமாகும், இதைத் தக்க துணைமருந்தில் உட்கொள்ள ஆறு பாண்டும், கிராணி ஆறும், பித்தம் நாற்பதும், வாயுவாதம், அக்கினிமந்தமும் தீரும். தாதுவலிமையுறும்; உடல் வெளுப்பு நீங்கும். தேனில் உட்கொள்ள பாண்டு, சூலை, கருப்பை நோய், வாந்தி (கக்கல்), பொருமல், பித்தவாயு, சிலேத்துமம், தலைமயக்கம், வாயூறல், பித்தம் (அழல்) ஆகிய நோய்கள் நீங்கும்.

அயம், காந்தம், இரசம், கெந்தகம் இவற்றை ஓர் எடையாய்க் குமரிச்சாற்றால் ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டிக்காய வைத்து ஓட்டில்

Koviloor Digital Library

இட்டுச் சீலைமண்செய்து சேவல் புடம்போட்டு முவ்விரல் அளவு திரிபலை தூளில் தேன்விட்டுக் கலந்து காசு எடை செந்தூரம் வைத்து உண்ண வாதமும், பெருங்காயத்தில் வைத்துண்ண உருக்குநோயும் (சயம்) தீரும்.

தூய்மைசெய்த காந்தம், அரப்பொடி, சூதம், கெந்தி, சாதிலிங்கம் வகைக்கு 1 பலம் கற்றாழம்பாலில் ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டிக் காய வைத்து ஒரு பாண்டத்தில் வைத்து மேல் மூடி ஏழுசீலை மண்செய்து காடாக்கினியாக நான்கு சாமம் எரித்துக் காசு எடை இஞ்சிச்சாற்றில் உட்கொள்ளச் சோகை நோய் தீரும். சிந்தாதி இளகத்தில் பாண்டும் மேகமும் தீரும்; மற்றத் துணைமருந்துகளில் கொடுக்க வெட்டை தீரும். தாகம், வாயு, சயம், என்பு வெட்டை ஆகிய நோய்களும் தீரும்.

தூய்மைசெய்த அயம், காந்தம், கெந்தி வகைக்கு 1 பலம், பூநீர்ச் சுண்ணம் 2 ஆழாக்கு எலுமிச்சம்பழச்சாற்றால் நான்கு சாமம் ஆட்டி வில்லை தட்டிக்காய வைத்து ஓட்டில் இட்டுச் சீலைமண்செய்து ஒரு முழக்குழியில் ஐம்பதெருவில் புடம்போட்டு எடுத்துச் சாதிக்காய், சாதிப்பத்திரி, அதிமதுரம் அதிவிடையம், காயம், சுக்கு, திப்பிலி, மிளகு, அபின், கோட்டம் வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்து நான்கு பலம் பனைவெல்லம் சேர்த்து இடித்துத் தேன் விட்டுப் பிசைந்து வேளை ஒன்றுக்கு ஒரு சுண்டைக்காய் அளவில் செந்தூரம் குன்றுமணி எடை வைத்து உண்ண ஆறு வகைக் கிராணியும் மற்றத் துணைமருந்துகளில் கொடுக்க பாண்டு, சோகை, மஞ்சள் நோய்களும் (காமாலை) தீரும்.

மண்டூரச் செந்தூரம்.

1. நாள்சென்ற 4 பலம் மண்டூரத்தை இடித்து வெள்ளாட்டுச் சிறுநீர் குறுணி விட்டு 3 நாள் ஊறவைத்துக் காய்ச்சிப் பிறகு பசுவின் நீரில் பத்து முறை காய்ச்சித் தோய்த்துக் கழுவிப்போட்டுக் கற்றாழஞ் சாற்றில் ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் இட்டுச் சீலைமண்செய்து கெசபுடம் போடவும். இவ்விதம் மேற்படி சாற்றில் பத்து புடமும் நீர்முள்ளி, கரிப்பான், வீழி, வேலிப்பருத்தி, மாதுளம்பழம் இவற்றின் சாற்றில் வகைக்கு 10 புடமும் போட்டு காசு எடை கரிப்பான் சாற்றில் உட்கொள்ள மகோதரம், நச்சு நீர்க்கோவை, கெண்டை, பாண்டு, விடபாகம், சோகை, சூலை, பெருவயிறு, வயிற்றுப்புண் (குன்மம்), உடல்வீக்கம், நீர்க்கடுப்பு, வாதம், தாகம், குடல்வாதம், கக்கல் கிராணி ஆகிய நோய்கள் தீரும்.

2. முன்போல் தூய்மைசெய்த மண்டூரம் 1 பலம்; கெந்தி, சூதம் கெவுரி, வெடியுப்பு, சூடன், காரம், சீனம், தாளகம் வகைக்கு ஒரு பலம். இவற்றை எருக்கம்பாலில் ஆறுசாமமும், பழச்சாற்றில் இரண்டு சாமமும் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்துக் குக்குடபுடம் போடவும். இவ்விதம் செந்தூரமாகும் வரை புடம் போட்டு எடுத்துத் துணைமருந்துகளில் கொடுக்க எல்லாவகைப் பாண்டுகளும் தீரும்.

3. முன்போல் தூய்மைசெய்த மண்டூரத்தெடைக்குப் பத்தில் ஒன்று கெந்தி, சூதம், இலிங்கம், முப்பு, வெண்காரம், இவற்றைக் கூட்டி

Koviloor Digital Library

எலுமிச்சம்பழம், கரிப்பான், செருப்படை, செம்பை இவற்றின் சாற்றில் வகைக்குப் பத்து புடமும், அரசம்பட்டைச் சாற்றில் 5 புடமும் போட்டு எடுத்துத் திரிகடுகுத தூள், தேன் இவைகளில் உட்கொள்ள அழல் (பித்தம்), ஐயம் (சிலேத்துமம்), உடல் வெளுப்பு மாறும்.

தூய்மைசெய்த அரப்பொடி, காந்தம், மண்டூரம் வகைக்கு ஒரு பலம். இவற்றைக் கவுதும்பை, கரிப்பான் வெற்றிலைச் சாற்றால்வகைக்கு நான்கு சாமம் தனித் தனியே ஆட்டித் தனித்தனியே கெசபுடமாய் 5 புடம் போட்டெடுத் துணைமருந்துகளில் கொடுக்க முந்தின மருந்துகளில் சொல்லிய நோய்கள் அனைத்தும் தீரும்.

தூய்மைசெய்த அரப்பொடி, காந்தம், மண்டூரம் வகைக்கு 3 பலம், எருக்கம்பாலால் ஒரு சாமம் ஆட்டி வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து குழிவெட்டிக் கெசபுடம் போட்டு எடுத்து மேற்படிப் பாலிலும், கையாந்தகரை, வீழி, சிறுபீளை, சிறுகீரை, பொன்னாங்காணி, செந்நாயுருவி, நீர்முள்ளி, கற்றாழை இவற்றின் சாற்றிலும், உசிலம்பட்டைக் குடிநீரிலும் 10 முறை புடம் போட்டுத் திரிகடுகுத் தூளில் மேற்படி செந்தூரம் பண எடை வைத்துத் தேன்விட்டுக் கலந்துக் கொடுக்கப் பெருவயிறு, மஞ்சள்நோய் (காமாலை), பாண்டு, சோகை, மகோதரம், கல்லீரல் கட்டி (கவுசிகை), கால்கடுப்பு, வாதசூலை, மேகவெட்டை, நீர்க் கடுப்பு, சன்னி, சீதளம், மந்தாரசன்னி, அண்டவாதம், சயநோய் அகிய நோய்கள் தீரும்.

உருக்குச் செந்தூரம்.

பசுவின் நீரும், வெள்ளாட்டு நீரும் ஒன்றாய்க் கலந்த அதில் பத்து உருக்குளியைப் பழுக்கக் காய்ச்சித் தோய்க்க அதில் தகடாய் உதிரும்; அதை எடுத்துப் பொற்றலைக்கரிப்பான் சாற்றால் ஒரு நாள் ஆட்டி வில்லைசெய்து காய வைத்து அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசஞ் செய்து காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண்செய்து கெசபுடம் போட்டெடுத்து தொடர்ந்து ஆகாயத்தாமரை இலைச்சாற்றில் ஒரு புடமும், கற்றாழைச் சாற்றில் ஒரு புடமும் போட்டு எடுக்கச் செந்தூரமாகும். திரிபலைத் தூளும், வெல்லமும் கூட்டிப் பண எடை செந்தூரம் வைத்து பருத்த உடலினாக்குத் தேனிலும், உட்டிண உடலினாக்குப் பசுவின் நெய்யிலும் கலந்து கொடுக்க உடல் வலிமையுறும்; நரை திரை மாறும்.

திரிலோகச் செந்தூரம்.

1. தூய்மைசெய்த அயம், காந்தம், அப்பிரகம வகைக்கு 1 பலம்; கெந்தகம் 3 பலம்; இரசம் 1 ½ பலம்; பூநீர் 3 கழஞ்சு இவற்றைக் கல்வத்திலிட்டுப், பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, குமரி இவற்றின் சாற்றால் வகைக்கு நான்கு சாமம் ஆட்டி வில்லைசெய்து காயப்போட்டு நூறு எருவில் புடம் போட்டு இலிங்கம் பலம் அரை கூட்டி குமரிச் சாற்றால் நான்கு சாமம் ஆட்டி வில்லை தட்டிக்காய வைத்து முப்பது எருவில் புடம் போடச் செந்தூரமாகும். அதைச் சஞ்சீவித் தூளில், பண எடை செந்தூரம் வைத்து நெய்யில் கலந்து உட்கொள்ள மேகநீர்ப்பாண்டு, அழல் (பித்தம்), பிரமேகவாயு, உட்சூடு இருமல் நீங்கும்; உடம்பு குளிரும்.

Koviloor Digital Library

2. தூய்மைசெய்த அயம், உருக்கு, கிட்டம் வகைக்கு ஒரு பலம் நாவற்பட்டைச் சாற்றில் ஒரு சாமம் ஆட்டி, வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் இட்டு சீலைமண் செய்து கெசபுடம் போடவும். இவ்விதம் ஐந்து புடம் போட்டுச் சிற்றாமணக்கு இலையில் பொதிந்து நெய்ப் பாண்டத்துக்குள் இருபது நாள் வைத்துப் பண எடை துணைமருந்துகளில் உட்கொள்ள பாண்டு, சோகை, மஞ்சள் நோய், பெருவயிறு, நீர்க்கழிச்சல், நச்சுநீர்க்கோவை வாய்க்கசப்பு, கக்கல்(வாந்தி), இருமல், இளைப்பு, வாயு, பொருமல் ஆகியவை தீரும்.

பஞ்சலோகச் செந்தூரம்.

தங்கம், வெள்ளி, செம்பு, காந்தம், இரும்பு இவற்றை ஓர் எடையாய்த் தூய்மைசெய்து அதற்கு இரண்டு பங்கு கெந்தகம், சூதம் அரைப் பங்கு, வீரம் கால் பங்கு, கூட்டி முப்புச் சுண்ணம் 1 கழஞ்சு, கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றிலும், கரிசாலைச்சாற்றிலும் வகைக்கு 4 சாமம் ஆட்டி, முழப்புடத்தில் போட்ட பின், சிறு செருப்படைச்சாற்றில் 4 சாமம் ஆட்டி முழப் புடம் போடச்செந்தூரமாகும். அதில் பண எடை திரிகடுகு தூளில் வைத்துத் தேன் விட்டுக் குழைத்து ஒருமண்டலம் உட்கொள்ள எண்பது வகை வாயுவும், அழல் (பித்தம்), எருவாய் நோய் (மூலம்), சிலேத்துமப்பிணி முதலான நோய்களும் தீரும்.

அப்பிரகச் செந்தூரம்.

1. பசுவின் நீரும், வெள்ளாட்டு நீரும் ஒன்றாய்க் கலந்து அதில் கிருட்டிண அப்பிரகத்தைக் கொல்லனுலையில் பழுக்கக் காய்ச்சித் தோய்த்து உரலில் இட்டுக் கடப்பாறையால் இடித்து நெல்லுடன் கலந்து அவித்துக் கம்பளியில் கட்டிக் காடியில் பிசைந்து மறுநாள் தெளிய இறுத்து அடியில் உறைந்திருக்கும் அப்பிரக நவநீதத்தைப் பரிதியில் உலர்த்தியது பத்து பலமும் கெந்தி ஒரு பலமும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றால் நான்கு சாமம் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிவிட்டுச் சீலை செய்து முப்பது எருவில் புடம் போடவும். இவ்விதம் புடந்தோறும் 1 பலம் கெந்திசேர்த்து எலுமிச்சம்பழம், கரிசாலை, செருப்படை இவற்றின் சாற்றில் வகைக்கு ஒரு புடம் முறைப்படி போடச் செந்தூரம் அருணன் போல் ஆகும். துணை மருந்துகளில் கொடுக்க சயம், ஈளை, இருமல் முதலான 96 வகைச் சிலேத்தும நோய்களும்; அமிர்தசஞ்சீவித் தூளுடன் கொடுக்க மேகநீரிழிவு, ஒழுக்குநோய் (பிரமியம்), எலும்புருக்கி, உட்சூடு, உள்ளிவு நீங்கும். விந்தூறும்; ஊட்டம் மிகும்; கண் குளிர்ச்சி அடையும்.

2. இரண்டு பலம் அப்பிரக நவநீதத்திற்குக் கெந்தி, தங்கம வகைக்கு அரை வராகன் எடை வீதம் புடந்தோறும் சேர்த்துச் சிறு செருப்படைச் சாற்றால் நான்கு சாமம் ஆட்டிப் பரிதியில் உலர்த்தி முப்பது எருவில் முப்பது புடம் போடச் செந்தூரமாகும். அந்தச் செந்தூரம், குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கற்பூரம், நத்தைச்சூரிவிதை, கூகைநீர் வகைக்கு 5 வராகன் எடை; புனுகு, அபின் வகைக்கு 1 ½ வராகன் எடை, இவற்றைச்

Koviloor Digital Library

செவ்விளநீராலும், கரும்புச் சாற்றாலும், மாதுளம்பழச் சாற்றாலும் வகைக்கு ஒரு சாமம் ஆட்டிக் குன்றி போல் உருண்டை செய்து காலையிலும் மாலையிலும் ஒவ்வோர் உருண்டை வீதம் பசுவின் பாலில் அரைத்துச் சாப்பிட நீரிழிவு, பிரமேகம் ஆகிய நோய்கள் தீரும். விந்துப் பெருக்கமும், உடல் ஒளியும் உண்டாகும். சாதிக்காய்த் தைலமும் கசகசாத் தைலமும் ஓர் எடையாய்க் கலந்து கால் வராகன் எடை தைலத்தில் செந்தூரம் ஒரு காசு எடை கலந்து மாலையில் உட்கொண்டு, இரவில் பாலும் சோறும் உண்டு வந்தால் புணர்ச்சியில் விந்து கட்டும்.

3. அப்பிரக நவநீதம் 10 பலம் முள்ளங்கிக் கிழங்கு சாற்றில் 4 சாமம் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து கெச புடம் போடவும். இவ்வாறு மேற்படி சாற்றிலும் ஆல், அரசு, நாவல், அத்தி இவற்றின் பட்டைகளை ஓர் எடையாய் இடித்துச் செய்த குடிநீரிலும், கொடிவேலிவேர்க் குடிநீரிலும், எலுமிச்சம்பழம், கவுதும்பை, கரந்தை, சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான், முருக்கம்பூ, குமட்டி மாதுளம் பழம், புளிப்பு மாதுளம்பழம் இவற்றின் சாற்றிலும் வகைக்கு பத்துப் புடம் போட்டு எடுத்துத் தக்க துணை மருந்துகளில் உட்கொள்ள மேகமும், நீர்ச்சுருக்கு கிருச்சரம், பிரமேகம், மேகவாயு, தொடர்கழிச்சல், சன்னி, என்புசுரம், என்பு வெட்டை, உடல் வறட்சி, கை கால் எரிவு, காந்தல் நீங்கும். பசுவின் பாலில் உட்கொள்ளத் தாது கட்டும்.

4. அப்பிரக நவநீதத்தை எருக்கம்பாலில் 7 நாள் ஊறவைத்து 4 சாமம் மேற்படி சாற்றால் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு சீலை செய்து கெசபுடம் போட்டுப் பின்பு முள்ளங்கிக்கிழங்கு, செங்குமரி, நாயுருவி, கொழிஞ்சி, இஞ்சி, மருட்கிழங்கு, கருணைக்கிழங்கு, கருவாழை, பொன்னாங்காணி, சாரணை, மணித்தக்காளி, கறிப்பிரண்டை, நீர்முள்ளி, கொட்டைக்கரந்தை, திருநீற்றுப் பச்சை, கச்சந்திராய், பொற்றலைக்கரிப்பான் இவற்றின் சாற்றிலும் ஆலம் விழுதுக் குடிநீரிலும் வகைக்கு மூன்று புடம் போட்டு ஒரு காசு எடை துணை மருந்துகளில் உட்கொள்ளத் தாது கட்டும்; நரம்புகள் முறுக்கேறும்; உடல் வளமாகும். பத்தியமில்லை.

5. அப்பிரக நவநீதம் 4 பலம் கோவையிலைச் சாற்றில் நான்கு சாமம் ஆட்டி ஐம்பது எருவில் புடம் போட்டுக் கெந்தகம், சூதம், பவழம், காந்தம் வகைக்கு 2 பலம் சேர்த்துக் கரிப்பான் சாற்றிலும் உதியம் பட்டை, ஆவாரம் பட்டை, ஆலம் விழுது இவற்றின் குடிநீரிலும், குமரிச் சாற்றிலும், பொற்றலைக்கரிப்பான் சாற்றிலும் தளுக்கற்று அருணன் போல் சிவக்கும் வரை புடம் போட்டு எடுத்து வைத்துத் துணைமருந்துகளில் உட்கொள்ள மேகமும் நீரிழிவும் தீரும்.

கருவங்கச் செந்தூரம்.

1. காரீயத்தை எலுமிச்சம் பழச் சாற்றிலும் நல்லெண்ணெயிலும், கோநீரிலும், கொள்ளுச் சாற்றிலும், காடியிலும் வகைக்கு ஏழுமுறை உருக்கிச் சாய்த்து தூய்மை செய்தது 2 பலம்; சூதம், 2 பலம் இருப்புச் சட்டியிலிட்டு உருக்கும்போது ஆவாரைப் பஞ்சாங்கத்தை இடித்துத் தூள் செய்து தூவி நான்கு சாமம் வறுத்துப் பின்பு ஒரு சாமம் அரைத்துச் சிறுசெருப்படை,

Koviloor Digital Library

எலுமிச்சம்பழம், கற்றாழை, பொற்றலைக்கரிப்பான் இவற்றின் சாற்றில் வகைக்கு நான்கு சாமம் ஆட்டி வில்லை செய்து காயவைத்துக் கோழிப்புடம் போட்டு ஒரு காசு எடை தேன் அல்லது நெய்யில் உண்ணச் செய்ய ஒழுக்குநோய் (பிரமியம்), பெரும்பாடு, நீர்ச் சுருக்கு, கல்லடைப்பு, நீரிழிவு ஆகிய நோய்கள் தீரும்.

2. முன்போல் தூய்மைபோல் 1 சேர் காரீயத்தை இருப்புச் சட்டியில் உருக்கி முப்புச்சுண்ணம், துருசுச் சுண்ணம் வகைக்கு ஒரு கழஞ்சு; ஐந்தாங்காய்ச்சல் வெடியுப்பு 16 பலம் ஒன்றாய்ப்பொடித்துச் சிறுகச்சிறுகத் தூவி அசுவகெந்திவேரினால் நான்கு சாமம் கடைந்து கல்வத்தில் இட்டுப் பூநீரை அமுரியில் கரைத்துத் தெளிவிறுத்து அதனால் ஒரு சாமம் ஆட்டி சிறு விஷ்ளைசளாக செய்து காலவைத்து ஒரு சட்டியில் பச்சைப் பனை ஓலையை விரித்து அதன்மேல் மேற்படி வில்லைகளைப் பரப்பி மேல் சட்டி மூடிச் சீலை செய்து கமலாக்கினியாய் நான்கு சாமம் எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதை 1 காசு எடை துணைமருந்துகளில் உட்கொள்ள 20 வகை மேகமும்; குமரி இளகத்தில் உட்கொள்ள சூலை, தொடர்கழிச்சல் (கிராணி), 80 வகை வளி (வாதமும்), 40 வகை பித்தம் (அழல்), 96 வகை ஐயம் (சிலேத்துமம்), நீங்கும். உடல் வளமை பெறும். பத்தியத்திற்குப் பசுவின் பாலும் நெய்யும் சேர்த்துக் கொள்ளலாம்.

3. தூய்மை செய்த கருவங்கம் அரைப் பலம் அயச்சட்டியில் இட்டு உருக்கி அதில் இரசம் அரைப் பலம்; கெந்தகம், மனோசிலை, அரிதாரம் வகைக்கு கால் பலம் ஒன்றாய்ப் பொடித்துச் சிறுகச்சிறுகத் தூவியும் கற்றாழஞ் சோற்றில் கடுக்காய்ப் பொடி தூவிப்பிசைந்து வைத்திருக்க நீர் ஊறும். அதைச் சிறுகச்சிறுக விட்டும் அயக் கம்பால் கிண்டிக் கொடுக்கச் செந்தூரமாகும். அதில் ஒரு பண எடை நெய்யில் உட்கொள்ள நீரிழிவும், சுக்குக் குடிநீரில் உட்கொள்ளச் சுரமும்; கரிப்பான் சாற்றில் உட்கொள்ள மஞ்சள் நோய், பாண்டு ஆகிய நோய்களும் தீரும்.

4. தூய்மை செய்த கருவங்கம் ஒரு பலம் உருக்கி, முடி ஒரு பலம், மனோசிலை கால் பலம் ஒன்றாய்ப் பொடித்து இரண்டு சாமம் வரை சிறுகத் தூவி அயக்காம்பால் கிண்டி வறுத்து அப்பால் வெடியுப்பு ஒரு பலம்; ஆவாரை வேர்ப்பட்டை 2 ½ பலம் ஒன்றாய்ப் பொடித்து இரண்டு சாமம் வரை சிறுகத்தூவிக் கற்றாழை வேரினால் கிண்டி வறுத்து குமரி, எலுமிச்சம்பழம், சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான் இவற்றின் சாற்றில் வகைக்கு ஒரு புடம் போட்டு எடுத்துத் துணைமருந்துகளில் உட்கொள்ள மேக நீரிழிவு, வறட்சி, கிரந்தி, சூலை, பெரும்பாடு, மேகப்பற்று ஆகிய நோய்கள் தீரும்.

5. தூய்மை செய்த கருவங்கம் 1 பலம், ஆடாதோடை வேராலும் ஆடுதீண்டாப்பாளை வேராலும் வகைக்கு இரண்டு சாமம் வறுத்துக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றிலும் கொட்டைக் கரந்தைச்சாற்றிலும் அரைத்து வகைக்கு மூன்றுபுடமும், வெற்றிலைச்சாற்றில் பத்துப்புடமும் போட்டுத் துணைமருந்துகளில் உட்கொள்ள மேகம் முதலிய கொடிய நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

6. தூய்மை செய்த கருவங்கம், நற்பவழம், சலாசத்து வகைக்கு 1 பலம், சூதம் அரைப்பலம் இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றால் 3 நாளாட்டி வில்லைசெய்து காயவைத்துப் புடம் போட்டு எடுத்து நான்கில் ஒரு பாகம் கெந்தி சேர்த்துப் பொற்றலையின் சாற்றால் ஆட்டிச் சிவக்கும்வரை புடம் போட்டு அமிர்தசஞ்சீவி இளகத்தில் உட்கொள்ள கழிச்சல், கடுப்பு, இரத்தமாய்க் கழிதல், எருவாய்க் காந்தல், இலிங்கப்புற்று முதலான கொடிய மேகநோய்கள் தீரும்.

7. தூய்மைசெய்த வங்கம், சூதம், பவழம், இலிங்கம் வகைக்கு 1 பலம் எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து, வில்லைதட்டிக் காயவைத்து, ஓட்டில் சீலைசெய்து மணல் மறைவில் மூன்று புடமும் வெளியில் ஐந்து புடமும்போட்டுத் துணைமருந்துகளில் கொடுக்க, கழிச்சல் (கிராணி) ஆகிய நோய்கள் தீரும்.

தாமிரச் செந்தூரம்.

1. ஐந்து பலம் தாமிரத்தைக் குகையிலிட்டு உருக்கி அண்டத்தோல் 1 பலம், மஞ்சள்வளை (கௌரிப்பாடாணம்), வெண்காரம், சாரம், பூரம், வெடியுப்பு, வீரம், சீனம், பூநீர்ச்சுண்ணம், வகைக்கு ஒரு கழஞ்சு. இவைகளை குழி அம்மியிலிட்டு அரைப்படி பழச்சாற்றால் ஆட்டிப் பணம்போல் வில்லைசெய்து காயவைத்து, ஒவ்வொரு வில்லையாய்க் கொடுத்துப் பின்பு அதை மறு குகையிலிட்டு உருக்கி 1 பலம் எலுமிச்சம்பழச்சாறும், கால்படி தாய்ப்பாலும் சுருக்குக்கொடுத்த தாளகம் 1 பலம்; வெண்காரம் சாரம் 2¼ பலம் கல்வத்திலிட்டு 1 படி திருகுகள்ளிப் பாலில் மேற்படி கள்ளியுப்பு, நவாச்சாரம், வீதம், பூரம், வெடியுப்பு, பூநீர் சீனம் வகைக்கு ஒரு கழஞ்சு பொடித்துப்போட்டு மூன்று நாள் வைத்திருந்து 3 ஆம் நாள் அரைத்துக் காசுபோல் வில்லை செய்து காயவைத்து, உருக்குமுகத்தில் ஒவ்வொரு வில்லையாகக் கொடுக்கக் களிம்பற்று, செம்புநிறம் மாறி வெண்கலம் போலாகும். அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, அதற்கு இரண்டு பாகம் சூதமும் வீரமும் சேர்த்து, பூநீர்ச்சுண்ணம் பத்துக் கழஞ்சு சேர்த்து, தாய்ப்பாலில் மூன்று நாள் ஆட்டிக் காயவைத்து கண்ட எடைக்கு கெந்தி, சேர்த்துப் பொற்றலைக் கரிப்பான் சாற்றால் ஆட்டி, ஐம்பதெருவிற் புடம்போட செந்தூரமாகும் காசு எடை திரிகடுகு தூளில் உட்கொள்ள வயிற்றுப்புண் (குன்மம்), வாயு, இடப்பாட்டீரல் நோய் (பீலிகை), உதிரத்திரட்சி, பெருவயிறு, நீர்க்கோவை, நீராமை ஆகிய நோய்கள் தீரும்.

மருந்துணவு:— பசுவின்பால் நெய் சேர்த்துக் கொள்ளவும்.

2. முன்போல் தூய்மைசெய்த தாம்பிரத்திற்குப் பாதிகெந்தியும் சூதமும் கூட்டி, பழச்சாற்றால் ஒரு நாளாட்டி, வில்லை செய்து காயவைத்துக் கெசபுடம் போடவும். இவ்விதம், சிவக்கும்வரை சூதம், கெந்தி கூட்டிப் புடம்போட்டு எடுத்து காசு எடை துணைமருந்துகளில் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

3. முன்புபோல் தூய்மை செய்த தாம்பிரம் 10 வராகன் எடை, கெந்தகம் 8 வராகன் எடை, இரசம் 6 வராகன் எடை கல்வத்திலிட்டு நொச்சி

Koviloor Digital Library

இலைச்சாற்றால் மூன்று நாளாட்டி, அரசிலைபோல் இலேசாய்த் தட்டிக் காயவைத்து, ஒரு சட்டியில் பாதி வரை உப்பிட்டு அதன்மேல் வில்லைகளைப் பரப்பி, மேலும் உப்புக்கொட்டி அடுப்பேற்றித் தீபம் போல் எட்டுச் சாமம் எரித்து, ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதில் காசு எடை துணைமருந்துகளில் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

4. முன்புபோல் தூய்மை செய்த தாமிரத்தின் எடைக்குச் சமமாகக் கெந்தி சேர்த்து எருக்கம்பாலால் நான்கு சாமம் ஆட்டி, வில்லை தட்டிக் காயவைத்துக் கெசபுடம் போட்டுப் பின்பு திரிபலைக் குடிநீரிலும், பசுவின் பாலிலும், கற்றாழஞ்சாற்றிலும் வகைக்கு நான்கு புடம் போட்டு, பிறகு எருக்கம்பால், வெள்ளாட்டுப்பால், தாமரைக்கிழங்கு, அரசம்பட்டை, பொற்றலை இவற்றின் சாற்றால் வகைக்கு ஒரு புடம்போடச் செந்தூரமாகும். அதில் காசு எடை துணைமருந்துகளில் கொடுக்க மேற்கண்ட நோய்களும் தீரும்.

5. முன்புபோல் தூய்மைசெய்த தாம்பிரம் 1 பலம், பொன்னிமிளை 1 பலம், சூதம் 4 பலம், கெந்தி 8 பலம் இவற்றைக் கல்வத்திலிட்டு பொற்றலைக்கரிப்பான் சாற்றில் மூன்று நாளாட்டி, வில்லை தட்டிக் காயவைத்து, மணல் மறைவில் புடம் போட்டுப் பின்பு, மேற்படி சாற்றில் அரைத்து வெளியில் ஐந்து கோழிப் புடம்போட்டு, துணைமருந்துகளில் கொடுக்க எருவாய் நோய் (மூலம்), வயிற்றுப்புண் (குன்மம்), சூலை, புற்று முதலான எல்லா நோய்களும் தீரும். தாது வலிமை உண்டாகும்.

நாகச் செந்தூரம்.

1. இலுப்பை நெய்யில் பத்து முறை உருக்கிக் காய்ச்சித் தூய்மை செய்த நாகத்தை குகையிலிட்டு உலையில் வைத்து உருக்கி, அதில் 1 பலம் மனோசில்லையைப் பொடித்துத் தூவி, வெண்கொழிஞ்சிவேரால் கிளற நீறும். அதைக் கல்வத்திலிட்டுச் சூதம், வீரம் வகைக்கு 1 பலம் கூட்டித் தாய்ப்பாலால் நான்கு சாமம் ஆட்டி, பிறகு கெந்தகம் இரண்டு பாகம் சேர்த்துப் பொற்றலைக் கரிப்பான் சாற்றால் அரைத்து, ஆறுமுறை கோழிப்புடம் போட்டு எடுத்த செந்தூரம், குன்றிமணி எடை துணைமருந்துகளில் கொடுக்கக் காசம், வலிகுன்மம், எரிகுன்மம், கல்லீரல்கட்டி, (கவுசை), புண், சூலை, கிராணி (உள்மூலம்), மேகம், வாதம், இடப்பாட்டீரல் நோய் (பீலிகை), மஞ்சள்நோய், காய்ச்சல், குளிர், மந்தாரகாசம் ஆகிய நோய்கள் தீரும்.

2. ஒரு பலம் தூய்மைசெய்த நாகத்தை அயச்சட்டியில் உருக்கி அதில் வளையலுப்பு, மஞ்சள் அரைப்பலம் தூவி அயக்கரண்டியால் கிளறிப் பிறகு, செந்நாயுருவிச் சமூலத்தை இடித்த தூளைச் சிறுகச்சிறுகத் தூவிச் சிவக்கும்வரை கிளறி எடுக்கச் செந்தூரமாகும். இதில் காசு எடை துணைமருந்துகளில் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

3. தூய்மை செய்த நாகம் 4 பலம் இரும்புச் சட்டியில் உருக்கி வெடியுப்பு 1 பலம், ஓமம், சுக்கு, மஞ்சள் வகைக்கு 3 படி ஒன்றாய்ப் பொடித்துத் தூவி, அறுகம்வேரால் இரண்டு சாமம் கிளறி கொடுத்துப் பிறகு,

Koviloor Digital Library

நாயுருவிச்சமூலம் இடித்த தூளைச் சிறுகத்தூவிக் கிளறிக்கொடுத்துச் சிவந்தபிறகு, எலுமிச்சம்பழச்சாற்றால் ஆட்டி, வில்லைசெய்து காயவைத்துப் புடம்போட்டுக் காசு எடை துணை மருந்துகளில் கொடுக்க ஈளை, இருமல், எலிக்கடிநஞ்சு, காசம், எருவாய் நோய் ஆகியவை தீரும்.

காளமேக நாராயண செந்தூரம்.

1. எட்டாங் காய்ச்சல் வெடியுப்பு, சீனம் வகைக்கு 24 பலம், வெண்மையாய் வறுத்தத் துருசு, வெண்காரம், கல்லுப்பு வகைக்கு 6 பலம்; பூநீர் 3 பலம் இவற்றைப் பொடித்து, மூன்று பங்குசெய்து, ஒரு பங்குத்திராவகம் இறக்கி, அதை மற்றொரு பங்கில் விட்டுப் பிசைந்து உலர்த்திப் பொடித்துத் திராவகம் இறக்கி, அதை மூன்றாவது பங்கில் விட்டு பிசறி உலர்த்தி திராவகம் வடித்துப் பளிங்குகல்குப்பியில் வடித்துக்கொண்டு, வாலைரசம் 30 பலம், சாதிலிங்கம் 15 பலம், அரிதாரம் 10 பலம், கெந்தகம் 12 பலம், மனோசிலை 4 பலம் இவற்றைக் கல்வத்தில் இட்டுப் பொடித்து, மேற்படி ஏழு சீலைமண்செய்து காய வைத்து, உலர்த்திக் குப்பியிலிட்டு, பலப்பக்கல்லால் அடைத்து, ஒரு சட்டியில் நான்கு விரல்கடை அளவு பொடிமணலைக் கொட்டி, அதன் மேல் குப்பியை வைத்து அதன் கழுத்து வரையில் மணலைக் கொட்டி, மேல்சட்டி மூடி, சீலை செய்து 10 சாமம் ஆவாரைவிறகில் எரித்துச் சட்டியைத் திறந்து சலாகை போட்டுக் கிளறிக்கொடுத்துப் பார்க்க, நிறமில்லா விட்டால் இன்னும் இரண்டு சாமம் எரித்து, ஆறவிட்டு எடுக்கச் செந்தூரமாய் இருக்கும். தூதுவளை, கண்டங்கத்திரி, ஆடதோடை இவற்றைஒர் எடையாய் இடித்துப் பிட்டவித்து அரைக்காற்படி சாறுபிழிந்து அதிலொரு கரண்டி தேனுடன் அரைக்காசு எடை செந்தூரமும் கலந்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை 20 நாள் கொடுக்க, 69 வகை சிலேத்துமநோய்களும், எலிக்கடி, வயிற்றுப் பொருமல், மேலிளைப்பு, 13 வகை சன்னி, சன்னிமூர்ச்சை, சிலேத்துமமூர்ச்சை இப்படிப்பட்ட 180 நோய்களும் தீரும்.

2. திப்பிலியை வெதுப்பிப் பொடித்தத் தூள் திரிகடியில், அரைக் காசு எடை செந்தூரம் வைத்துத் தேனில் கலந்து, இரண்டு வேளையும் ஒரு மண்டலம் உட்கொள்ள 18 வகை சூலைநோய், குட்டம் குறைநோய் ரணம் நஞ்சு, அரையாப்பு, புற்று, கபாலசூலை, கன்னோசி, கன்னப்புற்று, பீனிசம், நெஞ்சுநோய், காதடைப்பு, நெஞ்சடைப்பு, காதுமந்தம், வீக்கம் ஆகிய நோய்கள் தீரும்.

3. வெள்ளுள்ளித் தைலத்தில் அரைக் காசு வீதம் இரண்டு வேளையும் 10 நாள் உட்கொள்ள வாதமூர்ச்சை, அற்புதவாதம், குருதிவாதம், சன்னிமூர்ச்சை, சிலந்தி, கன்னோசி, கரப்பான், சன்னி 18-ம் தீரும்.

4. நெல்பொரி, ஓமம், திப்பிலி, சுக்கு, மிளகு இவற்றை வெதுப்பிப் பொடித்தத் தூள் திரிகடி அளவும் அரைப்பண எடை செந்தூரம், முருங்கைப்பட்டைச் சுரசத்தில் ஒரு மண்டலம் உட்கொள்ள சன்னிவாதம், பக்கவாதம், சருவாங்கவாதம், தோள்வாதம், எரிவாதம், குருதிவாதம், நடுக்குவாதம், பிடிவாதம், முடக்குவாதம், கெண்டைவாதம், அசந்தவாதம், இடுப்புவாதம், முதலான 80 வாதமும்; பித்தநடுக்கம், சிலேத்துமநடுக்கம்,

Koviloor Digital Library

சருவாங்க நடுக்கம், இருமல், ஒக்களித்தல், தலைநடுக்கம், கால் நடுக்கம் கண் செவி கபாலநடுக்கம், உள்வீச்சு, கக்கல், புறவீக்கம், குன்மம், வலிகுன்மம் முதலான எரிகுன்மம் எண்வகை வயிற்றுப் புண் (அட்டகுன்மம்), வாயுவகைகளும், மூலவாயு, குருதித்திரட்சி, கல்லீரல்கட்டி(கவுசை), கல்லடைப்பு, சதைஅடைப்பு, நீரடைப்பு இவ்வாறான 300 வகை நோய்களும் தீரும்.

5. நிலவாகைச்சாற்றில் அரைக் காசு எடை செந்தூரமிட்டு ஒன்றுவிட்டு ஒரு நாள் இரண்டு வேளை 10 நாள் உட்கொள்ள கருப்பை விப்புருதி, மடுவிப்புருதி, விலாவிப்புருதி, உளைமாந்தை, பக்கவாயு, அண்டவாயு, அண்டவாதம், தொடை வாதம் கழல்வாதம், இடிசூலை, பக்கசூலை, வாதசூலை, அல்குல்சூலை, நாபிச்சூலை, கிருமி குருதிவாயு, இரணங்கள், கண்சூலை முதலிய நோய்கள் தீரும்.

குறிப்பு: மேல் சொல்லிய நோய்களுக்கும் மற்ற நோய்களுக்கும் அவற்றிற்குரிய மற்றத் துணைமருந்துகளிலும் மேற்படி செந்தூரம் வைத்துக்கொடுக்கலாம்.

6. தூய்மை செய்த இரசம் 60 வராகன் எடை, கெந்தி 15 வராகன் எடை, அரிதாரம் 8 வராகன் எடை, இலிங்கம், மனோசிலை வகைக்கு 4 வராகன் எடை; அல்லது தூய்மைசெய்த கெந்தகம், சூதம் வகைக்கு 60 வராகன் எடை; இலிங்கம் 15 வராகன் எடை, தாளகம் 5 வராகன் எடை, மனோசிலை 2 ½ வராகன் எடை, இவற்றை எருக்கம்பால், துளசி இலை கவதும்பை, சிறுசெருப்படை, செம்முள்ளி, மாதுளம் இலை, பூ, முருக்கம்பூ; இவற்றின் சாற்றால் வகைக்கு இரண்டு சாமம் அரைத்து உலர்த்தி, குப்பியில் அடைத்து மணல்மேல் வைத்து 24 சாமம் எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரம், முருக்கம்பூ போல் இருக்கும். அதை மேற்படி மருந்துகளில் சொல்லியபடி நோய்க்குத் தகுந்த துணைமருந்துக்ளில் கொடுக்கத் தீரும்.

ஈசுர சிந்தாமணி செந்தூரம்.

1. தூய்மைசெய்த இரசம் 2 பலம், கெந்தி 2½ பலம், சாதிலிங்கம் 1 பலம், மனோசிலை அரைப்பலம் இவற்றைப் பொற்றலைக்கரிப்பான், மாதுளம்பூ, முருக்கம்பூ, பிச்சிப்பூ இவற்றின் சாற்றால் வகைக்கொரு நாள் அரைத்து, உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண்செய்து, குப்பியில் அடைத்துப் பலப்பக்கல்லால் மூடி, ஒரு சட்டியில் நான்கு விரற்கடை மணல் பரப்பி, அதன்மேல் குப்பியை வைத்து, அதன் கழுத்துவரை மணல் கொட்டி, அடுப்பேற்றி தீபாக்கினியாய் ஒரு சாமம் எரித்து, கமலாக்கினியாய் ஒரு சாமம் காடாக்கினி யாய் 21 சாமம் எரித்துத் தீயாற்றி எடுக்கச் செந்தூரமாகும், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குரோசானி ஓமம், அதிவிடையம் வகைக்கு 1 பலம் வெதுப்பிப் பொடித்துத் திரிகடி அளவில் ஒரு காசு எடை செந்தூரத்தை வைத்து நாளுக்கு இருவேளை வீதம் 10 நாள் உட்கொள்ள சகல கிராணி, செரியாமை, தொடர்கழிச்சல் ஆகியவை தீரும்.

2 மருட்கிழங்கை உலர்த்தி இடித்த மும்விரல் தூளில், காசு எடை செந்தூரம் வைத்து இருபது நாள் சாப்பிட்டுவர, 9 வகை எருவாய் நோய்களும் தீரும்.

Koviloor Digital Library

மருத்துணவு:– கீரைத்தண்டும் கோழிக்கறியும் சேர்த்துக் கொள்ள நவமூலம் தீரும்.

3. பறங்கிப்பட்டை தூளில் செந்தூரம் வைத்துத் தேன் விட்டுக் கலந்து இருபது நாள் உட்கொள்ள விப்புருதி, மேகம், இரணம் முதலான நோய்கள் பற்றாமல் தீரும்.

4. வெருகங்கிழங்கு, விளாம்பொருக்கும் ஓர் எடையாய்க் குழித்தைலமிறக்கி ரசகர்ப்பூரம் பணவெடை கால் செந்தூரம் ஒரு காசு எடை வைத்துக்கலந்து இரண்டு வேளையும் ஒரு மண்டலம் (48 நாள்) உட்கொள்ள, குட்டம் (தொழுநோய்) பதினெட்டும், வண்டுகடி, நச்சுக்கடி, குதிரைவலிப்புநோய், சிரங்கு, சொரி, கபாலகுட்டம், நச்சுக்கடியில் உண்டாகும் நோய்கள் யாவும் தீரும்.

5. பிரண்டையைத் தைலம் இறக்கி, அதில் காசு எடை செந்தூரம் வைத்து, இருபதுநாள், உட்கொள்ள சகல குன்மமும், சகல வாயுவும் தீரும்.

6. தாமரைப்பூச் சாற்றிலாவது, அல்லிப்பூச் சாற்றிலாவது, செங்கழுநீர்ப்பூச் சாற்றிலாவது 1 காசு எடை செந்தூரம் வைத்து, இருபது நாள் உட்கொள்ள காங்கை, சுரம் தீரும்.

7. வெற்றிலைச்சாற்றில் கலந்து சாப்பிட சுரம், என்புசுரம், நீங்கும், வில்வாதி இளகத்தில் சாப்பிட ஈளை, இருமல், மந்தார காசம், உளைமாந்தை, சுரமாந்தை, கக்கல், குன்மம், வலிகுன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

இரசச் செந்தூரம்.

1. களிமண்ணும், பொடிமணலும் சேர்த்துச் சீலையில் தடவி கெங்காசலக்குப்பிக்கு ஏழுசீலை செய்து நன்றாய்க் காயவைத்து, இரும்புச் சட்டியை அடுப்பில் வைத்துத் தீபம் போல் எரித்து, இருபது வராகன் எடை தூய்மைசெய்த கெந்தியைப் பொடித்துப்போட்டு உருகினவுடன் தீயாற்றி, தூய்மைசெய்த 80 வராகன் எடை இரசத்தைச் சிறுகவிட்டு, சட்டுவத்தாற் கிண்டிக் கொடுக்கக் கறுப்பாயிருக்கும். அதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, மேற்படி குப்பியில் அரைப்பாகம் போட்டு, அதன் வாயை ஓட்டில் மூடி ஒரு தாழியில் இரண்டு அல்லது நான்கு விரற்கடை பொடிமணல் போட்டு, அதன்மேல் மேற்படி குப்பியை வைத்து, அதன் கழுத்து வரை மணலைக்கொட்டி, வாலுகை அடுப்பில் ஏற்றித் தீபாக்கினியால் ஒரு சாமமும், கமலாக்கினியால் ஒரு சாமமும் எரித்துப் புகை கண்டவுடன் குப்பியின் ஓட்டை எடுத்துச் சலாகையால் கிண்டிக் கொடுக்கவும்.

இவ்விதம், ஒரு நாழிகைக்கொருமுறை குப்பியைத் திறந்து கிண்டிக்கொடுத்து, வெவ்வேறு ஓட்டால் மூடி வருகையில் மருந்துருகி சலாகையிற் பிடித்தால், அப்பொழுது தூய்மை செய்த தாளகம் மூன்று அல்லது ஐந்து வராகன் எடையாய்ப் பொடித்து, மூன்றுபங்கு செய்து ஒரு பங்கு போட்டுச் செவ்வையாய்க் கிண்டி கொடுக்கவும்.

Koviloor Digital Library

இவ்விதம், மற்ற இரண்டு பங்கையும் ஒரு நாழிகைக்கு ஒரு பங்காய்ப்போட்டுச் செவ்வையாய்க் கிண்டிக்கொடுத்து, மூடிக்க மலாக்கினியாய் எரித்து அடிக்கடி கிண்டிக்கொடுத்து, வெவ்வெறு ஓடு போட்டு மூடி வருகையில், ஓட்டில் மெழுகு வெளுப்பாயிருந்தாலும் கிண்டிக்கொடுக்கும்போது குப்பியின் அடிகரகரத்தாலும், குகைமுனை சிவப்பாகவாவது, வெளுப்பாகவாவது இருந்தாலும், அந்தப்பதத்தில் தீயை அகற்றிக் குப்பியை எடுத்து நீரில்தோய்த்து ஆறினபிறகு, எடுத்து உடைத்து செந்தூரத்தைக் குப்பியில் அடைத்துகொண்டு, முக்கடுகு, சாதிக்காய், சீரகம் இவற்றை ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்து முவ்விரல் அளவு தூளும் காசு எடை செந்தூரமும் வைத்து கலந்துகொடுக்கச் சன்னி தோடமும், திப்பிலி, சுக்கு, திப்பிலிமூலம், வாய்விளங்கம் இவற்றை ஓர் எடையாய்ப் பொடித்து முவ்விரல் அளவில்செந்தூரம் வைத்துத் தேன்விட்டு கலந்துண்ணச் சூலை, வாயும் தேனிற் கொள்ள மூலமும் பவுத்திரமும், குன்மம் வாயு சூலை கிரந்தி, மேகவகை, சொரி, கரப்பான், வெண்குட்டமும், மேற்படி மருந்துகளில் சொல்லிய பல நோய்களுக்குத் துணைமருந்துகளில் உண்ணத் தீரும்.

2. தூய்மை செய்த இரசம் 10 பலம், கெந்தி 2 ½ பலம். இவற்றை முன்போல் தொந்தித்து பேய்ச் சேம்பு சாற்றால் நான்கு சாமம் ஆட்டி, உலர்த்திப்பொடித்துக் குப்பியில் வைத்து, மணல் மேல் வைத்து, முந்திய முறையில் சொல்லியபடி எரித்து மருந்தை சலாகையால் பிடித்துக்கொண்டு, இரண்டு பலம் தாளகத்தைப் பொடித்துச் சிறுகப்போட்டுக் கிண்டிக் கொடுத்து, எரித்துப் பதத்திலெடுத்து தண்ணீரில் தோய்த்துக் குப்பியை உடைத்துச் செந்தூரத்தை எடுத்து நன்கு நெகிழ அரைத்து, முந்திய முறைகளில் சொல்லியபடி நோய்க்கேற்பத் துணைமருந்துகளில் கொடுக்கத் தீரும்.

3. வாலை இரசம் 1 பலம், தூய்மைசெய்த கந்தகம் அரைப்பலம் இவற்றை முன்புபோல் கலந்து பேய்ச்சேம்பு வேர்ச்சாற்றால் 3 நாளாட்டி, உலர்த்திப் பொடித்துக் குப்பியில் அடைத்து, மணல்மேல் வைத்து 3 சாமம் எரித்துக் குப்பியை உடைத்து, மருந்தைக் கல்வத்திலிட்டு அரைத்து, முன்புசொல்லிய எடைப்படி கெந்தி சேர்த்து மேற்படி சாற்றாலாட்டி, உலர்த்தி, குப்பியில் அடைத்து 3 சாமம் எரிக்கவும். இவ்விதம், ஐந்துமுறை கெந்தி சேர்த்து எரிக்கச் செந்தூரம் மேலேறாமல் தளத்தில் நிற்கும். குப்பியை உடைத்துச் செந்தூரத்தை எடுத்து ஒரு காசு எடை துணைமருந்துகளில் உண்ண மேற்சொல்லிய நோய்கள் தீரும்.

4. சூதம் 1 பலம், கெந்தி 2 பலம் இவற்றை ஒன்றாய்க் கலந்து கல்வத்திலிட்டு, கருந்துளசிச் சாற்றால் 4 சாமம் அரைத்து உலர்த்திக் குப்பியிலிட்டு மணல் மேல் வைத்துக் காடாக்கினியாய் 10 சாமம் எரித்து ஆற்றி எடுத்து காசு எடை பொரிமாவில் சாப்பிடச் சத்திசுரம், உட்சுரம் நீங்கும்; நொச்சிச் சாற்றில் சாப்பிட மாரல் சுரமும்; கொடிவேலிக் குடிநீரில் சாப்பிட சன்னிதோடமும்; அமுக்கிறாக்கிழங்குக் குடிநீரில் சாப்பிடப் பவுத்திரமும்; ஆடாதோடைக் குடிநீரில் சாப்பிடச் சூல்விப்புருதியும் கரப்பானும், மிளகும் சேர்த்து அரைத்து அதில் பண எடை செந்தூரம் வைத்து உண்ண

Koviloor Digital Library

பாண்டும்; ஏரண்டதைலத்தெண்ணெயில் சாப்பிட எண்பது வகை வரதங்களும்; கருணைக்கிழங்குச் சாற்றில் உண்ண, மூலநோயும்; பருத்தி விதைத் தைலத்தில் சாப்பிட 20 வித மேகமும்; மற்றத் துணைமருந்துகளில் கொடுக்கச் சீதம் விழுதல், சுரம், சுவையின்மை முதலான நோய்களும் தீரும்.

சந்திரோதயச் செந்தூரம்.

1. தங்கம் 1 வராகன் எடை, வாலைரசம் 8 வராகன் எடை, தூய்மைசெய்த கெந்தகம் 16 வராகன் எடை இவற்றைச் செம்பரத்தம்பூச் சாற்றில் நான்கு சாமமும், கற்றாழை வேர்ச்சாற்றில் எட்டு சாமமும் ஆட்டி நிழலில் உலர்த்திக் குப்பியில் இட்டு மணல் மேல்வைத்து தீபாக்கினி, கமலாக்கினியாய் வகைக்கு ஒரு நாள் ஒரு சாதி விறகால் எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதில் காசு எடை வீதம் துணை மருந்துகளில் சாப்பிட நீரிழிவு, சயம் முதலான எல்லா நோய்களும் தீரும்.

2. கெந்தி, சூதம், சீனம், வெண்காரம், நாவி, சங்கு, மனோசிலை, பவழப்புற்று வகைக்கு ஒரு பலம், இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றிலும், குமரிச்சாற்றிலும் வகைக்கு ஒரு நாள் ஆட்டி வில்லை தட்டி உலர்த்திக் கலசத்திலிட்டு மேற் கலசம் மூடிச் சீலை செய்து அடுப்பேற்றி முத்தீயும் ஒரு நாள் எரித்து, ஆற்றிக் கல்வத்திலிட்டு தங்கம், பொன், வெள்ளி, இலிங்கம், பவழம், உருத்திராட்சம், முத்து, அக்கரகாரம் வகைக்கு ஒரு கழஞ்சு சேர்த்துத் தாய்ப்பாலிலும், மாதுளம்பூச்சாற்றிலும், துளசிச்சாற்றிலும் வகைக்கு ஒரு நாள் ஆட்டிச் சிறுகடலை அளவு உருட்டி நெற்குழியில் வைத்து 20 நாள் சென்றபின் எடுத்துத் துணைமருந்துகளில் கொடுக்க சன்னிதோடம், ஈளை, காசம், நீரிழிவு, சுவையின்மை (அரோசியம்), மகோதரம், கவுசை, பாண்டு, முகவாதம், எலும்புருக்கி, ஊளை, தாகசூடு முதலான நோய்கள் நீங்கும்.

சடாட்சர அக்கினி குமாரன் (ஆறுமுகச் செந்தூரம்)

அரப்பொடி, கெந்தி, கெந்தகம், வெண்காரம், இலிங்கம், இரசம் வகைக்கு 1 பலம், இவற்றைக் கற்றாழஞ் சாற்றால் ஒரு நாள் ஆட்டி, உலர்த்திப் பொடித்துக் கலசத்தில் போட்டுக் கடும் வெய்யிலில் ஒரு நாள் வைத்து, அதை மறுபடியும் மேற்படிச்சாற்றால் முன்போல் ஆட்டிப் பொடித்துக் கடும் வெய்யிலில் வைக்கவும். இவ்விதம், மூன்று முறை ஆட்டி வெய்யிலில் வைக்கச் செந்தூரமாகும். முக்கடுகுத் தூளில் பண எடைச் செந்தூரம் வைத்துத் தேன்விட்டுக் கலந்து நான் ஒன்றுக்கு இரண்டு நேரம் வீதம் 1 மண்டலம் உட்கொள்ள விதை வாதம், வாயு, சூலை, எண்வகைக்குன்மம், சன்னி, முகவாதம், கழல்வாதம், மூர்ச்சை, பித்தம், சிலேத்துமம், முயல்வலிப்பு, குதிரைவலிப்பு, குமரக்கண்டன் வலிப்பு, கவுசை, நெஞ்சடைப்பு, மொளிச்சூலை, கிரந்தி, அரையாப்பு ஆகியவை நீங்கும்.

சுயமக்கினிச் செந்தூரம்.

இரசம், மனோசிலை வகைக்கு 4 வராகன் எடை; கெந்தி 8 வராகன் எடை; காந்தம் 16 வராகன் எடை, அரப்பொடி 32 வராகன் எடை, இலிங்கம்.

Koviloor Digital Library

கல்நார், கல்மதம் வகைக்கு ஒரு வராகன் எடை, இவற்றின் அரப்பொடியைக் குமரிச் சாற்றால் ஒரு சாமம் ஆட்டி, மற்ற மருந்துகளையும் சேர்த்து ஒரு சாமம் ஆட்டி உலர்த்தி, இரும்புக் கிண்ணத்திலிட்டு வெய்யிலில் வைக்கப் புகைந்து செந்தூரமாகும்; அதில் காசு எடை இஞ்சிச் சாற்றில் பத்து நாள் உட்கொள்ள வாதசுரம், எண்வகைக் குன்மம், சன்னியும்; வெள்ளுள்ளித் தைலத்தில் உட்கொள்ள சன்னியும்; தேனில் உட்கொள்ள மகோதரம், உளைமாந்தை, பிறநீர்க்கோவை, கிராணி, மந்தாக்கினி, நீரிழிவும்; கரப்பான் சாற்றில் உட்கொள்ளக் காமாலை, பாண்டு சோகையும் நீங்கும்.

2. மனோசிலை 2 பலம்; சூதம் 4 பலம்; கெந்தி 8 பலம்; காந்தம் 16 பலம்; அரப்பொடி 32 பலம். இவற்றைக் குமரிச் சாற்றால் இரண்டு சாமமாட்டி, வில்லைசெய்து இரும்புப் பாத்திரத்தில் வைத்துப் பரிதியில் வைக்கப் புகைந்து செந்தூரமாகும். அதைக் குப்பியில் அடைத்து ஒரு மண்டலம் நெற்குழியில் வைத்தெடுத்துக் காசு எடை இஞ்சிச் சாற்றில் சாப்பிட பித்தப்பாண்டு, சோகை, புளித்த ஏப்பம், கிராணி, உற்மூலம் மஞ்சள்நோய் ஆகியவை நீங்கும்.

பஞ்சபாடாணச் செந்தூரம்.

1. சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், அரிதாரம், கெந்தி, இரச கற்பூரம், வெள்ளைப்பாடாணம் வகைக்கு ஒரு பலம் இவற்றைத் தூய்மைசெய்து குப்பைமேனி, வெற்றிலை, பருத்தி, வெள்ளறுகு, துளசி, வேலிப்பருத்தி, பொடுதலை இவற்றின் சாற்றால் வகைக்கு நான்கு சாமம் ஆட்டி, வில்லைசெய்து, நிழலில் உலர்த்தி அதற்கு வெற்றிலையால் கவசஞ் செய்து ஒரு சட்டியில் வைத்து மேற்சட்டி மூடி ஏழு சீலைமண்செய்து, நன்றாய்க் காயவைத்து, ஆடுப்பேற்றித் தீபம்போல் நான்கு சாமம் எரித்து, ஆற்றிப் பார்க்க மேற்சட்டியில் செந்தூரம் பற்றியிருக்கும். அதை எடுத்துக் காசு எடைத் தேன், இஞ்சிச்சாறு முதலான நோய்க்குத் தகுந்த துணைமருந்துடன் கொடுக்கச் சன்னி, சுரம், வெண்குட்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், கிராணி, கை கால் முடக்கு, பிளவை, புற்று, கண்டமாலை, சூலைநோய், பெருவியாதி, அரிகரப்பான், தேமல், வண்டுகடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாழை, வலிப்பு, கன்னோசி, கன்னப்புற்று, கபாலகுட்டம், பவுத்திரம், மூலமுளை, காசரோகம், மேகப்புண், கிரந்தி, அரையாப்பு, கபாலசூலை முதலான நோய்கள் தீரும்.

2. வெடியுப்பு 10 பலம்; அட்டுப்பு, சீனம், வெண்துருசு வகைக்கு 5 பலம்; நவாச்சாரம் 7 பலம்; அன்னபேதி 2 பலம், கெந்தகம் 3 பலம், இவை எல்லாம் சேர்ந்த எடைக்குப் பழம் புளி சேர்த்து இடித்து ஓட்டிலிட்டு தீக்கொளுத்த, எரிந்துச் சுண்ணமாகும். அதைப் பீங்கானில் வைத்து மூடி மண்ணில் புதைத்து ஒரு மண்டலம் (48 நாட்கள்) சென்று எடுக்கச் செயநீர் இறங்கியிருக்கும். இரசம் கெந்தி வகைக்கு 20 வராகன் எடை, தாளகம் 10 வராகன் எடை, மனோசிலை 5 வராகன் எடை, இலிங்கம் 2 ½ வராகன் எடை, இவற்றைத் தூய்மை செய்து மேற்படி செயநீரால் மூன்று நாள் ஆட்டி உலர்த்திக் கோழிமுட்டை ஓட்டுக்குள் அடைத்து அதற்கு மாக்

Koviloor Digital Library

கல்லால் ஏழு சீலை செய்து காயவைத்து நான்கு விரல் கடை மணல் மேல் வைத்துத் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி வகைக்கு 10 நாழிகை எரித்து ஆற்றி எடுக்கச் செந்தூரம் இருக்கும். அதில் ஒரு காசு எடை வீதம் தக்க துணைமருந்துகளில் உட்கொள்ள மேற்கூறிய நோய்களும் அமிர்தவல்லித் தூளில் உட்கொள்ள மேகத்தினால் ஏற்பட்ட எல்லா நோயும் தீரும். உடம்பு வலுக்கும்.

உலோகச் செந்தூரம்.

அயம், காந்தம், வங்கம் முதலான உலோகங்களில் தனித்தனியே மேற்படி செய நீரால் அரைத்துக் கோழிப் புடமாய்ப் பத்துப் புடம் போடச் செந்தூரமாகும். இதனைத் துணைமருந்துகளில் உட்கொள்ள மேற்கூறிய நோய் தீரும்.

கரியுப்புச் செந்தூரம்.

கரியுப்பை, எருக்கம் பால், திருகுகள்ளிப்பால், கவுதும்பை, தும்பை, மருதம்பட்டை, குமரி, எலுமிச்சம்பழம், பொடுதலை இவற்றின் சாற்றில் வகைக்கு இரண்டு புடம் போடச் செந்தூரம் ஆகும். அதை மூன்று காசு எடை தேனில் கொடுக்க வயிற்றுப்புண் (குன்மம்), இதயநோய், உருக்கு நோய் (சயம்), குலை வீக்கம், வாயு, கிராணி (தொடர்கழிச்சல்) முதலான நோய்கள் தீரும்.

இலிங்கச் செந்தூரம்.

ஒரு பலம் இலிங்கத்தை அயச்சட்டியில் இட்டு அதற்குக் கீழும்மேலும் 1 பலம் கெந்தியைப் பொடித்துப் போட்டு, கால்படி கழுதைப் பாலைச் சிறுகச் சிறுக மெழுகுபோல் உருகும்படி விட்டுக் கொண்டு நான்கு சாமம் எரித்து, எடுத்துக் கழுவிப் பொடித்து, ஒரு காசு எடை இஞ்சிச் சாற்றிலும், முக்கடுகு தூளிலும், கொடிவேலிக் குடிநீரிலும் கொடுக்கச் சன்னி, சூலை, 80 வகைவாதமும் வாயும் தீரும்.

தாளக செந்தூரம்

கரியுப்பைக் கழுதைப் பால் விட்டு நான்கு சாமம் ஆட்டி, வில்லை செய்து காயவைத்து, ஓட்டில் இட்டுச் சீலை செய்து குக்குடப் புடம் போடவும். இவ்விதம், மூன்று புடம் போட்ட உப்பு, சூடன் வகைக்கு ஒரு பலம் இவற்றை அண்ட வெள்ளைக் கருவால் ஆட்டித் தூய்மை செய்த ஒரு பலத் தாளகக்கட்டிக்குக் கவசம் செய்து, காய வைத்து அதற்கு மேல் ஏழு சீலைமண் செய்து காயவைத்து, ஒரு சட்டியில் ஒரு விரல் கடை மணல் கொட்டி, அதன் மேல் கவசத்தை வைத்து, மேலும் மணல் போட்டுக் கமலாக்கினியாய் ஒரு சாமம் எரித்து, ஆற்றி எடுக்கச் செந்தூரமாகும். அதை ஒரு காசு எடை தேனில் உட்கொள்ளலாம். சன்னி, உருக்கு நோய், (சயம்) உளைமாந்தை ஆகிய நோய்கள் தீரும்.

செந்தூரவகைப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

பற்பப் படலம்.

பற்பல செயநீராலும் மூலிகைச் சாறுக்ளாலும் கவசம் செய்து காடைப் புடம் தொடங்கி கெசபுடம் வரையில் பகுத்துணர்ந்து செய்தலால் பற்பப் படலமெனப் பெயர் பெற்றது.

60 ஆண்டு பயன்படுத்தலாம்.

கூறும் பற்பங் குறைநூலே மாய்ந்து
நீறு மேசரக் கான வறுபதும்
தேற நீற்றினஞ் செய்யவேண் டிப்பதர்
கார மாமுனிக் கடியவ றைந்ததே.

இரச பற்பம்.

1. காட்டுள்ளியும் (நரிவெங்காயம்), கெந்தகமும் ஓர் எடையாய் அரைத்து வில்லை தட்டிக் கலசத்திலிட்டுத் தைலம் இறக்கி வாலை இரசத்தில்விட்டுப் பரிதியில் வைக்க நீறும். அதை அந்தத் தைலத்தால் ஆட்டி, வில்லை செய்துகொண்டு நன்றாய் வெந்த செங்கல்லை மாவுபோல் அரைத்து, ஒரு குண்டு சட்டியில் அரைப்பாகம் போட்டு, அதன்மேல் ஒரு படி உப்புக் கொட்டிப்பாத்திரத்தில் மேற்படி வில்லையை வைத்து, மூடி ஏழு சீலைமண்செய்து, அடுப்பேற்றிக் காடாக்கினியாய் மூன்று சாமம் எரித்து ஆற்றி எடுக்கப் பதங்கித்திருக்கும். அதை எடுத்து ஒரு காசு எடை வெல்லம் முதலான துணைமருந்துகளில் 7 நாள் உட்கொள்ள குட்டம், குலைநோய், பவுத்திரம், கழலை, (காமாலை), விப்புருதி, இலிங்கப்புற்று, வெள்ளைபடருதல், அரையாப்பு, அல்குல்புற்று, மூலமுளை, கண்டமாலை, கிரந்தித்தடிப்பு, வெள்ளை, கருங்கரப்பான்; வண்டுகடி, மேகம், வாயு, குன்மம் ஆகிய நோய்கள் தீரும்; வாய் வேகாது.

2. ஒரு பலம் சூதத்தை முந்திரிக் கொட்டைத் தைலத்தாலும், நீர்மேல் நெருப்பு மூலிச் சாற்றாலும், மால் தேவிக்கிழங்குச் சாற்றாலும், வெள்ளெருக்கம் பாலாலும் வகைக்கு ஒரு சாமம் ஆட்டி, வில்லை செய்து முன்போல் எரித்துப் பதங்கித்து, ஒரு காசு எடை வெல்லம் முதலான துணைமருந்துகளில் கொடுக்க மேற் கூறிய நோய்கள் தீரும். ,

3. பன்னிரண்டு வராகன் எடை தூய்மை செய்த கெந்தகத்தையும் எண்பது வராகன் எடை இரசத்தையும் இரச செந்தூரத்தில் சொல்லியபடி ஒன்றாய்க் கலந்து பொடித்து முன்போல் பதங்கித்துக் கொண்டு, 4 வராகன் எடை ஓமத்தைப் பொரித்து, அதற்குச் சமமாகப் பனைவெல்லமும் எட்டு வராகன் எடை மேற்படி பற்பமும் இதன் அடியில் சொல்லியிருக்கிற கெந்தக பற்பமும் சேர்த்து, மெழுகு போல் ஆட்டிப் பதினாறு மாத்திரை செய்து, எட்டு நாள் காலை, மாலை உட்கொள்ள மேற்சொல்லிய நோய்கள் தீரும்.

கெந்தக பற்பம்.

1. பூநீரும், வெடியுப்பும் ஓர் எடையாய் பனிநீர் விட்டு அரைத்து, வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டு, அதற்கக் கீழும் மேலும் இரண்டு

Koviloor Digital Library

விரற்கடை உவர்மண் போட்டு, இரண்டு சாமம் எரிக்கச் சுண்ணமாகும். அதற்குப் பாதி சாரம் சேர்த்து மெல்லிய சீலையாக முடிந்து, ஒரு பீங்கானில் தொங்கவிட்டு மூடிப் பூமியில் பொதித்து ஒரு மண்டலம் சென்று, எடுக்கச் செயநீர் இறங்கும், அதைக் குப்பியில் அடைத்துக் கெந்தகமும் சீனமும் ஓர் எடையாய்க் கல்வத்திலிட்டு, மேற்படி செயநீரால் அரைத்து, வில்லைசெய்து காயவைத்து, ஐந்து எருவில் புடம்போட நீறும். அவ்வாறு, தாளகத்தையும் நீற்றி, மேற்படிபற்பமும் இரசபற்பமும் வகைக்கு ஒரு காசு எடை, தேனிலாவது மற்றத் துணைமருந்திலாவது உட்கொள்ள இரச பற்பத்தில் சொல்லிய நோய்கள் தீரும்.

2. கெந்தகமும், சீனாக்காரமும் ஓர் எடையாய்ப் பொடித்துக் கல்வத்திலிட்டு, சிறுசின்னிச்சாறு விட்டுப் பிசறி, பரிதியில் உலர்த்தி மேலோடு மூடி மூன்றெருவில் புடம்போட நீறும். துணைமருந்துகளில் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும்.

3. தூய்மைசெய்த கெந்தகத்தின் எடைக்குக் காளானைச் சேர்த்து நன்கு நெகிழ அரைத்து, வில்லை செய்து காயவைத்து, ஓட்டிலிட்டுச் சீலைசெய்து, காடைப் புடம்போட நீறும். தக்க துணைமருந்துகளில் கொடுக்க மேற்கூறிய நோய்கள் தீரும்.

வீர பற்பம்.

ஒரு படி பூநீரை நாலுபடி அமுரியில் கரைத்துத் தெளிவை இறுத்து, ஒரு பாண்டத்தில் விட்டு அதன் வாயில் சீலையால் வேடு கட்டி, அதன் மேல் 5 வராகன் எடை வீரக்கட்டியை வைத்துமூடி, நீர் வற்றும்வரை தீயெரிக்கப் பற்பமாகும். அதைக் கிரந்திநாயகச் சாற்றால் 12 சாமம் எரித்து, வில்லைசெய்து காயவைத்து மேற்படி இலையை அரைத்துக் குகைசெய்து, அதற்குள் மேற்படி வில்லை வைத்துமூடி ஒரு சட்டியில் நான்கு விரல்கடை மணல் போட்டு அதன் மேல் வைத்து நான்கு நாழிகை எரிக்கச் சிவந்த நிறமான பற்பமாய் இருக்கும். அதில் காசு எடை முவ்விரல் தூளில் வைத்துத் தேன் விட்டு கலந்து மூன்று வேளை கொடுக்கச் சன்னிதோடம், கபக்கட்டு, வாயு, வாதம் ஆகிய நோய்கள் தீரும்.

தாளக பற்பம்.

1. ஒரு பலம் தாளகத்தைப் பெரும்பூசணிக்காயை இடித்துப் பிழிந்தசாற்றில் இரண்டு சாமம் வேகவைத்தெடுத்துச் சுண்ணாம்புக் கல்லுக்குள் வைத்து நூறு முறை நீற்றி எடுத்து நல்லெண்ணெயில் இரண்டு சாமம் எரித்து, சாரம்பூநீர், சவுட்டுப்பு, சுண்ணாம்பு, கல்லுப்பு, சூடன், சீனம், வெடியுப்பு, இந்துப்பு வகைக்கு 1 படி; படி சிறுநீரில் கரைத்துத் தெளிவு இறுத்துக் கட்டிக்குச் சுருக்கு கொடுக்கத் தூய்மையாகும். மூக்கரைச்சாரணைச்சமூலம் ஒரு தேங்காய் அளவு வைத்து அதற்கு நடுவில் சட்டியைப் பொதிந்து சட்டிக்குள் வைத்து மேற் சட்டி மூடி சீலை செய்து தீபம்போல் நான்கு சாமம் எரிக்கப் பற்பமாகும். அதில் காசு எடை தேனில் கொடுக்க உருக்கு நோய் (சயம்), கபாலசூலையும், பெரும்பூசிணிக்காய்ச்

Koviloor Digital Library

சாற்றில் உட்கொள்ள மேகமும்; மற்றத் துணைமருந்துகளில் உட்கொள்ள கிரந்தி, சூலை, சுரம், குட்டம் ஆகிய நோய் தீரும்.

2. தூய்மைசெய்த ஒரு பலம் தாளகத்தை வாழைக்கிழங்குக்குள் வைத்துமூடி ஏழு சீலைமண்செய்து காயவைத்து ஐம்பது எருவில் புடம்போட நீறும். துணைமருந்திலிட சிலேத்தும நோய் 96–ம், சுரம், அரையாப்பு, கிரந்தி, சூலை, குட்டம் ஆகிய நோய்கள் நீங்கும்.

3. தூய்மைசெய்த ஒரு பலம் தாளகத்திற்கு, ஈருள்ளிச்சாறு, சிவகரந்தைச்சாறு வகைக்கு 1 படி சுருக்குக் கொடுத்துச் சிற்றண்டம், பேரண்டம், பூநீர் இவற்றில் சுண்ணத்தை ஓர் எடையாக எருக்கம் பாலில் ஆட்டிக் கட்டிக்கு கவசம் செய்து காயவைத்து பிரசம்பட்கிட புளியரணை நாயுருவி இவைகளின் சாம்பல் வகைக்கு படி 2 ஒரு சட்டியில் போட்டு அதற்கு நடுவில் வைத்து மேல் சட்டிமூடிச் சீலைமண்செய்து நான்கு சாமம் கமலாக்கினியாய்த் தென்னைமட்டையால் எரிக்கப் பற்பமாகும்; அதில் காசு எடை இரசபற்பம் சேர்த்துத் துணைமருந்தில் கொடுக்க மேற்படி நோய்கள் நீங்கும்.

துருசு பற்பம்.

துருசுக்கட்டியைக் கவதும்பைச் சாற்றில் ஆறு சாமம் ஊற வைத்துப் பரிதியில் உலர்த்திப் பிறகு அந்தச்சாற்றால் ஒரு சாமம் ஆட்டி, வில்லைசெய்து காயவைத்து மேற்படி இலையை அரைத்து அதற்கு அங்கிபூட்டி ஏழு சீலைசெய்து கவுதாரிப் புடம்போட்டு எடுத்து கருவூமத்தம் சாற்றால் ஆட்டி வில்லைசெய்து முன்போல் புடம்போட நீறும். அதைத் துணைமருந்தில் உட்கொள்ள சுரம், கெண்டை, சன்னிதோடம், எண் வகைக் குன்மம், பக்கவாயு, கழலை, இளைப்பு, தாகம், வயிற்றுப்பொருமல், பெருவயிறு, வீக்கம், காமாலை, பித்தம், சோகைப்பாண்டு, நச்சுநீர்க்கோவை ஆகிய நோய்கள் தீரும். மேற்படி பற்பத்தைச் சாறு வராத் தளைகளில் விடச் சாறு வரும்.

தாமிர பற்பம்.

1. தாமிரச்செந்தூரத்தில் சொல்லியபடி தூய்மைசெய்த தாமிரம், வீரம், இரசம், சூடன், கெந்தகம் வகைக்கு 4 பலம்; பாடாணம் கால் பலம். இவற்றை வெள்ளெருக்கம்பால் விட்டு 1 நாள் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கெச புடம்போடப் பற்பமாகும். அதில் காசு எடை துணைமருந்துகளிலிட பிறமேகம், மேகம், குட்டம், சயம், பவுத்திரம், சூலை 18, குன்மம், வகை வாயு, பித்தம் முதலான நோய்கள் தீரும்.

பத்தியம்:– பசுவின் பால், சோறு உட்கொள்ளவும்.

2. தூய்மைசெய்த தாமிரம் 12 வராகன் எடை; சூதம், கெந்தி, தாளகம் வகைக்கு 8 வராகன் எடை. இவற்றை வெள்ளெருக்கம் பாலால் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து கெசபுடம்போட்டுப் பிறகு சத்திச் சாரணைச் சாற்றால் ஒரு நாளாட்டி, முன்புபோல் புடம்போடப் பற்பமாகும். அதில் காசு எடை தேனில் உட்கொள்ளக் குன்மம், வாயு, கௌசை, கெண்டை, எருவாய்நோய் ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

வெள்ளி பற்பம்.

1. சரிகை வெள்ளியை இலேசாய்த் தட்டிப் பழுக்கக்காய்ச்சி பழுபாகற் கிழங்குச்சாற்றில் ஏழுமுறை தோய்த்துக் குகையில் வைத்து உருக்கிக் கண்விட்டாடும்போது மகிழம்பூச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஊதப் பொடியாய்ப்போகும். அதை மேற்படி சாற்றாலாட்டி வில்லை தட்டிக் காயவைத்து முக்காவேளைவேரை மேற்படி சாற்றாலாட்டிக் குகைசெய்து வைத்துமூடி ஏழு சீலைசெய்து நூறெருவில் புடம்போட நீறும். அதில் ஒரு காசு எடை திப்பிலி இளகத்தில் உட்கொள்ள 96 வகைச் சிலேத்துமங்களும், சூளையும் தீரும்.

2. வெள்ளிப்பொடிக்குச் சமமாக இலிங்கம் சேர்த்து எருக்கம்பாலிலும், அரசம்பட்டை, தாமரைக்கிழங்கு, எலுமிச்சம் பழம் இவற்றின் சாற்றிலும் தனித்தனியே அரைத்து வகைக்கொரு புடம் முப்பது எருவில் போடச் செந்தூரமாகும். இதை மேற்படி நோய்களுக்கு உட்கொள்ளலாம்.

பவழ பற்பம்.

1. முயல் எலும்பு சுட்ட சாம்பல் 1 பலம், குமரிச்சாற்றால் ஆட்டி குகையும் மூடியும் செய்து பவழம் 1 பலம், கிராம்பு, சடாமாஞ்சில், வீரம் வகைக்குக் கால் கழஞ்சு இவற்றை முயல் இரத்தத்தால் ஆட்டிக் காயவைத்து மேற்படி குகைக்குள் வைத்து ஏழு சீலைசெய்து ஐம்பதெருவில் புடம்போட நீறும். மேற்படி பற்பத்தைச் சீந்தில்சருக்கரையில் உண்ண எல்லா மேகமும் தீரும். பசுவின் நெய்யில் உண்ண இருமல், ஈளை, இளைப்பு, வெள்ளை, வெட்டை ஆகியவையும் தீரும்.

எலுமிச்சம் பழச்சாற்றில் பவழத்தை ஒரு நாளூறவைத்துக் கழுவில்போட்டு எருக்கம் பாலால் மூன்றுநாள் அரைத்து வில்லை செய்து காயவைத்து முன்போற் புடம் போடநீறும்.

2. கீழ்க்காய் நெல்லியிலையை அரைத்துக் குகைசெய்து அதற்குள் பவழத்தை வைத்து ஏழுசீலைசெய்து முன்புபோல் புடம் போடப் பற்பமாகும். அதைத் துணைமருந்துகளில் உட்கொள்ள சுரம், குளிர், சன்னி, வயிற்றிரைச்சல், பித்தம், கண்புகைச்சல், விக்கல், வயிற்றுச்சல், இருமல் ஆகிய நோய்கள் நீங்கும்.

3. ஒரு பலம் பவழத்தை ஒரு நாள் தண்ணீரில் ஊற வைத்துக் கழுவிப்போட்டு, தேள்கொடுக்கிலையை அரைத்துக் குகைபிடித்து அதற்குள் மேற்படி பவழத்தை வைத்துமூடி ஏழுசீலை செய்து காயவைத்து முன்புபோல் புடம்போட்டு எடுத்து பீங்கானில் வைத்து அதில் பசுவின் பால் விட்டுப் பரிதியில் காயவைத்துப் பிறகு அதை ஆலம்பழுப்பில் கட்டி குழியில் மூன்று நாள் புதைத்தெடுத்துத் துணைமருந்துகளில் உண்ண உருக்குநோய் (சயம்), ஈளை, மந்தாரகாசம், சிரங்கு, சொரி முதலான மேற்கூறிய நோய்கள் நீங்கும்.

4. ஒரு பலம் பவழத்தை எலுமிச்சம்பழச்சாற்றிலிட்டு ஒரு நாள் பரிதியில் வைத்துக் கழுவிப்போட்டு இலந்த இலையையாவது, தைவேளை

Koviloor Digital Library

இலையையாவது அறுத்துக் குகை செய்து அதற்குள் வைத்துமூடி ஏழுசீலை செய்து காயவைத்து முன்புபோல் புடமிட்டு எடுத்து ஒரு தட்டிலிட்டுப் பசுவின்பால்விட்டுப் பரிதியில் காயவைத்துத் தேன், பசுவின் நெய்யில் உட்கொள்ள மேகச்சூடு, காங்கை (சயம்), ஈளை, இருமல், நீர்க்கடுப்பு ஆகியவை நீங்கும்.

5. ஒரு பலம் பவழத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் இரண்டு நாள் வரை ஊறவைத்துக் கழுவி அதற்குச் சமமாக கற்பூரச் சலாசத்துச் சேர்த்துப் பிரண்டைச்சாற்றால் நான்கு சாமம் ஆட்டி வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மூடிச் சீலைசெய்து முழப்புடம்போட நீறும். அதைப் புளியாரைச்சாற்றில் இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து முன்புபோல் புடம்போட்டு ஒரு காசு எடை வெண்ணெயில் உட்கொள்ள எலும்புருக்கி, மதுமேகம், என்புமேகம், முதலான மேகங்களும். தேனில் உட்கொள்ள மேகவூறல், குன்மவாயு ஆகியவை தீரும்.

நாக பற்பம்.

1. இலுப்பை நெய்யில் 20 முறை உருக்கிச்சாய்த்துத் தூய்மை செய்த அரைப்பலம் சிறுகண் நாகத்தைக் குகையில் உருக்கிக் கணவிட்டாடும்போது சிற்றாமணக்கிலையைக் கசக்கி ஐந்தாறு சொட்டுப் பிழியச் சத்தமிடும். மறுபடியும் ஐந்தாறு சொட்டுப்பிழியச் சத்தம் அடங்கும். துருத்தியை விசையாய் ஊதி மறுபடியும் ஐந்தாறு சொட்டுப் பிழிந்து மேற்படி வேரால் கிண்டிவர மல்லிகைப்பூ போல் நீறும்; அதைத் துணைமருந்துகளில் உட்கொள்ள வெள்ளை, வெட்டை, சிலேத்துமம், குன்மம், எருவாய் நோய் ஆகியவை நீங்கும். தாது வலிமை உண்டாகும்.

2. தூய்மைசெய்த சிறுகண்நாகத்தின் எடைக்குப் பாதிஎடை இரசம் சேர்த்து உருக்கி வேலிப்பருத்தி இலைச்சாற்றால் அரைத்து வில்லைதட்டிக் காயவைத்து அதற்குமேல் துத்தி இலையை அரைத்துக் கவசம்செய்து ஏழு சீலைமண் செய்து முழப்புடம்போட நீறும்; இவ்விதம் 3 புடம்போட்டு எடுத்து வெண்ணெயில் பத்தியமாய் உட்கொள்ள மேற்படி நோய்கள் நீங்கும்.

சுத்திசெய்த நாகத்தெடை ரசஞ்சேர்த்து உருக்கி அதற்கு கால்பங்கு பெருங்காயம் சேர்த்து வேலிப்பருத்தி சாற்றாலாட்டி வில்லை செய்து குகையில் வைத்துப் புகையடங்கு மட்டும் ஊதநீறும். வெண்ணெயிற் கொள்ள மேற்படி வியாதி தீரும்.

கெருடக்கல் பற்பம்.

கற்றாழஞ் சோற்றில் கடுக்காயைப் பொடித்துப் போட்டுப் பிசைந்துவைக்க தண்ணீர் வரும். அதில் கெருடக் கல்லைப் போட்டுக் கொதித்தபின் பொடித்துக் கழுவி ஓட்டிலிட்டு அதற்குக் கீழும் மேலும் ஆனையருகங்கிழங்கை இடித்துப்போட்டு, மூடிச்சீலைசெய்து கெசபுடம் போட நீறும். வெண்ணெயில் உட்கொள்ள கடுப்பு, எலும்புருக்கி, என்புசுரம், என்புவெட்டை, மேகவெட்டை முதலானவை நீங்கும்.

Koviloor Digital Library

வெள்வங்க பற்பம்.

1. புளிநறலைக்கிழங்கை அரைத்து எருமைத் தயிரில் கலக்கி இலவங்கத்தைப் பத்துமுறை உருக்கிச் சாய்த்துத் தூய்மைசெய்து 3 வராகன் எடை எடுத்து, அதில் வாலைரசம் 3 வராகன் எடை ஒன்றாய்க் கலந்து கற்பூரசலாத்து 3 வராகன் எடை கூட்டிச் சுண்ண நீரால் இரண்டு சாமம் ஆட்டி, வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து, முப்பதெருவில் புடம் போட்டு மறுபடியுக் மேற்படி நீராணப்பு மூன்று நாலு புடம் போட நீறும். மாதுளம் பூவிதழை நிழலிலுலர்த்தி அதன் எடைக்குச் சமமாய்ச் சீரகம் சேர்த்துத் தூள்செய்து முவ்விரல் அளவு பண எடை பற்பம் வைத்து நாள் ஒன்றுக்கு இரண்டு வேளை வீதம் ஒரு மண்டலம் சாப்பிட்டுவர நவமூலம், மெய்நோய், மேகம், எலும்புருக்கி ஆகியவை தீரும்; நாடி வலுத்துத் தாது உண்டாகும்; கரப்பான் உணவுப்பொருள்களை நீக்கவும்.

2. தூய்மைசெய்த வெள்வங்கத்திற்குப் பாதி இரசம் சேர்த்து உருக்கி, கஞ்சா இலைச் சாற்றால் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து அதற்கு மேற்படி இலையை அரைத்துக் கவசம் செய்து ஓட்டிலிட்டு மூடி முன்போல் புடம் போடப் பற்பமாகும்; அதைத் துணைமருந்துகளுடன் சாப்பிட மேற்படி நோய்கள் யாவும் நீங்கும்.

கருவங்க பற்பம்.

1. கருவங்கத்தைப் பிரண்டைச் சாற்றில் பத்துதரம் உருக்கிச் சாய்த்துத் தூய்மைசெய்து 1 பலம் சட்டியில் இட்டு உருக்கி, ஆடு தீண்டாப்பாளைவேரால் பற்பமாகும்வரை கிண்டி எடுத்து அதற்குப் பாதி இரசம் சேர்த்து மூக்கரைச்சாரணைச் சாற்றில் நான்கு சாமம் அரைத்து மூன்று புடம் போட நீறும்; துணைமருந்துகளுடன் கொடுக்க மேக நோய்கள் தீரும்.

2. கருவங்கத்தை உருக்கி அதற்குப் பாதி இரசம் சேர்த்து ஆலம் பாலால் மெழுகு போல் அரைத்து, வில்லை தட்டிக் காயவைத்து, மருதம்பட்டையும் உப்பும் சமமாய்ச் சேர்த்து இடித்து, வில்லைக்குக் கீழும் மேலும் போட்டு மூடிச் சீலைமண் செய்து மூன்று புடம் போடத் தவளம் போல் நீறும்; துணைமருந்துகளுடன் சாப்பிட மேகம் முதலான நோய்கள் தீரும்.

கற்பூரசலாசத்து பற்பம்.

1. கற்பூரசலாசத்தைப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சிக் கழுவித் தூய்மைசெய்து, சிறுசெருப்படைச் சாற்றால் நான்கு சாமம் ஆட்டி இலேசாய் வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து ஐம்பது எருவில் புடம் போடவும்; இவ்விதம் மேற்படிச் சாற்றால் ஆட்டி மூன்று புடம் போட்டு பசுவின் வெண்ணெயுடன் சாப்பிட மேலெரிவு, பித்தவெட்டை, நீர்க்கடுப்பு ஆகியவை நீங்கும்.

2. மேற்படி பற்பத்தின் எடைக்குத் தூய்மைசெய்த வெண்காரம் சேர்த்து சிறுநீராலாட்டி, வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு சீலைசெய்து ஓர்

Koviloor Digital Library

எருவில் புடம்போட்டு வெண்ணெயில் கொடுக்க நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு ஆகியவை தீரும்.

3. வெள்ளிவிதை, விராற்றலைக்கல் மேற்படி பற்பம் இவைகளை அரைத்துக் கால் படி வெள்ளரிக்காய்ச் சாற்றில் ஒரு வேளையும், முள்ளங்கியை இடித்துப் பிழிந்த சாற்றில் ஒரு வேளையும் கொடுக்கக் கல்லடைப்பு நீங்கும்.

4. வெண்காரம், சலாசத்து, கலைக்கொம்பு, கல்நார் இவைகளை ஓர் எடையாய்க் கல்வத்திலிட்டு, பருத்திச்செடி சமூலம், சுட்டசாம்பலை 1 படியை நான்கு படித் தண்ணீரில் போட்டுக் கலக்கி நான்கு நாள் சென்றபின் தெளிவிறுத்து அந்தத் தெளிவினால் நான்கு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து, முப்பது எருவில் புடம்போட்டு அதில் சாரம், சூடன், பூநீர், வீரம், வகைக்கு ஒரு கழஞ்சு சேர்த்து மேற்படி நீரால் நாலு சாமம் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து சுண்ணாம்புப் பொடிக்குள் வைத்து முழப்புடம் போட்டு எடுக்கவும் கறுத்திருந்தால் அண்ட வெள்ளைக் கருவினால் அரைத்து ஒரு புடம் போடவெளுத்து நீறும்; அதற்குப் பாதி அளவு தூய்மைசெய்த இலிங்கம் சேர்த்துப் பொடித்து இரண்டு காசு எடை இளநீரில் சாப்பிட பெருவயிறு, மகோதரம், கிரிச்சாரம், கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்செரிப்பு, நீரெரிவு, நீர்சுரப்பு நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

சொர்ண பற்பம்.

1. தங்கரேக்கை முள்ளிக்கீரைச் சாற்றில் மூன்று நாள் ஊற வைத்துப் பரிதியில் காயவைத்துக் கல்வத்தில் இட்டுச், சித்திரப் பாலாடைச் சாற்றில் மைபோலரைத்து, அகலில் வைத்து மூடி ஏழு சீலை மண்செய்து, நூறு எருவில் புடம் போடப் பற்பமாகும்; சவுரி இலைச்சாறு 8 படி சிறுகச் சிறுக ஒரு சட்டியிலிட்டுக் காயவைத்துத் திரட்டியெடுத்து, அந்த எடை ஆடாதோடை இலையும் 1 பலம் புனுகும், இரண்டு கழஞ்சு மேற்படி பற்பமும் சேர்த்து மெழுகு போல் அரைத்து, நெல்லிக்காய் போலுருட்டி எள்ளெண்ணெயில் போட்டு காலை மாலை ஒவ்வோர் உருண்டை வீதம் 6 மாதம் சாப்பிட்டும் மேற்படி எண்ணெயை ஊற்றி 2 முறை தலைமுழுக்கும் செய்துவர வெண்குட்டம் முதலான சகல குட்டங்களும் தீரும்.

பத்தியம்: சையோகம், கரப்பான் உணவுப்பொருள்கள் நீக்கவும்.

2. கிராம்பை மையாய்ப் பொடித்துப் பசுவின் வெண்ணெயில் கலந்து அதில் பண எடை தங்கபற்பம் வைத்துச் சாப்பிட்டுப் பாலும் சோறும் சாப்பிட்டுவர விந்தூறும்; தாது கட்டும்; வலுவுண்டாகும்.

முத்து பற்பம்.

முத்தைச் சங்கம்பழச் சாற்றில் இரண்டு நாள் ஊற வைத்து முள்ளிப்பழச்சாற்றால் மெழுகு போல் அரைத்து, வில்லை செய்துக்

Koviloor Digital Library

காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலை செய்து முப்பதெருவில் புடம் போட்டுத் தங்கபற்பத்துடன் சேர்த்துச் சாப்பிட தாது கட்டும் மேக நோய்கள் தீரும்.

அய பற்பம்.

1. நான்கு பலம் தூய்மைசெய்த அயத்தில் மாஞ்செவிக் கள்ளிப்பால் விட்டுப் பரிதியில் வைக்க நீறும் அதை ஓதியம்பட்டைச் சாற்றால் நான்கு சாமம் ஆட்டிப் பத்துப் புடம் போடப்பற்பமாகும். துணை மருந்துகளில் கொடுக்க உடல் வலிவுறும். விந்தூறும், தாதுகட்டும்.

மான்கொம்பு பற்பம்.

1. மான்கொம்பை நான்காய்ப் பிளந்து சிறு துண்டுகளாய் நறுக்கி ஒரு நாள் குப்பைமேனிச் சாற்றில் ஊற வைத்து மேற்படி இலையை அரைத்துக் கவசஞ்செய்து காய வைத்து ஓட்டில் பரப்பி மேலோடு மூடிச் சந்துவாய்ச் சீலைமண்செய்து ஐம்பது எருவில் புடம் போட்டு எடுத்து பசுவின் பால் விட்டு அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து முன் போல் புடம் போட பற்பமாகும். துணை மருந்துகளில் மேற்படி பற்பத்துடன் பவள பற்பம் சேர்த்துக் கொடுக்க நீரடைப்பு; கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்எரிவு, சயம், ஈளை, இருமல், வெப்பம், மேக காங்கை முதலான நோய்கள் நீங்கும்.

2. மான்கொம்பை இழைத்துக் கோவைச் சாற்றில் ஒரு நாள் ஊற வைத்து மறுநாள் நன்றாய்க் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முன்போல் புடம்போட நீறும். அதைத் துணை மருந்துகளில் கொடுக்க மேற்காட்டிய நோய்கள் தீரும்.

கல்நார் பற்பம்.

1. கல்நாரைச் சிறு துண்டாய்ப் பிளந்து ஓட்டிலிட்டு அதற்குக் கீழும் மேலும் இலவங்கப்பட்டையை இடித்துப் போட்டு முதற் புடம் போட்டு பிறகு மேற்படி பட்டைக் குடிநீர்விட்டு அரைத்து 3 புடம் போடத் தவளம் போல் நீறும். தேனிலாவது தூதுவளை இளகத்திலாவது உட்கொள்ள 96 வகை சிலேத்தும நோயும் மேககாங்கையும் தீரும். மேற்படி பற்பத்தைப் பல் துலக்கத் தந்தம் இறுகும்.

2. கல்நாரை சிறு துண்டுகளாய் வெட்டி ஓட்டில் வைத்து அதற்குக் கீழும் மேலும் எருக்கம் வேரை இடித்த தூளைப் போட்டு மூடி கெச புடம் போட்டு துணை மருந்தில் கொடுக்க மேற்படி நோய்கள் தீரும். தந்தமிறுகும்.

பஞ்சலவண பற்பம்.

பஞ்சலவணம் வகைக்குக் கால் பலம்; கல்வத்தில் இட்டு பிரண்டை, முருங்கைப் பட்டை, குப்பைமேனி, நொச்சி, குமரி இவற்றின் சாற்றால் வகைக்கு ஒரு சாமம் அரைத்து வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் இட்டு சீலை செய்து பத்து எருவில் புடம் போட பற்பமாகும். அதற்கு நான்கில் ஒன்று பெருங்காயம் சேர்த்துத் தேன்விட்டு மெழுகுபோல் அரைத்து குப்பியில் வைத்துக் கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கழஞ்சு வீதம் நோய்

Koviloor Digital Library

பலத்துக்குத் தகுந்தபடி கால் மண்டலம் (12 நாள்), அரைமண்டலம் (24 நாள்) உட்கொள்ள வாதம், வாய்வு குத்தல், குடைதல், வலி, கடுப்பு, குன்மம், அண்டவாயு, கிராணி (தொடர் கழிச்சல்) பவுத்திரம், உருத்திர வாயு, குடல் புரட்டல், வயிற்றுப் பொருமல், செரியாமை, மந்தம், மகோதரம் ஆகிய நோய்கள் நீங்கும்.

பற்பப் படலம் முற்றும்.

திராவகப் படலம்.

அஃதாவது சகல விதமான இலவண வகை உப ரசங்களைக் கண்ணாடிப் பாத்திரங்களிலும், வாலைப் பாத்திரங்களிலும், புட்டி வகைகளிலும் போட்டுக் காய்ச்சினால் தீநீர் பெருகப் புகை நீர் பிடித்தலைக் கூறும் பகுதியாதலால் திராவகப் படலமெனப் பெயர் பெற்றது.

குறிப்பு:– இவைகளை 50 ஆண்டுகள் பயன்படுத்தலாம்.

சொன்னாரே திராவகத்தின் மார்க்க மெல்லாம்
சுளுவாகப் பலநூலு மெல்லாம் பார்த்துப்
பன்னவே லோகங்கள் நீறும் மார்க்கம்
பாடினார் நீத்தினங்கள் சுருக்கு வேதை
என்னவே யிந்நூல்போ லாருஞ் சொல்லார்
என்மக்கா ளுங்களுக்கு வுரைத்தேன் யானும்
மன்னகேள் ஆத்மரட் சாமிர் தத்தை
மாநிலத்தில் பண்டிதற்கா யறைந்திட் டோமே.

மகா திராவகம் (தீநீர்)

1. எருக்கு, துத்தி, தாழை, முருங்கை, ஊமத்தை, நாயுருவி, பிரண்டை, அறுகு, சித்திரமூலம், தென்னோலை, வாழைக் கிழங்கு, குப்பைமேனி, அறுகு இவைகளைச் சுட்டசாம்பல் வகைக்கு ஒரு படி வெவ்வெறு பாண்டத்திலிட்டு ஒவ்வொன்றிலும் நான்கு படி நீர் விட்டுக் கரைத்துவைத்து 4 நாள் தெளிவிறுத்துக் காய்ச்சிக் குழம்பு பதத்தில் பீங்கானில் இட்டு மோர் தெளித்து இரவில் பனியில் வைக்க உப்பு உறைந்திருக்கும். அதைப் பரிதியில் காயவைத்து வகைக்கு 3 பலம்; கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, நவாச்சாரம், வெண்மையாய் வறுத்த துருசு, பால்துத்தம், பூநீர் வகைக்கு 5 பலம், சிவக்க வறுத்த அன்னபேதி 16 பலம்; சவுட்டுப்பு 20 பலம்; சீனம் 70 பலம்; ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பு 100 பலம்; இவற்றைப் பொடிசெய்து மூன்று பங்குசெய்து ஒரு பங்கைத் திரவாகக் கலசத்தில் இட்டு நன்றாக வெந்த செங்களை வட்டமா யுரைத்து அதன் நடுவில் பெருவிரல் நுழைய துளை செய்து, அதைக்கலச வாயிற் பொருந்த மூடி ஏழுசீலை மண் செய்து அதைக் காயவைத்து தூாமைத்த சீசாவை தாவத்து சீமைசெய்து அடுப்பேற்றித் தீயெரிக்க திராவகம் இறங்கும். அதை மற்றொரு பங்கில் விட்டுப் பரிதியில் உலர்த்திப் பொடித்துக் கலசத்தில் இட்டுத் திராவகம் வடித்து மூன்றாவது பங்கியிட்டு உலர்ந்தி பொடித்து திராவகம் வடித்துக் குப்பியில்

Koviloor Digital Library

அடைத்துக்கொண்டு ஒரு துளி முதல் ஐந்து துளி வரை தண்ணீர், குடிநீர் (கிளாழம்), முதலான துணை மருந்துகளில் கொடுக்க வயிற்றுவலி (குன்மம்), பீலிகை, நீராமை, கவுசை, கெண்டை, பெருவயிறு, வாயுத்திரட்சி, காசுக்கட்டி, சூதகவாயு, சூதகவரட்சி, மகோதரம் முதலான இதர நோய்கள் தீரும்.

2. உவர்மண்ணும் சுண்ணாம்பும் தண்ணீரில் கரைத்து அதில் முதிர்ந்த காக்காச் சிப்பியைப்போட்டு வெளுக்கும் வரைக்காய்ச்சித் தூய்மைசெய்து பொடித்து மேற்படி திராவகத்தில்போட கரைந்து போகும். அந்த ஜலத்தை இறுத்துக் கொண்டு அடியிலிருக்கும் மஷ்டியை சாரத்திற்கு அங்கிபூட்டிப் புடம்போடக்கட்டும். அந்த நீற்றைச் சூதத்துடன் சேர்த்து, சிப்பி நீரால் அரைத்து வீரத்துக்குப் பூசி அப்பிரகப் பொடியில் வைத்துப் புடம்போட வீரம் கட்டும். கட்டின வீரம் 1 காசு எடை, சூதம் 1 பலம். இவை மேற்படி நீரால் ஆட்டிக் குகையில் வைத்தூத கட்டும்.

3. நாயுருவி, தாழை, மேனி, சிறுசின்னி, வாழை, தென்னை, வெள்ளறுகு, அமுரி, கள்ளி, இவற்றின் உப்பு வகைக்கு 1 பலம், சவுட்டுப்பு, வெண்காரம், கல்லுப்பு, இந்துப்பு, வகைக்கு 1 பலம், வெடியுப்பு 10 பலம், சீனம் 5 பலம், பூநீர், சூடன், சாரம், வெளுக்க வறுத்ததுருசு, சிவக்கவறுத்த அன்னபேதி, பாடாணம் வகைக்கு அரைப் பலம், தூய்மைசெய்த சிப்பி கால் பலம். இவற்றைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்போல் திராவகம் இறக்கவும். இதில் நவலோகமும் நீறும், செந்தூரமுமாகும்.

சங்குத் திராவகம் (தீநீர்)

அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு 9 பலம், சீனம், இந்துப்பு, வகைக்கு 3 பலம், சிவக்கவறுத்த அன்னபேதி 7½ பலம், வெளுக்க வறுத்துத் துருசு, கறியுப்பு வகைக்கு 2 பலம், சாரம், பூநீர், வகைக்கு 1 பலம். பொரிகாரம் அரைப் பலம் இவற்றைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்போல் திராவகம் வடித்து துணைமருந்தில் போட மேற்படி நோய்கள் தீரும். நவலோகம், பாடாணச்சரக்கு ஆகியவை நீறும்.

சீனத் திராவகம்.

அஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு 15 பலம், சீனம் 10 பலம், கல்லுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு, பூநீர் வகைக்கு 2 பலம், இந்துப்பு, சாரம் வகைக்கு ஒரு பலம். நாயுருவியுப்பு 3 பலம், சிவக்கவறுத்த அன்னபேதி 5 பலம், இவற்றைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்போல் திராவகம் வடித்து துணைமருந்துகளிலிட மேற்படி நோய்கள் தீரும். நவலோகச்சத்துகளில் வீரம் சேர்த்து மேற்படி திராவகம் விட்டு அரைக்க இரசமாகும்.

கெந்தகத் திராவகம்.

கெந்தகம், பூநீர் வகைக்கு 10 பலம், வெடியுப்பு 20 பலம், கல்லுப்பு 5 பலம், இவைகளைப் பொடித்துப் பனியில்வைத்து மெழுகுபோல் ஆட்டி உலர்த்திப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்போல் திராவகம் வடித்து அதில் துருசைத் துவைக்க நீறும். அதற்குச் சமம் சாரம் சேர்த்து அரைக்கச் செய நீராகும். அச் செயநீரில் வீரத்தைத் துவைத்து வாட்ட மெழுகாகும்.

Koviloor Digital Library

பஞ்சலவணத் திராவகம்.

வெடியுப்பு, சீனம், கறியுப்பு வகைக்கு 3 பலம்; நவாச்சாரம், வெண்காரம் வகைக்கு 1 ¼ பலம். இவைகளைப் பொடித்துத் திராவகம் வடித்துக் குருவை புழுங்கரிசிப் பொரிமாவிலாவது நிலவாகைத் தூளிலாவது கொடுக்க வயிற்றுப்பொருமல், வலி, வாயுத்திரட்சி முதலான வயிற்று நோய்கள் தீரும்.

மெழுகுத் திராவகம்.

சாம்பிராணி கால் பலம், வெள்ளைமெழுகு 1 பலம், கறியுப்பு ஆழாக்கு, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு 2 வராகன் எடை. இவைகளின் மெழுகைக் கரண்டியில் உருக்கி அதில் மற்றவைகளைப் பொடித்துத் தூவிக்கிளறி ஆற்றிப்பொடித்து அதில் நான்கு சிரங்கை பொடிமணலும் சேர்த்துக் கலசத்திலிட்டுத் திராவகம் வடித்து உடம்பில் பூசி மாலையில் சாப்பிட்டுவர சொரி, சிரங்கு, மேகச்சொரி, இரணம், குட்டம் ஆகியவை தீரும். காசு அளவு வெற்றிலையில் வைத்துக்கொடுக்க வயிற்றுப்புண் (குன்மம்), வயிற்றுவலி ஆகிய நோய்கள் தீரும்.

கறியுப்புத் திராவகம்.

தூய்மைசெய்த கறியுப்பு 8 பலம், படிகாரம் 6 பலம், இவைகளைப் பொடித்து எட்டு பலம் கடலைப் புளிப்புடன் கலந்து திராவகம் வடித்து ஐந்து துளி தண்ணீரில் கலந்து சாப்பிட்டுவர பசியின்மையைப்போக்கி உடல்வலிமையைக் கொடுக்கும். வாயு மந்தம், செரியாமை ஆகிய நோய்கள் தீரும்.

வெடியுப்புத் திராவகம்.

1. வெடியுப்பு 20 பலம், சீனம் 16 பலம் இவைகளைப் பொடித்து எட்டு பலம் கடலைப் புளிப்பில் கலந்து திராவகம் வடித்துத் தண்ணீரில் ஐந்து துளி விட்டு நாள்பட்ட சுரத்தினால் பலவீனமுடையவர்களுக்குக் கொடுத்தால் வலிவு உண்டாகும். காசுக்கட்டியும் கரையும்.

2. எட்டாம் காய்ச்சல் வெடியுப்பு, சீனம் சிவக்கவறுத்த துருசு வகைக்கு 9 பலம். இவைகளைப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்பு போல் திராவகம் வடித்துக்கொள்ளவும்.

3. எட்டாம் காய்ச்சல் வெடியுப்பு 30 பலம், சிவக்கவறுத்த அன்னபேதி 20 பலம் அல்லது 30 பலம் சேர்த்துப் பொடித்து மூன்று பங்கு செய்து முன்போல் திராவகம் வடித்துக்கொள்ளவும்.

4. வறுத்தகறியுப்பு 5 பலம், சிவக்கவறுத்த அன்னபேதி 10 பலம் சேர்த்துப் பொடித்து மூன்று பங்கு செய்து முன் போல் திராவகம் இறக்கிக்கொள்ளவும். சிவக்கவறுத்த அன்னபேதியை மட்டும் திராவகம் வடித்து அதில் 1 பலம் வறுத்தக் கறியுப்பைப் பொடித்துப் போட்டு உலர்த்தித் திராவகம் வடித்துக் கொள்ளவும். இத்திராவகம் ஒரு பங்கும் முன்பு சொல்லியபடி வெடியுப்புத் திராவகம் இரண்டு பங்கும் சேர்த்து அதில் போட நவலோகமும் கரையும்.

திராவகப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

கழிச்சல் படலம்.

அறைந்திட்டோம் பண்டிதற் கிந்த நூலை
அப்பனே சாத்தியங்கள சாத்தி யங்கள்
நிறைந்திட்ட குடிநீர்கள் விரோச னந்தான்
நேரான சிசுபே தியில டக்கம்
துறந்திட்டேன் கைபாகஞ் செய்பா கந்தான்
சூட்டினேன் மானிடர்கள் பிழைக்க வென்று
மறைந்திட்ட அமுதமுறைச் சுருக்க மென்று
மண்டலத்தில் முனிவர்களு மறைந்திட் டாரே.

குடிநீர்.

1. பிரம்மியிலை 1 பிடி, விதைநீக்கிய கடுக்காய் 4 கழஞ்சு, களிப்பாக்கு 3 கழஞ்சு, இந்துப்பு 2 கழஞ்சு அல்லது முந்திரிகைப் (திராட்சை) பழம் 1 கழஞ்சு. இவற்றைச் சிதைத்து 1 படி தண்ணீரில் போட்டு, எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து, மூன்றுமுறை வடிகட்டிச் சாப்பிட நன்றாய்க் கழிச்சலாகும். பிரம்மியிலையை நீக்கி மற்ற மருந்துகளை மைபோல் பொடித்து 1 ஆழாக்கு இஞ்சிக் குடிநீரில் கலந்து கொடுக்கப் பழமலமும், மலவாதமும், வாயுவும் நீங்கும். குளித்துவிட்டு மோர்சாதம் உண்ணவும்.

2. தேங்காய்ப்பூவும், முடக்கொத்தான் இலையும் ஓர் எடையாய்ப் பிட்டவித்து ஆழாக்குச்சாறு பிழிந்து வடிகட்டிச் சாப்பிட கழிச்சலாகும். அல்லது 1 படி முடக்கொத்தானிலையை அவித்தப் பிழிந்த தண்ணீரில் கொஞ்சம் பழம்புளி, கடுகு, சீரகம், மிளகு சேர்த்து இரசம்செய்து 1 ஆழாக்கில் அரைப் படி சிற்றாமணக்கெண்ணெய் விட்டுக் கலந்து சாப்பிடக்கழிச்சலாகும். குளித்து உணவு உட்கொள்ளவும்.

3. இந்துப்பு 1 வராகன் எடை, களிப்பாக்கு 2 வராகன் எடை, கடுகுரோகணி 3 வராகன் எடை, கடுக்காய் 4 வராகன் எடை, நிலவாகை 5 வராகன் எடை, கருவேலங்கொழுந்து 6 வராகன் எடை, கற்றாழஞ்சருகு 7 வராகன் எடை, பிரம்மியிலை 8 வராகன் எடை, இவற்றைச் சிதைத்து அரைப்படி தண்ணீரில் போட்டு, நான்கில் ஒரு பாகமாய் வற்றவைத்து, நான்கு முறை வடிகட்டிக் கொடுக்க நன்றாய்க் கழிச்சலாகும்.

4. தேங்காய்ப்பால் அரை ஆழாக்கு, மிதிபாகல்சாறு கால் ஆழாக்கு இவற்றைக் கலந்துச் சாப்பிடக் கழிச்சலாகிக் கிருமிகள் விழும், மேகநீர், மேகப்புண் ஆகியவை குணமாகும்.

மருத்துணவு:– புளிதள்ளி, நீர்க்கஞ்சி உட்கொள்ளவும்.

5. பூவரசம்பட்டையில் பசுவின்பால்விட்டு இடித்து, நான்கு அல்லது ஆறு முறை வடிகட்டி, உட்கொள்ளக் கழிச்சலாகும்.

மருத்துணவு:– புளிதள்ளி, நீர்க்கஞ்சி உட்கொள்ள மலக்கட்டு, நீர்க்கட்டு ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

6. சிறுசெருப்படையையும் ஈருள்ளியையும் இடித்துச் சாறு பிழிந்து ஆறுமுறை வடிகட்டிச் சாப்பிட கழிச்சலாகும். மேகச் சிரங்கு முதலானவை தீரும்.

கலப்புத்தூள் (சூரணம்)

1. சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, வாய்விளங்கம், திரிகடுகு, முந்திரியுப்பு அல்லது இந்துப்பு, இவைகளை பரிதியில் உலர்த்தி இடித்து வடிகட்டினத் தூள் வகைக்கு வராகனெடையை 3, பாலில வித்துக் சுத்தி செய்து உலர்த்தி இடித்து பொடை வராகன் எடை 2 சேர்த்து முவ்விரல் அளவு சர்க்கரையிலாவது வெந்நீரிலாவது உட்கொள்ள கழிச்சலாகும். குளித்து மோர் சாதம் கொள்ளவும்.

2. பாலில் இட்டுத் தூய்மைசெய்து இடித்த அதிமதுரம் 3 வராகன் எடை, திப்பிலித்தூள் 1 ½ வராகன் எடை இவற்றைப் பசுவின்நெய்யில் குழைத்து உணவுடன் இரவில் சாப்பிட்டுவர மலக்கட்டு தீரும்.

3. கருஞ்சீரகப்பொடி, முந்திரியுப்பு வகைக்கு 24 வராகன் எடை, சுக்குப்பொடி 2 வராகன் எடை, ஒன்றாய்க்கலந்து இரவில் உணவுடன் சாப்பிட்டுவரக் காலையில் மலக்கட்டு தீரும்.

4. ஜாலப்தூள் 24 வராகன் எடை, முந்திரியுப்பு நாற்பத்தி எட்டு வராகன் எடை, சுக்குத்தூள் 2 வராகன் எடை, இவற்றை ஒன்றாய்க் கலந்து 1 வராகன் எடை கற்கண்டுத் தூளில் உட்கொள்ள கழிச்சல் ஆகும்.

5. சுக்கு, பெருங்காயம், கருவேப்பிலை வகைக்கு ஒரு தோலா திப்பிலி நற்சீரகம் இந்துப்பு வகைக்கு தோலா அரைக்கால் இவற்றைப் பரிதியில் உலர்த்திப் பொடித்து, நெய்யில் கலந்து உணவுடன் சாப்பிட்டுவர வாயுவும், மலக்கட்டும் தீரும்.

6. கருவேப்பிலையும், நிலாவாரையிலையும் ஓர் எடையாய்ப் பொடித்து, முவ்விரல் அளவு தேனில் கலந்து உணவுடன் சாப்பிட்டு வர வாயுவும், மலக்கட்டும் தீரும்.

7. திரிகடுகு, சீரகம், இந்துப்பு, கரிவேப்பிலை, பெருங்காயம் இவற்றை ஓர் எடையாய்த் தூள்செய்து, முவ்விரல் அளவு பசுவின் நெய்யில் கலந்து பகல், இரவு இரண்டு வேளை உணவுடன் சாப்பிட்டு வர மலக்கட்டு நீங்கும்.

8. திருகுக்கள்ளி வேர்ப்பட்டையை பசுவின்பாலில் வேகவைத்து நிழலில் உலர்த்தி இடித்தத்தூள் கால் வராகன் எடை வெற்றிலை பாக்குப் போடும் போது கூடப்போட்டு மென்று அமிர்தத்தை உட்கொள்ள வாயு. மலக்கட்டு ஆகியவை நீங்கும்.

9. கடுக்காய் 4 பலம், அதற்குச் சமன் திரிகடுகு, சீரகம், ஓமம், இந்துப்பு, நறுக்குமூலம் ஓர் எடையாய்ப் பொடித்து முவ்விரல் அளவு சாப்பிட்டு வெந்நீர் உட்கொள்ள மலம் கழிந்து குடல் தூய்மை ஆகும்.

Koviloor Digital Library

நுண்புழு கழிச்சலுக்கு மருந்து.

1. ஒரு நாரத்தங்காயைச் சிறுக அரிந்து அதில் திரிகடுகு, இந்துப்பு, காயம், கருஞ்சீரகம், நற்சீரகம் வகைக்கு 1 வராகன் எடை தூள்செய்துத் தூவி திருகு கள்ளிப்பால் விட்டுப் பிசறி 8 நாள் வரையில் பரிதியில் காயவைத்துப் பொடித்துக் காசு எடை வெல்லத்திலாவது, வாழைப்பழத்திலாவது வைத்துக் கொடுக்கக் கழிச்சலாகும்; வாயு, மலக்கட்டு, பொருமல் ஆகியவை தீரும். கிருமிகள் பந்து பந்தாய் விழும்; மாதுளைவேர்க் குடிநீரிலும் நுண்புழுக்கள் விழும்.

2. ஏழு மிளகும், மிதிபாகல் இலையும் அரைத்து 1 கொட்டைப் பாக்கு அளவு கொடுக்க நுண்புழுக்கள் கூட்டோடு விழும்.

3. 10 வேப்பீர்க்கு, 4 கடுக்காய் இவை இரண்டையும் பிரண்டைச் சாற்றில் மையாய் ஆட்டி விளக்கெண்ணெயில் கலந்து கொடுக்க நுண்புழுக்கள் விழும்.

ஓமம் புரசவிதை வேர்ப்பீர்க்கு பிரண்டை இவைகளை வெள்ளாட்டு நீரிற் கஷாயஞ் செய்து வடிகட்டிக் கொடுக்க பந்து பந்தாய்க் கிரமிகள் விழும்.

4. இரண்டு புரசவிதையை எருமைச் சாணியில் பன்னிரண்டு மணிநேரம் பொதித்து வைத்திருந்து, காலையில் தோலை நீக்கிக் கழுவிப் பசுவின்பாலில் அரைத்துக் கலக்கிக் குடிக்க கிருமிகள் கூட்டோடு விழும்.

5. சரக்கொன்றைக் கொழுந்தை அவித்துப் பிழிந்தத்தண்ணீரில் சர்க்கரையைக் கலந்து 1 ஆழாக்கு சாப்பிட நுண்புழுக்கள் விழும்.

6. ஒரு வராகன் எடை பேய்ப்பீர்க்கம் விதைப் பருப்பை அரைத்து, வெந்நீரில் கலக்கிச் சாப்பிட கழிச்சலாகி நுண்புழுக்கள் நீங்கும். அரைவராக எனடை மாம்பளும் பையாவது, பூனைக்காலிலையாவது தேன் வெல்லத்தி கொடுக்க் கிருமிகள் விழும்.

எண்ணெய்.

1. பசுவின் பால் அரைப்படி, சிற்றாமணக்கெண்ணெய் கால்படி, இவைகளை ஒன்றாய்க் கலந்து, அதில் வேலிப்பருத்தி வேர்ப்பட்டை ஒரு எலுமிச்சங்காய் அளவு; எள்ளு 4 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து நான்கு புரசவிதையை மையாய்ப் பொடித்துப் போட்டு ஐந்துநாள் சென்ற பின்பு ஒரு பண எடை அளவு சாப்பிடக் கழிச்சலாகிக் கிருமிகள் விழும். சுடுகஞ்சி உட்கொள்ளவும்.

2. சிற்றாமணக்கெண்ணெய் 1 படி, பசுவின் பால் 4 பலம் இவைகளை ஒன்றாய்க் கலந்து அதிமதுரம், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, வாளப்பருப்பு வகைக்கு 4 கழஞ்சு அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி, வடித்துச் சிறுபிள்ளைகளுக்கு ஒரு கரண்டியும் பெரியோர்களுக்கு மூன்று

Koviloor Digital Library

கரண்டியும் கொடுத்து ஒரு நாழிகைக்குப் பின்பு வெந்நீர் உட்கொள்ள நன்றாய் கழிச்சலாகி வாயு, வாதம், சிரங்கு, சொரி, கரப்பான், கணைமாந்தம், என்புசுரம், என்புபட்டை, உடம்புவலி, கடுப்புவாதம், நீர்ச்சுரப்பு, பித்தம் ஆகியவை நீங்கும்.

மருத்துணவு:– உப்பு சேர்த்த நீர்க்கஞ்சி உட்கொண்டு மாலையில் சீரகம், மிளகு, சுக்கு இவைகளைக் குடிநீர்செய்து சாப்பிட்டு இரவில் மோர் சோறு சாப்பிடவும்.

3. ஈருள்ளி, இண்டங்கொழுந்து, கடுக்காய்த்தோல் இவைகளைச் சிதைத்து விளக்கெண்ணெயில் போட்டெரித்துச் சிறு குழந்தைகளுக்கு ஒரு சங்கு கொடுக்கக் கழிச்சலாகி நுண்புழு (கிருமி) விழும்.

4. விளக்கெண்ணெய் அரைப் படி, திருகு கள்ளிப்பால் ஆழாக்கு முற்றின தேங்காய்ப்பால் 4 படி, சிறுக அரிந்த வெள்ளைப் பூண்டு ஆழாக்கு, இந்துப்பு, பெருங்காயம், சவுக்காரம், வகைக்கு 1 கழஞ்சு, இவற்றை மைபோல் ஆட்டிப்போட்டுக் காய்ச்சி வடித்து காசு எடை கொடுக்க கிருமி கூட்டோடு விழுந்து, வாயு, பொருமல், மேகசூலை, முடக்கு, சொரி சிரங்கு ஆகியவை நீங்கும்.

உப்பு

சிறுசின்னியைச் சுட்ட சாம்பல் 1 படியை நான்கு படிநீரில் கரைத்துவைத்து நான்காம் நாள் தெளிவிறுத்துக் காய்ச்சி உப்பெடுத்து பண எடை கொடுக்க கழிச்சலாகி, நீர்க்கட்டு, வாத குன்மம், வாதம், அக்கினி மந்தம், கை, கால் பிடிப்பு, சூலை, சோகை, பாண்டு, காமாலை, வீக்கம், பொருமல், பித்தவாயு நீங்கிப் பசி உண்டாகும். உடல் வலிமை உண்டாகும்.

நாபிக் கழிச்சல் மருந்து.

இரசம், கந்தகம் வகைக்கு 1 வராகன் எடை, வாளம் 3 வராகன் எடை, அழிஞ்சிவிதைப்பருப்பு 4 வராகன் எடை, வெண்காரம் 5 வராகன் எடை, சிற்றாமணக்கின்பருப்பு 6 வராகன் எடை, காட்டாமணக்கின் பருப்பு 7 வராகன் எடை, கொன்றைப் பழத்தின் பருப்பு 8 வராகன் எடை, கடுக்காய்த் தோல் 9 வராகன் எடை, முருக்கன் பருப்பு 10 வராகன் எடை. இவைகளைக் கள்ளிப்பாலால் 3 நாள் அரைத்து, முற்றின தேங்காய்க்குள் அடைத்து, 15 நாள் தானியப்புடம் வைத்தெடுத்து, சிரட்டை நீக்கி அரைத்து வெண்கலப்பாத்திரத்தில் அப்பிச் சூரிய புடம் வைக்கத் தைலமிறங்கும்; அதைக் குப்பியில் அடைத்து அணு அளவு நாபியில் வைக்கக் கழிச்சல் ஆகும். குளிர்ந்த நீரில் குளித்து மோர் சாதம் உண்டு, சந்தனத்தை நாபியில் பூச கழிச்சல் நிற்கும். எலுமிச்சம்பழம், மல்லிகைப்பூ இவற்றில் தடவி முகர்ந்தால் கழிச்சலாகும்.

பூ கழிச்சல் மருந்து.

1. இரசம், கெந்தகம், வெண்காரம் வகைக்கு 1 வராகன் எடை, வாளம் 5 வராகன் எடை, ஆமணக்கின் பருப்பு 6 வராகன் எடை, கார்கோளிரிசி 7

Koviloor Digital Library

வராகன் எடை, புரசம் வித்து 8 வராகன் எடை, கடுக்காய்த்தூள் 9 வராகன் எடை, சிவதை 10 வராகன் எடை, புங்கம் பருப்பு 11 வராகன் எடை, இவைகளைக் கொடிக் கள்ளிப் பாலில் மூன்று நாள் ஆட்டி, தேங்காய்க்குள் அடைத்து, 15 நாள் நெல்லுக்குள் வைத்து, சிரட்டை நீக்கி அரைத்துப் பீங்கானில் போட்டு, பரிதியில்வைக்கத் தைலம் வடியும். அதை மல்லிகைப்பூச்செண்டில் தடவி முகர கழிச்சல் (விரோசனம்) ஆகும். வயிற்றில் சந்தனத்தைப் பூசிக் கொள்ள கழிச்சல் நிற்கும்.

2. வெள்ளைக் குங்கிலியத்தைக் கழிக்குள் வைத்து ஒரு மலர்ச்செண்டு எடுத்து உலர்த்திப் பொடித்துத் தணலில் இட்டுப் புகையை அலரிப் பூச் செண்டில் பிடித்து முகர்ந்து பார்க்கக் கழிச்சலாகும்.

3. அழிஞ்சில், நேர்வாளம் இவைகளின் பருப்பு வகைக்கு 1 படி அரைத்துச் சிற்றாமணக்கெண்ணெயில் கலக்கிக் காய்ச்சி எண்ணெயை எடுத்து, செவ்வலரிப்பூவில் தடவிப் பனியில் வைத்து, காலையில் முகர்ந்துக் கொண்டு இருக்கக் கழிச்சலாகும்; குளிர்ந்த நீரில் தலைமுழுகி வயிற்றில் சந்தனம் பூசிக் கொள்ள நிற்கும்.

மாத்திரை.

1. எருமைச்சாணிப் பாலிலும், எலுமிச்சம் பழச்சாற்றிலும், பசுவின் பாலிலும் அவித்துத் தூய்மை செய்து, மேல் தோலில் இதழ் நீக்கின வாளம் 6 வராகன் எடை, காசுக்கட்டி 12 வராகன் எடை, தேன் விட்டு நன்றாய் அரைத்து ஒரு குண்டுமணி எடை மாத்திரைசெய்து ஒரு மாத்திரை கொடுக்கக் கழிச்சலாகும். வயிற்றுவலி, அதிக வாந்தியும் கடின பேதியும் கண்டால் எலுமிச்சம்பழச் சாற்றைக் கொடுக்க நிற்கும். வெந்நீரில் குளித்து மோர்சாதம் உட்கொள்ளவும். அசதி, சன்னி, இழுப்பு, கடின சுரத்துக்கும்கொடுக்கலாம்.

2. தூய்மை செய்த வாளம் 7 வராகன் எடை, சாதிலிங்கம், இரசபற்பம், திரிகடுகு, சிற்றாமணக்கின் பருப்பு, வெண்காரம், வகைக்கு ஒரு வராகன் எடை குளிர்ந்த நீரில் ஆட்டி, குன்றிபோல் உருண்டை செய்து, வாழைப் பழத்துக்குள் வைத்து உண்டு கொஞ்சம் குளிர்ந்த நீர் குடிக்கக் கழிச்சலாகும். சுடு நீர் குடிக்க நிற்கும். வெந்நீரில் குளித்து மோர் சோறு உட்கொள்ளவும். அதிகமானால் நெல்லிப் பருப்பை மோரில் அரைத்துக் குடிக்க நிற்கும்.

3. தூய்மை செய்த நேர்வாள முத்து 20, எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று நாள் ஊற வைத்துக் கழுவிக் கல்வத்தில் இட்டுக் கடுக்காய் 10, மிளகு, சுக்கு, திப்பிலி, நற்சீரகம் வகைக்கு 3 வராகன் எடை பழச்சாற்றில் ஆட்டி மிளகுபோல் உருண்டை செய்து வெந்நீரிலிடக் கழிச்சலாகும். வாயு, வாதம், கிருமி, (நுண்புழு) நீங்கும். அதிகப்பட்டால் வசம்புச் சுட்ட சாம்பலைத் தண்ணீரில் கரைத்துக் கொடுக்க நிற்கும்.

4. இரசம் ஒரு வராகன் எடை, கெந்தகம் 2 வராகன் எடை, பொரிகாரம் 3 வராகன் எடை, மிளகு 4 வராகன் எடை, சுக்கு 5 வராகன் எடை,

Koviloor Digital Library

கடுக்காய் 6 வராகன் எடை, வாளப் பருப்பு 8 வராகன் எடை, வெல்லம் 30 வராகன் எடை சேர்த்துச் சுண்டைக்காய் அளவு சாப்பிடக் கழிச்சலாகும். மோர் சோறு உட்கொள்ளவும். வாயு, சுரம் ஆகிய நோய்கள் தீரும்.

5. சூதபற்பம், இலிங்கம், வெண்காரம், இந்துப்பு, கடுக்காய், கடுகுரோகணி, வெள்ளைக் காக்கணான் வேர், வகைக்கு 3 வராகன் எடை, தூய்மை செய்த வாளம் 8 வராகன் எடை இவைகளை பிரண்டைச் சாற்றால் இரண்டு சாமம் ஆட்டி, கடலை போல் உருட்டி, இஞ்சிச் சாற்றில் அல்லது வெந்நீரில் கொடுக்கக் கழிச்சலாகும். மிளகு நீர் சோறு உண்ண வாயு, சுரம், நீர்க்கோவை, வயிற்றுப் பொருமல், ஆகியவை நீங்கும்.

6. கடுகுரோகணி, வெள்ளைக்காக்கணான் வேர்ப்பட்டை, சாரணைவேர், மிளகு, திப்பிலி, வெண்காரம், சிவதை வேர் வகைக்கு 4 வராகன் எடை தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 14 வராகன் எடை இவைகளைப் பிரம்மி இலைச்சாற்றால் மெழுகுபோல 3 நாள் அரைத்து, இஞ்சிச்சாறு, பனைவெல்லம், வெந்நீர் இவைகளில் கொடுக்கக் கழிச்சலாகும்.

7. தூய்மைசெய்த வாளம் 8 வராகன் எடை, சாத்திரபேதி, சிற்றாமணக்கின் பருப்பு, சாரம் வகைக்கு அரை வராகன் எடை, சாதிலிங்கம், விளாவரிசி, கடுகுரோகணி, வகைக்கு 1 வராகன் எடை, கடுக்காய் 2 வராகன் எடை இவைகளைக் கற்றாழம்பாலால் ஒரு நாள் ஆட்டி தூதுவளங்காய் போல் உருட்டி ஒரு குளிகை வாழைப்பழத்தில் பொதித்துக்கொடுக்கக் கழிச்சலாகும்; வெந்நீர் குடிக்க கழிச்சல் அதிகப்படும்; தண்ணீர் குடிக்க நிற்கும். மோர் சோறு உட்கொள்ளவும்.

8. தூய்மைசெய்த தாளகம், திரிகடுகு, திரிபலை, சிவதைவேர் வகைக்கு 3 வராகன் எடை, நேர்வாளம் 6 வராகன் எடை, இரசம், கெந்தகம் வகைக்கு 1 வராகன் எடை, இஞ்சிச் சாற்றில் ஒரு நாள் ஆட்டிக் குன்றி போல் உருண்டை செய்து, இஞ்சிச்சாற்றிலாவது, வெல்லத்திலாவது கொடுக்கக் கழிச்சலாகும் சுரம் நிற்கும்

9. ஏலம், இலவங்கம், அதிமதுரம், கடுகுரோகணி, திப்பிலிமூலம், சாத்திரபேதி, சண்பகமொக்கு, இரசபற்பம் வகைக்கு ஒரு வராகன் எடை, நேர்வாளப்பருப்பு 6 வராகன் எடை இவைகளை வெந்நீரில் அரைத்துக் குன்றிபோல் உருண்டைசெய்து வெல்லத்தில் கொடுக்கக் கழிச்சலாகும். சுரம் நிற்கும்.

10. திரிகடுகு, சீரகம், கடுகுரோகணி, முருங்கைப்பூ, தூய்மைசெய்த பூரம் வகைக்கு 1 வராகன் எடை, நேர்வாளப் பருப்பு 7 வராகன் எடை, குளிர்ந்த நீரில் ஆட்டி குன்றிபோல் உருண்டை செய்து தேன், பால், வாழைப்பழம், சீனி இவைகளில் நோய்க்குத் தகுந்தபடி கொடுக்க நுண்புழு (கிருமி), வாயு, மந்தம், பழஞ்சுரம், சோகை, மஞ்சள்நோய் (காமாலை), வெளுப்புநோய் (பாண்டு), பித்தம், எரிகுன்மம், குடல்வாதம், வாயுகுத்து, கெண்டை, வலப்பாட்டீரல்நோய் (கவுசை) ஆகியவை நீங்கும். மோர் சாதம் உட்கொள்ளவும்.

கழிச்சல் படலம் முற்றும்.

Koviloor Digital Library

உதர நோய்ப் படலம்.

இரத்தம் அதிகமாகி நரம்பு வழிகளிலும் பெருங்குடலைப் பற்றி உதிரம் பெருகுவித்தலாம்.

1. அவுரி, திருகுகள்ளி, வீழி, கரிசாலை, கழற்சி, முடக்கொத்தான், வேம்பு, இவைகளின் சாறு வகைக்கு 1 படி; பேய்க்கும்மட்டிக்காய், ஆடாதோடை இவைகளின் சாறு, சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு 2 படி; வெள்ளாட்டுநீர், எருக்கம் பழுப்புச்சாறு, திருகுகள்ளிச்சாறு வகைக்கு அரைப்படி; ஒன்றாய்க் கலந்து திரிகடுகு, திரிபலை, வெண்காரம், வாய்விளங்கம், வெண்கடுகு, கடுகுரோகணி, கருஞ்சீரகம், நவாச்சாரம், பஞ்சலவணம், ஆனைத்திப்பிலி, திப்பிலிமூலம், மரமஞ்சள் வகைக்கு 1 பலம்; பொடித்துப் போட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் எண்ணெய் வடித்து, 1 மண்டலம் (48 நாள்) நெல்லுக்குள் புதைத்தெடுத்து, நாள் ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் மூன்று நாள் கொடுத்து; ஆறு நாள் வரை மறுபத்தியம் இருந்து, ஏழாம் நாள் தலைமுழுக்குச் செய்து, உப்பு கூட்டி உட்கொள்ள மேற்படி நோய் தீரும்.

2. நொச்சி, சிவதை, முருங்கை, சாரணை, ஆயில்யம், சங்கு, மாவிலிங்கு, முக்காவேளை, இவைகளின் வேர்ப்பட்டை வகைக்கு 2 பலம் வீதம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு, வற்றவைத்து வடித்த குடிநீர் 1 படி, பசுவின்நெய் 1 படி, திருகுகள்ளிப் பால் 1 ஆழாக்கு, பேய்க்குமட்டிக்காய்ச்சாறு அரைப்படி இவைகளை ஒன்றாய்க் கலந்து அதில் வாளம் 1 வராகன் எடை, பெருங்காயம் 6 வராகன் எடை, இந்துப்பு, வெண்காரம், கடுகுரோகணி, வெள்ளுள்ளி, சவுக்காரம், சீனம், வெட்பாலையரிசி வகைக்கு 5 வராகன் எடை; அரைத்துப் போட்டு நான்கு நாள்வரை சிறு தீயாக எரித்து, 5–ம் நாள் பதமாய்க் காய்ச்சிவடித்து நாள் ஒன்றுக்கு 1 கரண்டி வீதம் உட்கொள்ளவும்.

மருத்துணவு:– சுண்டை வற்றல், மோர், மிளகுநீர், கோழிச்சாறு (இரசம்) கூட்டிக்கொள்ளவும்.

பேய்க்குமட்டி நெய்.

பசுவின்நீர், பால், நெய், பேய்க்குமட்டிக்காய்ச்சாறு வகைக்கு 1 படி; சுக்கு, திப்பிலி, கோட்டம், சிவதை, வெள்ளைக்காக்கணான்வேர், கற்கடகசிங்கி, சாரணைவேர், காயம், ஓமம், இந்துப்பு, கடுகு வகைக்கு 1 கழஞ்சு வீதம்; அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து, நாள் ஒன்றுக்கு இரண்டு காசு எடை வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

சாரணை மெழுகு.

சாரணைவேர்ப்பட்டைத் தூள் 1 படி; சாரணை இலைச்சாறு 1 படி, இலைக்கள்ளிப்பால், பசுவின் பால் வகைக்கு கால்படி; பசுவின் நீர் 2 படி; ஒன்றாய்க்கலந்து அதில் 1 ஆழாக்குக் கல்லுப்புப் பொடிபோட்டு அரைத்து, சிமிழில் அடைத்துக்கொண்டு, வேளைஒன்றுக்குச் சுண்டைக்காய் அளவு சாப்பிட்டு மோர்ச்சாதம் உண்ணத் தீரும்.

Koviloor Digital Library

குமட்டி மெழுகு.

ஐம்பது வரிக்கும்மட்டிக்காய் இடித்துப் பிழிந்தசாற்றுடன் பசுவின்பாலும் கோநீரும் பதக்கு வீதம் விட்டு, ஒரு நாள் காய்ச்சிக் குறுகிவரும்போது, 12 பலம் வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் திரிகடுகு, வெள்ளுள்ளி, காந்தம், சீனக்காரம், வெண்காரம், வெடியுப்பு, சவுக்காரம், சீரகம், இந்துப்பு, வகைக்கு 1 வராகன் எடை; கந்தகம், வாளம் வகைக்கு அரை வராகன் எடை; இவைகளை ஆழாக்குக் கள்ளிப் பாலால் ஆட்டிப் போட்டு, கிண்டிப் பசுவின்நெய், விளக்கெண்ணெய் வகைக்கு ஒரு பலம் விட்டு, நீர் இல்லாமல் பதமாய்க் காய்ச்சி, நெல்லுக்குள் பத்து நாள் வைத்து எடுத்து, ஒரு சுண்டைக்காய் அளவு வெல்லத்தில் பொதித்துச் சாப்பிட்டுவரத் தீரும்.

குமட்டி மெழுகு (வேறு)

ஐம்பது வரிக்கும்மட்டிக் காயை இடித்துப் பிழிந்த சாற்றில், கல்லுப்பு ஒரு படி, வெடியுப்பு, வளையலுப்பு, காந்தம், சுக்கு, திப்பிலி, வெள்ளுள்ளி, வகைக்கு அரைப்பலம்; காயம் கால் பலம்; வாளம், சாதிலிங்கம், வகைக்கு ஒரு பலம்; பொடித்துப் போட்டு இலைக்கள்ளிப் பால் 1 படி கூடவிட்டுக் காய்ச்சி, மெழுகு பதத்தில் எடுத்து, நாள் ஒன்றுக்கு ஒரு வராகன் எடை கொடுத்து, உப்புப் புளி நீக்கிக் கஞ்சி உட்கொள்ளத் தீரும்.

இலுப்பைப்பூ மெழுகு.

ஒரு பலம் இலுப்பைப்பூவை எடுத்துச் சட்டியில் இட்டு மயில் நிறமாக வறுத்துக்கொண்டு அதன் மேல் கடுகுரோகணி, குரோசானிஓமம் வகைக்கு கால் பலம்; ஒரு பாத்திரத்தில் போட்டு அதில் பிரண்டை, மேனி, தைவேளை ஆகியவற்றின் சாறு வகைக்கு அரைப்படி விட்டு, வெய்யிலில் உலர்த்தி இடித்து, மெழுகாக்கி வைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு சுண்டைக்காய் அளவு உட்கொண்டு வரப் பெருவயிறு, குன்மம், பீலிகை முதலான நோய்கள் தீரும்.

பேய்ப்பீர்க்கு மெழுகு.

(8) பேய்பீர்க்கங்காயை இடித்துப் பிழிந்த சாற்றை அடுப்பிலேற்றிக் காய்ச்சி, பெருங்காயம் கழஞ்சு பொடித்துப் போட்டுக் காய்ச்சிக் குழம்புபோல் வற்றவைத்து, கல்வத்திலிட்டு மெழுகு போல அரைத்துக் கொட்டைபாக்கு அளவாக உருட்டி வைத்துக் கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் சாப்பிட்டுவர நோய் தீரும்.

தேங்காய் மெழுகு.

நீர்வற்றின தேங்காய்க்குள் 1 ½ வராகன் எடை கெந்தி பொடித்து போட்டு ஒரு சிரங்கைக் கள்ளிப்பால் ஊற்றி அதற்கு மூன்று சீலை மண்செய்து, மூன்று நாள் காயப்போட்டு, ஏழெருவில் புடம் போட்டு சிரட்டை நீக்கித் தாழைத்தலை முடிச்சில் வெட்டி இலையைத்தள்ளி முடிச்சை எடுத்து மேற்றோலைசீவ உள்பருப்பை வில்லை வில்லையாக நறுக்கிச் சற்றுநேரம் வெய்யிலில்காய இதை முன்பு மருந்துக்குப் பாதிசேர்த்து ஒன்றாய்

Koviloor Digital Library

இடித்துச் சற்று நேரம் வெய்யிலில் வைக்க இளகமாகும். இதில், சுண்டைக்காய் அளவு உட்கொள்ளக் கழிச்சலாகும். மிகுதியானால், தண்ணீரில் பழச்சாறு பிழிந்து கொடுக்கக் கழிச்சல் நிற்கும். கவுசை, கெண்டை, பெருவயிறு, பாண்டு, பாரிசவாயு, மேகவாயு, குன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

கொல்லங்கோவைத் தைலம்.

ஒரு படி சிற்றாமணக்கெண்ணெயில் கொல்லங்கோவைக் கிழங்கு, ஈருள்ளி, வெள்ளறுகு வகைக்கு அரைப் பலம் வீதம் இடித்துப் போட்டு, மூன்று நாள் வரையில் வைத்து, நான்காம் நாள் காய்ச்சி வடித்து, வேளை ஒன்றுக்கு அரைக் கரண்டி வீதம் சாப்பிடக் கெண்டி, பெருவயிறு, குன்மம் ஆகிய நோய் தீரும்.

கெந்திவெடி மெழுகு.

கெந்தி, வெடியுப்பு, இந்துப்பு, சவுக்காரம், சீனம், பெருங்காயம் வகைக்குக் கால் பலம் வீதம் பொடித்து, எலுமிச்சம் பழச்சாற்றில் வெய்யிலில் மூன்று நாள் காயவைத்து, மெழுகுபோல அரைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்கு ஒரு காசு எடை வீதம் கலந்து 11 வேளை உட்கொள்ள குன்மம், வெடியுப்பு, சோகை நோய் ஆகியவை நீங்கும்.

ஐந்துப்பு மெழுகு.

மூன்று படி பசுவின் நீரில், பஞ்சலவணம் வகைக்கு 1 பலம் வீதம் பொடித்துப் போட்டுக் காய்ச்சி, வற்றவைத்து மெழுகுபோல் அரைத்து, நாள் ஒன்றுக்குச் சுண்டைக்காய் அளவு உட்கொள்ள உதர நோய் நீங்கும்.

வெள்ளுள்ளித் தைலம்.

வெள்ளுள்ளிச் சாறு, இஞ்சிச்சாறு, திருகுக்கள்ளிப்பால், கொள்ளு அவித்தநீர், முடக்கொத்தான் சாறு வகைக்கு கால் படி; நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் இந்துப்பு, சிவதை, செவ்வள்ளிக்கொடி, கடுகு, நிலாவாரைவேர்ப்பட்டை வகைக்கு 3 எடை வீதம்; அரைத்துப் போட்டுக் காய்ச்சி வைத்துக்கொண்டு வேளை ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் உட்கொள்ள கெண்டை, குன்மம் ஆகிய நோய்கள் நீங்கும்.

பெருங்காய இளகம்.

பெருங்காயம் 1 பலம் இந்துப்பு, திப்பிலி வகைக்கு 1 1/2 வராகன் எடை; கருஞ்சீரகம், வசம்பு, கோட்டம் வகைக்கு 6 வராகன் எடை; வெண்காரம், வெள்ளுள்ளி, ஓமம், சுக்கு இவைகளை வகைக்கு 10 வராகன் எடை; முருங்கை, வேலிப்பருத்தி இவைகளின்வேர்ப்பட்டை வகைக்கு 20 வாராகன் எடை; இவைகளைக் குப்பைமேனிச் சாற்றால் ஒரு நாள் ஆட்டி, கால்படி கொடிக்கள்ளிப்பாலில் கரைத்து காய்ச்சிக் கிளறி வைத்துக்கொண்டு, நாள் ஒன்றுக்கு ஒரு சுண்டைக்காய் அளவு சாப்பிட நோய்கள் நீங்கும்.

Koviloor Digital Library

சிவதைச் சூரணம்.

பாக்கு, கடுக்காய், வகைக்கு 5 பலம்; சிவதை 6 பலம், மிளகாய் 3 பலம்; திப்பிலி, காயம், கடுகு, இந்துப்பு, ஓமம், அதிவிடையம், அரத்தை வகைக்கு 4 பலம், இவைகளைத் தூள் செய்து முவ்விரல் (திரிகடி) அளவு, இளநீரில் ஒரு மண்டலம் உட்கொள்ள மகோதரம் முதலான உதர நோய்கள் தீரும்.

சிந்தாதி நெய்.

மூன்று முற்றின தேங்காயில் பால்பிழிந்து, அதில் நேர்வாளப்பருப்பு 100 இரசகற்பூரம் 1 கழஞ்சு, வெள்ளைப் பாடாணம் அரைக் கழஞ்சு, பசுவின் பால், கள்ளிப்பால் வகைக்குக் கால் படி; கூடவிட்டுக் காய்ச்சி நெய்யை வடித்து, இரண்டு காசு எடை கொடுக்க மேற்படி நோய்கள் நீங்கும்.

உதர நோய்ப் படலம் முற்றும்.

பாண்டு நோய்ப் படலம்.

இரத்தம் கெட்டு பலவாறான நோய் சேர்வதால் உண்டாவது.

பாண்டு நோயின் இயல்பு.

1. உடல் பசியநிறமாய்ப் பளபளத்து, முகங்குளுப்பையிட்டு, இருவிழியும் நீலநிறமாய், இடுப்புக்குத்தோடு, நீரும் பொன் நிறமாய் இறங்கினால் பாண்டின் குணமென்றும்; தேகம்வெந்து நெஞ்சுக்குத்தல், துடியிருமல், இளைப்பு, நடுக்கல், திகைப்பு, எய்ப்பு, கிறுகிறுப்பு தோன்றினால் பித்தப்பாண்டு என்றும்; அது முற்றினால் நாளுக்கு நாள் உடம்புவற்றி தலைவலி, சுவையின்மை, குரல்கம்மல், வயிற்றுக்கடுப்பு, உளைவு, கை, கால், நாவில், வெடிப்பு, வாயால் இரத்தம் கக்கல் முதலான வேதனைகளுண்டாம். இடுப்பு உளைந்து, அன்னம் குறைந்து, அபானம் சுருங்கி, மலம் வறண்டு, வலிமை குறைந்து, நகக்கண், முகம் நீர்மஞ்சளித்தால் மூலபித்த பாண்டு என்றும்; உடல், கால் ஓய்ந்து சூலைமேற்கொண்டு அன்னம் சுருங்கினால் மூலபாண்டு என்றும்; தாகவிடாய் நீங்கி உடல், கண், உதடு, நாவு, மலஞ்சிறுநீர் தன்னிறம் கெட்டுக்கருகி, வயிறு பொருமிச் சுவையின்மை தோன்றி, புறங்கால் வீங்கிக் கைகால் ஓய்ந்தால், வாதபாண்டு என்றும்; உடல்வெளுத்து, ஒரு பக்கம் வீங்கிவற்றிக் கண்ணில் இரத்தம் வற்றி, வெளுப்பேறி எலும்பு எரிவு, தலைபாரம், உணவில் வெறுப்பேற்பட்டு, வாயு, நஞ்சுபோல் ஏறினால் நச்சுப் பாண்டு என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன.

மருத்துவம்:– 1. சிவனார்வேம்பு சமூலம், மூக்கரட்டை, சாரணைவேர், நெருஞ்சிச் சமூலம், நீர்முள்ளியிலை, வீழியிலை, முசுட்டையிலை வகைக்கு 3 படி; விதை நீக்கிய கடுக்காய் 2 படி, களிப்பாக்கு 20, இரும்புக்கிட்டம், வெள்ளைப்பூ வகைக்கு 1 பலம்; அரிசி, சிவதை, கடுகுரோகணி, இந்துப்பு, இஞ்சி வகைக்கு 3 பலம்; இவைகளைச் சிதைத்துப் பதக்குத் தண்ணீரில்

Koviloor Digital Library

போட்டு, இரண்டு படியாய் வற்றவைத்து, அடைக் குடிநீரில் வைத்துக்கொண்டு, வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம், மூன்று நாள்கள் 6 வேளை கொடுக்க பாண்டு, விடபாண்டு முதலான எவ்வகை வீக்கமும் தீரும்.

2. சங்கு, நெருஞ்சி, சத்திச்சாரணை, நீர்முள்ளி, திரிபலை, வேப்பந்தோல், பழைய இரும்புக்கிட்டம், பிரம்மி, சுரைக்கொடி, ஈருள்ளி, பங்கம்பாளை, செங்கத்தரி, சிறுகுறிஞ்சான், மயிர்மாணிக்கம் வகைக்கு 6 பலம் வீதம், இடித்து நான்கு படி நீரில் போட்டு, நான்குபடி பழங்காடியும் கூடவிட்டு, ஒரு படியாய் வற்ற வைத்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு கால் படி வீதம் 3 நாள் உட்கொள்ள பாண்டு முதலான எவ்வகை வீக்கமும் தீரும்.

3. நீர்முள்ளி, கீழ்க்காய்நெல்லி, வீழிவேர், கோவைத்தண்டு, பூவசரம்பட்டை, கையாந்தகரை, செந்தொட்டிவேர், சிறுபீளைவேர், நவ்வல்துளிர், நெருஞ்சிவேர், நிலவாகை, உசிலம்பட்டை வகைக்கு 6 பலம்; கடுக்காய், கடுகுரோகணி, கருஞ்சீரகம், திப்பிலி வகைக்கு 6 வராகன் எடை; இவைகளை இடித்து 6 பங்கு செய்து, நாள் ஒன்றுக்கு ஒரு பங்கில் நான்கு படி நீர்விட்டு, அரைப்படியாய் வற்ற வைத்து, வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம் கொடுக்கவும், இவ்வாறு, ஆறு நாள் பத்தியம் நீக்கி உட்கொள்ளவும்.

4. கருந்துத்தியிலைச்சாறு, தேங்காய்ப்பால் வகைக்கு 1,8 படி வீதம் ஒன்றாய்க் கலந்து, வேளை ஒன்றுக்குக் கால் படி வீதம் 7 நாள் சாப்பிட்டு; பாசிப்பயிரும், தேங்காயும், கறிசெய்து உட்கொள்ளப் பாண்டு, விடபாண்டு ஆகிய நோய்கள் தீரும்.

கரிச்சாலை இளகம்.

பொற்றலைக்கரிப்பான், நெருஞ்சிச்சாறு வகைக்கு 2 படி; சிறுகீரை, பொடுதலை, கீழ்க்காய்நெல்லி, சிறுசெருப்படை வகைக்குச் சாறு 1 படி; நவ்வல், கருங்காலி, அத்தி இவைகளின் பட்டை; தென்னம்பூ, மஞ்சள் வகைக்கு ஒரு பலம், இடித்துத் தூணி நீரில் போட்டு, வற்ற வைத்த குடிநீர் 2 படி; மிளகு, மிளகரணைவேர், அவுரி, சிற்றாமுட்டி, பேறாமுட்டி, விலாமிச்சு வகைக்கு 3 பலம் வீதம்; இடித்துத் தூணிநீரில் போட்டு வற்ற வைத்த குடிநீர் 2 படி; பசுவின் பால் 4 படி; இவைகளைக் கலந்து பனைவெல்லம் வகைக்கு 8 பலம்; கரைத்துக் காய்ச்சி பாகுசெய்து; சீரகம், கிராம்பு, ஏலம், சாதிக்காய், சாதிப்பத்திரி, ஓமம், குரோசானிஓமம், சிறுநாகப்பூ, கற்கடகச்சிங்கி, கோட்டம், அக்கிராகாரம், அதிமதுரம், தாளிசப்பத்திரி, திரிகடுகு, திரிபலாதி வகைக்கு ஒரு பலம் வீதம் தூள்செய்து தூவிக் கிளறி, பசுவின் நெய் அரைப் படி, தேன் 1 படி கூடவிட்டு இளகம் செய்து, திரிலோகச் செந்தூரம், மாண்டூரச்செந்தூரம் வகைக்கு 1 பலம் போட்டுப் பிசைந்துகொண்டு, வேளை ஒன்றுக்குப் புன்னைக்காய் அளவு சாப்பிட்டுவர சகல பாண்டு, வீக்கம், கிராணி, சுவையின்மை, ஆகிய நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

2. பொற்றலைக் கரிப்பான்சாறு, பெருந்தும்பைச்சாறு, தென்னை, கமுகு இவற்றின் பூவை இடித்துப் பிழிந்தசாறு வகைக்கு 1 படி; பொடுதலை, எலுமிச்சம்பழம், சிறுகீரை, நெல்லிக்காய், சிறுபுள்ளடி, நெருஞ்சி, இஞ்சி இவைகளின்சாறு வகைக்கு அரைப் படி; இளநீர் 16 படி; நொச்சி, விலாமிச்சு, காட்டுக்கிழங்கு, பிரண்டை, நிலவாகை, சித்திரமூலம், நன்னாரி, கீழ்க்காய்நெல்லி, மலைதாங்கி இவைகளின் வேர்; பெருமரத்துப்பட்டை, கடுக்காய், மண்டூரம், வில்வப்பழத்து ஓடு வகைக்கு 1 பலம் வீதம் இடித்து, 24 படி தண்ணீரில்போட்டு, வற்றவைத்த குடிநீர் 4 படி; ஒன்றாய்க் கலந்து பனைவெல்லம், வெல்லம் வகைக்கு 8 பலம் இடித்துப் போட்டுக்காய்ச்சி, குறுகி வரும்போது திரிகடுகு, ஓமம், மஞ்சள், கீழ்க்காய்நெல்லிவேர், சிறுதேக்கு, சிற்றரத்தை, கற்கடகச்சிங்கி, சடாமாஞ்சில், ஏலம், சிறுநாகப்பூ, பெருஞ்சீரகம், பொரிகாரம், சீரகம், மதுரம், சாதிக்காய், வால்மிளகு, பேரீச்சங்காய், தாளிசபத்திரி, சாதிப்பத்திரி, கிராம்பு, கருவாப்பட்டை வகைக்கு 6 கழஞ்சு வீதம் வெய்யிலிலுலர்த்தி, இடித்து வடிகட்டின தூளையும், கோட்டம், மாங்கொட்டைப்பருப்பு, அத்திப்பிஞ்சு இவற்றை வகைக்கு 1 பலம் வீதம், நெய்விட்டு வெதுப்பிப் பொடித்தத் தூளையும் தூவிக்கிளறி, நெய் 2 படி, தேன் 1 படி கூடவிட்டு மெழுகு பதமாய் இளகம் செய்து, வேளை ஒன்றுக்குக் கொட்டைப்பாக்கு அளவில் திரிலோகம், அப்பிரகம், காந்தம், அயம் இவைகளின் செந்தூரம் வகைக்கு ஒரு காசு எடை வீதம் வைத்து அரை மண்டலம் உட்கொள்ள சகல பாண்டு, சோகை, காமாலை, கிராணி ஆகிய நோய்கள் தீரும்.

3. கரிசாலாங்கண்ணி 25 பலம் சிதைத்து, பதினாறு படி தண்ணீரில் போட்டு, ஒரு படியாய் வற்றவைத்து, வடித்த குடிநீரையும், 2 பலம் மிளகைச் சிதைத்து 6 படி தண்ணீரில் போட்டு 1 படியாய் வற்றவைத்த குடிநீரையும் ஒன்றாய்க் கலந்து, அதில் சர்க்கரை 100 பலம் போட்டுப் பாகுசெய்து, மயில் கொன்றைப் பூ, புளியாரைச் சமூலம், தூதுவளை இலை, நாறு கரந்தையிலை, பொற்றலைக்கரிப்பான் வகைக்கு ஒரு பலம்; திரிகடுகு, மல்லி, சீரகம், சடாமாஞ்சில் வெட்பாலையரிசி வகைக்குக் கால் பலம்; குங்குமப்பூ, கோரோசனை, ஏலம் வகைக்கு 1 வராகன் எடை, இவற்றைத் தனித் தனியே இடித்து வடிகட்டின தூளைத் தூவிப் பசுவின் நெய் 1,8 படி கூடவிட்டுக் கிண்டி இறக்கி, அயச்செந்தூரம் மண்டூரச் செந்தூரம் வகைக்கு ஒரு பலம் போட்டுப் பிசைந்து, வேளை ஒன்றுக்கு 1 கொட்டைப்பாக்கு அளவு சாப்பிடத் தீரும்.

தேசி நெய்.

எலுமிச்சம்பழம், பொற்றலைக் கரிப்பான், நெல்லிக்காய், பேய்ப்புடல், முசுமுசுக்கை, கீழ்க்காய்நெல்லி, பசுவின் பால் வகைக்கு கால் படி; சர்க்கரை 5 பலம் ஒன்றாய் கூட்டிக் காய்ச்சிக் குறுகி வரும்போது, கொடுவேலி, சீரகம், திரிகடுகு, திரிபலை இவற்றின் தூள் வகைக்கு ஒரு பலம்; தூவிக் கிண்டி, பசுவின் நெய் 1 படி. தேன் கால்படி விட்டுமெழுகு பதமாய் இளகம்செய்து, வேளை ஒன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவில் காந்தச் செந்தூரம், அயச்செந்தூரம் வைத்து, அரை மண்டலம் (24 நாள்) சாப்பிட்டு;

Koviloor Digital Library

ஒரு படி பசுவின் நெய்யில், ஒரு பலம் கொடிவேலி வேர்ப்பட்டையைப் பசுவின் பாலிலும், மூன்று பலம் திரிபலையைத் தாய்ப்பாலிலும், அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, வாரத்துக்க இரண்டு முறை தலைமுழுகிவர நச்சுப் பாண்டு, பித்தக் காமாலை, குன்மம், வாயு, வண்டுகடி ஆகிய நோய்கள் நீங்கும்.

பேய்க்குமட்டிக் குழம்பு.

1. பேய்க்குமட்டிச்சாறு, படி 1, காயம் 10 வராகன் எடை; கடுகுரோகணி, கருஞ்சீரகம், வால்மிளகு, இந்துப்பு, வெண்காரம் வகைக்கு 2 வராகன் எடை; பேய்க்குமட்டிக் காய்ச்சாற்றைக் குழம்பாய்க் காய்ச்சிக் கல்வத்திலிட்டு, மற்ற மருந்துகளையும் பொடித்துப் போட்டு அரைத்து, அதைச் சிமிழில் வைத்துக் கொண்டு, குன்றிமணி அளவு பனைவெல்லத்தில் பொதிந்துக் கொடுக்க, கழிச்சலாகி 80 வகை வாதமும், வாயு, எட்டுவகைக் குன்மம், சூலை, கை, கால் முடக்கும் தீரும். மோர்ச்சோறு உட்கொள்ளவும்.

2. ஒரு படி பேய்க்குமட்டிக்காய்ச் சாற்றைக் குழம்பு போல் காய்ச்சிக் கல்வத்திலிட்டு, அதில் கருஞ்சீரகம், தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு, கடுகுரோகணி, கடுக்காய், வெண்காரம், இந்துப்பு, காயம், திப்பிலி வகைக்கு ஒரு கழஞ்சு; பனைவெல்லம் 5 கழஞ்சு; இவற்றை மையாய்ப் பொடித்துப் போட்டு அரைத்து குப்பியில் வைத்துக் கொண்டு, குன்றிமணி அளவு வெல்லத்தில் சாப்பிட, கழிச்சலாகி கவுசை, கெண்டை, அகுவை, வெப்புப்பாவை, பெருவயிறு, மகோதரம், பிலீகை, உளைமந்தை, புறநீர்க்கோவை, சோகை, குன்மம், வலிவீக்கம், வாயு முதலியவை தீரும். குளிர்ந்த நீரில் குளித்து மோர்ச் சோறு உண்ணவும்.

நாரத்தங்காய்க் குழம்பு.

கச்ச நாரத்தங்காய்ச் சாறு 5 படி; காடி 2 படி; ஒன்றாய்க் கலந்து அதில் துருவுள்ள 50 இரும்பைப் போட்டு, 8 நாள் ஊற வைத்து, இரும்பை எடுத்து உராவிப் போட்டு, குப்பைமேனி, அவுரி, சாரணை, கையாந்தகரை, பொன்னாங்காணி, பிரமி வகைக்கு 2 படிச் சாறு ஒன்றாய் விட்டு; வெள்ளுள்ளி, கடுக்காய், சதகுப்பை, ஓமம், நற்சீரகம், திப்பிலி, கடுகு, கழற்சிப் பருப்பு, கச்சோலம், அதிமதுரம், மிளகு, அதிவிடையம், நெல்லிமுள்ளி, தான்றிக்காய், சாத்திரபேதி, ஏலம், இந்துப்பு, வெடியுப்பு, சாரணை வேர், குருந்தொட்டி வேர் வகைக்கு ஒரு பலம்; சவுக்காரம், 3 பலம்; அரப்பொடி, கிட்டம் வகைக்கு 2 பலம்; கடுக்காய் 40, பெருங்காயம் கால் பலம்; இவற்றை மேற்படி சாறுகளால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி குழம்புப் பருவத்தில், நறுநெய், தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு அரைப் படி விட்டு, குழம்புப் போல் கிண்டி, வேளைக்கு ஒரு கொட்டைப்பாக்கு அளவு, ஒரு மண்டலம் (48 நாள்) சாப்பிட்டு மோர் குடிக்க நீர்க்கட்டுத் தீரும். மகோதரம், பெருவயிறு, நீர்க்கோவை, வாயுத்திரட்டு, அகுவை, வீக்கப்பிணி, பாண்டு, காமாலை, குளுப்பை, வயிற்றுவிப்புருதி, சூலை, வாயு, குன்மம், வெப்புப்பாவை, காசுக்கட்டி, கவுசை ஆகிய நோய்கள் தீரும்.

Koviloor Digital Library

நவச்சாரக் குழம்பு.

1. நவச்சாரத்தைக் கொடிக்கள்ளிப் பாலில் ஆட்டி, சிமிழில் அடைத்துக் கொண்டு, குன்றிமணி அளவு கொடுக்க கழிச்சலாகும். மலக்கழிவு, அதிகப்பட்டால், எலுமிச்சம்பழச் சாற்றில் கொடுத்து, மோர்ச் சோறு சாப்பிட நிற்கும். பெருவயிறு, வாயுக் கட்டி, மகோதரம், நீராம்பல் ஆகிய நோய்கள் தீரும்.

இலிங்கக் குழம்பு.

சாதிலிங்கம், வெண்காரம் வகைக்கு ஒரு கழஞ்சு; தூய்மை செய்த வாளம், இந்துப்பு வகைக்கு 2 கழஞ்சு; சிற்றாமணக்கின் பருப்பு 4 கழஞ்சு; மெழுகுபோல் அரைத்து, குன்றிமணி அளவு இஞ்சிச் சாற்றிலாவது மிளகுக் குடிநீரிலாவது, பனைவெல்லத்திலாவது கொடுத்து, ஒரு நாழிகைக்கு மேல் வெந்நீர் உட்கொள்ள கழிச்சலாகும். குளிர்ந்த தண்ணீர் குடிக்க நிற்கும் உப்பிட்டு கஞ்சி கொள்ளவும்.

இலிங்கக் குழம்பு (வேறு)

இலிங்கம் ஒரு வராகன் எடை; பொரிகாரம் 2 வராகன் எடை; தூய்மை செய்த வாளம் 4 வராகன் எடை; ஆமணக்கின் பருப்பு 8 வராகன் எடை; உப்பு ஒரு வராகன் எடை இவைகளை அரைத்து, குன்றிமணி அளவு உட்கொள்ள, மலம், சிறுநீர், கழிந்து நோய் தீரும். மோர்ச்சோறு உண்ணவும்.

இலிங்கக் குழம்பு (வேறு)

தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம்; கற்பூரம், வெண்காரம் வகைக்கு அரைப்பலம்; அவித்துத் தூய்மைசெய்து தோல் முளை நீக்கின வாளம் 2 பலம்; சிற்றாமணக்கின் பருப்பு 1 பலம்; இவைகளை அரைத்துக் கொம்புச் சிமிழில் வைத்துக்கொண்டு, பண எடை சித்திரமூலக் குடிநீரில் உட்கொள்ள சூலையும், முடக்கும் தீரும். நொச்சிச் சாற்றில் உட்கொள்ள வாதசுரம் தீரும்.

1. கொடிவேலி, குப்பைமேனி, நத்தைச்சூரி இவற்றின் சாறு ஆழாக்கு, எண்ணெய் அரைப்படி, இவற்றை ஒன்றாய்க் கலந்து, காய்ச்சி, வடித்த எண்ணெய் உட்கொள்ள கிரந்தி நோய் தீரும்.

2. ஏலம், அதிமதுரம், மல்லி, தக்கோலம், அரத்தை, கோட்டம் வகைக்கு 1 பலம்; நான்குபடித் தண்ணீர் விட்டு, வற்றவைத்தக் குடிநீரில் கொடுக்க, தொந்த சுரம் (கலப்பு சுரம்) தீரும். வேலிப் பருத்தி இலைச்சாற்றில் கொடுக்க, திமிர்வாதம் தீரும்.

3. கடுக்காய்ப்பூ, கழற்சிக்காய்ப்பருப்பு, வெள்ளுள்ளி, சுக்கு வகைக்கு 1 வராகன் எடை, இவைகளை அரைத்து அரைப்படித் தண்ணீரில் போட்டு, ஆழாக்காய் வற்றவைத்தக் குடிநீரில் உட்கொள்ள வாயுவும், அண்டவாயுவும் தீரும்.

Koviloor Digital Library

4. சங்கம்வேர் குடிநீரில் கலந்து உட்கொள்ள தேகச்சொரி, நச்சுக்கரப்பான் தீரும். நிலவாகைக் குடிநீரில் உட்கொள்ள வலி, குன்மம் தீரும்.

5. செங்கடுக்காயும், பூவரசம்பட்டையும் சேர்த்துச் செய்தக் குடிநீரில் உட்கொள்ள ஊதுகாமாலைத் தீரும்.

6. சிறுசின்னிச் சாற்றில் கலந்து உட்கொள்ள செய்யான் கடியும், படர்தாமரையும் தீரும்.

7. கரந்தைச் சாற்றில் உட்கொள்ள கெர்ப்ப நோய் தீரும். வெல்லத்தில் உட்கொள்ள கிருமி நோய் தீரும். வெந்நீர், பசுவின் நெய், மோர் கூட்டி சோறு உட்கொள்ள கழிச்சல் நிற்கும்; குளிர்ந்த தண்ணீர் குடித்தால் கழிச்சல் அதிகப்படும்.

8. எள்ளு அளவு வெற்றிலைச் சாற்றில் கலந்துக் கண்ணிலிட வலிப்பு, சன்னிதோடம் தீரும்.

9. எருக்கம் பழுப்புச்சாற்றில் உரைத்துக் கண்ணிலிட நஞ்சு தீரும்; தைவேளைச் சாற்றில் எலிக்கடியும் தீரும்.

அகத்தியர் குழம்பு.

பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி, வெண்காரம், கருஞ்சீரகம், திப்பிலி, தூய்மைசெய்த இரசம், நாபிக்கிழங்கு, மனோசிலை, அரிதாரம் வகைக்கு 1 வராகன் எடை; தூய்மை செய்த வாளப்பருப்பு 10 வராகன் எடை, காட்டாமணக்கின் முத்துப் பருப்பு 5 வராகன் எடை; இவைகளை அரைக்க மெழுகாகும்; அதைக் குப்பியில் அடைத்துப் பத்திரப்படுத்தவும். இஞ்சிச் சுரசத்திலாவது, சுக்குக் குடிநீரிலாவது கொடுக்க குளிர்சுரம், சன்னி, வாதசுரம், அண்டவாதம், வாயு, மூலவாயு ஆகியவை தீரும்.

கடுக்காயில் கொடுக்க இருமலும், கடுக்காய், குடிநீரில் கொடுக்க பித்தசுரமும் (அழல் சுரம்) தீரும்.

திப்பிலிக் குடிநீரில் கொடுக்க சிலேத்தும சுரம் (ஐயசுரம்) தீரும். கிராம்பும், மலைதாங்கி வேரும் சேர்த்துச் செய்த குடிநீரில் கொடுக்க கழிச்சல், சுரம் தீரும். சுக்கு, மிளகுக் குடிநீரில் கொடுக்க குளிர் சுரம் தீரும்.

பசுவின் நெய்யில் கொடுக்க இரத்த மூலமும்; பசுவின் பாலில் பாண்டும் தீரும். மிளகுத்தூள் வெள்ளுள்ளியில் கொடுக்க மகோதரம், பெருவயிறு, நீராமை, குன்மம் ஆகியவை தீரும்.

தேன் இஞ்சிச்சாற்றில் கொடுக்க சன்னி தீரும். சுக்கும், நொச்சியும் சேர்ந்தக் குடிநீரில் கொடுக்க வாயு தீரும்.

சங்கங்குப்பிச் சாற்றிலாவது, மிளகு பொரித்த பொரிகாரம், கற்கண்டு இவைகளைப் பொடித்து நெய்யில் கலந்து அதிலாவது, வெள்ளறிப் பிஞ்சு

Koviloor Digital Library

சாற்றிலாவது, இளநீரிலாவது காடியிலாவது கொடுக்க நீர்க்கடுப்பு, நீர்ச்சுறுக்கு, கல்லடைப்பு ஆகிய நோய்கள் தீரும் வெள்ளுள்ளி தைலத்தில் அல்லது வெள்ளுள்ளி, கழற்சி முசுமுசுக்கை கஷாயத்தில் சன்னி 18–ம் அரசங் கெபழுந்தை ஆவின்பால் விட்டரைத்துக் கொட்டைப் பாக்கு பிரமாணம் மூன்று பங்கு செய்து நாளொன்றுக்கு ஒரு பங்கு கொள்ள கொப்பரோகமும், நாவற் பட்டையில் வெள்ளாட்டுப்பால் விட்டித்துப் பிழிந்த சாற்றில் சீரகம் பொடி தூவி அதிலாவது அல்லது நொச்சி வேர் பங்கம் பானைவேர் சுக்கு மிளகு இவைகளை சேர்ந்து செய்த குடிநீரில் கொடுக்க, சூதக வாலிவும் வாள கட்டிஷம் தீரும்.

இஞ்சி, வெள்ளுள்ளி, முருங்கப்பட்டை, எருக்கம்வேர், திருகு கள்ளிவேர், புங்கம்வேர், இவைகளைத் தட்டிப் பிழிந்தக் குடிநீரில் உட்கொள்ள உட்குத்து, புறவீச்சு தீரும்.

பனைவெல்லம், சித்திரமூலம் இவைகளைக் குப்பைமேனிச் சாற்றால் ஆட்டி தேன்விட்டுக் கலந்து அதிலாவது; வில்வம், இலவங்கப்பத்திரி, கிராம்பு அதிமதுரம், தாளிசப்பத்திரி இவைகளைச் சேர்த்துச் செய்தக் குடிநீரிலாவது; வெண்ணை போட்டுக் கொடுக்க நெஞ்சுவலி தீரும்.

தாளி இலையும், அவுரி இலையும் வெண்ணெயும் சேர்த்து அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவில் திரிகடி அளவு கொடுத்தான் விரியன் கடியும்; நவ்வற்கொழுந்து, மிளகு, வெற்றிலையும் சேர்த்து அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவில் திரிகடி அளவு கொடுத்தால் நல்லபாம்பின் நஞ்சு நீங்கும்.

ஈருள்ளிச்சாற்றில் உள்ளுக்குக் கொடுத்து, கடிவாயில் தடவத் தேள் கடி நஞ்சு நீங்கும்.

வெல்லம், புகையூரல், பேய்ப்பீர்க்கம் விதை இவைகளைக் குப்பைமேனிச்சாற்றினால் அரைத்துக் கொட்டைப்பாக்கு அளவில் கொடுக்க வழலைக் கடி தீரும்.

நொச்சிச் சுரசத்தில் திரிகடுகுப்பொடி தூவிக்கொடுக்க வீக்கம், நச்சுபாத வீக்கம் தீரும். காடியில் சத்தி எடுத்தால், பசுவின் பாலிலும்; எருவாய் நோயில் சீதம் விழுதலுக்கும், கருப்ப விப்புருதிக்கும், கருப்பை நோய்க்கும் வெள்ளாட்டுப் பாலிலும் கொடுக்க நோய் நீங்கும்.

பசுவின் நெய்யில் கொடுக்க, எருவாய்நோயினால் இரத்தம் விழுதல் தீரும். அத்தியிலைச்சாற்றில் கொடுக்க, மகோதரமும், வெட்டையும் தீரும். விளக்கெண்ணெயில் கொடுக்க வாயுத்திரட்சியும்; தேங்காய்ப் பாலில் கொடுக்கக் கழல் வாதமும் தீரும்.

பனைவெல்லத்தில் கொடுக்க ஆனந்த வாயுவும், சுரமும் தீரும். பசுவின் பாலில் கொடுக்கப் பித்தம் தீரும். பஞ்சமூலக் குடிநீரில் உட்கொள்ள 13 வகைச் சன்னியும் தீரும். இஞ்சிச் சுரத்தில் கொடுக்க எண்வகைக் குன்மமும் தீரும். வெல்லத்தில் கொடுக்கத் தாபசுரம் தீரும். நொச்சிச்சாற்றில் கொடுக்க வாதசுரம் தீரும். கொத்தமல்லிக் குடிநீரில் கொடுக்க நடுக்கலும்,

Koviloor Digital Library

பித்த சுரமும் தீரும். திப்பிலி கஷாயத்தில் நடுக்கல் அய்யசுரமும் வெள்ளாட்டுத் தயிரில் கொடுக்க வயிற்றுக்கடுப்பு தீரும். பனைவெல்லத்தில் கொடுக்க 18 வகைச் சூலையும், கிரந்தியும் தீரும். பசுவின் தயிரில் கொடுக்கச் சூதவாயு தீரும். விலாமிச்சைவேர்க் குடிநீரில் கொடுக்கப் பித்தவெட்டைத் தீரும். செம்மறியாட்டுப் பாலிலாவது சாம்பிராணித் தைலத்திலாவது திரளாத பெண்ணுக்கு 9 நாள் கொடுக்கத் திரளுவாள். திரிகடுகில் உட்கொள்ளப் பலநோய்களும் தீரும். வெற்றிலைச்சாற்றில் உட்கொள்ள நச்சுக்கடியும் தீரும்.

சாதிக்காய் பொடியில் உட்கொள்ளக் கடும் சுரம் தீரும். மேற்படி குழம்பை நல்லெண்ணெயில் கலந்து போடப் புண் ஆறும். வேப்பெண்ணெயும், நல்லெண்ணெயும் கலந்து அதிற்குழம்பை கலந்து போட ஆறாத புண் ஆறும்.

சிலந்தி, அரையாப்பு, பிளவைப்புற்றுக்கு உமிழ் நீரிலாவது, தேனிலாவது குழம்பைக் கலந்து போடத் தீரும்.

தாய்ப்பாலில் கலந்து மூக்கில் நசியமிட தலையிடி தீரும். தாய்ப்பாலில் மேற்படி மருந்தை நெறி கட்டிய இடங்களில் பூசத் தீரும்.

மரங்களில் ஏறி விழுந்து மயங்கினவர்களுக்கும், தண்ணீரில் அமிழ்ந்து மயங்கினவர்களுக்கும் கடுகு அளவு தாய்ப்பாலில் கலந்து கண்ணில் போட நீங்கும்.

குழம்பைத் துணியில் தடவி புகை பிடிக்க முகவாதசன்னி, பற்கிட்டு, நச்சுக்கடி, கபாலவலி, பேய், பிசாசு நீங்கும்.

வேப்பெண்ணெயிலாவது, சுக்குக் குடிநீரிலாவது எள்ளளவு உரைத்துக் கண்ணில் இடச் சன்னி நீங்கும்.

கண்வீங்கி வேதனை கண்டால் சுடசோறும், தயிரும், சந்தனமும் கலந்து கண்ணில் கட்டத் தீரும்.

மேற்படிக் குழம்பினாலும், மேற்காட்டிய மற்ற வாளஞ் சேர்ந்த மாத்திரையினாலும் கழிச்சல் அதிகரித்தால் அதற்கு மாற்று வசம்பைச் சுட்ட கரியையாவது ஒரு பிடி முருங்கையீர்க்கையாவது, குடிநீர் செய்து கொடுத்தாலும், எலுமிச்சம்பழரசமும், பசுவின் பாலும் கொடுத்தாலும்; புளித்த மோர்க்காடியைக் குடித்தாலும்; காட்டாமணக்கின் கொழுந்தைக் காடியிலவித்துத் தொப்புளில் வைத்துக் கட்டினாலும்; கோழிரசம் (சாறு) சாப்பிட்டாலும் கழிச்சல் நிற்கும்.

பாண்டுநோய்ப் படலம் முற்றும்.

Koviloor Digital Library

தைலப் படலம்.

பலப்பல மூலிகைகளாலும், பட்டைகளாலும், கல் வகைகளாலும் பால் சேர்த்து எண்ணெயுடன் காய்ச்சுவதால் தைலப்படலமெனப் பெயர் பெற்றது. இதனை 9 திங்கள் வரை உபயோகிக்கலாம்.

சந்தனாதித் தைலம்.

தேர்ந்திடவே யிந்நூலில் வேதை மார்க்கம்
தெரிவித்தார் சித்தர்களு மனந்தங் கோடி
பேர்ந்திட்ட தைலங்கள் கைபாவு கந்தான்
பேசினார் பலபேரும் பேசி னார்கள்
ஆர்ந்திட்ட அமுதமுறைச் சுருக்கம் தன்னை
அவனிதனில் பண்டிதர்க்கும் மற்ற வர்க்கும்
சேர்ந்திட்டேன் இந்நூலே குறுநூ லாகக்
கூறினார் மலையமுனி கூறி னாரே.

1. சந்தனத்தூள் 10 பலம்; நன்னாரி, நத்தைச்சூரி, தண்ணீர்விட்டான், சாறடை, இருவேலி, அமுக்கறா, சீந்தில் இவற்றின் வேர்கள்; முத்தக்காசு, அதிமதூரம், செஞ்சந்தனம், அகில், வில்வவேர், தேவதாரம், மதூரம், கோட்டம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, கருவப்பட்டை, தக்கோலம் வகைக்கு 1 பலம்; இவைகளை இடித்துத் தூணி நீரில் போட்டு, பதினாறில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்து, அதில் நல்லெண்ணெய் 4 படி, முசுமுசுக்கைச் சாறு நெல்லிக்காய் சாறு 3 படி, பொற்கையான் சாறு அரைப் படி, இவற்றை ஒன்றாய்க் கலந்து, வால்மிளகு, குக்கில், கோட்டம், பச்சைபூலாங் கிழங்கு, அரத்தை, சடாமாஞ்சில், ஓமம், வெளிச்சிப்பிசின், வேம்பாடம்பட்டை, ஏலம், மல்லி, அபின், சாதிக்காய், கருஞ்சீரகம், கார்போகரிசி, சாதிப்பத்திரி, மாசிக்காய், சண்பகப்பூ, சிறுநாகப்பூ, கிராம்பு, கிளியூரம்பட்டை, நாகணம், புனுகு, வகைக்கு 2 வராகன் எடை; பசுவின் பாலிலரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர, வாயுமந்தம், மூக்குநீர்ப் பாய்ச்சல், மண்டைநோய், கபாலவலி, கண்ணோய், காதுநோய், வியர்வை, தாகம், பீனிசம், வறட்சி, ஈளை, சோகை, விடபாகம், குட்டம், குன்மம், தடிப்பு சயம், மேகம், பிரமேகம், கிறுகிறுப்பு, சுவையின்மை ஆகிய நோய்கள் தீரும்.

2. சந்தனத்தூள் 20 பலம்; விலாமிச்சைவேர், வெட்டிவேர், கோரைக்கிழங்கு, சீந்தில்தண்டு, சிற்றாமுட்டி, பேராமுட்டி, அமுக்கரா, நன்னாரி, பற்பாடகம் வகைக்கு 4 பலம்; இவைகளை இடித்து இருதூணி நீரில் போட்டு பதினாறில் ஒரு பாகமாய் வற்ற வைத்து வடித்த குடிநீரில் செவ்விளநீர், பொன்னாங்காணிச்சாறு வகைக்கு 2 படி; சிறுகீரை, பொடுதலை, வல்லாரை, பொற்றலைக் கரிப்பான், சிறுசன்னி, நெல்லிக்காய், கற்பூரவல்லி, தாழைவிழுது இவைகளின் சாறு, பசுவின் நெய் வகைக்கு 1 படி; நல்லெண்ணெய் 3 படி; பசுவின் பால் 4 படி; வெள்ளாட்டுப் பால். தயிர், தண்ணீர் வகைக்கு 2 படி கூடவிட்டு முக்கடுகு, திரிபலாதி, கஸ்தூரிமஞ்சள், ஏலம், பூஞ்சாந்துப்பட்டை, கிளியூரம்பட்டை, இலவங்கப்பத்திரி, பச்சிலை,

Koviloor Digital Library

பூலாங்கிழங்கு, செவ்வல்லிக்கொடி, சண்பகப்பூ, சந்தனம், கருஞ்சீரகம், நற்சீரகம், செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம், அக்கராகாரம், மஞ்சிட்டிவேர், கத்தூரிமஞ்சள், முத்தக்காசு, வலம்புரிக்காய் வகைக்கு அரை பலம்; பசுவின் பாலால் ஆட்டிப் போட்டுக் காய்ச்சி வடித்து, அதில் குங்குமப்பூ, கோரோசனை, புனுகு வகைக்கு 1 கழஞ்சு போட்டுத் தலைமுழுகிவர, பிரமேகம், நீரிழிவு, நீர்ச்சுருக்கு, சயம், கண்ணெரிவு, கண்புகைச்சல், கை காலெரிவு, பிரமியம், கிரந்தி, கற்றாழை நாற்றம், எலும்புச்சுரம், எலும்பு வெட்டை, பித்தமயக்கம், புண்புரைகள், புழுவெட்டு, கண்டமாலை, குட்டம், சொரிசிரங்கு ஆகிய நோய்கள் தீரும்.

3. சிறுகீரை, பொன்னாங்காணி, ஆவாரையிலை, தாமரைக்கிழங்கு, தாழைவிழுது, இவைகளை ஓர் எடையாய் இடித்துப் பதக்கு (16 படி) நீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாய் வற்ற வைத்துத் தயிர்போல் பிழிந்தசாறு 3 படி; வெட்டிவேர், விலாமிச்சைவேர், சந்தனம் வகைக்கு 5 பலம்; செங்கழுநீர்க்கிழங்கு 2 பலம்; இவைகளைச் செவ்விளநீரால் மையாய் ஆட்டி 3 குறுணி (24 படி) நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீர் 2 ¼ படி, நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து இலவங்கம், ஏலம், கோட்டம், சண்பகப்பூ, சாதிப்பத்திரி, மஞ்சிட்டி, சாதிக்காய், சடாமாஞ்சில், கிராம்பு, சீரகம், கூகைநீர் வகைக்கு 1 கழஞ்சு வீதம்; அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து, பச்சைக்கற்பூரம், புனுகுசட்டம், கோரோசனை வகைக்கு 2 பணஎடை போட்டுத் தைலமிட்டுச் சிகைக்காய்த் தேய்த்துக் குளித்து வர 20 வகை மேகமும் நீங்கும்.

செம்முள்ளித் தைலம்.

/. செம்முள்ளிச்சமூலம் 100 பலம் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய்க் குடிநீர்செய்து, நல்லெண்ணெய் 2 படி; தாழை விழுது, ஏலம், கருஞ்சீரகம், கார்போகரிசி வகைக்கு 1 பலம் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுகிவரக் காசம், கண்ணீர்ப்பாய்ச்சல், அரையாப்பு, சயம், ஈளை, மந்தாரகாசம், அண்டவாதம், வீக்கம், நச்சுவாதம் ஆகிய கொடிய நோய்கள் தீரும்.

கொடிவேலித் தைலம்.

கொடிவேலிவேர் 10 பலம் பதக்கு நீரில்போட்டு எட்டில் ஒரு பாகமாய்க் காய்ச்சிக் குடிநீர்செய்து கருஞ்சீரகம், தாளிசப்பத்திரி, தான்றிக்காய் வகைக்கு 1 பலம் பால்விட்டு அரைத்து நல்லெண்ணெய் 1 படி, புன்னைக்காய் அளவு வெண்ணெய் ஆகியவைகளைக் குடிநீரில் சேர்த்துப் பதமாய்க் காய்ச்சிவடித்துத் தலை முழுகிவர ஆனந்தவாயு, தந்தவாயு, வாதம், சிறுசொரி, தினவு, சிரங்கு, குட்டம், அரையாப்பு, கிரந்தி, சூலை, புண், புரைகள், பிளவை வீக்கம் ஆகிய கொடிய நோய்கள் தீரும்.

நற்சீரகத் தைலம்.

சீரகம் 2 படி இடித்துப் பதக்கு நீரில் போட்டு, எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து, கார்போகரிசி 2 பலம், கற்கண்டு, மிளகு, கறிவேப்பிலை,

Koviloor Digital Library

ஈருள்ளி வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்து, நல்லெண்ணெய் 1 படி குடிநீரில் சேர்த்துக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர, எட்டு வகைக் குன்மம், 10 வகை வாயு, குட்டம், குன்மவாயு, வாந்தி, பித்தக்கிறுகிறுப்பு, பாண்டுசோகை, வெப்பம், தலைசூடு, கபநீர்க்கட்டு ஆகிய நோய்கள் தீரும்.

கீழ்க்காய்நெல்லித் தைலம்.

கால் துலாம் எடை கீழ்க்காய்நெல்லிச் சமூலத்தை இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து நல்லெண்ணெய் 2 படி; சர்க்கரை 5 பலம், கடுக்காய்த்தோல், வேப்பம்பிசின் வகைக்கு 1 பலம் பசுவின் பால் விட்டு அரைத்துக் குடிநீரில் சேர்த்துக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவரப் பித்தக்கிறுகிறுப்பு, வாயுநீரூறல், இரத்தபித்தம், எரிபித்தம், எய்ப்பிளைப்பு, கைகால் காந்தல், உடல்வெளுப்பு, மற்றப்பித்தத்தில் எடுத்த எல்லா நோய்களும் தீரும்.

அகில்கட்டைத் தைலம்.

அகில்கட்டைத்தூள் 50 பலம் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு அதிமதுரம், தான்றிக்காய் வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர நீர்க்குற்றமேகம் தீரும்.

வெட்டிவேர்த் தைலம்.

வெட்டிவேர்த்தூள் 10 பலம் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து நல்லெண்ணெய் 1 படி அதிமதுரம், கருஞ்சீரகம், தேவதாரம், கடுக்காய் வகைக்கு அரைப் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சித் தலைமுழுகிவரப் பீனிசம், மண்டைச்சூலை, குட்டம், பிறநீர்க்கோவை, கண் புகைச்சல், காதுமந்தம், உடல் எரிவு, காந்தல் ஆகிய நோய்கள் தீரும்.

விலாமிச்ச வேர்த் தைலம்.

விலாமிச்சுவேர் 100 பலம் இடித்துத் தூணி நீரில் போட்டு ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் நல்லெண்ணெய் 1 படி, எலுமிச்சம்பழச்சாறு, கையாந்தகரைச்சாறு, தாளிச்சாறு வகைக்குக் கால்படி கூடவிட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவர வெம்மை, சிலேத்துமம், பித்தம் கண்புகைச்சல் ஆகிய நோய்கள் நீங்கும். உடம்பு குளிரும்.

அறுகம்வேர்த் தைலம்.

அறுகம்வேர் 100 பலம் இடித்துத் தூணிநீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டுக் கோரைக்கிழங்கு, பூமிச்சர்க்கரைக்கிழங்கு, அமுக்கராக்கிழங்கு வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர [illegible]லசூடு, மூலச்சூடு, மேககாங்கை, பித்தம், வாதம், அரிகிரந்தி, சூலை,

Koviloor Digital Library

வயிற்றெரிவு, நெஞ்சுநோய், தேகவறட்சி, நீர்க்கடுப்பு ஆகிய நோய்கள் தீரும்; தேகம் குளிரும்.

முன்போல் அறுகம் வேர்க் குடிநீர்செய்து அதில் நல்லெண்ணெய் ஒரு படி, வெட்டிவேர், கார்போக அரிசி, கோட்டம் வகைக்கு ஒரு பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவர மேற்படி நோய்கள் தீரும்.

பொன்னாங்காணித் தைலம்.

1. பொன்னாங்காணிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் அதிமதுரம், கருஞ்சீரகம், செங்கழுநீர்க் கிழங்கு, கோட்டம் வகைக்கு ஒரு பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர உட்சுரம், வெம்மை, கை, கால், உடம்பெரிவு, கண்ணெரிவு, தலைச் சூடு, உடல் வலி, குன்மம் ஆகிய நோய்கள் தீரும்.

2. பொன்னாங்காணிச் சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 2 படி; பொற்றலைக் கரிப்பான் சாறு, நெல்லிக்காய்ச் சாறு வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதிமதுரம் 2 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர மேற் கூறப்பெற்ற நோய்கள் தீரும்.

வில்வாதித் தைலம்.

வில்வவேர், விலாமிச்சம் வேர், கோரைக்கிழங்கு, வாழைக்கிழங்கு, சீந்தில் வகைக்கு 8 பலம்; இவற்றை இடித்துப் பதினாறுபடி தண்ணீரில் போட்டு இரண்டு படியாய் வற்றவைத்துக் குடிநீர் செய்துகொண்டு கொம்பரக்கு 2 சேர், துாணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்துகொண்டு நல்லெண்ணெய் 5 படி, பசுவின்பால் 5 படி, திரிகடுகு, திரிபலாதி, கஸ்தூரி, மதுரம், கோட்டம், கருஞ்சீரகம், நற்சீரகம், மரமஞ்சள், சந்தனம், கிளியூரம் பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, செவ்வள்ளி, இலவங்கப்பட்டை, பச்சிலை, பூலாங்கிழங்கு, ஏலம் வகைக்கு ஒரு பலம்; பசுவின் பாலில் ஆட்டிக் குடிநீரில் கரைத்து மெழுகு பதமாய் வடித்துத் தலைமுழுகிவர மேக நீர் இருபதும், பித்தம் நாற்பதும், குன்மம் எட்டும் தலை நோய்களும் தீரும்.

2. வில்வவேர் 10 பலம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் காய்ச்சி வடித்த குடிநீரில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு அதில் சந்தனம், ஒரு பலம்; கடுக்காய், கஸ்தூரி மஞ்சள், ஏலம் வகைக்குக் கால் பலம்; அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரப் பித்தம், உடல் காந்தல், மேகம், கண் புகைச்சல், இருமல், இரத்த மூலம், உட்சுரம், வறட்சி ஆகிய நோய்கள் தீரும்.

வில்லவேர் பலம் 15 வெட்டி வேர் பலம் 18 விலாமிச்சவேர் பலம் 12 இவைகளை வெட்டித் தூளாக்கி ஒரு பானையிற்போட்டு அதில் 20 படி தண்ணீர்விட்டு 3படியாக வற்றவைத்துக்கொண்டு அதில் பசுவின்பால், நல்லெண்ணெய் வகைக்குப் படி 2 விட்டு அதிமதுரம், தேவதாரம், கடுக்காய்,

Koviloor Digital Library

கஸ்தூரிமஞ்சள், மிளகு, சீரகம், பூலாங்கிழங்கு பச்சை, கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை வகைக்குப் பலம் (அரைக்கால்) இவைகளைப் பசுவின்பால் விட்டரைத்துப்போட்டுப் பதமாகக் காய்ச்சி வைத்து ஸ்நானம்செய்துவா, நீர்க்கோவை, கண்புகைச்சல், காதுமந்தம், மண்டைக் குத்து, காதுஇரைச்சல், கண்ணொரிவு கண்ணில் உண்டாகும் மேகநீர், கண்சிவப்பு கண்ணில் நீர்வடிதல் கண்ணில் உண்டாகும் அரிப்பு முதலிய சகலவித கண்ரோகங் களும் தீரும்.

பொன்னாங்காணி, சீந்திற்றண்டு, கீழ்க்காய்நெல்லி, பூநாகம், பொற்றலைக்கரிப்பான், கரிப்பான் இவைகளினிலை வகைக்குப் பலம் 5 இவைகளை இடித்துச் சாறுவாங்கி அதில் நல்லெண்ணெய் படி 2 பசுவின்பால் படி 1 ஒன்றாகவிட்டு, அப்பால் முத்தக்காசு சண்பகப்பூ, ஏலம், சீரகம், வெள்ளைமிளகு, அதிமதூரம், தும்பைப்பூ, பூலாங்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சவேர், சந்தனம், கோஷ்டம், நன்னாரிவேர், நந்தியாவட்டைப்பூ, இவைகள் வகைக்குப் பலம் 1.4 இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஸ்நானம்செய்து வரக் கண்ரோகங்கள் 66ம் தீரும் பத்தியமில்லை.

குமரித் தைலம்.

1. குமரிச்சாறு 2 படி, பசுவின் பால் 2 படி, நல்லெண்ணெய் 2 படி; திரிகடுகு, கோட்டம், சடாமாஞ்சில், திரிபலை, சீரகம், மதூரம், பூஞ்சாந்துப் பட்டை, ஏலம், பச்சிலை, பூலாங்கிழங்கு, இலவங்கப்பத்திரி, இலவங்கப் பட்டை, செவ்வள்ளி, அக்கரகாரம், கஸ்தூரி மஞ்சள், இலவங்கம், கெந்தகம், கடுகுரோகணி, சண்பகப்பூ, ஆனைத்திப்பிலி, மஞ்சிட்டி, சோம்பு, மஞ்சள் வகைக்கு அரைப்பலம்; பசுவின் பாலால் ஆட்டிக் கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து பளிங்குக்குப்பியில் அடைத்துத் தானியத்துக்குள் வைத்து மூடிக் கால் மண்டலம் (12 நாள்) சென்றெடுத்துத் தலைமுழுகிவர எல்லா மேகமும், என்பு சுரம், பித்த வெட்டை, குன்மம், பாண்டு, உடல்வெளுப்பு முதலிய நோய்களும் தீரும்.

2. கற்றாழஞ் சாறு, செவ்விளநீர் வகைக்கு 4 படி; பொற்கையான், நெல்லிக்காய், கரிசாலை, எலுமிச்சம்பழம் ஆகியவற்றின் சாறு; பசுவின் பால், நல்லெண்ணெய் வகைக்கு 2 படி; ஒன்றாய்க் கலந்து இலவங்கம், சாதிக்காய், கோட்டம், தாமரைக் கிழங்கு, சிறுநாகப்பூ, வசுவாசி, வெட்டி வேர், அகில், இலவங்கப்பத்திரி, பச்சைக்கற்பூரம், மதூரம், மஞ்சள், சிறுதேக்கு, திப்பிலி வகைக்கு 1 கழஞ்சு அரைத்துப் போட்டுக் காய்ச்சிக் குளித்துவரச் சுரம், சயம், விக்கல், பித்தம், கண்நோய், மூலம், வியர்வை, தாகம், சுவையின்மை, தலைச்சூடு, உடல்காந்தல், எரிவு ஆகிய நோய்கள் தீரும்.

குமரிநீர் படி 5 எண்ணெய் படி 5 தகரைவிதை சந்தனம் மல்லி சடாமாஞ்சில் முத்தக்காசு வெட்டிவேர் ஏலம் திரிபலை நன்னாரி சாதிக்காய் லவங்கம் லவங்கப்பத்திரி நெய்தற்கிழங்கு அதிமதூரம் பேய்ப்புடல் மஞ்சிட்டி வகைக்குப் பலம் 1.4 இவைகளைப் பொடித்துப் போட்டுக் காய்ச்சிவடி முழுகிவரச் சிரசுநோய் நன்னோய் யாவும் தீரும்.

Koviloor Digital Library

கற்றாழஞ் சோற்றைப் பிசைந்தெடுத்துத் தண்ணீர் படி 3 நல்லெண்ணெய் பசுவின்பால் வகைக்குப் படி 1 ஒன்றாகவிட்டு அதில் கோஷ்டம் மஞ்சிட்டிவேர் சந்தனம் சுக்கு மிளகு திப்பிலி கடுக்காய் நெல்லிவற்றல் புனகுசட்டம் தான்றிக்காய் அதிமதுரம் சடாமாஞ்சில் விலாமிச்சவேர் வெட்டிவேர் கோரங்கிழங்கு நன்னாரிவேர் பச்சைக்கர்ப்பூரம் பூாங்கிழங்கு வங்காளப்பச்சை கிளியூரம்பட்டை வகைக்குப் பலம் (அரைக்கால்) இவைகளை அரைத்ப்போட்டுப் பதமாகக் காய்ச்சி ஸ்நானம் செய்து வர நீர்கம்மல் அமரம் கண்ணிலுண்டாகும் சிவப்பு தலைநோய் முதலிய சகல கண்ரோகங் களும் தீரும்.

கற்றாழை மடலிலிருக்கும் சோற்றை நன்றாகப் பிசைந்தெடுத்த தண்ணீர் படி 5 பசுவின்பால் படி 1 நல்லெண்ணெய் படி 3 மொந்தன்வாழைக்கிழங்குச்சாறு கரிப்பான்சாறு நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப் படி 1 இவைகளை ஒன்றாகவிட்டு அதில் சிறுதேக்கு வெட்டிவேர் விலாமிச்சவேர் நன்னாரிவேர் சந்தனம் செஞ்சந்தனம் மஞ்சள் மாமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் அரத்தை மஞ்சிட்டிவேர் அதிமதுரம் கோரங் கிழங்கு கடுக்காய் தான்றிக்காய் நெல்லிவற்றல் ஜாதிக்காய் அதிவிடையம் புனுகுசட்டம் வகைக்குப் பலம் (அரைக்ால்) இவைகளை இடித்துப் போட்டுப் பதமாகக்காய்ச்சி ஸ்நானம் செய்து வரச் சகல கண்ரோகங்கள் இமைநரம்பில் பரவிய வாதச்சலுப்பும் தீரும்.

சகாதேவித் தைலம்.

1. சீதேவிச்செங்கழுநீர், வல்லாரை, சிறுகீரை, பேய்மிரட்டி, பொன்னாங்காணி, சவுரிக்கொடி, ஓரிலைத்தாமரை வகைக்கு கால் தூக்கு வீதம் இடித்துப் பதக்கு நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்த குடிநீரில் நல்லெண்ணெய் இரண்டு படி கூடவிட்டு கோட்டம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, அரத்தை, தேவதாரம், மதுரம், கச்சோலம், சண்பகப்பூ, மஞ்சிட்டி, அகில், மரமஞ்சள் வகைக்கு அரைப்பலம்; அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகி, உடம்பில் பூசிவர உடல்வலி, தலைக்கனம், பாண்டு, காமாலை, எலும்புச் சுரம், வாதம், கபம், கை, கால் எரிவு, கண் நோய் முதலியவை தீரும்.

2. சீராச்செங்கழுநீர்ச்சாறு, பசுவின் நெய் வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதில் ஏலம், மதுரம், சந்தனம், சிறுநாகப்பூ, விலாமிச்சம் வேர், சீராச்செங்கழுநீர் வேர், கோட்டம், கடுகுரோகணி, இலவங்கம் வகைக்கு 2 வராகன் எடை, மேற்படி சாற்றால் அரைத்துப்போட்டுக் காய்ச்சித் தலைமுழுகிவரச் சுரங்கள், உடல் எரிவு, காந்தல், தலையெரிவு, முதலியவை நீங்கும். உடம்பில் இரத்தம் ஊறும்.

கொம்பரக்குத் தைலம்.

கொம்பரக்கு 8 பலம் தூணிநீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர்செய்து வடித்துக்கொண்டு நல்லெண்ணெய் 5 படி; காடி 2 படி; தயிர்த்

Koviloor Digital Library

தண்ணீர் 1 படி; பால் 5 படி; சதகுப்பை, கடுகுரோகணி, கிளியூரம்பட்டை, பூஞ்சாந்துப்பட்டை, பச்சிலை, பூலாங்கிழங்கு, செவ்வள்ளிக்கிழங்கு, இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, சடாமாஞ்சில், கோட்டம், கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கெந்தகம், கருஞ்சீரகம், ஏலம் வகைக்கு 2 கழஞ்சு; பசுவின் பாலில் ஆட்டிச் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில்வடித்து எடுத்து ஒன்று விட்டு ஒரு நாள் தலைமுழுகிவரப் பித்தவெட்டை, எலும்புச்சுரம், தலைமயக்கம், வாயூரல், சீதசுரம், வெட்டை, கனசுரம், கனபாண்டு, உடல்வெளுப்பு, சூலை, காசம், கற்றாழை நாற்றம் ஆகிய நோய்கள் தீரும்.

கொம்பாக்கு சந்தனம் சிற்றாமுட்டிவேர் வகைக்குப்பலம் 10 இடித்துத் தூள் செய்து 20 படி தண்ணீரிற்போட்டு 4 படியாக வற்றவைத்துக்கொண்டு அதில் 2 படி நல்லெண்ணெய்விட்டுச் சுக்கு ஏலம் அதிமதுரம் அரத்தை சந்தனம் கோஷ்டம் கிளியூரம்பட்டை கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்குப் பலம் 1.4 இவைகளைத் தூட்செய்துபோட்டு ஸ்நானம் செய்து வரக் காய்ச்சல் சொரிசிரங்கு, உஷ்ணம், அஸ்திசுரம், அஸதிவெட்டை, கண்ணெரிச்சல், மண்டைக்குத்துத்தீரும்.

கொம்பரக்கு சந்தனம், சிற்றாமுட்டிவேர், குருந்தொட்டிவேர், வெட்டிவேர், வெருகங்கிழங்கு, கருநொச்சிப்பட்டை, விலாமிச்சவேர் இவைகள் வகைக்குப் பலம் 5 சிறுதுண்டுகளாக வெட்டி ஒருபானையிற்போட்டு 20 படி தண்ணீர் 5 படி கஷாயமா வற்றவைத்துக்கொண்டு அதில் 4 படி நல்லெண்ணெய்விட்டு அப்பால் அரத்தை சுக்கு, அக்கிராகாரம், ஏலம், கோஷ்டம், கஸ்தூரிமங்சள், அதிமதுரம், லவங்கப்பத்திரி லவங்கப்பட்டை, வாய்விளங்கம், வெட்டிவேர், விலாமிச்சவேர் வகைக்குப் பலம் 1.2 இடித்துப்போட்டுப் பதமாகக்காய்ச்சி வடித்து ஸ்நானம் செய்து வரச் சோகை, வீக்கம், காமாலை, நேத்திரவியாதிகள், பவுந்தரம், மேகம் முதலிய வியாதிகள் தீரும்.

கொம்பாக்கு வீசை 1 பொடி செய்து 8 படி ஜாலத்திற்போட்டு 1 படியாக வற்றவைத்து வடிகட்டிக்கொண்டு அதில் பசுவின்பால் படி 1 நெய் படி 1 நல்லெண்ணெய் படி 1 சிற்றாமணச்கெண்ணெய் படி 1 விட்டுச் சந்தனம், அகிற்கட்டை, வெட்டிவேர், விலாமிச்சவேர், கஸ்தூரிமஞ்சள், மிளகு, ஏலம், நற்சீரகம், பெருஞ்சீரகம், ஜாதிபத்திரி, பூலாங்கிழங்கு, லவங்கப்பத்திரி, லவங்கப்பட்டை, அதிமதுரம், வெருகங்கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் 1.2 இடித்துப்போட்டுப் பதமாகக்காய்ச்சி வடித்து ஸ்நானம்செய்துவர அஸ்திசுரம், அஸ்திவெட்டை, தலை மயக்கம், காசம், விடாச்சுரம் முதலியவைகள் தீரும். ஸ்நானத்தன்று பகல்நித்திரையையும் மோரையும் நீக்கவும்.

சிறுகொம்பரக்குத் தைலம்

கொம்பரக்கு பலம் 10 ஐந்து படி தண்ணீரிற் போட்டு ஒரு படியாக வற்றவைத்து வடித்து நல்லெண்ணெய் படி 1 ஆவின்பால் படி 1 பசுவின் தயிர் படி 2 இவைகளை ஒன்றாகக்கலந்து சதகுப்பை கிளியூரம்பட்டை பஞ்சாந்துப்பட்டை வங்காளப்பச்சை லவங்கம் கோஷ்டம் மதுரம் சீரகம் வெருகங்கிழங்க கடுகுரோகணி பூஞ்சாந்துப் பட்டை லவங்கப்பத்திரி மாஞ்சில் கஸ்தூரிமஞ்சள் சந்தனம் கருஞ்சீரகம் ஏலம் வகைக்குக் கழஞ்சு

Koviloor Digital Library

2 இவைகளைத் தூட்செய்துபோட்டுப் பதமாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு ஸ்நானம்செய்துவர அஸ்திசுரம் இருமல் கபம் பீனசம் ஜலதோஷம் தீரும், பத்தியம் ஸ்நானத்தன்று வாயுப்பதார்த்தம் மோர் பகல்நித்திரை நீக்கவும்.

நெல்லிக்காய்த் தைலம்.

நெல்லிக்காய்சாறு, பொன்னாங்காணிச்சாறு, குமரிச்சாறு, செவ்விளநீர், சிறுகீரைச்சாறு, பசுவின் பால் வகைக்கு 2 படி; எள்ளெண்ணெய் 3 படி; அதிமதுரம், கோட்டம், ஏலம், குரோசானிஓமம், பச்சிலை, பூலாங்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சில், சீரகம், சாதிப்பத்திரி, சாதிக்காய், இலவங்கப்பத்திரி, இலவங்கப்பட்டை, திரிகடுகு, திரிபலை, பூஞ்சாந்துப்பட்டை, சோம்பு, வால்மிளகு வகைக்கு 3 கழஞ்சு பசுவின் பாலில் ஆட்டி எள்ளெண்ணெயில் சேர்த்துக் காய்ச்சிப் பதமாய் வடித்துத் தலைமுழுகிவரக் கண்காசம், காமாலை முதலிய நேத்திர நோய்கள் தொண்ணூற்றாறும், பித்தவெட்டை, பித்தவாயு, எலும்பு வெட்டை; உடம்பெரிவு, கைகால் காந்தல், வெம்மை ஆகிய நோய்களும் தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு படி 1 கரிப்பான்சாறு 1 நல்லெண்ணெய் படி 3 பொன்னாங்காணிச்சாறு படி 1 ஆவின்பால் படி 1 இவைகளை ஒன்றகச்சேர்த்து தில் சந்தனம், அதிமதுரம், கோஷ்டம், விலாமிச்சவேர், அரத்தை, லவங்கம் பூஞ்சாந்துப்பட்டை, லவங்கப்பத்திரி, கிளியூரம்பட்டை, பூலாங்கிழங்கு, கோரங் கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் 1.4 இடித்துப்போட்டுப் பதமாகக்காய்ச்சி ஸ்நானஞ்செய்துவாப் பித்தம் தலைமயக்கம் கண்ணெரிச்சல் பீனசம் கைகால் காந்தல் தீரும். தேகங்குளிரும் பத்தியமில்லை.

நெல்லிக்காய்ச்சாறு படி 2 பொற்றலைக்கரிப்பான்சாறு கரிப்பான்சாறு, குழிதாமரைச்சாறு, கற்றாழைச்சாறு, ஒரிலைத்தாமரைச்சாறு, பொன்னாங்காணிச்சாறு வகைக்குப் படி 1.4 நல்லெண்ணெய் படி 3 ஒன்றாகவிட்டு, அதில் அதிமதுரம், கோஷ்டம், மிளகு, சீரகம், வெட்டிவேர், விலாமிச்சவேர், பச்சை, பூலாங்கிழங்கு கிளியூரம்பட்டை, பூஞ்சாந்து பட்டை வகைக்குப் பலம் 1.4 இவைகளை இடித்துப் போட்டுப் பதமாகக் காய்ச்சி ஸ்நானம் செய்துவரச் சகலவித உஷ்ணம், பித்தம், வெட்டை, மேகம் முதலான சகல வியாதிகளும் தீரும்.

கீழ்க்காய் நெல்லித் தைலம்.

கீழ்க்காய் நெல்லிச் சமூலம் 20 பலம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் குடிநீர்செய்து எள்ளெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 2 படி; சீரகம் 2 பலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி மெழுகு பதமாய் வடித்துத் தலைமுழுகிவரப் பித்த வெட்டை, மஞ்சள் காமாலை, வாந்தி, தலைமயக்கம், வாயூரல், உட்சுரம், நடுக்கம் ஆகியவை தீரும்.

ஆதண்டைத் தைலம்.

ஆதண்டை, சங்கு, நொச்சி, எருக்கு, சிற்றாமுட்டி வகைக்கு 1 பலம் இடித்துத் தூணிநீரில் போட்டு எட்டில் ஒன்றாக்கி எருக்கின் பழுப்புச்சாறு,

Koviloor Digital Library

பழச்சாறு வகைக்கு 1 படி; எள்ளெண்ணெய் 1 படி, வேப்பெண்ணெய் அரைப் படி; திரிகடுகு, ஓமம், பூண்டு, வசம்பு, ஏலம், மஞ்சள் வகைக்கு 1 பலம் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுகிவரக் கபாலசூலை, சூலை, வாய்வு, வாதசூலை, திமிர்வாதம், இரைப்பு, வயிற்றிலுள்ளவாயு, சிறுகடுப்பு, நேத்திரக்குத்து, மண்டைக்குத்து சொறிசிரங்கு ஆகிய நோய்கள் தீரும்.

சிறுசந்தனாதித் தைலம்.

1. சந்தனக்கட்டை, விலாமிச்சம்வேர், ஆவாரைவேர்ப்பட்டை வகைக்கு 10 பலம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒன்றாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு அதில் நன்னாரிவேர்ப்பட்டை 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவர மேகம் தீரும் உடல் இறுகும்.

2. நல்லெண்ணெய், பசுவின் பால் வகைக்கு 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் சந்தனத்தூள் 2 பலம் திருமஞ்சனத் திரவியம் கால் பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரப் பித்தமேகம், உடம்பெரிவு, வெட்டை, கண், கை, கால் காந்தல் ஆகிய நோய்கள் தீரும்.

சங்கன்வேர் தைலம்.

1. கால் துலாம் எடை சங்கன்வேரை இடித்துத் தூணிநீரில் போட்டு எட்டில் ஒன்றாய்க் குடிநீர் செய்து நல்லெண்ணெய் 2 படி; மிளகு, கருஞ்சீரகம், ஏலம், மாசிக்காய் வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவரக் குட்டம், சொறிசிரங்கு, கிரந்தி, சூலை, செங்கரப்பான், வண்டுகடி, சில்விடம், சயம், இருமல் ஆகிய நோய்கள் தீரும்.

2. சங்கன்வேர்ப்பட்டை 9 பலம் இடித்து எட்டுப் படி நீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்த குடிநீரில் பசுவின் பால், இளநீர், நல்லெண்ணெய் வகைக்கு 1 படி கூடவிட்டு மிளகு, 10 வராகன் எடை, பூலாங்கிழங்கு, சீரகம், கஸ்தூரிமஞ்சள் வகைக்கு 5 வராகன் எடை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகிவர மேகக்கங்கை, சொறி, வாயு நோய் முதலான நோய்கள் தீரும்.

3. சங்கன்வேர்ப்பட்டை 1 பலம் இடித்து எட்டுப்படி தண்ணீரில் போட்டு ஒரு படியாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு அதில் அழிஞ்சில்விதைப் பருப்பு, மிளகு, செங்கழுநீர்க்கிழங்கு, கோட்டம் வகைக்கு 1 பலம் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலை முழுகிவரத் தலைப்புழுவெட்டு, தலை முடிஉதிர்தல், தினவு, செம்பட்டைமயிர் மாறும்.

அறுகன்வேர்த் தைலம்.

அறுகம்வேர் 10 பலம், தூதுவளைவேர், குருந்தொட்டி வேர் வகைக்கு 8 பலம், குறிஞ்சாவேர், சிறுவழுதலைவேர், ஆவாரைவேர் வகைக்கு 6

Koviloor Digital Library

பலம், சீந்தில்கொடி 5 பலம்; அமுக்கறாக்கிழங்கு 4 பலம், கோரைக்கிழங்கு, சாரடைவேர் வகைக்கு 3 பலம், ஈருள்ளி 2 பலம் இவைகளை இடித்துத் தூணி நீரில்போட்.டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து வடித்த குடிநீரில் எள்ளெண்ணெய் அதற்கு சமமாகப் பசுவின் நெய்விட்டு, அதில் தோல்நீக்கி வறுத்து இடித்த இஞ்சித்தூள் 6 பலம், சாதிப்பத்திரி 2 பலம், சாதிக்காய், 1 பலம் குரோசானிஓமம், வால்மிளகு, பச்சிலை, கூகைநீர் வகைக்கு 2 கழஞ்சு; இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரக் கரப்பான், சொறி, சிரங்கு, ஆறாப்புண், நச்சுக்கடி, பாண்டு, அழல் (பித்தம்), சூலைக்கட்டு ஆகியவை தீரும். கண்தெளிவு உண்டாகும்.

அசுவகெந்திக்கிழங்க, சிற்றாமுட்டிவேர், கொம்பாக்குத்தூள் வகைக்கு பலம் 2 இவைகளை இடித்து 5 படி தண்ணீரிற்போட்டு ஒரு படியாக வற்றவைத்துக்கொண்டு அதில் நல்லெண்ணெய் படி 1 விட்டு, நன்னாரிவேர், மஞ்சிட்டிவேர், கோஷ்டம், கோரங்கிழங்கு, விலாமிச்சவேர், மரமஞ்சள், அரத்தை, சந்தனம், சதகுப்பை வகைக்குப் பலம் (அரைக்கால்) இவைகளை இடித்துப்போட்டுப் பதமாகக் காய்ச்சிக்கொண்டு ஸ்நானஞ்செய்துவர அஸ்திசுரம் உட்காய்ச்சல் வெட்டை சுவாசகாசம் க்ஷயம் இருமல் தீரும், மேகநீர்களையும் உடம்பில் உண்டாகும் சகலவித அரிப்பையும் நீக்கும், இந்தத் தைலத்தில் ஒரு சிறுகரண்டிவீதும் காலையில் ஒருவாரம் பத்தியமாகச் சாப்பிட்டு வர மேற்படி வியாதிகள் தீரும்.

அமுக்கிராக்கிழங்கு, சிற்றாமுட்டிவேர், கொம்பாக்கு வகைக்குப் பலம் 5 இவைகளைத் துண்டுதுண்டாக வெட்டி ஒரு பானையிற்போட்டுத் தண்ணீர் 12 படிவிட்டு 3 படியாக வற்றவைத்துக்கொண்டு அதில் நல்லெண்ணெய் படி 2 பசுவின் பால் படி 1 விட்டுச் சிற்றரத்தை, நன்னாரிவேர், முத்தக்காசு, அதிமதுரம், கோஷ்டம், மரமஞ்சள், கடுகுரோகணி, தேவதாரம், பச்சை, பூலாங்கிழங்கு, பூஞ்சாந்துப்பட்டை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கண்டதிப்பிலி, வகைக்குப் பலம் (அரைக்கால்) இவைகளை இடித்து உதிறபோட்டுப் பதமாகக்காய்ச்சித் தலை முழுகிவரக் கபம், இருமல், காசம், சுரம்கூடியரோகம் இவைகள் தீரும்.

துளசித் தைலம்.

துளசிச்சாறு, திருநீற்றுப்பச்சைச் சாறு, நல்லெண்ணெய், பசுவின் நெய் வகைக்கு 1 படி; பசுவின் பால் 4 படி, சிற்றாமணக்கெண்ணெய் 2 படி இவற்றை ஒன்றாய்க் கலந்து அதில் மஞ்சள், மரமஞ்சள், சுக்கு, முத்தக்காசு, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், சீரகம், அதிமதுரம், கற்கடகச்சிங்கி, சன்னலவங்கப்பட்டை, வலம்புரிக்காய், சாதிக்கும்பு, தக்கோலம், சடாமாஞ்சில், ஓமம், பறங்கிப்பட்டை, சண்பகப்பூ, கசகசா, அதிவிடையம், கடுகுரோகணி, பீதரோகணி, தேவதாரம், சந்தனக்கட்டை, அபின், சிறுநாகப்பூ வகைக்கு 3 வராகன் எடை இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர உருக்குநோய் (சயம்), காசம், பீனிசம், வயிற்றுப்புண் (குன்மம்) தொடர்கழிச்சல் (கிராணி), பாண்டு, மண்டையிடி, சூலை, காதுமந்தம், கண்புகைச்சல், உடம்புவலி ஆகியவை தீரும்.

Koviloor Digital Library

வேங்கை வில்வாதித் தைலம்.

வேங்கைமரத்தின் உள்வயிரம் (அகக்காழ்), வில்வவேர், சிறுகீரைவேர், சிற்றாமுட்டிவேர், சீந்திற்கொடி, அமுக்கறாக்கிழங்கு, மிளகு, திரிபலை, நன்னாரிவேர் வகைக்கு 8 பலம் இவைகளை இடித்து எட்டு மரக்கால் நீரில் போட்டு எட்டில் ஒரு பங்காய் வற்றவைத்து வடித்த குடிநீரில் பசுவின் நெய், இளநீர் வகைக்கு 4 படி ஒன்றாய்க் கலந்து விலாமிச்சம்வேர், விளாவரிசி, சிற்றரத்தை, மஞ்சிட்டிவேர், அதிமதுரம், பச்சை, வெட்பாலையரிசி, சந்தனம், திரிகடுகு, கற்பூரம், குக்கில், கச்சோலம், தேவகோட்டம், மகரப்பூ தேள்கொடுக்கு, திப்பிலிமூலம் வகைக்கு 8 கழஞ்சு பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி காய்ச்சி வடித்து தலைமுழுகிவர ஈளை, இருமல், கண் நோய், தடுமன் (சலதோடம்), மந்தம், காய்ச்சல், பீனிசம், செவியடைப்பு, வாயு, அகட்டுவாயு, வாயு நோய், மண்டைச்சூலை ஆகியவை தீரும்.

சுரநாசத்தைலம்.

அரத்தை, அமுக்கறாக்கிழங்கு, சதகுப்பை, கோட்டம், மரமஞ்சள், கொம்பரக்கு, முக்கடுகு, மதுரம், திரிசாதம், கடுகுரோகணி, முத்தக்காசு வகைக்கு 2 கழஞ்சு இடித்து ஒரு படி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர சுரம், காந்தல், வெப்பு, பழஞ்சுரம், சுரத்தினாலுண்டாகும் பலவித நோய்களும் தீரும்.

கரிப்பான் தைலம்.

கரிப்பான் சாறு, நல்லெண்ணெய் வகைக்கு 1 படி; கற்றாழைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு வகைக்கு கால் படி; கஸ்தூரிமஞ்சள், சாதிக்காய் வகைக்கு 1 படி; பசுவின் பாலால் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரக் கண் நோய், தலைநோய், செவிநோய், பித்தம், உட்டினம், பீனிசம் ஆகிய நோய்கள் யாவும் தீரும்.

சம்பீரத் தைலம்.

1. எலுமிச்சம்பழச்சாறு 1 ½ நல்லெண்ணெய் 1 படி, கற்பூரசலாசத்து, கல்நார், அதிமதுரம், அக்கரகாரம், இலவங்கப்பத்திரி, சாத்திரபேதி, கோட்டம், வாள்விளங்கம், சாதிக்காய், இலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், நற்சீரகம், கோரோசனை, பூலாங்கிழங்கு, மரமஞ்சள் வகைக்கு கால் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுக்குச் செய்து உள்ளுக்கும் சாப்பிட்டு வர மேகம், பித்தம், நச்சு வலி ஆகிய நோய்கள் தீரும்.

2. கஞ்சா, அவுரி, புளி, மகிழ் இவைகளின் இலைச்சாறு; எலுமிச்சை, நாரத்தை, சங்கு இவைகளின் பழச்சாறு; முத்தக்காசு குடிநீர் வகைக்கு 1 படி, நல்லெண்ணெய் 2 படி இவைகளை ஒன்றாய்க் கலந்த அதில், மதுரம், காட்டாத்திப்பூ, கோட்டம், திரிபலை, அழிஞ்சிவிதை, தக்கோலம், சாதிக்காய், அகில், மிளகு, சந்தனம், வெட்டிவேர், விலாமிச்சுவேர், பெருமரப்பட்டை வகைக்கு 1 ½ பலம்; இவைகளை 2 படி பசுவின் பாலில் அரைத்து

Koviloor Digital Library

கலக்கிக் கூடவிட்டுக் காய்ச்சி வடித்து தலைமுழுகி வரக் கண் நோய், பீனிசம் போகும்; புழுவெட்டுப் புண் மற்ற தலைநோய், மேகநோய் முதலியனவும் நீங்கும்.

கஞ்சாத் தைலம்.

கஞ்சா இலைச்சாறு, நல்லெண்ணெய் வகைக்கு ஒரு படி ஒன்றாய்க் கலந்து அதில் மிளகு 2 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர எல்லாவிதமான பீனிசமும் (மூக்குச் சார்பான நோய்களும்) தீரும்.

எட்டி மிளகுத் தைலம்.

எட்டிக்கொழுந்தும், மிளகும்தட்டி, நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தலைவலி தீரும்.

மிதிபாகல் தைலம்.

மிதிபாகல், கருநொச்சி, துளசி, நொச்சி இவைகளின் இலைச்சாறு, எருக்கம் பழுப்புச்சாறு, ஆதண்டம் பழுப்புச்சாறு வகைக்கு கால் படி; நல்லெண்ணெய் 1 படி ஒன்றாய்க் கலந்து அதில் திரிசாதம், கருஞ்சீரகம், நற்சீரகம், மிளகு, அபின், சுக்கு, அதிமதுரம், அதிவிடையம், சன்னிநாயகம் வகைக்கு 1 கழஞ்சு; தேவதாரம் 1 கழஞ்சு, இவற்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவரத் தலையிடி, பீனிசம், வாயு, கபாலவாயு ஆகிய நோய்கள் தீரும்.

கருந்தொட்டித் தைலம்.

கருந்தொட்டி, முசுமுசுக்கை, கரிப்பான், அவுரி, வெற்றிலை, நொச்சி, காஞ்சிரை (எட்டி), கருவூமத்தம், கஞ்சா இவைகளின் கொழுந்துச் சாறு; எருக்கம்பழுப்புச்சாறு; இஞ்சிச்சாறு வகைக்கு கால் படி; நல்லெண்ணெய், வெள்ளாட்டுப்பால் வகைக்கு 1 ¼ படி. இவைகளை ஒன்றாய்க் கலந்து 10 நாள் பரிதியில் வைத்து 11 ஆம் நாளில் திரிகடுகு, கோட்டம், அக்கிரகாரம், கருஞ்சீரகம், ஓமம், குரோசானி ஓமம், சாம்பிராணி, பூலாங்கிழங்கு வகைக்கு 2 வராகன் எடை, வெள்ளாட்டுப்பாலால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகிவர 21 மேகம், எல்லாவித பீனிசம், கபாலக்குத்து, சுயம், மேககாங்கை ஆகியவை நீங்கும்.

யானைக் கொம்புத் தைலம்.

ஆனைதந்தப்பொடி 5 பலம் எட்டு படித் தண்ணீரில் போட்டு வற்றவைத்தக் குடிநீர் 1 படி; நல்லெண்ணெய் 1 படி; சிவந்த ஆலமுகிழ், சவுரிக்கொடி, அவுரி, கையாந்தகரை இவைகளின் சாறு வகைக்கு கால் படி ஒன்றாய்க் கலந்து காய்ச்சி வடித்துப் பூச, தலையில் பட்ட மயிர் கறுத்து வளரும்.

Koviloor Digital Library

சவுரித் தைலம்.

சவுரி 100 பலம் இடித்துத் தூணி நீரில் போட்டு எட்டில் ஒரு பாகமாய் வற்றவைத்து, நல்லெண்ணெய் 1 படி, கருஞ்சீரகம், 1 பலம், அதிவிடையம், மரமஞ்சள் வகைக்கு அரை பலம். இவைகளைப் பசுவின் பாலால் அரைத்துச் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுகி வரக்குட்டம், வாத கரப்பான், கழலை, காய்ப்பு கண்டவீக்கம் முதலான நோய்கள் தீரும்.

வேங்கைத் தைலம்.

வேங்கைப்பட்டை 10 பலம், இடித்து முன்போல் குடிநீர் செய்து நல்லெண்ணெய் 1 படி கூடவிட்டு, விலாமிச்சம்வேர், மிளகு, வெள்ளுள்ளி, நற்சீரகம் வகைக்கு 1 பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலை முழுகி வர வாதம், சூலை, பித்தம், மண்டையிடி, உடல் வீக்கம் ஆகியவை நீங்கும்.

வேப்பம்பட்டைத் தைலம்.

நூறு வருடம் சென்ற வேப்பம்பட்டை கால் துலாம் இடித்து முன்போல் குடிநீர்செய்து நல்லெண்ணெய் 2 படி கூடிவிட்டு, ஏலம் 2 பலம்; இலந்தைவேர், பழம்பாசி, அக்கரகாரம் வகைக்கு ஒரு பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர வாதம், குட்டம், உடல் கடுப்பு, செங்கரப்பன், புண் புரைகள் சொறி, சிரங்கு ஆகியவை நீங்கும்.

குருந்தொட்டித் தைலம்.

குருந்தொட்டிவேர்ப்பட்டை கால் துலாம் இடித்து முன்போல் குடிநீர் செய்து அதில் சுக்கு, மிளகு, ஏலம் வகைக்கு ஒரு பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வர 80 வகை வாதங்களும் நீங்கும்.

தைலப் படலம் முற்றும்.

ஊழிக்காற்றுப் படலம்.

புலால், கவிச்சு அழுகிய நாற்றம் முதலிய தீய நாற்றங்கள் மூக்கின் வழியாகத் தலைக்குள் சென்று, மயிர்க் கூச்சம் ஏற்பட்டு, குருதி கெட்டு, தொற்று நோய்த் தோன்றுதலால் ஊழிக்காற்றுப் படலமென வழங்கப்பட்டது.

நச்சுக் காற்றினால் இரத்தம் முறிந்து, நீராகிக் கொம்பன் என்றும், குடற்படுவன் என்றும், அக்கரமென்றும் சொல்லப்பட்ட மூன்றுவிதக் கழிச்சல்கள் உண்டாகின்றன.

கொம்பனென்ற கழிச்சல் கண்டால் கக்கல், களைப்பு, குளிர்ச்சி, வியர்வை, உடலில் கடுப்பு, உளைவு, நாவறட்சி, விக்கல், வயிற்றுவலி, சன்னி ஆகியவை தோன்றும்; உடல் எல்லாம் பிசின் போல் இருக்கும்; நாடி அடங்கும்; முப்பது நாழிகையில் இறப்பு ஏற்படும்.

Koviloor Digital Library

குடற்படுவன் கண்டால் தாங்காத கழிச்சல், காதடைப்பு, மூர்ச்சை, அடிவயிற்றுவலி, மந்தக் கழிச்சல்கண்டு சீதரத்தம் விழும் நரம்பு இழுக்கும்; உடல் குளிரும்; சந்து உளைச்சலிடும்; மூன்று நாள் சென்றபிறகு உடல் அழியாது.

அக்கரம் கண்டால் சோறுபோல் கழிச்சல் காணும்; சோறு விழும்; தாகிக்கும்; உடல் குளிரும்; நெஞ்சு முதல் கை, கால் கடுப்புக் காணும்.

1. ஓரே முறை கழிச்சலாவதுடன் மயக்கத்தை கொடுத்துப் படுக்கையில் ஆழ்த்திவிடும்.

2. தூய்மையான நீர்போல் அடிக்கடி கழிச்சல் கண்டு வயிற்றைப் புரட்டிக் கக்கல்செய்து சயித்தியத்தை உண்டாக்கும்.

3. செரியாமைக் கழிச்சல்போல் தோன்றி வயிறு பொருமி, மெல்ல மெல்லத் தீய குணங்களை வெளியிடும்.

4. தாகம், மயக்கம், குளிர்ச்சி, இசிவு, அதிக மூச்சு, காதடைப்பு, குரல் வேற்றுமை, ஈரல்வலி, வியர்வை, நகம் கறுத்தல், நாடியடங்கள், கண்குழிதல், தாடை சுருங்கள் முதலிய அம் மூன்றின் பொதுக் குணங்களாயிருக்கின்றன. சிலருக்கு கக்கலோடு கிருமிகளும் விழுதல் உண்டு.

மருத்துவம்:– 1. எட்டாம் காய்ச்சல் வெடியுப்பை அயச் சட்டியிலிட்டு அடுப்பேற்றி உருகும்போது சமமாக தலைப்பிள்ளை நஞ்சுக் கொடியைத் துண்டு துண்டாய்க் கத்தரித்து அதில் ஒவ்வொரு துண்டாய்க் கொடுத்து இரண்டும் ஒன்றாய்ச் சேர்ந்து உருகினபின்பு தீயாற்றிக் குளிரவைக்கச் சுண்ணமாகும். மேற்படி சுண்ணமும், தூய்மைசெய்த வீரம், பூரம், இலிங்கம், தூடன், அபின், சுக்கு, மிளகு, கஸ்தூரி, கஞ்சாவித்து, குங்குமப்பூ வகைக்கு ஒரு கழஞ்சு. இவைகளைக் கஞ்சா குடிநீரில் இரண்டு சாமமும், கொடிவேலிக் குடிநீரில் நான்கு சாமமும், ஊமத்தன் சாற்றில் இரண்டு சாமமும், அரைத்து மிளகு அளவாய் உருண்டைசெய்து மேற்படி உருண்டையைச் சாராயத்தில் கொடுக்க கொம்பனென்றக் கழிச்சலும்; மஞ்சளைப் பொடித்து வெந்நீரில் போட்டுத் தெளிவாய் இறுத்துக் கொடுக்கக் குடல் படுவனும், மிளகைச் சிறுக வறுத்துக் கடைந்து தண்ணீர் விட்டு வற்றவைத்த குடிநீரில் கொடுக்க அக்கரத்தின் கழிச்சலும் நீங்கும்.

2. மிளகு, கற்பூரம், சாதிக்காய், கரும்வேலம்பிசின், அபின், இரசகற்பூரம், நெல்லிவற்றல், வெந்தயம், கிராம்பு, பெருங்காயம், வகைக்கு 1 கழஞ்சு. சடைக்கஞ்சாச்சாற்றாலாட்டி, கடலை அளவு உருட்டிக் காயவைத்து வேளை ஒன்றுக்கு ஒரு உருண்டை வீதம் தேனிலாவது, மற்றத் துணைமருந்து களிலாவது கொடுக்க அக்கரம் எனும் கழிச்சலும், குடற்படுவனும் தீரும்.

3. மிளகு, கடுக்காய், ஓமம், காயம், சுக்கு வெள்ளுள்ளி, வெந்தயம், சீரகம், கருவேப்பிலை, இவைகளை ஓர் எடையாய்ச் சங்கம் பழச்சாற்றாலாட்டிக் கொட்டைப்பாக்கு அளவு உருண்டைசெய்து மிளகுக் குடிநீரில் மூன்று வேளை கொடுக்க மேற்கண்ட இரண்டு வகைக் கழிச்சலும் தீரும்.

Koviloor Digital Library

4. சுக்கு, குரோசானிஓமம், சித்திரமூலம், மிளகாய், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு இருவேலி வேம்பின்பிசின், ஆவாரம்பிசின், விளாம்பிசின் வகைக்கு 1 கழஞ்சு, தூய்மைசெய்த கஞ்சா 1 பலம். இவைகளை வெதுப்பிப் பொடித்துத் தேன்விட்டு அரைத்து, சுண்டைக்காய் அளவு உருண்டை செய்து உட்கொள்ளத் தீரும்.

5. வெண்காரம், கற்பூரசலாசத்து, பூலாக்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மாங்கொழுந்து, அத்திக் கொழுந்து வகைக்கு 5 வராகன் எடை; கோரோசனை, அதிவிடையம், கோட்டம் வகைக்கு 2 வராகன் எடை; கிராம்பு 1 வராகன் எடை, மல்லி நரவற்பட்டை அரசம்பட்டை வகைக்கு 10 வராகனெடை பொன்முசுட்டை வேர் 2 பலம்; இவைகளைப் பொடித்துத் தூய்மையான நீரால் ஒரு நாள் ஆட்டி, நெல்லிக்காய் அளவு உருண்டைசெய்து உலர்த்தி மாட்டுக்கொம்புக் குப்பியில் வைத்துக்கொண்டு ஒரு முறை கழிச்சலானவுடன் ஒரு உண்டையும் 20 மிளகும் பொடித்துக் கொடுக்க நிற்கும்.

6. அதில் தீராவிட்டால் அரை உருண்டையும் ஒரு வராகன் எடை சூடனும் பொடித்து தேனில் கலந்து கொடுக்க நிற்கும். அதையும் மீறினால் உருண்டையைச் சாராயத்தில் உரைத்துக் கொடுக்க நிற்கும். இந்த மாத்திரையினால் சகல வாந்தியும் தீரும்; வயிற்றில் பொருமல் கண்டால் சாரடை வேரும் ஓமமும் கலந்து குடிநீர்செய்து கொடுக்கவும்.

7. திரிகடுகு, ஓமம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் வகைக்கு 5 வராகன் எடை; காஞ்சிரை வேர்ப்பட்டை, 30 வராகன் எடை. இவைகளை எலுமிச்சம்பழச் சாற்றால் மூன்று சாமம் ஆட்டிக் கடலை அளவு உருண்டைசெய்து குப்பைமேனியும், தும்பையும் சேர்த்துச் செய்த குடிநீரில் மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

8. வெள்ளைப்பூண்டுத் தைலமும், தேனும் ஒன்றாய்க் கலந்து அதில் சுக்கு, மிளகு, வேப்பம்பூ, பெருங்காயம், வசம்பு இவைகளை ஓர் எடையாய் வெதுப்பிப் பொடித்ததூள் முவ்விரல் அளவு தூவிக் கலந்து அடிக்கடி கொடுக்க நோய் தீரும்.

9. சுக்கு, மிளகு, சீரகம் வகைக்கு 1 பலம்; திப்பிலி, ஓமம், குரோசானிஓமம், கசகசா, சடாமாஞ்சில், ஏலம், கிராம்பு, தாளிசப்பத்திரி, மல்லி, காட்டாத்திப்பூ, கூகைநீர், சமுத்திரப்பழம், மகரப்பூ, கற்கடகசிங்கி, திரிபலை, வாலுழுவையரிசி, வெட்பாலையரிசி, சாரப்பருப்பு, அதிமதுரம், அக்கரகாரம், கோட்டம், வால்மிளகு, வாய்விளங்கம், மாசிக்காய், குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, அதிவிடையம், சிற்றரத்தை, சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலிமூலம், மஞ்சிட்டி வகைக்கு 2 வராகன் எடை, வெல்லம் 6 பலம், தூய்மை செய்த கஞ்சா 4 பலம், இவைகளை வெதுப்பிப் பொடித்து வடிகட்டி, தேன் கால் படிவிட்டு மெழுகு போல் அரைத்துக் குப்பியில் வைத்துக்கொண்டுக் கொட்டைப் பாக்கு அளவு மூன்றுவேளை கொடுக்க மூன்று வகைக் கழிச்சலும் தீரும்.

Koviloor Digital Library

குறிப்பு:- மேற்காட்டிய அவிழ்தங்களில் ஒன்றைக்கொடுத்து இதன் அடியில் கண்டிருக்கிற குடிநீரை அடிக்கடி உட்கொள்ளச் செய்யவெண்டும்.

10. நாயுருவி, புளியம்பட்டை, முருங்கைப்பட்டை, மாவிலிங்கப்பட்டை, கொடிவேலிவேர், சிவனார்வேம்பின்வேர், எருக்கம்பூ, தென்னம்பிஞ்சு வகைக்கு 1 பலம் இடித்து, நான்கு படி தண்ணீரில் போட்டு, ஒரு படியாய் வற்றவைத்து, அடிக்கடி கொடுத்துக் கொண்டிருக்க சன்னி, ஈரட்சை, தாகம், வயிற்றுப் பொருமல் ஆகியவை அணுகாது.

11. உடம்பில் குளிர்ச்சிகண்டிருந்தால் கற்பூரத் தைலத்தை உடம்பெங்கும் அடிக்கடி பூசிக் கடுகு, வெள்ளைப்பூண்டு, சூடன் இவைகளை முருங்கைப்பட்டைக் குடிநீரில் அரைத்து மார்பு, தலை, கை, கால் முதலான இடங்களில் தடவிக் கம்பளி போர்த்திடச் சூடு உண்டாகும்.

மருத்துணவு:- அரிசியைப் பொரித்துக் கஞ்சிசெய்து கருவேப்பிலை, மிளகு, உப்பு இவைகளைப் பொடித்துப் போட்டுக் கொடுக்கவும்.

ஊழிக்காற்றுப்படலம் முற்றும்.

மருந்துவீறு முறிவுப் படலம்.

எல்லாவிதமான நஞ்சுகளின் வீறுகளுக்கும் முறிவு சொல்லுதலாம். மருந்து முறிவு.

1. அவுரிவேர், பிரம்மியிலை, மிளகு இவைகளை ஓர் எடையாய்ச் சிதைத்துக்குடிநீர் செய்து ஆறு வேளை கொடுக்க மருந்தின் வீறுதணியும்.

2. அறுகம்வேர் 1 பலம், மிளகு 50, இவைகளை இடித்து இரண்டு படி நீரில் போட்டுக் கால் படியாய்ச் சுண்ட வைத்து வடிகட்டி அதில் மாதுளம்பூ, அதிமதுரம், கூகைநீர் வகைக்கு 1 வராகன் எடை அரைத்துக் கலக்கி கொட்டைப்பாக்கு அளவு பசுவின் வெண்ணெயைப் போட்டு மூன்று நாள் கொடுக்கச் செந்தூர பற்பங்களின் நஞ்சு வீறும் வெம்மையும் தீரும்.

3. பருத்திக்காய்ச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, பசுவின் பால் இவைகளை ஓரளவாய்க் கலந்து அதில் சர்க்கரை கரைத்து மூன்று நாள் கொடுக்கப் பற்பல செந்தூரங்களின் வீறுதணியும் சுரைக்குடுக்கை சூட்டகனிலைப் புளித்த மோரில் கரைத்து ஒருநாள் கொடுக்க ரசவீறு தணியும்.

4. முருங்கையீர்க்கு 2 பலம், ஆவாரை வேர்ப்பட்டை 1 பலம், ஈருள்ளி 10 பலம். இவைகளை இடித்துக் குடிநீர்செய்து காலை, மாலை 5 நாள் உட்கொள்ள மருந்துகளினால் காணும் கழிச்சல், வயிற்றுக் கடுப்பு, இரத்தக்கடுப்பு ஆகிய நோய்கள் தீரும்.

5. பாடாணத்திற்கு மிளகு, சிறுகீரை, நீலி, துளசி, பாகலிலை, கொடுப்பை, கோவை, பசலை, ஏரண்டம், எலுமிச்ச இலையையும் நாபி நஞ்சு வீறு முறிய சிறுகீரையையும்; சிவதைக்கு வெள்வேலம் பட்டையையும், கள்ளிக்கு ஆவாரைவேரையும், மறுதோன்றிற்குத் தான்றிக்காயையும், ஊமத்தைக்குத் தாமரைக் கிழங்கையும், அலரிக்குக் கடுக்காயையும்,

Koviloor Digital Library

சுண்ணாம்புக்கு மஞ்சளையும், பேய்ப்பீர்க்குக்கு முத்தக் காசையும் எட்டிக்கு நாவல்கொழுந்தையும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுத்தாலும் அல்லது குடிநீர் செய்து கொடுத்தாலும் முறிந்து அவைகளின் வீறு தணியும்.

6. அபினுக்கு பசுவின் நெய்யும், கழுதை வண்டுக்கு சங்கம் பழரசத்தையும், நெய், தேனுக்கு வெந்த கரியையும், எருக்கிலைக்கு எள்ளும் சர்க்கரையையும், குண்டுமணிக்குப் பொரித்த வெண்காரத்தையும், வெற்றிலையையும் அரைத்து நல்லெண்ணெயில் கலந்து, குடித்தவர்களுக்குத் தேங்காய்ப்பாலையும், கஞ்சாவுக்கு ஈருள்ளிச் சாற்றையும், எலுமிச்சம்பழச் சாற்றையும், தில்லம்பாலுக்கு கொட்டைக்கரத்தைச் சாற்றையும், கள்ளிப்பாலுக்கு வாழைப் பட்டைச் சாற்றையும், எருக்கம்பாலுக்கு பசுவின் மோரையும் கருவேற்பட்டைக் குடிநீரையும் கொடுக்க அவைகளின் வீறு தணியும்.

7. சேங்கொட்டைக்குப் பூவரசம்பட்டைச் சாறு அல்லது புளியிலையின் சாறு அல்லது நல்லெண்ணெயில் பழம்புளியைக் கரைத்து உள்ளுக்குக் கொடுத்து, தான்றிக்காயும் புளியும் ஓர் எடையாய்க் கலந்து அரைத்து, உடம்பில்பூச அதன் வீறு தணியும்.

8. பாடாணம், தின்றவர்களுக்கு மிளகை அரைத்து எருமை வெண்ணெயில் கலந்து உள்ளுக்குக் கொடுத்து எருமைத் தயிரில் சந்தனத்தைக் கரைத்து உடம்பில் பூச வீறுதணியும்.

9. வீரத்திற்கும், இரசபற்பத்திற்கும் 12 கோழிமுட்டை வெள்ளைக்கருவைத் தண்ணீரில் கலந்து அடிக்கடி கொடுத்துக் கொண்டிருக்க அவைகளின் வீறு தணியும்.

10. அவுரிக்கும் முற்றின சாரடைச் சமூலத்திற்கும் எல்லாவித நஞ்சுகளின் வீறும் அடங்கும்.

மருந்து முறிவு முற்றிற்று

பலவகை நோய்களுக்கு மருத்துவம்.

1 தலையில் தோன்றும் புழுவெட்டு முதலானவைகளினால் தலைமுடி உதிர்ந்தால் யானைத் தந்தத்தைச் சுட்டுப் பொடித்துத் தேனில்கலந்து எட்டு நாள் பூசி வந்தால் புழுவெட்டு நீங்கி மயிர் முளைக்கும்.

2 மா, எலுமிச்சை, நாரத்தை, கொழுஞ்சி, மாதுளை, விளா இவைகளின் பருப்புகளை ஓர் எடையாய்ப் பசுவின் பாலால் அரைத்துக் கொதிக்கவைத்து, ஒரு மண்டலம்(48 நாள்) காலையில் தலையில் தளமிட்டு மாலையில் தலை முழுக்குச் செய்துவர தலை மயிர் உதிர்தல் மாறும்.

நெஞ்சித் தடுமனுக்கு மருந்து.

1 கால்படி பசுவின் பாலில் முசுமுசுக்கை வேர் ஒரு வராகன் எடை, முக்காவேளை வேர் கால் வராகன் எடை தட்டிப் போட்டு காய்ச்சிக் குடிக்க நீங்கும்.

Koviloor Digital Library

செறியாமல் சோறு சோறாய் மலம் கழிவதற்கு மருந்து.

ஒரு பிடி பிரண்டைத் தண்டைச்சிறுக நறுக்கிக் குடிநீரிட்டு இரண்டு வராகன் எடை ஓமத்தைக் கூடப் போட்டுப் பொரியும் போது ஒரு படி தண்ணீர் விட்டு ஆழாக்காக வற்றவைத்துக் கொடுக்க நோய் தீரும்.

அறைவீட்டில் வயிற்றில் சீழ்கட்டி வறட்சி, தோடம் ஆகியவற்றிற்கு மருந்து.

திரிகடுகு, அக்கிரகாரம், அதிமதுரம், நற்சீரகம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, மாசிக்காய், வகைக்கு 2 வராகன் எடை, இவைகளை வெதுப்பி கஸ்தூரி கால் வராகன் எடை; கோரோசனை அரை வராகன் எடை கூடப்போட்டுத் தேனில் கலந்துச் சிறு கழற்சிக்காய் அளவு உள்ளுக்குக் கொடுத்து நான்கு நாழிகைக்குப் பிறகு முற்றினவேப்பம் பட்டை 1 பலம், மஞ்சள் அரைப் பலம், இவற்றை இடித்து இரண்டுபடி தண்ணீர்விட்டு 1 ஆழாக்காய் வற்றவைத்து இவ்விதம் 5 நாள் கொடுக்க வயிற்றுச் சீழ்கட்டி, நாவறட்சி, தோடம் முதலான நோய்கள் தீரும்.

தலைப்பேனுக்கு மருந்து.

இரசத்தை கருவூமத்திலைச் சாற்றினாலாவது, மேனிச்சாற்றினாலாவது அரைத்துப் பழந்துணியிலாவது நூலிலாவது தடவி நிழலில் உலர்த்தி, தலையில் சுற்றிவைக்க 9 மணி நேரத்திற்குள் பேன் எல்லாம் செத்து உதிர்ந்து போகும்.

மேகப்புண் முதலான இரணங்களுக்குத் தைலம்.

சங்கம் வேர், பூவரசம் பட்டை, சிவனார் வேம்பு, வாலுளுவை அரிசி, இவைகளை ஓர் எடையாய்க் குழித் தைலம் இறக்கி உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் பூச மேகத்தில் பிறந்த சகல புண் புறைகள் ஆறும்.

நாக்கிலும், உதட்டிலும் உண்டாகும் புண்ணுக்கு மருந்து.

பசுவின் பால், சிற்றாமணக்கெண்ணெய் வகைக்கு அரைப்படி கலந்து அதில் வெந்தயம், வெங்காயம், மயிர்மாணிக்கப் பச்சிலை வகைக்கு 4 பலம், அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காலையில் ஒரு கரண்டி அளவு சாப்பிட்டுவர மூலச்சூடு தணிந்து புண்ணாறும்.

எச்சில் தழும்பு படர்தாமரை படர்வதற்குப் பற்று.

1. புரசம் விதையை, எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துப் போடக் கொப்பளித்து நீராய் வடிந்து மாறிப்போகும்.

2. எருக்கம் வேர்ப் பட்டையையும் தகரைவிதையையும் எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்துப் பூசி வர மாறும்.

Koviloor Digital Library

அஃதாவது எல்லாப் புண்களையும் ஆற்றுதலாம். 10 திங்கள் வரை பயன்படுத்தலாம்.

1. வெள்ளைக் குங்கிலியத்தையும் வெள்ளை மெழுகையும் ஓர் எடையாய்ச் சட்டியிலிட்டு உருகும்போது தேங்காயெண்ணெய் ஊற்றி உருக்கித் தண்ணீரில் ஊற்றி அதை எடுத்து வைத்துக் கொண்டு துணியில் பூசி அனலில் வாட்டிப்போட இரணங்கள், சிரங்கு, புண், ஆகியவை தீரும்.

2. வெள்ளைக் குங்கிலியம் 5 பலம், இரசகற்பூரம் 5 வராகன் எடை, தேங்காயெண்ணெயை விட்டு அரைத்துப் பிறகு தண்ணீர் விட்டுத் தவளம் போலாகும்வரை குழவியால் கலந்துப் புண்ணில் போட ஆறும்.

3. இரசம் 1 வராகன் எடை, கந்தகம் 1 வராகன் எடை, மிருதார்சிங்கி, நற்சீரகம் வகைக்கு 2 வராகன் எடை, கருஞ்சீரகம் 6 வராகன் எடை, துத்தம் அரை வராகன் எடை இவைகளை வெண்ணெயில் மெழுகுபோல் ஆட்டிச் சிரங்கில் பூச ஆறும்.

4. நல்லெண்ணெயும் மெழுகும் உருக்கி, அதில் வங்கச் செந்தூரம் 3 வராகன் எடை, காவிக்கல், மிருதார்சிங்கி, மிளகு வகைக்கு 1 வராகன் எடை, துத்தம் அரை வராகன் எடை, இவைகளைப் பொடித்துத் தனியே போட்டுக் கிளறி எடுத்துக் கொண்டு சீலையில் தடவிப்போட சகல இரணமும் நெருப்புப்பட்ட புண்ணும் ஆறும்.

5. தேங்காயெண்ணெயும், வெள்ளை மெழுகையும் சேர்த்து உருக்கி அதில் இரசகற்பூரம், துருசு, மிருதார்சிங்கி, சமமாய்ப் பொடித்துத் தூவிக் கிளறி எடுத்துப் போடத் தீராத சிரங்கும் தீரும்.

6. நல்லெண்ணெயில், 12 வராகன் எடை தேன் மெழுகைப் போட்டு உருக்கி அதில் வெள்ளைக் குங்கிலியம் 1 வராகன் எடை, மிருதார்சிங்கி 1 1¼ வராகன் எடை, துருசு அரை வராகன் எடை இவைகளை வெவ்வேறாப் பொடித்துத் தூவிக்கிளறி கல்வத்திலிட்டு தண்ணீர் விட்டு அரைத்து நான்கு முறை கழுவிச் சிமிழில் வைத்துக் கொண்டு துணியில் தடவிப்போட சகல புண்ணும் ஆறும்.

7. எருக்கம்வேர்ப்பட்டை, அவுரிவேர்ப்பட்டை, வெண்தோன்றிக்கிழங்கு, குன்றிமணிப்பருப்பு, காஞ்சிரைவிதை, தலைச்சுருளிவேர், கஞ்சாயிலை, வசம்பு, பெருங்காயம் இவைகளை ஓர் எடையாய் வெள்ளுள்ளித் தைலத்தால் களிம்புபோல் ஆட்டிச் சிமிழில் வைத்துக்கொண்டு பூசக் கண்டமாலை, பவுத்திரம், விப்புருதி, வீக்கம் புடைப்பு, தொடைவாழை, அரையாப்பு முதலியவை உடையும்.

8. வேப்பெண்ணெயில் உள்ளி, வேம்பாடம்பட்டை, துத்தம், கந்தகம், துடம், காசுக்கட்டி, துருசு, நாவிக்கிழங்கு, குங்கிலியம், குக்கில், மிருதார்சிங்கி, தாரம் இவைகளைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சி மேற்படி இரணங்களில் தடவ ஆறும்.

Koviloor Digital Library

அக்கிக்கு மருந்து.

ஊமத்தை இலையை அரைத்து எருமைவெண்ணெயில் குழைத்து அக்கிமேல் பூசிவர ஆறும்.

காதுப்புண் மருந்து.

நிலப்பனைக்கிழங்கு, அமுக்கறாக்கிழங்கு, ஆனைத்திப்பிலி, செங்கழுநீர்க்கிழங்கு இவைகளை ஓர் எடையாய் எருமைவெண்ணெயில் களிம்புபோல் அரைத்துக் காதில் தடவிவர காதுப்புண் ஆறி விடும்.

மயிர்க் கூருக்கு மருந்து.

மயிரைக்கருக்கி எருமை வெண்ணெயில் குழைத்துப் போட்டாலும், பசலை இலையை அரைத்து எருமை வெண்ணெயில் குழைத்துப்போட்டாலும், மஞ்சளைச்சுட்டு நல்லெண்ணெயில் அரைத்துப் போட்டாலும் நீங்கும்.

தீச்சுட்ட புண்ணுக்கு மருந்து.

சுண்ணாம்பும், எருக்கம்பூவும் ஓர் எடையாய் அரைத்துப்பூச தீச்சுட்ட காந்தல் நீங்கும். திருவாத்தியிலையை வறுத்துப் பொடித்துப் புண்ணில்போட ஆறும். ஒரு சட்டியில் புளித்த தண்ணீர் விட்டு வேடுகட்டி திருவாத்தியிலையை இடித்து அதன் மேல் வைத்துப் பிட்ட வித்து புண்ணில் வைத்துக் கட்டத் தீரும். வேப்பங்கொழுந்தைச் சிதைத்து ஆமணக்கிலையிற் பொதிந்து உமிக்காந்திருகே புதைத்து வெந்த பதத்தில் எடுத்து கட்டிவர தீச்சுட்ட புண் ஆறும்

நரம்புச் சிலந்திக்கு மருந்து.

மிளகு, அவுரிவேர்ப்பட்டை, அவுரிவேர் இலை வகைக்கு அரைப் பலம், பெருங்காயம் 1 வராகன் எடை, இவைகளை அரைத்துப் புளியங்கொட்டை அளவு ஆறு நாள் காலை, மாலை உட்கொள்ளவும். ஓர் உருண்டையை உரைத்து நரம்புச்சிலந்தியின் பேரில் போட்டுக் காலையில் வெந்நீர் விட்டுக்கழுவிவர நீங்கும்; கடும்பத்தியம்.

பித்தவெடிப்புக்கு மருந்து.

உப்பு, செம்மறிச்சாணி, அரசம்பட்டை, வகைக்கு 1 பலம், எருக்கம்பூ 3 பலம், இவைகளை இடித்து வறுத்துத் துணியில் முடிந்து ஒத்தனம்செய்து சீரகம் 1 வராகன் எடை, சுண்ணாம்பு, 3 வராகன் எடை, துருசு 5 வராகன் எடை இவைகளை எருமைவெண்ணெயில் களிம்புபோல் அரைத்து வெடிப்பில் போட்டுவர நீங்கும்.

மருதிலையில் பசுவின் பால் விட்டு இடித்துப் பிழிந்தசாறு 1 படி வீதம் மூன்று நாள் காலையில் கொடுத்துப் பத்தியம் பாலும், சாதமும் கொடுத்து ஏழாம் நாள் தலைக்குத் தண்ணீர் ஊற்றத் தீரும்.

Koviloor Digital Library

கன்னவீக்கத்திற்கு மருந்து.

சிற்றகத்தி இலையும், வசம்பும், அரிசியும், ஓர் எடையாய் அரைத்துப் பூசினாலும் அமுக்கறாவேரும், அரிசியும், ஓர் எடையாய் அரைத்துப் பூசினாலும் வற்றும்.

கருவங்கு, பரு, படுவனுக்கு மருந்து.

1. புழுங்கலரிசியும், காரெள்ளும் சமமாய்ச் சேர்த்து வெள்ளாட்டுப் பாலால் அரைத்துக் கருவங்கில் பூசிவர மாறும்.

2. சங்கிலை, எலுமிச்சை இலை, வெற்றிலை, பெருங்காயம், இவைகளைச் சிதைத்துப் பிழிந்த சாற்றைக் காதிலும், மூக்கிலும் பிழிந்து உச்சியிலும் தேய்க்க மண்டைப் பரு நீங்கும்.

3. முகத்தில் காணும் பருவின் மேல் மேற்படிச் சாற்றைத் தடவினாலும் தீரும்.

4. அகத்தி இலையைக் கசக்கிப் பிழிந்த சாற்றையாவது, திருநீற்றுப் பச்சையின் சாற்றையாவது பஞ்சிலூட்டிப் போட்டாலும் நீங்கும்.

5. புனுகை மேற்படி சாற்றில் கலந்து போட்டாலும் நீங்கும்.

6. அவுரி, வெட்பாலை, கொடிவேலி, இவைகளின் வேர்ப்பட்டைகளை பசுவின் பாலால் அரைத்துக் கலக்கி உள்ளுக்குக் கொடுத்து மேலிலும் பூச சகலவிதமான பருப்படுவனும் நீங்கும்.

குத்துவெட்டு, வில்லுண்டை, கல்லெறி காயத்திற்கு மருந்து.

எலுமிச்சம்பழத்தை இரண்டாய் நறுக்கிச் சட்டியிலிட்டு நல்லெண்ணெய் கொஞ்சம் விட்டு முறியக் காய்ச்சி எடுத்துத் துணியில் வைத்து மூன்று நாள் ஒற்றடம் செய்து, பிறகு துடரி, முட்பூலா, நிலக்குமிழ், ஆவாரை, சிறுகளா, நத்தைச்சூரி, நாயுருவி இவைகளின் வேர்ப்பட்டை, வேப்பம் பட்டை, இலந்தை, வெற்றிலை, கடுக்காய், கோட்டம், அதிமதுரம், செவ்வல்லிக் கொடி, கரியபவளம், குங்கிலியம், கரியுப்பு, சதகுப்பை, சிறுவழுதலை, முள்ளிலவம் பட்டை இவைகளை ஓர் எடையாய் எடுத்து கள்ளிப்பாலால் ;அரைத்துப் போட்டாலும், மேற்படி எண்ணெயில் காய்ச்சி வடித்துப்போட்டாலும் நீங்கும்.

வெட்டுக்காயத்துக்கு.

சீரார்செங்கழுநீர் இலையையாவது சதையொட்டி இலையையாவது சிதைத்து வெட்டுக்காயத்தில் வைத்துக்கட்ட ஆறும்.

அரையாப்பு பிளவை சூலைவீக்கம் சூலைக்கட்டு பவுந்திரத்துக்கு மேற்பூச்சுகள்

கடுக்காய், சுக்கு, கரியபவளம், நாவிக்கிழங்கு, அபின், கொடுவேலிவேர், வாளம், எருக்கின்வேர் இவைகளை எருக்கின்பாலிலாவது அல்லது அதன்பழுப்புச் சாற்றிலாவது அரைத்துப் பூசிவரத் தீரும்.

Koviloor Digital Library

கரியபவளம், கருஞ்சீரகம், அபின், பெருங்காயம், நாவிக்கிழங்கு, வெள்ளுள்ளி, கொடுவேலிவேர் இவைகளைக் கொடிக்கள்ளிப்பாலால் அரைத்துப்பூசத் தீரும்.

இரசம், கெந்தகம், நாவிக்கிழங்கு, அபின், பெருங்காயம் இவைகளைத் திருகு கள்ளிப்பால் விட்டு அரைத்துப் பூசத் தீரும்.

சூதம், நாவிக்கிழங்கு, கெந்தகம், காயம், நேர்வாளம், கரியபவளம், அபின் கருஞ்சீரகம், இவைகளை திருகுகள்ளி எருக்கு இவைகளின் பால்விட்டரைத்துப் பூசத்தீரும்.

ஆண்குறித்தொலியிற்காணும் புண்வீக்கத்துக்கு ஆதாளைப்பாலைத் தடவி அவுரிப் பூவைக் கசக்கிவைத்துக் கட்டப் புண்ணாறி வீக்கம் வற்றும்.

நாவிக்கிழங்கு, இலிங்கம், அரிதாரம், குக்கில், கரியபவளம், அபின், பெருங்காயம் இவைகளை மேற்படி பால்விட்டரைத்துப் பூசத் தீரும்.

இரணங்களுக்குப்போடும் தைலம்

அஞ்சனக்கல், நிமிளை, காந்தம், சூதம், அரிதாரம், மிருதாரசிங்கி, குக்கில், பச்சை, வசம்பு, உள்ளி வகைக்குக் கழஞ்சு (1) இவைகளைப்பொடித்துப் புங்கம்பால், உதியம்பால், நல்லெண்ணெய் வகைக்குப் படி (1) ஒன்றாகக்கலந்து அதிற்போட்டுப் பதமாகக் காய்ச்சிவடித்துப் பிளவை, புற்று, பவுந்திரம், வெடிசூலை, கன்னப்புண், முளை, ஆறாரணங்களிற்போடத் தீரும்.

தேங்காய்நெய், புங்கம்பால், உதியம்பால் இவைகளை ஒன்றாகக்கலந்து அதில் மிருதாரசிங்கி, கெந்தகம், நீலம், சூதம், சீனம், பரங்கிப்பட்டை, கடுக்காய், துத்தம், உள்ளி, வசம்பு வகைக்குக் கழஞ்சு (1) பொடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து ஆறாதபுண், அரைப்பிளவை, படுகிரந்தி, படருகிற பரங்கிப்புண், சூலைப்புண், எலிகடிப்புண், பவுந்திரப்பிளவை, எலிகடியினாலுண்டான சூலைப்புடைப்பு கட்டுக்குப் போடத் தீரும்.

நல்லெண்ணெய், தேங்காய்ப்பால், புங்கம்பால், உதியம்பால் வகைக்குப் படி (1) ஒன்றாகக்கலந்து அதில் சூதம், கெந்தி, துருசு, துத்தம், குக்கில், அவுரி, காசுக்கட்டி, சீனம், பச்சை, வெள்ளுள்ளி, வசம்பு, மஞ்சள் வகைக்குக் கழஞ்சு (1) பொடித்துப் போட்டுக் காய்ச்சிவடித்துப்போடப் புண் புரை பவுந்திரப்புண் தீரும்.

இரணங்களுக்குக் களிம்புகள்.

சாம்பிராணி, துருசு, துத்தம், கருங்குங்கிலியம், வேப்பம்வித்து வகைக்குக் கழஞ்சு (1) மஞ்சள்மெழுகு பலம் (1) இவைகளை அரைத்துத் தண்ணீர்விட்டுக் கழுவிச் சீலையில் ஊட்டிப்போட அனற்சிலந்தி, பரங்கிப்புண், கால்புற்று, சூலைப்புண், தீரும்.

Koviloor Digital Library

வெள்ளை கழஞ்சு (10) தாரம் கழஞ்சு (1) துருசு கழஞ்சு (1) நெய்விட்டரைத்துக் கழுவிப்போட்டுச் சீலையில் ஊட்டிப் புண்ணிற்போடச் சதைவளர்ச்சி, முளை, ஆறாதபுண், அரிகிரந்தி, திமிர்கிரந்தி, வெடிகிரந்தி தீரும்.

கெவுரி, மிருதாரசிங்கி வகைக்குக் கழஞ்சு (1) துருசு கழஞ்சு (2) இரசம் கழஞ்சு (1) பச்சை, குக்கில் வகைக்குப் பலம் (2) நல்லெண்ணெய்விட்டு அரைத்துக் கழுவிப்போட்டுச் சீலையில் ஊட்டிப்போடப் பிளவை பரங்கி தீரும்.

வெள்ளைக்குங்கிலியம் பலம் ½ மஞ்சள்மெழுகு பலம் ¼ தேங்காய்நெய் படி மாகாணி இவற்றுள் தேங்காய்நெய்யைக் கரண்டியில்விட்டு அதனுடன் மஞ்சள்மெழுகைப்போட்டு உருக்கிக்கொண்டு வெள்ளைக்குங்கிலியத்தைப் பொடித்துப்போட்டுக் கிண்டித் தண்ணீரில் ஊற்றி எடுத்து வங்கவெள்ளையாவது, வங்கசெந்தூரமாவது பலம் ¼ போட்டு மத்தித்துப் புண்ணிற்போட ஆறும்.

வீரம், பூரம், இரசம் வகைக்கு வராகனெடை 1 வெற்றிலை, ஊமத்தை, மேனி, இவைகளின்சாற்றால் அரைத்து அப்பால் வெண்ணெய் பலம் 2 கூட்டி அரைத்துச் சிலந்தி, அரையாப்பு பிளவைச்சிலந்தி, சூலைக்கட்டுகளில் தடவ உடைந்துவிடும்; முளை கரையும்.

நல்லெண்ணெய் படி மாகாணி, ஈயசெந்தூரம் ½ பலம் இவ்விரண்டையும் இருப்புக்கரண்டியில் கொதிக்கவைத்துக் கறுப்புநிறம் வரும் சமயத்தில் கருங்குங்கிலியம், மிருதாரசிங்கி, இரசகர்ப்பூரம், மஞ்சள்மெழுகு வகைக்குக் கழஞ்சு 1 பொடித்துப் போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு துணியிலூட்டி இரணங்களிற்போட ஆறும்.

இரசகர்ப்பூரம், இரசம் வகைக்குக் கழஞ்சு 1 வெண்ணெய் பலம் 1 அரைத்து இரணங்களிற்போட ஆறும்.

இரணங்களின்பேரில் போடும் காரச்சீலைகள்.

துருசு, அரிதாரம், கெந்தகம், வெள்ளை, லிங்கம், வெண்காரம் வகைக்குக் கழஞ்சு 1 வெள்ளெருக்கம்பூச் சாற்றாலும், ஊமத்தஞ்சாற்றாலுமரைத்துச் சீலையில் ஊட்டி உலர்த்திச் சூலை, வெடிசூலை, கிரந்தி, அழிகுஷ்டம், புற்று, பவுந்திர இரணங்களிற் போடத் தீரும்.

மஞ்சள், வசம்பு, எருக்கிலைப்பழுப்பு இவைகளைச் சுட்டுக்கருக்கி அதற்குநிகர் துருசு, துத்தம், கெவுரி, வெள்ளை, சங்கு இவைகளை முலைப்பாலும் கரிப்பான்சாறும் விட்டரைத்துத் துணியிற்றடவிப் போடப் புண், சூலை, இரணங்கள், தினவு, திமிர்ப்புண், கொடியசிரங்கும், கன்றிப்புடைக்கும் புடைபுண்களும் தீரும்.

சூதம், கெவுரி, வீரம், மிருதாரசிங்கி, இரசகர்ப்பூரம், கடுக்காய்ப்பூ, துருசு இவைகளை அண்டவெள்ளைக்கருவிட்டு அரைத்துத் துணியிற்றடவிப்போட ஆணி, கல்முளை தீரும்.

Koviloor Digital Library

இரணங்களிற்போடும் நீர்.

நீலம், கெவுரி, அரிதாரம், மஞ்சள், குங்கிலியம் இவைகளைக்கள்விட்டரைத்து அதிற்கலக்கிக் குப்பியில் வைத்துக்கொண்டுபோடப் புண்ணெரிவு, கிரந்திப்புண் தீரும்.

சூதம், சங்கு, தலையோடு, காவி, லிங்கம், துத்தம், கடுக்காய் இவைகளைக் கள்விட்டரைத்து அதிற்கலக்கிக் குப்பியிலடைத்துக்கொண்டு எரிகிற புண்ணிற்போடத் தீரும்.

இரணங்களுக்குத் திரி.

துருசு, துத்தம், வெண்காரம், சூதம், அரிதாரம், நீலம், கெந்தகம், பெருங்காயம், இவைகளை வேப்பெண்ணெய்விட்டு அரைத்துத் துணியில் ஊட்டித் திரித்துத் தீபத்திற பற்றவைத்து ஆற்றிப் புகைகாட்டப் புரை, புண், சதைவளர்ச்சி தீரும்.

சகலமேகங்களுக்கும் இரசகெந்தி மெழுகு.

சுத்திசெய்த இரசம், கெந்தி, இரசகாப்பூரம், ஊசிக்காந்தம், அரிதாரம், துருசு, துத்தம், மிருதாரசிங்கி, சுக்கு, ஓமம், மஞ்சள், திப்பிலி, அரத்தை, கோஷ்டம், வாலுளுவையரிசி, சோம்பு, ஏலம், சாதிக்காய், மிளகு, சீரகம், கார்கோலரிசி, மாசக்காய், தேசாவரம், வாய்விளங்கம், வசம்பு, லவங்கம், பரங்கிப்பட்டை, சேங்கொட்டை, கடுக்காய், கருஞ்சீரகம், கட்டுச்சீரகம், சிறுதேக்கு, தாளிசபத்திரி, முந்திரிப்பழம், பிரப்பங்கிழங்கு, எட்டிவித்து, தேற்றாவித்து, ஈருள்ளி, எள்ளு, காணம், தேங்காய், சிறுசின்னிவேர், சங்கம்வேர், அமுக்கிரா, கொல்லங்கோவைக்கிழங்கு, கொடுவேலிவேர், வகைக்கு வராகனெடை 1 இவைகளையிடித்து வடிகட்டி மருந்துகண்ட எடைக்குப் பனைவெல்லங்கூட்டி இரண்டு கோழிமுட்டைவிட்டு மெழுகுபோல் நாலுசாமமிடித்து வைத்துக்கொண்டு மோரும் அன்னமும் சாப்பிட்டவுடன் ஒரு சுண்டைக்காய் பிரமாணம் ஒருமண்டலம் கொள்ள மேகசூலை, வெடிசூலை, இடிசூலை, புடைக்குஞ்சூலை, துடிசூலை, வாதசூலை, கால்குத்து, கால்குடைச்சல், குதிப்புற்று, கரணை, விப்புருதி, கண்டமாலை, குஷ்டம், விஷநீர், குறைநோய், சிரங்கு, புழுவெட்டு, தடிப்பு, இலிங்கத்தில் உண்டாகும் ஆமையடிச்சிலந்தி, அவைகளிலுண்டாகும் புற்று, செங்கிரந்தி, கருங்கிரந்தி, சொறிசிரந்தி, அரிகிரந்தி, பருகிரந்தி, பொரிகிரந்தி, இடிகிரந்தி, இடிவிழுந்தபுண்புரைகள், கடிதடத்தில் புண், துடைவாழை, முட்டுவாழை, முதுகுவாழை, குழிவாழை, புழுவாழை, விலாவாழை, தமரகச்சிலந்தி, இடிப்புற்று, கன்னப்புற்று, பற்சிலந்தி, கன்னஓசை, கண்ஓசை, பிளவை, பிளவைப்பூச்சி, இராஜபிளவை, நேத்திரமேற்பிளவை, கொடிய்டிச்சிலந்தி, புடைசிலந்தி, பவுந்திரச்சிலந்தி, முளைமூலம், பதகிரி, சக்கரம்எட்டு, தடிப்பு, சொறி, தேமல், சொறிகரப்பன் முதலிய மேகத்தினாலுண்டாகும் சகல வியாதிகளுந் தீரும்; பத்தியமில்லை; தைலத்தன்று மருந்தை நிறுத்தவும்.

Koviloor Digital Library

வேறு இரசகெந்திமெழுகு.

கெந்தகத்தை ஒரு சட்டியிற் பொடித்துப்போட்டு ஆவின்நெய் மிதக்கவிட்டுத் தீபம்போல் தீயெரித்துக் கெந்தகம் உருகினவுடன் ஆவின்பாலிற் சாய்க்கவும். இந்தப்படி பத்துமுறை சாய்க்கக் கெந்தகம் சுத்தியாகும்; இரசத்தை வெற்றிலைச்சாறு, செங்கல்தூள், மஞ்சள்தூள் இவைகளுடன் கலந்து கல்வத்தில் இரண்டுசாமம் அரைத்துத் தண்ணீராற்கழுவி வெயிலில் வைக்க அந்த இரசம் சுத்தியாகும்; முப்பது சேங்கொட்டையைச் சாணிப்பாலிலும், சுண்ணாம்புகரைத்ததண்ணீரிலும், கொதிக்க வைத்துக் கழுவிக்காயப்போட அந்தக்கொட்டைகள் சுத்தியாகும்; அவைகளை அரைக்காற்படி ஆவின்நெய்யிற்போட்டுக் கொதியிட அவைகள் வெடிக்கும்; வெடிப்பு அடங்கினபின் உடனே நெய்யை வடித்துக்கொள்ளவும்.

இப்படிச் சுத்தியான கெந்தகம் பலம் இரண்டுக்கு இரசம் பலம் ஒன்று மேற்படி தைலம்விட்டு அரைக்கவும்; மெழுகுபதமானவுடன் ஒருபலப் பனைவெல்லத்தைக் கூடப்போட்டு அரைத்துக்கொண்டு ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணம் சீனியுடன் கொள்ளவும்; அரைமண்டலத்தில் மேகச்சொறி, பற்று, தடிப்பு, அரிகிரந்தி, சொறிகிரந்தி, கள்ளிப்பூக்கிரந்தி, அரிகரப்பன், சொறிகரப்பன், புண், புரைகள், நீங்கும்; புளிதள்ளவும்; ஆவின்நெய், பால், தயிர், மோர், துவரைப்பருப்பு, பாசிப்பருப்பு, கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு கூட்டிக்கொள்ளவும்.

அண்டத்தைலத்தில் வீரமெழுகு.

சுத்திசெய்த வீரம், கெந்தகம், சூடன், உவருப்பு, பூநீருப்பு வகைக்குப் பலம் ¼ கோழிமுட்டைத் தைலம்விட்டு நாலுசாமம் அரைத்து மெழுகுபதத்தில் சிமிழில் அடைத்துக்கொண்டு ஒருபணவெடை தேனிற்கொடுக்கத் தமரகவாயு, நெஞ்சடைப்பு, சூதகவாயு, மூர்ச்சைவாயு, பிடரிஇசிவு, வலிப்புகள் தீரும்; மூன்றுநாட் கொடுக்கவும்; புளிதள்ளவும்.

காமகேசரி லேகியம்.

இருபது வெள்ளாட்டுக்காலை வெந்நீரில் நனைத்து ரோமத்தைநீக்கி நொறுக்கிப்பத்துப்படி ஜலத்திற்போட்டு ஒருபடியாக வற்றவைத்து வடித்துக்கொள்ளவும்; தேங்காய்ப்பால், வெள்ளாட்டுப்பால், பசுவின்பால், கதலிவாழைப்பழச்சாறு, கசகசாப்பால், பருத்திவித்துப்பால், வாதாம்பருப்புப்பால், முருங்கைப்பூச்சாறு வகைக்குப் படி 2 தாழைவிழுது, நெல்லிக்காய், வல்லாரை, புளியாரை, பொற்றலைக்கரிப்பான், ஆலவிழுது, கீழ்க்காய்நெல்லிச்சாறு வகைக்குப்படி ¼ செவ்விளநீர் படி 1 ஒன்றாகக்கலந்து அதில் நாற்பதுபலச் சீனியைக்கலந்து பாகுசெய்து கொள்ளவும்; அதிவிடையம், மாசக்காய், கடுக்காய், சாதிக்காய், கிராம்பு, கோஷ்டம், அதிமதுரம், ஏலம், தாளிசபத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, குரோசானிஓமம், மல்லி, வால்மிளகு, திரிகடுகு, ஓமம், முந்திரிப்பழம், பேரீத்தம்பழம், சாரப்பருப்பு, முந்திரிப்பருப்பு, வாதாம்பருப்பு, ஜாலாமிசிரி, பேதானா வகைக்குப் பலம் ஒன்று வாலுளுவைவித்து, நெரிஞ்சிவித்து, மாதுளைவித்து, முருங்கைவித்து, தூரிவித்து,

Koviloor Digital Library

அ.,சம்வித்து, ஆலம்வித்து, ஆவிரைவித்து, ஆ.,விரைப்பஞ்சாங்கம், பூனைக்காலிவித்து, நீர்முள்ளிவித்து, பாற்குரண்டிவித்து, ஸப்ஜாவித்து, தேற்றாவித்து, கருவேலம்பிசின், ஆவிரைப்பிசின், அத்திப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு வகைக்குப் பலம் ½ இவைகளை உலர்த்திச் சூரணம் செய்துகொண்டு இந்தச் சூரணங்கள் கண்ட எடைக்கு முருங்கைப்பூச் சூரணஞ்செய்து ஒன்றாகக்கலந்து பாகிற்றூவி நெய்படி 2 தேன் படி 1 விட்டு மெழுகுபதத்திலெடுத்துக் கொள்ளவும்; வேளையொன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிட்டுவர மேகம் 21, எலும்புருக்கி, வெள்ளை, வெட்டை, உந்திப்புண், மூலக்கொதிப்பு நீங்கும்; விந்து கேணிபோல் ஊறும்; தேகம் வலுக்கும், ஒருமண்டலங் கொள்ளவும்.

நத்தைச்சூரி சமூலச்சூரணம் பலம் நாலு, ரோசாப்பூச்சூரணம் முருங்கைப்பூச்சூரணம் வகைக்குப் பலம் ½ முருங்கைவித்து, நீர்முள்ளிவித்து, ஆலம்வித்து, அரசம் வித்து, கல்லத்திவித்து, வாதாம்பருப்பு, முந்திரிப்பருப்பு, வகைக்குப் பலம் ¼ ஆலவிழுதுத் தூள் பலம் 1 பேரீத்தம்பழம் பலம் 2, சுக்கு, சீரகம், கசகசா வகைக்கு வராகனெடை 3 அதிமதுரம், மிளகு வகைக்கு வராகனெடை 2 மல்லி வராகனெடை 10 நெல்லிமுள்ளி வராகனெடை 5 அரத்தை, திப்பிலி வகைக்கு வராகனெடை 1, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு வகைக்கு வராகனெடை 2 இவைகளை வெதுப்பிச் சூரணஞ்செய்து கொள்ளவும்; ஒரு படி ஆவின்பாலில் பதினைந்துபலக் கற்கண்டைப் பாகுசெய்து அதில் மேற்படி சூரணங்களைத் தூவி நெய் படி ¼, தேன் படி அரைக்கால் விட்டு லேகியஞ்செய்து வேளையொன்றிற்கு ஒரு நெல்லிக்காய்ப்பிரமாணஞ் சாப்பிட்டுவர மேகம், வெட்டை தீரும்; விந்து கேணிபோல் ஊறும்.

பரங்கிப்பட்டை, நிலப்பனைகிழங்கு, பூமிசர்க்கரைக்கிழங்கு, கோரங்கிழங்கு, அசுவகெந்திக்கிழங்கு, நன்னாரிவேர், அறுகங்கிழங்கு, முப்பிரண்டை, தூதுளைவேர், கண்டங்கத்தரிவேர் இவைகளின் தூள் வகைக்குப் பலம் 1, சாரப்பருப்பு, முந்திரிப்பருப்பு, வாதாம்பருப்பு, பருத்திப்பருப்பு, ஆலம்வித்து, அரசம்வித்து, கல்லத்திவித்து, பூனைக்காலிவித்து, பாற்குரண்டிவித்து, ஸப்ஜாவித்து, நாயுருவிவித்து, நீர்முள்ளிவித்து, தேற்றாவித்து, முருங்கைவித்து, நத்தைச்சூரிவித்து, பேதானா, ஜாலாமிசரி, ஸ்கோல்வித்து, தாமரைவித்து, தண்ணீர்விட்டான், நெரிஞ்சிவித்து, ஆவிரைவித்து, இலவம்பிசின், முந்திரிப்பழம், பேரீத்தம்பழம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, குரோசானிஓமம், ஓமம், சிறுநாகப்பூ, காட்டாத்திப்பூ, சண்பகப்பூ, ரோஜாமொட்டு, அதிமதுரம், நற்சீரகம், பெருஞ்சீரகம், கருவாய்ப்பட்டை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிபத்திரி, ஏலம், கிராம்பு, வால்மிளகு, மாசக்காய், சிற்றரத்தை, ஆனைத்திப்பிலி, மல்லி, இவைகள் வகைக்குப் பால் ½ ஆவின் பால், வெள்ளாட்டுப்பால், தேங்காய்ப்பால், பருத்திவிதைப்பால், இளநீர், கசகசாப்பால் வகைக்குப் படி ½ ஒன்றாகக்கலந்து சீனி பலம் 10 கற்கண்டு பலம் 10 கூடச்சேர்த்துப் பாகுசெய்து மேற்படி சூரணங்களைத் தூவி, ஆவின்நெய் படி ½ தேன் படி ¼ கூடவிட்டு லேகியஞ்செய்து கொள்ளவும்;

Koviloor Digital Library

வேளையொன்றிற்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிட்டுவர மேகம் 21 பிரமியநீர் 21 தீரும்; விந்தூறும், தாதுகட்டும், மூலச்சூடுதணியும், ஒருமண்டலங் கொள்ளவும்.

மேகநீரிழிவு இருபத்தொன்றுக்கும் லேகியம்.

பசுவின்பால், தேங்காய்ப்பால், வெள்ளாட்டுப்பால், வாதாம்பருப்புப்பால், பருத்திவிதைப்பால் வகைக்குப் படி 1 நல்லெண்ணெய் படி 1 இவைகளை ஒன்றாகக்கலந்து கொதிக்கவைத்துக் கொதிகிளம்பும்போது திரிபலை, திரிகடுகு இவைகளின் தூள், ஆவிரை, செங்கிளுவை, சரக்கொன்றை, மஞ்சணத்தி, நெல்லி, இவைகளின் வேர்ப்பட்டைத்தூள் வகைக்குப் பலம் 1 போட்டுக்கிண்டி மெழுகுபதமாகும் சமயத்தில் கோரோசனை பலம் 2 சுத்திசெய்த பூநீர் கழஞ்சு 5 பொடித்துத் தூவிக்கிண்டி லேகியத்தில் ஒரு சுண்டைக்காய்ப்பிரமாணம் ஒரு மண்டலம் கொள்ள மேகநீரிழிவு 21 நீர்ப்பேதம், நீரிலுள்ள தித்திப்பு, நாவறட்சி, தாகம், நீர்ப்பிளவை, நீர்ச்சிலந்தி தீரும்.

நீரிழிவுக்கு சஞ்சீவிக்குளிகை.

ஆவிரைவேர்ப்பட்டை, விடத்தைக்கொழுந்து, விளாங்கொழுந்து, கட்டுக்கொடியிலை வகைக்கு ஒருபிடி இவைகளை எருமைமோரிலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்துகொண்டு அந்த மோரில் அரைமண்டலங்கொள்ள மேற்படி வியாதி தீரும்.

வாதராக்ஷதன் மாத்திரை.

காந்தம், இலிங்கம், இரசம், கெந்தகம், வெங்காரம் வகைக்கு வராகனெடை 1 இவைகளை நொச்சியிலைச்சாற்றால் நாலுசாமமாட்டிக் குன்றிமணிபோலுண்டைசெய்து அனுபானத்திலிட வாதம், வாயு, சுரம், நெஞ்சடைப்பு, மார்படைப்புத் தீரும்.

அஷ்டவயிரவன் மாத்திரை.

இலிங்கம், அரிதாரம், சுக்கு, கோஷ்டம், அக்கிராகாரம், நாவிக்கிழங்கு, கருஞ்சீரகம், மயில்துத்தம், இரசகர்ப்பூரம், அப்பிரகம், சங்கு, முத்து, பவளம், ருத்திராக்ஷம், கலைமான்கொம்பு, வகைக்கு வராகனெடை 1 இவைகளை இஞ்சிச்சாற்றால் நாலுசாமம் ஆட்டிக் குன்றிபோலுண்டைசெய்து மேற்படி சாற்றிலிடச் சுரம், சன்னிதோஷம் நீங்கும்.

வாலைசிந்தாமணி மாத்திரை.

நாவி, இரசம், கெந்தகம், வெண்காரம், இலிங்கம், திரிகடுகு, சாதிக்காய், சாதிபத்திரி வகைக்கு வராகனெடை 1 இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் இரண்டுசாமமாட்டிக் குன்றிபோலுண்டைசெய்து இஞ்சிச்சாற்றிலாவது, முலைப்பாலிலாவது, சுக்குநீரிலாவது கொடுக்கச் சன்னி தோஷம், சுரம் தீரும்.

Koviloor Digital Library

ஸ்ரீபஞ்சகாவிய மாத்திரை.

இரசம், கெந்தி, வெண்காரம், இலிங்கம், கருநாவி, கருஞ்சீரகம், திரிகடுகு, வகைக்கு வராகனெடை 1 நிம்பச்சாற்றால் முச்சாமமரைத்துப் பாசிப்பயறுஅளவு மாத்திரைசெய்து இஞ்சிச்சாற்றிலிடச் சுரம் 94 ம் தீரும்; முலைப்பாலிற்கொடுக்கச் சன்னிதோஷம் தீரும்.

பூபதிமாத்திரை.

பவளம், முத்து, வெங்காரம், இலிங்கம், தங்கம், வெள்ளி, செம்பு, இரத்தினம், அப்பிரகம், இரசம், கெந்தி, நாவி, கருஞ்சீரகம், கலங்கொம்பு, உருத்திராக்ஷம் வகைக்கு வராகனெடை 1 இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றால் நாலுசாமமாட்டிச் சிறுபயறு போலுண்டைசெய்து அனுபானத்திலிடத் தொண்டைக்கட்டு, கபம் தீரும்; சன்னி தோஷம் நீங்கும்.

சிந்தாமணிமாத்திரை.

வெள்ளி, முத்து, பவளம், செம்பு, நாவி, இலிங்கம், சங்கு, தங்கம், உருத்திராக்ஷம், சிவந்தரத்தினம், துத்தம், தாரம், இவைகளை நிம்பச்சாற்றால் நாலுசாமம் அரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து அனுபானத்திலிடச் சன்னி தோஷம் தீரும்.

இராமபாணக்குளிகை.

பொரிகாரம், திப்பிலி, சுக்கு வகைக்கு வராகனெடை 6 மிளகு வராகனெடை 2 கடுகுரோகணி வராகனெடை 3 கெந்தகம், அரிதாரம், மனோசிலை, இரசம், ஜாதிலிங்கம் வகைக்கு வராகனெடை 1 சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு வராகனெடை 3 இவைகளைத் தகரச்சாற்றாலாட்டிக் குன்றிபோலுண்டை செய்து சுக்குக் கஷாயத்திலிடச் சுரம், குளிர், முறைச்சுரம், குளிர்சுரம் தீரும்.

இராஜசேகர வடிதமாத்திரை.

கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், கஸ்தூரி, புனுகு, குங்குமப்பூ, நற்பவளம், முத்து, அக்கிராகாரம், சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, திரிபலை, திப்பிலிமூலம், செவியம், நற்சீரகம், அகில், ஏலம், சந்தனம், நாகப்பூ, வெட்டிவேர், விலாமிச்சவேர், வெள்ளிலோத்திரம், தான்றிக்காய், கோஷ்டம், சடாமஞ்சி, நெல்லிவற்றல், குரோசானி, இலவங்கப்பத்திரி, சண்பகப்பூ, இந்துப்பு, அதிமதுரம், தேவதாரம், கலங்கொம்பு, கரியசீரகம், நற்சீரகம், மஞ்சிட்டி, வெண்காரம், சீனக்காரம், அதிவிடையம், சாஸ்திரபேதி, சத்திசாரம், நவச்சாரம் இவைகளைச் சமனெடையாக நிறுத்துக் கருப்பஞ்சாறு, மாதுளம்பழச்சாறுகளால் வகைக்கு ஒருநாளாட்டிக் கடலைபோலுருட்டி இஞ்சிச் சாற்றிலிடப் பிரமை, சன்னி, ஈரலெரிவு, குன்மம், அரோசகம், கௌசி, கபம், நீர்ச்சிறுப்புத் தீரும்; சுக்குக்கஷாயத்திலிடச் சுரம், சோபம், சூலை, சிரசுநீர், பீனசம், ஈளை, பித்தக்குதுகுதுப்புத் தீரும்; முலைப்பால் தேன் இவ்விரண்டிலிடச் சுரம், வாய்நீர், சுழற்றல், தந்தவியாதி தீரும்; அவித்த

Koviloor Digital Library

இளநீரில் சீனிகலந்து அதிற் கொடுக்கச் சுரம், இரத்தபித்தம், சயம், வாந்தி, நாவறட்சி தீரும்; சுரையிலையைப்பிட்டவித்த சாற்றிலிடச் சுரத்தினாற்கண்ட வீக்கம் தீரும்; ஆவிரைவேர்க்கஷாயத்திலிட நீரிழிவு தீரும்.

வசந்தகுஸுமாகரக்குளிகை.

இலவங்கம், கோஷ்டம், திப்பிலி, அக்கிராகாரம், அதிமதுரம், பொரித்த வெண்காரம், இலிங்கம், இரசசிந்தூரம் வகைக்கு வராகனெடை 1 நிறுத்தெடுத்துக்கொண்டு முதலில் இலிங்கத்தையும் இரசசிந்தூரத்தையும் முலைப்பாலிற் சற்று அரைத்துப் பிறகு மற்ற மருந்துகளைப் போட்டு இஞ்சிச்சாறு விட்டு இரண்டுசாமம் அரைத்துக் கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம் வகைக்கு வராகனெடை ½ கூடப்போட்டு நிம்பப்பழச்சாற்றாலாட்டிச் சிறுபயறளவு குளிகைசெய்து நிழலிலுலர்த்தி வைக்கவும்; மேற்படி குளிகை இரண்டை இலவங்கம், திப்பலியைப் பொடித்துத் தேன் கூட்டி அதில் வைத்து ஏழுநாளிருபொழுதும் உண்ணச் சீதளம், வாயு, சுரம் நீங்கும்; முலைப்பால் தேன் துளசிச்சாறு சமன் கூட்டி மாத்திரையை வைத்துண்ண விடாச்சுரம் போகும்; பத்தியம் புளிதள்ளவும்.

பலரோக நிவாரணம் முற்நீற்று.

செய்முறை வகை.

முப்பூ முறை.

மாசி பங்குனி சித்திரையில் விளைகின்ற காரமான பூநீற்றைச் சுத்தகெங்கை என்ற பனிஜலத்திற் கரைத்துவைத்து மூன்றாநாள் தெளிவு எடுத்து ரவியில் காயவைக்கவும்; நன்றாகக்காய்ந்த பின்பு இந்தப்படி பத்துமுறை தெளிவெடுத்துக் காயவைத்துக் கொள்ளவும்; பளிங்காயிருக்கிற கல்லுப்பையும் இந்தப்படி பத்துமுறை தெளிவெடுத்துக் காயவைத்துக்கொள்ளவும்; கற்சுண்ணாம்பையும், பூநீற்றையும் அமுரியிற்கரைத்து அதிற் கபாலஓட்டைச் சில்லுச்சில்லாக நொறுக்கிப்போட்டு நீர்சுண்டவற்றவைக்கவும்; இந்தப்படி மூன்றுதடவை செய்யக் கபாலஓடு சுத்தியாகும்; அந்த ஓட்டைப்பொடியாக இடித்துக் கல்வத்திலிட்டு அண்டவெள்ளைக் கருவால் மெழுகு போலாட்டி ரூபாய்போல் வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சந்துவாய்க்கு ஏழுசீலைமண்செய்து உலையில் வைத்து ஊதக் கடுங்காரச் சுண்ணமாகும்; அந்தச் சுண்ணத்தைப் பீங்கானிற்போட்டு நிறையச் சுத்த ஜலம் விட்டு மூடிவைத்திருக்க ஒரு மண்டலத்தில் உப்புமேல்படரும்; இந்த மூன்றுஉப்பும் வகைக்குப் பலம் 1, சூடன் பலம் 1, அண்டவெள்ளைக் கருவால் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலைமண்செய்து காயவைத்து முழப்புடம்போட்டு வில்லையையெடுத்து அதனுடன் வீரம், புனுகு, பச்சைக்கர்ப்பூரம், குருவண்டு, நாவி, வெள்ளுரம் வகைக்குக் கழஞ்சு 1 கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றால் இரண்டுநாள் ஆட்டி வில்லைதட்டிக்காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடிச் சந்துவாய்க்கு

Koviloor Digital Library

ஏழுசீலைமண்செய்து காயவைத்துச் சேவற் புடம்போட நீறும்; இதுவே வைத்திய முப்பூவாம்.

உருக்கினவகை.

முப்பூவில் காரங்கூட்டி அவ்விரண்டுங்கண்ட எடைக்கு காந்தங்கூட்டி முலைப்பாலால் அரைத்துக்காயவைத்துக் குகையில் வைத்து மூடிச் சந்துவாய்க்குச் சீலைமண்செய்து குகை அழுக உலையில் வைத்து ஊத உருகி மணியாயிருக்கும். இதுபோலவே அயம், அப்பிரகம், கெருடப்பச்சை, கல்நார், சாஸ்திரபேதி, நாகம், அண்டம், சங்கு, சலாசத்து, நவரத்தினம், மனிதர்எலும்பு, கலைமான்கொம்பு, ஆமை ஓடு இவைகளைத் தனித்தனி உருக்கச் சத்தாம்.

இவ்வாறு உருக்கின சத்து மணி ஒவ்வொன்றுக்கும் எடைக்கெடை கெந்தி கூட்டிப்பொடித்துப் பத்துக்கழஞ்சுக்கு ஒருகழஞ்சு முப்பூக் கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றால் நாலுசாமம் அரைத்து வெயிலிற் போடவும்; இந்தப்படி மூன்றுநாள் ஆட்டி வில்லைசெய்து காயவைத்து அந்தவில்லையை ஓட்டில்வைத்து மேலோடுமூடிச் சந்து வாய்க்கு ஏழுசீலைசெய்து இரண்டுமுழப்புடம்போடச் சிந்தூரமாகும்.

இரும்பைத் தேனிற்கொள்ளப் பாண்டுவகைகளும், காந்தத்தைத் தேனிற்கொள்ள மேக வகைகளும், அப்பிரகத்தை அமுதசஞ்சீவியிற்கொள்ள மேகநீரிழிவும், கெருடப்பச்சையைத் தேனிற்கொள்ளக் கண்வியாதிகளும், கல்நாரைச் சருக்கரையிற்கொள்ளப் பல்லிலுள்ள வியாதிகளும் சிலேத்மரோகங்களும், சாத்திரபேதியைப் பாலிற்கொள்ள உஷ்ணங்களும், நாகத்தை இஞ்சிச்சாற்றிற்கொள்ள வாதசுரம் சன்னியும், அண்டத்தைத் தூதுளைச்சாற்றிற்கொள்ளக் காசம், ஈளையும், சங்கைப் பனைவெல்லத்தில் வைத்துச்சாப்பிட வாயுவகைகளும் பித்தங்களும், சலாசத்தைக் கடுக்காயிற்கொள்ள மகோதரம், நீராமை, பெருவயிறு, நீராம்பலும், கலைமான் கொம்பைத் தேனிற்கொள்ளச் சுரமும், பாலிற்கொள்ள அஸ்திச்சூடும்; மாணிக்கத்தைச் சருக்கரையிற்கொள்ளப் பெரும்பாடு எலும்புருக்கியும், பச்சையைக் கற்கண்டிற்கொள்ள அஸ்திசுரம் வெட்டையும், வயிரத்தைச் சீனியிற்கொள்ளச் சகல கழிச்சலும், வைடூரியத்தைப் பாலிற்கொள்ள உள்வறட்சி கண்ரோகங்களும், கோமேதகத்தை நெய்யிற்கொள்ள ஈளை க்ஷயரோகமும், அப்பிரகத்தைத் தேனிற்கொள்ளக் கண்கம்மல் நீரிழிவும், நீலத்தைத் திரிகடுகிற் கொள்ளச் சகல குஷ்டமும், முத்தைத் தாதுபுஷ்டி லேகியத்திற்கொள்ள வீரியநஷ்டமும், பவளத்தை முலைப்பாலிற்கொள்ளத் தேகபலக்குறைவும், ஆமையோட்டை முலைப்பாலிற்கொள்ளக் கெந்தகதாளி உட்சூடும் நீங்கும்.

மேலே சொல்லிய சிந்தூரங்களை எல்லாம் வகைக்குக் கழஞ்சு கால்வீதம் தூக்கிக் கல்வத்திட்டு முலைப்பாலால் ஒருஜாமம் ஆட்டிக் குன்றிப்பிரமாணமாக மாத்திரைகள் செய்து கொண்டு ஒருமாத்திரையை இஞ்சிச்சாற்றிலிடச் சன்னிசுரம் வாதம் 80 ம், க்ஷயம் 90 ம், பித்தம் 40 ம் நீங்கும்; தேகபலமுண்டாம்.

Koviloor Digital Library

அயச்சத்து காந்தச்சத்து முறைகள்.

பூநீறு பலம் 1 சாரம் பலம் 1 அமுரியுப்பு பலம் ¼ இவைகளை ஒருஜாமம் அரைத்துப் பனியில்வைக்கச் செயநீராகும்; காரம், நவச்சாரம், தாரம், வீரம், சூடன், வகைக்குப் பலம் 1 மேற்படி செயநீரால் ஒருஜாமம் அரைக்க மெழுகாகும்; அதை மூன்றுபங்கு செய்துகொள்ளவும்; அரபொடியை எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள் ஊறப்போட்டுக்கழுவிப் பலம் 5 தூக்கி ஒருபங்கு மருந்துடன் பிசறிக் குகையில் வைத்து மேல்மூடிச் சீலைசெய்து குகை உருக ஊத மணியாகும்; அந்த மணியுடன் மற்றொருபங்கு மருந்தை விரவி ஊதவும் மணியாகும்; அந்த மணியுடன் இன்னும் ஒருபங்கு மருந்தை விரவி ஊதக் கண்விட்டு உருகும்; இந்த மணியைக் கல்வத்திட்டு அதற்குச் சமன் சவ்வீரமும், அவைகட்குப்பாதி இரதமும் சாரமும், கால் பங்கு சூடனும், ஒருபங்கு வெள்ளூரமும் சேர்த்து மேற்படி செயநீரால் மெழுகுபோலாட்டி வில்லைசெய்து காயவைத்துச் சுண்ணாம்புச்சீலை ஏழுசெய்து சுண்ணாம்புக்குள்வைத்துக் கெஜபுடம்போட வெளுத்து நீறும்; இந்தப்படி காந்தத்தைச் செய்ய நீறும்.

இவ்விருவகை நீற்றில் அயநீற்றைப் பணவெடைவீதம் அனுபானத்திற்கொள்ளச் சகல பாண்டு வகைகளும், காமாலை, சோகை, பித்தம், க்ஷயமும், சகலமேகவகைகளும் தீரும்; காந்தநீற்றைப் பணவெடைவீதம் அனுபானத்திற்கொள்ளச் சகல மேகமுதலிய மேற்படி வியாதிகள் தீரும்.

லோகத்தில் பஞ்சபூத விவரம்.

தங்கம் பிருதிவி; காரீயம் அப்பு; செம்பு தேயு; இரும்பு வாயு; நாகம் ஆகாயமாம்.

இவற்றில் தங்கத்தகட்டுக்குக் கற்காவியை எலுமிச்சம்பழச்சாற்றால் ஆட்டிப் பூசிப்பூசி ஏழுதடவை உமிஒட்டில் வாட்டிஎடுக்கச் சுத்தியாம்; காரீயத்தைக் கற்றாழைச் சாற்றில் ஏழுதடவை உருக்கிச்சாய்க்கச் சுத்தியாம்; செம்பைத் தகடடித்துக் குன்றிமணி, வெடியுப்பு, படிக்காரம் இம்மூன்றையும் தகட்டுக்குச் சமன்தூக்கிக் கழுதை லத்திச்சாற்றில் அரைத்துத் தகட்டுக்குப்பூசி உலையில் காய்ச்சிக் கழுதைநீரில் துவைக்கவும்; இந்தப்படி ஏழுதடவை துவைக்கச் சுத்தியாம்; இரும்புப்பொடியை எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாள் நனையவைத்துக் கழுவச் சுத்தியாம்; நாகத்தை இலுப்பைநெய்யில் பத்துதடவை உருக்கிச் சாய்க்கச் சுத்தியாம்.

இந்தப்படி சுத்தியான பஞ்சலோகத்துக்குச் சமன்வெள்ளிசேர்த்து வெங்காரங்கூட்டி உருக்கிக் கல்வத்திட்டு அவைகள் கண்டஎடைக்கு இரசம், கெந்தகம் சேர்த்துப் பொற்றலைக்கரிப்பான் சாற்றாலாட்டிப் பத்துப்புடம்போடச் சிந்தூரமாம்; அமிர்தசஞ்சீவி லேகியத்திற் பணவெடைவீதம் சாப்பிட்டுவரத் தேகம் பலக்கும்; தாதுவிர்த்தியுண்டாம்; மேகரோகங்களும், கபரோகங்களும், குஷ்டரோகங்களும் தீரும்.

Koviloor Digital Library

பாஷாணத்தில் பஞ்சபூத விவரம்.

தாளகம், பிருதிவி; வீரம் அப்பு; இலிங்கம் தேயு; வெள்ளைப்பாஷாணம் வாயு; கெந்தி ஆகாயம்.

காரசாரத்தில் பஞ்சபூதம்.

கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, பிருதிவி; நவச்சாரம், சத்திசாரம் எவச்சாரம், அப்பு; சவட்டுப்பு, வெடியுப்பு, தேயு; வெண்காரம், துருசு, வாயு; பூரம், வழலை, ஆகாயம்.

உபரசத்தில் பஞ்சபூதம்.

சிலாசத்து, அப்பிரகம், அயம், காந்தம், பூநாகம், இராசவர்த்தம், பிருதிவி; சங்கு, கோழிமுட்டை, நாகரவண்டு, நண்டு, கிளிஞ்சில், அப்பு; எலும்பு, இந்திரகோபம், மயிலிறகு, நிமிளை, வெண்காரம், தேயு; சாஸ்திரபேதி, கல்நார், கல்மதம், அன்னபேதி, ரோமம், வாயு; வைகிராந்தம், மலைருது, சுக்கான், மிருதிபாஷாணம் ஆகாயம்.

வைப்புப்பாஷாணத்தில் பஞ்சபூதம்.

தொட்டிப்பாஷாணம், சிங்கிபாஷாணம், கார்முகில், பவளப்புற்று, தீமுறுகல், பிருதிவி; கௌரி, சங்குபாஷாணம், குதிரைப்பல்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், சேவற்பூ, கெந்திப்பாஷாணம், அப்பு; அரிதாரம், அரிதாரபாஷாணம், தாளகபாஷாணம், வீரம், கெந்திபாஷாணம், மானாசிலைபாஷாணம், தேயு; புத்தொட்டி, பஞ்சபட்சி, சரங்கண்டபாஷாணம், இரத்தபாஷாணம், இலிங்கபாஷாணம், வாயு; சூதபாஷாணம், ஆகாயம்.

சத்துரு மித்துரு விவரம்.

துருசுக்குச்சத்துரு:- வெடியுப்பு, சீனம், சூடன், அப்பிரகம், கல்லுப்பு, நாகம், இந்துப்பு, வங்கம், லிங்கம், சவட்டுப்பு, தொட்டிப்பாஷாணம், அஞ்சனபாஷாணம், வெள்ளைப்பாஷாணம், மிருதாரசிங்கி, சவுக்காரம், காந்தம், இந்தச்சரக்குகளால் துருசைக்கட்டிக் கொள்ளலாம்.

துருசுக்குமித்துரு:- சாரம், வீரம், தாரம், வெங்காரம், கெந்தி, சூதம், பூரம், மனோசிலை, லிங்கம், கௌரி, இவைகளால் துருசைச் சுண்ணம்பண்ணிக்கொள்ளலாம்.

சாரத்துக்குச்சத்துரு:- கல்லுப்பு, வளையலுப்பு, இந்துப்பு, வங்கம், காரீயம், சுக்கான், சுண்ணாம்பு, அப்பிரகம், அண்டவோடு, இரும்பு, காந்தம், சிலை, கடல்நுரை, சவட்டுப்பு, கிளிஞ்சில் இவைகளால் சாரத்தைக்கட்டிக்கொள்ளலாம்.

சாரத்துக்குமித்துரு:- தாளகம், சிலை, கெந்தி, காரம், வெடியுப்பு, வீரம், லிங்கம், காரீயம், கல்நார், கௌரி, நாகம், நிமிளை, இவை சாரத்துக்கு

Koviloor Digital Library

மித்துருவாம்; சாரத்தைச் சத்துருவாற்கட்டி மித்திரச்சரக்குகளை அமுதத்தாலாட்டி அதற்கு அங்கிபூட்டிச் சீலைசெய்து புடம்போடச் சுண்ணமாகும்.

தங்கச்சத்துரு:– நிமிளை, நாகம், வெடியுப்பு, கௌரி, வெள்ளை, சவட்டுப்பு, தாளகம், வங்கம், சிங்கி, அப்பிரகம், சிலை, அண்டவோடு, குதிரைப்பால், சூதம், கெந்தி, கோமுகம், காந்தம், பொன்னம்பர், சவ்வீரம் முதலியவைகளாம்.

தங்கமித்துரு:– தங்கமானது நவலோகங்களுக்கும் உயிராயிருப்பதாம்.

கருவங்கச்சத்துரு:– அயம், காந்தம், நிமிளை, கிளிஞ்சில், அண்டவோடு, நண்டுஓடு, நத்தைஓடு, ஆமைஓடு, கௌரி, கெந்தகம், அப்பிரகம், வெடியுப்பு, கல்லுப்பு, கல்நார், சாத்திரபேதி முதலியவைகளாம்.

கருவங்கமித்துரு:– பூநாகம், மயூரச்செம்பு, நாகம், செம்பு, வெள்ளி, வெள்வங்கம், சூதமாம்.

அயசத்துரு:– அப்பிரகம், வெங்காரம், அண்டவோடு, வெண்கலம், நிமிளை, வங்கம், கிளிஞ்சில், கெந்தி, சாரம், சிலை, சவ்வீரம், சிங்கி, கௌரி, வெள்ளை, சிலாசத்து, பூநீறு.

அயமித்துரு:– வெள்ளி, நாகம், வங்கம், செம்பு, பூரம், பூநாகம், தங்கம், கெந்தி, மயூரச்செம்பு.

நாகச்சத்துரு:– கிளிஞ்சில், அண்டம், கல்லுப்பு, வெடியுப்பு, படிகாரம், வங்கம், தங்கம், வெள்ளி, வெண்கலம், வீரம், மிருதாரசிங்கி, அபின், மிளகு, வெள்ளை, வளையலுப்பு, அன்னபேதி, தரா.

நாகமித்துரு:– அப்பிரகம், இரும்பு, காந்தம், சிலாசத்து, நிமிளை, செம்பு, கௌரி, சூதம், கெந்தி, பூநாகச்செம்பு, கருநாகம், சாரம்.

வெடியுப்புச்சத்துரு:– காரீயம், சவட்டுப்பு, சூடன், வெள்ளீயம், துருசு, வெள்ளை, இரும்பு, செம்பு, காந்தம், சிலை, தொட்டி, கெந்தி, சிங்கி, தீமுறுகல், அண்டவோடு.

வெடியுப்புமித்துரு:– இந்துப்பு, கல்லுப்பு, காரம், இலிங்கம், வீரம், துத்தம், தாளகம், காந்தம், நாகம், கடல்நுரை, நிமிளை, வெள்ளைக்கம்பளி, பழம்புளி, ரோமம்.

கல்லுப்புச்சத்துரு:– பூரம், இரும்பு, செம்பு, காரம், கௌரி, நாகம், கெந்தி, தாளகம், நிமிளை, வெள்ளை, அப்பிரகம், வங்கம்.

காரச்சத்துரு:– சிலாசத்து, புளி, அண்டவோடு, சூடன், பூரம், சுண்ணவகைகள்.

காரமித்துரு:– உபரசங்கள், பாஷாணங்கள், லோகங்கள்.

Koviloor Digital Library

சூதச்சத்துரு:– சிங்கி, கௌரி, வெள்ளை, குதிரைப்பல், சத்திசாரம், வெடியுப்பு, இரும்பு, காந்தம், சூடன், பொன்னம்பர், பூரம், சவட்டுப்பு, நிமிளை, பூநீறு.

சூதமித்துரு:– அப்பிரகம், நாகம், காரீயம், சிலை, கெந்தகம், வெள்ளீயம், வீரம், தாளகம், தொட்டி, வெள்ளி, செம்பு, துருசு, சாரம், வெண்காரம், அஞ்சனக்கல், துத்தம், தீமுறுகல், பவளப்புற்று.

உப்புப் புளிச் சரக்கு விவரம்.

மலம்–புளி, சிறுநீர்–உப்பு, வெடியுப்பு–உப்பு, படிகாரம்–புளி, கல்லுப்பு–உப்பு, பழம்புளி–புளி, சூடன்–உப்பு, துருசு–புளி, கடல்நுரை–உப்பு, கற்சுண்ணநீர்–புளி, சூதம்–உப்பு, கெந்தி–புளி, காந்தம்–உப்பு, காடி–புளி, இரும்பு–உப்பு, எலுமிச்சம்பழச் சாறு–புளி, தொட்டி–உப்பு, புளியரணை–புளி, வீரம்–உப்பு, புளியாரை–புளி, கௌரி–உப்பு, புளிமாங்காய்–புளி, வெள்ளை–உப்பு, பணங்கள்–புளி, வைகிராந்தம்–உப்பு, நிமிளை–புளி, தங்கம்–உப்பு, சிலை–புளி, நாகம்–உப்பு, வீரம்–புளி, சாரம்–உப்பு, வெண்காரம்–புளி, பச்சைக்கற்பூரம்–உப்பு, இந்துப்பு–புளி, உப்புச்சரக்கைப் புளிச்சரக்கினாற் கட்டி நீற்றலாம்.

நாதவிந்துச் சரக்கு விவரம்.

இலிங்கம்–நாதம், கல்லுப்பு–விந்து, நிமிளை–நாதம், வெள்ளை–விந்து, கெந்தி–நாதம், இரசம்–விந்து, பூநாகம்–நாதம், வீரம்–விந்து, பூநீறு–நாதம், சூடன்–விந்து, இரும்பு–நாதம், எவச்சாரம்–விந்து, காந்தம்–நாதம், கல்மதம்–நாதம், செம்பு–நாதம், சிலாசத்து–விந்து, நாகவங்கம்–நாதம், பூரம்–விந்து, எனப்பெயர் விளங்குவதுமன்றி அவ்விரண்டும் ஒன்றோடொன்று சேர்ந்துகட்டும்.

கட்டுவகைகளின் பரீட்சை.

பாஷாணம், இலிங்கம், தாளகம், நவச்சாரம், வெடியுப்பு, சீனம், வீரம், பூரம், இரசம், கெந்தகம், கௌரி முதலிய புகைச்சரக்குகளைக் கட்டினால் அவைகள் புகையாமல் உருகவேண்டும். நாகம், வெள்ளீயம், காரீயம் இவைகள் புகையாமல் உருகிக் கண்விட்டாடவேண்டும்; கறியுப்பு, வெடியுப்பு, இந்துப்பு முதலிய உப்புக்கள் வெடிக்காமலும் எரிந்துபோகாமலும் உருகி மணியாயிருக்கவேண்டும்.

அஷ்ட லோகமாரணம்.

சூதம், கெந்தி, காரம், சாரம், வெடி, வெள்ளை, பூரம், வீரம் இவைகளைச் சமன்கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி உலோகத்தகடுகளின்மீது சமன்பூசி கெஜபுடமிட்டால் உலோகங்கள் நீறும்.

வேறு.

பாஷாணம், நவச்சாரம், சீனம், பூரம், வீரம், புனுகு, வெடியுப்பு, காரம், சூதம், முப்பூ, கெந்தி, துருசுச்சுண்ணம் இவைகளை ஓர்நிறையாக

Koviloor Digital Library

எலுமிச்சம்பழச்சாற்றால் மெழுகுபோலாட்டி நவலோகத்தகட்டுக்கு எடைக்கெடை மருந்தைப்பூசி அவைகளுக்குரிய மூலிகையை அரைத்து அங்கிபூட்டி ஓட்டிலிட்டு மூடிச் சீலைசெய்து கெஜபுடம்போட நீறும்.

சிங்கிச்சுண்ணம்.

நாலுபடி அமுரியில் ஒருபடி பூநீற்றைக்கரைத்து நாலாம்நாள் தெளிவெடுத்துப் பீங்கானில்விட்டு அதில் மிருதாரசிங்கி பலம் 2, சீனம், சாரம், சூடன், பாஷாணம், கௌரி வகைக்குப் பலம் 1 பொடித்துப் பீங்கானிற்போட்டு அயக்கம்பாற்கிண்டி முப்பூ கழஞ்சு 2 கூடப்போட்டு இரவியில்வைக்க நீரெல்லாம் வற்றும்; அதன்பேரில் ஒருபக்ஷம் இரவியில்வைக்கப் பீங்கானில் முத்துப்போற்கட்டும் அப்படிக் கட்டினதையெடுத்து வைத்துக்கொண்டு அப்பால் அதை வெய்யிலில்வைக்க நீறிச் சுண்ணாம்பாய் இருக்கும்; இந்தச்சுண்ணாம்பைத் துருசுக்குப்பூசிச் சிப்பிச்சுண்ணாம்புக்குள் தெரிக்கத் துருசு சுண்ணமாகும்; அந்தச் சுண்ணத்தினால் சூதம் முதலிய சரக்குகளைக் கட்டலாம்.

எரிப்புத்திட்டம்.

இரண்டு விரற்கனமுள்ள விறகு ஒன்றுகொண்டெரிவது தீபாக்கினி விறகு இரண்டு கொண்டெரிவது கமலாக்கினி, விறகு மூன்றுகொண்டெரிவது சுவாலாக்கினி விறகு நாலுகொண்டெரிவது காடாக்கினி, ஒருபலங்கொண்ட காட்டெரு—காடை மூன்று—கவுதாரி, பத்து—குக்குடம், ஐம்பது—வராகம், நூறு—கனபுடமாம்.

ஊதுதிட்டம்.

சுண்ணத்துக்குத் துருத்தி ஒன்று, உருக்கினத்துக்குத் துருத்தி இரண்டு சத்துக்குத் துருத்தி நாலு.

சரக்குகளின் சுத்திமுறைகள்.

லிங்கம்:— மேனிச்சாறு, பழச்சாறு, முலைப்பால், இவைகளைச் சமன்கலந்து மூன்று கடிகை சுருக்குக்கொடுக்கச் சுத்தியாம்; செம்பரத்தம்பூச்சாறு, சூரிச்சாறு நாலுசாமம் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாம்.

வீரம்:— இளநீரில் சூடனைப் பொடித்துப் போட்டுச் சுருக்குக் கொடுக்கவும் அண்டவெள்ளைக்கருச் சுருக்குக் கொடுக்கவும் சுத்தியாம்.

பூரம்:— முலைப்பால், வெற்றிலைச்சாறு, மிளகுக்கஷாயம், இவற்றில் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாம்.

பாஷாணம்:— ஒருபடி அமுரியில் ஒருபல மிளகை அரைத்துக்கலக்கியதிற் கொதிக்கவைத்துக் கொள்ளவும்; மிதிபாகற்சாற்றிற் கொதிக்க வைக்கவும்; அமுரியிற் பூநீறும் சுண்ணாம்பும் கலக்கிக் கொதிக்க வைக்கவும் சுத்தியாகும்.

Koviloor Digital Library

கௌரி:– பன்றி நெய்யில் ஒருசாமம் சுருக்குக் கொடுக்கச் சுத்தியாம்.

குதிரைப்பல் பாஷாணம்:– உமிரிச்சாற்றில் ஊறவைத்து அந்தச்சாற்றிற் சுருக்குக்கொடுக்கச் சுத்தியாம்.

மனோசிலை:– காடி எலுமிச்சம்பழச்சாற்றிற் போட்டுக் கொதிக்க வைக்கச் சுத்தியாம்.

பவளப்புத்து:– ஆவின்மோரில் ஒருசாமம் கொதிக்கவைக்கச் சுத்தியாம்.

தாளகத்தை:– வேசரிநீரிற் சுண்ணாம்பும் உவர்மண்ணும் போட்டுக்கலந்து அதிற் கொதிக்கவைக்கவும், சுண்ணாம்புக்கல்லுக்குள் வைத்து பத்துத்தடவை சிறுநீர் விட்டுத் தாளிக்கவும், கள்ளிற் சுருக்குக் கொடுத்து நாயுருவிச்சாறு பொடுதலைச்சாறு இவற்றில் சுருக்குக்கொடுக்கவும் சுத்தியாம்.

கல்நார்:– கழுதைநீரிற் கொதிக்கவைக்கவும், ஆவின்நீரில் அந்தப்படி செய்யவும் சுத்தியாம்.

கெருடபச்சை:– கற்றாழைச்சாற்றிற் கடுக்காயைப் பொடித்துப்போட்டுப் பிசைந்து கலக்க ஜலமாகும்; அதிற் சிறுதுண்டுகளாகத் தட்டிப்போட்டுக் கொதிக்கவைத்துக் கலக்கச் சுத்தியாம்.

பொரிகாரம்:– எருமைச்சாணிப்பாலிற் கிழிகட்டி எரித்துக் கழுவி ரவியிற் போடச் சுத்தியாம்.

குக்குல்:– எருமைமோரில் ஒருநாள் ஊறவைத்துக் கழுவச் சுத்தியாம்.

குந்திருக்கம்:– சாராயத்தில் ஒருநாள்வரை ஊறவைத்துக் கழுவச் சுத்தியாம்.

வெண்காரம்:– அமுரியில் மூன்றுநாளூறவைத்துக் கழுவி உலர்த்தச் சுத்தியாம்.

இரசசுத்தி:– ஒருபல இரசத்தைக் கல்வத்திட்டுப் புகையூறல், மஞ்சட்பொடி, மேனிச்சாறு, பிரண்டைச்சாறு, இஞ்சிச்சாறு, ஆவிரம்பட்டைக்கஷாயம், கொடுவேலிச்சாறு, திரிபலைக்கஷாயம், இத்தி, அத்திப்பட்டைக்காஷாயம், இவற்றில் தனித்தனி ஒவ்வொருசாமம் மத்தித்து அடிக்கடி ஒவ்வொருபாகம் முடிந்தவுடன் தண்ணீரால் அலம்பிப்போடவும்; இரசம் வராகனெடை 1 அரபொடி வராகனெடை 2 இரண்டையும் சேர்த்தரைத்து ஏழுசீலைமண்செய்து எரிக்கவும்.

மிருதாரசிங்கி:– வெள்ளாட்டுநீரிற் கொதிக்கவைத்து அப்பால் மேற்படி பாலிலும் ஒவ்வொரு நாள் ஊறவைத்துக் கழுவிக்கொள்ளச் சுத்தியாம்.

நீலத்துருசு:– பசுவின்நீரிற் கிழிகட்டி எரிக்கச் சுத்தியாம்.

Koviloor Digital Library

அஞ்சனக்கல்:– புளியாரைச்சாற்றில் ஒருநாள் ஊறவைத்துக் கழுவச் சுத்தியாம்.

அயம்:– எலுமிச்சம்பழச்சாற்றிலும் நல்லெண்ணெயிலும் வகைக்கு இரண்டு நாளூர வைத்துக் கழுவிவிடச் சுத்தியாம்.

தாமிரசுத்தி:– மருதோன்றி, புரசு, சரக்கொன்றை, விராலி, முருங்கைவேர்வித்து இவைகளின் குழித்தைலத்தில் நவச்சாரத்தைப் பொடித்துப்போட்டு அதில் தாமிரத் தகட்டைப் பத்துத்தடவை காய்ச்சித் துவைக்கச் சுத்தியாம்.

மேற்படி தகட்டின்பேரில் புளியங்கொழுந்தை அரைத்துப்பூசிக் கற்றாழை மடலுக்குள் வைத்துப் புடம்போடவும்; அமுரியும் எலுமிச்சம்பழச்சாறுங்கலந்து அதில் எவச்சாரத்தையும் தாளகத்தையும் பொடித்துப்போட்டு உருக்கிச் சாய்யவும்.

நாகம்:– இலுப்பை எண்ணெயிற் பத்துத்தடவை உருக்கி அப்பால் கோமயத்திற் சாய்க்கச் சுத்தியாம்.

காந்தம்:– காணச்சாற்றில் ஏழுதரம் காய்ச்சித் துவைக்கச் சுத்தியாம்.

காரீயம் வெள்ளீயம்:– இவை நல்லெண்ணெய்விட்டு உருக்கிப் பிரண்டைச்சாற்றிலும் வெள்ளாட்டுநீரிலும் கள் மோர் காடி இவைகளிலும் பத்துப்பத்துத்தடவை உருக்கிச்சாய்க்கச் சுத்தியாம்.

பொன்நிமிளை:– காடியிற் கொதிக்கவைக்கச் சுத்தியாம்.

அப்பிரகம்:– காடியிற் பத்துநாள் ஊறவைத்துக் கழுவச் சுத்தியாம்.

நேர்வாளம்:– எருமைச்சாணத்தைக் காடியிற்கலக்கி அதில் அந்தக்கொட்டையைக் கொதிக்கவைத்துக் கழுவித் தோல் முளை நீக்கி எலுமிச்சம்பழச்சாறு, காடி, ஆவின்மோர்களில் வகைக்கு மும்மூன்றுநாள் ஊறவைத்துக் கழுவிப்போடச் சுத்தியாம்.

மூக்கரைச்சாரணைவேர், பரங்கிப்பட்டை, அமுக்கிரா, காட்டுக்கரணை, புளியமடல், பிரண்டை, வேந்தோன்றி, இவைகளின் கிழங்குகளை ஆவின்பாலில் வேகவைத்து ரவியில் உலர்த்தச் சுத்தியாம்.

பாஷாணச்சரக்குகளுக்குப் பொதுச்சுத்தி.

மேனி, கரிப்பான், மிளகுத்தக்காளி, எலுமிச்சம்பழம், ஊமத்தை இவைகளின் சாறு; அமுரி, காடி வகைக்குப் படி 1 ஒன்றாகக்கலந்து அதில் வெடியுப்பு, சீனம், கறியுப்பு, பூநீர் இவைகளின் சுண்ணம் வகைக்குப் பலம் 1 போட்டுச் சுத்திசெய்ய வேண்டிய பாஷாணச் சரக்குகளைத் தோளாந்திரங் கட்டிப்போட்டு ஒரு மண்டலம் சென்றெடுக்கச் சுத்தியாகும்.

32–வகைப்பாஷாணங்களின் பெயரும் சத்தும்.

1. வெள்ளைப்பாஷாணத்தில் – வங்கம், சூதம்.
2. சங்குபாஷாணத்தில் – வங்கம், வெடியுப்பு.
3. கௌரிபாஷாணத்தில் – அயம், தாமிரம்.

Koviloor Digital Library

4. சவ்வீரபாஷாணத்தில் – அயம், வெடியுப்பு, சீனம்.
5. கோழித்தலைப்பாஷாணத்தில் – நாகம், தாமிரம், வங்கம்.
6. கார்முகில்பாஷாணத்தில் – அயம், காந்தம், வெடியுப்பு.
7. தீமுறுகல்பாஷாணத்தில் – கெந்தகம், வெடியுப்பு.
8. சிங்கிபாஷாணத்தில் – கருவங்கம், சீனம்.
9. ஜாதிலிங்கபாஷாணத்தில் – சூதம், கெந்தகம், நிமிளை.
10. கெந்தகபாஷாணத்தில் – அயம் – தாமிரம்.
11. தொட்டிப்பாஷாணத்தில் – தாமிரம், அயம், வங்கம்.
12. தாரபாஷாணத்தில் – அயம், வங்கம்.
13. பவளபாஷாணத்தில் – காந்தம், தாமிரம்.
14. பஞ்சபட்சிபாஷாணத்தில் – நாகம், தரா, வெடியுப்பு, கெந்தகம்.
15. குங்குமபாஷாணத்தில் – கெந்தகம், பூநீறு, குடவன்.
16. துத்தபாஷாணத்தில் – அயம், தாமிரம்.
17. கோழித்தலைக்கெந்தகபாஷாணத்தில் – அயம், தாமிரம், வங்கம்.
18. ரசிதபாஷாணத்தில் – வெள்ளி, வங்கம், தாமிரம்.
19. நீலபாஷாணத்தில் – அவுரி, தாமிரம்.
20. சோரபாஷாணத்தில் – காந்தம், தரா.
21. லவணபாஷாணத்தில் – அமுரியுப்பு, தேசியுப்பு, கெந்தகவுப்பு, அயம், வங்கம்.
22. நாகபாஷாணத்தில் – திரிவங்கம், அயம்.
23. காகபாஷாணத்தில் – நீலாஞ்சனம், வங்கம்.
24. இந்திரபாஷாணத்தில் – பஞ்சலோகம்.
25. மனோசிலைபாஷாணத்தில் – அயம், வங்கம்.
26. அயத்தொட்டிபாஷாணத்தில் – அயம், செம்பு
27. செப்புத்தொட்டிபாஷாணத்தில் – தாம்பிரம், வங்கம்
28. வாணகெந்திபாஷாணத்தில் – அயம், வங்கம்.
29. சுரைக்கெந்திபாஷாணத்தில் – திரிவங்கம், செம்பு.
30. கோடாபாஷாணத்தில் – அயம், வங்கம், தாமிரம்.
31. சொர்ணபாஷாணத்தில் – தங்கம், திரிவங்கம்.
32. துருசுபாஷாணத்தில் – அயம், செம்பு, கெந்தகம்.

நவலோக நவபாஷாண மாரணிகள்.

செங்கற்றாழை, சிவந்தசதுரக்கள்ளி, கல்லலரி இவைகட்குத் தங்கம் செம்பாம்.

குப்பைமுள்ளி, அம்மான்பச்சரிசி, குங்கிலியக்கட்டை, நத்தச்சூரி, பனிதாங்கி, உப்பிலாங்கொடி, அவரைப்பூ இவைகட்குத் தங்கம் நீறும்; அதிற் பணவெடைவீதம், அனுபானங்களிற் கொடுக்கக் கபரோகம் 90, குன்மம், மகோதரம், வாயு, நீராம்பல், சூலை, சிரநோய், கண்ணோய், குஷ்டம், குறைநோய், பிரமேகம், நீரிழிவு முதலிய நோய்கள் தீரும்.

செம்முள்ளி, சண்பகப்பூ, முளைக்கீரைத்தண்டு, சிவந்தம்மண்பச்சரிசி, வெண்டிமுளை இவைகட்கு வெள்ளி பற்பமாகும்; பணவெடைவீதம்

Koviloor Digital Library

அனுபானத்திலிடக் குன்மம், வாயு, நீர்ச்சிறுப்பு, நீர்க்கட்டு, சதையடைப்பு, கிருச்சரம், கிறுகிறுப்பு, பெருமூச்சு, ஏங்கல், மூக்குநீர்ப்பாய்ச்சல், பீனசம், மண்டைச்சூலைப்புண் தீரும்.

புளியமடல், புளியஞ்சிறுகீரை, எழுத்தாணிப்பூடு, கற்றாழைவேர், பூவரசம்வேர், கொடிக்கள்ளி, எலுமிச்சம்பழம், புளியிலை இவைகளின் சாற்றில் தாமிரத்தை உருக்கிச்சாய்த்து அதைப்பொடித்துச் சிவந்தபுளியமடற்கிழங்கு, அதனிலை, ஆடாதோடை, அந்தரத்தாமரை, சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான், கற்றாழைவேர், மிளகுதக்காளி, எருக்கிலைப்பழுப்பு இவைகளின் சாற்றாலரைத்துப் புடம்போடச் சிந்தூரமாகும்; அனுபானத்திலிடக் குன்மவியாதிகள் தீரும்.

ஆற்றலரி, புளியஞ்சிறுகீரை, வெண்டாமரைக்கிழங்கு, கறுப்புக்கிலுகிலுப்பை, கொடிக்கள்ளிவேர், நேர்வாளம், வெண்ணொச்சி, எருக்கம்பால், வெண்ணாகம், கொடுவேலி வேர், வீரம் இவைகளையரைத்துத் தாமிரத்தகட்டுக்குப் பூசிப் புடம்போட நீறும்; பணவெடை வீதம் அனுபானத்திலிடக் குன்மவாயு, சூலைவாயு, குஷ்டம், நீங்கும்; தாது புஷ்டியுண்டாகும்; நரம்புகளிறுகும்.

மணித்தக்காளியிலைச்சாற்றில் வெள்ளீயத்தை உருக்கிச் சாய்க்கக் கட்டும்; அப்பால் அதைக் கள்ளு, காடி, புளித்தமோர், நல்லெண்ணெய், முள்ளித்தண்டு, கோசலம், இவைகளிற் சுத்திசெய்து பூவரசம்பட்டை, நான்முகப்புல், பற்படாகம், நுணாவேர், பசளி, நாவிக்கிழங்கு, வெண்ணொச்சி, கஞ்சா, ஆடுதீண்டாப்பாளைவேர், கடல்நுரை, ஆட்டுச்செவியிலை இவைகளையரைத்து வெள்ளீயத்துக்குப்பூசிப் புடம் போட நீறும்; பணவெடைவீதம் அனுபானத்திலிட நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, கிருச்சரம், மேகம் நீங்கும்.

விழல்வேர், கூத்தன்குதம்பை, நிலத்துத்தி, சத்திசாரணைக்கிழங்கு, நான்முகப்புல், பொடுதலை, முதியார்கூந்தல், பெருஞ்செருப்படை, நொச்சி, நுணாவேர், பற்படாகம், கஞ்சா இவைகளையரைத்துக் கருவங்கத்துக்குப் பூசிப் புடமிட நீறும்; பணவெடைவீதம் அனுபானத்திலிடச் சூலை, குஷ்டம், கிரந்தி, மேகம், பிரமேகம், காந்தல், நீர்க்கடுப்பு நீங்கும்.

சிறுகீரைவேர், கற்றாழைவேர், சிறுசெருப்படை, பொற்றலைக்கரிப்பான், மிளகு, தக்காளி, செந்நாயுருவிவேர், வெடியுப்பு, சீனம், பவளக்கால், மனோசிலை இவைகளாற் கருவங்கம் சிந்தூரமாகும்; பணவெடை அனுபானத்திலிட மேற்படி வியாதிகள் தீரும்.

பசளியிலைக்கு வெண்கலம் நீறும்; அனுபானத்திலிடச் சூலை, குன்மவாயு, க்ஷயம், இருமல், உளைமாந்தை நீங்கும்.

வெண்காலி, நிலக்கடம்பு, நாகதாளி, ஆடுதீண்டாப்பாளை, புனமுருங்கை, மயூரச் சிகை இவைகளின் சாற்றிலும் இலுப்பையெண்ணெய் நல்லெண்ணெய் இவற்றிலும் நாகத்தை உருக்கிச்சாய்க்க அதுகட்டிச் சுத்தியாகும்; கீழ்க்காய்நெல்லி, ஆமணக்கிலை, வேலிப்பருத்தியிலை,

Koviloor Digital Library

இலுப்பையிலை, சிறுகீரைவேர், பெருங்காயம், அபின், ஊமத்தம்பூ, நந்தியாவட்டப்பூ, சிறுஅம்மான்பச்சரிசி, எலிமுள்ளியிலை இவைகளுக்கு நாகம் நீறும்; பணவெடை அனுபானங்களிலிட மூலவாயு, கிராணி, வயிற்றெரிவு, நெஞ்செரிவு, வாய்நீரோடல் தீரும்.

வேலிப்பருத்தியிலைச்சாற்றிலும், பனங்குருத்துமட்டைச்சாற்றிலும் நாகரசத்தை அரைத்துப் புடம்போட நீறும்; மிளகை நல்லெண்ணெயால் மெழுகுபோலாட்டி அதிற் பணவெடைவீதம் வைத்துச் சாப்பிட மேகவெட்டை தீரும்; வாதாம்பருப்பு முருங்கைப்பூ, பேரீச்சம்பழம் இவைகளிற்கொள்ள வாதங்கட்டும்.

தும்பையிலைக்குத் தரா நீறும்; அனுபானத்திலிட நீர்ச்சிறுப்பு, வண்டுகடி, சில்விஷம், குன்மம், க்ஷயம், குஷ்டம், சூலைபதினெட்டு நீங்கும்.

காஞ்சிரைவேருக்குப் பித்தளை நீறும்; பணவெடைவீதம் அனுபானத்திலிடக் குன்மம், வாயு, கிராணி, மூலபாண்டு, நீர்க்கட்டு, நீர்க்கனப்பு, வாய்நீரூறல், குடல்வாயு, பாரிசவாயு, ஆனந்தவாயு, கெண்டை, கவுசி நீங்கும்.

கல்த்தூரிக்கு ஒழுகரை நீறும், அனுபானத்திலிடவ் பாண்டு வகை, வீக்கம், மகோதரம், நீராம்பல் தீரும்

எருக்கம்வேருக்கும், கோங்கிலவுக்கும் கல்நார் நீறும்; அனுபர்னத்திலிடக் கபரோகம் 96 ம் உஷ்ணமும் நீங்கும்.

புளியஞ்சிறுகீரைக்கு அஞ்சனக்கல் நீறும்; பணவெடை தேனிற்கொள்ள மேக நீரிழிவு 20 ம் தீரும்.

வெப்பாலை, மணலி, காட்டாமணக்கின்முத்துப்பருப்பு, இரத்தமண்டெலி, பால்வீழி இவைகளுக்கு இரும்பு உருகும்.

மருது, கிளுவை, மருதோன்றி, நெல்லி, வன்னி, நெளவல், திரிபுரமெரித்தான் இவைகட்கு இரும்பு செம்பாகும்; பால்வீழிவேருக்கு இரும்பு பற்பமாகும்.

பொற்றலைக்கரிப்பான், சிறுசெருப்படை, பெரும்பூசணிக்காய், நெளவற்பட்டை, எலுமிச்சம்பழம், புளிப்புமாதுளம்பழம், கற்றாழை இவைகளுக்கு அயம் சிந்தூரமாகும்; அனுபானத்திலிடப் பாண்டு, சோகை, காமாலை, குறைநோய், குஷ்டம், சூலை நீங்கும்.

சிறியாநங்கை, காட்டுக்கொள்ளிலை இவைகளுக்குக் காந்தம் பற்பமாகும். அயத்துக்குச் சொல்லியிருக்கிற மூலிகையாலிது சிந்தூரமாகும்; பாண்டுமுதலிய வியாதிகள் தீரும்; தேகபலமுண்டாம்; கடுகு காணம் இவைகளுக்குக் காந்தம் பற்பமாகும்; உபரசம் சத்தாகும்.

காட்டுக்கொள்ளிலைக்குச் சகலமும் சத்தாகும்; மேற்படி சாற்றுக்குப் பாஷாணம், நவலோகம் சுத்தியாகும்; நீலக்குரோசானிக்குப் பித்தளையூறல்போகும்; வெடியுப்பு சிந்தூரமாகும்.

Koviloor Digital Library

சொறிசுணங்கிக்கு மண்டூரம் பற்பமாகும்; பாண்டுவகைகள் தீரும்.

நிலக்கடம்பு, காட்டுக்கொள்ளிலை, காட்டாமணக்கின்வித்து, மிருதாரசிங்கி, பாஷாணம், பூமிவேர், வெங்காரம், உருக்கினக்குடோரி, நீலரெங்கு, சாரம், வெடியுப்பு, இவைகளுக்கு அப்பிரகம் சத்தாகும்.

ஆவிரம்பட்டை, அரசம்பட்டை, நௌவற்பட்டை, நெல்லிப்பட்டை, வன்னிப்பட்டை, கற்றாழைவேர், பொற்றலைக்கரிப்பான், கருந்துளசி, எருக்கம்பழுப்பு, சிவப்பு மணத்தக்காளி, சரக்கொன்றைப்பட்டை, பிரமதண்டு, கோழிமுட்டைவெள்ளைக்கரு, செங்கிளுவைப்பட்டை, ஆலம்பால், வெடியுப்பு, கெந்தகம், இவைகளுக்கு அப்பிரகம், சிந்தூரமாகும்; அனுபானத்திலிட மேகம் நீரிழிவு 21 ம் நீங்கும்; தேகபல முண்டாகும்.

எருக்கம்பாலுக்கும், முலைப்பாலுக்கும் சாத்திரபேதி நீறும்; முலைப்பாலில் சுரமும், ஆவின்வெண்ணெயில் உஷ்ணமும் தீரும்.

பன்றிப்பாலால் வெள்ளைக்குங்கிலியத்தை நீற்றி ஆவின்வெண்ணெயிற்கொள்ள அபானக்கடுப்பு, உளைவு தீரும்; அதைப் பற்றுலக்கிவரப் பல்லசைவு, பல்லில் இரத்தம், சீவடிதல், பற்புண், தந்தவாயு தீரும்.

சங்குக்குகையிற் பொரிகாரத்தை நீற்றி அனுபானத்திற் சாப்பிட நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, நீர்க்கடுப்பு, நீர்ச்சிறுப்பு நீங்கும்.

பெண்கள் சுரோணிதத்தாலும், பிரண்டைச்சாற்றாலும், வயிரத்தை நீற்றி அனுபானத்திலிடத் தேகபலமுண்டாகும்.

பவளம்போன்ற உமரிக்கு மற்ற இரத்தினங்கள் நீறும்; சகலவியாதியுந்தீரும்.

அண்டவெள்ளைக்கருவால் முத்தை நீற்றி அனுபானத்திலிடக் கபம், பிரமேகம், நீரிழிவு தீரும்; அதைத் தாம்பூலத்திலருந்தப் பல்வலி தீரும்; பல்லிறுகும்.

இலந்தை, கற்கண்டு, கீழ்க்காய்நெல்லி, முயலிரத்தம், சடாமாஞ்சி இவைகட்டுப் பவளம் நீறும்; அனுபானத்திலிட மேககாங்கை, கபம் தீரும்.

அபின், வன்னிப்பட்டை, ஆரை, மேனி, இஞ்சி, பிரண்டை இவற்றால் உப்பைக் கட்டி நீற்றி அனுபானத்திலிட வாயு, பாரிசவாயு, சூலை, மகோதரம் தீரும்.

அரசம்பட்டைச்சாற்றில் பொன்னிமிளையை யரைத்து நீற்றி அனுபானத்திலிட வாயு, குன்மம், சூலைக்கட்டி, கண்டவிப்புருதி, காமாலை, அரையாப்பு தீரும்.

நாங்கூழ்ப்பூச்சியை அரைத்து ஆமையோட்டுக்குக் கவசம்செய்து புடம்போட்டு நீற்றிக் கண்ணிலிடக் கண்ணோய் 96 ம் தீரும்.

Koviloor Digital Library

கருவாகை, சிறியவாலுளுவைத்தைலம், கறுத்தமணத்தக்காளி, மிளகாயிலை, வில்வம் இவற்றின்சாற்றிலும், ஆவினெய் பாலிலும் கெந்தகத்தை உருக்கிச்சாய்த்துச் சிறுசின்னியிலையாலதை நீற்றி அனுபானத்திலிட வயிற்றுவலி, பாதவீக்கம், தசையைப் பற்றிய நீர், குஷ்டம், குறைநோய், சில்விஷம், வாயு, வாதநோயகலும்.

புளியாரைக்கு வீரம் சுத்தியாகும்; நீர்க்கடம்புக்கு வீரம் கட்டும்; அப்பைக் கிழங்குக்கு வீரம் பற்பமாகும்; முருங்கைப்பூ, வேலிப்பருத்தி, முலைப்பால், இளநீர், தேன் இவைகளுக்கு வீரம் மெழுகாகும்; அனுபானத்திலிடக் குன்மம், வாயு, வாதம், கபம், சன்னிதோஷம், பாண்டு, சோகை, வீக்கம், சுரங்கள் தீரும்.

அழுகண்ணி, தொழுகண்ணி, கருவூமத்தை, பொன்னூமத்தை, தைவேளை, முத்தெருக்கஞ்செவி, ஆகாசக்கருடன், வேலிப்பருத்திப்பால், வெள்ளைவிஷ்ணுகரந்தை, விடத்தை, வட்டக்கிலுகிலுப்பை, கற்சேம்பை, தும்மியிலை, சிவகரந்தை, வெண்தாமரை, கருவீழி, வெண்கடம்பு, மயூரச்சிகை இவைகளுக்கு இரசம் கட்டிப் பற்பமாகும்; இரதியெடை அனுபானத்திலிடச் சூலை 12 கிரந்தி, குஷ்டம், அரையாப்பு, பவுந்திரம், கண்டமாலை, பரங்கிப்புண் தீரும்; செந்திராய்க்கு இரசம் சிந்தூரமாகும்; மேற்படி வியாதிகள் தீரும்.

நண்டுப்பால், ஈருள்ளி, முலைப்பால் இவைகளுக்குப் பூரம் கட்டும்; மேற்படி வியாதிகள் தீரும்; விரோசனமாகும், சுரதோஷம் நீங்கும்.

மூன்றுவகைப் பாகலிலை, மந்தாரைப்பூ, சிறுகீரைவேர், மிளகு இவைகளுக்குப் பாஷாணம் சுத்தியாகும்; சதுரக்கள்ளிப்பாலுக்குப் பாஷாணம் மெழுகாகும்; மந்தாரை, வெண்கடம்பு, இலுப்பைப்பால், தில்லைப்பால், அணிக்கிழங்கு, தைவேளை, இவைகளுக்குப் பாஷாணங்கட்டும், புதுமண்டையோட்டை அண்டவெள்ளைக்கருவாலரைத்துக் குகைபிடித்து அதிற் பாஷாணம்வைத்து வெள்ளெருக்கம்பால்விட்டுச் சில்லுப்போட்டு மூடிக் கொடிக்கள்ளிச்சாம்பல் வைத்தெரிக்க நீறும்; எட்பிரமாணம் அனுபானத்திலிடச் சுரம் 96 ம் தீரும்.

புளியம்பொருக்குச்சாம்பலையும், உப்பையும், மேனிச்சாற்றாலாட்டிக் குகைபிடித்து அதிற் சாரத்தைவைத்து அந்தச்சாம்பலில் வைத்தெரிக்க நீறும்; அனுபானத்திலிடக் குன்மம், வாயு, உதரநோய்கள், நெஞ்சடைப்பு நீங்கும்.

செவ்வாமணக்கு, கொக்குமந்தாரை, நத்தச்சூரி, சத்திசாரணை, இவைகளால் இலிங்கம் கட்டும்; இளநீர், முலைப்பால், தேன் இவைகளுக்கு மெழுகாகும்; சிவகரந்தை, விஷ்ணுகரந்தை இவைகளால் நீற்றி அனுபானத்திலிடச் சுரம், சன்னி, தோஷம், குன்மம், வாயு, சூலைவாயு, வாதம் நீங்கும்.

கற்சுண்ணாம்பு, கள்ளு, வேசரிநீர், பூநீர் இவைகளில் தாளகத்தைச் சுத்திசெய்து பொடுதலைச்சாற்றிற் சுருக்குக்கொடுத்து வெள்ளறுகையரைத்து அதற்குக் கவசஞ் செய்து புரசு, மருது, அரசு இவைகளின்

Koviloor Digital Library

சாம்பலுக்குள்வைத்து எரித்தாவது, அல்லது மனிதர் மண்டையோட்டைச் சுண்ணாம்புத் தண்ணீரில் அரைத்துக் குகைபிடித்து அதற்குள் வைத்து வெள்ளறுகுச்சாவிட்டு மூடி எரித்தாவது பணவெடை வீதம் அனுபானத்திலிடக் கபரோகங்கள், குன்மவாயு, காணாக்கடி, குன்மம், குஷ்டம், குறைநோய், சுரம், சன்னிதோஷம் நீங்கும்.

கருவாகை, சிறியவாலுளுவைத்தைலம், கறுத்தமணத்தக்காளிகளுக்குக் கெந்தகம் கட்டும்; சிறுசின்னி, முட்டைக்காளான், தேங்காய்ப்பூடு இவைகளைக் கெந்திக்குக் கவசஞ்செய்து மருதஞ்சாம்பல், புரசஞ்சாம்பலுக்குள்வைத்து எரிக்கக் கெந்தகம் பற்பமாகும்; வயிற்றுவலி, பாதத்திற்கட்டும் நீர், தசையைப்பற்றிய நீர்ரோகங்கள், குஷ்டம், குறைநோய், வாயு, வாதரோகம், கிரந்தி, சூலை, நீர்ப்பெருக்கம், மகோதரம், சூதகத்திரட்சியாலுண்டாகும் கருப்பரோகம், பாண்டு, இடுப்புவலி, சந்துவாதம் தீரும்.

புறங்கைநாறிக்குக் கௌரிகட்டும்; கிளிமூக்குக்கு மனோசிலைமெழுகாம்; வெள்ளெருக்குக்குச் சாரங்கட்டும்; ஆரை, கட்டுக்கொடிக்கு உப்புக்கட்டும்; இந்த உப்புக்கட்டை அனுபானத்திலிடச் சகல வாயு, பாரிசவாயு, சூலைவாயு, மகோதரம், நீர்க்கட்டு, குன்மவாயு நீங்கும்.

பெரியாநாங்கை, காட்டுக்கொள், குன்றிமணிகளுக்கு, வெங்காரங்கட்டும்; நீர்க்கட்டு விடும்; களா, கொடுக்காப்புளிகளுக்கு வெடியுப்புக்கட்டும்; பிரமதண்டுப்பால், பொன்னூமத்தை, கருவீழி, பாலிருளி, வெண்கடம்பு, தித்திப்புக்கோவை இவைகளுக்குச் சூதங்கட்டும்; கல்லத்திப்பட்டை, வெள்வேலாம்பட்டை, வில்வப்பட்டை இவைகட்குச் சூதம் மயனமாகும்.

நீலரெங்கு, காரக்குடோரி, உருக்கினக்குடோரி, உருக்கினமித்திரன் இவைகளை உருக்கினம் சத்துகளுடன் சேர்க்க அவைகள் கண்விட்டாடும்.

நவலோக மாரணம்.

காரம், சாரம், வீரம், சூடன், வெள்ளைப்பாஷாணம், வெடியுப்பு, சூதம், கெந்தி இவைகளை ஓர்நிறையாக எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி மேற்சொன்ன உலோகத்தகடுகட்கு அதைச் சமனெடை பூசி அதற்குமேல் மூலிகைக் கவசஞ்செய்து சீலைமண் செய்து கெஜபுடம்போட நீறும்.

உலோகச்சத்துள்ள மூலிகைகளின் விவரம்.

தாமிரச்சத்துள்ள மூலிகைகள்:- நீலிவேர், பொற்றலைக்கையான், முசுமுசுக்கை, அந்தரத்தாமரை, கொவ்வை, நந்தியாவட்டைப்பூ, பொடுதலை, பாளை, ஆடுதீண்டாப் பாளை, அந்தரகருடன், முள்ளங்கி, வெள்ளைக்கோழியவரை, சித்திரமூலம், ஆல், புல்லுருவி, கரும்பசளை, பொன்னாவிரை, ஆவிரை, புளியரணை.

வங்கச்சத்துள்ள மூலிகைகள்:- சிவகரந்தை, வெள்ளறுகு, செருப்படை, ஆடாதோடை, இலந்தை, நல்லவேளை.

Koviloor Digital Library

தங்கச்சத்துள்ள மூலிகைகள்:– சிவனார்வேம்பு, பூனைவணங்கி, கற்றாமரை, மயிலாரை.

கருவங்கச்சத்துள்ள மூலிகைகள்:– கீழ்க்காய்நெல்லி, தும்பை, துளசி, பொன்னாங்காணி, தூதுளை, தவசுமுருங்கை.

நிமிளைச்சத்துள்ள மூலிகைகள்:– வில்வம், புளியாரை.

அயச்சத்துள்ள மூலிகை:– கழற்சி.

நாகச்சத்துள்ள மூலிகை:– பிரமி.

தராச்சத்துள்ள மூலிகை:– வழுதி.

வெள்வங்கச்சத்துள்ள மூலிகைகள்:– மணத்தக்காளி, துத்தி, அறுகம்வேர், செங்கற்றாழை.

அயத்தாமிரச்சத்துள்ள மூலிகைகள்:– சிறுகீரை, பூமிசர்க்கரைக்கிழங்கு, அழகணம், சிலை, கருந்துளசி.

காந்தவங்கச்சத்துள்ள மூலிகைகள்:– சிறியாநங்கை, நத்தைச்சூரி, அழுகண்ணி, தொழுகண்ணி, கள்ளி.

வெடியுப்புச்சத்துள்ள மூலிகை:– கதலிவாழை.

திரிவங்கச்சத்துள்ள மூலிகைகள்:– நீர்மேல்நெருப்பு, பேய்க்கடலை.

அயவங்கச்சத்துள்ள மூலிகை:– கருஊமத்தை.

கிளிஞ்சல்சத்துள்ள மூலிகை:– சிறுசின்னி.

சேர்க்கைப் பதார்த்தங்களின் விவரம்.

திரிகடுகு:– சுக்கு, மிளகு, திப்பலி, திரிபலை:– கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி. சதுர்ச்சாதம்:– ஜாதிக்காய், ஜாதிபத்திரி, கிராம்பு, ஏலம். பஞ்சசாதம்:– சதுர்ச்சாதத்துடன் வால்மிளகைச்சேர்க்க. சாட்சாதம்:– பஞ்சசாதத்துடன் கருவாப் பட்டையைச் சேர்க்கவும். திரிகாயம்:– வெள்ளுள்ளி, கடுகு, பெருங்காயம். திரிகடகம்:– இந்துப்பு, திப்பிலி, பீதரோகணி. திரிகோடம்:– சந்தனம், சிவதை, வெண்குங்கிலியம், திரிபத்திரி:– லவங்கபத்திரி, ஜாதிபத்திரி, தாளிசபத்திரி. பஞ்சகவியம்:– ஆவின்பால், தயிர், வெண்ணெய், நீர், சாணம். பஞ்சதிரவியம்:– லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, விலாமிச்சவேர், சுண்பகப்பூ, நெல்லிமுள்ளி. பஞ்சரசம்:– இரதம், லிங்கம், வீரம், இரதசிந்தூரம், பூரம். அஞ்செண்ணெய்:– எள், வேம்பு, இலுப்பை, ஆமணக்கு, புங்கு இவைகளின் எண்ணெய். பஞ்சமூலம்:– பெருமருந்து, சிறுகுறுஞ்சா, பேரரத்தை, சிறுதேக்கு, சுக்கு. ஐங்காயம்:– வெள்ளுள்ளி, வெந்தயம், கடுகு, ஓமம், காயம். பஞ்சலவணம்:– இந்துப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சவட்டுப்பு. பஞ்சபாஷாணம்:– அரிதாரம், வெள்ளை, கௌரி, லிங்கம், தொட்டிப்பாஷாணம். பஞ்சாக்கினிமூலம்:– காட்டுக்கரணை,

Koviloor Digital Library

கறிக்கரணை, புளியமடல், பிரண்டை, கோப்பிரண்டை. அஷ்டசந்தனம்:– அகில், மலாக்காச்சந்தனம், கோஷ்டம், இலவங்கப்பட்டை, கஸ்தூரிமஞ்சள், இலவங்கம், குங்குமப்பூ, பச்சைக்கர்ப்பூரம், என்பனவாம். அஷ்டகாயம்:– மிளகு, திப்பிலி, சுக்கு, ஓமம், காயம், கரியசீரகம், நற்சீரகம், பெருஞ்சீரகம். நவலோகம்:– தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, நாகம், பித்தளை, தரா, வெண்கலம், காரீயம். பஞ்சலோகம்:– தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். அஷ்டமூலம்;– ஆடாதோடை, முத்தக்காசு, பற்படாகம், விஷ்ணுகரந்தை, கருந்துளசி, பேய்ப்புடல், கஞ்சாங்கோரை, சீந்தில். அஷ்டவர்க்கம்:– இந்துப்பு சீரகம், ஓமம், பெருங்காயம், கருஞ்சீரகம், திப்பிலி, மிளகு, சுக்கு, மஹாபஞ்சமூலம்:– ஈசுரமூலி, வில்வவேர், பாதிரிவேர், பெருமரவேர்ப்பட்டை, முன்னைவேர். லகுபஞ்சமூலம்:– ஈரிலைத்தாமரை, நெரிஞ்சில், மூன்றிலைத்தாமரை இரண்டுவகைக்கண்டங்கத்தரி. தசமூலம்:– ஈசுரமூலி, வில்வவேர், பாதிரிவேர், பெருமரவேர்ப்பட்டை, முன்னைவேர், ஈரிலைத்தாமரை, நெரிஞ்சில், மூன்றிலைத்தாமரை, இரண்டுவிதக்கண்டங்கத்தரி. திரணபஞ்சமூலம்:– நெற்பயிர்வேர், வெள்ளை அறுகின்வேர், நாணல்வேர், கருப்பைவேர், கரும்புவேர். பஞ்சகோலம்:– திப்பலி சித்திரமூலம், சுக்கு, திப்பலிமூலம், செவியம். பஞ்சவாசம்:– சாதிக்காய், கிராம்பு, தக்கோலம், ஏலம், கர்ப்பூரம். திரிகந்தம்:– தேவதாரம், சந்தனம், அகிற்கட்டை. திரிசுகந்தம்:– கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி. திரிமதுரம்:– நெய், பால், தேன். திரிமஞ்சள்:– மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மஞ்சள். திரிமூலம்:– கண்டுபரங்கிமூலம், திப்பலிமூலம், சித்திரமூலம். திரிநிம்பம்:– கறிவேம்பு, வேம்பு, நிலவேம்பு திரிசாதம்:– நாகேசுரம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி. முக்கனி:– பலாப்பழம், வாழைப்பழம், மாம்பழம். பஞ்சாமிர்தம்:– வாழைப்பழம், பால், தேன், நெய், சர்க்கரை. பரிமளவர்க்கம்:– லவங்கப்பட்டை, சாதிபத்திரி, சாதிக்காய். முக்கூட்டு எண்ணெய்:– நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய், நெய்.

ஜெயநீர் முறைகள்.

முப்பூ ஜெயநீர்.

முப்பூவுக்கு நிகர் வீரம் சாரஞ்சேர்த்துப் பனியில்வைக்க ஜெயநீர் இறங்கும்; அதிற் சரக்குகளைத் துவைத்து வாட்ட அவைகள் கட்டும்.

மேற்படி பூவுடன் சாரம், பச்சை, சூடன் கூட்டிப்பொடித்துப் பனியில்வைக்கச் செயநீராம்; அதில் வீரத்தைப் பொடித்துப் போட்டுவைக்க அது சிவந்திடும். சரக்குகளை வாட்ட மெழுகாகும்.

வெடியுப்பு, சீனம், சிப்பி இம்மூன்றையும் கட்டுவகை ஜெயநீரால் நாலுசாமமாட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு ஏழுசீலைமண்செய்து கெஜபுடம்போட நீறும். அதற்குப்பாதி சாரம் சேர்க்க ஜெயநீராம்; இதனால் சகலமும் நீறும். அந்தச் சுண்ணத்துக்குச் சரியெடை வீரம் சேர்த்துக் கட்டுவகை ஜெயநீரால் அரைத்துத் துருசுகண்ட வெடைக்கு மருந்தைப்பூசி ஓட்டிலிட்டுச் சீலைசெய்து புடம்போடத் துருசு சுண்ணமாகும்; இந்தச் சுண்ணத்தால் சகலமும் கண்ணமாகும். சுத்திசெய்த நாகத்துடன் இரதம் சேர்த்துருக்கி அந்த எடைக்கு வெடியுப்பு, பச்சைக்கர்ப்பூரம், துருச,

Koviloor Digital Library

வெள்ளை, வீரம் இவைகளைப் பற்பவகை ஜெயநீராலாட்டிப் புடம்போடச் சுண்ணமாகும்; இவ்வாறே வெள்ளீயம், தங்கம், பொன், வெள்ளி, தாமிரம், காந்தம், அயம் முதலிய உலோகங்களைப் புடம்போடச் சுண்ணமாகும்.

எழுவகை ஜெயநீர்.

பூநீறு, கல்லுப்பு, அமுரியுப்பு, கபாலச்சுண்ணஉப்பு, சிப்பிச்சுண்ணம், சூடனுப்பு, வீரம் வகைக்குப் பலம் 1 புனுகு, உரம், குருவண்டென்ற அறுபுள்ளிவண்டு, மின்மினிவண்டு, இந்திரகோபப்பூச்சி, கருநாவி வகைக்குக் கழஞ்சு 1 வெள்ளெருக்கம் பாலில் அண்டவெள்ளைக்கருவிட்டுத் தெளிந்த நீரால் ஆறுஜாமம் ஆட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்துச் சீலைசெய்து புடம்போடச் சுண்ணமாகும்; அந்தச் சுண்ணம், கடல்நுரை, இந்துப்பு, வெடியுப்பு, சீனம், சூடன் வகைக்குப் பலம் 1 மேற்படி நீராலாட்டிப் புடம்போடச் சுண்ணமாகும்; அந்தச் சுண்ணத்துக்குப் பாதி சாரஞ்சேர்த்துப் பனியில்வைக்க ஜெயநீராம் சகலசரக்கும் கட்டும், உருகும், மெழுகாகும்.

வெடியுப்பு ஜெயநீர்.

வெடியுப்பும் புளியுங்கூட்டி இடித்துப் புடம்போடச் சுண்ணமாகும்; அதற்கு நாலிலொன்று சாரஞ்சேர்த்துப் பனியில்வைக்க ஜெயநீராம்; அந்தநீர் படி காலுக்கு வீரம், பச்சைக்கற்பூரம், குருவண்டு, சீனம், உரம், நாவி, இந்திரகோபம் போடச்சிவந்துபோம்; இதில் முப்பூவைப்போட்டுக் கொதியிடச் சுண்ணாம்பாம்; அந்த எடைக்குச் சூடன், சூடனுக்குப்பாதி வீரம், புனுகு ஒருகழஞ்சு கூட்டி அந்தச் செயநீராலாட்டி வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து புடம்போட நீறும். அதிற் பணவெடையை உமிழ்நீரில் மத்தித்துத் துருசுக்குப்பூசி உலர்த்திப் புடம்போடச் சுண்ணமாகும்; இந்தச் சுண்ணத்தாற் சகல புகைச்சரக்குகளும் சுண்ணமாகும், வேதையாகும்.

செய்முறைவகை முற்றிற்று.

ரோகநிவாரணிகளின் தொகுதி.

காயசித்தி மூலிகைகள்.

கருநெல்லி, கருநொச்சி, ஜோதிப்புல், ஜோதிவிருக்ஷம், கருங்கொடுவேலி, கருவாழை, சாயாவிருக்ஷம், கற்றாமரை, சுணங்கவிருக்ஷம், உரோமவிருக்ஷம், சேந்தாடும் பாவை, வல்லாரை, பொற்சீந்தி, செந்திராய், குண்டலப்பாலை, செஞ்சதுரக்கள்ளி, செங்கற்றாழை, கருங்கரிப்பான், மூவிலைக்குருந்து, கருவீழி, கருநீலி, கருவேம்பு, சர்க்கரைவேம்பு, நாறாக்கரந்தை, பொற்றலைக்கரிப்பான், புளியாரை, கருவள்ளி, எருமைகனைச்சான், கருங்கஞ்சா, கருங்காஞ்சிரை, கருந்துளசி, முண்டனிவிருக்ஷம், காம்புசிவந்தகீழ்க்காய்நெல்லி.

வாதம் வாயு நிவாரணிகள்.

மிளகு, சுக்கு, கண்டதிப்பலி, சங்கவேர், எருக்கம்வேர், வேப்பம்பட்டை, கொடுவேலி, சாரடைக்கிழங்கு, மரமஞ்சள், பிரப்பங்கிழங்கு,

Koviloor Digital Library

அசுவகெந்திக்கிழங்கு, பரங்கிப்பட்டை, தைவேளைவேர், மேனிவேர், தும்பை, வெள்ளுகா, மாவிலிங்கு, கொடிக்கள்ளி, திருகுகள்ளி, சிவதை, நேர்வாளம், குக்கில், தேவதாரம், மஞ்சள், மிளகாய், ஓமம், குங்குமப்பூ, அக்கிராகாரம், சண்பகப்பூ, மிளகு, ஆடுதீண்டாப்பாளை, செருப்படைமூலம், பொடுதலை, செவ்வாமணக்கிலை, அவுரி, ஆடாதோடை, ஐந்திலை, நொச்சி, வாதமடக்கி, உடும்புநெய், கடுகு, கடம்புவித்து, பாட்டைக்கீரை, காக்கரட்டான், கருங்கோழி, சரக்கொன்றைப்பட்டை, காட்டாமணக்கிலை, கவுதாரி, உள்ளான், குரோசானிஓமம், கொம்பரக்கு, கூத்தன்குதம்பை, கௌரிபாஷாணம், சங்கங்குப்பி, கருநொச்சி, புங்கம்வேர், முருங்கைப்பட்டை, முப்புரண்டிவேர், சிறுதேக்கு, சதகுப்பை, வாய்விளங்கம், வெள்ளுள்ளி, பெருங்காயம், கருஞ்சீரகம், நற்சீரகம், முருக்கு.

விரைவாத நிவாரணிகள்.

ஆளிவரை, குங்குமப்பூ, ஏரண்டம், இஞ்சி, எருக்கம்பூ, உகாயிலை, வீழிவேர், எலியாமணக்கின்பால், வெள்ளுள்ளி, கொடுவேலிவேர், முடக்கொத்தான், வெண்கழற்சி, வித்து, அதனிலை, சாரடைக்கிழங்கு, கருஞ்சீரகம், இலுப்பைப்பிண்ணாக்கு, பெருங்காயம், குருவாந்தெல்லு.

குடல்வாத நிவாரணிகள்.

வெடியுப்பு, கொல்லங்கோவைக்கிழங்கு, கோழியவரையிலை, சரக்கொன்றைப்பூ, சிறுபூளை, செவ்வல்லிக்கொடி, தூதுளங்காய், நவச்சாரம், முள்ளங்கிக்கிழங்கு, வளையலுப்பு, விழலரிசி, விளக்கெண்ணெய், வெள்ளறுகு, பஞ்சலவணம்.

குன்மவாயு நிவாரணிகள்.

சேங்கொட்டை, வாய்விளங்கம், வெள்ளுள்ளி, கடுகு, மிளகாய், ஆனைத்திப்பிலி, கண்டதிப்பலி, மாவிலிங்கவேர், உகாய்வேர், சீரகம், இஞ்சி, சுக்கு, அப்பளாக்காரம், அபின், அரிதாரம், பஞ்சலவணம், எட்டிவேர், எலியாமணக்கு, ஆமணக்கெண்ணெய், எவச்சாரம், நவச்சாரம், கழற்சிவிதை, குக்கில், குப்பைமேனி, சங்கவேர், செருப்படை, காட்டாமணக்கிலை, கருவங்கம், தாமிரம், செவ்வாமணக்கிலை, உரலாமணக்குவேர், புளியமடல், இரதம், பஞ்சலோகம், பஞ்சபாஷாணம், பஞ்சரசம் வீரம்.

பித்தநிவாரணிகள்.

பேய்ப்புடல், மல்லி, சண்பகப்பூ, வாலுளுவையரிசி, செவியம், சிவதை, சிறுதேக்கு, சன்னலவங்கப்பட்டை, தாளிசபத்திரி, நற்சீரகம், பெருஞ்சீரகம், காட்டுச் சீரகம், குங்குமப்பூ, நெல்லிமுள்ளி, ஏலம், நன்னாரிவேர், கீழ்க்காய்நெல்லி, இஞ்சி, வால்மிளகு, கோஷ்டம், அக்கிராகாரம், அதிமதுரம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், அருநெல்லி, இலந்தைப்பழம், இளநீர், இம்பூரல், பச்சைக்கர்ப்பூரம், ஈச்சம்வெல்லம், எலுமிச்சம்பழம், கடாநாரத்தை, தான்றிக்காய், செவ்வல்லிப்பூ, கருவேப்பிலை, பாசிப்பயறு, சடாமாஞ்சி, கோரங்கிழங்கு, முசுமுசுக்கை, சந்தனம், கழுதைப்பால், களாவேர்,

Koviloor Digital Library

கிரந்திநாயகம், சர்க்கரை, சிவதைவேர், கருங்குருவைக்காடி, கண்டுபாங்கி, வில்வவேர், பற்படாகம், நாகம், நற்பசலி, நீராரை, நெய்தற்கிழங்கு, பேய்ப்பாச்சோற்றிலை, பேய்முசுட்டை, மணலிக்கீரை, வல்லாரை, பேய்க்குமட்டிப்பழம்.

கபநிவாரணிகள்.

திப்பலி, சிற்றரத்தை, பேரரத்தை, ஆனைத்திப்பிலி, சிறுதேக்கு, மிளகு, கிராம்பு, நெல்லிமுள்ளி, வால்மிளகு, கடுக்காய், கடுகு, அக்கிராகாரம், அதிமதுரம், தாளகம், இந்துப்பு, வெள்ளுள்ளி, ஏலம், ஓமம், கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், தேன், கற்கண்டு, தேவதாரம், கோஷ்டம், சடாமாஞ்சி, வல்லாரை, பிரமி, சிறுசெருப்படை, கரிப்பான், அளிசம்வேர், கருங்காக்கரட்டான், தூதுளை, இண்டு, கண்டங்கத்திரி, ஆதண்டைவேர், இம்பூரல், எருமைக்கிடாரிச்சாணி, மேனிவேர், செம்முள்ளி, சங்கின்பழம், கச்சநாரத்தம்பழம், இலுப்பைப்பிண்ணாக்கு, சிறுசெந்தொட்டிவேர், முள்ளிக்கத்தரிவேர், அமுக்கிரா, முயல், முள்ளெலி, வேப்பெண்ணெய், வாலுளுவையரிசி, வெளிச்சிப்பிசின், செவியம், பரங்கிப்பட்டை, சிவதை, நேர்வாளம், சிறுதேக்கு, வாய்விளங்கம், கோரங்கிழங்கு, பெருங்காயம், இலவங்கப்பத்திரி, தாளிசப்பத்திரி, காட்டுச்சீரகம், இலவங்கப்பட்டை, சண்பகப்பூ, குங்குமப்பூ, தான்றிக்காய், நெல்லிக்காய், ஜாதிக்காய், கோரோசனை, வில்வவேர், பழந்தின்னிவௌவால், மஞ்சட்சாரைநெய், ஆவின்நெய், வெள்ளாட்டுநெய், அதன்பால், முசுமுசுக்கையிலை, கடம்பவித்து, விஷ்ணுகரந்தை, அரசம்வித்து, அத்திவித்து, நாங்கூழ்ப்பூச்சி, தேற்றாவித்து, இளங்கொட்டைப்பாக்கு, வெற்றிலை, உகாயிலை, கஸ்தூரி, கஞ்சாங்கோரை, உடும்புநெய், உருக்குச்சிந்தூரம், அண்டத்தைலம், முசுருமுட்டை, நன்னாரிவேர்.

சுரம் தோஷம் சன்னி நிவாரணிகள்.

ஆடாதோடை, நிலவேம்பு, பெருங்குமிழ், பேராமுட்டி, கோரங்கிழங்கு, தும்பை, கொடுவேலிவேர், சீந்திக்கிழங்கு, செந்தொட்டிவேர், பற்படாகம், கோரோசனை, சிற்றாமுட்டி, அவுரிவேர், ஓமம், சிவன்வேம்பு, கருநாவி, கருந்துளசி, சிறுகாஞ்சோரி, கோஷ்டம், கௌரிபாஷாணம், தாளகம், சிறுதேக்கு, அரத்தை, சடாமாஞ்சி, கண்டதிப்பலி, சிறுநாகப்பூ, சண்பகப்பூ, கிராம்பு, இலுப்பைப்பூ, விலாமிச்சம்வேர், திருநீற்றுப்பச்சை, இஞ்சி, தாளிசபத்திரி, கொம்பரக்கு, குங்குமப்பூ, கஞ்சாங்கோரை, வலம்புரிக்காய், சிற்றரத்தை, பேரரத்தை, இலவங்கப்பத்திரி, கருஞ்சீரகம், வாய்விளங்கம், செவியம், ஏலம், பெரியஏலம், மல்லி, மிளகாயிலை, மரமஞ்சள், மனோசிலை, மாசிப்பத்திரி, திரிகடுகு, மாவிலிங்கப்பட்டை, வெள்ளுகாம்பட்டை, வில்வவேர், முட்காய்வேளை, வெருகங்கிழங்கு, வாகைவேர், விஷ்ணுகரந்தை, வேப்பீர்க்கு, வெள்வேல்வேர், வன்னிப்பட்டை, வட்டக்கிலுகிலுப்பை, தும்பைப்பூ, வேளைப்பூ, நொச்சிப்பூ, கருநாவி, பாஷாணம், வெண்ணாவி, கௌரி, இரசசிந்தூரம், இலிங்கம், இரசகர்ப்பூரம், கள்ளிக்கொழுந்து, வெள்ளெருக்கம்பூ, பேய்ப்புடல், தாமிரபஸ்பம், வேப்பெண்ணெய், வெள்ளைப்பூடு, கோழிமுட்டை, முசுருமுட்டை, எருக்கம்வேர், கண்டங்கத்திரி, தூதுளை, முருங்கைவேர்.

Koviloor Digital Library

சிரசுநோய் பீனசம் நீரேற்ற நிவாரணிகள்.

ஆதண்டை, இண்டு, கசகசா, கடம்பவித்து, காட்டாமணக்கிலை, வெள்ளுள்ளி, குங்குமப்பூ, சதகுப்பை, சிற்றரத்தை, திரிகடுகு, கருஞ்சிற்றகத்தி, சூரியகாந்தி, தாளகம், மலைதாங்கிப்பூண்டு, வெண்காக்கரட்டான், அகத்தியிலை, அரைக்கீரை, கார்கோலரிசி, தேவதாரம், கஸ்தூரிமஞ்சள், மஞ்சள், நெரியரிசிப்பால், மட்டிப்பால், சாம்பிராணி, அபின், ஊமத்தையிலை, பச்சைக்கர்ப்பூரம், கண்டங்கத்திரி, வெள்ளெருக்கம்பூ, அலரிப்பழுப்பு, குறட்டைப்பழம், கஞ்சா, கருஞ்சீரகம், நொச்சி, கருநொச்சி, குந்திருக்கம், தும்பை, மேனி, ஆடாதோடை, வாதமடக்கி, சவுரிப்பழம், தவசிமுருங்கை, நாய்வேளை, நிலக்கடம்பு, மருதோன்றிப்பூ, வெண்சாரணை, மூக்கரைச்சாரணை, சமுத்திராப்பழம், மிளகாய்.

செவிநோய் நிவாரணிகள்.

அபின், வில்வப்பழம், சுக்கு, மிளகாய், பன்றிமுள், வேப்பெண்ணெய், வலம்புரிக்காய், குங்குமப்பூ, குக்கில், நல்லெண்ணெய், கர்ப்பூரம், சதகுப்பை, செவியம், திப்பலி, தூதுளையிலை, நாய்வேளை, புங்கின்வித்து, மிளகு, மலைதாங்கிவேர், மாதுளம்பழம், விஷமூங்கிலிலை.

தந்தநோய் நிவாரணிகள்.

அபின், ஆலம்பால், கருங்காலிப்பட்டை, முள்ளங்கிக்கிழங்கு, பொடுதலை, நுணாஇலை, அதன்காய், சிவன்வேம்பு, கொழுஞ்சி, கொட்டைப்பாக்கு, சுக்கு, சீனக்காரம், ஆலவிழுது, நாயுருவி, பூலா, வேம்பு, கருவேல், பனம்பூ, அவலாக்கு, பிரப்பங்கிழங்கு, பெருங்காயம், அரபொடி, காசுக்கட்டி, கறியுப்பு, சேங்கொட்டைக்கரி, துவரையிலை, வெள்வேல், வெள்ளைக்குங்கிலியப்பற்பம், கல்நார்பற்பம்.

கண்டமாலை நிவாரணிகள்.

காஞ்சிரைவிதை, செங்கத்தாரிப்பட்டை, நிலவாகை, உகாய்வேர், சுடுதூரத்திவேர், கொல்லங்கோவைசமூலம், வெட்டிவேர், நரிவிரட்டி, எட்டிவேர், பெருந்தும்பை, மருதம்பட்டை, நிலக்குமிழம்வேர், காட்டுச்சீரகம், சங்கவேர்ப்பட்டை, சங்கங்குப்பி.

நெஞ்செரிவு நிவாரணிகள்.

பேரீச்சம்பழம், சுக்கு, மாதுளம்பழம், இஞ்சி, தேன், எலுமிச்சம்பழம்.

மார்புநோய் நிவாரணிகள்.

கரியபவளம், கலைமான்கொம்பு, கூகைநீர், சவ்வாது, தலைசுருளிவேர், தைவேளை, புளியம்பிரண்டை, பெருங்காயம், பேய்ப்புடல், வெள்ளாமணக்கிலை, முருங்கைப்பட்டை, கடுகு, வேலிப்பருத்தியிலை, சுக்கு.

மெய்க்கடுப்பு உளைவுவலி நிவாரணிகள்.

சிறுதேக்கு, சதகுப்பை, வாய்விளங்கம், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், மிளகாய், கண்டதிப்பலி, இலுப்பைவேர், ஆலசமூலம், கோட்டிகக்கிழங்கு

Koviloor Digital Library

தேற்றாங்கொட்டை, பெருங்காயம், நாரட்டாம்பட்டை, பெருமரத்துவேர், வாதமடக்கி, முப்புரண்டிவேர், வேப்பம்பட்டை, எட்டிக்கொட்டை, தூதுளையிலை, நாய்வேளை, சவுரிக்கொடி.

அருசி வாய்நீருறல் வாந்தி நிவாரணிகள்.

மஞ்சள், முந்திரிப்பழம், அட்டுப்பு, அருநெல்லி, வில்வவேர், எலுமிச்சங்காய், சீரகம், திப்பலி, இலந்தைப்பழம், நெல்லிக்காய், சருக்கரை, நாரத்தம்பழம், ஏலம், கடாநாரத்தை, கருவேப்பிலை, செங்கழுநீர்ப்பூ, ஆள்வள்ளிக்கிழங்கு, மல்லி, தாளிசபத்திரி, பச்சைகர்ப்பூரம், களாக்காய், குங்குமப்பூ, பழம்புளி, விளாம்பழம், தேன், சிவகரந்தை, கோரங்கிழங்கு, தமரத்தம்பழம், கொமட்டிமாதுளம்பழம், இஞ்சி, சடாமாஞ்சில், மிளகாய், இலவங்கப்பத்திரி, கண்டதிப்பலி, அக்கிராகாரம், காட்டுமல்லிகைவேர், பவளம், வெண்கரும்பு.

விக்கல் நிவாரணிகள்.

தாளிசபத்திரி, மயிலிறகுச்சாம்பல், தாமரைமணி, திப்பலி, சிற்றரத்தை, நெருப்புச்சாம்பல், அக்கிராகாரம், ஏலம், நாயுருவியரிசிவெதுப்பியதூள்.

பாண்டு சோகை வீக்க நிவாரணிகள்.

பூமிசர்க்கரைக்கிழங்கு, குளப்பாலைவேர், சாரணைவேர், காட்டாமணக்கின்வேர், கள்ளிவேர், தலைசுருளிவேர், கீழ்க்காய்நெல்லிவேர், கரிப்பான்சமூலம், கோமயம், வெள்ளாட்டுநீர், பால், அமுக்கிராக்கிழங்கு, வாய்விளங்கம், அயம், ஈசுவரமூலி, காந்தம், மண்டூரம், உருக்கு, திரிகடுகு, எருமைநீர், திரிபலை, புளியம்பட்டை, சுரைக்கொழுந்து, வெண்காரம், பொற்றலைக்கரிப்பான், கொல்லங்கோவைசமூலம், தக்கோலம், சிறுபூளைவேர், பூவந்திப்பழம், நீர்முள்ளிசமூலம், பாதிரிவேர், பித்தளைப்பற்பம், புளியிலை, பிரமியிலை, வாழைநீர், அதன் உப்பு, ஊசிமல்லி, நத்தைச்சூரி, மருட்கிழங்கு, வில்வஇலை, நாய்க்கொட்டாவேர், வெண்காக்கரட்டான்வேர், குறுஞ்சாயிலை, பூவரசம்பட்டை, வெங்காரம், வசந்தகூஷ்மாகரமாத்திரை, சிறுகீரைவேர், நெல்லிவேர், அரத்தை, வில்வவேர், நல்லவேளை, மிளகுதக்காளியிலை, தினைக்கஞ்சி, நாகணம், பூனைக்காலிவித்து, இளநீர், முத்து, மூசுமல்லிகை, வட்டக்கிலுகிலுப்பை.

நீரழிவுநிவாரணிகள்.

ஆவிரைப்பஞ்சாங்கம், கோரோசனை, அல்லிப்பூ, நாகமல்லி, காந்தம், ஜாதிலிங்கம், மருதம்பட்டை, கல்லத்திப்பட்டை, செங்கிளுவைப்பட்டை, பாதிரிப்பட்டை, குங்குமப்பூ, குரோசனிஓமம், கூழைக்கடாக்கறி, பொற்றலைக்கரிப்பான், சுடுதுரத்தி, செவ்வல்லிப்பூ, விடத்தையிலை, கூந்தற்பனையரிசி, நெளவற்பூ, அதன்பழம், வித்து, வேர், நீராரை, நீர்ப்பூலா, நெல்லிமுள்ளி, விளாம்பிசின், ஆவாரம்பிசின், கருவங்கம், முருங்கைப்பிசின், பொற்சீந்தி, பரங்கிப்பட்டை, அப்பிரகம், வெள்ளுள்ளி, கடலிராஞ்சிப்பட்டை, சிறுகட்டுக்கொடி, பொன்முசுட்டை, அஞ்சனக்கற்பற்பம், பஞ்சலோகம், காந்தம்,

Koviloor Digital Library

கருவேலம்பிசின, கோதுமை, ஆலம்பால், வெண்கலபற்பம், வாதாமபருப்பு, சரக்கொன்றைவேர், நெல்லிப்பட்டை, கல்மதம், அல்லிவித்து, எலிச்செவிக்கீரை, அதன்வித்து, கோழிக்கல்லீரல், இலுப்பைவேர், கருங்காலிப்பட்டை, அதன் பிசின், கருவேலம்பட்டை, அதன்வித்து, எள்ளு.

கிரிச்சரம், நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சிறுப்பு, கல்லடைப்பு சதையடைப்பு நிவாரணிகள்.

நீர்முள்ளி, சுரையிலை, நெரிஞ்சிவித்து, கோவையிலை, வெள்ளிவித்து, புங்கம்பூ, பனிக்கட்டி, பெண்துடரி, பேரீச்சம்பழம், மணத்தக்காளியிலை: காய், முருங்கைஈர்க்கு, குப்பைமுள்ளி, ஏலம், அரசம்விரை, அத்திவிரை, கசகசா, ஆண்துடரி, ஸ்கோல்விரை, எலிச்செவிக்கீரை, கல்நார், வெள்ளரிப்பிஞ்சு: வித்து, சாரப்பருப்பு, பெருங்குமிழ், ஏலம், ஜாலாமிசரி, வள்ளிக்கிழங்கு, நன்னாரிவேர், பூமிசர்க்கரைக்கிழங்கு, கல்லத்திப்பால், தேற்றாங்கொட்டை, ஈச்சங்கள், பனங்கள், ஓரிலைத்தாமரை, கல்மதம், கற்றாழை, சிறுகீரை, இளநீர், சிறுபீளைவேர், வாழைநீர், வெங்காரம், புளியங்கொட்டை, பெரும்பூசணிக்காய், சிலாசத்து, நண்டுக்கல், முள்வெள்ளரி, சோகி, பிண்ணாக்குக்கீரை, மாவிலிங்கம்பட்டை, குமட்டி, கக்கரிப்பழம்.

நீரெரிவு நிவாரணிகள்.

இலவங்கப்பட்டை, தண்ணீர்முட்டான், ஆலம்வித்து, இலவங்கப்பத்திரி, தாளிசபத்திரி, வல்லாரை, அகத்திப்பட்டை, ஆவிரைசமூலம், கல்மதம், பாதிரியிலை, அதன்மொட்டு, மொந்தன்வாழைப்பூ.

மேகம் பிரமியம் வெட்டை வெள்ளை நிவாரணிகள்.

கொடுவேலிவேர், தாமரைக்கிழங்கு, சங்கவேர், நன்னாரிவேர், பொற்சீந்திக்கிழங்கு, பற்பாடகம், மாவிலிங்கவேர், வெண்காக்கரட்டன்வேர், மொந்தன்வாழைக்கிழங்கு, உகாய்வேர், நவ்வல்வேர், ஆலம்விழுது, வெண்குங்கிலியம், குக்கில், நற்சீரகம், கொத்தமல்லி, கஸ்தூரி, மிளகு, திரிபலை, கோஷ்டம், கசகசா, அதிமதுரம், வால்மிளகு, அமுக்கிராக்கிழங்கு, ஸ்கோல்விதை, அவுரிவேர், ஓரிலைத்தாமரை, ஆவிரைசமூலம், மயிர்மாணிக்கம், ஆள்வள்ளிக்கிழங்கு, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, வாழைப்பூ, துத்தநாகம், இஞ்சிப்பூ, கழற்சியிலை, நெரிஞ்சிவித்து, கொட்டக்கரந்தை, கொம்பரக்கு, முளைக்கீரை, மிளகுதக்காளி, அகத்திவேர், செந்தாழம்பூ, தீம்பாலை, வங்கம், தொட்டால்வாடி, நண்டுக்கல், நரிப்பயற்றங்கொடி, பாதிரிப்பூ, பனைநொங்கு, புத்திரசீவிவிரை, புளியங்கொட்டைத்தோல், பூமிசர்க்கரைக்கிழங்கு, ஆலம்வித்து, அரசம்வித்து, நெய்க்கொட்டான்வேர், மாகாளிக்கிழங்கு, கொட்டிக்கிழங்கு, பழம்பாசி, சாரப்பருப்பு, காட்டாமணக்குப்பால், காண்டாமிருகக்கொம்பு, விளாம்பிசின், தேற்றாவிதை, ஜாலாமிசரி, ஆனைநெரிஞ்சிக்காய், கெருடக்கிழங்கு, முருங்கைப்பூ, கொன்றைப்பூ, சதாவேரிக்கிழங்கு, வல்லாரை, அப்பிரகம், நாகமல்லி, எலிச்செவிக்கீரை, காந்தம், கரிப்பாலை, கூகைநீர், கொத்தான்கொடி, கெருடக்கல், சங்கங்குப்பி, சந்தனம், தென்னம்பூ, விடத்தைப்பிசின், நெல்லிக்காய், கீரைவித்து.

Koviloor Digital Library

மேககாங்கை எரிவு மெய்வெளுப்பு நீக்கி உடலுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கும் பதார்த்தங்கள்.

பொன்னாங்காணி, செங்கழுநீர்க்கிழங்கு, அதன்பூ, வால்மிளகு, சன்னலவங்கப்பட்டை, அதிமதுரம், அத்திப்பழம், எலுமிச்சம்பழம், அருநெல்லிக்காய், இளநீர், நிலக்குமிழ், காட்டுவள்ளிக்கிழங்கு, கொட்டிக்கிழங்கு, கொடிமுந்திரிப்பழம், கொத்தான், கொம்பரக்கு, கோரங்கிழங்கு, ஐவிரலிக்கோவை, கோரோசனை, சண்பகப்பூ, முந்திரிப்பழம், கற்றாழை, பூசணிவித்து, பித்தளைப்பற்பம், பூலாங்கிழங்கு, பெருஞ்சீரகம், மந்தாரைப்பூ, வெருகங்கிழங்கு, ஆனைநெரிஞ்சி, வாழைக்கிழங்கு, வெந்தயம், நற்சீரகம், விஷ்ணுகரந்தை, கிரந்திநாயகம், விலாமிச்சம்வேர், வெட்டிவேர், சந்தனம், தாமரைப்பூ, மேற்படி கிழங்கு, குழிதாமரை, ஓரிலைத்தாமரை, பற்படாகம், கொத்தமல்லி, வால்மிளகு, கோஷ்டம், கசகசா, மாதுளம்பழம், அத்திக்கள், அத்திக்காய், அப்பிரகம், அப்பைக் கிழங்கு, அகத்திவேர்ப்பட்டை, அமுக்கிராக்கிழங்கு, அம்மன்பச்சரிசி, ஆமணக்கெண்ணெய், பச்சைக்கர்ப்பூரம், மலாக்காச்சந்தனம், வல்லாரை, பிசினிப்பட்டை, வெப்பூலா.

தேகபலம் தாதுபுஷ்டி வீரியவிருத்தி உண்டாக்கும் பதார்த்தங்கள்.

செங்கத்தாரி, செங்கற்றாழை, கருவேம்பு, நன்னாரிவேர், தாமரைக்கிழங்கு, ஆகாசகெருடக்கிழங்கு, அவுரிவேர், பொற்சீந்தி, வீழிவேர், மதனகாமப்பூ, பனங்கோவைவேர், பழுபாகற்கிழங்கு, ஆதாளம்பால், அறுகம்வேர், பரங்கிப்பட்டை, அமுக்கிராக்கிழங்கு, கொன்றைப்பூ, கோரங்கிழங்கு, பிரமிவேர், வல்லாரை, பொற்றலைக்கரிப்பான், நெல்லிக்காய், செருப்படைமூலம், செங்கழுநீர்க்கிழங்கு, நத்தச்சூரிவித்து, விராலிவித்து, கோரோசனை, கிராம்பு சாதிபத்திரி, மிளகு, கடுக்காய், வாலுளுவையரிசி, செங்கொட்டை, கஸ்தூரி, கருங்காலி, மண்டூரம், சிவகரந்தை, சர்க்கரைவேம்பு, சீரகம், புளியஞ்சிறுகீரை, வால்மிளகு, அப்பிரகம், சீந்திச்சர்க்கரை, பூமிசர்க்கரைக்கிழங்கு, தலைசுருளிவேர், கட்டுக்கொடிவேர், தண்ணீர்முட்டான்கிழங்கு, நெரிஞ்சிவித்து, தகரைவித்து, தாமரைவித்து, தேற்றாவித்து, எட்டிக்கொட்டை, அரசம்விதை, ஜாதிக்காய், அதிமதுரம், அத்திவித்து, அபின், குங்குமப்பூ, இலவங்கப்பட்டை, நெல்லிமுள்ளி, ஆடுதீண்டாப்பாளைவித்து, இலவம்பிசின், பாற்குரண்டி, ஐப்சாவித்து, உழுந்து, காட்டுவள்ளிக்கிழங்கு, சிட்டுக்குருவி, கௌதாரிக்கறி, உடும்புநெய், கானாங்கோழி, அரிசித்திப்பலி, எலிச்செவிக்கீரை, கசகசா, ஏலம், நற்சீரகம், உருக்கு, கஸ்தூரிமஞ்சள், கருணைக்கிழங்கு, ஓரிதழ்த்தாமரை, சிறுநாகப்பூ, இலவங்கப்பூ, கருங்கோழிக்கறி, கருஊமத்தம்வித்து, கல்மதம், கல்நார், களிப்பிரண்டைக்கீரை, பொன்முசுட்டை, கல்லாலின்வித்து, கஞ்சா, கருவப்பிசின்: வித்து, முருங்கைவித்து: பூ, ஜாலாமிசரி, ஆவிரைவித்து: பிசின், சாரப்பருப்பு, பேதானா, மருதம்வித்து, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், வாதாங்கொட்டை, ஸ்கோல்விரை, பருத்திவிரைப்பால், பிராய்வித்து, முந்திரிக்கொட்டை, பூனைக்காலிவித்து, நீர்முள்ளிவித்து, நாயுருவி வித்து, கோஷ்டம், சன்னலவங்கப்பட்டை, நாங்கூழ்ப்பூச்சி, இந்திரகோபப்பூச்சி,

Koviloor Digital Library

கொட்டிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, அப்பைக்கோவைக்கிழங்கு, சமுத்திராப்பழம், வில்வப்பழம், வாகைப்பிசின், விளாம்பிசின், விளாம்பழம், வீழிவித்து, கூகைநீர், குரோசானிஓமம், பவளம், முத்து, வெள்ளி, தாமிரம், தங்கம், நீலோற்பலப்பூ.

கண்ணோய் நிவாரணிகள்.

கோரோசனை, நற்சீரகம், சண்பகப்பூ, அதிமதுரம், அழுங்கோடு, தாமரைக்கிழங்கு, நிலக்குமிழ், அறுகம்புல், சிறுகீரை, தீம்பாலை, கற்றாழை, தாழைவிழுது, எலுமிச்சம்பழம், கடுக்காய், மாதுளம்பழம், கௌதும்பையிலை, நல்லெண்ணெய், செவ்வல்லிப்பூ, முலைப்பால், கருஞ்சீரகம், திப்பலி, பலகறை, கற்பூரவல்லி, செவியம், களாப்பூ, கிரந்தி நாயகம், கீழ்க்காய்நெல்லி, தும்பைப்பூ, குங்குமப்பூ, முதியார்கூந்தல், சடாமாஞ்சி, சுக்கு, சோதிப்புல், தகரை, நெல்லிக்காய், குழிதாமரையிலை, ஓரிலைத்தாமரை, துருசு, சீனிக்காரம், துத்தம், நவலோகம், காந்தம், ஆமையோடு, கலைமான்முதலிய பலமிருகங்களின் கொம்புகள், பீதரோகணி, சமுத்திராப்பழம், தேவதாரம், சந்தனம், எலுமிச்சம்பழம், நந்தியாவட்டைப்பூ, சிறுபூளை.

காமாலை நிவாரணிகள்.

வெள்ளறுகு, அவுரியிலை, பூலாங்கிழங்கு, பேய்ப்புடல், இவற்றுடன் பாண்டு சோகைக்குச் சொல்லியிருக்கிற பதார்த்தங்களையும் இதற்குபயோகப்படுத்தவும்.

விரோசன பதார்த்தங்கள்.

சிவதை, கடுக்காய், நிலவாகை, சூரத்தாவிரை, ரோஜாமொட்டு, இளங்கொட்டைப் பாக்கு, கற்றாழஞ்சோறு, அதன் சருகு, கரியபவளம், நேர்வாளம், நீர்வெட்டிமுத்து, காட்டாமணக்குவித்து, ஆதாளைக்கிழங்கு, கடுகுரோகணி, இந்துப்பு, களிப்பாக்கு, ஆமணக்கெண்ணெய், கொடிக்கள்ளி, மான்செவிக்கள்ளி, திருகுகள்ளி, சதுரக்கள்ளி, பாகலிலை, பூவரசம்பட்டை, மூக்குரட்டை, பிரமி, வெண்காக்கரட்டான், கருஞ்சீரகம், வாய்விளங்கம், முடக்கொத்தான், பேய்க்குமட்டி.

கிருமிச்சத்துருக்கள்.

பழுபாகற்கிழங்கு, சுண்டைக்காய், புரசவிதை, ஆடுதீண்டாப்பாளை, பரங்கிப்பட்டை, மிதிபாகலிலை, நிலவாகை, கடுகுரோகணி, ஈருள்ளி, பெருங்காயம், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், திப்பிலி, கருங்காக்கரட்டான், கருந்துளசி, சரக்கொன்றை, கோடகசாலை, மணலிக்கீரை, கொக்குக்கறி, சிட்டுக்குருவிக்கறி.

கிராணி அதிசாரம் மலக்கழிச்சல் நிவாரணிகள்.

கட்டுக்கொடிவேர், பொன்முசுட்டைவேர், ஜாதிக்காய், ஆனைக்கொம்பதிவிடையம், கஞ்சா, அபின், ஜாதிலிங்கம், திரிகடுகு, கசகசா, கடலிராஞ்சிப்பட்டை, கருவேலம்பட்டை, வெள்வேற்பட்டை,

Koviloor Digital Library

இலவங்கப்பட்டை, கருவாப்பட்டை, ஜாதிபத்திரி, காடிநீர், காட்டாத்திப்பூ, வசம்பு, பொடுதலை, ஓமம், காட்டுமல்லிகைவேர், குரோசானிஓமம், சடாமாஞ்சி, கோப்பிரண்டை, நாயுருவியிலை, நாய்வேளை, நௌவற்பூ, அதன்பட்டை, பொன்னூமத்தம்வித்து, முசுட்டை, முருங்கைப்பட்டை, கிராம்பு, வெள்ளெலிக்கறி, ஆவிரைசமூலம், உதியம்வேர், மாதுளைசமூலம், சீரகம், புரசம்பட்டை, வாலுளுவையரிசி, வெப்பாலையரிசி, சேங்கொட்டை, பரங்கிப்பட்டை, கோரங்கிழங்கு, பெருங்காயம், வெள்ளுள்ளி, சிறுநாகப்பூ, மல்லி, வில்வவேர், விளாம்பிசின், முக்காவேளை, சீந்தித்தண்டு.

இரத்தக்கடுப்பு சீதக்கடுப்பு நிவாரணிகள்.

அத்திப்பட்டை, அவரையிலை, அவுரியிலை, இலந்தையிலை, அரத்தை, தலைசுருளிவேர், மாங்கொட்டைப்பருப்பு, எழுத்தாணிப்பூண்டு, கடுக்காய்ப்பூ, மேற்படி பிஞ்சு, கவுதும்பை, களாப்பழம், சிற்றாமுட்டி, பெருந்தும்பை, பாவட்டங்காய், பாற்சொறிக்கீரை, மருக்காரைவேர், வட்டக்கிலுகிலுப்பை, ஈருள்ளி, வெதுப்படக்கி, வெந்தயம், வெள்ளாட்டுப்பால், வெள்ளுள்ளி, ஓமம், கருவேப்பிலை, கிராம்பு, சுண்டைவற்றல், மிளகுதக்காளி, கருவைக்கொழுந்து, வேப்பங்கொழுந்து, வல்லாரை, நெய்தற்கிழங்கு, வாழைப்பிஞ்சு, மணலிக்கீரை, மாசக்காய், நெல்லிமுள்ளி, வாழைப்பூ, தென்னம்பாளை, சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை, பூதகரப்பன்பட்டை, ஜாதிக்காய், எருமைத்தயிர், காசுக்கட்டி, கதலிப்பழம், புளியங்கொட்டைத்தோல், எலுமிச்சம்பழம், குளிமுட்டான், பருத்திப்பிஞ்சு, மாதுளம்பிஞ்சு, அபின், அம்மன்பச்சரிசி.

இரத்தமூல சீமூல நிவாரணிகள்.

அத்திப்பிஞ்சு, விடத்தையிலை, மாதுளம்பூ, உரலாமணக்கிலை, உடும்புநெய், கருணைக்கிழங்கு, வெண்காரம், கருவையீர்க்கு, தென்னங்குருத்து, பாளை, நாகமல்லி, நாயுருவி, வாழைக்கிழங்கு, பன்றிநெய், மிளகாய், அண்டிலக்கறி, அழுங்குக்கறி, மொந்தன்வாழைப்பழம், காந்தம், பழந்தேன், வெண்துத்தி, ஒட்டரைமரவேர், பேய்ச்சுரையிலை, கஞ்சாங்கோரை, வெண்கீரைத்தண்டு, வெள்ளைப்பூடு, கவுதும்பையிலை, பூமிசர்க்கரைக்கிழங்கு, உகாய்வேர், கோஷ்டம், காட்டாமணக்கிலை, பரங்கிப்பட்டை, பாகற்பழம், வெள்ளாட்டுக்கறி, நிலாவரை, சன்னலவங்கப்பட்டை.

மூலமுளை நிவாரணிகள்.

சாரணைவேர், வெருகங்கிழங்கு, கொடுவேலிவேர், மருட்கிழங்கு, காட்டுக்கருணை, கருணைக்கிழங்கு, பிரண்டை, புளியமடற்கிழங்கு, சேம்பிலை, அன்னபேதி, பேய்ச்சுரையிலை, துத்தநாகபற்பம், கடுகுநெய், வல்லாரை.

சூலை கிரந்தி நிவாரணிகள்.

பிரமி, செவியம், சேங்கொட்டை, மாவிலிங்கவேர், வீழிவேர், நாய்க்கொட்டான் வேர், சங்கவேர், வளையலுப்பு, சுடுதுரத்திமூலம்,

Koviloor Digital Library

நிலப்பனைக்கிழங்கு, இஞ்சி, சுக்கு, செருப்படை, வெண்கலபற்பம், நாகபற்பம், அப்பளாக்காரம், இந்துப்பு, வேம்பாடம்பட்டை, இண்டுவேர், விழுதியிலை, நீர்வெட்டிமுத்து, இலுப்பைவேர், இலைக்கள்ளிப்பால், எள்ளு, சவ்வீரம், பொடுதலை, மைக்கொன்றைவேர், வெண்சாரணை, வேலிப்பருத்தியிலை, சிறியாநங்கை, கருணைக்கிழங்கு, கழுதைலத்தி, காட்டாமணக்கிலை, வட்டக்கிலுகிலுப்பை, கழற்சியிலை, தும்பை, குப்பைமேனி, சங்கங்குப்பி, கௌரிபாஷாணம், இலிங்கம், நாய்வேளை, பலகறை, பாதரசம், முள்ளங்கிக்கிழங்கு, பாலைப்பட்டை, கருவங்கம், கல்லுப்பு, கற்றாழை, சிவன்வேம்பு, அழிஞ்சி, நுணாப்பட்டை, குன்றிக்கொடி, ஊமத்தையிலை, வேப்பெண்ணெய், கெந்தகம், கார்கோலரிசி, விழலரிசி, நெரியரிசி, காட்டுச்சீரகம்.

சூலை சூலைப்பிடிப்பு கடுப்பு நிவாரணிகள்.

கொடுவேலிவேர், சங்கவேர், பரங்கிப்பட்டை, தலைசுருளி, அயில்வேர், புங்கவேர், ஆவிப்பட்டை, வேலிப்பருத்தி, சரக்கொன்றைப்பட்டை, பிரமி, செவியம், மாவிலிங்கம்பட்டை, சேங்கொட்டை, உகாய்வேர், வளையலுப்பு, சுடுதுரத்திமூலம், கோரங்கிழங்கு, பிரப்பங்கிழங்கு, பெருச்சாளிக்கறி, பூவரசம்பட்டை, நாரட்டாம்பட்டை, மயிலாடுங்குருந்து, குத்தாக்குச்சிமிட்டி, தில்லைப்பட்டை, அதன்சருகு, வாய்விளங்கம், அக்கிராகாரம், வெள்ளறுகு, செங்கத்தாரி, பெருவாகைவேர், கடுகுநெய், நெய்க்கொட்டான், வெண்குங்கிலியம், குக்கில், அன்னபேதி, அத்திப்பால், கருங்கோழிக்கறி.

அரையாப்பு நிவாரணிகள்.

கொடுவேலிவேர், பொடுதலை, சேங்கொட்டை, இரசகர்ப்பூரம், வெள்ளுள்ளி, திரிகடுகு, கருடன்கிழங்கு, கவுதும்பை, புங்கவேர், ஆயில்வேர், காணம், சுண்ணாம்பு

கரப்பன் சொறி சிரங்கு நிவாரணிகள்.

அவுரி, அப்பைக்கிழங்கு, ஆடுதீண்டாப்பாளை, வீழிவேர், நாய்க்கொட்டான், புங்கவேர், வேலிப்பருத்தி, நரளைக்கிழங்கு, சிவன்வேம்பு, செங்கத்தாரிப்பட்டை, வெப்பாலை, ஈஞ்சறப்பாஞ்சான், பூவரசம்பட்டை, மருட்கிழங்கு, மருக்காரை, சரக்கொன்றை, கொடிக்கள்ளி, கரிப்பான், செருப்படை, சதாவேரிக்கிழங்கு, சுடுதுரத்தி, கருக்குவாயிலை, வக்கணத்திவேர், அந்தரத்தாமரை, பரங்கிப்பட்டை, அரத்தை, இலுப்பைப்பிண்ணாக்கு, பூனைக்காலிவித்து, இலைக்கள்ளி, ஊமத்தங்காய், எட்டிவித்து, நுணாப்பட்டை, எழுத்தாணிப்பூண்டு, ஐவிரலிக்கோவை, சிறுசின்னி, நீர்வெட்டிமுத்து, கடுகுரோகணி, கஸ்தூரிமஞ்சள், கழுதைப்பால், கருஞ்சேம்பையிலை, கருவேலம்வேர், காட்டாமணக்கிலை, கருஞ்சீரகம், கார்கோலரிசி, குறுஞ்சாயிலை, குரோசானிஓமம், கொல்லங்கோவைக்கிழங்கு, சங்கங்குப்பி, கழுதைலத்தி, ஜாதிலிங்கம், சிறுகாஞ்சோறி, பொன்முசுட்டை, பொன்னாவிரை, குரட்டையிலை, குமிழம்பழம், புங்கின்நெய், புரசவித்து, தகரை, சிவகரந்தை, புன்னைப்பூ, பேய்மிரட்டி, நீர்ப்பூலா, அமுக்கிரா, முடக்கொத்தான்,

Koviloor Digital Library

செவ்வல்லிக்கொடி, குளப்பாலை, கருநொச்சி, கானாங்கோழிக்கறி, குங்கிலியம், மருதோன்றி, மிருதாரசிங்கி, பச்சைக்கர்ப்பூரம், தேங்காய்நெய், சாரணைக்கிழங்கு, விளாவரிசி, தக்கோலம், வாய்விளங்கம், மஞ்சள், பெருஞ்சீரகம், மிளகு, தாளிசபத்திரி, சந்தனம், மான்செவிக்கள்ளி, வட்டக்கிலுகிலுப்பை, நரிக்கொன்றை, மிளகுதக்காளி, வன்னிப்பட்டை, வெள்ளறுகு, இரதம், கெந்தி.

புண் புரை வீக்கம் சிலந்தி நிவாரணிகள்.

முத்திருக்கஞ்செவிவேர், அத்திப்பட்டை, கிரந்திநாயகம், அம்மன்பச்சரிசி, அரளிப்பூ, உதியம்வேர், கருஞ்சேம்பையிலை, அரக்கு, ஆலம்பால், ஆவிரையிலை, ஆமணக்கிலை, ஊமத்தையிலை.

கை காலில்விழும் கறுப்பைநீக்கும் பதார்த்தங்கள்.

தாமரைக்கிழங்கு, வல்லாரை, அமுக்கிராக்கிழங்கு, எட்டிவித்து, காட்டுச்சீரகம், துத்திவிரை, நிலப்பனைக்கிழங்கு.

கைகால் முகத்திலுண்டாகும் வெள்ளைக்கு.

சீந்தி, நிலவாகை, சிறுசின்னி, சிவன்வேம்பு, வெள்ளறுகு, வகைக்குப் பலம் 1, திரிகடுகு, அக்கிராகாரம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, வகைக்கு வராகனெடை 1, இவைகளின் தூளை திரிகடிப்பிரமாணம் தேனிற்சாப்பிட்டுவரவும்.

குஷ்டம் குறைநோய் நிவாரணிகள்.

சங்கவேர், பழுபாகற்கிழங்கு, தலைசுருளி, பொன்முசுட்டைவேர், ஆனைநெரிஞ்சி, பிராய்வேர், ஆயில்வேர், புங்கவேர், வெள்ளறுகு, சிவன்வேம்புவேர், வெப்பாலைவேர், மருட்கிழங்கு, குருவிஞ்சிப்பூண்டு, சரக்கொன்றைவேர், பிரமிவேர், செருப்படைவேர், எட்டிக்கொட்டை, கருக்குவாய்மூலம், உசிலின்மூலம், கடம்பவிரை, கற்றாழைவேர், எருக்குவேர், கருங்காலிவேர், கடுகு, ஜாதிலிங்கம், சவ்வீரம், நாவி, மருதோன்றிப்பூ, கொல்லங்கோவைக்கிழங்கு, சேங்கொட்டை, சடாமாஞ்சி, திரிபலை, வாய்விளங்கம், திரிகடுகு, நீர்வெட்டிமுத்து, நெரியரிசி, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், தாமிரபற்பம், நெல்லிக்காய், கெந்தி, நாகமல்லிவித்து, தாளகம், மருதம்பட்டை, விளாவரிசி, வேப்பம்பட்டை, கட்டுக்கொடிவேர், துத்திவிரை, திருகுகள்ளி, செவ்வல்லிக்கொடி, நாய்க்கொட்டான், ஆடுதீண்டாப்பாளை, சங்கங்குப்பி.

ஜடராக்கினியை விருத்திசெய்யும் பதார்த்தங்கள்.

திரிகடுகு, கடுகு, பெருங்காயம், விழலரிசி, தாளிசபத்திரி, நற்சீரகம், ஓமம், இஞ்சி, ஆனைத்திப்பிலி, கண்டதிப்பலி, மிளகாய், வில்வவேர், இலந்தைவேர், சுண்டைவற்றல், தைவேளைப்பூ, விளாம்பழம், வெள்ளுள்ளி, எவச்சாரம், கஞ்சா, அரசம்பட்டை, கருணைக்கிழங்கு, கண்டங்கத்தரிக்காய்,

Koviloor Digital Library

வெள்ளாட்டுப்பால், நெய்ச்சட்டியிலை, பேய்மருட்டி, சங்குசமூலம், சண்பகமரவேர், சிவகரந்தை, வால்மிளகு, செந்திராயிலை, துளசி, நாரத்தம்பழம், பாலைப்பழம், பாவட்டையிலை, தேன், முன்னை, கஸ்தூரிமஞ்சள், களாவேர், பிரண்டை, தங்கபற்பம், இளங்கொட்டைப்பாக்கு.

மருந்தீடு நிவாரணிகள்.

பிராய்வேர், வேலிப்பருத்திவேர், வல்லாரை, அகத்தியிலை, எலுமிச்சம்பழம், பெரும்பூசணிக்காய், நன்னாரிவேர்.

தழுதணை நிவாரணிகள்.

சங்கவேர், வீழிவேர், பழுபாகற்கிழங்கு, சரக்கொன்றைவேர், கழுதைப்பால், வட்டத்தகரை.

உன்மத்த நிவாரணிகள்.

பச்சைக்கர்ப்பூரம், கோரோசனை, பற்படாகம், வெட்டிவேர், நன்னாரிவேர்.

தலைவலி நிவாரணிகள்.

அவரையிலை, கஸ்தூரி, சூஸ்திரநாபி, கருஞ்சீரகம், கருஞ்செம்பை, கருநொச்சி, கிச்சிலிக்கிழங்கு, குந்திருக்கம், சவரிப்பழம், சவ்வாது, சாம்பிராணி, செந்தாழம்பூ, தமரத்தம்பழம், நந்தியாவட்டைப்பூ, நாகணம், மஞ்சட்கிழங்கு, மட்டிப்பால்.

தேமல் நிவாரணிகள்.

சங்கவேர், சரக்கொன்றைவேர், கேதகிப்பூ, கொட்டிக்கிழங்கு, திரிசாதம், நிலஆவிரை, புங்கின்வித்து, மருதோன்றி, பெருமரத்துப்பட்டை, நிலவாகை.

மாந்தம் கணம் பிரளி நிவாரணிகள்.

கடுகுரோகணி, வசம்பு, மஞ்சள், பெருங்காயம், கருஞ்சீரகம், நாய்க்கடுகு, நாய்வேளை, வெள்ளுள்ளி, செவ்வாமணக்கிலை, ஆமையோடு, கஞ்சாங்கோரை, கருங்காக்கரட்டான், குழிமுட்டான், தழுதாழையிலை, நீர்ப்பூலா, விழுதியிலை, வெண்கலபற்பம், திருநீற்றுப்பச்சை, ஓமம், நாய்க்கடுகு, கார்ப்பூரவல்லி, அவுரியிலை, நிலக்குமிழ், வெதுப்படக்கி, பேய்மிரட்டி, தும்பையிலை, தூதுளையிலை, பிரண்டையிலை, பொடுதலை, பேய்முசுட்டை, வேப்பீர்க்கு, முருங்கையீர்க்கு, சிறுபூளை, வேலிப்பருத்தி.

பருப்படுவன் நிவாரணிகள்.

குளப்பாலைவேர், குதிரைவாலிப்பூண்டு, சண்பகமரவேர், செவ்வல்லிக்கொடி, மருதோன்றி, விழுதியிலை, விஷமூங்கிலிலை, சீராசெங்கழுநீரிலை, பச்சை, சங்கு, அகத்தியிலை, கோவையிலை, சவ்வாது, புனுகு, வெண்ணெய்.

Koviloor Digital Library

பிளவை நிவாரணிகள்

பிளவைகொல்லிப்பூண்டு, ஆடுதீண்டாமூலி சமூலம், பாதிரிவேர், விராலியிலை, ஆயில், புங்கவேர், மாவிலிங்கவேர், உகாவேர், முத்தெருக்கன் செவி, பரங்கிப்பட்டை, சிவனார் வேம்பு.

சிலந்தியிலுள்ள பூச்சிக்கடி நிவாரணிகள்

ஆடுதீண்டாப்பாளை, ஏலம் தான்றிக்காய் மனோசிலை, வேப்பெண்ணெய், சூடன், நாய்க்கொட்டான், ஆயில், மரட்கிழங்கு, பொடுதலை, வேப்பிலை, பாகலிலை, காஞ்சிரை.

பித்தவிரிவு நிவாரணிகள்.

சிவன்வேம்புவேர், சேங்கொட்டை, ஆலம்பால், பூவரசம்பழுப்பு, துருசு, சுண்ணாம்பு, கார்மேகத்தைலம்.

எலும்புருக்கி நிவாரணிகள்.

அத்திவிரை, கசகசா, அதிமதுரம், அரக்கு, உழுந்து, நிலப்பனைக்கிழங்கு, குங்கிலியம், குட்டிவிளா, திரிகடுகு, நெல்லிமுள்ளி, ஆனைநெரிஞ்சி, வாழைநீர், வெள்ளிப்பற்பம்.

தாகம் நாவறட்சி நிவாரணிகள்.

வெந்தயம், வெள்ளீயப்பற்பம், விளாவேர், விலாமிச்சவேர், பெருஞ்சீரகம், பேய்ப்புடல், வால்மிளகு, மருதம்பட்டை, மாதுளம்பழம், முப்புரண்டி, ரஸ்தாளிக்கரும்பு, தாளிசபத்திரி, சன்னலவங்கப்பட்டை, நற்சீரகம், முசுருமுட்டை, அரசவித்து, பேரீச்சம்பழம், அதிமதுரம், கோரங்கிழங்கு, அருநெல்லிக்காய், நெரிஞ்சி, இலுப்பைப்பூ, பச்சைக்கர்ப்பூரம், உருத்திராக்ஷம், நெல்லிமுள்ளி, எலுமிச்சம்பழம், எலிச்செவிக்கீரை, விடத்தைவேர், கிளாவேர், தும்பைப்பூ, குங்குமப்பூ, கற்கண்டு, துளசி, நெற்பொரி, ஆனைநெரிஞ்சி, பற்படாகம், திப்பலிமூலம், செந்தட்டி, நாரத்தம்பழம், நன்னாரிவேர், பலகறைப்பற்பம், பவளம், முத்து, செவியம், அக்கிராகாரம்.

அடிபட்டவீக்க நிவாரணிகள்.

தலைசுருளி, ஆளிவிரை, அமுக்கிரா, ஐவிரலிக்கோவை, சாரணைவேர், கரியபவளம், கற்கோவை, பூமிசர்க்கரைக்கிழங்கு, கொடுவேலிவேர், கௌரிபாஷாணம், தேற்றாவித்து, பூவரசம்பட்டை, பனங்கோவை, வட்டக்கிலுகிலுப்பை, மஞ்சட்கிழங்கு, மூங்கிற்குருத்து, முசற்காதிலை, வெள்ளாட்டுநீர், எருக்கம்பட்டை, கஸ்தூரிமஞ்சள், அக்கிராகாரம், நத்தைச்சூரி, பொடுதலை, மரட்கிழங்கு, மெழுகு, சதையொட்டியிலை.

சிலந்திவீக்க நிவாரணிகள்.

வெள்ளுள்ளி, ஈருள்ளி, பெருங்காயம், மிளகு, காஞ்சிரைவிதை, ஆளிவிதை, நெரியரிசி, வெந்தயம், கடுகு, கள்ளிப்பால், எருக்கம்பால், மணிப்பிரண்டைக்கிழங்கு, விஷமூங்கிலிலை, பிரமியிலை.

Koviloor Digital Library

மேகக்கட்டி நிவாரணிகள்.

இலவங்கப்பத்திரி, வாகைப்பிசின், வெட்டிவேர், ஊமத்தையிலை, எட்டிக்கொட்டை, எருக்கம்பால், கருடக்கிழங்கு, கருநாவி, காட்டாமணக்கம்பால், மேற்படி இலை, பிரமியிலை, நரிக்கொன்றை, தொட்டிப்பாஷாணம், பொன்னாவிரை, சேங்கொட்டை.

தாபசோபம் நாவறட்சி நிவாரணிகள்.

கோரங்கிழங்கு, இஞ்சி, திப்பலிமூலம், விலாமிச்சவேர், வெட்டிவேர், சதாவேரிக்கிழங்கு, பன்னீர்ப்பூ, முசுட்டையிலை, முலைப்பால், வாழைக்கிழங்கு, வாகைவேர், உடும்புநெய், பனிக்கட்டி, சாம்பிராணி, கற்கண்டு, சிற்றரத்தை, முந்திரிப்பழம்.

மயக்க நிவாரணிகள்.

முன்னை, எலுமிச்சம்பழம், கடுகு, இலவங்கப்பூ, காடிநீர், பசுமுன்னை, செவ்வந்திப்பூ, மருக்காரைப்பழம், மாதுளம்பழம், விலாமிச்சவேர், வெட்டிவேர்.

பீலிகை நிவாரணிகள்.

உரலாமணக்கிலை, திரிபலை, காட்டாமணக்கிலை, கருநாவி, சீரகம், மருதோன்றி, வெள்ளெலியிறைச்சி, பேய்க்குமட்டிப்பழம், பஞ்சலவணம்.

உதரநோய் நிவாரணிகள்.

எருமைநீர், கடுகுநெய், கடுகுரோகணி, நாகணம், பேய்க்குமட்டி, பஞ்சலவணம், வெள்ளாட்டுநீர், அன்னபேதி, சிறுபுள்ளடி, சுக்கு.

கெர்ப்பநோய் நிவாரணிகள்.

கொடுவேலிவேர், அரசம்விதை, நாங்கூழ்ப்பூச்சி, கரியபவளம், ஐவிரலிக்கிழங்கு, கழற்கொடி, குருவிஞ்சிப்பூண்டு, கொட்டாங்கரந்தை, சேங்கொட்டை, நாகணம், பிரமி, பெருங்காயம், மலைவேம்பு, விழுதியிலை, வெண்துத்தி.

சூதகக்கட்டி சூதகவாயு நிவாரணிகள்.

பேய்க்குமட்டி, நேர்வாளம், முண்முருக்கம்பூ, விளாவித்து, புன்னைக்கொட்டை, இரத்தபோளம், கிட்டம், கச்சந்திராயிலை, நாய்க்கடுகு, நாயுருவிசமூலம்.

ஜலத்தைக்கட்டும் பதார்த்தங்கள்.

சிறுகட்டுக்கொடியிலை, நீர்ச்சுண்டி, பொன்முசுட்டை, நெட்டி, சிறுவிடுகபாள்ளிலை.

சலக்கழிச்சல் நிவாரணிகள்.

நவ்வல்வேர், ஆவிரைவேர், சூரைவேர், மலைதாங்கிவேர், ஆனைக்கொம்பதிவிடையம், அபின், காசுக்கட்டி, கருங்காலிவேர், சாதிபத்திரி, சிற்றேலம், மலைவேப்பம்பிசின், மாதுளம்பிஞ்சு, வல்லாரை.

Koviloor Digital Library

இரத்தக்கழிச்சல் நிவாரணிகள்.

உதியம்வேர், கீழ்க்காய்நெல்லிவேர், நீராரைக்கீரை, மாதுளம்பிஞ்சு, நீர்ப்பூலா, பூனைக்காலி, கடுக்காய்ப்பூ, மாசக்காய், தான்றிக்காய்.

பால்ஊறும் பதார்த்தங்கள்.

ஆலம்வித்து, மேற்படி விழுது, கோரோசனை, ஓரிலைத்தாமரை, குழிமிட்டான், சிறுபுள்ளடி, கச்சந்திராயிலை, வெள்ளைக்கீரை.

விரண நிவாரணிகள்.

மயிர்மாணிக்கம், வட்டக்கிலுகிலுப்பை, வத்தங்கி, துளசி, வாழைநீர், விராலி, பருத்தியிலை, பாதிரிவேர், பிரமி, வேம்பாடம்பட்டை, புன்னையெண்ணெய், பூலாங்கிழங்கு, வேப்பெண்ணெய், கடுக்காய்ப்பூ, வெள்ளாட்டுப்பால், வெள்ளி, காட்டாமணக்கிலை, கிளுவைவேர், கீழ்க்காய்நெல்லி, துத்தம், நரளைக்கிழங்கு, வெள்ளைக்குங்கிலியம், கொடுவேலிவேர், கோரோசனை, கோடகசாலை, தாமிரம், சவ்வீரம், நவ்வல்வேர், தொயில்க்கீரை, சாதிலிங்கம், முத்துளசி, தகரையிலை, முத்தெருக்கஞ்செவி, மிருதாரசிங்கி, தாளகம், நெரிஞ்சி, நீரடிவித்து, தொழுகண்ணியிலை, மனோசிலை, தேட்கொடுக்கு, நிலவிளா, நுணாவேர்ப்பட்டை, பரங்கிப்பட்டை, பிளவைகொல்லி, புளியிலை, பூவரசு சமூலம், மஞ்சள், மான்செவிக்கள்ளி, சரக்கொன்றை, துத்தி, ஊமத்தை.

விக்கல் நிவாரணிகள்.

அதிமதுரம், உருத்திராட்சம், தாமரைமணி, சீந்திச்சருக்கரை, தீம்பிரண்டை, நெல்லிக்காய், எலுமிச்சம்பழவித்து, தேன், மயிலிறகுச்சாம்பல், மாதுளம்பழம், வில்வவேர், மிளகுத்தக்காளி இலை, வலம்புரிக்காய், திப்பலி, சிற்றரத்தை, தாளிசபத்திரி, அக்கிராகாரம், நெருப்புச்சாம்பல், இந்துப்பு, மல்லி, அருநெல்லி.

ஜலதோஷ நிவாரணிகள்.

கருஞ்செம்பை, கருந்துளசி, துளசி, நன்னாரிவேர், கருநொச்சி, வெண்ணொச்சி, சாம்பிராணி, குங்குமப்பூ, கர்ப்பூரம், கொடுவேலிவேர், மஞ்சள், மருளூமத்தை.

தொண்டைக்கட்டு கம்மலுக்கு.

சிறுசெந்தட்டி, குமட்டிமாதுளம்பழம், சீரகம், செம்முள்ளி, கருப்புமணத்தக்காளி, செவியம், தமரத்தம்பழம், நாகமல்லி, பூவந்திப்பழம், மரட்கிழங்கு, தேன், திப்பலி, வெற்றிலை, கர்ப்பூரவல்லி, முருங்கையிலை, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள்.

உந்திப்புண் நிவாரணிகள்.

வாதாம்பருப்பு, மல்லி, சிறுகீரைவேர், வெந்தயம், மணத்தக்காளி, தேற்றாவித்து, நௌவற்பூ, வாழைப்பூ, அதன்பிஞ்சு, திரிபலை, மாசக்காய்,

Koviloor Digital Library

கோழிமுட்டை, செம்மறியாட்டுப்பால், ஆவின்பால், தேங்காய்ப்பால், பருத்திவிதைப்பால்.

வலிப்பு இசிவு நிவாரணிகள்.

எருமைக்கொம்பு, காகம், முசுருமுட்டை, முசல், ஓணான்நெய், கர்ப்பூரம், கழுதைக்குளம்பு, புன்னைக்காயெண்ணெய், பேய்த்தும்பை, பொற்கொன்றை, சேம்பு, வேலிப்பருத்தி, பேரரத்தை, வேப்பெண்ணெய், மயில்நெய், கடுகு, வெள்ளுள்ளி.

கருப்பத்தையழிக்கும் பதார்த்தங்கள்.

சணம்புவிதை, சவட்டுப்பு, நிலக்குமிழ், நுணாவேர், அதளைக்கிழங்கு, எருக்கம்பால், கச்சந்திராயிலை, திருகுகள்ளிப்பால், சூடன்.

வாந்தியையுண்டாக்கும் பதார்த்தங்கள்.

சீயக்காய், அளிசப்பட்டை, துருசு, இலுப்பைப்பிண்ணாக்கு, வாளம், பேய்ப்பீர்க்கங்கூடு, தேற்றான்பழத்தின்மேற்றோல், பாலொடுவை, பேய்ச்சுரைவேர், மருக்காரைவேர், கடுகு, ஈத்தலை.

வாத பித்த சிலேத்துமத்தைச் சமம் செய்யும் பதார்த்தங்கள்.

நெல்லிவேர், பசுவின்மோர், பழம்புளி, பச்சைவிலாமிச்சவேர், பனிக்கட்டி, நாக்கூழ்ப்பூச்சி, பெருங்குமிழ், பெருமரத்துப்பட்டை, மருக்காரைவேர், மலையேலம், கொடிமுந்திரிப்பழம், விழலரிசி, வெப்பாலையரிசி, வெற்றிலை, அருநெல்லிக்காய்.

கற்றாழைநாற்ற நிவாரணிகள்:– கோரங்கிழங்கு, கோஷ்டம், ஆவிரம்பூ.

சுரோணிதக்கட்டு நிவாரணிகள்:– அரத்தை, கூற்றங்குதம்பை, சலாசத்து, நரளையிலை.

காற்கடுவன் நிவாரணிகள்:– இலுப்பைப்பிண்ணாக்கு, தகரைவித்து, செங்குன்றி.

தலைக்குத்து நிவாரணிகள்:– அப்பைக்கிழங்கு, வெட்டிவேர்.

வாயுக்குத்து நிவாரணிகள்:– ஆடாதோடை, வேலிப்பருத்தி, சுக்கு, கடுகு, முருங்கப்பட்டை.

கன்னவீக்க நிவாரணிகள்:– அவுரியிலை, வசம்பு, சிற்றகத்தியிலை, திரிகடுகு.

நீர்க்கோவை நிவாரணிகள்:– சிறுசெந்தட்டி, தீம்பாலை, தூதுளம்பழம்.

விப்புருதி நிவாரணிகள்:– கருஞ்செம்பையிலை, சவ்வீரம், விராலி.

Koviloor Digital Library

தீச்சுட்டபுண் நிவாரணிகள்:– கற்பூரம், கற்கோவை, கற்சுண்ணாம்பு மேனியிலை, தேங்காய்நெய், பனங்கோவையிலை, வெட்டிவேர்.

நரம்பிலெழுங்கட்டி நிவாரணிகள்:– கல்த்துளசி, கூகைநீர், சலாசத்து, வெட்டிவேர், திரிபலை.

நரம்புச்சிலந்தி நிவாரணிகள்:– கள்ளிப்பட்டை, நறுவிலிவேர், சவர்ச்சலவணம்.

உதிரக்கட்டு நிவாரணிகள்:– கல்லுருவிப்பூண்டு, குங்குமப்பூ, சமுத்திராப்பழம்.

நரம்புப்பிடிப்பு நிவாரணிகள்:– மயில்நெய், நண்டுக்கொழுப்பு, சாரைநெய், ஆமணக்கெண்ணெய்.

தொண்டைவலி நிவாரணிகள்:– சிறுசெந்தட்டி, குமட்டிமாதுளம்பழம், கோஷ்டம், தேவதாரம், திப்பலி, கண்டதிப்பலி.

இரத்தவாந்தி நிவாரணிகள்:– ஈனாஎருமைச்சாணிப்பால், துத்திப்பூ, துணிசுட்டகரி, எள்.

துடைவாழை நிவாரணிகள்:– கருஞ்செம்பையிலை, சவ்வீரம், இரசகர்ப்பூரம், விராலி.

கழலைக்கட்டி நிவாரணிகள்:– உகாயிலை, ஆதாளைவித்து.

பிரசவ அழுக்கு நிவாரணிகள்:– கிளாவேர், மூங்கிலிலை, மாவிலிங்கம்பட்டை.

கால்வலி நிவாரணிகள்:– வாகை, வேம்பு, வெள்ளுகா, நாரட்டா, இவைகளின்பட்டை.

இடுப்புவலி நிவாரணிகள்:– குதிரைவரலி பொடுதலை.

கொட்டாவி நிவாரணி:– நிலக்குமிழ்.

நீராமை பெருவயிறு நிவாரணி:– காந்தம், கிட்டம், கோழியாவிரை, பஞ்சலவணம், கொடுவேலி, நண்டுக்கல்.

விந்தூறும் புஷ்பங்கள்.

துத்தி, முருங்கை, தூதுளை சண்பகம், பாதிரி, பன்னீர், ஆவிரை, செம்பருத்தி, வெண்தாமரை, செங்கழுநீர், நெரிஞ்சி, காட்டாத்தி, நெளவல், மைக்கொன்றை, அல்லி, செவ்வல்லி, ஆனைநெரிஞ்சி, பாற்குரண்டி, வில்வம், நந்தியாவட்டம், செம்பரத்தம், பிடா, செந்தாழை, செவ்வகத்தி, ரோஜா, காட்டுமல்லிகை, அருநெல்லி, கடுக்காய், எலுமிச்சை, நார்த்தை, நீலோற்பலமென்ற கருநெய்தல், இவைகளின் புஷ்பங்களாம்.

ரோகநிவாரணிகளின் தொகுதி முற்றிற்று.

Koviloor Digital Library

வியாதிகட்கு மூலிகைப் பிரயோகம்

கொடுவேலிவேர்ப்பட்டையை அரைத்து ஒருகொட்டைப்பாக்களவு அரைக்காற்படி ஆவின்பாலிலாவது வெள்ளாட்டுப்பாலிலாவது வியாதியின் வலிமைக்குத் தக்கதாக ஒரு மண்டலம் அரைமண்டலங்கொள்ளச் சுரம், வெட்டை, அரையாப்பு, வாயு, சூலைக்கட்டு, சூலைப்பிடிப்பு, வெடிசூலை, மேனியிற் கரடுமுரடாய்க் கட்டுஞ் சூலை, உள்மூலம், கருப்பத்தை அழிக்கும் கிரந்தி, யோனியைத்தின்னுங் கிரந்தி, செங்கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, கருப்பவாயு, தீரும்; மேனி பொன்போலாம், புளி தள்ளிப் பாலும் அன்னமுமாகப் பத்தியங்கொள்ளவும்.

ஒருபடி ஆவின்பாலில் ஒருபலக் கொடுவேலிவேர் நையத்தட்டிப்போட்டுப் பாலைச் சிவக்கக்காய்ச்சிப் பிரைகுத்தி வைத்திருந்து மறுநாட்கடைந்து வெண்ணெய் எடுத்து அந்தவெண்ணெயையும் மோரையும் அன்னத்துடன் புசித்து அந்தமோரைத் தானே தாகத்துக்குக்குடிக்கவும்; மூலமுளை வேரோடே அழுகி விழுந்துவிடும். இந்தப்படி மூன்றுமுறை செய்யவும். நோயாளனுடைய தேகஸ்திதிக்குத் தக்கபடி மேற்படி வேரின் அளவைக் குறைத்துக்கொள்ளலாம். மேற்படி வேரை வெள்ளாட்டின் பாலிற் கொள்ளச் சில்விஷம், விஷத்தாலுண்டாகும் வியாதிகள் தீரும்.

சஞ்சீவிமூலியென்ற நீலிவேர்ப்பட்டையை அரைத்துக் கொட்டைப்பாக்களவு ஆவின்பாலிலாவது வெள்ளாட்டுப்பாலிலாவது கொள்ள விஷஜெந்துக்களின் கடிவிஷமும், நஞ்சுப்பொருள் விஷமும், கரப்பன் வகைகளும் தீரும்; நரைதிரை மாறும்.

மேற்படி வேருடன் மிளகு, சிற்றரத்தை சேர்த்துக் கஷாயஞ்செய்து மூன்றுநாட்கொள்ள எண்ணெய்ச்சிக்கலாலுண்டாகும் நீர்த்தோஷம், சுரம், வெப்பு, நெஞ்சுச்சளி நீங்கும்; புளிதள்ளவும்.

மேற்படி இலையை அரைத்துக் கொட்டைப்பாக்களவு அரைக்காற்படி வெள்ளாட்டுப் பாலில் மூன்றுநாட்கொள்ள மஞ்சட்காமாலை தீரும்; புளிதள்ளவும்.

மேற்படி இலையை அரைத்துச் சிரங்கிற் பூசிவைத்திருந்து மாலையில் ஸ்நானம் செய்துவரத் தீரும்.

மகாமூலிஎன்ற ஆகாசகருடன்கிழங்கை அரைத்துக் கொட்டைப்பாக்களவு, ஆவின்பாலிற் கொள்ள நரைதிரைமாறும்; மேனி பொன்போல ஒளியுண்டாகும்; காலன் ஓடிஒளிப்பன்; சருவநோய்களும், நீங்காத விஷகடி நோய்களும், விஷமும், நீங்கும், புளி தள்ளிப் பாலும் அன்னமுமாய் ஆகாரங்கொள்ளவும்.

அப்பைக்கிழங்கைக் கொட்டைப்பாக்களவாக ஆவின்பாலிற்கொள்ள முலைக்குத்து, கடிவிஷம், கரப்பன் வியாதிகள் தீரும்; புளி, கரப்பன் பதார்த்தம், தள்ளவும்.

Koviloor Digital Library

வராகிமூலமென்ற நிலப்பனைக்கிழங்கை ஆவின்பாலிற்கொள்ள விந்துகட்டும், தாதுவுண்டாகும்; ஆண்மை மீறும்; தேகபலமுண்டாம்; தேகம் இறுகும்; தேகம் பொன்போற் பிரகாசிக்கும்; சகலவியாதியுந்தீரும்; சித்தர் தரிசனமுண்டாம்.

மேற்படி கிழங்கை மேனிச்சாற்றால் அரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிப் பல்வலிக்கும் பாகத்திற்றடவப் பல்வலி நீங்கும்; அதிலிருக்கும் புழுக்கள் சாகும்.

மேற்படி கிழங்கும், பூமிசர்க்கரைக்கிழங்கும், பூனைக்காலிவித்தும், சமன்தூக்கி ஆவின்பாலிற்கொள்ளக் கோசம்பூரித்து விம்மும்.

பங்கம்பாளை என்ற ஆடுதீண்டாமூலிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்களவு, வெள்ளாட்டுப்பாலிற் கலக்கிக்கொள்ளச் சகலவிஷங்களும், புண், பிளவை, சிரங்கு, வங்கு, பலகரப்பன், குஷ்டங்களும், தீரும்; சித்தர் தரிசனமுண்டாம்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் கருங்குருவை நெல்லுடன் அவித்து அவல் இடித்து வேளை ஒன்றுக்கு அரைக்காற்படி அவல் வீதம் ஒருமண்டலங்கொள்ளச் சிரங்கு, சொறி, குஷ்டம், தழுதணை, வங்கு, வண்டுகடி, அரணைகடி, செய்யான்கடி, பூரான்கடி, விஷங்களும், பதகிரி, வெள்ளைப்புள்ளி, கரப்பனும் தீரும். பாலும் மிளகுந்தேய்த்து ஸ்நானஞ்செய்துவரவும்; மூன்றுமாதம்வரை நல்லெண்ணெய், புணர்ச்சி நீக்கவும்.

மேற்படி மூலிகை சமூலம் இடித்துப் பிழிந்தசாறு, வெள்ளாட்டுப்பால், வெள்ளாட்டுநெய் வகைக்கு படி 1 ஒன்றாகக்கலந்து அதிற் காற்பல மிளகை அரைத்துப் போட்டுக்காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ்செய்துவரவும் மேற்படி வியாதிகள் தீரும்; வேப்பம் வித்து எண்ணெயில் மேற்படி மூலிகை சமூலம் அரைத்துப்போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ்செய்துவர மேற்படி வியாதிகள் தீரும்.

தாமரைக்கிழங்கை ஆவின்பாலிற்கொள்ள மேகம், வெட்டை, கிருச்சிரம் தீரும்; தேககாந்தியும், கண்ஒளிர்வும், குளிர்ச்சியுமுண்டாம்; காயசித்தியுண்டாம்.

மேற்படி மணிப்பருப்பைப் பொடித்து முலைப்பாலிற் கலந்துகொடுக்க விக்கல், நாவறட்சி தீரும்.

மேற்படி கிழங்கை ஆவின்பால்விட்டரைத்து நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சித் தேய்த்து ஸ்நானஞ்செய்துவரக் கண்ணுக்குக் குளிர்ச்சியும் ஒளியுமுண்டாம்.

குண்டலாதி மூலமென்ற சங்கம்வேரைப் பாலிற்கொள்ள் வண்டுகடி, குஷ்டம், தழுதணை, சொறி, தேமல், கிரந்தி, வெட்டை, சூலை, செங்கரப்பன், கருங்கரப்பன், சிறுசிரங்கு, பெருஞ்சிரங்கு தீரும்; தேககாந்தியுண்டாம்.

Koviloor Digital Library

மேற்படி வேர்ப்பட்டை பலம் ஒன்று, மிளகு பலம் அரை, ஆவின்பால் விட்டரைத்து உடம்பிற்றேய்த்து ஸ்நானஞ்செய்துவர மேற்படி வியாதிகள் தீரும்.

மேற்படி வேர்ப்பட்டைத்தூள் ஒன்று, மிளகு பலம் அரை, சர்க்கரை, பலம் ஒன்று கூட்டித்திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர மேற்படி வியாதிகள் தீரும்.

நன்னாரிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஆவின்பாலில் இருபதுநாட்கொள்ள மூலக்கொதிப்பு, அஸ்திகாங்கை, மேகச்சூடு, மேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர் இற்றுவிழுதல், மூத்திரக்கிருச்சுரம், பதினெட்டுச் சில்லரை விஷசெந்துக்களின் கடிவிஷங்கள், உள்வரட்சியினாற்காணும் இருமல், தாபசோபம் நீங்கும்; இந்த மூலியை நாட்படச் சாப்பிட்டுவந்தால் நரைதிரை மாறும்.

மேற்படி வேர், சீரகம், மல்லி, சமன் சூரணித்துச் சர்க்கரைகலந்து சாப்பிட்டுவர மேற்படி வியாதிகள் நீங்கும்.

அமுதவல்லி ஆகாசகெருடன் என்ற பொற்சீந்திவேரை அரைத்துக் கொட்டைப் பாக்கு அளவாக ஆவின்பாலிற் சாப்பிட்டுவரச் சகலமேகங்களும், சகலவிஷகடிகளும் சுரம், தோஷம், கபாலச்சூடு, வெட்டைகளும் நீங்கும்; இந்தமூலத்தை நாட்படச் சாப்பிட்டுவந்தால் அவமிருந்து விலகும்; தேகம் பொன்போலாகும்.

மேற்படி தண்டின்மாவும், வில்வப்பூவும், கோரோசனையும் சமன்கலந்து திரிகடிப்பிரமாணம் எருமைமோரிற் சாப்பிட்டுக் கொண்டுவர மேகநீரிழிவு நீங்கும்.

மரவீழி என்ற பூமிசர்க்கரைக்கிழங்கைப் பாலிற்கொள்ளப் பாண்டு, விஷபாக வீக்கம், மூத்திரக்கிருச்சுரம், மேகம், வெட்டை, தீரும்; காமம் மிகும்; நாதங்கட்டும்; நாவில் அமுதம் ஊறும்.

மேற்படி கிழங்கைப் பாலில் அவித்துக் காயவைத்துத் தூட்செய்து உழுந்து வறுத்துப் பொடித்தமாவும், எள்ளுப்பொரியும், சமன்கலந்து திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தேகபலமுண்டாம்; நாதங்கட்டும்.

பனங்கோவை பெருங்கோவை என்ற குறட்டை மூலத்தைப் பாலிற்கொள்ள நரை திரை மாறும்; சரசுவதி கடாட்சமுண்டாம்.

நல்லெண்ணெய் மேற்படி பழச்சாறு வகைக்குப் படி ¼ மிளகு, கருஞ்சீரகம், சிற்றரத்தை, சாம்பிராணி, வகைக்கு வராகனெடை 1 பொடித்துப்போட்டுப் பதமாகக் காய்ச்சித் தலைமுழுகிவரப் பீனசம் தீரும்; செம்பட்டைமயிர் கறுக்கும்.

முத்தக்காசு என்ற கோரைக்கிழங்கைப் பாலிற்கொள்ளக் கற்றாழைநாற்றம், பித்தத்தாலுண்டாகும் வீக்கம், சத்திசுரம், நாவறட்சி, தாபசோபம் நீங்கும்.

Koviloor Digital Library

மேற்படி கிழங்கு, மல்லி, பேய்ப்புடல், சுக்கு, சிற்றரத்தை, ஓர் அளவாகச்சிதைத்துக் கஷாயஞ்செய்து சாப்பிடப் பித்தசுரம் நீங்கும்.

பழுபாகல் மூலத்தைப் பாலிற்கொள்ளப் பலவிஷங்கள், குஷ்டம், தழுதணை, தொழுதணை, கிருமி, நீங்கும்; அந்தக்கிழங்கை நாட்படப் பத்தியமாய்ச் சாப்பிட்டு வந்தால் தேகம் பலக்கும்.

தலைசூடி என்ற தலைசுருளி மூலத்தைப் பாலிற்கொள்ள அரவுகடிவிஷம், சில்லரை விஷங்கள், விஷகரப்பன், குஷ்டம், சூலை, சொறிசிரங்கு தீரும்; தேகபலமுண்டாம்; விஷம் அமுதாகும்.

திசைக்கருடன் என்ற கட்டுக்கொடி மூலத்தைப் பாலிற்கொள்ள விஷகுஷ்டம் தீரும்; விந்து கட்டும்; உடல் இறுகும்; ஆனைப்பலமுண்டாம்; பேதிகட்டும்; மேற்படி இலை தண்ணீரைக்கட்டும்; நீரிழிவைப்போக்கும்.

மலைதாங்கி என்ற பொன்முசுட்டை மூலத்தைப்பாலிற்கொள்ள விந்து கட்டும்; குஷ்டம், வாயு, கடிவிஷம், மலக்கழிச்சல் நீங்கும். மேற்படி இலை தண்ணீரைக்கட்டும்; அதிமூத்திரத்தைச் சுருக்கும்.

இந்த இலை, மேற்படி கட்டுக்கொடியிலை, ஆவிரைக்கொழுந்து, இம்மூன்றையும் அரைத்துக் கொட்டைப்பாக்களவாகச் சாப்பிட்டுவர நீரழிவு பெருநீராய் அடிக்கடி இறங்குவதைச் சுருக்கும்; மேற்படி இலையைத் தண்ணீரில் ஊறவைத்து அந்தத் தண்ணீரைச் சாப்பிட்டுவர அதிதாகம் நீங்கும்; நாய்க்கொட்டான் மூலத்தைப் பாலிற்கொள்ள வண்டுகடி, சிலந்திப்பூச்சிக்கடி, மற்ற சில்லரை விஷசெந்துக்களின் கடிவிஷம், பெருவிஷகடி, கிரந்தி, பலவகைக்கரப்பன், வங்கு, சொறி, கருங்குஷ்டம், புண், புரை, வீக்கம் தீரும்.

பிராய்மூலத்தைப் பாலிற்கொள்ளப் பதினெட்டுவகை வண்டுகடி, வெண்குஷ்டம், கருங்குஷ்டம், விரியன்கடி விஷத்தாலுண்டாகும் குஷ்டம் நீங்கம்; சிராய்போல் உடலில் எழும்பும் சுரசுரப்பு நீங்கும்.

மேற்படி மரத்தின்பாலைப் பச்சைக்கடலைமாவிற் புரட்டிக் கடலைப்பிரமாணம் உண்டை செய்து சாப்பிட்டுவர நாதங்கட்டும்.

ஆயில்மூலத்தைப் பாலிற்கொள்ள அண்டவாதசூலை, பலவகைக்கிரந்தி, குஷ்டம், பிளவை, அரையாப்பு, வாதத்தில் எழுந்த நோய்கள், சில்லரைவிஷம் நீங்கும்.

புங்குமூலத்தைப் பாலிற்கொள்ள, புண் புரைகள், சூலை, அரையாப்பு, கிரந்தி, பலகரப்பன், குஷ்டம், சில்விஷம் தீரும்.

வெள்ளெருக்கின் மூலத்தைப் பாலிற்கொள்ளக் கிரந்தி, குஷ்டம், விஷங்கள், வண்டுகடி, செய்யான்கடி, அறுபுள்ளிவண்டுகடி, மரவட்டைக்கடி, குறைநோய் தீரும்.

வேலிப்பருத்தி மூலத்தைப் பாலிற்கொள்ளக் கடிவிஷம், கரப்பன், வெட்டை, பலவகைக் கிரந்தி, சூலை, மருந்தீடு, கை கால் பிடிப்பு, வாயு தீரும்.

Koviloor Digital Library

வெள்ளறுகு சமூலத்தைப் பாலிற்கொள்ளச் சில்லரைவிஷம், சிரங்கு, சொறி, குஷ்டம், கிரந்தி, வெட்டை, வெடிசூலை, காமாலை, விஷகரப்பன், வீக்கம் தீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் தண்ணீரில் வைத்து வெதுப்புடன் வாயில் விட்டுக் கொப்புளிக்கப் பல்வலி தீரும்.

சிவன்வேம்பு மூலத்தைப் பாலிற்கொள்ளத் தீராத சில்விஷம், காலிற்காணும் பிளப்பு, குஷ்டம், கரப்பன் வகைகள், வாயு தீரும்.

மேற்படி மூலிகை சமூலத்தையும் உலர்த்திச் சூரணஞ்செய்து சர்க்கரைகலந்து திரிகடிப்பிரமாணம் மண்டலங்கொள்ளக் குஷ்டம் பதினெட்டு, பாதத்திலுண்டாகும் விரிவு, மேல்தடிப்பு, படர்தாமரை, அரிப்பு, தேகத்தில் முள்ளுக்கொண்டு குத்துவது போற குத்துதல், திமிர், தலைநோய் தீரும்.

அறுபதுவருடஞ்சென்ற வேம்பின்வேர்ப்பட்டை, கொழுந்து, பூ, பிஞ்சு, இவைகளை ஓர்நிறையாக உலர்த்தி இடித்துத் திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலம் ஆவின்பால் நெய் தேனிற்கொள்ளச் சகலநோய்களும் தீரும்; தேகம் இறுகும்; நரை திரைமாறும்.

மேற்படி தூளில் வாழைப்பழத்தைப்புதைத்து நாற்பதாம்நாளெடுக்கக் காயாயிருக்கும்; அதைத்தின்னத் தேகம் கற்றூணாகும்; கிழவன் வாலிபனாவான்; தேகம் ஒரு போதும் தளராது.

செங்கத்தாரி (கருஞ்சூரை, செஞ்சூரை) மூலத்தைப் பாலிற்கொள்ளக் கரப்பன், கிரந்தி, செவ்வாப்புக்கட்டி, செங்கரப்பன், கொள்ளிக்கரப்பன் முதலான கரப்பன்களும், பலவிஷங்களும் தீரும்; மேற்படி பட்டையை அரைத்து உடம்பிற்பூச மேற்படி வியாதிகள் தீரும்.

தூதுளைய்ய ஆதித்தவாரத்தில் பிடித்துக்கொண்டு, சோடசகணபதி மூலமந்திரத்தை நூறு உருஜெபித்து, சமூலம் பிடுங்கி உலர்த்தித் தூட்செய்து திரிகடிப்பிரமாணம் ஆவின்பாலிற்கொள்ளப் பித்தம் நாற்பதும் தீரும். வெள்ளாட்டுநெய்யிற் கொள்ளக் கபம் தீரும். சிற்றாமணக்கெண்ணெயிற்கொள்ளச் சீரவறட்சி தீரும்.

மேற்படி இலையைச் சமைத்துத் தின்னப் பசியுண்டாம். மேற்படி பூவை நெய்யில் வதக்கியுண்ணத் தாதுபுஷ்டியுண்டாம். மேற்படி காயை அந்தப்படி சாப்பிட வாதபித்த சிலேத்துமம் நீங்கும். மேற்படி வேரை வெற்றிலை பாக்குடன் தின்றுவரத் திரிதோஷம் நீங்கும். தூதுளைசமூலம், பேய்ப்புடல், கரிப்பான், மிளகு, சீரகம், ஜாதிக்காய், கிராம்பு, வால்மிளகு, இவைகளைச் சூரணித்தப் பிட்டவித்து நெல்லிக்குச்சியாற்கிண்டி ஆற்றிச் சர்க்கரையிற்கொள்ள, காந்தல், வீக்கம், சோகை தீரும்.

சிற்றாமணக்கிலைச்சாறு, வேப்பெண்ணெய், சமன் கலந்து பதமாகக்காய்ச்சி வடித்து ஒருமண்டலம் புளிதள்ளிச்சாப்பிடக் கருங்குஷ்டம், வெண்குஷ்டம், சொரிகுஷ்டம், கிரந்தி, தழுதணை, குறைநோய், பெருவியாதி, திமிர், கிரந்திப்புண், தீரும்; ஆமணக்கெண்ணெய் பல அவுஷதங்களுக்கு

Koviloor Digital Library

ஆவதுமன்றி, உடலிலுள்ள வெப்பையும் மூலச்சூட்டையும் நீக்கி உடலை வளர்க்கும். மேற்படி எண்ணெய், கற்றாழைச்சோற்றின் நீர், ஈருள்ளிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, வகைக்குப் படி மாகாணி ஒன்றாகக்கலந்து அதில் ஒரு வராகனெடை வெந்தயத்தைப் பொடித்துப்போட்டுச் சாப்பிட விரோசனமாகும்; மலக்கட்டுத் தீரும்.

மேற்படி எண்ணெயில் கதலிவாழைப்பழம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, குங்குமப்பூ, கோரோசனை, கற்கண்டு இவைகளைப் பொடித்துப்போட்டு இரவியில் வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குக் கொடுத்துவர, கணை, பிரளி, மாந்தம், கரப்பன், தீரும்; மேனி பருக்கும், பளபளக்கும்.

மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலிற்கொள்ள ஒரு மண்டலத்தில் நரை திரை மாறும்; உடல் இறுகும்; பகலில் நட்சத்திரம் கண்ணுக்குத் தோற்றும்; குன்மம் எட்டுந்தீரும்.

நிலவாகைச் சமூலத்தை இடித்துத் தூட்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் ஆவின்நெய்யிற்கொள்ள உடம்பு பூரிக்கும்; தேனிற்கொள்ள உடம்பு வற்றும்; சிற்றாமணக்கெண்ணெயிற்கொள்ள எலிகடிவிஷம், சில்லரை விஷகடியும், ஏப்பமும், வெந்நீரிற்கொள்ளக் கிருமியும், பசுவின்மோரிற் கொள்ளக் கழியாமையும், எருமைமோரில் எலிகடிவிஷமும், எருமைச் சாணிப்பாலில் பாண்டுவும், எருமைப்பாலில் பெண்கள் கைமசக்கும் தீரும். பாகலிலைச்சாற்றிற் கொள்ள உடலில் தடிக்கும் செய்யான் விஷமும், மேனிச்சாற்றில் தேள்விஷமும், ஆலம்பழுப்புச்சாற்றில் பெருச்சாளிகடி விஷமும், வேம்பாடம்பட்டைச்சாற்றில் செவ்வட்டைகடியும், செம்மறிஆட்டுநீரில் அரணைகடியும், வீழிச்சாற்றில் விரியன் கடியும், தேசிப்பழச்சாற்றில் சர்வவிஷமும், பாகலிலைச்சாற்றில் நட்டுவக்காலிவிஷமும், அவுரியிலைச்சாற்றில் அரணை, வண்டுகடி, புடையன்குத்து, தவளை, குரங்கு, நாய், பிள்ளை, பேய்நாய், பேய்நரி, இவைகளின் விஷமும், கையாந்தகரை: கண்டங்கத்தரிச் சாற்றில் ஈழை, க்ஷயமும், கொடிக்கள்ளிச்சாற்றில் மாறற்சுரமும், குளிர்சுரமும், நல்லெண்ணெயில் விக்கலும், வெள்ளாட்டுநீரில் குஷ்டம், சோகை, காமாலையும், பசுவின்நீரில்கொள்ளச் சொறிசிரங்கு, உளைவு, பெருவயிறு, மகோதரம், நீராமையும் நீங்கும்; புளி, புகையிலை, தள்ளவும்.

வெப்பாலை மூலத்தைப் பாலிற்கொள்ளக் குஷ்டம், சில்விஷம், கரப்பன், வண்டுகடி, முதலிய வியாதிகள் தீரும்.

குளப்பாலை மூலத்தைப் பாலிற்கொள்ள எலிகடிவிஷம், விஷகரப்பான், உடல்சுரப்பு, கால்சுரப்பு, சருவவிஷகடிவீக்கம், பரு, படுவன் தீரும்.

முத்தெருக்கஞ்செவி மூலததைட்பாலிற்கொள்ள முகவசியமுண்டாம்; சிறியமுலை பருத்து விம்மும்; கரப்பன், சில்விஷம், சிலந்தி, பரு பிளவை, புண் தீரும்.

Koviloor Digital Library

பூவரசு மூலத்தைப் பாலிற்கொள்ளச் சொறிகிரந்தி, கரப்பன், விஷகரப்பன், வீக்கம், சில்விஷம் தீரும்.

அறுகுமூலத்தைப் பாலிற்கொள்ளச் சகல விஷமும் தீரும்; தேகபலமுண்டாகும்; நரை திரை மாறும்; நரம்புகள் இறுகும்; மூலச்சூடு, வெட்டை, நீர்க்கடுப்பு நீங்கும்.

மேற்படி மூலத்துடன் மிளகு, சீரகம், அதிமதுரம், மாதுளம்பூ, இவைகளைக் கஷாயஞ்செய்து அதில் ஆவின்வெண்ணெய் போட்டுக்குடிக்க மேற்படி வியாதிகள் தீரும்.

அமுக்கிராக்கிழங்கைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்; மேனி காந்தியாகும்; தேகத்திலுள்ள துர்நீர், கபம், சூலை, கரப்பன், பாண்டு, வெப்பு, வெட்டை, வீக்கம், கட்டி, பித்தக்கிருகிருப்பு நீங்கும்.

மேற்படி வேரைப்பாலில் அவித்துச் சுத்திசெய்து இடித்ததூள் வராகனெடை 94 இலவங்கம் வராகனெடை 1 சிறுநாகப்பூ வராகனெடை 2 மிளகு வராகனெடை 8 திப்பலி வராகனெடை 101 இவைகளைச் சூரணித்து ஒன்றாகக்கலந்து சரிஎடை சர்க்கரைசேர்த்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவர க்ஷயம், இருமல், புகைச்சல், அரோசிகம், தாதுநஷ்டம் தீரும்.

மரட்கிழங்கைப் பாலிற்கொள்ள மூலம், கரப்பன், புண், சிலந்தி, வண்டுகடி, எரிகுஷ்டம் தீரும்.

மேற்படி மரளை வாட்டிப்பிழிந்து சிசுக்களுக்குக் கொடுக்க நெஞ்சிற் கபக்கட்டு, கரப்பன், செங்கிரந்தி, கருங்கிரந்தி தீரும்.

சரக்கொன்றை மூலத்தைப் பாலிற்கொள்ள வண்டுகடி, குஷ்டம், சொறி, தேமல், விஷநீர், வாதசூலை, வாதகரப்பன் தீரும்.

மேற்படி பூவையும், கொழுந்தையும், அரைத்துப் பாலிற்கொள்ளப் பிரமியம், வெட்டை, காமாலை, பாண்டு, பித்தம், விஷபாகவீக்கம் தீரும்.

மேற்படி பூவை எலுமிச்சம்பழச்சாற்றாலரைத்து உடம்பிற்றேய்த்துக் குளித்துவரச் சொறி, கரப்பன், தேமல் பற்றுத்தீரும்.

ஆவிரைப் பஞ்சாங்கத்தைப் பாலில் ஒருமண்டலங்கொள்ள நீரழிவு, பிரமேகம், ஆண்குறியெரிவு நீங்கும்.

மேற்படி வேர்ப்பட்டை, கல்லித்திப்பட்டை, மருதம்பட்டை, சரக்கொன்றைப் பட்டை, இவைகளைக் கஷாயஞ்செய்து அதிற் கல்மதத்தை உரைத்துச்சாப்பிட நீரழிவு தீரும்.

காட்டாமணக்கு மூலத்தைப் பாலிற்கொள்ளக் குஷ்டம், பாண்டு, சோகை, காமாலை, வீக்கம், வயிற்றுக்கட்டி, பெருவயிறு தீரும்; மேற்படி முத்துப்பருப்பைப் பாலிற்கொடுக்க விரோசனமாகும். கொடிக்கள்ளி மூலத்தைப் பாலிற்கொள்ளச் சோகை பாண்டு, விஷபாகவீக்கம், கெண்டை,

Koviloor Digital Library

மகோதரம், வயிற்றுச்சூலை, கரப்பன், எலிகடி விஷம் தீரும்; மேற்படி இளங்கொழுந்தைப் பிட்டவித்துப் பிழிந்த சாறு படி அரைக்காலில் கொஞ்சம் மிளகுத்தூள் போட்டுக்கொடுக்க மேற்படி வியாதிகள் தீரும். பத்தியம் மோர் அன்னம் சாப்பிடவும்; விரோசனமாகும்.

மிளகு, மேற்படி கொழுந்து, வெள்ளெருக்கம்பூ, இம்மூன்றையும் வகைக்கு ஒரு வராகனெடை வீதம் சிதைத்துக்கொடுக்கக் குளிர்சுரம், சுரம் தீரும்; மேற்படி மருந்துகளுடன் ஒரு கழற்சிப்பருப்பைச் சேர்த்துக்கொடுக்க அண்டவாயு தீரும்.

மாவிலிங்கமூலத்தைப் பாலிற்கொள்ளச் சுரம், வெட்டை, சூலை, சுரோணிதக்கட்டு, மந்தவாயு, குன்மம், அரையாப்பு, கண்டமாலை, புண், புரைகள், பிளவை, வீக்கம், வாதம், ஜன்னி, ரூச்சை, கல்லடைப்பு, விஷகடி தீரும்.

மேற்படி பட்டை, மூங்கிலிலை, சிற்றரத்தை, சுக்கு, அரிசித்திப்பலி, சதகுப்பை, கொடுவேலிவேர், இவைகளை ஓர்நிறையாகச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாக வற்றவைத்து வேளையொன்றிற்கு மாகாணிப்படி வீதம், பனங்கருப்புக்கட்டி கூட்டி மூன்றுநாட்கொடுக்கப் பிரசவகாலத்தில் தடைப்பட்டிருக்கும் சூதகத்தை யுடைத்துவிடும்.

உகாய் மூலத்தைப் பாலிற்கொள்ளப் பலவகை வாயுக்கள், சூலைவாதம், குன்மம், கழலை, கட்டி, கண்டமாலை, அரையாப்பு, பிளவை, துடைவாழை, விப்புருதி, வெட்டை, ஜன்னி, தோஷம் தீரும். மேற்படி இலை, கழற்சிப்பருப்புக்கு, அண்டவாயு தீரும்.

புரசமூலத்தைப் பாலிற்கொள்ள எலிவிஷம், குன்மம், வாயு, வாதம் நீங்கும்.

மேற்படி விதையை எருமைச்சாணிக்குட் புதைத்துக் காலையில் இரண்டு விதையைத் தோல் நீக்கி அரைத்து ஆவின்பாலிற்கொடுக்க, வயிற்றிலுள்ள பெருங்கிருமிகள் விழும். அவைகளினாலுண்டாகும் வயிற்று வலி தீரும்.

மேற்படி விதையை எலுமிச்சம்பழச் சாறலூரசிப்போடப் பற்று நீங்கும்.

சுடுதுறட்சி மூலத்தைப் பாலிற்கொள்ளப் புடைகிரந்தி, சூலை, அரையாப்பு, கண்டமாலை, கரப்பன், வாயு, சில்லரை விஷம் நீங்கும்.

மேற்படி இலைச்சாறும், நல்லெண்ணெயும் கலந்து வேளையொன்றிற்கு மாகாணிப்படி வீதம் மூன்றுநாள் புளிதள்ளிச் சாப்பிட இரத்தவெட்டை தீரும்.

கடுக்காய் மூலத்தைப் பாலிற்கொள்ளக் கரப்பன், குஷ்டம், சில்விஷம், கிரந்தி, வங்கு தீரும்.

பெருவாகை மூலத்தைப் பாலிற்கொள்ளச் சூலைப்பிடிப்பு, வீக்கம், சில்லரைவிஷம், கிரந்தி, கரப்பன் தீரும்.

Koviloor Digital Library

உசில மூலத்தைப் பாலிற்கொள்ளச் சில்விஷங்கள், மேகம், புண், கிரந்தி, வண்டுகடி, குஷ்டம், கால்கைப்பிடிப்பு, சூலை தீரும்.

வக்கணத்தி மூலத்தைப் பாலிற்கொள்ளக் கிரந்தி, மேகம், கரப்பன், சில்விஷம், வண்டுகடி தீரும்.

அழிச மூலத்தைப் பாலிற்கொள்ளச் சகலவிஷம், சுவாசகாசம், மந்தாரகாசம், வயிற்றுக்கிருமிகள், கரப்பன், கிரந்தி தீரும்.

நெய்க்கொட்டான் மூலத்தைப் பாலிற்கொள்ளச் சகல விஷகடிகள், கரப்பன், கிரந்தி, மேகம், சூலைப்புண் தீரும்.

நவ்வல் மூலத்தைப் பாலிற்கொள்ளப் பெரும்பாடு, வெட்டை, மேகம், கழிச்சல், கிராணி தீரும்; மேற்படி பழரசம் மேகநீரழிவைக் கேட்கும்.

அரசு மூலத்தைப் பாலிற்கொண்டாலும், அந்தமரப்பட்டையை அரிசியுடன் இடித்து மாவுசெய்து களிகிண்டித்தின்றாலும் பெரும்பாடு தீரும்.

ஆலின்விழுதையும், மேற்படி விதையையும் பாலிற்கொள்ளப் பாலில்லாத பெண்களுக்குப் பாலுண்டாம்; வெட்டைமேகம் உடல்எரிவு காந்தல் தீரும்.

ஆலவிதையையும், அரசவிதையையும் பாலிற்கொள்ள இரத்தங்கக்கல் நீங்கும்.

சந்தனமூலத்தைப் பாலிற்கொள்ள மேகம், பிரமியந்தீரும்; அழகுண்டாம்.

மேற்படி வேரைக் கஷாயஞ்செய்து கற்கண்டு போட்டுச் சாப்பிட மேற்படி வியாதிகள் நீங்கும்.

தேவதாரமூலத்தைப் பாலிற்கொள்ளப் பீனசம், பழஞ்சுரம், நீரேற்றம், தீரும்.

அகில்மூலத்தைப் பாலிற்கொள்ள வாந்தி, அரோசிகம், சுரம் தீரும்; இதன் புகையால் மேற்படி வியாதிகள் தீரும்.

சிறுகொன்றை மூலத்தைப் பாலிற்கொள்ளக் கண்ணோய், உஷ்ணம், உள்மூலம், தீரும்; தேகபலமும் அழகுண்டாம்.

நரிக்கொன்றை மூலத்தைப் பாலிற்கொள்ள ஆனைச்சொறி, கிருமிப்புடை, அரிப்புப்புடை தீரும்.

மைக்கொன்றை மூலத்தைப்பாலிற்கொள்ளக் குடல்வாதம், சூலை, மேகந்தீரும்.

பிரமி சமூலத்தைப் பாலிற்கொள்ளக் கிரந்தி, சூலை, மேகம், வெட்டை, குஷ்டம், வீக்கம், க்ஷயம் நீங்கும்; பாடவல்லபமுண்டாம்; நரைதிரை மாறும்.

வல்லாரை சமூலம் பாலிற்கொள்ள மருந்தீடு, க்ஷயம், காசம், இருமல், ஈளை, கைகாலில் உண்டாகும் ஊறல் நீங்கும்; நெடுநாட்கொள்ள நரைதிரை மாறும்.

Koviloor Digital Library

பொன்னாங்காணி என்ற கொடுப்பை சமூலத்தைப் பாலிற்கொள்ள உடல்குளிரும்; கண்குளிரும்; பகலில் நக்ஷத்திரம் கண்ணுக்குத்தோன்றும்.

கீழ்க்காய்நெல்லி சமூலத்தைப் பாலிற்கொள்ளச் சோகை, காமாலை, பாண்டு, உடல்வெளுப்பு, வாத பித்த ரோகம் நீங்கும்; இரத்தம்மிகும்; கண்குளிரும், காயசித்தியாம்.

கருங்குருவைக்காடியில் மேற்படி சமூலச்சூரணத்தை நாட்படப் பத்தியமாய்ச் சாப்பிட்டுவந்தால் நரைதிரை நீங்கி வாலிப வயதுண்டாம்; உடலழியாது.

பொற்றலைக்கரிப்பான் சமூலத்தைப் பாலிற்கொள்ள இருமல், காசம், பாண்டு, சோகை, காமாலை, கரப்பன் தீரும்; மேற்படி மூலிகையை நாட்பட உட்கொண்டுவந்தால் நரைதிரை மாறும்.

மேற்படி சமூலம், அயக்கிட்டம், கடுக்காய், மிளகு, சமனெடையாகக் கஷாயஞ்செய்து சாப்பிடப் பாண்டு, சோகை, காமாலை தீரும்.

செங்கழுநீர்க்கிழங்கைப் பாலிற்கொள்ள உடல் குளிரும்; விந்தூறும்; நாட்படச் சாப்பிட்டால் தேகத்தில் நோய் உண்டாகாது.

பற்படாகம் சமூலத்தைப் பாலிற்கொள்ள வெட்டை, மேகம், எரிவு, காந்தல், அஸ்திகாங்கை, வாயு, பித்தம் தீரும்.

சதைஒட்டிஇலையைப் பாலிற்கொள்ள மேற்படி வியாதிகள் தீரும்; சீராசெங்கழுநீர் மூலத்துக்கும் மேற்படி வியாதிகள் தீரும்.

விஷ்ணுகரந்தை சமூலம் பாலிற்கொள்ளச் சுரம், மேகம், க்ஷயம், காசம், இருமல், ஈளை, விஷங்கள், வாதம், பித்தம் தீரும்; கண்ணுக்கு ஒளியுண்டாம்.

மேற்படி சமூலச்சாற்றில் சிற்றரத்தையை அரைத்துக்கலக்கிச் சுடவைத்துச் சாப்பிட மேற்படி வியாதிகள் தீரும்.

தண்ணீர்முட்டான்கிழங்குப் பாலிற்கொள்ள விந்தூறும்; சுக்கிலப்பிரமியம், நீர்எரிவு, காந்தல், கரப்பன், வறட்சி தீரும்.

ஊமத்தைவேரும்; அதன்வித்தும் வகைக்கு வராகனெடை 1 வீதமாக அரைத்து ஆவின்பாலிற் கலக்கிக் காலையில் மூன்றுநாட்கொடுக்க எலிகடிவிஷமும், பேய்நாய், பேய்நரி கடிவிஷமும், குளிர்சுரமும் தீரும்.

கற்றாழைச்சோறும் ஆவின்பாலும் கலந்து உண்ண விந்துகட்டும்; சொறி, குஷ்டம், சோகை, காமாலை, தீரும்; மூலச்சூடு தணியும்; கண் குளிரும்.

மருதமூலத்தைப் பாலிற்கொள்ள நீரழிவு, பிரமேகம், மயக்கம், தாகம், சுரதாபம், குஷ்டம், கிருமி, வயிற்றுவலி, வறட்சூலை தீரும்.

வேங்கைமூலத்தைப் பாலிற்கொள்ளக் குத்திருமல், இருமல், ஈளை, உளைமாந்தை, புண், சீவடிதல், மலக்கட்டு நீங்கும்; கண்ணுக்கு ஒளியுண்டாம்.

Koviloor Digital Library

வன்னிமரமூலத்தைப் பாலிற்கொள்ள வாதம், ஜன்னி, தோஷம், காணாக்கடி விஷம், கபம், சொறி நீங்கும்.

இருவாட்சி மூலத்தைப் பாலிற்கொள்ளக் கண்ணுக்கு ஒளியும், தேகத்துக்கு அழகுமுண்டாகும்; வலி, மூர்ச்சை தீரும்.

காட்டாத்திமூலத்தைப் பாலிற்கொள்ள அதிசாரம், மந்தம், காசம், விஷம், தீரும்.

பெருங்குமிழ் மூலத்தைப் பாலிற்கொள்ள மேகஎரிவு, சுக்கிலக்கடுப்பு, பித்தசுரம், வாதசுரம், திரிதோஷம் நீங்கும்.

கடலிராஞ்சி மூலத்தைப் பாலிற்கொள்ள மதுமேகம், மேகவாயு, மேகவாதநீர், பித்தநிர், கபநீர், தொந்தநீர், மேகசுரம், பேதி, சீதக்கடுப்பு, பிரமேகம் தீரும்.

பூதவிருக்ஷ மூலத்தைப் பாலிற்கொள்ளப் பல விஷகடிகள், வாதநோய்கள், சன்னி தீரும்.

வாகைமூலத்தைப் பாலிற்கொள்ளப் பெருவிஷம், சிறுவிஷகடி, அனல், விரணம், வாதவறட்சி, தாகசுரம், நாக்குஅக்கரம் தீரும்.

கருவாகைமூலத்தைப் பாலிற்கொள்ள விரணம், சுரம், வாயு, கிருமி, கபம் தீரும்.

இலவமூலத்தைப் பாலிற்கொள்ள நீர்க்கடுப்பு, எரிவு, வெள்ளைவிழுதல், மேகந்தீரும்; விந்தூறும்.

விளாமூலத்தைப் பாலிற்கொள்ளக் காசசுவாசம், அரோசிகம், தாகம், பித்தம் நீங்கும்.

கருநெல்லி மூலத்தைப் பாலிற்கொள்ள ஜன்னி, வாதம், தயக்கம், தேகக்கடுப்புத் தீரும்; நாட்படக்கொள்ளக் காயசித்தியாம்.

மலைவேம்பின் மூலத்தைப் பாலிற்கொள்ள மலட்டுக்கிருமி, இரத்தகுன்மம், உடலில் ஓடியோடிக்குத்துகின்ற வாயு தீரும்.

சர்க்கரைவேம்பின் மூலத்தைப் பாலிற்கொள்ளக் காயசித்தியுண்டாம்; சுக்கில சுரோணித சுத்தியுண்டாம்; கபரோகம் நீங்கும்.

கோங்கிலவின் பூவைப் பாலிற்கொள்ள நரை திரை மாறும்; கொடிய வியாதிகள் தீரும்; மேனி பொன்போலாம்.

நெல்லிக்காயைப் பாலிற்கொள்ளப் பித்தம், அனல், கபம், பீனசம், வாய்நீர்ஊறல், வாந்தி, மயக்கம், வெட்டைப்பிரமேகம், மலக்கட்டு நீங்கும்; நாட்படக்கொண்டால் நரைதிரை மாறும்.

மேற்படி இலையைக் காடிவிட்டிடித்துப் பிழிந்தசாறு அரைக்காற்படி கொள்ள நன்றாய விரோசனமாகும்; பித்தநீர் கீழ்நோக்கும்.

Koviloor Digital Library

எட்டிவித்தைப் பாலிற்கொள்ளத் தேள், நட்டுவக்காலி, விஷமும், மற்றவிஷங்களும் தீரும்; குஷ்டம், கைக்கறுப்பு, வாதம், தாதுநஷ்டம் நீங்கும்; பித்தம் அதிகரிக்கும்; சிலந்தி, இரத்தக்கட்டி, நீர்க்கட்டி, புண் புடைகளில் மேற்படி வித்தை அரைத்துப் பூசத் தீரும்.

கடம்புவிதையைப் பாலிற்கொள்ள விஷகடி நோய், குஷ்டம், இருமல், இளைப்பு, எலிகடிவிஷம், சிரசிலுள்ளநீர், வாதம் தீரும்.

மேற்படி விதையை வெந்நீரில் அரைத்துக்கொடுக்க மலஜல அடைப்பு வயிற்றுப் பொருமல் நீங்கும்.

அரசம்வித்தைப் பாலிற்கொள்ள மேகம், நீர்க்கடுப்புத் தீரும்; பெண்களுக்குக் கருப்பமுண்டாம்.

அத்திவிதையைப் பாலிற்கொள்ள நீர்க்கடுப்பு, மூத்திரக்கிருச்சரம், எலும்புருக்கி, தசையுருக்கி, மூலக்கொதிப்பு, விந்துவிலுள்ள தோஷம், இரத்தபித்தகாசம் நீங்கும்.

கல்லத்திவித்தைப் பாலிற்கொள்ள மேகம்; வெட்டை, விந்துவிலுள்ள தோஷம் நீங்கும்.

தேற்றாம்வித்தைப் பாலிற்கொள்ளப் பித்தகாசம், க்ஷயம், ஈளை, இருமல், மேகம், பிரமியம், உந்திப்புண், கிருச்சரம், கண்ணொிவு, தேகக்கடுப்பு நீங்கும்; தீபனமுண்டாம்.

நத்தைச்சூரிவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்; தேகபல முண்டாம்.

மாங்கொட்டைப்பருப்பைப் பாலிற்கொள்ளச் சீதம், இரத்தக்கடுப்பு, மூலக்கொதிப்புத் தீரும்.

மேற்படி பருப்பு, கருவேப்பிலை, சுண்டைவற்றல் இவைகளைப் பொடித்துப் பசுவின் வெண்ணெயிலாவது, தயிரிலாவதுகொள்ள மேற்படி வியாதிகள் தீரும்.

புளியவித்தின் மேற்றொலியைப் பாலிற்கொள்ளச் சுக்கிலமேகம், அதிசாரம், உந்திப்புண், நீர்க்கடுப்பு, வெட்டை தீரும்.

மகிழவித்தைப் பாலிற்கொள்ளத் தாதுவிர்த்தியுண்டாம்; வெப்பு, விஷம், மலக்கட்டு நீங்கும்.

தில்லைவித்தைப் பாலிற்கொள்ளச் சிறுவிஷம், பெருவிஷம், திமிர்வாயு, கபம், குஷ்டம், தீரும்.

ஆளிவித்தைப் பாலிற்கொள்ள வீக்கம், வாந்தி, வலி, வாயு, நரம்புக்குத்தல், அழலை, அரோசிகம், ஓக்காளம், விரைவாதம் நீங்கும்; மேற்படி விதையை முலைப்பால் விட்டரைத்து வெண்ணெயில் மத்தித்துச் சிலந்தி வீக்கத்திற்பூச வற்றும்.

Koviloor Digital Library

முருங்கைவித்தைப் பாலிற்கொள்ள விந்துகட்டும்.

பூனைக்காலிவித்தைப் பாலிற்கொள்ள விந்து கட்டும்; இரத்தக்கழிச்சல், கரப்பன் தீரும்.

உருத்திராக்ஷத்தை முலைப்பாலிற் கொடுக்கத் தாகம், திரிதோஷம், விக்கல், பித்தம் தீரும்.

மாதுளம்வித்தைப் பாலிற்கொள்ள மேகக்கடுப்பு, சுக்கிலதோஷம் நீங்கும்; விந்துகட்டும்.

கொட்டை முந்திரிப்பருப்பைப் பாலிற்கொள்ள இந்திரியபுஷ்டி யுண்டாம். மேற்படி பருப்பு, வாதாம்பருப்பு, இருப்பவல் இம்மூன்றையும் சமமாகப் பால்விட்டரைத்துக் கற்கண்டு, ஜீனி, நெய், தேன் விட்டு லேகியஞ்செய்து சாப்பிட்டுவர விந்தூறும்; போகம் மிகும்.

வாதாம்பருப்பைப் பாலிற்கொள்ளப் போகம் மிகும். மேற்படி தைலத்தால் கண்படலம் தீரும்.

கழற்காய்வித்துப் பருப்பைப் பாலிற்கொள்ள அண்டவாதம், பக்கசூலை, குன்மவாயு தீரும்; மேற்படி பருப்பும் தேங்காயுந்தின்ன மேற்படி வியாதிகள் தீரும்; மேற்படி பருப்பும் வெள்ளுகாயிலையும் அரைத்துத் தின்ன மேற்படி வியாதிகள் தீரும்; மேற்படி பருப்பை முட்டையில் பொரித்துத்தின்ன மேற்படி வியாதிகள் தீரும்.

நெரிஞ்சிக்காயைப் பாலிற்கொள்ள வெட்டை, எலும்புருக்கி, நீர்க்கட்டு, சதையடைப்பு, நீர்ச்சிறுப்பு நீங்கும்.

சவ்வரிசியைப் பாலிற்கொள்ள அஸ்திமேகம், சீமேகம், இரத்தமேகம், தீரும்; தாது விர்த்தியாகும்.

மூங்கில் வித்தைப் பாலிற்கொள்ள இரத்தபித்தம், சுரம், கண்ணோய் தீரும்.

திப்பலி அரிசியைப் பாலிற்கொள்ளச் சிலேத்துமம், கபம், வயிற்றுப்பிசம், மேகம், வாதசுரம், கபசுரம், தீரும்; தாதுவிர்த்தியுண்டாகும்.

சாரப்பருப்பு ஜாலாமிசரி, இவைகளைத் தனித்தனி பாலிற்கொள்ள விந்துகட்டும்; வெள்ளை விழுதல், நீர்க்கடுப்பு நீங்கும்.

துத்திவிதையைப் பாலிற்கொள்ளக் கை காலிற் படருகிற கருமேகம், குஷ்டம், வெப்பு அகலும்.

நீர்முள்ளிவித்தைப் பாலிற்கொள்ள மேகம், அதிசாரம், நீர்வீக்கம், இளைப்பு, இருமல் தீரும்; விந்தூறும், இரத்த விருத்தியாகும்.

பூசனிவித்தைப் பாலிற்கொள்ளப் பித்தம், மேகம், அனல் நீங்கும்; உடல் குளிர்ந்து புஷ்டியாகும்.

Koviloor Digital Library

வெள்ளரிவித்தைப் பாலிற்கொள்ள நீர் அடைப்பு, கல்லடைப்பு, நீர்க்கட்டு, தசை அடைப்பு, நீர்த்தாரைவிரிவு, நீர்ச்சிறுப்பு, கிருச்சரம் நீங்கும்.

கோரோசனைப் பாலிற்கொள்ள முலைப்பால் ஊறும்; கண்ணோய், சுரம் தீரும்; மூலச்சூடு தணியும்; நெடுநாட்கொண்டால் தேக அழகும் பலமுமுண்டாம்; நரைதிரை மாறும்.

வெள்ளைக்குங்கிலியத்தைப் பாலிற்கொள்ளப் பிரமேகம், வெட்டை, சூலைப்புண், மேகம் தீரும்.

வெள்ளைப்பூண்டைப் பாலில் அவித்துக் கொள்ள நெஞ்சடைப்பு, வாயு, மூலம், குன்மம், பீலிகை, உதரநோய், வெட்டை, க்ஷயம் தீரும்.

இஞ்சியைப் பாலிற்கொள்ள இருமல், இளைப்பு, சூலைவாதம், குன்மம், தாபசோபம், மயக்கம், வாயு, மந்தம், பித்தம் தீரும்; பசி மிகும்.

ஜாதிக்காயைப் பாலிற்கொள்ள பேதிகட்டும்; விந்துகட்டும்; இரைப்பு, வாதகிராணி தீரும்.

கிராம்பைப் பாலிற்கொள்ளப் பித்தசோபம், அதிசாரம், சத்தி, உதிரக்கிராணி, ஆசனக்கடுப்பு தீரும்.

ஜாதிபத்திரியைப் பாலிற்கொள்ளச் சுரம், கிராணி, மந்தபேதி தீரும்; சுக்கிலம் பெருகும்; உடலில் வாசமுண்டாம்.

மிளகைப் பாலிற்கொள்ளக் குளிர்சுரம், பாண்டு, கபம், கிராணி, குன்மம், வாயு, அரோசிகம், பித்தம், மூலம், பிரமேகம், இருமல், வங்கு, வாதம், குய்யரோகம், வாதசோணிதம், கண்ணோய், அஜீரணம், செவிவலி, இரத்தகுன்மம், வெட்டை தீரும்.

சுக்கைப் பாலிற்கொள்ளப் பசியுண்டாகும்; குன்மம், சூலை, மூலவாயு, உருத்திரவாயு தீரும்.

அரிசித் திப்பலியைப் பாலிற்கொள்ளக் காசம், வாயு, வாதசூலை, ஜன்னி, மூர்ச்சை தீரும்.

கடுக்காயைப் பாலிற்கொள்ளக் காயசித்தியாம்; க்ஷயம், காசம், ஈளை, இருமல், சீதக்கடுப்பு, மலபந்தம் தீரும்.

தான்றிக்காயைப் பாலிற்கொள்ள வெப்பமகலும்; தேகபலமுண்டாம்; சகல நோயும் தீரும்.

நெல்லிமுள்ளியைப் பாலிற்கொள்ளப் பித்தம், சுவாசகாசம் தீரும்.

நற்சீரகத்தைப் பாலிற்கொள்ள வாயு, கண்ணோய், வெட்டை, காங்கை, மூலக்கொதிப்பு அகலும்.

ஓமத்தைப் பாலிற்கொள்ளச் சகல்வாயு, மேகம், மற்றநோய்களும் தீரும்.

Koviloor Digital Library

குங்குமப்பூவைப் பாலிற்கொள்ள மேனிக்கு ஒளியும் வாசமுண்டாகும்.

சண்பகப்பூவைப் பாலிற்கொள்ளக் கண்ணோய், காசம், அஸ்திச்சூடு, வெட்டை, பித்தம் தீரும்.

மல்லியைப் பாலிற்கொள்ளப் பித்தம், காசம், வெட்டை, காந்தல், மூலச்சூடு, அரோசிகம், அதிதாகம், நீர்வெக்கை தீரும்.

வால்மிளகைப் பாலிற்கொள்ள உடல் குளிரும்; கபம் வெட்டை நீங்கும்; மூலச்சூடு தணியும்.

வாலுளுவையைப் பாலிற்கொள்ளப் பாலரைப்போல் மேனியுண்டாம்; சகல நோயும் தீரும்.

சேங்கொட்டையைப் பாலில் வேகவைத்துச் சாப்பிட வெட்டை, வெட்டைப் பிடிப்பு, நரை திரை மாறும்.

கஸ்தூரியைப் பாலிற்கொள்ளக் காயசித்தியாகும்; மேகம், வெட்டை, ஜன்னி, தோஷம் முதலிய வியாதிகள் தீரும்.

அரத்தையைப் பாலிற்கொள்ள ஈளை, இருமல், நீர்த்தோஷம், பீனசம், வாயு தீரும்.

பரங்கிப்பட்டையைப் பாலிற்கொள்ளச் சூலை, கரப்பன், குஷ்டம், கிரந்தி, வாயு, வாதம் தீரும்.

நறுக்குமூலமென்ற கண்டதிப்பலியைப் பாலிற்கொள்ளக் குறுக்குவலி, வாயு, வாதம், தோஷம், நாவறட்சி, தலைநோய், வாந்தி, விக்கல் தீரும்.

கோஷ்டத்தைப் பாலிற்கொள்ள வெட்டை, காந்தல், மூட்டுகளிலும் பொருத்துகளிலுமுள்ளவலி, முகம் கை காலெரிவு, காந்தல், கற்றாழைநாற்றம், காசம், பித்தம் தீரும்.

அக்கிராகாரத்தைப் பாலிற்கொள்ள நாவறட்சி, ஜன்னி, தோஷம், வாந்தி, வாயு, பித்தம், உஷ்ணம், கபம் தீரும்.

கசகசாவைப் பாலிற்கொள்ள வெட்டைச்சுரம், மேகதோஷம், எலும்புருக்கி, பித்தச்சூடு, நீர்க்கடுப்பு நீங்கும்.

அதிமதூரத்தைப் பாலிற்கொள்ள உடல்குளிரும்; பித்தம், மேகம், காந்தல், எரிவு, வெறிபித்தம், கபம் நீங்கும்.

பேரீச்சம்பழத்தைப் பாலிற்கொள்ளத் தாகம், பித்தம், வாந்தி, நெஞ்செரிவு, மேகச்சூடு தீரும்.

முந்திரிப்பழத்தைப் பாலிற்கொள்ளத் தாகம், பித்தம், வாந்தி, நெஞ்செரிவு மேகச்சூடு தீரும்.

கற்கண்டைப் பாலிற்கொள்ளப் பித்தகாசம், வயிற்றுக்காந்தல், மயக்கம் சோபதாபம், பித்தவெட்டைச்சூடு தணியும்.

Koviloor Digital Library

சீனியைப் பாலிற்கொள்ளத் தேகத்துக்கு வலுவுண்டாகும்; வாந்தி, பித்தம், அரோசிகம், தாபசோபம், மெய்மயக்கம் தீரும்.

தேனும் பாலுங்கொள்ளத் தேகபலமும், பசியும் உண்டாம்; க்ஷயம், காசம், இருமல், வாயு, பித்தம் தீரும்.

பழவெல்லத்தைப் பாலிற்கொள்ளப் பசியுண்டாம்; வாத பித்த கபம், அரோசிகம், தீரும்.

கதலிவாழைப்பழமும் பாலுங்கொள்ளக் காந்தல், உஷ்ணம், நீர்க்கடுப்புத் தீரும்.

கோசலமும் பாலும்கொள்ளக் காமாலை, சோகை, பாண்டு, பித்தம், விஷபாகவீக்கம் தீரும்.

ஈனாத எருமைக்கிடாரிச் சாணிப்பால், ஆவின்பால், நெய், சமன்கலந்து அரைக் காற்படி வீதம் அந்திசந்தி கொடுக்க க்ஷயரோகம் 96 ம் தீரும்; பத்தியம் புளி தள்ளவும்.

கோசலமும், வில்வஇலையும் இடித்துச் சாறுபிழிந்து மூன்றுதடவை வடிகட்டி அரைக்காற்படி வீதம் ஆறுநாட்கொடுக்கப் பாண்டு, சோகை, வீக்கம் தீரும்; புளி தள்ளவும்.

ஆவின்பால், தயிர், நீர், சாணிப்பால், வெண்ணெய், நல்லெண்ணெய், சமன்கலந்து காய்ச்சி ஸ்நானம்செய்யப் பாண்டு, சோகை, காமாலை, முதலான வியாதிகள் தீரும்.

மூலிகைப்பிரயோகம் முற்றிற்று.

விஷ சிகிச்சை.

அஷ்டநாகங்களின் விவரமுதலியன.

கடவுளாற் சிருஷ்டிக்கப்பட்ட ஊர்வனவாகிய விஷசெந்துக்களிற் றலைமையும், கொடியவிடமும் உடைய நாகங்கள் அனந்தன், குளிகன், வாசுகி, சங்கபாலன், தக்கன், மகாபத்மன், கார்க்கோடன், பத்மன், என எட்டாம்.

மேற்படி நாகங்களில், அனந்தனும் குளிகனும் பிரமகுலம்; சிவந்தநிறம்; நாவிப்பூ மணம்; அண்ணாந்து பார்த்தாடும்; படக்குறி—சங்கு; இருப்பிடம் தெய்வஸ்தலம்; உணவு—வாயு, மலர்மணம்; வயசு 1008.

வாசுகியும் சங்கபாலனும் க்ஷத்திரியகுலம்: பொன்நிறம்; தாழைமலர்மணம்; எதிர்நோக்கி ஆடும்; படக்குறி—சக்கரம்; இருப்பிடம்—விருட்சம்; உணவு—அறுகங்கிழங்கு, வண்டு; வயசு 800.

தக்கனும் மகாபத்மனும் வைசியகுலம்; வெண்மைநிறம்; பாதிரிமலர்மணம்; நான்குதிசையும் நோக்கியாடும்; படக்குறி—வில்; இருப்பிடம்—பாழ்மனை; உணவு—ஓந்தி, எலி; வயசு 500.

Koviloor Digital Library

கார்கோடனும் பத்மனும் சூத்திரகுலம்; கருமை நிறம்; இலுப்பைப்பூமணம் பூமியைப்பார்த்தாடும்; படக்குறி—புள்ளடி; இருப்பிடம் புற்று; உணவு—மீன், தவளை; வயசு 300.

மேற்படி அரவுகளின் மேல்வாயில் தொட்டிபோன்ற துளையுள்ள காளி, காளாத்திரி, யமன், தூதனென்ற பற்கள் நான்கு. அந்தத்துளைவழியாக நஞ்சுகழன்று கடிவாயிலிறங்கி 96 மாத்திரை நின்று அப்பால் அதிவிரைவில் இரத்ததாதுவிற்பாயும்; அப்போது உடல்கறுக்கும்; கடிவாயில் தினவு, வீக்கம், எரிச்சல், கடுப்பு வலியுண்டாம்.

காளி என்ற பற்பட்டாற் கடிவாய் புள்ளடிபோலிருக்கும்; அதில் பனிஜலம்போல் நீர்பொசியும். காளாத்திரிஎன்ற பற்பட்டாற் கடிவாய் முக்கோணம்போலிருக்கும்; அதில் மஞ்சள்நிற நீர்கசியும். யமனெனற் பற்பட்டாற் கடிவாய் தொட்டிபோலிருக்கும்; அதில் செந்நீர் கசியும். தூதனென்ற பற்பட்டாற் கடிவாய்விற்போலிருக்கும்; அதில் கழுநீர்போல் நீர்பொசியும்.

ஒருபற்பட்டால் காற்கடி; விஷம் தோலைப்பற்றி ஏறும்; மயிர்சிலிர்க்கும். இரண்டு பற்பட்டால் அரைக்கடி; விஷம் இரத்தத்தைப்பற்றி ஏறும்; உடம்பு விறைக்கும். மூன்று பற்பட்டால் முக்காற்படி; விஷம் தசையைப்பற்றி ஏறும்; உடல் உளையும்; வாந்தி, வயிற்றுப்பொருமல், ஆராட்டங்காணும்; மணி, மந்திர அவுடதங்களாற்றீரும். நான்குபற்பட்டால் முழுக்கடி; விஷம் எலும்பைப் பற்றி ஏறும்; இந்திரியம் கலித மாகும்; மரண அவஸ்தையுண்டாய் உயிர்பிரியும்.

உடலில் விஷநிலை ஸ்தானத்திலும், உள்ளங்கால், குதிங்கால், சந்து, உள்ளங்கை, மார்பு, கழுத்து, இதழ், நா, முகம், மூக்கு, புருவம், நெற்றி, கண், செவி, இந்த உறுப்புக்களிலும், அரவு தீண்டினால் விஷமீளாது.

அரவு ஓடிவந்து கடித்தாலும், கடித்தஇடத்தில் ஆடிக்கொண்டிருந்தாலும், கடித்தவுடன் பூமியிற் புரண்டாலும், படத்தை விரித்துக் கொண்டோடினாலும், கடித்த இடத்திற் கிடந்தாலும் விஷ மீளாது.

ஆண் அரவு கடித்தால் விழி மேல்நோக்கும்; பெண் அரவு கடித்தால் விழி கீழ் நோக்கும்; மலடு கடித்தால் வியர்வை மிகும்; அடைப்பாம்பு கடித்தால் விழி சிவக்கும்; சூல் அரவு கடித்தால் வயிறுளையும்.

இன்னாரை இன்னநேரத்தில் இன்னபக்கத்தில் அரவு தீண்டுமென்பது.

அமரபக்ஷம் பகற்காலத்திற் புருஷனை வலப்பக்கத்திலும், பெண்ணை இடப் பக்கத்திலும், இராக்காலத்திற் புருஷனை இடப்புறத்திலும், பெண்ணை வலப்புறத்திலும் தீண்டும். பூர்வபக்ஷம் பகற்காலத்திற் புருஷனை இடப்பக்கத்திலும், பெண்ணை வலப்பக்கத்திலும், இரவிற் புருஷனை வலத்திலும், பெண்ணை இடத்திலும் அரவு தீண்டும். இப்படிக்கில்லாவிடில் சில்லரை விஷமென்றறியவும்.

Koviloor Digital Library

அஷ்டநாகங்களின் விஷவேகக்குறிகள்.

மேற்படி அஷ்ட நாகங்களிற் பிரமகுல அரவு தீண்டினவுடன் உடல்வீங்கி விஷமேறும்; முதல் வேகத்திற் கண்சிவக்கும், முகம் சுருங்கும்; இரண்டில் நீர்கடுத்திறங்கும், முகம் வெளுக்கும், உடல் நடுங்கும், உரோமம் புளகிக்கும்; மூன்றில் உடலை முறுக்கி மயக்கித்தள்ளும், வாய் கோணும்; நான்கில் குடலைப்புரட்டல், வாந்தி, சோபதாபங்காணும், நாசியில் நீர்வடியும், முகக்களை மாறும்; ஐந்தில் நளிர்பதட்டம், சோர்வு உண்டாம். கருவிழி மேல் நோக்கும்; ஆறில் பற்கடியுண்டாகி, நாவிழும், உடல் விற்போல் வளைந்து விறைக்கும்; ஏழில் உடல் அயரும், பூமியும் ஆகாயமும் ஒன்றாய்ச் சுற்றுவதுபோற்றோற்றும்; எட்டில் மேல்மூச்சு வாங்கி விழி மேலாடும், உயிரடங்கும். வேகம் ஒன்றிற்கு மாத்திரை 1810 இதற்குத் தேயுவேகமென்று பெயர்.

க்ஷத்திரியகுல அரவு தீண்டினவுடன் உடல் விருக்கிட்டு விஷமேறும்; முதல் வேகத்தில் உரோமங்கள் புளகிக்கும், கடிவாயில் உதிரம் பொசியும்; இரண்டில் உடல் வெதும்பும், வருத்தமுண்டாகும், நாவும் நாலும் உலரும், மூன்றில் வாய் குளரும்; நான்கில் உடலைமயக்கிக் கீழேதள்ளும், எழுப்பும்; ஐந்தில் விஷம் உடலிற்கலந்து அறிவைக்கெடுக்கும்; ஆறிற் கண் மேலே சொருகி மூடும்; ஏழில் உடல் உள்ளும் புறமுமாய் வளைந்து விறைக்கும்; எட்டில் உயிர் அடங்கும். வேகமொன்றிற்கு மாத்திரை 1510 இதற்கு அப்புவேகமென்று பெயர்.

வைசியகுல அரவு தீண்டினவுடன் வயிறு மந்தித்து விஷமேறும்; முதல் வேகத்தில் தலைநோக்கும்; இரண்டிற் கண்சிவக்கும்; மூன்றில் உடல் தீப்போற்காயும்; நான்கில் தலை நடுங்கும்; ஐந்தில் மன்னைகட்டும்; ஆறிற் கண்மங்கும்; ஏழிற் பேச்சடங்கும்; எட்டில் உயிரடங்கும். வேகமொன்றிற்கு மாத்திரை 80 இதற்கு ஆகாய வேகமென்று பெயர்.

சூத்திரகுல அரவில், பத்மன் தீண்டினவுடன் உடல்குளிர்ந்து விஷமேறும்; முதல் வேகத்திற் கண்சிவக்கும்; இரண்டிற் கடிவாய் கடுத்து உதிரம் வடியும், விழிசோரும்; மூன்றில் விஷம் தலைக்கொண்டு உடல் குளிரும்; நான்கில் தலைநடுங்கும், சத்தியெடுக்கும், ஐந்திற் கண்சொருகும், நினைவுகெடும்; ஆறிற் கண்மங்கும்; ஏழிற் பற்கிட்டும், உடல் விறைக்கும்; எட்டில் உயிரடங்கும். வேகமொன்றிற்கு மாத்திரை 100 இதற்குப் பிருதிவி வேகமென்று பெயர்.

மேற்படி குலத்திற் காற்கோடனென்ற கருநாகம் கடித்தவுடன் நரம்பு, தசை, எலும்பு இவைகளைப்பற்றி விஷமேறும்; முதல் வேகத்தில் வியர்வை, மூர்ச்சைகாணும்; இரண்டில் உடல் வெதும்பும்; மூன்றிற் கண்ணேறிச்சொருகும்; நான்கிற் சத்திக்கும்; ஐந்தில் நெஞ்சிற் கபங்கட்டும்; ஆறில் அறிவுகெடும்; ஏழில் உடல் விறைக்கும்; எட்டில் உயிரடங்கும். வேகமொன்றிற்கு மாத்திரை 50 இதற்கு வாயுவேகமென்று பெயர்.

உயிர் அடக்கக்குறிகள்.

விழி மேல்நோக்கியாவது கீழ்நோக்கியாவது பக்கத்தில் ஒதுங்கியாவதிருந்தாலும், விரலில் நெட்டிபரிந்தாலும், கீற்னஇடத்திற் சிவந்த

Koviloor Digital Library

இரத்தம் வடிந்தாலும், நகக்கண்ணில் உதிரமோடினாலும், அடித்த இடம் தடித்துச்சிவந்து சுட்டாலும், கொடுத்த மருந்தெதிரேடுத்தாலும், தண்ணீரில் முங்கினாலும், எருக்கம்பழுப்புச் சாற்றையாவது, தைவேளைச் சாற்றையாவது ஒருகாதில்விட அது மற்றொருகாதில் வராதிருந்தாலும் உடலில் உயிர் அடக்கமாயிருக்கிறதென்று அறிந்து, குடோரி முதலான சிகிச்சைகளைச்செய்ய உயிர் திரும்பும்.

மரணக்குறிகள்.

விழி எதிரிலிருந்தாலும், விரலில் நெட்டிபரியாதிருந்தாலும், நகக்கண்ணில் இரத்தஓட்டமில்லாதிருந்தாலும், உடம்பிற் பிரம்பால் அடித்தவிடத்தில் தடித்துச் சிவக்காதிருந்தாலும், உடல் குளிர்ந்திருந்தாலும், ஒருசெவியில் விட்டசாறு மற்றொரு செவிக்கு வந்தாலும், தண்ணீரில் மிதந்தாலும், தாதுநடவாதிருந்தாலும், பல்கறுத்திருந்தாலும், உயிர் உடலைவிட்டு நீங்கிவிட்டதென்று அறிந்து குடோரி முதலான சிகிச்சை செய்வதை நிறுத்திவிடவும்.

அடங்கின உயிர் திரும்புமென்பதற்குச் சோதனை.

ஒரு நரியை அரவாற் கடிக்கவிட்டு விஷம் மேலாடி உயிர் அடங்கினவுடன் கருவூமத்தையிலையைக் கசக்கிச் சாற்றை அதன் நாசியிற்பிழிய உயிர் மீளும். இப்படியே மனிதருக்கும் மேற்படி இலைச்சாற்றை நாசியிற்பிழிய அடங்கின உயிர் திரும்பும்.

அஷ்டநாக முதலாயுள்ள சகல விஷத்துக்கும் மூலிகைப்பிரயோகம்.

குப்பைமேனி, அவுரி, ஆவிரை, கொல்லங்கோவை, கீழ்க்காய்நெல்லி இவ்வைந்துவகை இலைகளையும் இடித்துச் சாறுபிழிந்து உள்ளுக்குக் கொடுத்து உடம்பிலும் துவாலைபோடத் தீரும்.

மேற்படி ஐந்துவகை மூலிகையுடன் அப்பைக்கோவைக்கிழங்கு, ஐவிரலிக்கோவைக் கிழங்கு, தலைசுருளிவேர், வெள்ளைக்காக்கரட்டான் சமூலம், தனித்தனி நிழலிலுலர்த்தி இடித்து ஓர்நிறையாகச் சூரணித்துப் பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்துவைத்துக் கொண்டு வெற்றிலைச்சாற்றிலாவது வெந்நீரிலாவது சிறுநீரிலாவது திரிகடிப்பிரமாணம் கொடுக்க அஷ்டநாக முதலாயுள்ள சகலவிஷங்களும் தீரும்.

பழுபாகல்: பொற்சீந்தி: காட்டுக்கரணை: அமுக்கிரா இவைகளின் கிழங்கு, சிறுகாஞ்சோரி: எட்டி: மருக்காரை: கரிப்பாலை: கருவூமத்தை: சத்திசாரணை: பேய்ப்பீர்க்கு: செப்புநெரிஞ்சி: வெள்ளெருக்கு: நாகமல்லி: முப்புரண்டி: அவுரி: வெற்றிலை இவைகளின் மூலம், முன்போற் சூரணித்து மேற்படி அனுபானங்களிலெதிலாவது கொடுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

நேர்வாளப்பருப்பு, பேய்ப்பீர்க்கின்வித்துப்பருப்பு, கெவுரிபாஷாணம், வகைக்குப் பால் 2 சுக்கு பலம் 1 ¾ தீமிளகு பலம் 1¼ நாவிக்கிழங்கு பலம்

Koviloor Digital Library

1 வெள்ளைப்பாஷாணம் வராகனெடை 2 இவைகளையெல்லாந் தூட்செய்து, வெள்ளெருக்கம்பால் படி ½ பேயத்தி: ஆல்: கொடிக்கள்ளி: வேலிப்பருத்தி: தில்லை: சதுரக்கள்ளி: சீந்தி இவைகளின்பால் வகைக்குப்படி அரைக்கால், நல்லஅரவின்நஞ்சு, வராகனெடை 2 ஒன்றாகக்கலந்து அதிற் சூரணத்தை நான்குநாள்வரை ஊறவைத்து நிழலிலுலர்த்தித் தூட்செய்து பேய்ச்சுரைக்குடுக்கையில் அடைத்துப் பணவெடை நாசியிலூதி ஒரு காசெடை அமுரியிற்கலக்கி உள்ளுக்குக்கொடுக்கச் சகல ஆலகால விஷமும் தீரும்: விஷத்தாலடங்கின உயிர் மீளும்.

பேய்ச்சுரை, பேய்ப்புடல், பேய்ப்பீர்க்கு, பேய்க்குமட்டி, சிறுபேய்க்குமட்டி இவை சமூலம் நிழலிலுலர்த்திச் சூரணம்செய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கச் சகல விஷமும் தீரும்.

சருவ விஷத்திற்கும் பரஞ்சோதிக்குழம்பு.

ஊமத்தை: மகிழ்: அழிஞ்சி: தில்லை: வெண்குன்றி: நேர்வாளம் இவைகளின் வித்துப்பருப்பு, மனோசிலை, அரிதாரம், கெவுரி, வெள்ளை, இலிங்கம், நவச்சாரம், சீனக்காரம், நீலத்துருசு, இரதம், கெந்தகம், வெண்காரம், குக்கில், நாவிக்கிழங்கு, நிருவிஷம், பொன்மெழுகு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பலி, வெள்ளைப்பூடு, வெந்தயம் வகைக்கு வராகனெடை 2 இவைகளைச் சுத்திசெய்து எலுமிச்சம்பழச்சாற்றால் ஐந்துநாள்வரை கைவிடாமல் அரைத்து மேதிக்கொம்புச் சிமிழிலடைத்துக் கொண்டு பணவெடை வெற்றிலையிற்றடவிக் கொடுக்க அஷ்டநாகம், விரியன் மண்டலி, செய்யான், செவ்வட்டை, தேள், நட்டுவக்காலி, எலி, மூஞ்சூறு, பூனை, அரணை, முதலை, யானை, பேய்நாய், பேய்நரி இவைகளின் கடிவிஷமும், மற்ற ஊர்வன விஷஜந்துக்களின் கடிவிஷங்களும் தீரும். பத்தியம் ஆவின்பால் அன்னம்சாப்பிடவும்.

மஹாசிந்தாமணிக்குழம்பு.

இரதம், கெந்தி, வெள்ளைப்பாஷாணம், நாவிக்கிழங்கு, இலிங்கம், துத்தம், துருசு, தாரம், நிருவிஷம், சன்னிநாயகம், சுக்கு, மிளகு, கடுக்காய், நேர்வாளப்பருப்பு வகைக்கு வராகனெடை 1 குப்பைமேனி, தைவேளை, பேய்ப்பீர்க்கு, ஊமத்தை, அவுரி, வேலிப்பருத்தி, இவைகளின் இலைச்சாறு வகைக்குப் படி அரைக்கால், பேய்க்குமட்டிப் பழச்சாறு படி அரைக்கால், காஞ்சிரம்பழச்சாறு படி ஒன்று தனத்தனியே மேற்படி சரக்குகளை அரைத்து ஒருசட்டியிற்போட்டுக் கொஞ்சம் வேப்பஞ்சுடுதிவிட்டு மெழுகு பதமாகக்கிண்டிச் சிமிழிலடைத்துக்கொண்டு, அஷ்டநாகம் முதலாயுள்ள சருவ விஷத்துக்கும் ஒருகுன்றி எடை, அல்லது அரைக்குன்றி எடை கொடுக்கத் தீரும்: பத்தியம் பால் அன்னம்.

சஞ்சீவிக்குழம்பு.

துருசு, இரதம், காயம், ஜாதிலிங்கம், வெண்காரம், நோவாளப்பருப்பு அரிதாரம், நாவிக்கிழங்கு, வெள்ளைப்பாஷாணம், கெந்தகம், வேப்பம்வித்து,

Koviloor Digital Library

இவைகளை வெள்ளெருக்கம்பாலில் ஒருஜாமமும், வேப்பம் சுடுதியில் ஒருஜாமமும் அரைத்துச் சிமிழிலடைத்துக்கொண்டு பயறளவு வெற்றிலையிற் கொடுக்கச் சருவவிஷமும் தீரும். விஷவேகத்தாற் பற்கிட்டியிருந்தாற் பணவெடை வெந்நீரிற் கலக்கிப்புகட்ட நீங்கும்; பத்தியம் பாலும் அன்னமும்; முருங்கையிலையை உப்பில்லாமல் அவித்து மிளகு பொடி தூவிக்கொடுக்கவும்.

சஞ்சீவகரணித் தைலம்.

காஞ்சிரம்பழம், பேய்க்குமட்டிப்பழம் வகைக்கு 300 வெண்குன்றிவித்து, நீர்க்கடம்புவித்து, நீர்வெட்டிமுத்து வகைக்கு படி 2 நேர்வாளங்கொட்டை, வேப்பமுத்து வகைக்கு படி 3 கொடுவேலிவேர், காஞ்சிரைவேர், அமுக்கிராக்கிழங்கு, கெருடக்கிழங்கு, நாவிக்கிழங்கு, முற்றினவேப்பம்பட்டை, மாவிலிங்கம் பட்டை, பெருமரத்துப்பட்டை, கருஞ்சூரைப்பட்டை, வேலிப்பருத்திவேர் வகைக்குப் பலம் 20 இவைகளையெல்லாம் இடித்து வில்லை வில்லையாகத் தட்டிக் காயவைத்துப் பாண்டத்திலிட்டுப் பூப்புடத்தில் தைலம் வாங்கி அந்தத் தைலத்துக்குச் சமன்வேப்பஞ்சுடுதி கலந்து அதில் இரதம் வராகனெடை 2 பச்சைப்பாம்பு ஒன்று, மூஞ்சூறு ஒன்று கூடப்போட்டுக் கலசவாயைமூடி ஒரு மண்டலம் எருக்குப்பையிற்புதைத்தெடுத்து வெற்றிலையிலாவது வெந்நீரிலாவது இரண்டு துளிகொடுக்க அஷ்டநாகம், விரியன், வழலை முதலான சருவ விஷங்களும் இறங்கும்; உயிர் அடங்கியிருந்தால் உச்சியைக்கீறி அதில் தைலத்தைத்தேய்த்து நாசி காதில்விட்டு நாவிலும் தேய்க்க உயிர்மீளும்; பத்தியம் பால் அன்னம்.

இராமபாணத் தைலம்.

இறங்கழிஞ்சி, புங்கு, தான்றி, புன்னை, கழற்சி, கார்கோல், கடுக்காய் இவைகளின் வித்து வகைக்குப் படி 1 இவைகளை வெள்ளாட்டு நீரிலும், சிறு பிள்ளைகளின் நீரிலும் வகைக்கு இருபதுநாளூறவைத்துலர்த்திக் குழித்தைலம் வடித்துப் பணவெடை வெற்றிலையிற்றடவிக்கொடுத்துக் கடிவாயிலும்பூச அஷ்டநாகம், எலி, விரியன், படையன், தேள், நட்டுவக்காலி, முறுக்கரவு, அரணை முதலிய சில்லரை விஷங்கள் தீரும். விஷகடியால் நேரிடும் குஷ்ட முதலிய ரோகங்கள் தீரும்; பத்தியம் வெள்ளாட்டுப்பால் அன்னம்.

சஞ்சீவி மை.

திருகுகள்ளியின் மேற்பொருக்கு இரண்டு பங்கும், இலுப்பைப் பிண்ணாக்கு ஒரு பங்கும் ஒன்றாகக் கலந்து ஒரு பாண்டத்திலடைத்து வெள்ளாட்டு எருக்கொட்டிக் குழித்தைலம் வடித்துக்கொள்ளவும்; புதிய காஞ்சிரை வித்தையும் அது போல் தைலம் வடித்துக்கொள்ளவும்; இந்த இரண்டு வகைத் தைலத்தையும் ஓர்நிறையாக ஒன்றாகக் கலந்து ஒரு பழைய சட்டியில் விட்டுக் காஞ்சிரைவேர்த் தடியால் கைவிடாமல் மையாகும் வரை கடைந்து செப்புச்சிமிழிலடைத்தக்கொண்டு ஒரு குன்றிமணி எடை வெற்றிலைச்சாற்றிலாவது வெந்நீரிலாவது கலந்து கொடுக்க அஷ்டநாகம்

Koviloor Digital Library

முதலாயுள்ள சருவ விஷமும் தீரும்; உயிர் அடக்கமாயிருந்தால் நீர்த்தாரைவழி நாளமூலமாய் மேற்படி மையைப் பிரயோகிக்கத் தூங்கினவன்போல் விழிப்பான்.

பரஞ்சோதி மை.

இருபது தாயீசலை ஒரு பீங்கானிற் போட்டுக் கால் வராகனெடை வெங்காரத்தைப் பொரித்துப் பொடித்துத் தூவி வெயிலில் வைக்கத் தைலமாகும்: அந்தத் தைலம் கழஞ்சு 3 சுக்கு, பெருங்காயம், கெந்தி, சூதம், இந்துப்பு, வேப்பமுத்தின் பருப்பு வகைக்குக் கழஞ்சு 1 ஒன்றாகச் சேர்த்தரைத்து மைப்பதத்திற் சிமிழிலடைத்துக்கொண்டு பணவெடை வெற்றிலையிற்றடவிக் கொடுக்க அஷ்டநாக முதலாயுள்ள சருவ விஷமும் தீரும். விஷம் சிரசிலேறி மூர்ச்சையாகி விட்டால் எட்பிரமாணம் மேற்படி மையைக் கண்ணில் கலிக்கமும் நாசியில் நசியமுமிட மூர்ச்சைதெளிந்து விஷமிறங்கிப்போம். வெறிநாய், எலிகடி விஷமும் தீரும். அவ்வெடை வெற்றிலையில் பெண்களுக்குக்கொடுக்க மலடு நீங்கும்; குஷ்டம் 18 குன்மவலி, வயிற்றுவலி நீங்கும்.

சூரன்மை.

மூஞ்சூறுவயிற்றில் சூதம், கெந்தகம், வெள்ளைப்பாஷாணம் வகைக்கு வராகனெடை 2 பொடித்துவைத்துத் தைத்து ஒரு கலசத்திற்போட்டு அது முங்கும் படி வேப்பஞ் சுடுதிவிட்டுக் கலசவாயை மூடிச் சீலைமண்செய்து எருமைத்தொழுவில் ஒரு மண்டலம் புதைத்தெடுத்துக் கல்வத்திட்டு மயனமாக அரைத்துச்சிமிழிலடைத்துக்கொண்டு நல்லரவு விஷத்திற்கு ஒரு சுண்டைக்காய்பிரமாணமும், விரியன் விஷத்துக்கு இரண்டு சுண்டைக்காய்ப்பிரமாணமும், மற்றச் சில்லறை விஷத்துக்கு ஒரு மிளகுப்பிரமாணமும் வெற்றிலையிற் றடவிக்கொடுக்கத் தீரும்.

பரஞ்சோதி மாத்திரை.

திப்பிலி, மிளகு, இந்துப்பு, பெருங்காயம், பழுபாகற்கிழங்கு, கொல்லங்கோவைக்கிழங்கு, நாவிக்கிழங்கு, ஆடுதீண்டாப்பாளைவேர், சூதம், கெந்தகம், இலுப்பைவித்தின் பருப்பு, சண்பகவேர், இருவாச்சிவேர், முருங்கைவேர், காஞ்சிரைவேர், நேர்வாளப்பருப்பு வகைக்கு வராகனெடை 1 இவைகளை யெல்லாம் பொடித்து மூஞ்சூறுகளின் வயிற்றுள் வைத்துத் தைத்து ஒரு கலவத்திற்போட்டு அதன்வாயை மூடிப்பூமியிற் புதைத்து மண்டலஞ் சென்றெடுத்துப் பேய்ப்பீர்க்கிலைச் சாற்றால் அரைத்துப் பணவெடை வீதம் மாத்திரைசெய்து ஒரு மாத்திரையை வெற்றிலையில் வைத்துக் கொடுக்கச் சருவவிஷமும் தீரும். விஷம் தலைக்கொண்டிருந்தால் ஒரு மாத்திரையை வெற்றிலைச்சாற்றில் மத்தித்துக் கண்ணிற் கலிக்கமும் நாசியில் நசியமும்செய்து நீர்த்தாரையில் நாளத்தின் மூலம் பிரயோகிக்க விஷமிறங்கும்.

சூடாமணி மாத்திரை.

தொட்டிப்பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், கெவுரிபாஷாணம், அரிதாரம், சூதம், சேங்கொட்டைப்பருப்பு, காக்கைகொல்லிவித்து, துருசு,

Koviloor Digital Library

பெருங்காயம், விளாவரிசி, கருநாவிக்கிழங்கு, முஞ்சூற்றுச்சதை, வெண்காரம், வாலுளுவையரிசி, நேர்வாளப்பருப்பு, இந்துப்பு, கார்கோலரிசி, முசுருமுட்டை, நவச்சாரம், கல்லுப்பு, வெடியுப்பு, பேய்க்காளான், எட்டிவித்து இவைகள் வகைக்கு வராகனெடை 1 வெள்ளெருக்கம்பாலால் மூன்றுநாள்வரை கைவிடாமல் அரைத்துக் குன்றிபோல் மாத்திரைசெய்து ஒரு மாத்திரையை வெற்றிலைச் சாற்றிற் கொடுக்கச் சகல விஷமுந்தீரும். உயிர் அடங்கியிருந்தால் உச்சியிலும் தோளிலும் தொடையிலும் கீறி மேற்படி மாத்திரையைச் சிறுநீரிலுரைத்துச் சூடுபிறக்கத் தேய்த்துவிட உயிர் திரும்பும்.

கடிவாயிற் கட்டு மாத்திரை.

இரதம், வாளப்பருப்பு, கெவுரிபாஷாணம், நாவிக்கிழங்கு, நெய்க்கொட்டான்பழம் ஓர்நிறையாக எலுமிச்சம்பழச்சாற்றால் மயனமாகஆட்டி மாத்திரைசெய்துகொண்டு எந்தப் பாம்பு தீண்டினாலும் கடிவாயில் வைத்துக்கட்ட விஷத்தைக் கீழ்நோக்கி இழுத்துக்கொள்ளும்; மேற்செல்லவிடாது.

வேறு.

வெண்காரம், இரதம், அரிதாரம், பச்சைப்பாம்புக்கண்டம் இவைகளை வெற்றிலைச்சாற்றாலாட்டி மாத்திரைசெய்துகொண்டு கடிவாயில் வைத்துக்கட்ட விஷம் கீழ்நோக்கும்.

அடக்கம் எழுப்ப அஞ்சனம்.

சூதம், நேர்வாளப்பருப்பு, அரிதாரம், நீலத்துருசு, துத்தம், வெண்காரம், நீலரெங்கு வகைக்கு வராகனெடை 1 இவைகளைப் பேய்ப்பீர்க்கிலைச் சாற்றாலரைத்து மாத்திரைசெய்து கொண்டு பணவெடை வெற்றிலைச்சாற்றிலாவது பேய்ப்பீர்க்கிலைச்சாற்றிலாவது உரைத்து விழியிற்றீட்ட அஷ்டநாகமுதலாயுள்ள விஷஜந்துக்களின் கடியால் அடங்கின உயிர் மீளும்.

கெருட அஞ்சனம்.

இந்துப்பு, இரசம், பெருங்காயம், அரிதாரம் இவைகளை ஓர்நிறையாகப் பேய்ப்பீர்க்கிலைச் சாற்றாலாட்டி மாத்திரைசெய்து பணவெடை வெற்றிலைச்சாற்றில் மத்தித்துக் கண்ணிலிட அஷ்டநாகமுதலாவுள்ள சருவவிஷமுந் தீரும்.

அடக்கம் எழுப்ப ஆக்கிராணம்.

தம்பலப்பூச்சி, இரசம், துருசு வகைக்கு வராகனெடை 1 ஒன்றாகப்பொடித்துச் சுந்தரி வயிற்றுக்குள் வைத்துத் தைத்துப் புகையடிக்கிற இடத்திற்கட்டிவைத்துக் காய்ந்தபின் பொடித்து அதை நாசியில் ஊதச் சகல அரவு விஷமுமிறங்கும்.

Koviloor Digital Library

வேறு.

காறபல இஞ்சியை மேற்றொலிபோக்கி அது முங்கும்படி வெள்ளெருக்கம்பால் விட்டு நிழலில் உலர்த்தித் துருசு, மஞ்சள் வகைக்குப் பலம் அரைக்கால் கூட்டிப் பொடித்துப் பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு நாசியிலூதச் சகல விஷமும் அடக்கமுந் தீரும்.

சகல விஷத்துக்கும் நசியம்.

குப்பைமேனியிலை, வெற்றிலை, நவச்சாரம் இவைகளைச் சிறுநீர்விட்டுத்தட்டித் துணியிற்கட்டி நாசியில் நசியமிடச் சகல விஷமுந் தீரும்.

வேறு.

முருக்கிலை, தும்பை, எருக்கிலைப்பழுப்பு, மிளகு, வெற்றிலை, நவச்சாரம் இவைகளைத் தட்டி, நாசி, காதில் நசியமிடச் சகல விஷமும் தீரும்.

வேறு.

தும்பையில், அவுரியிலை, பெருங்காயம், வசம்பு, உள்ளி, மிளகு இவைகளைச் சிறுபிள்ளைகளின் அமுரிவிட்டுத்தட்டிக் காது, நாசியில்விடக் கீழ்நோக்கும்.

வேறு.

தைவேளையிலை, வேலிப்பருத்தியிலை, வெ‌ற்றிலை, கறியுப்பு, சுக்கு, மிளகு, வசம்பு, வெள்ளுள்ளி, இவைகளை ஓர்நிறையாகச் சிறுநீர்விட்டுத் தட்டி நாசியில் நசியமிட அடங்கின உயிர் திரும்பும்.

விரியன் பாம்புகளின் கடிக்குறியும் அவைகளுக்குச் சிகிச்சையும்.

மேற்படி விரியன் வகைகள் ஆறாம். அவற்றில், குருவிரியன் கடித்தாற் செந்நிறமாயும், பொன்னிறமாயும் நீர்வடியும்; கடிவாயிற்றசை துன்னி வீங்கும்; கடுக்கும்; உடல்வெதும்பும்.

நாட்பட்ட வரகரிசியும், பிராய்மரப்பட்டையும் இடித்து மாவுசெய்து வெள்ளாட்டுப்பாலிற் சமைத்து மூன்றுநாள் தின்று மறுபத்தியம் மூன்றுநாளிருக்கத் தீரும்; உப்புப்புளி தள்ளவும்.

செவ்விரியன், கருவிரியன், பசுமைநிறவிரியன் கடித்தால், கடிவாயில் உதிரம் வடியும்; வீக்கம், கடுப்பு, இரத்தவாந்தியுண்டாம்.

செவ்விரியன் கடித்தவுடன், ஒடுவைவேரை அரைத்துக் கொடுக்கத் தீரும். வன்னியிலையைத் தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்து

Koviloor Digital Library

ஆவின்வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்; வெள்வேலாம்பட்டையை ஆவின் மோரில் அரைத்துக் கலக்கிக்கொடுக்கத் தீரும்.

கருவிரியன் கடித்தாலும், பசுமைநிற விரியன் கடித்தாலும், அரைக்காற்படி மிதிபாகலிலைச்சாற்றிற் காற்பலம் மிளகைப் பொடித்துப்போட்டுக் கொடுக்க மேற்படி விரியன்களின் விஷமும் மற்ற விரியன்களின் விஷமும் தீரும்.

பெருவிரியன் கடித்தால் பேய்க்குமட்டி: அவுரி: தலைசுருளி இவைகளின்வேர், மிளகு சமனாகஇடித்துப் பேய்ச்சுரைக் குடுக்கையில் அடைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் சிறுபிள்ளைகளின் நீரிற் கலக்கிக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும். இம்பூரல், கீழ்க்காய்நெல்லி, கோழிக்கால், மிளகு, மஞ்சள், இவைகளை ஓர்நிறையாகச் சிதைத்து நல்லெண்ணெயிற்காய்ச்சிக் கடிவாய்ப் புண்ணிற்போட்டு ஆத்தியிலையை வெதுப்பிப் பொடித்துத் தூவிவரப் புண்ணாறும்.

கத்தரிவிரியன் கடித்தால், உதிரம் வடியும்: அதில், வீக்கம், கடுப்பு, எரிச்சல், மயக்கம் காணும்; உடல் வெதும்பும்.

புல்விரியன் கடித்தால், கடிவாயில் வில்சுண்டுவதுபோற் சுண்டி வலித்து வீங்கும்; உடல் கணுக்கள் வீங்கும்; தூக்கம்போல் மயக்கம் காணும்.

சுழற்றுக்கோல்விரியன் கடித்தால், தலைசுழலும், உடலுளையும், காந்தும், நடுங்கும்; செவிமந்திக்கும்; கண்பஞ்சடையும்; மேற்சொல்லிய எவ்வகை விரியன் கடித்தாலும் உடனே ஒரு குன்றிமணிப்பிரமாணம் துருசைப் பத்துவெற்றிலையில்வைத்து மடித்துத் தின்னக்கொடுக்க மேற்படி விஷங்களிறங்கும். கடிவாய் வீங்காது; கடுப்பு, எரிவு உடனே தீரும்.

அவுரிவேரை அரைத்து ஆவின்பாலிற் கொடுக்கச் சகல விரியன்களின் விஷமும் தீரும்.

சன்னிநாயகம் சமூலம் இடித்துச் சாறுவாங்கி அரைக்காற்படி உள்ளுக்குக் கொடுத்து மேற்படி இலையை அரைத்து உடல் முழுதும் பூசிவிடச் சகல விரியன்களின் விஷமும் தீரும்; கிரந்திநாயகத்தையும் இப்படியே செய்யத் தீரும்.

குட்டித்தக்காளி இலையையும், பெருந்தக்காளி இலையையும் இடித்து அரைக்காற் படி சாறுவாங்கி உள்ளுக்குக்கொடுத்து மேலிலும் துவாலையிட மேற்படி விஷங்கள் தீரும்.

கடிவாயிற் பூசும் மருந்து.

தலைமயிரைக்கருக்கி ஆவின்வெண்ணெயில் மத்தித்துக் கடிவாய் வீக்கத்திற்பூச வற்றும்.

பாவட்டை இலையை அவித்து அந்தத்தண்ணீரால் புண்ணைக்கழுவி வெற்றிலையை வைத்துக் கட்டிவரத் தீரும்.

Koviloor Digital Library

அம்மன்பச்சரிசி இலையை அரைத்துப்பூசிவர வீக்கம், கடுப்பு, எரிவு தீரும்; தக்காளிவேர், நாயுருவிவேர் இவைகளைச் சிறுநீர்விட்டரைத்துக் கடிவாயிற் பூசிவர வீக்கம் வற்றும்; உடம்பிற்பூசி முறுக்க மயக்கந் தீரும்.

கோழிச்சதையையாவது அதன் கொழுப்பையாவது மூன்றுநாள் வைத்துக் கட்டி அப்பாற காடியாற் கழுவி இதனடியிற் கண்டிருக்கிற எண்ணெயைப் போடவும்.

சகலவிரியன் விஷகடி வீக்கத்திற்கும் புண்ணுக்கும் போடத்தைலம்.

இரண்டு கோழிக்கால், இம்பூரல், கீழ்க்காய்நெல்லி, மஞ்சள், மிளகு, இந்துப்பு இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிப் புண்ணிற்போடத் தீரும்.

மூஞ்சூறு, வசம்பு, சுக்கு, உள்ளி இவைகளைச் சிதைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிப் புண்ணிற்போடச் சகல விரியன்களின் கடிவிஷமும் புண்ணும் ஆறும்.

கருவழலை முதலிய மற்ற சில்லரைப்பாம்புகளின் கடிவிஷக்குறியும் அவைகட்குச் சிகிச்சையும்.

உடல்—தீப்போற்காந்தும், வியர்க்கும், உள்ளங்கால் கை சிவக்கும், கண்மங்கும், நெஞ்சடைக்கும், கோழைகட்டும், பல்வலிக்கும்.

மற்றவகை வழலைகடித்தால், உடலிற் பசுமைநரம்பு தோன்றும், வியர்க்கும், வாயில் நீர்வடியும், கடிவாயில் உதிரம் வடியும், வாய் வழுவழுக்கும்.

கருவழலை கடித்தால், வேலிப்பருத்திவேரையும்: அதன் இலையையும், வெள்ளைச் சாரணை வேரையும்: அதன் இலையையும், நீலிவேரையும், பெருங்காயத்தையும் ஓர் நிறையாக அரைத்துத் தேசிக்காய்ப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

மற்ற வழலைகள் கடித்தால், நற்றாளியிலை, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்துக் கடிவாயிற்பூசி உடம்பிற்றேய்த்து முறுக்கவும்.

சிற்றாமணக்கின்வேர், பழம்புளி, நிலப்பனைக்கிழங்கு, குன்றிமணிவேர் இவைகளை ஓர்நிறையாக அரைத்துச் சிறுநீரிற் கலக்கிக்கொடுக்கத் தீரும்.

உப்பிலிவேரும், நிலப்பனைக்கிழங்கும் ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்துச் சிறுநீரிலாவது ஆவின்வெண்ணெயிலாவது கொடுக்கத் தீரும்.

மயக்கரவு கடித்தால், இருவிழியும் சுழலும், அடிக்கடி மயக்கம் காணும், முகம் கறுக்கும், பரபரப்பாய் விஷமேறி மார்பை அடைக்கும், கை கால் நரம்புகள்விடைக்கும்.

கரிப்பாலை இலையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் மூன்றுநாட்கொடுத்து மிளகுப்புகையை நாசியிலும் முகத்திலும் காட்டத்தீரும்.

Koviloor Digital Library

முறுக்கரவு கடித்தால், உடலைத்திருகி முறுக்கும், அங்கம் பதறும்.

பெருங்காயம், சிறுசின்னியிலை, வசம்பு இவைகளை ஓர்நிறையாக அரைத்துத் தேசிக்காய்ப்பிரமாணம் கொடுத்து அதை உடம்பிற்பூசி முறுக்கி நாசியில் நசியமிடத் தீரும்.

அரைக்காற்படி மிதிபாகற் சாற்றில் காற்பல மிளகைப் பொடித்துப்போட்டுக் கொடுத்தாலும், ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் நிலப்பனைக்கிழங்கை அரைத்து வெந்நீரிற் கொடுத்தாலும் தீரும்.

கூழைப்பாம்பு கடித்தால், சிலகாலத்துக்குப்பின் குஷ்டம்போற் றேகத்திலுண்டாகிக் கால் கை விரல்கள் குறையும்; இது கருமையும் வெண்மையும் கலந்த புள்ளியுள்ளதாயிருக்கும்.

உசிலம்பட்டையை ஆவின்பாலை விட்டிடித்துப்பிழிந்து அரைக்காற்படிவீதம் ஏழுநாட்கொடுத்து உப்புப்புளி தள்ளிப் பத்தியமாயிருக்க மேற்படி விஷம் தீரும்.

செஞ்சோர்வு கடித்தால், உடல் எங்கும் புள்ளிபோற்றடித்துச் சிவந்த நிறமாக இருக்கும்.

எருக்கம்பால் ஏழுசொட்டுப் பனைவெல்லத்திற் கொடுக்கவும்; இந்தப்படி மூன்று தடவை ஒன்றைவிட்டொருநாட் கொடுக்கத் தீரும்.

கருஞ்சோர்வு கடித்தால், தேகமுழுதும் கறுத்துத்தடித்துத் திமிராயிருக்கும்.

நன்னாரிவேர், சிறியாநங்கைவேர் சமனாக ஒரு தேசிக்காய்ப்பிரமாணமரைத்து ஆவின்பாலிற் கொடுக்கத் தீரும்.

புடையன் பாம்பானது, அதன் வாலின்முனையால் மனிதர் முதலிய ஜீவஜந்துக்களைக் குத்தும்; அந்தவிஷம் தேகத்திற் சிலநாள் தங்கியிருந்து அப்பாற்றேகமெங்கும் புடைகளுண்டாய்ப் பொற்றுச் சீ வடியும்.

ஒருபிடி புற்றாஞ்சோற்றைக் காற்படி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக் கொஞ்சம் உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

பிராய்ப்பட்டையும், நாட்பட்ட வரகரிசியும் இடித்து மாவுசெய்து களிக்கிண்டி மூன்றுநாட் சாப்பிட்டு மறுபத்தியம் மூன்றுநாளிருக்கத் தீரும்.

நெடுங்கழுத்துப்புடையன் விஷத்துக்கு, கொல்லன்கோவைக்கிழங்கைப் பாலிலரைத்துக் கொடுக்கத் தீரும்.

புகையூரல், அவுரியிலை, இலுப்பையரைப்பு இவைகளைக் கொடிக்கள்ளிப்பால் விட்டரைத்துப் பூசப் புடையன்குத்து வீக்கம் தீரும்.

தட்டைப்புடையன் விஷத்துக்கு, பத்து வெள்ளெருக்கம்பூவை வெற்றிலையிற் சுருட்டித்தின்னக்கொடுத்து வசம்பை நெருப்பிலிட்டு அந்தப்புகையை நாசியிலேற்றத் தீரும்.

Koviloor Digital Library

வரிப்புடையன் விஷத்துக்கு, புற்றாஞ்சோறும், வசம்பும், எருக்கம்பால் விட்டுத் தட்டி நாசியில் நசியமிடத் தீரும்.

ஊதுபுடையன் விஷத்தால், கடிவாய் வீங்கி விஷமேறும்; கைகால் உளையும்; உடல்வீங்கும்; கண்ணில் நீர்வடியும்; மயக்கமுண்டாம்.

வீழிப்பூவை ஒரு தேசிக்காய்ப்பிரமாணமரைத்துக் கொடுக்கச் சகல புடையன் விஷங்களும் தீரும்.

காட்டுக்கருணைக்கிழங்கு, கொட்டாங்கரந்தை, புகையூரல், இலுப்பைப்பிண்ணாக்கு இவைகளைச் சிறுநீர்விட்டரைத்துப் புடையன்குத்து வீக்கத்திற்பூசத் தீரும்.

இரத்தமண்டலி கடித்தால், கடிவாயிலும் மயிர்க்காலிலும் இரத்தம் தாரை தாரையாய் வடியும்.

சிறுசெருப்படையையாவது, கொல்லங்கோவை இலையையாவது இடித்துச்சாறு வாங்கி அரைக்காற்படி மூன்றுநாட் காலையிற் கொடுத்து உடம்பிலும் அந்தச் சாற்றைப்பூசத் தீரும். வெள்வேலாம் பட்டையைக் காடியாவது ஆவின்மோராவது விட்டிடித்து அரைக்காற்படி கொடுக்கத் தீரும். ஆனைநெருஞ்சி இலையைச் சிறுநீர்விட்டு இடித்துப்பிழிந்து அரைக்காய்படி சாறு உள்ளுக்குக்கொடுத்து உடம்பிலும் பூசத்தீரும்.

சீதமண்டலி கடித்தால், உடல் குளிரும்; நடுக்கும்; வியர்வை மிகவுண்டாம்.

முத்தெருக்கஞ்செவி அல்லது வேப்பம்பட்டையைக் காடிவிட்டுச் சிதைத்து அரைக்காற்படி உள்ளுக்குக்கொடுத்து அதைக்காடியில் வேகவைத்து ஆவிபிடிக்கத் தீரும்.

திமிர்மண்டலி கடித்தால், பொன்முசுட்டைவேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்துக் கொடுத்துக் கடிவாயிற்பூசத் தீரும்.

சொறிமண்டலி கடித்தால், நன்னாரிவேரை ஒரு தேசிக்காய்ப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலிற் கொடுத்தாலும், வெள்வேலாம்பட்டையைக் காடி விட்டிடித்து அரைக் காற்படி சாறுகொடுத்தாலும் நீங்கும்.

வீங்குமண்டலி கடித்தால், அமுக்கிரா, சூரை, புங்கு, இண்டு, தக்காளி, இலுப்பை இவைகளைச் சிறுநீர்விட்டு அரைத்துப்பூசக் கடிவாய் வீக்கந்தீரும்.

மண்டலி புடையன் விஷத்துக்கு மேற்பூச்சு: நற்றாளியிலை, வசம்பு, உள்ளி இவைகளை அரைத்துக் கடிவாயிலும் உடம்பிலும்பூசி முறுக்கத் தீரும்.

இரத்தவிரியன்: இரத்தமண்டலி: இரத்தப்புடையன் விஷத்துக்கு, வெள்வேலாம் பட்டையை ஆவின்மோர்விட்டு இடித்துப்பிழிந்து அரைக்காற்படி சாறு உள்ளுக்குக் கொடுத்தாலும், கஞ்சாங்கோரைச்சாற்றை

Koviloor Digital Library

அரைக்காற்படிவீதங் கொடுத்தாலும், கொடிவேலிவேரை அரைத்துக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஆவின்பாலில் கொடுத்தாலும் மேற்படி விஷங்கள் தீரும்.

ஆடுதீண்டாப்பாளைவேர், கவுதும்பைவேர், வெள்ளெருக்குவேர், மருக்காரைவேர் இவைகளை ஓர்நிறையாக அரைத்து உடம்பிற் பூசி முறுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

சுருட்டைப்பாம்பு கடித்தால், கடிவாயிலிருந்து ஒருமுழம்வரை வீங்கும்; வலிக்கும்; நெஞ்சடைக்கும்; கண்பஞ்சடையும்; இந்த விஷத்துக்கும் குழிப்பாம்பு கடிவிஷத்துக்கும் கொல்லங்கோவை, தலைசுருளி, அமுக்கிரா, முப்புரண்டி, கொடுவேலி, பேய்க்குமட்டி, அவுரி, ஆடுதீண்டாப்பாளை, வெள்ளுகா இவைகளின் மூலம் ஓர்நிறையாகச் சூரணஞ்செய்து பேய்ச்சுரைக் குடுக்கையில் வைத்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கத் தீரும்; மேற்படி விஷகடியாலுண்டாகும் புண் ஆறும்.

செவிப்பாம்பு என்ற செய்யானானது வெண்மை செம்மை நிறமாய்ச்சீகம்புற்போல் நீண்டதாயிருக்கும். இது கடித்தால் தேகமெங்கம் சிறுதடிப்பும் நமைச்சலுமுண்டாம். இது செவியில் நுழைந்தால் பிராண பயமுண்டாம்.

கோவையிலை, வெற்றிலை, கொழிஞ்சி, வேலிப்பருத்தி, முடக்கொத்தான் இவைகளின் இலைகளை இடித்துச் சாறுவாங்கிக் கொதிக்கவைத்துக் கடிவாயிற்பூசக் கடுப்புத் தீரும்; பேய்ப்பீர்க்கம்வேர், மிளகு இவை சமன்பொடித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்து உள்ளுக்குக் கொடுக்கத் தீரும்; தூதுளைவேர், நாவல்வேர் இவ்விரண்டையும் அரைத்துக் கடிவாயிற்பூசத் தீரும்.

பூரான்கடித்தால், கடிவாயிற்கடுப்பும், ஊறுதலுமுண்டாம்; வளர்பிறையில் தேகத்தில் பூரான்போற்றடிக்கும்.

பெருஞ்செய்யான் கடித்தால், கடிவாய் வீங்கும்; தேட்கொட்டைப்பார்க்கிலும். பதின்மடங்கு கடுக்கும்.

அரைக்காற்படி வன்னியிலைச்சாற்றில், காற்பல நாகதாளிவேரை அரைத்துக் கலக்கி ஆறுநாள் அந்திசந்தி கொடுக்கவும்; உப்புப்புளி தள்ளிப் பத்தியமாயிருக்கப் பூரான் செய்யான் விஷந்தீரும்; அவுரிச்சாற்றில் மிளகுத்தூள்சேர்த்து முன்போற்கொள்ள மேற்படி விஷங்கள் தீரும்.

செவ்வரணை நக்கினால், நடுக்கம் மயக்கம் வியர்வைகாணும்; வாயில் வெண்ணுரை தள்ளும்; நாவுதடிக்கும்.

சுக்கும், வசம்புக்கரியும் ஓர்நிறையாகப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்து வெண்சாரணைவேரை அரைத்து உடம்பிற்பூசி முறுக்கத்தீரும் கச்சந்திராய்வேரும் உள்ளிப்பூடும் அரைத்துக்கொடுக்கத் தீரும்.

Koviloor Digital Library

பெரிய அரணைநக்கினால், மூக்கரைச்சாரணைவேரை அரைத்து ஒரு கொட்டைப் பாக்குப்பிரமாணம் ஆவின்பாலிற்கொடுக்கத் தீரும்.

சிலந்திப்பூச்சி கடித்தால், ஒருநாள் இரண்டுநாள்வரை கடிவாய் கடுத்துக் கொண்டிருக்கும்.

ஆடுதீண்டாப்பாளைவேர், மரட்கிழங்கு, இலவங்கப்பட்டை, ஏலம் இவைகளில் ஒன்றைக் கொட்டைப்பாக்களவு அரைத்து உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

பொரிவண்டு, நீர்வண்டு, புள்ளிவண்டு முதலிய விஷவண்டுகள் கடித்தால், சில காலத்திற்குப்பின் உடலில் வட்டமாய்த் தடித்துப்படரும்; தினவெடுக்கும்; ஒடுவடியும்.

மேற்படி வண்டுகள் உட்பட பதினெட்டுவகை வண்டுகடி விஷத்துக்கும், வண்டுகொல்லிப்பட்டையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்களவு எட்டுநாட் கொடுத்து உடம்பிலும் பூசிவரத் தீரும்.

ஆடுதீண்டாப்பாளைவேரையாவது, பிராய்வேரையாவது சூரணஞ்செய்து சாப்பிட்டுவரத் தீரும்; வெள்ளறுகு, சிறியாநங்கை, வெள்ளைக்காக்கரட்டான் இவை சமூலம் சூரணஞ்செய்து சாப்பிட்டுவரச் சருவ வண்டுகடி விஷங்களுந் தீரும்.

செவ்வட்டை கடித்தால், கடித்தவாய் தடித்துச் சிவந்து திமிராயிருக்கும்; எட்டிக்கொட்டையை ஆவின்நெய்யில் வேக்வைத்து ஒருகாசெடைவீதஞ் சாப்பிட்டுவரத் தீரும்; புனமுருங்கைவேர், நத்தச்சூரிவேர் இவைகளைச் சூரணித்து அதில் வேப்பம்பட்டைத்தைலம் காசெடை வைத்துண்ண மேற்படி அட்டைவிஷமும் காட்டு அட்டை விஷமுந்தீரும்.

புழுதிஉண்ணி: காட்டுண்ணி: சருகுண்ணி: கடித்தால், கடிவாயில் நமைச்சல், ஊறுதல், வீக்கங்காணும்; மேனியிலையும் உப்புங்கசக்கித் தடவத் தீரும்.

காணாக்கடிக்கு, கருஞ்சிவதைவேரை ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் உள்ளுக்குக்கொடுத்துப் பெருஞ்சின்னியிலையை அரைத்து உடம்பிற்பூசி முறுக்கத் தீரும்.

செஞ்சாரை: கருஞ்சாரை: வெண்சாரை: மஞ்சட்சாரை என்ற நான்குவகையிலொன்று கடித்தால், மயக்கங்காணும்: கண்பஞ்சடையும்: அவுரிவேரும், மிளகும் அரைத்து உள்ளுக்குக் கொடுத்து அந்த இலைச்சாற்றை உடம்பிற்பூசி முறுக்கத் தீரும்.

தேள்: நட்டுவக்காலி கொட்டினால், விறுவிறுப்பாய் விஷமேறி நெறிகட்டும்; கொட்டுவாய் வியர்க்கும்; கடுக்கும்; தேகஸ்திதிக்குத் தக்கபடி பற்பல வேதனைகளுமுண்டாம்.

காஞ்சிரைவேர், அவுரிவேர், நாய்க்கொட்டான்வேர், பொன்முசுட்டைவேர் இவைகளை ஓர்நிறையாக இடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் இளவெந்நீரிற் கொடுக்கத் தேள், நட்டுவக்காலி விஷம் தீரும்.

Koviloor Digital Library

பொன்முசுட்டை, முப்புரண்டி, நாகதாளி, ஆடுதீண்டாப்பாளை, வேலிப்பருத்தி, நிலவேம்பு, இவைகளின் வேர்களை ஓர்நிறையாக இடித்துச் சூரணஞ்செய்து திரிகடிப்பிரமாணம் வெந்நீரிற்கொடுக்க மேற்படி விஷங்கள் தீரும்.

கொல்லங்கோவைக்கிழங்கையாவது, ஆடுதீண்டாப்பாளைவேரையாவது, மாவிலிங்க வடவேரையாவது ஆதித்தவாரத்தில் வெட்டிவந்து கொஞ்சம் வெற்றிலையில் வைத்துத் தின்னக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

எட்டிவிதையை முலைப்பாலிலுரைத்துக் கொஞ்சம் உள்ளுக்குக்கொடுத்துக் கடிவாயிலும் பூசத் தீரும்.

முற்றினசெவ்வலரிவேர்ப்பட்டையை வெள்ளெருக்கம்பாலில் மூன்றுநாளூறப் போட்டு நிழலில் உலர்த்திவைத்துக்கொண்டு கொஞ்சம் வெற்றிலையில் வைத்துத் தின்னக் கொடுத்து அதை எருக்கம்பாலில் உரைத்துக்கடிவாயிற்பூசத் தீரும்.

மனிதருடைய நகத்தைச்சீவித் துணியிற் சுருட்டித் தீயிற்கொளுத்தி ஆற்றி அந்தப்புகையை நாசியிற்பிடிக்க மேற்படி விஷம் நெறியிறங்கும்.

புகையிலையில் மயிலிறகும் வெள்ளெருக்கம்வேரும் வைத்துச்சுருட்டிப் புகை குடிக்க மேற்படி விஷமிறங்கும்.

நல்லெண்ணெயிற் குப்பைமேனி: தைவேளை: வெற்றிலை இவைகளின் சாறும், உப்பும்போட்டுக் கொதிக்கவைத்து ஆவிபிடித்தாலும், நல்லெண்ணெயிற்கோழிக்காரத்தைப் போட்டுக் கொதிக்கவைத்து ஆவிபிடித்தாலும் கொட்டுவாய்க்கடுப்புத் தீரும்.

அரிதாரம், மனோசிலை, கெந்தகம், மாடப்புறாவின்எச்சம், கழற்சிப்பருப்பு, ஆடுதீண்டாப்பாளைவேர் இவைகளை ஓர்நிறையாக வெள்ளெருக்கம்பால்விட்டரைத்து மாத்திரை செய்துகொண்டு மேற்படி பாலிலுரைத்துக் கடிவாயிற்பூசக் கடுப்பு, எரிவுதீரும்.

எலிகளின்கடிவிஷக்குறிகளும் அவைகட்கு நிவிர்த்திகளும்.

எலிகடியால் பல்லில் வலியும் உளைவும் இரத்தமுங்கண்டால், அவுரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின்பாலில் ஏழுநாட்கொடுக்கத் தீரும்.

தேகத்திற் கொப்புளங்கண்டால், பெருமரப்பட்டை: இலை: வேர்: இம்மூன்றையும் சமனாக இடித்துச் சூரணித்து ஆவின்வெண்ணெயில் மத்தித்துக் கால் மண்டலங்கொள்ளத் தீரும்.

சுவாசங்கண்டால், சங்கு, வெள்ளைக்காக்கரட்டான் இவ்விருவகை வேர்களையும் அரைத்து ஆவின்பாலிற் கொடுத்துவரத் தீரும்; உடல் பூரித்து

Koviloor Digital Library

இருமல் இளைப்புக் கண்டால், கோரைக்கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்சாப்பிட்டு வந்தாலும், இறங்கழிஞ்சிவேர்ப்பட்டையை ஒரு புன்னைக்காய்ப்பிரமாணம் அரைத்து வெந்நீரில் ஏழுநாட் காலையிற் கொடுத்தாலுந்தீரும்: இருமல் கண்டால், நாயுருவிசமூலம், அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்: இரைப்புக் கண்டால், மூக்கரைச்சாரணைவேரை ஆவின்பாலில் வேகவைத்துலர்த்திச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்; உடல் வெதும்பித் திகைத்தால், தூதுளங்காயும், சீனியும் அரைத்துச் சாப்பிட்டுவரத் தீரும்.

உடல் வீங்கினால் நீலக்காக்கரட்டான்வேரை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம், அரைத்து ஆவின்மோரிற் கொடுக்கத் தீரும்; அவுரிச்சாற்றைத் தேகத்திற்பூசவும்; கை கால் வழங்காவிட்டால் அவுரிவேர், சங்கம்வேர் இவ்விரண்டையுஞ் சூரணித்துத் திரிகடிப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

உடலிற் கழலைபோலும் பலாவித்துப்போலுந் தடித்தால் வெல்லத்தில் ஏழுதுளி வெள்ளெருக்கம்பால்விட்டு ஏழுநாட் கொடுக்கத் தீரும்; எருமைச்சாணிப்பாலை மாகாணிப்படிவீதம் மூன்றுநாட்கொடுத்து அந்தச்சாணியை வறுத்து ஒத்தடஞ்செய்யவும்; வெள்ளை ஆதாளைக்கிழங்கை அரைத்துக் கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரிற் கொடுக்கவும்; இந்தப்படி ஏழுநாட்கொடுக்கத் தீரும்.

முகத்திற் கருவங்குபோலும் தேகத்திற் குஷ்டம்போலும் தழுதணைபோலும் விழுந்தால் ஆடுதீண்டாப்பாளைவேர், சங்கவேர் இவ்விரண்டையும் சூரணஞ்செய்து கால்மண்டலங்கொள்ளத் தீரும்.

கைகால் உளையும்; உடம்பிற் கழலைபோற்கட்டித் தினவெடுக்கும்; வெடித்துப் புண்ணாகும்; இவை சித்திரமூலம், சிவன்வேம்பு, குளப்பாலை, வெள்ளறுகு இவைகளைச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுவரத் தீரும்.

உடல்குளிர்ந்து நடுங்கிக் கடிவாய் வட்டமாயிருந்தால், செஞ்சந்தனமும் திப்பலியும் பொடித்துத் திரிகடிப்பிரமாணந் தேனிற்கொள்ளத் தீரும்.

கால்கை முடங்கினால், அமுக்கிராக்கிழங்கைச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணமாகத் தேனில் ஒருமண்டலங்கொள்ளத் தீரும்; மேற்படி கிழங்கை அரைத்துப் பூசிவரத் தீரும்.

அவுரி சமூலம் இடித்துச் சாறுவாங்கி மாகாணிப்படி வீதம் உள்ளுக்குக் கொடுத்து அந்தச்சாற்றை உடம்பெங்கும்பூசி முறுக்கச் சகல எலிகளின் விஷமும் நீங்கும்; வீழிவேரை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரில் மூன்று நாட்கொடுக்கச் சகல எலிகளின் விஷமுந் தீரும்; பேய்ப்பீர்க்கிலைச் சாற்றை மாகாணிப்படி வீதம் மூன்றுநாட்கொடுக்கச் சகல எலிகளின் விஷமுந் தீரும்; உப்புப்புளி தள்ளவும்.

நாய்கடிக்கு:– நாறாக்கரந்தை, நன்னாரி, செந்நாயுருவி இவைகளினிலையும் எள்ளும் புகையூரலும் அரைத்துக் கடிவாயிற்

Koviloor Digital Library

பூசினாலும், கோவையிலையை யரைத்துப் பூசினாலும், சுண்டையிலையும் உப்பும் அரைத்துப்பூசினாலுந் தீரும்.

நாய், நரி, சிறுபுலி, குரங்கு, பூனை, குதிரை முதலை, வேங்கை இவற்றின் கடிவிஷத்துக்கு:– அவுரிவேரை ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் அரைத்து ஆவின் பாலிற் கலக்கி மூன்றுநாட் கொடுத்து அந்தவேரை அரைத்துக் கடிவாயிற் பூசத் தீரும்; வீழியிலைச்சாற்றை மூன்றுநாட் கொடுக்கத் தீரும்; கொல்லங்கோவைக் கிழங்கை ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து வெந்நீரில் மூன்றுநாட் கொடுத்து அதை அரைத்துக் கடிவாயிற் பூசவும்.

மனிதர், பேய்நாய், பேய்நரி, பெருச்சாளி, எலிகடிகளின் விஷத்துக்கு:– இறங்கழிஞ்சிப்பட்டையை அரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் வெந்நீரிற்கலக்கி மூன்றுநாட்காலையிற் கொடுக்கத் தீரும்; மேற்படி மருந்தினால் வாந்தி பிராந்திகண்டால் சுக்கு, மிளகு, வசம்புக்கரி வகைக்கு ஒரு வராகனெடை, முருங்கைஈர்க்கு ஒருபிடி இவைகளைச்சிதைத்து அரைப்படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாக வற்றவைத்துக்கொடுக்க வாந்தி நிற்கும்.

விஷத்தால் மரித்தவனை எழுப்ப ஆக்கிராணப்பொடியும் மந்திரமும்.

இந்திரகோபப்பூச்சி, பச்சைப்பாம்பு, செந்தேள், பூமிநாகம், அறுபுள்ளிவண்டு, ஆயிரங்காலன் இவைகளை உலர்த்தி ஓர்நிறையாகப்பொடித்துப் பேய்ச்சுரைக்குடுக்கையிலடைத்துக்கொண்டு, விஷத்தால் மரித்தவனைச் சுடுகாட்டிற் கட்டைமேல் வைத்து விட்டால் அவன் காதில் மூக்கில் அந்தப்பொடியிற் பணவெடை போட்டுக் குழல் கொண்டு ஊதி, அக்கினிபீஜமாகிய–ரம் என்ற அக்ஷரத்தை அவன்முகத்திலொட்டி, காலனா தூதனாவென்று கேட்கில் தூதனென்றால் ஓம்படு என்று தகரைப்பலியிட்டு அவனைக் கட்டையைவிட்டுக் கீழேயிறக்கவும்; காலனென்றாற் கட்டையின் மேல் விழுந்து மரித்துவிடுவன்.

வேறு ஆக்கிராணமும் மந்திரமும்.

ஒரு பெரும்பாண்டத்தில் முக்கால்வாசி சிறு பிள்ளைகளின் அமுரியைப்பிடித்து அதுமுங்கச் சிறு பேய்ப்பீர்க்கங்கட்டை விதைநீக்கி அமுக்கி மூடி இருபதுநாள்வரை பூமியிற் புதைத்தெடுத்துலர்த்திப் பொடித்துப்பேய்ச்சுரைக்குடுக்கையிலடைத்துக் கொள்ளவும்; நாகம், விரியன், மூர்க்கன், வழலை, மண்டலி, தேள், செய்யான், பூரான், நட்டுவக்காலி, நீர்க்குரூழி இவைகளின் விஷத்துக்கு, ஒரு சிமிட்டாப்பொடியைக் காதில் மூக்கில் ஊதி நாவிற்றடவி மேற்படி அக்கினிபீஜத்தைத் தியானிக்க விஷமிறங்கும்.

விஷத்தை ஏற்றி இறக்க மாத்திரைக்கோல்.

மகிழமரத்தின் வடகொப்பை வெட்டி, வெட்டின பக்கத்தை அடியாக வைத்து மாத்திரைக்கோலுண்டுபண்ணி அடியிற்றமரிட்டு அந்தத்தமருக்குள்

Koviloor Digital Library

கோடகசாலை வேரையும் பச்சைப்பாம்பின் நுனிவாலையும் வைத்து அந்தமரத்தாற் றமர் வாயைமூடி வைத்துக்கொண்டு விஷதிட்டியானவன் சிரசில் அந்தக்கோலின் முனைப்புறத்தை ஊன்ற விஷமேறும்; அடிப்புறத்தை யூன்ற விஷமிறங்கும்.

ஆதிவ்ாரத்தில் கொல்லங்கோவைக்கிழங்குக்குள், ஒருபலச் சுக்கை வைத்துமூடி மண்தள்ளவும்; மற்றொரு கிழங்குக்குள் ஒருபல வசம்பை வைத்துமூடி மண்தள்ளவும்; அந்தச்செடிகள் பட்டுப்போனதின்பேரில் அவைகளை எடுத்து வைத்துக் கொண்டு சுக்கைக்கொடுக்க விஷமேறும்; வசம்பைக்கொடுக்க விஷமிறங்கும்.

அரவு கடியாதிருக்கக் கடகம்.

ஆடுதீண்டாப்பாளை, அவுரி, கரிப்பாலை, அழிஞ்சி, கழற்சி, கெருடக்கொடி, கொடுவேலி, பொற்சீந்தி, மாதுளை, கர்ப்பூரவல்லி, சிறியாநங்கை, புளியாரை, எட்டி, பேய்ப்பீர்க்கு, குன்றிமணி, கோடகசாலை, திருகுகள்ளி, ஆடாதோடை, அலரி, நாறாக்கரந்தை, கீழ்க்காய்நெல்லி, பொடுதலை, முப்புரமெரித்தான் என்ற முப்புரண்டி, இவைகளின்வேர், பச்சைப்பாம்பு, பச்சைஓந்தி, இவற்றின் நுனிவால், தம்பலப்பூச்சி இவைகளை எல்லாம் ஒன்றாகச்சேர்த்து, கொல்லங்கொடியாற் கடகஞ்செய்து வலது கரத்திற்போட்டுக்கொள்ள அஷ்டநாகங்களுந் தீண்டாது, அவைகளின் வாய்கட்டும்; அவைகளை மிதித்தாலுங் கடியாது.

தேளுக்குப் பாச்சுவித்தை.

தண்ணீரில் அமுங்குகிற கழற்சிக்காய்க் குடுக்கைக்குள், இரதத்தையும் பேய்க்குமட்டி வேரையும் அரைத்து அடைத்து வாயை மெழுகால் மூடிவைத்துக் கொள்ளவும்.

கிரகணம் பிடிக்கும்போது கீழ்க்காய்நெல்லி வேரைப்பிடுங்கி அந்தவேரையும், செம்போத்து நாக்கையும், உடும்பு நாக்கையும், இரதத்தையும் கழற்சிக்குடுக்கையிலடைத்து, கொசுத்தேன் மெழுகாலடைத்து வைத்துக்கொள்ளவும்; தேள் நட்டுவக்காலி கொட்டினன் கையிற் கொடுத்துப் பூமியிற்போட விஷமில்லை.

நாகதாளிப்பிரம்பின் ஒருமுனையிற் றமர்ப்போட்டு அதற்குள் கொடுவேலிவேரையும் காக்கை வலதுகண்ணையும் உடும்புநாக்கையும் இரசத்தையும்விட்டு அடைத்துத் தீபதூபங்கொடுத்து வைத்துக்கொண்டு தேள் நட்டுவக்காலி கொட்டின இடத்தில் மேற்படி பிரம்பால் மூன்றுதடவை தடவித்தட்டிக் கிட்டநிற்கின்றவன் கையிலடிக்க அவனுக்கு விஷமேறும்; அவனைத்தட்டிப் பூமியிற்றட்ட விஷமில்லை.

மேற்படி கழற்சிக்காயைக் கொடுக்கும்போதும் பிரம்பாலடிக்கும் போதும் மனதிற்றியானிக்கவேண்டிய பாச்சுமந்திரமாவது:—

வானிட்டசோதி வானோர் பெருமாளே, கேட்டேனிவனொருவனைத் தேளிவதென்ன, தேளிந்ததென்று தெருவில்லவாரதேன், போகஓட்டேன்

Koviloor Digital Library

கேட்டேன்போ, கேட்டேன் போய் போய் போ போ என்று தியானிக்கவும்; வேறு மந்திரம் குண்டனபோ், சொக் சொக் என்று தியானிக்கவும், ரம் என்ற அக்கினிபீஜத்தை செபிக்கவும் தேள் நட்டுவக்காலி விஷம் நீங்கும்; இம்மந்திரங்களிலெதையாவது முன்னாடியே லக்ஷம் உரு செபித்திருக்கவேண்டியது.

அரவுமுதலிய விஷங்களை நிவிர்த்திக்கக் கருட பஞ்சாக்ஷர விஞ்சை மந்திரங்கள்.

மேற்படி மந்திரங்களை உருவேற்றும்பொழுதும் அம்மந்திரங்களைப் பிரயோகிக்குங் காலையிலும் கருடபகவானைக் குருவாகப்பாவித்து அவரை நினைந்துகொள்ளவேண்டியது.

பிருதிவிபீஜம்	அப்புபீஜம்	அக்கினிபீஜம்	வாயுபீஜம்	ஆகாசபீஜம்
நம்லம்	மம்வம்	சிம்ரம்	வம்யம்	யம்ஹம்

சதுர்க்கோணத்தினடு, நம்லம் என்று வரைந்து நம்லம் மம்லம் சிம்லம் வம்லம் யம்ஹம் சிவஓம் பட்சி சுவாஹா என்று தியானிக்க விஷம் தம்பிக்கும், அரவு ஓடாது.

மூன்றாம்பிறைக்கோணத்தினடு, மம்வம் என்று நாட்டி மம்வம் சிம்வம் வம்வம் யம்வம் நம்ஹம் சிவஓம் பக்ஷி சுவாஹா என்று தியானிக்க விஷமிறங்கும்.

திரிகோணத்தினடு, சிம்ரம் என்று எழுதி சிம்ரம் வம்ரம் யம்ரம் நம்ரம் மம்ரம் சிவஓம் சுவாஹா, என்று தியானிக்க, அரவு சாகும்.

அறுகோணத்தினடு வம்யம் யம்யம் நம்யம் மம்யம் சிம்யம் சிவஓம் என்று தியானிக்க அரவு ஓடும்; புற்றில் நுழையும்.

வட்டத்தினடு, யம்ஹம் என்று வரைந்து யம்ஹம் நம்ஹம் மம்ஹம் சிம்ஹம் வம்ஹம் சிவஓம் சுவாஹா, என்று தியானிக்க, விஷமிறங்கும்.

உடலில் ஆறாதாரஸ்தானங்களிற் சிரசுமுதல் அடிவரை, யநமசிவ என்று கண்ணாலொட்டித்தியானிக்க, விஷமிறங்கும்.

அந்த ஸ்தானங்களில் அடிமுதற் சிரசுவரை, நமசிவய என்று கண்ணாலொட்டிச் செபிக்கில், விஷம் ஏறும்.

வட்டத்தினடு சதுர்க்கோணம், அதனடு நம்லம், அதனடியில் ஹம் என்று வரைந்து ஓம் அவ்வும் சிவயநம என்று ஜெயிக்க, அரவு ஆடாது; ஓடாது.

வட்டத்தினடு மூன்றாம் பிறைக்கோணம், அதனடு வம் மம் என்று எழுதி ஓம் அவ்வும் சிவ என்று தியானிக்க, அரவு நின்றாடிவரும்.

வட்டத்தினடு முக்கோணம், அதனடு ரம்சிம், அதனடியில் ஹாம் யம் என்ற நாட்டி ஓம் அவ்வும் யவசிமந என்று செபிக்க, அரவுக்கு வஞ்சினமுண்டாம்.

Koviloor Digital Library

வட்டத்தினடு அறுகோணம், அதனடுவில் யம் லம், அதனடுவில் ஹம் யம் என்று எழுதி ஓம் அவ்வும் வசியவசிய என்று செபிக்க அரவு ஓடிப்போம்.

கடியுண்டவனுடலைச் சிங்காதனமாகவும், அவனுடலில் ஏறினவிஷம் நந்தியாகவும், கருடன் தலைக்குமேல் அந்தரத்தில் வந்துநிற்பதாகவும், ஈசுவரன் வாக்கினால் மந்திரஞ்சொல்லுவதாகவும் நினைந்து, ஓம் சிவா சிவா வாவா நசிநசி நமசிவய நம என்று தியானித்துக் குழையடிக்க செபிக்க விஷமீளும்; அடங்கின உயிர் திரும்பும்; மேற்படி மந்திரத்தைப் பிரம்பில் எழுதி அடிக்க, மோதிரத்தில் எழுதிக் கையிற்போட்டுக்கொண்டு குட்ட தண்ணீரில் எழுதி அந்தத்தண்ணீரைச் சிரசிற் புரோட்சிக்க, விபூதியிலெழுதி அதைக்கடாட்சிக்க விஷமிறங்கும்.

ஓம் பகவதி ஓம் நமோபகவதி தெய்வதா திரி திரி அரி அரி சுவாஹா என்று 12000 உருச்செபிக்கச் சித்தியாம், விஷந்தீண்டினவன் சிரசிற்குட்ட விஷமிறங்கும்; அடங்கின உயிர் திரும்பும்.

மருக்காரையின்பேரிற் படர்ந்திருக்கிற மலைதாங்கிவேரைப்பிடுங்கி வைத்துக் கொண்டு விஷந்தீண்டினவன் கையிற்கொடுத்து, ஓம் சிவசிவா வாவா நசிநசி என்று தியானிக்க, விஷமிறங்கும்.

கருடன் மூலமந்திரம்.

கருடபகவான் அஷ்டநாகங்களையும் ஆபரணமாய்ப்பூண்டுகொண்டு தனக்கெதிரிற் குருவாக வந்திருப்பதாக நினைந்துகொண்டு, ஓம் ஆம் அ க்ஷம் சிவாசிவா வாவா சிவஓம் சுவாஹா என்று 100000 உருச்செபிக்கச் சித்தியாம்; சகல விஷமு மீளும்.

வேறு

வாயுவே ஓம் சுவாம் ஓம் நமசிவய நசி ஓம் ஆம் சிவ சிவா லிங்க லிங்க சிவாகி என்று உருச்செபிக்கச் சகலவிஷமும் நீங்கும்.

வேறு

ஓம் பக்ஷி சுவாஹா ஓம் விசுவபக்ஷி சுவாஹா ஓம் சிவபக்ஷி சுவாஹா ஓம் விஷ்ணுபக்ஷி சுவாஹா ஓம் கருடபக்ஷி சுவாஹா வம் யம் ரம் யம் ஓம் சிவா என்று ஒரு கிணற்றில் 1000 உருச்செபித்து அந்தக்கிணற்றுத் தண்ணீரை விஷதிருஷ்டியானவன் தலை முகத்தில் எறிந்து மசி மசி நசி நசி என்று தண்ணீரில் மந்திரித்து உள்ளுக்குக்கொடுக்கச் சகலவிஷமுந் தீரும்; அடங்கின உயிர் திரும்பும்; பேய்பூதம் ஓடிப்போம்.

அரவுகடியால் உயிர் அடங்கினவன் நெற்றியில், கண்ணால் ஆகாசவட்டத்தையும் அதன் நடுவில் ஹம் அட்சரத்தையும் வரையவும்; அவனுடைய வயிற்றில் பிறைக்கோணத்தையும் அதன் நடுவில் ஹம், ஹம், ஹம், ஆம், ஆம் என்ற அட்சரங்களையும் வரையவும்; கருடன் ஆகாச மூலமந்திரமாகிய ஓம், ஆம், அ, க்ஷம், சிவ, சிவ, வா, வா, என்ற மந்திரத்தையும்;

Koviloor Digital Library

கருடன் அப்பு மூலமந்திரமாகிய ஓம் சுவாஹா என்ற மந்திரத்தையும் ஜெபிக்க அடங்கின உயிர் திரும்பும்; இவ்விரண்டு மந்திரங்களையும் முன்னாடியே ஐந்து லக்ஷம்உரு நாளொன்றற்கு 1000 மாக ஏற்றியிருக்கவேண்டும். இப்படி உருவேற்றியிருந்தால் நினைத்தவுடன் விஷமீளும்; சிரசிற்குட்ட அடிக்கத் துடைக்கத் தண்ணீரிறைக்கக் குழையடிக்க விபூதிபோட மணலைஇறைக்க நொடிக்க விஷம் பறந்துபோம். அந்த மந்திரம் ஜெபிக்கும்போது 1000 த்துக்கு ஒரு ஓமம் தற்பணம் பிராமணபோஜனமும் லட்சத்துக்கு நூறு பிராமணாளுக்குப் போஜனமும் மகேசுவர பூஜையும் ஐந்து லட்சம் உரு முடிந்தவுடன் பிராமணபோஜனம் செய்வித்துக் கருடனுக்கு அமுதகலசம் வைத்து நைவேத்தியமும் செய்யச் சகல காரியமும் சித்தியாகும்; பாவம் சிதைந்து போம்; அஷ்ட ஐசுவரியமுமுண்டாம்; சிவரூபமாயும் புண்ணிய ரூபமாயுமிருப்பன்.

தூதுலக்ஷணம்.

ஒருவனைத்தீண்டிய அரவுவிஷம் மீளும் மீளாதென்று ஆரூடம் கேட்கவந்த தூதனுடைய உடைகுலைந்தாலும், அவன் சிவந்த புஷ்பத்தைச் சூடியிருந்தாலும், சிவப்பு அல்லது கறுப்புவஸ்திரம் உடுத்திருந்தாலும், கம்பு தார் மாலை கயிறு வெள்ளோலை கேடயம் கத்தி முதலிய ஆயுதங்களைக் கையிற் பிடித்திருந்தாலும், மண்ணைக் காலாற் கீறினாலும், வாய்குளறினாலும், அழுதுகொண்டு வந்தாலும், எண்ணெய் தலைக்கிட்டிருந்தாலும், தலைமயிரை விரித்துக்கொண்டிருந்தாலும், இராகுவின் நிலையில் நின்றாலும், ஆகாயத்தைப்பார்த்து நின்றாலும், மேட்டிலேறி நின்றாலும், ஒருகாலைத் தூக்கிக்கொண்டாவது தலையிற் கையைவைத்துக்கொண்டாவது கையை விரித்துக் கொண்டாவது நின்றாலும், தூணிலாவது விறகுகட்டிலாவது சாய்ந்துகொண்டிருந்தாலும், தட்டைக் கட்டையாவது விறகுகட்டையாவது குடத்தையாவது சுமந்து கொண்டு நின்றாலும், கண்ணீர் வடிந்து கொண்டிருந்தாலும், தரையில் விழுந்து புரண்டு அலறி அழுது புலம்பினாலும், துரும்பைக் கிள்ளிக்கொண்டிருந்தாலும், கொட்டாவியிட்டாலும், மார்பிலும் சந்திலும் சொறிந்தாலும், தலைமயிர் களைந்த மொட்டைத்தலையனாகவும் நோய் கொண்டவனாகவும் அந்தகனாவும் கைகால் முதலிய அவயவங்களறுபட்டவனாகவும் நொண்டி சப்பாணி முடவன் ஒற்றைக்கண்ணன் பூனைக்கண்ணன் பிராமணன் தவசி சன்னியாசி கன்னான் நாவிதன் செக்கானாகவிருந்தாலும் விஷம் மீளாது.

தூதன் அரவின்பேரை முன்சொல்லி நஞ்சுண்டவன் பேரைப் பின்சொன்னால் விஷமீளாது; கடியுண்டவன் பேரை முன்சொல்லி, அரவின்பேரைப் பின்சொன்னால் விஷம் மீளும்.

ஆரூடம் சொல்பவனது நாசியிற் சந்திரகலையோடும்போது அப்பக்கத்தில் தூதன் வந்து நின்று ஆரூடம் கேட்கில் விஷமில்லை என்றும், சூரியகலை யோடும்போது அப்பக்கத்தில் அவன் நின்று ஆரூடம் கேட்டால் விஷமுண்டென்றும், உபயகலை யோடும் போது அந்தப்பக்கத்தில் அவன் நின்று ஆரூடம் கேட்டால் விஷத்தால் மரணமென்றும் சொல்லவும். சரம்

Koviloor Digital Library

ஓடாத பக்கத்தில் வந்து நின்று கேட்டால் விஷம் மீளும்; பூரணபக்கத்தில் நின்றுகொண்டு கேட்டால் விஷம் மீளாது; தூதன் பூரணபக்கத்தில் வந்துநின்று இன்னானை விஷம் தீண்டினதென்று சொல்லிவிட்டுச் சூன்னியபக்கத்துக்குப் போய்விட்டால் விஷத்தால் மரணமுண்டென்றும், சூனியதிசையில் வந்துநின்று பூரணதிசைக்கு வந்துவிட்டால் விஷத்தால் மரணமில்லையென்றும் சொல்லவும்.

தூதன் பூரணத்தில் வந்து நின்றால், ஆண்பாலை விஷந்தீண்டினதாகவும், பூரணத்தில் வந்து நின்ற தூதன் பெண்பாலைக் கடித்ததென்று சொன்னால் விஷமில்லையென்றும் கொள்ளவும்.

தூதன்வந்து சூனியத்தில் நின்றால், பெண்ணை விஷந்தீண்டினதாகவும் சூனியத்தில் வந்து நின்ற தூதன் ஆண்பாலைக்கடித்ததென்று சொன்னால், விஷமில்லை யென்றும் சொல்லவும்.

தூதன் வந்து ஆரூடம் கேட்கும்போது, அவன் தன்முகத்தையாவது மூக்கையாவது தொட்டால் நல்லபாம்பு, கழுத்தைத் தொட்டால் வழலை, கைவிரலைத்தொட்டால் மயக்கரவு, இடதுமார்பைத் தொட்டாற் கருவழலை, வலதுமார்பைத்தொட்டால் எலி, அதரத்தையாவது வயிற்றையாவது தொட்டால் விரியன், சந்தைத்தொட்டால் மண்டலி, முழந்தாளைத்தொட்டாற் புடையன், பாதத்தைத்தொட்டால் தேள், கணுக்காலைத்தொட்டால் நீர்ப்பாம்பு, எனச்சொல்லவும்.

தூதன் ஆரூடம் கேட்கும்போது அவன் சொல்லிய சொல்லில் அகரம் உதிக்கில் நல்லரவு, இகரம் உதிக்கில் விரியன், உகரம் உதிக்கில் வழலை, எகரம் உதிக்கில் மூர்க்கன் அல்லது மயக்கரவு, ஒகரம் உதிக்கில் சில்விஷமென்று சொல்லவும்.

தூதன் உரைத்த சொலில் முதலெழுத்து அகரம் உதித்து அவன் கிழக்கு முகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் ஒருபல், தெற்கு முகமாக நின்றால் அல்லது அந்தத் திசையிலிருந்து வந்தால் இரண்டுபல், மேற்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் மூன்றுபல், வடக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் நாலுபற் பட்டதாகச்சொல்லவும்.

இகரம் உதித்து அவன் தெற்குமேற்காக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் ஒருபல் மேற்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் இரண்டுபல், வடக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் மூன்றுபல், கிழக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் நான்குபற் பட்டிருப்பதாகச் சொல்லவும்.

உகரம் உதித்து மேற்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் ஒருபல், வடக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் இரண்டுபல், கிழக்கு முகமாக நின்றால்

Koviloor Digital Library

அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் மூன்றுபல், தெற்கு முகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் நான்குபற்பட்டதென்று சொல்லவும்.

ஏகரம் உதித்து வடக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் ஒருபல், கிழக்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் இரண்டுபல், தெற்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் மூன்றுபல், மேற்குமுகமாக நின்றால் அல்லது அந்தத்திசையிலிருந்து வந்தால் நான்குபற்பட்டிருப்பதாகச் சொல்லவும்.

ஒகரம் உதித்து எந்தத்திசையிலிருந்து வந்தாலும், எந்த முகமாக நின்றாலும், சில்விஷமென்று சொல்லவும்.

தூதனது இடக்கரத்தில் ஹீங்காரத்தைக் கண்ணாலெழுதி அதைப்பார்க்கும் போது வெண்ணிறமாகத்தோன்றினால் ஒருபல், பொன்னிறமாகத்தோன்றினால் இரண்டுபல், சிவந்தநிறமாகத் தோன்றினால் மூன்றுபல், கருமைநிறமாகத்தோன்றினால் நான்குபல்லென்று சொல்லவும்.

மேற்படி அட்சரத்தை முகர்ந்திடில் தாழைமலர் மணக்கில் நல்லரவு, பாதிரிப்பூ மணக்கில் வழலை, புளிமனக்கில் விரியன், மல்லிகைப்பூ மணக்கில் மண்டலி, இலுப்பைப்பூ அல்லது மிளகு மணக்கில் சிறுபாம்பு, பனம்பழம் மணக்கில் அல்லது யாதொரு மணமுமில்லாவிட்டால் சில்விஷம் என்று சொல்லவும்.

தூதன் சொல்லிய வார்த்தையில் அடங்கிய எழுத்துக்களில் ஒற்றெழுத்தை நீக்கி மற்ற எழுத்துக்களைப் பெருவிரல்முதற் கடைவிரல்வரை மாறி மாறி எண்ணிப் பார்க்கில் கடையெழுத்துத் கடைவிரலில் நின்றால் நல்லரவு, பௌத்திர விரலில் நின்றால் விரியன், நடுவிரலில் நின்றால் வழலை, ஆட்காட்டி விரலில் நின்றால் மூர்க்கன் அல்லது மயக்கரவு, பெருவிரலில் நின்றால் விஷமில்லையென்று சொல்லவும்.

மேற்படி அட்சரங்களைப் பௌத்திரவிரலின் நடு மேலும் பெருவிரலால் எண்ணிப்பார்க்கில் கடைசியெழுத்துக் கீழேநின்றால் அரைக்குக்கீழேயும், மேலே நின்றால் அரைக்குமேலேயும் விஷந்தீண்டினதாகச் சொல்லவும்.

மேற்படி அட்சரங்களைப் பௌத்திரவிரலுக்கு இடமும் வலமுமாக எண்ணிப்பார்க்கில் கடையெழுத்து வலத்தில் நின்றால் வலப்பக்கத்தில், இடத்தில் நின்றால் இடப்பக்கத்தில் விஷந்தீண்டினதாகச் சொல்லவும்.

மேற்படி அட்சரங்களின் தொகையை நாலிற்கழிக்க, ஒன்று மிஞ்சினால் ஒருபல், இரண்டு மிஞ்சினால் இரண்டுபல், மூன்று மிஞ்சினால் மூன்றுபல், நாலுமிஞ்சினால் நாலுபற் பட்டிருப்பதாகச் சொல்லவும்.

மேற்படி அட்சரங்களின் தொகையை மூன்றிற்கழிக்க, இரண்டுமிஞ்சினால் விஷம் மீளும், ஒன்று மிஞ்சினால், விஷம் மீளாது, மிஞ்சாதிருந்தால்விஷமில்லை.

Koviloor Digital Library

தூதன் கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு இந்தத் திசைகளில் ஒன்றற்கெதிர் நின்று சொன்னால், ஆண்பாலை விஷந்தீண்டினதாகச் சொல்லவும்.

தூதன் வடகிழக்கு தென்கிழக்கு தென்மேற்கு இந்த திசைகளில் ஒன்றற்கெதிர்நின்று சொன்னால், பெண்பாலை விஷந்தீண்டினதாகச் சொல்லவும்.

தூதன் வடமேற்குத் திசையில் நின்று சொன்னால், மிருகத்தை விஷந்தீண்டினதாகச் சொல்லவும்.

தூதன் சொல்லிய வாக்கியத்தின் முதல் அட்சரம் அகரமாகில் வல்லூறு, இகரமாகில் ஆந்தை, உகரமாகிற் காகம், எகரமாகிற் கோழி, ஒகரமாகில் மயிலாம்.

தூதன் சொன்ன வேளையில் உதித்தபக்ஷி ஊண், அசானால் விஷம் மீளும், நடையானால் இரண்டாம்பக்ஷம், தூக்கமானால் விஷம் மீளாதென்று சொல்லவும்.

கடியுண்டவன் பேருக்குப் படுபக்ஷி நாளிலாவது, தூக்கம்சாவு வேளையிலாவது, விஷம் தீண்டினால் மீளாதென்று சொல்லவும்.

பூர்வபக்ஷத்திற் கீழ்த்திசை வல்லூறு, தென்திசை ஆந்தை, மேற்றிசை காகம், வடதிசை கோழி, மத்தியதிசை மயிலாம்.

அபரபக்ஷத்தில் மேற்றிசை மயில், வடதிசை ஆந்தை, மேற்றிசை வல்லூறு, தென்திசை காகம், மத்தியதிசை கோழியாம்.

தூதன்வரும் திசைப்பக்ஷி ஊண், அரசானால் விஷம் மீளும், நடையானால் இரண்டாம் பக்ஷம், தூக்கம் சாவானால் விஷமுண்டவன் மரிப்பன்.

அருக்கன் இராகு உதிக்குமிடத்திலும் இருக்குமிடத்திலும் தூதன் நின்று சொன்னால் விஷமீளாது.

தூதன் சொல்லும் வேளையில், செவ்வாய், சனி, சூரியன், இராகு, இந்தக்கிரகங்களில் ஒன்றுடன் அருக்கன் கூடியிருந்தால் விஷம் மீளாது.

குரு கடாக்ஷத்தால் சருவ தோஷங்களும் தீரும்.

விஷசிகிச்சை முற்றிற்று.

முப்புப் படலம்.

சகலவிதமான மருந்துகளுக்கும் குருபற்பமென்று சொல்லப்படும்.

தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களில் விளைகின்ற பூநீரைப் பத்து முறை நல்ல நீரில் கரைத்துத் தெளிவை இறுத்துப்பரிதியில் காயவைக்கச் சித்தியாகும். அதுபோல் கரியுப்பும் தூய்மையாகும். அமுரியில்

Koviloor Digital Library

பூநீரைக் கரைத்து அதில் பறையுப்பைப் பாக்கு அளவாய் உரைத்துப் போட்டுக் காய்ச்சி வற்றவைத்து, நல்ல நீரில் கழுவி உலர்த்திக் கல்வத்திலிட்டு அண்ட வெள்ளைக்கருவால் மெழுகுபோல் ஆட்டிப் பண எடை வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஏழு சீலை செய்து உலையில் வைத்து ஊதச் சுண்ணமாகும். அதைப் பீங்கானில் இட்டு நல்லநீர் விட்டு மண்டலம் வைத்தெடுக்க உப்பு விளைந்திருக்கும். இந்த மூன்று வகை உப்பு, பச்சைக்கற்பூரம் வகைக்கு 1 பலம். இவைகளை வெண்கருவால் 2 சாமம் ஆட்டி வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு மூடி ஏழு சீலைசெய்து ஐம்பது எருவில் புடம் போட்டு அதில் வீரம், பூரம், புனுகு, வண்டு, நாவி வகைக்கு 1 கழஞ்சு சேர்த்து எலுமிச்சம்பழச்சாற்றில் இரண்டு நாளாட்டி வில்லை செய்து காயவைத்து ஓட்டிலிட்டு மூடி ஏழு சீலை செய்து கோழிப் புடம் போட்டு எடுத்துக்கொண்டு, அதில் கழஞ்சு வெள்வங்கத்திற் பூசி அதற்கு அந்தரத்தாமரையை அரைத்து அங்கி பூட்டிப் புடம் போடச் சுண்ணமாகும். அதனால் சகல நோய்களும் தீரும்.

கிண்ணிச் சுண்ணம்.

நான்கு படி அமுரியில் ஒரு படி பூ நீரைக் கரைத்து நான்காம் நாள் ஒரு படியாய் தெளியவிருத்துப் பீங்கானில் இட்டு அதில் வீரம் சாரம், சீனம் வகைக்கு 1 பலம், மிருதார்சிங்கி 1 பலம், முப்புச்சுண்ணம் 1 கழஞ்சு. இவைகளை மைபோல் பொடித்து அயக்கம்பால் கிண்டி பரிதியில் வைக்க நீரெல்லாம் வற்றும். அதன் பிறகு 15 நாள் பரிதியில் வைக்க முத்துப்போல் பீங்கானில் விளையும். அப்படி விளைவதை எல்லாம் வழித்துப் பீங்கானில் இட்டுப் பரிதியில் வைக்கச் சுத்த வெண்மையாகும். இதுவே பூ நீர்ச்சுண்ணமாகும். இதனால் எல்லாவிதமான நோய்களும், சீனச்சரக்கு அறுபத்திநான்கும் தீரும்.

லோக மரணம்.

பாடாணம், நவாச்சாரம், சீனம், பூரம், வீரம், புனுகு, வெடியுப்பு, காரம், சூதம், கெந்தி, துருசு, சுண்ணம் இவைகளை ஓர் எடையாய் எலுமிச்சம்பழச் சாற்றால் மெழுகு போல் ஆட்டி நவலோகத் தகட்டில் இடைக்கிடை மருந்தைப் பூசி, அவைக்குரிய மூலிகையை அரைத்து அங்கி பூட்டி ஓட்டிலிட்டு மூடிச் சீலைசெய்து கெச புடம் போட நீரும்.

எரிப்புத் திட்டம்.

ஒரு விரல் கனமுள்ள ஒரே விறகால் எரிப்பது தீபாக்கினி என்றும், இரண்டு விறகால் எரிப்பது கமலாக்கினி என்றும், மூன்றுக்குமேல் ஐந்து வரை வைத்து எரிப்பது காடாக்கினி என்றும் நூலோர் நுவல்வர். ஆறு, ஏழு விறகுகள் வைத்து எரித்தல் கூடாது.

புடத் திட்டம்.

ஒரு பலம் கொண்ட காட்டெரு 1 அல்லது 2, காடையெரு 3, கவுதாரியெரு 10, குக்குடம் எரு 50, வராகம் எரு, 100, கெசம் எரு ஆயிரம் கனபுடம்.

Koviloor Digital Library

ஊதுத் திட்டம்.

சுண்ணத்திற்கு துருத்தி 1. உருக்கினதிற்குத் துருத்தி 2, சத்துக்குத் துருத்தி 4.

கல்வங்களின் குணம்.

கருப்புக்கல்.

இதனை, நன்னிக் கல்கல்வம் என்று சொல்வதுண்டு, இக் கல்வம் மருந்துடன் கலவாததால் இதில் மருந்தரைத்தல் உத்தமம்.

இதில் அரைக்கப்படும் மருந்துகள் உடலுக்கு இன்பத்தைத் தரும்.

சிவப்புக்கல்.

இது, எல்லா இடங்களிலும் கிடைப்பது அரிது. இதில் அரைக்கப்படும் மருந்துகள் சன்னிபாத நோய்களையும் தோடங்களையும் போக்கும். இதில் மருந்தரைத்தல் உத்தமம்.

பச்சைக்கல்.

இதுவும் கிடைப்பது அரிது. வட இந்தியாவில் கிடைப்பதாகக் கூறப்படுகின்றன. இதில் மருந்தரைத்தல் மிகவும் சாலச் சிறந்தது.

மஞ்சள்நிறக்கல்.

இதில், மருந்து அரைத்து வைத்து நோயாளிகளுக்குக் கொடுத்தால் விரைவில் நோய்கள் விலகும்.

வெள்ளைக்கல்.

இது, மருந்தின் வேகத்தையும், குணத்தையும் அழிக்கும். இது தேய்ந்து மருந்துடன் கலக்கும்; ஆகையால் இக் கல்லில் கல்வம் செய்யக்கூடாது.

கல்வம் சுரண்டியின் குணம்.

இது, குழியம்மியில் இட்டு அரைக்கும் மருந்தை வழிக்கும் கருவியாகும்.

1. இரும்பினால் செய்யப்படும் சுரண்டி துருபிடிக்கும். இதனால் மருந்தின் குணம் கெடும்.

2. எஃகு, வெள்ளி இவைகளினால் செய்யப்படும் சுரண்டி உத்தம குணத்தை உண்டாக்கும்.

3. மரம், கொம்பு இவைகளினால் செய்யப்படும் சுரண்டி மத்திம குணத்தைக் கொடுக்கும்.

4. பனை ஓலையினால் செய்யப்படும் சுரண்டி சாலச் சிறந்த தெனக் கருதப்படுகின்றது.

Koviloor Digital Library

அகல்:— இது வட்டமான மண் தட்டு.

குப்பி.

இது கழுத்துக் குறுகலாயும், அடி பரவலாயும் உள்ள மண் குடுவை, இதை ஜாடிகளிலும், பூ நீற்றிலும் சிலர் செய்து உபயோகப்படுத்துவதுண்டு.

மூசை.

இதுவே -"குகை" என்று சொல்லப்படுவது. இதில் மண் மூசை, வச்சிர மூசை என இருவகையுண்டு.

1. மண் மூசை:— இது களிமண், மணல், கரித்தூள், சாம்பல், தேங்காய், நார் இவைகளைச் சேர்த்து செய்தல்.

2. வச்சிர மூசை:— இது களிமண், அயக்கிட்டம், சணல், தார், உமிக்கரி, கரித்தூள், சுண்ணாம்பு இவைகளைக் கொண்டு செய்யக்கூடியது.

சீலை:— சீலை என்பது ஒரு சுத்தமான அழுத்தத் துணியில் மிருதுவாக அரைத்த புற்று மண்ணை ஒரு பக்கத்தில் தடவி ஒட்ட உபயோகிப்பது. இதனால் குப்பி, அகல், இவைகளைச் சீலை செய்யலாம்.

புற்று மண்ணிற்குப் பதில் கோதுமை மாவையும், உளுத்த மாவையும், மாக்கல் மாவையும் உபயோகிக்கலாம்.

சுண்ணாம்பைத் தனியாகவாவது, முட்டையின் வெள்ளைக் கருவைச் சேர்த்தாவது உபயோகிப்பதுண்டு. இவைகளை மருந்திற்குத் தக்கவாறு உபயோகப்படுத்தவேண்டும்.

எரு.

இஃது இயற்கை எரு, செயற்கை எரு என இருவகைப்படும்.

இயற்கை எரு.

இது காட்டு எருவாகும் (வரட்டி). இதுவே சிறந்ததெனக்கருதப்படுகிறது. இதன் எடை 70 கிராம் உடையதாக இருக்கும்.

செயற்கை எரு.

இது, தட்டிக் காயவைத்து எடுப்பதாகும். இதை 12 அங்குல விட்டமும் ½ அங்குலக் கனமும் உள்ளதாய் வட்டமாக தட்டிக் காயவைக்க வேண்டும்.

நாட்டு எரு நான்கு வகைப்படும் :—

1. பசுஞ் சாணத்தால் செய்த வரட்டி—உத்தமமாகக் கொள்ளலாம்.

2. எருமைச் சாணத்தால் செய்த வரட்டி—அதமமாகக் கொள்வர்.

Koviloor Digital Library

3. கலப்புச் சாணத்தால் செய்த வரட்டி–அதமமாகும்.

4. சாணத்துடன் வைக்கோல், சருகுகள், உமி சேர்த்து செய்யப்பட்ட வரட்டி– மருந்தின் வீரியத்தைக் குறைக்கும்.

ஆட்டுச் சாணத்தினால் செய்யப்பட்ட வரட்டிகள் மருந்திற்கு அதிக வீரியத்தைக் கொடுக்கும் என்றும், அம் மருந்துகள், பிணிகளை விரைவில் நீக்கும் என்றும் கூறுவர்.

குறிப்புகள்: வரட்டிகள் செய்ய, கெட்ட நாற்றமுள்ள சாணத்தை உபயோகித்தல் கூடாது.

விறகின் வகைகள்.

ஆவாரை, சிற்றாமுட்டி.

உடலில் ஏற்படும் வெப்பு முதலிய நோய்களைக் குணப்படுத்தும். உயர்ந்த தைலங்களுக்கு ஆகும்.

உசில், இலந்தை.

கண், மூக்கு, செவி, பாதம் ஆகிய இடங்களுக்கு இடுகின்ற நெய்களுக்கும், குடிக்கின்ற தைலங்களுக்கும் ஆகும்.

இலுப்பை, புளி.

தடவிப் பூசுவதாகிய சூடுள்ள பிடித் தைல வகைகளுக்கு ஆகும்.

வேம்பு, பூவரசு, அரசு.

வாத நோய்களுக்கான குடிநீர், தைலம் ஆகியவைகள் காய்ச்சுவதற்கு உதவும்.

நுணா, வன்னி, மாவிலிங்கம்.

வாத நோய்களுக்கு ஆகும்.

நெல்லி, வேம்பு, விலா.

பித்த சம்பந்தமான நோய்களுக்கு ஆகும்.

உசில், வேல், கொன்றை, வேங்கை.

கப சம்பந்தமான நோய்களுக்கு ஆகும்.

பனை, தென்னை, வேம்பு.

இரசம் சேர்ந்த மருந்துகள் செய்வதற்கு ஆகும்.

வேல், வேங்கை.

இரும்பு சேர்ந்த மருந்துகள் செய்வதற்கு ஆகும்.

Koviloor Digital Library

தீயினளவு.

தீயின் அளவு நான்கு வகைப்படும் – அவை:

1. தீபாக்கினி
2. கமலாக்கினி
3. கதலியாக்கினி
4. காடாக்கினி

தீபாக்கினி.

விளக்கின் சுடரைப்போல் உள்ள தீயை தீபாக்கினி என்று கூறுவர். (1 விறகு – விறகின் கனம் இருவிரல்)

கமலாக்கினி.

மலர்ந்த தாமரைப் பூவைப்போல் உள்ள தீயை கமலாக்கினி என்று கூறுவர். (2 விறகு)

கதலியாக்கினி.

வாழைப்பூவைப்போல் உள்ள தீயை கதலியாக்கினி என்பர் (3 விறகு)

காடாக்கினி.

மேற்கூறப்பெற்ற மூன்றிற்கும் மிகுதிப்பட்ட தீக்கு காடாக்கினி என்றும் கூறுவர். (4 முதல் 5 விறகு வரை)

புடம்.

இது, எருவின் உதவியால் எரிக்கப்படும் எரிப்புத்திட்டம் இஃது, ஒன்பது வகைப்படும்.

1. காடைப்புடம்	–	ஓர் எரு
2. கவுதாரிப்புடம்	–	மூன்று எரு
3. குக்குடப்புடம்	–	பத்து எரு
4. வராகப்புடம்	–	ஐம்பது எரு
5. மணல் மறைவுப்புடம்	–	தொண்ணூறு எரு
6. மயில்புடம்	–	நூறு எரு
7. கெசப்புடம்	–	ஆயிரம் எரு
8. பூமிப்புடம்	–	ஆட்டின் எருவின் நான்கு விரற்கடை அளவு
9. கனப்புடம்	–	800 எரு

மேற்கூறப்பெற்ற புடங்கள் இல்லாமல் கீழ்க் காணும் புடங்களும் உபயோகத்திலிருக்கின்றன.

Koviloor Digital Library

1. உமிப்புடம்:- உமியில் புதைத்துவைத்து எடுத்தலும்–உமியில் புடமிட்டெடுத்தலும்.

2. தானியப்புடம்:- முடித்த மருந்தை நெல்லுக்குள் குறிப்பிட்ட நாள் அளவு வைத்திருந்து எடுத்தலை தானியப்புடம் என்று கூறுவர்.

3. சூரியப்புடம்:- இது, வெய்யிலிற் காயவைத்தல்.

4. சந்திரப்புடம்:- இது, சந்திர வெளிச்சத்தில் வைத்தெடுத்தல்.

5. பருவப்புடம்:- இது, பௌர்ணமியன்று திறந்த வெளியில் வைத்து எடுத்தல்.

6. அமாவாசைப்புடம்:- இது அமாவாசையன்று இருட்டில் திறந்த வெளியில் வைத்து எடுத்தல்.

7. பனிப்புடம்:- இது, பனியில் மருந்துகளை வைத்து எடுத்தல்.

8. மரப்புடம்:- மரத்தைத் துளைத்து, அதற்குள் மருந்தை வைத்து குறிப்பிட்ட நாள் கழித்து எடுத்தல்.

ஊது முறைக்கு துருத்தி வகை.

1. சுண்ணம் செய்வதற்கு ஒரு துருத்தியும்.

2. சத்து உருக்குவதற்கு இரண்டு துருத்திகளும்.

3. செம்பு, இரும்பு இவைகளை ஊதிச் சத்தெடுக்க நான்கு துருத்திகளும் வேண்டும் என்பர்.

செந்தூரம் செய்வதற்குரிய சிறப்புத் திங்கள்:- ஆவணி, புரட்டாசி, மார்கழி, மாசி, சித்திரை ஆகிய மாதங்களே செந்தூரம் செய்வதற்குரிய மாதங்களாகும்.

சுண்ணம் செய்யும் காலம்:- பங்குனி, சித்திரை.

செயநீர் எடுக்கும் காலம்:- தை, மாசி, பங்குனி.

நிறைகள் - நிறுத்தலளவை.

1 உளுந்து சுமார்	– 1 கிரெயின் நிறையாகும் (65 மி.கிராம்)
4 யவம்	– 1 குன்றி (2 கிரெயின்) (130 மி.கிராம்)
1 மஞ்சாடி	– 4 கிரெயின் (260 மி.கிராம்)
6 குன்றி	– 1 மாஷம் (780 மி.கிராம்)
3 ¾ குன்றி	– 1 பண எடை (488 மி.கிராம்)
32 குன்றி	– 1 வராகன் எடை (3.5 கிராம்)
40 குன்றி	– 1 கழஞ்சு (4.4 கிராம்)
10 வராகன் எடை	– 1 பலம் (35 கிராம்)

Koviloor Digital Library

¼ பலம்	– 1 கஃசு அல்லது 1 கைசா (8 கிராம் 750 மிலி)
1 தோலா	– 1 ரூபாய் எடை (12 கிராம்)
1 அவுன்ஸ்	– 2 ½ ரூபாய் எடை (30 கிராம்)
3 தோலா	– 1 பலம் (35 கிராம்)
8 பலம்	– 1 சேர் (280 கிராம்)
40 பலம்	– 1 வீசை (1.4 கி.கிராம்)
50 பலம்	– 1 தூக்கு (1.7 கி.கிராம்)
2 தூக்கு	– 1 துலாம் (35 கி.கிராம்)
1 துலாம்	– 12 ½ சேர்

முகத்தலளவை.

360 நெல்	– 1 சோடு
5 சோடு	– 1 ஆழாக்கு (168 மி.லிட்டர்)
2 ஆழாக்கு	– 1 உழக்கு (336 மி.லிட்டர்)
2 உழக்கு	– 1 உரி (672 மி.லிட்டர்)
8 நாழி	– 1 குறுணி (5.3 லிட்டர்)
2 குறுணி	– 1 பதக்கு (10.7 லிட்டர்)
2 பதக்கு	– 1 தூணி
3 தூணி	– 1 கலம் (64.5 லிட்டர்)
1 தேக்கரண்டி	– 1 டிராம் (4 மி.லிட்டர்)
1 குப்பி	– 24 அவுன்ஸ் (700 மி.லிட்டர்)

வேறு முகத்தலளவை.

1. தீர்த்தக்கரண்டி	– 1.33 மிலி.
1 நெய்க்கரண்டி	– 4.00 மிலி. (1 டிராம்)
1 உச்சிக்கரண்டி	– 16 மிலி. (1மேசைக் கரண்டி)
1 பாலாடை	– 30 மிலி. (1 அவுன்ஸ்)
1 எண்ணெய்க்கரண்டி	– 240 மிலி. (8 அவுன்ஸ்)
5 சேர்	– 1 சொம்பு

பழங்கால வழக்கிலிருந்த மருத்துவ அளவைகள்.

1 அணு	– 1 திலம் (0.003 கிராம்)
2 திலம்	– 1 காகிணி (0.006 கிராம்)
4 காகிணி	– 1 விரிகி (நெல்) (0.24 கிராம்)
2 விரிகி	– 1 விதளம் (½ குன்றி) (0.048 கிராம்)
4 விரிகி	– 1 குஞ்சம் (1 குன்றி) (0.096 கிராம்)
2 குன்றி	– 1 மாஷம் (உளுந்து)
4 குஞ்சம்	– 1 பணவெடை
5 மாஷம்	– 1 தனகம்
3 தனகம்	– 1 சாணம்
4 சாணம்	– 1 நிட்கம்

Koviloor Digital Library

2 சாணம்	– 1 வடகம் (முக்கழஞ்சு)
1/10 பலம்	– 12 காசெடை
2 உரி	– 1 நாழி
2 குன்றி	– ½ மாஷம்
6 குன்றி	– 1 மாஷம்
12 மாஷம்	– 1 தோலா
3 தோலா	– 1 பலம் (10 வராகனெடை)
32 பலம்	– 1 சுபம்
2 சுபம்	– 1 பாரம் (1 கலம்)
ஒரு கடி	– ஐந்து விரல்களில் கொள்ளும் அளவு.
1 உழக்கு	– கால் படி (2 ஆழாக்கு)
1 கழஞ்சு	– 1 ¼ வராகன் எடை
1 கரண்டி	– 1 பொட்டுக்கரண்டி
1 காசெடை	– 1 பைசா அளவு
1 குன்றி எடை	– 1 குண்டுமணியின் எடை
1 சிறங்கை	– உள்ளங்கையில் கொள்ளும் அளவு
திரிகடி	– மூன்று விரல்கொண்ட அளவு (முவ்விரல் அளவு)
துட்டிடை	– 1 தோலாவில் 1/48 (48 ல் ஒன்று)
1 தூக்கு	– 144 ரூபாயின் எடை
1 நெல்லிடை	– ஒரு நெல்லி எடை
1 பணவிடை	– ஒரு வராகனெடையில் பத்தில் ஒரு பாகம்
1 பிடி	– ஒரு கைப்பிடியில் கொள்ளும் அளவு
1 மண்டலம்	– 49 நாட்கள் கொண்டது
1 வராகனெடை	– 32 குன்றிமணியெடை கொண்ட அளவு
வெருகடி	– பூனையின் காலடி அளவு

மருந்து அளவு அட்டவணை.

வயதிற்குத் தக்கபடி மருந்தின் அளவைக் கிரமப்படுத்திக் கொள்ளவேண்டும். ஏனென்றால், அளவு அதிகப்பட்டால் மருந்து விஷமாகி உடலைக் கெடுக்கும்.

வாலிபருக்கு ஒரு வேளைக்கு கொடுக்கின்ற மருந்தின் அளவு 1 வராகனெடை அல்லது 60 உளுந்து நிறை.

வயது.

1 ஆண்டுக்குட்பட்டால் 12 பங்கில் 1 பங்கு அல்லது 5 உளுந்து நிறை.

2 ஆண்டுக்குட்பட்டால் 1/8 பங்கு அல்லது 8 உளுந்தெடை.

3 ஆண்டுக்குட்பட்டால் 6 பங்கில் 1 பங்கு அல்லது 10 உளுந்தெடை.

Koviloor Digital Library

4 ஆண்டுக்குட்பட்டால் ¼ பங்கு அல்லது 15 உளுந்தெடை.

7 ஆண்டுக்குட்பட்டால் 3 பங்கில் 1 பங்கு அல்லது 20 உளுந்தெடை.

14 ஆண்டுக்குட்பட்டால் ½ பங்கு அல்லது 30 உளுந்தெடை.

20 ஆண்டுக்குட்பட்டால் 3 பங்கில் 2 பங்கு அல்லது 40 உளுந்தெடை. 89

21 முதல் 60 வயது வரையில் முழு அளவு அல்லது 60 உளுந்தெடை முறையே கொடுக்கவேண்டும்.

உயிர் காக்கும் சித்தமருத்துவம் முற்றும்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 44963

Koviloor Digital Library

Koviloor Digital Library

தாமரை
நூலகம்